உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

பார்க்கவபுராணமென்னும்

விநாயகபுராணம்.



உபாசனாகாண்டம். | 1899 ௵ ஜனவரி மீ | முதலாஞ்சஞ்சிகை.

சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

ஈ. இரத்தினவேலு முதலியார்

இயற்றிய பொழிப்புரையுடன்,

இராயப்பேட்டை

இரத்தினவேலு முதலியாரால்,

சென்னை:

பண்டித மித்திர யந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டது.

விலை அணா 4.

Registered Copy Right.

கணபதி துணை

திருச்சிற்றம்பலம்.

விநாயகபுராணம்.

காப்பு.

திங்களணி சடைப்பெருமான் பூசை யாற்றித்
திரிமதிலுங் கடந்திடமுன் னின்றோ னியாவன்
றங்குகடற் புவிவரைப்பி னெடியோ னாதி
சகலருக்கு முறுதவிர்க் கின்றோ னியாவ
னங்கவன்மெய்ச் சரிதமொழி பெயர்ப்ப வேண்டி
யவனடியே சரணாக வடைந்து ளேற்கு
மங்கலஞான மயமதுரந் தமிழ்ச்செம் பாடல்
வாரிமடை யுடைத்து வளரு மன்றே.

(இதன்பொருள்.) திங்களை யணிந்த சடையினையுடைய சிவபெருமான் பூசை செய்து மும்மதில்களையுஞ் சயிக்க முன்னின்றவன் எவனோ, கடல்புடை சூழ்ந்து விளங்கும் பூமியினிடத்தில் திருமால்முதலிய யாவருக்கும் (அவரவர் வினைவழியடையும்) துன்பங்களை (தன்னை யாராதித்தலால்) விலக்குகின்றவன் எவனோ, அந்தப் பெருமானது உண்மையாகிய சரித்தத்தை (வடமொழியினின்றும்) மொழிபெயர்க்க விரும்பி, அந்த விநாயகக்கடவுளது திருவடியையே அடைக்கலமாக அடைந்துள்ள அடியேனுக்கு, மங்கலகரமும் ஞானமயமும் மதுரமும் பொருந்திய செந்தமிழ்ப்பாடலாகிய சாகரம் (எனது) அறியாமையாகிய தடையினை யுடைத்து (அவனருளால்) பெருகாநிற்கும் என்றவாறு.

பூர்வம் தக்கன் புதல்வியர் இருபானெழுவரையு மணந்த சந்திரன் அவர்பாற் சமநோக்குவையாது அவருட்சிறந்த அழகமைந்த உரோகணி யென்பவளையே அதிகமாக விசுவாசித்து ஏனையோரை முகநோக்காது காலங்கழிப்ப, அஃதுணர்ந்த தக்கன் பலவாறு மதிக்கு மதிகூறியுங் கேளாமையின், அவனைச் சினந்து கலைகுறைகவெனச் சபிக்க, அச்சாபமேற்ற சந்திரன் தன் குறைவுநீங்கும்படி இந்திரன் முதலிய இமையவர்களோடொத்தும் அதனைத் தீர்ப்பாரிலனாய், திருக்கைலையையடைந்து சிவபெருமானைப்பணிந்து விண்ணப்பிக்க, இறைவர் அவனது எஞ்சிய கலையொன்றினைத் தமது சடையிலணிந்து அருளினமையின் "திங்களணி சடைப்பெருமான்" என்றும், பிரமாதிதேவர்களும் சனத்குமாராதி முனிவர்களும் சிவபெருமானைப் பூசிப்பதன்றி அச்சிவபெருமான் ஒருவரையும் பூசியாதவராயினும் விநாயகப்பெருமானை விதிப்படி பூசித்து அவரருள்பெற்றமையின் "பூசையாற்றி" என்றும், சிவபெருமான் விநாயகக்கடவுளையாராதித்து அவரருளால் திரிபுரங்களையு மெரித்தருளினமையின் "திரிமதிலுங் கடந்திட முன்னின்றோ னியாவன்" என்றும், இவ்வுலகம் கடல்புடை சூழப்பெற்றுள்ளமையின் "தங்குகடற் புவிவரைப்பில்" என்றும், திருமால் திசைமுகன் தேவர

கோன் முதலியோர் யாவரும் தமக்கிடுக்கண் வந்தவிடத்து இவ்விறைவனை வணங்க, அவர்களது இடுக்கண்களை விலக்கியருளுகின்றமையின், "நெடியோனாதி சகலருக்கு மூறுதவிர்க்கின்றோனே யாயவன்" என்றும், அவ்விநாயகப்பெருமானது சரிதம் சிந்தாமணியாதி காப்பியங்கள்போலக் கட்டுரையன்றாகலின் "அங்கணன் மெய்ச்சரிதம்" என்றும், அவ்விறைவனது புகழும் பார்க்கவமுனிவரால் வடமொழியிற் புகலப்பட்டுள்ளமையால் அதனை அமிழ்தினுமினிய தமிழ்ப்பாக்களாக யாக்கவேண்டுதலின் "மொழி யாப்பாப் பணடி" என்றும், ஒருநூல் செய்யப்புகுவோர் முதலில் ஐங்கரக்குரிசிலடியலர் பரவியபின்னரே தமது வழிபடுகடவுளை வழிபடுவாராகலின், யான் அவ்வாறின்றி அவனையே வழிபட்டு அவனருளால் அவன் சரிதையையேகூற அவனையே யாதரவாக வடைந்தேனென்பார் "அவனடியே சரணாக வடுத்துள்ளேற்கு" என்றும், மங்கலப் பொருளாகிய சிவபெருமானே அகத்தியமுனிவருக் குபதேசித்தாதலாலும், திருநெறித் தமிழ்வேதங்களாகியன யாவும் ஞானம் பயக்கத்தக்கவையாதலாலும், தமிழ் என்பதற்கே மதுரமென்பபொருட்டாலாலும் "மங்கல சிறமைய மதுரத் தமிழ்ச் செம்பாடல்" என்றும், தமிழாகிய கடன்மடை பெருகுதற்கு மடமாகிய தடை அவனருளா லுடைபடுமென்பார் "வாரிமடை மடையுடைத்து வளரும்" என்றுங் கூறினார்

இச்செய்யுள் தெய்வவணக்கமுஞ் செயப்படுபொருளு முரைத்ததாம். என்னை, "தெய்வ வணக்கமுஞ் செயப்படு பொருளு - மெய்த வுரைப்பது தற்சிறப் பாகும்" என்றும், "வழிபடு தெய்வ வணக்கங் கூறி, மங்கல மொழிமுதல் வகுத்தெடுத்துக்கொண்ட - விலக்கிய விலக்கண மிடுக்க ணின்றி - யினிது முடியுமென்மனார் புலவர்" என்றும், சூத்திரமாகலின் விநாயகரது பிரபாவத்தை மொழிபெயர்ப்ப விநாயகக்கடவுளைப் பணிந்தேனென்றார் இனி, கடவுள் வணக்கம், வழிபடு கடவுள் வணக்க மென்றும் சிறப்புடைக்கடவுள் வணக்கமென்றும் இருதிறத்ததாயினும் ஈண்டுக்கூறப்பட்டது விநாயகரையேயாதலின், அவ்விரண்டுமாம் எனக்.

இச்செய்யுளில், திங்கள் மங்கலமொழி இதனை

வச்சணந்திமாலை

"சீரெழுத்துப் பொன்பூ திருமணிநீர் திங்கள்சொற்
காரபரிதி யானை கடலுலகம்—தேர்மலைமா
கங்கை நிலம்பிறவுங் காண்டகைய முன்மொழிக்கு
மங்கலமாஞ் சொல்லின் வகை"—என்பதனாலுணர்க. (க)

கடவுள்வாழ்த்து.

விநாயகர்

அகரமென வறிவாகி யுலகமெங்கு மமர்ந்தகர வுகரமக ரங்கடம்மாற், பகருமொரு முதலாகி வேறுமாகிப் பலவேறு திருமேனி தரித்துக் கொண்டு, புகரிலபொரு ளொன்றிலை யிடர்தீர்ந் தெய்தப் போற்றுநருக் கறக்கருணை புரிந்தல் லார்க்கு, நிகரின்மறக் கருணைபுரிந் தாண்டு கொள்ளு நிருமலனைக் கணபதியை நினைந்து வாழ்வாம்.

(இ - ள்.) அகரத்தைப்போல ஞானமயமாகி உலகமுழுதும் [சர்வவியாபியாய்] அமர்ந்து, அகர உகர மகரங்களாற் [பிரணவசொரூபியாய்] சொல்லப்பட்ட ஒப்பற்ற முதல்வராகியும், வேறாகியும், பலவகைப்பட்ட வெவ்வேறு திருமேனிகளைத் தாங்கி

கொண்டு, குற்றமற்ற (அறம் பொருள் இன்பம் வீடென்னும்) நான்கு புருஷார்த்தங்களையும் (தமக்குச் சம்பவிக்கும்) இக்கணங்களைக் களைந்தபடியும்படி, தம்மை வணங்குவோருக்கு அறக்கருணை புரிந்து, தம்மைப் பணியாதவர்க்கு ஒப்பில்லாத மறக்கருணை புரிந்து (எல்லாரையும்) அடிமைகொண்ட மலர்கின்றராகிய கணேசமூர்த்தியைத் தியானித்து வாழ்வோம் எ - று

"அகரவென வறிவாகி" என்றதை "அகர வுயிர்போ லறிவாகி யெங்கு - நிகரிலிறை நிற்கு நிறைந்து" என்னுந் திருவருட்பாவாலும், "அறிவுரு சிவமுமிரண்டென்ப ரறிவிலார், அறிவு சிவமாவ தாரு மறிகிலார், அறிவு சிவமாவ தாரு மறிந்தபின், அறிவே சிவமா யமர்ந்திருப்பாரே" என்னுந் திருமந்திரத்தாலுமுணர்க. "அகர வுகர மகரங்கள்" என்றது அம்மூன்றெழுத்துக்களுமொன்று கூடிய ஓம் என்பதாய அப்பிரணவமுதற்பொருள். "அகர வுகர மகரங்க டம்மாற் பகருமொரு முதலாகி" என்றதை, "பிரணவப் பொருளாம் பெருந்தகை யைங்கரன்" என்று கூறிய ஆன்றோர் திருவாக்கானுணர்க. அறக்கருணை - தம்மையடைந்தோரை யருள்வழியாளுதலென்றும், மறக்கருணை-குற்றஞ்செய்தோரைத் தண்டித்தாட்கொள்ளுதலென்றுங் கொள்க. கணங்கள் பதினெட்டுக்கும் இவரிறைவராகலின் கணபதியென்றார்.

பூர்வத்திற் கயமுகாசுரன் தான் பெற்றுள்ள வரத்தின் கிறுமாப்பால் பிரமாதி தேவர்களுக்கெல்லாம் விபத்துச்செய்துவர, தேவர்கள் தன்னைச் சகியாதவர்களாகி ஒருங்கு கூடித் திருக்கைலாயமலையையடைந்து திருநந்திதேவரனுஜ்ஞையால் உட்சென்று சிவபெருமானைத் தரிசித்துத் தமக்கு நேர்ந்த குறைகளை விண்ணப்பஞ்செய்து முறையிட, சிவபெருமான் "அவன் என்னை நோக்கி அரியதவஞ்செய்து தேவராலும் மனிதராலும் அசுரராலும் மிருகங்களாலும் இறவாதிருக்க வரம்பெற்றுள்ளன் ஆனால் நன்றாய்வாங்கி வருவோனால் இறவாவரங் கேட்டானில்லன் நாம் மாறுபட்ட திருமேனியாகி யானைமுகத்தொடு சென்று அவனையடக்குவோம்" என்றவர்கட்கு விடைகொடுத்தனுப்பிப் பார்வதிதேவியாரோடும் அம்மலைக்குச்சமீபத்திலுள்ள சித்திரசாலையையடைந்து அங்கு விளங்கும் வெழுதப்பட்டுள்ள மந்திரவடிவமாகிய சித்திரங்களைப் பார்வதி தேவியாருக்குக் காட்டி "பெண்ணே! முதலிலுள்ள பிரணவாகாரமாகிய இரண்டு யானைகளில் முறைபட்டது திரிமூர்த்திகளையுந் தந்தது அஃதென்றுவடிவாகும் அப்பிந்து சத்திகளமூவரையும்பெற்ற அதுநின்றது வடிவாகும் ஆதலின் யாம் அப்பிரணவச் சித்திரங்களின் வடிவ மாகுதும்" என்று திருவுளஞ்செய்ய, உமாதேவியாரும் அக்கருத்துக்கிசைந்தனர் அப்பொழுது இறைவர் ஆங்கோர் திருவிளையாடலைச் செய்ய அதனாலப் பிரணவவடிவத்தினின்றும் விநாயகர் திருவவதாரஞ்செய்தனர் பிறகு விநாயகரைக் கைலைமலையிற்கொண்டெந்து மகுடஞ்சூட்டி "உன்னைவணங்கி உனதருள் கொண்டு செய்யுங்கருமங்களை நிறைவேற்றவும், வணங்காதுசெய்யுங் கருமங்களைத் தவிர்க்கவும், உனக்கு விக்கினவிநாயகனென்ப பெயர் தந்தோம்" என்று கூறித் தேவர்களைப் பார்த்து "இவன் நமது மூத்தபிள்ளை இவனை யெம்மைப்போன்று பசரியுங்கள்" எனச் சிவபெருமான் திருவாய்மலர்ந்தருளினர் பிறகு தேவர்கள் விநாயகக் கடவுளை யுபாசிக்க அவர் கயமுகாசுரனுடன் போர்புரிந்து அவனெவ்வகை யாயுதங்களாலு மிறவாதவனாதலின் தமது கொம்பை யொடித்தெறிய அவன் பெருச்சாளியுருவாயினன் அதனை விநாயகர் வாகனமாகக்கொண்டனர் —என்பது சரிதம்.

"முராரியாதியே [illegible]ாகணமுதலூறுமுழுதுலகினிலுள்ளோர்
விராவியாதொருகாரியமாயினுமவிளங்குறச்செயவென்றே
பராவியுன்னருச்சனை செயவோமனத்துறுபான்மைதந்தருளென்னன
பிராதுசெயப்வாகாரியமூறுசெயத்திடுதியென்றினைசொன்னனே.' —எனச் சிவ

பெருமான் கொடுத்தருளிய வரத்தின்படி, தம்மையடைந்தோர் விரும்பியவற்றை நிறைவேற்றி, வணங்காதார் காரியங்களை விக்கினஞ்செய்வோராகலின் "போற்றுநருக்கறக்கருணை புரிந்தலலார்க்கு நிகரின் மறக்கருணை புரிந்தாண்டுகொண்ட நிருமலன்" எனப்பட்டனர்

கணங்கள் பதினெட்டென்றதை,

சீகாளத்திபுராணம்

"கருடர்கந் தருவர் தாரா கணந்தயித் தியர்கள் விச்சா
தரரிராக் கதரே சித்தர் தாபத ரசுர ரேகிம்
புருடர்கின் னரரி யக்கர் பூதரே சாரர் தேவ
ருரகரா காச வாச ரொடுபோக புவியு ளாரே"—என்பதனாலுணர்க.

இச்செய்யுளில் யாமென்னு மெழுவா யெஞ்சிநின்றது (க)

சித்திபுத்தி.

வேறு

கருணைமதம் பொழிமுகத்துக் கணேசரவர் தமக்கதிவிந் தொழிலுமான, வருளொன்றுமுண்மையையெவரு மறியவவ ருமையினவதரித்த ஞான்று, மொருமுனிவோம் பியதழலி னவதரித்த ஞான்றுமுடனுதித் தோனறிந், திருவுளத்தின் வழிநிற்குஞ் சித்திபுத்தி யெனுமிவர்தாள் சென்னி சேர்ப்பாம்.

(இ - ள்.) கிருபையையே மதமாகப் பொழிகின்ற முகத்தினையுடைய கணேசப்பெருமானுக்கு ஞானமுங் கிரியையுமாகிய திருவருளென்று சொல்லப்படுமுண்மையையாவருமுணருமபடி, அப்பெருமான் உமாதேவியாரிடத்துத் திருவவதாரஞ்செய்த காலத்திலும், ஒப்பற்ற (கபில)முனிவர் வளர்த்தயாகாக்கினியில் திருவவதாரஞ்செய்த காலத்திலும், அவருடன் அவதரித்து, (அவ்விறைவனது) திருவுளக்குறிப்பின்படி நடக்குஞ் சித்திபுத்திகளென்னு மிவர்களது திருவடிகளைச் சிரசின்மேற் பொருந்தச் செய்வாம் எ - று

அறக்கருணை மறக்கருணை யென்னு மிரண்டனையு முடையாராகலானும், ஏனைய வுலகயானைகள்போல மும்மதமுடையாரல்லராகலானும், விநாயகக்கடவுளுடைய உத்தமாங்கம் யானை வடிவாகலானும் "கருணைமதம் பொழிமுகத்துக் கணேசர்" என்றார். விநாயகருக்குற்ற விருமதங்கள் பரஞானம் அபரஞானமெனக் கூறப்படும்.

ஒருமுனியோம்பியதழலினும், உமையினும் அவதரித்தது

தமிழ் நாட்டதிபனான அபிசித்தென்னுமரசன் புத்திரப்பேறுவேண்டி வைசம்பாயன முனிவரா லுபதேசிக்கப்பெற்ற பஞ்சாக்ஷரமந்திரத்தைப் பத்தியோடு தியானித்துத் தவஞ்செய்துவருகையில், அதற்குமுன்னர் அவ்வனத்தில் தவஞ்செய்துகொண்டிருந்த பிரமன் ஓர்நாள் தன்மனைவி சரசுவதிதேவியின்மேன் மையல்கொள்ள அதனால் வீரியஞ் சிதறி விரவின் தடாகநீரை அவ்வரசன் மனைவியாகிய குணவதி தாகமிகுதியாலருந்த, அதுவே கருப்பமாய் நகரமடைந்த பின்பு உதித்த கணனென்பவன் மகா பராக்கிரமசாலியாய் வளர்ந்து பரமசிவத்தை நோக்கித் தவஞ்செய்து அகண்ட வரப்பிரசாதியாய் விஷ்ணுவும் பிரமனும் நடுங்கத் திரிபுவனங்களையுமவென்று, ஏகச்சக்கிராதிசுவரனாய்ச் சாம்ராஜ்ஜியம் நடாத்திவருகையில், ஓர்நாள் வேட்டையாடிமீண்டு அயர்வுயிர்ப்பானாய், தங்கிய அவ்வனத்திற் கபிலமுனிவரைக்கண்டு சமபாஷித்து அவரால் திருப்தியாயிடவுண்ட அவ்விருந்து சிந்தாமணியாலமைத்திட்டது கண்டு வியந்து, அவர்மிகு

தியா லதனைக்கேட்டதனமேல, அது விணடுவிளிடததிற பெறற இநதிரனுல் தனக் கருமையாகக கிடைதத வரலாறறினைககூறி, அமமுனிவ ாதறகொவவாமையாய மறற துறைததவுடன சறறும யோசியாமல அநனைப பலவாநதமாய்க கவாந்து சென றபின் மிகவு மவாமனமவருநதி யவனுயிாககிறுதியாமபடி செயத வெளவியினினறும இரத தினகிரீடம குண்டலம தோளணி முததுவட முதலிய ஆபரணஙகளொடு, தேசாாநது வனபபெயதியிருககினற திருவுருவமும வெழுமுகமுங கருணைபொழிகினற திாிநேத திரஙகளும, மோதகம தாமரைமலா மழுவாயுதம பூமாலை இவறறை எநதின நானகு திருககரஙகளும, அடியாாக ளிதயகமலததி லுலாவுஞசேவடிகளும, சிததி புததி சமேத மாகச சிஙகவாகனரூடராய விநாயகமூாததி எழுநதருளினதுகணடு அமமுனிவரவரை மகிழவாகவோராதனததிருததி வசிததிருககையில, அனறிரவில தூககனவுகண்ட கணராஜன உடனேஎழுநது சேனைசமேதனாய அககபிலமுனிவ ராசிரமததை நெருங கின சமயததில, சிததிதேவியாாற சிருட்டிககபபட்ட பூதபபடைகளும அரசனபடை களு மொனறோடொன றெதிாததுப போாசெயகையில, அசசிததிதேவியாா திருவரு ளாலவநத இலககனெனனுமோா மகாவீரன அசசததுருககளததைநாசஞசெயது அநதக கணனுடைய புததிராகளான சூலபாணி சுலபணிருவரையுங கைபபிடியாகப பிடித துசசென று சுவாமியிடமாகசசோகக, அசசெயதியறிநத கணராஜன அவவாசசிர மததை யணுகி யஙகெழுநதருளியிருநத கணேசரது நெறறி புயம பாதஙகளிற பாணப்பிரயோகஞ்செயய, அதுபொருட்டா யககடவு ளாதனமவிட டெழாமல திரு நோககஞ சாததறசெழுநத மழுவாயுததா லவன மடிநதனனுக, மறுநாள அவன பிதாவான அபிசிததரசன வநது பிராாததிததவாறு அவன பௌததிராகளை விடுதது, அவ்வரசனுலதநத சிநதாமணியைக கபிலமுனிவா பிராாததிததவாறே விநாயகமூாததி தரிததருளினா சிநதாமணியைத தரிததருளினவாற சிநதாமணி விநாயகரெனவும, கபிலராற பூசிககபபட்டனவாற கபில விநாயகரெனவும, மலாநத திருமுகததோ டெழுநதருளினவாற சுமுகரெனவும, இமமூாததிககுத திருநாமஙகள வழஙகும

முனனொருகாலததிற பிரமதேவனது கொட்டாவியில தோனறின சிநதுர னெனபவன மூவுலகதது ளிசசிதத விடஙகளிலிருககவும் எதிாததவாகளைக கையாற றழுவினவளவி லவாக ளிறககவுமான பல வரஙகளைப பிரமனுற பெறறுககொணடு, பூலோகததிறகு வநதபின தவமினறிக கிடைததசால ஐயஙகொண்டு சோதிபபானுக, பிரமனை யடைநது தழுவசசெலல, அதைப பிரமன கணடு கோபிதது விநாயகரா லவ னழியததககதாகச சபிததுக கரநது விஷணுவிடததில தனகுறை சொலலிநிற்கையில, அசசிநதுரன அவவிஷணுவைத தேடிவநது யுதததிறகழைகக, அவா இதவாாததை யாடி உருததிரமூாததியிடஞ செலலுமபடி சொலல, அவனும அவவகையே கைலையை நோககிசசென று அஙகு உருததிரமூாததிகள யோகநிலையிலிருநதனராக, அவா தேவி யாரைககணடு காமுறறெடுகக எணணஙகொணடு நெருஙக, அதையறிநதவா முறையிட உருததிரமூாததிகளும யோகமவிட டெழுநது அவனெதிா செலல, சிநதுரன அவரைத தழுவ நெருஙகுமபோது கணேச ரவவிருவரிடையிலோா ரநதணராயத தோனறி நினறு, தமது மழுவை நடுவே நாட்டி அவவிருவரையு நோககி மலலயுததஞ செயவதை விடடு வேறு யுததஞ்செயமினகளெனச சொலல, அவவாறே யவவிருவரும யுததஞ செயயுஙகால, சிநதுரன மீறி முனபோற றழுவபபோகையில, மழு அவனைப போக வொட்டாது தடுகக, அதுபோதில உருததிரமூாததிகளோடு போாசெயயலாகாதெனறு விநாயகராகிய அநதணரும் அசசுறுதத, அதுகேட்டவனஞ்சியகனறபினனா உமாதேவி யவவநதணரைபபாாதது நீராரென, அவா தமது திருவுருககாட்டி இனிச சிநதுரனை யழிககும்படி குமாரனுக உமது திருவயிறறு வருவோமென றருளிபபோயினா பினபு

பிரமன் முதலியோர் சிந்துரன் செய்யுங் கொடுமைக்காற்றாது நாயக கணேசமூர்த்தியைப் பிரார்த்திக்க, தாம் கஜானனராய் அவதரித்துச் சிந்துரனைக் கொல்வதாக அவர்களுக்குத் திருவாக்கருளி உமாதேவியார் திருவயிற்றிற் கருவாகப் பிரவேசித்து வளர்ந்துவரு நாளில், அவர்கட்கருவாலுண்டாகிய வெப்பந்தணியப் பூமியிற் பரியலி என்னும் வனத்தில் உருத்திரமூர்த்திகளோடு சென்று அவணமைத்த இரத்தினமண்டபத்தில் வசித்திருக்குநாளில் மயேசுரனென்னுமோரரசன் சிவபத்தியிலும் நீதியிலுஞ் சிறந்தவனா யரசு புரியுங்காலத்தில், பிரகற்பதிதேவர் அங்குவரக்கண்டு அவ்வரசனவரை வணங்கிநிற்க அதற்கவர் மகிழ்ந்து உன்றலை தேவர் முனிவர் முதலிய யாவராலும் வணங்கப்படுவதாகவென் றாசீர்வதித்துச் சென்றனர் பின்பொருநாள் அவ்வரசன் தன்னகரைவிட்டுச் சேனைகளோடு செல்ல அங்கு நாரதர் எதிர்வரக்கண்டு அவன் வந்தனை வழிபாடு செய்யாமையைக் குறித்தவர் சபித்தவாறே யானைக்குழாத்துடன் கயமுகாசுரனென அவதரித்திருக்கையில் ஓர்நாள் அம்மண்டபத்தைக் கோட்டினால் அவன் முட்டியெடுத்து நிலத்தில் விழத் தள்ளலும் அம்மை யஞ்ச உருத்திரமூர்த்திகள் சூலத்தாலவன் றலையைத் துணிக்க, அப்போது அவன் சிவாயநமவென்று சொல்லி நிலத்தில் வீழ்ந்ததுகண்டிரங்கி அவனுக்குச் சாரூப்பியதமளித்து அதுமுதலாகக் கிருத்திவாசரென அவன் றோலை யரையினுடுத்திச் சிரசைவைத்துப் பூசித்துவந்தனர் அதுநிற்க அச்சிந்துரன் எல்லா வுலகங்களையும் அதப்படுத்தித் தனக்கெதிரில்லையென அகங்கரித்திருக்குநாளில் அசரீரியால் தனக்கிறுதிசெய்யக் கணேசர் உமாதேவியார் திருவயிற்றில் வளர்வதாகச் சொல்லக்கேட்டு அங்குச் சென்றவர் சுழுத்தியிலிருக்குந் தருணமறிந்து வாயுவடிவா யுண்ணுழைந்து அக்கருவின் சிரசைக்கொய்து விந்தமலைக்கடுத்த நருமதைநதிதீரத்தில் வைத்துச் சென்றனன் பின்னர் அக்கரு சிரமிழந்தும் அவ்வாறே வளர்ந்துவர உமாதேவியாரும் பத்துத்திங்களுநிரம்பிக் கைலைக்குச் சென்றனராக அங்கே கணேசர் பஞ்சமுகத்தோடும் சித்தி புத்தி சமேதரா யுமையம்மையாருக்குத் தரிசனைகொடுத்து நாமுமக்குப் புத்திரராயினோமென் றுரைத்தருளி மறைந்தவுடன் மகாதேவியார் மயங்க அங்கே சிரசில்லாததோர் குழந்தை பிறந்திருக்கக்கண்டு அம்மை வருந்திநிற்க உருத்திரமூர்த்திகளை மற்றைத் தேவர்களும் வந்து கண்டு கவலைமிக்காராகி அவர்கள் காணவேண்டி ஓராதனத்தின் மீதமர்த்தினவுடன் அக்குழவி தமது சிரமிழந்த காரணத்தைக்கூறி உருத்திரமூர்த்திகளாற் பூசித்திருந்த யானைத்தலையைத் தாமே வரச்செய்து தமது திவ்விய வுடலோடு சேர்த்தருளிக் கஜானனரா யெழுந்தருளியிருக்குஞ் சமயத்தில் வந்த தமாக்கழைத்த அவ்வசுரனை விசுவரூபங்கொண்டு துதிக்கரத்தாலெடுத்துச் சாந்தாகக் குழைத்துத் தமது மத்தகத்திற் பரிமளிக்கப்பூசித் தேவர்களிடுக்கணொழித்தருளினர் என்பது சரிதம். (௨)

பரசிவம்.

பூமாது தன்னைமணந்த புயலவண்ணப் பெருமானும் புலவர் போற்று
நாமாது தன்னைமணந்த நான்முகனும் போர்மாது நயக்கு மெண்டோட்
கோமானுந் தானேயென் றுணர்த்துதற்கே பிரணவகுஞ்சரமாய்த் தோன்
மாமாவின் முகத்தானை யுயிர்த்தானை நினைந்திறைஞ்சி வழுத்துவாமே [றி

(இ - ள்.) திருமகளை மணஞ்செய்த மேகநிறம் பொருந்திய திருமாலும், கல்விமான்கள் துதிசெய்யுங் கலைமகளை மணஞ்செய்த சதுர்முகப்பிரமனும், வீரமகள் விரும்பும் எட்டுப்புயங்களையுடைய உருத்திரனும், தாமேயென்று (எவர்க்கும்) அறிவித்தற்பொருட்டே, பிரணவாகார யானையாக விளங்கி, பெருமைபொருந்திய யானைமுகவிநாயகப்பெருமானைப் பெற்றருளிய பரசிவத்தைத் தியானித்து வணங்கித் துதிப்பாம் எ - று.

தானென்னும் பட்டாக்கைப்பெயர் பரசிவத்தை யுணர்த்தியது.

பூமாது - செந்தாமரையில் வசிக்குந் திருமகள். நாமாது - பிரமன் நாவில் வசிக்குங் கலைமகள். போர்மாது - போரில் வல்ல துர்க்கை. பரசிவமே திருமாலும் பிரமனும் உருத்திரனுமாக விளங்குபவரென்பதை யாவருமுணரப் பிரணவவடிவாயச் சித்திரித்த யானையினகண் அவிர்ப்பவித்து அங்கினின்றும் விநாயகப்பெருமானை யுண்டு செய்து, (தாமும் அவரையர்ச்சித்துக்) கருணைபுரிந்தனர் என்பது கருத்து.

நினைந்திறைஞ்சி வழுத்துவாம் என்பதற்குத் திரிகரணங்களாலும் பணிவா மென்பது பொருள். மனத்தால் நினைந்து, காயத்தாலிறைஞ்சி, வாக்கால் வழுத்துவா மெனக்கூட்டிக்கொள்க.

புலவர் என்பதற்குத் தேவரெனினுமமையும்.

தானே திரிமூர்த்திகளுமென்றதை,

சிவஞானசித்தியார்

"யாதொருதெய்வங்கொண்டீர் அத்தெய்வமாகியாங்கே
மாதொருபாகனார்தாம் வருவர்மற்றத்தெய்வங்கள்
வேதனைப்படுமிறக்கும் பிறக்குமேல்வினையுஞ்செய்யும்
ஆதலாலிவையிலாதான் அறிந்தருள்செய்வனன்றே."—என்பதனானறிக. (௫)

தேரேறி வரும்பரிதி மண்டிலத்துஞ் செழுமதிமண் டிலத்துஞ் சீர்கொண்
டேரேறி வருங்கனல்மண் டிலஞ்சத்தி மண்டிலத்து மெண்கண் ணனு
நீரேறி வருமரியு முருத்திரனு மகேசுரனு நிலவச் செய்து
நாரேறி வருமவர்த முளத்தமரெண் குணத்தானை நயந்து வாழ்வாம்

(இ - ள்) தேரிலேறி வருகின்ற சூரியமண்டலத்திலும், செழிய சந்திரமண்டலத்திலும், சிறப்புற்ற அழகுபொருந்திய மேடவாகனமேறி வருகின்ற அக்கினிமண்டலத்திலும், சத்திமண்டலத்திலும், (முறையே) எண்கண்களையுடைய பிரமனும், திருப்பாற்கடலி லறிதுயில்கொள்ளுந் திருமாலும், உருத்திரனும், மகேசுரனும் (ஆகிய இவர்களை) பொருந்தச்செய்து, அன்புமிகுந்து வருகின்ற அவர்களுடைய இதயத்தி லெழுந்தருளிய எண்குணங்களையுடைய பரசிவத்தைவிரும்பி வாழ்வோம் எ - று.

எண் குணங்களாவன —தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கையுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை இதனை,

"தன்வ யத்தவன் றூய வுடம்பினன் றானி யற்கை யுணர்வின னாகுதல்
பன்னு முற்ற வுணர்த லியல்பின்ன பாச நீக்குதல் பேரரு ளாகுதல்
மன்னு மீறில வாற்ற லுடைமையும் வரம்பி லின்பமு மாகிய வெண்குண
மின்ன தாகச்சை வாகம மோதுமெம் மீசன் றனையெப் போதும் வணங்குவாம்"

என்பதனாலுணர்க. அன்றியும், அணிமாவை முதலாகவுடையனவெனவும், கடையிலா வறிவை முதலாக வுடையனவெனவும் உரைப்பாருமுளர். (௬)

சிற்சத்தி.

வேறு

சத்தியாய் விந்துவாய் மனோன்மனியாய்த் தயங்கிய மகேசையா யுமையாய்
நித்தில வடந்தாழ் முகிழ்முலைத் திருவாய் நெடும்புகழ் வாணியாய் வேறு
வெத்திற மிறைவ னின்றன னவனுக் கியைதர வத்திற நின்று [ம.
மெத்திய வுயிரின் மலவிருள் கெடுத்து விளங்குபூ ரணியையேத் தெடுப்பா

(இ - ள்) சத்தியாயும், விந்துவாயும், மனோன்மனியாயும், விளங்கிய மகேசை யாயும், உருத்திராணியாயும், முத்துமாலை தங்கிய அரும்பிய தனத்தையுடைய நாரா யணியாயும், அழியாத காந்தியையுடைய பிராமியாயும், வேறாயும், பரசிவன் எவ்வடி வாக நின்றனனோ அவனுக்கேற்ப அவ்வடிவாக விளங்கி, மிகுந்த ஆன்மாக்களின் மல மாகிய இருளையழித்து விளங்குகின்ற பரிபூரணியாகிய சிற்சத்தியைத் தோத்திரஞ் செய்வாம் எ - று.

சத்தி - வல்லமை. இச்செய்யுளின் கருத்தை,

சிவஞானசித்தியார்

"சிவஞ்சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழு மீச
னுவந்தருள் உருத்திரன்றான் மாலயன் ஒன்றினொன்றாய்
பவந்தரு மருவ நாலிங் குருவநா லுபயமொன்றா
நவந்தரு பேதமேக நாதனே நடிப்பனென்பர்

சத்தியாய் விந்து சத்தியாய் மனோன்மனி தானாகி
யொத்துறு மகேசையாகி யுமை திருவாணியாகி
வைத்துறுஞ் சிவாதிக்கிங்ஙன் வருஞ்சத்தி யொருத்தியாகும்
மெத்திறந் தன்னு ஞீசன் தத்திறம் அவளு நிற்பள்"—என்றதனால், சிவத்திற்குச் சத்தியாகியும், நாதத்திற்கு விந்துவாகியும், சதாசிவத்திற்கு மனோன்மனியாகியும், மகேசனுக்கு மகேசையாகியும், உருத்திரனுக்கு உமையாகியும், திருமாலுக்குத் திரு வாகியும், அயனுக்கு வாணியாகியும், எழுவகைப்பட்டுப் பரமசிவன் சிவபேதமேழினு நின்று நடாத்துமாறெல்லாம் அவனுடன் தாதான்மியமாய் நிற்கும் ஒருத்தியாகிய பராசத்தியும் இச்சத்திபேதமேழினு நின்று அவனுக்குத் துணையாய் நடாத்துதலின், "சத்தியாய்* * * *பூரணியை" என்றார். (ரு)

நடேசர்

வேறு

முத்தமகக் கிடத்தார்வ மீன்றெடுத்த பிதாமகற்கு முதிரு மாற்றாற்
பூத்தபொழிற் சென்னைநகர்ப் புகுந்துபிர சன்னமுகப் புத்தேளன்ப
ரேத்தெடுப்பப் பிரசன்ன மாயிருக்கு மாலயத்துள் ளெய்தி மன்றுட்
கூத்தியற்று மிணைப்பாருஞ் சிதம்பரேசுரர் மலர்த்தாள் குறித்து வாழ்வாம்.

(இ - ள்) பெற்றெடுத்த பிதாவுக்கு முதற்பிள்ளையினிடத்தில் ஆசையானது அதிகரிக்குந் தன்மையால், மலர்ந்த சோலை சூழ்ந்த சென்னைநகரத்தில் வந்து, யானை முகத்தையுடைய பிரசன்ன விநாயகக்கடவுள் (தம்மை) அடியார்கள் துதிக்கும்படி பிர சன்னமாக வெழுந்தருளியிருக்குந் திருக்கோயிலுள்ளடைந்து, பொன்னம்பலத்தில் (பஞ்சகிருத்திய) திருநடஞ்செய்யும் இணைப்பை யாரறிக்கொள்ளரும் நடராசப்பெருமா னது மலர்போன்ற திருவடியைத் தியானித்து வாழ்வோம் எ - று.

பிதாமகன் - தந்தை, இது கோமகனென்பது போலாம். பிரசன்னமுகம்— யானைமுகம் இதிற் பிரசன்னமென்றது வடசொல்.

மன்று - சபை. சிவபெருமான் நடனஞ்செய்த சபைகள் ஐந்துள்ளவாயினும், சிதம்பரேசுரரென்னுங் குறிப்பால் பொன்னம்பலமென்றும், மலர்த்தாளென்றது அனுக்கிரகம் புரியுங் குஞ்சிதபாதத்தை.

ஐந்து சபைகளாவன —

இரட்டையர் தில்லைக்கலம்பகம்

"கடல்விடமுதாகக் காசினியிலிங்கங் காஞ்சிமாக்கருநிறையிலிங்கங்
காவிரிவடபாலவரு திருவானைக்காவினிலப்புலிங்கமதாம்
வடதிசையண்ணாமலையினிலிங்கமவனியினைவடிவுகொளத்தி
வாயுலிங்கமதாஞ்சிதம்பரலிங்கமாசிலாகாயலிங்கமதாங்
குடதிசையதனினமருவுகுற்றாலங்கோதறுசித்திரசபையாங்
குற்றமிலகுணக்கிற்பழையனூராமன்றங்குலவுமத்தினையன்றெனப்பா
ரடலவிடைப்பாகனெல்லையம்பதியிலம்பலந்தாமிரசபையா
மாலவாயமதுரைவெள்ளியம்பலமேயணிதில்லைச்செம்பொன்னம்பலமே" — என
வருவதனாலும்,

பஞ்சாக்கரத்திருமேனியோடு பஞ்சகிருத்திய திருநடஞ்செய்தலை,

உண்மைவிளக்கம்.

"ஆடும் படிகேணல் லம்பலத்தி லையனே
நாடுந் திருவடியி லேநகரம்—கூடும்
மகர முதரம் வளர்தோள் சிகரம்
பகரு முகம் வாமுடியப் பார்

தோற்றந் துடியதனிற் றோயுந் திதியமைப்பிற்
சாற்றியிடு மங்கியிலே சங்காரம்—ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தி லுற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு"—என வருவதனாலுமுணர்க. (௬)

சிவகாமசுந்தரி

சீதளச் சந்திரகலையுந் தினகரன்வெம் மையுங்கனலிற் செறிந்த தேசும்
போதளவு நறுமணமும் போலிறைவன் குணமான புனிதை வேறாய்க்
கோதளவு முயிர்சிவத்தைக் காமுறவே சிவகாமங் கொண்டு நின்ற
காதலவுங் கருந்தடங்கட் சிவகாம சுந்தரியைக் கருத்துள் வைப்பாம்

(இ - ள்) தண்ணிய சந்திரனிடத்திற் பொருந்திய கலையும், சூரியனிடத்திற் பொருந்திய வெப்பமும், அக்கினியினிடத்திற் பொருந்திய ஒளியும், மலரினிடத்துப் பொருந்திய நல்ல வாசனையும்போல, இறைவனுடைய குணங்கொண்டுள்ளவளான புனிதையாகியும், (சிவத்தினின்றும்) வேறுபட்டு (ஆணவாதிபல) குற்றம்பொருந்திய ஆன்மாக்கள் (அக்குற்றத்தினின்று நீங்கி) பரசிவத்தை யடையும்பொருட்டே சிவபெருமானிடத்து விருப்பங்கொண்டு (அவரது திருநடத்தைக்) கண்டுநின்ற, காதினை [illegible] நீண்ட விசாலமான கண்ணினையுடைய சிவகாமசுந்தரியாரை மனத்தி[illegible]

பூவும் மணமும், அக்கினியு முஷ்ணமும்போல, சிவமுஞ் சத்தியும் ஒ[illegible]மையாகவே நிற்றலின், "இறைவன்குணமான புனிதை" என்றார்.

சிவகாமசுந்தரி யென்றது சிவபெருமானது திருவடியை, ஆன்மாக்களடைய வேண்டுமென்னுங் கருணையால், இறைவியார் தமது திருவிழியைச்சாய்த்து அவரது குஞ்சிதபாதத்தைக்கண்டு களித்து நிற்றலினென்க. இதனை,

உண்மைவிளக்கம்

"உரையுணர்வுக் கெட்டா வொருவனிரு பஞ்சாக்
கரத்தால் வனைமகடான் பாதி—பரையிடமாக

2

காணும் படியே கருணையுருக் கொண்டாடல்
பேணுமவர்க் குண்டோ பிறப்பு"—என்பதனுணர்க. (எ)

சென்னைமல்லீசுரர்

ஒன்றாகிப் பலவாகி யுருவாகி யருவாகி யுபய மாகி
நன்றாகித் தீதாகி நான்மறைக்கு மெட்டாத நலத்த தாகித்
தொன்றாகிப் புதிதாகிச் சுடராகி யிருளாகித் துகடீர்ந் தன்பர் [ழுவாம்.
சென்றடையுஞ் சுவைக்கடலாஞ் சென்னைமல்லீ சுரமலர்த்தாள் சேர்ந்துவா

(இ - ள்) ஒன்றாகியும், பலவாகியும், உருவமாகியும், அருவமாகியும், உருவருவமாகியும், நன்றாகியும், தீதாகியும், நான்குவேதங்கட்கும் அதீதப்பட்ட நன்மையுடையதாகியும், பழமையதாகியும், நூதனமானதாகியும், ஒளியாகியும், இருளாகியும், அன்பர்(மல)குற்றத்தினின்று நீங்கி, அடைந்து திளைக்கும் மதுரக்கடலுமாகிய சென்னைமல்லீசுரரது தாமரைமலர்போன்ற திருவடியை(சரணாக)அடைந்து வாழ்வோம் எ-று.

அண்டாண்ட பிரமாண்டங்களின் சிருஷ்டிக்குமுன்னும், சர்வசங்காரகாலத்தும் இறைவராகிய சிவபிரானே தனித்து நிற்பவராதலின் "ஒன்றாகி" என்றும், சிவஞ் சத்தி நாதம் விந்து சதாசிவன் மகேசன் உருத்திரன் விண்டு பிரமன் பிறதேவர் முதலிய பல நாமரூபங்களை யடைதலின் "பலவாகி" என்றும், போற்றிப்பஃறொடை "நன்னெறி விஞ் ஞானகலர்க் காமல மொன்றினையு, மந்நிலையே யுணர்ந்தின் றறுத்தருளிப்—பின்னையு, மேவா விளங்கும் பிரள யாகலர்க்குத், தேவாய மலகன்மந் தீர்த்தருளிப்—பூவலயந், தன்னின்று நீங்காச் சகலர்க் கவர்போல், முன்னின்று மும்மலந்தீர்த் தாட்கொள் கை—யன்னவனுக், காதிகுணம்—" என்றபடியே, ஆணவம் கன்மம் மாயையென்னு மும்மலங்களில், ஆணவமலமொன்றினையுடைய விஞ்ஞானகலர்க்கு அருண்மயமாகவே யவருள்ளத்திருந்து அநுக்கிரகித்தலின் "அருவாகி" என்றும், ஆணவகன்மமென்னு மிருமலங்களையுடைய பிரளயாகலர்க்கு மான் மழு சதுர்ப்புஜ காளகண்ட முதலிய வற்றுடன் திருவருள் புரிந்தும், அம்மூன்றனையு மொருங்கேயுடைய சகலர்க்கு மானைக் காட்டி மானைப்பிடிப்பது போல ஆசிரியத்திருவுருவேற்று அநுக்கிரகித்தும் விளங்குதலின் "உருவாகி" என்றும், சிவஞ் சத்தி நாதம் விந்துவென அருவமாகியும், மகேசுரன் உருத்திரன் விஷ்ணு பிரமன் எனவுருவமாகியும் விளங்குதற்கேற்ப, அருவமும் உருவமுங்கலந்த சதாசிவமாக நிற்றலின் "உபயமாகி" என்றும், தம்மை வழிபட்ட அடியவருக் கிடுக்கண்வந்தவிடத்து அருள்செய்யு நற்றுணையாக நிற்றலின் "நன்றாகி" என்றும், திருவருளுக்கொவ்வாத தீத்தொழில் புரிவோரைச் செகுத்து அவரையருளலின், "தீதாகி" என்றும், வேதங்கள் நான்காதலானுஞ் சில கீழ்மக்கட்கு மறைக்கப்பட்டு விளங்குதலானும் "நான்மறை" என்றும், "வேதங்களை யாவென்வோங்கி யாழ்ந்தகன்ற நுண்ணியனே" என வாதவூரடிகளும், "சூள்தாமறைச் சென்னியுந் தொட்டுத்தொட்ட நீண்ட நீள்" என்று பரஞ்சோதி முனிவருங்கூறியபடியே, வேதங்கட்கும் அதீதப்பட்டதாதலின் "நான்மறைக்கு மெட்டாத நலத்ததாகி" என்றும், "முன்னைப்பழம் பொருட்கு முன்னைப்பழம்பொருளே" என்றற்போல எல்லாவற்றிற்கும் முற்பட்டவராகலின் "தொன்றாகி" என்றும், இனியுள்ளவாம் புதுப்பொருள்களிலும் புதிதாகவிளங்குபவனென்பார் "புதிதாகி" என்றும், தமது திருவிழிகளைத்திறந்த காலத்துச் சூரிய சோமாக்கினிகளைப் பிரகாசிக்கச்செய்தும் அவற்றை மூடியகாலத்தி லிருளைப்பரவச் செய்தும் அவற்றின் சொரூபந் தாமேயாக விளங்குதலின் "சுடராகி யிருளாகி" என்றும், ஆணவாதிமலபரிபாகமும் இருவினையொப்பும் ஆன்மாக்களடைய விரும்பின் தம்மையே சரணுறலின் "துகடீர்ந்தன்பர் சென்றடையும்" என்றும், இப்பூமியை யடுத்த

உவர்க்கடலும், பிறநீவுகளையடுத்த பாற்கடல் முதலிய கடல்களும் போலன்றிக்காணினுங் கேட்பினுங் கருதினுங் களிதரும் பெருஞ்சுவைச்சாகரம் போலவாராகலின் அவனாதத்தரிசித்து அவர்பால் மனதைச்செலுத்துதலே யதில் மூழ்குதலாமெனபார் "செனறுடுஞ் சுவைக்கடலாம்" என்றும், அவ்வகைய இறைவர் சென்னை நகரிலுள்ளாரும் மலலீசுரரென்னுந் திருநாமமுடையவருமாகலின் "சென்னைமலலீசுரர்" என்றும், அவருடைய திருவடி "பூவெனப்படுவது பொறிவாழ்பூவே" என்றாற்போல மேம்பாடுற்ற தாமரைமலர் போன்றதாகலின் "மலர்த்தாள்" என்றும், அத்திருவடியே அநுக்கிரகஞ் செய்யுமாற்றலுடைமையின் அதனை யடுத்தல் கடமையெனபார் "சேர்ந்துவாழ்வாம்" என்றுங் கூறினார். (அ)

பிரமராம்பிகை.

ஆரணனு நாரணனு மாரணத்துக் கெட்டாத வரனு மென்னுங்
காரணர்கண் மூவரையுந் தரித்துயிர்த்த வடையாளங் காட்டு மாபோற்
சீரணவுந் திருவயிற்றின் மூவரைவாரந் தழுகெறிகருஞ் செல்வத் தாயைப்
பேரணவுஞ் சென்னைநகர்ப் பிரமராம் பிகைமயிலைப் பேசி வாழ்வாம்.

(இ - ள்) பிரமனும், விண்டுவும், வேதங்கட் கதீதனான உருத்திரனும் எனக் கூறப்படும் (சிருட்டியாதி முத்தொழில்கட்கும்) காரணர்களாகிய திரிமூர்த்திகளையும் (கருத்) தரித்துப்பெற்ற அடையாளத்தை வெளிப்படுத்தும் வகைபோல, சிறப்பு வாய்ந்த அழகிய வயிற்றில் மூன்றிரேகைகள் கொண்டு அழகினை வீசுஞ் செல்வத்தை யுடையதாயாகிய கீர்த்திவாய்ந்த சென்னை நகரிலெழுந்தருளிய மயிலின் சாயலையுடைய பிரமராம்பிகையைத் துதித்துவாழ்வோம் எ - று

திரிமூர்த்திகளையும் பெற்றதற் கடையாளமாகவயிற்றின் மூன்றுமடிப்பினை யுடையாளென்றார் இதனை,

சௌந்தரியலகரி

"மூவருக்குமுதற்பிறப்புநின்முகக்குணக்கடலென்று முன்
சேவடிக்கணிருப்பவர்சென்னிகுவித்தசெங்கைபிரிக்கிலார்
பூவெடுத்தவர்சென்னிவைத்திடுபோதமுற்றவரமைநின
காவலாபொதிநாளிலவைக்கவுமூவர்சென்னிகளிக்குமே"— எனபதனாறிக.

பிரசன்னவிநாயகர்.

முருகோடு மதுப்பிலி றறு நறுங்கடுக்கை முடிக்கணிந்த முதல்வற் காமைக்
கருகோடு பறித்தணிந்த கண்பதியை யொருகோடு கரத்தில் வாங்கி
யொருகோடு முகத்தணிந்த பிரசன்ன விநாயகனை யுற்றுந் தான
மருகோடு மணிமார்பத் தராவணிந்த நிராமயனை யகத்துள் வைப்பாம்.

(இ - ள்) வாசனையோடு தேனைச்சொரியும் நல்ல கொன்றைமாலையை முடியிலணிந்த முதல்வராகிய சிவபெருமானுக்கு, (திருமாலாகிய) ஆமையினகரிய ஓட்டினைப்பறித்துத் தரித்தவரும், ஒரு கொம்பினைத் திருக்கரத்திலேற்று, ஒருகொம்பினை முகத்திற்பெற்ற பிரசன்ன விநாயகரும், பொழிகின்ற மதசலமானது பக்கங்களிற் பாய்கின்ற அழகிய மார்பினிடத்தில் சர்ப்பங்களை யணிந்தவருமாகிய கடவுளை மனதிலிருத்துவாம் எ - று

நிராமயன—நோயற்றவன் கடுக்கை—முதலாகுபெயர்.

கருகு + ஓடு- கருகோடு

முதல்வற்காமைக் கருகோடுபறித்தணிந்த கணபதியென்றது.

தேவர்களும் அசுரர்களுங் கூடித் திருப்பாற்கடலைக் கடைந்தபொழுது திருமால் கூர்மவடிவேற்று மத்தாகிய மந்தரகிரியைத் தாங்கி நின்று, அப்பொழுது தோன்றிய அமுதைத் தேவர்கட்களித்து அதனால் இறுமாப்படைந்து கடல்களெழையுங் கலக்கித்திரிவது கண்ட தேவர்கள் அதனைச் சிவபெருமானிடத்து முறையிட, சிவபிரான் விருப்பின்படி விநாயகக்கடவுள் பாற்கடலை யடைந்து ஆமையாக நின்ற மாயோனது ஓட்டினைப் பறித்துக் கைலையை யடைந்து கண்ணுதலிடங் கொடுப்ப, அவர் அதனை மார்பகத்தணிந்தனரென்பது உபதேசகாண்ட சரிதம். (கo)

குமரவேள்

மராந்துளைத்த கணையானுஞ் சோவெறிந்த திறலானு மதிக்குந் தோறுஞ்
சிரந்துளக்க வலைகடலுஞ் சேணிகந்த பெருவரையுந் திறந்திறக் குன்றக்
கரந்துளக்குங் குறுமுனிக்குங் கருத்தினமயலூட்டியகை தவஞ்சாலவெறியி
னுரந்துளைத்த சேயிலைவேல் வலனுயர்த்த விளையவனை யுளத்துள் வைப்பாம்.

(இ - ள்.) மராமரத்தைத் தொளைத்த கணையையுடைய திருமாலும், (திரிபுரத்தின்) மும்மதில்களையழித்த வல்லபமுடைய சிவபெருமானும் நினைக்கும்பொழுதெல்லாஞ் சிரக்கம்பனஞ்செய்ய, அலைகளைவீசுங்கடலும் ஆகாயமளாவிய பெரிய விந்தமலையுந் தமது வலிகுன்றும்படி, கையினையசைத்த அகத்தியமுனிவனுக்கும், மனதில் மயக்கமவிளைத்த வஞ்சகமிகுந்த கிரவுஞ்சகிரியின் மார்பகம் போழ்ந்த செவ்விய அரசவடிவாகிய வேற்படையை வலப்புறத் தூயாத்திய இளையபிள்ளையாரை (நமது) மனதிலிருத்துவாம். எ - று.

மராமரத்தைத்தொளைத்தது—திருமால் இராமாவதாரத்தில் தன்னைச் சரணடைந்த சுக்கிரீவன் தன்தாற்றலுணருமாறு கணைவிடுத்துத் தொளைத்ததென்றும், சோவெறிந்தது—சிவபெருமான் மும்மதில்களையும் அழித்ததென்றுங் கொள்க.

அலைகடல்திறந்திறக்குன்றியதாவது.

இந்திரன் தனது செல்வச்செருக்கினால் அவைக்களத்தெய்திய ஆசிரியரைத் தக்கபடி மரியாதைபுரியாமையின் அவர்மறைய, இந்திரன் அவரைத்தேடிக் காணாது பிரமன் சூழ்ச்சியால் திரிசிரனைக் குருவாக்கி, அவன் வஞ்சனையாக யாகஞ்செய்யக் கண்டு அவன் சிரத்தைச்சேதித்து, பிரமகத்தியடைந்து, மாதர் மரம் நீர் நிலங்கட்கு அதனைப் பகிர்ந்துகொடுத்துப் புனிதனாயினன் இந்திரன் திரிசிரனைக்கொன்ற துணர்ந்த அவன் பிதா துவஷ்டாவென்பான் ஓர்யாகஞ்செய்து அதிற்றோன்றிய விருத்திரனை இந்திரன்மேலேவ இந்திரன் தனது வச்சிராயுதம் வலியற்றதாயிருந்தமையின் விண்டுவின் சூழ்ச்சியால் ததீசிமுனிவரது முதுகந்தண்டினைப்பெற்றுவாங்கி விசுவகன்மனால் வச்சிராயுதமாக்கிக்கொண்டு விருத்திரனையெதிர்க்க, அவன்போர்செய்ய வலியின்றிக் கடலிலாழ்ந்தனன் அவனைக்கண்டுபிடிக்குமாறு வேண்டிக்கொண்ட இந்திரன்கருத்துக்கிணங்கிய அகத்தியமுனிவர் அவனொளித்திருந்த சமுத்திரத்தைப் பானஞ்செய்தனர் என்பதாம் இதனை,

திருவிளையாடற்புராணம்.

"என்றவனிடுக்கண்டீர்ப்பானிகல்புரிபுலனகளைந்தும
வென்றவனெடியோன்றன்னைவிடையவன்வடிவமாக்கி
நின்றவனறிவானந்தமெய்மையாய்நிறைந்தவெள்ளி
மன்றவனூழிச்செந்தீவடிவினைமனத்துட்கொண்டான்.

கைதவன்கரந்துவைகுங்கடலைவெற்படக்குங்கையிற்
பெய்துழுந்தெல்லைத்தாக்கிப்பருகினன்பிறைசேர்சென்னி
யையனதருளைப்பெற்றோர்க்கதிசயமிதென்கொன்மூன்று
வையமுந்தொழிலுஞ்செய்யவல்லவரிவரேயன்றே."—என்பதனானறிக.

துளக்கவென்றதனால் கரத்தைநிமிர்த்திய காலத்துக் கடலைக்கரத்திலேற்று ஆசமனஞ்செய்தனரெனவும், கரத்தைத்திருப்பிக்கவிழ்த்த காலத்து விந்தத்தையடக்கினரெனவுஞ் சொல்லாற்றல்காண்க.

பெருவரைதிறத்திற குன்றியதாவது.

அகத்தியமுனிவர் தென்றிசைநோக்கிச் செல்லுகையில், கிரவுஞ்சன் என்னு மசுரன் மலைவடிவாகநின்று தனதுமாயையால் வழிதெரியாதபடி அலைக்க, அகத்திய முனிவர் கோபங்கொண்டு "நீ இவ்வாறே மலைவடிவாகக்கிடந்து குமாரக்கடவுள் வேலாயுதத்திற்கு இரையாகுக" எனச்சபித்தேகினர் அதுமுதல், கிரவுஞ்சன் மலைரூபமாகவேயிருந்தனன். அப்படியிருக்கையில், சூரபன்மனது தம்பிமார்களில் இளையோனாகிய யானைமுகம்பெற்ற தாருகாசுரன் அதில் வசித்திருந்தனன். முருகக்கடவுள் சூரனைச் சங்கரிக்கச்செல்லுகையில் அவ்விருத்தாந்தங்களை யுணர்ந்து தமது திருக்கரத்திலுள்ள வேலாயுதத்தால் தாருகனையும் மலைவடிவாகவுள்ள கிரவுஞ்சனையும் வதைத்தனர் இது நிற்க பின்னர் விந்தமலைநாரதன் சூழ்ச்சியால், மேருமலையைப் பகைத்து ஆகாயவழியைமறைத்து உயர்ந்து வழிதோன்றாது நிற்ப, அகத்தியமுனிவர் வழிவிடுகவென, அது மறுத்தமைக்க, முனிவர் தமது தவமகிமையால் அதனை நிலத்திலமுத்தினரென்பதாம். இதனை,

கந்தபுராணம்—திருக்கல்யாணப்படலம்.

"ஆனமுனிகேளொருநீயிவ்வசலநீங்கித
தேனார்மருதவளமேயதென்னாடுநண்ணி
வானார்பொதியமலைமேவுதிவையமெல்லா
மேனுளவேநிகராகிவிளங்குமென்றான"—எனவும்,

ஷை கிரவுஞ்சப்படலம்

"மாணமதிபெருகுவெய்யோயமற்றுநின்வன்மைநீங்கி
நீணமலையாகியிண்டேநின்றுதீயவுணர்க்கெல்லா
மேணமிகுமிருக்கையாகியிருந்தவத்தோர்க்குப்பேனச
சேணமலிகடவுளோர்க்குந்தீதொழிலிழைத்திபன்னாள்"

"மாற்படுமதுபாணிவலியொழுதண்டானென்றன
பாற்படுபுழைகளயாவுமபற்பலமாயைக்கெல்லா
மேறபுடையிருக்கையாகவெம்பிரானுந்தவுஞ்செவ்வேள்
வேறபடைதன்னிறபின்னாளவிளிகுதிவிரைவினென்றான்"—எனவும்,

ஷை தாருகன்வதைப்படலம்.

"தாருகனமார்பமென்னுந்தடம்பெருவரையைக்கீண்டு
சீரியகிரவுஞ்சத்திறசோந்துபட்டுருவிச்சென்று
வீரமும்புகழுங்கொண்டுவிளங்கியதென்னவங்கட்
சோரியுந்துகளுமாடித்தூணென்னமீண்டதன்றே."—எனவும்,

ஷை விந்தம்பிலம்புகுபடலம்.

"எறிகதிர்மதியினுக்குமேகருந்திறத்தாலவான
நெறியினையடைத்துத்தொல்லைநெடியமால்போன்றுநின்றேன

குறியநிறகஞ்சியாறுகொடுபபரேனுவெனதுதோற்ற
மறிகிலைமீணடுபோகெனறவவனைமொழிநததனறே.
அற்புதமமராகொளள்வாற்றவுங்குறியோனவிந்த
வெறபினதுமபாதனனினமீயுய ாகுடஙகைசேர்த்தி
வற்புறவூனறவலலேமறறதுபுவிககட்டாழ்நது
சொற்பிலமபுகுந்துசேடனறுனனிலையுறறதனறே ''—எனவும் வருவன
வற்றுனறிக. (கக)

சேயஞலூாபபிள்ளையாா

மறைநெறியிற பிறழாத வேதியரான பால்கறந்து வவ்வுந் தீங்கு,
முறைபுரியத் தககதென வடுததடிததுப பாற்கலததைத முனிநத தாதை,
பொறையுடன்மண ணிடைபபுரள விருதாளு மறவெறிநத பொல்லாத
தீஙகு, மிறையவனமெய்ப பணியாக விருமபததததை யடைநதவனை
யிறைஞசி வாழவாம.

(இ - ள்.) வைதிகமார்ககததினின்றுந் தவறாத அந்தணர்களுடைய பசுவின் பாலைக்கறநது அபகரிககினற தீமைக்கு முறைபபடி (தண்டனு) செயயததககது எனறு சமீபிதது அடிததுப பாற்குடததைத எறிநத தநதையாகிய எச்சதததன சாந்தததுடன நிலமிசைப் புரளுமபடி அவனது இருகால்களுந்துணடாயறுமபடிததடிநத பொலலாத பாவததையுஞ சிவபெருமானது உண்மைததொணடாகச் (செயது) சிறநத சணடேச பதவியை யடைநதவனை வணஙகி வாழததுவோம் எ - று

திருச்சேயஞலூரில வேதியாகுலததில எசசதததனென்பவனுக்குப புததிரராக அவதரித்த விசாரசாமா சனமாநதர அறிவுததொடாசசியால வேதாகமஙகளை யோதா துணாநது சர்வானமாககளிடததும அனபினவழியொழுகி வருகையி லொருநாள அவ்வூா அநதணசசிறுவரோடும் பசுநிரையோடுங் கூடிசசெனறனர் அப்பொழுது ஒரீறறுப பசுவொனறு அதனை மேயபபானைக குததபபோக, அவவாயன அதனைக கோலாற் புடைத்தனன். விசாரசாமாதுகணடு மனமபொறாது அவனைநோக்கி, பசுககள எலலாததேவாகளும, தீாததஙகளும, முனிவாகளும பிரியாது சூழ்நதிருககும உறுப்புககளை யுடையன திருமஞசனததிறகுரிய பஞச கௌவியஙகளைக கொடுபபன. திருவெணணீற்றிறகு அவறறின சாணமே மூலம ஆதலின நீ இனிப்பசுககளை மேயககவேணடாம யானே மேயப்பேனெனறு அவ்வூரா ரனுமதிபெற்று அருகிலுளள மண்ணியாறறஙகரையிலும புலலுளள விடஙகளிலும மேயதது நீா காட்டி வெயிலவேளையில நிழலிலிருததி மாலையில அவரவா வீட்டிறகனுப்பித தம் வீடுசோவாராயினா. அப்பசுமபால திருமஞசனமாதலைக் கருதி, சிவாாசசனையில் ஆசைகொணடு ஆற்றஙகரையில ஒராததிமரததின கீழ் மணலாற சிவலிஙகநியமிததுப பாலினலபிடேகிதது, பததிரபுஷபஙகளா லாசசிததுச சிவபூசைசெயதுவநதனா அதனைக்கணட அவ்வூரா னொருவன விசாரசாமர் விளையாடுவதாக நினைதது ஊராருககு அறிவிக்க, அவாகள எசசதததனை வருவிதது விஷயததைத வெளியிட்டனா. எசசதததன் அஃதுணமையாயின யானே கணடுபிடிததுத தணடிபபேனெனறு கூறி, தனமகனுககுததெரியாது பின்சென்று குராமரததேறி யொளிததிருந்தனன விசாரசாமர் பாறகுடஙகளை நிரபபித திருபபளளிததாமஞ சேகரிதது மணலாற சிவலிஙகஞசெய்து அதறகுப பாலாலபிஷேகிககக கணடு மரததினினறு மிறஙகிப பல கொடுஞ்சொற்கள கூறித தணடததாறபுடைததும அவாமனம சிவாாசசனையி லிருத்தலின உணாநதிலா. எசசதததன அவரதுணமையறியாது பாறகுடஙகளைக காலாலிடற, விசாரசாமா கண்டு

அவ்வாறு செயதவன் பிதா குரு பிராமணன என்றுங்கருதாது, அருகிருநத வோா கோலையெடுகக அது மழுவாக, அதனாலவன காலகளை வெட்டிச சிவபூசையை முடிதத னா. அவா பகதிககு மகிழ்நத சிவபெருமான இடபாரூடராயக காட்சியளிதது நம முடைய தொணடாகளுககெலலாம உனனைததலைவனாககி நாமேறறுககொணட அமு தும பரிவட்டமும புஷபமும உனககே தநதோம என்றுகூறித தமது சடையிலணிந திருநத கொன்றைமாலையை யவருககுச சூட்டிச சணடேசுரபதவி தநதருளினரென பது சரிதம. இதனை,

பெரியபுராணம்.

"தொடுததவிதழிசூழ்சடையாா துணைததாணிழறகீழ்விழுநதவரை
யெடுததுநோககிநமபொருட்டாலீனறதாதைவிழவெறிநதா
யடுததததாதையினியுனககுநாமெனறருளசெயதணைததருளி
மடுததகருணையாறறடவியுச்சிமோநதுமகிழ்நதருள.

அண்டாபிரானுநதொணடர்தமககதிபனாககியனைததுநா
முண்டகலமுமுடுப்பனவுஞசூடுவனவுமுனககாகச
சணடேசனுமாமபதநதநதோமெனறஙகவாபொறறடமுடிக்குத
துணடமதிசேரசடைககொனறைமாலைவாஙகிச்சூட்டினா"—எனபதனாலுணாக.

தநதையின காலைவெட்டுதல பாவமாயிருபபினும, இறைவன திருவடிககன புடைமைநோககி அதுபுணணியமாகவே முடிநதது இதனை,

சிவஞானசித்தியார்

"அரனடிககனபாசெயயுமபாவமுமறமதாகும
பரனடிககனபிலாதாா புணணியமபாவமாகும
வரமுடைததககனசெயதமாவேளவிதீயதாகி
நரரினிறபாலனசெயதபாதகநனமையாயததே"—எனபதனாலுணாக. (க௨)

திருநநதிதேவா

வேறு

வெள்ளி மாலவரை விமலனா விளமபிய வேதந
தெளளு மாகம புராணஙகள செழுஙகலை பிறவு
முளள வாறுதோந துலகெலாம வழஙகமுன னுரைதத
வளள லாகிய நநதியங குரவனை மதிபபாம

(இ - ள) பெரிய வெள்ளிமலையாகிய திருககயிலாயகிரியிலெழுந்தருளிய மலரகிதராகிய சிவபெருமானா அருளிசசெயத நானகு வேதஙகளும, தெள்ளிய (பொருளையுடைய) இருபததெட்டுச சிவாகமஙகளும, செழிய பிறகலைகளும ஆகிய இவறறையெலலாம உளளபடியே தெளிநது, உலகமெஙகும வழஙகுமபடி முதலிற கூறிய வளளலாகிய அழகியதிருநநதிதேவரெனனு மாசிரியரைததுதிபபாம எ - று.

வேதமெனபதறகு ஞானம பயப்பதெனபது பொருள வித=ஞானம. வேதம் நான்காவன—இருககு - எசுா - சாமம் - அதாவணம ஆகமமெனனு மொழியில் ஆவென்பது ஞானமும, கவவெனபது மோக்ஷமும, மவவெனபது மலநாசமுமாம. ஆகவே ஆனமாககளுககு மலததை நாசஞசெயது ஞானததையுதிப்பிதது மோக்ஷததைக கொடுககவலலதெனபது திரணடபொருள சிவாகமம் இருபதெட்டாவன—காமிகம - யோகசம - சிநதியம - காரணம - அசிதம - தீபதம - சூககுமம - சகததிரம - அஞசுமான - சுப்ரபேதம - விசயம - நிசுவாசம - சுவாயமபுவம - அனலம் - வீரம -

ரௌரவம் - மகுடம் - விமலம் - சந்திரஞானம் - முகவிம்பம் - புரோற்கீதம் - இலளிதம் - சித்தம் - சந்தானசர்வோத்தமம் - பரமேசுவரம்-கிரணம்-வாதுளம் என்பனவாம்.

புராணம்—வேதாகமங்களின் உட்கருத்தை விளக்குவது. பதினெண்புராணங்களாவன:—பிரமபுராணம் - பதுமபுராணம் - வைணவபுராணம் - சைவபுராணம் - பாகவதபுராணம் - பவிடியபுராணம் - நாரதீயபுராணம் - மார்க்கண்டேயபுராணம் - ஆக்கினேயபுராணம் - பிரமகைவர்த்தபுராணம் - இலிங்கபுராணம் - வராகபுராணம் - கந்தபுராணம் - வாமனபுராணம் - மற்சபுராணம் - கூர்மபுராணம் - காருடபுராணம் - பிரமாண்டபுராணம் என்பனவாம். அன்றியும் **உபபுராணங்கள்** பதினெட்டு, அவையாவன.—ஆதித்தியபுராணம் - காந்தபுராணம் - சோமபுராணம்-கபிலபுராணம் - கௌசிகபுராணம் - சாம்பபுராணம் - சிவதன்மபுராணம் - தௌர்வாசபுராணம் - நாரசிங்கபுராணம் - நாரதீயபுராணம் - பராசரீயபுராணம் - பார்க்கவபுராணம் - பிரமாண்டபுராணம் - மாரீசபுராணம் - மானவபுராணம் - வாசிட்டபுராணம் - வாயவியபுராணம் - வாருணபுராணம் என்பனவாம். இவ்வுபபுராணங்கள் தம்மை யியற்றிய அவ்வவர் பேரால் விளங்கும்.

கலை—கற்றற்குரியது. கலைஞானம் அறுபத்து நான்குவகைப்படும். அவையாவன —அக்கரவிலக்கணம் - இலிகிதம் - கணிதம் - வேதம் - புராணம் - வியாகரணம் - நீதிசாத்திரம் - சோதிடசாத்திரம் - தருமசாத்திரம் - யோகசாத்திரம் - மந்திரசாத்திரம் - சகுனசாத்திரம் - சிற்பசாத்திரம் - வைத்தியசாத்திரம் - உருவசாத்திரம் - இதிகாசம் - காவியம் - அலங்காரம் - மதுரபாடணம் - நாடகம் - நிருத்தம் - சத்தப்பிரமம் - வீணை - வேணு - மிருதங்கம் - தாளம் - அத்திரபரீக்ஷை - கனகபரீக்ஷை - இரதபரீக்ஷை - கசபரீக்ஷை - அசுவபரீக்ஷை - இரத்தினபரீக்ஷை - பூமிபரீக்ஷை - சங்கிராமவிலக்கணம் - மல்லயுத்தம் - ஆகருடணம் - உச்சாடனம் - வித்துவேடணம் - மதனசாத்திரம் - மோகனம் - வசீகரணம் - இரசவாதம் - காந்தருவவாதம் - பைபீலவாதம் - கவுத்துகவாதம் - தாதுவாதம் - காருடம் - நட்டம் - முட்டி - ஆகாயப்பிரவேசம் - ஆகாயகமனம் - பரகாயப்பிரவேசம் - அதிரிசியம் - இந்திரசாலம் - மகேந்திரசாலம் - அக்கினித்தம்பம் - சலத்தம்பம் - வாயுத்தம்பம் - திட்டித்தம்பம் - வாக்குத்தம்பம் - சுக்கிலத்தம்பம் - கன்னத்தம்பம் - கட்கத்தம்பம் அவத்தைப்பிரயோகம் என்பனவாம்.

வேதாகமபுராண கலைஞானங்கள் உலகத்தில் வழங்கும்படி முதலிலுரைத்த வள்ளலென நந்திதேவரை யுரைத்ததென்னெனின், வேதாகமாதிகலை முதலிற் சிவபெருமான் பார்வதிதேவியாருக்கும் நந்திதேவருக்கும் உரைப்ப, நந்திதேவர் சனத்குமாரமுனிவருக்கும் சனத்குமாரமுனிவர் வியாசமுனிவருக்கும், வியாசமுனிவர் சூதமுனிவருக்கும், சூதமுனிவர் நைமிசாரணியவாசிகளுக்கும், அவர்கள் உலகினருக்கும் உரைத்தனரென்பது வரன்முறையாகலினென்க.

வள்ளல்—வரையாது கொடுப்போன். (௧௫)

சமயகுரவர்

பருவ மேதுமி லாருநம் பரம்பரப் பொருள்கள்
கருதி யோமப்பொன் றேதனக் கண்ணுதற் பெருமா
னருளி னாற்பல வதிசயர் செந்தமிழ் பாடிப்
பொருளி தாமெனத் தெரித்தநால் வர்களையும் புகழ்வாம்

(இ - ள்) பரிபக்குவஞ் சிறிதுமில்லாதவர்கள் பிரவேசிக்கும் அன்னிய சமயப்பொருள்கள் மதித்துப் பாதுகாக்கவொண்ணாதென, நெற்றிக்கண்ணையுடைய சிவ

பெருமானது திருவருளினால், செந்தமிழாலாகிய பல அற்புதங்களை விளைக்கத்தக்க (திருநெறித் தமிழ்வேதமாகிய) பாசுரங்களைப்பாடி, இதுதான் (உண்மைப்) பொருளாகுமென்று உணர்த்திய (சமயாசாரியர்) நால்வர்களையுந் துதிசெய்வாம் எ - று.

கண்ணுதல்—அன்மொழித்தொகை.

சிவபெருமானுக்கு நெற்றிக்கண் வந்ததாவது—ஒருகாலத்திற் சிவபெருமான் கைலாயகிரியிலுள்ள ஓர் நந்தனவனத்தில் உமாதேவியாருடன் உலாவிக்கொண்டிருக்கையில், உமாதேவியார் ஓர் விளையாடல் கருதி இறைவர் பின்சென்று ஒன்றுமுணராது இறைவரது இருவிழிகளையும் இருகரங்களாற்பொத்த, அண்டமுழுவதும் இருண்மயமாயிற்று. அவ்வந்தகாரத்தினால் அகிலப்பிராணிகளியாவும் வருந்துவது கண்ட சிவபெருமான் தமது நெற்றியினடுவே ஓர் திருவிழிதோன்றுவித்துச் சூரியசந்திராதிகளுக்கு ஒளியுண்டாக்கி உலகுக்குற்ற துயரினையொழித்து நெற்றிக்கண்ணரென்ப பெயரெய்தினர் என்பதாம். இதனை,

கந்தபுராணம்

"ஈசனையொருநான்றம்மையெழில்பெறுகைலைக்காவிற்
பேசலளாடலுன்னிப்பின்வரவிழியிரண்டுந்
தேசுறுகரத்தாற்பொத்தச்செறிபுவனங்களியாவு
மாசிருள்பரந்தெல்லாவுயிர்களும்வருத்தங்கொள்ள

ஓங்குதன்னுதலினுப்பன்றொருதனிநாட்டநல்கி
யாங்கதுகொண்டுநாதனருள்கொடுநோக்கியாண்டு
நீங்கருநிலைமைத்தாகிநின்றபேரிருளைமாற்றித்
திங்கண்முதலானோர்க்குச்சிறந்தபேரொளியீந்தான்."—என்பதனானறிக.

நால்வர்கள்—ஆளுடையபிள்ளை-ஆளுடைய வரசு - ஆளுடைய நம்பி-ஆளுடைய வடிகள். செந்தமிழென்றது தேவார திருவாசகங்களை. அதிசயம் - **திருஞானசம்பந்தமூர்த்திநாயனார்** ஞானப்பாலருந்தி, பொற்றாளம்பெற்று, முத்துச்சிவிகையிலிவர்ந்து, முயலக நோயையகற்றி, பொற்பந்தல் பொற்கிழிபெற்று, அரவின்விடமகற்றி, படிக்காசுபெற்று, மறைக்கதவையடைத்து, பாண்டியன் வெப்பகற்றி, அனல்வாதம் புனல் வாதங்களில்வென்று, சமணரைக்கழுவிலேற்றி, புத்தநந்திதலையில் இடிவீழ்த்தி, ஆண்பனையைப் பெண்பனையாக்கி, என்பைப்பெண்ணாக்கச் செய்ததை முதலியனவும், **திருநாவுக்கரசுநாயனார்** தமக்குற்ற சூலைநோயகற்றி, சமணர்களிட்ட நீற்றறை-விடம் - இடறச்செய்தயானை - கல்லோடுவீழ்த்தியகடல் - இத்துயரங்களினின்று நீங்கி, சூலமுத்திரையும் இடபமுத்திரையுந் தரித்து, அப்பூதிநாயனார் மகனுக்குற்ற அரவின் விஷத்தையகற்றி, படிக்காசுபெற்று, மறைக்கதவைத்திறந்து, திருவையாற்றிற் கைலாய தரிசனஞ்செய்ததை முதலியனவும், **சுந்தரமூர்த்திநாயனார்** தமது திருமணத்திற் சிவபெருமான் அடிமைச்சீட்டுகாட்ட வன்றொண்டராகி, திருவதிகையில் திருவடிசூட்டப்பெற்று, திருவாரூரிற் பரவையாரைமணந்து, திருத்தொண்டத்தொகை யோதி, குண்டையூரிற் கொடுத்த நெல்மலையைப் பரவையார் மனைக்கு வருவித்து, செங்கல்லைப்பொன்னாக்கி, மணிமுத்தாற்றிலிட்ட பொன்னைக் கமலாலயமென்னும் வாவியிலெடுத்து, திருவொற்றியூரிற் சங்கிலியாரைமணந்து, அதனாற் பரவையார் கொண்ட ஊடல்தீரச் சிவபிரானைத் தூதனுப்பி, காவிரிவெள்ளத்தைவிலக்கி, முதலையுண்ட சிறுவனை வெளிப்படுத்தி, வெள்ளானையிலிவர்ந்து திருக்கைலாயமடைந்ததை முதலியனவும், **மாணிக்கவாசகசுவாமிகள்** குருந்தமரத்தடியில் இறைவனாலுபதேசிக்கப்பெற்று, நரிகளைப்பரிகளாக்கி, புத்தர்களைவாதில் வென்று, ஊமைப்பெண்ணைப் பேசு

வித்து, தாம் ஓதிய திருமுறையைச் சிவபெருமானேயெழுதி அழகிய திருச்சிற்றம்பலமுடையானெனக் கைச்சாத்திட்டுச்செய்ததை முதலியனவும் எனக்கொள்க. (கரு)

மெய்கண்டதேவர்.

சிறிய வாடியிற் பெரியமால் வரைப்பொருள் செறிந்தாங்
கறிவு நூல்களின் முடிவெலா மகப்படுத் தவற்றி
னெறியெ லாம்விளக் கியசிவ ஞானபோ தத்தைக்
குறிசெய் தீந்தமி ழாலுரை குரவனைப் பணிவாம்.

(இ - ள்.) சிறிய கண்ணாடியில், மிகப்பெரிய மலையின்பொருள்கள் விளங்குவனபோல, ஞானசாஸ்திரங்களின் முடிந்தபொருள்கள் எல்லாவற்றையும் தன்னகப்படுத்தி, அவற்றின்மார்க்கங்களை யெல்லாம் (நன்கு) விளங்கச்செய்த சிவஞானபோதமென்னு நூலைக்குறித்த மதுரமாகிய தமிழ்ப்பாக்களாலுரைத்தருளிய ஆசிரியராகிய மெய்கண்டதேவரை வணங்குவாம் எ - று.

ரௌரவாகமத்துப் பாசவிமோசனப் படலத்துக்கூறப்பட்ட சிவஞானபோதத்தை, சாலிவாகன சகம் ககசரு-ல மெய்கண்டதேவர் செந்தமிழில் மொழிபெயர்த்தருளினரென்பது. (கச)

நமச்சிவாயதேசிகர்

வேறு.

இருவினை யொத்தி நிற்றற் கேதுவு மிருளொத்தி
மருவிய செயலு நீங்கும் வண்ணமு மற்று நேற்றி
யருள்பதித் தென்னை யாட்கொண் டாவடு துறைக்கண் வாழுந்
திருவளர் நமச்சி வாய தேசிகன் மலர்த்தாள் போற்றி.

(இ - ள்) இருவினைகள் தொன்றுதொட்டே நிற்பதற்குக் காரணமும், ஆணவாதி மலசம்பந்தம் அநாதியாகவே (பசுக்களை) பொருந்திய செய்கையும், (அது) நீங்குந்தன்மையும், பிறவற்றையும் உணர்த்தி, கிருபை வைத்து (புலலறிவினனாகிய) என்னையும் அடிமைகொண்டு திருவாவடுதுறையில் வாழுகின்ற சிவஞானச் செல்வம் வளரப்பெற்ற நமச்சிவாயதேசிகரது மலர்போன்ற திருவடி துதிக்கப்படுவது. எ - று.

கடவுள்வாழ்த்து முற்றிற்று.

அவையடக்கம்.

சிற்பநூல் வழியிற் செய்த வுருவெனச் சிறப்பு சாராப்
புறபொரு ளுருவு மைங்கைப் புண்ணியன் புணர்ந்து நிற்பி
னற்புதப் பூசை கொள்ளு மவன்புகழ் நிறைந்த லாலே
நற்பதம் புணர்த் தாரென் பாட்டு நலத்த தாமே.

(இ - ள்) சிற்பநூன் முறைப்படி யியற்றிய திருவுருவத்தைப்போல, சிற்பலக்ஷண மமையப்பெறாத அற்பமாகிய பொருளினாற் செய்த வுருவத்தையும் ஐந்து திருக்கரங்களையுடைய புண்ணியசொரூபியாகிய கணேசப்பெருமான் கலந்துநிற்பாராயின், (அடியார்கள் செய்யும்) அழகிய பூசையைக் கொள்ளும் அவ்விறைவனுடைய

கீர்த்தி நிறைதலினாலே, நல்ல பதங்களைப் புணராநிற்காத எனது பாடலும் நன்மையுடையதாகும். எ - று.

புற்பொருளென்றது கோமயத்தாற் செய்தது. அற்புதப்பூசையாவது.—ஆகமவிதிவழி செய்யப்படுவது நற்பதமென்றது சொற்குற்றம் பொருட்குற்றமுதலியன நீங்கிய சொற்களெனக்கொள்க. (க)

ஒருபொருண் முழுதுங் காணு ருப்பொரு ளியல்பு கூறக
கருதுவ ரல்லா மேனுட கணணுதற் பெருமானன் ருனு
மருவிடை யூறு கண்டு வணங்கினு னென்று லந்தப்
பொருவிலி கதையான் கூறப் புகுந்தது நகைய தாமே.

(இ - ள்.) ஒரு பொருளை முற்றுமறியாதவர்கள் அப்பொருளி னியற்கையைச் சொல்ல நினைக்கமாட்டார்கள். முற்காலத்தில், நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானும (தமக்கு) இடையூறு உண்டானதைக்கண்டு பணிந்தாரென்று சொல்லுமிடத்தில், அந்தச்சமானமற்ற விநாயகப்பெருமானது சரித்திரத்தை யான் எடுத்துச் சொல்லப்புகுந்தது நகையதாகும். எ - று

உப்பொருளென்றதில் உகரம் சுட்டிடைச்சொல்.

விநாயகனென்பதற்குத் தனக்குமேல் ஓர்நாயகனில்லாதவனெனப் பொருடரலின் பொருவிலியெனக்கூறினார்.

நகையதாகுமென்றது எண்சிலேடை வகையால் நகையினை விளைப்பதாகுமென்றும், ஒளியினைச் செய்வதாகுமென்றும் பொருள்படும். (உ)

சிறப்புப்பாயிரம்.

வேறு

வீறுபெறு மாவடுதண் டுறைநமசி வாயனருண் மெய்ஞ்ஞா னத்தின்
கூறுதெரி கசியபப முனிவரனற் கோதிலெழுத் தாதி யென்னு
மூறுசுவைப் பாறயிர்நெய் தேன்கழை சீ ராழிகடைந் துலகிற் செய்யு
ளேறுசுவை யமுதளித்தா னவிநாயகமான மியவிரத மினிப்ப மாதோ.

(இ - ள்) பெருமைபெற்ற தடமாகிய திருவாவடுதுறையி லெழுந்தருளிய நமசிவாய தேசிகரருளிய உண்மைஞானத்தின் கூறுபாடுகளை யுணர்ந்த கசியப முனிவர் குற்றமில்லாத எழுத்து - சொல - பொருள - யாப்பு - அணி யென்று சொல்லப்படும் ஊற்றெடுக்குஞ் சுவையினையுடைய பால - தயிர - நெய - தேன - கருப்பிரசம ஆகிய கடலினைக்கடைந்து இந்நிலவுலகத்தில, சுவையேறிய அமுதமயமாகிய செய்யுட்களாகிய விநாயகமான்மிய மென்னும இரசத்தினை (புலவர்க்கு) இனிக்கும்படி யுதவினார. எ - று. (௩)

வேறு

சொல்லார்ந்த புகழ்த்தொண்டை வளநாட்டிற் சிறந்த
துளுவர்குல சிகாமணியாங் கந்தப்ப னருளும
வல்லாண்மைத் தடம்புயத்தோன் குளந்தையூர வள்ளன
மாமேரு காவலனும வரம்பிலபெரும புகழோன

வில்லார்ந்த வருட்சிவபுண் ணியக்கொழுந்தா யுலகில்
விளங்குசிதம் பரபூபன் விநாயகமான் மியத்தை
யெல்லாரு முய்யத்தமிழா லருளுகென்னத் தந்தா
னிருந்துறைசைக் கச்சியப்ப வெல்லையின்மா தவனே.

(இ - ள்) (கவிவாணர் செய்த) பாக்களிற் பொருந்திய கீர்த்தியையுடைய வளமமைந்த தொண்டைநாட்டில், சிறப்புற்ற துளுவவேளாளர் குலத்திற்கோர் சிரோரத்தினமாகிய கந்தப்பமுதலியார் பெற்ற வலிதங்கிய ஆண்மையினையுடைய பூரித்த புயங்கள் வாய்ந்தவனும், குன்றத்தூரில் (வாழ்ந்த) வள்ளலும், மகமேருவைப்போலக் காத்தற்றொழிலில் வல்லவனுமாகிய எல்லையில்லாத பெரிய கீர்த்தியுடையவனும், ஒளிவாய்ந்த அருண்மயமாகிய சிவபுண்ணியக் கொழுந்தாய் உலகில் விளங்குபவனுமாகிய சிதம்பரபூபன், விநாயகப்பிரபாவத்தை, யாவருங்கடைத்தேறும்படித் தமிழ்ப் பாக்களாலருளிச்செய்க வெனக்கேட்க, பெருமை வாய்ந்த திருவாவடுதுறையி லெழுந்தருளிய அளவில்லாத சிறந்த தவத்தினையுடைய கச்சியப்ப முனிவர் செய்தருளினார் எ - று.

“ஆக்கியோன் பெயரே வழியே யெல்லை - நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே - கேட்போர் பயனோ டாயெண் பொருளும் - வாய்ப்பக் காட்டல் பாயிரத் தியல்பே” என்றும், “காலங் களனே காரண மென்றிம் - மூவகை யேற்றி மொழிநரு முளரே” என்றுங்கூறுதந்திரமாகலின், “இருந்துறைசைக் கச்சியப்ப வெல்லையின் மாதவனே” என்றதால் ஆக்கியோன் பெயரும், “விநாயகமான்மியத்தை” என்றதால், வடமொழிப் பார்க்கவபுராணத்தின் மூலமாகிய வழியும், “எல்லாரும்” என்றதால், குணகடல் குமரி குடகம் வேங்கடமெனு நான்கெல்லைக்குட்பட்ட தமிழ்நாட்டு வழங்கலாகிய எல்லையும், “விநாயகமான்மிய” மென்றதனாலேயே நூற்பெயரும், “தமிழால்” என்றதால் விருத்தப்பாக்களாகிய யாப்பும், “உய்” என்றதால் நுதலிய பொருளும், கேட்போர்பயனுங் கூறினாரெனக் கொள்க.

இனி, காலமென்றதை இவர் சாலிவாகனசகம் ககூ௬எ-ல் இருந்தவரெனவும், களனென்றதைச் சென்னைநகரில் ஸ்ரீபிரசன்னவிநாயகர் சந்நிதியில் அரங்கேற்றியதென்றும், காரணமென்றதை “சிதம்பரபூபன்விளம்புகென்ன” என்றதால் அவராற் கேட்கப்பட்டதென்றுங்கொள்க (உ)

ஆ திருவிருத்தம் - உக.

திருநாட்டுப்படலம்.

வேறு.

அடுத்த விக்கினை பிரசன்ன விநாயக னருளாற்
றொடுத்த லாலவ னுடனுறை தொண்டைநாட டினையும்
விடுத்தி டாவவன் சென்னைமா நகரையு மேன்மை
மடுத்த நாவலா வியத்தக முந்துற வகுப்பாம்.

(இ - ள்) பொருந்திய இச்சரிதமானது பிரசன்ன விநாயகப்பெருமானது திருவருளினாற் பாடப்படுவதால், அவ்விறைவனெழுந்தருளிய நாடெனக்கூறப்படுந் தொண்டைநாட்டினையும், அக்கடவுள் பிரியாத சிறந்த சென்னைநகரத்தினையும், மேன்மை தங்கிய நாவின் வன்மைவாய்ந்த புலவர்கள் களிக்கும்படி முற்பட (எடுத்துக்) கூறுவாம். எ - று. (க)

வேறு.

அண்டரும் புகழ்துண் டீர னாண்டுதுண் டீர நாடாய்த்
தண்டகன் பின்ன ராண்டு தண்டக நாடாய்ப் பின்னர்த்
தொண்டைமா னாண்டு தொண்டை நாடெனத் துலங்கிற் றென்ப
பண்டயன் படைப்புத் தொடங்கிப் பயிலுமித் தொல்லை நாடு.

(இ - ள்.) பூர்வத்திற் பிரமதேவனது சிருஷ்டி காலந்தொடங்கிப்பொருந்திய இப்பழையநாடானது தேவர்களும் புகழுந்துண்டீரன் அரசுசெய்துதுண்டீரநாடாயும், அதன்பின்னர் தண்டகன் அரசுபுரிந்து தண்டகநாடாயும், அதன்பின்னர் தொண்டைமான் அரசியற்றித் தொண்டைநாடாயும் விளங்கியதென்று சொல்லுவர். எ - று. (உ)

கயிலையி லிழைத்த குற்றங் கழுவுதல் வேண்டிப் போந்த
மயிலிய லுமையா ளாறு நகரையும் வழியிற் போகி
யுயரிய நகரி தென்றே யுற்றமா காஞ்சி மூதூர்
செயிரறத் தன்பாற் கொண்டு சிறந்தது தொண்டை நாடு.

(இ - ள்) திருக்கைலாயகிரியில் (சிவபெருமானது திருவிழியைப்புதைத்த) குற்றத்தை நீக்குதல் விரும்பிப் (பூவுலகுக்கு) வந்த மயிலின் சாயலையுடைய உமாதேவியார் (புண்ணிய புரிகளில்) ஆறுநகரங்களையும் வழியிலேவிடுத்து (தாண்டி, அவ்வேழனுள்ளும்) சிறப்புற்ற நகரமிதுவேயென்று பொருந்திய சிறந்த காஞ்சியென்னும் பழைய நகரத்தைக் குற்றமறத் தன்னிடங்கொண்டு மேம்பட்டுற்றது தொண்டைநாடு. எ - று.

உமாதேவியார் சிவபெருமானது திருக்கண்புதைத்த காலத்தில் ஆன்மாக்கள் இருளா லல்லலுற்றமை கருதி, நீ தென்றிசை சென்று எம்மை யாசித்துப் பாகம் பெறுகவென்றமையின் அக்கட்டளையைக் கடவாது காஞ்சியிற் றவஞ்செய்து சென்றன ரென்பது சரிதம்

புண்ணிய நகரங்கள் ஏழு. அவற்றை,

காசிகண்டம்.

"காசிமாயாபுரியவந்திகாஞ்சிமற
றோசைகொளயோத்திவண்டுவரையொடுபற

மேசிலாமதுரையென்றிசைக்குமேழபுவி
மாசறமுததியைவழங்குமெனபவே."—என்பதனுணறிக. (௩)

நாட்டினுக் கியலபு கூறப புகுநதநா வலாக ளெலலா
நாட்டினிற் சிறநத தொண்டை நாட்டினை நோககிப போலும்
வாட்டமி லிருநீா வாய்நத மலையரண் வருநீ ராதி
கோட்டமில பொருள்க ளெல்லாங் குறிதடுெத் துரைத்த வாறு.

(இ - ள்) நாட்டுககுச் சிறப்புரைககப் புகுநத கவிவாணர்கள் யாவரும், குறைவில்லாத பெருமிதம பொருநதிய மலையரணும் வருகினற நீரரணுமுதலிய கோணுதவில்லாத பொருள்களையெல்லாஞ் சுட்டி யெடுததுச சொல்லியவகை. நாடுகளிற் சிறந்த தொண்டைநாட்டின் சிறப்பு நோககிப்போலும. எ - று.

நாடுகளி லெல்லா மேமபட்ட தொணடைநாடு இருநீர்வாய்ந்த மலையரண் முதலியன பொருநதி நிற்றலைககண்டுதான கவிவாணா பிறநாடுகளின் சிறப்பையுரைத்தனர்போலு மென்பது கருதது (௪)

மழைவளம வறநத போது மணலகழ்ந் துழவ ரெல்லாம்
விழைபுனல் கொள்ளு மாறு வேறுவே றொழுகு மேனுந்
தழைபுனற் பாலி தேனுத் தருபயத் தொழுகுஞ சீராற
பழையதுண் டீர நாட்டைப் பாலிநா டெனவுஞ சொல்வார்.

(இ - ள்) மழை வளப்பங்குன்றிய காலததிலும் உழவர்கள் யாவரும் மணலினைத் தோண்டித்தாம விருமபிய நீரினைக் கொளளுமபடி (கால்முதலிய வுருவேறறு) வெவ்வேறாக ஒழுகுமாயினும், பெருகுகினற நீரையுடைய பாலாறானது காமதேனு சொரிந்த பாலினுலொழுகுஞ சிறப்பால், பழமையாகிய துண்டீரநாட்டைப் பாலிநாடென்றுஞ சொல்வாாகள. எ - று (௫)

வேறு.

மாலெ னப்படு மேகமால் வாரிதி யடுத்துச்
சீல மெய்நிறம வேறுமாயத தேவருக கமுதஞ்
சால நல்கினன சாாநதுரு வேறுமாய் நாமு
ஞால நல்குது மமுதென நரலைநோக கினவே.

(இ - ள்) மாலெனறு சொல்லப்படும் மேகம், திருமால் (பாற்) கடலைச்சேர்ந்து, சிறபபுற்ற தனது தேகநிறமவேறாகித தேவர்கட்கமுததைத மிகுதியாகக்கொடுத்தனன். (ஆதலின) நாமும் (அங்குச்) சென்று உருவம் வேறுபட்டு உலகினருக்கு அமுதுகொடுப்போமெனறு கடலைககண்டன. எ - று.

மாலெனபது மேகததிறகுந திருமாலுக்கும் பெயராகலின நமது பெயருடைய வொருவனியறறியவாறு நாமுஞ செயவோமெனறு கருதியதாக வுருவகஞ் செயதார். அமுதமெனபதும அவ்வாறே அமிர்தததிறகும ஜலததிறகும பெயா. (௬)

திருவு மறறவு முநதுறச செறிநதுயிர் தேமப
வுருவ வலவிட முதலிய பாற்கடனை மறநது
மருவி லேலமென வொழிதொரு மாதவற குணவாய்ப்
பொருதி னைபபெருங கஙகைதோய புணரிசாாந தனவே.

(இ - ள்) திருமகளையும் ஏனைய பொருள்களையுந் தன்னிடத்துடைத்தாகி, மூன்றுற உயிர்கள் துக்கிக்கும்படி நிறம்மைந்த வலிய விடத்தைக்கொடுத்த திருப்பாற் கடலை மறந்துஞ் சேரோமென்று நீக்கி, ஒப்பற்ற அகத்திய முனிவனுக்கு ஆபோசன மாகி, மோதுகின்ற அலையையுடைய பெரிய கங்காநதி பாய்கின்ற ஜலசாகரத்தை யடைந்தன. எ - று.

"திருவுமற்றவுஞ் செறிந்து, உயிர்தேம்ப வுருவவல்விட மூன்றுற உதவிய" என்றநவயஞ்செய்துகொள்க (எ)

எம்மை யூர்தரு மிந்திர னிம்மலைச் சிறகு
தம்மை யீர்ந்தநாட் டப்பிவந் தொளித்தமை நாக
விம்ம லோங்கலை வெளிசெய்வா மெனவிழைந் தனபோற்
சும்மை மாகடல் குழிபடத் தோயம்வாய் மடுத்த.

(இ - ள்) எம்மை வாகனமாகக்கொள்ளும் இந்திரன் தொகுதியாகிய மலை களின் சிறகுகளையரிந்த காலத்தில், (அவன்கண்கட்குப் புலப்படாது) தவறிவந்து ஒளித்துக்கொண்ட பூரித்த மைநாகமலையை (இப்பொழுது) வெளிப்படுத்துவோ மென்று விரும்பினபோல, ஒலிபொருந்திய பெரிய சமுத்திரமானது குழிபடும்படி சலத்தைப் பருகின. எ - று.

மைநாகமென்றது இமாசத்தின் மகன் (அ)

வெளிப்ப டுத்தினும் வெருவிவந் தொளித்தமால் வரையை
யளிப்ப தல்லது மானவே லிந்திர னடுத்து
விளிப்ப தின்மையை நினைந்துவெண் டிரைப்புனன் முழுதுங்
களிப்ப வுண்டிடா தெழுந்தன கறுத்துமா மேகம்.

(இ - ள்) வெளிப்படுத்தினாலும், அச்சமுற்று வந்து (கடலிலொளித்த அப்) பெரியமலையை மாட்சிபொருந்திய வச்சிரவேலேந்திய இந்திரன் (இனி) காப்பதல்லது சமீபித்து அழிப்பதில்லை யென்பதைக்கருதி, வெள்ளிய அலையையுடைய கடனீர் முழுவதையுஞ் சந்தோஷமெய்தப் பருகாமல், பெரிய மேகங்கறுத்தெழுந்தன. எ - று.

அச்சமுற்றுக் கடலிலொளித்த அம்மலையை இனி யிம்சைசெய்யானாதலின் அதனை வெளிப்படுத்தாதொழிந்தன வென்றுணர்க. கறுத்து என்றதற்குக் கருநிறமுற்று என்றும், கோபித்து என்றும் பொருள்படும்.

"வெளிப்படுத்தினும் * விளிப்பதின்மையை நினைந்து * உண்டிடாதெழுந்த னமேகம்" எனமுடித்துக்கொள்க. (௯)

வெளிறு நீரரும் பெரியரை மேவிடி னவர்த
மொளிறு நீரெலா முறுவரென் பதுதிட முவரி
குளிரு நீருமவண் ணமுங்குரூஉத் தழலும்பே ரொலியுந்
துளிசெய் மாட்சியும் பெற்றன தோயந்தவெண் மேகம்.

(இ - ள்) வெளிற்றுத்தன்மையுடையவர்களும் மேலோரையடைந்தால், அப் பெரியோருடைய சிறந்த தன்மைகளெல்லாவற்றையும் அடைவார்களென்பது நிச்சயம் (அதுபோல) சமுத்திரத்திற் படிந்த வெள்ளியமேகம் (அதனது) தட்பமும் சலமும் கருநிறமும் செவ்விய அக்கினியும் பேரிரைச்சலும் துளிக்கின்ற மேம்பாடும் (ஆகிய இவற்றை) பெற்றன எ - று.

வண்ணம் - நிறம், எண்மெகக்கருமை. தழலென்றது கடலில் வடவாமுகாக்கினியும் மேகத்தில் நெருப்புமெனக். பேரொலிகடலிரைச்சலும் மேககர்ச்சனையுமாம். மற்றவை வெளிப்படை. (௧0)

குங்கு மங்குலாஞ் சிலைநுத லோடுகோ மளமா
ரங்க மெங்கணும் பசப்புறச் சூறபொறை யாற்றாத்
தங்கு மின்னிடை நுடங்கவா யரற்றொலி தழங்க
மங்குன் மங்கைநீ ரெனுமகப் பயப்பவான் பரந்தாள்.

(இ - ள்.) குங்குமம் விளங்கும் புருவமாகிய விலலோடும், இளமைவாய்ந்த தேகமுழுவதும் பசலைநிறமெய்தவும், காப்பச்சுமைபொறாது விளங்குகின்ற மின்னலாகிய இடையொசியவும், வாயினொலிரைச்சலிடும் ஓசை விளங்கவும், மேகமாகிய பெண் நீர் என்னுங் குழந்தையைப்பெற ஆகாயம் (ஆகியஇடத்திற்) பரவினள் எ-று.

குங்குமம் - செம்மைநிறம். ஆற்றா - ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்.

கவர்பொ ருட்படு நூல்களின் கரிசெலா மகற்றி
யிவர்பொ ருட்டிற மிதுவென வியம்புமா ரியர்போ
லுவர கற்றியொண் டீம்புன லுயிரெலாம் பருகத்
துவருமம் வெப்பறச் சொரிந்தன சுரந்துகா ரெழிலி.

(இ - ள்.) குற்றமாகிய பொருள்கள் பொருந்திய நூல்களின் குற்றங்களையெல்லாம் விலக்கி, மேன்மையாகிய பொருளின்றிறமிது தானென்று (அளவிட்டு) உரைக்கும் மேலோர்போல, கரியமேகங்கள் (சமுத்திர நீரின்) உப்புத்தன்மையை விலக்கி, ஒள்ளிய மதுரமாகிய சலம் (ஆக்கி, அதனைப்)பிராணிகள்யாவும் பருகும்படி, துன்புறுத்தும் (வெயில்) வெப்பமொழியும்படி ஊறவெடுத்துப் பொழிந்தன. எ - று.

காரெழிலி - கார்காலத்துதித்தமேகம் (௧௨)

திரைய டங்கலுஞ் சொரிந்தன தேமலர்ப் பண்ணைத்
தரைய டங்கலுஞ் சொரிந்தன தண்ணிழற் கான
நிரைய டங்கலுஞ் சொரிந்தன நெடும்புன லருவி
வரைய டங்கலுஞ் சொரிந்தன வள்ளியோர் போல.

(இ - ள்) (மேகங்கள்) கொடையாளிகள்போல, சமுத்திரமாகிய நெய்தநிலமுழுதும் பொழிந்தன; தேனமைந்த மலர்கள் பொருந்திய வயல்களையுடைய (மருத) நிலமுழுதும்பொழிந்தன; தண்ணிய நிழலைச் செய்கின்ற வனமாகிய (முல்லைநில) வரிசையெல்லாம் பொழிந்தன; நெடிய நீரையுடைய அருவியாறமைந்த மலை (ஆகிய குறிஞ்சி) நிலமுழுதும் பொழிந்தன. எ - று. (௧௩)

உரிய தாகிய பருவமிவ் வாறொழிந் ததற்பின்
கரிய வார்கட னீர்நசை கதித்தகா ரணத்தாற்
பரியு மாமழை மதிதொறு மும்முறை பருகிச்
சொரியு மாகடன் பூண்டன சுரர்களுங் களிப்ப.

(இ - ள்) உரியதாகிய (கார்ப்) பருவம் இவ்வகையாகச் சென்றதன்பிறகு நெடிய கருங்கடற் சலத்தில் விருப்பமுற்ற காரணத்தினால் விரும்பும் சிறந்த மேகங்கள் மாதந்தோறும் மும்முறை (அதனைப்) பருகி, தேவர்களுஞ் சந்தோஷிக்கும்படி (மழை) சொரியும் வகையாகக் கடமையைக்கொண்டன எ - று.

மதிதொறு மும்முறை பருகிச் சொரிதல் - மாதமும் மாரிபெய்தல் அதாவது பது தினங்கள் கழிந்தபின்னர் பத்தாநாளில் மழைபொழிதலென்பது ஆன்றோர் உரையிற்கண்டது. (கச)

மாயை காரியப் பொருள்களை யடியார்பால் வழங்கித்
தூய வான்பொரு ளளிதுறு நற்குணரே போலத்
தீய தாம்புனற் செழுமுகிற் களித்திருங் கடலும்
பாய தீம்புன னதிகளாற் பருகின மாதோ

(இ - ள்) மாயாகாரியமாகிய பொருள்களை அடியவர்கட்குக் கொடுத்து, சிறந்த மோக்ஷப்பொருளை யிலேசாகப் பெறும் நற்குணமுடைய மேலோர்போல, பெரிய சமுத்திரமும் தீய (உவர்) நீரைச் செழிய மேகங்களுக்குக் கொடுத்துப் பரவிய மதுரமாகிய நீரை (கங்கையாதி புண்ணிய) நதிகளாற் பருகின எ - று.

மாதோ - அசை (கரு)

அருவி வீங்கின மலைகள்கான் யாறுமிகக் கார்த்த
பொருவில் கானகம் பூம்பணை பொய்கைகா லாறு
மருவு மேரிக ணிறைந்தன மருதவைப் பிடங்கள்
பெருக வூறின கேணிகள் பெருங்கடற் கரைக்கே.

(இ - ள்) மலைகள் (பொருந்திய குறிஞ்சிநிலங்களில்) அருவியாறுகள் பெருகின; ஒப்பில்லாத முல்லைநிலங்களில் காட்டாறுகள் மிகுந்து ஆர்ப்பரித்தன; மருத நிலங்களிற் பொருந்திய பொய்கைகளும் கால்வாய்களும் ஆறுகளும் ஏரிகளும் நிறைந்தன; பெரிய (நெய்தநிலமாகிய) கடற்கரையிலுள்ள கிணறுகள் (நிறைந்து) பெருகும்படி யூறெடுத்தன எ - று (கசு)

மலர்த லைப்புவி யுயிர்களும் வானவர் குழுவு
மலகி லின்புற வுதவிசெய் தருளுமா மழையி
னலனு ரைத்தன னலத்தகு நானில வளப்பிற்
குலவு மைந்திணை வளமினிக் கூறுது முறையால்.

(இ - ள்) இடமகன்ற பூமியிலுள்ள பிராணிகளும், தேவகூட்டமும், குறைவில்லாத இன்பத்தை நுகரும்படி யுதவிசெய்கின்ற பெரிய மழையினுடைய சிறப்பினைச் சொன்னோம்; நன்மைபொருந்திய நால்வகை நிலங்களாகப் பகுக்கப்பட்ட பூமியிற் பொருந்திய ஐந்திணை வளங்களை யினி முறைப்படி (எடுத்துக்) கூறுவாம் எ - று.

திணைகள் ஐந்து; அவை குறிஞ்சி - முல்லை - மருதம் - நெய்தல் - பாலையென்பனவாம். அவற்றுட் குறிஞ்சி - மலையும் மலைசேர்ந்தநிலனும், முல்லை - காடும் காடுசேர்ந்த பூமியும், மருதம் - விளைநிலனும் வாசஸ்தலமும், நெய்தல் - கடலும் கடற்கரையுங் கழியுங் கழிக்கானலும், பாலை - இந்நால்வகை நிலத்து நிகழ்வதுமாம். (கஎ)

குறிஞ்சி

வேறு

வெள்ளிவெற் பிறையைத் தாங்கி விளங்கிய தூய்மையைத் தாங்கித்
தெள்ளிய விமைய வெற்புஞ் சிறந்தது மூவாத்தாங்கி
யொள்ளிய மேரு வெற்பு முயர்ந்ததென் றோங்க லெல்லா
மள்ளிலை வேலற் றாங்கி யரும்பயன் படைத்து நிற்கும்.

(இ - ள்) வெள்ளிமலையாகிய திருக்கைலாயகிரி சிவபெருமானைத் தரித்து (ஏனைய மலைகளில்) விளங்கியுள்ளது புனிதமாகிய இமயமலையும் உமாதேவியாரைத் தரிசித்துச் சிறப்புற்றது ஒளிபொருந்திய மேருமலையும் திரிமூர்த்திகளையுந் தரித்து உயர்வுற்றதென்று கருதி, மலைகள் யாவுங் கூரிய வெற்றிவேலைப்போன்ற வேற்படையேந்திய முருகக்கடவுளைத் தரித்து அரியபிரயோசனத்தைப் பெற்று நிற்கும் எ - று.

அரும்பயன் படைத்து நிற்குமென்றது, கைலாயம் இமயம் மேரு இவற்றைப் போலன்றி, அந்நிலத்திற்கேயுரிய கடவுளைத் தம்பாலுறப்பெற்றமையானென்க (௧௮)

பன்றியைத் தொடர்ந்த வேடன் பயந்தசே யிவனு மாய
வன்றியை வேட்டை யாடி மருப்பொன்று வாங்கும் வேட
னென்றறு முகவ னைத்து மிருப்புசூழ் பசும்பொற் சாரற்
குன்றக மென்று மெங்குங் குடிகொளும் வேடச் சாதி.

(இ - ள்) (மூகாசுரனென்னும்) பன்றியைக் (கொன்று அர்ச்சுனனைக் காக்கும்படி) தொடர்ந்த வேட்டுருவங்கொண்ட சிவபெருமான் பெற்றருளிய இவனும், (திருமாலினவதாரமாகிய) மாயப்பன்றியை வேட்டையாடி (அதன்) தந்த மொன்றினைப் பறிக்கும் வேடுவன் என்று, குமாரக்கடவுள் வசிக்குங் குறுங்காடுகள் சூழ்ந்த பசியபொன்னையுடைய சாரல்களமைந்த மலையிடங்களிலெல்லாம் எப்பொழுதும் வேடசாதி குடிகொண்டிராநிற்கும் எ - று.

பன்றி - வன்றி. "பவயோரபேதః" என்பது விதி.

இருங்குசூழ் எனப் பாடமுமுண்டு இறுங்கு-சோளத்தில் ஓர்வகை (௧௯)

மலைவரு முனை மயான் முன்கை வளர்கிளி யினமா மென்றே
யலைசிறைக் கிளியு மென்று மணிவரைக் கிழவ னாதி
யுலைவறு மயிலா மென்றே யுப்பிலா மயிலு மீண்டி
யிலைவளர் சாரற் சோலை யினத்தொடும் பயிலா நிற்கும்.

(இ - ள்) இமாசலத்திற்றோன்றிய உமாதேவியாரது முன்கையில் வளர்கின்ற கிளியானது(தமக்கு) இனமாகுமென்று கருதியே அலைகின்ற சிறகையுடைய கிளிகளும்,அழகிய குறிஞ்சி நிலத்தலைவனாகிய முருகக்கடவுளுக்காதியாகிய கெடுதலற்றமயில(தமக்கினம)ஆகுமென்று கருதியே கணக்கில்லாத மயில்களுங்கூடி, தளிர்கள் வளராநின்ற மலைச்சாரலிலுள்ள சோலையில் எக்காலமுந் தமதினத்தோடுஞ் சஞ்சரிக்கும். எ - று

கிளியும் மயிலும் இனமாமென்றே சோலையில் என்றும் இனத்தொடும் பயிலாநிற்கும் எனக்கூட்டுக. (௨0)

மாயையில் வல்ல சிங்க மதமலை பன்றி வென்ற
தூயவன் சூழல் வைகிற் றொலைவியில் வலியுண் டாமென்
றுயின கருத்தி னோடு மடுத்திருந் தனவே போன்ற
மேயின மடங்கல் வேழம் பன்றியும் வேங்கை மற்றும்

(இ - ள்.) மாயத்தொழிலில் வல்ல சிங்கமும் யானையும் பன்றியுமாகிய இவற்றைச் சயங்கொண்ட புனிதனாகிய முருகப்பிரான் வசிக்குமிடத்தில் (நாமும்) வசித்தால், தோல்வியில்லாத வல்லபமுண்டாகுமென்றட்கொண்ட கருத்துடன் சிங்கமும் யானையும் பன்றியும் வேங்கையும் பிற (காட்டு) மிருகங்களுஞ் சமீபித்திருந்தாற் போன்றனவாகிய பொருந்தின எ - று.

மதமலை=மதத்தையுடையமலை சிங்கமென்றது சிங்கமுகாசுரனையும், மதமலை தாரகனையும், பன்றி திருமாலின் வராகவுருவையு முணர்த்தி நின்றன.

தோல்வியில் வலியுண்டாமென்றதற்குத் தோல்வியடையத்தக்க காலம்வரின் இப்பெருமானருளால் வலியுண்டாமென்றும், தோல்வி தேவகதியாக வருமாயினும் நீங்காத வலியுளதாயிருக்குமென்றும் பொருள்படும். தோல்வியில் வலியெனவே வெற்றியெனக்கொள்க. (உ௧)

வெறிகமழ் நக்கச் சூழல் வெறிமத நாகந் துஞ்சும்
முறிவளர் வேங்கைச் சூழன் முதிர்சின வேங்கை துஞ்சுஞ்
செறியிலைச் சேவின் சூழற் றிரிதரு சேக்க டுஞ்சுங்
கறிவள ரில்லஞ் சூழல் கானவ ரில்லந் துஞ்சும்

(இ - ள்) மணம்வீசுங் குங்கும மரத்தடியில் வெறிகொண்ட மதத்தையுடைய யானைகள் துயில்புரியும் தளிர்கள் வளர்கின்ற வேங்கைமரத்தடியில் முதிர்ந்த சினத்தையுடைய வேங்கைகள் துயிலாநிற்கும் நெருங்கிய இலையையுடைய செம்மரத்தடியில், திரிகின்ற எருதுகள் தூங்கும் மிளகுக்கொடிபடர்ந்த தேற்றுமரத்தடியில் வேடுவர் சிற்றில்கள் பொருந்தியிருக்கும் எ - று (உஉ)

முருகவேள் வலியென் சொல்கேன் முந்துறப் பணியும் வேடர்
திருகுவார் முகத்து ரோமஞ் சென்றொரு கணையாற் சிங்க
மருவிபாய் மதமால் யானை யடல்கெழு கேழல் வேங்கை
வெருவவே வேட்டை யாடி மீள்குவர் நாளு நாளும்

(இ - ள்) (குறிஞ்சிவேந்தாகிய முருகப்பிரானது) திருமுன்னர் வணங்கும் வேடர்கள் தமது முகத்திலுள்ள திருகிய நீண்ட உரோமத்தினின்றுஞ் சென்ற ஒருபாணத்தினால் சிங்கமும், மதசலம் அருவியாகப் பாய்கின்ற யானையும், வலிமைமிக்க பன்றியும், வேங்கையும் (தம்மைக்கண்டு) பயப்படும்படி வேட்டையாடித் தினந்தோறுந் திரும்புவார்கள் (ஆதலின்) குமாரக்கடவுளுடைய வல்லபத்தை யாதென்று (அளவிட்டு) கூறுவேன் எ - று

அந்நிலத்து வசிக்கும் வேடர் வில்முதலியன வேண்டாது தமது மீசையை முறுக்கி அதன்கண், கணையைவைத்து எய்வரெனக்கூறுதல் கர்ணபரம்பரையில் கேள்வி அன்றியும் "வேடர் முகத்துரோமந் திருகுவார் சென்று ஒருகணையால் * * * * வேட்டையாடி மீள்வர்" என அந்வயஞ்செய்து, மீசை முறுக்கி வேட்டையாடி வருவர் எனப்பொருள் கூறினும் பொருந்தும் (உ௩)

சந்தன மகில்கற் பூரங் குங்குமத் தருக்கள் சாடிச்
செந்தினை விதைப்பவர்கள் செழுங்கனன் மடுக்குந் தோறுங்
கொந்துகொண் டெழுந்த தூமங் குன்றக முழுதும் போர்த்திட்
டந்தரத் தமரர் தூய வாக்கையுங் கமழப் போர்க்கும்

(இ - ள்) சந்தனமும் அகிலும் கற்பூரமும் குங்குமமுமாகிய மரங்களை வெட்டியெறிந்து, செவ்விய தினையை விதைப்பார்கள். (அவ்விறகில்) தீமூட்டுந்தோறும் கூட்டமுற்றெழுந்த புகையானது மலையிடமுழுவதும் மூடிக்கொண்டு ஆகாயத்திலுள்ள தேவர்களது புனிதமாகியசரீரத்தையும் பரிமளிக்கும்படி மூடாநிற்கும் எ - று

அமரர்—இறப்பற்றவர்

தேவருடல்கள் மணஞ்சொரிதலுக்குக் குறவர்கள் வெட்டியெறிந்த சந்தன முதலியவற்றி னிந்தனத்தில் தீ மூட்டுதலே காரணமெனக் குறித்துரைத்தனர் (உ௪)

ஆரமு மகிலு மற்று மாருயிர் மடிந்துங் கந்தஞ்
சேரவிண் ணவர்க்கு நல்குஞ் செய்கையுந் தமக்கவ் வாறு
கூரற மிலாத வாறுங் குறித்தெழூஉச் சமழ்ப்பான் முற்றும்
வேரலை ஞரிஞ்றித் தாமே வெந்தழன் மூழ்கா நிற்கும்.

(இ - ள்) சந்தனமரமும் அகின்மரமும் பிறமரங்களும் தமது அரிய உயிர் நீங்கியும், தேவர்களுக்கு வாசனையைப்பொருந்தக் கொடுக்குஞ்செயலையும், தமக்கு அவ்வண்ணமாக மிக்க புண்ணியமில்லாத வகையையுங் கருதித்தோன்றிய வருத்தத்தினால், முதிர்ந்த மூங்கில்கள் (ஒன்றோடொன்று) உராய்ந்து தாமே வெவ்விய அக்கினியில் மூழ்கும் எ - று.

மூங்கில்கள் ஒன்றோடொன்றுராய்ந்து தீப்பற்றியெரிதல், சந்தனமுதலிய மரங்கள் தேவர்கட்குதவியாதல்போல யாம் பயன்பட்டிலோமென்னும் மனவருத்தத்தாலெனக் கூறினார். (௨௫)

இரும்பனை வெளிற்றின் புன்சா யென்மலி மயிரி னுக்கைக்
கரும்பெருங் கரடி வெய்கால் கனலினை யஞ்சிச் சாரத்
தரும்பசுந் தேற்றப் பூங்கா தன்பெயர் குறித்து வானம்
வரும்புயல் வளைத்துச் சீத மலிந்தத னுயிரைக் காக்கும்.

(இ - ள்) வெளிற்றினையுடைய கரியபனையின் புல்லிய செறும்புபோன்ற (கருநிறத்தையுடைய) மிகுந்த மயிர்பொருந்திய உடலையுடைய கரிய பெரிய கரடியானது மூண்டெரிந்த நெருப்புக்குப் பயந்து (தன்பால்) அடைய, பசியதேனைச் சொரியும் பூஞ்சோலையானது (காவென்னுந்) தன்பெயரை நினைத்து, ஆகாயத்திலுழலும் மேகத்தைவளைத்துத் தட்பமிருந்து அதனுயிரைப் பாதுகாக்கும் எ - று.

தன்பெயர் குறித்து என்றது சோலைக்குக் காவென்று பெயராதலின்.

"இரும்பனை வெளிற்றின்புன்சாயென்மலிமயிரினுக்கை" என்றதை, திருமுருகாற்றுப்படை "இரும்பனை வெளிற்றின் புன்சா யன்ன - குரூஉமயி ரியாக்கைக் குடாவடி" என்பதுபோல "வெளிற்றின் இரும்பனைப்புன்சாய என்மலிமயிரினுக்கை" என அன்வயங்கொள்க. (௨௬)

தரையக முழுதும் விற்குஞ் சந்தனப் பொதும்ப ருள்ளால்
விரைநுகர் விருப்பாற் சால மேவிய வராவி னுச்சி
நிரைமணி யிருள்கால் சீத்து நீடொளி விரிக்குங் காட்சி
வரையர மகளிர் வைத்த விளக்கமே மானு மன்றே.

(இ - ள்) நிலவுலகமுழுவதும் விலைகொள்ளுஞ் சந்தனச் சோலையில், வாசத்தை நுகர்தலாகிய இச்சையினால் மிகுத்துச்சென்ற சர்ப்பங்களின் உச்சியிலுள்ள வரிசையாகிய மாணிக்கங்கள் (ஆங்குள்ள) இருளினையகற்றி நெடிய பிரகாசத்தையுண்டுசெய்யுந் தோற்றமானது, அக்குறிஞ்சி நிலத்துள்ள அரமகளிர்கள் தாபித்த விளக்குகளையேபோன்று விளங்கும் எ - று.

நாகரத்தினங்கள் அரமகளிர் வைத்த தீபங்கள்போன்றிருந்தனவென்பதாம்.

வெந்திற லவுணர்த் தாக்கி விண்ணவர் களித்த நம்பி
சிந்தையின் மகிழ்ச்சி கூரச் சேர்ந்தவன் செவ்வி நோக்கி
மந்தண மான வெல்லாம் வருத்துரைத் திருத்தி யாலென்
றிந்திர னேவப் போந்தாங் கினமுகி றவழா நிற்கும்.

(இ - ள்.) கொடிய வலியமைந்த (சூரபன்மனாதி) அசுரர்களைச் சங்கரித்துத் தேவராசியத்தை (எனக்குக்) கொடுத்த முருகக்கடவுள் மனதிற்களிப்பு மிகும்படி (ஆங்கு) அடைந்து காலம்பார்த்து அவரிடம் இரகசியங்களையெல்லாம் விளக்கிக்கூறியிருப்பாயாகவென்று, இந்திரன் கடாவச்சென்றன போலக் கூட்டமாகிய மேகங்கள் (அம்மலைகளிற்) சஞ்சரியாநிற்கும் எ - று.

நம்பி - பெருமையுடையோன். மந்தணம் - மறைபொருள். (உஅ)

பைத்தபா வடியின் வேழம் பரிவுற மடங்க லோர்ந்து
மத்தகங் கிழியத் தாக்கி மருப்பினவே ரருந்தச் சிந்து
நித்தில மூங்கின் முத்த நிரந்தன வறுமீன் பால
னுத்தமன் கருணை வேண்டி யுடுத்திர ளடுத்த போலும்

(இ - ள்.) சிறந்த பரவிய அடியையுடைய யானைகள் துன்புறும்படி, சிங்கங்கள் நெருங்கி (அவற்றின்) மத்தகங்கிழிபடுமாறு அறைந்து தந்தங்களின் வேரினைப் புசித்தலால் (அத்தந்தங்களினின்று சிந்திய) முத்தங்களும், மூங்கிலினின்றுதிர்ந்த முத்தங்களும் வரிசையாகவுள்ள காட்சியானது குமாரக்கடவுளாகிய உத்தமனது கிருபையை விரும்பி நக்ஷத்திரத்தொகுதிகள் சமீபித்தனபோலும். எ - று

மருப்பினவேர்—யானைக்கொம்பின் குருத்து அதாவது அடிப்பாகம். மென்மைகருதி விரும்பிய பொருள் எனக்கொள்க.

முத்துக்கள் யானைத் தந்தத்தினின்றும் மூங்கிலினின்றுந் தோன்றுமோ வெனின் முத்துச் சனித்தற்குரியன இருபதிடங்களாம் அவற்றை,

"தந்திவராகமருப்பிப்பிபூகந்தனிக்கதலி
நந்துசலஞ்சலமீன்றலைகொக்குநளினமின்னா
கந்தரஞ்சாலிகழைகன்னலாவின்பல்கடசெவிகரா
இந்துவுடும்புகராமுத்தமீனுமிருபதுமே"—என்பதனானறிக

அறுமீன் பாலனென்றது, முருகக்கடவுள் ஆறு குழந்தைகளாகச் சரவணப் பொய்கையில் விளையாடிக்கொண்டிருக்கையில் விண்டு முதலானோர் அவரைப் பத்துத் திசைகளிலுங் காத்திருந்து, கார்த்திகை நக்ஷத்திரமாகிய ஆறுமாதர்களையும் பால் கொடுத்து வளர்க்கச்செய்தனராதலின் அவருக்குக் காரணப்பெயராயிற்று. இதனை,

கந்தபுராணம்

"ஆறுருவாதலோடுமறுவருமகிழ்ந்துவேறு
வேறுதாமெடுத்துத்தத்தமவியத்தருகுஞ்ணைமென்கொங்கை
பூறுபாலமுதமன்றேற்குநவலுமுறுவல்செய்து
மாறிலாவருளாலாற்றவருந்தினன்போலவுண்டான்"—என்பதனானறிக

மீன் - நக்ஷத்திரம். அறுமீன்களாகிய கார்த்திகை மாதர்கள் முருகப்பிரான் கருணை பெற்றமையின் யாமும் அவன்றிருவருளைப் பெறுதுமென்று ஏனைய நக்ஷத்திரங்களும் வந்திருந்தாற்போன்றன வென்பதாம். (உகூ)

நெருப்பவிர் தனைய காந்த ணிரைநிரை மலர்ந்து நிற்பச்
சுருப்பினெருப்பென் றெண்ணித் தூரந்தே யகலுங் காட்சி
பருப்பதச் சிலைக்கை நாதன் பயந்தவன் முடிக்க ணேற
விருப்பன வென்று முசா திடையொழிந் தகல்வ போன்ற.

(இ - ள்) நெருப்புப் பிரகாசித்தது போல, வரிசைவரிசையாகக் காந்தண் மலர்கள் விகசித்து விளங்க, வண்டு கூட்டங்கள் (அவற்றையணுகாது) நெருப்பென்று கருதி, தூரமாகச்செல்லுங் காட்சியானது, மலைவில்லைக்கையிலேந்திய சிவபெருமான் பெற்றருளியமுருகக்கடவுளது திருவடியில் (அம்மலர்கள்) ஏறும்படியிருப்பனவென்று கருதி, (அவற்றிற்)படியாமல் இடம்விட்டுச் செல்வன போன்றிருந்தன. எ - று (௩0)

தத்தமக் கியன்ற செய்கை பிறர்க்கெலாந் தகாத தேனு
முத்தம மாவ தென்றே யுணர்த்துமோர் சான்ற தாகச்
சித்திரத் துருவு நேராத் திருத்தகு மகளிர் தம்மை
வைத்தனர் குன்ற நாடர் வளர்தினை காக்கு மாறே.

(இ - ள்) அயலார்க்கெல்லாந் தகாததாயிருப்பினும், தங்கடங்களுக்குரிய இயற்கைச்செயல் உத்தமமாகுமென்றே யறிவிக்கின்ற வோர்சாட்சி போல, குறிஞ்சிநில மாந்தர்கள் (தமது) சித்திரப்பதுமையும் ஒப்பாகாத அழகமைந்த மகளிரை, வளர்கின்ற தினைப்பயிரைக் காக்கும்படி (காவல்) வைத்தார்கள் எ - று. (௩௧)

மயில்களுங் கிளியுந் தம்மை வளரியன் மொழியால் வாட்டு
மயிலொடு பகைத்த வாட்க ணணங்குகட் கணங்கு செய்யப்
பயிலிய தொழிலே போன்ற பன்முறை புனத்துச் சேற
லுயிரினை யோம்ப வேறு முணவுக ளிருப்ப விட்டே.

(இ - ள்) மயில்களுங் கிளிகளும் தம்முயிரினைக் காக்கப்பலவேறுணவுகளுமிருப்பவும், விடுத்து (தினைப்) புனத்திலே பலமுறைசெல்லுதல், (தம்மை) வளர்கின்ற சாயலினாலும் சொல்லினாலும் வருத்தப்படுத்துகின்ற வேற்படையோடு மாறுகொண்ட கூர்மைவாய்ந்த கண்களையுடைய அப்பெண்களுக்குத் துன்புசெய்யச்செல்கின்ற செயலை போன்றிருந்தன எ - று

‘மயில்களுங் கிளியும் (தம்) உயிரினையோம்பவேறுமுணவுகளிருப்பவிட்டே புனத்துப் பன்முறை சேறல் தம்மை வளரியன் மொழியால்வாட்டும் அயிலொடுபகைத்த வாட்கண்ணணங்குகட்கணங்கு செய்யப்பயிலிய தொழிலே போன்ற” என முடித்துக்கொள்க (௩௨)

கற்பினுக் கெதிர்நில் லாத கதிர்த்தவச் சிரமு மூரற்
பொற்பினுக் கெதிர்நில் லாத பொழிகதிர் முத்துஞ் செங்கை
யுற்பல விரலிற் றாங்கு முறுகவணை வைத்துச் சுற்றிப்
பற்பல புள்ளு மோட்டும் பாவையர் பணையை யொக்கும்.

(இ - ள்) கற்பின் வன்மைக்கு எதிர் நில்லாத ஒளியையுடைய வச்சிரமும், பற்களின் அழகுக்கு எதிரில்லாத வொளிவிடும் முத்தங்களும் (முதலிய) இவற்றைச் செலவிய கரத்திலுள்ள செங்கழுநீர்மலர்போன்ற விரலிற்றாங்கியுள்ள பொருந்திய கவணில் வைத்துச்சுழற்றி நானாவகையாகிய பறவைகளை யோட்டுகின்ற பாவையர்களது பணைகளை யொக்குமென்னை எ - று

பணை - மாதர்கூட்டம் கவண் - கல்லெறிகயிறு. (௩௩)

மணிபல விமைக்குங் குன்ற வாணர்கள் விளைத்த வேனல்
நனிமிசைப்பால வளருங் கொய்யத் தகவுறு காலத் தோடு
மணிபல வணிந்து மன்ற லாற்றுறு காலங் காட்டிக்
கனியென நின்ற வேங்கை கற்பக நிகரப் பூக்கும்.

(இ - ள்.) பலரத்தினங்களைப் பிரகாசிக்கின்ற மலையில் வாழுங் குறவர்கள் விதியினை முதலிய குறைவில்லாத பலவளங்களையும் அறுபத்தெட்டுத் தகுதியாகிய பருவத்துடன், பல்ஆபரணங்களையும் பூண்டு மணம் புணருங்காலத்தையுங் குறித்துச் சோதிடனைப்போலவிளங்கும் வேங்கைமரமானது கற்பகமலரைப்போல மலராநிற்கும் எ - று.

கணி—வேங்கைமரத்திற்குஞ் சோதிடனுக்கும் பெயர்.

வேங்கைமலருங்காலமே பயிர்களையறுக்குங்காலமுங் குறவர் மணம்புரிகாலமுமாமாதலின், வேங்கையைச் சோதிடனெனக் குறிப்பித்து "கணியென நின்ற வேங்கை" என்றும், கற்பகமலர்போல வேங்கைமலரிலும் வண்டுகள் மொய்க்காமையான் "கற்பகநிகரப்பூக்கும்" என்றுங் கூறினர். (௩௪)

மெல்லென்றத் தவழ்ந்த தெண்ணீர் வீங்கியோ ரருவி பாய்ந்து
கல்லையுங் குழிப்பக் கல்லுட் கதுவிய தேனர் பாங்க
ரொல்லைபாய்ந் துழலா நிற்கு முற்றங்கை வல்லத் தினீங்கி
வல்லவ னருளா லாவி சகலத்தின் வழங்கு மாபோல்

(இ - ள்) மென்மையாகத் தவழுகின்ற தெளிவிய நீரானது அதிகரித்துப் பெரிய அருவியாகவோடிப் பாறைகளையுங் குழியச்செய்ய, (அந்தப்) பாறையினுள்ளே பொருந்திய தேனையானது, உயிர்கள் கேவலாவத்தையினின்றும் நீங்கி, எல்லாம்வல்ல இறைவன் றிருவருளாற் சகலத்திற் பிரவேசிப்பதுபோலப் பக்கங்களில் விரைந்து பாய்ந்து (விசாலமாகச்) சஞ்சரியாநிற்கும் எ - று.

அருவிப்பெருக்காற் பாறைகள் குழிபட, அப்பாறையுளிருந்த தேனைகள் பக்கங்களிற்பாய்ந்து விரைந்து சஞ்சரியாநிற்குமென்பது கருத்து.

கேவலம் - தனிமையாயிருத்தல். சகலம் - கலந்துநிற்றல்.

இச்செய்யுளாற் குறிஞ்சியின் நீர்வளங் கூறினர். (௩௫)

சண்பக நறும்பூந் தாது ததைந்ததண் டலைப்ப லாவின்
மண்பக முதிர்ந்த வேர்க்கோட் பழந்தரு வாசம் வீச
நண்பகந் துனியி னீடு நாயகி செவ்வி நோக்கும்
பண்பக முடையான் போலப் பமரங்க ளணுகா நீங்கா.

(இ - ள்) வாசனைபொருந்திய சண்பகமலரின் மகரந்தப்பொடிகள் படிந்த சோலையிலுள்ள பலாமரத்தின், தரைபிளவுபட வேரிற்பற்றிய முற்றிய பழத்திலுற்ற வாசனைவீச, விருப்பமுடைய மனநிலை துன்பமிருந்த [ஊடல்கொண்ட] நாயகியின் (ஊடல்நீங்கும்) காலத்தைப்பார்க்கும் நன்மனத்தையுடைய நாயகனைப்போல வண்டுகள் நெருங்கவுமாட்டா, நீங்கவுமாட்டா எ - று.

நாயகி ஊடலுற்றகாலத்து அவளைப்பிரியினும் நெருங்கினும் ஊடல் பெருகுமாதலின் நீங்காமலும் நெருங்காமலும் நிற்குமாறு, வண்டுகள் பலாப்பழத்தின் வாசனையைவிரும்பி நீங்காமலும், வேங்கையின் வாசனைக்காகச் சமீபியாமலும் நின்றனவெனக்கொள்க. (௩௬)

இருப்பது தோலி னுண்ப திருங்கனி கந்த மூலம்
விருப்பொடு விளைத்த வென்ன மிகுந்தவை வனமே தோரை
பருப்பதம் வாழ்வ தென்றும் பருகுவ தருவித் தூநீர்
பொருப்பரைப் புகழ்வா தியாரும் புல்லிய ரென்ப தென்னே.

(இ - ள்) (மான்புலிமுதலியவற்றின்) தோலில் இருப்பது பெரியகனிகளுங் கந்தமூலங்களும், விருப்பமாகப் பயிர்செய்த தினையும் மிகுதியாகிய மலைநெல்லும் மூங்கிலரிசியும் புசிப்பது. மலையிலே வசிப்பது புனிதமாகிய அருவி நீரை யெப்பொழுதும் பருகுவது. (இவ்வாறு புனிதமாயிருக்க) எல்லோரும் குறிஞ்சி நிலமக்களைப்புகழ்ந்து பேசாது இழிந்தோரெனக் கூறுவது யாதுகாரணம்? எ - று.

இருப்பது வாழ்வது பருகுவது என்னும் அஃறிணை யொன்றன்பாலாகக் குறிப்பு வினைமுற்றுகட்கேற்ப உண்பனவெனக்கூறாது, உண்பது என்பபராமுகமாகக் கூறினரெனக். (௩௭)

பெறுங்களத் திரத்தைக் காணான் பேதுறு மிராமன்போல
வெறுங்களத் தெய்தி மாழ்கி மாதரா ரில்லின் பாங்க
ருறுங்களத் தியாமத் தெய்து முத்தமா றுகரு மின்ப
நறுங்களம் புயற்கு மாற்கும் வலாரிக்கு நண்ணா தன்றே.

(இ - ள்) தானடைந்த மனைவியைக் காணாதேங்கித் துன்புற்ற இராமமூர்த்தியைப்போல வறுங்களத்தை நாடித்துன்புற்று, தலைவியின் வீட்டிற்கருகிலுள்ள சோலையில் நடுராத்திரியிலடையுந் தலைவர்கள் அநுபவிக்கும் சுகமானது வாசனை வாய்ந்த தேனையுடைய தாமரைமலரில் வாழும் பிரமனுக்கும் விண்டுவிக்கும் இந்திரனுக்கும் பொருந்தமாட்டாது எ - று.

அகப்பொருள் விளக்கம்

"இல்வகை யிகந்தது பகற்குறி யிரவுக்குறி - யில்வரை யிகவா வியல்பிற் றாகும்"—என்றது சூத்திரமாதலின், "இல்லின் பாங்க ருறுங்களத் தியாமத் தெய்தும்" என்றார்.

வலாரி—வலாசுரனை நாசஞ்செய்தவன், இந்திரன் அதாவது,—

முற்காலத்தில் வலாசுரனென்போன் சிவபெருமானை நோக்கித் தவஞ் செய்து பெற்ற வரத்தினாலுண்டான வலிமையால் தேவர்களைத் துன்புறுத்திக்கொண்டு திரிந்து, இந்திரனை யறைகூவிச்செய்தனன். இந்திரன் இவனைத் தந்திரமாக வெல்லவேண்டுமென்றுட்கொண்டு வலாசுரனை நோக்கி நீ எனது நண்பனே! பகைவனல்லன் ஆயினும் உன்வல்லபத்திற்கு மகிழ்ந்து சில வரங்கள் கொடுக்க விரும்பியிருக்கின்றேன். யாது வேண்டுகின்றனை? என, வலாசுரன் இந்திரனை நோக்கி ஆ! ஆ! நன்கு கூறினை. நீயடைந்த வெற்றிபோலவே யுன் வரமும் பயன்பெறும்போலும் யான் சிவபிரசாதத்தாற் பெருவரங்களைப் பெற்றுள்ளேன். நீ வேண்டிய வரங்களிருப்பின் என்பாற் கேட்டுப்பெறுக. அவ்வாறு கொடாவிடின் உன்னைப்போலப் போர்முனையில் முதுகுகாட்டி யோடினவன் பெறுநிந்தையை யடைவே னென்றனன். இந்திரன் இதுவே சமயமென்றுட்கொண்டு களித்து, வலாசுரனே! வல்லபபுருஷனே! யான் கைலாயகிரிச்சாரலில் ஓர் யாகஞ்செய்யப்போகின்றேன், அப்பொழுது நீ யாகப்பசுவாக வரவேண்டுமென வரங்கேட்க, வலாசுரன் அவ்வாறே யாகுகவென்றுகூறி, [தேவர்கள் பொருட்டுத் ததீசி முனிவர் கொடுத்த முதுகந்தண்டெலும்பு வச்சிராயுதமாக அவர் கொடுத்த பூதவுடம்பின் கொடையாலடைந்த புகழுடம்பு அம்முனிவனுக்கு ஒன்றே] பிறராயுதங்களாலழியாத என் உடலுறுப்புகள் யாவும் நவமணிகளாகப் பூதவுடம்பழிந்த கொடையினாலும் புகழுடம்பு எனக்கு இரண்டுண்டாகுமென்று தன்னுட் பணிந்து, அவ்வண்ணமே யிந்திரன்செய்த யாகத்திற் பசுவாகி யுயிர்நீத்தனன். வலனைத் தந்திரமாகக் கொன்றமையின் இந்திரன் வலாரி யெனப்பட்டனன். இதனை,

திருவிளையாடற்புராணம்.

"ஏறிலானளித்தநல்லவரமெனகிருககநினபால்
வேறியானபெறுவதுண்டோவேணடுவதுனகியாதெனபாற
கூறுநீயதனையின்னேகொடுககவேலெனகினினபோற
பாறுவீழ்கள ததிற்பட்டபழிப்புகழ்பெறுவனெனருன

மாதண்டவவுணன்மாறறமகபதிகேடடுவந்து
கோதணடமேருககோட்டிகொடுமபுரமபொடிததானவெள்ளி
வேதணடமெயதியாஙகோவேளவியானபுரிவனீயப
போதணடாக்கூட்டவாவாயப்போதுவாயவலலையென்ருன."--எனபதனுனறிக. ()

கைககிளை பொருநதாக காமங காதலைந திணையிம மூனறுட்
டொககவைந திணையு மேலாச சொலலுவ ரிவறறி னுளளு
மிககதாம புணாசசி யினபம வியததக வெவரு மெயதித
தககவா றெழுகும வெறபின றகுதியா முழுதுஞ சொலவார்.

(இ - ள்) கைககிளையும், பொருநதாககாமமும், ஆசையுடைய ஐநதிணையு மாகிய இமமூனறனுள், தொகுதியாகிய ஐநதிணையையும் உயர்வாக வுரைபபாாகள. இவவைந்திணையினுளளும மேமபடடதாகிய கலவிசசுகததை யாவருஞ சநதோஷிகக அடைந்து, தககபடி நடககினற குறிஞசியின றனமையை முறறுஞசொலல வலலவா யாவா? (ஒருவருமிலா) எ - று.

கைககிளை பொருநதாககாம மென்பவறறை அகப்பொருள்விளக்கம் "கைக் கிளை யெனப தொருதலைக காமம" "பெருநதிணை யெனபது பொருநதாக காமம்" என வருஞ சூததிரஙகளானறிக காதலைநதிணையெனறது குறிஞசியிறபுணாதலும, பாலை யிற பிரிதலும, முலலையில இருததலும, மருததில ஊடலும், நெயதலில இரஙக லும, நிகழ்தலினெனப. இதனை,

அகப்பொருள் விளக்கம்.

"புணாதலும் பிரிதலு மிருததலு மூடலு - மிரஙகலு மிவைறறி னிமிததமு மெனவாங் - கெயதிய வுரிபபொரு ளையிருவகைததே".—எனபதனுனறிக (௫௧)

அலாமணித தவிசி னுனை யடிததருஞ சிறையி லிட்டு
மலாதலை யுலகம பூதத வரதனுக கிடமா'யெனறு
நிலவிய குறிஞசி சொறறு நினமலக குமரி நாளு
நலமுற விருககும பாலை வளமினி நவிறறு வாமால.

(இ - ள) அழகிய தாமரை மலாப்பீடததிலுளள பிரமதேவனைத (திருக்கரத் தாற்) குட்டி அரியசிறைசசாலையி லிடுவிததது, இடமகனற வுலகததைச சிருஷடி செய்த சிறந்தமுருககடவுளுக்கிடமாகி யென்றும் விளஙகிய குறிஞசியின வளததைச சொனனோம் அமலையாகிய தூாகசை எககாலததும நன்மையோடெழுநதருளி யிருக கும பாலைநிலததின் வளப்பததை இனி யெடுததுரைபபாம. எ - று.

பிரமனைச் சிறையிட்டது

ஸ்ரீ முருகக்கடவுள, நவவீரா முதலிய தமது துணைவருடன பலவகையா கிய திருவிளையாடலகளைச செயதுகொணடு ஸகநதகிரியில எழுநதருளியிருக்கையில, ஒருநாள பிரமனமுதலிய தேவாகள திருககைலாயமலையையடைநது சிவபெருமானை வணங்கித் திருமபினா அப்பொழுது குமாரக்கடவுள், அவாகளில் தலைவனுகிய பிரம

னைக்கண்டு, வருகவென வழைத்து "நீயார்? உன் செயலென்னை?" என, பிரமன் நமஸ்கரியாது கைகுவித்து "நான் பிரமன் சிருஷ்டித்தொழில் செய்பவன்." என, "நீ எதைக்கொண்டு சிருஷ்டிக்கின்றாய்" என, "பெருமான் செய்தவேதத்தைக்கொண்டே படைக்கின்றேன்" என்றனன். அதுகேட்ட இளையபிள்ளையார் "வேதந்தெரியுமாகிற் சொல்க" என, பிரமன் இருக்கு ஓதும்படி நினைத்து முதலிற் பிரணவத்தைக் கூறினன். முருகக்கடவுள் 'போதும். அதுவரையிற் பொருள்கூறி மேலே சொல்க' என, பிரமன் பொருளுணராது மயங்குதலால், அவனைக் கோபத்தாற் றலையிற் குட்டிக் காலாலுதைத்துத் தள்ளிச் சிறையிலிடும்படி பரிசனர்களுக்குக் கட்டளையிட்டு, தாமே பலநாள் சிருஷ்டியைச் செய்துவந்தனர். இச்செய்தியறிந்த விஷ்ணு, தேவர் முனிவர் பலரோடுங் கைலாயமடைந்து கருணாநிதியாகிய எம்பெருமானை வணங்கி "என் புதல்வனைச் சிறைநீக்கி வைக்கவேண்டும்" என்று பிரார்த்திக்க, சிவபெருமான் திருநந்திதேவரை விளித்து "நமது கட்டளையென்று சொல்லிப் பிரமனைச் சிறைநீக்கிவை" என்று திருவுளஞ்செய்ய, திருநந்திதேவர் அவ்வாக்கினையைச் சிரமேற்கொண்டு அவ்வாறே ஸ்கந்தகிரியை யடைந்து குமாரக்கடவுளை வணங்கித் திருவாணையை விண்ணப்பஞ்செய்ய, அவர் மறுத்ததனால் ஒன்றுஞ் சொல்லமாட்டாது திரும்பினர். பிறகு பெருமான் திருவோலக்கத்துடன் எழுந்தருளி இளையபிள்ளையாருக் குரைத்துச் சிறைநீக்குவிப்பித்தனர் என்பதாம் — இதனை,

கந்தபுராணம் - அயனைச்சிறைபுரிபடலம்.

"எட்டொணாத் தவக் குடிலையின் பயனினைத் தென்றே
கட்டுரைத்திலன் மயங்கலு மிதன்பொருள் கருதாய்
சிட்டி செய்வதித் தன்மையதோவெனாச் செவ்வேள்
குட்டினானய னான்குமா முகங்களுங் குலுங்க

மறைபு ரிந்திடு சிவனருண் மதலையா மலர்மே
லுறைபு ரிந்தவன் வீழ்தரப் பதத்தினா லுதைத்து
நிறைபு ரிந்திடு பரிசனரைக்கொடே நிகளச்
சிறைபு ரிந்திடு வித்தனன் கந்தமாஞ் சிலம்பில்"—என்னுஞ் செய்யுள்களானுணர்க. (௪௰)

பாலை

வேறு.

கொற்றங் குறித்த மறக்கோபங் கொதிக்கு முகத்தாள் பலபடையும்
பற்றுங் கரத்தா ளெனையாண்ட பண்ணம் பணத்தி பிறநிலங்கள்
சற்று நிலையா வலிகுறித்துத் தழல்கொப் பளிக்கும் பரன்முரம்பு
முற்றுஞ் சுரமே யிடமாக முடித்தாள் வினையை யிடித்தாளே.

(இ - ள்.) வெற்றியைக்கருதிய கொலைத்தொழிலையுடைய கோபமானது கொதிக்கின்ற முகத்தையுடையவளும், பல ஆயுதங்களையு மேந்திய கைகளையுடையவளும், வினைச்சம்பந்தத்தை யொழித்தவளும் என்னை யாட்கொண்டவளுமாகிய பண்ணம் பணத்தியானவள், ஏனைய (குறிஞ்சி முதலிய) நிலங்கள் (தன்னைத் தாங்குதற்கு) சிறிதும் நிலையாதவன்மை [வலியின்மை] யையெண்ணி, நெருப்பைக் கொப்பளிக்கும் பரலடுத்த உயர்நிலம் பொருந்திய பாலை நிலத்தையே (தன்னைத் தாங்குதற்குத் தக்க) இடமாகக்கொண்டனள் எ - று.

பண்ணம்பணத்தி - துர்க்கை (௪௧)

தண்ணம் பணத்தி னராவளைதத துவளமதிககிற ரொளிாசடிலப
பண்ணம பணததி திருமுனனாப பயிலு மாறற றமகசெய்தும
வண்ணம பணைதத திறத்தானே வருநதுஞ் சுரததுக காளையாகள்
கண்ணம பணைத்த மாதரொடுங் கலநது வாழுங கடனபூணடாா.

(இ - ள்.) படத்தையுடைய பாமபினால வளைதத தட்பமாகிய அழகிய வெண்ணிறம் வாயநத பிறைசசநதிரன பிரகாசிககுஞ சடையினையுடைய தூககா தேவியின் சநநிதான விசேடமானது தமககுணடான அழகிய அழிககககூடாத வலலமையினாலே (யாவரும) வருநததகக பாலையிலே மறவாகள அமபினையொதத கணகளையுடைய மனைவியரோடுகூடி வாழுஙகடமை பூணடாாகள எ - று. (சஉ)

தாரா யணியா யெதிரபொருநா தசைக ளெமககு முணவாக்க
வாரா யணியாய் மலாததுமபை வாரநது திருகு மருபபிரலைத
தோா யணியா யெனசசெநநாய் சேனங கழுகென றிவைபலவு
நாரா யணியை யடுத்தனபோ னண்ணி வாழுஞ சுரததிடையே.

(இ - ள) ஆபரணமாகத தும்பைமலா மாலையணிநது நீண்டு வளைந்த கொமபினையுடைய கலை மானறேறையுடையவளே! அழகிய தாயே! தாராயும அணியாயும் எதிாகினற போாவீரர்களது தசைகளையெஙகடகும இரையாககுமபடி வாராய எனறு, செநநாய பருந்து கழுகு முதலிய இவையாவும, தூககாதேவியை யடுதததனபோலப் பாலை நிலததையடைநது வாழாநிறகும எ - று

தாராய அணியாய எனபதில, தாா-தூசுப்படை அணி-பெருமபடை எனக. இவவிரணடும சைனிய பேதஙகளான வகுபபு - எமககும் எனற வுமமை உனனோடுளள பூதகணஙகடகனறி யெஙகட்கும எனபபொருடரலின இறநதது தழீஇயது.

இரலைத தோாய எனறதில தோா - வாகனம இதனை,

கந்தரநுபூதி

"காாமாமிசைகாலனவரிறகலபத
தோமாமிசைவநதெதிரபபடுவாய்".—என்றதனுனறிக (சங)

பொருள்கள் விளைபபா ரீஙகிலலை பொருநதி வாழு நிலதகெதயினா
மருவு நெறியி னடபபாரை வருததிப பறிததே யுயிாவாழுந
திருவை யுடையா ரெனமதிததுத தினமுஞ சிறுகல லிரைதேருங
கருவி முகிலகள வழஙகாத கனலசோ சுரததுப புறவினமே

(இ - ள) (நெனமுதலிய)பொருளகளை விளைககினறவாகள இநநிலததிலிலலை. (இபபாலை நிலததில்) இருநது வாழ்கினற எயினாகள, பொருநதிய வழியில நடப்பவாகளை வருததபபடுததிப் பொருளபறிததலினாலேயே சீவிததிருககுஞ செலவமுடையவர்கள (ஆதலால, நமககுவேணடிய இரையிஙகுககிடையா) எனறு யோசிதது, உலகத்திறகுத துணைககருவியாகவுளள மேகஙகள பொழியாத நெருபபுப பொருநதிய பாலை நிலததிலுள்ள புறாககூடடஙகள் நாடோறும (ஆஙகுளள) சிறுகறகளை இரையாகத தேடாநிறகும. எ - று

சிறுகல இரைதேரும்-சிறுகுன்றுகளில இரைதேடுமெனபா அஃதொவ்வாது.

நெறியி னியஙகி வருவாரை நெடுநோ ரததே யெதிாநோககி
மறியு மிடுமபைத திநநிலததின வருதல வேணடா மெனவியமபி

யுறுதி காட்டி நிற்பனபோ லுயர்வா னோங்குஞ் சினைகடொறு
முறுக வுலர்நெற் றினிதொலிக்கு முருகு விரிமென் மலர்வாகை.

(இ - ள்.) வாசனையோடு விகசித்த மெல்லிய மலர்களையுடைய காட்டுவாகை மரங்கள், வழியாக நடந்துவருவோரைப் பெருந்தூரத்திலேயே யெதிர்த்துப்பார்த்து, மறிதலாகிய துன்பத்தையுடைய இந்தப்பாலை நிலத்தில் வருவது வேண்டாமென்று கூறி, உறுதியைக்காட்டி நிற்பனபோல உயர்ந்த ஆகாயமளாவிய கிளைகளிலெல்லாம் முற்றவுலர்ந்த நெற்றுகள் இனிதாக வொலியாநிற்கும். எ - று.

மரியுமென்றது எதுகைநோக்கி மறியுமென நின்றதெனக்கூறி இறக்கச் செய்யுமெனப் பொருள்கூறினுமமையும்.

இடும்பைத்து—அஃறிணை யொன்றன்பாலைக் குறிப்பு வினையாலணைந்த பெயர். (௬௫)

அரும்பு முலைமா தரினெயின ரமர்தற் கீந்தின் வேய்ந்தமைத்த
கருப்பை சிறிது மூடாடாக் காமர் குரம்பைக் குறும்புதொறுஞ்
சுரும்பி னினமுந் தேனினமுஞ் சூழ்ந்தன் றுதைந்து தாதருந்து
மிருப்பை மலரி னறுவாச மினிது கமழு மியல்பினதே.

(இ - ள்.) அரும்பிய தனத்தையுடைய மங்கையருடன் எயினர்கள் தங்கி வாழ்தற்கு ஈந்தினான் மூடப்பட்டியற்றிய எலிகள் சிறிதுஞ் சஞ்சரியாத அழகிய சிற்றில்களையுடைய குறும்புகளிலெல்லாம், சுரும்புத்தொகுதியும் தேன் வண்டுகளின் தொகுதியும் சூழ்ந்து மிதித்து மகரந்தத்தைப் புசிக்கும் இருப்பைமலரின் நல்ல வாசமானது இனிதாகப் பரிமளிக்கும் இயல்பினையுடையது எ - று.

சுரும்பு - வண்டில் ஓர்வகை இதனை யாண் வண்டென்பது முண்டு.

கருப்பை-காரெலி. குறும்பு - பாலைநிலத்தூர் இருப்பை - இலுப்பை (௬௬)

இரும்பொ னுருகுஞ் சுரத்திடைநின் றென்றாழ் வெயிலிற் புரிதவத்தின்
வரும்புண் ணியத்தா லெயிற்றியர்த மணிநித் திலந்தாழ் குவிமுலைபோ
லரும்பு மவர்த மிளமுலைமே லவர்ந்த திதலை நிறமேபோல
விரும்பு மலரிற் றானிறமும் விரவி விளங்கு முயர்கோங்கு.

(இ - ள்) உயர்ந்த கோங்கமரங்கள் வலிய பொன்னுருகத்தக்க பாலை நிலத்திற் சூரிய வெப்பத்தினின்று செய்த தவத்தின் வழிகிடைத்த புண்ணியத்தினால் எயிற்றியர்களது அழகிய முத்துமாலையணிந்த குவிந்த தனத்தைப்போல அரும்பா நிற்கும், அம்மங்கையரது முற்றுத குயத்தின்மேற்படர்ந்த தேமல் நிறத்தையே போல, (யாவரும்) விரும்பும் (தனது) மலரில், புனிதமான (பொன்) நிறமுங் கலந்து விளங்கும். எ - று.

கோங்கமரங்கள் அரும்பலும் மலரிற் பொன்னிறம் வாய்ந்திருத்தலும், அப் பாலை நிலத்து வெயிலினின்று தவஞ்செய்தபலனால், அந்நிலமாதர் குயத்தைப்போலும், அதிற்படர்ந்த தேமற்போலும் என்றா. (௬௭)

ஆற்றி னியங்கிப் பெருந்தாக மடுத்து ளார்கண் முகந்துண்ணச்
சேற்று மணமே மிகவீசுஞ் சின்னீர் முழுதுஞ் செழும்பைந்தே
னூற்று மலர்கள் சொரிந்துமண மூட்டித் தரும முறச்செய்யுந்
தோற்ற மலரார் காய்கனிக டோன்றக் குழித்த பாடலமே.

(இ - ள்.) தோற்றிய மலர்களாற் காய்களுங் கனிகளுந் (தன்பால் இனி) தோன்றும்படி கருதிய பாதிரி மரங்கள், வழியில் நடந்து மிக்க தாகமடைந்தவர்கள் அள்ளிப் பருகும்படி, சேற்று நாற்றத்தையே மிகுதியாக வீசுஞ் சின்னீர்களிலெல்லாம், செழுமையாகிய பசியதேன் சொரியும் மலர்களைச் சிந்தி வாசனையுறச்செய்து தருமமுண்டாகச் செய்யும். எ - று.

பாதிரியரும்பி மலர்தலேயன்றிக் காய்கனிகளை யுண்டுசெய்தலில்லையாதலின், தான் புண்ணியஞ்செய்தேனும் இனிக் காய்கனிகளைப் பெறலாகுமென்னுங் கருத்தால், வழிநடப்போர் சேற்று நீரைப்பருகாது தன்மலரை வீழ்த்தி அதனை மணமூட்டாநிற்குமென்றார்.

சின்னீர் - பாலையிலுள்ள நீர்நிலை. (சஅ)

ஒருபால் மரவ மரம்பூப்ப வுயர்செவ் வணிகாட் டுவவில்வ
மொருபாற் பாவை குரவுயிர்ப்ப வொளிர்வெள் ளணிகாட் டுமுருங்கை
யொருபால் விரவி நறுங்கோங்க முறுபொன் வழங்க மதுமாந்தி
யொருபால் வண்டு பண்பாட வொருபால் வேம்பு மணக்குமே.

(இ - ள்.) ஒரு பக்கலிற் குங்குமமரங்கள் பூப்பினையடைய, வில்வமரங்கள் செவ்வணிகாட்டுவன ஒரு பக்கலிற் குராமரங்கள் பாவையைத்தர முருங்கைமரங்கள் பிரகாசிக்கின்ற வெள்ளணிகாட்டுவன வாசனைபொருந்திய கோங்கமரங்கள் ஒரு பக்கலிற் கலந்து (தன்னிடம்) பொருந்திய பொன்னைக்கொடுக்க, ஒருபக்கலில் வண்டுகள் மதுபானஞ்செய்து பண்ணொலிசெய்ய, ஒருபக்கலில் வேப்பமரங்கள் மணஞ்செய்யாநிற்கும். எ - று.

குங்குமமலர்களால் வில்வமரஞ் செவந்தும், குராப்பாவையால் முருங்கைமரம் வெளுத்துந் தோன்றின. கோங்கமலர்கள் பொன்னிறமாதலின் அதன் வீழ்ச்சியைப் "பொன்வழங்க" என்றார். மணக்கும் - மணம்வீசும் மணம்புரியுமெனப் பொருள்படும்.

தலைவன் பரத்தையிற் பிரிந்து புறத்தொழுகுதலைக் கேள்வியுற்று நாயகி துன்புறுவதைப் பாங்கிதெரிந்து அச்சிறு கலக்கந் தணிக்கும்பொருட்டுத் தலைவி பூப்படைந்தாளென்பதைத் தலைவற்குணர்த்த, தோழி செம்பட்டுடுத்துச் செம்மலர்சூடிச் செஞ்சாந்திட்டுச் செவ்வணிபூண்டு பரத்தைவீதியிற் போகலாலதனைத் தலைவனுணர்ந்து தலைவிபூப்புற்றனளென்று மனைக்கட்டினிறுக்கப் பரத்தையினின்று பிரிந்து தன்மனைக்கு வருவதும், ஊடல் விளையத்தலைவன், பரத்தையோடு சேர்ந்ததைத் தலைவி யுணர்ந்து கவலைகூர்தலைப் பாங்கியறிந்து அது தணிக்கத் தலைவி மகவையீன்று நெய்யாடினளெனத் தலைவனுணர்ந்து குழந்தைமேற் காதல்கொண்டு பரத்தையினின்று பிரிந்து தன் மனைக்குவரப்பாங்கி வெண்பட்டுடுத்து, வெண்மலர்சூடி, வெண்சாந்திட்டு, வெள்ளணியணிந்து பரத்தையர் வீதியிற் போவதும் அகப்பொருண் மரபு.

பூத்து நீராடிய தலைவியை அதுமுதற் பன்னிருதினங்கள் அவள் கருப்பங்கொள்ளுங்காலமாதலால் அவளைப்பிரியாதொழுகல் மனைக்கடன், இதனை, [மனைக்கட்டினிறுக்கப் பரத்தையினின்று பிரிந்து] என்றார் நச்சினார்க்கினியர் இதனை அகத்திணையியல் "பூத்த காலையிற் புனையிழை மனைவியை - நீரா டியபின் னீரா றுநாளுங் - கருவயிற் றுறூஉங் கால மாதலிற் - பிரியப் பெறாஅன் பரத்தையிற் பிரிவோன்" என்னுஞ் சூத்திரத்தானுணர்க.

தோழிசெவ்வணி யணிந்து செல்வதையும், பாங்கிவெள்ளணி யணிந்து செல்வதையும்,

திருச்சிற்றம்பலக்கோவையார்

"செவந்தபொன்மேனிமணிதிருச்சிற்றம்பலமுடையான்
செவந்தவந்தாளணியூரற்குலகியலாறுரைப்பான
செவநதபைம்போதுமஞ்செமமலாபபட்டுங்கட்டார்முலைமேல்
செவந்தவஞ்சாநதமுந்தோனறினவநதுதிருமனைக்கே."—எனபதனுனும்,

அம்பிகாபதிக்கோவை

"துதையுஞ்சுரும்பறைமல்லிகைவேயநதுணைசுபுனைந்
திதையங்களிவரநிதிலம்பூணடெடிாநதாருடலம
புதையம்பனையவிழிமடமாதாபொற்பூண்புதலவன
உதையமபுகலவகலமுன்னேடினனூரனுககே."—எனபதனுனுமறிக

இச்செய்யுளில விலவமாகிய தோழிமரவமாகிய தலைவியின் பூப்பையுணர்த்துச் செவ்வணியும, முருங்கையாகிய பாங்கி குராவாகிய தலைவியின கருவுயிர்த்தலையுணாதத வெள்ளணியுமணிநதனவெனக. (சகூ)

பிரிநது கணவ னுடனேகும பெரிய மழைக்கண மடவார்க்குப்
பரிநது பசிநோய் தணிபபதற்குப பாலை நயிய கனிவழங்கும
விரிநத தாகந தணிப்பதறகு வியனமென சினையி னுமலகந
தெரிந்த கனிகண் மிகவழஙகுஞ சோநத சுரமு மிசைபெறவே.

(இ - ள்.) பிரிந்து கணவனுடன செல்லும் விசாலமான குளிர்ந்த கண்களையுடைய மாதர்கட்கு மனமிரஙகி (அவாகளது) பசிபபிணியை யடக்குதற்குப பாலை மரஙகள நல்ல பழஙகளைத தராநிறகும (அவாகளது) அதிகரிதத தாகவிடாயை யடககுதற்குப் பெரிய மெலலிய கிளைகளையுடைய நெல்லிமரஙகள (உளளும புறமுமொப்பத்) தெரிநத பழஙகளை, தானு சோநதுளள பாலைவனமுங கீாததிபெறும்படி உதவாநிறகும். எ - று

பிரிந்து என்றது நற்றுய் செவிலிததாய முதலியோரைப் பிரிந்தெனக. (ருo)

செவிலித தாயு நறறுயுந தீரத துறநத பெருநதுயருஞ
சுவலிற றூழு மணிககுதமபைத தோகை மடவா ரிசைமொழியாற்
கவலைத துறையிற படிவிநதுக கலககுந துயரு மாற்றும
லவலித் தரறற விடமிதுவென றழைத்த போனற கூககுயிலே.

(இ - ள்.) செவிலிததாயையும நற்றுயையும நீஙகப்பிரிநத பெருந்தன்பமும், இரத்தினக் குதம்பைகள தோளிறபடியும மயிலின சாயலையுடைய மாதாகளது பண்ணுசை போனற சொலலால (தமமைத) துனபககடலிலாழ்ததி வருததுந துககமும் பொறுமல், வருநதி வாயவிட்ட ரறறுதறகு இது (தகுநத) இடமெனறு, கூவுதலையுடைய குயில்கள் அழைததாறபோனறன. எ - று.

செவிலிததாய - வளர்த்த தாய நறறுய் - ஈன்றதாய். சுவல்-தோண்மேல். குதம்பை - ஓா தககையணி ; இது தொங்குந தனமையது. ஈணடுச் செவிலிததாய - காக்கை நற்றுய் - குயில். இது கோகிலததின செயல். (ருக)

வரையும் வனமும் வயனிலமும் வளைகண் முரலுங் கடலுமென
வுரைசெய் நிலநான் கினுங்காலத் துதிக்கும் பாலை வளமுழுதும்
வரைசெய் துரைப்பா ரெவரெதெரிந்த வாறு சிறிது வகுத்துரைத்தாம்
புரையில் வனப்பின் வளர்முல்லைப் பொருளிற் றெரிந்து சிலபுகல்வாம்.

(இ - ள்.) (மலையாகிய) குறிஞ்சியும், (காடாகிய) முல்லையும், வயல்கள் பொருந்திய நில (மாகிய மருத) மும், சங்குகளொலிக்குங்கட (லாகிய நெய்த) லும் என்சசொல்லப்படும் நான்கு நிலங்களிலுங் காலங்களில் தோன்றும் பாலையினது வளங்களையெல்லாம் அளவிட்டுச் சொல்லவல்லார் யாவர்? (ஒருவருமிலராதலின்) அறிந்தவகையாகச் சிறிதினை விளக்கியுரைத்தாம் (இனி) குற்றமில்லாத அழகுடன் வளர்கின்ற முல்லை நிலப்பொருள்களிற் சிலவற்றையெடுத்துச் சொல்லுவாம். எ - று.

முல்லை

வேறு

சுரந்த வார்ந்தும் பானிறை சுரைமுலைச் சுரபி
நிரந்து நாடொறும் வாழ்தரு நெடிபடு கானந்
தரந்தை தீர்தர வாழ்வதே யறமெனத் துணிந்து
பரந்த பாற்கடற் பள்ளியான் றெய்வமாய்ப் படர்ந்தான்.

(இ - ள்) ஊற்றெடுத்தொழுகுகின்ற நல்ல பானிறைந்த உட்டுளைபொருந்திய முலைகளையுடைய பசுக்கள் பரவித் தினந்தோறும் வாழ்கின்ற சிள்வண்டுகள் பொருந்திய முல்லைநிலத்தில், துன்பமொழிய வாழ்வதே தருமமென்று துணிவுகொண்டு, பரவிய பாற்கடலிற் பள்ளிகொள்ளுந் திருமால் (அந்நிலத்திற்குத்) தெய்வமாகச் சென்றனர் எ - று. (௫௩)

சுரை - உட்டுளை. நெடி - சிள்வண்டு.

கமுகை வென்றொளிர் கந்தரக் கருங்கய னெடுங்கண்
குமுதம் வென்றசெவ் வாயின ரோடுகோ பரக்கு
மமுதர் வானவ ரமுதராம் படியமு தளித்தவ
வமுதன் வாழிடம் பொருந்துவ தாமென வமர்ந்தார்.

(இ - ள்) பாக்குமரத்தை வென்று பிரகாசிக்குங் கழுத்தையும், கரிய சேற்கெண்டையை வென்ற நெடிய கண்களையும், ஆம்பன்மலரை வென்ற செவ்விய வாயையுமுடைய ஆய்ச்சியரோடு பசுவினைக் காக்கும் அமுதர்கள், தேவர்கள் அமுதர்களாகும் படி(அவர்கட்கு)அமுதத்தைக்கொடுத்த, அவ்வமுதம் போன்றவனாகிய திருமால்வாழும் இடம் நாம் வாழ்வதாகுமென்று, (அம்முல்லை நிலத்தில்) தங்கினார்கள் எ - று.

கோபரக்கும் அமுதர் என்பதில், அமுதர் - அமுதத்தால் வாழ்வோரென்றும், வானவரமுதராம்படி என்பதில் அமுதர் - அமுதபானஞ்செய்தோரென்றும், அமுதளித்த என்பதில் அமுது - பாற்கடலிற்றோன்றிய அமுதென்றும், அவ்வமுதன் என்பதில் அமுதன் - அமுதம்போன்றவனென்றும் பொருள்படும். அளித்த அவ்வமுதன் என்றதில் அகரவீறு தொகுத்தல் அமுதர் அமர்ந்தாரெனக் கூட்டுக. (௫௪)

புடைவி ராவிய விடையொடு பழகிய பொலிவால்
விடையு மாயினன் விரைநறுந் துளவமா லிகையா
னிடைய ரோடுறப் பழகலா லிடையனு மாகித்
தடையி லாவகை காத்தனன் றகைகவா னிரைகள்.

(இ - ள்) வாசம்பொருந்திய நல்ல துளவமாலையணிந்த திருமால் பக்கத்திற் பொருந்திய இடபங்களோடு பழகிய விளக்கத்தால இடபமுமாயினன; இடையாக ளோடு பொருந்தப் பழகுதலால் இடையனுமாகி, தகுதியாகிய பசுமந்தைகளைத் தடையில்லாத வகையாகக் காத்தனன. எ - று.

துளவமாலிகையான விடையுமாயினனென்றது சிவபெருமான் திரிபுரதக னஞ்செய்யச் சென்றபொழுது தேவாகள போாககருவிகளாகத தாம நிறபது கருதி யிறுமாப்புற்றதால் இறைவர் தமது திருவடிவிரலையூனறி அததேரின அச்சினை முரிக்க, திருமால் விடைவடிவாக அவரைத் தாஙகினரெனபது சரிதம. இதனை,

திருவாசகம்.

"கடகரியும்பரிமாவுந்தேருமுகந்தேருமே
யிடபமுகந்தேறியவாறெனககரியவியமபேடி
தடமதிலகளொருமூன்றுந்தழலெரித்தவந்நாளி
லிடபமதாயததாஙகினானதிருமாலகாணசாழலோ"—என்பதனானுணர்க.

இடையர் - குறிஞ்சிநிலத்திற்கும் மருதநிலததிறகும் இடைநிலததில் இருப் போரெனறு பொருள். இடையன - பிரமன் விஷ்ணு உருததிரன் என்னு மூர்த்திகள் மூவரில இடையிலுள்ளவனென்றும், கண்ணனாகத் திருவவதாரஞ்செய்து இடைக் குலதது வளாநதவனென்றும, இடையர் வாசமாகிய முல்லைநிலத்திறகுத தெயவதமா யுளளவனெனறும பொருள்படும் (௫௫)

அணட வாணரு மண்டாக ளாையனு மவரைக்
கண்ட நான்முகக கடவுளுங கைதொழு திறைஞ்சுங்
கொண்டன் மேனியான குடிகொளு மிருக்கையில வாழவோ
ரண்ட ரேயெனத தெரிபபதா லாயாத மொருபோ.

(இ - ள்) ஆகாயவாசிகளாகிய தேவர்களும், தேவாகளுக்கு நாயகனாகிய இந்திர னும், அவாகளெலலாரையும் படைதத சதாமுகபபிரமனுங் கைகூபபிபபணியும மேக வணணனாகிய திருமால் வாழுமிடததில வாழ்பவாகள் அணடாகளே (ஆதலால்) ஆயாகளுடைய ஒரு பேர் (அணடரெனறு) தெரிவிப்பது. எ - று.

அணடா - தேவாகளுககும ஆயாகளுககும பொதுபபெயா

திருமால வசிககுமிடததில வசிப்போா அணடாகளாதலாலும், ஆயர்களுக் கும் அணடாகளெனப பெயருளதாதலாலும், முலலைநிலத்துத தெயவதமாகிய திருமா லுடன வசிததலாலும "ஆயாத மொருபோ அணடரேயெனத தெரிபபது" எனறார்.()

செயய தீயிடு மானறசை தினனுந்தே வருககும்
பொய்யி லானவயிற றாறுமபுத தமுதுபொங கெரிவைத
துயய வேநதக ராயககு மணடரென றுரைபப
ரைய வானகொலை யமரருக காயருக களித்தல.

(இ - ள்) செந்நிறமமைநத(யாகத)தீயிலிட்ட பசுவினது தசையைப் புசிக்குந் தேவர்களுககும, கெடுதலில்லாத பசுவின வயிறறினூறிய புதிய பாலை எரிகின்ற அக் கினியில வைததது உய்யும்படி புசிககினற ஆயாகளுககும் அண்டாகளென்று (பேர்) சொலலுவா. பசுவினைக்கொலலும அமராகளுககு (உரிய அப்பெயரை) ஆயருக்குக் கொடுததல ஆசசரியம். எ - று (௫௭)

மருவி நினமெருளிா மணிக்கெதிா மணியென மருமத்
திருவு மனபமேனு டேணிருங காணகத திருக்குந

திருவி னுயகி மாறெனுமெ பழகிய சிறப்பாற்
பொருவி லாதபொன மானுமாய்ப பூததன னொருபெண்.

(இ - ள்) பொருநதினின்று பிரகாசிக்கின்ற கவுததுவமணிகரு எதிர்மணியைப்போல (தனனை) மார்பகததிலிருத்திய கணவனுடனே பெரியமுலலை நிலததில வசிககின்ற ஐசுவரியாதி காரியாகிய திருமகள் (அமமுலலை நிலததிலுளள) மான்களோடும் பழகிய மேமபாட்டினுலே, சமானமிலலாத பொனமானுமாய (வடிவெடுதது) ஒபபற்ற (வளளிநாயகியாகிய) பெண்ணைப பெறறனள. எ - று.

திருவினுயகி பொனமானுமாயபபூததன ளொருபெண எனறது. விஷ்ணுமூர்த்தியே சிவமுனிவராகவும, திருமகளே பொனமானுகவுமிருநது வளளிநாயகியாரைப் பெற்றனரென்பது புராண வரலாறெனக கொளக. இதனை,

தணிகைப்புராணம்.

"மானுக மலர்த்திரு மாதவ னுகி மாயோ
னுனெவொளி நாமுற வளளியை யீனற வாறருல்."—எனககூறுமிடததுஙகாணக

குரங்கு ளைபபரி யாருநாட கொளளுமைங கதியுள
வரங்கொ ளுஞசச கதியினில வலனுதற பொருட்டே
யிரங்கு தெணகடற பாயலா னினமுய லுகளு
மரஙக னெறிய வனததினிடை வதிதருஞ செயலே.

(இ - ள்.) வளைநத புறமயிரையுடைய குதிரைவடிவாகக் கலிகாவதாரஞ்செய்யுங்காலததிற கொள்கினற ஐஙகதிகளில, மேன்மைகொளளுஞ் சசகதியில வனமையடைதல் காரணமாகவே, ஒலிககினற தெளளிய அலைகளையுடைய திருப்பாற்கடலில அறிதுயில்கொளளுந திருமால் கூட்டமாகிய முயலகள் சஞசரிககும மரங்களடாநத வனததில வாழ்கின்ற செயலாகும் எ - று

ஐஙகதி —மலலகதி, மயூரகதி, வானரகதி, சசகதி, சரகதி என்பனவாம். சசம்=முயல் வனம=முலலை நிலம

திருமால தாம் செயயவேணடிய தசாவதாரங்களில் இறுதியிலுளளது குதிரைவடிவாதலால, அதனையெடுககுமபொழுது அதறகுரிய ஐஙகதிகளில முயறகதியைப்பெற விருமபி அதிற பழகும வணணம முயறகூட்டஙகள வசிககும வனததில வாழ்கின்றனரென்பதாம. (௫௧)

வறற மஙகையா காய்த்தொறும பாலசுவை மலிநது
பெறறி வேறுசெய காலையும பெருஞசுவைத தாயமத்
துறறு முசுகநெய திரண்டெரி யுறுதொறுந தெளியு
முறறி மெயயாற குணஙகெடா முதுககுறை வினாபோல.

(இ - ள.) பாலானது (தன்னை முலலை நிலததிலுளள) ஆயமாதாகள வற்றும படி காய்சசுந்தோறுஞ சுவைமிகுநது, [தயிராக] தனமை வேறு படுததுஙகாலத்தும மிக்க சுவையுடையதாகி, மததினை பபொருததிககடைய நெயயாகத்திரணடு,தீமடுககுந்தோறும், துன்பஙகள் முதிரதலால (தமமுநற) குணஙகெடாத பேரறிவினைப்போலத தெளியாநிற்கும். எ - று.

பால, மங்கையா (தன்னை) வற்றககாய்த்தொறும், மலிர்து, பெருஞ்சுவைத் தாய், திரண்டு, முதுக்குறைவினாபோல, தெளியுமெனக கூட்டுக. (௫௨)

கங்கை நாயகி யூடவுங் கதிர்பொழி யிமய
மங்கை நாயகி யூடவும் வள்ளல்பா லுழந்
தங்கி வாழ்வதோ தகவெனத் தணந்தநா யகியாஞ்
செங்கண் மாலுயிர் தாங்கவே திகழ்ந்ததாங் கிதழி.

(இ - ள்) கங்காதேவியார் ஊடல்கொள்ளவும், கிரணங்களைச் சிந்தும் இமய மங்கையாராகிய உமாதேவியார் ஊடல்கொள்ளவும், வள்ளலாகிய சிவபெருமானிடத்தில் (இச்சமயத்தில்) நாமும் பொருந்தி வாழ்வது தகுதியோவென்று பிரிந்த நாயகியாகிய செந்தாமரைக்கண்ணையுடைய திருமால் உயிர்தாங்கும்படி (சிவபெருமானால் அனுப்பப்பட்டதுபோல) அவ்விடத்திற் கொன்றைமரம் விளங்கும் எ - று.

இறைவரது சடாடவியில் வாழுங்கங்கையும், வாமபாகத்தில் வாழும் உமையும் ஊடல்கொண்டிருப்ப,நாமிச்சமயத்திங்கே தங்கியிருப்பது தகுதியன்றெனத் திருமால் நீங்கியதாகக் கூறினார். கொன்றை ஆகுபெயராய் மலரை யுணர்த்திநின்றதென்றும், பிரிந்த நாயகியாகிய திருமால் உயிர்தாங்கச் சிவபிரானால் அனுப்பப்பட்டதெனினுமமையும்.

சிவபெருமானது சத்தியே திருமாலாதலின், நாயகியாஞ் செங்கண்மாலென்றார். இதனை,

திருநாவுக்கரசுசுவாமிகள்.

"எரியலா லுருவமில்லையேறலாலேறலில்லை
கரியலாற்போர்வையில்லைகாண்டகுசோதியார்க்குப்
பிரிவிலாதமரர்கூடிப்பெருந்தகைப்பிரானென்றேத்தும்
அரியலாற்றேவியில்லையையனையாறனார்க்கே."—என்பதனானும்,

இரட்டைப்புலவர் - திருவாமாத்தூர்க்கலம்பகம்

"வருக்கைத்தடம்பொழிலாமாத்தையாகுமாசொன்றிலவா
முருகக்கொத்தமேனியழகியநாதர்க்குமூச்சரவத்
திருக்கைக்கமலவரனார்க்கரிதிருத்தேவியன்றேல்
அரிக்குப்பொருளுரையீர்கெடுவீர்நும்மறிவின்மையே "என்பதனானுமறிக.()

பிரண வப்பொரு ளயனென வரியெனப் பெரிது
முரணை யுற்றவர் முகங்கவிழ் தரமதின் மூன்றுந்
திரண மொப்புறச் செற்றவர் தெரியலாங் கடுக்கை
தரணி நின்றுபல் பிரணவ வுருச்சமைப் பனவே.

(இ - ள்) பிரணவப்பொருள் பிரமனென்றும் விண்டுவென்றும் மிகுதியுங் கோணுதலுற்றவர்களது முகங்களிறங்கும்படி,மும்மதில்களுந் திருணம்போல அழித்த சிவபெருமானது மாலையாகிய கொன்றைமரங்கள் பூமியின்மேல் நின்று பலபிரணவ வடிவு (பொருந்திய மலர்)களை உண்டாக்குகின்றன எ - று.

கடுக்கை - கொன்றை யாண்டுமரத்தையுணர்த்தியது. தெரியலென்னும் விசேடணம் சினையையடுத்தது. முகங்கவிழ்தரல் - நாணமடைதல் (சுஉ)

உண்மை நாயகன் புணர்ந்தின்ப முதவிடாப் பதத்துப்
பெண்மை யோடுறிற் பிழைவரு மெனப்பதே பேணி
வண்மை யானென்ன வனத்தமா வளைக்கையாள் கற்புத்
திண்மை நாடியே செழிந்தன கற்பெலா மாங்கே.

(இ - ள்.) உண்மையாகிய (அன்பினையுடைய) கணவன் (தன்னைக்) கூடிச் சுகத்தைக்கொடாத காலத்திற் பெண்டன்மையோடு வசித்தல் பிழைபாடாகுமென்பதையேகருதி, வண்மைபொருந்திய நாயகனாகிய திருமாலைப்போல, அம்முல்லை நிலத்தில் (அவனுடன்) பொருந்திய வளையலையணிந்த கையையுடைய திருமகளது கற்பின் வன்மை தேடியே கற்பெலாம் அங்கேகூடின. எ - று

கற்பு=மங்கையர்கற்பு, முல்லைச்செடி. (௬௩)

நிரந்த மாதவிப் பந்தரமென் னீழலிற் கவரி
சுரந்த நீண்முலை சுவைத்துணுங் கன்றினவாய்க் கடையிற்
பரந்து வார்ந்திழி பாலினைப் பருகிவான் கோழி
யரந்தை தீர்த்ததென் றதனெதிர் சிறைவிரித் தாடும்.

(இ - ள்) பரவிய மாதவிப்பந்தரினது மென்மைவாய்ந்த நீழலில், கவரிமானது சுரந்த நீண்ட முலையைச் சுவைத்துப்பருகும் கன்றினது கடைவாயினின்று பரவி நெடுகியிழிகின்ற பாலினை வானகோழியானது பருகித்(தனதுபசித்)துன்பத்தை யகற்றியதென்று (களித்து) அதற்கெதிரில் தனது சிறகை விரித்தாடாநிற்கும். எ - று.

மாதவி - குருக்கத்தி; வசந்தகால மல்லிகை. கவரி - மானவகையிலொன்று. வாய்க்கடை - கடைவாய்—இலக்கணப்போலி. சிறைவிரித்தாடுதல் அதனகளிப்பா லெனக்கொள்க. மென்மை - ஈண்டுக் குளிர்ச்சியை யுணர்த்தியது. (௬௪)

புழுகின் வாசமும் பொருவிலகத் தூரியின் மணமு
மொழுகு பூமது வாசமு முடன்விராய்ப் புதர்க
ளெழுது பூண்முலை மாதர்மெய் யெனக்கமழ் தலினன்
முழுது மாடவர் மையலின் மூழ்குவர் தேரார்.

(இ - ள்) புதர்கள் புழுகின்மணமும், சமானமில்லாத கஸ்தூரியின் வாசனையும், சிந்துகின்ற மலர்த்தேனின் பரிமளமும் ஒன்றாகக்கலந்து, (தொய்யில்) எழுதிய ஆபரணமணிந்த முலையையுடைய மங்கையர்களது உடலைப்போல மணமவீசுதலால், புருடர்கள் (மங்கையரோபுதரோவென்று) தேறாராகி முற்றும் காம மயக்கத்தி லாழ்வார்கள். எ - று

புதர்களில் மணம்வீசலானும், "செண்பக மலரெனச் சிவந்த மேனியாள்- விண்படா நறுமணம வீசு மெய்யினாள்" எனக்கூறியபடி, பதுமினிப் பெண்கட்குத் தேகத்தில் இயற்கை மணங்கமழ்தலானும் அவற்றினைத் தேறாது ஆடவர் மையலுண் மூழ்குவரென்றார். (௬௫)

நீரி னின்றலால் விளைதரா நெல்லினை விடுத்துக்
காரி னன்றுற விளைதருங் கம்புட னிறுங்கு
சீரி னின்றிடுஞ் செழும்பய றாதிக ளெல்லா
மேரி னன்றுற விளைத்திட மிலாவகை நிறைப்பார்

(இ - ள்) நீரில் நின்றல்லாமல் விளையாத நெற்பயிரை விலக்கி, மேகத்தால் நன்றாக விளைய, கம்பும், சோளமும், சிறப்புற்று நின்றிடுஞ் செழிய பயறும் முதலிய யாவும் அழகுடன் நன்றாக விளைவித்து (தமதிருக்கையில்) வெற்றிடமில்லாத வகையாக (பண்டங்களை) நிறைப்பார்கள் (அம்முல்லை நிலமாக்கள்) எ - று.

காரினன்றுற என்றதற்கு மேகமண்டலத்தை நன்றாகப் பொருந்த எனப் பொருள் கூறலும் பொருந்தும். (௬௬)

பறையொ லித்திடப் பலர்குழீஇப் பாரத்திட வொருநா
ணிறைநி னத்தெதிர் விடையினைத் தழுவிய நீரார்
பிறைம றைத்தவா ளுதலினர் பெருமுலை நினமு
நறைம லர்த்தொடை மார்புறத் தழுவிநண் ணுவரால்.

(இ - ள்.) முல்லை நிலப்பறை முழங்கவும், பலர் குழுமிக் காணவும், ஒப்பற்ற (மணமுடிக்கு) நாளில், நிறைந்த கொடிய விடையினைத் தழுவிய தன்மையையுடையவர்கள், பிறைச்சந்திரனை (தமதொளியால்) மறைத்த ஒள்ளிய நெற்றியையுடைய ஆயச்சியரது பெரியமுலைகளை நாடோறுந் தேன்பொருந்திய மலர்மாலையணிந்த மார்பிற பொருந்தும்படி தழுவி யணைவார்கள். எ - று.

மறைத்தவென்பது உவமையுருபுமாம்.

விடைதழுவலென்றது.—

"ஏறிடத்து ஒரு பெண் பிறந்தால் அப்பெண்ணைப் பெற்றவர் தம் தொழுவில் அன்று பிறந்த சேங்கன்றுள்ளனவெல்லாம் தனதுடையாக விட்டு வளர்த்து அப் பரிசிலே வளர்த்த ஏற்றைத் தழுவினானொருவனுக்கு அப்பெண்ணைக் கொடுத்தல் மரபெனக." என்றார் பேராசிரியர்

திருச்சிற்றம்பலக்கோவையார்.

"படையார்கருங்கண்ணிவண்ணப்பயோதரப்பாரமுநுண்
ணிடையார்மெலிவுங்கண்டண்டர்களீர்முல்லைவேலியெம்மூர்
விடையார்மருப்புத்திருத்திவிட்டாரிவன்றெனபுலியூ
ருடையார்கடவிவருவதுபோலுமுருவினதே"—என்பதனானறிக (௬௭)

கொம்பை வென்றமெல் லிடையவர் குழைபணி செவியி
லும்ப ருக்கிறை யூர்தியி னொலியுறு காலு
நம்பு மன்பனார் தேரொலி நண்ணிய காலு
மம்பை வென்றகண் ணருந்தன வருவிநீ ரொழுக்கம்

(இ - ள்.) பூங்கொம்பைச் செயித்த மெல்லிய இடையையுடைய மாதர்களது குண்டலமணிந்த செவியில் மேகமுழக்குற்ற காலத்திலும், நம்பிய அன்பையுடைய கணவரது தேரொலிபொருந்திய காலத்திலும், (அவரது) அம்பைச் செயித்த கண்கள் அருவி நீர்ப்பெருக்கம் நீங்காதனவாம். எ - று

உம்பருக்கிறையூர்தி - தேவர்கட்கரசனாகிய இந்திரனது வாகனம்; மேகம். மேகவொலியால் துக்கித்ததும், கணவர் தேரொலியாற் களித்ததும், கண்ணருவிபாயுமெனக்கொள்க.

இச்செய்யுளிற் கூறியதை,

தணிகைப்புராணம்.

"வார்கண்டமுலைத்துணைவாணுதமங்கைநல்லார்
கார்கண்டெகிழ்ந்தவிழிப்புனல்காலசெயதன்பர்
தேர்கண்டெமிழோகைவிழிப்புனலசேரவாரும்
ஊர்கண்டநெடும்பணைசென்றினிதோமபுமன்றே"—என வருஞ் செய்யுளினுங் காண்க. (௬௮)

குருந்து கூவிளங் கொன்றைபைந் துழாய்குள விகளுந்
திருந்து மெல்லையிற் சிவபிரான் பூசைசெய முனிவர்

வருந்து நீரமைகண் டிரங்கியா னினனுசொரி மலிபால்
பொருநது தண்பணைப் பாலிபோற றவழ்நதுபோயப் புகுமால்.

(இ - ள்) குருந்து வில்வம் கொனறை பசியதுளவு (முதலியவற்றின்) தளிர்களுந்திருத்தமுறுங காலததில், சிவபூசைசெய்யும முனிவாகள் (நீரின்றி)வருந்துந தனமையைப் பாாதது, பசுக்கூட்டம் மனமிரங்கிச் சொரிந்த மிகக பாலானதுபாலிநதியைப்போலத் தவழ்நது, தண்மை வாய்ந்த வயல்களிற் சென்றுபுகும். எ - று

பத்திர புஷ்பங்கள் திருநதிய காலத்திற் சலமுமிருககின், சிவபூசை செய்யலாமெனை வருந்தினரெனககொள்க. (சுகூ)

மழைவ ளநதரு கற்பினா மாலையாங் கற்பின்
குழைமு லாகவெகாடி முகையவிழ் கொலலைசோ முலலைத்
தழைபெ ருமபொருண முழுவதுஞ சாற்றுவா ரெவரே
விழைவ யறபெரு வளத்தினுட் சிலவினி விரிப்பாம.

(இ - ள்) மழைவளப்பத்தைத் தரததக்க கற்பினையுடைய மாதர்களது மாலையாகிய முல்லையின் தளிாகளையும் மலர்களையுமுடைய கொடிகள் அரும்பவிழ்கினற கொல்லைகள் சேர்நதுளள முல்லை நிலத்தின தழைத்துள்ள பெரியபொருளக ளெலலாவற்றையுஞ சொலல வல்லவா எவாதாம? (ஒருவருமிலா) விருமபததக்க வயல்களையுடைய மருதநிலததின பெரியவளஙகளுட் சிலவற்றை இனிச சொலலுவாம எ - று.

வயல - மருதம - ஆகுபெயா.

மழைவளந்தருகற்பினர் எனறதை,

திருக்குறள்.

"தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள்
பெயயெனப்பெய்யுமழை" —எனபதனானும,

திரிகடுகம்.

"கொண்டான்குறிப்பறிவாள்பெணடாட்டிகொண்டன
செயவகைசெயவானறவசிகொடிதொரீஇ
நலலவைசெய்வானரசனிவாமூவா
பெய்யெனபபெய்யுமழை"—எனபதனானுமுணாக. (எ0)

ம ரு த ம்.

வேறு.

திப்பிய போகமே திளைககு மிநதிர
னுப்பறு போகமே யுககரு நீாபபணை
வைபபினுக் கமரனாய் வதிதன் மேதகு
துபபென வைகலுஞ சூழ்நது காககுமே.

(இ - ள்.) திவ்விய போகஙகளையே யநுபவிக்கும இநதிரன, நிகரற்றபோகங்களைக்கொண்டிருக்கும், நீாவளமுடைய வயலகள் பொருந்திய மருதநிலததிறகுத் தெய்மாகவாழ்வது மேம்பட்ட வலிமையென்று நாடோறு மாலோசிததுக காவல் புரிகின்றான். எ - று.

திப்பிய - திவ்விய வெனனும் வடசொற்றிரிபு. உகததல் - கொண்டிருததல். வைப்பு - இடம. (எக)

அளைக்கண மாயினு மறலி னீங்குறு
மளைக்கணம் பயிரெலாம வளர்ப்ப வெண்ணிமெய
திளைக்கடன முகந்தெழுஞ் செல்லு மூர்நதனன்
விளைகுமும மதமபொழி வேழத் தணணலே.

(இ - ள்.) அளைவிநாடியேனும சலத்திறபிரியாத தாமரைக்கூட்டங்களையும், பயிர்க ளெல்லாவற்றையும் வளாககககருதியே, மணமவீசும் மும்மதங்களைசசொரியும் யானை வாகனத்தையுடைய இந்திரன, அலைகள பொருநதிய கடனீரை முகந்தெழுந்த மேகத்தையும் வாகனமாகக் கொண்டனன. எ - று.

இந்திரன் பயிர்களைவளாகக வெணணி மேகத்தை வாகனமாகக கொண்டு தன சுவாதீனஞ்செய்து கொண்டன னென்றார்.

வேழமென்றது ஈணடு ஐராவதம அது நான்கு கொமபுகளையுடைய வெள் ளானை. இது திருப்பாறகடலிறறோன்றிய பொருள்களிலொன்று.

"ஐராவதகஜாரூடமஸ்வாணவாணஙகிரீடநம
ஸஹஸஸஹ்ஸரநயனமசக்ரமவஜ்ரபாணிமவிபாவயேத."—என்பது காசிபசிற்பம்.

முந்துதங குலத்திடை வந்த மொயமபுடை
யிநதிரக கடவுளுக கினிய வைபபிடைத
தநதொழில புரிவதே தக்க தாமென
வெநதிறற களமாகள வினைஞ ராயினார்.

(இ - ள்.) வெவ்விய வல்லமையுடைய பள்ளர்கள, முற்காலத்தில் தமது குலத் தில் தோனறிய வலியுடைய தேவேநதிரனுக்கு இனிதாகிய மருதநிலத்தில, தமது தொழில்களைச்செயவதே தகுதியுடையதாமென்று தொழில்செயவோராயினாகள எ-று.

களமாகுலத்து இநதிரனுதித்தது.

சூரியகுலத்தில தோனறிய முசுகுநதனெனனுமோரரசன நெடுங்காலம் கநதவிரதமிருந்து அப்பெருமானைப் பிரத்தியக்ஷமாகத் தரிசித்து அளவில்லா ஆற்றலும குமாரக்கடவுளுடைய சைநியஙகள யாவும தனக்குச சைநியஙகளாகவும வரங் கொணடு, கருவூரையடைநது அரசுபுரிநதிருநதனன். அக்காலத்தில் அமரருலகை யநேக வகையிற றுனபுறுத்திய வலாசுரனை இநதிரன வெலலமுடியாது நிலவுலகிற பேராற்றலுடைய முசுமுகமனனனுககறிவிக்க, முசுகுநதச சககிரவாததி தனது தானை யுடன அநநாட்டை யடைந்து வலாசுரனையும அவனது சேனையையும அழித்தனன். அதனாற் களிகூர்நத இந்திரன முசுகுநதனுககுத் தனது பாககியஙகளைக் காட்டிககொ ண்டு செல்கையில், தனககு விஷ்ணுமூர்த்தியாற கொடுககப்பட்ட ஆனமார்த்தநாய கரையுங்காட்ட, அவா கைலாயகோலமாகப் பாாவதி ஸகநதருடன தரிசனமனமாக, முசுகுநதன்களித்துப் பலவிதமாகத் துதித்தனன அபபொழுது நாயகர் எனனைப் பூமி யிற பிரதிட்டைசெயது ஆராதிக்கவென இநதிரனுககுணராது கட்டளையிட்டனா. இந் திரன் தனது பூசையைமுடித்து, நிலவுலகமனனனுககு விருநதிட்டு வஸ்திரம் ஆபரணம் தேவாஸ்திரங்கள முதலியவற்றைப் பரிசுகொடுதது இனனும் யாது வேணடும் ? என, முசுகுந்தன் நீ பூசிககு மூர்த்தியைக் கொடுககவென, இநதிரன் யான் பெரும்பிரயாச முற்றுத திருமாலிடம பெற்றது. ஐயோ ! அதனை யென விருப்பின்படி கொடுக்கப் படாது. விஷ்ணுமூர்த்தியின கட்டளைபெற்று வநதால் அமமூர்த்தியைக கொடுப்பே னென, முசுகுந்தன அஙஙனமே சென்று விடைபெற்று வநதுணாதத, புரநதரன் அம் மூர்த்தியைக கொடுக்க மனமின்றி விசுவகனமனால அதுபோன்ற ஆறுதிருவுருவங்க

ளமைத்து, அவற்றிலொன்றை முசுகுந்தனுக்குக்காட்ட அது அன்று என, அங்ஙனமே மற்றைந்தையுங்காட்டி அன்று அன்றெனக்கூற, இறுதியில் விண்டுவின் மார்பகத்து நடித்திருந்த மூர்த்தியைக்காட்ட அம்மூர்த்தியின் திருவருளால் முசுகுந்தனியைய இந்திரன் மேலே ஒன்றுஞ் சொல்லமுடியாது அம்மூர்த்தியையும் விசுவகன்மனாலிய ற்றுவித்த ஆறு மூர்த்திகளையும் முசுகுந்தனுக்குக் கொடுத்தனுப்பினன். முசுகுந்தன் "கடனாகை நள்ளாறு காறாயல் கோளிலியூர் - மடனாக முதலீனும் வாய்மியூர் மறைக் கானம்" என்னும் ஆறுநகரங்களில் ஆறுதியாக மூர்த்திகளையும் திருவாரூரிற் சுவர்ண மூர்த்தியையும் பிரதிட்டைசெய்து, திருவிழாமுதலியன வியற்றினன் இந்திரன் தனது ஆன்மார்த்த பூசாமூர்த்தியைப் பிறனுக்குக்கொடுத்த பாவத்தாற் செல்வமிழந்து புலையுருவேற்றுத் திருவாரூரையடைந்து அநேக காலங்கழித்து, அவ்விறைவரருளாற் பண்டைய செல்வத்தையும் அமராவதியையு மடைந்தனனென்பதாம். இதனை,

கந்தபுராணம்.

"அந்நாளிலிமையவர்கோனருச்சனைசெய்பரம்பொருளைக்
கொன்றாவேன்மன்னவனைக்கைக்கொடுத்ததொருகொடும்பவத்தாற்
பொன்னாட்டிற்றிருவிழந்துபுலையுருவந்தனைத்தாங்கிக்
கைந்நாகமிசையூர்ந்துகமலையெனும்பதியடைந்தான்.

ஆரூரின்மேவியபின்னமலன்விழாப்போற்றுதற்குப்
பாரூருந்திரையூரும்பலவூருமவருகவென்றே
வாரூருமுரசெறிந்துமதக்களிற்றின்மிசையேறித்
தேரூருஞ்செம்பொன்மணித்திருவீதிப்புடைசூழ்ந்தான்.

ஆண்டுபலவப்பதியிலமலன்விழாச்சேவித்துக்
காண்டகையதவம்புரிந்துகடைநாவடிவினைநீங்கித்
தூண்டகையசோணமகவான்றொல்லுருவந்தனைப்பெற்று
மீண்டுசுராபதிபுகுந்துவிபவமுடனவீற்றிருந்தான"—என வருவனவற்றானறிக.

திருமகள் கலைமகள் சிறந்து வாழ்வது
பெருகுநம் பசிகெடப் பேணு நீரது
குருமலர்த் தாமரை குழீஇய வைப்பெலா
மருவுவ தியல்பென வாழு மன்னமே.

(இ - ள்) இலக்குமியுஞ் சரசுவதியுஞ் சிறப்புற்றுவாழ்வது. மிகுகின்ற நமது பசியொழியக் காக்குந்தன்மையுடையது நிறமமைந்த மலர்களையுடைய தாமரைகள் நெருங்கிய இடமுழுவதும் பொருந்துவது (இந்நிலத்து) இயற்கையென்று (அங்கே) அன்னங்கள் வாழாநிற்கும். எ - று.

திருமகள் செந்தாமரையிலும், கலைமகள் வெண்டாமரையிலும் வசிப்பார் ஆதலின், குருமலர்த்தாமரை யென்பதில் குரு - நிறம் எனப்பட்டது. (எச)

அம்புயத் தவிசிடை யரச வோதிமம்
பம்புவ தாமெனிற் பாற்று நீர்தோ
வம்பவிழ் வயனில மென்ன வண்டானமுங்
கம்புளு மேனவுங் கலந்து வாழுமே

(இ - ள்) தாமரைப்பீடத்தில் (நமது) அரசனாகிய அன்னம் வாழ்வதாமாயின், வாசம் வீசும் வயலிடங்களில், மெல்லிய நாரைகளும் சம்பங்கோழிகளும் பிற பறவைகளும், (எம்மை) ஓட்டுவதோ. (ஓட்டாது) என்று (அவ்விடத்திற்) கூடி வாழா நிற்கும். எ - று.

கம்புள் - வானம்பாடி யெனினுமாம் (எடு)

கொலையுழு தொழிலினூற் கூடு மாயினுந்
தலையளி காலனுஞ் செயயுந தன்மையா
லுலைவரு மவனுடை யூர்தி யினகுல
நிலைபெறு மெருமைக ணிரநத ரிததன.

(இ - ள்.) உழுதொழிலினாற் கொலைதொழில் வரககூடுமாயினும், இயம னுஞ் சிறந்த கிருபை (ஓரோவழி) செயயுந்தன்மையால, கெடுதலற்ற அவனுடைய வாகனத்தின் குலத்தில் நிலைபெறற எருமைகள் விருத்தியாயின. எ - று. (எசு)

செழுமலாத தருவினுட சிறநத கறபகப்
பொழிலவளா நகரிறை போற றும பணணையிற
கழிசிறப் புறுமெனக கலநது வாழுமே
வழிமதுக் காஞசியு மருதும வஞசியும.

(இ - ள்) செழியமலாகளையுடைய மரஙகளிற சிறந்த கற்பகச்சோலை வளர் கின்ற அமராவதிக்கிறைவனாகிய இநதிரன காவல்புரியும வயலகளில் தேன்சொரியுங் காஞசியும் மருதும் வஞ்சியும் (ஆகியமரஙகள) மிகக சிறப்புண்டாகுமென்று கூடி வாழாநிற்கும். எ - று.

கழி - உரிச்சொல் , மிகுதிப்பொருட்டு. என்னை "சால வுறுதவ நனிகூர் கழிமிகல்." என்றது சூத்திரம். (எஎ)

அரையருக களையஞ மமரன் காப்பது
தரைபதிக களையஞ நகரஞ சாாவது
விரைமலாக களையஞ நாமு மேவுதல்
புரையெனத தாமரைப பலவும பூககுமே.

(இ - ள) அரசாகட்கரசனாகிய இநதிரன் காவல்செயவது. நிலங்களிலுள்ள ஊர்கட்கெலலாம அரசனாகிய நகரஞ சாாநதுள்ளது. (ஆதலின் இவவிடமே) வாசனை பொருந்திய மலாகட்கு அரசனாகிய நாமும் பொருநதுதல ஒக்குமெனறு பலதாமரை மலர்கள் மலரும எ - று.

"விரைமலாககளையன தாமரை" எனறதை, திருஞானசம்பந்தமூர்த்திசுவா மிகள் "பூவினுக கருஙகலம பொஙகு தாமரை".—எனறதனாறிக.

குறிஞசியிலுளளது குறிசசியென்றும், பாலையிலுள்ளது குறும்பென்றும், முல்லையிலுளளது பாடியெனறும், மருததிலுள்ளது பேரூரெனறும, நெயதலிலுள ளது பாக்கமென்றுஞ சொல்லுவது வழககு. (எஅ)

பஙகய வரசினைப பாங்கிற் சூழ்ந்தெனக்
கொங்குயிா குமுதமுங குவளைக கூட்டமுந்
தஙகிய வனிசசமுந தழைதத வள்ளையு
மஙகல வனபபுற மலரு மெங்கணும்.

(இ - ள்) தாமரையாகிய அரசனை நாற்பக்கலுஞ் சூழ்ந்தாற்போல, வாசனை வீசும் ஆம்பலும குவளையும் பொருந்திய அனிச்சமும் செழித்த வள்ளையும் ஆகிய தொகுதிகள் மஙகலம்பொருநதிய அழகுண்டாக எவ்விடத்தும் மலராநிற்கும். எ - று.

வேறு.

பெருமபொருளுடைய பெரியவா தினமும பேரறம் வளாததிடு திறனு, மிருமபய னுறுவாா பெருமபொருளெயதா ராயினு மேனறமாத் திரமே, யருமபொரு ளளிககும வணணமுங காட்டு மகனவயல வளாககு மே ரிகளும, விருமபினா குடைநது முகநதுண நிறகும வெறிகமழ் பொ ய்கையா திகளும.

(இ - ள.) விசாலமாகிய வயல்களை வளாககினற ஏரிகளும், இசசித்தவாகள் மூழ்கி அளளிப்பருக நிறகும் மணமவீசும பொயகை முதலியவைகளும, பெருஞ்செல வததையுடைய பெரியவாகள நாடோறும் பெரிய தருமஙகளை வளாககும வலிமையும, பெருமபலனை யடைபவாகள் பெருஞ்செலவததை யடையாதவராஞலும (தமமாற) கூடிய அளவே அரியபொருளகளை யுதவும் வகையும (இததனமையின வெனக) காட்டாநிறகும எ - று

பெருமபொருளுடைய பெரியவாககு ஏரிகளும், பெருமபொருளெய்தாா் ஏனறமாததிரமளிததறகுப பொயகையாதிகளும உவமிககப்பட்டன.

ஏன்ற - இயனற வென்பதன மரூஉ (அ0)

அறிதரு மறைக ளாகம புராண மனைததுமுன னருளிய விறைவ
னெறியுளி யுலகின் முதறொழி றூனே நிகழததிடும வணணமு மடுதத
வெறிகமழ மலரோ னாதியா வழியால வினைததிடும வணணமுங காட்டுஞ
செறிபொரு டாமே வளாததுமே ரிகளாற றிகழதர வளாததுமவாா நதிகள.

(இ - ள) அறியததகக வேதஙகள சிவாகமஙகள் புராணஙகள (முதலிய) எல்லாவறறையும ஆதிகாலததில திருவாயமலாநதருளிய தலைவனுகிய சிவபெருமான முறைபபடி உலகின (சிருஷ்டியாதி) முதறொழிலகளைத தாமே யியறறுமவகையும், (தனனை) சமீபிததுளள மணமவீசுந தாமரைமலரில வாழும பிரமன முதலியோா வழியாகச செயவிககும வகையும, நெருஙகிய பொருளகளைத தாமே வளரசசெயதும ஏரிகளாலே விளஙகுமபடி வளரசசெயதும, நெடிய நதிகள காட்டாநிறகும. எ - று.

தாம் எனறது நதிகளை. வாாநதிகள - ஒழுகுநதிகளெனினுமமையும. (அக)

வேறு.

துன்னிய நான மாடித் தொலைவிலா வேத மோதி
மன்னிய தான மாக்கள வநதுகைந் நீட்ட வோடி
முனனுறச் செநதீ யோமபி முதல்வனா யடியிற றூழ்நது
பன்னரு மறையோா போலப பதிதொறும படரும வெள்ளம.

(இ - ள.) வெளளமானது நெருஙகிய கததூரியில மூழ்கி, நீஙகாத குறறங களையகறறி நிலைபெறற மதமபொழியும யானைகள வநது கையை நீட்டுமபடி யோடி முனவருமபடி செவவிய யாகாககினியாற காககபபட்டு முதலில மலையடியிலிருஙகி (வருதலால), [(அகமருஷணதிமநதிரஙகள்) மிகுநத ஸநானஞ்செயது, கெடுதலறற வேதபாராயணஞ்செயது நிலைததுளள தானஙகொடுபபோாகள (தமபால) வநது கைந் நீட்டி (கொடுககுமபடி) படாநது, முதனமைபெறுமபடி செவவிய திததியாககினியை வளாததி, சிவபெருமானைத திருவடியிற் பணிநது] சொலலுதற்கரிய வேதியாகளைப் போல நகரங்கடோறுஞ் செல்லாநிறகும. எ - று.

வேதமோதி யென்றதை வேதமோதப்பட்டு என்றும், ஏதம் மோதியென்றும் வேதம் ஓதியென்றும் பிரிக்க. மன்னிய தானமாக்கள் என்றதை நதியின்பக்கலில் மன்னியதானங்களிலுள்ள மாக்களெனினும் பொருந்தும். (அஉ)

மணிமுடி யணிந்து தண்ட மருவிமால் யானை யுந்தி
யணிபடு மாரந் தாங்கி யருங்களி குமரி யெய்தப்
பிணியவிழ் வெட்சி யாதி பேணிமண் முழுதுங் காத்துப்
பணிதரு மொழுக்கிற் சென்று பார்த்திபர் புரையும் வெள்ளம்.

(இ - ள்.) வெள்ளமானது முத்துக்களை முடியிற்றாங்கி நாட்டையடைந்து, பெரியயானைகளைச் செலுத்தி, அழகமைந்த சந்தனத்தைத்தாங்கி அரிய கள்ளியுங் கற்றாழையும் பொருந்த முறுக்கவிழ்ந்த வெட்சி முதலியவற்றை யணிந்து, நிலமுழுவதையும் பாதுகாத்து (யாவரும்) தாழத்தக்க வழியிற்சென்று (வருதலால்), [இரத்தின கிரீடமணிந்து யானைசெல்லும் வழியைப் பொருந்திய பெரியயானையைச் செலுத்தி, அணியத்தக்க முத்தாரத்தை யணிந்து, விஜயலக்ஷ்மியானவள் அதிக களிப்பினையெய்தும்படி, விகசித்த வெட்சிமுதலிய மாலைகளையணிந்து, நிலவுலகிலுள்ளார் யாரையுங் காத்து (யாவரும்) பணியத்தக்க நல்லொழுக்கத்திற் சென்று] (விளங்கும்) அரசரையொக்கும் எ - று.

தண்டம் - நாடு, யானைசெல்லும்வழி களி - கள்ளியென்பதிடைகுறைந்து நின்றதென்றும், களியென முதனிலைத் தொழிற்பெயரென்றுங்கொள்க. குமரி - கற்றாழை, விஜயலக்ஷ்மி. வெட்சியாதியென்றது, நதி அம்மலர்களைக் கொண்டுவருவதாலும், மன்னர்சயங்குறிக்க வெட்சியணிதல் மரபாதலாலுமெனக். (அகூ)

பலவகை மணியும் பொன்னும் பாழிமால் யானைக் கோடு
நிலவகை நியமத் திட்டி நிறைதரு வகையேற் போக்குச்
சொலவகை சுருங்கும் வண்ணந் துகளற விசைத்து நல்கி
நலவகை வணிகர் போன்று நடப்பது நதியின் வெள்ளம்.

(இ - ள்) நதிப்பெருக்கானது பலவகை மாணிக்கங்களும் பொன்னும் வலிய மதமயக்குடைய யானையின் கொம்பும் நிலைபெறும் வகையாக [மருதநிலத்தூரில்] நன்னியமத்திற் சேர்த்து நிறைதருவழி வேண்டுபவர்க்குச் சொல்லின்வகை சுருங்கும் வழியாகக் குற்றமற விசைத்துக்கொடுத்து, நல்வழியையுடைய வணிகரையொத்து நடப்பதாகும் எ - று.

நியமம் என்பதற்கு நதியின்பக்கலில் மருதநிலத்தூரென்றும், வணிகர்பக்கலில் நன்னியமம் அல்லது கடைவீதியென்றும், நிறைதருவகை - நதியின்பக்கலில் நிறையும்படி யென்றும், வணிகர்பக்கலில் நிறைசெய்த வகையென்றும், சொலவகை சுருங்கும் வண்ணமென்பதற்கு நதியின் பக்கலில், ஆங்குற்றோரது சொல்வகையின் ஓசை குன்றும்படியென்றும், வணிகர்பக்கலில், பண்டம் வணிகரென்பார்க்கு அஃதுண்டாயின் உண்டென்றும், இல்லையாயின் அவர்கள் முன்னர் உழுந்துண்டென்றும் சொற்கள் பெருகாது சுருங்கும் வகையாகவென்றும், விசைத்து என்பதில் நதியின் பக்கலில் ஓசையுற்றென்றும் விசையுற்றென்றும், வணிகர்பக்கலில் சொல்லியென்றும் பொருள்படும். (அச)

புரவல னேவ லாற்றுற் போர்க்களம் பலவுங் குத்தி
யிரவல ரோடு மேனைப் பகல்ல ரினப் மெய்த

விரவளி யாங்கு காட்டி விசைத்தகு மிசைமிக் கேட்டிச
சுரர்மகி ழன்ன மலகச சூத்திரா நிகரும வெள்ளம்.

(இ - ள) வெள்ளமானது, இநதிரன கட்டளைப்படி போர்க்கள முதலிய பல விடஙகளையும பறிதது, (அலலிமுதலிய) இராமலாகளோமெ, (தாமரைமுதலிய) பிற பகன்மலாகளும் இனபமடையப் பொருநதிய வணடுகளை அவ்விடத்திறகாட்டி விசையோடுகூடிய ஓசையை மிகுதியாகக்கொணடு, தேவாகள களிககும அன்னப் பறவைகள் அதிகரிகக (செலலுதலால),[அரசன ஆக்கினைப்படி போாககளததில (நெல் முதலிய பலவற்றையுந) துவைதது யாசகாகளோமெ பிற அதிதிகளும மகிழ்வடையப் பொருநதிய கிருபையை அபபொழுதுகாட்டி விரைநது செலலததகக கீர்த்தியை மிகுதியாகததேடித தேவாகள மகிழததகக அவிசுமிகுமபடி] (விளஙகும்) சூததிரரை யொததிருககும. எ - று.

பகலலா - பகுதலற்ற வுறவினர், அதிதிகள். (அரு)

பலவுயி ராக்க லானும பலவுயிா காதத லானும்
பலவுயிா போக கலானும பலவுயிா மறைதத லானும்
பலவுயிா நுகாசசி முறறப பலவுமுயத தருள லானு
மலரவ னாதி யான வைவருமு புரையும வெள்ளம

(இ - ள) வெள்ளமானது பலவுயிாகளைசசிருட்டிததலாலும், பலவுயிர்களை யிரட்சிததலாலும, பலவுயிாகளைச சஙகரிததலாலும, பலவுயிாகளை மறைததலாலும, பலவுயிாகள நுகாசசிமுறறுமபடி பலபொருளகளையுங கொடுததருளலானும (முறை யே) தாமரைமலரில வசிககும பிரமன முதலிய ஐவரையும ஒததிருககும எ - று.

அலரவனாதியைவா — பிரமன, விணடு, உருததிரன, மகேசன, சதாசிவன எனப் படுவா இவாமுறையே படைததல, காததல, அழிததல, மறைததல, அநுககிரகிததற றொழில செயவோா. (அசு)

ஆறறலசான மசசங கூாம மடககிவன கேழல வென்று
தோறறருசான மடஙகல சாயததுத துனனுமவா மனனா மோதிய
போறறலாற சாதத னைஙகைப புணணியன முருகன வீரன
மாறறரு மதுகைக காரி யைவரு மானும வெள்ளம.

(இ - ள) வெள்ளமானது வலிமைமிகக மசசததையும ஆமையையும அடககி வலியபனறியை வென்றுகொண்டு, பாாவைமிகுநத சிஙகததைககொனறு நெருஙகிய குள்ளனையடிதது (பலரையும்) காபபாறறுதலால, சாததா - ஐநது திருககரஙகளை யுடைய விநாயகா - முருககடவுள - வீரபததிரா - நீககுதறகரிய வலியையுடைய வைரவா (ஆகிய) ஐவரையுமபோனறிருககும எ - று

மசசததையடககிச சாததனையும, கூாமததையடக்கி ஐங்கைப்புணணியனை யும, கேழலைவென்று முருகனையும, மடஙகலைசசாயததுவீரனையும, வாமனனைமோ திக்காரியையுமானும — எனமுடிகக.

விணடுவினதசாவதாரஙகளில, மசசாவதாரமஐயனாராறகண்பறிககபபட்டும் கூாமாவதாரம் விநாயககடவுளால ஓடுபறிககபபடடும, வராகாவதாரம முருகக்கடவு ளாற் கொம்புமுரிககபபடடும, நரசிஙகாவதாரம வீரபததிரரால தோலுரிக்கப்பட்டும், வாமனாவதாரம வைரவரால முதுகெலுமபு பறிக்கப்பட்டுந தணடிககப்பட்டனவென பது புராணஙகளின கூறறு. (எஎ)

அன்னமே கருடன் மஞ்ஞை யரிகரி விடையும பாங்கர்
மனனுபோ தியினவாழ் பேயுங் காட்டுபு வளைக காது
பொனனுரு முத்த மூரற பூங்கைகோங் கருப்புக கொங்கை
துன்னிவார நதிகண் மாத ரெழுவருந தொக்க தொக்கும.

(இ - ள்.) நெடியநதிகள் அன்னமும கருடனும் மயிலும சிங்கமும யானையும் இடபமும, பக்கத்திற்பொருந்திய அரசமரத்தில வாழ்கின்றபேயும் (ஆகியஇவற்றை யடித்துக்கொண்டுவருதலாற) காட்டி, வளையாகிய காதும அழகிய வடிவமும் முத்த மாகிய பலலும், (தாமரை)மலராகிய கையும, கோங்கரும்பாகிய கொங்கையும்பெற்று, சத்தமாதர்களும ஒன்று சேர்ந்திருந்ததை நிகர்க்கும. எ - று

சத்தமாதர்கள் - அபிராமி - மாயேசுவரி - கௌமாரி - நாராயணி - வராகி இந்திராணி - காளி எனப்படுவோர். இவர்கள வாகனம முறையே அன்னம் - இடபம - மயில்-கருடன - சிங்கம - யானை - பேய இவையேழையுந் தன்னிடத் தடித்துக்கொண்டு வளைக்காதும், முத்துப்பலலும, பூங்கையும, கோங்கரும்புக கொங்கையும பொருந்திய பொன்னுருவேற்றிருத்தலினநதிகள் மாதரெழுவருந் தொக்கதொக்குமெனப்பட்டது. (அஅ)

விண்ணவ ருளமுங் காதல் வேசைய ருளமுங் காம
நண்ணின ருளமு முக்க ணுயக ருளமு மேபோற
றிண்ணிய தடையொன றின்றிச் செழுங்கரை யுடைத்து வெள்ளந்
தண்ணடை பலவு மஞசத் தலைத்தலை பரந்த தன்றே

(இ - ள்) தேவர்களது மனமும, ஆசையையுடைய வேசையரது மனமும, காம முற்றவர்களது மனமும, திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானது திருவுளமும போல, வெள்ளமானது வலியதடை சிறிது மிலலாது, செழியகரையினையுடைத்து, மருதநிலத்தூர்கள யாவும அஞ்சும்படி இடங்கடோறும பரவியது எ - று

தேவர்கள மனம அவிசுகொடுக்குமிடத்தும, வேசையருளம பொருள கொடுப்போரிடத்தும, காம நண்ணினருளம எலலாமாதரிடத்தும, முக்கணுயகருளம அன்புடையாரிடத்தும, நினைத்ததை தாழாது முடிக்கச்செலலுமாறு வெள்ளமானது பரந்தது என முடித்துக்கொளக (அக)

முனிவரர சாபம போனறு முடிவிலசெல்வத்தர் போனறுங்
கனிமொழி மாதர் தமமுட காரிகை மிக்கார் போனறும
பனிவரு மலர்க்க ணன்பர் பயிலபெரும பத்தி போனறு
நனிமகிழ களம ரெலலா நணணின ருடைப்புத் தோறும.

(இ - ள்) முனிவர்களிட்ட சாபத்தைப்போலவும, அழிவிலலாத செல்வ முடையோரைப்போலவும, மதுரம பொருந்திய மொழியையுடைய மாதர்களில அழகின மிக்காரைப்போலவும, குளிர்ச்சிபொருந்தியமலர்போன்ற கண்ணினையுடைய அன்பர்கள்செய்யும பெரிய பக்தியைப்போலவும், மிக்க மகிழ்ச்சியையுடைய மள்ளர் கள யாவரும உடைப்புக்களிலெலலாம பொருந்தினார்கள எ - று

முனிவரர சாபம தடையினறிச செலலுமாறு தடையினறியும், செலவத்தர் பரிசனருடன செல்வதுபோலத் தமதாட்களுடனும, காரிகைமிக்கார் செருக்குடன செலவதுபோலப் பயிரவிளையுமெனனுஞ் செருக்குடனும, அன்பர் பத்திபோல விசுவா சத்துடனும உடைப்புத்தோறுந் தடையினறிச சென்றனர்களமரென முடித்துக் கொளக. (கூ0)

உடைகரை யடைக்கு மள்ள ருரப்பிய பறையி னோதை
யடைகரை குத்திச் செல்லு மழிபுன லார்கலி யோதை
யிடையிடைப் புதுநீ ராட வெய்துநர் களிக்கு மோதை
கடையெழு கடலே யென்னக் கடவுள ரயிர்ப்ப நீடும்

(இ - ள்.) இடிகரையைத் தூர்க்கும் மள்ளர்கள் முழக்கிய மருதநிலப் பறையொலியும், அடைத்த கரையைக் குத்திக்கொண்டு செல்லும் அடங்காநீரின் ஆரவாரப்பொலியும், இடங்கடோறும் புதுநீராடும்படி புகுவோர் சந்தோஷிக்குங் கோஷமும், உகாந்த காலத்திலெழுஞ் சத்தசாகரமே போல, தேவர்கள் சந்தேகிக்கும்படி மிகும். எ - று

மருதநிலப்பறை - கிணை. (௬௧)

பூம்பொழிற் பணைமை யாடிப் பொய்கையி னாடி வாசத்
தேம்பொழி மலர்கள் கொய்து திரிதரு நீத்தக் கன்னி
கூம்பொழி கிழமை யாளர் கூடினர் வரைந்து நல்கக்
வோம்பெழிற் புணரி யன்ப னுவக்குமா றெழுகா நிற்கும்

(இ - ள்) அழகிய சோலையிற் பண்ணையாடி, பொய்கையின் ஆடி, வாசம் பொருந்திய தேனைச்சொரியும் மலர்களைப்பறித்து, திரிகின்ற வெள்ளமாகிய பெண் (அன்பு) குவிதலொழிந்த உரிமையாளர் கூடிவரைந்து கொடுக்க, அழகுமிக்க கடலாகிய தலைவன் களிக்கும்படி செல்லாநிற்கும். எ - று

பணை - வயல், மகளிர் விளையாட்டு. ஆடி - விளையாடி, பொருந்தி கிழமையாளர் - தாய்தந்தையர், உரிமையாளர் வரைந்து - மணஞ்செய்து, அவரவாக்கேற்ப அளவிட்டு—என்பொருள்கள் படுதலின் முறையே மங்கைக்கும் நதிக்கும் பொருத்திக்கொள்க.

பொய்கையினாடி என்பதைப் பொய்கையில் நாடி யென்பப் பிரித்துப் பொய்கையிற் பொருந்தி எனவும் பொருள் கூறலாம் (௬௨)

எம்பிரா னிடத்தி னீங்கி யிமயவெற் படுத்து மீண்டு
தம்பிரா னிடமே சார்ந்த தையல்போற் கடலி னீங்கி
யும்பாரூழ் வரையி னெய்தி யுறுகடன் மீண்டு சாரும்
பம்பிய வுயிர்க ளோம்பப் படர்தரு நதியிற் றாநீர்.

(இ - ள்) நெருங்கிய வுயிர்களைக்காத்துச் செல்லுகின்ற நதியினது புனிதமாகிய நீரானது, சிவபெருமானிடத்திற் பிரிந்து இமயமலையையடுத்து மீளவுஞ் சிவபெருமானிடமே சேர்ந்த உமாதேவியாரைப்போல, சமுத்திரத்தினின்றும் நீங்கி, ஆகாயமளாவிய மலையையடைந்துபொருந்திய சமுத்திரத்தை மீண்டுபொருந்தும் எ-று.

நீருக்கு உமாதேவியையும், கடலுக்குச் சிவபெருமானையும் மலைக்கு இமயமலையையும் உவமித்துக் கூறினர். இமயவெற்பு - பனிமலை, தம்பிரான் - ஒப்புயர்வற்றவன். வரையென்றது ஈண்டு நந்திமலையை (௬௩)

வண்டினை விளைப்பத் தேனும் வரம்பிலாப் புனத்தி னீங்கிக்
கண்டன புலலே யனறிக் காலுறப் பணியா வன்மை
கொண்டகொல் லையுங்கை விட்டுக் குலவிய வரம்பிற் செம்மை
விண்டிடா வயல்க ளோம்ப வெள்ளங்கால் கொண்ட வாறே.

(இ - ள்.) வெள்ளமானது வளவியதினைப்பயிரை விளைப்பதென்றாலும் வரப்பில்லாத புனத்திலிருந்து நீங்கி, பார்ப்பவை புறகளையன்றிக் காலவாய்கள் பொருந்தப் பணிக்கையற்ற வன்மைகொண்டுள்ள கொல்லையிலிருந்தும் பிரிந்து, விளங்கிய வரம்பினது செம்மைநீங்காத வயல்களைக் காக்கும்படி கால்கொண்ட விதமாகும் எ - று.

கால்கொண்ட - குடிகொண்ட, கால்களாக வுருக்கொண்ட எனப்பொருள். புனம் - குறிஞ்சியென்றும், கொல்லை - முல்லையென்றும், வயல் - மருதமென்றுங்கொள்க. (௧௪)

தத்துவ மாயை நல்கத் தத்துவ மொன்றி னொன்று
கொத்துறத் தோற்று மாபோற் குலநதி யினிது நல்க
வொத்தெழுந் திரைநீர்க் கால்க ளொன்றினொன் றனந்த மாகி
வித்தக மாகப் பணிணை விளைத்திடுங் கடன்மை பூண்ட.

(இ - ள்) மாயாதத்துவமானது கொடுக்க, தத்துவங்கள் ஒன்றிலிருந்தொன்று கூட்டமாகத்தோன்றுந் தன்மைபோல, சிறந்த நதியானது இனிதாகக்கொடுக்க, நெருங்கி எழுகின்ற அலைகளையுடைய நீரைப்பொருந்திய கால்வாய்கள் ஒன்றிலிருந்தொன்றாக (தத்தோன்றி) எண்ணிறந்தனவாய் அதிசயமாக வயல்களிற் (பயிர்களை) விளையச்செய்யுங் கடன்மையைக் கொண்டன. எ - று.

மூலமாயையினின்றுந் தத்துவங்கள் ஒவ்வொன்றாகப் பெருகுமாறு நதியினின்றும் பல கால்கள் ஒவ்வொன்றாகப் பிரிந்து எண்ணிறந்தனவாய்ப் பயிரை வளர்க்கும் என்பது கருத்து. (௧௫)

வலனமிகு மொருவன் மாதர் பலர்தமை மணக்கு மாப்போற்
பலவயற் கொருகா லாகப் பாய்புனல் வழங்கா நிற்கு
மலர்புகழ்க் கண்ண னுப்பர் வாய்க்குடி தொறுநின் றாங்குச்
சிலவயன் மடைக ளொப்பத் திறந்துநீர் வழங்கா நிற்கும்.

(இ - ள்) வெற்றிமிகுந்த ஓராடவன் பல மாதர்களைக் கலப்பதுபோல, பல வயல்களுக்கும் ஒரே கால்வாயாகப்பாய்கின்ற நீரானது செல்லாநிற்கும் பரந்த கீர்த்தியையுடைய கிருஷ்ணமூர்த்தியானவர் ஆயர் வீடுகளிலெல்லாம் சமானமாக நின்றாற்போல, நீரானது சில வயல்களின் மடைகளைச் சமானமாக (ஒருசேர)த் திறந்து தங்கா நிற்கும். எ - று

நின்றாங்கு இதில் ஆங்கு உவமவுருபு (௧௬)

சுந்தர மதுரை மூதூர்ச் சோமசுந் தரனு ரேவச்
சிந்துவாய் மடுக்குந் தோறுந் தீம்புனல் வழங்கு மையை
யுந்தியு மெச்சப் பணிணை யுறுவிடா மடுக்குந் தோறுந்
தந்திடும் புனலி னாவந் தணிப்பன கால்க ளெல்லாம்.

(இ - ள்) அழகிய மதுரையாகிய பழயவூரிற் சோமசுந்தரக்கடவுள் கட்டளையிட, குறட் பூதமானது பருகுந்தோறும் மதுரமாகிய நீரைக்கொடுக்கும் வையைநதியும் மெச்சும்படி கால்வாய்களெல்லாம் வயல்களிற் பொருந்திய வெடிப்புகள் குடிக்குந்தோறுங்கொடுத்து மிக்க நீர்வேட்கையை யடக்குவன எ - று.

மதுரையிற் சோமசுந்தரக்கடவுள் தடாதகைப்பிராட்டியாரைத் திருமணஞ்செய்தகாலத்தில், அப்பாண்டிய குமாரியார் திருமணத்திற்குச் சமைத்த அன்னமுதலியன செலவாகாதிருக்கின்றனவென்த் தமது செல்வப்பெருக்கைக்கூற, இறைவர் ஓர் திருவிளையாடல் செய்வாராய்ச் சமீபித்திருந்த குண்டோதரன் வயிற்றில் வடவாக

கினியைப் புகுத்தி, பெண்ணே! நமது குடைதாங்கும் இக்குறுங்காற் பூதனுக்குப் பிடி சோறுகொடு என்று அனுப்ப, அவன் தேவியாரைப் பின்சென்று மடைப்பள்ளியையடைந்து ஆங்குமலை நிகர்த்தனவாகச் சமைக்கப்பட்டிருந்த அன்னம் கறிவகை முதலியவற்றையும் இனிச் சமையல்செய்யச் சித்தஞ்செய்து வைத்திருந்த அரிசி காய் கறி நெய் பால் தயிர்முதலிய எல்லாவற்றையும் புசித்தும் பருகியும் பசிதீராது சோமசுந்தரக்கடவுளிடஞ்சென்று பசிதணியாது வருந்தா நின்றேனென்ன முறையிட, இறைவா பூமிதேவியால் அன்னக்குழி வருவித்தளித்துப் பசிதணித்து, தமது சடையிலிருந்த கங்கையை வையையாக்கி அவனது தாகத்தைத் தணித்தருளினரென்பது சரிதம்

அடங்காத நீர்வேட்கையையுடைய குண்டோதரனது ஓர் விடாய்போன்ற வாயாற் பருக நீரளித்தது வையையாயிருக்க, இத்தொண்டைநாட்டுக் காலவாய்கள் வயல்களிற் பொருந்திய அநேக விடாய்களாகியவாய்கள் நீர் பருகுந்தோறும் நீரினையளித்து அவற்றின் வேட்கையைத் தணித்தலால், இறைவா கட்டளையால் வந்த வையை இவற்றின் ஆற்றலகண்டு மெச்சவாயிற் றெனக்கொள்க. (௧௭)

வேறு.

கண்ண னுக்கொரு காதலி மார்பகம்
புண்ணு றுத்தலப் புண்ணியன் முன்வரு
மண்ணல் கைப்படை யல்லதில் லாமையை
யெண்ணி மள்ள ரலப்படை யீட்டினார்.

(இ - ள்) திருமாலின் அவதாரமாகிய கிருஷ்ணனுக்கு ஒருநாயகியாகிய பூதேவியின் மார்பினைத் துன்புறச் செய்வது, அப்புண்ணியனுக்கு முன்தோன்றிய சுவேதராமனது கையிலுள்ள அலப்படையல்லாமல் (வேறொன்று) இல்லாமையைக்கருதி மள்ளர்கள் கலப்பையாகிய படையைக் கொண்டார்கள் எ - று.

கிருஷ்ணமூர்த்தி பாரதப்போரை யுண்டுசெய்து பூபாரந்தொலைக்கவேண்டுமென்றும், பலராமன் போர்புரிந்தால் அநேக ரிறக்கநேரிடுமாதலின் அதனை விலக்க வேண்டுமென்றுங் கருதினவர்களாதலின், பூதேவியைத் துன்புறுத்த நினைத்தவன் பலராமனென்று புலப்படுத்தி, அச்சுவேதராமனுடைய அலப்படையைக்கொண்டு பூதேவியின் மார்பைப் புண்ணுறுத்தலாயினர் மள்ளர்களென்றார்

இளையான மனைவியை மூத்தோன் கலத்தற்குரியனென்றும், இது வியாச முனிவரால் திருதராட்டிர பாண்டு மன்னர்கள் ஜனித்தமைபோலு மென்றுங்கூறினு மமையும். (௧௮)

நடுவ னூர்தியி னல்லினம் பூட்டி
நடுநு கத்தி னலப்படை நண்ணுறீஇ
நடு நிறுத்திய நல்லவ ராயினு
நடுவ வாக்கிலை நன்றுழுங் காலையே.

(இ - ள்) இயமனது வாகனமாகிய எருமையின் நல்ல இனத்தைப்பூட்டி நுகத்தறியின் இடையில் அலப்படையைப்பொருத்தி, சமமாகச்செலுத்திய நல்லவர்களானாலும், அவர்கள் நன்குழ உழவுத்தொழில்புரிகையில் (அவர்கட்கு) நடுநிலைமையென்பதில்லையாம். எ - று

நடுவன் - இயமன் ; சமனென்றற்போல (௧௯)

மேழி வைத்தகை போனடு மேவுறு
வாழி மற்றை வலக்கை யொருபுடை

தாழி னுஞ்சமன் செய்திரு பூணியு
மூழி னுந்து முழவ ருளமபொர.

(இ - ள்) மேழிபறறிய கரததினைப்போல, நடுததன்மை பொருந்தாத வாழ்வு பொருநதிய மற்றவலக கரமானது ஒரு புறநதாழ்நது கிடககினும, இருபூணியையுஞ் சமன்செயது, தமது மனமபொருநத உழவாகள (அவற்றை) ஒழுஙகாகச செலுத்து வாரகள் எ - று.

வலககை சமமினறித தாழ்ந்து கிடககினும இடககையே சமனசெய்து செல்லும் எனபதாம. பூணி - பூட்டபபட்டது, எருது (௧௦௦)

வடககுந தெறகு நடததி வளாவியுங
குடககு மறறைக குணககு நடததியு
மிடககு மளளரெழுபபிய பாடடினு
னடககும பூணிக ளனறு களிககுமே.

(இ - ள்) தெறகும வடக்குமாக நடததிவளைநதும, மேற்குங் கிழக்குமாக நடததியும (கழனியை) உழுகினற மளளாகள எழுபபிய பாடலகளால, உழுகினற எருதுகள நனறுகச சநதோஷிககும எ - று. (௧௦௧)

நெலலின விததினை நிததலுங குறறுணு
நலல செலவததி னணணிய மளளாகள
புலனு ருமு னுழுதுபினபூணியைச
செலல வுயததனா நீமபுன லாடடியே.

(இ - ள) நெலலின விதைகளை நாடோறும குறறிபபுசிக்கின்ற சிறநத செல்வததுடன பொருநதிய மளளாகள (புலததிற) புறகள பொருநதாமல உழுது, பிறகு எருதுகளை நலல நீரில முழுககாட்டி [கழுவி] சசெலல விடுததாாகள எ - று

நிததலுங குறறுணும் செலவாகுநதோறுங குறறிபபுசிககும. (௧௦௨)

உழுத சேறறினை யாடியி னொததிடப
பழுதின மளளா பயிறறி வலாரியைத
தொழுது வெளமுளை தூவிதெ தெளிநதபின்
முழுது நீரைக கவிழ்பபா முறைமையால.

(இ - ள்.) குறறமிலலாத மருதநிலததாட்கள(தாம)உழுதசேற்றைக கண்ணாடி போல (சசமநோககு) ஆககி, இநதிரனைப்பூசிதது, வெளளிய முளைகளைததெளிதது, (நீரானது) தெளிநதபினனா முறைபபடி நீாைமுழுதும (ஊாகால வழியாகக) கவிழப் பாாகள எ - று. (௧௦௩)

குருவி வெண்முளை கூடடுணப போநதவை
வெருவி யோட வெருடடுநா வேறிலை
திருவின மள்ளா சிறுாபாந தடிததிடும
பொருவி லோதையப புளளின மோடடுமே.

(இ - ள்) வெளளிய முளைகளைககொளளை கொணடுணணுமபடி வநத குருவிகளை அஞ்சியோடுமபடி துரததுபவா வேறிலா. (ஆனால) செலவமபொருநதிய மள்ளாகளது சிறுவாகள பநதடிதது விளையாடுஞ சமானமிலலாத வோசை அககுருவிககூட்டங்களை யகறறுநிறகும எ - று.

வெருட்டுநா - இதில், ந - நிகழ்காலவிடைநிலை, (௧௦௪)

முளைகள சேறறிற பதிநது முதிாநதிடு
தளைநெ டுமபணை சாாநதுநற ருயென
வளவி னுககமை வுறற வளவையிற
களமா மெனபுனல காறிறந தூடடுவாா.

(இ - ள) களமாகள,முளைகள் சேறறிலேபதிநது முதிாசினற தளைகளையுடைய நெடிய வயலில, நறருயையபபோலச சாாநது (அவறறின) அளவுககுய பொருநதிய அளவாக மெலலிய நீரைக காலவாயகளைத திறந்து பாயசசுவாாகள. எ - று.

அளவினுககமைவுறறவளவையில எனறது பயிரின உயாசசிககுத தககபடி என்பதாம. நறருய் - ஈனறமாதா , நலல தாய எனினுமமையும. (க0ரு)

வெளளை மேகம விழுபபுன லுணடுமுன
கொளளும வணணம பசநதெழு கொளகைபோ
லளளல வெணமுளை யாாநதற லுணணலு
முளள வணண மொழிநது பசநதன.

(இ - ள்) வெணணிறதத மேகமானது முதலிற சிறநத (கடல்) நீரைப்பருகி, (பசுமை) கொணட வகையே பசுமையுறறெழுங கொளகையைபபோல, சேறறிற படிநத வெளளிய முளைகள பொருநதி நீரைபபருகலும (தமககு) உளள (வெணமை) நிறமொழிநது பசயபுறறன. எ - று.

வெணமேகம கடனீரைப் பருகிப பசுமையுறறெழுநதாறபோல, வெண் முளைகள நீரைபபருகிப பசுமையுறறெழுநதன (க0சு)

சேறு செயயுஞ செயலின ரோாபுற
நாறு வாஙகி நடுபவ ரோாபுறம
வேறு வெணமுளை விததுந ரோாபுற
மாறில பைஙகூழ வளாககுந ரோாபுறம.

(இ - ள) சேறுசெய்கினற தொழிலினையுடையா ரொருபுறமும, நாற்றினைப் பிடுஙகி நடுகினறவாக ளொருபுறமும, வேறாக வெளளிய முளைகளை விதைபபவாக ளொருபுறமும, கெடுதலிலலாத பசிய (நெற) பயிரை வளாபபவாக ளொருபுறமும, (ஆக மளளாகள விளஙகினாாகள) எ - று (க0எ)

வேறு

காமவேள சிலைகோலிக கணபொழுது மொழியாமே
நாமவா ளிகளாககி நமையலைபபக காரணமாயத
தாமரு திருபபவெனத தணபபினை நெருககுவபோ
லேமமாா மலாபலவு மெழுநதுமலா வனபணையின்.

(இ - ள) மனமதன விலலாகவளைத்துக் கணநேரமும விலகாமல் நமமை அசசந்தரும பாணஙகளாகச செயது துனபுறுததக காரணமாகி, தாம நீஙகாதிருபபன வெனறு, தணணிய நெற்பயிரை நெருககுவனபோல, அழகு பொருநதிய பல மலர் களும் வயலகளில தோனறி மலாகினறன எ - று.

தாம எனபது பயிாகள்.

“கருமபலல நெலலென்னக கமுகல்ல கரும்பென்ன”என்ற திருததொண்டா புராணமபோல, நெறபயிா கரும்பெனறு சொலலுமபடி யுயாநதிருத்தலின,அதனையே

மன்மதன வில்லாகவளைத்துத தம்மைப் பாணங்களாக்கிச்செலுத்த நிகழுமென்னுங் கருத்தால, தாமரைமுதலிய மலாகள அப்பயிரை யடக்கவெழுந்தனவென்பது கருத்து.

உந்தியந்தா மரையொன்றே யுடையவரி தனைநோக்கி
யெந்தமைநே ரரயென்றே யெழுந்தபசும பயிரப்பணை
சந்தமலி பலகமலந் தாமலாந்து வளையுயிர்த்த
கொந்தொளிநித் திலவொழுங்கா ற குறுநகைசெய் திடுமன்றே.

(இ - ள்.) அழகிய உந்திக்கமல மொன்றனையேயுடைய திருமாலைப்பார்த்து எமக்கு ஒப்பாகாய என்றுயாந்த பசிய பயிரையுடைய வயலகள், அழகு மிகுந்த பல தாமரை மலாகளை மலாந்து, சங்குகள்பெற்ற கூட்டமாகப் பிரகாசிக்கின்ற முத்துக் களின் வரிசையாற் புன்னகை செய்யாநிற்கும எ - று. (௧0௯)

கொத்து - கொந்து, மெலித்தலவிகாரம.

இடையிடையே செழுங்கமல மெழுந்துமலா பசும்பண்ணை
யடையலாத முயிர்குடிக்கு மழுவுமிழ்வச் சிரப்படைக்கை
யுடையவனை யுளத்திருத்தி யோங்குமவன சாரூபந
தடையறப்பெற ருயிரங்கண டகவிழித்த திறங்காட்டும்.

(இ - ள்.) இடங்கடோறும செழிய தாமரைகளெழுந்து விகசிக்கப்பெற்ற பசிய வயலகள், சத்துருக்களது பிராணனைப்பருகுந தீயைச்சொரியும வச்சிராயுதத் தைக் கையிலேந்திய (தமக்கிறைவனாகிய) இந்திரனை மனதிற றியானித்து உயாந்த அவனது சாரூபத்தைத் தடையின்றி யடைந்து ஆயிரங்கணகளோடு தகுதியாகவிழித்த திறத்தினைக் காட்டாநிற்கும எ - று. (௧௧0)

தாமாக்கும பொருட்குதவி தனைப்புரிவ ரதற்கிடருந
தாமாக்கி னவாதமமைத் தணவாமே யிடாகளைவாா
தாமாக்கும பயிரக்கூருய்த் தனைக்களையு நிலநீருந
தாமாக்க வவைமுனியாா களைமுனிவாா தகுமுழவா.

(இ - ள.) தாமியற்றும பொருளுக்கு உதவியைச் செய்பவாகள் அப்பொரு ளுக்கு இடையூறு தாமேசெய்வாராகளாயின அவாகளை நீக்காமலே (அவாகள செய யும) இடையூறறினை (மாத்திரம) விலக்குவாாகள (அதுபோல) தகுதிப்பாட்டினை யுடைய மள்ளாகள தாமசெய்கின்ற பயிருக்கு நிலமும்நீரும(உதவிசெய்வனபோலவே) அதற்கு இடையூறுக நெருங்கிய களைகளையும உண்டாக்க, அந்நில நீாகளைக்கோபியாத வாகளாகிக் களைகளை (மாத்திரமே) கோபிப்பாாகள் எ - று.

நானகாம வரியில, தாம் - அசை. (௧௧௧)

மங்கையர்க ளவயவத்தின வளங்கவரிந் தீவரமும
பங்கயமுங் கைரவமும பலவுமட னமக்காகா
தங்கவாகக்கே தக்கதென வகதத,நணரிந் களைகளையத
தங்குமவயற றொழினமள்ளா தையலாைச செலவிடுத்தாா.

(இ - ள்) பொருந்திய வயலகளில உழவுத்தொழில் புரியும் பள்ளர்கள மாதா கள துறப்புக்களின நலத்தினைக் கொள்ளைகொள்ளுங் கருங்குவளையும் தாமரையும் அலலியும (முதலிய) பல வற்றையும அழித்தல் நமக்குத்தகாது, (பகைபாராட்டலால)

அம்மாதர்கட்கே தக்கது என்று மனதிறகருதிக களைகளையுமபடி மாதர்கடகுச் செலவு கொடுததார்கள். எ - று

கருஙகுவளை - விழியையும, தாமரை - முகம கைகால கொஙகை முதலிய வற்றையும், செவ்வலலி - வாயையும் நிகாத்தலிற் பகைமையெனக் கொள்க பலவு மெனறதால வள்ளை - செவியையும பிற பிறவுறறையும நிகாககுமாதலின அவறறையு மெனக. (ககஉ)

தமதுறுப்பி னெழிலகரவிற றுங்கவரும பிழையானுஞ
சமரமதன் றொழிலவளாககுந தணபயிரைத தெறலானு
மமரிடைவந தெதிராத வலாபபகையைத தாநதொடாநதே
குமரியுயிர் குடிபபதறகுக குறுகினா வயனமாதா.

(இ - ள்) வயலிற றொழிலபுரியும பளளப்பெணகள தமது அவயவங்களி னழகை வஞசகமாகத தரிகக உணடாகினற குற்றததினாலும, காமப்போர்புரியும மன்மதனது செயல்களை வளாககினற (கருமபுபோலுளள) தணணியபயிரை யழிததலி னாலும, (தமமை) போரில வநதெதிாக்காத மலாகளாகிய பகைகளைத தாம நெருஙகி (அவற்றின) அழியாத வுயிாகளை யழிப்பதறகு அடைநதாாகள எ - று

அமரிடை வநதெதிராத எனபதை, எதிாநது அமரிடைவராத என விகுதி பிரிததுக் கூட்டி, எதிாததுப்போருக்கு வராத எனபொருள கூறினுமமையும. அம ரிடை - அமருக்கு ; உருபுமயககம குமரியுயிா எனபுழி - இளமையுயிா எனறுமாம. அவை யப்போது களையப்படினும மீணடும முளைககும ஆறறலுடைமையின அழியா வுயிா எனககோடலே சிறபபு

சமரமதன றொழில்வளாககுந தணபயிா எனறது கருமபுபோல விளஙகும நெற்பயிரையெனச (ககஙூ)

எங்களுக்குப பகையாகி யிலஙுசிமுந லாமிடததிற
றங்கியிருப பதற்கேதுஞ சாறறிலமற றதுபொறுததே
மெஙகள்கண வரைபபகைத்திங கிருநதிடவொட டேமெனறு
மஙகையர்பங கயமுதலா மலாகளையத தொடஙகினா.

(இ - ள) எஙகளுக்கு விரோதமாகித தடாகமுதலியவிடஙகளிற் பொருந்தி யிருப்பதற்கு ஒன்றுஞ் சொலலமாட்டோம. அதனைப பொறுததோம(ஆயினும)எஙகள கணவர்களைப பகைமைகொணடு இவ்விடததிலிருககவிடமாட்டோம எனறு, அமமளள ஸதிரீகள் தாமரை முதலாகிய மலாகளைக களைநதெறிய ஆரமபிததாாகள. எ - று.

மற்று - அசை. கணவரைப் பகைததலாவது - அவாகள் நெறபயிரைபபெருக் கக கருதியதறகு மாறுபடசெயதலெனக (ககச)

வேறுவே றுளதெதணணி வேறுபடுங கயவாகளா
லூறுறு தெனிலவரை யொறுபபாரா றுறுபபொடெதிா
கூறுமோ திமமபணிலஙு கூாமமவரால கயனஞெணடுஞ
சீறுமா றிலரொளிக்குஞ செயலானுந தொடாநதிலரால.

(இ - ள்) (தமது) மனதில் வெவவேறாககக கருதிமாறுபடுகின்ற கீழ்மக்களால் (தமக்கு) தீமைவிளையாதாகில், அவாகளைத தணடிப்பவா யாவா ? (ஒருவருமிலர்!) தம தவயவங்களுடன ஒபபாகசசொல்கினற அன்னம சங்கு ஆமை வரால கயல் நணடு முத

வியனவற்றைக் கோபியாதவர்களாகி (அவை) ஒளித்துக்கொள்ளுஞ் செயல்களாலும் (அவற்றைத்) தொடர்ந்திலா (அம்மங்கையர்.) எ - று.

ஓதிமம்-நடைக்கும், பணிலம்-கழுத்திற்கும், கூர்மம்-புறந்தாளுக்கும், வரால்-கணைக்காலும், கயல்-கண்ணுக்கும், ஞெண்டு-முழந்தாளுக்கும் சமானப்பொருள்கள்.

சைவலந்தா மரைகுவளை தண்குமுதங் கொடிவள்ளை
தெய்வமணங் கமழ்நீலந் திகழனிச்ச மெனும்பகைகட்
குய்வகைசெய் யாதவர்க ளுடனிருந்த பெரும்பிழையாற்
கைவலத்திற் பறித்தெறிந்தார் கதுவியபுல் லாதிகளும்.

(இ - ள்) கொடிப்பாசி - தாமரை - செங்குவளை - தண்ணிய அல்லி - வள்ளைக்கொடி - திவ்விய மணம்வீசுங் கருங்குவளை - விளங்குகின்ற அனிச்சமென்று சொல்லப்படும் பகைகளுக்குப் பிழைக்குமவகை செய்யாமல், (அவற்றுடன்) தங்கிய பெருங்குற்றத்தால், பொருந்திய புல் முதலியவற்றையும், ஆற்றுக்காலாட்டியர்(தமது) கைவல்லமையாற் பறித்தெறிந்தனர். எ - று

சைவலம் - கூந்தலுக்கும், தாமரை - முகமுதலியவற்றுக்கும், குவளை - கண்ணுக்கும், குமுதம் - வாய்க்கும், வள்ளை - காதுக்கும், அனிச்சம் - பாதத்திற்கும் உவமையாற் பகைப்பொருள்கள். (௧௧௬)

சிரஞ்செவிதோள் கண்முனகை திணிமுலைமெல் லிடைபாதம்
வரஞ்செறிமென் மலர்பலவும் வகுத்தணிந்து மீண்டவர்க
ளுரஞ்செறியும் பகைசவட்டி யொண்டலையா திகளணிந்து
புரஞ்சிரித்த புண்ணியரே போன்றனர்மள் ளர்கள்புகழ.

(இ - ள்) தலை - காது - தோள்கள் - முனகை-(அழகு) முற்றிய முலைகள்-நுண்ணிய இடை - கால் (முதலியவிடங்) களில், மேன்மைபொருந்திய மெல்லிய பல மலர்களையும் வகைப்படுத்தி மள்ளர்கள் புகழும்படி திரும்பிய ஆற்றுக்காலாட்டியர்கள் வலிமைமிக்க பகைகளையழித்து ஒள்ளிய சிரமுதலியவற்றை (அறிகுறியாக) அணிந்த திரிபுரங்களைப் புன்னகையாற் பொடித்த புண்ணியராகிய சிவபெருமானை யொத்தார்கள். எ - று.

மீண்டவர்கள் - வினையாலணையும் பெயர்;

மலர்பலவு மள்ளர்கள் புகழ்வகுத்தணிந்துமீண்டவர்கள்**பகைசவட்டி*** அணிந்த புண்ணியரே போன்றனர் - என முடித்துக்கொள்க (௧௧௭)

சீரறிவா றையுமுடைய தேவர்முத லனைவோர்க்கும்
வாரறிபூண் முலைமாதர் மகிழ்செய்வ ததிசயமோ
வோரறிவா கியபயிரு முழத்தியர்கைத் தலந்தோயப்
பாரறிய மிகத்தெளிந்து பரந்தெழுந்து வளர்வனவால்.

(இ - ள்) கச்சினைத்தரித்த ஆபரணமணிந்த முலைகளையுடைய மாதர்கள் சீர்த்திபொருந்திய ஆறறிவினையுமுடைய தேவர்முதலிய வெல்லார்க்கும் மகிழ்ச்சியை யுண்டுசெய்வது ஆச்சரியமோ. ஆற்றுக்காலாட்டியரது கைத்தலம்படிய, ஓரறிவினையுடைய பயிர்களும், உலகினரறியும்படி மிகச்செழித்துப் பரவியெழுந்து வளர்கின்றன. (ஆதலின் ஆச்சரிய மன்று) எ - று.

ஆறறிவுயிர் தேவர் (மாந்தர்) முதலியோரென்பதையும், ஓரறிவுயிர் பயிர் முதலியன வென்பதையும்,

ஆசிரியர் தொல்காப்பியனார்

(சூத்திரம்) "ஒன்றறி வதுவே யுற்றறி வதுவே
இரண்டறி வதுவே யதனொடு நாவே
மூன்றறி வதுவே யவற்றொடு மூக்கே
நான்கறி வதுவே யவற்றொடு கண்ணே
ஐந்தறி வதுவே யவற்றொடு செவியே
ஆறறி வதுவே யவற்றொடு மனமெ
நேரிதி னுணர்ந்தோர் நெறிப்படுத் தனரே"—எனவும்,

"புல்லு மரனு மோரறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே,
நந்து முரளு மீரறி வெனப
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே,
சிதலு மெறும்பு மூவறி வெனப
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே,
நண்டுந் தும்பியு நான்கறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே
மாவு மபுள்ளு மையறி வினவே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே
மக்க டாமே யாறறி வுயிரே
பிறவு முளவே யக்கிளைப் பிறப்பே"—எனவுங் கூறியதனாலுணர்க.

அரவமலி நறுநதெண்ணீ ரருந்தின முறப்பாயத்திப
புரவுபுரி தரவுழவர் புரையறவோங் கியபயிரின
விரவுமடல கிழித்தெழுந்து வெண்கதிர்கள் வளர்தோற்ற
மரகதப்பா றையினமுளைத்து வளர்வயிரக் கொழுந்தனைய.

(இ-ள்) உழவுத்தொழில் செய்வோர் ஒசைமிக்க நலந்தெளிவாகிய நீரை நீங்காது நாடோறும் பொருந்தப் பாய்ச்சிக்காத்தல் செய்யக் குற்றமற வுயர்ந்த பயிரினது நெருங்கிய மடலினைக் கிழித்தெழுந்து வெள்ளிய கதிர்கள் வளர்கின்ற தோற்றமானது மரகதப்பாறையினின்று முளைத்து வளர்கின்ற வயிரக்கொழுந்தினை யொத்திருந்தன எ-று.

பயிரை மரகதப் பாறையாகவும், கதிரை வயிரக்கொழுந்தாகவும் உவமித்துக் கூறினர். (௧௧௧)

தயங்கியதன னிறங்காட்டித் தனக்கதிப னெனத்தனுள
வயங்குமரி நிறமபின்னர் மருவுபயிர்க் கருளசுரந்து
பயங்கதுவு மமுதுறுத்திப் பணிக்கதிரோன் றினமவளர்ப்ப
வியங்கியவெண் கதிர்முதற்போ லெழுந்துபசந் தனபெரிதும.

(இ-ள்) தண்ணிய கிரணங்களையுடைய சந்திரன் பொருந்தும் பயிருக்கு விளங்கிய தனது (வெள்ளிய) நிறத்தைக்காட்டி, தனக்குத் தலைவனென்று சொல்லும்படி தனக்குள்ளே விளங்கும் விஷ்ணுமூர்த்தியின் (பசுமை) நிறத்தைப் பின்னர் அருளமிகுந்து, உருசிவாய்ந்த அமுதத்தையுறுவித்து நாடோறும் வளர்க்க, பிரகாசிக்கின்ற வெள்ளிய(நெற்)கதிர்கள் முதற்பொருளாகிய பயிரைப்போல வெளுத்தெழுந்து (பின்னர் அப்பயிர் பசுமையுற்றாற்போல) மிகுதியும் பசப்புற்றன எ-று

பயிர்கள் சந்திரனால் வளர்க்கப்படுகின்றனவென்பது கருத்து. இதுபற்றியே பயிருக்குச் சசியமென்றும் பெயர் (சசி - சந்திரன்.)

சந்திரனிடத்து விட்டுணு விளங்குதலை,

"தேரேறிவரும்பரிதிமண்டிலத்தனுஞ்செழுமதிமண்டிலத்தனுஞ்சீர்கொண்
டேரேறிவருங்கனன்மண்டிலத்துஞ்சத்திமண்டிலத்துமெண்கணனு
நீரேறிவருமரியுமுருத்திரனுமகேசசுரனுநிலவச்செய்து
நாரேறிவருமவர்தமுளத்தமரெண்குணத்தானைநயந்துவாழ்வாம்" — என இந்நூலில் வருவதனானுணர்க. (௧௨0)

விண்ணிவந்து மதிக்கடவுள் விளங்குகதிர்க் கரத்தணைப்ப
வுண்ணெகிழ்ந்து கருத்தரித்துட் டுருப்பசந்த கதிர்ச்சாலி
பெண்ணினினந் தமைத்தாங்கும் பெற்றியினார் தாயரென
மண்ணறலென் றிரண்டினையு மன்றவெதிர் நோக்கினவே.

(இ - ள்.) சந்திரபகவான் ஆகாயத்திலுயர்ந்து, பிரகாசிக்கின்ற (தனது) கிரணங்களாகிய கைகளாலணைப்ப, உண்ணெகிழ்ந்து கருத்தரித்து உருவம் பசுமையுற்ற, கதிர்களையுடைய நெற்பயிர், மாதர்க்கூட்டம் (தாம் கருவுயிர்க்கையில்) தம்மைத் தாங்குகின்ற தன்மையையுடையவர்கள் தாய்மார்களே யென்று(அவர்களை) நோக்குமாறு, பூமியும் சலமும் என்று சொல்லப்படும் இரண்டினையும்(நிலைபெற)எதிர்நோக்கிநிலைபெற்று நின்றன. எ - று.

உண்ணெகிழ்ந்து என்பதில், உள - கருத்தரித்தற்குரிய உள்ளிடம், மனம் எனக்கொள்க. (௧௨௧)

மகளிரிடை யொவ்வொருத்தி வந்தியென நிற்பதுபோற்
றகவுறுமா சிரியனரு டாங்குமுப தேசத்தி
னிகவிலரு ளொவ்வொருத்த னிழுதையென நிற்பதுபோ
லுகலரும்பல் செயலொழிந்து மொரோரொன்று பதரான.

(இ - ள்.) மாதர்களில் ஒவ்வொருத்தி மலடி யென்று சொல்லும்படி நிற்றல் போலவும், மாட்சிபொருந்திய ஆசிரியனது அருளமைந்த உபதேசத்தின் நீக்கமில்லாதவர்களில் ஒவ்வொருத்தன் கீழ்மகனென்ன நிற்றல்போலவும், (கதிர்களுள்) கெடுதலற்ற பல செயல்களொழிந்துநின்றும் சில பதர்களாயின எ - று.

ஒவ்வொன்று என்பது சிறப்புத்தொகையை யுணர்த்தலின், சிலவென்றும்.

சாத்துவித நிறமுன்னாய்த் தாமதத்தி னிறம்பின்னா
யேத்துமவகை யிருந்தபடி யெதிர்நோக்கி யிராசதந்தா
னீத்தலரு நிறஞ்சால நிரம்பியது போற்கதிர்கள்
காத்திடுநீர்ப் பணைதொறுங் கதிர்த்துமிகச் சிவந்தனவே.

(இ - ள்.) சாத்துவித நிறம் முன்னேவாய்ந்து, தாமதத்தின் நிறம் பின்னேயாகிப் பொருந்தியவகை யிருந்ததன்மையை இராசதமானது எதிரேபார்த்து, (தானும் வந்து கலந்து) நீக்குதற்கரிய (தனது) நிறத்தை நிரப்பியதுபோல, (நெற்) கதிர்கள் சிறைகோலிய நீரையுடைய வயல்களிலெல்லாம் ஒளிவிட்டு மிகுதியுஞ்சிவந்தன. எ-று.

சாத்துவிதம் - வெண்மையும், தாமதம் - கருமையும், இராசதம்-செம்மையுமாமென்பர். (௧௨௩)

மண்புனல்கால வெளிபரிதி மதிமன்ன ரெனவீசாக்
கொண்படிவ மெனுந்தானு மோமபவழல் குளிர்ந்தடுத்த
பணமெனவு முதிர்விளைவின பசையீரம வாங்கவுறு
நண்மெனவும வயனமீட்டு நளினமொடாம பலுமலாந்த.

(இ - ள்) மண - சலம் - வாயு - ஆகாயம - சூரியன - சந்திரன் - ஆன்மா, (ஆதியவறறைப்) போல, சிவபெருமானுககு ஒளளிய வடிவமென்னுந் தானும காக்குமபடி, அககினியானது குளிர்சசியுறறு அடுத்ததனமைபோலவும, முறறிய விளைச்சலின ஈரத்தைப்போககவந்த நட்பாளனபோலவும, வயலகளில திருமபவுந தாமரையுடன் ஆமபலமலர்களும பூததன எ - று

தான் - அக்கினி பசை ஈரம - இருபெயரொட்டு காம்பரி - காமவேளென்பனபோல.

சிவபெருமான் மள்ளராகவநதது.

ஸ்ரீசுந்தரமூர்த்திநாயனார் சிவபெருமானால் தடுத்தாட்கொள்ளப்பட்டுப் பல தலங்களிலுஞ் சென்று அநேக அற்புதங்களைச் செய்துகொண்டு மேலைச்சிதமபரமாகிய பேரூரை யடைகையில, சிவபெருமான தமது தோழருககோர் திருவிளையாடல் செய்யத் திருவுளளங்கொண்டு, உயர்திணைப்பொருளும, அஃறிணைப்பொருளுந் தாமேயென்று வேதங்கள எடுத்தோதுதறகேறப, முனபு வேதியராய்த் தமமைக் காட்டிப் பயனைககொடுத்தருளினறபோல இழிந்ததுங் காட்டத் திருவுளங்கொண்டு, பளளனாகி, திருவிளையாட்டினால, வயலிற சென்றனர். உமாதேவியாரும பளளியாகி, கழனியிலே தொழில செய்யத்தொடங்கினர். விநாயககடவுளும, முருககடவுளும் பளளச்சிறாராய, வயலினகண விளையாடினர் அரிபிரமேந்திராதி தேவர்கள நுகமும், கலப்பையும, மேழியும, கொழுவும, வாரும, கயிறும, கோலும், கடாவும், விதைதும், நாறும், ஆகிய எல்லாமாகி, வந்தார்கள சிவகணநாதர்கள ஏவல்செய்கின்ற பள்ளர்களாய், சிவபிரானுகிய பட்டிபபளளர ஏவலவழி உழுகினறவரும, நீர்பாய்ச்சுகின்றவரும, வரப்பின அருகு சீககினறவரும, பரமபடிககினறவரும, நாறறு நடுகினறவரும, விதைக்கினறவரும ஆனார்கள இலககுமி, சரசுவதி, இந்திராணி முதலாயினோர பளளிகளாய், உமாதேவியாகிய பசசைபபளளியோடு நாறறு நடடார்கள. இங்ஙனம் இவர்கள் கழனியிலே, தொழில செய்துகொணடிருந்தபோது, ஆலயத்திற சென்ற சுந்தரமூர்த்தி நாயனார் சிவபிரானை அங்கே, தரிசிககப்பெறாமல இடபதேவரை வினவினர். அதற்கு இடபதேவர வனறொண்டனுககு ஒன்றுஞ் சொல்லவேண்டாமென்று சிவபிரான் ஆஞ்ஞாபித்தபடியால, கண்ணினறு காட்ட, அககுறிப்பினவழியே நாயனர் வயலிடத்தே, ஆராய்ந்துவந்து, சுவாமியையும, அமமையையுங் கண்டு வணங்கினர். நாயனாரோடு சிவபெருமான கரையேறி, காஞ்சிநதியில, ஸ்நானஞ்செய்து, ஆலயத்தை அடைந்து, இடபதேவர் முகத்தை மணடோடு கருவியாற சேதிக்க, அதற்கு இடபதேவர் அஞ்சி, வணங்கிக் கொம்பினாலே ஒரு தீர்த்தம் அகழ்ந்து, சிவலிங்கந் தாபித்துப் பூசித்து, குற்றத்தினினறு நீங்கினர். பினனர்ச் சிவபிரான வெள்ளியமபலத்திலே, திருநடனஞ் செய்தார்.—என்பது சரிதம இதனை,

பேரூர்ப்புராணம் பள்ளுப்படலம்.

"அராவணிசடிலப்பள்ளனார்தோழரகககவந்தமையறியார்போற்
பராமுகத்தினராய்பபள்ளிகளபளளர்தமமொடுமபயினறிருந்தொழிலி
னுராவுநீர்ப்பணையினுழிதரநோககியுறபபணிந்தெழுந்துதோழமையால்
விராவியவன்பாமகிழ்ச்சிமீக்கிளைப்பவியப்பொடுமசதியாடுவரால்.

மறையவனரசனசெட்டிதன்முதைவயங்குநாறகுததிரன்புவனம
பறைதருநலலசஙகரனவேடனபணிசிவனவிளங்குமுககணகக
னறைசெயமபட்டனகமதுபுறத்தேகாலியாட்டரவமாரிடையன
பறையனுமுன்னரானாீயினறுபளளனுனமைதெரிநதேனயான.''— என்பதனுணர்க. (கஉ௪)

முறுகவிளைந் தவனியிசை முடிசாய்த்துக கிடககினற
மறுவிலவிளை விளைநோககி வயலவினைஞா மகிழவெய்திக்
குறுகினாதண் ணுமையியமபக குயமேந்தித் தலைகுனிநதா
ருறுபலஙகொள் ளுநாவணக்க மோமபுவது மரிதேயோ.

(இ - ள்) வயலிற செழிலபுரியும பளளாகள முதிர விளைவெய்திப் பூமியின்மேல் தலைசாய்ததுககிடக்கினற, குறறமிலலாத பயிரைபபாாததுப, களிபபடைந்து முழவொலிகக அரிவாள் தாஙகிசசெனறு தலைகுனிநதாாகள பொருநதிய பலனைப பெறுவோா பணிதல செய்தலும அருமையோ? எ - று

"உறுபலஙு* * *அரிதேயோ" எனறது கவிககூற்று குறுகினர்-முறறெச்சம்

எலலாாககும பயனபடுவா ரெனசெயினும பொறுபபரெனு
நலலாாக ளுரைபபொருளை நாட்டியது கதிாசசெநநெ
லெலலாரின வளாததவரே யொறுததுவரிந தெடுததேகி
வெலலாத களத்திட்டு மிதிததிருமபோா செயபபட்டே.

(இ - ள) கதிர்களையுடைய செநநெறபயிரானது (தமமை) வளாததவர்களே சததுருககளபோலறுததுக கட்டிககொணடு சென்று, களததிலிட்டு மிதித்துப் போா செயபபட்டு, யாவாககும பிரயோசனபபடுபவா (தமமைப பிறா) யாதுசெயயினும் பொறுபபாாகளெனறு, நலலவாகள கூறிய சொறபொருளை நிலைநிறுததியது எ - று.

வெலலாத களம - நெறகளமெனக (கஉ௫)

கையினறப பிடித்தடித்துங கடாவடியிற படுத்திட்டும
வைவெலாந தணபிததது மருவுபதா நவைநீககிச
செயயெலா மிககருவிககுருந செநநெலவள நோககுதறகே
மெயயெலாம விழிபடைததான விணணவரு மிநதிரனே.

(இ - ள) கையினுற பற்றியடிததும், கடாககளின் காலகளிற படுத்தியும, வைக்கோலகளையெலலாம பிரிப்பிததும, பொருநதிய பதராகிய குறறததை விலக்கி, வயலமுழுதும மிகுதியாகக குவிககினற செநநெலின வளபபததைப பாாபபதறகாகவே, அமரிலதெயவதமாகிய இநதிரன உடன்முழுதும் விழிகள பெற்றனன. எ - று

தென்புலததாா தேவாவிருந தினாசோசுற றமுநதாமென
றைமபுலததா றினிதோமப வைஙகூறு கொணடுழவ
ரினபுறநா னிலமபுரககு மேநதலுககோா பகுபபாககித
தமபகுபபால விழைநதேனைத தருமமுஞசெய வாாதினமும்.

(இ - ள்) பிதிரரும தேவரும அதிதியரும பொருந்திய உறவினருந் தாமுமென்று ஐம்புலததுஞ செலவும அறநெறியை இனிதாகக் காககுமபடி ஐநது பஙகுகளை யெடுததுககொணடு, இனபமுணடாம்படி பூமியைக காககின்ற மன்னவனுககோாபஙகு செயது (கொடுதது), தமமுடைய பஙகைககொணடு ஆசையுறறுப் பிற தருமஙகளையும நாடோறுஞ் செயவாாகள மளளாகள். எ - று.

"ஐம்புலத்தாறினிதோம்பல்" என்றதை, திருக்குறள் "தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் ருனென்றாங் - கைம்புலத்தா றோம்ப றலை" என்னும்வெண்பாவானுணர்க. "தென்புலத்தார் - பிதிரர். இவர் படைப்புக்காலத்து அயனாற் படைக்கப்பட்டதோர் கடவுட்சாதியர் அவர்க்கிடம் தென்றிசையாதலின் றென்புலத்தாரெனப்பட்டனர் விருந்து - புதியராய்வந்தோர். அவர் இருவகையினர் பண்டறிவுண்மையிற் குறித்துவந்தாரும், அஃதின்மையிற் குறியாது வந்தாருமென எல்லா அறங்களும் தானுறனாய் நின்று செய்யவேண்டுதலின் தன்னை யோம்பலும் அறனாயிற்று." என்றார் பரிமேலழகர்.

தென்புலத்தார் முதலியோர் பங்கினை அவ்வவர்க்களித்துத் தம் பங்கில் எஞ்சியதுகொண்டு பிறதருமங்களையுஞ் செய்வாரகளென்பார் "தமபகுப்பால விழைந்தேனைத் தருமமுஞ் செய்வார்" என்றார். (கஉ௮)

தொறுவியர்மத்த தானமொத்தித் தூணத்தி னுறப்பிணித்த
மறுவுடையா னென்மாலை வணங்கார்தா ரெவர்களம்மா
தெறுவினையிற் பட்டதெனச் செங்கெலொழிப் பாரிலலை
யுறுவார்முத வியவுலக முவந்தளிக்கும் காரணத்தால்.

(இ - ள்) (உலகிற்குக் காப்புக்கடவுளாதலின்) திருமாலை, ஆயச்சியர் மத்தாலடித்துத் தூணினிடத்துப் பொருந்தக்கட்டிய குற்றமுடையவரென்றுபணியாதவர்கள் எவர்? (ஒருவருமிலர். அதுபோல) முனிவருலகமுதலிய வுலகங்களைக் களித்துக் காக்குங்காரணத்தினால், செங்கெலலை (உழவரது) தெறுவினையாற்பட்டதென்று நீக்குபவர் ஒருவருமிலர். எ - று

தெறுவினை - கடாவான் மிதித்தல் முதலியன

திருமால் கிருஷ்ணாவதாரத்தில் ஆயர்வீடுகளில் உறியிற்சேமித்த வெண்ணெயைக் களவாடி விளையாடுகையில் ஆயச்சியர் முறையிட்டதாற்றாது, அசோதைப்பிராட்டியார் கயிற்றால் யாத்தனரென்பதும், ஆயச்சியர் மத்தாலடித்தன ரென்பதும் சரிதங்கள் (கஉ௯)

கன்னன்றுஞ் செழுமபாகுங் காய்கனிபா றயிரிழுதுஞ்
செங்கெலமு தொடுமினைந்து செழிவாசப் பாகடைதுய்த்
துன்னலருங் களிப்பெய்தி யுமபர்களு நறுமுறுப்ப
நன்னலத்தின வாழ்குநரே நகர்தோறு மூர்தோறும

(இ - ள்) சாக்கனையும், வாசனையுடைய செழியபாகும், காயும், கனியும், பாலும், தயிரும், நெய்யும(கூட்டி)செங்கெல்லாலாகிய அன்னத்தோடும் புசித்து, மிக்க வாசனையுடைய பாக்கு வெற்றிலை [தாமபூலம] தின்று, அடைதற்கரிய சந்தோஷத்தை யடைந்து, தேவர்களும முறுமுறுக்கும்படி நல்ல சிறப்போடும் வாழ்பவர்களே நகரங்கடோறும் ஊர்கடோறும் (உள்ளார்கள்) எ - று.

நறுமுறுத்தல - முறுமுறுத்தல (க௩0)

வேள்விபுரி சடங்குகளும வியத்தகுமங் கலவினையு
நாள்விழவு மதிவிழவு நலத்தகுமாண டினவிழவு
மாளவினையா டவர்களி ரருந்துனிதீர்த் துறவாக்கும்
தாள்வினையு மறுவெனவே தயங்கியதன் னடைதோறும்.

(இ - ள்) யாகஞ்செய்யுஞ் சடங்குகளும், களிக்கத்தக்க விவாககாரியங்களும், திருவோற்சவமும் மாசோற்சவமும் நன்மைவாய்ந்த வருடோற்சவமும, தொழில்புரியும் பள்ளர்களும் பள்ளிகளுமாகியவர்களது அரிய துன்பத்தை யொழித்து உறவாக்குகின்ற தாளாண்மையும நீங்காவென்று சொல்லும்படி மருதநிலத்தூர்கடோறும விளங்கின. எ - று. (௬௬௧)

உண்ணுவது மருநதொருநா ளுடுபபதுவுந் தருவினதே
நண்ணுவது மநதரமே நலகுவதும வாய்மொழியாம
பண்ணவரவைப் பிணிப்புரநதும பயனபெரிதின் மையைகருதித்தே
மண்ணகருக கடரனென வானவாகோ னமாநததுவே.

(இ - ள்) (சந்திரன் பூரணகலைபொருந்திய) ஒருநாளில், புசிப்பதுவும் [அமுதம்] ...நது, தரிப்பதுவும் [கற்பகததருவாற்றருவதே] மரவுரியே தங்குவதும் [ஆகாயமே] ஆதரவு...விடமே. கொடுப்பதுவும [இந்திராயநமஃ என்னுஞ் சொலலே] வாயளவாகியமொழியேயாம. (ஆதலின்) தேவலோகததைககாத்தும மிக்கபிரயோசன மிலலாமையை நினைததே இந்திரன நிலவுலகிலுள்ள ...ருககுத ... மென்று பொருந்தியதாகும். எ - று. (௬௬௨)

போகமிகு விண்ணுலகம் புரபபவனே தெயவதமாய்
மேகமிகு புனலவழங்க விருபபிறுங காககினற
பூகமலி வயலவளமும புகனமொழியி னளவைததோ
நாகமலி பொழினெய்த னலநதெரிநத வாறுரைபபாம.

(இ - ள்.) போகஙகள மிகுநத தேவலோகததைக காககும இந்திரனே தெய்வதமாகி, மேகமானது மிக்கநீரைககொடுக்குமபடி, ஆசையோடுகாவலபுரிகினற கமுக மரங்கள் மிகுநத மருதநிலததின் வளப்பமும சொலலுகினற சொலலளவையுடையதோ? (அன்று) புனனை மரஙகள் மிகுநத சோலையையுடைய நெயதனிலததின மேம பாட்டையுணர்நதபடி (இனி) கூறுவாம. எ - று.

வயல வளமு மென்றதில, உமமை - உயாவு சிறப்புப்பொருளது.
அளவைததோ என்றதில், ஓகாரம் - வினாவொடெதிர்மறையுமாம. (௬௬௩)

நெயதல்.

வேறு.

இருமபுனற கதிபதி யெனனும வானவன
சுருமபுளா நெயதலவாழ் கழிக டோறறிய
பெருமபுனற கடனிலம பேணத தககதென
றருமபிய விருபபினுங கமாதன மேயினன.

(இ - ள்) மிக்க நீருககிறைவனென்று சொலலபபடும வருணதேவன், வண்டுகள் கிண்டுகின்ற நெயதன மலாகள பெருநதிய கழிகள விளஙகிய பெரியபுனலாகிய கடலையுடைய நெயதனிலம காககததககதென்று தோன்றிய ஆசையுடன் அவ்விடததிற பொருநதினன. எ - று.

வருணன நெயதன் மலாவேட்கையனாதலின் அதனைக காகக விருமபினானென்றா சுருமபுளா - சினைககேற்ற அடை (௬௬௪)

குமபமா முனியுணுங் கொளகைத் தாயது
பமபுமா நதிபல படியுங தாயதென

றம்புரா சியினமருங் கடுத்து வாழுமால்
கொம்பனு ளுமையவளா கோதில சாதியே.

(இ - ள்) பூங்கொம்பை யொத்தவராகிய உமாதேவியார் உதித்த குற்றமில லாதபரதசாதி, பெருமை பொருந்திய அகத்தியமுனிவா பருகுந தனமையுடையதா யுளளது. நெருஙகிய பெரிய பலநதிகள படியும புனிதமானது எனறு சமுத்திரத்தின் பக்கலிற் சேர்ந்து வாழாநிறகும். எ - று.

கும்பமுனி - அகததியா - இவர் கும்பத்தினின்றுந் தோனறினவராதலின் அப்பெயரெய்தினர் இநதிரன தனனைப் பகைத்தொளித்த விருத்திரனைக் கொலலக் கருதி அகத்தியமுனிவரை வேண்ட அவா அதனை ஆசமனீயஞ் செய்தனா எனபது சரிதமாதலின் "அமபுராசி கும்பமாமுனியுணுங கொள்கைத்து" எனக்கூறபபட்டது. இதனை,

திருவிளையாடற்புராணம்.

"கைதவன் கரந்து வைகுங கடலைவெற படக்குங கையிற்
பெய்துழுந் தெலலைத தாககிப பருகினன் பிறைசேர் சென்னி
யையன தருளைப பெற்றாக கதிசய மிதெனகொன மூனறு
வையமுந தொழிலுஞ் செய்ய வலலவ ரிவரே யனறே"—என்பதனானறிக.

வருணனுக கூர்தியா மகர மீனுநத
மொருகுல மென்றவ னுறையும் வைப்பெலாஞ்
செருவலி திமிஙகில கிலநதி மிஙகிலம
பொருமக ரமபல மீனும புலனுமே.

(இ - ள்) வருணதேவனுககு வாகனமாகிய சுறாமீனுந் தமது ஒபபற்றகுல மென்று, அவன வசிககுமிடமெலலாம [கடல்முழுதும்] போாசெய்கினற வலியுடைய திமிஙகிலகிலம, திமிஙகிலம, போா புரியும மகரம (முதலிய) பலவகை மீனகளும, பொருநதும. எ - று.

திமிஙகிலகிலம - திமிஙகிலம் என்பன மச்சவிசேடஙகளாம. (கசு௬)

பிணககுவைப படுமபெரு மனனா போரிடை
நிணககுவை யுணணவு நீலக கணணிஞ
ருணககுறு மீனெளி துணவு மோஙகுமைங்
குணககருங் கொடியினங குழுமி வாழுமே.

(இ - ள்) பிணக்குவியலபடுகினற பெருமைவாய்ந்த அரசாகளது யுத்தகளத்தில், கொழுப்பின் குவியலைப்புசிககவும, நெய்தன மலரை யொதத கணணையுடைய பரததியா உலாததுகின்ற மீனை எளிதாகததினனவும, உயாவாகிய ஐநது குணஙகளை யுடைய கரிய காககைககூட்டஙகள கூடி (அநநிலததில்) வாழாநிறகும எ - று.

காக்கையின் ஐங்குணங்கள்—மறைநத புணாசசிததாதலும், கலங்காமை யும், பொழுதிறவாதிடம புகுதலும, நெடுககாண்டலும், மடியின்மையும—எனறார் **பேராசிரியர், திருக்கோவையாருள்**. அனறியும,

"காலை யெழுதல் காணும லின்புறுதல்
மாலை குளித்து மனைபுகுதல - எலவே
உறறாரோ டுண்ணலுறஙக லிவையைந்துங்
கறறாய்வாய காககை குணம."—எனக கூறுவதுமுணடு. (கசு௭)

பரததிய ருறுப்பினைப பயநதொ ளித்தமீ
னரத்தவித துருமமுத் தனைததும பேணியு
முரததினை யுளததுறுப் பயததி னேதமும
வரததினை யுறுரென மறுகு மெங்குமே.

(இ - ள்) நெய்தனிலமாதர்களது அவயவஙகளுக்கு அச்சமுற்று ஒளித்துக் கொண்ட மீன் செநநிறததபவளம் முததது முதலியவறறையும(தனனிடததிற்) கொண் டிருந்தும்; மனதில வன்மையடைந்திராத பயததினை யுடைமையால, சமுததிரமும் வரத்தினையடையார்போல எஙகுஞ்சுழலும. எ - று.

பயத்தின எனபதில, பயம் - நீா; அசசம என்றும், வரததினை என்பதில் வரம் - சிரேஷ்டம, வரபபிரசாதம எனறும பொருள கொளக.

மீன் அவர்கண்ணுககும,விததுருமம இதழுககும,முததுபலலுககும்முறையே அஞ்சினவெனக்கொள்க. (கஙஅ)

உருநல மிலாதவ ருதவு நனபொரு
ளொருவுந ரிலையுவா நாறறக காரககடன்
மருவுறு தீாததமாய் வானும பறபல
பொருளகளும யாவரும போறற நலகுமே

(இ - ள.) உருநலமிலலாதவாகள கொடுதத நறபொருள்களை விலககுவார் (ஒருவரும) இலா (அதுபோல) உவா நாறறததினையுடைய கரியகடலானது பொருந திய தீர்ததமாகி, தேவாகளும (மாநுடாமுதலிய மறறையோா) எலலாரும (தனனைத்) துதிக்க, பறபலபொருளகளையுங கொடுககும எ -று.

உருநலமிலாதவா - குரூபிகள். வான் - ஆகாயம்,ஈணடு இடவாகுபெயராய்த தேவரை யுணாததி நின்றது (கஙக)

அடுததிடப படடவா பெரிய ராயினு
மடுததவா சிலாகுண மவாகு ணததியன
மடுககுமோ வளாகழி மலாநத நெயதலகள
விடுததில நறுமணம வீசுங காதமே

(இ - ள) அடுததிடப்பட்டவாகள் மேலோராயிருநதாலும், அடுத்தவாகளிற் சிலரது குணமானது, அவவடுததிடபபட்டவரது குணததின றனமையைக கொளளு மோ? (கொளளாது, அதுபோல) பெருகுகினற கழிநீரிற் புட்பிதத நெயதற பூககள (மணமவீசுந தமதியறகைககுணததை) விடாதனவாகி, நனமணததைக் காத்தூரம் வீசாநிறகும். எ - று.

அடுத்திடபபட்டவர் கழியும, அடுததவா நெய்தலுமென்க கழியின் மலாந்த நெய்தல அதன் புலான் மணததையேறகாது தன மணததை வீசியதெனபது கருதது.

"நெய்தலகள விடுததில நறுமணம் வீசுங்காதம" என்பதை, "நெயதல்கள் காதம்வீசும நறுமணம விடுததில" எனறனவயஙகொளினுமமையும. (கசo)

சேரியின் புறமெலாந தீய நாற்றமே
யாரினும புனனையு மலர்நத கைதையும
வேரியின ஞாழலும வீசு மாமண
மூரியம புரததினின றுயநத மூவாபோல.

(இ - ள்) பரதவர் சேரியின் பக்கலில்லெல்லாந் துன்மணமே பொருந்தினும், புன்னையும், பூத்த தாழையும், தேனையுடைய ஞாழலும், வலிய முப்புரத்தினின்றும் பிழைத்த (தாரகாக்கன் - கமலக்கன் - வித்யுன்மாலியென்னு) மூவரையொத்துத் (துன்மணத்தினின்று நீங்கிச்) சிறந்த மணத்தை வீசாநிற்கும். எ - று. (கசக)

வலையினுன் மீன்பல வாருஞ் செய்கையா
ருலைவிலா மணிபல குளித்து வாழ்வாக
ளுலைவிலா தொற்றினு லொற்றி நுண்பொருண்
மலைவிலா வொற்றுமா யொற்று மன்னர்போல.

(இ - ள்.) கெடுதலில்லாத ஒற்றர்களாலாராய்ந்து, நுட்பமாகிய பொருள்களை (தாமே) மயக்கமில்லாத ஒற்றனுமாகி யாராய்கின்ற அரசனைப்போல, பல மீன்களை வலையினால் வாருகின்ற செய்கையுடைய பரதர்கள் (சீர்) குலைதலில்லாத பலமுத்துக்களை (தாமே) மூழ்கி (எடுத்து) வாழ்வார்கள் எ - று.

மன்னர் ஒற்றராற் பயனடைதல்போலப் பரதர்வலையால் மீனையடைந்தும், அவர்தாமே சிறைப்புறத்தோர்துமெனப் பொறற்கேடுணையாத தெரிந்து பயனடைவார் போலத்தாமேகுளித்து மணிகளையெடுத்தும வாழ்வரெனக்கொள்க. (கசஉ)

விழியினுற் பரத்தியர் வெல்லப் பட்டதோர்
செழிகட றிரைக்கையாற் றிறைக ளாகவே
பொழிகதிர் மணிகளும் புலவு மீன்களுங்
கழியவர் சேரிமுன் கலந்து வீசுமே.

(இ - ள.) பரத்தியரது கண்களால் வெல்லப்பட்டதாகிய ஒரு செழிய கடலானது (தனது) அலையாகிய கரத்தினால், கிரணஞ்சொரியும் முத்துக்களையும் புலானமணமுடைய மீன்களையுங் கலந்து கப்பணங்களாக, பரதவர் சேரியின் முன்னே வீசாநிற்கும். எ - று

தோற்றவர் வென்றவருக்குத் திறைகொடுத்தல் முறையாதலின் பரத்தியர் விழிக்குத் தோற்றகடல் அவர்கட்கு மணிமுதலியவற்றைத் திறையாக வீசுமென்றார்.
கலந்து எனபது விண்டு என்றாற்போற் பொதுவினை. (கசந)

அளவர்க ளுப்பமைத் தளக்கு மோதையு
நுளையர்கள் கலன்கட னூக்கு மோதையும்
வளைமணி மீன்விலை மதிக்கு மோதையுங்
களமலி கடலெதிர் கடல்கள் போன்றவே.

(இ - ள்.) பரதர்கள் உப்புப்பயிரிட்டு அளக்கின்ற ஓசையும், நுளையர்கள் மரக்கலங்களைக் கடலிற் செலுத்துமோசையும, சங்கு-முத்து - மீன (முதலியவற்றை) விலைசெய்யும் ஓசையும், கருமைமிகுந்த கடலை எதிர்க்கின்ற (பல) கடல்கள்போன்று விளங்கின. எ - று

கடல் - கடலொலியென்க அளவர்கள் - நுளையர்கள் என்பன நெய்தனிலமாக்களை. (கசச)

சுரங்கடந் தவர்தமைத் துன்னு றுமையா
லிரங்குறு மாதரோ டிரங்கி வெள்ளவளை
தரங்கமென் கரங்களிற் றள்ளி வேலையு
மரங்கிளர் கரைவரு மறிந்து போதுமே.

(இ - ள்) (பொருண் மேற்காதல் கொண்டு) பாலை நிலத்தைக்கடந்த காதலர் தம்மை (மீண்டும்) அடையாமையின் (பிரிவாற்றுமல்) துன்புறுகின்ற மாதர்களுடன்

கடலும் இரக்கமுற்று, வெள்ளியவலைகளை அலைகளாகிய கரங்களினின்றுந் தள்ளி, மரங்கள் செறிந்த கரையில் வராநிற்கும் மீண்டு செல்லாநிற்கும். எ - று.

அகப்பொருள்விளக்கம்.

"பரத்தையிற் பிரித லோதற்குப் படர்தல்-அருட்டகு காவ லொடு-தூதிற் ககறல்-உதவிக் கேக னிதியிற் கிகத்தலென் - றுரைபெறு கறபிற் பிரிவறு வகைத்தே."—என னுஞ் சூத்திரப்படி, கற்பின்கட்பிரிவு அறுவகைத்தென்க. (கசரு)

பற்பல தேயமும் படாந்து பல்கலத
தற்புதப பொருளெலா மடங்க வாரிவந
துற்பவத் திழிநரு மும்பா போகத்தி
னிறபவ ருயர்நதவா நீரமை யென்சொல்கேன்

(இ - ள்.) பலபல தேசங்களுக்குஞ்சென்று,பல மரக்கலஙகளில் அற்புதமாகிய பொருளகளையெல்லாம் மிகுதியாக வாரிவநது, பிறப்பினுல இழிநத பரதமாக்களும, தேவபோகததில் சிறபார்கள். (அந்நிலத்) தலைவாகளது தனமையை யாது சொல்லு வேன. எ - று. (கசசு)

அளக்கரை நீநதினு மளககா நலகிய
துளக்கமில் பொருளெலாஞ சொலலு வாரெவா
விளககின மைநதிணை விளமபு நாணிலத
துளப்படு மயககமுஞ சிலவு ரைத்துமால.

(இ - ள்.) சமுததிரத்தை நீந்தி (கரைகண்டா) ஞலும, சமுததிரமானது அளித்த கெடுதலில்லாத பொருள்களையெல்லாஞ் சொல்லவலலவர் யாவா? ஐநதிணை (வளங்) களையும் விரிததாம். சொலலுகினற பூமியில் ஒனறுகூடிய (திணை) மயக கங்களுஞ் சில சொல்லுவாம். எ - று. (கசஎ)

திணைமயக்கம்.

வே று.

வரகு போரிடை வளைவளா மநதிகள் பாய
விரவு மாதவி நிழலவளா வாரணம் வெருவி
யுரகம வாழ்மலை முழைமுயிடை யுறுமபயந துயிலைப்
புரவு பூணுவாா புகுதரு மிடமறி யாரபோல.

(இ - ள்.) குறிஞ்சியில் வளர்கினற குரஙகுகள் (முல்லை நிலததிலுள்ள) வரகு போரிற் பாய, நெருஙகிய (முல்லைநிலததிலுள்ள) குருககததியின நிழலில் வளாகின்ற கோழிகள் பயநது, பயமுற்று உயிரைக்காப்பவரில் செல்லததகக இடமறியாதவாபோ லப் பாம்புகள் வசிககின்ற மலைக்குகையிற் சேரும எ - று. (கசஅ)

காலை யாய்ச்சியர் தயிரகடை யோதையைக் கழனிச
சோலை வானரம வேங்கையின் குரலெனத துளஙகு
மாலை யோதையை மழையென வண்டாக டொழுவின்
மாலை யானிரை புகுத்துவா வழக்கமுண் மையினுல்.

(இ - ள்.) காலைப்பொழுதில் (முல்லைநிலததிலுள்ள) ஆயமாதர்கள் தயிர்கடை கின்ற வோசையை, மருதநிலத்திலுள்ள சோலையில் வாழும வானரமானது (குறிஞ்சி நிலததிலுளள)புலியின் குரலென்று நடுஙகும (மருததத்திலுள்ள) கரும்பாலையின ஓசை யை (கேட்ட முல்லைநிலததிலுள்ள) ஆயாகள் மழை (ஓசை) என்று கருதிததொழுவங

களில் வரிசையாகப் பசுமந்தையைப் புகுத்துவார்கள். (மழை பெய்கையில் பசுக்களைத் தொழுவத்திற் கட்டுமே) வழக்கம் உள்ளதாதலால் எ - று. (௧௨௯)

கோழி யோச்சிய வுழத்தியர் குழைபரத் தியர்க
ளாழி வேலையி னுணக்குமீன் பரப்பினை யழிக்கும்
வீழி வாய்ப்பரத் தியர்கொடி வீசிய வளைபோய்ப்
பாழி யூருழத் தியர்கணெற் பரப்பினை யழிக்கும்.

(இ - ள்.) (முல்லை நிலத்திலிருந்து வந்து மேய்கின்ற) கோழியை யோட்டிய (மருதநிலத்திலுள்ள) உழத்தியர்களது குண்டலமானது, சமுத்திரத்தையுடைய நெய்தனிலத்தில் நுளைச்சியர் உலர்த்துகின்ற மீன்பரப்பினைக் கலைக்கும். வீழிக்கனியையொத்த வாயையுடைய பரத்தியர்கள் (அந்நெய்தனிலத்திலுள்ள) காக்கத்தையோட்டிய வளையானதுசென்று, பெருமைவாய்ந்த மருதநிலத்தூரில் ஆற்றுக்காலாட்டியர் தொகுத்த நெற்குவியலையழிக்கும் எ - று.

பாழி - மருதநிலத்தூரெனினுமாம். குழை - தழையெனவுமாம். வாய்-ஆகுபெயராய் இதழை யுணர்த்தியது. வளை - வளையலுஞ் சங்கும் சங்குவளையலுமாம்.

ஊட்டு கன்றுறு வயிற்றினை நிரப்பியு மொழுகுங்
கோட்டி ருங்கவ யத்திளம் பாலுணக் குறிஞ்சி
மாட்ட னம்புகும் வரைவள ரூகமா லைகளி
னாட்டி ருங்கழைப் புனலுண வயலினை யடுக்கும்.

(இ - ள்.) ஊட்டுகின்ற கன்றினது வயிற்றை நிரம்பச்செய்து மொழுகுகின்ற கொம்பினையுடைய பெரிய காட்டுப்பசுவின் முதிராத பாலைப்பருகும்படி குறிஞ்சிநிலத்துக்கு (மருதநிலத்திலிருந்து) அன்னமானது செல்லும். குறிஞ்சிநிலத்தில் வளர்கின்ற கருங்குரங்குகள் ஆலைகளில் ஆட்டுகின்ற கருப்பிரசத்தைப்பருக மருதநிலத்தைச் சேரும். எ - று. (௧௩௧)

அருவி தூவும்வெண் ணித்தில மலைகடற் கரையின்
மருவும் வாரிகள் கடலெறி நித்தில மலையின்
பொருவில் சாரலிற் பொலிதரும் பூவையர் பிறந்த
திருவின் மாமனை யொழிந்தயற் சேர்ந்துவாழ் வதுபோல்.

(இ - ள்.) மங்கையர் பிறந்த செல்வமுடைய மனையைநீங்கி அயலார் மனையையடுத்து வாழ்வதுபோல, (குறிஞ்சிநிலத்திலுள்ள) அருவியாறுகள் சிந்துகின்ற வெள்ளிய முத்துக்கள் அலைகளையுடைய சமுத்திரக்கரையிற் பொருந்தும். சமுத்திரமானது அலைகளால் வீசுகின்ற முத்துக்கள் மலையினது ஒப்பில்லாதசாரலிற் பிரகாசிக்கும் எ-று.

கொல்லை மானினங் குழவியை யிடைச்சிறார் கொடுப்ப
மெல்லென் மீன்களை நுளைச்சிறார் விழைந்தெதிர் கொடுப்பார்
முல்லை நீண்முகை முல்லைவாழ் சிறுமியர் கொடுப்ப
நல்ல வார்நேர் நுளைச்சிறு மியர்கணல் குவரால்.

(இ - ள்.) முல்லைநிலத்திலுள்ள மான்களின் இளங்கன்றுகளை ஆயச்சிறுவர்கள் அளிக்க, பரதச்சிறுவர்கள் மெல்லிய மீன்களை ஆசையுற்று எதிராகக் கொடுப்பார்கள். முல்லைநிலத்திலுள்ள சிறுமியர்கள் நீண்ட முல்லையரும்பைக் கொடுக்க, பரதச்சிறுமியர்கள் நல்ல முத்துக்களைச் சமானமாகக் கொடுப்பார்கள் எ - று. (௧௩௩)

தொல்லை நாவல ரனைவருந் தொடுத்தெடுத் துரைத்து
மெல்லை காணரும் வளநிறை தொண்டைநாட் டியல்பின்

வல்ல வாசிறி துரைதநன மினிவகுத் துரைப்பாஞ்
செலவ நீடிய சென்னைமா நகாவளந தெரிந்தே.

(இ - ள்.) பழமையாகிய நாவின் வன்மையுடைய புலவாகள் யாவரும் பாக்க ளாக்கி யெடுத்துககூறியும, அளவுகாண்டற்கரிய வளங்களநிறைந்த தொண்டைநாட்டின் தன்மையுள கூடியவறாயிற சிலவறறைச சொனனேம. இனி, செலவமிகுநத பெருமை வாய்ந்த சென்னை நகரின் வளங்களை யுணர்ந்து சொலவாம எ - று.

இயல்பின மறறில், இன - எழனுருவு. புறனடையாற்கொள்க. (கடுஈ)

திருநாடடுப்படலம முறறிறறு.

ஆகந்திருவிருத்தம் - களசு

திருநகரப்படலம்.

திருத்தகு தொண்டை நாட்டிற் றேவாக ணுடடின மேலாம
விருத்திர னுயிரை மாட்டும விணணவ னகரு நாண
வுருததகு காஞசி மூதூ ரெலலையி னுளதா யுமபா
வருததமுந தவிாககுஞ சென்னை மாநகா சிறநதுவாழும.

(இ - ள்.) சிறப்புதஙகிய தொண்டைநாட்டில்தேவலோகததினும் மேலாகிய விருததிராசுர னுயிரைககொன்ற இநதிரனது அமராவதியு நாணமடையும்படி, அழ கமைநத பழமையாகிய காஞ்சிநகரததின எலலையினுளளதாய, தேவாகளது துயரத தையுமொழிககும பெருமைவாய்ந்த சென்னை நகரமானது சிறப்புற்று வாழாநிறகும.

விருததிரனுயிரைமாடடும விணணவனெனறது.

பூரவம் அமராவதியிற் கொலுககொணடிருநத இநதிரனது அவைககளததில், பிரகற்பதி முனிவா வர, இந்திரன தனதாசிரியருககு வநதன பூர்வமாக வழிபாடுசெய் யாது தையலாா மையலில் மாழ்கிககிடகக, அதுகணட தேவகுரு அஙகுநின்று மறைந தனா. அதனல் இநதிரனது செலவஙகுறைய, அவன தனது துயரைபபிரமனபாற்கூற, பிரமன் நீயுன குருவைககாணுமெலலையும, விசுவவுருவனென்னும் இததிரிசிரனைக குருவாகக் கொள்கவென, இநதிரன் அதறகியைநது தனது நகரிற்குக கூட்டிவந்து, தனது செலவமிகுமபடி ஓயாகஞசெயகவென, திரிசிரன அவ்வாறே யாகுகவெனக கூறி, மனமவேறுபட்டுத தேவா செலவஙகுறையவும அசுரா செலவம மிகவும யாகஞ் செயதனன. அதனை யவன செயயுஙகிரியையா லுணாநது அவனது முசசிரததையும வசசிரததாற் கொயது பிரமகததியடைநது, தேவர்களது தநதிரத்திறுல நிலம நீா மரம மாதாகட் களிததுப புனிதனுயினன தனமகனை இநதிரன கொனறதுணாநத துவட்டா ஓயாகஞசெயது அதிறமேறனறிய விருததிராசுரனை இநதிரன மீதேவ, இந் திரன அவனுடன போர்செய்து அவனை வெலலவலல ஆயுதமினமையின விணடுவி னுடன கூறி, அவா கூறியபடி ததீசிமுனிவரை யடைநது அவா முதுகநதண்டெனபிற சுராசுராகளது ஆயுதஙகள கூடியிருநதமையின அதனைபபெற்றுப் புதிய வசசிராயுத மாக விசுவகனமனுற் செயதுகொணடு விருததிரனை யெதிாகக, அவன் போாபுரிய ஆறறுதுகடலிலொளிக்க, அகததியமுனிவராற கடலை வறறசசெயது அவனைக்கொனறு புகைதீர்ததனனெனபது சரிதம். (க)

தம்பிரா னருளா லெனபைத தளிரியன மடநதை யாகரு
முமபாரூழ நகரு மேடடி னுறுவரி நெருககி யிட்ட

வெம்பிரா னகருந் தெற்கும் வடக்குமென் றிரண்டு பானு
நம்பிவாழ் தரவே நாப்ப ணயக்குமந் நகர மென்றும்.

(இ - ள்) சிவபெருமானது திருவருளால் (திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள்) எலும்பினை மாந்தளிர்போன்ற மேனியையுடைய பெண்ணாக்கிய தேவர்கள் சூழ்ந்த திருமயிலை நகரமும், எட்டிற் பொருந்திய வரியை நெருக்கியெழுதிய எமது எழுத்தறியும் பெருமானெழுந்தருளிய திருவொற்றிநகரமும் (முறையே) தெற்கும் வடக்குமென்று சொல்லும் இருபக்கலிலும் நம்பி வாழும்படி, அச்சென்னைமாநகரம் எக்காலமும் நடுவிற் பொருந்தும் எ - று.

என்பை மடந்தையாக்குநகர் திருமயிலை என்றது

திருமயிலையில் வணிகர்குலத்துதித்த சிவநேசரென்பவர் தமது தவப்புதல்வியாரைத் திருஞானசம்பந்தமூர்த்திசுவாமிகளுக்கென்று நியமித்துக் கன்னிமாடமொன்றமைத்து அதிலமர்த்திப் போஷித்துவருகையில், அப்புதல்வியார் ஒருநாள் மலர்கொய்கையில், அரவந்தீண்டி யுயிர்துறப்ப, சிவநேசர் நாயனாருக்கென்ற தீர்மானித்தமைக்கேற்ப என்பையேனும் அவர்க்குதவவேண்டுமென்று தகனஞ்செய்து அவ்வென்பைக் குடத்திட்டு மாடத்திற் சேமித்துவைத்திருந்தனர். பிள்ளையார் பல அற்புதங்களையு மியற்றிக்கொண்டு மயிலையையடைந்து, வைசியர் கருத்தை யுணர்ந்து அக்குடத்தைச் சந்நிதானவாயிலிலிருத்தித் திருப்பதிகமோதிப் பெண்ணுருவாக்கி, தாமெழுப்பினமையின் மகண்மைகொண்டு சென்றனர். என்பதாம்.

‘மட்டிட்ட புன்னையங்கானன் மடமயிலை
கட்டிட்டங்கொண்டான் கபாலீச்சரமமர்ந்தான்
ஒட்டிட்ட பண்பி னுருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்”— என்பது முதலாகவுடைய திருப்பதிகம் அக்காலத்தோதியதென்றறிக.

எட்டினுறுவரி நெருக்கியிட்ட நகர் திருவொற்றியென்றது.

சூரிய மரபிலுதித்த மாந்தாதாவென்னும் அயோத்தியமன்னன் மூப்புப்பருவமடைந்து விரைவிலிறக்கவிரும்பி அருகுள்ளாரை நோக்கி, நானிறக்குமுறை தெரிந்து சொல்லுங்களென, சிலவஞ்சகர் உமது புண்ணியம் அழியும் மார்க்கங்களைச் செய்யுமென்றனர். மன்னன் கருணீகனைப்பார்த்து - யான் தலங்களிற் செய்யுந் தருமங்களைக் குறைத்தெழுதுகவென, அவன் அவ்வாறே யெழுதி மாந்தாவுக்குக் காட்ட, அரசன் அவற்றிடையில் “திருவொற்றியூர் நீங்கலாக” என்றெழுதி யிருக்கக்கண்டு, அவனது சூதென வெகுள, கணிகன் அரசனே! இஃதென்கை யெழுத்தன்றென்று வேறுபட்டியையுங் காட்ட, மன்னன் அவ்வரியைக் கிறுக்கி அக்கணக்கைத் தன் வசமாக்கவைத்து மறுதினம் பார்க்க, அப்பொழுதும் “திருவொற்றியூர் நீங்கலாக” என்றெழுதியிருப்பது பார்த்துத் திருவருளை வியந்து, அத்திருவொற்றியூரை யடைந்து மந்திரிமுதலியோர் கைலாகுதரப் பிரமதீர்த்தத்தில் ஸ்நானஞ்செய்து அங்கே வசித்துத் தானும் மனைவியும் இளமைப் பருவமடைந்தார்கள். அதனால் இளமைதந்த பெருமான் என ஓர் சிவலிங்கம் பிரதிட்டைசெய்து, தமது நகரத்தையடைந்து சிலகாலங் கழித்து முத்திபெற்றனரென்பது சரிதம். (உ)

தன்னினந் தளரா வண்ணந் தாங்குதற் றரும மென்றே
நன்னகர் பலவும் வாழ நயந்துதன் னிடத்தில் வாழ்வு

மன்னிய செல்வா தமபால வளமிகக கொடுததுத தனபா
லெநநகா வளமுங காட்டி யிருபபதந நகர நாளும

(இ - ள்) தனனினதநதை வருநதாவகையாக ஆதரிபபது தருமமெனறு கருதியே, நகரங்களெலலாம வாழவுறுமபடி விருமபி, தனனிடததிற பொருநதிய சிகருஞ செல்வாகளிடததில வளததைமிகக கொடுதது, தனனிடததிலே எலலா நகரங்களின வளஙகளையுங்காட்டி, அசசெனனை நகரம எககாலுமிருபபது. எ - று (ந)

இததகு நகாபோல வாழவாாக இருமபொருள கொடாத வாறறு
லெததகு துறககவாண ரலைககட லமுது மிஙகே
யுததம ருதவும வேளவி யுணவுஙகொள ளொருவன செயது
வைததிடும பழைய வில்லின வாழதருங கடனமை பூண்டாா

(இ - ள) இநதத தகுதியாகிய நகரததைபபோல (பிறநகரஙகள தமபால) வாழ்பவாகளுககுப பெருமபொருளைக கொடாததனமையால, அநதத தகுதியாகிய சுவாககவாசிகள இநநகரததில அலையையுடைய சமுததிரததிறறோனறிய தேவாமிாதமும, உததமாகள கொடுககும யாக அவிசும பெறறு, ஒருவன செயதுவைதத பழைய கோயிலில வாழ்கினற கடனமையை மேறகொணடாாகள எ - று (சு)

தாஙகுமிந நகாவாழ வாாபோற றருமஙகள புரியாத தாழவா
லாஙகுள வமர ரெலலா மருமகப பேறு காணா
தேஙகமழ மாலை வேறு சோதரா தெனறு வாட்டார
பாஙகுசெய வாாில லெனறே படமழுக குறுமற சூழ்வாா

(இ - ள) (அடுததவாகளைத) தாஙகுகினற இநநகரததில வாழபவாகளைப் போலத தருமஙகளைச செயயாத குறைவினால, அசசுவாககததில வசிககுநதேவாகள யாவரும அரிய புததிரப் பேறறினைபபடையாாகள வாசம வீசும மலாமாலை வேறே யசுபபடாதெனறு (அதனை) உலாததாாகள பககுவஞசெயவாாிலரெனறே (சமது) வததிரம அழுககுபபடாமலணிவாாகள எ - று

அமரா - மரியாதவாகள (ரு)

வாாவளா மலைமென கொஙகை வளைகட லுடுககைச செலவப
பாாமகண முகமே யாகும பரவுமுத தமிழசோ நாடு
சோாவறு நுதலே யாகுந துலஙகிய தொணடை நாடு
சீாவளா திலக மேயாஞ் செனனைமா நகர மாதோ

(இ - ள) துதிககததககக (இய லிசை நாடகமெனனும) முததமிழ் வழஙகும் தமிழநாடு, கசசணிநத மலைபோனற மெலலிய கொஙகையையும வளைநத கடலையாடையாக வணிநத செலவததையுமுடைய பூமிதேவிககு முகமேயாகும, விளஙகிய தொணடைநாடானது குறறமறற(அவளது)நெறறியேயாகும; செனனைமாநகரமானது (அமமுகததிலணிநத) சீாததிமிகக திலகமேயாகும எ - று

முததமிழ் சேர்நாடு எனறது தமிழநாடு அது "குணகடல குமாி குடகம வேஙகட மெனுநான கெலலையி னிருநதமிழக கடலுள"—எனபதனுணாக

தொணடை நாட்டெலலையை,

"மேறகுப பவளமலை வேஙகட நோவடககாம
ஆாககு முவாி யணிகிழககு—பாாககுளுயா

'தெற்குப் பிறங்கித் திகழ்தருப் பிங்காநம
நற்றொண்டை நாடெனவே நாட்டு''—என்றதனாலறிக. (சு)

தத்தமக் குரிய விண்ணோர் தமக்கிட மாவ தன்றி
யித்தகு நகரம் போல வீண்டுமா னுடராய் வார்க்கு
முத்தலைச் சூலத் தண்ணன் முகுந்தனைங் கரனே வேளாதி
யுத்தமர் தமக்கும் வைப்பா யுறுவதோ துறக்க வைப்பு.

(இ - ள்) மோக்ஷலோகமானது, தத்தமக்குரிய தேவர்களுக்கு இருப்பிடமாவதல்லது இந்தத் தகுதியாகிய நகரத்தைப்போல (தன்னை) அடைகின்ற மாந்தர் யாவர்க்கும், முச்சிரமமைந்த சூலப்படைதாங்கிய சிவபெருமானும், திருமாலும், ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகமூர்த்தியும், முருகக்கடவுளும் முதலிய உத்தம (தேவர்)களுக்கும் இடமாகப் பொருந்துவதோ? (அன்று) எ - று (எ)

தேவர்கண் முனிவர் சித்தர் சிறந்தவே தியர்க ளேனை
யாவரும் பிறரு மென்று மொய்த்துடன் வாழு மாறு
மாவள ரிடங்க ணல்கும் வளநகர் யாவ ரேனு
மேவுறி னிடமா முத்தி வீடலா னிகரா தன்றே

(இ - ள்) தேவர்களும் முனிவர்களும் சித்தர்களும் சிறந்த அந்தணர்களும் வேறாகிய திரிமூர்த்திகளும் பிறரும் எப்பொழுதும் ஒன்றுகூடி வாழும்படி, செல்வம் பெருகும் இடங்களைக் கொடுக்கின்ற வளமமைந்த சென்னைநகரமானது எவரேனும் (தன்னிடத்து) வந்தால் (அவர்கட்கெல்லாம்) வாசஸ்தானமாகும். (அதனை) மோக்ஷ வீடல்லாது (வேறொன்றும்) ஒப்பாகமாட்டாது எ - று

அன்று - ஏ - அசைகள் (அ)

வளமணி மழையுஞ் செம்பொன் மழையுங்கைம் மாறு வேண்டா
தளவில வாரிச் சென்னை யகநகர் மாந்த ரெல்லா
முளமகிழ் சிறப்பி னாளு முதவுத னோக்கி நோக்கி
விளர்நிறம் படைக்குந் தெண்ணீ ரலலது வீசா மேகம்

(இ - ள்) அழகிய மணிமழையையும், செம்பொன் மழையையும் பிரதியுபகாரங்கருதாது அளவில்லாமலெடுத்து, சென்னைநகரத்துள்ள மாந்தர் யாவரும் மனங்களிப்புற்றுச் சிறப்புடன் நாடோறுங் கொடுப்பதை மிகவும் பார்த்து, மேகமானது வெள்ளிய நிறத்தைத் தாங்கும். தெள்ளியநீரை யல்லது வீசாது எ - று.

அந்நகரவாசிகள் தம்மையடுத்தோர்க்கு மணியையும் பொன்னையுங்கொண்டு, அப்பேட்குசெய்வது நோக்கிய மேகமானது தானும் அவர்கள்போலச் சொரியக்கருதி வெண்ணிற மமைந்தும் நீரையன்றிப் பொழியா தென்பதாம்,

மேகம் ஏழு - சம்வர்த்தம் ஆவர்த்தம் புட்கலாவர்த்தம் சங்காரித்தம் துரோணம் காளமுகி நீலவர்ணம் இவைமுறையே மணி - நீர்-பொன்-பூ - மண் - கல் - தீ - என்பவற்றைப்பொழியும் (கூ)

மருங்குறு கடலின் மொண்டு மழைநகு மகளி ரைம்பாற்
கருங்குழ னிகர்ப்ப வெண்ணிப் பன்முறை கறுத்துப் பார்க்கு
மொருங்கிர வலர்க்கு நாளு முதவுமிந் நகரின் மாந்தர்
பொருங்கொடை நிகர்ப்ப வெண்ணிப் பன்முறை பெய்து பார்க்கும்.

(இ - ள்) மேககூட்டங்களை பக்கத்திலுள்ள சமுத்திரத்தில (நீரை) முகந்து மாதர்களது ஐந்து பகுப்பினையுடைய கரியகூந்தலையொப்பக்கருதிப பலமுறைகருமை வாய்ந்துபார்க்கும யாசகர் யாவர்க்கும தினந்தோறுங்கொடுக்கின்ற இந்நகரின மாதுடரது பெருங்கொடையை நிகாககககருதிப் பலமுறை வருஷித்துப் பாக்கும் எ - று.

ஐம்பால் - முடி-கொண்டை-சுருள்-குழல்-பனிச்சை. இவற்றுள மயிரை யுச்சியின முடித்தலேமுடி - பக்கத்தின முடித்தலே கொண்டை - பின்னே செருகலே சுருள் - சுருட்டிமுடித்தலே குழல-பின்னிவிடுதலே பனிச்சை யெனபபடும (௧௦)

அருமைகண் டுவப்புச செய்யா ரமாந்துவாழ் மலையிற காவின
மருவியென பயனென றெண்ணி மணங்கம ழகிலுஞ சந்தும
குருமலாச சணப கங்கள் கொன்றைமல லிகையு மற்றும
திருநகாப புறத்தி னெங்குஞ செறிந்தெழில காட்டா நிற்கும.

(இ - ள்) மணம் வீசும் அகிலும, சந்தனமும், நிறமமைந்த மலரையுடைய சணபகங்களும்,கொன்றையும, மலலிகையும பிறவும, (தமது) அருமையைபபாராட்டுகளியாதவாகள் பொருந்தி வாழகின்ற மலையிலும வனத்திலும்பொருந்தி(யிருப்பதால) யாது பயனென்று கருதி, சிறந்த சென்னைநகரின பக்கலில எவ்விடத்தும நெருங்கி (தமது) அழகைக காட்டாநிற்கும. எ - று.

தமதருமையை யுணராரிடையிருந்து பயனிலலை யெனககருதிய அகின் முதலியவை மலையுங்கானுமொழிந்து நகாப்புறஞ்செறிந்து எழிலகாட்டுமெனக (௧௧)

இயலினைக கறக வெண்ணி யினத்தொடு மயிலுஞ சால
நயமொழி கறக வெண்ணி நனகிளி குயிலும போந்து
செயலையந தளிர ளாதஞ செவவியாராத துறையா நிற்கும
வயலபுற முடுத்த சோலை வளாநதவுய யான மெங்கும.

(இ - ள்.) வயல்களைப புறத்திலுடைத்த சோலைகளும வளாந்த பூந்தோட்டங்களும் (ஆகிய) எவ்விடத்திலும, அழகிய அசோகந்தளிரை யொத்த மேனியையுடைய மாதாகளது சாயலைக கறகவிரும்பிக கூட்டத்தோடு மயிலகளும், மிகக இனிமைவாய்ந்த சொறகளைக கறகவிரும்பி நலல கிளிகளும குயிலகளும வந்து சமயம்பார்த்து வாழாநிறகும எ - று. (௧௨)

சுந்தர மிகுந்த வித்தக தொன்னகா விடாது நோககச
சிந்தையி னாவங கொண்டு தினந்தமைப பூசை செயவாாக
கந்தமில வரங்க ளலகி யளிப்பது குறித்துந தேவா
வந்தனா மலாக டோறும வதியுமா ராம மெங்கும

(இ - ள்) தேவாகள அழகுமிகக இந்தப்பழமையாகிய சென்னை நகரையிடைவிடாது பாககமனதில ஆசைகொணடு, நாடோறுந தமமைபபூசிப்பவாகளுககு அழிவிலலாத வரங்களைக கொடுத்துக காப்பது கருதியும வந்து, பூககடோறும வாழகின்ற சோலைகளெங்கும (உளளன.) எ - று (௧௩)

முத்தலைச சூலத் தாரபோன மூன்றுகண படைத்து மாதர்
முத்தலை முலைநே ராமன முடிகவிழ் குருமபைத தாழைக்
கொத்தொடு கமுகங காடு மாதலை குழலொப் பாமபூ
வைத்திடும வாழைக காட்டின மருங்கள வளாகி நிறகும்.

(இ - ள்) முத்தலைச் சூலத்தையுடைய சிவபெருமானைப் போல மூன்று கண்களைப்பெற்றும், மாதர்களது முத்து வடமலையும் முலையை யொவ்வாது (நாணித்) தலைகுனிந்த குருமபையையுடைய தென்னந்தோப்போடு, அழகிய கமுகக் காடும் மாதர்களது கூந்தலை யொப்பாகிய பூவையுடைய வாழைக்காட்டின் பக்கங்களில் அள வளாவிநிற்கும் எ - று

கொத்து - கூட்டம். ஈண்டுத்தோப்பு. (கச)

நகருறை மைந்த ரெல்லா நலனுருக் காம ரெனறே
யகமுற நினைத்துக் கன்ன லவர்களகைச் சிலைக ளாகப்
புகரறு வயலக ளெங்கும் பொதுளுமவ் வாறே யெணணிப்
பகழிக ளாக நீலம் பங்கயம் பலவும் பூக்கும்.

(இ - ள்.) சென்னை நகரத்தில் வசிக்கும் மாந்தர்கள் யாவரும் நல்ல வடிவமைந்த மன்மதர்களென்றே மனதிற் பொருந்த நினைத்துக் கரும்பானது அவர்களது கைகளிற் சிலைகளாம்படி, குற்றமற்ற வயல்களிலெல்லாம் நெருங்கி நிற்கும் அவ்வகையே, நீலம் - தாமரை முதலிய பலவும் பாணங்களாகக்கருதி மலரும் எ - று

மன்மதன்கணை ஐந்து-தாமரை மா அசோகு முல்லை நீலமென்பன அவை செய்யுமவத்தை-சுப்பிரயோகம் விப்பிரயோகம் சோகம் மோகம் மரணம். இவற்றை, சூத்திரம்.

"வனசஞ் சூத மசோகு முல்லை
நீல மென்மதன் பெயக்ணை யைந்தே "—எனவும்,
"சுப்பிர யோகம் விப்பிர யோகம்
சோகம் மோகம் மரணமுந் தோற்றும்."—எனவும்,
"சுப்பிர யோகஞ் சொல்லு நினைவும்
விப்பிர யோகம் வெய்துயிர்த் திரங்கல்
சோகம் வெதுப்புந் துயப்பன தெவிட்டலும்
மோக மழுங்கலு மொழிபல பிதற்றலு
மரண மயாப்பும மயக்கமுஞ் செயயும "—எனவும் வருவனவற்றானறிக.

மதனன் இவவைந்துகணைகளை,

"நெஞ்சி லரவிந்த நீளசூதங் கொங்கையினில்
துஞ்சும் விழியி லசோகமாம—வஞ்சியாதஞ்
சென்னியிலே முல்லை திகழ்நீல மல்குலிலே
யென்னவே ளெய்யுமியல் பாம."—என்றபடி யெய்வனெனக்கொள்க (கரு)

நீரள வாகி நிற்ற னெடுங்கொடி யளவே யன்றிச்
சீரம ரிலையும் பூவுந் தினந்தொறு மொப்பக் காட்டுஞ்
சாரினப் பொருளுக் கேறப வாழ்ந்துதண் கவிகை யொப்பப்
பாரிடை யளிக்கு மிந்தப் பதியொடும் பழகுங் கஞ்சம்.

(இ - ள்) சலத்தின் அளவாகி நிற்பது நெடிய கொடிமட்டுமே யல்லது, சிறப்பமைந்த இலைகளும் மலர்களும் நாடோறும் (அதற்குச) சமானமாகவே காட்டும். பூமியில் (தன்னை யடுத்தோரைக்) காக்கும் இந்தச் சென்னைநகரோடு தாமரையானது சார்ந்த தன் இனப்பொருள்களுக்குச சமானமாக வாழ்ந்து தண்ணிய குடைபோல விளங்கும். எ - று. (கசு)

பாளையந் தாழை பூகம் பசுங்கழை கதலி யென்றுங்
கோளறு வனங்கள் காணக் குறித்தொரு பாங்கர்க் காடு
மாளிகை வரைகள் காண மதித்தொரு பாங்கர்க் குன்று
நீளிடை வந்து நிற்ப நெடுநகர் செல்வ மல்கும்

(இ - ள்) பாளையையுடைய அழகிய தெங்கும் கமுகும் பசியகரும்பும் என்று சொல்லுங் காடுகளைக்காண நினைத்தொரு பக்கலிற் காடும், மாளிகைகளாகிய மலைகளைக் காணக்கருதி யொருபக்கலின் மலையும் நெடுந்தூரத்தில் வந்து நிற்க, நெடிய சென்னை நகரமானது செல்வமுற்று விளங்கும் எ - று.

காடு என்றது திருவேற்காடும், குன்று என்றது பிருங்கிமலையுமாம். பிருங்கிமலையென்பது இக்காலத்துப் பரங்கிமலையென மருவி வழங்குகின்றது. (௧௭)

பொருள்பல விளைத்து நாளும் பொலிதலாற் கதிர்செஞ் சாலிப்
பெருநிலந் நகரி னோர்பாற் பெட்பொடு சூழ்ந்து நிற்குங்
கருதிய பொருள்க ளெல்லாங் கவர்தொறுங் கொடுத்துச் செல்வ
மருகுவ தின்மை யாலே யலையுமோர் பாங்கர்ச் சூழும்.

(இ - ள்) பலபொருள்களை விளைத்து நாடோறும் விளங்குதலால், கதிரையுடைய செவ்விய நெற்பயிர் பொருந்திய பெரிய மருதநிலமானது (அச்சென்னைநகரத்தின்) ஓர் பக்கலிற் சூழ்ந்து நிற்கும்; நினைத்த பொருள்களெல்லாவற்றையும் கைக்கொள்ளுந்தோறுங் கொடுத்துச் செல்வங் குறைவதின்மையாலே அலைகளும் [சமுத்திரமும்] ஓர் பக்கலிற் சூழ்ந்திருக்கும் எ - று.

சென்னை நகரத்தைச் சூழ்ந்து ஓர் பக்கலில் மருதமும், மற்றொருபக்கலில் நெய்தலும் விளங்குமென்பது கருத்து. (௧௮)

கொடையொடு பயிலு மின்பக் குளிர்நக ரெல்லை யுள்ளே
யிடைதரு வளத்துட் சில்ல விளம்பினம் பொதுமை தன்னா
லடைதரு வளத்தை வேறு வகைமையி னறையப் புக்குப்
புடைநகர் வளத்தை முன்னர்ப் புகலுதும் புலவர் தேர

(இ - ள்) கொடைத்தொழிலிற் பழகுகின்ற இன்பமைந்த தண்ணிய சென்னை நகரத்தினெல்லையில், நெருங்கிய வளப்பங்களிற் சிலவற்றைப் பொதுத்தன்மையாற் சொன்னேம்; பொருந்திய வளங்களை வேறுவகையிற் சொல்லப்புகுந்து புடைநகர் வளத்தைப் புலவர்களறியும்படி முதலிற் கூறுவாம் எ - று. (௧௯)

புறநகர்

வேறு

கிரிசரக் களிறு நதிசரக் களிறுங் கிளர்ந்தெழும் வனசரக் களிறு
முரிமையிற் பயிலும் பற்பல தேயத் துளைவளர் சுவற்பரி மாவும்
புரிமணி யிரத வுறுப்புகள் பலவும் புரையறு தானையும் படையுந்
தரியலர் பணிப்பச் சுமந்துவந் தளிக்குந் தண்டுறை தொறுங்கலம் பலவும்.

(இ - ள்.) மலையிற் சஞ்சரிக்கும் யானையும், ஆற்றிற் சஞ்சரிக்கும் யானையும், காட்டிற் சஞ்சரிக்கும் யானையும், உரிமையுடன் பற்பல தேயத்திற் பயில்கின்ற புறமயிர்வளரும் பிடரியையுடைய புரவியும், அழகிய மணிகட்டிய இரதவுறுப்புக்கள் பலவும், குற்றமற்ற சேனையும், ஆயுதங்களும் (முதலியவற்றை) பகைஞர் நடுங்கும

படிதாங்கிவந்து, தட்பம் பொருந்திய துறைமுகங்களிலெல்லாம் பல மரக்கலங்களும் கொடுக்கும். எ - று

கிரிசரம் - நதிசரம் - வனசரம் என்னும் அடைகள் யானையின் விசேடங்களை யுணர்த்தின. (௨௦)

அலப்படை யனைய தூங்குவாய் நெடுங்கை யலைசெவி வாரணம் பழக்கு, நலப்பெரு வனப்பின் மைந்தர்க டமது நவையறு போர்த்திற வலிக்கு, வலப்படு மதமால் யானையு நிகரா வாய்மையைத் தெரிப்பதே போலப், புலப்படப் புகன்று மொத்துமண்டிலமாப் போக்கிநின் றடத்துவார் பலரும்.

(இ - ள்) அலாயுதம்போன்ற தொங்கிய வாயையும் நீண்டகையையும் அசைகின்ற காதையுமுடைய யானைகளைப் பழக்கஞ்செய்கின்ற பெருமைவாய்ந்த நலமழகினையுடைய ஆடவர்கள் குற்றமற்ற தமது போர்த்திறத்தின் வலிமைக்கு வெற்றி பொருந்திய மதமயக்குடைய யானையுநிகராத உண்மையை யுணர்த்துவதேபோல, வெளிப்படக்கூறியும், தண்டித்தும், மண்டிலமாக நடத்தி ஒழுங்காகச் செலுத்துபவர் பலரும் (உளர்) எ - று (௨௧)

குழியிடைப் படுத்துஞ் சிலபக லுணவு கொடாமலு மினத்தொடு சேர்த்துங், கழிபெரு நிகளங் காலுற யாத்துங் கதந்தணித் தணிநகர் புகுத்தும், பொழிமதக் களிற்றை வினைஞர்கள் பழக்கும் போர்த்தொழின் முன்னமே மதித்தோ, செழிதரு முளத்துப் பயத்தினாற் போலுந் திசைக்கரி புறங்கொடுத் ததுவே

(இ - ள்) மதம்பொழிகின்ற யானையை, படுகுழியில் வீழ்த்தியும், சில தினங்கள் ஆகாரமுதவாமலும், (பிறகு) இனத்துடன் கூட்டியும், மிகப்பெரிய சங்கிலியைக் காலிற் பொருந்தக்கட்டியும், கோபத்தைத் தணித்து அழகிய நகரத்திற் புகுத்தியும், யானைப்பணிக்காரர்கள் பழக்குகின்ற போர்த்தொழிலை முன்னமே யோசித்து, உள்ளத்திற் பொருந்திய அச்சத்தினாற்போலும் திக்குயானைகள் (எட்டும்) புறங்கொடுத்(திரிந்)தன. எ - று.

புறங்கொடுத்தது - முதுகுகாட்டியது திக்குயானைகள் வெளிப்புறத்து முகத்தைவைத்து நிற்றலின் புறங்கொடுத்தனென்றார் அவ்யானைகள் தம்மையும் இந் நகரவாசிகளிவ்வாறு செய்வரென்னும் பயத்தாற் புறங்காட்டினவெனக்கொள்க (௨௨)

இருப்புநெட் டெழுக்கண் முசலங்கள் வாங்கி யெதிரெதிர் தாக்குபு தெழித்து, மருப்புடல் புதைய வொன்றனை யொன்று மறுகுறக் குத்துபு தெழித்துஞ், செருப்படு மிருப்புத் தொடர்கரஞ் சுழற்றிச் சென்றெதி ரோச்சுபு தெழித்தும், பொருப்பின மலைந்தா லெனக்கரி யினங்கள் போர்த்தொழில் பழகிடம் பலவால்

(இ - ள்) யானைக்கூட்டங்கள் இருப்பினாற்செய்த நெடிய வளைதடிகளையும் இருப்புலக்கைகளையுங் கொண்டு எதிரெதிராக மோதியடித்தும் ஒன்றோடொன்று தந்தங்களுடலிற்புதையும்படி குத்தியார்ப்பரித்தும், போர்புரிகின்ற இருப்புச்சங்கிலிகளைக் கரங்களாற்சுற்றி எதிர்சென் றடித்துப் போர்செய்தும், மலைக்கூட்டங்கள் மாச்செய்தாற்போல, போர்த்தொழிலிற் பழகுமிடங்கள் எண்ணிறந்தனவாம் எ - று.

இருபுடை யொழுகும் பருமணி யிரட்ட விழிமதக் கலுழியங் கரடக்
கருஞ்சிமி ழிழைப்பச் சென்றுநீர் முகக்குங் களிற்றினந் துளைக்கைநீர் வீசி
மருவிய வினத்தோ டாட்டயர் வனப்பு வாரிதி மடுத்தெழு புயல்களு[னவே.
ருவுகள் பலவாய்த் தம்முளே நெடும்போ ருவப்புறப் புரிதல்போன் ற

(இ - ள்) இருபக்கலிலுந் தொங்குகின்ற பருத்தமணிகள் ஒலிக்கவும், இழிகின்ற கன்னமதப்பெருக்கில் அழகிய கரியவண்டுகள் சத்திக்கவுஞ்சென்று நீரைமுகக்கின்ற யானைத்தொகுதிகள் துதிக்கைகளால் நீரை வீசி, பொருந்திய தமமினத்துடன் விளையாடுகின்ற அழகானது, கடனீரைப் பருகியெழும் மேகங்கள் பலவுருவங்களாய்த் தமக்குள் பெரிய போரினை விநோதமாகச் செய்தலைப்போன்றன. எ - று. (உச)

தண்டமுஞ் செண்டு வெளியுஞ்சே வகமுந் தளைத்திடுங் கூடமும் பலவு
மண்டிய தாரை மதப்பெரு மழையால் வைகலுஞ் சேதக மாக்குந்
திண்டிறற் களிறும் பிடிகளுங் கன்றுஞ் செறிதரு மொட்டகக் குழாமுந்
தண்டலை மருங்கும் வயற்கள மருங்குந் தணக்கடன் மருங்குமெண் ணிலவே.

(இ - ள்.) தண்டமும், செண்டுவெளியும், சேவகமும், கட்டப்படுங்கூடமும் பிறவிடங்களும், நெருங்கிய மதப்பெருக்காகிய மழைத்தாரையால் நாடோறுஞ்சேறாக்குகின்ற மிக்க வலியுடைய ஆண் யானைகளும், பெண் யானைகளும், கோபிக்கும் நெருங்கிய ஒட்டகக்கூட்டங்களும், சோலையின் பக்கலிலும், வயலிலிட்ட (நெற்) களங்களின் பக்கலிலும், தண்ணிய கடலின்பக்கலிலும் எண்ணிறந்தனவாம். எ - று.

தண்டம் - யானைசெல்லும்வழி செண்டுவெளி-குதிரைசெல்லும் வையாளி வீதி சேவகம் - யானைதுயிலுமிடம் கூடம் - யானைகட்டுமிடம். (உரு)

வேறு.

இந்திர னுலகமு மிரவி லோகமுஞ்
சந்திர திசையினோ னுலகுந் தாமெலாம்
வந்தொரு நகரென மருவி னும்பரிப்
பந்தியின் புடைநகர்ப் பாத மொக்குமோ.

(இ - ள்) இந்திரலோகமும், சூரியலோகமும், சந்திரதிசையினோனாகிய குபேரனது லோகமும், ஆகிய இவையெல்லாம் (ஒன்றுசேர்ந்து) வந்து, ஒரு நகரமென்னப் பொருந்தினாலும், குதிரைப் பந்தியையுடைய புடைநகரின் காற்பாகத்தை யொப்பாகுமோ? (ஒப்பாகாது) எ - று.

சந்திரதிசையினோன் - குபேரன் என்றதை,

தணிகைப்புராணம்.

"துலாமணிந்தவர் சூளிகைத்தலைத்
துலாமிவர்ந்தெழுஞ் சோமதிக்கினோ
னிலாவிரும்பொடு நிறைந்ததாமென
நிலாவுமத்தலை யிவர்ந்துநிற்குமே"—என்னுஞ் செய்யுளிலுங்காண்க (உசு)

வரையறு போரிடை வாவிச் சென்றுமீண்
டுரையருக் குவப்பினை யாக்கு மாவொடு
கரைவருந் தொறுமுருக் கரைந்து மீள்கலாக்
குரைகடற் பெருந்திரைக் குலமு மொக்குமோ.

(இ - ள்) வரையறுபோரில், தாவிச்சென்று திரும்பி மன்னர்களுக்குக்களிப்பையுண்டாக்கும் குதிரையுடன், கரையில் வரும்போதெல்லாம் உருக்கரைந்து (வந்த வுருவுடன்) திரும்பிச்செல்லாத ஒலிக்கின்ற கடலின் பெரிய அலைத்தொகுதிகள் ஒப்பாகுமோ? (ஒப்பாகா) எ - று

வரையறுபோர் என்பதற்கு வரையறுக்கப்பட்டுள்ள போர் என்றும், அளவிடப்படாத போர் என்றும் பொருள்படும் (உஎ)

முகங்கவிழ்ந் தனவென முனிவு செய்கலா
தகங்களி சிறப்பொடு மரைய ரச்சுவஞ்
சகம்புகழ் தரமிகத் தளைப்ப ரொட்டலார்
முகங்கவிழ் தரச்சமர் முடிப்ப தெண்ணியே.

(இ - ள்) மன்னர்கள் (தமது) குதிரைகள் முகங்கவிழ்ந்தனவென்று கோபியாமல், பகைஞர்களது முகங்கள் கவிழும்படி போரை வெற்றிசெய்தல் கருதி, மனதிற் பெருமகிழ்ச்சியுடன், உலகமானது மிகவும்புகழும்படி (அவற்றைப்)பூட்டுவார்கள் எ-று

குதிரைகள் முகங்கவிழ்தலுக்கு மனம் வருந்தாது சத்துருக்களை வென்று வருவோமென்னுந் தைரியத்தால், அக்குதிரைகளையே பூட்டுவார்களென்றார். (உஅ)

விசையொடு மைங்கதி விளக்குங் கொய்யுளை
திசைகளுங் கடந்திடுஞ் செலவு நோக்கியே
திசைகளைப் புரந்தனர் தேவ ரெண்மருந்
மசைவிலெண் கரிகளு மரவெ ரட்டுமே.

(இ - ள்) வேகத்துடன் ஐங்கதிகளிலுஞ் செல்லும் புரவிகள் அட்டதிக்குகளையுந் தாண்டிச் செல்லுஞ் செலவுகையை நோக்கி, திக்குப்பாலக ரெண்மரும், அசைவில்லாத திக்கு யானைகளெட்டும், திக்குநாகங்களெட்டும், எட்டுத் திசைகளைக் காத்திருந்தார்கள் எ - று

ஐங்கதி - மல்லகதி, மயூரகதி, வியாக்கிரகதி, வானரகதி, விடபகதி யென்பபடும் கொய்யுளை-கொய்த புறமயிரையுடைய புரவி இது வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழி

தேவரெண்மர் - இந்திரன் அக்கினி இயமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன் எண்கரிகள் - ஐராவதம் புண்டரீகம் வாமனம் குமுதம் அஞ்சனம் புட்பதந்தம் சார்வபூமம் சுப்பிரதீபம் எட்டுநாகங்கள் - வாசுகி அநந்தன் தக்கன் சங்கபாலன் குளிகன் பதுமன் மகாபதுமன் சார்க்கோடகன் இத்தேவர்களும் யானைகளும் நாகங்களும் முறையே கிழக்குமுதல் வடகிழக்கீறாகப் பொருந்தி, இப்புரவிகள் திசைகளைக் கடவாவண்ணங் காக்கின்றனரென்றார்

"உயர்திணை தொடர்ந்த பொருண்முதலாறு - மதனொடு சார்த்தி னத்திணை முடியின" என்றாராகலின், தேவரெண்மருமென்றதற்கேற்ப, கரிகளும் அரவுமென்பனவற்றையு முடன்கொண்டு புரந்தனரென உயர்திணைமுடிபு கொடுக்கப்பட்டதெனக் கொள்க. (உகூ)

வந்திடும் வழியிடை மயிர்த்து மீள்வகை
சிந்தையிற் றோகலாத தினக ரன்பரி
நொந்திடத் திசையெலா நொடிக்கு முன்செலுஞ்
சுந்தரப் புரவியின் றேர்கள் சூழ்ந்தவே.

(இ - ள்) வருகின்ற வழியினின்று திரும்பி மீளும் வகையை மனதிற் றேராத சூரியனது எழுபுரவி (மனம்) வருந்தும்படி திசைகடோறும கணப்பொழுதிற்கு முற்பட்டுச செலலும் அழகிய குதிரைகளைப் பூட்டிய தேர்கள் சூழ்நதுள்ளன எ - று.

சூரியன் புரவி திருமபிச்செல்ல வகை யறியாமையின, திசைகளெல்லாம் விநாடியிற் சுழலும வலலமையுடைய புரவிகள் பூட்டிய தேரைக்கணடு மனநாணு மென்றுராயிற்று. (௯௦)

நித்தலும பன்முறை நேருந் தானவ
வித்தக ரறசசமா விளைத்தி டாக்கதி
ருத்தமன றேரைவிண ணோடடு நோக்தவர்
கொத்தொடு முறைமையிற குமைக்குந தேர்களே.

(இ - ள்.) சமீபித்த (பகை) வர்களை, கிளையுடன முறைப்படி யழிக்கின்ற தேர்கள், நாடோறும பலமுறை யெதிர்க்கின்ற அசுரர்களாகிய மாநதேயர்கள் நீங்கும் படி போர்புரியாத சூரிய பகவானது தேரை ஆகாயத்திற செல்லச செய்யும. எ - று.

சூரிய னுதிக்கையிலும அத்தமிக்கையிலும அவனது வருகையை மாநதேயர்களென்னும அசுரர் தடுப்பர் அப்பொழுது அந்தணர்கொடுக்கும் ஆர்க்கியம வாளாகசசென்று அவர்களை விலக்கி வழி செய்யுமெனபது புராண சரிதம. (௯௧)

ஒருமுறை யடைந்திடி னுன்ன லாருயிர
பருகுமித் தேரெனப் பாயி ருடபகை
கருவொடு மறபொராக ககனத் தேரிசை
வருபவன மறையுரு வாயி னனரோ.

(இ - ள்.) ஒருமுறை யெதிர்ந்தால, பகைஞரது அரிய வுயிரை இந்த (நகரத்திலுள்ள) தேர்கள் குடிக்குமென்று, சூரியன் வேரோ டழியப போர்புரியாத ஆகாயத்திற் செல்லுந் தேரில் வருபவனுகி மறையுருவடைநதவ னனன. எ - று.

பாயிருட்பகை - பரவிய விருளுக்கும பகைவன.

மறையுரு - வேதவடிவு, மறையததக்க வடிவு. (௯௨)

தெழித்துமண ணிடைபபடை பயிற றுஞ செல்வர்முன
னிழிததிமைப புறுமென வெண்ணி நானமுகன
விழிததகண ணுகவே விதித்திட டானரோ
பழித்தெலய தாவகை பண்ண வாகெலாம.

(இ - ள்) ஆர்ப்பரித்துப் பூமியிற படையைப் பயிற்றுஞ் செல்வமுடையோர் முன்னே, இழிவுற்ற இமைகொட்டுவ ரென்று யோசித்து, நானகு திருமுகங்களையுடைய பிரமதேவர், பழிப்பெய்தா வகையாகத தேவர்கட்கெலலாம விழித்த கண்ணுகவே படைத்துவிட்டனன எ - று.

இநநகரிலுள்ளார படைபயிறறுவது கண்டிமையாது காணவலல ராகாதிருப்பின் அவர்களுக்குப் பழிவருமெனறு அதனைத தீர்ப்பான கருதிய பிரமன் அவர்களை இமைகொடடாத [இமையவர்] களாகப் படைத்தன னென்றுரா. (௯௩)

தெயவதப படையினுற றெவ்வ ராறறலைக
கொய்வது தகாதென வவைகு றித்திடாக

கைவளா வெற்றியே கருதித தானைக
ளெய்வது மெறிவது மினிது கற்குமே.

(இ - ள்.) தெய்வீகம பொருந்திய அததிரங்களால், பகைஞா வல்லபத்தை யடக்குவது தகுதியன்றென்று, அவற்றைக கருதாதனவாய,கையினுல வளரும வெறறி யையே(பெறக்)கருதி, சேனைகள எயவதும எறிவதும் (ஆதியவறறை) இனிமையோடு கற்கும். எ - று. (௬௪)

உரைத்திடும படைகளுக குறுபபெ லாமிகத
தரைததலை விளஙகுறச சமைததுு நலகுபு
புரைததபு வினைஞாகள பொருநதி வாழ்தர
நிரைததிடுஞ் சேரிக ணிலவு மெஙகணும.

(இ - ள்.) சொல்லுகினற படைகளுககு அங்கஙகள யாவும பூமியில் மிகவும் விளங்குமபடி படைத்துக்கொடுதது, குறறமறற (அவற்றின) தலைவாகள் பொருந்தி வாழும்படி வரிசைப்படுததிய சேரிகள எஙகும உளளன. எ - று. (௬௫)

விலங்கலும வனஙகளும விரிநத பணணையுஞ
சலங்கொடுத தளிததிடுந தலைமை நாடியே
நலஙகிளா பொருள்பல நலகக காாககடல
கலஙகளிற சுமநதிருங கரைகக ணுயககுமே.

(இ - ள) மலைகளும, காடுகளும, பரநத வயல்களும் (தமக்கு) நீரைககொடுத்துக காககுஞ் சிறப்பினைக் கருதி, நனமை விளஙகும பலபொருள்களைக கொடுகக, கரியகடலானது மரககலஙகளிற் சுமநது (வநது) பெரிய கரையினகண (அவறறைச) செலுத்தாநிறகும். எ - று.

மலைபடு திரவிய முதலியன மரக்கலஙகளில் வருமென றுராயிற்று மலைபடு திரவியம - மிளகு கோட்டம் அகில தககோலம் குஙகுமம காடுபடுதிரவியம - இறால தேன அரககு மயிற்பீலி நாவி நாடுபடு திரவியம - செநநெல சிறுபயறு கருமபு வாழை செவவிளநீா எனககொளக இவையேயனறி, நகாபடுதிரவியம கடலபடு திரவியஙகளுடன திரவியம ஐவகையெனபது வழககு அவறறுள நகாபடு திரவியம - அரசன பிததன மநதி யானை கணணடி, கடலபடு திரவியம - உபபு முதது பவளம் சங்கு ஒககோலையெனப்படும. (௬௬)

மடுவுறும வலாரியை யழைபப வானவா
தொடுகளை யடுததமை சூழ்நது வெறபெலாம
படுகட லொளிததவப பாமபைக கவுவான
புடையடுத தனபெரும பொருளின குபபையே

(இ - ள்) மடுவிற பொருநதிய இநதிரனை (வெளிவருகவென்று) அழைக்கத் தேவர்கள சமுததிரக்கரையை யடைநதமையை மலைகள் யாவும யோசிதது, ஆழமாகிய கடலிலொளித்த அநத மைநாககிரியைக் கூபபிடுமபடி சமீபிதது வநதனவறறை (ஒத திருககும ஆஙகுள்ள பல) பொருளகளின குவியலகள. எ - று

இநதிரன் தனககுப் பயந்து கடலிலொளிசதுத தவசசெயலிலிருநத விருத் திரனைவதைததத பழியினுல,தாமரை மடுவில் ஓாநாள ததினிடையே புகுநது தன்புற்று நிற்கையில்,இமையவருலகு அரசனினறி வருநதி,பிரகற்பதிமுனிவனாயுடன்கொண்டு கடலையடைநது, அவனை விளித்தமை யுணமையின், "மடுவுறும் வலாரியை யழைப்ப

வானவர் தொடுகனை யடுத்தமை" என்றும், கடற்கரையிலுள்ள பொருட்குவியல்கள் மலைகள் போன்றிருத்தலாலும், இந்திரன் மலைகளின் சிறகுகளையரிந்து இடம் விட்டுப் பெயராது செய்து வருகையில், அவனது வச்சிரத்திற்கஞ்சிய மைநாகங் கடலிலொளித்துக்கொண்டமையாலும், இந்திரன் மைநாகத்தைக் கண்டுவிட்டது அதன் சிறகையுங் கொய்ய நேரிடுமாதலாலும், தன்னினத்தைக்காக்க அவையழைத்தனபோலுமென்பார் "வெற்பெலாம் * * * * பொருளின் குப்பையே." என்றுங் கூறினார். (௧௭)

பலகிய படைகளும் பற்பல பண்டமு
மலகிய புடைநகர் வகுத்து முற்றுமோ
வெலகழ லாடவர் மின்ன னாரொடு
புலகுறு மிடைநகர் புகலு வாமரோ.

(இ - ள்) பெருகிய படைகளும், பற்பல பண்டங்களும் அதிகமாகவுள்ள புடைநகரைச்சொல்லி முடியுமோ? (சொல்லிமுடியாது) வெற்றி பொருந்திய வீரக்கழலணிந்த ஆடவர்கள் மின்னல்போலுஞ் சாயலையுடைய மாதர்களுடன் கூடிவாழும் இடைநகர் (வளத்தை இனி) கூறுவாம். எ - று. (௧௮)

இடைநகர்.

வேறு

புளினத்திர ளொடுசெய்தொளிர் பொற்குன்றுகள் பலவும்
வளியுற்றுளர் மணிமேடையும் வருநீர்நிறை தடமு
மளிமொய்த்திடு முயயானமு மலர்பங்கய மடுவுங்
களிமுற்றுற வெதிர்வோரிரு கண்ணுந்திறை கொள்ளும்.

(இ - ள்) வெண்மணற் குன்றுகளுடன் பிரகாசிக்கின்ற அழகிய பல செய்குன்றுகளும், (தென்றற்)காற்றுப் பொருந்தி வீசுகின்ற அழகிய மேடைகளும், வருகின்ற சலநிறைந்த தடாகங்களும், வண்டுகள் மொய்க்கின்ற சோலைகளும், மலர்ந்த தாமரை மடுக்களும், பெருங்களிப்படையக் காண்பவர்களது இருவிழிகளையுங் கப்பங்களாகக் கொள்ளாநிற்கும். எ - று. (௧௯)

கடுபாலையி லுறுவோர்வய றுன்னும்பதி சோர்தாங்
கடுபோர்நிறை புடைமாநக ரதிர்வன்குர னுழையப்
படுவார்செவி கிளிபூவைகள் பமரங்குயின் மயில்க
ளொடுகூவிய குரலின்னிசை யுணருங்களி புணரும்.

(இ - ள்) சுடுகின்ற பாலைநிலத்திற் பொருந்தினவர்கள் மருதநிலமமைந்த நகரத்தைச் சேர்ந்தாற்போல, மோதுகின்ற போரொலி நிறைந்த சிறந்த புடைநகரத்தில், அதிர்கின்ற வலிய சத்தமானது நுழையப்படுபவர் செவியில், கிளிகளும் நாகணவாய்ப்பறவைகளும் வண்டுகளும் குயில்களும் மயில்களுங் கூவிய குரலாகிய இனிய இசையையுணர்ந்து களிப்படைவார்கள். எ - று.

அதிர்வன் குரலொலி பாலைவழிநடப்போர் துயருக்கும், கிளிமுதலியவற்றின் இன்னிசை வயற்றுன்னும் பதியடைந்தோர் சுகத்துக்கு மொப்பிடப்பட்டன. (௨௦)

வண்டாடுவ மலரும்பல மலரிற்கரு மேகங்
கண்டாடுவ களிமாமயில் கதிர்மாமணி மேடை
கொண்டாடுவ கிளிபூவைகள் கூறும்பணி மொழியைத்
தண்டாதுட னுறையுங்குயி றமதின்னிசை யோர்ந்தே.

(இ - ள்.) மலர்கின்ற பல பூக்களில் வண்டுகள் படியும், கரிய மேகத்தைக் கண்டு களித்த பெரிய மயில்கள் நடிக்கும் கிளிகளும் நாகணவாய்ப்புட்களும் ஒளி வீசிய பெரியமணி மேடைகளிற் கொண்டாடுவனவாகிய குளிர்ந்த சோலைகளிற் குயில்கள் தமது இனிய இசையையுணர்ந்து நீங்காது உடனவாழும் எ - று. (சக)

கொந்தாடிய மலர்மென்குழல் குலையக்கலை குலையச்
சந்தாடிய முலைமேல்வளர் தரளத்தொடை யலைய
வந்தாடவர் விழியுங்களி மனமுந்திறை நல்கப்
பந்தாடுவர் கழலம்மனை பலவாடுவர் மடவார்.

(இ - ள்) கொத்தாகவுள்ள மலர்களை யணிந்த மெல்லிய அளகமானது அசையவும், ஆடையானது (உடுத்தமுறை) குலையவும், சந்தனக்குழம்பு பூசியமுலையின்மேல் வளர்கின்ற முத்துமாலை அசையவும், புருடர்கள் (ஆங்கு) வந்து (தமது) கண்களுங் களித்த மனமுந் திறையாகக்கொடுக்கவும், மாதர்கள் பந்தாடுவார்கள், கழங்கு அம்மனை (முதலிய) பல ஆட்டங்களை யாடுவார்கள் எ - று.

பந்து - கழங்கு - அம்மனை யென்பன ஒவ்வோர்வகை யாடல்கள். (சஉ)

கழுமாமணி யனையார்கமு கிடுமூசலி னாடச்
செழுமாமணி யொளிருங்குழை செவியூசலி னாடுங்
குழுவானர நோக்கிச்சிறு கொடியூசலி னாடும்
மெழுகாளையர் மனமாமய லெனுமூசலி னாடும்

(இ - ள) (மாசு) கழுவிய சிறந்த மாணிக்கம்போன்ற மாதர்கள் கமுகமரத்தி லிட்ட ஊசலில் விளையாட, செழுமைதங்கிய சிறந்த இரத்தினங்கள் பிரகாசிக்கின்ற குண்டலங்கள் (அவர்களது) செவியாகிய ஊசலிலாடாநிற்கும். தொகுதியாகிய வானரங்கள் (அவற்றைப்) பார்த்து, சிறு கொடிகளாகிய ஊசல்களிலாடாநிற்கும். இளம் பருவமுடைய ஆடவர்களது எழுகின்ற மனமுஞ் சிறந்த காமமயலென்னும் ஊசலிலாடாநிற்கும். எ - று

கழுமணி - சாணையிட்ட மணியென்க. (சரு)

வெள்ளோதிம மலர்மேல்விளை யாடுங்கய மாடி
முள்ளோடெழு கொடியம்புய முருகார்மலர் குவளைக்
கள்ளோடலர் குமுதங்கொடு கண்டார்மன மறுகாற்
புள்ளோடணி தொடைசெய்குவர் புனமாமயி லனையார்.

(இ - ள) வனத்திற் சஞ்சரிக்குஞ் சிறந்த மயிலினை (சாயலால்) ஒத்த மாதர்கள், வெள்ளிய அன்னங்கள் மலர்களின்மேலே விளையாடுகின்ற கயங்களில் மூழ்கி, முள்ளோடு முளைக்கின்ற கொடியிற் பூத்த தாமரைகளையும், வாசனைபொருந்திய மலர்களாகிய குவளைகளையும், தேனோடு விகசித்த அல்லிகளையுங்கொண்டு, கண்டவர்களது மனத்தையும் வண்டுகளோடு (சேர்த்து) அழகிய மாலை கட்டுவார்கள். எ - று

அறு கால் - ஆறு கால்களையுடையது, வண்டு இது பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழி. தொடை - தொடுக்கப்படுவது.

இச்செய்யுளில், நீர்விளையாட்டும் மலர் கொய்தலுங் கூறப்பட்டன. (சச)

வண்ணந்தரு கனகத்தொடு மணியுங்கறை பெய்து
திண்ணந்தரு முசலங்கொடு செங்கைத்தொடி யுழலச்

சுண்ணஞ்செயு மடவாரிடு துகினீங்குபு கொங்கைக்
கிண்ணமவிழி படவாடவர் கிண்ணந்தன நேர்வார்.

(இ - ள்.) அழகுசெய்கின்ற பொன்னுடன் மணியையும உரலிற்பெய்து, வலிமைவாய்ந்த உலக்கையைக்கொண்டு, செவ்விய கரத்திலணிந்த வளைகளலையும்படி (பொற்) சுண்ணமிடிக்கும் மடவார்கள இட்டுள்ள மேலாடையானது நீங்கி (அவர்களது) கொங்கையாகிய கிண்ணமானது (ஆடவர்) விழிகட்குத்தெரிய, (அவர்கள) கிண்ணமளவாகிய தனத்தை (அம்மாதர்கட்குக்) கொடுப்பார்கள். எ - று.

கனகமு மணியும் பெய்து என்றதனுனே சுண்ணமென்பதைப் பொற்சுண்ணமென்றும். இச்செய்யுளிற் பொற் சுண்ணமிடித்தல் கூறப்பட்டது. (௬௫)

கிள்ளைத்திரள் பூவைத்திரள் கிளர்கூட்டிடை யுய்த்து
வள்ளத்தன மான்பாலொடு வைத்தூட்டுபு மறைபோன்
மெள்ளப்பயில வித்தின்னிசை மென்சொற்களை மாத
ரெள்ளற்றிற மினியின்னெம தின்சொற்கென மகிழ்வார்.

(இ - ள்.) மாதர்கள் கிளிகளின் கூட்டத்தையும், நாகணவாய்ப் புட்களின் கூட்டத்தையும் விளங்குகின்ற கூட்டில் விடுத்து, கிண்ணங்களிற் சாதமும் பசும் பாலும் வைத்தூட்டி, இனிய இசைபொருந்திய மெல்லிய சொற்களை மந்திரம்போல மிருதுவாகக் கற்பித்து, இனி எமது இன்சொற்கட்குக் குறைகூறுந்திறமில்லையென்று மகிழ்வார்கள். எ - று. (௬௬)

சிலைவாணுதன் மடவார்திலகமும்வார்குழன் மலரு
முலைமேலணி களபங்களு முன்னுங்களி செய்யுங்
கலைநீவிய கலவித்தொழில் கதுவித்தம தியல்பு
குலைவாகிய பின்னுங்களி செய்யுங்குண மிகுந்தே.

(இ - ள்.) விலலைப்போன்ற ஒள்ளிய புருவத்தையுடைய மாதர்களது திலதமும், நெடிய அளகத்திலணிந்த மலர்களும், தனங்களிலணிந்த கலவைச்சாந்த முதலியவைகளும் (கலவிக்கு) முன்னரும் விருப்பையுண்டுசெய்யும். ஆடையை நீக்கிய புணர்ச்சித்தொழில் பொருந்தித் தமதியற்கை யழிவாகிய பின்னரும், குணமிகுந்து மகிழ்புண்டாக்கும் எ - று. (௬௭)

ஊடிச்செலு மடவார்தம தொளிர்மேகலை பற்றி
வாடித்தளர் வுறுமைந்தர்கள் வாங்கக்கமழ் சுண்ண
நீடிக்கிளர் தீபங்கெட நேரோச்சியும் விழிகண
மூடித்தலை குனிவார்மணி முற்றுந்திவண் மாடம்.

(இ - ள்) முற்றும் நவரத்தினங்களால் விளங்குகின்ற மாளிகைகளில், ஊடல்கொண்டுசெல்லும் மங்கையர்களது பிரகாசிக்கின்ற மேகலையை, மனவாட்டமுற்றுத் தளர்ச்சியடையும் ஆடவர்கள பற்றியீர்க்க, (அம்மாதர்கள்) மணம்வீசும் (முத்துச்) சுண்ணத்தை மிக்க ஒளிவிளங்குந் தீபமணையும்படி நேரேவீசியும், கண்களைமூடி (நாணத்தால்) தலைகுனிவார்கள். எ - று.

மேகலை - எழுகோவையணி. சிலர் எண்கோவையணி யெனவுங்கூறுவர்.

நச்சினார்க்கினியர்

"எண்கோவை காஞ்சி யெழுகோவை மேகலை
பண்கொள கலாபம பதினாறு - கண்கொள்

பருமம பதினெட்டு முப்பத் திரண்டு
விரிசிகை யென்றுணரற் பாற்று"—எனப் பத்துப்பாட்டுரையிலும்,

"எண கோவை மேகலை காஞ்சி யிருகோவை
பண் கொள கலாபமிரு பததொன்று - கண்கொள்
பருமம் பதினறு முபபத திரணடு
."—எனப் பிறருங கூறுவதானுணர்க. (சஅ)

வே று.

மலர்நத மகிழ்வா லாடவாதம வடிவம வரிபபான படமெடுபபக்
கலநத பரதநதை யொருததியுருக கவினத் தீடட முயனறீரென
றலாநத கமலச சீறடியொன றணிபூங குஞசி முடிசூடடிப
புலநது போவாா மேகலையும பொனனஞ சிலம்பு மொலிடுமே.

(இ - ள்) ஆடவாகள் பரந்த மகிழ்ச்சியால், தமதுருவததைச சித்திரிக்கும் பொருட்டுப் படததையெடுகக, (ஓ! ஓ! நீர) கூடிய வேசையொருததியின வடிவை அழகுபெற வெழுதமுயனறீரெனறு, மலாநத தாமரைபோன்ற சிறிய பாதமொனறை, அழகிய மலாசூடிய முடியிற சூடடி [உதைதது] ஊடல்கொணடு செலலுமஙகையாக ளது மேகலாபரணமும, அழகிய பொறசிலமபுகளும ஒலிடும, எ - று.

சீறடி=சிறு+அடி. இது முதனீளாதாயின சிற்றடியெனவரும். (சகூ)

கலவி யிடதது நீராடுங கருமத திடததுங் கழிகின்ற
கலனு முடையும போலாத கையில வளைசோா வனநோககிப
பலனை மணநதெம போலிவாககுப பகைததீ ரோவென றுடவாகள
பலநன குறைததுத தணிதிருததும பாவை யனையாா குழுவெஙகும

(இ - ள) புணாச்சிககாலததும, நீராடல் செய்யுங்காலத்தும விலக்குகின்ற ஆபரணஙகளும ஆடையும போலாத கையிலுள்ள வளைகள சோர்வனவற்றை ஆடவாகள பாாதது, (வளைகளே! நீரும்) எமமைப்போற் பலரையுங்கூடி இவாகளைப் பகைததீாகளோ? எனறு பலவாாததைகளை நனறுககூறி, கோபந தணிககும பொற பதுமைபோனற மஙகையா தொகுதியெஙகும (உள்ளன.) எ - று. (ரு0)

ஊடும் பொழுது மடவாாக ளுணாாதத வுணாாநதைந தமணியினமேற்
கூடும பொழுது மலாப்பொயகை குடையும் பொழுதும பசுமபொழிவி
னுடும பொழுதுஞ சிதாநதுவிழு மணஙக ளார்தங் கலனிரவு
நீடும பொழுது மிருள்பருகி நெடுவான புரையு மிடைககரே.

(இ - ள.) மங்கையர்கள ஊடல்கொள்ளுங காலத்திலும், புலவிநீகக ஊடல் தவிர்ந்து பஞசசயனததின்பேரிற் கலவிசெயயுங் காலததிலும, மலாததடாகததில மூழ் குஙகாலததிலும,பசிய சோலையில் விளையாடுஙகாலததிலும, சிதறிவிழுகினற மஙகைய ரது ஆபரணஙகள், மிக்க இராக்காலததும் இருளையொழிதது (கிறறலின) இடைநகர மானது நெடிய ஆகாயததை யொததிருககும். எ - று.

ஐந்தமணிகள - இலவம்பஞ்சு - செமபஞ்சு - வெண்பஞ்சு - மயில்-அனனத் தூவி யெனப்படும. (ருக)

தண்ணாந தாளங் கலநதமண றைநநத பொழிலும பலநீரும்
வண்ணாந தழைசந திரகாநத மணிமா டமுமல குதலானும

திண்ணந் தருசூ ரியகாந் தத்திரண் மேடையுமல் குதலானும்
விண்ணந் தங்கே யறுபருவம் விளைக்குந் துயரு மிலதனுவே.

(இ - ள்.) குளிர்ந்த அழகிய முத்துக்கள் கலந்த மணலமைந்த சோலையும், பலநீரும், அழகமைந்த சந்திரகாந்தக் கற்களாலாகிய மாளிகையும் மிகுந்திருத்தலானும், வலிமைவாய்ந்த சூரியகாந்தக் கற்களாலமைந்த மேடைகள் நெருங்கியிருத்தலானும் ஆகாயத்தைப்போலவே ஆறிருதுக்களும் விளைக்குந் துயரங்களும் அவ்விடை நகரம் உடைத்தாயிலது. எ - று. (நூஉ)

நாக மணக்கு நாகமுழை நண்ணி நவைதீர் முனிவோர்கள்
யோக முழக்கு மாறேபோல் யோக மிகுந்த விளையார்கள்
போக முழக்கு மிடைநகரம் புகன்று மினியுண் ணகரகழி
மாகநிவக்கு மதின்முதலா வரிசை யாக வுரைசெய்வாம்.

(இ - ள்.) ஆகாயமளாவிய மலைமுழையிற் பொருந்தி, குற்றந் தீர்ந்தமுனிவர்கள் யோகத்திற் பயிலுமவ்வகையே போல, இளைஞர்கள் புணர்ச்சி மிகுந்து போகங்களைத்துய்க்கும் இடைநகர் (வளங்களை) சொன்னோம். இனி, உண்ணகரத்தில் அகழியும் ஆகாயமளாவிய மதிலும் முதலானவற்றை வரிசைபடக் கூறுவாம். எ - று. (நூங)

உண்ணகர்.

வேறு

நெய் கலந்த வோதி மாதர் நெஞ்சி னூறு வஞ்சமு
மெய்க லந்த ஞான யோக மேவி னார்க ளுள்ளமுங்
கைக லந்து முக்க ணனக் டைக்க ணிக்கு மவ்வணமு
மைக லந்த ளக்கி னுமள கொ ணுக்கி டங்கரே.

(இ - ள்) நெய்பூசிய கூந்தலையுடைய மாதர்களது மனதிற் பொருந்திய வஞ்சகமும், உண்மைகலந்துள்ள ஞானயோகத்தைப் பொருந்தினவர்களது மனமும் திரிநேத்திரங்களையுடைய சிவபெருமான் கைகலந்து திருக்கடைக்கண் சாத்தும் வகையும், அழகுபெற அளவிட்டாலும் (அந்நகரத்து) அகழி அளவுசெய்யப்படாது எ - று.

உறுப்பெ திர்ந்த கஞ்ச மாம்ப லுற்ப லங்கள் வள்ளைகண்
மறுப்ப டாவ னிச்ச மோடு மற்று மாத ரேவலா
லிறுப்ப வேற்றை மள்ளர் சூழ்ந்த தென்ன மென்ம லர்க்குலம்
வெறுந்த தண்கி டங்கின் மாடு வேழம் பூத்து நிற்குமே.

(இ - ள்.) அவயவங்களை யெதிர்ந்த தாமரைமலர்கள் ஆம்பன்மலர்கள் உற்பல மலர்கள் வள்ளைக்கொடிகள் குற்றமடையாத அனிச்சமலர்களுடன் பிறவற்றையும் மங்கையர் கட்டளைப்படி தண்டிக்க, வேற்படைதாங்கிய மள்ளர்கள் சூழ்ந்தாற்போல,மெல்லிய மலர்க்கூட்டங்கள் விசேடித்து விளங்கும் தடமாகிய அகழியின் பக்கலில், நாணல்கள் விளங்கிநிற்கும். எ - று (நூரு)

தெளிந்த தண்கி டங்கு மாதர் சேர்ந்தி ருஞ்செ யற்கையாற்
குளிர்ந்தி னிக்கு நீர் தாயக்கொ ழுங்கண் மீம ணத்தினோ
டொளிர்ந்த லர்ந்த பூவ தாயு லாவும் வண்டி னோசையால்
விளிந்தி டாம லைம்பொ ழிக்கும் வேண வாவி ளைக்குமே.

(இ - ள்) தெளிந்த தண்ணிய அகழியானது மாதர்கள் சேருகின்ற செயற்கையாலும், குளிர்ச்சியுற்று இனிக்குந் தன்மையுடையதாயிருத்தலாலும், கொழுவிய சிறந்த தேன்மணத்தோடு பிரகாசித்து மலர்ந்த பூவினையுடையதாயிருத்தலாலும், உலாவுகின்ற வண்டியின்னொலியாலும், ஐம்பொறிக்கும் வேண்டிய ஆசையைக் கெடாமற் கொடுக்கும். எ - று.

ஐம்பொறிக்கும் அவாவிளைத்தல் —மாதர்செய்றகையால-பரிசமும், இனிப்பால் - இரதமும், மணத்தால் - கந்தமும், பூவால - ரூபமும், ஓசையால் சத்தமும் உண்டாகுமெனக்கொள்க. (௩௬)

துள்ளு கெண்டை வாளை முட்சு றுவ ரான்ம லங்குமீ
னெள்ளு ஞெண்டு டங்கர் கூர்ம மெண்ணி லாவு யிர்த்தொகை
யுள்ளு லாவ மேலெ லாமு வக்கு மாண்பின வகலாவ
வெள்ள நீர்க்கி டங்கு மன்ற வேசை மாதர் போலுமே.

(இ - ள்.) துள்ளுகின்ற கெண்டைமீன்கள் வாளை மீன்கள் - முள்ளையுடைய சுறுமீன்கள் - வரால்மீன்கள் - மலங்குமீன்கள் - இழிவாகிய நண்டுகள் - முதலைகள்-ஆமைகள் (முதலிய) கணக்கிலாத உயிர்த்தொகைகள் உள்ளே யுலாவாநிற்க, மேலிடமுழுதுங் களிக்கும் மாட்சிமையுடனிருத்தலால், மிக்க நீர் பொருந்தியுள்ள அகழியானது நிலைபெற வேசைமாதரை யொத்திருக்கும் எ - று.

அகழியானது மேலே நயங்காட்டி உள்ளே வஞ்சகமடைந்துநிற்கும் வேசையைப்போன்றிருக்கும் என்பது கருத்து (௩௭)

அளக்க ரொத்த தண்கி டங்கு கன்ற நொச்சி யோடுதான
விளக்க முற்று நீக்க மின்றி மேவு நட்பி ஞாதமைத
துளக்க மின்றி யொட்ட லாத்து ளங்க வென்று நிற்றலா
லிளக்கு றும திற்கு வாய்த்த வில்லின மாது போலுமே.

(இ - ள்) சமுத்திரம்போன்ற தட்பமாகிய அகழியானது விசாலமாகிய மதிலுடன் பிரகாசித்து, நீக்கமில்லாது பொருந்திய நட்பாளனை நீங்குதலின்றிப் பகைஞர்களை நீங்கும்படி சயித்து நிற்றலால், வன்மை வாய்ந்த மதிலுக்குப் பொருந்திய மனைவிபோன்றிருந்தது. எ - று. (௩௮)

நாகர் வாழும வைப்பு முமபர் நண்ணி வாழும வைப்புமிப
போக பூமி யொக்கு மேறபு குந்து காணகு மென்றுசென
றோகை யோடு கீழு மேலு மோங்கி டங்கு நொச்சியு
மீகை யாளர் கீர்த்தி யென்ன வென்று நின்றி லங்குமே

(இ - ள) நாகர்கள் வாழும் பாதலலோகமும், தேவர்கள் பொருந்திவாழுஞ் சுவர்க்கலோகமும், இந்தப் போகபூமியைப் போன்றிருக்குமாறு காணபோமென்று, ஒள்ளிய அகழியும் மதிலும் (முறையே) கீழும் மேலுஞ் சந்தோஷத்துடன் சென்று, கொடையாளிகள் கீர்த்தியைப்போல எக்காலமும் பொருந்தி விளங்கும் எ - று

கிடங்கு கீழும், நொச்சிமேலுஞ்சென்று எனக்கூட்டிக் கொள்க (௩௯)

எண்மை மாதி ரத்தி ஞரி மைத்தி டாத பார்வையாற
றிண்மை யாக ஆறு வந்து சேரு மிந்த காக்கெனு
வுண்மை நாடி யேய மைத்த தொக்கு நொச்சி யின்னுளார
வண்மை நோக்க மாறற வேம மிந்த நீங்கும வாரகொடி.

(இ - ள்.) மதிலானது எட்டுத்திக்குப் பாலர்களது இமைகொட்டாத நோக்கத்தினால், இச்சென்னை நகரத்திற்கு வலிமையாக இடையூறுவந்தடையுமென்று உண

மைகருதியே (அதனை யவர் நோக்கம்படாது) அமையச்செய்தது போன்றிருக்கும். ஆகாயத்திலுள்ள(ஏனைய)தேவர்களது வளவிய திருஷ்டியை மாற்றும்படிக்கே நெடிய கொடிகள் எங்கும் நிறைந்தன (ஆகும்). எ - று.

தேவர்களில் அட்டதிசைகளிலுள்ளார் கண்படாது மதிலும், விண்ணிலுள்ளார் கண்படாது பதாகையும் மறைக்குமென்பது கருத்து. (௬௰)

மாறு கொண்ட மன்னர் போர்க்கு வந்திடாமுன் சென்றவர்க
ளீறு கண்டு மீளும் வீர ரெண்ணி லார்து வன்றுற
நீறு தீற்று மாட மூடு நிற்ற லானு மிந்நகர்க்
கூறு தீர்ப்ப வேயி ழைத்த தாகு மோங்கு மாமதில்.

(இ - ள்.) பகைமைகொண்ட அரசர்கள் போர்புரிதற்குவராமுன்னரே (எதிர்) சென்று அவர்கட்கு இறுதிசெய்து திரும்பும் கணக்கில்லாத (யுத்த) வீரர்கள் பொருந்திவாழ, சுண்ணாந்தீற்றிய (சுவர்த்தலங்களையுடைய) மாளிகைகள் உள்ளே நிற்பதாலும், உயர்ந்த பெரியமதிலானது இச்சென்னை நகரத்திற்கு இடையூறு தவிர்க்கவே செய்விக்கத்தாகும். எ - று.

பகைஞரை யெதிர்சென்று வென்றுவரும் வண்மையுடையார், மாளிகைகளில் உள்ளேவாழவும், (பகைவரால்) நகருக்கிடையூறு வேண்டாது மதிலானது (தானே) உயர்ந்துநிற்கும் எனபது கருத்து. (௬௧)

நொச்சி யுச்சி வேய்ந்து நீண்ட நொச்சி யோடு போர்செய
விச்சை யுற்று மன்னர் வந்தெ திர்க்கு மண்ண முண்டெனி
னச்ச மிந்ந கர்க்கண் வாழு நல்ல வீரர் வேண்டுமோ
மெச்ச வெந்தி ரங்க ளேவி னைந்து போர்வி ளைக்குமே.

(இ - ள்) நொச்சிமாலையை முடியிற்சூடி நெடிய மதிலுடன் போர்புரிய விருப்பங்கொண்டு (பகை) அரசர்கள் வந்து எதிர்க்கின்ற வகையுளதாயின், விரும்பத்தக்க இச்சென்னை நகரத்தின்கண் வாழ்கின்ற நல்ல (போர்) வீரர்களும் வேண்டப்படுமோ? (வேண்டுவதில்லை, ஏனெனில் அம்மதிலிற் பொறித்த) யந்திரங்களே (கண்டோர்) மெச்சும்படி விரைந்து போர்செய்யும் எ - று.

மதிலினை முற்றுகைசெய்யவந்த மன்னவன் நொச்சிமாலையணிந்துவருதல், மரபாகலின் "நொச்சி யுச்சி வேய்ந்து" என்றார். (௬௨)

வந்து மன்னர் நொச்சி முற்றின வார்ந்த தண்ட மோச்சியே
வெந் திரக்க டாக்க ளிற்றி னங்க ளிர்த்த தேரடு
முந்த வோடி மாம டங்கன் முற்று மேழ மட்டெழுங்
குந்த மள்ளர் வாம்ப ரிக்கு லஞ்ச வட்டும் வேங்கையே.

(இ - ள்) (பகை) அரசர்கள் வந்து மதிலினை முற்றுகைசெய்தால், மதஞ்சொரியும் எந்திரயானைத்தொகுதிகள் தண்டாயுதங்களைவீசி ஒளிவிடுந்தேர்களை யழிக்கும். சிறந்த சிங்கப்பொறிகள் முழுதும் முற்பட்டோடி யானைகளைக்கொன்றெழும். வேங்கைப்பொறிகள் ஈட்டியேந்திய மள்ளர்களையுந் தாவிச்செல்லுங் குதிரைத்தொகுதியையுமழிக்கும். எ - று

மதிலிலுள்ள பொறிகளில் யானைப்பொறிகள் பகைஞர் தேர்ப்படையையும், சிங்கப்பொறிகள் யானைப்படையையும், வேங்கைப்பொறிகள் ஆட்படையையுங் குதிரைப்படையையும் அழிக்குமென்றார் (௬௩)

எழுக்கள் கப்ப ணங்கள் வேலி ருப்பு லக்கை நாந்தகங்
கழுக்க டைக்கு லங்குயங் கதைக்கு லங்க லப்பைகள்
மழுக்கள் பிண்டி பால மால்வில் வாளி சூல நேமிகள்
முழுக்க வுய்க்கு மோடு நீளு மொய்ம்பி னெந்தி ரங்களே.

(இ - ள்.) (அம்மதிலின்) வலியுடைய யந்திரப்பொறிகள், வளைதடிகள் - இருப்பு நெருஞ்சின்முட்கள் - வேற்படைகள் - இருப்புலக்கைகள் - வாட்கள் - ஈட்டித் தொகுதிகள் - அரிவாட்கள் - கதைக்கூட்டங்கள் - கலப்பைகள் - மழுக்கள் - பிண்டிகள் - பாலங்கள் - நெடியவிற்கள் - அம்புகள் - சூலங்கள் - சக்கிரங்கள் - (முதலிய வற்றை) முழுதுஞ்செலுத்தாநிற்கும், ஓடாநிற்கும், திரும்பாநிற்கும். எ - று. (கூச)

செருப்பு கன்று வந்த மன்னர் சேனை மேலு ருக்கிய
விருப்பு நீர்கள் செப்பு நீர்க ளீய மோடி றைப்பன
நெருப்பி னோடு கல்லு லோக நீளி டைச்செலுத்துவ
வுருப்ப மிக்கு யாவு மங்கு லப்பி லாத மல்குமே

(இ - ள்) போர்புகன்று வந்த அரசர்களது சேனைகளின்பேரில், உருக்கிய இருப்புநீர்களையும் செப்புநீர்களையும் ஈயநீர்களையும் இறைப்பனவும், நெருப்புடன் கல்லும் உலோகங்களும் உட்டிணமிகுந்து நெடுந்தூரத்திலெறிவனவும், (முதலிய) எல்லா யந்திரங்களும் அம்மதிலில் அழிதலில்லாதனவாகி நிறைந்திருக்கும் எ - று.

மாசை யைக்கு வித்த விந்த மாந கர்க்க ணும்பர்கள்
பூசை யைக்கு றித்த லாது போர்க்கு றித்து றேன்மி னென்
றிசை யைக்கு றித்த நொச்சி யங்கை யான்ம றித்தல்போ
லோசை யைக்கு றித்து நீடு மொண்ப தாகை யாடுமே.

(இ - ள்) பொன்னைக்குறித்த[செல்வமவாய்ந்த]சிறந்த இச்சென்னை நகரத்திற் பூசைபெறுதலைக் கருதியல்லது, போர்செய்தலைக் கருதிவாரீர்கள் தேவர்களே என்று, திசைகளை யளவிட்ட மதிலானது அழகிய தனது கைகளால் தடுத்தல்போல, சீர்த்தியைக்குறிப்பிட்டோங்கும் ஒள்ளிய துவசங்கள் ஆடாநிற்கும் எ - று (கூரு)

எண்ணில் பட்ட ணங்க ளுக்கு மேந்தன் மன்ன னாகவே
பண்ணி யிந்த வொப்பி லாத பட்டி னத்தை மற்றித
னுண்மை யாரு மோர்ந்து கொள்ள வோங்கு மௌலி சூட்டிய
வண்மை காட்டி நிற்கும் விண்வ ளாந்தொ ளிர்ந்த கோபுரம்.

(இ - ள்.) (இச்சென்னைநகரில்) ஆகாயமளாவி உயர்ந்து பிரகாசிக்குங் கோபுரமானது, இந்தச் சமானமில்லாத சென்னைநகரத்தை, கணக்கில்லாத நகரங்களுக்கும் பெருமைவாய்ந்த (நகர) ராசனாகவே செய்து, இதனது உண்மையை எவரு மறிந்து கொள்ளும்படி, உயர்ந்த கிரீடத்தைத்தரித்த வண்மையைக் காட்டிநிற்கும் எ - று.

உடுக்கள் கோள்க ளுள்கண் மற்றை யும்ப ராரும் வானவழி
விடுக்கி னும்வி டாது நாளு மேவு மாறு காலமு
மடுக்கு நாற்கு லத்த ருமம டைந்தெ ழுந்து செல்லவே
தடுக்கு மாறி லாது லுந்த யங்கு வாய்தல் யாவுமே.

(இ - ள்.) விண்மீன்கள் - கிரகங்கள் - நக்ஷத்திரங்கள் - பிறதேவர்கள் முத லியோரும் ஆகாயவீதியை விடுத்தாலும் (தாம்) விடாது தினந்தோறும், பொருந்திய

சிறுபொழுதாறிலும் (தம்பால்) வரும் நாற்குலத்துத் தோன்றியவர்களும் நெருங்கித் தோன்றிச் செல்லும்படி தடுக்கும் வகையில்லாமற் பொருந்திய வாயில்களெல்லாம் (அந்நகரில்) விளங்கும். எ - று.

கிரகங்கள் - சூரியன் சந்திரன் முதலிய நவகிரகங்கள். கோள்கள் - அசுவனி பரணி முதலிய இருபத்தேழு நக்ஷத்திரங்கள். சிறுபொழுதாறு - மாலை யாமம் வைகறை விடியல் நண்பகல் எற்பாடு எனப்படும்.

நாற்குலத்தர் - பிராமணர் அரசர் வைசியர் சூத்திரர். (சுஅ)

வந்தெதிர்ந்த தெவ்வின மன்னர் மாமணிமுடித் தலை
முந்துறப்ப ணித்திருமபொன் முற்றும் வாங்கு நொச்சியின்
சந்தமின்ன துற்றமைந்தர் தம்பொருள்கவர்ந்தவர்
சிந்தையும்ப ணிக்குமாதர் சேரி வண்மை செப்புவாம்.

(இ - ள்) (தன்னை) வந்தெதிர்ந்த பகையரசர்களின் சிறந்த மணிகளிழைத்த கிரீடமணிந்த சிரங்களை முதலிற் பணியச்செய்து (அவர்களது) பெரும்பொருண் முழுவதையும் வாங்குகின்ற மதிலின் அழகு இத்தகையது. (தம்பால்) வந்த ஆடவர்களது செல்வத்தை யபகரித்து அவர் மனத்தையும் பணிவுறச்செய்யும் பரத்தையர் சேரியின் வளத்தைக் கூறுவாம். எ - று. (சுகூ)

வேறு

போர்த்தொழிலிற் றமைவென்று பொருள்கொளவெண் ணுநர்கசுத்து
பார்த்திபருங் குழையவிழிப் படைவிடுத்துள் ளுயிரோடு [செய
கூர்த்தபொருணிலமுழுதுங் கொள்ளைகொண்டு மவர்குறித்த
சீர்த்தசுக மளித்துவப்புச் செய்பவர்சே ரிகளபலவால.

(இ - ள்) போர்த்தொழிலாற் றம்மைவெற்றிகொண்டு (தமது) பொருளை யபகரிக்க நினைப்பவர்கட்கு, அவ்வண்ணம் (தாமே) செய்கின்ற அரசர்களும் மனமிளக விழியாக (வேற்) படையைச்செலுத்தி, உள்ளிடத்துள்ள உயிருடன் மிக்கபொருளும் நிலமும் (முதலியவற்றை) முழுதுங் கொள்ளைகொண்டும், அவர்கள் கருதிய சிறந்த சுகத்தைக்கொடுத்துச் சந்தோஷப்படுத்தும் பரத்தையர் சேரிகள் (அந்நகரத்திற்) பலவாகும் எ - று.

ஆல் - அசை (எ௦)

இந்திரனு புலோமசையோ டினிதமர்பள் ளியுநாண
வந்திளங்காற் றவழ்ந்தசைய மலர்மாலை பலதூங்கச்
சந்தனங்குங் குமம்புழுகாற் றரைமெழுகித் துமணிப்பந்தர்
சுந்தரமா யெவர்விழிக்குஞ் சுகமளிக்கும் வாய்தொறும்.

(இ - ள்) தேவேந்திரன் அயிராணியுடன் இனிதாகப் பொருந்திய நகரமும் நாணமடையும்படி (பரத்தையர் சேரிகள்) வாயில்கடோறும் மந்த மாருதம் வந்து தவழ்ந்தசையவும், பல மலர்மாலைகள் தொங்கவும், சந்தனம் குங்குமம் புழுகு முதலிய வற்றாற்றரைமெழுகியும், முத்துப்பந்தர்கள் அழகாயும் (விளங்குதலின்,) எல்லார் கண்கட்குஞ் சுகத்தையுண்டுசெய்யும். எ - று

இளங்கால் தவழ்ந்தசைதல் - இளங்காற்றுமெல்லென நடந்து வீசுதல். (எக)

தூமத்தி னறுங்கூந்தற் றொடிக்கைமட வாரிடத்துக்
காமத்தை விழையாத கருத்தினரா ரைம்பொறிக்குந்
தாமத்தி னறுங்கனியிற் றவழிளந்தென் றலிற்கிளியின்
வாமத்தி னிருஞ்சுகமே வளாப்பதவர் மாடமுமே.

(இ - ள்) (அகிற்) புகையூட்டிய மணமமைந்த அளகத்தையும் வளையலணிந்த கையையுமுடைய அப்பரத்தையர்களிடத்தில், ஐம்பொறிகளுக்கும் காமங்கொள்ளாதவர்கள் யாவர்? (ஒருவருமிலர், ஏனெனில்) அவர்கள் மாளிகைகளும், மலர்மாலையாலும் நல்ல பழங்களாலும் தவழ்கின்ற இளந்தென்றலாலும் கிளிகளாலும் அழகாலும் பெருஞ்சுகத்தையே வளரச்செய்வது (ஆதலின்) எ - று.

ஐம்பொறிக்கும் காமத்தை விழைதலை,

திருக்குறள்.

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடி கண்ணே யுள."—என்பதனுணர்க. (எஉ)

மாடகத்தின யாழெடுத்து வார்நரம்பு தகப்பண்ணி
யாடகப்பன் மணியாழி யங்குலியி னிசையெழுப்பும்
பாடகத்தி னடிமடவா ர்பயிலரங்கி னுடட்யரு
நாடகத்தைக் கண்டவாக ணல்லுள்ளு மரங்காமே.

(இ - ள்) முறுக்காணியையுடைய வீணையை யெடுத்து, நெடிய நரம்புகளைத் தகுதிசெய்து[சுருதிகூட்டி]ஆடகப்பொனனுற்செய்த பலரத்தினங்களிழைத்த மோதிர மணிந்த விரலாற் பண்ணோசையை யெழுப்புகின்ற பாடகமணிந்த காலையுடைய பரத்தையர் பழகுகின்ற சபையில நடனஞ்செய்யு நாடகத்தைப் பார்த்தோரது நல்ல மனமும (அவர்கள்) நடனசாலையாகும். எ - று.

மாடகம - முறுக்காணி யாழ் - வீணை. இது பேரியாழ் - மகரயாழ் - சகோட யாழ் - செங்கோட்டியாழ் - என நால்வகைத்து இவற்றுள், பேரியாழுக்கு நரம்பு இருபத்தொன்றும, மகரயாழுக்கு நரமபு பதினேழும, சகோடயாழுக்கு நரமபு பதினாறும், செங்கோட்டியாழுக்கு நரமபு ஏழுமாம். இவற்றை,

"பேரியாழ் பின்னு மகரஞ் சகோடமுடன்
சீர்பொலியுஞ் செங்கோடு செப்பினுா—தார்பொலிந்து
மன்னுந் திருமார்ப வண்கூடற் கோமானே
பின்னு முளவே பிற.

ஒன்று மிருபது மோரேழ்மேற் பத்துடனே
நின்றபதி னுறேழு நேடுங்கால் - குன்றாத
நால்வகை யாழிற்கு நன்னரம்பு சொன்முறையே
மேல்வகை நூலோர் விதி,"—என்னும் நச்சினார்க்கினியர் உதாரணச் செய்யுள்களானறிக.

நரம்பு தகப்பண்ணுதலாவது, பாட நினைத்த பண்ணுக்கு இணை கிளை பகை நட்பான நரம்புகள் பெயருந் தன்மை மாத்திரையறிந்து வீக்குதலாகிய பண்ணல்-அவ் வீக்கின நரமபை விரல்களால அகமும புறமுங் கரணஞ்செய்து தடவிப்பார்த்தலாகிய பரிவட்டணை - ஆரோகண அவரோகணவகையால இசையைத் தெரிதலாகிய ஆராய்தல - அநுசுருதியேற்றுதலாகிய தைவரல - ஆளத்தியே நிரம்பப்பாடுதலாகியசெலவு-

பாட நினைத்த வண்ணத்திற் சந்தத்தை விடுதலாகிய விளையாட்டு - பாட நினைத்தவண்ணத்திற் செய்த பாடலெல்லாம் இன்பமாகப் பாடுதலாகிய கையூழ் - குடகச் செலவுந் துள்ளற்செலவும் பாடலாகிய குறும்போக்குமுதலிய கலைத்தொழில்களால் நரம்பினைத் தகுதியுறச்செய்தல்.

இசையெழுப்புதல் - வார்தல் வடித்தல் உந்தல் உறழ்தல் உருட்டல் தெருட்டல் அள்ளல் பட்டடையென வெண்வகை. அவைமுறையே எடுத்தல் படுத்தல் நலிதல் கம்பித்தல் உருட்டு ஒலி குடிலம் தூக்கு எனப்படும். இவை யாவும் இசையிலக்கணமாதலின் அந்நூலுட் பரக்கக்காணக. (௭௧)

புளகமெழ முலைவருடிப புயத்திலணைத திதழ்பருகி
வளர்நுதறை வரலாதி புறத்தொழிலு மணியலகு
ளுளநெகிழுங் கரிகரலீ லைகளாதி யுட்டொழிலு
மளவிலவுஞ சித்திரத்தி னமைத்தனரா வணமேபோல்.

(இ - ள்) மயிர்க்கூசசெறியும்படி முலையைவருடி, தோளிலணைத்து, இதழைச்சுவைத்து வளர்கின்ற நெற்றியைத் தடவுதல் முதலிய புறத்தொழில்களும், அழகிய அல்குலில மனங்களிக்குங் கரிகரமுதலிய லீலைகள் ஆகிய உட்டொழில்களும எண்ணிலலாதன (பிற)வும், (அந்நகரப்பரத்தையர்கள) கடைவீதிபோலச சித்திரங்களாற் பொருத்தியுள்ளாரகள். எ - று.

கரிகரம் - யானையின்கை. அது விரனுனியை வளைத்துச் செய்வதோர் இரீடையெனக. இவ்வகை விடயங்களை இன்பநூலுட்கண்டு கொள்க. அலதேற் றனிமையிற் கற்றோரிடங் கேட்டுணாக. (௭௨)

சித்திரத்தி னவாதொழிலைச சென்றெதிர்நோக் கினுமறிவு
பொத்தியமெய் யுளத்தினரும் பொறியைந்து நிலைகலங்கப
பித்தினரா குவரென்றாற பெருமழைக்கட் பரத்தையாதந
நித்திலபபூண் முலைபுணாநதோா நீங்கினுயிா வாழ்வாகளே.

(இ - ள்.) அறிவமைந்த உண்மை மனமுடையவருஞ்சென்று அப்பரத்தையர் செயலகளைச சித்திரத்தில எதிர்கண்டாலும், ஐம்பொறிகளும் நிலைகலங்குதலாற் பித்தராவரென்றால, பெரிய குளிர்ந்த பாாவையுடைய பரத்தையர்களது முத்தாபரணமணிந்த முலையை யணைந்தவாகள (அம்மங்கையரைப்) பிரிந்தால் உயிர்தாங்குவாாகளோ ? (தாங்காாகள்) எ - று. (௭௩)

குலமகளிா தமைமணநத கொண்கனைய லாறபிறர்பாற்
கலவியுறி னவாதமமைக கறுததடக்கு மனையர்களும
பலரைமணந தனரென்றே பாறறிலராய்ச சிறப்பருள
நிலவுமர சவையடைபா நிததியமங கலமடவாா.

(இ - ள்) கற்பின் மடவார்கள தம்மை மணம்புரிநத கணவனையல்லாமற் பிறரிடத்திற புணாச்சிசெய்யின், அம்மங்கையாகளைக கோபித்தடக்கும அரசர்களும,பலரைக கலந்தாாகளென்று கோபியாதவராய்ச் சிறப்புசசெய்ய நித்தியசுமங்கலிகளாகிய வேசைகள விளங்கிய அரசசபையை யடைவாாகள. எ - று. (௭௪)

உறுபசிநாற் பெருவனப்பா லொள்ளணியா ளிளமையினன்
மறுப்படாக குலமகளிா வழியொழுகித் தருஞ்சுகமும

வெறுப்பவே காளையாகக்கு மிகுபோகம விளைக்கின்ற
சிறப்பினற் பொருண்முழுதுந திறைகொள்வா விலைமாதர்.

(இ - ள்) அவயவத்தாலும பேரழகாலும ஒளிபொருந்திய ஆபரணத்தாலும் இளமையாலும் குற்றமடையாத நற்குலததுதித்த மனைவியர் நலவழி நடந்து கொடுக்குஞ் சுகமும் வெறுக்குமபடி, விலைமாதாகள இளமாந்தர்கட்கு மிகக போகத்தைத் யுண்டு செய்கின்ற சிறப்புடன எலலாபபொருள்களையுங கப்பமாககொளவார்கள. எ - று.

முனனொன்றப் பொருளகொடுத்து முயஙகினவா கணணெதிரே
மினனொனறு மிடைமாதா விலைசெயத முலைமீட்டும
பொனனொன்று தசநூரதமா யிரமாதி புகனறெவாகளும
பின்னொன்ற விலைசெயதும பிழையுமிலா பழியுமிலா.

(இ - ள்.) மினனல்போன்ற இடையையுடைய மாதர்கள முன் (தம்மைக்) கூடப் பொருள்கொடுத்துக் கலந்தவர்களது கணணெதிரிலே (அவாகட்கு) விலைபபடுத்திய முலையை மீளவும் ஒருபொன், பத்துப்பொன, நூறுபொன, ஆயிரமபொன் முதலாக (விலை) கூறியும, பினனர் எல்லோர்க்கும பொருந்த விலைசெய்தும குற்றமுமுடையவரல்லா; பழிபபுமுடையவரல்லா. எ - று. (எஅ)

விலைகொடுத்தா வணதடுதெழுதும விளைஞருஞ்செய் யாரொனனே
தலையளியாற பொருள்கொடுத்துத தமைவிறகுங காளையாகள
கலைதிருத்தி யணியணிந்து கானமலருந தைவந்து
நிலைதருவாயத் தமபலமு நிதநதலுமவா யாறகவாவாா.

(இ - ள்.) விலைகொடுத்து (முறிச்) சீட்டெழுதும அடிமைகளும் (இப்படிச்) செய்யமாட்டாாகள் சிறந்த அனபுடன பொருளைககொடுத்துத தமமை (தாமே) விறகுங (காமுகாகளாகிய) காளைப்பருவமுடைய ஆடவர்கள (அபபரத்தையாகளது)ஆடையைத் திருத்தி ஆபரணஙகளைப் பூட்டி, பாததாமரையையும பிடித்து, நிலைத்த வாய்த தமபலத்தையும நாடோறும்(தமது)வாயினுற கொளவாாகள. இஃதென்ன ஆசசரியம். (ஆ ! ஆ !) எ - று. (எகூ)

தொடியணிகைப் பொருணிறைத்துஞ் சூழுளத்தை நிறையாாக்ருக்
கடிதலிலா வேவலர்கள காமமிகுங காளையரே
படியகமு மவாவாயே பள்ளியுமற றவாமாரபே
வடிவுபுறந தோனருமல வைபபிடமு மவாமனமே.

(இ - ள்) வளையலணிந்த கைபபொருளை நிறைவாகச சோததும், யோசிககும் மனதை நிறையாத பரதததையாககு, காமமிக்க இளமைப்பருவமுடைய ஆடவர்களே நீக்கமில்லாத அடிமைகள்; அவர்கள வாயே படியகமுமாம; பஞ்சணையும அவாகள மார்பகமே ; தமதுருவம் வெளியே தொன்றுமல வைததறகுரிய இடமும் அவர்கள் மனமேயாம். எ - று.

படியகம் - தம்பலப்படிக்கமென்றும் பூமியெனறும் பொருள்பயக்கும். (அ0)

ஆடலினற் பாடலினு லவினயததாற் பனிமொழியான்
மாடகநல் யாழிசையால் வல்லுவினை யாடலினு
லூடலினற கூடலினு லொன்றுனுங் குறைவினறி
நாடரிய பொருள்பலவு நாணுளு மீடடுவரால்.

(இ - ள்.) ஆடலாலும் பாடலாலும் அவிநயத்தாலும் குளிர்ந்த மொழியாலும் முறுக்காணியையுடைய நல்ல வீணாநாதத்தாலும், சூதாட்டத்தாலும், ஊடலாலும், புணர்ச்சியாலும், ஒருவகையிலுங் குறைவில்லாது, தேடற்கரிய பல பொருள்களையுந் தினந்தோறுந் தேடுவார்கள் (பரத்தையர்கள்.) எ - று. (அக)

துறந்தவர்க்கு முடன்முழுதுந் தோறிரைந்த முதுமையார்க்கு
மறந்தலைநின் றுய்க்குநர்க்கு மழிபிணியி னுழக்குநர்க்குஞ்
சிறந்தபரத் தையர்கலவி செய்யாமை யுறுமேனு
மறந்தழையு மவாவிழிக்கு வாடாத மனமில்லை.

(இ - ள்.) துறவிகளுக்கும், தேகமுழுவதும் மிக்க தோல் திரைந்த விருத்தர்களுக்கும், தருமவழியில் நின்று (புண்ணியங்களைச்) செய்பவர்களுக்கும், துன்பப்படும் வியாதியில் வருந்துபவர்களுக்கும், மேம்பட்ட பரத்தையர் புணர்ச்சியைச் செய்யாமை கூடுமாயினும், பாவமிகுந்த அப்பரத்தையர் கண்களுக்கு வருந்தாத மனம்(ஒன்றேனும்) இல்லை. எ - று. (அஉ)

அருங்கலமா கியமான மறவிட்டுச் சுகப்பொருளை
மருங்ககலார்க் கினிதுதவும் வரைவிலார்சே ரிகள்புகன்று
மொருங்களவி லாப்பொருளு மோவாமே விலைசெய்தும்
பெருங்கலமா கியமானம் பேணுநரா வணம்புகல்வாம்.

(இ - ள்.) அரிய ஆபரணமாகிய மானத்தை யறவேவிடுத்து, தம்மைவிட்டுப் பிரியாதவர்களுக்குக் காமசுகத்தையே இனிதாகக் கொடுக்கும் வரைவின் மகளிராகிய பரத்தையரது சேரிகளைச் சொன்னோம் எண்ணில்லாத பொருள்களையுங் கெடாமல் ஒருசேர விலைசெய்தும், பெரிய ஆபரணமாகிய மானத்தைக்காக்கும் வைசியர்களுடைய வீதியைச் சொல்லுவோம் எ - று. (அங)

வேறு

காவண மருங்கிட்டுக் கடிமலர் பலசிந்தித்
தூவண மணிமாலை தூக்கினர் விரையூட்டிப்
பூவணர்க் குலைவாழை பூகமு முறநாட்டு
மாவண நோக்குநர்க ளமரரின் வேறலரே.

(இ - ள்) பக்கங்களிற் பந்தலிட்டு வாசம்பொருந்திய பல மலர்களைச் சிந்தி, பரிசுத்தமாகிய அழகிய முத்துமாலை தொங்கவிட்டு, வாசனையூட்டிவளர்ந்த பூக்குலையையுடைய வாழையுங் கமுகும் பொருந்த நாட்டிய வைசிய வீதியைப் பார்ப்போர் தேவர்களைக்காட்டிலும் வேறலர். எ - று (அச)

வரையவும் வனத்தனவும் வயலவுங் கடலனவும்
விரைசெலற் கலன்பலவும் விண்ணிடை வெளிமாயத்
திரைதவழ் கடற்பாங்கர் சேர்த்திட வெயின்மழையிற்
புரையறு தவமாற்றிப் புகப்படு மாவணமே.

(இ - ள்) மலைபடுபொருளும், காடுபடுபொருளும், நாடுபடுபொருளும், கடல்படுபொருளும் (ஆகியவற்றை) விரைந்து செல்லுதலுடைய பல மரக்கலங்களும் ஆகாய வெளியு மறையும்படி [மிகுதியாக] அலைகள் தவழுங் கடலின்பக்கலிற் சேர்க்க, கடைவீதிகள் வெயிலிலும் மழையிலும் குற்றமற்ற தவத்தைச் செய்து (தம்பாற் அவற்றை) அடையும் எ - று (அடு)

தொகையறு பொருள்பலவுந் தூக்குபு வரைவுசெய்யுந்
தகைபெறு தராசினோடுந் தங்கலின் வணிகரெலாம்
பகையென வுறவென்னப் படாதரு ளொதுமலென
வகைவகை விலைசெய்யார் வழங்குவ ரொருவிலையால்.

(இ - ள்) கணக்கற்ற பல பொருள்களையுந் தூக்கி அளவிடுந் தகைமைபெற்ற தராசினோடும் பொருந்தியிருத்தலால், வைசியர் யாவரும், (பண்டங்களைக்கொள்ள வருவோர்) பகைவரென்றும் உறவினரென்றும் விரிந்த பற்றிகலின்மை யரென்றும் (அவரவர்கேற்ப) வகைவகையாக விற்கமாட்டார்கள், ஒருவிலையுடன் (யாவர்க்கும்) விற்பார்கள் எ - று.

தராசு "ஐயந் தீரப் பொருளை யுரைத்தலு - மெய்ந்நடு நிலையு மிகுநிறை கோற்கே" என்ற சூத்திரப்படி நடுநிலைமையைக் காட்டுமாறு அதனை யடைந்தவர்களாதலின் யாவர்க்கும் ஒருவகையாகவே விலைசொல்லி விற்பர் என்றார். (௮௬)

தினையளவைப் பொருளுஞ் சிந்துவ தில்லாக
வனைபுகழ் வணிகர்பொருள் வைகலு மீட்டிடினு
மினையவ ரிரவலர்பா லிமையவ ராதியர்பாற்
பனையளவைப் பொருளும் பயோதர மெனப்பொழிவார்.

(இ - ள்) அலங்கரித்த புகழையுடைய வணிகர்கள் தினையளவாகிய பொருளையுஞ் சிதறவிடுதலில்லையாக நாடோறும் பொருளைச்சேர்த்தாலும், இவர்கள் யாசகர்களிடத்திலும், தேவர்கள் முதலியவர்களிடத்திலும், பனையளவாகிய பொருளையும் மேகம்போலச்சொரிவார்கள் எ - று.

தினை - பனை - ஆகுபெயர்கள். இமையவராதியர்பால் என்றதில் ஆதியென்றதால், தென்புலத்தார் ஒக்கல் முதலானோரையுங்கொள்க. (௮௭)

கொடுப்பதுங் குறையின்றிக் கொள்வது மிகையின்றித்
தொடுப்பவர் தமக்கெல்லாஞ் சுருக்கிய விடைநல்கி
விடுப்பதுங் கலனின்று விழுப்பொருள் கொணர்ந்தில்லின்
மடுப்பது மல்லாது வணிகர்கண் மற்றறியார்.

(இ - ள்) வைசியர்கள் (தம்பாற் கொள்வோர்க்குக்) குறைதலில்லாது கொடுத்தலும், (தாம் வாங்குபவர்களிடத்தில்) அதிகமில்லாமல் வாங்குதலும், (தம்மை) விரும்புவாரெல்லார்க்கும், சொற்சுருக்கமாகிய விடைகொடுத்து (அவர்களைச்செல்ல) விடுத்தலும், மரக்கலங்களினின்று சிறந்த பண்டங்களைக் கொண்டுவந்து வீட்டிற் சேர்த்தலும் அல்லாமல், பிறிதொன்றனையு மறியமாட்டார்கள். எ - று.

"கொடுப்பதுங் குறையின்றிக் கொள்வதும் மிகையின்றி" என்றதை, திருக்குறள் "வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப் - பிறவுந் தம்போற் செயின்" என்றவிடத்து, "பிறவுந்தம்போற் செய்தலாவது கொள்வது மிகையுங் கொடுப்பது குறையுமாகாமல் ஒப்ப நாடிச்செய்தல்" எனக்கூறிய பரிமேலழகருரையானுணர்க. (௮௮)

ஈட்டிய பொருண்முழுது மீட்டுந ரறியினலாற்
கோட்டமி லிமையவருங் குறித்தறி தரமாட்டார்
நாட்டிய பாவலர்க ணுவலார் தொடுத்தவெலாந்
தீட்டுதற் கமைவுபெறு செறிபல பனையிலையும்.

(இ - ள்.) தேடிய பொருள்களையெல்லாம், தேடினவர்க ளுணர்ந்தாலன்றிக் கோடுதலில்லாத தேவர்களும் யோசித்து அறியமாட்டாதவர்க ளாவார்கள். (அவர்கள் புகழை) நாட்டிய பாவலர்களும் நாவலர்களும் பாடிய வற்றையெல்லாம், நெருங்கிய பல பனையேடுகளும் எழுதுதற்கு (இடம்) பொருந்துதல் பெறு. எ - று.

ஈட்டுநா - வினைப்பெயர். இதில் நகரம் நிகழ்காலத்தை யுணர்த்தியது (அ௯)

உடுப்பன சுற்றுவன வுடலுறப் போர்ப்பனவும
படுப்பன வெனப்பலவும பனிநிறத் துகினவுடை
யடுப்பன வொருபாலா மவிர்முடி குழையாரந்
தொடுப்பன வளைமற்றுந் துதைவன வொருபாலாம.

(இ - ள்.) உடுப்பனவும, சுற்றுவனவும், உடலிற் பொருந்தப் போர்ப்பனவும், படுப்பனமுதலிய பலவும, பலநிறங்களமைந்த வஸ்திரமும (ஆகியவை) ஒருபக்கலிற் பொருந்தி யிருப்பனவாம் பிரகாசிக்கின்ற கிரீடம் - குண்டலம - முத்துமாலை - தொடுப்பனவாகிய வளை முதலியனவும ஒருபக்கலில் நெருங்கி யிருப்பனவாம. எ - று

உடுப்பன - ஆடைகள் சுற்றுவன - பாகைமுதலியன போர்ப்பன - உத்தரீயம் துப்பட்டி முதலியன படுப்பன - பஞ்சணைமுதலியன பனிநிறத்துகினவுடை - திராடைமுதலியன. துகினம - சந்திரகாந்தி (௯0)

உண்பன பருகுவன வுவப்பொடு நக்குவன
நணபொடு கடிப்பனவு நலத்தகச் சுவைப்பனவுங்
கணபடு முனனுமேசெய்கக்ட கடிவிடுத் துறுவோர்த
மொணபடு மனமவாங்கி யீணடுவ வொருபாலாம.

(இ - ள) உணபனவும, பருகுவனவும, களிப்போடு நக்குவனவும, ஆசையோடு கடிப்பனவும், நன்மைபெறச் சுவைப்பனவும் (ஆகியபோசன பதார்த்தங்கள) திருட்டி படுதற்கு முன்னரே தூரத்தில வாசனைவீசி, வருபவரது ஒளளிய மனத்தை யிழுத்து, ஒருபக்கலிற் பொருந்தியிருப்பனவாம எ - று.

இச்செய்யுளில,உணடி நாலவகையுங கூறினா உணணல-சோறுமுதலியன. பருகல் - பாயசமுதலியன நக்கல-துவையலமுதலியன கடித்தல-கறிமுதலியன (௯௧)

வருக்கையின கனிவாழை வணகனி மாங்கனிக
ளுருக்கிளர் பேரீந்தி நெணகனி முந்திரிகைக
டருக்கிளா கனிதாழைத தணகனி யெலுமிச்சந
திருக்கிளா கனிபலவுஞ் செறிவன வொருபாலாம

(இ - ள) பலாப்பழங்கள் - வணமைநதங்கிய வாழைப்பழங்கள்-மாம்பழங்கள் நிறமமைநத ஒளளிய பேரீச்சமபழங்கள - முந்திரிகைப்பழங்கள - தணணிய தேங்காய்கள - சிறந்த எலுமிச்சம பழங்கள - (முதலிய) பலபழங்களும, ஒருபக்கலில் நெருங்கி யிருப்பனவாம எ று

வருக்கை - பலா விசேடம தருக்கிளா - மரத்திலவிளங்கும. தாழை - தாழையுந் தெங்குமாம. (௯௨)

கிழங்கெனப் படுமயாவுங் கிளர்கொடி தருபய்த்தர்கள
வழங்குபல காயடகு மலிவன வொருபாலாந
தழங்குதண் புனமலருந் தகைமலர் கொடிமலரு
முழங்களித் தருமலரு மொய்ப்பன வொருபாலாம.

(இ - ள) கிழங்கென்று சொல்லப்படும் எவையும், விளங்குகின்ற கொடிகளும், மரங்களும் புதர்களும் தந்த பல காய்களும், கீரைகளும் ஒரு பக்கலில் மலிந்துள்ளனவாம் ஒலிக்கின்ற தடப்பந்தங்கிய நீர்ப்பூக்களும், நிலப்பூக்களும், கொடிப்பூக்களும், வண்டுகளொலிக்குங் கோட்டுப் பூக்களும் ஒருபக்கலில் நெருங்கி யிருப்பனவாம் எ - று

மலர்கள் நால்வகை அவற்றுள் தாமரைமுதலியன நீர்ப்பூ மல்லிகை முதலியன நிலப்பூ முல்லை முதலியன கொடிப்பூ பாதிரிமுதலியன கோட்டுப்பூவெனப்படும்

குங்குமங் கத்தூரி குரவமல் கியபுழுகு
பொங்கிய நறுவாசப் புதுப்பனி நீர்சாந்து
தங்கிய பொற்சுண்ணந் தழைத்திடும் விரைச்சுண்ணம்
மெங்கணு மணமல்கி யீண்டுவ வொருபாலாம்.

(இ - ள) குங்குமமும், கத்தூரியும், வாசமிக்க புழுகும், மிக்க நறுமணமமைந்த புதியபனிநீரும், சந்தனமும், பொருந்திய பொற்சுணணமும், வாசமிகுந்த சுண்ணப் பொடிகளும், எவ்விடத்தும் மணத்தைவீசித்து ஒருபக்கலில் நெருங்கியிருப்பனவாம் எ - று (கூச)

பொன்னினும் வெள்ளியினும் புகழ்நவ மணிகளினு
மன்னிய செம்பினினும் வயங்குகளு சங்களினு
மின்னுபித் தளைகளினும் வேறுவே றுறச்செய்த
கன்னலொண் குடமாதி கருவுவ வொருபாலாம்.

(இ - ள) பொன்னாலும், வெள்ளியாலும், புகழ்பெற்ற நவரத்தினங்களாலும், நிலைபெற்ற செம்பாலும், பிரகாசிக்கின்ற வெண்கலங்களாலும், மின்னுகின்ற பித்தளைகளாலும் வெவ்வேறாகச் செய்யப்பெற்ற கரகமும், ஒளிரிய குடமுமுதலியன ஒருபக்கலில் நிறைந்திருப்பனவாம். எ - று

கன்னல் - கரகம். (கரு)

தோளொடு தோண்முட்டத் தொடையொடு தொடைமுட்டத்
தாளொடு தாண்முட்டத் தலையொடு தலைமுட்ட
வாளொடு மாண்முட்ட வாணுமபெண் ணுடுமுட்ட
நீளொளி மணிவீதி நிரந்தரித் தனசனமே.

(இ - ள) தோளுடன் தோள்முட்டவும், தொடையுடன் தொடைமுட்டவும், காலுடன் காலமுட்டவும், தலையுடன் தலைமுட்டவும், ஆணுடன் ஆண்முட்டவும், ஆணும்பெண்ணும் உடன் முட்டவும், நெடிய ஒளிவாய்ந்த அழகிய வீதிகள் எப்பொழுதுஞ் சனநிறைந்துள்ளன. எ - று

முட்டுதல் - தொடுதல்; நெருங்குதல் (கசு)

பூசிய சந்தனமும் புதுப்பனி நீரோடு
வீசிய விரைப்பொடியு மேவிய வாடவர்த
தேசிக மணிமார்பஞ் செறிந்தவ ரூர்தப்பிப்
பேசிட விலதாயும் பெருமணங் கமழ்கிறதும்.

(இ - ள) பூசிய சந்தனமும், புதிய பனி நீரும்,(வாசம)வீசிய சுண்ணப்பொடியும் அணிந்த ஆடவர்களுடைய ஒளிதங்கிய அழகிய மார்பத்திற் பொருந்தினவா

கள் செல்வதொழிந்து, (கோபத்தாற்) பேசவில்லாமலும் (அவை) பெருமணத்தைக் கமழாநிற்கும் எ - று.

ஆடவர்பூசிய சந்தனமுதலியன, மார்பிலிடித்துக் கொண்டவர்கள் நடப்பதொழிந்துநிற்கவும இடித்துககொண்டதற்குககோபியாமலும அவர்கள்களிக்க மணமவீசும.

வழுத்தப வருநீறு மஞசளு முடனகூடி
விழுத்தக வேறறுருவாய விளஙகிய வாறேபோ
லெழுதொலி யுளைவேறு மெழுதொலி யுளைகூடி
முழுததலின கடலேபோன முழஙகுவ வாவணமே.

(இ - ள்.) குற்றங்கெட வருஞ சுண்ணமும மஞசளும் ஒன்று சேர்ந்து, சிறப்புடன் (செம்மையாகிய) வேறறுருவமாய விளஙகின வகையைபோல, சொலலுகின்ற எழுததொலிகள், சொலலுகின்ற வேறுகிய எழுததொலிகளுடன கூடி முழஙகுவித்தலால், கடைவீதியானது சமுததிரததையே போல ஒலியா நிறகும. எ - று. (கூஅ)

அரிபபவ ரொருநாளைக காயிரத தோரிரட்டி
தெரிப்புறக கைக்கொள்வர் சிநதிய விழுககலனும்
பரிப்பவா கைவழுககிப பாரிடை விழுமபொனனும
விரிபபுறு மொளிமணியும வேறுபல பொருளகளுமே.

(இ - ள்.) அரித்தற்றொழில் புரிவோர நாளொனறிறகு இரணடாயிரமாக, சிநதியுள்ள சிறந்த ஆபரணஙகளும், சுமநது செலவோர கைதவறிபபூமியில விழுமபொன்னும், பரப்புகினற வொளியையுடைய இரததினஙகளும, வேறுவகைப்பட்ட பல பொருள்களுந் தெரிதலுறக கைககொளவாாகள. எ - று. (கூகூ)

தணிவிலபல பொருளவிற்றுத தமணிய விலைகொள்வா
ரணிவளா நியமததை யறைநதன மறததாறறுன
மணிமுத லியநலகி வானவா கதிகொளளுந
துணிவினா தொகுமவீதித தொலவள மினிசொலவாம.

(இ - ள்) குறைவிலலாத பல பணடஙகளைவிற்றுப பொனனை விலையாகக கொள்பவாகளது அழகுமிகுகினற கடைவீதியைக கூறினும தருமமுறையாக மணிமுதலிய வறறைககொடுத்துத தேவபதவியையடையுநதுணிசலுடையவாகள சோநதுளள வீதியின பழமையாகிய வளஙகளை இனிச்சொலலுவாம. எ - று (க00)

வேறு

குண்டகரே கோளகரே கானீனா குலவியசீ ரநத ராளா
மணவிராத் தியாபிரதி லோமரனு லோமரிவா வகுபபு வெவ்வே
றெண்டகுதத தமககியனற தொழிலாறறி யிநதிரனைக கழுததஙகு குனற
வண்டாகளு நறுமுறுபப வமாநதுவாழ் தருமறுகு மனநத மாகும.

(இ - ள்) குண்டகர்கள் - கோளகர்கள் - கானீனாகள்-சிறப்புப்பொருந்திய அந்தராளாகள் - நெருஙகிய விராததியாகள - பிரதிலோமர்கள - அநுலோமாகள் (ஆகிய)இபபிரிவினா வெவ்வேறுகிய எண்ணததக்க தங்கடங்களுக்குச் செய்யககூடிய தொழிலகளைசசெயது, இந்திரனுடைய இறுமாப்பு குறையவும, தேவர்களுமமொறுமொறுக்கவும் பொருநதிவாழ்கின்ற வீதிகள் எண்ணிறந்தனவாகும் எ - று.

குண்டகன் - கணவற்பிழைத்துப் பெறுமகன். கோளகன் - விதவைபெற்ற மகன். கானீனன் - கன்னியிற் பிறந்தவன். அந்தராளன் - அநுலோமத்தாணும் பிரதிலோமப்பெண்ணுங் கூடிப்பெற்றமகன். விராத்தியன் - அநுலோமப்பெண்ணும் பிரதிலோமத்தாணும் பெற்றமகன். பிரதிலோமன் - உயர்ந்தபெண்ணும் இழிந்த ஆணுங் கூடிப்பெற்றமகன். அநுலோமன் - உயர்ந்த ஆணும் இழிந்தபெண்ணுங் கூடிப்பெற்ற மகன்.

பிங்கலநிகண்டு.

"கொண்டோற் பிழைத்துப் பெறுமகன் குண்டகன்" — என்றும்,
"விதவை பயந்த மதலை கோளகன்." — என்றும்,
"கன்னியிற் பிறந்தோன் கானீன னாகும்" என்றும்,
"அநுலோம கூட்டத் தாணினு மவ்வழிப்
பிரதிலோமகுலப் பெண்ணினுமிக்க
வியந்த கூட்டத் தவரந்த ராளர்" — என்றும்,
"அநுலோ மகுலப் பெண்ணினு மவ்வழி
வியந்த கூட்டத் தவர் விராத்திய ராகும்." — என்றும்,
"உயர்ந்த வாணினு மிழிந்த பெண்ணினும்
வியந்த கூட்டத் தவரநு லோமர்" — என்னுஞ் சூத்திரங்களானறிக. (௧௦௪)

அளகையர்கோன் பொன்வெள்ளி யடுக்கலுற வாரவமட்டா ரேனுந்தாமே
வளர்கனகக் கிழிகொடுப்ப மதியாம லறங்களெலாம் வளர்ப்பத் தேவிக்
குளமகிழு மேகம்ப ரிருநாழி நெற்கொடுக்கு முயர்வு பூண்டு
களமிலுழு தொழிற்குரிய காராளர் வீதிகணக் கின்றி மல்கும்.

(இ - ள்) அளகாபுரிக்கிறைவனாகிய குபேரனுற பொன்னையும் வெள்ளியையும் மலையளவாகப்பெற விரும்புதல (தோழனெனினும்) தக்காராயினும், தாமே வளர்கின்ற பொற்கிழியைக்கொடுத்தற்கும் (பொன்முதலியவற்றைப் பொருளாக) மதியாது, தருமங்களையெல்லாம் வளர்த்தற்பொருட்டு, தேவியாராகிய காமாட்சியம்மையாருக்கு, உள்ளங்களிக்கின்ற ஏகாம்பரேசுவரர் இருநாழிநெல்லை (பொருளாக)க்கொடுத்த அவ்வுயர்வையே கடைப்பிடித்தவர்களாகி, களவில்லாத உழவுதொழிற்கு உரித்தான வேளாளர் வீதிகள் அளவின்றி நிறைந்திருக்கும். எ - று. (௧௦௫)

வேறு

பொருள்வரு வாயினைப் புரியுமாட்சியு
மிருநிலங் காவலு மிருவர் வேந்தரை
மருவுறச் சந்துசெய மறுவில் வண்மையுங்
கருதிய மன்னராற் கைக்கொள் வாரரோ.

(இ - ள்) பொருள் வருகையைச்செய்யும் மேம்பாடும், பெரிய பூமியைக் காத்தலும், இரண்டரசர்களைப் பொருந்த (தூதுசென்று) உறவாக்கும் குற்றமில்லாத வகையும், நினைத்த அரசர்விருப்பால் மேற்கொள்வார்கள் எ - று. (௧௦௬)

மந்திரித் தலைமையு மருவி வாழ்குவர்
வெந்திறற் படைத்தொழில் வீறும் பூணுவர்
தந்தொழி லுழவினுஞ் சாலச் செல்லுவர்
பிந்திய வருணத்துப் பிறந்த மைந்தரே.

(இ - ள்.) பிற்பட்ட குலத்திற் பிறந்தவர்களாகிய வேளாளர்கள் மந்திரித் தன்மையின் றலைமையும் பொருந்திவாழ்வார்கள் வெவ்விய வலியுடைய படைத்தொழிலபயிலும் மேம்பாடும் மேற்கொள்வார்கள், தமதுதொழிலாகிய உழவுதொழிலிலும் மிகுதியாகச் செல்வார்கள். எ - று. (௧0௪)

களமலி யெருமையுங் களத்துச் செந்நெலுங்
களமலி யொட்டலர் கனக மாதியும்
வளமெனக் கொண்டபின் வந்த மைந்தாக
ளளவில வறங்களுந் தளிக்கு நீர்மையார்.

(இ - ள்) கருமைமிக்க எருமையும், களத்திற்சேர்ந்த செந்நெலும், போர்க்களத்தமைந்த பகைஞர்களது பொன்முதலியனவும் (ஆகிய இவற்றைச்) செல்வமாகக் கொண்டு, பிற்பட்டபிறந்த வேளாளர்கள் எண்ணிலலாத தருமங்களையுங் காக்குந் தன்மையுடையவர்களாவார்கள் எ - று (௧0௫)

வணிகர்கண் மனைவியா மைந்தா தம்மொடு
தணிவில்பல வளத்தொடுந் தங்கி வாழ்தருந்
துணிகதிர் மணிபல துலங்கு மாளிகை
யணிவளர் வீதியு மனந்த மாகுமால்.

(இ - ள்.) வைசியர்கள் தங்கள் மனையாட்டிகளோடும், புதல்வர்களோடும், குறைவில்லாத பல வளங்களோடும் பொருந்திவாழ்கின்ற பல ரத்தினங்கள் பிரகாசிக்கின்ற மாளிகைகளால் அழகுவளர்கின்ற வீதிகளும் எண்ணிறந்தனவாகும். எ - று.

துணிகதிர் - விட்டுவிட்டொளிர்தல் (௧0௬)

வேறு.

ஒருவ னுயிரைப் பிறர்செகுப்பி னூழி யூழி யவர்நரகின்
மருவி யழிவர் பழியுமிக வளருங் களத்து மருவலரைக்
கருவி கொடுகொன் றுயிரவித்துக் கதியிற் றுறு மினிதெய்துந்
திருவி னரசர் குடிதுவன்றுஞ் செல்வ வீதி பலவாகும்.

(இ - ள்) ஒருவனுடைய உயிரைப் பிறர்கொல்வாராயின், அக்கொலைபுரிந்தவர் பல்லூழிகாலம் நரகத்திற் பொருந்தியழிவர். (அன்றியும், அவர்க்குப்) பழியும் மிகுதியாக வுண்டாகும் (அல்லவோ? அவ்வாறன்றி) போர்க்களத்திற் சத்துருக்களை ஆயுதங்களாற் கொன்று உயிரழித்துத் தாமும் வீரசுவர்க்கத்தில் இனிதாகச்சேருஞ் சிறப்பமைந்த மன்னவர் குடிநெருங்கிய செல்வம்பொருந்திய தெருக்கள் எண்ணிறந்தனவாகும். எ - று (௧0௭)

வேறு

உயிரொடு வதைத்துப் பெற்ற மொள்ளெரி வாயிற் பெய்துஞ்
செயிரொடு பழியு மின்றிச் சிறந்தபுண் ணியமு மேலா
மியல்புறு புகழுங் கொண்டே யாவரும் வணங்கிப் போற்றப்
பயிலுறு மறையோர் வீதி பற்பல வாகு மன்றே.

(இ - ள்) பசுக்களை உயிருடன் வதைபுரிந்து ஒளிவாய்ந்த அக்கினியில் வீழ்த்தியும், பாவமும் பழியுமில்லாமல், சிறப்புற்றபுண்ணியத்தையும் மேன்மைத் தன்மை

வாய்ந்த கீர்த்தியையுங் கைக்கொண்டு, எல்லாரும் வணங்கித் துதிக்கும்படி யொழுகு கின்ற அந்தணர் வீதியனந்தமாகும் எ - று.

பெற்றம் - பசு. ஈண்டு யாகத்திற்கமைந்த குதிரை மேடமுதலிய வெல்லா வற்றிற்கு முரிய பொதுப்பெயரெனக் கொள்க. (கoஅ)

காலங்க டொறுந்தப் பாமற் கடவுளர்க் கவியூ ணல்கி
ஞாலங்கொண் டாட வந்த நல்விருந் தினரை யோம்பி
யாலங்கொண் மிடற்று நாத ராதியர்த் தமைப்பூ சித்துச்
சீலங்கொண் மறையோர் வீதி செழுமறை முழக்க றாதால்.

(இ - ள்) தவறுமற்படி, காலங்களிலெல்லாந் தேவர்களுக்கு அவிப்பாகமா கிய உணவையளித்து, உலகினர் புகழும்படி வந்த நல்ல விருந்தினரைப் பாதுகாத்து, ஸ்ரீ கண்டபரமேசுரர் முதலானோரை யர்ச்சித்து, உத்தமாசாரத்தைக்கொண்ட வேதி யர் வீதிகளில், செழிய வேதவொலி நீங்காதிருக்கும் எ - று

ஆலங்கொண் மிடற்றுநாதர்-ஆலகாலவிஷத்தைக் கொண்டுள்ள கண்டத்தை யுடைய சிவபெருமான். காலங்களென்றது-காலை யுச்சி மாலை யாதிய பூசாகாலங்கள். அவி - யாகத்திலுண்டாகிய வுணவு. விருந்தினர் - அதிதிகள். எ - று (கoகூ)

நயத்தக்கு வேத மோதி நல்லவா கமங்க டேற்றிப்
புயத்தலைச் சூலம் வைத்த புனிதர்பூ சனையாற் பேறு
வயத்துறு தமக்கு மேனை வையகத் தெவர்க்கு மாக்கும்
வியத்தகு மாதி சைவர் வீதியு மாங்காங் குண்டால்.

(இ - ள்) நன்மை பொருந்திய வேத பாராயணஞ் செய்து, நல்ல சிவாகமங் களைப் போதித்து, திருப்புயத்தின் மேற் சூலத்தை யமர்த்திய மலரகிதராகிய சிவ பெருமானுடைய அர்ச்சனையாற் (சிறந்த) பேறுகளை,(சிவபுண்ணிய) வலிபொருந்திய தங்கட்கும் உலகிலுள்ள பிறயாவர்க்கும் உண்டாக்குகின்ற மேன்மை தங்கிய ஆதி சைவர் வீதியும் அவ்வவ்விடங்களிலுண்டு எ - று

ஆகமமென்னு மொழியில் ஆ என்பது ஞானமும், க என்பது மோக்ஷமும் ம என்பது மலநாசமுமாம். ஆகவே ஆன்மாக்கட்கு மலத்தை நாசஞ்செய்து ஞானத்தை யுதிப்பித்து மோக்ஷத்தைக் கொடுத்தலால் ஆகமமெனப் பெயராயிற்று.

ஆகம * மிருபத்தெட்டனுள் முதலிற் கூறிய பத்துஞ் சிவபேதங்களென்றும், ஏனைய பதினெட்டும் உருத்திரபேதங்களென்றுஞ் சொல்லப்படும். அவற்றுள்,

காமிகம் - யோகஜம் - சிந்தியம் - காரணம் - அசிதம்-என்னு மைந்தையும் சத்தியோசாதமுகத்தினின்று கௌசிக விருடியின் பொருட்டும், தீத்தம் - சூக்கு மம் - சகச்சிரம் - அஞ்சுமான் - சுப்பிரபேதம்-என்னு மைந்தையும் வாமதேவமுகத்தி னின்று காசிபவிருடியின் பொருட்டும், விசயம் - நிச்சுவாசம் - சுவாயம்புவம் - ஆக்கி நேயம் - வீரம்-என்னு மைந்தையும் அகோரமுகத்தினின்று பாரத்துவாச விருடியின் பொருட்டும், இரௌரவம் - மகுடம் - விமலம் - சந்திரஞானம் - முகவிம்பம் - என்னு மைந்தையும் தற்புருடமுகத்தினின்று கௌதம விருடியின்பொருட்டும், புரோற்கீதம் இலளிதம் - சித்தம் - சந்தானம் - சர்வோக்தம் - பாரமேசுவரம் - கிரணம் - வாதுளம்

ஆகமங்களின் பெயர் முறையை கரு-ம் பக்கத்திற்காண்க.

என்னு மெட்டையும, ஈசானமுகததினின்று அகததிய விருடியின்பொருட்டும் அருளிச்செய்தனா எனபதும் நூலவழக்கு.

அனறியும், காமிகம் திருவடி, யோகஜம கணைக்கால, சிந்தியம திருவடி விரல்கள், காரணம் கெணடைககால, அசிதம முழந்தாள, தீப்தம தொடை, சூககுமம குயயம், சகச்ரம் கடிததானம, அஞ்சுமான முதுகு, சுபரபேதம கொப்பூழ், விஜயம் உதரம, நிசுவாசம் நாபி, சுவயம்பூதம் முலை, ஆகநேயம் கண, வீரம் கழுதது, ரௌரவம செவி, மகுடம் திருமுடி, விமலம கை, சநதிரஞானம மாாபு, முகவிமபம் திருமுகம, புரோறகீதம திருநாககு, இலளிதம கபோலம, சிததம் நெற்றி, சநதானம் குணடலம, சர்வோகதம உபவீதம, பாரமேசுவரம் ஆரம, கிரணம் இரததினாபரணம, வாதுளம் பரிவட்டமுமாம. இவை யொவ்வொனறும ஞானபாதம, யோகபாதம, கிரியாபாதம, சரியாபாதம எனறு தனிததனி நானகுபாதஙகளுடையனவா யிருககும.

இவற்றுள, ஞானபாதத்தில, பரமசிவனுடைய சொரூபமும், விஞ்ஞானகலா பிரளயாகலா சகலரெனனும ஆனமாக்களின சொரூபமும, ஆணவம காமியம மாயேயம வைநதவம திரோதான சததியெனனும பாசஙகளின் சொரூபமும, சததியின சொரூபமும, சிவததததுவமுதற பிருதிவி ததததுவவரை முப்பததாறு தததுவஙகள் துறபததியும, இவை ஆனமாககள் போகம புசிககைககுக கருவியா முறைமையும, புவனங்கள்-புவனேசா சொரூபஙகளும, புவனஙகளின் யோசனைப் பிரமாணஙகளும, அதமப்பிரளயம மததியமபபிரளயம மகாப்பிரளயஙகளின சொரூபமும, அந்தபபிரளயஙகளின பினனாச சிருட்டியா முறைமையும, பாசுபதம மகாவிரதங காபாலமுதலிய மதஙகளின சொரூபமுங கூறபபடும

இனிக் கிரியாபாததில், மநதிரங்களினுத்தாரணஞ் சநதியாவந்தனம் பூசை செபமோமஙகளும், சமய விசேட நிருவாண ஆசாரியாபிடேகஙகளும, புததிமுததிகளுக்குபாயமாகிய தீககையுஙகூறப்படும.

இனி யோகபாததில், இநத முப்பத்தாறு தததுவஙகளும, தததுவேசுரரும், ஆனமாவும, பரமசிவனும, சததியும சகததுககுக் காரணமாகிய மாயை மகாமாயைகளைக காணும் வலலமையும, அணிமாதி சிததிகளு ணடா முறைமையும, இயமம் நியமம் ஆசனம பிராணயாமம பிரததியாகாரம தியானம தாரணம சமாதிகளினுடைய முறைமையும், மூலாதார முதலிய ஆதாரஙகளின முறைமையுங கூறப்படும்.

இனிச சரியாபாததில, பிராயசசிதத விதியும,பவித்திர விதியும, சிவலிஙக விலக்கணமும, உமாமகேசுர முதலிய வியததாவியததலிஙகஙகளி னிலககணமும, நநதிமுதலிய கணநாதரிலககணமும, செபமாலை யோகபட்டம தணடம கமணடல முதலியவறறினிலககணமும, அநதியேட்டி விதியும், சிராததவிதியுங கூறப்படும.

சைவா—அநாதிசைவா - ஆதிசைவா - மகாசைவா - அநுசைவா - அவாந்தரசைவர் - பிரவரசைவா - அநநியசைவரென ஏழு பகுபபினர். அவருள, அநாதிசைவா சிவபெருமானும், ஆதிசைவா சிவதததுவிசரும, மகாசைவா சிவதீக்கைபெறற வைதிகபிராமணரும, அநுசைவர் க்ஷத்திரிய வைசியரும, அவாநதரசைவா சூத்திரரும், அனனியசைவா அன்னிய சாதியாருமாவா இவருள ஆதிசைவா சிவபெருமானுடைய ஊர்த்துவமுகத்திற் பிறந்து அவராலேயே தீக்கைசெயயப்பெற்ற கௌசிகா காசிபர் பரததுவாசர் அததிரி கௌதமரெனனும பஞ்சரிஷிகுலதது வநதவர்கள். அவர்களே எலலாவருணத்தவர்களுஞ் சிவதீக்கையாலநுககிரகஞ் செய்யப்பாததிராகள. (க௧0)

இருண்மலப் பந்த நீங்கி யிருமையுந் தான்ற சோதி
யருவுருத் தகலத் தள்ளி யருளொடு மனவளாவிப்
பருதியிற் கலந்து நிற்கும் பரவொளி விழிபோலத்
தெருளொடுங் கலந்து நிற்குஞ் செல்வர்தம் மடமு முண்டால்.

(இ-ள்) (அஞ்ஞான) இருளாகிய ஆணவமலபந்தத்தினின்று நீங்கி இம்மை மறுமைப்பலன்களையு நீக்கிய சோதிபோல அருவுருப்புறந்த தூரவிலக்கி, திருவருள் வழிச்சேர்ந்து, சூரியனுடன் கலந்து நிற்கும் பரவிய ஒளியையுடைய கண்ணைப்போல, ஞானத்துடன்கூடி நிற்குஞ் சிவஞானச் செல்வர்கள் வாழுந் திருமடங்களும் (எண்ணிறந்தன) உண்டாம். எ-று. (௧௧௧)

எழுத்திலக் கணமுன் னான விலக்கண மைந்துந் தேர்ந்து
வழுத்தப விளங்கு மற்றைக் கலைகளும் வல்ல நல்லோர்
குழூஉத்தக விருந்து நாளுங் கோதறு நூல்க ளாயும்
விழுத்தகு கழக நாலவ் வீதிக டோறு மேவும்.

(இ-ள்) எழுத்திலக்கணத்தை முதலாகவுடைய ஐந்திலக்கணங்களையுந் தேர்ந்து, குற்றமற விளங்குகின்ற பிறநூல்களிலும் வன்மையுடைய நல்லபுலவர்கள் கூட்டமாக விருந்து, நாடோறுங் குற்றமற்ற நூல்களை யாராய்ச்சிசெய்யும் மேன்மைபொருந்திய கல்விக்கழகமானது நாற்குலத்தார்கள் தெருக்களிலெல்லாம் பொருந்தும் எ-று.

ஐந்திலக்கணங்கள்—எழுத்திலக்கணம் - சொல்லிலக்கணம் - பொருளிலக்கணம் - யாப்பிலக்கணம் - அணியிலக்கணம் எனப்படும். (௧௧௨)

எங்கணும் புராணஞ் செய்வோ ரெங்கணும் புராணங் கேட்போ
ரெங்கணுந் தருமச் சாலை யெங்கணும் வேள்விச் சாலை
யெங்கணுந் தான மீவோ ரெங்கணுந் தானம் பெறுவோ
ரெங்குமங் கலங்கள் செய்வோ ரெங்குமங் கலங்கள் காண்போர்.

(இ-ள்) எவ்விடத்திலும் புராணப் பிரசங்கிப்பவர்களும், எவ்விடத்திலும் புராணசிரவணஞ் செய்பவர்களும், எவ்விடத்திலுந் தருமசாலைகளும், எவ்விடத்திலும் யாகசாலைகளும், எவ்விடத்திலுந் தானங்கொடுப்பவர்களும், எவ்விடத்திலுந் தானம்பெறுபவர்களும், எவ்விடத்திலும் மங்கலவினைகள் செய்பவர்களும், எவ்விடத்திலும் மங்கலச் சடங்குகளைப் பார்ப்பவர்களும் (ஆக அந்நகர் விளங்கும்) எ-று.

பூரண கும்பம் வைத்த புதுமலர்ப் பந்த ரெங்குந்
தோரண நிரையிற் றூக்குஞ் சுடர்மணிக் கோவை யெங்கும்
வாரணி நிரையில் வைத்த வார்கொடித் திரள்க ளெங்குஞ்
சாரண ரிருந்தெய்ப் பாறுந் தமனிய மாட மெங்கும்.

(இ-ள்) பூரண கும்பங்களையமைத்த புதிய மலர்ப்பந்தர்களும், தோரண வரிசையில் தொங்கவிட்ட பிரகாசிக்கின்ற முத்துக் கோவைகளும், கடல் வரிசை போலக்கட்டிய நெடிய துவசத்தொகுதிகளும், சாரணர்களிருந்து இளைப்பாறுகின்ற பொன்னாலாகிய மாளிகைகளும் எங்கெங்கும் உள்ளன எ-று.

சாரணர் - ஓர்வகைத் தேவசாதியர். (௧௧௪)

சிவிகையுங் களிறு மாவுஞ் செழுமணிச் சகடு மொட்டக்
கவிகையுங் கருவி மள்ளர் கணங்களு மறுகு வீதி

யவிரமணி மாடத் தோடு மவிரவண வாழி யோடு
புவிபுகழ் மலைகள் போர்கருப புக்கபா சறையே போலும்.

(இ-ள்.) பல்லக்குகளும், யானைகளும், குதிரைகளும், செறிய இரத்தினங்களாற்செய்த தேர்களும், வட்டமாகிய குடைகளும, ஆயுதங்களையேந்திய மள்ளர் கூட்டங்களும் நீங்காத (அந்நகர) வீதிகள், பிரகாசிக்கின்ற இரத்தினங்கள் பதித்த மாளிகைகளோடும விளங்குவன, சமுத்திரத்துடன் உலகமானது துதிசெய்கின்ற பர்வதங்கள் யுத்தஞ்செய்தற்குப் புகுந்த பாசறையையே யொத்திருக்கும எ-று

பாசறை - போர்மேற்சென்றோ ருறைவிடம் (கக௫)

பமபிய மாடந தோறும பரிசன மருஙகு சூழக
கமபலம் விரித்து மேலாற கதிரமணி விதானஞ் செய்து
கொமபனா ராடல பாடல குலாவுற விருக்கின றாதா
மும்பாந டாள்வோ ரெல்லா மொருஙகுவந திருந்தா ரொத்தார்.

(இ-ள்) நெருங்கிய மாளிகைகளிலெல்லாம பரிசனாகள் பக்கலிற சூழும்படி, கமபலஙகளை (கீழே) பரபபி, மேலே ஒளிவீசுகின்ற இரத்தின விதானங்கட்டி, பூங்கொமபை யொத்தமாதாகள ஆடலபாடலகள்விளஙக(அவறறைககணடுகேட்டும) இருக்கின்றவாகள், தேவலோகத்தை யரசு செயபவாகளெல்லோரும ஒன்றுகூடிவந்திருந்தவாகளை யொத்தார்கள. எ-று.

விதானம - மேற்கட்டி. (ககசு)

நஞ்செழு முன்னாத நீமபா னரவையி லெழுந்தோர் வானே
தஞ்சமென றிருபபத் தூய தணணமிழ தெழுந்த பின்னா
விஞ்சுறு வனபபிற றோன்றி மேதினி யுரித்தென பாரபோன
மஞ்சணி மாட மெங்கும வதிகுவா மஙகை நல்லார்.

(இ-ள்) (அரம்பையாகள) விடந்தோன்று முன்னே, மதுரமாகிய பாற்கடலிற் பிறந்து ஒப்பற்ற தேவலோகமே (நமக்கு) இருப்பிடமென்று வசிக்க, பரிசுத்தமாகிய தண்ணிய தேவாமிர்தமானது பிறந்தபிறகு, பூமி (தான, நமக்கு) உரியதென்று மேம்பட்ட அழகுடன்தோன்றி வந்தோரபோல, மேகந்தவழும மாளிகைகளிலெல்லாம நல்ல மாதாகள் வசிப்பார்கள். எ-று.

பாற்கடலிற் பிறந்த அரமபாஸதிரீகள அதில நஞ்சுந்தோனறினமையின தமது பிறப்பை விஷத்துடன தோனறியதாக மதித்துத தேவலோகத்தில வசித்திருந்து, பின்னா அதில அமுதமபிறந்தது கருதிமதித்துப பூமியிலேயே வந்து வசிப்பாரபோல மஙகையாகள் வாழவாாகள எனககொளக (ககஎ)

ஒருங்ககி லார மாடத துளளுறப புகைத்துப் பின்னாச
சுருங்கைக டிறபப நீளுந் தூநறும புகையி னோடு
மருஙகுறத தவழு நீல மழைககுலம வேறு காட்டா
நெருங்கிய மாடங் கறபி னேரிழை யவரைக காட்டும.

(இ-ள்.) அகிற்கட்டையையுஞ் சந்தனக கட்டையையும மாளிகைகளின் உள்ளே புகைபோட்டுப்பின்னாச சாளரஙகளைத திறப்ப, ஒன்றாக அதிகரிக்கின்ற பரிசுத்தமாகிய நல்ல புகையினுடன பக்கஙகளிற் பொருந்தத தவழுகின்ற மேகக்கூட்டங்

களை வேறாகக்காட்டாத நெருங்கிய மாளிகைகள் கற்பினையுடைய மாதர்கள் (செயலைக்) காட்டா நிற்கும் எ - று

மாளிகைகளிற்றோன்றிய கற்பினையுடைய மாதர் பிறமாட்டத்தற்றுக் கணவனைக் கலக்குமாறு, மாளிகையிற் றோன்றிய புகையானது சாளரவழியாகச்சென்று மேகத்தைக்கலக்கும் எனக் (௧௧௮)

மேனிலை மாடத் திட்ட விளக்கொடு சுடர்மீன் றேறல்
வானிடை யுடுவை வேறு வகுத்தறி தரவொண் ணாது
கானிவர் திலக முண்டேற் கன்னியர் நுதலி னோடு
கூனிளந் திங்கள் வேறு குறித்தறி தரவொண் ணாதே.

(இ - ள்.) அசைதலில்லையாயின், மேனிலையையுடைய மாளிகையில் வைத்த தீபத்துடன், ஆகாயத்திலுலாவும் நக்ஷத்திரத்தை வேறாகப் பிரித்தறிய முடியாது. மாதர்களுடைய நெற்றியுடன், வாசம்வீசுந் திலகமிருக்குமாயின் வளைந்த இளஞ்சந்திரனை வேறாகக் குறிப்பிட்டறிய முடியாது எ - று.

மேனிலைகள் நக்ஷத்திரமண்டலமளாவியும், மங்கையர் முகங்கள் பூரண சந்திரனைப்போன்றும் விளங்குமென்பது கருத்து (௧௧௯)

வதுவைசெய் காலை யன்பன் மருவுமுன் றம்பாற் போகப்
புதுநல நுகர்வித் தாரப் பூரித்து விட்ட பண்பால்
விதுவிளக் கிரண்டின் முன்னும் வெய்யவன் றிருமுன் போலக்
கதுமென நாணுக் கொள்ளார் கலவியிற் றிளைக்கு மாதர்.

(இ - ள்) கணவன் மனைவியை நடத்துகையிற் கலத்தற்கு முன்னர், தம்மிடத்துள்ள போகமாகிய புதிய சுகத்தை நுகரச்செய்து மிகப்பூரிப்புற்ற குணத்தினால், சந்திரகாந்தியுந் தீபவொளியுமாகிய இரண்டின் முன்னரும், சூரியசந்நிதானத்தைப் போல, போகத்திற்றிளைத்த மாதர்கள் சிறிதும் நாணமடையார்கள். எ - று. (௧௨௦)

கலவியிற் றிளைக்கு மாதர் கதிர்பொழி வதனச் செவ்வி
நிலவினைக் கரந்து வெளவி நிற்றலு நீங்கு மாற்றான்
மலர்தலை யுலகை மெள்ள மறுவொடு பயின்று திங்க
ளிலகிய வுருவந் தேய்வ தீசுரன் சாபு பெற்றும்.

(இ - ள்) சந்திரனானவன், புணர்ச்சியிற் களிக்கும் மங்கையர்களது கிரணங்களைச் சிந்தும் முகத்தின் அழகாகிய சந்திரிகையை நாடோறும் மறைந்து அபகரித்துச் செல்லுந்தன்மையால், சிவபெருமானுடைய சாபினையடைந்தும், பரந்த இடத்தையுடைய உலகினர் இகழும்படி குற்றத்துடன் சஞ்சரித்து உருவந்தேயாநின்றனன். எ-று.

கற்றைமென் குழலி னார்கள் கன்னிமைப் பருவந் தன்னிற்
பொற்றொடிக் கரங்கள் கூப்பும் புந்தியா வகத்தி னானு
மொற்றைநாள் வதுவைக் காலத் துவப்பினி தளித்த லானு
மற்றவர் றருமற் றிங்க ளாக்கமும் பயின்ற தன்றே.

(இ - ள்) தொகுதியாகிய மெல்லிய கூந்தலையுடைய மாதர்கள் தமது கன்னிப்பருவத்தில், பொன்னாலாகிய வளையலையணிந்த கைகளைக் குவிக்கின்ற புந்தி பாவகத்தினாலும், மணகாலத்தில் ஒற்றைத்தினத்திற் சந்தோஷத்தை இனிதாய்

கொடுத்தலாலும், சந்திரனனவன தேயந்த வழியே தேயாமல வளாதலையும பெற்ற னன் எ - று.

புநதிபாவகம - மனதினனமை வெளிப்படுத்தல (கஉஉ)

கலவிசெய காலத் தானுங் கதிர்நகை முறுவ னலலாா
புலவிசெய காலத் தானும் பொருதசெசை சிதாந்த கோவை
யிலகொளி மணிவீழ்ந் திட்ட விணையடி வருந்தத் நோக்கி
நிலனுற னடப்போா வீதி நெடுங்கழ லொடாந்து செலவா்.

(இ - ள) ஒளிவாய்ந்த முத்துப்போன்ற பறகளையுடைய மங்கையாகள புணாச்சிசெய்யுங் காலத்திலும, (கணவருடன்) ஊடல கொள்ளுங் காலத்திலும் விரைந்து சிந்திய கோவைகளிலுள்ள ஒளிவிளங்கும இரத்தினங்கள வீழ்ந்து, (கிடத்தலால), நிலமிசை வைத்த இருபாதங்களின வருத்தத்தையுங கருதி, பூமியிற பொருந்த நடப்பவாகள வீதிகளில நெடியகாலகளைவீசி நடவாாகள எ - று

கோவை - காஞ்சி மேகலைமுதலியன கழல தொடர்ந்து - வீரககழலணிந்ததெனினுமமையும.

"நெடுங்கழலொடாநது செலவாா" எனப்பாடமாயின, (அவையுறுத்தாது) செருப்பணிந்து செலவாாகள எனக (கஉங)

ஒருவாமே லொருவா வீச மொளளிய வாசச் சுணணம
பெருகிய புழுதி யாலும் பேதையா சிவிறித் தூநீ
ரருவிபாயந் தொழுக லாலு மளளுறு றடாபொன வீதி
மருவிய கழறகா லாககு வருத்தஞ்செய தூாந்து மேறறும.

(இ - ள) ஒருவா மேலொருவா வீசுகின்ற வெள்ளிய வாசனை தங்கிய சுணணப்பொடி பெருகிய புழுதியினாலும, மங்கையாகள எறிகினற புனிதமாகிய சிவிறி நீராகிய அருவியானது பாயந்து செலலுதலாலும, நெருங்கிய பொனமயமான வீதியானது சேறுபட்டு, பொருந்திய வீரககழலணிந்தவாகளுக்கு (நடக்க) வருத்தத்தை யுண்டுசெய்து (அவாகளை) வாகனங்களிற் லேறசசெய்யும எ - று.

சிவிறி - நீாவீசுந் துருத்தி (கஉச)

குழுமிய செம்பொன மாடக் கூடமவாழ குருவிக் கூட்டம
வழுவறு மணியாற பொனனால வனணிலம படுத்த முற்றம
புழுதிவே றின்மை யாலே பூவைய ராட்டுற சிநதும
விழுமிய சுணணப் பூழதி மிக்கக் குடைந் தாடிச் சேககும.

(இ - ள) கூட்டமாகிய செம்பொனனலாகிய மாளிகைகளிலுள்ள கூடுகளில் வாழுங குருவித்தொகுதிகள், குற்றமற்ற இரத்தினங்களாலும பொன்னாலும வலிய தளவரிசைசெய்த முற்றங்களில வேறு புழுதி யிலலாமையினால, நாகணவாயப் பறவைபோன்ற மாதாகள் விளையாட்டில வீழ்த்திய சிறந்த வாசச சுணணமாகிய புழுதியை மிகுதியும் மூழ்கி விளையாடிச சிவக்கும. எ - று. (கஉரு)

மகிழ்நாதம புணாபபி னிறைப வாரியிற படியும பெறறி
முகிழ்த்தங் கொண்டு வாட்கண் மொழிதரா வியாவு மெய்யபி
னெகிழுளந் தளாக்கங் கேறக நிகழநதுகாட் டாது பொறபூ
ணகிலா மாதா வெவவா நெருப்பரி நகாநல லாாமா.

(இ - ள்) கணவருடைய புணர்ச்சிக்காலத்தில் இடைக்கடலில் எழுந்த தன்மையை, ஒளியகணகள் கூடிப் புகலுற்று வெளியிடா உருகிய மனத்திற் சேரப் உடலில் வெய்யவுண்டாகி விளக்காது (ஆதலால் இத்தலைக்கு) அழகிய ஆபரணமணிந்த முலையையுடைய தேவமாதர்கள் இந்நகரமாதர்களை யெவ்வாறு ஒப்பார்கள் ? எ - று.

சுந்தர மகளிர் தங்க டொடிக்கையாற் பனிநீர் வாருக்கிச்
சந்தன மெருப்பெய் தோம்பத் தவிர்த்தரும் பின்னர் தெனனும்
சிந்தையின் மகிழ்வான மன்றல் செய்யப்படு முலைச் செல்வ
மைந்துறு நிறையுள் ளாரபால் வளர்கொடி யாருஞ் சார்வார்.

(இ - ள்) அழகிய பெண்களுடைய வளையலணிந்த கையாற் பனிநீரையொழுக்கிச் சந்தனத்தை யெருவாக விரித்துப் பாதுகாக்க; தவிர்விட்டு அருமைப்படுத்தத் தென்னும் மனமகிழ்ச்சியினால், முலைச்செடிகள் மணஞ்செய்யப்படும் செல்வ வன்மைபொருந்திய நிறையுள்ளாரிடத்தில் வளர்கின்ற கொடியாருஞ் சார்வார்கள் எ - று.

மைந்துறுசெல்வ நிறையுள்ளார் பால வளர்கொடியாருஞ் சார்வார் - அழியாத செல்வநிலைநின்றுள்ளவரிடத்து வளர்கின்ற கொடியவர்களுஞ் சேர்வார்கள் நிறையுள்ளார் பால வளர்கொடியாருஞ்சார்வார் - முலைக்கொடியாரிடத்து, வளர்கின்ற கொடிபோலும் மாதர்களும் சேர்வார்கள் இது வேற்றுப்பொருள் வைப்பு (௧௨௭)

அந்தர நெறிக ளாக வவிர்கதிர் முதலாங் கோளும்
முந்நொளி நாளும் மற்று முற்றெறி னாளும் நோக்கி
நந்தன முறுவ திந்த நகரமே துறக்க மன்று
வந்திடுங் கதியு மந்த வானபொருட் டவற்றுக் கின்றே.

(இ - ள்) பிரகாசிக்கின்ற சூரியன் முதலாகிய கிரகங்களும், முறைபட்டொளிசெய்யும் (அசுவினிமுதலிய இருபத்தேழு) நக்ஷத்திரங்களும், பிறநக்ஷத்திரங்களும் ஆகாயவழியாகப்பொருந்தி, (இந்நகரத்து) அழகை நாடோறும்பார்த்து, நந்தனமாகப் பொருந்தியுள்ளது இந்த நகரமே (அல்லாமல்) சுவர்க்கமன்று அவற்றிற்கிடப்பொழுது (ஆகாயவழியாக) வருநடையும் அந்த அமுதங்காரணமாக (அன்றி, அங்குள்ள அழகு பற்றியன்று) எ - று. (௧௨௮)

தடங்கையி னடங்கும் பூவுந் தனங்களப் பாயந் தளந்த மார்பு
மிடங்கொளுஞ் செல்வ மங்கை யிச்சையா லிருந்து வாழ
வடங்கரு வனப்புச் செய்த வாடக மாடந் தோறுங்
குடங்கையி னகன்ற வாட்கட் கோதையார் விழவா ருத்தால.

(இ - ள்) விசாலமான கையில் அடங்கும் மலராகிய கொங்கையும், அக்கொங்கைகள் பாய்ந்து அளவுசெய்த மார்பும், இடமாகக்கொண்டு வாழுந்திருமகள் மன விருப்பின்படி பொருந்திவாழ, அளவில்லாத அழகு படைத்திய பொன்மாளிகைகளிலெல்லாம், உள்ளங்கைபோலும் பரந்த வொள்ளிய கண்களையுடைய மங்கையருடைய மங்கலச் சடங்குகள் நீங்கா எ - று

தடங்கையினடங்கும் பூவுந் தனங்களப்பாயந் தளந்த மார்பும் இடங்கொளுஞ் செல்வமங்கை—மார்பு கொங்கைகளையும், ஆடவர்மார்பையும் இடமாகக்கொண்ட திரு[illegible]னையதாய். (௧௨௯)

ஐந்துமூன் றடுக்கி யிட்ட வமளியிற் றுயிலு றாத
மைந்தர்க ளில்லை யாங்கு மாதரு மனைய ராகு
மெந்தரத் தடங்குங் கொல்லோ வெழினகர் வளங்க ளங்கு
மந்திர மியற்றிச் சென்னை மல்லீசர் வாழ்கின் றாரால்.

(இ - ள்) மூன்றடுக்கியிட்ட பஞ்ச சயனத்தில் நித்திரைபுரியாத ஆடவரிலர். அதுபோலவே மங்கையரும் அத்தகைமையினராயினர், அழகிய அச்சென்னை நகரவளங்கள் (எடுத்துச் சொல்வதற்கு) என்னுடைய தரத்திலடங்குமோ? (அடங்கா) அவ்விடத்தில், சென்னை மல்லீசுரர் திருக்கோயில்கொண்டு வாழாநின்றனர் எ - று.

ஐந்தமளி—இலவம்பஞ்சு, செம்பஞ்சு, வெண்பஞ்சு, மயிற்றூவி, அன்னத்தூவியெனப்படும். இவை மும்மூன்றிட்டன வென்பார் "ஐந்து மூன்றடுக்கியிட்ட வமளி" என்றார். (க௯0)

புண்ணியம் புரிந்தோர் வேறாய்ப் புகப்படுஞ் சிவலோ கந்தான்
புண்ணிய வுருவுங் காணப் போந்திருந் தனைய தாகு
மண்ணலா லயமவ் வாறே யடுத்துறை குந்தந் தானு
நண்ணிய தனைய தாகு நாரணன் கோயி லாங்கே.

(இ - ள்.) சென்னை மல்லீசுரரது திருக்கோயிலானது சிவபுண்ணியங்களைச் செய்தவர்கள் வேறாகப் புகப்படுகின்ற சிவலோகமானது, புண்ணிய வடிவத்தையுங் காணும்படி வந்திருந்ததையொக்கும் அவ்வண்ணமே சென்னைகேசவர் திருக்கோயில் அங்கு வைகுந்தமும் வந்திருந்ததையொக்கும். எ - று. (க௯க)

சென்னைமல் லீசர் சென்னை கேசவ ரிவரை யப்ப
னன்னையென் றறிந்து பத்தி யாற்பணி புரிகின் றாரு
முன்னுறப் பணிகின் றாரு முறைமுறை துதிக்கின் றாரு
மின்னராய் வாழ்த லுற்றா ரிருநில மாந்த ரெல்லாம்.

(இ - ள்.) சென்னை மல்லீசுரர் - சென்னைகேசவர் ஆகிய இவர்களை, (முறையே) தந்தைதாயரென்று தெரிந்து பத்தியோடு பணிவிடைசெய்வோரும், திருமுன்னர்ப் பொருந்த வணங்குவோரும், முறை முறையாகத் தோத்திரஞ்செய்வோரும் (ஆகிய) இத்தன்மையராய், பெரிய வுலகிலுள்ள மானுடராயவரும் வாழ்வாராயினர் எ - று

அத்தகு கோயிற் பாங்க ரவிர்மணிக் கோயில் கொண்டு
சித்திபுத் திகள்வேட் டோர்க்கு நேர்க்குந்தன் னருளோ டன்பாற்
சித்திபுத் திகளாய் வைகத் திகழ்பிர சன்ன வைங்கை
யுத்தம னிருந்தான் மும்மை யுலகமும் போற்றி யுய்ய.

(இ - ள்) அந்தத் தகுதியாகிய (சென்னைமல்லீசுரர் சென்னைகேசவர்) திருக்கோயிலின் (தென்) பக்கலில், பிரகாசிக்கின்ற அழகிய திருக்கோயிலை யிடமாகக் கொண்டு, விரும்பினவர்களுக்குச் சித்திபுத்திகளை யளிக்குந் தமது திருவருளோடும் பக்கலிற் சித்திபுத்தி தேவிகளாய் வீற்றிருக்க விளங்குகின்ற ஐந்து திருக்கரங்களையுடைய உத்தமராகிய பிரசன்ன விநாயகக்கடவுள் மூவுலகமுந் துதித்துப் பிழைக்கும்படி எழுந்தருளியிருக்கின்றனர் எ - று.

பிரசன்னவிநாயகர் திருக்கோயில், சென்னைமல்லீசுரர் சென்னைகேசவர் திருக்கோயிலின் றென்பக்கலில், திருமதிலுக்கு நான்கு கஜதூரத்தில் தக்ஷிணமுகமாக விளங்காநிற்கும். (கஙங)

வேறு

எங்காவத் திருந்தருளும் பிரசன்ன விநாயகர்தா மிறைஞ்சு மன்பர்
க்காங்காங்கு வரங்கொடுத்து விளையாடுங் கதைமுழுது முலகந் தேரப்
பாங்கான வடமொழியிற் றொடைசெய்த பிருகுமுனி பரமற் போற்றி
நீங்காம னெடுங்கால மிருந்துமகிழ்ந் ததுமிந்த நிகரில் வைப்பாம்.

(இ - ள்) இவ்விதமாக அன்புகொண் டெழுந்தருளியிருக்கும் பிரசன்ன விநாயகப்பெருமான் றம்மை வணங்கும் அடியவர்கட்கு (அவர்கள் விரும்பிய) அவ்வவ் வகையே வரங்களை யளித்துத் திருவிளையாடல்க ளியற்றுஞ் சரிதமுழுவதையும் உலகின ருணரும்படி, அழகான ஆரியபாடையிற் சுலோகரூபமாகச்செய்த பிருகு முனிவர், அவ்விநாயகக் கடவுளைத் துதித்து நெடுங்காலம் பிரியாதிருந்து களித்ததும் இந்தச் சமானமில்லாத இடமேயாம் எ - று. (கஙச)

மாதா மணி முலைச்சுவடும் வளைத்தழும்பு மினிதணிந்து மாவின் மூலத்
தேதமுயிர்த் தொகைக்ககற்ற விருந்தருளு மேகம்ப ரெதிரே வைகி
மாதவமுற் றியற்றும்ப மாதவன்ற றமிழ்விரித்து வழங்குங் காஞ்சிக்
கோதியிடுங் குணக்கெல்லை யாயசிறந்து வாழ்வதுமிவ் வுரைத்த வைப்பா [ம்.

(இ - ள்) (காமாட்சி யம்மையாருடைய) அழகிய முத்தாரமணிந்த முலையின் சுவடும், வளையின் றழும்பும் இனிதாகத் (தமது திருமேனியில்) தாங்கி, ஒப்பற்ற மாமரத்தின்கீழே பிராணகோடிகளுக்குத் துன்பங்களையகற்ற எழுந்தருளியிருக்கும் ஏகாம்பரேசுரர் திருமுன்னே வசித்திருந்து பெருந்தவஞ் செய்துமுடித்த பெருந்தவசியாகிய அகத்தியமுனிவர் நல்ல தமிழ்ப்பாஷையைப்பரவச்செய்துவழங்கச்செய்தகாஞ்சி நகரத்திற்குச் சொல்லுகின்ற கிழக்கெல்லையாயச் சிறப்புற்று விளங்குவதுங் கூறிய இந்த இடமேயாம் எ - று.

ஏகாம்பரநாதர் உமாதேவின் முலைச்சுவடும் வளைத்தழும்புமணிந்ததை,

காஞ்சிப்புராணம்.

"மணிமுலைக்குவட்டிறுங்டுவளைக்கையானெருக்கிப்புல்லித்
தணிவருங்காதலவிம்மகக்காதலித்தழுவலோடுந்
திணியிருளறுக்குஞ்சோதித்திருவுருக்குழைந்துகாட்டி
யணிவளைத்தழும்பினோடுமுலைச்சுவடணிந்தாரையர்."—என்பதனாலும்,

அகத்திய முனிவர் காஞ்சியிலிருந்து தமிழ் விரித்ததை,

காஞ்சிப்புராணம்.

'காசியி னின்றும் போந்து கம்பர்தா மருளப் பெற்று
மாசிலாக் கச்சி மூதூர் மனனிவீற் றிருந்து பூமே
லாசிலாத் தமிழ்ப ரப்பி யருந்தமிழ்க் குரவு பூண்ட
தேசினன் மலய வெற்பிற் குறுமுனி திருத்தாள் போற்றி.''—என்பதனா
லு[illegible]ார்க. (கஙரு)

இயம்புமிரு தொடர்பானு மீங்கிருந்த பிரசன்ன விறைவர் நல்கு [ள
நயம்புணரின் னருளானு நவையறுக்கும் வடமொழியு ணடைபெற் றுள
வயம்புணரும் பார்க்கவத்தைச் செந்தமிழாற் புனைந்திந்த வள்ளலருண் மேற்
பயம்புணர வையகம்போற் றச்சாத்திடநின் றெவ்வினையைப் பாற்றினேனே.

(இ - ள்) சொல்லிய இவ்விரு சம்பந்தங்களாலும், இச்சென்னை நகரத்தி லெழுந்தருளிய பிரசன்ன விநாயகப்பெருமான் அருளிய நன்மைபொருந்திய இனிய திருவருளாலும், குற்றத்தை யொழிக்கும் வடமொழியில் நடைபெற்றுள்ள வெற்றி பொருந்திய பார்க்கவபுராணத்தைச் செந்தமிழ்ச் செய்யுள்களாற் செய்து, இந்தப் பெருமானுடைய திருவடியில், கடல்சூழ்ந்த உலகினர் துதிக்கும்படி, வினையை யொழிக்க நின்றவணங்கிய அடியேன் சொல்லத் தொடங்கினேன் எ - று. (௧௬௯)

திருநகரப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௬௧௧.

நைமிசப்படலம்.

திருத்தகு மாயன் வேதன் சிவபிரான் மூவ ரோடு
விருத்திர னாவி யுண்டோன் விண்ணவர் பலரு மேவி
யிருத்தலின் முனிவர் வேள்வி யிலங்குநை மிசமாங் கானம்
முருத்தகு மேரு வொக்கு முருவமாத் திரமே வேறு.

(இ - ள்.) திருமால் - பிரமன் - சிவபெருமான் (ஆகிய) மூவர்களுடன், விருத்திராசுரனுயிரைப்பருகிய இந்திரனும், பலதேவர்களும் பொருந்தியிருத்தலின், முனிவர்கள் வேள்விவிளங்கும் நைமிசமாகிய கானமானது அழகமைந்த மேருமலையை நிகர்க்கும் (ஆயினும்) உருவமட்டுமே வேறு (ஆகத்தோன்றும்) எ - று.

கந்தபுராணம் - அண்டகோசப்படலம்

"மேருவரை யதற்குநடுவே பிரமன் மூதூர்
மிக்கமனோ வதியதற்கு மேலைத்திக்கில்
நாரணன்வாழ் வைகுந்தம் வடகீழ்த் திக்கி
னுதனமா சோதிடகந் திசைக ளெட்டுஞ்
சீரியவிந் திரன்முதலா மெண்மர் தேயம்" என்றபடி, மேருமலையில் திரிமூர்த்திகள் இந்திராதி இமையவர்கள் யாவரும் வசிப்பார்போல, நைமிசத்திலும் அவிவேட்டு வசிக்கின்றனராதலின் "நைமிசமாங்கானம் மேருவொக்கும்" என்றும், நைமிசங் கானமாதலானும், மேரு மலையாதலானும் அவை தம்முள் உருவேறுபடுதலின் "உருவமாத்திரமே வேறு" என்றுங்கூறினார் (௧)

ஒருத்தனு விடத்தே சால விருபிறப் பெய்தி முத்தி
மருவினான் மறையு மோம்பி வளருமைம் பொறியும் வாட்டு
திருவளர் செயல்க ளாறுஞ் செய்தெழு பிறப்பு மோட்டிப்
பொருவிலட் டாங்க யோகம் பூண்டபுங் கவராங் குள்ளார்

(இ - ள்) ஒரு தேகத்திலேயே மிக்க இருபிறப்பையடைந்து, முத்தீக்களைப் பொருந்தி, நான்கு வேதங்களையுங் கற்று, (விஷயங்களில்) வளர்கின்ற ஐம்பொறிகளையும் அடக்கி, செல்வமிக்க அறுதொழில்களையுஞ் செய்து, எழுபிறவிகளையும் விலக்கி, ஒப்பில்லாத அட்டாங்கயோகத்தை மேற்கொண்ட வேதியர்கள் அந்நைமிசவனத்தில் வாழ்கின்றார்கள். எ - று.

தனு = உடம்பு இருபிறப்பெய்தல் = உபநயனகிரியை முடித்தல்; இது இயற்கைக்கண்ணுடன் தத்துவவுணர்ச்சியை யடையக்கூடிய ஞானக்கண் பெறுமாறு செய்யுங்கிரியை யெனப்பொருள்படும் பிறப்பாற் சூத்திரரும், சடங்கால் பிராமணருமாதலின், அவரை இருபிறப்பாளரென்றும், துவிசரென்றுங் கூறுவதுவழக்கு [இப்பெயர் க்ஷத்திரிய வைசியர்கட்கு முண்டு]

முத்தீ—காருகபத்தியம் - ஆகவநீயம் - தக்கணாக்கினி
நான்மறை—இருக்கு - யசுர் - சாமம் - அதர்வணம்.
ஐம்பொறி—மெய் - வாய் - கண் - மூக்கு - செவி.
அறுதொழில்—ஓதல் - ஓதுவித்தல் - வேட்டல் - வேட்பித்தல் - ஈதல் - ஏற்றல்.
எழுபிறப்பு—தேவர் - மக்கள் - விலங்கு - புள் - ஊர்வன - நீர்வாழ்வன - தாவரம்
அட்டாங்கயோகம்— இயமம் - நியமம் - ஆதனம் - பிராணாயாமம் - பிரத்தியாகாரம் - தாரணை - தியானம் - சமாதி. (௨)

மணிமுடி யமரர் தாழ வளர்சடை மௌலி தாங்கி
யணிசெய்கற் பகமுஞ் சூழ வரையிலவ் வறக்கலைகள் சூழ்ந்து
பிணிசெயும் வினைக ணீறப் பிறங்கொளி நீறு பூசித்
துணியருட் கண்ண ராகத் துலங்குகண் மணிகள் பூண்டார்.

(இ - ள்) இரத்தின கிரீடமணிந்த தேவர்கள் வணங்கும்படி, வளர்கின்ற சடைமுடி தரித்து, அழகுசெய்கின்ற கற்பகமுஞ் சூழும்படி அரையில் மரவுரியுடுத்து, துன்பஞ் செய்யும் வினைகள் நீறும்படி ஒளிவிளங்கும் திருவெண்ணீற்றினை யுத்தூளனஞ் செய்து, துணிந்த கிருபா நோக்குடையவர்களாக விளங்குகின்ற வுருத்திராக்க மணிகளைத் தரித்தார்கள் எ - று (௩)

வேறு

செந்தீ வளர்க்கும் பெருஞ்சிறப்பாற் றேவர்க் கவியும் புவியுயிர்க
ணந்தா தளிக்கு மழைவளமு நாளு முனிவர் கொடுத்தலினாற்
சிந்தா குலமவிட் டலைகடலிற் சிறந்த பகலு மிரவேபோ
லந்தா மரைக்கண் வளர்கின்றா னகிலம் புரக்கு மச்சுதனே.

(இ - ள்) செவ்விய யாகாக்கினியை வளர்க்கின்ற பெரிய சிறப்பினால், தேவர்கட்கு அவிப்பாகமும், உலகிலுள்ள ஆன்மாக்களை அழியாது காக்கும் மழைவளப்பமுந் தினந்தோறும் அம்முனிவர்கள் கொடுத்துள்ளதினால், உலகினைக் காக்குந் திருமால் மனக்கவலையின்றி அலைகள் பொருந்திய திருப்பாற்கடலில் இரவைப்போலவே நடுப்பகலிலுந் தன்னுடைய அழகிய தாமரை மலர்போலுங் கண்களை (குவித்து) அறிதுயில்புரிகின்றனன். எ - று

திருமால் உலகுக்குத் திதிக்கடவுளாயினும், நைமிசமுனிவரால் உலகிற்குக் குறைவில்லாது சுகமுண்டாயிருத்தல் கருதி, நித்திரைக்குரிய இரவுபோலவே பகலிலுந் துயில்கின்றனனென்பது கருத்து. (௪)

அவிகண் மிகவு மார்தலினா லமலன் விளையாட் டயர்கின்றான்
புவியுண் டவன்கண் வளர்கின்றான் பூவன் மறைக ணுவல்கின்றான்
சவியின் னவர்கோ னவுணருயிர் தாக்கப் போர்க்கு நடக்கின்றான்
குவிபொற் சிகரக் கூவிரத்தேர்க் கோமான் முதலோர் திரிகின்றார்.

(இ - ள்) அவியுணவுகள் மிகவும் புசித்தலால், நிமலனாகிய சிவபெருமான் (ஆனந்தத்) திருக்கூத்தாடுகின்றான். உலகமுண்ட திருமால் (யோக) நித்திரை புரிகின்றான். தாமரைப்பூவிலுள்ள பிரமன் வேதங்களை யோதுகின்றான். அழகிய தேவராசனாகிய இந்திரன் அசுரருயிரைச் செகுக்கும்படி யுத்தத்திற்குச் செல்கின்றான். குவிந்த பொன்னாலாகிய சிகரமுங் கூவிரமும் வாய்ந்த தேரையுடைய சூரியன் முதலியோர் (உலாவித்) திரிகின்றார்கள். எ - று.

கூவிரம் - கொடி. (௫)

படுக்கும் பசுக்க ளொருபாலாம் பரிந்து சுரக்கும் பால்கறந்து
விடுக்கும் பசுக்க ளொருபாலாம் வேள்வி முடித்து மறையோர்க்குக்
கொடுக்கும் பசுக்க ளொருபாலாங் கோல மகளிர் மன்றலுக்குத்
தொடுக்கும் பசுக்க ளொருபாலாந் தூய முனிவ ரிடந்தோறும்.

(இ - ள்) புனிதமாகிய முனிவர் வாசங்களிலெல்லாம், ஒருபக்கலில் அகப்படுத்தும் பசுக்களாம் ஒருபக்கலில் (மனம்) பரிந்து சுரக்கின்ற பாலைக் கறந்து விடுகின்ற பசுக்களாம் ஒரு பக்கலில் யாகமுடித்து வேதியருக்குத் தானமளிக்கும் பசுக்களாம் ஒருபக்கலில் அழகிய மகளிர் மணத்திற்குச் செலுத்தும் பசுக்களாம் எ - று (௬)

மறையோ துநரு மாகமத்தின் வழிதேர் குநரு மங்கத்தின்
றுறைநா டுநருங் கற்பத்திற் றொகுத்த வினையிற் சார்நரு
முறையாற் புராண மூவாறு மொழிசெய் குநருங் கேட்குநருங்
குறையா வேள்வி முடிக்குநருங் குழீஇய குழுவை யெவ்விடனும்.

(இ - ள்) வேதபாராயணஞ் செய்பவரும், ஆகமமார்க்கத்தை யாராய்பவரும், வேதாங்கத்தின் துறைகளை யுணர்பவரும், மந்திர சாத்திரத்திற்குரிய செயல்களிற் செல்பவரும், பதினெண்புராணங்களையும் முறைப்படி பிரசங்கிப்பவரும், (அவற்றைச்) சிரவணஞ் செய்பவரும், குறையாத யாகத்தை முடிப்பவரும் (ஆகிய) கூடிய கூட்டங்களே எவ்விடத்திலும் (விளங்கும்) எ - று (௭)

மதவேள் குடங்கைக் கணையான வெழுத்தால் வழுவின் முனைவிழுந்தா
மிதவை புரியு முனிவரிட மெய்தி னன்மையுஞ் சிவபெருமான்
பதமே லிடுவ னெனக்குறித்துப் பணிந்த தடந்தோ றுற்பலமுஞ்
சதவா யிரமெல் லிதழ்விரிந்த தண்டா மரையுந் ததையுமே.

(இ - ள்) மன்மதனுடைய குடம்போன்ற கைக்கணையான குற்றத்தால் முன்னாக குற்றத்திற் படிந்தோம். நன்மையையேசெய்யும் முனிவர்கள்பா லடைந்தால (இனி)நன்மையுஞ் சிவபெருமானுடைய திருவடியின்பேரில் அணிவோமென்று யோசித்து, குளிர்ந்த நீர் நிறைந்த தடாகங்களிலெல்லாம், உற்பலமலர்களும், நூறும் ஆயிரமுமாகிய மெல்லிய இதழ்கள் விரிந்த தண்ணிய தாமரை மலர்களும் நெருங்கியிருக்கும் எ - று. (௮)

கிழங்கு கனிகாய் மதுமலர்கள் கெழுதகு தளிர்மெல் லிலைசமிதை
வழங்கி முனிவர்க் குவப்பாக்கு மாசி லாத பெருந்தவத்தார்
பழங்கண் சிறிது மறியாமற் படர்ந்த கிளைக ளுடனெருங்கு
தழங்கு புகழ்நை மிசவனத்துத் தருவுங் கொடியும் பலவுமே.

(இ - ள்) குற்றமில்லாத பெரிய தவத்தால், துன்பமென்பதைச் சிறிது மறியாமல், படர்ந்த தமது சுற்றத்துடனே நெருங்கிய புகழ் விளங்கும் நைமிசாரணியத்தில் மரங்களுங்கொடிகளும் (செடிகள் முதலிய) பலவும், கிழங்கு கனி காய் தேன் மலர்கள் நிறைந்தோங்கிய தளிர்கள் மெல்லிய இலைகள் சமிதைகள் (முதலிய வற்றை) கொடுத்து, முனிவர்களுக்குச் சந்தோஷத்தை யுண்டு செய்யும் எ - று (௯)

தரங்கக் கடலிற் புத்தமுதுந் தவள மதியிற் சுவையமுதும்
புரங்கள் கடந்த புண்ணியனாற் புசிக்கு மமரர் கவியுணவும்
இரங்கி யவனே கொடுப்பினல்லால் யாவர் கொடுப்பா ரவனுருவாய்
வரங்கொ ளெழுனமா தவர்கொடுப்ப வாங்கிச் சுரர்க்கு வழங்குமே.

(இ - ள்) அலைகள்பொருந்திய திருப்பாற்கடலிற்றோன்றிய புதிய அமுதத்தையும், வெள்ளிய சந்திரனிடத்திற்றோன்றிய சுவையமைந்த அமுதத்தையும், திரிபுரங்களையெரித்த சிவபெருமானாற் புசிக்குந் தேவர்களுக்கு அவியாகிய உணவையும் அவ்விறைவனே மனமிரங்கிக் கொடுத்தாலல்லாமல் (வேறே) எவர் கொடுக்கவல்லவர்? (ஒருவருமிலர் ஆதலின்) சிறந்த யாகாக்கினியானது முனிவர்கள்கொடுப்ப வாங்கி, அவ்விறைவனுருவாய் நின்று தேவர்கட்குக் கொடுக்கும் எ - று (௧0)

தவத்தால் வேள்வி யாற்றுதலாற் றாங்கண் மிகவு முடல்வருந்தி
யவத்தா லுலக மனைத்தினையு மழியா தளிக்கு முனிவரர்கள்
சிவத்தான் மலமற் றுயர்வீட்டிற் சேர்ந்து வாழ்வ தலதுதுவந்
துவத்தான் மயங்கு மமரர்பதி துன்ன நினையா ரொருகாலும்.

(இ - ள்) தவத்தாலும் யாகஞ்செய்வதாலும் தாங்கள் மிகுதியும் உடல்வருந்தி, அவமார்க்கத்தினாலே உலகமுழுவதையும் அழியவொட்டாமற் காக்கும் முனிவர்கள் சிவத்தினாலே மலபந்தமற்று உயர்வாகிய மோக்ஷத்திற் கலந்து வாழ்வதல்லது, துவந்துவத்தால் மயக்குறுந் தேவர்களுடைய பதவியையடைய ஒரு பொழுதுங் கருதமாட்டார்கள். எ - று

துவந்துவம் - ஒன்றற்கொன்று தொடர்ந்திருப்பது, பாசபந்தம். (௧௧)

பொற்றா மரையோன் மனத்தெழுந்து போந்தோர் நேமி தவம்புரிய
நற்றா ரணிவே றின்றெனவே நாட்டி யமர்ந்த நைமிசத்து
வற்றா வளமும் பெருமையுமார் வகுப்பா ரந்த வனத்திருந்து
முற்றா விழைவிற் சவுனகமா முனிவன் வேள்வி தொடங்கினன்.

(இ - ள்) அழகிய தாமரைமலரில் வசிக்கும் பிரமதேவனுடைய மனத்திற் றோன்றிய தவஞ்செய்தற்கு நல்லபூமி (இதுவேயன்றி) வேறில்லையென்று ஒப்பற்ற சக்கரமானது நிலைநாட்டிய பொருந்திய நைமிசவனத்தின் குறையாத வளப்பத்தையுஞ் சிறப்பையுஞ் சொல்லவல்லவரெவர்? அந்த வனத்திலிருந்து பெரு விருப்பாற் பெருமைதங்கிய சௌனகமுனிவன் யாகஞ்செய்யத் தொடங்கினன் எ - று

நைமிசம் - நேமிசம்பந்தம. இது சௌனகராதி முனிவர்கள் பிரமனைத் நோக்கித் தவஞ்செய்தற்குரிய புண்ணியபூமி யொன்றனையெங்கட்கு வரையறுக்க வேண்டுமென வினவ, பிரமன் தருப்பையை வளைத்தோர் சக்கரமாக்கி நிலமிசையுருட்டி, இதுவீழுமிடமே புண்ணிய பூமியெனவிடுப்ப, அவர்கள் அதனைப் பின்றொடர்ந்து சென்றனர். அது தங்கியவிடமே நைமிசவன மெனப்படும். (௧௨)

வேறு

வெண்டிரு நீற்றினர் விளங்கு கண்டிகை
கொண்டொளி ருரத்தினர் குடங்கைக் குண்டிகைத்
தண்டின ரனைவருஞ் சார்ந்து நைமிச
மண்டினர் சவுனகன் மகத்தைக் காணவே.

(இ - ள்) திருவெண்ணீற்றினை யணிந்தவர்களும், பிரகாசிக்கின்ற உருத்திராக்க கண்டிகையணிந்து விளங்கு மார்பினையுடையவர்களும், குடம்போன்ற கையிற் கமண்டலமும் தண்டமுந் தாங்கினவர்களும் (ஆகிய) எல்லோரும், நைமிசவனத்தை யடைந்து சவுனகமுனிவன் யாகத்தைக்காண நெருங்குகின்றார்கள். எ - று. (௧௩)

ஏதநீ றிடும்பதி னெண்பு ராணமுங்
காதலா லுணர்ந்தவன் கால காலன்றன்
பாதமே யல்லது பணித ராதவன்
சூதமா முனிவனுந் துன்னி னானரோ.

(இ - ள்) குற்றத்தையொழிக்கும் பதினெண்புராணங்களையும் ஆசையுடன் அறிந்தவனும், காலகாலனாகிய சிவபெருமானுடைய திருவடியையன்றி (பிறிதொன்றை) வணங்காதவனுமாகிய சிறந்த சூதமுனிவனும் (அவ்விடத்தை) அடைந்தனன் எ - று.

காலகாலன் - சிவபெருமான் மிருகண்டு புத்திரராகிய மார்க்கண்டேயருயிரைக் கவர வந்த மிருத்யுவினுடைய உயிரைக் கவர்ந்தவனென்றது பொருள். (௧௪)

சயமலி நைமிசஞ் சார்ந்து ளார்களும்
மயனிலத் திருந்துசென் றடுத்து ளார்களும்
புயலெதிர் மயிலெனப் பொங்கு மோகையி
னயமொழி முனியெதி ரணிரச் சூழ்ந்தனர்.

(இ - ள்.) கூட்டமிகுந்த நைமிசவனத்தை யடைந்துள்ளவர்களும், பிறவிடங்களிலிருந்து வந்து (அங்கே) சேர்ந்துள்ளவர்களும், மேகத்தைக்கண்ட மயிலைப்போல அதிகரிக்கின்ற ஆசையுடன் நல்ல சொற்களையுடைய சூதமுனிவனை எதிர்கொண்டு சென்று புடைசூழ்ந்தார்கள். எ - று. (௧௫)

திருத்திய வாதனச் சேக்கை மீமிசை
யிருத்தினர் பூசனை யியற்றிக் காதையி
னருத்திமிக் கவனிருந் தயாவு யிர்த்தபின்
கருத்துறு விழைவினற் கதைதன மேயினார்.

(இ - ள்) திருத்தமாகிய ஆதனத்திட்ட மெத்தையின்பேரில் (சூதமுனிவனை) இருக்கச்செய்து பூசித்து, சிவசரித்திரங்களில் ஆசைமிகுந்த அம்முனிவனிருந்து

இளைப்பாறிய பின்னர், மனத்திற்றோன்றிய ஆசையால (அவனை நோக்கி) கூறத் தொடங்கினார்கள். எ - று.

இருந்தினர் - முற்றெச்சம். (க௬)

பண்டுறு பவந்தொறும் பண்ணி யுற்றிய
மண்டுபுண் ணியத்தினால் வரம்பின் மாதவ
வண்டரும் வியத்தகு மடிக ணும்மையாங்
கண்டனங் கடந்தனங் கலந்த மாயையே

(இ - ள்) எல்லையில்லாத பெருந்தவத்தையுடைய சூதமுனிவரே! தேவர்களும் வியப்புறுகின்ற சுவாமிகளே! அடியேங்கள் கீழ்ப்போன பிறவிகளிற்செய்து முடித்த மிக்க புண்ணியத்தினாலே, தேவரீரைத் தரிசித்தோம் மாயாசம்பந்தத்தைக் கடந்தோம். எ - று (க௭)

வேறு

ஓதிய மறைகட் டமா னுறுபய னெளிது பெற்று
நீதியின் யாங்க ணிற்கு நிலைகளு மழுவிற் றீர்ந்த
மோதிய வினைய ராகிப் பிதிரரு முத்த ரானார்
காதியைம் பொறிவென் றுயைக் கண்ணுறக் காண்ட லாலே.

(இ - ள்) ஐம்பொறிகளையுங் கோபித்துச் சயித்த தேவரீரைக் கண்களாற் பொருந்தக் கண்டதனாலே, பாராயணஞ்செய்த வேதத்தாலுள்ளதாய பலனை யெளிதாகப் பெற்றோம் நீதியுடன் அடியேங்களிருக்கும்(வருணாசிரம)நிலைகளுங் குற்றத்தினின்று நீங்கின. எம்முடைய பிதிரரும் வினையையொழித்தவராகி முத்தரானார்கள் எ - று.

மோதிய வினையா - வடநூன்முடிபு (க௮)

எந்தமைப் பயந்த பேறு மிருமுது குரவர் பெற்றார்
வெந்துயர் விளைக்கு மாய வினையுடல் விடுத்து மண்மேல்
வந்திடு பயனும் யாங்கண் மருவினம் பெறும்பே றெல்லா
மைந்துற வுடையோம் யாமே மனனுமா தவர்க ளேறே

(இ - ள்) நிலைபெற்ற பெருந்தவசிகளில் ஆண்சிங்கம்போன்றவரே! எம்மைப் (புதல்வராகப்)பெற்றதனாலாகிய பலனையும் எமது தாய்தந்தையர் பெற்றனர் கொடிய துன்பத்தை விளைக்கும் மாயமாகிய வினைத்தேகத்தை யொழித்துப் பூமியிற் பிறந்த பயனும் யாங்களடைந்தோம் பெறத்தக்க பேறுகளையெல்லாம் மிகுதியாக வுடையோம் (ஆயினோம்) எ - று (க௯)

எங்களுக் கும்மைப் போல விராறுட னாறு கூட்டித்
தங்கிய புராண முற்றுஞ் சாற்றவல் லவர்கள் யாவ
ரங்கவை யனைத்து முன்ன ரருளினா லருளிச் செய்தீர்
புங்கவ ரேறே வேறு புராணமுங் கூறல் வேண்டும்

(இ - ள்) வேதிய சிரேஷ்டரே! எங்களுக்குப் பதினெண் புராணங்களையுந் தேவரீரைப்போலச்சொல்ல வல்லவர்கள் யாவர்? அப்புராணங்களையெல்லாம் முன்னாத் தேவரீரது கிருபையினால் திருவாய்மலர்ந்தருளினீர் (அவையேயன்றி) வேறு புராணமுஞ்சொல்லவேண்டும். எ - று.

இராறுடனாறு - பதினெட்டு (உ௦)

தவவலிச சவுன கனசெய் சததிர வேளவிக கோது
மவதியின பன்னீ ராண்டு மடிகளபாற புராணக கேள்வி
யுவகையி னமுத மாநதி யுறுசுகம பெறுவ தன்றிக
கவாமனத தடியேஞ செய்யுங கடபபாடு வேறொன றிலலே.

(இ - ள்.) தவவனமையுடைய சவுனகமுனிவன் செயயுஞ சததிரயாகத திற்குச சொலலிய காலமாகிய பனனிருவருடஙகளும, தேவரீரிடததிற புராணசிர வணமாகிய களிப்புடனகூடிய அமுததமைதப பருகிப பொருநதிய சுகததையடைவதல லாது, பிளவுபட்ட மனததையுடைய அடியேஙகள செய்யுங கடமை பிறிதொனறு மிலது. எ - று. (உக)

பததியி னிவவா றெலலாம பகாநதமா தவரை நோககி
முததியை விழைநத சூத முனிவரன மகிழ்நது சொலவான
விததினை விததி யலலால விளைபயன கொளவா ரியாவா
பொததிய விறைவன மாணபும புகனறிடா ரபுரையி னீஙகார.

(இ - ள) இவ்வகையாக வெல்லாம பததியுடனகூறிய முனிவாகளைபபார்ததது, முததி மாாககததைக் காமுற்ற முனிசிரேட்டனுகிய சூதன களிப்புறறுச சொலலத தொடஙகினன். விதையை விதைததலலாமல விளைபொருளைககொளளததககவா எவா? (அதுபோல) மலசம்பநததகதினினறும நீஙகாதவாகள் (அருள) நிறைநத இறைவன புக ழையுஞ (சொலவாாகளோ?) சொலலாாகள, எ - று (உஉ)

நடுநிலை பிழைதத லினறி நண்ணறி வுடைய ராகிக
கொடுவினை பலவு நீககிக கொழுநதெழு மனப ராகப
படுமனத துறுதி யோடு பண்பினா கேடகப புககால
விடுவது புரியா தெநத விததததையும விளமப வேணடும.

(இ - ள) நடுநிலை தவறுதலிலலாது, பொருநதிய அறிவினை யுடையவாக ளாகி, கொடியவினைச சமபநதஙகளெலலா வறறையு மொழிதது, கொழுநதுவிட்டெ ழுநத அனபுடையவாகளாய, மனததிலுணடாகிய (பகதி) வலியுடன குணததினை யுடையோா கேடகபபுகுநதால, எவவகையையும விடாது சொலலவேணடும. எ - று

குலததிழுக கினறிப புதது கூாமையி னிகாபபா ரினறி
நலததகு தவநதா னஙக ளொடொறு மினிது போறறி
யலததக மணிநத பாதத் தமபிகை பாகா பததிக
கலததினை யிவாநதீா கேளவிக கடலகட வாமை யுண்டோ.

(இ - ள) குலபபழுதிலலாமல, புததி நுடபததில (தமமை) ஒபபாரிலலாமல, நன்மைபொருநதிய தவமுந தானமுந தினநதோறும இனிதாகக காததது, செமபஞசுக குழமபூட்டிய பாததததையுடைய உமாதேவியாரைப் பாகமாகக கொணட பரமேச சுரருடைய பததியாகிய மரககலததினை யூாநதவாகளே ! கேள்விககடலைக கடவாமை (உஙகளுககும) உணடோ? எ - று. (உச)

பகைநகை நொதுமம லினறிப பலலுயிா மாட்டு மொத்த
தகைபெறு முளததி னாக டாமவிழை காரியங்கள
பிகைபடாந துலகுக கெலலாம விழுபபயன பயநதே நிற்கும
வகையறி முனிவிா நீயிா நலலதீக மதிககிட லீரால.

(இ - ள்) பகையும், நட்பும், நொதுமலுமில்லாது, எல்லா வுயிர்களிடத்தும் ஒப்புமையுடைய மனம்வகித்தவர்கள் விரும்பிய செயல்கள் அதிகமாக விருத்தியாகி உயிர்கட்கெல்லாம் பெரும்பயனைக் கொடுத்தே நிற்கும் வகையை யுணர்ந்த முனிவர்களே! நீங்கள் நலவிடயத்தையே பொருளாக மதித்தீர்கள். எ - று.

நொதுமல் - பகைநட்புகளின்மை. (உரு)

கருமம்புரிநர் பாற்குக் கூலி கையிடைக் கொடுப்பார் போல்
விரும்பிய வெமக்கு மேலும் விழைவினை விளைத்தீர் நும்பா
லரும்பிய காதன் முற்ற வறைந்து மென்று முன்னர்ப்
பெரும்பய னளிப்பத் தேர்ந்து பேசுவா னிதனைச் சொன்னான்.

(இ - ள்) கருமமைத் தினப்பவர்கட்குக் கூலியைக் கையிற் கொடுப்பவரை யொப்ப (புராணங்களைப் பிறர்க்குக்கூற) விருப்புற்ற வெமக்கு மிகுதியும் ஆசையை விளையச்செய்தீர்கள் உம்மிடத்துண்டாகிய ஆசையால் முழுவதுஞ் சொல்லுகின்றே னென்று, பெரும்பயனைக் கொடுப்பது கருதிக் கூறுகின்ற சூதமுனிவன் முதலில் இவ்வாறு சொல்லலாயினன் எ - று. (உசு)

நைமிசப்படலம் முற்றிற்று

ஆகத்திருவிருத்தம் - ஙஙஎ

புராணவரலாற்றுப்படலம்.

பகர்பிரமம் பதுமம்வயி ணவமே சைவம் பாகவதம் பவுடிகநா ரதமார்க் கண்டம், திகழுநதபண் ணவர்க்குரிய வாக்கி நேயஞ் செறிபிரம கைவர்த்த மிலிங்கம் யார்க்கு, மகிழ்வுபுரி வராகமே காந்த மோடு வாமனமே கூர்மமச் சியங்கா ருடம், புகரில்பிர மாண்டமெனு மிவைமூ வாறும் புகல்கிரந்த நாலிலக்கம் புகலக் கேட்டீர்.

(இ - ள்) சொல்லுகின்ற பிரமம் - பதுமம் - வயிணவம் - சைவம் - பாகவதம்-பவுடிகம்-நாரதம்-மார்க்கண்டேயம் - விளங்கிய தேவர்களுக்குரிய ஆக்கிநேயம்-(புகழ்) நெருங்கிய பிரமகைவர்த்தம் - இலிங்கம் - எல்லார்க்குங்களிசெய்யும் வராகம், காந்தம் - வாமனம் - கூர்மம்-மச்சம் - காருடம் - குற்றமில்லாத பிரமாண்டம் என்று சொல்லப்படும் இவை பதினெட்டுப் புராணங்களும் சொல்லுகின்ற கிரந்தத்தொகை நாலிலக்கமாய் சொல்லக்கேட்டீர்களா? எ - று (க)

இத்தகைய புராணமூ வாறு மேரு விலங்குகைலாயவரை யிறைவ னடிபாதப், பத்திபுரி நந்திசனற் குமாரற் கோதப் பணிந்தவன்பால் வியாத முனி பரிவாற் கேட்டு, மெத்தியதி வினையோட்டப் பாரமேற் சால விளக்கி யது போன்முனிவர் வேறு வேறு, பத்திமகிழ் வொடுமவழியே கேட்டுச் செய்த புகரிலாப் புராணமூ வாறுமா டாமால்.

(இ - ள்) இவ்வகைய புராணங்கள் பதினெட்டையும் விளங்குகின்ற கைலாய கிரியிலுள்ள சிவபெருமானுடைய திருவடியிற் பத்திசெய்த திருநந்திதேவர் சனற்குமார முனிவருக்குப் பூர்வஞ்சொல்ல, அச்சனற்குமார முனிவரிடம் வியாதமுனிவர

வணங்கிக்கேட்டு மிகுந்த தீவினையானது ஒழியும்படி பூமியில் நன்றாக விளக்கியது போல, முனிவர்கள் வெவ்வேறாக மனக்களிப்புடன் முறையே கேட்கக்கூறிய குற்றமில்லாத உபபுராணங்கள் பதினெட்டுள்ளன எ - று. (உ)

சாற்றுசனற் குமாரமே நார சிங்கந் தகுகாந்தஞ் சிவதருமந் தழை
தூர வாசம், போற்றியநா ரதமேகா பிலமெல் லோரும் புகழுசனஞ் சவு
னகமாம் பிரமாண் டஞ்சீர், மாற்றருமவா ருணங்காளி புராண மேத்தும்
வாசிட்ட மிலிங்கமொடு சவுரம் பாவம், பாற்றியபா ராசரிய மாரீ சம்பார்
பகாசாம்பம் பார்க்கவமென் றுவற்றின் பேராம்.

(இ - ள்) சனற்குமாரமுனிவர் சொல்லிய நாரசிங்கம்-தகுதியாகிய காந்தம் - சிவதருமம் - (அன்பு) தழைத்த தூர்வாசம் - துதிக்கத்தக்க நாரதம் - காபிலம் - எல்லோரும் புகழ்கின்ற உசனம் - சவுனகம் - பிரமாண்டம் - சிறப்பொழியாத வாருணம்- காளி-துதிசெய்யும் வசிட்டம் - இலிங்கம்-சவுரம்-பாவங்களையொழித்த பாராசாரியம்-மாரீசம் - உலகங்கூறும் சாம்பவம் - பார்க்கவம் என்று அவ்வுப புராணங்கட்குப் பேர்களாம். எ - று. (௩)

வேறு

விலக்கரு முனிவர் தம்மால் விளங்கிய வுபபு ராணந்
துலக்கிய கிரந்த மெல்லாந் தொகையொரி லக்க மாகு
மலக்கணை யறுக்கு மந்தப் புராணமூ வாற னுள்ளு
நலக்குமபார்க் கவபு ராண நாயக மாகி நிற்கும்.

(இ - ள்) நீக்கற்கரிய (தவமுடைய) முனிவர்களால் விளங்கிய உபபுராணங்கள்கூடிய கிரந்தமெல்லாவற்றிற்குந்தொகை இலக்ஷமாகும் துன்பத்தை யொழிக்கும் அந்த உபபுராணங்கள் பதினெட்டனுள்ளும் நன்மைமிகும் பார்க்கவபுராணமானது தலைமையுற்று விளங்கும் எ - று. (௪)

பிரணவப் பொருளாயப் பேத மபேதமே பேதாபேதம்
வரமலி பொருளா யொன்றாய் வரம்பிலா வின்ப மாகும்
பரவிய வைந்து கைப் புத்தேண் மான்மியம் பகரு நீரால்
விரவிய பார்க்க வத்தை விநாயக புராண மென்பார்.

(இ - ள்) பிரணவப்பொருளாயும், பேதமாயும், அபேதமாயும், பேதாபேதமாயும், மிகச்சிரேஷ்டமான பொருளாயும், ஒன்றாகியும், எல்லையில்லாத இன்பமயமாயும் (விளங்கி) துதிசெய்யும் ஐந்து திருக்கரங்களையுடைய கணேசப்பெருமானார் மகாத்மியத்தைக் கூறுந்தன்மையால், இப்பார்க்கவபுராணத்தை விநாயகபுராணமென்று சொல்வார்கள். எ - று. (௫)

புண்ணியந் தருங்க ணேச புராணமுன் கைலை வெற்பி
னண்ணிய வெண்டோண் முக்க ணுதனு ரருளிச் செய்யப்
பண்ணிய தவத்தால் வேதன் பணிந்துறக் கேட்டுப் பின்ன
ரெண்ணிய வியாத மேலோ னிறைஞ்சிட வியம்பி னானே.

(இ - ள்) புண்ணியத்தை யளிக்கும் விநாயகபுராணத்தைக் கைலாயகிரியிற் பொருந்திய எட்டுத் திருப்புயங்களையும் மூன்று திருவிழிகளையு முடைய சிவபெருமான் பூர்வம் அருளிச்செய்ய, பிரமதேவன் தான்செய்த தவத்தினால் மனம்பதிந்து

பொருந்தக்கேட்டு, பிறகு (யாவரும) எணணத்தக்க மேலோனுகிய வியாத முனிவனை (தனனை) பணிய (அதனை அவருககுக) கூறினன். எ - று. (௬)

வேரியங கமலப புதமேதன விளம்பிய முறைமை யோடே
சீரிய வியாத மேலோன றெளிததிடத தவஙகள சானற
கூரிய பிருகு வெனபான குறைகட லமிழ்த மென்ன
வாரிய மொழியாற செய்யு ளாககின னகில முய்ய.

(இ - ள) தேன சொரியும் அழகிய தாமரைத தவிசில வீற்றிருககும பிரம தேவன் கூறிய கிரமபபடியே ரீததி பெறற மேலோனுகிய வியாதமுனிவன திருவாயமலாநதருள, மேமபட்ட தவஙகள் மிகுநத பிருகுமுனிவன சததிககினற (பாற) கடலிற றேனறிய அமிரதமபோல வடமொழியிற சுலோகஙகளாக உலகின ருயயுமபடி செயதனன. எ - று. (௭)

கருதுபா சனையே லீலா காணடமென றபபு ராணத
திருவகை யாகுங காணட மிரு நூற றைம பதுகாண டததுள
மருவிய வததி யாய மற்றவை யெலலாங கூறும
பொருவரு கிரநதம பனனீ ராயிரம பொருநதாநிறகும.

(இ - ள.) அப்புராணததில, தியானிககத தகக உபாசன காணடம லீலாகாணடமென்று காணடஙகள இருவகையாகும. அவவிருகாணடஙகளுளளும பொருநதிய அததியாயஙகள் இருநூற்றைமபது அவறறை யெலலாஞ சொலலுகினற சமானமிலலாத கிரநதஙகள பனனீராயிரம பொருநதியிருககும எ - று. (௮)

பாடிய தலைவன பேரால பாரககவ புராண மென்றும
பாடிய செயயுள் கொளளும பாடடுடைத தலைவன பேரால
பாடியல கினற காணு பததிய மென்றும யாரும
பாடிய வாய ராகிப பயனமிகப பெறறு நினறார.

(இ - ள) நூலசெயத பிருகுமுனிவா பெயரால பாரக்கவபுராணமென்றும், செய்த நூலினை மேறகொளளும பாட்டுடைத தலைவனுகிய கணேசன பெயரால் பெருமை பொருநதிய காணபதயமென்றும,எலலோரும துதிககினற வாயையுடையவராகி (அதனுல) பெருமபலனை யடைநது நினறாரகள. எ - று (௯)

புரையற விளஙகு மிநதப புராணததைச செமபொன மேரு
வரையெனக குணமேமப பட்ட மாதவப பிருகு வெனபா
னரையருக கரையன சோம காநதனு தரவிற கேடபக
கரையறு காதல பொஙககக கட்டுரைத திட்டா னனறே.

(இ - ள்) குற்றமற விளஙகும் இந்தப் பார்ககவ புராணததை மேருவாகிய செவ்விய பொன்மலைபோல மேம்பட்ட குணததையுடைய பெருந்தவஞ்செயத பிருகுமுனிவனெனபவன மனனர்மனனனுகிய சோமகாநதன ஆசையோடுகேட்க, எலலையிலலாத ஆசையதிகரிகக உறுதியாகக கூறினன எ - று. (௧௦)

வேறு

நித்தியமாய் நிர்க்குணமாய் நின்மலமாய் நிரஞ்சனமாய் நினைவுக் கெட்டா
சத்தியமாய்த் தற்பரமாயத தத்துவமாய்ச சசசிதா னநத மாகி [ச

யத்துவிதப பொருளாகி யகண்டபரி பூரணமா யமல ஞான [ட்பார்.
மெத்தியவுள் ளகநதமாநத விநாயகமான மியநதவததோர விருமபிக கே

(இ - ள்) நித்தியமாகியும், குணரகிதமாகியும், மலரகிதமாகியும், பரிசுதத மாகியும, மனந்தறுங் கெட்டாத உண்மையாகியும், தானே பரமாகியும், தததுவமயமாகியும, சததுச் சித்து ஆநநதமயமாகியும், இரண்டறற பொருளாகியும, அகண்டபரிபூரணமாகியும, மலசம்பந்தமறற ஞானம பொருநதிய இதயததிலெழுநதருளியுமுள்ள விநாயககடவுளுடைய மானமியததைத தவமுடையவாகள விருபபுற்றுக கேட்பார்கள். எ - று. (கக)

விருத்திரனைக் கொனறுனு நான்முகனு மதுவுயிரா வீட டினுனு
முருத்திரனும வழிபடுமா றுருஙகுமொரு தனிமுதலா யுலகுக கெலலாங
கருத்தனுமாய் விளையாடுங கணபதிமான மியஙகணக்கில பிறவி தோறும
பொருததமுறுந தவமபுரியார் விருமபினுமற றவாசெவியிற புகாதோர நாளும.

(இ - ள) இநதிரனும், பிரமதேவனும், திருமாலும, உருததிரனும வழிபாடு செய்யுமபடி யோஙகிய ஒபபறற தனிமுதலாகி, எலலா வுலகஙகட்குந தலைவனுமாகித திருவிளையாடல புரியும விநாயகப பெருமானுடைய மானமியமானது எணணிலலாத பிறவிகளிலெல்லாம் தவததைப பொருநதுமபடி செயயாதவாகள விருமபினாலும, அவாகள் செவியில ஒருநாளும புகமாட்டாது. எ - று.

விருததிரனைக கொனறுன - இநதிரன நானமுகன - பிரமன
மதுவுயிரா வீட்டினுன - திருமால இதனை,

விருத்தாசலபுராணம்.

"காதி ரணடினிற குறுமபியிற கணணாபா விரணடு
பேத மாகிய மதுவுடன கைடவன பிறநது
சீத ரனறனைப பொருதனா சீதரன் றேறறு
யாது செயகுவோ மெஙஙனம வெலலுவோ மெனறுன

தேறற மாய்வரங கேண்மினென றுரைததனன் றிருமால
தோற்ற நீவர மெனகொலோ தருகுவை சொலலா
யேறற மாகிய வெஙகளைக கேளவர மெனறா
மாறற மெனகையான மாயுமி னெனறனன மாயன

மாயன கையினுன் மதுவுடன கைடவன மடிநதார
தோய மீதினின மேதையைத தூாததனா புவிககு
மேய நாமமு மேதினி யாயது விரிஞச
னேய மேதினி யிறுகிடச சிவனபத நினைநதான."—எனவருவனவற்றுனறிக.

எவனுடைய வாணையினுற பிரமனுககுச சிருட்டியுமெவ் வுயிரும வாழ [ம
வுவணமுயாத தவறகளிபபு முருததிரனுக குலகமெலா மொடுககும வீறு
பவனனுககு வீக தலும பாறகாறகுச சரிததலுமபன ஞளும வைகு
மவனுடைய மானமியததை நாததிகாபா தகாமுதலோ ரறிய மாட்டார்.

(இ - ள) எநத விநாயகக் கடவுளுடைய கட்டளையினுற் பிரமனுககுப் படைப்புத தொழிலும, கருடககொடியை யுயாததிய திருமாலுககு எலலாவுயிாகளும் வாழும்படி காததறறொழிலும, உருததிரனுக்கு எலலாவுலகங்களையுஞ சஙகரிக்கும

வல்லபமும், வாயுவுக்கு வீசுதலும், சூரியனுக்குச் சஞ்சரித்தலும், எக்காலமும் உண்டாயிருக்குமோ, அந்த விநாயகக் கடவுளுடைய பிரபாவத்தை நாத்திகர் பாதகர் முதலானவர்களறியமாட்டார்கள். எ - று.

உவணமுயர்த்தவன்—திருமால். அதாவது காசிபர் மனைவியர் பதின்மூவரில் ஒருத்தியாகிய விநதை பெற்ற கருடன் தன் தாய் கட்டளைப்படி தேவலோகஞ்சென்று அமுதகலசத்தை யெடுத்துக்கொண்டு எதிர்த்தோரை வென்றுவருகையில், திருமாலெதிர்க்க, இருபத்தொருநாள் அவருடன் தோல்வி வெற்றியின்றிச் செருச்செய்ய, திருமால் இவனைத் தந்திரமாக வெல்லவேண்டுமென்று கருதி, நீ விரும்பிய வரங்கொடுப்பேன் என, கருடன் நீ விரும்பின யான் வரங்கொடுப்பேனென்ன, நாரணன் நீ வாகனமாகுகவென, கருடனியைந்தனனென்பது இதனை,

காஞ்சிப்புராணம்

"வன்புள் வேந்தினை வீர மகிழ்ந்தனை
யென்பு டைவரங் கொள்ளென வீங்கிவ
னுன்பெ ருந்திறற் குணமகிழ்ந் தேனமற் றென
றன்பு டைவரங் கொள்கெனச் சாற்றினான்
மாய னம்மொழி கேட்டு மகிழ்ச்சியிற்
றூயை யோதிய சொற்றவ றாமெனி
னீயெ னக்கு நெடுந்தகை யூர்தியா
யேயு மிவ்வரம் யான்கொள நல்கென்றான்
ஆத்தி கூர்தர வம்மொழி கேட்டொரு
மூர்த்த மெண்ணி யுயிர்த்து மொழிந்தமெய்
வார்த்தை யிறப்பிறழ வஞ்சியற் றுக்கெனச்
சீர்த்தி யாளன் விடைபெற்றுச் சென்றனன்."—என வருவனவற்றானறிக.

மறையிடத்து மரியயனிந் திராதி யமரர்மதி யிடத்துந் தோன்று
துறையுமொரு பொருடனை வழிபடுவோர் தமக்கருளா லுருவு கொண்டு
நிறையவரங் கொடுத்தசரித் திரமனைத்தும் விளக்கிநிலை பெறச் செய்த
குறைவறுமிப் புராணத்தைக் குறித்தவர்க்கு நாற்பயனுங் கூடு மன்றே.

(இ - ள்) வேதத்திலும், விண்டு பிரமன் இந்திரன் முதலிய தேவர்களுடைய புத்தியிலும் கண்டறியத் தோன்றாமல் எழுந்தருளி யிருக்கின்ற ஒப்பற்ற பொருளாகிய விநாயக மூர்த்தி, தம்மை வழிபட்டவர்களுக்குத் திருவருளால், திருவுருவெடுத்து மிகுதியாகிய வரங்களைக் கொடுத்த சரித்திரங்களை யெல்லாம் விளக்கி நிலைபெறச் செய்த குறைவற்ற இப்புராணத்தை நினைத்தவர்களுக்கு, நாலுவகைப்புருடார்த்தங்களுங் கைகூடும். எ - று.

நாற்பயன் - அறம் பொருள் இன்பம் வீடு எனப்படும். (கச)

தங்குபெரும் புண்ணியத்தாற் கேட்டவர்க்குப் பந்தமெலாந் தகர நூறு
மைங்கைமதக் குஞ்சரத்தின் சரித்திரமெல் லாம்பிரம னாதி சேட
ணிங்கிவர்க்கு முறைப்பரிதா யினுங்கொடுத்து வியாதமுனி யியம்பு மாறே
நுங்களுக்கு மொழிவலென நோற்றவருந் தவசூத னுவல்புக் கான்.

(இ - ள்) (தமக்கு) உண்டாகிய பெரிய புண்ணியத்தால் சிரவணஞ் செய்தவர்கட்குப் பந்தங்களெல்லாங்கெட அழிக்கத்தக்க, மதஞ்சொரியும் ஐந்து திருக்கரங்

களையுடைய விநாயகக்கடவுளுடைய சரித்திரங்களை யெல்லாம், பிரமன் ஆதிசேடன் முதலிய இவர்கட்குஞ் சொல்ல அரிதாயினும், வியாதமுனிவர் சொல்லியவகையே யுங்களுக்குஞ் சுருக்கிச் சொல்லுவேனென்று, அருந்தவஞ் செய்த சூதமுனிவர் சொல்லத்தொடங்கினர் எ - று. (௧௫)

புராணவரலாற்றுப்படலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௩௰௫.

பதிகம்.

மதிமிகுஞ் சோம காந்தன் வனம்புகத் துணிந்த வாறுங்
கதிதரு மகற்கு நீதி கடைப்பிடித் துரைத்த வாறும்
விதியுளி யபிடே கித்து வெங்கவற் களித்த வாறும்
பதியகன் றில்லா ளோடும் படர்ந்துகான் புகுந்த வாறும்.

(இ - ள்) அறிவுமிக்க சோமகாந்த மன்னன் வனம்புகத் துணிந்தவகையும், நற்கதியைக் கொடுக்கத்தக்க புத்திரனுக்கு உறுதியாக நீதிமார்க்கத்தை யுரைத்தவகையும், அவனுக்கு விதிப்படி இராசியாபிடேகஞ்செய்து இராசரிகங்கொடுத்தவகையும், மனைவியுடன் நகரத்தினின்று நீங்கிச்சென்று வனத்தையடைந்தவகையும். எ - று.

இதுமுதல் முப்பத்துநான்கு செய்யுள்களுங் குளகம் தண்டியலங்காரம் "குளகம் பலபாட் டொருவினை கொள்ளும்" என்றது சூத்திரம் (௧)

ஆங்குறை பிருகு வென்னு மறிஞனை யடுத்த வாறுந்
தீங்கறு முனிமுன் பண்டு செய்வினை யிரண்டும் வெவ்வே
றாங்கவற் குரைத்த வாறு மொளிர்மணி மோலி வேந்தன்
றாங்கிய பிரம சாயை யொடும்பிணி தவிர்ந்த வாறும்.

(இ - ள்.) (சோமகாந்தன்) அவ்விடத்தில் வசிக்கு பிருகுமுனிவனை யடுத்தவகையும், முற்காலத்தில் (சோமகாந்தன்) செய்த (நல்வினை தீவினையாகிய) இருவினைகளையும் குற்றமற்ற பிருகுமுனிவன் அவனுக்கு வெவ்வேறாகச் சொல்லியவகையும், பிரகாசிக்கின்ற இரத்தின கிரீடமணிந்த சோமகாந்தன் தாங்கிய பிரமஹத்தியையும் பிணியையும் விலகியவகையும் எ - று. (௨)

மறைநெறி வியாதன் புந்தி மயங்கிநான் மலரி னைந்து
மிறையவ னடுத்த வாறு மிபமுகன் மனுவை வேதன்
முறையுளி வியாதன் காதின் மொழிந்ததுங் கணேசன் பாத
நறுமலர் மூவ ருந்தா நயந்துபா சித்த வாறும்.

(இ - ள்.) வேதநெறியையுடைய வியாசமுனிவன் மதிமயக்குற்று, அன்றலர்ந்த தாமரைமலரில் வசிக்கும் பிரமதேவனை யடுத்தவகையும், பிரமதேவன் விநாயகக்கடவுளுடைய மந்திரத்தை வியாசமுனிவன் செவியில் முறைப்படி யுபதேசித்தவகையும், கணேசமூர்த்தியினுடைய பாதமாகிய தேன் பொருந்திய தாமரைமலரை மும்மூர்த்திகளும் விரும்பி யுபாசனைசெய்தவகையும். எ - று. (௩)

முதற்றொழின் மூவ ருக்கு முன்னவ னளித்த வாறு
மெத்திய விசுவ மெல்லாம் விளங்குதன் கட்டனா னோனை
யுய்த்தனன் றெரித்த வாறு முலகயன் படைத்த வாறுஞ்
சித்திபுத் திகளை நாதன் திருமணம் புரிந்த வாறும்.

(இ - ள்) முன்னோனாகிய விநாயகப்பெருமான் திரிமூர்த்திகளுக்கும் (சிருஷ்டியாதி) முதற்றொழில்களை (கைகூடும்படி) திருவருள் செய்தவகையும், மிக்கவுலக மெல்லாம் விளங்கிய தமது திருவயிற்றில் அவைகளைச் செலுத்தி யுணர்த்தியவகையும், பிரமன் உலகைச் சிருட்டிசெய்தவகையும், விநாயகக்கடவுள் சித்திபுத்திகளைத் திருமணஞ்செய்தவகையும் எ - று. (௪)

மாறுயர் மதக்கைத் திண்டோண் மதுகயி டவரைக் கொல்ல
வாறெழுத் தரவப் பள்ளி யமரனு தரித்த வாறும்
வீறுபுத் திரனி லாமல் வெறிவன மடுத்த வீமன்
றேறிய விச்சு வாமித் திரன்கழல் சேர்ந்த வாறும்.

(இ - ள்) பகைமைமிக்க வலிதங்கிய திண்ணிய தோளையுடைய மதுகயிடவர்களைச் சங்கரிக்க, சேடசயனத்திலமர்ந்த திருமால் சடக்கரமநுவைச் சபித்தவகையும், சிறப்புடைய மகப்பேறின்றி மணங்கமழும் வனத்தையடைந்த வீமன், தேறிய விச்சுவாமித்திர முனிவனுடைய பாதங்களையடைந்தவகையும் எ - று. (௫)

புக்கவேல் வீம னுக்குப் புனமுனி யவன்கு லத்துத்
தக்கனோய் தீர்த்த வண்ணஞ் சாற்றிய வாறுந் தக்கன்
முக்கல னுபதே சங்கொண் முறைதெரித் திட்ட வாறுந்
தக்கன்முற் பிறப்பிற் சாபந் தாங்கிய துரைத்த வாறும்.

(இ - ள்) (வனத்திற்) புகுந்த வீமனுக்கு, (மேற்) கூறிய விச்சுவாமித்திர முனிவன், அவனுடைய குலத்துத் தக்கன் நோய்தீர்ந்த விதத்தைச் சொல்லியவகையும், தக்கன் முக்கலமுனிவனுடைய உபதேசத்தைக்கொண்ட முறையைக் கூறியவகையும், முற்பிறப்பில் தக்கன் சாபம்பெற்ற துரைத்தவகையும் எ - று. (௬)

உற்றவித் தக்கன் பண்டைச் சனனத்தி லுதித்த மைந்தன்
பற்றில னாகி முத்தி படைந்தமை யுரைத்த வாறுங்
கொற்றவ னாக வேழங் கோதையைச் சூட்டத் தக்க
னற்றமில் விதர்ப்ப தேய மாண்டமை யுரைத்த வாறும்.

(இ - ள்) பொருந்திய இந்தத் தக்கன் முற்பிறப்பிற் பிறந்த புதல்வன் பற்றில்லாதவனாகி முத்தியடைந்தமை யுரைத்தவகையும், அரசனாகும்படி யானையானது மாலைசூட்ட, தக்கன் குற்றமில்லாத விதர்ப்பதேயத்தை யரசுசெய்தமை யுரைத்த வகையும் எ - று. (௭)

அந்தமா தவனவ் வீமற் கருண்மனு புகன்ற வாறு
மைந்தனா கியவு ருக்கு மாங்கதன் முகுந்தைச் சாபந்
தந்திட மெலிந்த வாறுஞ் சாந்துநா ரதனை னுற்கு
வெந்திறற் சாபந் தீரவு மேதக வுரைத்த வாறும்

(இ - ள்.) அந்த விசுவாமித்திர முனிவன் அவ்வீமனுக்கு அருள்புரியும் மந்திரோபதேசஞ்செய்தவகையும், புதல்வனாகிய உருக்குமாங்கதன் முகுந்தை சாபங்கொடுக்க மெலிவுற்றவகையும், நாரதமுனிவன் அங்கு வந்து அவ்வுருக்குமாங்கதனுக்குச் சிறப்பாகச் சாபவிமோசனம் கூறியவகையும். எ - று. (அ)

இந்திரன் சாபம் பெற்ற தியம்பிய வாறுந் தேவர்
மந்திரி கவுத மன்பால் மனுப்பெற்ற துரைத்த வாறு
மிந்திரற் கதனை யன்னா னியம்பிய தறைந்த வாறு
மிந்திரன் பூசை யாற்றி விண்ணினை மேவிருந்த வாறும்

(இ - ள்.) இந்திரன் சாபம்பெற்றதைச் சொல்லியவகையும், பிரகற்பதி முனிவன் கௌதமமுனிவனிடம் மந்திரோபதேசம்பெற்ற துரைத்தவகையும், அப்பிரகற்பதி முனிவன் அம்மனுவை இந்திரனுக்குரைத்ததைக் கூறியவகையும், இந்திரன் (விநாயகக்கடவுளைப்) பூசைசெய்து தேவலோகத்திலிருந்தவகையும் எ - று (கூ)

உருக்குமாங் கதன்பின் முத்தி யிளையொடு முற்ற வாறுந்
திருந் கா றுதந்தை பான்மந் திரங்கிருச் சமதன் பா
னுருக்கமொ டுற்ற வாறு முவன்வரம் பெற்ற வாறும்
பெருக்குறு வரங்கண் ணேற்றுத் திரிபுரன் பெற்ற வாறும்.

(இ - ள்) பின்னர், உருக்குமாங்கதன் தன் சுற்றத்தாரோடும் முத்திபெற்றவகையும், கிருச்சமதனென்பவன் குற்றமற்ற தன் தந்தையினிடமாக அன்புடன் மந்திர மேற்றவகையும், அவன் வரம்பெற்ற வகையும், திரிபுரன் தவஞ்செய்து பெருக்கமைந்த வரங்களைப் பெற்றவகையும். எ - று. (கo)

திரிபுர னுலக மூன்றுஞ் சென்றர சாண்ட வாறு
மரிமுதற் றேவ ரன்னா னறவிரம் பெற்ற வாறு
முரியநல் வரங்க ளண்ட னொருவனும் பெற்ற வாறு
மரியயற் கரியா னந்த முப்புர மழித்த வாறும்.

(இ - ள்) திரிபுரன் திரிலோகங்களிலுஞ் சென்று அரசுசெய்தவகையும், திருமால் முதலிய தேவர்கள் அத்திரிபுர னழிய வரம் பெற்றவகையும், விடபானுஞ் செய்த ஒப்பற்ற சிவபெருமானும் (விநாயகரிடத்து) நல்ல வரங்களைப் பெற்றவகையும், விஷ்ணுவுக்கும் பிரமனுக்கும் (தேடுதற்கு) அரிய சிவபிரான் அந்தத் திரிபுரத்தை யழித்தவகையும் எ - று (கக)

இமையவெற் பரையன் பாங்கர் ரம்பன சதுர்த்தி நோன்பை
யுமையவள் கேட்ட வாறு முவந்தவ ணோற்ற வாறுங்
கமைபெறு பிருகு சொல்லக் கருத்தம னோற்ற வாறு
மமைகவு தமனுங் கோதற் றனனுட் டித்த வாறும்.

(இ - ள்) இமாசல மன்னனிடமாக உமாதேவியார் விநாயக சதுர்த்திவிரதத்தைக் கேட்டவகையும், அவ்வுமாதேவியார் களிப்புற்று (அவ்விரதத்தை) அநுட்டித்தவகையும், சாந்தம்பொருந்திய பிருகுமுனிவன் சொல்லக் கருத்தமன் அநுட்டித்தவகையும், பொருந்திய கவுதமமுனிவன் குற்றமின்றி அநுட்டித்தவகையும் எ - று.

சுந்தர மின்னி னோற்பத் தொக்கபா தலத்தி னீங்கிச்
சந்திராங் கதன்மனை வந்து தானுமோ டிருந்த வாறு

மைந்துறு மவுணர்த் தாக்க மயிலூர்தி நோற்ற வாறும்
வெந்தத னுருவம் வேண்டி வேள்மதன் றோற்ற வாறும்.

(இ - ள்) அழகிய மலைவியானவள் நோற்றலால், தொகுதியாகிய பாதலத்தி னின்று நீங்கி, சந்திராங்கதன் பூமியில் வந்து தானும் நோற்றிருந்த வகையும், மயில் வாகனமுடைய முருகப்பிரான் வலியுடைய அசுரரைக்கொல்ல நோற்றவகையும், வேளாகிய மதனன் சாம்பரான தன் வடிவுபெறக் கருதி நோற்றவகையும் எ - று.

மாதொரு பாகர் சீற வலியழி யாதி சேடன்
கோதற நோற்ற வாறுங் கொற்றவன் சூர சேனன்
பூதலம் விமானத் தோடு பொருக்கென வீழ்ந்து நின்ற
மேதகு மகவான் றன்னை விப்புற விஞ்ஞ வாறும்

(இ - ள்) உமாதேவி பாகராகிய சிவபெருமான் கோபிக்க, வலியிழந்த ஆதி சேடன் குற்றமற நோற்றவகையும், அரசனாகிய சூரசேனன் விமானத்துடன் வீழ்ந்து பூமியி லிறங்கிநின்ற மேம்பட்ட இந்திரனை வியக்கும்படி வினவிய வகையும் எ - று

மருவுசங் கடச துர்த்தி வானந்தன் பிதிரர் சேரப்
புருசுண்டி நோற்ற வாறும் புத்திரப் பேறு வேண்டி
கிருதவீ ரியனகா னத்துக் கேகி இத்தவம் புரிந்த வாறும்
கருதுகோ ளாக வேயங் காரகன் றோற்ற வாறும்

(இ - ள்) பொருந்திய சங்கட சதுர்த்தி விரதத்தை, புருசுண்டி யென் போன் தன்பிதிரர்கள் மோக்ஷமடைய நோற்றவகையும், கிருத வீரியன் புத்திரப்பேற் றினை விரும்பி வனத்துச் சேர்ந்து தவஞ்செய்த வகையும், அங்காரகன் நினைக்கத்தக்க கிரகமாகும்படி நோற்றவகையும். எ - று (கரு)

எள்ளியே ரம்பன் பாங்க ரெய்திய சாபஞ் சோமன்
றள்ளுற நோற்ற வாறுஞ் சங்கட சதுர்த்தி நாளிற்
கொள்ளுறும் புத்தி யின்றிக் குளிர்று கிறைவற் கிட்டுத்
துளவிடைக் கரம்பு லைச்சி தூயவீ டடைந்த வாறும்

(இ - ள்) சந்திரன் (யாவராலும்) இகழ்வுற்று, விநாயகரிடம் (அடைந்து) தான் பெற்ற சாபந் தள்ளுறும்படி நோற்ற வகையும், சங்கட சதுர்த்தி நாளில் தனக் குத் தெரியாமல், [அபுத்தி பூர்வமாகிய] தண்ணிய அறுகினை விநாயகருக்குச் சாத்தி, துளவிடைக் கரம்புலைச்சி புனிதமாகிய வீட்டையடைந்த வகையும். எ - று (கசு)

குறுகன லாசு ரப்போ கொடியனை விழுங்கும் வெம்மை
யறுகருச் சனையான் முக்க ணைங்கர னீத்த வாறும்
வறியவன் செல்வ மெய்த வளரறு கொன்று வாங்கி
யிறையவ னோர்ந்து பலவே றதிசய மிழைத்த வாறும்

(இ - ள்) சமீபித்த அனலாசுரனென்னுந் தீயோனை விழுங்கிய வெப்பத் தை, திரிநேத்திரங்களையும் ஐந்து கரங்களையுமுடைய விநாயகக்கடவுள் அறுகருச் சனையா லொழித்தவகையும், தரித்திரன் செல்வமடையும்படி வளர்கின்ற அறுகொன் றினை வாங்கி இறைவனாகிய விநாயகக்கடவுளாராய்ந்து, பலவேறு திறப்பட்ட அற்பு தங்களைச் செய்தவகையும். எ - று (கஎ)

வரகதவுண் டின்னி யனறன் மனைவியை ராறுகு தூக்கித
தரகதன கங்கண் மூவா சகலமு நிகரா வாறு
மரகதனை கிராத னெனனு மவாவனனி யிலையோன் றாசசித்
திரகதமிக குறுமே ரமப னெறிலுல கடைநத வாறும.

(இ - ள்.) சிறந்த கவுண்டினனியனுடைய மனைவி ஓராறகினை (குபேரன முன் தராசில்) தூக்கிக்கொடுகக, பொறகுவியலகளும் திரிமூாததிகளுமயாவும நிகராகாத வகையும், அசுரனும் வேடனுமாகியவாகள ஓா வனனிபததிரததிறு லாசசித்துக இருமையை மிகுதியாகவுடைய கணேசமூாததியினுடைய அழகிய வுலகததை யடைநதவகையும் எ - று (கஅ)

இரணிய கசிபைத் தாகக விநதிரா மனுளற காறற
பாரிமினி தளிதத விண்டு விநாயகன மலாததாள போறறிக்
கரவினமா வலியை வெனறு வாமனன களிதத வாறு
மரவக லலகுற கீாததி யருமகப பயநத வாறும.

(இ - ள்) இரணியகசிபனைக கொலல விஷ்ணுமூாததிககு மிகக வரததை இனிதாககொடுதத விணடு விநாயகருடைய மலாபோனற திருவடியைத துதிதது வஞசகமாக மாவலியைச சயிதது வாமனன சநதோஷிததவகையும, பாமபின படம போலும அகன்ற அலகுலையுடைய கீாததியெனபவள் அரிய குழநதையைப் பெறற வகையும். எ - று (கக)

வனனியின பூசைப பேறறால வல்விடந தவிாநத கீாததித
தனமக னுயநத வாறுஞ சமியுமந தாரன றானும
வன்னிமந தார மான வாறுமவா னவாகள சாப
மனனவா மனைவி மாாக ளருசசிபபத தீாநத வாறும

(இ - ள) வனனியின பூசாபலனால வலிய விடவேகததைத தவிாநத கீாததியின மகன பிழைதத வகையும, சமியும மநதாரனும முறையே வனனியும் மநதாரமுமான வகையும், தேவாகள சாபம அவா மனைவியா அருசசனைசெயததால ஒழிநத வகையும. எ - று. (உ0)

கிபபிரப பிரசா தன்றன கிளாவரம பெறற வாறு
மொபபறு கிருதவீாி யனமக வுயிாதத வாறும
வெறபிலிந திரவி மானம விணணிடை யெழுநத வாறுந
தபபறு சூர சேனன முததியிற சாாநத வாறும.

(இ - ள.) கிபபிரபபிரசாதனெனபான விளஙகுகினற வரமபெற்ற வகையும், சமானமறற கிருதவீாியன மகவுபெற்ற வகையும், மலைபோனற இநதிரவிமானம ஆகாயததிலெழுந்த வகையும, குற்றமறற சூரசேனன் முததியிற கலந்த வகையும். எ - று.

பராவிய பரசு ராமன் பல்வரம பெறற வாறு
மிராவணன் பணிநத வாறு மகததிய னிறைஞசு மாறும
விராவுநா சிபனமுன னுனோா பூசனை விளைதத வாறு
மராவகட டைசததோ னுமமாயிரம புகனற வாறும.

(இ - ள்.) துதிசெய்த பரசுராமன் பல வரங்களைப்பெற்ற வகையும், இராவணன் பூசித்த வகையும், அகத்தியன் பணிந்த வகையும், (அன்பு) கூடிய காசிபன்முதலானோர் பூசித்த வகையும், பாம்பினை உதரத்திற் (பந்தனமாகக்) கட்டிய விநாயகக் கடவுளுடைய சகத்திரநாமங்களைச் சாற்றிய வகையும் எ - று. (உஉ)

கணனெனு மரச னேன்ற கபிலமா தவனைச் சிந்தா
மணிகவர்ந் தரம்பு செய்ய மாதவன் போற்றிச் செய்த
வினைஎரி வேள்வி நின்று மெம்பிரா னவதா ரஞ்செய்
தணிவகுத் தமர்ந்தக ணனை யழித்தது மீட்ட வாறும்.

(இ - ள்) முன்னாளில், கணனென்னு மன்னன் பெருந்தவமுடைய கபிலமுனிவன் கையிலிருந்த சிந்தாமணியை யபகரித்துத் துன்பம் விளைப்ப, அக்கபிலமுனிவன் வளர்த்திய பூங்கொத்துபோன்ற யாகத்தீயினின்றும் எமது பெருமான் திருவவதாரஞ்செய்து அணிவகுத்திருந்து அக்கணனை யழித்து அச்சிந்தாமணியை மீட்ட வகையும் எ - று (உ௩)

அம்புயக் கிழவன் மேனா ளாவிப்ப வதனிற் றோன்றி
யும்பர்கண் முதலோர்க் கின்ன லுறுத்துசிந் தூரன் றன்னை
யம்பிகை யிடத்திற் றோன்றி யடற்கரி முகவ னாகித்
தம்பிரான் கொன்றெல் லோர்க்குந் தண்ணருள் புரிந்த வாறும்.

(இ - ள்) தாமரைமலரில் வசிக்கும் பிரமன் முற்காலத்திற் கொட்டாவிவிட, அதினின்று தோன்றித் தேவர்கள் முதலானவர்கட்குத் துன்பம் விளைத்த சிந்தூரனென்பவனை, கணேசப்பெருமான் உமாபிராட்டியாரிடத்தில் வலிதங்கிய யானைமுகவனாகித் தோன்றிக் கொன்று யாவர்க்குந் தண்ணிய கிருபைபுரிந்த வகையும் எ - று.

வேந்தபி நந்த னன்றன் வேள்வியோ டேனை யோர்தங்
காந்தெரி வேள்வி யாதி கருமமுங் கெடுத்துத் துன்பே
யீந்தவிக் கினனை நாத னிருடிபார் சுவர்பாற் றோன்றிப்
போந்தமாத் திரத்திற் ருழத்திப் புவனங்கள் காத்த வாறும்.

(இ - ள்) அரசனாகிய அபிநந்தனனுடைய யாகத்துடன், மற்றவர்களுடைய பிரகாசிக்கின்ற அக்கினிகாரியமாகிய யாகமுதலிய (புண்ணிய) கருமங்களையுங் கெடுத்து, (உலகுக்குத்) துன்பத்தையே கொடுத்த விக்கினனென்பவனை, விநாயகக்கடவுள் பார்சுவ விருடியிடமாகத் தோன்றி, வந்தமாத்திரத்திலே யடக்கி, உலகங்களைக் காத்த வகையும். எ - று (உ௫)

தூமறை கவரச் சங்கா சுரனிறை மறையோ னாகி
மாமறை வழக்கஞ் செய்து வருங்கம லாசு ரன்ற
னேமவல் லுயிரை வெவ்வி யிடத்தினின் றெழுந்த மஞ்ஞைக்
காமரு பறவை யூர்ந்து கறுத்தருள் புரிந்த வாறும்.

(இ - ள்.) சங்காசுரன் புனிதமாகிய வேதங்களை யபகரித்தலால், விநாயகக் கடவுள் வேதியனாகிப் பெருமைபொருந்திய வேதவழக்குஞ்செய்து, வருகின்ற கமலாசுரனுடைய மூர்க்கமுற்ற வலியவுயிரை, யாகத்தினின்று தோன்றிய அழகிய மயிற் பறவையையூர்ந்து கோபித்து, அருள்புரிந்தவகையும் எ - று. (உ௬)

சிந்துவென் றுரைக்குந் தீயோன் றேவரைச் சிறையில் வைப்ப
வந்தரி யிடத்தே தம்ப வவதரித் தவுணர் செய்த
வெந்திறன் மாயை யெல்லாம் வென்றவன் றனையுங் கொன்று
நந்திய வேத நீதி வழங்கநன் றளித்த வாறும்.

(இ - ள்.) சிந்துவென்று சொல்லுங் கொடியோன் தேவர்களைச் சிறையிலிட, விநாயகக்கடவுள் உமாதேவியாரிடமாகத் திருவவதாரஞ்செய்து, அசுரர்கள் செய்த வெவ்விய வலியமைந்த மாயைகளையெல்லாம் வென்று அவனையுங்கொன்று, குறைவுற்ற வைதிக மார்க்கமானது நன்றாக வழங்கும்படி அருளியவகையும் எ - று (உஎ)

மாதவ னென்னு மன்னன் மனைமகள் சுமுகை யென்பாள்
மாதவம் புரிய வன்னாண் மருங்கொரு பாலனாகி
யேதமற் றவட்குச் செய்த வெறுழ்வலித் தூமன் றன்னைப்
பாதலத் தவிந்து வீழப் பராபரன் முனிந்த வாறும்.

(இ - ள்) மாதவனென்னு மரசன் மனைவியாகிய சுமுகையென்பவள் பெருந்தவஞ்செய்ய, பராபரனாகிய விநாயகக்கடவுள் அவளிடத்தில் ஒரு பாலனாகி, அச்சுமுகைக்குத் தீமைசெய்த பெருவலியுடைய தூமனென்பவனைப் பாதலத்தில் அழிந்து வீழும்படி கோபித்தவகையும் எ - று

பராபரன் - பரமும் அபரமுமானவன் பரனுக்கு மேம்பட்டது சிவமென்பது சித்தாந்தம். (உஅ)

பெருமறைக் காதி யான பிரணவ மனுவி னின்றும்
பொருகளி றீச னாகப் பொருந்துமை பிடியாய்க் கூடித்
தருமொரு தோன்ற லாகித் தந்திமா முகனைச் சாய்த்து
வெருவுறு மாயன் சாபம் விநாயகன் றீர்த்த வாறும்.

(இ - ள்) பெரிய வேதங்கட்காதியாகிய பிரணவமந்திரத்தினின்றும், சிவபெருமானே போர்புரியும் ஆண்யானையாகவும், உமாதேவியார் பொருந்திய பிடியானையாகவுந் திருவிளையாடல்செய்து பெற்ற ஒப்பற்ற தலைவனாகி, வலிய கயமுகாசுரனைக் கொன்று, அஞ்சிய விஷ்ணுவின் சாபத்தை விநாயகக்கடவுள் தீர்த்தவகையும் எ - று.

கருதிய தருளே ரம்பன் கசியப னதிதி யோடு
பொருவறு தவங்க ளாற்றப் புத்திர னவர்கட் காகித்
திருகிய மனத்துத் தேவாந் தகனரா ந்தகனைச் செற்று
மருவுதன் னுலகங் காசி மன்னனுக் களித்த வாறும்.

(இ - ள்) (அன்பர்) எண்ணியவற்றை யருள்புரியும் விநாயகக்கடவுள், கசியப முனிவன் (தன்மனைவியாகிய) அதிதியுடன் ஒப்பற்ற தவங்கள்செய்ய, அவர்கட்குப் புத்திரனாகி, கோணிய மனத்தையுடைய தேவாந்தகன் நராந்தகன் என்போரைக் கொன்று, பொருந்திய தம்முடைய உலகவாழ்க்கையைக் காசிராசனுக்குக் கொடுத்த வகையும் எ - று (௩௦)

சுராதுப ரகற்றி வெற்பின் றோகையா னனத்திற் றோன்றி
விரவருள் வழங்குந் துண்டி விநாயக னான தேவ

னரவணி விசுவ நாத னமர்ந்த காசி யெய்த
வரமலி திமோதா னன்மெய் மனத்தினைத் திரித்த வாறும்.

(இ - ள்) மிக்க அருள்சுரக்குந் தண்டி விநாயகக்கடவுள், தேவர் துன்பத்தை யொழித்து, பார்வதிதேவியார் திருமுகத்திற் றோன்றிச் சர்ப்பாபரணமணிந்த விசுவநாதப்பெருமான் அழகிய காசிநகரத்தை யடையும்படி, மிக்க வரத்தைப்பெற்ற திவோதாசனுடைய உண்மைமனத்தை மாற்றியவகையும் எ - று. (௬௧)

விடமணி மிடற்றி னானை விநாயக னாகிச் சென்று
மடமறு மரீசி தன்பால் வல்லபை யாகி வைகுந்
தடவரை மாதை வேட்டுத் தழுவெறி மாயோ னின்றி
விடாதபு மாதரா பன்னிருவரை மணந்த வாறும்.

(இ - ள்) ஆலத்தையணிந்த கண்டத்தையுடைய சிவபெருமானே விநாயகக்கடவுளாகச்சென்று, அறியாமை நீங்கிய மரீசிமுனிவனிடத்தில் வல்லபையாகிப் பொருந்திய பார்வதிதேவியின் அம்சபூதையை மணமுடித்து, அவ்வக்கினி முன்னரே திருமால் பெற்ற துன்பமற்ற பன்னிருமாதர்களை மணஞ்செய்தவகையும் எ - று.

மாயவன் விநாய கன்பால் மற்றவன் கீதை கேட்டுத்
தூயமெய்ஞ் ஞான னந்தத் தொல்லியல் புணர்ந்த வாறும்
மேயவிப் புராணங் கேட்ட வியாசனே ரம்பற் போற்றி
யாயுமிப் புராண மெல்லா மணிபெற விரித்த வாறும்.

(இ - ள்) விஷ்ணுமூர்த்தியானவர் விநாயகக்கடவுளிடத்தில் விநாயக கீதையைக்கேட்டுப் புனிதமாகிய உண்மை ஞானானந்தத்தின் பழமையாகிய இயற்கையை யறிந்தவகையும், பொருந்திய இந்தப்புராணத்தைக்கேட்ட வியாசமுனிவன் விநாயகக்கடவுளைத் துதிசெய்து, ஆராய்கின்ற இந்தப்புராணத்தை அழகுற விரித்துக்கூறிய வகையும் எ - று. (௬௬)

பன்னிய பிருகு தன்பாற் பார்க்கவ புராணங் கேட்ட
மன்னவன் சோம காந்தன் மழைமதக் களிற்று தேவன்
றன்னுல கடுத்த வாறுஞ் சாற்றினன் சூத மேலோ
னன்னவ னுரைத்த வாறே யவையெலாம் புகலப் புக்கேன்.

(இ - ள்) சொல்லிய பிருகுமுனிவனிடத்தில், பார்க்கவபுராணத்தைச் சிரவணஞ்செய்த சோமகாந்தராசன், குளிர்ந்த மதப்பெருக்குடைய யானைமுக விநாயகக்கடவுளுலகத்தைச் சேர்ந்தவகையும், சூதமுனிவன் (நைமிசாரணிய முனிவர்களுக்குக்) கூறினன்; அம்முனிவன் கூறியவகையே அவற்றையெல்லாஞ் சொல்லத்தொடங்கினேன் எ - று.

பதிகமாவது - பலவகைப்பொருளையுந் தொகுத்துக் கூறுவது. இங்கே விநாயகக்கடவுளுடைய பலவகை மான்மியங்களையுந் தொகுத்துக்கூறலால், பதிகமென்பெயர்வந்ததென்க.

"பதிகக் கிளவி பல்வகைப் பொருளைத்
தொகுதி யாகத் தொகுத்துரைப் பதுவே"—என்பது சூத்திரம். (௬௪)

பதிகம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௬௮௬

கணபதிதுணை

திருச்சிற்றம்பலம்

முதலாவது

உபாசனாகாண்டம்.

சோமகாந்தன் வனம்புகத்துணிந்தபடலம்.

கனனியிள வாளைகய னினறுமிசை வாவத
துனனிய பசுஙகமுகின மீதுவளா தூவி
யனனமெதி பாயநதலகின வவ்வியமா தேயந
தனனிகரி லாதசவு ராடடிரமென றுண்டே

(இ - ள்) மிக்க இளமையுடைய வாளைமீனகள கயததினினறு மேலேபாய, நெருஙகிய பசிய கமுகமரததினமீது வளாகினற தூவியையுடைய அனனமானது எதிரேபாயநது (அதனை) மூக்கால கொநதிப்பொருநதுகினற தனககுததானே யொப்பாகிய சவுராடடிரதேயமெனறு (ஓா தேயம) உணடு எ - று.

கனனியிளவாளை - நாகிளஙகமுகு என்றுறபோல தூவி - அனனசசிறகு அலகு - பறவைமூககு, இதனைத துணடமெனவுங கூறுப

கயனினறும எனறும பாடம. கயல - சேறகெணடை (க)

நாவலாக ணாவினிடை நாடடியவா நாட்டி
லேவலரு மாதருமி யறற வெழின மிகக
வோவமனை யாாபுரியு மோரைமலி சோலைத
தேவநக ரொனறுதிசை போமிசைய துணடே.

(இ - ள்) நாவின்வனமையுடைய புலவாகள நாவால நிலைநிறுததிய அசசவுராடடிரதேயததிலே, அரிய மஙகையாகளும எவலசெய்யுமபடி அழகுமிகக சிததிரம போனற பெண்கள செயகினற விளையாட்டுகள மிகுநத சோலைசூழநத தேவநக ரெனறு திசைகளிற்செனற கீாததியையுடையது (ஓாநகரம) உள்ளது. எ - று

ஓரை - மாதா விளையாட்டு, இசை - கீாததி (உ)

மாநதாமகிழ் கூரவள மாநகரி ருநதே
யேந்துதிணி தோளினிரு மாநில னிறுத்தும
போந்தமரின வேநதாபுறங் கணடவெருளு சோம
காநதனெனும மனனனரு ளாறகடலை வெனறுன.

(இ - ள்) மனிதர்கள் களிகூரும்படி வளமமைந்த சிறந்த தேவநகரத்திலிருந்து, உயர்ந்த வலிய புயத்தினையேற்ற பெருமைதங்கிய பெரிய பூமியைத்தாங்குகின்ற யுத்தத்தில் வந்த அரசர்களைப் புறமுதுகு கண்டு வருகின்ற சோமகாந்தனென்னும் பெயரையுடைய மன்னவன் கருணையாற் கடலைவென்றவனும் எ - று.

இதுமுதல ஐந்து செய்யுள்கள் ஒரு தொடர். (ங)

தக்கவறி வாலமரர் தங்குருவை வென்றான
மிக்கபொறை யாலெடிய மேதினியை வென்றான
றொக்கவொளி யாலிரவி சூரியனை வென்று
னக்கபுக ழாலுவவு நாணமதியை வென்றான.

(இ - ள்.) தகுதியாகிய உணர்வினால் தேவர் குருவாகிய பிரகற்பதி முனிவனை வென்றவனும், மிகுந்த பொறுமையினாற் பெரிய பூமியை வென்றவனும், கூடிய வொளியினாற் சூரியனை வென்றவனும், விளங்குகின்ற கீர்த்தியாற் பூரணைச்சந்திரனை வென்றவனும். எ - று.

உவவு - உவாவென்பதன்றிரிபு. உவா - அமாவாசை பூரணைகள், இவற்றுள் நாணமதியென்றது நோக்கிப் பூரணை யெனப்பட்டது. (ச)

ஆணையத னால்வடவை யங்கியினை வென்றான்
கோணைவலி யாற்குலவு மேருவரை வென்று
னேணையுறு முளவலியி னேரிமையம வென்றான
வீணைவினை யானமிதுன கின்னரமும வென்றான்.

(இ - ள்.) கட்டளையினால் வடவாமுகாக்கினியை வென்றவனும், அழியாத வல்லமையால் விளங்குகின்ற பெரிய மேருமலையை வென்றவனும், நிலையுடைமைதங்கிய மனவலியினால் அழகிய இமாசலத்தை வென்றவனும், வீணைத்தொழிலினால் மிதுன கின்னரங்களை வென்றவனும். எ - று

வடவை - பெண்குதிரை. ஈண்டுப் பெண்குதிரை முகமுடைய அக்கினியை யுணர்த்தியது இது சமுத்திரமானது தன் எல்லை கடவாதிருக்க இறைவனாற் கடலிற் றாபிக்கப்பட்டது இது எவற்றையுந் தீயாலழிக்குந் தருணத்தில் வெளிப்படுவது. இதனைக் கடையனலென்றும், ஊழித்தீயென்றுஞ் சொல்வதுமுண்டு. (ரு)

கைக்கொடையி னலெழுக ருமபுயலை வென்றான்
மெய்க்கணழ காலுருவ வேளைமதனை வென்றான
வைக்குநிதி யாலளகை மன்னவனை வென்று
னெக்குமிகு போகமதி லிந்திரனை வென்றான்

(இ - ள) கைக்கொடையினால், (கைம்மாறு கருதாத) கரிய சத்த மேகங்களையும வென்றவனும, சரீரத்திலுள்ள அழகினால் அழகிய மதவேளை வென்றவனும், வைக்கின்ற நவநிதிகளால் அளகாபுரிக்கிறைவனாகிய குபேரனை வென்றவனும்,எங்கும் மிக்க போகத்தால் இந்திரனை வென்றவனும. எ - று.

எங்கும - எக்கும் வலித்தல

எழுபுயல்கள—சமவாத்தம் - ஆவர்த்தம் - புட்கலாவர்த்தம் - சங்காரிதம்-துரோணம் - காளாமுகி - நீலவாணமெனப்படும். இவைமுறையே மணி - நீர் - பொன் பூ - மண் - கல் - தீக்களைப் பொழிவன

எழுகருமபுயல் - எழுகின்றகரியமேகமென்னுமமையும.
வேண்மதன் - இருபெயரொட்டுப்பண்புத்தொகை (௬)

தெளிகலை யாற்பெரிய சேடனையும் வென்று
ளுள்ளமகிழ் நான்மறையு மோதியதி றத்தாற்
றள்ளரிய நீதிபுகல் சாத்திரம றிந்தான்
றொள்ளையறு தத்துவசொ ரூபமுமு ணர்ந்தான்

(இ - ள்) தெளிந்த கலைஞானங்களாற் பெரிய ஆதிசேடனையும் வென்றவனும், மனமகிழும் நான்கு வேதங்களையுமோதிய திறத்தினால், தள்ளுதற்கரிய நீதியுரைக்கும் சாத்திரங்களை யறிந்தவனும், துன்பமற்ற தத்துவசொரூபத்தை யுணர்ந்தவனுமாவான் எ - று (௭)

வேறு.

உருவ வானே தீவினையை யொறுத்தும விதத்தி யாதீசன்
மருவு கேமங் கரனன்மை வளர்க்கு ஞான கெமமியனே
பொருவில் சுபல னென்னவைவா புரைதீ ரமைச்ச ருளரப்பகைஞர்
குருதி பருகித் தரைதெவிட்டுங் கூர்வேற் சோம காந்தனுக்கே.

(இ - ள்) சத்துருக்களுடையஉதிரத்தைப்பானஞ்செய்துமாமிசத்தைத் தேக்கெடுக்கும் கூர்மைவாய்ந்த வேற்படைதாங்கிய சோமகாந்தனுக்கு, உருவவான் - தீவினைகளை யொழிக்கும் விதத்தியாதீசன் - பொருந்திய கேமங்கரன் - நன்மையைப் பெருகச்செய்யும் ஞானகெமமியன் - ஒப்பில்லாத சுபலன் என்று குற்றமில்லாத மந்திரிகள் ஐவருளர். எ - று.

ஓதி யுணர்ந்த மதியொளியாற் குடைய பொறிபோற் பயப்படலா
னீதி யுணர்ந்து வழிநிற்கு நிகரி லமைச்சர் தமைக்கூட்டிக்
கோதி லுலகம பொறிப்பதாகக் கூறக் கோமான் பணிமுடித்திட்
டேதி லரையர் நிலங்கொள்ள வெண்ணு மெண்ணம் பெரிதுடையார்.

(இ - ள்) கற்றறிந்த ஞானவொளியுடைய சோமகாந்தனுக்கு, உடைய ஐம்பொறிகள்போலப் பயன்படுதலால், நீதிமார்க்கத்தை யறிந்து (அதன் வழியில்)நிற்கும் ஒப்பில்லாத மந்திரிகளைக்கூட்டி, குற்றமில்லாத வுலகமானது (அவனுக்குப்) பத்துப் பொறிகளென்று சொல்ல, அரசன் பணித்தவற்றை நிறைவேற்றி அயலரசர் பூமியைக் கைக்கொள்ளும்படி கருதும் கருத்தை மிகுதியாகவுடையவர்கள். எ - று (௮)

கிரண மெறிக்கு மணிக்கொடிஞ்சிக் கிளர்தே ரறுவா யிரத்திரட்டி
கரட மதங்கொப் புளித்திழியுங் களிறு பதினா யிரமாகும்
விரவுநிறத்துப் பலபரியும் விளம்பிற் பதினா யிரத்திரட்டி
யரவ மலியும் படைத்தானைக் களவின் றுக்கு மவன்றனக்கே.

(இ - ள்) அச்சோமகாந்தனுக்கு, கிரணங்கள் வீசும் இரத்தினக் கொடிஞ்சியானது விளங்குகின்ற தேர்கள் ஆறாயிரம் கன்னமதமானது கொப்புளித்துப் பாய

இன்ற யானைகள் பதினாயிரமாகும். கலந்த பல நிறத்தையுடைய குதிரைகளுஞ் சொல்லுமிடத்தில் இருபதினாயிரமாகும். ஓசைமிக்க ஆயுதத்தை யேந்திய சேனைக்கு எல்லையில்லாததாகும். எ-று

தானை - காலாள். இச்செய்யுளால் அம்மன்னனுடைய சதுரங்க சேனையின் அளவை சொல்லப்பட்டது. (௧௦)

கற்பால் வடமீன் புரைகண்டாள் கவினால் இரதி சசி கமலை
பொற்பார் அரம்பை திலோத்தமையைப் பொருவும் புரைகண் டாளையன்
இற்பாற் கிழமை பூண்டறங்க ளெடுத்தாள் சுதன்மை யெனும்பெயரா
ணற்பயர் சோமகாந்தனுயி ரிரண்டா மென்ன நண்ணினாள்.

(இ-ள்.) சோமகாந்தனில்லக்கிழமைபூண்டு இல்லறம் நடத்துபவள் சுதன்மையென்னும் பெயரினள், கற்பினால் அருந்ததியை வென்றவள்; அழகினால் இரதி - இந்திராணி - திருமகள் - அழகமைந்த அரம்பை - திலோத்தமை முதலானோரைவென்றவள்; நல்ல வுலகமானது சோமகாந்தனுக்கு உயிரிரண்டாமென்று சொல்லும்படி பொருந்தியவள் எ-று

வடமீன் - அருந்ததி, வடக்கிலுள்ள நட்சத்திரம். வடதிசையிற் பல நக்ஷத்திரங்களிருப்பினுஞ் சிறப்புநோக்கி அருந்ததியையே யுணர்த்தியது. (௧௧)

இன்ன சுதன்மை வயிற்றுதித்தா னேம கண்ட னெனும்பெயரான்
கொன்னும் பதினா யிரம்யானைக் கோளை வலியான் பகைத்தெதிர்ந்த
மன்னர் நடுங்கப் புகையுயிர்க்கு மடங்க லனையா னிவர்பலருந்
துன்ன வளர்செங் கோலோச்சிச் சோம காந்தன் வாழ்ந்திடுநாள்.

(இ-ள்) இத்தகைய சுதன்மையென்பாள் வயிற்றில் ஏமகண்டனென்னும் பெயரையுடைய புதல்வன் பிறந்தனன் அவன் பெரிய பதினாயிரம் யானைகளின் அழியா வலியுடையவன், பகைகொண்டெதிர்ந்த அரசர்கள் நடுங்கும்படி புகை யுயிர்க்கின்ற ஆண்சிங்கத்தையொத்தவன் இவர்களெல்லாரும் நெருங்கியிருக்க, சோமகாந்தன் வளர்கின்ற செங்கோலைச்செலுத்தி வாழுங்காலத்தில் எ-று. (௧௨)

பண்டு புரிந்த தீவினையாற் பாழி யுடம்பிற் குட்டநோய்
மண்டி யெழுந்து நிணங்குருதி வழியு முடைநீர் சீயுணந்தூங்க
கொண்டு மணிமந் திரமருந்து குயிற்றுப் புரியுந் தொறுமந்தோ
மிண்டி வளர வெய்துயிர்த்து வேந்தன் வெறுத்தங் கிதுசெய்தான்.

(இ-ள்) சன்மாந்தரத்திற்செய்த தீவினைச்சம்பந்தத்தினால், பெருமைதங்கிய (தன்) தேகத்திற் குட்டநோய் மிகுந்தெழுந்து, நிணமும் உதிரமும் சொரிகின்றமுடை நீரும் சீயும் இவைமுதலியனவும் பொருந்தி, மணி மந்திர மருந்துகளையோசித்துச் செய்யுந்தோறும், ஐயோ! அதிகரித்துவளரப் பெருமூச்சுவிட்டு, சோமகாந்தன(போகங்களை) வெறுத்து இவ்வாறு செய்தனன். எ-று

மணி - வாலரசகுளிகை. (௧௩)

வேறு.

வெம்மலி மடங்கலேற் றணையின் வைகியே
வியவரி னமைச்சரை விளிப்ப மற்றவர்

பயனுற வந்தடி பணிந்தெழுந்தபின்
னயமொழி யாலுளங் கைந்து கூறினான்.

(இ - ள்.) வெற்றிமிகுந்த சிங்காதனத்திலிருந்து, வேவுகாரர்களால் மந்திரிகளை யழைக்க, அவர்கள் பயன்பெறும்படி வந்து (மன்னவனுடைய) பாதங்களை நமஸ்கரித் தெழுந்த பின்னர், (சோமகாந்தன்) மனமுவந்து இதமாகிய வார்த்தைகளாற் சொல்லலாயினன் எ - று

மடங்கலேற்றணை - ஆண்சிங்கங்கள்சுமந்த பீடம் (கச)

பொருந்தலர் பகைகெடப் பொருது வென்றனன்
றிருந்திய வுலகெலாஞ் சிறப்பிற் காத்தனன்
மருந்துணு மமரர்க்கு மகமு மாற்றினன்
விருந்தினர் முகமலர் விளக்கங் கண்டனன்

(இ - ள்) சத்துருக்கள் பகைமையொழியும்படி (அவர்களுடன்) போர்செய்து வென்றேன், திருத்தமாகிய வுலகமுழுவதையுஞ் சிறப்புடன் காத்தேன், தேவாமிர்தத்தைப் புசிக்கும் இமையவர்கட்கு யாகங்களுஞ்செய்தேன் அதிதிகளுடைய முகமாகிய மலர்கள் மலர்ச்சிபெறச்செய்தேன் எ - று (கரு)

சோலையோ டறக்குளந் தொட்டு மோதனச்
சாலையோ டனைத்துள தரும மாக்கியு
மாலைவாய்க் கரும்பென வடர்க்கு நோய்தவிர்
நூலையா னறிந்தில னுணித்த கேள்வியீர்

(இ - ள்) நுட்பமாகிய நூற் கேள்வியையுடையவர்களே! சோலைகளுடன் தருமத்திற்காகக் குளங்களைவெட்டியும், அன்ன சத்திரத்துடன் உள்ளனவாகிய தருமங்களையெல்லாஞ்செய்தும், ஆலைவாயிலகப்பட்ட கரும்பைப்போல (என்னைத்) துன்புறுத்தும் நோயை யொழிக்கத்தக்க நூலினை யானறிந்திலேன் எ - று

அனைத்துள தருமம் - உண்டாகிய பிறதருமங்கள் தருமம் பலதிறப்படும் அவற்றுட் சிறந்தது முப்பத்திரண்டுவகைத்து அவற்றை,

காஞ்சிப்புராணம்

"தெய்வந்தென் புலத்தார் பூத மானிடம் பிரம மென்றோ
ரைவகை யெச்சம் பூர்த்தந் துறந்தவர் மடங்க ளன்பு
செய்யுமில் லொழுவார்க் கில்லம் மனைக்குப கரணந் தேமப்பூ
பெய்தமை தண்ணீர்ப் பந்த ரெங்கணும் பிறங்கு சோலை

இரப்பவர் குருட ரெவ்வ முற்றவர் புரத்தல் வெந்நோய்
துரக்குநன் மருந்து தூய மகவினை யோம்பல் சுண்ணம்
பரித்தபார் கடைவே யெண்ணெய் பைம்புனல் குளிப்ப வேணி
மருக்கிளர் தூவர்க ளாதி மலரணை நிலனே கன்னி

கடிமணம் விளக்கு மாருக் கட்டொழித் திடுதே லீச
னடியவர் விழைவ வீகை யக்கமா மணிவெண் ணீறு
படியிலாக் கடவுட் பூசை யுபகர ணங்கள் பாசந்
தடிதரு வேத வாய்மைச் சைவநூல் புராண நல்கல்.

சிவபிரா னடிக்கீழ்ப் பத்தி செவியறி வுறுத்த லோடு
மூவகையி னபயம் யார்க்கும் வழங்குத லுள்ளிட் டோது
நவையிரி யறமெண் ணனகு நாடொறு நிகழ்ச்சி மாணப்
பவநெறி துரக்கு ஞானப் பைந்தொடி நிறுவி பின்னர்''—என்பதனானறிக.

சோமனே யெனவொளி துலங்கு மாட்சியாற்
சோமகாந் தப்பெயர் துன்னி னோனுடல்
ஞமனோய ழிக்கவு நாட்டி னீங்குறுந்
தோமறு வுளத்தையுஞ் சுடுதல் வேண்டுமால்.

(இ - ள்.) சந்திரனேயென்று சொல்லுமபடி ஒளிவிளங்கும் மேம்பாட்டினாற் சோமகாந்தனென்னும் பெயரையடைந்தேன் பயத்தைத்தருங் குட்டநோயானது உடலையழிக்கவும், நாட்டினின்று நீங்குறுந் குற்றமபொருந்திய மனத்தையுஞ் சுட வேண்டும். எ - று (கஎ)

ஐந்துமூன் றடுக்கிய வமளி மீமிசை
யிந்திர னுணவீற் றிருந்த தேசற
நொந்துமவாழ்ந் திருக்கவே நோக்கு மென்னுடல்
சிந்தவே வாளினாற் சிதைத்தல் வேண்டுமால்.

(இ - ள்) மூன்றடுக்கிய பஞ்சசயனத்தில், இந்திரனும் மன நாணமுறப் பொருந்தியிருந்த அழகழியுமபடி நோயுறறும வாழ்ந்திருக்கவே கருதும் என்னுடலைச் சிதறுமபடி வாட்படையால் வெட்டுதல் வேண்டும எ - று.

இந்திரனுண வீற்றிருந்த தேசுற என்ப பாடமாயின், ஏசுதலுறுமபடி எனக.
இந்திரன் என்பதன பக்கலில உயர்வுசிறப்புமமைதொக்கது (கஅ)

பலபல வுரைப்பதென் பண்டை தீமையுங்
குலவிய பொழுதுநோய் குறைக்கு நீர்மையும்
புலமையின் மிகுந்துளீர் புந்தி செய்மினோ
நலவழி யினிவரு நாடிச் சேறலே

(இ - ள்) நூற்புலமையின் மேம்பட்டுள்ளவர்களே! பல பல வார்த்தைகள் சொல்வதிற் பயனென்னை? பழைய வினைத்தன்மையும் (தீமை) பொருந்திய காலமும், (குட்ட) நோய் துன்புறுத்துந் தன்மையும், மனதில் யோசிப்பீர்களாக இனி வந்ததைப் பொருந்திச்செல்லுதலே நலமான வழியாகும் எ-று (க௯)

எனையினு மேம்படு மேம கண்டனை
மனையினு மோமோ நிலத்தைக் காக்குமா
றனையென பொறையவன் பாங்க ராகுதுந்
தனையினு மெனையினுஞ் சார்மி னென்றனன்

(இ - ள) என்னைக்காட்டிலும் மேம்பட்ட எமகண்டனை உங்களுடனிருந்து பெரிய பூமியைக் காக்குமபடி சொல்லி, என சுமையை யவனிடத்திற (சேரச்) செய்வோம (இச்சமயம்) தன காரியத்திலும் என காரியத்திலுஞ் சார்ந்திருப்பீராக. எ-று.

ஆர்ந்தவு ளகத்துய ரிலைப்ப வங்ஙனே
சோர்ந்தன னிணைமிசை சூழ்ந்து ளாரெலா

மீர்ந்தவுள ளத்தரா யேங்கி யண்மையிற்
சார்ந்தவன் படுந்துயர் தாமு மெய்தினார்

(இ-ள்) பொருந்திய வுள்ளத்தில், துன்பமானது வருத்த, அப்பொழுதே சிங்காதனத்தின்பேரிலேயே உடல்சோர்ந்தனன் [மூர்ச்சையாயினன்] அவனைச் சூழ்ந் திருந்த (மந்திரிமார் முதலானவர்கள் யாவரும், இரங்கிய மனமுடையவர்களாய்க் கவலைகொண்டு சமீபித்துச்சென்று அவனுடைய வருத்தத்தைத் தாமும் அடைந் தார்கள். எ-று. (உக)

கண்டவர் சிலருளங் கரைந்து கண்கணீர்
கொண்டனர் சிலர்கரங் குலைத்திட் டார்சிலர்
துண்டமேற் சுட்டுவார் விரல்வைத் தாருடன்
மண்டிய நோயினை வைதிட் டார்சிலர்

(இ-ள்) (அதனைக்) கண்டவர்களிற் சிலர் மனமுருகிக் கண்களில் நீர்வடித் தார்கள்; சிலர் கையை நெரித்திட்டார்கள், சிலர் மூக்கின்மேல் நெடிய சுட்டுவிரலை வைத்தார்கள், சிலர் அவனுடலிற் பொருந்திய(குட்ட)நோயைத் திட்டினார்கள் எ-று.

தெய்வநொந் தனர்சிலர் சிலர்நெ ரித்திரு
கைவருந் தினர்சிலர் கையி னெற்றுபு
மெய்வருந் தினரினி வியாதி தீர்ந்திவற்
குய்வுமுண் டோவென வுழிதந் தார்சிலர்.

(இ-ள்) சிலர் தெய்வத்தை நொந்தார்கள், சிலர் இரு கரங்களையு நெரித்து வருந்தினார்கள், சிலர் கையாலடித்துக்கொண்டு உடல் வருந்தினார்கள், சிலர் இனி இவ்வரசனுக்குக் குட்டநோயொழிந்து பிழைத்தலுள்ளதாமோவென்று (மனஞ்) சுழன் றார்கள் எ-று. (உங)

கல்வியிற் கேள்வியிற் காக்கு நீதியின்
வல்லவர்க் குறுங்கொலிவ் வருத்த மென்குவர்
தொல்வினைப் பயனெவர் துடைப்ப ரென்குவ
ரல்லலுற் றிவ்வகை யழுங்கி னோரெலாம்.

(இ-ள்) (அங்குற்றிருந்த) எல்லோரும், கல்வியினாலுங் கேள்வியினாலும் (பிரசைகளை) இரட்சிக்கும் நீதியினாலும் வல்லவனாகிய இம்மன்னனுக்கு இவ்வருத்தம் வரலாமோவென்பார்கள், ஊழ்வினையின் பயனை யொழிப்பவர் யாவரென்பார்கள்; துன்புற்று இவ்வகையாக வருந்தினார்கள். எ-று. (உச)

அக்கண மவர்தமை யமைச்சர் கையமைத்
துக்கணை கிடந்தவ னுழைச்சென் றொண்செவி
சுக்குவைத் தூதினார் துலங்கு மாணெழின்
மிக்கசாந் தாற்றியால் வீசு வித்தனர்

(இ-ள்) அந்தக்கணத்திலேயே மந்திரிகள் அங்குள்ளாரைக் கையினாலமர்த்தி, உடலிற்றுச் சிங்காதனத்திலிருந்த சோமகாந்தனிடஞ் சென்று, ஒள்ளிய காது களிற் சுக்குவைத்தூதினார்கள். விளங்குகின்ற சிறந்த அழகு மிக்க விசிறியால் (மெல்ல) விசிறுவித்தார்கள் எ-று (உரு)

சோகமுங் கொழிதரச் சோம காந்தனு
நாகணை யுறங்கிய நாமச் சக்கர
மேகமங் கெழுந்தென மெல்ல வேயெழுந்
தேகனை திணையடி யிதயத் தெண்ணினான்

(இ-ள்) அப்பொழுது சோகமொழிதலால், சோமகாந்தராசனும், சேஷ சயனத்திலுறங்கிய அச்சக்கரத்தருளு சக்கராயுதந்தாங்கிய மேகவண்ணனாகிய திருமால் எழுந்தாற்போல மெல்ல வெழுந்து, கடவுளுடைய திருவடியை மனதிற் சிந்தித் தான். எ-று. (உசு)

வெந்திற லரசனுக் கிவைவு நோக்கிய
மந்திரத் தலைவர்க ளணங்கிக் கூறுவார்
யிந்திரன் போலவே யிகலகடந்தமைத்
தந்தைதா யினுமிகத் தாங்கி நின்றனை

(இ-ள்) மிக்கவலியுடைய மன்னவன் மனத்துற்ற துன்பத்தைப் பார்த்த மந்திரி சிரேட்டர்கள் பணிந்து சொல்கின்றார்கள் இந்திரனைப்போலவே பகைமையொழித்து எங்களைத் தந்தைதாயைக்காட்டிலும் மிகவும்(தயையொடு)காத்துவந்தனை.எ-று.

அனையநீ யழிபிணி யடாக்குருஞ் செவ்வியி
னினைந்து வனத்திடை யேக விட்டனை
மனையிடை வாழ்துமேன் மதியின் மிக்குளோந்
தனைநிகர் தருமமுந் தைக்குஞ் சாலவே

(இ-ள்) அவ்வகைய நீ குட்டநோயால் வருந்துங்காலத்தில், துன்பஞ்செய்யும் வனத்திற் செல்ல (உன்னை) விடுத்து, அறிவின் மேம்பட்ட நாங்கள் நல்வீட்டில (இருந்து) வாழ்வோமாயின், தனக்குத்தானே சமானமாகிய தருமமும் (எங்களை நோக்கி) மிகச்சிரிக்கும் எ-று

அழிபிணி-துன்புறுத்துநோய் தருமமென்றது ஈண்டுத் தருமதேவதையை.

இருவகை யறமபொருளீட்டி யாணையா
முருகெழு திகிரிநன் குருட்டி நீதிநூல்
கருதிய வாறுநின் காதற் புத்திர
னொருவனே யுலகெலா மோம்ப வல்லனே

(இ-ள்) இருவகைப்பட்ட தருமமும் பொருளுந்தேடி, ஆக்கினையாகிய நிறமிக்க சக்கரத்தை நன்றாகச்செலுத்தி நீதிநூல் எண்ணியவகையே உன் ஆசைப் புதல்வனாகிய ஏமகண்டனொருவனே உலகமுழுவதையுங் காக்கவல்லவன் எ-று (உக)

வகைபெறு முலகவன் மதித்துக் காக்குமேற்
புகையுமிழ் தழலுமிழ் புலவு மேவலிற்ப
தகையுநின் னாணையா லீங்குத் தங்கினு
மிகையலா லாமெலாம் வேண்டு மாறிலே.

(இ-ள்) புகைந்து தீயைச்சொரியும் புலானமணங்கமழும் வேற்படைதாங்கிய அரசனே! அவ்வேமகண்டன் மதித்து உலகத்தைக் காப்பாறுமின் ஒழிபபடும்.

தடுக்கின்ற உன் கட்டளையால் யாங்கள் இந்நகரத்திற் பொருந்தினாலும், மிகுதியேயல்லாமல் (அவன் அரசுபுரிகையில் யாங்கள்) வேண்டிய வழியில்லை எ - று. (ருo)

ஆணையா னின்னுட னரிய கானகம்
போகுமா றுணிந்தன மொருவின் மன்னவ
வாகைமென் மணிப்புயத் தேமங் கண்டனை
யோகையா லரசினுக் குரிமை செய்கென்றார்.

(இ - ள்.) ஆணைப்படியால், உன்னுடனே அரியவனத்திற்குப் போகும்படி (நாங்களும் மனம்) துணிவுற்றிருக்கின்றோம்; ஒப்பில்லாத அரசனே! வெற்றிமாலையணிந்த மெல்லிய இரத்தினாபரணம்பூண்ட புயத்தையுடைய ஏமகண்டனைச் சந்தோஷத்துடன் இராசகாரியத்திற்குரியவனுக்குக வென்றுசொன்னார்கள் எ - று.

அரசினுக்குரிமை - பட்டாபிடேகம் (ருக)

வேறு

இன்ன வாறுநி கழ்ந்த யாவுமி யம்ப வுன்மனை வைகிய
தன்னை நேரெழி லாள்சு தன்மைத ரித்தி லாதுவெ ருரேலெனப்
பொன்னின் மேகலை நூபு ரத்துணை பொங்கி யார்ப்ப நடந்துபோய்
முன்னர் நின்றுவ ணங்கி மன்னன்மு கத்தை நோக்கிவி ளம்புவாள்.

(இ - ள்) இந்தவகையாக நடந்தவற்றையெல்லாம் (தூதுவர்கள்) சொல்ல, அந்தப்புரத்திலிருந்த தன்னைத்தானே யொத்த அழகினையுடைய சுதன்மையென்பவள் (மனஞ்) சகிக்காமல் விரைந்து, பொன்னாலாகிய மேகலாபரணமும் இரண்டு பாதசரங்களும் அதிகரித்தொலிக்க நடந்துசென்று, அரசனுக்கு முன்னேநின்று பணிந்து (அவன்) முகத்தைப்பார்த்துச் சொல்லுகின்றாள் எ - று (ருஉ)

இருத லைப்புளி னுற்ற வோருயி ரென்ன நும்முட னாகியே
மருவு துன்பமு மின்ப முமவழு வாது துய்த்திடு மாடியேன்
வெருவு கானக நும்மை யேகவி டுத்தி ருந்துயிர் வாழ்வனோ
கருத லார்கள்வ ணங்க வெய்துக டைக்க ணோக்கிய காவலோய்.

(இ - ள்) பகைஞர்கள் பணியும்படி (அம்பினை) யெய்து கடைக்கட்பார்வை செலுத்திய மன்னனே! இருதலைப்பறவைக்குப் பொருந்திய ஓருயிர்போல உம்முடனிருந்து, பொருந்திய துன்பத்தையும் இன்பத்தையுந் தவறாமல் அநுபவிக்கும் மேம்பாடுடைய அடியாள், அஞ்சத்தக்க வனத்திற்கு உம்மைச்செல்ல அனுப்பி, (நகரத்தில்) இருந்து உயிர்வாழ்வேனோ? எ - று (ருரு)

ஒத்த வன்பின ராகி மங்கைய ருற்ற காதலன் வாழவாழ்ந்
தித்த ராதல மீதி றப்பவி றப்ப ராயினி ருங்கதி
மெத்து போகவி தங்கொள் வாரென வென்ற மாதவ ரோதலா
லத்த வத்தமு நின்னொ டேகுவ னல்ல திங்கம ரேனென்றாள்.

(இ - ள்) புனிதமானவரே! மாதர்கள் ஒத்த அன்புடையவர்களாகிப் பொருந்திய கணவன்வாழ (தாமும்) வாழ்ந்து, இப்பூமியில் (அவன்) இறப்ப (தாமும்) இறப்பார்களானால், பெருங்கதியாகிய மிக்க பதவியையடைவார்களென்று (ஐம்புலன்களை

யும்) சயித்த பெருந்தவசிகள் சொல்லுதலால், ஒருநாளும் உம்முடன் செல்வேனல்லது இங்கிருக்கமாட்டேன் என்று சொல்லினன். எ - று. (௯௪)

சூறை யாற்பொரு தப்ப டுந்துணர் துன்றி ளங்கொடி போலவும்
பாறு சூழயில் வேல்கள் பாய்ந்துப தைக்கு மான்பிணை போலவும்
வீறு மாய்ந்துசு தன்மை கட்புனல் வீழ நொந்திது விள்ளலு
மேறு போலம ருங்கி ருந்திடு மேம கண்டனி யம்புவான்.

(இ - ள்) சுழல்காற்றினாற் போர்செய்யப்படும் பூங்கொத்து பொருந்திய இளங்கொடிபோலவும், யுத்தபூமியிற் சூழ்ந்த கூர்மையாகிய வேலகள் பாயப்பெற்றுத் துடிக்கின்ற பெண்மான்போலவும், சுசன்மையானவள் விளக்கமற்றுக் கண்ணீர்சொரிய மனநொந்து இதனைக் கூறவும், ஆணிங்கம்போலச் சமீபத்திலிருந்த ஏமகண்டன் சொல்கின்றான். எ - று (௯௫)

திங்கள் செங்கதி ரீத்த வானமு நீயொ டாழொழி வேள்வியு
மங்கை பற்றிய நாத னேடரு மைந்த னீங்கிய மாதரு
நங்க மைச்சரி னோடு வேந்தக னந்த தேயமு மென்னவே
யிங்க ணின்றுனை விட்டி ருந்தர சாளு மெண்ணமி சைந்திலேன்.

(இ - ள்.) சந்திர சூரியர்களொழிந்த ஆகாயமும், நெருப்பும் பசுவுமில்லாத யாகமும், அழகிய கையைப்பிடித்த கணவனுடன் அரிய புத்திரனில்லாத மாதர்களும், பொருந்திய மந்திரிகளுடன் அரசன் பிரிந்த தேசமும்போல, இவ்விடத்திலிருந்து உம்மைப்பிரிந்து அரசாட்சிசெய்யுங் கருத்திற்குச் சம்மதித்திலேன் எ - று. (௯௬)

புத்தி ரன்கட னீன்றெ டுத்தவர் பூசை யாற்றியி றந்தபின்
பத்தி யாற்பிதி ரர்க்கு நல்லனை பண்பி னுற்றுவ தேயலா
லத்த மும்பத்தர சாட்சி செய்தழி போக மூழ்குவ தல்லவே
வைத்த செல்வம திததி லேனுடன் மால்வ னத்துறு வேனென்றான்.

(இ - ள்) மைந்தனுடைய கடமையாவது பெற்றெடுத்த பிதாமாதாக்களைப் பூசித்து, (அவர்கள்) மரணமடைந்தபிறகு, பிதிராக்கட்குப் பத்தியுடன் நல்ல (திலபிண்ட தர்ப்பணாதி)கிரியைகளை முறைப்படி செய்வதேயல்லாமல், பொருளைச்சேர்த்து இராச்சியநடத்தி யழியத்தக்க போகங்களையநுபவிப்பதல்ல (ஆதலின் துன்பத்தையே) பொருந்திய (இராச) செல்வத்தை மதித்திலேன். (நானும்) உம்முடனே பெரிய வனத்தை யடைவேனென்றனன். எ - று (௯௭)

தோம கன்றவ மைச்சு ருந்துணை யாவி யன்னசு தன்மையு
மேம கண்டனும் வேறு வேறினி தோதும் வார்த்தையெ னுஞ்சுதை
நாம வச்சிர வேலின் மன்னவ னன்று துய்த்துள முங்குளிர்ந்
தேம கண்டனை வேறு நோக்கியெ டுத்தி ருமபொருள் கூறுவான்.

(இ - ள்.) குற்றமற்ற மந்திரிகளும் உயிர்த்துணையாகிய சுதன்மையும், ஏமகண்டனும் வெவ்வேறு இனிதாகக்கூறிய சொற்களென்னும் அமுதை, அச்சத்தைத்தரும் வச்சிரவேலைத்தாங்கிய சோமகாந்தன் நன்றாகச் செவியால் மடுத்து மனமுங் களித்து, (புதல்வனாகிய) ஏமகண்டனைத் தனியாகப் பார்த்துப் பெருமைபொருளாக வுள்ளவற்றை எடுத்துக்கூறுகின்றான் எ - று. (௯௮)

பிள்ளை மைப்பருவத்து ளாயலை பேதுகொண்டெவன் பேசினை
தள்ளருமபனு வற்றி றத்தொடு தந்தை தாயரை யோம்பிநின்
றெள்ளருமபல தான மாதியி யற்றி யேகய பூமியின
விள்ளருமபலி பிண்ட மிட்டவன மெச்சு புத்திர னாயினும்.

(இ - ள்) (மகனே! நீ) பிள்ளைப்பிராயத்து ளிருப்பவனல்லன; மதிமயக்கங்கொண்டு யாது கூறினை? நீக்குதற்கரிய நீதிநூற்படி அன்னை பிதாக்களைப் பாதுகாத்துநின்று, இழிவில்லாத பலவகைத் தானமுதலியவற்றைச் செய்து, புண்ணிய பூமியிற் சொல்லற்கரிய பலி பிண்டங்களைக் கொடுத்தவனே மெச்சத்தக்க புதல்வனா[illegible]கிலும். எ - று. (௩௯)

தாயர் தந்தையர் வார்த்தை யிறந்தவ ருந்து நின்றிட லெழுத
லாய தன்மம றிந்த புத்திர னென வாக்கரு மைந்தனே
மேய வென்னுரை கொண்டமைச்சரி னோடு மேதினி காத்தியென
றேயும் வண்ணமி யம்பி யுண்மனை யேம கண்டனொ டெய்தினன்.

(இ - ள்) தாய்தந்தைகளுடைய வார்த்தையிலிருந்து பிறழாது நிற்றலே சிறந்த தன்மமென்றறிந்த புத்திரனே பெற்றோர்க்கு அரிய மைந்தனாவான். பொருந்திய என் சொல்லைக்கேட்டு மந்திரிகளுடன் உலகினைக் காக்கக்கடவையென்று தக்கபடி கூறி, ஏமகண்டனுடன் அந்தப்புரமடைந்தனன். எ - று. (௪௰)

ஒருவ ரெய்தியி ருப்பி னும்பல ருற்று வைகின ரோவென
மருளும் வண்ணநி ழற்றி ருங்கதி ரீமம ணித்திரண் மாளிகைக்
கருத லற்குரு மேற னொன்று காம ருந்தவி செய்திரு
னருமை மைந்தனை முன்னி ருத்திய வற்கு நீதியு ணாக்குமே.

(இ - ள்) ஒருவர் வந்திருந்தாலும் பலர் பொருந்தியிருக்கின்றனரோ வென்று மயங்கும்படி நிழல்செய்கின்ற பெரிய கிரணத்தைச் சிந்துஞ் சிறந்த இரத்தினத் தொகுதிகளிழைத்த மாளிகையில், பகைவர்க்கு இடியேறுபோன்ற சோமகாந்தன் அழகிய ஓராதனத்திருந்து, அருமைப்புத்திரனை ஏமகண்டனைத் தன்முன்னிருக்கச் செய்து, அவனுக்கு நீதிமார்க்கங்களை யுணர்த்தலாயினன். எ - று. (௪௧)

சோமகாந்தன் வனம்புகத் துணிந்தபடலம் முற்றிற்று.

ஆகத்திருவிருத்தம் - ௪௨௭

அரசியற்கைப்படலம்.

இருணி றப்பெருங் கடன்மருங் குடுத்தொளி ரிருநிலத் தவர்க்கெல்லாம்
வருண மேநிலை யெனுமிரண் டொடுந்தக வகுத்திடு மாசாரந்
தருமமென்பன வளவில வவையெலாஞ் சாற்றில னவைநிற்க
வருமை மைந்தனே யுனக்குரித் தாகிய வரசிய லினிக்கேண்மோ.

(இ - ள்) (சோமகாந்தராசன் ஏமகண்டனை நோக்கி) என்னருமை மகனே! இருள்போலக் கருநிறமாகிய பெரிய கடலை யாடையாகவுடுத்தொளிரும் பெரிய உலகத்திலுள்ளவர்க்கெல்லாம் விதித்திருக்கும் வருணாச்சிரம தருமங்கள் அளவில்லாதன.

அவை யாவும் (உரைக்கப்பெருகுமாதலின்) சொல்கிலேன் அவையிருக்க, உனக்குஇன்றியமையாததாகிய அரசியனீதியைமாத்திரம் (கூறுகின்றேன்) கேட்பாயாக. எ - று.

இச்செய்யுளால் இப்படலத்தின் பயனிதுவென விளக்கினார். (௧)

தினகருமாரம்பம்.

விடியலின் முந்துறக் கடிகையைந் தெனத்துயில் விடுத்துடற் சுசிசெய்து
கடிமலர்த்திரளமளிமேல் பள்ளியைக் கடிந்துமேவி றிடமவைகிக்
கொடிய வல்வினைக் குழாத்தினைப் பொடிசெயுங் கோமளப் பொடிபூசி
யடிகளாகிய குரவனை வழிபடு மமலனை யகத்தெண்ணி

(இ - ள்) பொழுது விடிய ஐந்துநாழிகை முற்பட்டுத் துயினீங்கி, தேகத்தைச் சுத்திசெய்து, வாசநதங்கிய மலர்த்தொகுதி நிறைந்த படுக்கையணையை விடுத்துப் புறத்தே யமர்ந்து, கொடிய பாவக்கூட்டங்களை நீறாக்கத்தக்க திருநீறிட்டுக்கொண்டு, தலைவனாகிய ஆசானையும் உபாசனாமூர்த்தியையும் மனத்திற் றியானித்து எ - று.

இதுமுதல் ஒன்பது பாடல்கள் குளகம்

மக்களுயிர்க் குறுதிபயக்குந் துணையாயவற்றுள் "தெரிந்தோம்பித் தேரினு மஃதே துணை" எனவியந்தோதப்படும் ஒழுக்கநெறியே சிறந்தது. அதுவும் "மன்னர் சீரவழிப் பட்டதே மன்பதை" எனக் கூறியவாறு, அரசனனுஷ்டித்தாலன்றி, உலகினரநுஷ்டியாராதலின் இவ்வரசன் அரசியலை மொழிவதன்முன், நித்திய வொழுக்கத்திற் சிறிது தன்மைந்தனுக்குப் பொதுப்படக் கூறினன் (௨)

பரந்த பூமியை யெதிருற நோக்குபு பாரெனப் படுந்தாயே
யரந்தை யின்றியான் றிரிதருந் தொறுமென தடியுன தருமீதே
நிரந்தரித்துறப் படுமபிழை பொறுவென நெகிழ்ந்தவுள்ளகத்தோடு
மிரந்து பின்னிரு மதப்பெருங் களிறுநினை யினிதுறத் தியானித்து.

(இ - ள்) விசாலமான பூதேவியை யெதிராகப் பார்த்து, பூமியென்று சொல்லப்படுந் தாயே! துன்பமின்றி யான் சஞ்சரிக்கும் பொழுதெல்லாம் என்கால் உன்வடிவின்மேற் பொருந்தப் பரவிப்படிகின்ற குற்றத்தை (எண்ணாது) பொறுத்தருள்கவென்று, உருக்கமானமனத்துடன் பிரார்த்தனை செய்து, பின்னர் இருமதங்களையுடைய பெரிய யானைமுகமமைந்த விநாயகமூர்த்தியை யினிதாகத் தியானஞ்செய்து எ - று.

இருமதம் - கன்னமதம் கைமதம் என்பன

நோக்குபு - செய்பு என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம். (௩)

எண்ணிலாகம மறைக்கெலா முடிவென விருந்திடு மிறைதன்னைக்
கண்ணனாதியின் னவர்களா யிருந்திடுங் கணேசனை மனமாதி
நண்ணொணாதவ னைநாற் பொருளையு நண்ணினர்க் கருள்வானை
யண்ணலாகிய் வனாதியை யனந்தரூ பியையருட் கடலானை

(இ - ள்) கணக்கில்லாத வேதாகமங்களுக்கெல்லாம் முடிவாக வீற்றிருக்குந் தலைவனும், திருமால் முதலிய தேவர்களாயிருந்திடுங் கணேசனும், மனாதிகளுக்கு எட்டாத முதல்வனும், அடைந்தவர்களுக்கு (தர்மமுதலிய) நால்வகைப்பட்ட புருடார்த்தங்களையுங் கொடுப்பவனும், கடவுளாகிய அநாதியும், அநந்தவடிவனும், கிருபா சமுத்திரமுமானவனும். எ - று

நாற்பொருள்கள் - அறம் - பொருள் - இன்பம் - வீடு என்பன. (௪)

சகல லோகமு மளித்திடுங் காரண மானதத் துவன்றனை
யகலு றுதவிக ளினங்களே யாயினு மடுத்தவர்க் கறுப்பானைப்
புகல்வி நாயகக் கடவுளைப் புலரியின் வணங்குகின் றேனென்று
மிகலசெய் காதலின் வழுத்திமற் றமரரை வேறுவே றுறநோக்கி.

(இ - ள்) சர்வலோக ரக்ஷண்ணிய காரணமாகிய தத்துவசொரூபியும், தன்னை யடுத்தவர்களுக்கு நீங்காத விக்கினங்களை யானாலுந் தீர்க்க வல்லவனுமா யிருக்கின்ற விநாயகப்பெருமானைப் பிராதகாலவந்தனஞ் செய்கின்றேனென்று, மிக்க ஆசையுடன் தியானித்து, பின்பு தனித்தனி தேவவணக்கஞ் செய்து. எ - று. (௫)

உரக மாலையா னசந்திர சேகர னுழுவையி னுரிசூழ்ந்த
பரமன் பேரழ கினன்பெருங் கருணையன் பண்ணவ ரனைவோர்க்கும்
வரமெ லாங்கொடுத் தருள்பவன் பார்ப்பதி மணாளனல் வழிவாராப்
புரமெ லாவகை யழித்தபுண் ணியன்றனைப் புலரியிற் றொழுகின்றேன்.

(இ - ள்) சர்ப்பாபரணமணிந்தவனும், சந்திர சேகரனும், புலித்தோலை யாடையாக வணிந்த பரமனும், சலட்சணனும், தயாநிதியும், தேவர்க ளெல்லோருக்கும் வரங்களெல்லாவற்றையுங் கொடுத்தருள்பவனும், உமாநாயனும், நல்வழியில் வராத திரிபுரங்களை நில்லாவழியாக எரித்த புண்ணிய மூர்த்தியுமாகிய சிவபெருமானைப் பிராத கால வந்தனஞ் செய்கின்றேன் (என்று பணிந்து.) எ - று. (௬)

பெத்த முத்தியும் பரப்புபெண் ணரசியைப் பிறழ்முக் கணனுளைத்
தத்து வத்தினுக் காதிகா ரணியையத் தத்துவங் கடந்தாளைச்
சித்தர் தேவர்கள் டுதிகொளு மிறைவியைத் திகழ்சமு சாரத்தின்
புத்தி நீங்குமா றருளும்பார்ப் பதிதனைப் புலரியிற் றொழுகின்றேன்.

(இ - ள்) பெத்த முத்திகளை யருள்புரியும் பெண்கணாயகியும், பிறழ்கின்ற மூன்று கண்களையுடையவளும், தத்துவங்களுக்கு ஆதிகாரணியும், தத்துவாதீதியும், சித்தியாளர்களுந் தேவர்களுந் தொழுமிறைவியும், விளங்குகின்ற சமுசார பந்த வினை நீங்கும்படி யருள்பவளுமா யிருக்கின்ற பார்ப்பதி தேவியைப் பிராதகாலவந்தனஞ் செய்கின்றேன் (என்றுபணிந்து) எ - று. (௭)

தொக்க பாவத்தைச் சத்துருக் குழாத்தினைத் தொடர்ந்துசென் றிறுப்பாளைத்
தக்க பூமகண் மணாளனைப் பாற்கடற் றனித்துயி லமர்வானை
மிக்க வீரனை வேதிய ரிடர்தப வேறுவே றுருக்கொண்டு
புக்க மாயனை யிந்திர னிளவலைப் புலரியிற் றொழுகின்றேன்.

(இ - ள்) தொகுதியான பாவத்தையும், சத்துரு கூட்டத்தையுந் தொடர்ந்து சென்றொழிப்பவனும், தங்குந் தாமரைமலரில் வசிக்குந் திருமகள் மணாளனும், திருப்பாற்கடலில் ஒப்பற்று (யோக) நித்திரைசெய்பவனும், மேம்பட்ட வைதிகர்க்கு இடரகற்றும்படி(தசாவதாரமுதலிய) வெவ்வேறுவடிவெடுத்த மாயாவீரனும், உபேந்திரனுமாயிருக்கின்ற விஷ்ணுமூர்த்தியைப் பிராதகால வந்தனஞ் செய்கின்றேன் (என்று பணிந்து) எ - று.

இந்திரனிளவல் - இந்திரனுக் கிளையோன்; உபேந்திரன்; மாவலியின் கர்வ பங்கநிமித்தம், இந்திரன்றாயாகிய அதிதியின் கோரிக்கைப்படி அவள் வயிற்றில் வாமனனாயவதரித்த முறையில் திருமால் இந்திரனுக்கு இளவலானானென் றறிக. (௮)

பெருமை நயக்குமெண் ணத்தினை யுடையவன் பேணற் கொடுகன்ம
மருவு தறக்குறு காரண மானவன் மறையுரு வினனித்த
மிருளுந் தானவர் மாயையுந் துரப்பவ னியாவருந் தொழுதேத்தும்
பொருவி லாததீப ரொளிவளர் பரிதியைப் புலரியிற் றொழுகின்றேன்.

(இ - ள்) பெருமைதங்கிய எவ்வகை யிலக்கங்களுக்குங் கருத்தனும், காக்கத்தக்க ஞானமும் கருமமும் (ஆதியவற்றின் பலன்கள்) அடைதற்குக் காரணமானவனும், வேதரூபியும், நாடோறும் உலகவிருளையும் அசுரமாயையையுந் தவிர்ப்பவனுமாகி எல்லோரும் பணிந்து துதிக்கும் ஒப்பில்லாத பேரொளி வளரும் சூரியபகவானைப் பிராதகால வந்தனஞ் செய்கின்றேன் எ - று. (௯)

முறையி னிவ்வகை வழுத்தியே யேனைய முடிகொள்வா னவர்தம்மைக்
கறையி லாமுனி வோர்களை யன்பினுறு கருத்துறத் தொழுதேத்தி
யறையு நாட்கடன் விதிப்படி முடித்தபி னறங்களின் வழுவாமே
நிறையும் வேதிய ரமைச்சரா தியரொடு நிலம்புரப் பதுமாண்பால்.

(இ - ள்) கிரீடமணிந்த மற்றைய தேவர்களையும், களங்கமில்லாத முனிவர்களையும் அன்புடன் மனத்திற் பொருந்த இவ்வாறு முறைப்படி துதித்து, சொல்லப்படும் நித்தியானுட்டானத்தை விதிமுறையே செய்து, அதன்பின்னர் நீதி தவறாதபடி மிகுதியாகிய அந்தணர் மந்திரர் முதலியவரோ டளவளாவி உலகினைப் பாதுகாப்பது மாட்சிமையாகும். எ - று

இரண்டாஞ் செய்யுண்முதல் இதுகாறுங் கூறியவற்றை,

நித்தியகன்மநெறி

"சோதங்கு செங்கதிர்கீழ்த் திசைக்கெழுமுன் னாழிகைக்கு
யோரைந் தெனவெழுந்தே யோரந்து.
சுசியெனினு மனநெறினுங் கூடியமெய்ச் சுத்தி
யிசைவாகச் செய்துநீ றிட்டு
ஒண்சமயி ருத்திரனை நெஞ்சிற் சதாசிவனை
யெண்கிரியை யானுமாங் கே
யோகிவிந்து நாதம் புருவனடு வுணரூாஸி
சோகமபா விதத்திடுகெ தோயந்து
இன்ன லறவியன்ற வாறுசெபித் தேமூல
மனனுமரன் றாளிணையும் வாழ்த்து"—என வருவனவற்றானும்,

இனியவை நாற்பது

"கணமூன் றுடையானருள் சோதல் கடிதினிதே
தொனமாண் டொழாயமாலை யானைத் தொழலினிதே
முந்துறப் பேணி முகநான் குடையானைச்
சென்றமாந் தேத்த லினிது."—என வருவதனானுமுணர்க. (௰)

நீதி போதித்தல்.

அறத்துப்பால் - இல்லறவியல்

வேறு

ஒருப்படு மறத்தி னூலே பொண்பொரு ளின்பஞ் செம்பொற்
பருப்பதங் கடல்போல் வந்து பயப்படு மதனைக் கேண்மோ

விருப்பொடு வெறுப்பி லாத மிகைபெண் குணத்தோ டொன்று
மிருப்பவன் யாவ னன்னா னிணையடி வணங்கல் வேண்டும்.

(இ - ள்) (மகனே! நீ யடையவேண்டிய நால்வகைப் புருடார்த்தங்களுள்) ஒருமைப்பட்ட தருமத்தினாலே ஒளிரிய பொருளும் இன்பமும் மேருமலையுங் கடலும் போல வந்து பயன்படும் அதனைக் கேட்பாயாக விருப்பும் வெறுப்புமில்லாத மேம்பட்ட எண்குணத்தோடு கூடியிருக்குங் கடவுள் எவனோ அவனுடைய உபயபாதங்களைப் பணிதல்வேண்டும். எ - று.

இதுமுதல் இருபத்தநான்கு அதிகாரங்களாலும், முப்பத்தொரு செய்யுள்களாலும் இல்லறவியல் சொல்லலாயினார்

இச்செய்யுளால், * தெய்வந்தொழு எனக் கூறியதாம். இதனை,

திருக்குறள்.

"அகர முதல வெழுத்தெல்லா மாதி - பகவன் முதற்றே யுலகு.
வேண்டுதல்வேண் டாமை யிலானடி சேர்ந்தார்க்-கியாண்டு மிடும்பை யில.
அறவாழி யந்தணன் றாள்சேர்ந்தார்க் கல்லாற்-பிறவாழி நீந்த லரிது
கோளில்பொறியிற் குணமிலவேயெண் குணத்தான்-றாளை வணங்காத் தலை."

என்பதனாலும்,

முத்தொள்ளாயிரம்

மன்னிய நாண்மீன் மதிகனலி யென்றிவற்றை
முன்னம் படைத்த முதல்வனைப்—பின்னரும்
மாதிரையா னாதிரையா னென்றென் றயருமா
லூர்திரைநீர் வேலி யுலகு."—என்பதனாலுமுணர்க. (கக)

வேறு

அறமுதற் பொருளுல கமல னாணையா
னிறுவுதற் கேதுவாய் நிகழு மாமழை
வறுமையெய் தாவகை வயங்கு வேள்வியை
யுறுதரு மங்களை யுஞற்றல் வேண்டுமால்.

(இ - ள்.) உலகமும், (அதனிடத்தில்) அறமும் பொருளும் இன்பமும் மலரிதனாகிய கடவுளருளால் நிலைபெறுதற்கு ஏதுவாக நிகழ்கின்ற மழை வளமானது குன்றுவண்ணமாகப் பிரகாசிக்கின்ற யாகங்களையும், பொருந்திய தருமங்களையுஞ் செய்யவேண்டும். எ - று.

இச்செய்யுளால் மழைவளம் பெருக்கு எனக் கூறியதாம். இதனை,

ஷை வான்சிறப்பு

"வானின் றுலகம் வழங்கி வருதலாற் - றானமிழ்த மென்றுணரற் பாற்று.
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித் துப்பார்க்குத் - துப்பாய தூஉ மழை.
சிறப்பொடு பூசனை செல்லாது வானம் - வறக்குமேல் வானோர்க்கு மீண்டு.
தானந் தவமிரண்டுந் தங்கா வியனுலகம் - வானம் வழங்கா தெனின்."—என்பதனாலும்,

* இவ்வதிகாரப் பெயர்களும் அவ்வவ்விடங்களிற் காட்டப்பட்டன.

நான்மணிக்கடிகை.

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையுந்
தவமிலா ரில்வழி யில்லை தவமு
மரசனு மில்வழி யில்லை யரசனு
மில்வாழ்வா ரிலவழி யில."—என்பதனானுமுணர்க. (கஉ)

விழுப்பொரு ளனைத்தையும் விளங்கத் தெள்ளுபு
முழுப்பகை மபொறியையு முனிந்த நீத்தவர்
வழுப்படா மறையவர் மறைகற் கலவியோர்
குழுப்புறத் தாதரங் கூறதல் வேணடுமால்.

(இ - ள்) சிறந்த (அறமுதலிய) நாற்பொருட் பயனையும் (இத்தகையன வென்று) விளங்க வுணர்ந்து, பஞ்சேந்திரியங்களையும் முற்ற நிக்கிரகித்த சாதுக்கள் - குற்றமில்லாத அந்தணர்கள் - ஏனைய குலத்து வித்துவான்கள் (இவர்கள் கூடிய) சபையில் ஆசையதிகரித்தல் வேண்டும். எ - று

இதுமுதல் மூன்று செய்யுள்களாற் பெரியோரை வழிபடெனக் கூறியதாம்.

இதனை, ஷை. நீத்தார்பெருமை.

"ஒழுக்கத்து நீத்தார் பெருமை விழுப்பத்து - வேண்டும் பனுவற் றுணிவு.
செயற்கரிய செய்வார் பெரியர் சிறியர் - செயற்கரிய செய்கலாதார்."—என்பதனா னறிக (கங)

நீத்தவ ராதியோர் நெருப்பு யிர்த்திடிற்
காத்திடுங் கடவுளுங் கலங்கு மாதலா
லேத்துவ தேகட னென்று மைந்தனே
யாத்தர்கள் பொறுப்பரென் றவம திததிடேல்.

(இ - ள்) புத்திரனே! துறந்தோர் முதலியோர் (எவரையும்) பொறுக்கத் தக்கவரென்று (அவரை) அவமதித்திடாதே அவர் மனங்கனறினால் (நம்மைக்) காக்கின்ற கடவுளாலும் அமைக்கவொண்ணாத தீங்குறும். ஆதலால், அவரை யென்றும் வந்தித்தலே உனகடமை. எ - று

இதனை ஷை, ஷை,

"ஐந்தவித்தா னாற்ற லகல்விசும்பு ளார்கோமா - னிந்திரனே சாலுங் கரி
குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி - கணமேனுங் காத்த லரிது."—
என்பதனானுணர்க.

குரவரைப் பெரியரைக் கூறு மாகம
விரவுறு மறைகளை மேத குமபடி
பரவுத லலதவர் பாங்கர் நிந்தனை
கரவுற வுளத்தினுங் கருதொ ணாததே.

(இ - ள்.) குரவரையாயினும், பெரியோரையாயினும், சொல்லுகின்ற ஆகமங்களையாயினும், பொருந்திய வேதங்களையாயினும், சிரத்தையுடன் பூசிப்பதல்லது அவர்களிடத்தில், இகழ்வதற்கு மறந்தாயினும் மனதில் இடங்கொடுக்கக் கூடாது.

இதனை, ஷை, ஷை,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து - மறைமொழி காட்டி விடும்.

அந்தண ரென்போ ரறவோர்மற் றெவ்வுயிர்க்குஞ்-செந்தண்மை பூண்டொழுகலான்" எனபதனுனும்,

கந்தபுராணம்.

"தநதைசொன் மறுப்பவாக டாயுரை தடுப்போ
ரநதமறு தேசிகாத மாணையை யிகநதோர
வநதனைசெய் வேதநெறி மாறினாகண மாருச
செநதழல வாயநிர யததினிடை சோவார"—என்பதனுனும்,

சூதசங்கிதை

"அண்ணலம் பரனை யாசா ரியன்றனை யவம திததோ
ரெண்ணருங் காலம பவ்வீ யிடைததுளே கிருமி யாவா
தண்ணமா ரிவரை யெண்ணு திழிவுரை சாற்றி னோர்கள்
திண்ணமண ணவாவெ றுககத தீமுய லகனேய கொளவார."—என்பத னுனுமுணர்க. (கரு)

தேங்குவிண் போகமுஞ சிறநத முததியு
மீஙகுறு மாக்கமு மினிது நலகலா
லோஙகிய வறததினை யுளமுன் மூன்றினும்
பாங்குற நித்தலும பரிநது செயதியால.

(இ - ள்.) மிகுந்த சுவர்க்க போகததையும், சிறநத மோட்சத்தையும இவ வுலகிற் பொருநதிய செல்வததையும் இனிதாகக கொடுததலால், உயாநத தருமததை, மனதிற கருதும (அறமபொருளின்பங்களாகிய) மூனறிலும, திருததமாக நாடோறும் ஆசையுற்றுச் செயக எ - று

இதுமுதல் மூன்று செய்யுளகளால் தருமததை விரும்புஎனக கூறியதாம.

இதனை, ஷை அறனவலியுறுததல

"சிறப்பீனுஞ் செலவமு மீனு மறததினூஉங - காகக மெவனோ வுயிாககு.
ஒலலும வகையா லறவினை யோவாதே - செலலுமவா யெலலாஞ செயல "என பதனுனறிக (கசு)

வழுககறு மறததினை மறறுச செய்துமென
றொழுககிடா தொலலுறும வகையினா னுசசொலு
மழுககெனு முளததழுக் காற வாமுத
லிழுககுறு வெகுளியு மினறிச செயகவே.

(இ - ள) (தேகம நிலையறறதாதலின) உனறுற் செய்யககூடிய குற்றமற்ற தருமததைப் பினனாச செயவோமெனறு நழுவவிடாமல, கடுஞ்சொலலும மனததழுக் காகியபொறாமையும, ஆசையும இழிவாகிய கோபமும முதலியன கலவாமல (விரை நது) செயயக்கடவாய். எ - று.

இதனை, ஷை ஷை.

"அழுக்கா றவாவெகுளி யின்னுச்சொன் னுனகு - மிழுக்கா வியன்ற தறம்.
அனறறிவா மெனனு தறஞ்செயக மறறது - பொன்றுஙகாற பொன்றுத் துணை."
எனபதனுனும,

பழமொழி

"காலைச்செய் வோமென் றறத்தைக் கடைப்பிடித்துச்
சாலச்செய் வாரே தலைப்படுவார் — மாலை
கிடந்தா னெழுத லரிதானமற் றென்கொ
லறங்காலை செய்யாத வாறு" — என்பதனாலுமுணர்க (கஎ)

அன்புறு மறத்தினா லடைந்த வின்பமே
யின்பெனத் தகுகதா லேனை யின்பெலாந்
துன்பமும் பழியையுந் தோற்று மாதலால்
வன்புறு மறத்தினை மறப்பிற் கேடுறும்

(இ - ள்) அன்பமைந்த அறனாற்றினால் (தன் மனைவியை அடைகின்ற இன்பமே இன்பத்தை (புகழுடன்) கொடுக்கத்தக்கதாம் பிற (மாதருடன் புணர்தல் முதலிய) இன்பங்களெல்லாம் பாவத்தையும் பழியையு முண்டுசெய்யுமாதலால், தீமையற்ற தருமத்தை மறந்தாற் கேடு விளையும் (என்றுணர்க.) எ - று.

இதனை, ஷை ஷை.

"அறத்தினூஉங் காக்கமு மில்லை யதனை - மறத்தலி னூஉங்கில்லை கேடு.
அறத்தான் வருவதே யின்பமற் றெல்லாம் - புறத்த புகழு மில" - என்பதனாலும்,

புறநானூறு

"எளிதென விகழா தரிதென வரையாது
நுமக்குநீர் நலகுதி ராயின் மனத்திடை
நினைப்பினும் பிறக்கு மொழியினும் வளருந்
தொழிற்படிற் சினைவிட்டுப் பயக்கு முணர்த்தி
னிவணு மும்பருந் துணையே யதனா
றுறைதொறுந் துறைதொறு நோக்கி
யறமே நிறுத்துமின் றறிந்திசி னோரே." என்பதனானுமுணர்க (கஅ)

வேறு

பிரம சாரி வனத்துறைவோன் பேணுந் துறவி தென்புலத்தார்
குரவர் தேவர் விருந்தொக்கல் கோக்கண் மறையோ ரிறந்தோர்க
ளிரவ லாள ருறுப்பிலார்க ளெய்தும் பிணியா ளர்கண்முதியோர்
விரவு பாலர் சிசுத்தமது மிசையா ரிவரை யோம்புகவே.

(இ - ள்) பிரமசரிய விரதர் - வானப்பிரத்தர் - காக்கத்தக்க சந்நியாசிகள் - பிதுர்தேவர்கள் - ஆசாரியர் - தேவர் - விருந்தினர் - சுற்றத்தார் - பசுக்கள் - வேதியர்கள் - இறந்தவர்கள் - (சார்பில்லாத) தரித்திரர்கள் - அங்கவீனர்கள் - பொருந்திய நோயாளர்கள் - விருத்தர்கள் - பாலர்கள்-கூடிய சிசுக்கள் - தாம் உணவளிக்க உண்டு பிழைப்பவர்கள் ஆகிய இவர்களை (இல்லறத்தோன் காக்கவேண்டுதலின் நீ அவ்வாறு) காத்தொழுகுவாய். எ - று.

இதனை, ஷை, இல்வாழ்க்கை.

"இல்வாழ்வா னென்பா னியல்புடைய மூவர்க்கு - நல்லாற்றி னின்ற துணை
துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு - மில்வாழ்வா னென்பான் றுணை
தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்க லென்றாங் - கைம்புலத்தா றோம்பற்றலை."
என்பதனாலும்,

நாராயணீ.

"கற்றவர் கடவுட் டானஞ் சோந்தவர் களைக ணில்லா
ரற்றவ ரந்த ணாள ரனறியு மவர்கள் போலவாக
குற்றதோ ரிகககண வந்தா லுதவுதற குரித்தன ரூயிற்
பெற்றவில் வுடம்புதனறற பெறுமபய னிலலை மனனே"—என்பதனானு

முணாக

வருவாயக கியைய வாழ்தலுற மறுவில கறபின மனையாள்போற
பொருளாயா வுளவா மதுவனறிப புகழுமபயனு மிகவுணடாங
கருதா ரெதிரே யிமிலைறறுக காமா நடையு முறுமதனு
லொருவா தவளோ டெவபுறவே யுறறு வாழ்த லறனகும.

(இ-ள) (கணவனுடைய) வரவுககுததகக (செலவுசெயது) வாழுங குற்ற மில்லாத மனைவியைப்போல (இலவாழ்வானுககுச) சிறந்த பொருளகள் எவையுள வாகும. அதுவேயலலாமல (அவளால) கீாததியும பிரயோசனமும மிகுதியுமுண்டா கும. (தனககணவனைப) பகைஞாமுன வெளகாது நடககசசெயயும, ஆதலால மனையா ளுடன நீஙகாது சோபபட வாழ்தல நலலறமாகும எ-று.

இசசெயயுளால மனையாணலமோமபு எனககூறியதாம

இதனை, ஷ, வாழ்ககைத துணைநலம

"மனைததகக மாணபுடைய ளாகிததறகொணடான-வளததககாள் வாழ்க்கைத துணை.
பெணணிற பெருநதகக யாவுள கறபெனனுந - திணமையுண டாகப் பெறின.
புகழ்புரிந திலலிலோாக கிலலை யிகழவாாமுன - னேறுபோற் பீடு நடை."—என்ப தனானும,

அறநெறிச்சாரம்

"மருவிய கற்பின மனையாளுந தானு
மிருவராயக கொணடெயபி னலலா—லொருவரா
லிலவாழ்ககை யெனனு மியலபுடைய வானசகடஞ
செலலாது தெறறிறறு நின று"—என்பதனானுமுணாக (௨0)

எழுமைய பிறபபுந தீவினைவந தெயதாத சிறபபுந தெனபுலததா
முழுது முவககுங கடனசால முடிககு மாணபும பெறுதலினுற
பழுதி றவஙகண மிகபபுரிந்து பயந்த மைந்தா தமையவாககுக
குழுமு மவையின முநதிருபப வறிவு கொளுத்தல வேணடுமால.

(இ-ள) (பெறறோருககு) எழுபிறபபினு நனமையடைவிததலும், பிதுரர் முறறுந திருபதியடையுங கடனகளை மிகுதியாகச செயயு மாடசியும உணடாதலினுல் குறறமிலலாத தவஙகளை மிகுதியாகச செயதுபெறற புதலவாகளை, அறிவாளா சபை யில முந்திருககததகும அறிஞராககுதல (தனதேறாகடன எனல) வேணடும. எ-று.

இசசெயயுளால மககளொடமெகிழ எனககூறியதாம.

இதனை, ஷ புதலவரைபபெறுதல

"பெறுமவறறுள் யாமறிவதிலலை யறிவறிந்த - மக்கட்பே றலல பிற.
எழுபிறபபுந தீயவை தீணடா பழிபிறங்காப - பணபுடை மககட் பெறின
தமபொரு ளெனபதம மகக ளவாபொருள - தந்தம வினையான வரும.
தநதை மகறகாறறு நனறி யவையதது - முநதி யிருப்பச செயல."-என்பதனானும்,

வளையாபதி.

"உயர்குடி நனியிற் றோன்ற லூனமில் யாக்கை யாதன்
மயர்வறு கழிந்த கேள்வித் தன்மையால் வல்ல ராதல்
பெரிதுணர் வறிவே யாதல் பேரறங் கோட லென்றுங்
கரிதிவை பெறுதல் கூடா பெற்றவர் மக்க ளென்பார்."—என்பதனானுமுணர்க ()

இடனும் பொருளு மேவலரு மிருந்தும் பயனென் னேவந்த
வுடலின் பயனு மவ்வன்பை யுறுத்த விடத்து நொதுமலரும்
படர்செய் பகையு முறவாக்கும் பற்று மளிக்கு மன்னைமைந்தா
தொடரின் வளர்க்கு மன்பதனைச் சோர்ந்து மன்பின் வழுவற்க.

(இ - ள்.) (அன்பானது) நொதுமலரையும், துன்பஞ்செய்யும் பகைவரையுந் தன்னவராகச்செய்யும் பற்றையும், நன்மனை மக்கட்பேற்றினையுமுண்டாக்கும். கிடைத்த மானுடதேகத்தின் பயனாகிய அன்பையுடைத்தா யில்லாதவிடத்தில் (எவ்வளவு மிகுதியாக) இடமும் பொருளும் ஏவலுமிருப்பினும் பயன் யாது? (சிறிதுமில்லையாதலின்) நீ மறந்தாயினும் அன்பைக் கைவிடாதொழுகுக எ - று.

இதனை, குறு அன்புடைமை

"அன்பீனு மார்வ முடைமை யதுவீனு - நண்பென்னு நாடாச் சிறப்பு.
அறத்திற்கே யன்புசார் பென்ப வறியார் - மறத்திற்கு மஃதே துணை
புறத்துறுப் பெல்லா மெவன் செயயும் யாக்கை - யகத்துறுப் பன்பி லவர்க்கு.
அன்பின் வழிய துயிர்நிலை யஃதிலார்க்கு - கென்புதோல் போர்த்த வுடம்பு."—என்பதனானுணர்க. (௨௨)

வந்த விருந்து மலராத வதன நோக்கு முன்குழையு
மந்த வடைவா லகத்தன்பை யலர்ந்த முகத்தால் வெளிப்படுத்திச்
சந்த மணிவா யினுந்தோன்றச் சற்றும் வஞ்சங் கலவாமே
யுந்துஞ் சுவையின் மொழியென்று முரைத்தல் வேண்டும் பயன்வேண்டின்.

(இ - ள்.) (இலவாழ்வோர்) பயன்பெறவேண்டின், உள்ளான நேசத்தை நகைமுகத்தாற் காட்டி, அழகிய நிறந்தங்கிய வாயில் (இன்சொல்) தோன்றச் சிறிதும் வஞ்சகமின்றி மதுரமாகிய உபசாரவார்த்தையை யெப்பொழுதுஞ் சொல்லவேண்டும். (அன்றி) மலர்ச்சியில்லாத (சுடு) முகங்காட்டினால், பார்க்குமுன் முகம் வாடிப்போவார்கள். எ - று.

இச்செய்யுளால் வருவிருந் துபசரியென்றும் நன்மொழி யுரையென்றுங் கூறியதாம்.

இதனை, குறு விருந்தோம்பல்

"அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து - நல்விருந் தோம்புவா னில்.
மோப்பக் குழையு மனிச்ச முகந்திரிந்து - நோக்கக் குழையும் விருந்து."—என்பதனானும்,

குறு இனியவைகூறல்.

"இன்சொலா லீர மளைஇப் படிறிலவாஞ் - செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்.
சிறுமையு ணீங்கிய வின்சொன் மறுமையு - மிம்மையு மின்பந் தரும்."—என்பதனானும்,

ஏலாதி

"இன்சொன் மலர்ச்சி யிடமினிதூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல்—மென்சொல்
முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து."—எனபதனானுமுணர்க (௨௩)

பயன்கா ரணத்தைக் குறியாமற் பரிந்து காலத் தாற்செய்த
நயனுஞ்சேர் நன்றி சிறிதேனு நாடி னதற்கோ ரளவில்லை
பயன்கா ரணத்தைக் குறித்தினையும் பதத்திற் புரிந்த நன்றியையும்
வியன்பூ தலத்திற் பெரிதாக விரும்பி மதித்தல் வேண்டுமால்.

(இ-ள்) எதிருதவி கருதாமல் ஆபத்துக்காலத்தில் ஒருவர் மனமிரங்கிச் செய்த நன்மை பொருந்திய உதவி சிறிதென்றாலும், ஆராயுமிடத்தில் அவ்வுபகாரத்திற்கோர் அளவில்லையாகும் எதிருதவி குறித்தே செயினும் ஆபத்திற் குதவினபடியால் அந்நன்றியையும் பெரிய பூவுலகத்திற் பெரிதாக எண்ணி மதித்தல்வேண்டும். எ-று.

இதுமுத லிரண்டு செய்யுள்களால் நன்றிமறவாதேயெனக் கூறியதாம்.

இதனை, ஷை செய்ந்நன்றியறிதல்.

"செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்-வானகமு மாற்ற லரிது.
காலத்தி னாற்செய்த நன்றி சிறிதெனினு-ஞாலத்தின் மாணப் பெரிது
பயன்றூக்கார் செய்த வுதவி நயன்றூக்கி-னன்மை கடலிற் பெரிது."—என்பதனானுணர்க (௨௪)

நன்றி புரிந்தோர் மற்றொருகா லனைவைகள் புரிந்தா ராயிடினு
மொன்று முதவி யேமதித்திட் டோம்பா நவையை மறந்தவரை
யென்று மறவா திருந்திடுக விகப்பிற் கருவான மறையோரைக்
கொன்று திரிவோர் பிழைசிறுகக் குன்ற மெனவே பிழைபெருகும்.

(இ-ள்) (அவ்வாறு) நன்றிசெய்தவர்கள், பின்னொருகாலத்தில் தீமைகள் செய்தார்களாயினும், அவர்கள் செய்திருக்கின்ற நன்றியையே மதித்துயர்த்தி, அத்தீமைகளை மறந்து அவரை என்றும் வியக்கக்கடவாய். (ஏனெனில்) செய்ந்நன்றி மறந்த (பாவத்) தால், கருவழித்தல், கோவதை, பிரமகத்தி (முதலியன) செய்து திரிவோருடைய பாவமுஞ் சிறுகும்படி, பழியானது மலைபோலப் பெருகும். எ-று.

இதனை, ஷை, ஷை.

"எழுமை யெழுபிறப்பு முள்ளுவர் தங்கண்-விழுமந் துடைப்பவர் நட்பு
கொன்றன்ன வின்னா செயினு மவர்செய்த-வொன்றுநன் றுள்ளக் கெடும்.
எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை-செய்ந்நன்றி கொன்ற மகற்கு."
எனபதனானும்,

புறநானூறு.

"ஆன்முலை யறுத்த வறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருவுசிதைத் தோர்க்கும்
பார்ப்பார்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவே
நிலம்புடை பெயர்வ தாயினு மொருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென

வறம்பா டின்றே யாயிழை கணவ
காலை யந்தியு மாலை யந்தியும்
புறவுக் கருவன்ன புன்புல வரகின்
பாற்பெய் புன்கந் தேனொடு மயக்கிக்
குறுமுயற் கொழுங்குடு கிழித்த வொக்கலோ
டிரத்தி நீடிய வகன்றலை மன்றத்துக்
கரப்பி லுள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி
யமலைக் கொழுஞ்சோ றார்ந்த பாணர்க்
ககலாச் செல்வ முழுவதுஞ் செய்தோ
னெங்கோன் வளவன் வாழ்க வென்றுநின்
பீடுகெழு நோன்றாட் பாடே னாயிற்
படுபறி யலனே பல்கதிர்ச் செல்வன்
யானோ தஞ்சம் பெருமவிவ் வுலகத்துச்
சான்றோர் செய்த நன்றுண் டாயி
னிமயத் தீண்டி யின்குரல் பயிற்றிக்
கொண்டன் மாமழை பொழிந்த
நுண்பஃ றுளியினு மாழிய பலவே.''—என்பதனானுமுணர்க (உரு)

ஆக்க மொடுமைந் தரையளிக்கு மவற்றை மருமான வழிக்குநிலை
யாக்கு மனைய நடுநிலையை யடைந்தோர் முதனூ லறிவொப்ப
நோக்கு மதுசெய் யாதிகப்பி னுனித்தூ ரருவி னமைத்தபயன்
போக்கி யிடையே பயன்வேறு பொருந்தா பொருந்தும் பெரும்பிழையே.

(இ - ள்) (நடுவுநிலைமையானது) செல்வவிளைவையும் புத்திரப்பேற்றையுங் கொடுக்கும் அவற்றைப் பரம்பரையாக நிலைபெறவுஞ் செய்யும் (ஆதலின், கேடு அல்லது ஆக்கங்கருதி) அவ்வகையநடுவு நிலைமையை நண்பாமுதலிய முத்திறத்தவரில் (யாவரிடத்தும்) ஒப்பநோக்குதல் செய்யாதுவிடின், பெருங்குற்றம் பொருந்தும் கருவில் நுட்பமாக அமைத்த அமைப்பு ஒருவரையும் விடாது. எ - று

இச்செய்யுளால் ஓரஞ்சொல்லேல் எனக் கூறினதாம்.

இதனை, ஷை நடுவுநிலைமை.

"செப்ப முடையவ னாக்கஞ் சிதைவின்றி-யெச்சத்திற் கேமாப் புடைத்து.
கேடும் பெருக்கமு மில்லல்ல நெஞ்சத்துக்-கோடாமை சான்றோர்க் கணி.
கெடுவல்யா னென்ப தறிகதன் னெஞ்சம்-நடுவொரீஇ யல்ல செயின்
சமன்செய்து சீர்தூக்குங் கோல்போ லமைந்தொருபாற்-கோடாமை சான்றோர்க் கணி,''—என்பதனானும்,

சூளாமணி

"கோதி லாதவர் மக்கண் மக்களு
மேதி லாரவ ரியைந்த தீமையா
லாத லாற்றமர்ப் பிறர்க ளென்பதுங்
கோதி லாதவர்க் குள்ள தில்லையே.''—என்பதனானுமுணர்க. (உசு)

இல்வி னிருந்தே யைம்பொறியு மெல்லா நுகருங் காலத்துஞ்
செல்லு மழியெய் மொழிமனத்தைச் செல்லா தடக்கி னெழுபிறப்பு

நல்ல பயனை யாமெனை நல்ல வினைதீ வினையாகா
வல்ல லறுக்கு மறக்கடவு ளடுக்கு மமர ருலகு றுமே.

(இ - ள்) (இல்வாழ்வோன்) தன் வீட்டிலிருந்தே ஐம்பொறிகளாலும் எல்லாப்போகங்களையும் அநுபவிக்குங்காலத்தில், மன வாக்குக் காயங்களைத் தத்தம் போக்கிற போகவிடாது அடக்கவல்லனாயின், எழுபிறவிகளிலும் (அவன் செய்வனவெல்லாம்) நன்கேயாம். நல்வினை தீவினையாக மாட்டாது. (அவன்) துன்பத்தையொழிக்குந் தருமதேவதை பொருந்திய தேவலோகத்தை யடைவான். எ - று.

இச்செய்யுளால் அடங்கியிரு என்க கூறினதாம்

இதனை, ஷ அடக்கமுடைமை

"நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற-மலையினு மாணப் பெரிது.
ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி-னெழுமையு மேமாப் புடைத்து.
கதங்காத்துக் கற்றடங்க லாற்றுவான் செவ்வி - யறம்பார்க்கு மாற்றி னுழைந்து"—என்பதனானும்,

அறநெறிச்சாரம்

"இந்திரியக் குஞ்சரத்தை ஞான விருங்கயிற்றாற்
சிந்தனைத்தூண் பூட்டித் திறம்பறப்பந் திப்பா
ரிம்மைப் பயனு மினிச்செல் கதிப்பயனுந்
தம்மைத் தலைப்படுப் பார்."—என்பதனானுமுணர்க. (உஎ)

தாழ்ந்த வருணத் துதித்தவருந் தக்கோ ராவ ரொழுக்கத்தால்
வீழ்ந்த வொழுக்கத் தாரிழிவா மேலாம் வருணத் துதித்திடினுஞ்
சூழ்ந்து துணையாஞ் சிறப்பின்பஞ் சுரக்கு மதனு லுயிர்தனினும்
வாழ்ந்த வொழுக்க மோம்பிடுக வழுக்கி னிடும்பை யேதருமே.

(இ - ள்) இழிந்தகுலத்திற் பிறந்தவரும் நல்லொழுக்கத்தினால் உயர்குலத்துதித்தோராவர் உயர்குலத்திற் பிறந்தவரும் ஒழுக்கக்குறைவினால் இழிகுலத்திற் பிறந்தோராவர் ஒழுக்கமேகைவிடாதொழுகின் போகமுமுத்தியுந் தருந் தவறுங் கைவிடின் துன்பந் தருவதற்குந் துணையாம் ஆதலின், நல்லொழுக்கத்தை உன்னுயிரினும் அரிதாகப் பாதுகாக்கக்கடவாய். எ - று

இச்செய்யுளால் நன்னடைவிடாதே என்க கூறியதாம்

இதனை, ஷ ஒழுக்கமுடைமை.

"ஒழுக்கம் விழுப்பந் தரலா னொழுக்க - முயிரினு மோம்பப் படும்.
பரிந்தோம்பிக் காக்க வொழுக்கந் தெரிந்தோம்பித்-தேரினு மஃதே துணை.
ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க-மிழிந்த பிறப்பாய் விடும்
நன்றிக்கு வித்தாகு நல்லொழுக்கந் தீயொழுக்க-மென்று மிடும்பை தரும்."—என்பதனானும்,

ஆசாரக்கோவை

"பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு
நிலக்கிழமை மீக்கூற்றங் கல்விநோ யின்மை
யிலக்கணத்தா லிவ்வெட்டு மெய்துப வென்று
மொழுக்கம் பிழையா தவர்"—என்பதனானுமுணர்க. (உஅ)

காமங் குறித்துப் பாவத்திற் கலந்த பேதை யாருள்ளும்
வாமங் கனிந்த பிறன்மனையை மதிக்கும் பேதை யோரயத்தாற்
றாமங் கிழக்கு மறம்பொருள்போற் சாற்று மின்ப முறாரதனாற்
றேமங் குதிப்பப் பிறன்மனைவி தோள்கா முறுதல் சூழேலே.

(இ - ள்) காமமயக்கத்தால், பிறமாதர் போகத்தை யிச்சிக்கும் அறிவிலிகளிலும், அழகுமிகுந்த பிறனுடைய மனைவியின் போகத்தையிச்சிக்கும் அறிவில்லாதவர், தாம் அப்பொழுது அறத்தையும் பொருளையும் இழப்பதுபோலவே, அச்சத்தினால் அப் புணர்ச்சி யின்பத்தையும் அடையாதவராவர் அதனால் குற்றமுண்டாகும்படி நீ பிறன்மனைவி தோணலத்தை விரும்புதல் மனத்திற் கொள்ளாதே எ - று

இதுமுதல் இரண்டு செய்யுளால், பரதாரபோகம் விரும்பாதே எனக் கூறியதாம்.

இதனை, ஷை பிறனில்விழையாமை

"பிறன்பொருளாட் பெட்டொழுகும்பேதைமை ஞாலத்-தறம்பொருள்கண்டார்கணில்.
அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை - நின்றாரிற் பேதையா ரில்."—என்பதனானுணர்க. (௨௯)

பகையே பழியே பாவமே பயமே நான்குந் தினங்கொடுக்குந்
தகையார் பெருமை முழுதழிக்குஞ் சாரந்த பிறனில் விழைவொழிந்தோர்
தொகையா ரறமே பொருளின்பந் தோலாப் பெருமை யொடுமேவாழ்வா
ரகையா லதனைக் கனவிடத்து நவிற்றி யிடினுந் தீங்காமே.

(இ - ள்) மனத்திற் கொள்ளாது வெளிநகைப்பாகப் பேசினாலும், நனவிலன்றிக் கனவில் நினைத்தாலும் தீமை விளைவிக்கும் பரதாரவிச்சையானது யாவர்க்கும் பகை பழி பாவம் அச்சங்களை யுண்டுசெய்து பெருமையைக்கெடுக்கும். அஃதில்லாமையானது அறம்பொருளின்பங்களை யுண்டுசெய்து பெருமையுறச்செய்யும். எ - று.

இதனை, ஷை, ஷை.

"எனைத்துணைய ராயினு மென்னாந் தினைத்துணையுந்-தேரான் பிறனில் புகல்
பகைபாவ மச்சம் பழியென நான்கு-மிகவாவா மில்லிறப்பான் கண்.
பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு - கறனொன்றோ வான்ற வொழுக்கு"—என்பதனானும்,

நாலடியார்

"காணிற் குடிப்பழியாங் கைப்படிற்றன் கால்குறையு
மாணின்மை செய்யுங்கா லச்சமா—நீணிரயத்
துன்பம் பயக்குமாற் றுச்சாரி நீகண்ட
வின்ப மெனக்கெனைத்தாற் கூறு.

அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றாரந் நச்சுவார்ச் சேரா—பிறன்றாரந்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்"—என்பதனானுமுணர்க. (௩௰)

வெறுப்ப வொருவன் காரணத்தான் மிக்க மடத்தாற் புரிபிழையைப்
பொறுப்பி னதுவே பேறாமாம் புகழு நிறையு மிகவளருங்

உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்

கறுபபொன றறியா வறிவினாகள கருததின மகிழசசி யுளவாரு
மொறுபபின வருவ தொனறிலலை யதனுற பொறுமை யுயிாததுணையாம.

(இ - ள்.) ஒருவன வெறுக்குமபடி (அசூயைமுதலிய) காரணத்தாலாயினும், மிக்க அறிவீனததாலாயினும, செயத பிழையைத தணடிததலால வரும்பலனில்லை. பொறுததுககொண்டால, பெருநதருமமாம, கீாததியும மாட்சியும் பெருகிவளரும், கோபமெனபதைச சிறிது மறியாத சாதுககள மனததிற களிபபுணடாகும; ஆதலால பொறுமையை உயிாததுணையாகக கொளளககடவாய. எ - று

இசசெயயுளால சாநதனுகவிரு எனககூறியதாம

இதனை, ஷை பொறையுடைமை

'அகழ்வாரைத தாஙகு நிலமபோலத தமமை யிகழவாாப பொறுதத றலை
இனமையு ளின்மை விருநதொரால வனமையுள-வனமை மடவாாப பொறை.
நிறையுடைமை நீஙகாமை வேணடிற் பொறையுடைமை-போறறி யொழுகப படும்.
ஒறுததாாக கொருநாளை யினபம பொறுததாாககுப்-பொனறுந துணையும புகழ்.
துறந்தாரிற றூயமை யுடைய ாிறநதாாவா-யினனுசசொ னோககிற பவா"—எனபத னுனும,

அறநெறிச்சாரம்

'எளிய பிறருரைககு மினனுசசொற றனனெஞ்சிற
கொளளிவைத தாறபோற் கொடிதெனினு—முளளி
யறிவெனனு நீரா லவிததடகக லாறறிற
பிறிதொனறும வேணடா தவம"—என்பதனுனுமுணாக (௫௧)

ஒழுககா றழிககும பொருளனைதது மொழிககு மிமமை மறுமையினும
வழுககா றனைதது முறுவிககு மருஙகு ளாககுங் கேடுறுக்கு
மிழுககா றுடைய வெரிநிரையத தேயககு மிதனு லெமகணடா
வழுககா றுய பெருமபகையை யமரா ரிடததும புரியறக.

(இ - ள்) எமகணடா! பொறாமைக் குணமானது (ஒருவனுடைய) நல லொழுககததை யொழிககும; செலவபபெருக்கு முழுவதையு மழிககும, இமமைச சுகததையும மறுமைககதியையுந தீமைசெயயும, அவனை யடுததவாகளையுஙகெடுககும, துனபமுடைய தீமயமான நரகததிற பொருததும. இககாரணஙகளால, பொறாமை யாகிய பெரியபகையைப் பகைவரிடததிலேயுங கொளளாது விடுக. எ - று.

இசசெய்யுளால பொறாமைகொளளாதே எனககூறியதாம

இதனை, ஷை, அழுககாறாமை.

"ஒழுககாறாக கொளக வொருவனறன னெஞ்சத - தழுககா றிலாத வியலபு
அறனுககம வேணடாதா னெனபான பிறனுககம - பேணு தழுககறுப பான
கொடுபப தழுக்கறுப்பான சுறற முடுப்பதூஉ - முணபதூஉ மினறிக கெடும
அழுககா றெனவொரு பாவி திருச்செறறுத - தீயுழி யுயதது விடும."—எனபத னுனும,

புறநானூறு.

"பலசான றீரே பலசான றீரே
கயன்முள ளன்ன நரைமுதிா திரைகவுட
பயனின மூப்பிற் பலசான றீரே
கணிச்சிக கூாமபடைக கடுநதிற லொருவன

பிணிக்குங் காலே யிரங்குவிர் மாதோ
நல்லவை செய்த லாற்றீ ராயினு
மல்லவை செய்த லோம்புமி னதுதா
னெல்லாரு முவப்ப தன்றியு
நல்லாற் றுப்படூஉ நெறியுமா ரதுவே."—எனபதனுமறிக (௯௨)

படுமுன பொருட்குப புதுவெள்ளம பழைய நீரை யுடைபபதுபோற
கெடுதி பயககுங் குடிகெடுக்குங் கெடாத பொருநதுன பழுமைவிளைக்கும
வடுமிக வியன்ற பழியென றும வளாககு மதனன் மறுமையினு
நடுவு நிலேயிற றிரிநதொருவா ரனபொன கவரக கருததனைலேல.

(இ - ள்.) புதியவெள்ளமானது நிலையாயுள்ள நீரையுங் கெடுப்பதுபோல, (ஒருவரிடத்து அபகரித்த பொருள்) உண்டாகிய பழைய பொருளையுந் தொலைத்துக கெடுதிசெய்யும, வமிசத்தை யழிக்கும; நீங்காக் கடுந்துயரையும விளையச்செய்யும், மறுமைப் பயனையழிக்கும, குற்றமிக்கமைந்த பாவத்தை யெககாலமும வளரச்செய்யும் (ஆதலால) நடுவுநிலைமை தவறிப் பரசொத்தை யபகரிக்க மனத்திற கருதாதே. எ - று.

இசசெய்யுளாற பிறர்பொருள கவராதேயெனக கூறியதாம

இதனை, ஷ வெஃகாமை.

"நடுவின்றி நனபொருள் வெஃகிற குடிபொன்றிக - குற்றமு மாங்கே தரும்.
சிற்றின்பம் வெஃகி யறனல்ல செய்யாரே - மற்றின்பம வேண்டு பவா
அஃகாமை செலவத்திற் கியாதெனின வெஃகாமை - வேண்டும் பிறனகைப் பொருள."—என்பதனுனும,

சாந்திபுராணம்.

"தானத்திற் குரித்து மன்று தானினைந்தீயிற் சால
ஈனத்தி லுய்கக நிற்கு மெச்சத்தை யிழக்கப் பண்ணும
மானத்தை யழிககுந் துயக்கின் மாற்றலாக் கடிமை யாககும்
ஊனத்தீ நரகத் துயககும பிறர்பொரு ளுவக்கின வேந்தே"—எனபதனு முணாக. *(௯௩)

கேளிா பிரிவா நட்பினராய்க கெழுமு வாரு மிலராவா
மூளும வடுச்சொ னேராக மொழிவ ரெவரு மாதலினு
ஞளு மறத்தைக் கொன்றனந்த நவைகள் செயினு மெதிரின்று
மாள வுரைசெய் யினுஞ்செய்யேன் மைந்தா மறந்தும புறங்கூறல.

(இ - ள்) மகனே! (ஒருவன்) நாடோறும் தருமத்தையழித்துப் பல பாவங்களைச்செய்தாலும் (ஒருவன்) முன்னின்று உயிா விழும்படி பழித்துரைத்தாலும மறந்தும புறங்கூறாதே (அவ்வாறு கூறின்.) உறவினா பிரிவா நட்பினராக விளங்குவோர்கள அன்னியராவார்கள, அவாகள யாவரும மூளுகின்ற வடுமொழியை உன்னை யெதிரிட்டுரைப்பார்களாதலால எ - று.

இசசெய்யுளாற பிறரைப் பழித்துரையாதே எனககூறியதாம்

இதனை, ஷ புறங்கூறாமை

"அறனழீஇ யல்லவை செய்தலிற றீதே - புறனழீஇப பொய்தது நகை [சொல்.
கண்ணின்று கண்ணறச் சொல்லினுஞ் சொல்லற்க-முன்னின்று பின்னோக்காச
பிறனபழி கூறுவான றனபழி யுள்ளுந் - திறந்தெரிந்து கூறப படும்.

பகச்சொல்லிக் கேளிர் பிரிப்பர் நகச்சொல்லி - நட்பாட லேற்றா தவர்." — என் பதனாலும்,

பழமொழி.

"பண்டின ரென்று தமரையுந் தமரையுங்
கொண்ட வகையாற் குறைதீர நோக்கியக்கால்
விண்டவரோ டொன்றிப் புறனுரைப்பி னஃதால்
லுண்டவிற் றீயிடு மாறு" — என்பதனாலுமறிக. (கூச)

தகைமை யுடைய வறிஞர்கள் சால வெறுப்பச் செயுமன்றி
நகையும் விளைக்கும் வெளிற்றறிவை நவிற்று நன்கு மதிப்பொழிக்கு
மிகைசெய் விழுப்பந் தபுமதனால் விழைவு மறமா திகள்பயவா
வகையி னுரைக்கும் பயனில்சொன் மைந்தா வுரையே லுரையேலே.

(இ - ள்) மைந்தனே! நுண்ணறிவாளர் மிகவெறுக்கச் செயும், அல்லாம லும் நகையையும் விளைக்கும், புல்லறிவை வெளிப்படுத்தும்; நன்மதிப்பைக்கெடுக் கும்; மேம்பாடு செய்கின்ற ஆசையை யழிக்கும். ஆனபடியால் அறம்பொருள் இன்பங் களை யிழக்கும் வகையிலுரைக்கும் பயனில் சொற்களைச் சொல்லற்க; சொல்லற்க. எ-று.

இச்செய்யுளால் வீண்மொழி கூறாதே யெனக் கூறியதாம்.

இதனை, ஷை, பயனில சொல்லாமை.

"பல்லார் முனியப் பயனில சொல்லுவா - னெல்லாரு மெள்ளப் படும்.
நீர்மை சிறப்பொடு நீங்கும் பயனில - நீர்மை யுடையார் சொலின்.
பயனில்சொற் பாராட்டு வானை மகனெனல் - மக்கட் பதடி யெனல்." — என் பதனாலும்,

ஏலாதி

"மையேய தடங்கண் மயிலன்ன சாயலாய்
மெய்யே யுணர்ந்தவர் தாமுரைப்பர் — பொய்யே
குறளை கடுஞ்சொற் பயனில்சொ னான்கு
மறலியின் வாயினவா மற்று." — என்பதனானுமறிக. (கூரு)

வேறு.

பாயபல் பகைக்குந் தப்பிப் பாரிடை யுய்ய லாகு
மேயவெக் கதிசென் றாலும் விளிதரா தூங்கு சென்றே
யாயநன் றனைத்துங் கொன்றங் கருந்துயர் பலவு நல்குந்
தீயவல் வினையின் யாதுஞ் செய்யற்க வேம கண்டா.

(இ - ள்) ஏமகண்டா! உலகத்தில் எவ்வகைப்பட்ட பகைகட்குந் தப்பிப் (பிழைத்தாலும்) பிழைக்கலாகும் (ஆனால், தீவினையாகிய பகைக்குத் தப்பிப் பிழைத்த லரிது.) எப்பிறப்படைந்து எங்குற்றாலும் அஃதொழியாது, அங்கே சென்று நன்மை யை முற்றுமழித்துக் கொடிய துன்பங்களைக் கொடுக்கும் (ஆதலின்) யாதொரு தீங் கையும் (எவர்க்கும்) செய்யவேண்டாம் எ-று.

இச்செய்யுளால் தீமை செய்யற்க எனக் கூறியதாம்.

இதனை, ஷை, தீவினையச்சம்.

"தீயவை தீய பயத்தலாற் றீயவை - தீயினு மஞ்சப் படும்.
எனைப்பகை யுற்றாரு முய்வர் வினைப்பகை - வீயாது பின்சென் றடும்

தன்னைத்தான் காதல னாயி னெனைத்தொன்றுந் - துன்னற்க தீவினைப்பால்."
என்பதனானும்,

நாலடியார்.

"பல்லாவு ளுய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையு மன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு"—என்பதனானும்,

குண்டலகேசி.

"வாயு வினை நோக்கியுள மாண்டவய நாவா
யாயுவினை நோக்கியுள வாக்கையது வேபோற்
றீயவினை நோக்குமியல் சிந்தனையு மில்லாத
தூயவினை நோக்கியுள துப்புரவு மெல்லாம்"—என்பதனானு மறிக. (௬௬)

ஊருணி நடுவூர் நின்ற வொண்பழத் தருவும் போலப்
பேருறு முயற்சி தன்னாற் பெருக்கிய பொருள்க ளெல்லாஞ்
சீருற யாவர் மாட்டுஞ் செலுத்திமொப் புரவி னிற்றி
யாருமொப் புரவாற் கேடுண் டாயினு மதுவு நன்றே.

(இ - ள்.) நீ பெருமுயற்சியாற் றேடிய பொருள்களை யெல்லாம் (பலர்க்கும் பயன்பெறும்படி) ஊர் நடுவிலிருக்குந் தடாகமும், ஒள்ளிய பழத்தையுடைய மரமும் போலச் சிறப்புப்பொருந்த எல்லோரிடத்திலும் உதவி,முறைமைப்படி நிறக்கக்கடவை. பொருந்திய நலம் விளைப்பதாற் கேடுண்டாயினும் (பின்னர் நலம் விளைக்கு மாதலின்) அதுவும் நல்லதேயாம். எ - று.

இச்செய்யுளாற் பரோபகாரஞ் செய்ய எனக்கூறியதாம்.

இதனை, ஷை, ஒப்புரவறிதல.

"தாளாற்றித் தந்த பொருளெல்லாந் தக்கார்க்கு - வேளாண்மை செய்தற் பொருட்டு
ஊருணி நீர்நிறைந் தற்றே யுலகவாம் - பேரறி வாளன் றிரு
பயன்மர முள்ளூர்ப் பழுத்தற்றாற் செல்வ - நயனுடை யான்கட் படின்
ஒப்புரவி னல்வருங் கேடெனி னஃதொருவன்-விற்றுக்கோட் டக்க துடைத்து."
என்பதனானும்,

நீதிநெறிவிளக்கம்

"கண்ணோக் கருமபா நகைமுகமே நாணமலரா
வின்மொழியின் வாய்மையே தீங்காயா—வண்மை
பலமா நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு"—என்பதனானுமறிக. (௬௭)

இரப்பவன் வாளா வேக விலனென்று மெவ்வங் கூறு
திரப்பினை நிரப்ப னன்று மிதனினன் றுவ தாகு
மிரப்பவ னிலனென் றூர வியம்பிய வெவ்வஞ் சொலலென்
றிரப்பினும் பிறர்பாற் கூறு திரக்கமோ டிதன மைந்தா.

(இ - ள்) மைந்தனே! (உன்னிடத்தில் வந்து) யாசித்தவன் வீணாய் [வெறுங்கையனாய்]ச் செலல, (அவனை நோக்கி நீயாசித்ததை) உடைத்தாயில்லை

னென்னுந் துக்ககரமாகிய மொழியைச் சொல்லாமல், அவன் யாசித்ததைக் கொடுத்தல் உத்தமம்; யாசித்தவன் தானறியேனென்று கூறிய சொற்களைச் சொல்லுகவென்று (உன்னை) வருந்திக்கேட்பினும் (அதனைப்) பிறரிடஞ் சொல்லாமல் அவன்பேரிற் கருணையோடு கொடுத்தல் மிகவுத்தமம் (எ - று)

இதுமுதல் மூன்றுசெய்யுள்களால் உதாரவானுக்கவிரு எனக்கூறியதாம். (௫௮)

அருத்தியி னில்லெனன் றுழு னளித்தலு மில்லென்ன றப்பா
லுரைத்தில னுக்ரசால் வுதவலு மேறுகினற் றனும்
வருத்துற வில்லென னுமை வழங்கிட னிசைவில செல்வம்
பொருத்தலு மொன்றின் ஞைமற புகழ்மிக விளங்கி நிற்கும்.

(இ - ள்) வறுமையுடையோன் (உதவுக) என்றுரையாமுன்னர் (குறிப்பறிந்து) ஆசையுடன்கொடுத்தலும், (தனபாலிரந்தவன) பிறரிடத்துஞ்சென்று எளியே னென்று யாசியாவகையாகக் கொடுத்தலும், இரந்தவனே (தன்னிடம்)இரந்தோருக்கு வருத்தமுறும்படி இல்லையென்னாது கொடுக்கும்படிபெருஞ்செல்வத்தை யளித்தலும், ஒன்றற்கொன்று (முறையே) கீர்த்திமிக விளங்கிநிற்கும் எ - று. (௫௯)

நலமிகு செல்வம் பெற்று நல்குர வினைக் காத்த
விலனற மாதி சீர்த்தி யில்லெனப் பிறர்சொ லெல்லை
வலனுரைக் கஞ்சி யேனும் வறியனை யில்லென றெள்ளா
தலர்புகழ் பயனும் வேண்டி னுகலையு மளிக்க மைந்தா.

(இ - ள்,) மகனே! பரந்தகீர்த்தியும் புண்ணியமும் வேண்டுமாயின், நன்மை மிக்க செல்வத்தையடைந்தும் தரித்திரனைக்காத்திலன், அறம் பொருள் இன்பங்களாலாகிய கீர்த்தியடைந்திலன்; என்று பிறர் சொல்லுகின்ற வலிய வசைமொழிக்குப் பயந்தாயினும் இரப்போனை யிவன் வறியனன்றோ வென்றிகழ்ந்திடாமல் உன் சரீரத்தையும் (கேட்பின்) கொடுக்கக்கடவாய் எ - று

மேல் மூன்று செய்யுள்களின்கருத்தை, ஷை, ஈகை.

"நல்லா றெனினுங் கொளறீது மேலுலக - மில்லெனினு மீதலே நன்று.
இலனென்னு மெவ்வ முரையாமை யீதல் - குலனுடையான் கண்ணே யுள."—

என்பதனாலும்,

புறநானூறு

"தெண்கடல் வளாகம் பொதுமை யின்றி
வெண்குடை நிழற்றிய வொருமை யோர்க்கு
நடுநாள் யாமத்தும் பகலுந் துஞ்சான்
கடுமாப் பார்க்குங் கல்லா வொருவற்கு
முண்பது நாழி யுடுப்பவை யிரண்டே
பிறவுமெல் லாமோ ரொக்குமே யதனாற்
செல்வத்துப் பயனே யீதல்
றுய்ப்பே மெனினே தப்புந பலவே"—என்பதனானுமறிக (௬௦)

சாதலவர் தடுத்த காலுந் தனக்கொரு சாத லின்றிப்
பூதல மிறக்குங் காறும் புகழுடம் பிருக்கு மந்தக்
கோதறு புகழின் யாக்கை கொடையினற் செல்வங் கூர
வாழ்தலை யுடையா ரன்றே வானமும் வணக்கு நீரார்.

(இ - ள்) (பூதவுடம்பழிய) மரணம்வந்து நேர்ந்த விடத்தும் தனக்கோரழி வின்றி, பூவுலகமிருக்குமெல்லையும் புகழுடம்பானது விளங்கும் (ஆதலின்) அந்தப்புக ழுடம்பைத் தமதீகையாற் சிறப்புற வளர்த்துவாழ்பவர்களே (மண்ணுலகத்தாரே யன்றி) விண்ணுலகத்தாராலும் வணங்கப்படத்தக்கவர்கள் எ - று.

இச்செய்யுளால் கீர்த்தியைத்தேடு எனக்கூறியதாம்.

இதனை, ஷை, புகழ்

"ஈத லிசைபட வாழ்த லதுவல்ல - தூதிய மில்லை யுயிர்க்கு
ஒன்றா வுலகத் துயர்ந்த புகழல்லாற் - பொன்றாது நிற்பதொன் றில்
நிலவரை நீள்புக ழாற்றிற் புலவரைப் - போற்றாது புத்தே ளுலகு.
நத்தம்போற் கேடு முளதாகுஞ் சாக்காடும் - வித்தகர்க் கல்லா லரிது."—என்பத னானும்,

சூளாமணி

"ஒருவனை யிரண்டு யாக்கை யூன்பெய்து நரம்பு போர்த்த
வுருவமும் புகழு மென்றாங் கவற்றினு ளூழின் வந்து
மருவிய யாக்கை யிங்கே மாய்ந்திறு மற்ற யாக்கை
திருவமர்ந் துலக மேத்தச் சிறந்துபின் னிற்கு மன்றே"—என்பதனானு மறிக. (சுக)

பொருட்பால் - அரசியல்.

உரைசெய் மறத்தி னாற்ற லொருகுடை நிழற்ற முந்நீர்த்
தரைமுழு தாள வேண்டிற் றகைபெறு மமைச்சு நாடு
புரையறு மரணே மிக்க பொருள்படை நட்பென் றாறும்
வரைசெயப் படாத யாக்கை யுறுப்பென மதித்துக் கோடி

(இ - ள்.) சொல்லுகின்ற தருமசாஸ்திரப்படி கடல்சூழ்ந்த உலகமுழுவதை யும் ஒருகுடைக்கீழ் அரசுசெய்யவேண்டுமாயின், தகுதியாகிய அமைச்சும் நாடுங்குற்ற மற்ற அரணும் மிக்கபொருளும் படையும் நட்புமென்று சொல்லப்படும் ஆறும் அள விடப்படாத உன் சரீரத்தினுறுப்பைப்போலப் பேணிக் கொள்வாயாக எ - று.

இதுமுதல் இருபத்தைந்து அதிகாரங்களாலும் அறுபது செய்யுள்களாலும் அரசியல் கூறுகின்றார்.

இதுமுதல் நான்கு செய்யுள்களால் இராசாங்கம் பேணு எனக்கூறியதாம்

இதனை, ஷை, இறைமாட்சி

"படைகுடி கூழமைச்சு நட்பர ணாறு
முடையா னரசரு ளேறு"—என்பதனானுணர்க (சுஉ)

வினையினஞ் சாமை நிற்றல் வினைதொறுங் களித்தல் செய்யும்
வினையிடை மனமேற் சேறல் விளங்கிய வறிவு வல்லே
வினையினை முடித்த லாண்மை வெங்கொலை யாதி நீக்கல்
வினைவலா மான மற்றும் வேந்தருக் கியல்பு மைந்தா.

(இ - ள்) தொழில்செய்தலில் அஞ்சாதிருத்தலும், தொழிலாளாகிதலும், செய்தொழிலில் மனவெழுச்சியும், விளக்கமாகிய (கலவி) அறியும், விரைவிற்றொழினை

முடித்தலும், (பின்வாங்காத) ஆண்டகைமையும், வெவ்விய கொலைமுதலிய தீமைகளை நீக்கலும், தொடுத்த கருமத்தை விடாத மானமும் ஆகிய இவையாவும் அரசர்களுக் கியற்கையாம். எ - று

இதனை, ஷை, ஷை,

"அஞ்சாமை யீகை யறிவூக்க மிந்நான்கு - மெஞ்சாமை வேந்தற் கியல்பு
தூங்காமை கல்வி துணிவுடைமை யிம்மூன்று - நீங்கா நிலனாள் பவற்கு
அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா - மான முடைய தரசு"—என்பதனாலுணர்க. (௪௩)

குடிதளர் வுற்ற காலைக் கொள்பொரு ளாறி லொன்றும்
விடுவது செய்து தங்கள் விழுக்குறை முறைசொல் வார்க்குத்
தடையறக் காட்சி நல்கித் தண்ணிய வின்சொல் காட்டி
வடுவற விடுத்துச் சொல்வா ரன்மொழி பொறுத்தல் வேண்டும்.

(இ - ள்) தன்குடிகள் தளர்ச்சியடைந்தகாலத்தில் (நீதிமுறைப்படி) பெறும் ஆறிலொருகூற்றுக் கடமைப்பொருளையும் விட்டுக்கொடுத்தலும், தமது பெரிய குறைபாடுகளை முறைப்படி சொல்லி யறிவிப்பவர்களுக்குத் தடையின்றிக் காட்சிகொடுத்தலும், குளிர்ந்த இதவசனங்கூறியும், உண்மையைக் குற்றமற விடுத்துச் சொல்வோருடைய கடுஞ்சொல்லை (வெகுளாமல்) அங்கீகரித்தலும் அரசுசெய்யவேண்டும் எ - று.

இதனை, ஷை, ஷை,

"காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேல் - மீக்கூறு மன்ன னிலம். [லகு.
செவிகைப்பச் சொற்பொறுக்கும் பண்புடை வேந்தன் - கவிகைக் கீழ்த்தங்கு மு
கொடையளி செங்கோல் குடியோம்ப னான்கு-முடையானாம் வேந்தர்க் கொளி"
என்பதனாலுணர்க (௪௪)

செருவினொ டல்லார்க் கொன்று திறைகொண்டு நாடு காத்துப்
பொருளினை யீட்டிக் கள்வர் புல்லலர் சுற்ற மாதி
பருத்த லிலாமைக் காத்துப் பயிலற மாதி மூன்றின்
மருவுற விடுத்துச் செங்கோல் வளர்ப்பது மாட்சி யாமே

(இ - ள்) போர்முனையிற் பகைஞரைவதைத்து, கப்பம்வாங்கி, தன்னாட்டைப் பாதுகாத்து, பொருளைச் சம்பாதித்து, சோரர் பகைவர் சுற்றத்தார் முதலியோரால் அபகரிக்கப்படாமற்காத்து, (கடவுள் அந்தணர்வறியோர் முதலியவர்களுக்காகும்) அறத்திலும், (படையரண் முதலியவற்றைப் பேணும்) பொருளிலும், (உறைவிடம்போகநுகர்ச்சிமுதலியவற்றை வளப்படுத்தும்) இன்பத்திலும் பொருந்தச் செலவுசெய்து செங்கோலை வளர்ப்பது மாட்சிமையாம் எ - று.

இதனை, ஷை, ஷை,

"இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்த
வகுத்தலும் வல்ல தரசு"—என்பதனாலும்,

திரிகடுகம்.

"பதிமை சான்ற படையும் பலர்தொகினும்
மொய்த்துணைபு மஞ்சா வெயிலரணும்—வைத்தமைந்த
வெண்ணி லுலவா விருநிதியு மிம்மூன்று
மண்ணாளும் வேந்தற் குறுப்பு"—என்பதனாலுமறிக (௪௫)

ஐம்மை திரிவையென் னுமவையற வறநூ னீதி
மையமால் யானை பாய்மா வனப்படைத் தொழினூ லாதி
யையமே கற்றுக் கற்ற பண்பினோ டோடு நாளு
முய்யுமா றவ்வ வாயி யுரைத்தவா நிற்றல் வேண்டும்

(இ - ள்.) தருமநூல் நீதிநூல் இரத கஜ துரக பதாதிதொழினூலாகிய சகல கலைகளையுஞ் சந்தேக விபரீதமற மெல்லக்கற்று, (அவற்றைக்) கற்றறிந்தவர்களோடு நாடோறும் உச்சீவிக்கும்படி பயிற்சிசெய்து விதித்திருக்கிறபடி நடக்கக்கடவாய். எ-று.

இச்செய்யுளால் கற்றுணர்ந்தொழுகு எனக்கூறியதாம்

இதனை, குறள், கல்வி

"கற்க கசடறக் கற்பவை கற்றபின் - நிற்க அதற்குத் தக [கரு
எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ்விரண்டுங் - கண்ணென்ப வாழு முயிர்
யாதானு நாடாமா லூராமா லென்னொருவன் - சாந்துணையுங் கல்லாத வாறு"—
என்பதனானும்,

புறநானூறு

"உற்றுழி யுதவியு முறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன வுடன்வயிற் றுள்ளுஞ்
சிறப்பின் பாலாற் றாயுமனந் திரியு
மொருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளு
மூத்தோன் வருக வென்னா தவரு
ளறிவுடை யோனா றரசுஞ் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
கீழ்ப்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனு மவன்கட் படுமே"— என்பதனானுமுணர்க (௬௫).

உடல்வயத் தாருஞ் சாதி யுயர்ந்தவர் தாழ்ந்தோர்
திடமுற வுயிரி னோடு செல்லுறுங் கல்வி தம்மா
லடாதரும் பெருமை யெய்தா ரதனா லகக்கணுற்றுந்
தொடாப்பெறுங் கல்வி கல்லாத் தொழிலினை விடவே வேண்டும்.

(இ - ள்.) உடல் வயத்தாலுண்டாகுஞ் சாதியிலுயர்ந்தவரும் சாதியிற்றாழ்ந்தவரும், வலிமைபொருந்த வுயிருடன் செல்லுகின்ற கல்வியால் அடையும் பெருமையை யடையமாட்டார்கள் ஆனபடியால் உள்ளக்கண்ணாகித் தொடர்கின்ற கல்வியைக் கல்லாதிருக்குங் குணத்தைப் பரிச்சேதமாக ஒழிக்கவேண்டும். எ - று.

இச்செய்யுளால் கல்லாமையொழிக வெனக்கூறியதாம்

இதனை, குறள், கல்லாமை.

"நுண்மா ணுழைபுல மில்லா னெழினலம் - மண்மாண் புனைபாவை யற்று
மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங் - கற்றா ரனைத்திலர் பாடு."—
என்பதனானும்,

இன்னாநாற்பது

"கல்லாதா னூருங் கலிமாப் பரிப்பின்னா
அல்லாதான் சொல்லு முரையின் பயனின்னா

இல்லாதா னல்லல் விழைவினன்று வாங்கினன்று
கல்லாதான் கோட்டி கொளல்'—என்பதனானுமுணர்க. (௪௭)

வறுமையான் மடமை தன்னால் வருந்திநெஞ் சழியுங் காலை
யுறுதிசெய் துணையாங் கற்றா ருணர்வினை வளர்க்கு மென்று
மிறுதியில் லாத வின்ப மீட்டுமா தலினாற் கற்று
மறுவறு மொழுக்க முள்ளார் வாய்மொழி கேட்டல் வேண்டும்.

(இ - ள்) வறுமையாலும் அறியாமையாலும் மனம் வியாகுலப்படுங்காலத்தில், தேறுதல் செய்யுந்துணையாகும் கற்றவற்றினறிவை விருத்திசெய்யும். எக்காலத்தும் அழிவில்லாத இன்பத்தை உண்டாக்கும் (ஆகையால்) கற்றறிந்து குற்றமற்ற நல்லொழுக்க முள்ளவர்களுடைய வாய்மொழியைக் கேட்கக்கடவாய் எ - று.

இச்செய்யுளால் கற்றறிந்தார் சொற்கேள் எனக்கூறியதாம்.

இதனை, ஷை, கேள்வி.

"செவியுணவிற் கேள்வி யுடையா ரவியுணவி - னான்றாரோ டொப்பர் நிலத்து.
கற்றில னாயினுங் கேட்க வஃதொருவற் - கொற்கத்தி னூற்றாந் துணை
இழுக்க லுடையுழி யூற்றுக்கோ லற்றே - யொழுக்க முடையார்வாய்ச் சொல்
எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு - மான்ற பெருமை தரும்"—என்பதனானும்,

அறநெறிச்சாரம்

"மறவுரையுங் காமத் துரையு மயங்கப்
பிறவுரையு மல்கிய ஞாலத்-தறவுரை
கேட்குந் திருவுடை யாரே பிறவியை
மீட்குந் திருவுடை யார்"—என்பதனானுமறிக. (௪௮)

இழிந்தவ னுயர்ந்த தொன்றை யியம்பினு முயர்ந்தோன் வாயி
னிழிந்ததொன் றுறினு முள்ள வியல்பறிந் தேயமி நீக்கிப்
பொழிந்தெனப் பிறர்தாங் கூறும் புலப்படாப் பொருளுந் தெள்ளி
வழிந்தெனத் தெளியக் கேட்போர் மனங்கொளப் புகறல் வேண்டும்.

(இ - ள்) இழிந்தவனவாயில் உயர் சொல்லொன்று பிறந்தாலும், உயர்ந்தவன்வாயில் இழிசொல்லொன்று பிறந்தாலும், (சொல்வானை நோக்காது) சொல்லின் பொருளையறிந்து (நன்றானால்) உட்கொண்டு (அன்றானால்) விலக்கி, பருப்பொருட்டாகப் பிறர்சொல்லும் புலப்படாப்பொருளையுந் தெளிந்து கேட்போர்க்கு எளிதிற் பொருள்விளங்க (அதினுண்பொருளை)ச் சொல்லுதல் வேண்டும். எ - று.

இதுமுதல் மூன்று செய்யுளால் நுண்ணறிவிற் பயில எனக்கூறியதாம்

இதனை ஷை, அறிவுடைமை.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருள்-மெய்ப்பொருள் காண்ப தறிவு.
எண்பொருள வாகச் செலச்சொல்லித் தான்பிறர்வாய் - நுண்பொருள் காண்ப தறிவு."—என்பதனானறிக. (௪௯)

எவ்வகை யுலகத் துள்ளா ரியல்புட னொழுகு கின்றா
ரவ்வகை யொழுகி னன்றே யழிவன வருமுன் காத்துக்

தவ்வெனும் பழிபா வங்க டப்புதியெய் தாமை யருகி
செவ்விய நெறியி னாளுஞ் செலுத்துக பொறிக ளைந்தும்.

(இ - ள்) உலகத்திலுள்ளவர்கள் எவ்வகை நடக்கையாக நடக்கின்றனரோ அவ்வகைய நடக்கையிலிருந்து, கேடுவிளைவனவற்றை வருமுன்னரே (உணர்ந்து) தடுத்து, கெடுதியாகிய பழிபாவம் கெடுதி (இவை) அடையாது பயந்து ஐம்புலன்களை நன்னெறியில் நாடோறுஞ் செலுத்துக. எ - று

இதனை, கூ, கூ.

"சென்ற விடத்தாற் செலவிடா தீதொரீஇ - நன்றின்பா லுய்ப்ப தறிவு.
அஞ்சுவ தஞ்சாமை பேதைமை யஞ்சுவ - தஞ்ச லறிவார் தொழில்
எதிரதாக் காக்கு மறிவினார்க் கில்லை - யதிர வருவதோர் நோய்.
எவ்வ துறைவ துலக முலகத்தோ - டவ்வ துறைவ தறிவு."—என்பதனானுணர்க.

நலமிகு முயர்ந்தோர் தம்மை நண்புறத் தழுவிக் கொள்க
நிலவிய கயத்துப் பூவை நிகர்தரா துயர்ந்த கோட்டி
னலரென வவர்பா னிற்க வாக்கமிக் கடுத்த காலை
மலர்வதும் வறங்கூர் காலைக் கூம்பலு மொழிக மைந்தா.

(இ - ள்.) மகனே! நன்மை மிக்குயர்ந்தோர்களை நட்புறும்படி தழுவிக்கொள்வாயாக அந்த நட்பை (முன்மலர்ந்து பிறகுவியும்) விளங்கிய நீர்ப்பூப்போல, மிக்க ஆக்ககாலத்தில் அடுத்தலும் மிக்க வறுமைக்காலத்தில் விடுத்தலும் இன்றி, (என்று மலர்ந்தவாறே யிருக்கும்) உயர்ந்தகோட்டின் மலர்போல (ஒருதன்மையாக)க் கொண்டொழுகுவாயாக எ - று.

இதனை கூ கூ

"உலகந் தழீஇய தொட்ப மலர்தலுங்
கூம்பலு மில்ல தறிவு"—என்பதனானும்,

பழமொழி

"அறிவினை மாட்சியொன் றில்லா வொருவன்
பிறிதினை மாண்ட தெவனும்—பொறியின்
மணிபொன்னுஞ் சாந்தமு மாலையுமற் றின்ன
வணியெல்லா மாடையிற் பின்"—என்பதனானுமறிக (ருக)

அருந்தவர் குரவர் முன்னோ ரந்தண ருயர்ந்தோர் தம்பாற்
றிருந்திய வணக்க மின்மை செருக்குறு வேண்டி யப்பக் கத்தும்
பொருந்திய பொருள்கொ டாமை பொங்கிய வெகுளி காமம்
விருந்துசெய் கழிகண் ணோட்ட மிவையெலாம் விடுக மைந்தா.

(இ - ள்) மகனே! அரியதவசிகள், குருக்கள் (தந்தைதாய் முதலிய) மூத்தோர்கள், வேதியர்கள், பெரியோர்கள் ஆகிய இவர்களிடத்திற் கீழ்ப்படியாமையும் செருக்குறுதலும், கொடுக்கவேண்டிய விடத்தும் பொருந்திய பொருளைக் கொடாமை, கடுங்கோபம் பெருங்காமம் புதிதாகச்செய்யும் பேருவகை மிதமற்ற தாட்சணியங் கொள்ளுதலாகிய இவற்றையெல்லாம் தவிர்க்கக்கடவாய் (இவை குற்றமுடையன வாகலின்.) எ - று.

இதுமுதல் மூன்றுசெய்யுள்களால் தவ்வொழுக்கொழுகு எனக்கூறியதாம்.

இதனை ஷை குறுநாயுகல

"செருக்குஞ் சினமுஞ் சிறுமையு மில்லார் - பெருக்க மெ பெருமித நீர்த்து
இவறலு மாண்பிறந்த மானமு மாணு - வுவகையு மேத மிறைக்கு"—என்பத
னுணர்க (ருஉ)

வேறு

குற்றம் புரியா திருந்து பிறர் குற்றங் களைக சிறிதேனும்
குற்றம் புரியிற் சிறுநெறிவைக் குவையை யழிக்கு மாறேபோற்
பற்றும் பெருவாழ் வினையழிக்கும் பகைவர்க் காக்க மிகப்பெருக்கு
முற்றும் பெருநோ யுழப்பிக்கு முனியா ராலு முனிவிக்கும்

(இ - ள) (நீசிறிதும்) குற்றஞ்செய்யாதிருந்து பிறருடைய குற்றங்களைத் தீர்க்கக்கடவாய் சிறிது குற்றமேனுஞ்செய்தால், சிறுநெருப்பு [ஒருபொறி] வைக்கோற்போரைத் தகிக்கும் வகைபோல, பெரியசெல்வத்தைக் கெடுக்கும், பகைவர்க்குச் செல்வ மிகச்செய்யும் [தன்னை யெளியனாக்கும்], ஆயுள்முழுதுந் தீராப்பிணியால் வருந்தச்செய்யும், வெறுக்காதவர்களாலும் வெறுக்கச்செய்யும். எ - று

இதனை ஷை ஷை

"வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை யெரிமுன்னர்-வைத்தூறு போலக் கெடும்.
தன்குற்ற நீக்கிப் பிறர்குற்றங் காண்கிற்பி - னென்குற்ற மாகு மிறைக்கு"—
என்பதனுணர்க (ருகூ)

கன்று மினிய பொருள்பலவுங் காதல் பகைவ ரறியாமே
நன்று நுகர்க நினைவொன்று நன்கு மதித்து வியவற்க
நன்றி பயவா வினையினையு நண்ணு மந்தத்தான் முடியற்க
வென்றி விளங்கப் புகழ்விளங்க விழுப்பம் விளங்க வேண்டிடினே

(இ - ள) காரியசித்தி வேண்டுமாயின், விரும்பப்படும் ஆசையுடைய இனிய பல பொருள்களையும் பகைஞர்களறியாமல் நன்றாக அநுபவிக்கக்கடவாய் கீர்த்தி விளங்கவேண்டுமாயின் உன்னை நீயேமதித்து இறுமாப்படைவிடுக மகிமை விளங்க வேண்டுமாயின் நன்றியைத் தராத (பயனற்ற) செயல்களையும் (நாம் செய்யவல்லோ மென்னும்) தூரங்காரத்தினுற செய்யாதொழிக எ - று

இதனை ஷை ஷை

"வியவற்க வெஞ்ஞான்றுந் தன்னை நயவற்க-நன்றி பயவா வினை
காதல காத லறியாமை யுய்க்கிற்பி-னேதில வேதிலா நூல"—என்பதனுனும்,

திரிகடுகம்

"தன்னை வியந்து தருக்கலுந் தாழ்வின்றிக்
கொன்னே வெகுளி பெருக்கலு—முன்னிய
பலபொருள் வெஃகுஞ் சிறுமையு மிம்மூன்றுஞ்
செல்வ முடைக்கும் படை"—என்பதனானுமறிக. (ருச)

நுண்மை யறனு மிகத்தெளிந்து நூலி னியலபு முலகியல்பும்
வண்மை யுறத்தேற் றிடுமாற்றல் வல்ல ராகி வளர்சீலர்
திண்மை யறிவா யுளின்முதிர்ந்தோர் சேர நன்கு மதித்திடுக
வெண்மை புரியா துயர்த்திடுக வியம்பும் வழிப்ப நின்றிடுக.

(இ - ள்.) அதிசூக்கும தருமங்களையும் மிகவுமாராய்ந்து, சாஸ்திரவிதியும் உலகியற்கையும் வண்மையாக உணர்த்திடும் ஆற்றலில் லெல்லாராய், ஒள்கின்ற குணத்திலும் உறுதிப்பாட்டிலும், அறிவிலும், வயதிலுமேம்பட்டோரை யறிந்து உயர்வாக மதிக்கக்கடவாய், (அவரை) அசட்டை செய்யாமல் மேன்மைப் படுத்தக் கடவாய், (அவர்) கூறும் வழியே நடக்கக்கடவாய். எ - று

இதுமுதல் மூன்றுசெய்யுள்களால் உயர்ந்தோரைச் சிநேகஞ்செய் எனக் கூறியதாம்

இதனை, ஷை பெரியாரைத் துணைக்கோடல்

"அறனறிந்து மூத்த வறிவுடையார் கேண்மை - திறனறிந்து தேர்ந்து கொளல்
தம்மிற் பெரியார் தமரா வொழுகுதல்-வன்மையு ளெல்லாந் தலை" —என்பதனானறிக.

மழையின் மிகுதி மழையின்மை எரிதீப் பிணிபால் வந்ததுயர்
குழைவில் லமரர்த் தகவோரைக் குறித்துச் சாந்தி யாற்கடியார்
விழைவில் பகைவர் கள்வர்வினை செய்வார் சுற்ற மிவர்களினும்
பிழையை யுபாய நான்கானும் பெயர்க்கும் பெரியோ ருறுந்துணையே.

(இ - ள்) பெரியோரென்னுந் துணையானது, மழையின் மிகுதி-பெருமழை-மழையில்லாமை - கெடுகாற்று - அக்கினிபற்றுதல் - கொடுமைப்பிணி, ஆகிய விவற்றால் நேரிடுந் துன்பங்களை, குழைவில்லாத தெய்வத்தையும் சித்தியாளரையுங்குறித்துப் பரிகாரஞ்செய்து நீக்கி, விருப்பமில்லாத பகைஞர்கள் - திருடர்கள் - தொழிலாளர்கள் - உறவினர்கள் ஆகிய விவர்களால் விளையுந் தீமைகளைச் (சாமபேததான தண்டங்களாகிய) சதுர்வித வுபாயங்களினாலும் விலக்கும். எ - று.

இதனை, ஷை, ஷை.

"உற்றநோய் நீக்கி யுறாஅமை முற்காக்கும்
பெற்றியார்ப் பேணிக் கொளல்" —என்பதனானறிக. (ருசு)

நற்பான் மையினுற் றேவர்கள ரெண்ணா ராகு மெதிர்வினையை
யுற்பாதங்க ளானறிந்தே யொழிப்பர் மனிதரால்வருவ
பொற்பா ரவரிங் கிதங்குணமா கார மொடு செயலாற் புகக்கறிந்து
பிற்பா லுறச்செய் குவர்தன்ற பெரியோர் துணையே துணையாகும்.

(இ - ள்.) தெய்வத்தால் வரும் எதிர்கால விக்கினங்களை முற்காட்டுங் குறிகளானறிந்து (பரிகாரமுதலிய) நற்கருமங்களாலொழிப்பார்கள் மனிதரால் வருந் தீங்குகளை அவருடைய அழகிய இங்கிதத்தினாலும் குணத்தினாலும் ஆகாரத்தினாலும் செய்கையினாலும் ஆய்ந்தறிந்து தவிர்க்கச்செய்வார்கள் ஆதலால் (உனக்குப்) பெரியோருடைய துணையே துணையாகும். எ - று

இதனை, ஷை, ஷை

"அரியவற்று ளெல்லா மரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல்"—என்பதனானும்,

சீவகசிந்தாமணி

"பாலவிளை பரந்து மேயும் படுகடல் வளாக மெல்லாங்
கோலவிளை யாமற் காத்துன் குடைநிழற் றுஞ்சக் கேட்கி
நூல்விளைந் தனைய நுண்சொற் புலவரோ டுற்றதை யோம்பின்
மேல்விளை யாத வின்பம் வேந்தமற் றில்லை கண்டாய்"—என்பதனானுமுணர்க.

நல்ல வினைக்கு நற்பயனுந் தீய வினைக்குத் தீப்பயனும்
இல்லை யெனும்வம்ப ரிழிந்தைப்பரு மௌளும் விடருந் தூர்த்தர்களுஞ்
சொல்லு நடுவு முதலாகத் தொக்க குழுவோர் சேர்ந்தொழுகின்
புல்லு மதியைத் திரித்திருமைப் பொருளும் கெடுக்கும் புகழுமதே.

(இ - ள்) (நீதானுஞ்செய்யும்) நல்வினைக்கு நற்பயனும் தீவினைக்குத் தீப்பயனும் (உண்டாவது) இல்லையென்று (வம்புரை) கூறும் முழுமூடர்களும், இழிந்தக்காமிகளும், தூர்த்தர்களும் (இழித்துச்) சொல்லுகின்ற நடுத்தரமெருழிலார்க்கும் முதலாகச் சேர்ந்த (சிற்றினத்தார்) கூட்டத்தைச் சேர்ந்து நடந்தால், பொருந்திய நற்புத்தியை மாற்றி (அவர்களைச்சேர்ந்தோன்) அடையும் இம்மை மறுமைப்பயன்களையுங் கீர்த்தியோடு கெடுப்பார்கள் எ - று.

இச்செய்யுளால் அற்பரைச் சிநேகியாதே எனக்கூறியதாம்.

இதனை, ஷை, சிற்றினஞ்சேராமை.

"சிற்றின மஞ்சும் பெருமை சிறுமைதான் - சுற்றமாச் சூழ்ந்து விடும்.
நிலத்தியல்பா னீர்திரிந் தற்றாகு மாந்தர்க் - கினத்தியல்ப தாகு மறிவு
நல்லினத்தி னூங்குந் துணையில்லை தீயினத்தி-னல்லற் படுப்பதூஉ மில்."—என்பதனாலும்,

நான்மணிக்கடிகை.

'மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப் - பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்குங்
கூடார்கட் கூடி விடின் "—என்பதனாலுமுணர்க. (ருஅ)

செய்யும் பொழுதே யழிபொருளிற் சிறப்பத் தொப்பத் திரண்டிலுமொள்ளொ
றுய்ய வுதவி யழிப்பக்கு மொண்மை வினையைத் தேர்ந்துளத்தி
லைய மகன்ற வினத்தோடு மாய்ந்து தனித்தும் புரிந்திடுக
வெய்ய வாக்கங் கருதிமுதல் விளிக்கும் வினையைப் புரியற்க.

(இ - ள்) (ஓர்தொழிலைச்) செய்கையிலேயே செலவிடும் பொருளுக்கு மிக்க பொருளாவது ஒத்தபொருளாவது உண்டாகும்படி பின்பு தரத்தக்கதாகவுள்ள நல்வினையை, ஐயந்தீர்ந்த நல்லினத்தோடு யோசித்தாவது (நீயே) தனித்து மனத்திற் கருதியாவது செய்; ஆக பெரிய இலாபத்தை விரும்பி முதற்பொருளை யிழப்பிக்குந் தொழிலைச் செய்யாதே எ - று.

இதுமுதல் ஐந்து செய்யுள்களால் ஆராய்ந்து தொழில்செய் எனக்கூறியதாம்.

இதனை, ஷை, தெரிந்துசெயல்வகை.

"அழிவதூஉ மாவதூஉ மாகி வழிபயக்கு - மூதியமுஞ் சூழ்ந்து செயல்
தெரிந்த வினத்தொடு தேர்ந்தெண்ணிச் செய்வார்க் - கரும்பொருள் யாதொன்று மில்.
ஆக்கங் கருதி முதலிழக்குஞ் செய்வினை - யூக்கா ரறிவுடை யார்"—என்பதனானறிக.

வலியே காலம் வினையிவற்றின் மாற்றானுக்கு முனக்குமுள
பலவு நிலையும் வினைதொடங்கும் பண்பு மதற்கா மிடையூறும்
விலக்கு மதனை விலக்குவதும் வெல்லு மாறும் வென்றதனா
லுலவாப் பயனு முதலனைத்து மோராது தெளிந்து வினைசெய்க.

(இ - ள்) வலிமை-காலம்-இடமாகிய இவற்றினால், பகைவனுக்கும் உனக்குமுள்ள பலவகையாகிய தாரதம்மியமும், தொழிலைத் தொடங்கும் முறையும், அதற்குவரும் விக்கினமும், நீங்கா விக்கினத்தை நீக்குவதும், செய்மடைதலும், செய்முற்றதால் வரும் அழியாத இலாபமும் முதலிய எல்லாவற்றையும் நன்குணர்ந்தே ஓர் தொழிலைச் செய்வாயாக எ - று.

இதனை, ௸, ௸

"வகையறச் சூழா தெழுதல் பகைவரைப்
பாத்திப் படுப்பதோ ராறு"—என்பதனானறிக. (௯0)

பெரிய முயற்சி வினைப்பயனைப் பெறா வினையே பயனில் தா
மரிய வினையே பின்றுயர் மாக்கு வினையே புரிந்தாலும்
பெரிய முயற்சி முதலாகப் பேசும் வினைக்கு மாறதலையா
முரிய வினையை விடுத்தாலு முலவாப் பெருமை யொழியுமே.

(இ - ள்) மிக்க முயற்சியா லாகுந்தொழில் - பயனறராத தொழில் - அற்பப் பயன்றருந்தொழில் - பின்பு துன்பம் விளைக்குந்தொழில் ஆகிய இவற்றைச் செய்தாலும், மிக்க முயற்சியாலாகுந் தொழில் முதலாக (மேற்) கூறிய தொழில்கட்கு எதிரிடையாகப் பொருந்திய தொழில்களைச் செய்யாது விடுத்தாலும், கெடாத பெருமை கெடும் எ - று.

இதனை, ௸, ௸

"செய்தக்க வல்ல செயக்கெடுஞ் செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்"—என்பதனானறிக (௯௧)

கொடுத்தல் பொருள்வேட் கையனிடத்துங் குளிர்சொற் செவ்வி யானமை
னடுத்துப் பிறரோ டமராற்றி யயர்ந்தா னிவர்பாங் கினுமவேறு [டிய
படுத்த துணையாம் படையினனின் பகுதி யொடுசே ரானிவாக
ளிடத்து மொறுத்த லிவற்றினவரா லிவர்கீழ் மக்க ளிடத்தினுமாம்

(இ - ள்) (உன்பகைவரில்) பொருளாசைக் காரனைத் தானவுபாயத்திலும் நன்னடக்கை யாளனும் சோம்பலுள்ளோனும் பகைவருடன் போர்செய்து இளைத்தவனுமாகிய இவர்களைச் சாமவுபாயத்திலும், துணைப்படையாளனும் உன்னோடிணக்க மற்றவனுமாகிய இவர்களைப் பேதவுபாயத்திலும், இம்மூன்றுபாயத்தால் வசப்படாதவர்களும் கீழ்மக்களுமாகிய இவர்களைத் தண்டவுபாயத்தாலும் அடக்குக எ - று.

இதனை, ௸, ௸,

"எண்ணித் துணிக கருமந் துணிந்தபி - னெண்ணுவ மென்ப திழுக்கு
ஆற்றின் வருந்தா வருத்தம் பலர்நின்று - போற்றினும் பொத்துப் படும்"—என்பதனானறிக. (௯௨)

வலியா ரான காலத்து வழங்க லாதி மூன்றனையு
மெலியா ரிடத்துச் செய்திடலு மெலியா ரான காலத்து
வலியா ரிடத்தி னொறுத்தலையும் வருக்கின் வேந்தாக் கவைமைந்தா
நலிவா மதனா லவரவர்பா னடத்து முறைதேர்ந் தியற்றிடுக.

(இ - ள்.) மைந்தனே! வலியவராயிருக்குங் காலத்தில் தான சாம பேத வுபாயங்களையும் மெலியவரிடத்திற் செய்தாலும், மெலியவராயிருக்குங் காலத்தில் தண்ட

வுபாயத்தை வலியவரிடத்திற் செய்தாலும் அவை அரசர்க்குக் கேட்டை விளைக்கும்; ஆதலால் அவரவரிடத்திற் செய்யத்தக்க வுபாயத்தைத் தெரிந்துகொண்டு தொழில் செய்வாயாக எ - று.

இதனை, ௸, ௸.

"நன்றாற்ற லுள்ளுந் தவறுண் டவரவர் - பண்பறிந் தாற்றாக் கடை.
எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு - கொள்ளாத கொள்ளா துலகு."

என்பதனானும்,

பழமொழி.

'தற்றூக்கித் தன்றுணையுந் தூக்கிப் பயன்றூக்கி
யுற்றது கொள்க மதிவல்லார் — மற்றதன்றி
யாதானு மொன்றுகொண் டியாதானுஞ் செய்தக்கால்
யாதானு மாகி விடும்" — என்பதனானுமறிக (௬௩)

வினையின் வலியாதிகளனைத்தும் வேறு வேறு சீர்தூக்கி
நினது வலிமிக்குழி வினையை நிகழ்த்து நிகழாத காலத்துப்
புனையும் வெற்றி யுறுவிழுக்கும் பொருந்து மதனா லவ்விடத்து
வினையுந் தோல்வி யுறாக்குறைந்த விடத்தும் வினையை யெண்ணறுக.

(இ - ள்) தொழிற்பல முதலிய நான்கனையும் அளவிட்டு, உன்னுடைய பலமானது மிக்குள்ள காலத்தில் தொழில் செய்யத் தொடங்குக (செய்யும் வினையும்) ஒப்பான காலத்திலும் அழகிய வெற்றி யுண்டாகாது கேடும் விளையும் ஆனபடியால் அப்பொழுது வருந்துகின்ற தோல்வியுண்டாகும். வலிகுன்றிய காலத்துந் தொழில் புரியக் கருதற்க எ - று.

இதுமுதல் மூன்று செய்யுளால் வலிமைகண்டு தொழில்செய் எனக்கூறியதாம்.

இதனை, ௸, வலியறிதல்

"வினைவலியுந் தன்வலியு மாற்றான் வலியுந் - துணைவலியுந் தூக்கிச் செயல்.
உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி - யிடைக்கண் முரிந்தார் பலர்" — என்பதனானறிக

வினையின் வலியாதிகளனைத்தென்றது - தொழிற்பலம் - தன்பலம் - பகைவன் பலம் - தனக்கும் பகைவனுக்குமிருக்குந் துணைப்பலம் (௬௪)

குறைந்த வலிய ராயினுங் கொற்ற மைந்தர் பலர்கூடி
னிறைந்த வலியென் னுமதனு னேரார் தொழிற்க பலரொடுளத்
துறைந்த வூக்கந் தனைக்கொண்டே யுற்ற நினது வலியளவி
னிறந்தும் வினைமே னடவற்க விறவா வென்றி வேண்டிடினே.

(இ - ள்) வலிகுன்றியவர்களானாலும், வெற்றியமைந்த பலமாந்தர்கள் கூடினால் (உனது) மிகுந்த வலிமை யாது பயனுடையதாம்? ஆதலால், பலருடன் பகைகொள்ளாதொழிக. மனோற்சாகத்தையே பொருளாகக்கொண்டு உனக்கு அழியாத வெற்றி வேண்டுமாயின், இறந்தாலும் உன்வலி யளவைக்கடந்து, யாதொரு தொழிலையுந் தொடங்காதே எ - று.

இதனை, ௸, ௸.

"பீலிபெய் சாகாடு மச்சிறு மப்பண்டஞ் - சால மிகுத்துப் பெயின்.
நுனிக்கொம்ப ரேறினா ரஃதிறந் தூக்கி - னுயிர்க்கிறுதி யாகி விடும்" — என்பதனானறிக (௬௫)

வந்த பொருளிற் காற்கூறு வருமே லிடாநீக் குதற்கமைத்து
மைந்த விருகா னிககாக்கி மற்றைக் காலே வழங்கிடுக
சிந்து நெறிக ளெலாமற சேரு நெறிகள் சுருங்கிடினு
நந்த லிலதா மொப்பினுமா நாடி னதிகச் செலவிழுக்காம

(இ - ள்) மைந்தனே! உனக்குக் கிடைத்த பொருளளவிற் காற்பங்கை இனி வரும் விக்கின நிவிர்த்தியின் பொருட்டு இருப்புவைத்து, அரைப்பங்கை உன் செலவிற்குபயோகப் படுத்தி, மற்றைக் காற்பங்கைத் தானஞ்செய்தற்காகச் செலவிடுக, வரவு குறையினுஞ் செலவு அதனிற் குறைதல் நன்று வரவுஞ் செலவும் ஒத்திருப்பினும் கேடில்லை. வரவுக்கு மிஞ்சிய செலவுசெய்தல் கேடடைதற்கு மென்றறிக எ - று

இதனை, ஷை, ஷை

"ஆற்றி னளவறிந் தீக வதுபொருள் - போற்றி வழங்கு நெறி
ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை - போகா றகலாக் கடை
அளவறிந்து வாழாதான் வாழ்க்கை யுளபோல - வில்லாகித் தோன்றுக் கெடும்"
என்பதனானும்,

இநும்பலநாஞ்சி

"ஆர்கலி ஞாலத் தறங்காவ லாற்சிறந்த
பேரருளி னாகுப் பெறலருமை யாதரோ
ஊர்திரைய மாமகர வெள்ளத்து நாப்பணும்
போமலைந்து வெல்லும் புகழ்"—என்பதனானுமறிக (கசு)

ஆற்றன் மூன்று முபாயங்க ணான்கு மிடத்தோ டமைந்திடினும்
போற்றி நினக்கு வென்றியுறும் பொழுது தேர்ந்து வினைபுரிக
வேற்ற காலம் வருமளவு மெண்ணி யிருக்க வதுமைந்தா
வீற்றுச் சமரக்குப் பின்வாங்கும் வெற்றித் தகரே யாகுமால்.

(இ - ள்) மைந்தனே! மூவகையாற்றலும் நால்வகை யுபாயமும் தக்க விடத்துடன் வாய்ந்தாலும், சாத்து உனக்குச் செயமுண்டாகுங் காலமும் ஒத்திருக்கத் தெரிந்தே தொழில்செய்க ஒத்தகாலம் (வாய்ந்திராவிடின் அது) வருமளவும் எதிர்பார்த்திருக்கவேண்டும். அது முட்டிச் செய்வதற்கு அடக்ககடாய பின்வாங்குதல் போலுமென்று நினைப்பாயாக எ - று

இது முதலிரண்டு செய்யுட்களால் பருவம் பார்த்துத் தொழில்செய் என்க கூறியதாம்

இதனை, ஷை, காலமறிதல்.

"அருவினை யென்ப வுளவோ கருவியாற் - கால மறிந்து செயின்
காலங் கருதி யிருப்பர் கலங்காது - ஞாலங் கருது பவர்
ஊக்க முடையா னொடுக்கம் பொருதகர் - தாக்கற்குப் பேருந் தகைத்து."—என்பதனானறிக. (கஎ)

பகைமிக் கியற்றித் திரிந்திடினும் வெல்லுங் காலம் வருமளவும்
பகைமை புறத்திற் றோற்றமற பகைவர் தம்மைப் பணிபோடு
நகைசெய் தயல்போற் சுமந்திடுக நாடுங் காலம் வந்துவிடின்
றசைசெய் வினையை யவ்வளவிற் றப்பா வண்ண முடித்திடுக

(இ - ள்) (உனபகைவா) மிககமேகடுசெய்து திரிந்தாலும நீ பகைமையை வெளிக்குககாட்டாமல் செயிககுங்காலம வருமெலலேயும அபபகைமைககைத் தக்குதியோடு சகித்துக்கொண்டு சுமப்பவனபோலவிருந்து தககக்காலம வாய்த்துவிட்டால, தக்கபடி செய வினையை அபபொழுதே தவறுமறபடி முடித்திடு. எ - று.

இதனை, ஷை, ஷை

'பொள்ளென வாங்கே புறம்வேரார காலம்பாாத - துளவேர்ப்ப வொளியவா
செறுநரைக காணிற சுமக்க இறுவரை - காணிற கிழக்காந் தலை
எய்தற கரிய தியைந்தக்கா லந்நிலையே-செய்தற கரிய செயல' — என்பதனாலும,

சீவகசிந்தாமணி

"இடததொடு பொழுது நாடி யெவ்வினைக கண்ணு மஞ்சா
மடப்பட வினறிச சூழ மதிவல்லலாாக கரிய துண்டே
கடத்திடைக காககை யொன்றே யாயிர கோடி கூகை
யிடைத்திடை யிரங்கச சென்று கின்னுயிா செகுத்த தன்றே" — என்பத னாலுமறிக. (சுஅ)

வாயி லூழில் வழுக்கம் மதிலே வளைந்தொன் றுறகொன் று
மேய துணையாய பலபடையு மெலிவற விருப்ப மதிலகழி
யேய வியறறி யரசிருக்க வேற்ற கிடக்கை நிலத்தோடு
பாய புனலு முடையததுவே பகையை யழிக்கு மிடனாகும்.

(இ - ள்) வாசலும், நுழைவாசலும வழுக்கமறுமபடி மதிலவளைந்தும ஒன்றற கொன்று பொருந்தியதுணையாய பலபடைகளும மெலிதலற்றிருக்க மதிலும, அகழி யும பொருந்தச்செய்து அரசிருப்புகொள்ளத தலவாயப்பும், பரந்தநீாவளமுமுடைத்தா யிருப்பதுவே பகையைவெலலுதற்கு இடமாம எ - று.

இதுமுதலிரண்டுசெய்யுள்களாலஇடமறிந்துதொழிலசெயலெனக்கூறியதாம

இதனை, ஷை, இடனறிதல

"தொடங்கற்க வெவ்வினையு மெள்ளறக முற்று
மிடங்கண்ட பினனல லது" — எனபதனானறிக (சுகூ)

ஊக்க மிலனே யினுமிடத்தோ டுற்ற வினைசெய குவனாயி
னூக்க முடையாாக கிடனின்று யொழியு மூக்க மிலாதவனுக
கூக்க முடையா னாயிடினு முற்ற படையும் பலவேனு
மூக்க மழிவ னிடத்தோடு முறறு வினைசெய யாவிடினே.

(இ - ள்) ஊக்கமிலலாதவனாயினும இடவாயப்பினனாய்த தொழில்யற்று வானாயின், (பகைஞனாகிய) ஊக்கமுடையானுக்கு வெலலுமிடனின்றி யொழியும இடவாயப்போடுமொருந்தி வினைசெய்யானாயின ஊக்கமுடையவனாயினும சேனைப பெருக்கமுடையவனாயினும எளியபகைவனாலும் செயிக்கப்படுவான எ - று.

இதனை, ஷை, ஷை

"ஆற்றாரு மாற்றி யடுப விடனறிந்து - போற்றாரகட போற்றிச செயின.
சிறுபடையான செலலிடத்து சேரி னுறுபடையா - னூக்க மழிந்து விடும" — என பதனாலும,

பாரதவெண்பா

"வான்சேரிற் புள்ளஞ்சா வல்லரில சுற்றிய
கானசேரின் ஞமலியினைக் கண்ணஞ்சா —வானசேர்
சிகர வரைசேரிற் றேனஞ்சா வஞ்சா
மிகுநீர்க் கயஞ்சேரின் மீன்"—என்பதனுமறிக. (௭௰)

பிறப்புங் குணமு மறிவுமென் பேறு மிவைபுஞ் செயல்களையுஞ்
சிறக்குங் காட்சி யொடுகருத்தே செயிரி னூலின் றினைத்தமமா
னிறுக்கு மமைச்சர் முதலோரை யின்று ராய்ந்து தெளிந்திடுக
வெறுக்கும் வினையாற் றுதற்பொருட்டு மறைபோ காமைப் பொருட்டுமே.

(இ - ள்) மந்திரித்தொழில் முதலிய எத்தொழிலாயினும் ஒருவனைத்தெரிந்து கொள்ளுங்கால், தன்மொழிலை ராசிகமும் வஞ்சியாதிருக்கவுமாக (அவனுடைய) பிறப்பும் குணமும் அறிவும் செயல்களுமென்று சொல்லுமிவற்றைக் காட்சிப்பிர மாணத்தாலும் அநுமானப்பிரமாணத்தாலும் ஆகமப்பிரமாணத்தாலும், (அறம்பொரு ளின்பம் அச்சமாகிய இவற்றில் வைத்துப்) பரீட்சித்து நமபுவாயாக எ - று.

இது முதல் ஒன்பது செய்யுள்களால் ஒருவனைப் பரீக்ஷித்து நமபு எனக் கூறியதாம். (௭௧)

அறவோர் புரோகி தனைவிடுத்திட் டவரா லிந்த வரசனறு
னறவோ னல்ல னிவறபோகி யறனோ டுரிமை யுடையானை
யுறவே வைத்த நற கெண்ணினமீ தொத்த தெவர்க்கு நினகருத்தென்
னுறவோ தெனச்சொ ஞறமோடு மோர்ந்தே யொருவன் றனைத்தெளிக.

(இ - ள) (தெரிந்து கொள்ளப்படுபவனிடத்தில்) அறவோரையும் புரோகித ரையும் விடுத்து அவரால் இப்போதாளுமரசன் தருமகுணமற்றவன்(ஆதலால்)இவனை நீக்கி, தருமகுணமுடைய மற்றொருவனை அரசனாக நியமித்தற்கு யோசித்தோம். இது எல்லோர்க்கும் சம்மதமாயிருக்கின்றது உன் கருத்தியாது? அதனைச் சொல்லுக வென்று பிரமாணமாகக்கேட்டு (அறத்தின்வழியிற) பரீக்ஷித்து ஒருவனைத் தந்திர மாகச் சோதித்துத்தெளிக. எ - று. (௭௨)

சேனைத் தலைவ னொடுமவனோர் சேர்ந்தா ரையுமவிட் டிவ்வரச
னீனப் பொருளா சையனிவனை யிழுக்கிக் கொடையோ டுரிமையுடை
யானைப் புரத்தற் கெண்ணினமீ தமைந்த தெவர்க்கு நினகருத்தென
னூனப் படாமை யுரைத்தியெனச் சூளோ டுரைப்பித் தேதெளிக.

(இ - ள.) (தெரிந்து கொள்ளப்படுபவனிடத்தில்) சேனாபதியையும் அவன் வகையினோரையும் விடுத்து இப்போதாளுமரசன் இழிவாகிய பொருளாசையுடைய வன், (ஆதலால்) அவனை நீக்கிக் கொடைத்தொழிலில் வல்ல மற்றொருவனை அரச னாக்கும்படி யோசித்தோம் இது எல்லோர்க்கும் சம்மதமாயிருக்கின்றது உன் சம மதம் யாது? ஒளியாதுரைக்கவென்று பிரமாணமாகச் சொல்லுவித்து (பொருள்வழி யிற) பரீக்ஷித்து ஒருவனைச் சோதித்துக்கொள்க. எ - று (௭௩)

தொன்று தொட்ட வுரிமையொடு சூழ்ந்த தவமு தாட்டியைவிட்
டொன்று முரிமை தனிலினனு ஞானைக்கண் டுயங்கி யெனைவிடுத்தாள்
சென்றங் கவளைக் கூடுதியேற் சிறந்த பொருளுங் கூடுநினக்
கென்று தெளியச் சூளுறவோ டிசைப்பித் திதனு னுந்தெளிக.

(இ - ள்) (தெரிந்து கொள்ளப்படவேண்டிடத்தில்) பழமையேயுள்ள உரிமையளாக ஒரு தலைமுதுமகளை விடுத்து இம்மங்கை உன்பேரில் மோகமுற்று (அழைத்து வருதற்கு) என்னையனுப்பினள். அவளைச்சென்று தழுவுவாயாயின் உனக்கு (இன்பமேயன்றிச்) சிறந்தபொருளுங் கைகூடும் என்று பிரமாணமாகச் சொல்லுவித்து (இன்பவழியில்) பரீக்ஷித்து ஒருவனைச் சோதித்துக்கொள்க எ - று (எச)

வேறு

ஒருத்திமிக்க வேலிட்டே யொரமைச்சா லவைமனையி லேனை யோரைப்,
பொருண்மையுற வழைப்பித்திங் கிவரைப்பாக் குழீஇயினரென் றுறுத்
திக்காவ, லொருவனிவ் வரசவையை யொறுக்கமுயன் றுனிவனை யொ
றுத்து வேறே, யொருவனையப் பதத்திருத்த முயல்கருத்தென் னெனச்
சூழ்வினைப் படுப்பித் தேர்க

(இ - ள்) ஒரு மந்திரியைக்கொண்டு அவனுடைய வீட்டில் யாதேனுமொகாந்தரம்வைத்து மற்றவர்களை யழைப்பித்து, இவர்கள் ஏதோ மோசஞ்செய்யக்கூடினாரென்று சாவற்படுத்தி, வேறொரு மந்திரியைக்கொண்டு இவ்வரசன் நம்மைக்கொலை செய்ய எத்தனித்தான் (அவன் நம்மைக் கொல்வதன்முன் நாம்) அவனைக்கொன்று வேறொருவனை யரசனாக்கச் சம்மதித்தோம் உன் கருத்தென்ன? பிரமாணமாகச் சொல் என்று சோதித்துக்கொள் எ - று

மேல் ஐந்து செய்யுள்களின் கருத்தை, ஷ, தெரிந்துதெளிதல்.

"அறம்பொரு ளின்ப முயிரச்ச நான்கின்
றிறந்தெரிந்து தேறப் படும்"—என்பதனானறிக. (எரு)

வேறு.

நல்ல குடியிற் பிறந்தாறு நசையு மறப்பு மடிபிழைப்பென்
றல்ல வாறுக்கு மிவைமுதலா மனைத்து நீக்கிப் பழிக்கஞ்சி
யொல்ல லுறுநா ணுடையானே போர்ந்து தெளியப் படுமைந்தா
வல்ல கலைதேர்ந் தாசற்றோ ரிடத்து மெளிறு மருவிடுமே.

(இ - ள்) மைந்தனே! அருங்கலையுணர்ந்து குற்றமற்றாரிடத்திலும் வெளிற றறிவு பொருந்தும் (ஆதலால்) உயர்குடியிற் சனித்த, ஆறு குற்றங்களும் மறதியும் சோம்பலும் பிழைத்தல் என்று சொல்லப்படுந் துன்புசெய்யும் இவைமுதலாகிய எல்லாக்குற்றங்களையு மொழித்துப் பழிச்சொல்லுக்குப் பயந்து பொருந்திய நாணமுடையவனே ஆராய்ந்து தெளியப்படத்தக்கவன். எ - று

ஆறுநவைகள் காமம் குரோதம் உலோபம் மோகம் மதம் மாற்சரியமென்பன.

இச்செய்யுளின் கருத்தை, ஷ, ஷ.

"குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி வடுப்பரியு - நாணுடையான் கட்டே தெளிவு.
அரியகற் றாசற்றார் கண்ணுந் தெரியுங்கால் - இன்மை யரிதே வெளிறு"—என்பதனானறிக. (எசு)

சுற்ற மிலரா னவர்தம்மைச் சூழேல் பழிபா வமுநாணார்
பற்று மிலரா குவர்விடுக பண்பார் தருநற் குணங்களே
முற்று முடையா ரிலரதனான் முனியுங் குற்றங் குணமிவற்றைத்
தெற்றென் றுணர்ந்து குணமிகுந்த செம்மை யுடையார் தமைத்தெளிக.

(இ - ள்) சுற்றமில்லாதவர்களை யோசியாதே (ஏனெனில் அவர்கள்) பழி பாவங்கட்கும் அஞ்சார்கள், பற்றில்லாதவர்களாவார்கள், அவரை விட்டுவிடு. குற்றமற்ற குணவான் கிடைப்பதும் அரிது. ஆதலால் வெறுக்கத்தக்க குற்றங் குணமென்னுமிவ் வற்றை நன்குற அளவிட்டுக் (குற்றங்குறைந்து) குணமிகுந்த செம்மையாளர்களைத் தெரிந்தெடுத்துக் கொள்வாயாக எ - று.

இதனை, ஷை, ஷை

"குணநாடிக் குற்றமு நாடி யவற்றுள் - மிகைநாடி மிக்க கொளல்.
அற்றாரைத் தேறுதல் ஓம்புக மற்றவர் - பற்றிலர் நாணார் பழி" —என்பதனானறிக (எஎ)

பெருமை சிறுமை யளந்துகொளப் பேணுங் கருவி தத்தமது
கரும மதுவே பிறகருவி கழியச் சிறந்த தெவ்விதக்
மருவு காத லாலறியா மாட்டு வினையை வையற்க
வொருவர் தமையுந் தேராமே யொருகா லத்துந் தெளியற்க.

(இ - ள்) (ஒருவருடைய) மேன்மையையுங் கீழ்மையையும் அளந்தறிவதற்கு அவரவரது செய்கையே யன்றி மற்றவை சிறந்த கருவியல்லவென்று அறிவாயாக (ஒருவர்பால்) பொருந்திய உள் காதலினிமித்தம் தெரியாதவரிடத்து ஓர் தொழிலைச் சுமத்தாதே (எப்படியாயினும்) பரீட்சைசெய்யாமல் ஒருவரையும் ஒருகாலத்திலும் நம்பாதே எ - று.

இதனை, ஷை, ஷை

"பெருமைக்கு மேனைச் சிறுமைக்குந் தத்தங் - கருமமே கட்டளைக் கல்
காதன்மை கந்தா வறிவறியார்த் தேறுதல் - பேதைமை யெல்லாந் தரும
தேற்றற்க யாரையுந் தேராது தேர்ந்தபின் - றேறுக தேறும் பொருள்." —என்பதனானறிக (எஅ)

தேர்ந்து தெளியப் பட்டவன்பாற் றேர்ந்தே வினையுந் தவிர்த்திடுந்
தேர்ந்து தெளியப் பட்டவனைத் தீது காணத் தயிர்ற்க
தேர்ந்து தெளியப் பட்டவன் றீர வினையை விடுமதனைத்
தேர்ந்து பகைவர் பிரித்திடுவர் தேரான் றெளிவே போற்கேடாம்

(இ - ள்) தீரத்தெரிந்து கொள்ளப்பட்டவனுக்கும் (இவனுக்கிதுதகுமென்று) தொழிலையும் ஆராய்ந்தே சுமத்துக (தொழில் சுமத்தியானபின்) அவன் ஒரு தீங்கும் செய்யக்காணாது சந்தேகியாதே (சந்தேகித்தால் தன்னை நம்பாமைபற்றி) அவன் தொழிலை (பாதுகாவாது) விடுவான் அதனைப் பகைவர் அறிந்து (அவனையுன்பால்) பிரித்து(க் ... ஏற்று)க்கொள்வார்கள் (அதனால்) பரீட்சைசெய்யாது நம்பினவனைப்போலக் கேட்டைய வேண்டியதாம் எ - று.

இதனை, ஷை, ஷை

"தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை - தீரா விடும்பை தரும்
தேரான் றெளிவுந் தெளிந்தான்க ணையுறவுந் - தீரா விடும்பை தரும்" —என்பதனானும்,

அறநெறிச்சாரம்

"பொருள்போக மஞ்சாமை பொன்றுங்காற் போந்த
வருள்போகா வாரறமென் றாற—விருள்போகக்

கூறப் படுங்குணத்தான் கூர்வேல்வல் வேந்தனுற்
றேறப் படுங்குணத்தி னன ''—என்பதனானுமறிக. (௭௯)

முன்னாட் பொதுவாகிய வினையின் மூள விடுத்துத் தீதகற்றி
நன்மை புரிந்து வருமாயி னடி யவனைச் சிறந்தவினை
தன்னில் விடுக்க சிறந்தவினை சார்ந்து புரிவா னிடைத்திரியின்
பின்ன ரவனைப் பொதுவினையிற் பெயர்த்து நழுவ விட்டிடுக

(இ - ள்) நீ தெரிந்துகொண்டவனை முதலிற் பொதுவான தொழிலில் விடுத்து, (அதில்) துன்பத்தை விலக்கி நன்மை செய்து வருவானாயின் (பின்னர்) சிறந்த தொழிலில் விடுவாயாக. (அவ்வாறு) சிறந்த தொழிலைப் பற்றிச் செய்பவன் இடையில் திருத்தக் குறைவுண்டானால், மறுபடியும் அவனை மாற்றிப் பொதுவாகிய தொழிலிற் புகச்செய்து கைநழுவவிடக்கடவாய் எ - று.

இதுமுதல் நான்கு செய்யுள்களால் திறனறிந்து தொழிலிடு எனக்கூறியதாம்.

இதனை, ஞெ, தெரிந்துவினையாடல்.

"நன்மையுந் தீமையு நாடி நலம்புரிந்த - தன்மையா னாளப் படும்
எனைவகையாற் றேறியக் கண்ணும் வினைவகையான் - வேறாகு மாந்தர் பலர்"—
என்பதனானறிக.

பொதுவினை - பலர்கூடிச் சாதிப்பதற்குரியது. சிறந்தவினை - ஒருவனே சாதிப்பதற்குரியது. (௮௦)

ஆளு மரசன் பாலன்பு மவனுக் காவ தறியறிவு
நாளு மவற்றைக் கலங்காம லன்று முடிக்கு முளத்துணிவு
மூளும் வினைக்குத் தன்கரத்தின் மொய்த்த பொருளின் விழையாத
கோளு முடையான் புரிவினையிற் குற்ற முறாது குணமேயாம்

(இ - ள்.) அரசுசெய்யும் மன்னனிடத்தில் அன்பும், அவனுக்கு வருவதையறியும் விவேகமும், அவற்றைச் சோர்வின்றி நன்றாகச் சாதிக்கும் மனத்துணிவும், வரும் வினைக்குத் தன் கையிலுள்ள மிக்க பொருளில் வாஞ்சியாக் குணமும் உடையவனே செய்யுங் கருமத்தைப் பழுதுபடாது முடிப்பவனாவான் எ - று.

இதனை, ஞெ, ஞெ,

"அன்பறிவு தேற்ற மவாவின்மை யிந்நான்கு
நன்குடையான் கட்டே தெளிவு"—என்பதனானறிக.

"கரத்தின் மொய்த்த பொருளின் விழையாத கோள்" என்பதற்கு, அரசனால் வரையறுக்கப்பட்டதின்மேற் பரிதானப் பொருள் விரும்பாமை யெனப்பொருள் கூறினுமாம். (௮௧)

தெளிந்த வினையிற் றெளிந்தவனைச் சிறந்த காலத் தொடும்விடுக்க
விளைந்த வழிவா றனுமில்லையென மிக்க வுரிமை நின்பாலே
தளர்ந்த மனத்தா னாயிடினுந் தன்பால் வினையைச் சார்த்தற்க
வளர்ந்து வினையில் விடுத்தவனை யதற்குத் தகுமா றுரிமைசெய்க.

(இ - ள்) (தக்கோனெனத்) தெளிந்தவனை (இத்தன்மைத்தெனத்) தெளிந்த தொழிலிற் சமயம் வாய்க்கும்போதெல்லாம் வைக்கக்கடவாய். உன்னிடத்திலேயே

MAHAMAHOPADHYAYA
SWAMINATHA IYER LIBRARY

உரிமைமிக்க (அன்பால்) தன்னை நத்த மனமுடையவனானாலும், மிகுந்த அறிவும் திறமையு மில்லையாயின் (அவனுக்கு) ஓர் தொழிலைச் சுமத்தாதே. (தக்கோனென்ன) அளவிட்டு ஒரு தொழிலில் விடுத்தவனை அவ்வினைக்கேற்பப் பக்ஷம் வைப்பாயாக. எ - று.

இதனை, குறள், குறள்.

"அறிந்தாற்றிச் செய்கிற்பாற் கல்லால் வினைதான்-சிறந்தானென் றேவற்பாற் றன்று.
செய்வானை நாடி வினைநாடிக் காலத்தோ - டெய்த வுணர்ந்து செயல்.
வினைக்குரிமை நாடிய பின்றை யவனை - யதற்குரிய னாகச் செயல்."—என்பதனானுணர்க. (௮௨)

வினைக்கண் முயற்சி தவறாது வினையன் கேண்மை வேறாக
நினைக்கு மவனமற் றவ்வினையி னீங்கும் பிறரு மதியாரா
முனைக்கும் வினைஞன் கோடாதே முதிர்நீ ருலகங் கோடாது
துணைப்பின் வைக வெறுநாடிச் சாரும் வினையு நாடுகவே.

(இ - ள்) தன்றொழிலிற் றளராவுறுதியற்று முயற்சியாளன் உறவினனாகவும் வேற்றுமையாய் நினைப்பாயாயின், அவன் அத்தொழிலினின்றும் நீங்குவான். (அதனை யறிந்த) பிறரும் அதனால் (உன்னை நம்பித் தொழில்புரிதற்கு) உடன்படார். முனைக்குங் கருமத்தலைவன் நீதிபிறழானாயின், பன்மையாகிய கடல்சூழ்ந்த உலகமானது முறைபிறழாது. (ஆதலின்) நீ எக்காலமுந் தொழிலாளன் சோர்வையாராய்ந்து (பின்பு) தொழிற்சோர்வையும் ஆராய்வாயாக. எ - று

இதனை, குறள், குறள்

"வினைக்கண் வினையுடையான் கேண்மைவே றாக - நினைப்பானை நீங்குந் திரு
நாடோறு நாடுக மன்னன் வினைசெய்வான் - கோடாமை கோடா துலகு"—என்பதனானும்,

பழமொழி

"காட்டிக் கருமங் கயவாமேல் வைத்தவ
ராகுலவ ராற்ற வெமக்கென் றமராதிருத்தன
மாப்புலா நோக்கின் மயிலன்னாய் பூசைக்குக்
காப்பிடுதல் புன்மீன் றலை"—என்பதனானுமறிக (௮௩)

பற்றும வெறுக்கை யொழிந்துழியும் பழைமை யெடுத்துப் பாராட்டுஞ்
சுற்ற மதனைப் பெருங்கொடையாற் றாய மொழியாற் றழுவுதியி
னற்ற மவனுக் கொருகாலு மணுகா தாக்க மிகப்பெருகு
முற்ற நினைக்கும் பகைவர்தொழின் முற்றுந் தேமங் கண்டனே.

(இ - ள்) எமகண்டா! பொருந்திய செல்வமற்ற காலத்திலும், ஆதிநட்பைக் கொண்டாடும் உறவினரைப் பெரிய கொடைத்தொழிலாலும் இனிய வசனத்தாலுந் தழுவியிருந்தால் அவனுக்கு ஒருகாலுஞ் சோர்வுவராது. செல்வமானது மிகுதியாக வளரும் வெல்லநினைக்கின்ற சத்துருக்களுடைய கருமங்கள் முடிவுபெறா (ஆதலின் உறவினரைத் தழுவிக்கொள்வாயாக) எ - று.

இச்செய்யுளால் உறவினரை யாதரி எனக்கூறியதாம்.

இதனை, குறள், சுற்றந்தழால்.

"பற்றற்ற கண்ணும் பழைமைபா ராட்டுதல் சுற்றத்தார் கண்ணே யுள.
விருப்பறாச் சுற்ற மியையி னருப்பறா - வாக்கம் பலவுந் தரும.

கொடுத்தலு மின்சொலு மாற்றி னடுக்கிய - சுற்றத்தாற் சுற்றப் படும்.
காக்கை கரவா கரைந்துண்ணு மாக்கமு - மன்னநீ ரார்க்கே யுள"—என்பதனாலும்,

பழமொழி.

"அல்ல லொருவற் கடைந்தக்கா லம்மற் றவர்க்கு
நல்ல கிளைகளெனப் படுவ—நல்ல
வினைமரபின் மற்றதனை நீக்கு மதுவே
மனைமர மாய மருந்து"—என்பதனாலுமறிக. (அச)

வேறு.

பெருமிதம் பெரிய செல்வம் பேரெழில் பெரிய விளைப
தருமிகு களிப்பின் மூழ்கித் தயங்குமி னீமை கண்டா
வருமிகு பொச்சாப் பாந்த மறவியா லினைகாத் தும்ப
பொருமிகு பகையை வெல்லும் பொருளெலா மிழப்ப தாகும்.

(இ - ள்) எமகண்டா! காமகுணம் - மிக்கசெல்வம் - கட்டழகு - விடய போகம் ஆகிய இவற்றில் அதிமோகம்பற்றி மூழ்கிக் கிடப்பின், அளவிறந்த மகிழ்ச்சி யுண்டாகும் (அம்மகிழ்ச்சி செய்கை செய்யாமைகளில் மறவியுண்டாக்கும்) அம்மற வியால், உன்னைக்காத்து, போர்புரியும் மிக்கபகைஞரை வெல்லும் எல்லாப்பொருள் களையும் இழக்கச் செய்யும். எ - று.

இதுமுதல் மூன்று செய்யுள்களால் மறவிக்குணத்தை விடு எனக்கூறியதாம்.

இதனை, ஷை, பொச்சாவாமை.

"இறந்த வெகுளியிற் றீதே சிறந்த - வுவகை மகிழ்ச்சியிற் சோர்வு
அச்ச முடையார்க் கரணில்லை யாங்கில்லை - பொச்சாப் புடையார்க்கு நன்கு
முன்னுறக் காவா திழுக்கியான் றன்பிழை - பின்னூ றிரங்கி விடும்"—என்பதனா லறிக. (அரு)

உற்றிடு மாற்றன் மூன்று முபாயங்க ணான்கு நன்மை
பற்றிய தொழில்க ளைந்தும் பண்புறு குணங்க ளாறு
மற்றைய வனைத்துங் கேடா மளர்பிறப் பேழன் காறும்
பற்றிடு நன்மை யின்றாம் பாழ்த்தபொச் சாப்புச் சாரின்

(இ - ள்) கேட்டைத் தருவதாகிய மறவிக்குணம் பொருந்துமாயின், பொருந்திய மூவகையாற்றலும், நால்வகை யுபாயமும், ஐவகைத்தொழிலும், அறுவகைக் குணமும், மற்றையயாவுங் கேடாம். அவனுக்கு வளர்கின்ற ஏழுபிறவிகள் வரையிலும் அடையத்தக்க நற்செய்கை யில்லையாகும். எ - று.

ஆற்றல் மூன்று—அறிவு, ஆண்மை, பெருமை.
உபாயங்கள் நான்கு—சாமம், பேதம், தானம், தண்டம்
தொழில்கள் ஐந்து—எளியமுயற்சி, பயன்விளைவது, பெரும்பயன் றருவது, சந்தேகமில்லாதது, பின்னன்மை பயப்பது.
குணங்கள் ஆறு--அன்பு, நாண், ஒப்புரவு, தாக்ஷணயம், வாய்மை, மாட்சிமை.

இச்செய்யுளின் கருத்தை, ஷை, ஷை.

"புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டுஞ் செய்யா
திகழ்ந்தார்க் கெழுமையு மில்."—என்பதனா லறிக. (அசு)

நெகிழ்ச்சியொன் றின்றிச் செய்ய நினைந்தகா ரியத்திற் சென்று
புகழ்ச்சிசெய் முயற்சி செய்யிற் பொருள்பய வாமை யில்லை
யிகழ்ச்சியிற் கெட்டா ரதமமை யெண்ணுதல செய்வை யாயின
மகிழ்ச்சியின் மைந்து ருந வண்மைவந தடுககு மைநதா.

(இ - ள்) மகனே! நீ செய்ய நினைத்த (காரியம் எத்தகையதாயினும்) அக காரியத்திற் சிறிதும் மறவிக்குணமின்றிப் பிரவேசித்து, கீர்த்தியையுண்டுசெய்யும் முயற்சிசெய்து கொண்டிருந்தால், (அதுமுற்றிப்) பயனகொடாமையில்லை (அம்மறவி யுன்னை நீங்குதற்குபாயங்கள்) அளவிலுவகையால் இறுமாககும்பொழுது, அவ்வாறு முன் இறுமாந்து கெட்டவரை நினைப்பாயாயின் அது தானே யொழிந்துவிடும் எ - று

இதனை, குறள், குறள்.

"அரியவென் றாகாத இல்லைபொச் சாவாக் - கருவியாற் போற்றிச் செயின்
இகழ்ச்சியிற் கெட்டாரை யுள்ளுக தாந்தம்-மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து."
என்பதனாலும்,

சூளாமணி

"இகழ்ச்சி யிற்கெடு வார்களை யெண்ணுக
மகிழ்ச்சி யின்பத்தின் மைந்துறும் போழ்தெனப
புகழ்ச்சி நூலுட் புகன்றனர் பூவினுட்
டிகழ்ச்சி சென்றசெம் பொன்முடி மன்னனே"—என்பதனாலுமுணர்க. ()

எய்திய குற்றத் தோர்கள் யாவரா யினுங்கண் ணோடா
தைதென நாடி நீதி யறந்தலைப் பிழையாத தண்டஞ்
செய்தலே செங்கோ லாகுஞ் செய்யகோ லின்றேற லென்னு
முய்திசெய் மழையான மககளுற் றுப்பய னுற்ற போதும்.

(இ - ள்) பொருந்திய குற்றமுடையோர் யாவராயினுந் தாக்ஷிண்யம் பாராட்டாது அழகாக விசாரித்து, தருமநெறி தவறாமற்படி தண்டஞ்செய்தலே செங்கோன்மையென்று சொல்லப்படுவதாகும் (இம்முறை செய்தல்) பயனை யுண்டுசெய்யும் மழையினால் பிரஜைகள் பொருந்திய பயனடைதல்போலும் செவ்விய இராசநீதிதவறுமாயின் யாது பயனுண்டாகும்? (ஒன்றுமுண்டாகமாட்டாது) எ - று

இதுமுதல் ஐந்து செய்யுள்களால் நன்னீதிசெலுத்துதல் எனக்கூறியதாம்

இதனை, குறள், செங்கோன்மை

"ஓர்ந்துகண் ணோடா திறைபுரிந் தியார்மாட்டுந் - தேர்ந்துசெய் வஃதே முறை
வானோக்கி வாழு முலகெல்லா மன்னவன் - கோனோக்கி வாழுங் குடி"—என்பத னாறிக. (அஅ)

மழைவளஞ் சுரக்கு மாறும் வயனிலம் விளைபு மாறும்
விழையுறம் வளரு மாறும் வேதநூல் விளங்கு மாறுந்
தழைபொரு ளீட்டு மாறுஞ் சமரிடை வெல்லு மாறும்
பிழைதப வாழு மாறும் பிறழ்தரா தகோலி னாகும்.

(இ - ள்) (அரசன நீதி) தவறாத செங்கோலினாலே, (உலகத்திலே பருவ) மழைபெய்து செழித்தலும், விளைநிலங்கள் பயன்றருதலும், நினைத்தபடி தருமங்கள் விருத்தியாதலும், வேதசாஸ்திர விதிகள் பிரகாசித்தலும், பொருட் பெருக்கந்தேடுத

லும், (பகைவரைப்) போரில் வெல்லுதலும், அவக்கியாதியின்றி (குடிகள்சூழ) வாழ்ந்திருத்தலும், (ஆகிய இவையாவும்) உளவாகும். எ - று.

இதனை, ஷை, ஷை.

“அந்தணர் நூற்கு மறத்திற்கு மாதியாய் - நின்றது மன்னவன் கோல்.
குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன் - னடிதழீஇ நிற்கு முலகு.
இயல்புளிக் கோலோச்சு மன்னவ னாட்ட - பெயலும் விளையுளுந் தொக்கு.
வேலன்று வென்றி தருவது மன்னவன் - கோலதூஉங் கோடா தெனின்.”
என்பதனாறிக. (௮௯)

கருவிநஞ் சாதி தம்மாற் காமரா ருயிரைக் கொல்வோர்
வெருவரச் சூறை கொள்வோர் மேவியா றலைப்போர் கள்வோ
ருருவளர் பிறனில் வேட்போ ருவர்முத லோரைக் கோறல்
பருவரு பாவ மன்று பயிர்க்களை களைதல் போலாம்.

(இ - ள்) ஆயுதப்பிரயோகம் - நஞ்சிடுதல் முதலியவற்றால் (ஒருவருடைய) அழகிய அரிய உயிரைக்கொல்வோரும், அஞ்சும்படி கொள்ளைகொள்வோரும், பொருந்திய வழிப்பறிப்போரும், சோரஞ்செய்வோரும், அழகுமிக்க பிறர்க்குரிய மனைவியைக் கூடுவோருமாகிய இவர் முதலியபாவிகளைக் கொல்லுதல் [மரணதண்டனை விதித்தல்] வருந்தத்தக்க பாவமாகாது (நற்குடிகளாகிய) பயிருக்கு (துஷ்டர்களாகிய) களைகளைக் களைதல்போலாகும். எ - று

இதனை, ஷை, ஷை.

“கொலையிற் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்
களைகட் டதனோடு நேர்”—என்பதனாறிக (௯0)

பரிசனம் பகைவர் கள்வர் படர்தரு முயிர்க டம்மோ
னுரைசெயைந் திடத்தி னானு முலகிடை யிடையூ றெய்தா
வரிசையிற் காத்து நீதி வழுக்கினோர் தம்மை யொறுத்திக்
கரிசறப் பொருளுங் கோடல் காவலர் தரும மைந்தர்.

(இ - ள்) தன்பரிசனர் - பகைவர் - திருடர் - செல்லுகின்ற (பறவை விலங்காதி) உயிர்கள் - தான் என்று சொல்லப்படும் ஐவகையிலும் பிரசைகளுக்குத் துன்பமுண்டாகாமல் முறைப்படி யிரட்சித்து, நீதிதவறி நடந்தவர்களைத் தண்டித்துக் குற்றமறப்பொருளும் வாங்கிக்கொள்ளுதல் அரசர்க்குரிய தருமமாம். (இவையநீதியென்றெண்ணுதே) எ - று

இதனை, ஷை, ஷை.

“குடிபுறங்காத் தோம்பிக் குற்றங் கடிதல்
வடுவன்று வேந்தன் றொழில்”—என்பதனானும்,

திருத்தொண்டர்புராணம்

“மாநிலங்கா வலனானவன் மன்னுயிர் புரக்குங்காலைத்
தானதனுக் கிடையூறு தன்னாற்றன் பரிசனத்தா
லூனமிகும் பகைத்திறத்தாற் கள்வரா லுயிர்தம்மா
லானபய மைந்துந்தீர்த் தரசாள்வா னலனோ.”—என்பதனானுமறிக.

"பொருளுங்கோடல்" என்றதால், குடிகளிடத்து ஆறிலொருபங்கும், குறுநில மன்னர் பால் விதித்த நியமப்படி கப்பமும், குற்றஞ்செய்தோரிடத்து அபராதமு முதலியனவுங்கொள்க. (கூக)

முறைமைமுட் டாது செய்து முழுநிலங் காப்பி னந்த
விறைவனைச் செங்கோல் காக்கு மெளியசெவ் வியனு மாகான்
குறைவளா குற்ற மோரான் குணத்தொடு முறைசெய் யானை
நிறைதரு பாவந் தேய்க்கு நெடும்படை யின்று மேனும்.

(இ - ள்.) உலகமுழுவதையுஞ் செங்கோன்முறை பிசகாது காப்பானாயின், அவ்வரசனை (காப்போர் ஒருவரிலராயினும்) அம்முறை பிசகாமையே காக்கும். (குறை யறிவிப்பார்க்கு) எளிய சமயத்தனாயிராவிடினும், குற்றங்குறைகளை யறியாதவனாயினும், நீதிமுறைப்படி அரசுசெய்யாதவனுமாகிய மன்னனை, மிக்கபடை (வேறு) இல்லையாயினும் (அம்முறை பிசகிய அவனுடைய) நிறைந்தபாவமே கெடுக்கும். எ - று.

இதனை, ஷை, ஷை.

"இறைகாக்கும் வையக மெல்லா மவனை - முறைகாக்கு முட்டாச் செயின்.
எண்பதத்தா னோரா முறைசெய்யா மன்னவன் - றண்பதத்தாற் றானே கெடும்."
என்பதனானும்,

சீவகசிந்தாமணி

"உறங்கு மாயினு மன்னவன் றன்னொளி
கறங்கு தெண்டிரை வையகங் காக்குமா
லிறங்கு கண்ணிமை யார்விழித் தேயிருந்
தறங்கள் வெளவ வதன்புறங் காக்கலா"—என்பதனானுமுணர்க. (கூ௨)

அறுதொழி லாளர் நூல்க ளயர்ப்பரான் பயனின் றாகு
முறைபெய லொழியுங் கூழுங் குடிகளு மொருங்கு நீங்கும்
பெறுபய னாட்டிற் குன்றும் பிறங்கொளி நிலைபெ றாது
கறையின்மேற் பொருள்கைக் கொண்டு காவலை விடுப்பின் மைந்தா.

(இ - ள்.) மகனே! (மன்னனானவன் மேற்கூறிய முறைதவறி) கறையின மேற்பொருளை விசேடமாகக் கைக்கொண்டு (பிரசைகளைக்) காத்தலை யொழிப்பானாயின், அறுதொழில்களையுடைய அந்தணர் வேதசாஸ்திர முறைகளை மறப்பார்கள், பசுக்கள் பால் கொடாதனவாம். மழைபெய்தல் குன்றும், (உணவாகிய) பொருள்களுங் குடிகளும் ஒருங்குகெடும், நாட்டிலுண்டாகிய பலன்கள் குறையும், கீர்த்தியும் நிலைபெறாது (தொலையும்) எ - று.

இச்செய்யுளால் அநீதியையொழி எனக்கூறியதாம்.

இதனை, ஷை, கொடுங்கோன்மை.

"கொலைமேற்கொண் டாரிற் கொடிதே யலைமேற்கொண்-டல்லவை செய்தொழு
நாடொறு நாடி முறைசெய்யா மன்னவ - னாடொறு நாடு கெடும். [கும் வேந்து.
கூழுங் குடியு மொருங்கிழக்குங் கோல்கோடிச் - சூழாது செய்யு மரசு
மன்னர்க்கு மன்னுதல் செங்கோன்மை யஃதின்றேல்-மன்னாவா மன்னர்க் கொளி
முறைகோடி மன்னவன் செய்யி னுறைகோடி - யொல்லாது வானம் பெயல்
ஆபயன் குன்று மறுதொழிலோர் நூன்மறப்பர் - காவலன் காவா னெனின்"—
என்பதனானும்,

ஆசிரியமாலை

"தற்பாடு பறவை பசிப்பப் பகையற
நற்குலங் கொள்ளாது மாற்றுக் கால்பொரச்
சீறா வெண்டலைச் சிறுபுன் கொண்மூ
மழைகா லூன்று வளவயல் விளையா
வாய்மையுஞ் சேட்சென்று காக்குந் தீதறப்
பிறவு மெல்லா நெறிமாறு படுமே
கடுஞ்சினங் கவைஇய காட்சிக்
கொடுங்கோல் வேந்தன் காக்கு நாடே"—என்பதனானுமறிக.

கறை - அரசன் கொள்ளுங்கப்பம். வேதியரறுதொழில்—ஓதல்-ஓதுவித்தல் வேட்டல் - வேட்பித்தல் ஈதல் ஏற்றலெனப்படும். (கசு)

கடுமொழி கண்ணோ டாமை கையிகந் திட்ட தண்ட
நடுநிலை யின்மை செவ்வி யின்மைமன் முகமு றாமை
யுடனுறச் சூழ்ந்து செய்யா துறுபிழை யமைச்சாக் கேற்றல்
படுசமர்ச் சிறைசெய் யாமை பலவுநீங் காக்கு மைந்தா.

(இ - ள்.) மைந்தனே! கடுஞ்சொற் கூறுதலும், தாட்சணிய மில்லாமையும் குற்றத்திற்கேற்பச் சிட்சைசெய்யாமையும், நடுநிலைமைக் குணமில்லாமையும், (குறையறிவிப்பதற்கு) எளிதிற் சமயங்கொடாமையும், ஒன்றையோசியாமல் (தானாகச்) செய்துவிட்டுப் பொருந்திய பிழைபாட்டை மந்திரிகண் மீதேற்றலும், போர்செய்யுங்கால் (தன்னைக் காத்துக் கொள்வதற்குப்) புகலிடந் தேடிவைத்திராமையும், இவை முதலிய யாவும் பொல்லாங்கினை யுண்டுசெய்யும் எ - று.

இச்செய்யுளால் அச்சமுறுவியாதே எனக்கூறியதாம்.

இதனை, ஷை, வெருவந்தசெய்யாமை.

"தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தா - லொத்தாங் கொறுப்பது வேந்து.
அருஞ்செவ்வி யின்னா முகத்தான் பெருஞ்செல்வம் - பேஎய்கண் டன்ன துடைத்து.
கடுஞ்சொல்லன் கண்ணில னாயி னெடுஞ்செல்வ - நீடின்றி யாங்கே கெடும்.
கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த - னடுமுரண் டேய்க்கு மரம்.
இனத்தாற்றி யெண்ணாத வேந்தன் சினத்தாற்றிச் - சீறிற் சிறுகுந் திரு.
செருவந்த போழ்திற் சிறைசெய்யா வேந்தன் - வெருவந்து வெய்து கெடும்"
என்பதனானும்,

புறநானூறு.

"காய்நெல் லறுத்துக் கவளங் கொளினே
மாநிறை வில்லதும் பன்னாட் காகு
நூறுசெறு வாயினுந் தமித்துப்புக் குணினே
வாய்புகு வதனினுங் கால்பெரிது கெடுக்கு
மறிவுடை வேந்த னெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடுபெரிது நந்து
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை யறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப வெடுக்கும் பிண்ட நச்சின்

யானை புக்க புலம்போல
ரூனு முண்ணு னுலகமுங் கெடுமே"—என்பதனானுமறிக (௯௪)

பயின்றவர் தம்மாற் கூறப் பட்டன மறுக்க மாட்டா
வியன்றநற் குணங்கண் ணோட்டம் மிக்கது கண்ணோட் டந்தான்
முயன்றுசெய் முறைக்குக் கேடு முன்னுநர் மாட்டுக் கூடா
நயந்தப நினைக்குத் தீங்கு நாட்டினார் தம்பா லொட்டல்.

(இ - ள்) (தாட்சணியமென்பது பலதிறத்ததாயினும்) தம்மிடம் பழகினோரால் கூறப்படும் விஷயங்களை மறுக்கமாட்டாத நற்குணமே தாட்சணியமாம். பொருந்திய தகுதியாகிய இத்தாட்சணியத்தை (பொதுவாக யாவரிடத்தும் வைக்கவேண்டுவதன்றி) உனக்கு நன்மை நீங்கத் தீங்குசெய்பவருளராயினும் அவரிடத்தும் வைக்கவேண்டும். (ஆனால்) முயற்சியுடன் செய்கின்ற செங்கோன் முறைக்குக் கேடுநினைப்பவரிடத்தில் மாத்திரம் வைக்கக்கூடாது. எ - று.

இச்செய்யுளால் தாட்சணியவானாகவிரு எனக்கூறியதாம்.

இதனை, குறள், கண்ணோட்டம்

"கண்ணோட்ட மென்னுங் கழிபெருங் காரிகை - யுண்மையா னுண்டிவ் வுலகு.
கருமஞ் சிதையாமற் கண்ணோட வல்லார்க் - குரிமை யுடைத்திவ் வுலகு
ஒறுத்தாற்று மண்பினார் கண்ணுங்கண் ணோடிப் - பொறுத்தாற்றும் பண்பே தலை.
பெயக்கண்டு நஞ்சுண் டமைவர் நயத்தக்க - நாகரிகம் வேண்டு பவர்."—என்பதனானும்,

பாரதவெண்பா

"ஒன்று நரம்பென்கோ வொன்றுத வென்பென்கோ
வின்றசை தானென்கோ யாதென்கோ—மென்றொடையாழ்ப்
பண்ணோடு மின்சொற் பணைத்தோளாய் சேர்ந்தவர்பாற்
கண்ணோட்ட மில்லாத கண்"—என்பதனானுமறிக (௯௫)

வேறு

உள்ளக நீதி நூலாக வொற்றரே வெளிக்கண் ணெனவிடுத்து
வினைக்குஞ் செயலான மொழிதனாலு வேண்டா சுற்றம் வினைஞரையு
மளக்க மைந்த வொற்றுருவ வதைபுருந்து வுந்நேவாடு
துளக்க மின்றி யென்செயினுஞ் சோரா விலாத தெனவழிக.

(இ - ள்) மகனே! (அரசனுக்கு முக்கண்ணிரண்டென்றியும் முறைசெய்தற் குரிய அகக்கண் புறக்கண்ணுள வென்பப்படு கண்ணிரண்டில,) அகக்கண் நீதி நூலாராய்ச்சியாகவும், புறக்கண் தூதனுக வுருச்செலுத்தி நடத்துஞ் செய்கையினாலும், சொல்லினாலும், பகைவரையும், உறவினரையும், கருமத்தலைவரையும், பரிசோதித்தறக மைந்தவராய்ப் பார்ப்பவர் சந்தேகியாவண்ணம் வடிவெடுப்பவராய், யாவரெவ்வாறச்சமுறுத்தினு மருண்டு இரகசியம் வெளிப்படுத்தாமலும் தளர்வடையாமலு மிருப்பவரே தூதராம். (அவரைக் கைவிடாது கொண்டொழுகு) எ - று.

இதுமுதலிரண்டு செய்யுளால் தூதரைக் கண்ணாகக்கொள்ள எனக்கூறியதாம்

இதனை, குறள், ஒற்றாடல்.

"ஒற்று முரைசான்ற நூலு மிவையிரண்டுந் - தெற்றென்க மன்னவன் கண்
எல்லார்க்கு மெல்லா நிகழ்பவை யெஞ்ஞான்றும் - வல்லறிதல் வேந்தன் றொழில்

வினைசெய்வார் தஞ்சுற்றம் வேண்டாதா ரென்றாங் - கனைவரையு மாராய்வ தொற்று.
கடாஅ வுருவொடு கண்ணஞ்சா தியாண்டு - முகாஅமை வல்லதே யொற்று.
துறந்தார் படிவத்த ராகி யிறந்தாராய்ந் - தென்செயினுஞ் சோர்வில தொற்று.''
என்பதனானறிக. (௧௬)

ஒருவ ரொருவர் தமையறியா தொருமை வினைக்கண் மூவர்தமை
மருவ விடுக்க மூவர்களும் வந்து மொழிவ தொத்துவிடிற்
கருமந் தனைமிகத் தெளிக கருமம் மறைப்ப வேண்டுதியேற்
பொருவி லவர்தம் பாற்சிறப்புப் புறந்தோன் றுமற் செய்திடுக.

(இ - ள்) ஒரு விஷயத்தின்பேரில் மூன்று தூதர்களை ஒருவர்செயல் ஒருவர் அறியாமற் பிரிவுறவிடுத்து அம்மூவரும் வந்து (தனித்தனி) கூறுவது (விசாரணையினால்) பொருளொத்திருக்கக் காணின் அக்கருமத்தை யுண்மையாக நம்புக. ஓர் கருமத்தை (பிறரறியாது) காக்கவேண்டினையாயின், ஒப்பில்லாத அத்தூதர்களுக்குச் செய்யும் வரிசையைப் பிறரறியாவண்ணஞ் செய்க. எ - று.

இதனை, ஷ, ஷ.

"ஒற்றொற் றுணராமை யாள்க வுடன்மூவர் - சொற்றொக்க தேறப் படும்
சிறப்பறிய வொற்றின்கட் செய்யற்க செய்யிற் - புறப்படுத்தா னாகு மறை"—
என்பதனானும்,

இனியவை நாற்பது.

"ஒற்றினா லொற்றிப் பொருடெரிதல் முன்னினிதே
முற்றான் றெரிந்து முறைசெய்தல் முன்னினிதே
பற்றினாய்ப் பல்லுயிர்க்கும் பாத்துற்றுப் பாங்கறிதல்
வெற்றிவேல் மன்னர்க் கினிது"—என்பதனானுமறிக (௧௭)

ஊக்க முடையார் கைப்பொருளை யொழிந்தா ரேனு மொழிவில்லா
வாக்க முடையா ரேயாவ ராக்க மிருந்து மசைவில்லா
வூக்க மில்லா ரேதுமில ரொன்று முயற்சி பொருள்கொடைக்
கேகரும் புகழ்நற் செருக்கிவைபின் சேரா வேம கண்டனே.

(இ - ள.) ஏமகண்டனே! மனவூக்கமுள்ளார் பொருளில்லாதவராயினும் நீங்காத செல்வமுடையவரே யாவர் செல்வமிருந்தும் அழிவில்லாத ஊக்கமில்லாதவராயின் யாதொன்று மில்லாதவராவர் (ஏனெனில், பொருளில்லாக்காலத்து உள்ளவர்க்கும்) நன்முயற்சியால்வரும் பொருள் - உதாரகுணம்-பெருங்கீர்த்தி-பெருமைப்பாடு ஆகிய இவை (மனோற்சாகமில்லாத விடத்துப்) பொருளினால் உளவாகா (ஆதலால், நீ மனோற்சாகத்தை யிழக்காதே) எ - று

இச்செய்யுளால் மனோற்சாக முடையவனாயிரு எனக்கூறியதாம்.

இதனை, ஷ, ஊக்கமுடைமை.

"உடைய ரெனப்படுவ தூக்க மஃதில்லா - ருடைய துடையரோ மற்று
உள்ள முடைமை யுடைமை பொருளுடைமை - நில்லாது நீங்கி விடும்
ஆக்க மதர்வினாய்ச் செல்லு மசைவிலா - வூக்க முடையா னுழை
உள்ளமில் லாதவ ரெய்தா ருலகத்து - வள்ளிய மென்னுஞ் செருக்கு."—என்பதனானும்,

வெண்பாமாலை

"ஊக்க முரமிகுதி யொன்றிய நற்சூழ்ச்சி
யாக்க மினைக ணகலாவால் — வீக்க
நசப்படா வெனறி நலமிகு தாரார
கசப்படா தில்லை யரண"—என்பதனுமறிக. (௬௮)

மடியெனா றுளசேல வல்விரைந்து வெருக்குந தொழிலை நீட்டிக்கும்
கடியு மறவி துயிலவிளைக்குங் கடைதி தனைச்சோத திடும்பகைவாக்க
கடிமை புகுத்தும் குடிகெடுக்கு மதனை விடுபாயி ளுண்மையினும்
குடிமை யிடத்தும் வேறுளவாம் குற்றம் பலவு மொழிக்குமே.

(இ - ள்.) சோம்பலென்ப தொன்றிருக்குமாயின் (எடுத்ததொழிலை) மிக விரைந்து முடிக்கவொட்டாமல (காலம்) நீடிக்கச்செய்யும், நீக்கத்தக்க மறப்பையும் நித்திரையையு முண்டுசெய்யும்; மூதேவியோடு சம்பந்திக்கச்செய்யும்; பகைவர்க்கு அடிமையாக்கிவிடும், குடிப்பிறப்பைக்கெடுக்கும். அச்சோம்பற் குணத்தைவிடுத்தால் ஆண்மை குடிப்பிறப்பு முதலியவற்றில வெவ்வேறுளவாகிய குற்றங்கள் பலவற்றையு மொழிக்கும (மேன்மைதரும) எ - று.

இச்செய்யுளால சோம்பாதே எனக்கூறியதாம.

இதனை, ஷை, மடியின்மை.

"குடிமறந்து குற்றம பெருகு மடிமடிந்து - மாண்ட வுஞற்றி லவர்க்கு.
நெடுநீர மறவி மடி துயி லுனைகுக - கெடுநீரார் காமக் கலன
மடிமை குடிமைக்கட டங்கிற்றன னொன்னார்க்கு - அடிமை புகுத்தி விடும
குடியாண்மை யுள்வந்த குற்ற மொருவன - மடியாண்மை மாற்றக் கெடும."
என்பதனும,

பழமொழி.

"வேளாண்மை செய்து விருந்தோம்பி வெஞ்சமத்து
வாளாண்மை யானும வலியராய்த்—தாளாண்மை
தாழ்க்கு மடிகோ ளிலராய் வருந்தாதார
வாழ்க்கை திருந்துத லின்று"—என்பதனுமறிக. (௬௯)

விடாது தனுவிற செயுமுயற்சி மேன்மேற பொருளை மிகவளர்க்கும
கெடாது சுற்று நட்பினையுங் கிளையுந் தாங்கும யாவர்க்கும
விடாத வுபகா ரமுமபுரியுந் தடந்தா மரையா ளையுஞ்சேர்க்கும
படாத வூழ்வந் திடுகாறும பயனை விளைக்கும பழியின்றே

(இ - ள்) வில்லைப்போல (ஒருவன்) விடாது செய்யும முயற்சியானது (அவனுக்கு) பொருளை மேன்மேலும் மிகுதியாக வளரச்செய்யும், நீங்காது சூழ்ந்த நண்பினரையும உறவினரையும ஆதரிக்கும்; எல்லோருக்கும ஒழியாத உபகாரத்தையுஞ் செய்யும; பரந்ததாமரை மலரில் வசிக்குந திருமகள் கடாக்ஷமபெறச்செய்யும. (இந்த ஆளவினைக்கு) ஊழ்வினை (ஒவ்வாவிடினும் அது) வருமளவும (தக்க) பலனைக்கொடுக்கும்; பழிதகப்படுதலில்லை (ஆதலின நீ முயற்சிதளராதே) எ - று.

இச்செய்யுளால முயற்சியைவிடாதே எனக்கூறியதாம.

இதனை, ஷை, ஆள்வினையுடைமை

"அருமை யுடைத்தென் றசாவாமை வேண்டும் - பெருமை முயற்சி தரும் [௧௫.
தாளாண்மை யென்னுந் தகைமைக்கட் டங்கிற்றே - வேளாண்மை யென்னுஞ் செருக்கு
இன்பம் விழையான் வினைவிழைவான் றன்கேளிர் - துன்பந் துடைத்தூன்றுந் தூண்.
மடியுளாள் மாமுகடி யென்ப மடியிலான் - றாளுளாள் டாமரையி னாள்
தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன் - மெய்வருத்தக் கூலி தரும்"—என்பதனாலும்,

சீவகசிந்தாமணி

"உள்ளமுடை யான்முயற்சி செய்யவொரு நாளே
வெள்ளநிதி வீழுமவிளை யாததனி லில்லை
தொள்ளையுணர் வின்னவர்கள் சொல்லின்மட நீரபி
னெள்ளுனருக் கெக்கழுத்தம் போலவினி தன்றே"—என்பதனாலுமுணர்க.()

எடுத்த கரும முடிவதன்முன் னெய்துந் தெய்வத் தாலுங்
கொடுத்த முயற்சி யாலுடலிற் றோன்று மருத்தத் தாலுங்
மடுத்த பொருளின் மையினாலு மைந்தா வடுக்கி வந்திடினு
மிடுக்கண் டனக்கு ளழியற்க வின்ப மதுவே யெனத்தெளிக

(இ - ள்) தானெடுத்தகாரியம் முற்றுப்பெறு முன்னர், தெய்வத்தாலாகிலும், எடுத்த உழைப்பாலுண்டான சரீரவருத்தத்தாலாகிலும், மிக்க பொருளில்லாமையாலாகிலும், அடுத்தடுத்து இடுக்கண் வந்தாலும் (பின்னுக்கு) நன்மைதரத்தக்கவையே யென்று தீரமுற்றிருக்கவேண்டும் (அன்றி) மனந்தளர்ந்து (எடுத்தகாரியத்தைப் பழுதுபடச்செய்து) வருந்தாதே. எ - று

இச்செய்யுளால் துன்புறிற்சலியாதே எனக்கூறியதாம்.

இதனை, ஷ௨, இடுக்கணழியாமை.

"இடுக்கண் வருங்கா னகுக வதனை - யடுத்தூர்வ தஃதொப்ப தில்.
மடுத்தவா யெல்லாம் பகடன்னா னுற்ற - விடுக்க ணிடர்ப்பா டுடைத்து.
அடுக்கி வரினு மழிவிலா னுற்ற - விடுக்க ணிடுக்கட் படும்,
அற்றேமென் றல்லற் படுபவோ பெற்றேமென் - றோம்புத றேற்றா தவர்"—என்பதனாலும்,

குண்டலகேசி

"வேரிக் கமழ்தா ரரசன்விடு கென்ற போழ்துந்
தாரிக் கலாத வகையாற்கொலை சூழ்ந்த பின்னும்
பூரித்த லாட லியறாற்பொலி வின்றி நின்றா
னாரித்த வெல்லாம் வினையின்பய னென்ன வல்லான்"—என்பதனாலுமுணர்க.

அங்கவியல்.

வேறு.

நனிபயன் பயப்பச் சிறுமுயற் சியினா னலத்தகு வினையுமற் றனைய
வினையினைத் தொடங்குங் காலது தனக்குவேண்டிய பொருள்களும் படையு
மினிதுறு பொழுது முபாயமுஞ் செயலு மிடைப்படு மூறுகள் நீக்கித்
துனியற முடிவு போக்கிடு மாறுஞ் சூழ்தர வல்லவ னமைச்சன்.

(இ - ள்) பெரும்பயன் விளையும்படி சிறு முயற்சியால் மேம்பட்ட செயலும், அவ்வகைய வினையைத் தொடங்குகையில் அதை முடிப்பதற்கு வேண்டிய பொருளும

படையும், இனிய காலமும், உபாயமும், முயற்சியு மாதியவற்றைச் செய்தலும், இடையிற் சமபவிக்கும் விக்கினங்களை விலக்கித் துன்பமற முற்றுப்பெறச்செய்யும உளத் துணிவையும் (முற்பட) ஆராய்ந்தொழுகத்தக்கவன மந்திரியாவான் எ - று

இதுமுதல் முப்பத்திரண்டு அதிகாரங்களாலும் நாற்பத்தொரு செய்யுள்களாலும், அங்கவியல கூறலாயினார்

இதுமுதல நான்குசெய்யுள்களால மந்திராலோசனை கேள எனக்கூறியதாம.

இதனை, ஞ, அமைச்சு.

"கருவியுங் காலமுஞ் செய்கையுஞ் செய்யு
மருவினையு மாண்ட தமைச்சு."—என்பதனானுணர்க (கoஉ)

மிகைவினை வரினு மசைவுறு வன்கண விழுக்குடி காத்தலாள வினை
நூல, வகையுறச் சூழ்ந்து விடுவன விடுத்து வகுப்பன வகுத்திடல வே
ணடிற, பகைவர்தந் துணையைப் பிரித்தறம் பிடத்துப் பயின்றவர் பகை
வர்பாற் புகாமற, றகையுறச் செய்தல பிரிந்தவர் தம்மைத் தம்மொடு
பொருத்தலு மமைச்சாம.

(இ - ள்) எத்திறத்தொழில வரினும அஞ்சாதவன்மையும, சிறந்த குடிகளை யோம்புதலும், விடாமுயற்சியும, நூலவகையினால மிகவுமாராய்ந்து விலக்கத்தக்கவை களைவிலக்கிச செய்யத்தக்கவைகளைச செய்தலும, வேண்டுமாயிற பகைவர் பக்கத்தராயுள்ளாரைப் பிரித்தலும, தன பக்கத்தராயுள்ளோர பகைவர் பக்கலிற புகாமல தடைபடுத்தலும், முன் பிரிந்துபோனவரைத் தமமுடன கூட்டிவைத்தலும (முதலிய நூல இராசகாரிய நடத்தலும) மந்திரியின செயலகளாம. எ - று

இதனை, ஞ, ஞ.

"வன்கண் குடிகாத்தல கற்றறித லாளவினையோ - டைந்துடன மாண்ட தமைச்சு
பிரித்தலும பேணிக் கொளலும பிரிந்தார்ப் - பொருத்தலும வலல தமைச்சு"—
என்பதனானுணர்க (கoக)

அறிவதுஞ் செயலு மொழிவது மரசர்க் காக்கமே குறித்தன வா
குங, திறனுநன றறியா வரசருக் குறுதி செப்பலுஞ் செய்வன வேறு,
முறைமுல கியற்கை கொத்திடற் செயலு மொருவினைக் கியைந்துபல
செயலு,ணிறுவுவ தொன்றால வாய்ப்பவெஞ் ஞான்று நிகழ்த்தலு மமைச்
சருக் கியல்பாம.

(இ - ள்) (ஆவது) தெரிதலும, (முற்றத் தெரிந்ததைச) செய்தலும், (செய்ய வேண்டியதை மன்னனுக்கு முறபடச) சொலலுதலும, அரசனுக்குச் செலவமிகுதற்கே கருதலுமாகிய வலலபமும, நறசெயலறிய வரசனுக்கு இடித்துரைத்தலும, செய்யக் கூடியனவெனினும, பொருந்திய உலகவழக்கத்திற்கு ஒத்திருந்தாற செய்தலும, ஒரு தொழில் முடிக்கப்பொருந்திய பலவழிகளில நிலைநிற்றத்துவதாகிய ஒருவழியில எந்நாளுங் கைகூடச்செய்தலும மந்திரிகளுக்கியற்கையாம எ - று.

இதனை, ஞ, ஞ.

"தெரிதலுந் தேர்ந்து செயலு மொருதலையாச - சொலலலும வலல தமைச்சு.
மதிநுட்ப நூலோ டுடையார்க் கதிநுட்பம - யாவுள முன்னிற் பவை.

செயற்கை யறிந்தக் கடைத்து முலகத் - தியற்கை யறிந்து செயல்
அறிகொன் றறியா னெனினு முறுதி - யுழையிருந்தான் கூறல் கடன்."—என்ப
தனுனுணாக (௧௦௪)

முறையுறச் சூழ்ந்து மாந்திர மனைறி முடிக்கமாட் டாதமந் திரியு
மிறைவனுக் கிதந் மெண்ணு மந் திரியு மெழுதுசித் திரத்தினு மாகா
வுறுவரிற் பிரிக்கப் பட்டவர் முதலோர் குளத்தினைப் பிலைத்துக் குளமு
மறுவறப் பிணிக்கு மொழித்திற னறிந்து வழங்கலு மந் திரிகணற் குணமே.

(இ - ள்) ஒற்றுமைப்பட்டோர் ஒற்றுமைப்படாதோர் முதலிய யாரை (கேட்பினும்) அவர் மனத்தைப் பந்தித்துக் குற்றமற வசப்படச்செய்யும், சொற்சாதுரிய முடைமையுமறிந்து கூறுதல் மந்திரிகளுடைய நற்குணங்களாம் (அவ்வகையினரைத் தழுவிக்கொள்ள இஃதன்றி) முறைப்படி வேண்டிய வுபாயங்களை யாலோசித்தலன்றிக் கருமசாத்தியப்படச்செய்யாத மந்திரியும், அரசனுக்குத் துரோகஞ்செய்ய நினைக்கு மந்திரியும் (தூமந்திரிகளாதலின் இவர்களை) சித்திரத்தில் எழுதிப்பார்க்கினுங் கேடுண்டு. (ஆதலால் அவர்களை நீக்கக்கடவாய்) எ - று

இதனை, குறு, குஉ.

"அறனறிந் தான்றமைந்த சொல்லானெஞ் ஞான்றுந் - திறனறிந்தான் றேர்ச்சித்
பழுதெண்ணு மந்திரியிற் பக்கத்துட் டெவ்வோ - ரெழுபது கோடி யுறும் [துணை
முறைப்படச் சூழ்ந்து முடிவிலவே செய்வர் - திறப்பா டிலாஅ தவர்."—என்பத
னுனும்,

சீவகசிந்தாமணி

"செறிந்தவர் தெளிந்த நூலார் சிறந்தன தெளிந்து சொன்னு
லறிந்தவை யமர்ந்து செய்யு மமைதியா னரசன் ஞான
செறிந்தவர் தெளிந்த நூலார் செறிந்தன தெரிந்த கூறி
யறிந்தவை யாற்ற கிற்கு மமைதியா னமைச்சன் ஞான."—என்பதனு
முணாக. (௧௦௫)

சுருக்கிமெய் விளக்கி யினிமையும் பயனுந் தொகுத்தய லார்மொழிக்
கிடையாத, திருக்கிளர் மொழியைச் சோர்வற் வவைக்கட் செலனுமா
றஞ்சுத லின்றி, புரைக்கவல் லவரே யமைச்சர்க ளாவ ருறுமுறை பிறழ்
தரப் பலவாய, விரிக்கவல் லவருங் கற்றது விளங்க விரிக்கமாட் டாருமெல்
லியரே

(இ - ள்.) (சொல்லாற்) சுருக்கி, (பொருளால்) உண்மையைவிளக்கி (செவிக்கு) இன்பமும் பிரயோசனமுந் தரத்தக்கனவாய், பிறர் (ஆக்ஷேபிக்கு) மொழிகட்குப் பின்வாங்காத சிறந்த (சமயோசிதமான) நன்மொழிகளைச் சோர்வின்றிச் சபையின்கண் அஞ்சுதலின்றிச் சொல்லவல்லவர்களே (வசன நிர்வாகர்களாகிய) மந்திரிகளாவார்கள் (அவ்வாறன்றி, கொண்ட நோக்கமொன்றும், வெளியாவதொன்றுமாகும்படி) இசை வில்லாமலும் விரிவுபடவும் பலவாறு சொல்வோரும், கற்றவற்றை (யாவர்க்கும்) புலப்படும்படி விளக்க வறியாதவரும் வசனநிர்வாகரல்லர் (ஆதலின் அவரையகற்றி விடுவாயாக) எ - று

இச்செய்யுளால் வசனநிர்வாகரைச் சேர எனக்கூறியதாம்.

இதனை, குஉ, சொல்வன்மை

"கேட்டார்ப் பிணிக்குந் தகைவாய்க் கேளாரும் - வேட்ப மொழிவதாஞ் சொல்.
சொல்லுக சொல்லைப் பிறிதோர் சொல்லச்சொல்லை-வெல்லுஞ்சொ லின்மை யறிந்து.

சொல்லவல்லன் சோர்வில னஞ்சா னவனை - யிகல்வெல்லல் யார்க்கு மரிது.
விரைந்து தொழில்கேட்கு ஞால நிரந்தினிது - சொல்லுதல் வல்லார்ப் பெறின்.
பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற - சிலசொல்ல றேற்றா தார்.
இணருழ்த்து நாறா மலரனையர் கற்ற - துணர விரித்துரையா தவர்."—என்பத னானும்,

நாலடியார்.

"சொல்லியக்கால் சொல்லின் பயன்காணுந் தானறிந்த
சொல்லிய சொல்லை வெல்ச்சொல்லும் பல்லார்
பழித்தசொற் றீண்டாமற் சொல்லும் விழுத்தக்க
கேட்டார்க் கினியவாய்ச் சொல்வானே நற் பூங்குழலாய்
நல்லவை யூரன் றுஞ்சா தணியகலம்
புல்லவி னூட லரிது."—என்பதனானு முணர்க. (கOசு)

பொருள்பயந் திடினு மறமடுகழ் பயவாப் புரைபடு வினைவென்று மபுரியார்
மருளினமற் றொருகாற் புரியினு மிரங்கார் வையகத் தேனையோர்போல
விருமுது குரவர் கற்புடை மகளி ரிளமக விவர்பசித் திடினும்
பெரும்ழிதப் படாத வினைசெயா ருலகு பேணுநாக கேமனுசெ யமைச்சர்.

(இ - ள்) பொருட்பெருக்கந் தரவல்லதாயினும், தருமத்தையாவது கீர்த்தியையாவது விளக்காத குற்றம்பொருந்திய கருமத்தை எக்காலுஞ் செய்யாதவரும், மருட்சியால் ஒருவேளை செய்துவிடினும் மனவருத்தப்படாதவரும் (ஆகிய தோசசித்துணைவர்கள்) உண்டு. அவர்கள் தந்தை தாய் கற்புடைமனைவி இளங்குழந்தைகள் முதலிய இவர்கள் பசித்திருப்பார்களாயினும், (மற்றையோரைப்போல) இழித்துரைக்கப்படும் தீச்செயல்களைச் செய்யத்துணியார் (இவ்வியல்பினர்) உலகமுற்றுங் காக்கு மன்னர்களுக்கும் இன்பஞ்செய்யும் அமைச்சர்களாவார்கள். எ - று

இச்செய்யுளால் தொழினலமுடையானைத் தழுவு எனக்கூறியதாம்.

இதனை, ஷை, வினைத்தூய்மை.

"என்று மொருவுதல் வேண்டும் புகழொடு - நன்றி பயவா வினை.
ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை - யாஅது மென்னு மவர்.
எற்றென் றிரங்குவ செய்யற்க செய்வானேல் - மற்றன்ன செய்யாமை நன்று.
ஈன்றாள் பசிகாண்பா னாயினுஞ் செய்யற்க - சான்றோர் பழிக்கும் வினை
சலத்தாற் பொருள்செய்தே மார்த்தல் பசுமட் - கலத்துணீர் பெய்திரீஇ யற்று."
என்பதனானும்,

பழமொழி

"ஆணை முடைய வறிவினாக் கந்நல
மாணு மறிவி னவரைத் தலைப்படுத்தன
மாண்மா கணனுய மறங்கெழு மாமன்னா
யானையால் யானையாத் தற்று."—என்பதனானுமுணர்க. (கOஎ)

ஊறுசேர் வினையைப் புரிதரா ரூழா லூறுவந் தடுப்பினுங் கலங்கார்
தேறுகா ரியத்தை முடிபபுழி யன்றிச் செயன்மொழி யாதியா விடையே
வேறுபோ மாறு விளக்குறா துணிந்த வினைதுளங் காதுவல் விரைவார்
வீறுசே ரிவரை யுருவுகண் டௌ்ளார் வேந்தனே வேந்தனு மைந்தர்.

(இ - ள்) மகனே! (காரியசமர்த்தராயுள்ளோர்) பழுதுபடத்தக்க கருமத்தைச் செய்யத்தொடங்கார், ஊழ்வினைவலியால் (தொடங்கிய கருமத்திற்கு) இடையூறு சம்பவித்தாலும் மனங்கலங்கார், தேறிய கருமத்தை முற்றுப்பெறுங் காலத்திலன்றிச் செய்கை வசனமுதலியவற்றால் வேறு போம்படி விளக்கமாட்டார்கள். செய்யத் துணிந்த கருமத்தை நீவிக்கின்மாக முடிக்க விரைந்து தீவிரப்படுவார்கள். (ஆதலால்) கீர்த்திபொருந்திய இவர்களுடைய உறவைப் பாராட்டிக்கொள்ளாத அரசனே அரசனாவான் எ - று.

இச்செய்யுளால் காரியசமர்த்தரைச் சேர்த்துக்கொள்ள எனக்கூறியதாம்.

இதனை, ஷை, வினைத்திட்பம்.

"ஊறொரா லுற்றபி னொல்காமை யிவ்விரண்டி - னாறென்ப ராய்ந்தவர் கோள்
கடைக் கொட்கச் செய்தக்க தாண்மை யிடைக்கொட்கி - னெற்றா விழுமந் தரும்
உருவுகண் டெள்ளாமை வேண்டு முருள்பெருந்தேர்க் - கச்சாணி யன்னா ருடைத்து.
கலங்காது கண்ட வினைக்கட் டுளங்காது - தூக்கங் கடிந்து செயல்"—என்பதனாலும்,

பாரதவெண்பா

"சூதினா லாகத்தன் றோள்வலி யானுக்
யாதினா லாயினுமவர் தெய்துமேற் - றீதெண்ணிச்
சூழ்வாரைத் தாமுன்னஞ் சூழ்வதே மன்னராய்
வாழ்வார்க் குள்ள வழக்கு"—என்பதனாலுமுணர்க. (௧௦அ)

துணிவுறு மளவுஞ் சூழ்ந்துபி னிரந்து சூழ்வினை பொருந்துமவா வெல்லாந், தணிவற முடித்த லதுதகா தாயிற் றருபொருள் வினையிடங் கால, மணியுறு கருவி யைந்துமாய்ந் திகலை யடாத்தலொட் டலாக்கழி வுறுங்கால், பணிவுசெய் தேனுங் காத்தன்முத் தொழிலும் பண்புடையமைச்சர்தந் தொழிலே.

(இ - ள்) முடிக்குமுபாயங்களனைத்தையும் நாடி, துணிவு பிறந்தபின், யோசித்த தொழிலைக்கூடியபோதெல்லாம் தணிவற நிறைவேற்றுதலும், அது தகுதியல்லாவிடில் (தனக்கும் பகைவர்க்கும்) உள்ள பொருள் முயற்சி இடம் சமயம் அழகுபொருந்திய சேனையென்னுமைந்தையும் நிதானித்து, (கூடுமானால்) பகைஞரை யெதிர்த்தலும், பகைவர்க்குத் தோல்வியுறுங்காலத்தில் இதப்படுத்தியாயினும் தன் வசமாக்கிக் கொள்ளுதலுமாகிய மூன்று தொழில்களும் நற்குணமுடைய மந்திரிகள் தொழிலாம். (ஆதலின் இத்திறத்தவரைச் சேர்த்துக்கொள்) எ - று.

இச்செய்யுளால் கருமவியலறிவானைக் கைவிடாதே எனக் கூறியதாம்.

இதனை, ஷை, வினைசெயல்வகை.

"சூழ்ச்சி முடிவு துணிவெய்த லத்துணிவு - தாழ்ச்சியுட் டங்குதல் தீது
ஒல்லும்வா யெல்லாம் வினைநன்றே யொல்லாக்கால் - செல்லும்வாய் நோக்கிச் செயல்.
நட்டார்க்கு நல்ல செயலின் விரைந்ததே - யொட்டாரை யொட்டிக் கொளல்"—என்பதனும்,

இன்னா நாற்பது.

"சிறையில் கரும்பினைக் காத்தோம்ப லின்னா
துறைசேர் பழங்கூரை சேர்ந்தொழுக லின்னா
முறையின்றி யாளு மரசின்னா வின்னா
மறையின்றிச் செய்யும் வினை."—என்பதனாலுமுணர்க. (௧௦௧)

குடிப்பிறந் திருநூல் கற்றறிந் தமைச்சர் குணங்களு முடையனாய்ச் சுற்றங், கட்டப்படு மரச னிட்டத்துறு மன்புங் கருதுவேற் றரசவாம் பண்பும், விடப்படா வின்சொல் வன்மையு முருவும் வெருவிருந் திண்மையு மருவி, யிடத்தொடு செவ்வி யறிந்துகா லத்துக் கேற்றவு முரைப்பவன் றூதன்.

(இ - ள்) (முற்கூறியபடி கருமம் முடிக்கவல்ல தூதரன்றிக் கற்பிதமான தூதரும் வேண்டும் அவர் தலைப்பட்டார் இடைப்பட்டார் கடைப்பட்டாரென மூத்திறப் படுவர். அவருள்) * தூதுசெலற்குரிய குலத்திற்றோன்றிப் பெரிய நூல்களைக் கற்றுணர்ந்து மந்திராலோசனைத் தகுதியுடையனாய், தன்னினத்தார் முறைமையுடைய மன்னவன் இவர்களிடத்தில் அன்பும், பிறமன்னர் காதலிக்குஞ் சீலமும், நீங்காத இனிய சொல்வன்மையும், (கண்டோர் விரும்பும்) சுலக்ஷணமும், அஞ்சாத திடசித்தமும் பொருந்தி, இடமும் (கேட்போரது) அவகாசத்திற்கேற்ப உரைக்கு மாண்புமுடையவன் தலைப்படு தூதனும் எ - று.

இது முதலிரண்டு செய்யுள்களால் ஏவல்புரிவானை யாள் எனக்கூறியதாம்.

இதனை, ௬௯, தூது.

"அன்புடைமை யான்ற குடிப்பிறத்தல் வேந்தவாம் - பண்புடைமை தூதுரைப்பான் பண்பு.
அன்பறிவா ராய்ந்த சொல்வன்மை தூதுரைப்பார்க் - கின்றி யமையாத மூன்று. [பு.
நூலாருள் நூல்வல்ல னாகுதல் வேலாருள் - வென்றி வினையுரைப்பான் பண்பு.
அறிவுரு வாராய்ந்த கல்வியிம் மூன்றன் - செறிவுடையான் செல்க வினைக்கு.
கற்றுக்கண் ணஞ்சான் செலச்சொல்லிக் காலத்தாற் - றக்க தறிவதாந் தூது.
கடனறிந்து காலங் கருதி யிடனறிந் - தெண்ணி யுரைப்பான் றலை."—என்பதனு னுணர்க. (கக௦)

உறுபொருள் காமம் விரும்புறுந் தூய்மை யுயிர்க்கழி வுறினுமஞ் சாமை, மறுபுலத் தமைச்சர் துணைமையாந் தன்மை வாய்மைசொற் சோரா வுறுந் துணிவு, மறுவற வுடையனாய் வழியுரைப்பான் மத்திமத் தூதனு முடங்கல், குறுகுக் கொடுப்பான் கடைப்படுந் தூதன் கூறிய விவையுந் தழீஇக்கொள்.

(இ - ள்) பொருந்திய பொருளையாயினும் காமத்தையாயினும் விரும்பாத புனிதத்தன்மையும், தனக்குப் பிராணபயம் வந்தாலுங் கலங்காமையும், வேற்றரசர் மந்திரிகளை நட்பாக்கிக்கொள்ளுந் தன்மையும், சத்தியமும், சொற்சோர்வுபடாத துணிவும், (ஆகியவற்றை) குற்றமற்றவுடையனாய் முறைப்படி சொல்வோன் இடைப்படு தூதனும். (தன் மன்னன் வரைந்தனுப்பிய லிகிதபத்திரத்தைக் குறிப்பிட்டவரிடஞ்) சென்று செலுத்துபவன் கடைப்படு தூதனும் சொல்லிய இந்த (மூன்றிற) தூதுவரையும் உரியவராகக்கொள் எ - று.

இதனை, ௬௯, ௬௯.

"தூய்மை துணைமை துணிவுடைமை யிம்மூன்றின் - வாய்மை வழியுரைப்பான் பண்பு.
விடுமாற்றம் வேந்தர்க் குரைப்பான் வடுமாற்றம் - வாய்சோரா வன்க ணவன்.
இறுதி பயப்பினு மெஞ்சா திறைவற் - குறுதி பயப்பதாந் தூது."—என்பதனானும்,

* தூதுசெலற்குரிய குலத்தினர் மறையோரு மன்னருமாவர். இதனை, **இலக்கணவிளக்கம்** அகத்திணையியல் —"வேத மாந்தர் வேந்தரென் றிருவர்க்குந் - தூது போதற் றொழிலுரித் தாகும்"—என்னுஞ் சூத்திரத்தானுணர்க.

பாரதவெண்பா

"தானறிந்த கூறுந் தலைமற் றிடையது
கோனறைந்த தென்று கூறுமாற் - றானறியார்
தோலையே காட்டுங் கடையென் றொருமூன்று
மேலையோ ராத்துணைத்து நாறு"—என்பதனானுமுணர்க (கக௧)

இறைசிறப்பாக வலியன நுகரா விளிந்து மெய்ம்மையாதிக டார், மற்றவை போதுமுரிமையின் மருவலொண்பொருள் வெவ்வினமன்னவன்முன், பிறர்செவி மொழிதல் பிறரொடு நகைத்தல் பேணுறும் பண்புவத் திளமை, முறைமதிக் கிகழ்தல் விருப்புறு வினையை முடித்திடுஞ் சேர்ந்தவர்க் காகா.

(இ - ள்) சிறப்பாக வேந்தன் பூணத்தக்கவை, புசிக்கத்தக்கவை, இனிமை பொருந்திய மெய்ம்மாடு முதலியவற்றைப் பொருந்துதல், அறைபோகுதல், உரிமையுடன் மருவுதல், ஒள்ளியபொருளை யபகரித்தல், இராசசமுகத்திருந்து பிறர்செவியில் (இரகசியஞ்) சொல்லுதல், மற்றையரோடு சிரித்துப்பேசுதல், பண்புதவறி நடத்தல், அரசன் இளைஞன் (இனன்) முறையுடையோனென்று இகழ்தல், அவனேவலொணாக் கருமத்தை நிறைவேற்றுதலாகிய இவையாவும் (இராசசேவையர்) சேர்ந்தவர்க்கு ஆகாதனவாகிய கருமங்களாம். எ - று.

இது முதலிரண்டு செய்யுட்களால் இராசசேவையாளர்ப்பொருந்துவனக் கூறியதாம்.

இதனை, தெ., மன்னரைச்சேர்ந்தொழுகல்

"மன்னர் விழைப விழையாமை மன்னரான் - மன்னிய வாக்கந் தரும்
போற்றி னரியவை போற்றல் கடுத்தபின் - றேற்றுதல் யார்க்கு மரிது.
செவிச்சொல்லுஞ் சேர்ந்த நகையு மவித்தொழுக - லான்ற பெரியா ரகத்து
இளைய ரினமுறைய ரென்றிகழார் நின்ற - வொளியோ டொழுகப் படும்
கொளப்பட்டே மென்றெண்ணிக் கொள்ளாத செய்யார் - துளக்கற்ற காட்சி யவர்.
பழைய மெனக்கருதிப் பண்பல்ல செய்யுங் - கெழுதகைமை கேடு தரும்."—என்பதனானுணர்க (கக௨)

குறிப்பொடு காலமறிந் திறைவிரும்பக் கோத்துப் பயன்மிகப் பயக்கும், வெறுப்பில வினையை விளம்பிவேண் டாத வினையினைக் கேட்பினும் விளம்பார், சிறப்புற வேனு மறைதானொப்பிடிற் கேட்பினல் லாது, மறப்பினுந் தொடரா ரோராதரா ரணுகார் மருங்ககலார் வினை வலித்தார்.

(இ - ள்) (அன்றியும், அரசன்) குறிப்பையும், சமயத்தையுமுணர்ந்து அவன் விருப்புற, குற்றமற்ற பெரும்பயனை விளைவிப்பதாகிய வெறுப்பில்லாத காரியத்தை (தாமேவலிந்து) சொல்லி, பிரியமில்லாதகாரியத்தை (அரசன்) கேட்டாலுஞ் சொல்லமாட்டார்கள்; தாம் சிறப்புப்பொருந்த அறியத்தக்கதாயினும் மன்னன் அந்தரங்கமாக வைத்தசங்கதியை அவனே சொல்லக்கேட்டாலன்றி, மறந்தும் உற்றுக்கேளார்கள், (தாமே) கிரகிக்கமாட்டார்கள், (பிறர்க்குவெளியிடாது அடக்குவார்கள்) அரசனிடம் நெருங்காமலும் விலகாமலும் சமயப்பட்டொழுகுவோர் தொழில்வன்மையுடையவர்கள்.

இதனை, ௭௦, ௭௦,

"அகலா தணுகாது தீக்காய்வார் போலக - விகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்
எப்பொருளு மோரார் தொடரார்மற் றப்பொருளை - விட்டக்கால் கேட்க மறை
குறிப்பறிந்து காலங் கருதி வெறுப்பில - வேண்டுப வேட்பச் சொலல்
வேட்பன சொல்லி வினையில வெஞ்ஞான்றுங் - கேட்பினுஞ் சொல்லா விடல்"—
எனபதனானும்,

ஆசாரக்கோவை

"பிறரொடு மந்திரங் கொள்ளா ரிறைவனைச்
சாரார் செவியோரார் சாரிற் பிறிதொன்று
தேரார்போ னிற்க தெரிந்து" — எனபதனானுமறிக (௧௧௮)

அந்தத்திடைக் குறித்த காரிய மந்தனை யையுறத் தவரவர் விழியான்,
முகத்தி னுலவிய வல்லவை யுறுங் முகமாம் விழி யிரண்டினு மன்றி, யகத்திடைத்
தனக்கு நிகழ்ந்திடுங் குறிப்பா லவரவ ரகக்குறிப் பறிந்து, மிகத்தெளி
பவனைக் கரிமுக னுறுப்புவி னிழவன் கொடுத்துமகொண் மைந்த.

(இ - ள்) மகனே! உள்ளத்திற்கருதிய காரியத்தைச் சந்தேகியாமல் அவரவருடைய பார்வையாலும் முகத்தாலும் அறியவல்லவனாகி, முகம் விழி இரண்டினுமன்றித் தன் மனத்துள் தோன்றப்படுங் குறிகளால் அவரவருடைய மனக்குறிப்பையுணர்ந்து, நன்குவெளிப்படுத்தத்தக்க குறிப்பறிபவனை (இராசாங்கப்பொருளாகிய) யானைமுதலிய (சதுரங்க) சேனைகளில் (அவன்) விரும்பிய பொருள்களைக் கொடுத்தாலும் (உனக்குத்துணையாக) வைத்துக்கொள் எ - று.

இச்செய்யுளாற் கருத்தறிபவனைச் சேர எனக்கூறியதாம்

இதனை, ௭௧, குறிப்பறிதல்

"ஐயப் படாஅ தகத்த துணர்வானைத் - தெய்வத்தோ டொப்பக் கொளல்
குறிப்பிற் குறிப்புணர் வாரை யுறுப்பினுள் - யாது கொடுத்துங் கொளல்.
முகநோக்கி நிற்க வமையு மகநோக்கி - யுற்ற துணர்வார்ப் பெறின்
நுண்ணிய மென்பா ரளக்குங்கோல் காணுங்கால் - கண்ணல்ல தில்லை பிற"—
எனபதனானும்,

நான்மணிக்கடிகை

"நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலந் தூக்கி
னகம்பொதிந்த தீமை மனமுரைக்கு மெல்லா
முகம்போல முன்னுரைப்ப தில்" — எனபதனானுமறிக (௧௧௯)

தொகைபடு செஞ்சொ லிலக்கணச் சொல்மேல் சூழ்ந்திடுங் குறிப்
புச்சொன் மூன்றின், வகையறிந் தாராய்ந் தொத்தவர் தாழ்ந்தோர்
தம்முண் முறைமையு மாய்ந்து, தகைபுற வியாந்தோ ரவையினுந் துணைப்
பாமதத்தினை வாதிலுங் கிளப்பார், நகைபடு தாழ்வி னன்றையு
மொழியார் நவைபடாச் சொற்பொரு ளாய்ந்தோர்

(இ - ள்) குற்றமற்ற சொற்பொருளாளர் தொகுதியாகிய செஞ்சொல் இலக்கணச்சொல் ஆலோசித்துக் குறிப்புச்சொல் இம்மூன்றின் வகையையுமறிந்து, மேம

பட்டோர் சமானஸ்தர் கீழ்ப்பட்டோர் என்னு மூவகையாயினார் பொருந்தியசபையை யாராய்ந்து, தகுதியாகிய உயர்ந்தோர்சபையில் (ஒன்றை) முற்படக்கூறுவர். சமானஸ்தர் சபையில் முற்படவாயினும் பிற்படவாயினுஞ் சொல்லுவர்கள் நகைக்கத்தக்க கீழோர் சபையில் ஒன்றுஞ்சொல்லமாட்டார்கள் (இத்திறத்தாரைச்சேர்த்துக்கொள்.) எ - று

இச்செய்யுளால், சபாநிர்வாகனைப் பரிபாலியெனக் கூறியதாம்.

இந்நூல், எஉ, அவையறிதல்.

"அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின் - றொகையறிந்த தூய்மை யவர்
இடைதெரிந்து நன்குணர்ந்து சொல்லுக சொல்லி - னடைதெரிந்த நன்மை யவர்
நன்றென்ற வற்றுள்ளு நன்றே முதுவருண் - முந்து கிளவாச் செறிவு
கற்றறிந்தார் கல்வி விளங்குங் கசடறச் - சொற்றெரிதல் வல்லா ரகத்து
உணர்வ துடையார்முற் சொல்லல் வளர்வதன் - பாத்தியு ணீர்சொரிந் தற்று
புல்லவையுட் பொச்சாந்துஞ் சொல்லற்க நல்லவையு - ணன்கு செலச்சொல்லு வார்
அங்கணத்து ளுக்க வமிழ்தற்றாற் றங்கணத்த - ரல்லார்முற் கோட்டி கொளல்"—
என்பதனானும்,

ஆசிரியப்பா

"குடிப்பிறப் புடுத்துப் பனுவல் சூடி
விழுப்பே ரொழுக்கம் பூண்டு காமுற
வாய்மைவாய் மடுத்து மாந்தித் தூய்மையிற்
காதலின் பத்துட னடங்கித் தீதறு
நடுவு நிலைநெடு நகர்வைகி வைகலு
மழுக்கா றின்மை யவாவின்மை யென்னு
மிருபெரு நிதியமு மொருதா மீட்டுந்
தோலா நாவின் மேலோர் பேரவை
யுடன்மரீஇ யிருக்கை யொருநாட் பெறுமெனிற்
பெறுகதி லம்ம யானே வரன்முறை
தோன்றுவழித் தோன்றுவழிப் புலவுப் பொதிந்து
ஞாங்கர் ஞாங்கர் நின்றுழி நில்லாது
நிலையழி யாக்கை வாய்ப்பவிம்
மலர்தலை யுலகத்துக் கொட்கும் பிறப்பே"—என்பதனாலுமுணர்க.

வல்லவ ரவையுட் கற்றதுஞ் சாது வகுத்துரைத் தவருணமிக் கான
நல்லவை கேட்பார் கற்றவர் தம்முன் னுற மதித்திடப் படுவார்
சொல்லவை யஞ்சிக் கற்றன செலுத்தாச் சோர்வினர் கற்றுங்கல் லாத
புல்லியரிருந்தும் பொன்றின ரன்றோ போற்றுக வவையஞ்சா தவரை.

(இ - ள்) கல்விவல்லோர் சபையில் மேலவுரமல தாம் படித்தவற்றை வகைப்படுத்தி அரங்கேற்றி, அவரிடத்துள்ள மேம்பட்ட நற்பொருள்களைக் கேட்டுக்கொள்ளுவோர் (மிக்க கல்லாராயினும்) கற்றவர்களிற் சிறப்பாக மதிக்கப்படுவோர்கள். சொல்லுகின்ற (அறிஞர்) சபைக்குப்பயந்து தாங்கற்றவற்றை வெளிப்படுத்தாதடக்குவோர் (மிக்க) கற்றவராயினும் (சிறிதுங்) கற்றறியாத அற்பமானவர்கள் (என்றிகழப்படுவோர்கள். இவ்வியல்பினர்கள் (இறந்தாலும் இருப்பவனாயும்) இருந்தாலும் இறந்தவனாயும் (முறையே) ஏத்தவாரர்கள். ஆனபடியால், சபைக்கஞ்சாதவர்களையே நீ போற்றக் கடவாய். எ - று

இச்செய்யுளால் அவையஞ்சாதவனாகவேண்டு மெனக் கூறியதாம். (ககசு)

இதனை, தெ, அவையஞ்சாமை.

"வகையறிந்து வல்லவை வாய்சோரார் சொல்லின் - றொகையறிந்த தூய்மை யவர்
கற்றாருட் கற்றா ரெனப்படுவர் கற்றார்முற் - கற்ற செலச்சொல்லு வார்
கற்றார்முற் கற்ற செலச்சொல்லித் தாங்கற்ற - மிக்காருண் மிக்க கொளல்
பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையு - ணன்கு செலச்சொல்லா தார்
கல்லா தவரிற் கடையென்ப கற்றறிந்து - நல்லா ரவையஞ்சு வார்.
உளரெனினு மில்லாரோ டொப்பர் களனஞ்சிக் - கற்ற செலச்சொல்லா தார்."—
என்பதனானும்,

நீதிநெறிவிளக்கம்

"அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியுங் கல்லார்
அவையஞ்சா வாகுலச் சொல்லு—நவையஞ்சி
யீத்துண்ணார் செல்வமு நல்கூர்ந்தா ரின்னலமும்
பூத்தலிற் பூவாமை நன்று"—என்பதனானுமுணர்க (ககஎ)

இருபுனல் வாய்ந்த மலைவரு புனலு மிடைவிய நகர்களு முடைத்தாய், எந்நாளும் பொருளு மொழிவற விளைக்கும் பெருங்குடி களுங் கலங்கா தவரும், பொருள்பல வீட்டுஞ் செல்வரு மறையோர் புரையறு தவத்தினர் துறவோர், மருளறு கலைஞ ராதியோர் பலரு மன்னிவாழுந் திருப்பது நாடு.

(இ-ள்) இருவகை (நிலப்பு) நீரும், பொருந்திய மலையினின்றொழுகும் ஆற்றுநீரும் (மலையும்) பொருந்திய நகரங்களுமுடையதாய், எப்பொருள்களும் நீங்காமற் பெருகும்படி விளைவிக்குங் குடிகளும், மரக்கலமூர்ந்துங் காலகொடு நடந்தும் (கொள்வினை கொடைவினைகளாகிய பண்டமாற்றுதலால்) பல பொருள்களை யீட்டும் (வியாபாரச்) செல்வர்களும் அந்தணர் தவசியர் துறவியர் மயக்கற்ற கலைவல்லோர் முதலிய பலரும் பொருந்தி வாழ்ந்திருப்பது நாடு எனச் சொல்லப்படும் எ-று.

இதுமுதன் மூன்று செய்யுட்களால் நாட்டை வளப்படுத்து னகக்கூறியதாம்

இதனை, தெ, நாடு.

"தள்ளா விளையுளுந் தக்காருந் தாழ்விலாச் - செல்வருஞ் சேர்வது நாடு
இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும் - வல்லரணு நாட்டிற் குறுப்பு"—என பதனானுணர்க (ககஎ)

பழுதுபிற நாட்டிற் கயவர்கள் சாதி பற்றுசங் கேதத்தி னீண்டுங், குழுவுமா றிலக்குங் களவு பொய் குறளை கூறுவோர் பன்றிமான முதலாயக், கெழுவுறு பகையு மளவுபாராத் தரையைக் கெடுக்குங்கொல் குறும்பரு மிகக், மழைமறை யின்மை யெலிகிளி விட்டின மன்னராற் கோளு மாமைந்தா

(இ-ள்) மகனே! கடவுளர்களையுஞ் சாதிகளையும் பற்றிய சங்கேதத்தினாற் பிரிந்து ஒருமையுற்றிருக்குங் கூட்டமும், வழிப்பறிக்குங் கள்வரும், பொய்யர்களும், குறளை சொல்வோரும், பன்றியும், மான்முதலிய உட்பகையும், (உதவியோனின்று)

சமயம் பார்த்து அரசை யழிக்கும் குறுநில மன்னரும், மழை மிகுதியும், மழையின்மை யும், எலியும், கிளியும், விட்டிலும், முதலியவற்றாலும் வேறு ஏதுக்களாலும் இடையூறு நேரிடுதலின் (இவை யாவும்) நாட்டைக் கெடுப்பவையாய் இருக்கின்றன எ-று.

இதனை, திரு, கு

"பெரும்பொருளாற் பெட்டக்க தாகி யருங்கேட்டா - லாற்ற விளைவது நாடு
பலகுழுவும் பாழ்செய்யு முட்பகையும் வேந்தலைக்குங் - கொல்குறும்பு மில்லது
நாடு"—என்பதனாலுணர்க.

கொல்குறும்பு —இதில் "கொல்லேல் லையய மசைந்திலை கூறுவ" —என்றதால், சொல் என்பதனையசைச்சொல்லென்றுவது, பொல்லாத்தக்க என்பபொருட்படுத்தியாவதுகொள்க (கசஅ)

ஆதலிற் குடிக ளாதியோர் தொகவு மழிவுசெய் குழுமுத லகன்று
போதவுங் காவல் புரிபிணி யின்மை புகழ்திரு விளைவின்ப மிலைந்துங்
கோதற நாளு மிகவுள தாகுங் குலைந்தய லுடைந் தேறினு
மேதகத் தாங்கும் வருந்துறு தெவ்வையும் வேண்டுழி யளித்திடு மைந்தா.

(இ - ள்.) மகனே! ஆனபடியால், (மேற்கூறிய) குடிகள் முதலியோர் கூடி யிருக்கவும், தீமைவிளைக்குங் கூட்டத்தார் முதலியோர் தொலைந்துபோகவும், (நாட்டைச் சீர்ப்படுத்தி) ஆள்க (அவ்வாறுள்ளாயாயின், அந்நாடு) நோயின்மையும், கீர்த்தியும் செல்வமும், பயிர்விளைவும், சுகமுமுதலிய வெல்லாவற்றையுங் குற்றமற நாடோறும் பெருகவுள்ளதாகும், மற்றேசக்குடிகள் (கொடுங்கோன்மையாதிகளால்) தமது நாடிழந்து வந்தாலும் மேன்மைப்படக்காக்கும் வருத்தமடையாது (வேண்டிய) எல்லாவற்றை யும் வேண்டியகாலத்திற் கொடுக்கும் எ - று.

இதனை, திரு, கு

"பொறையொருங்கு மேல்வருங்காற் றாங்கி யிறைவற்-கிறையொருங்கு நேர்வது நாடு.
பிணியின்மை செல்வம் விளைவின்ப மேமம் - மணியென்ப நாட்டிற்கிவ் வைந்து
நாடென்ப நாடா வளத்தன நாடல்ல - நாட வளந்தரு நாடு"—என்பதனாலும்,

ஆசிரியமாலை,

"தாமரை யொண்கிழங்கு விரவியோ ராங்குத்
தருமலங் குமிழிரக் கொழுமுகந் தியக்கிய
பழஞ்சேற்றுப் பரப்பிற் பருமுத லெடுத்து
நெடுங்கதி ரிறைஞ்ச வாங்கிக்கால் சாய்த்து
வாளிற் றுமித்த சூட்டு மாவின்
சினைகளைந்து பிறக்கிய போர்பெய் யெருத்தினை
கவையடி வைத்த வுணவே மருதின்
கொழுநிழற் குவைஇய குப்பையோ டனைத்தினும்
பலர்மகிழ் தூங்க வுலகு புறந்தரூஉ
மாவண் சோழ நாடோறு
மொரோரர சனவழி வாழிய நெடிதே"—என்பதனாலுமறிக (கசகூ)

மருங்குநீர்க கிடங்கு வெள்ளிடை கான மலையுற வகன்றுயர்ந் துர
ங்கொள், டொருங்குபல் பொறியு மணிந்தும் பிடக்கா யுறுசிறு கா

பினல் வீரர், நெருங்குபல பொருளுந் தழுவியெந் திறத்து நேரலர் கொளப்படாதாகிச், சுருங்கையர் திகளும்பொதிந்தகத் துறைவோர் தொழிலினிதாற்றுவ தரணே

(இ - ள்) (அரசனிருப்பிடம் அரணமனையென்பர் ஆதலின்) அரணென்று சொல்லப்படுவது சமீபத்தில் நீரரணும் நிலவரணும் காட்டரணும் மலையரணும் பொருந்த (நால்வகைப்பட்டு) அகன்று உயர்ந்து வலியுற்று (இயந்திரநூலோரால் ஆயுத முதலியன பிரயோகித்து எதிரிகளை வெல்ல வகுத்திருக்கும்) எல்லாச்சூத்திரங்களு மமைந்து இடத்தாற் பெரிதுமாய், சிறுகாப்பினையுடைய நல்ல வீரராலும் நெருங்கிய (உணவாதி) பலபொருள்களாலுங் குறைவற்றதாய், பகைவர் எவ்விதத்தாலாயினுங் கொள்ளற்கரியதாய், நுழைவாயில் முதலியவைகளும் மறைவுபட வியற்றப்பட்டு உள்ளிருப்போர் தத்தந்தொழிலை இனிதாக இயற்றவமைந்ததாயுள்ளதாம் எ - று.

இச்செய்யுளால் அரணைக்காக்கவென்க கூறியதாம்.

இதனை, ஷை, அரண்,

"மணிநீரு மண்ணு மலையு மணிநிழற் - காடு முடைய தரண
உயர்வகலந் திண்மை யருமையிந் நான்கி - னமைவர ணென்றுரைக்கு நூல்.
சிறுகாப்பிற் பேரிடத்த தாகி யுறுபகை - யூக்க மழிப்ப தரண
கொளற்கரிதாய்க் கொண்டகூழ்த் தாகி யகத்தார் - நிலைக்கெளிதா நீர தரண
எல்லாப் பொருளு முடைத்தா யிடத்துதவு - நல்லா ளுடைய தரண"—என்பத னானும்,

கம்பராமாயணம்

"மேவர வுணர முடிவிலா மையினால் வேதமோ மொக்குமவிண் புகலாற்
றேவரு மொக்கு முனிவரு மொக்குந் திண்பொறி யடக்கிய செயலாற்
காவலிற் கலையூர் கன்னியை யொக்குஞ் சூலத்தாற் காளியை யொக்கும்.
யாவருமொக்கும் பெருமையா லெய்தற் கருமையா லீசனை யொக்கும்."—என்பத னானுமறிக- (கஉ0)

அருள்கொடு பரக்கப் படுங்குடி யன்போ டளித்திடு மாறினி லொன்று, மிருநிலத் தெடுத்த பழம்பொரு ளுரிமை யின்றியே யிறந்தவர் பொருளு, மருவிய சுங்கப் பொருளுமொட் டலரை மாட்டிய பொருளு மீட்டுகவிப், பொருளறப் பின்பம் புகழ்தரும் பகையைப் புரட்டுமெவ் வினைகளு முடிக்கும்

(இ - ள்) (அரசன் எப்பொருட்டு மிறைவனுயினும் பொருளீட்டற்குரிய நல்வழிகளைக்கேள்) கருணையோடு காக்கப்படுங் குடிகள் மனங்கோணாது கொடுக்கும் ஆறிலொருபங்கு கடமைப்பொருளும், பெரிய பூமியினின் றெடுத்த பழமையாகிய (புதையற்) பொருளும், நிரத்தாரமாய் இறந்தோர்பொருளும், பொருந்திய ஆயத் துறைப்பொருளும், சத்துருக்களை வென்றதால் வருங்கப்பப்பொருளுமே ஈட்டக் கடவாய இத்திறப்பொருள் தருமத்தையுஞ் சுகத்தையுங் கீர்த்தியையுங் கொடுக்கும். பகைவரைமாற்றும், (எடுத்த) காரியங்களையெல்லாஞ் சித்தியடையச் செய்யும்

இச்செய்யுளாற் பொருட்குவை தேடு எனக்கூறியதாம்

இதனை, ௭௬, பொருள்செயல்வகை

"அறனீனு மின்பமு மீனுந் திறனறிந்து - தீதின்றி வந்த பொருள்
அருளொடு மன்பொடும் வாராப் பொருளாக்கம் - புல்லார் புரள விடல்
உறுபொருளு முல்கு பொருளுந்தன் னொன்னார்த் - தெறுபொருளும் வேந்தன் பொருள்.
குன்றேறி யானைப்போர் கண்டற்றாற் றன்கைத்தொன் - றுண்டாகச் செய்வான் வினை.
செய்க பொருளைச் செறுநர் செருக்கறுக்கும் - எஃகதனிற் கூரிய தில்" — என்பதனானும்,

சீவகசிந்தாமணி

"செய்கபொருள் யாருஞ்செறு வாரைச்செறு கிற்கும்
எஃகுபிறி தில்லையிருந் தேயுயிரை யுண்ணும்
மையமில்லின் பமறனோ டெவையுமாக்கும்
பொய்யில்பொரு ளேபொருண்மற் றல்ல பிறபொருளே" — என்பதனானு மறிக (௧௨௧)

கரிபரி யிரதந் தானையு மமைந்து கருதூஉ நடுங்கு திகலேரந
திரிதரப் பொருது வெல்வதெப் படைக்கா லெனத்துகூ லிப்படை நாட்டுப்
பரிபடை காட்டுப் படைத்துணைப் படைகைப் படைமூலப் படையென வா
தெரிபடை யிவற்றுட் சிறந்தது மூலப் படையிது சிறந்தவர் வீரர்.

(இ-ள்.) (படைச்செல்வம் அவசியமானது அப்படை) யானை குதிரை தேர் காலாளென்னு நாலங்கத்தாலுமமைந்து, கூலிப்படை நாட்டுப்படை காட்டுப்படை துணைப்படை கைப்படை மூலப்படை யென ஆறுவகையாலுங்குழுமி (எதிரேறுங் கால்) வரும் இடையூறுகளுக்கு அஞ்சாமல், பகைமன்னர் ஓடும்படி போர்செய்து வெல்லத்தக்கதேயாம் சொல்லிய இப்படையாறனுள் மூலப்படை சிறந்தது இதிலுஞ்சிறந்தவர்கள் வீரர்களே எ-று.

இதுமுதலிரண்டு செய்யுள்களாற் சேனையைப்பரிபாலி யெனக்கூறியதாம்

இதனை, ௭௭, படைமாட்சி

"உறுப்பமைந் தூறஞ்சா வெல்படை வேந்தன் - வெறுக்கையு ளெல்லாந் தலை
உலைவிடத் தூறஞ்சா வன்க ணொலைவிடத்துத் தொல்படைக் கல்லா லரிது" — என்பதனானறிக (௧௨௨)

விளையவன் பகைமை வெல்லுமவ் வண்மை வேந்துதா ழாவகைக்
காக்கும், புரையறு மானம் போரினுக் கினைப் பொருதடா வொளியறைப்
போகா, வரையறு தேற்ற முடையரே யாயினும் வறுமையுஞ் சிறுமையும்
வெறுப்பு, நிறைதரின் வெல்லா தலைவரில் வழிபு நோந்திரும் பகைகளை
வெல்லார்.

(இ-ள்.) வலியபகைவரை விரைந்து அடாக்கும் அஞ்சாமையும், அரசன் கையினைத்தும் போகாது காக்குஞ் சமானமில்லாத மானமும், போர்முனையிற் பகைவர் தோடினவர்களை (தொடர்ந்து) போர்செய்து வெல்லாத கீர்த்தியும், அறைபோகாநிலையும், வரையறுக்கப்பட்ட தேற்றமுமுடையவரே (படைவீரர் இத்தன்மைய படைஞரே) யாயினும், (பரிபாலிப்பவனால்) தரித்திரமும் சிறுமையும் வெறுப்புமுற்று மனமடிந்தால் (தலைவனே யிருந்தேவிடினும்) பகையை வெல்லமாட்டார்கள். (மேற்கூறியகுறை

வுகளிலலாவிடின அரசனிருநதேவாவிடினும) தாமே யெதிாததுப பெரிய பகைவனா வெலவார்கள எ - று.

இதனை, ஷை., ஷை,

'மறமான மாண்ட வழிசசெலவு தேறற - மெனநானகே யேமம படைககு
சிறுமையுஞ செலலாத துனியும வறுமையு - மிலலாயின வெலலும படை''—என
பதனாலும,

வெண்பாமாலை.

'மினனார சினஞசொரிவேன மீளிக கடறறானை
யொனனார நடுஙக வுலாஅயபபின - னெனறுஞசொ
லாழிததோ வெலபுரவி யணணன மதயானைப
பாழிததோண மனனா படை''—எனபதனாலுமறிக (கஉந)

வேலெறிந வரினும விழிததகண ணிமைபபா வீறுமெய யூறுகா ணுமே
யாலிய சினததி னூழிலாட டயரு மாணமையு மழியினல லாது
நிலைகுலைந தெயயா தகைமை யாக திறமும வேநதுயிா பினறுஞசெல
வாவிய மறறு மனனரகண ணுருபப மடிதலும படைசசெருக காகும

(இ - ள) (பகைவாசெலுததிய) வேறபடை யெதிாததுவநதாலும (பயநது) விழிததிருநத கணகளை யிமையாத வீறும, தமதுடற காயம நோககாது மிககோபத துடன போாபுரியும ஆணடனமையும, இறநதாலலலாமற் சபதப்படி முடிபபதிற றளராததிறமையும, அரசன தபபிலுந தபபிககபபடாதேறபவராய அரசன கணணீா சொரிய (அவனபொருடடு)உயிாவிடுதலும படைசசெருககெனபபடும எ - று

இசசெயயுளால வீரனைமேமபடுதது எனபகூறியதாம.

இதனை, ஷை படைசசெருககு

"கைவேல களிறறொடு போக்கி வருபவன - மெயவேல பறியா நகும
விழிததகண வேலகொண டெறிய வழிததிமைபபி-னோட்டனறோ வனக ணவாககு
உரிறுயி ரஞசா மறவ ரிறைவன - செறினுஞசீா குனற லிலா.
இழைதத திகவாமைச சாவாரை யாரே - பிழைதத தொறுககிற பவா.
புரநதாாகண ணீாமலகச சாகறபிற சாககா - டிரநதுகோட டககது டைததது''—
எனபதனாலும,

சீவகசிந்தாமணி

"பைமபொற புளகப் பருமசகளி யானை யீடடஞ
செமபொன னெடுநதோத தொகைமாககடற றனை வெளள
நமபன சிலைவாய நடககுஙகணை மிசசி லலலா
லமபொன மணிபபூ ணரசுமிலை யெனறு நககான'' — எனபதனானு
முணாக (கஉச)

அழிந்த நெறியிற் செலவினை விலககி யாமைமேற செலுததிய விழியா, வழிவுவந தடுபபி னததககூட னலலாந தாககுகைவே றனறியா ருயிாக, ளொழிவதை யினறி யுணாபசியொத தருநா ளுணாதொறு முறு நயமபோல, கழிககிழ நாளும பயிரொறும வளரக கலபபமேத நடபெ னப படுமால

(இ - ள்) துணையாகத்தக்கிற செல்வத்தைத் தேடித் தருதலும், நண்மாகத்தக்கிற செலுத்தியும், விதிவலியால் கேடு சமயவிசத்தால் அதனைப் பகிர்ந்து தருதலும், உடம்புகட்கொழிவுவந்தாலன்றி உயிர்கட்குள் வேறுபாடு தோன்றுமல், அகமுகத்தாலொற்றுமைப்பட்டு, அரிய நூல்களை யாராயுந்தோறும் விளையும் இன்பம்போல மிகக இன்பம் நாளாவண்ணம் பழகுந்தோறும் வளரும்படி சிநேகிப்பதே சிநேகமென்று சொல்லப்படும்.

இச்செய்யுளாற் சிநேகங்காப்பாற்று எனச்சுறியதாம்

இதனை, ஷ, நட்பு

"நவிறொறு நூனயம் போலும் பயிறொறும் - பண்புடை யாளர் தொடர்பு,
புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதா - னட்பாங் கிழமை தரும்
அழிவி னவைநீக்கி யாறுய்த் தழிவின்க-ணல்ல லுழப்பதா நட்பு' —என்பதனுலும்,

நாலடியார்

"நறுமலர்த் தண்கோதாய் நட்டார்க்கு நட்டார்
மறுமையுஞ் செய்வதொன் றுண்டோ—விறமளவு
மின்புறுவ தின்புற றிரீஇ யவரோடு
துன்புறுவ துன்புறற் கால்"—என்பதனுலுமறிக (கஉ௬)

நன்மதி யுடைமை குடிகுணங் குற்ற நல்வினைத் தானுமெத் திறத்தும், பன்முறை யாய்ந்து நட்பினைக் கொளக் பாம்பொடும் பழகினும் பிரித, வினைமயா மநது லாயந்தலா லொருவ ரிடத்துநட் புறேனுமி னவாசெய, புன்மையும் பழியும் புணர்ந்திரு பயனும் போக்குவ துணைமை புக் கிலோ.

(இ - ள்) புத்திரனே! நற்புத்தி யுடைத்தாயிருத்தல் - உயர்குடிப்பிறப்பு - குணம் குற்றம் - நல்வினைத்தோடொழுகல் முதலிய எவற்றானும்பலதரம்பரிசோதித்து (ஒருவர்) நட்பைக்கொள்வராயாக பாம்புடன் நட்புக்கொண்டாராயினும் பிரிதலரிதாம். ஆதலால் ஆராய்ச்சி செய்தாலன்றி ஒருவரிடத்து நீ நட்புக்கொள்ளாதே (அப்படிப் பரிசோதியாது (நட்பு) கொள்வாயாகில், அவர்செய்யும் அற்பத்தன்மையும் பழியும் ஆகிய இவற்றிற்குட்பட்டு இம்மை மறுமைப்பலன்களை யிழப்பது சத்தியம் எ-று

இச்செய்யுளால் இனமறிந்து பழகுளனக் கூறியதாம்

இதனை, ஷ, நட்பாராய்தல்

"நாடாது நட்டலிற் கேடில்லை நட்டபின் - வீடில்லை நட்பாள் பவர்க்கு.
ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை - தான்சாந் துயரந் தரும்
குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்றா - வினனு மறிந்தியாக்க நட்பு
மருவுக மாசற்றார் கேண்மையொன் றீத்து - மொருவுக வொப்பிலார் நட்பு"—என்பதனுலும்,

திரிகடுகம்

"தாளாள னென்பான் கடன்படா வாழ்பவன்
வேளாள னென்பான் விருந்திருக்க வுண்ணாதான்
கோளாள னென்பான் மறவாதா னிம்மூவர்
கேளாக வாழ்த லினிது"—என்பதனுலுமறிக (கஉஎ)

கெடுதியி னுதவ வல்லவா நட்பாற் கொண்டிடா தொன்றனைச் செயினும், கெடுமவைக் செய்தல் வேண்டின் தாமே கெழுவுதல் பணிவச்ச

யின்மை, படுதரு மூழிற் புரியினு மவற்றைப் பழமையென் றறிந்துள மூவப்பி, னெடுநில முழுதுங் கேண்மையா மைந்தர் நேரலார் தாமுங்கே ளாவர்.

(இ - ள்) மகனே! உனக்கு ஆபத்துக்காலத்திலுதவிசெய்யத்தக்கவர் உரிமையின்பேரில் உன் அநுமதியின்றி யோர்கருமத்தைச் செய்தாலும், விதிவசத்தால் உனக்கொரு கேடு செய்தாலும், வேண்டுவனவற்றை யபகரித்துக் கொண்டாலும், கீழ்ப்பணிதலும் அச்சமுமில்லாது நடந்தாலும், (விசனப்படாமல்) இவைபழவினையால் நிகழ்ந்தவையென்றுணர்ந்து மனமகிழ்ந்தால், பெரிய உலகினர் யாவரும் நட்பாளராவர் (அவ்வளவேயன்றி) சத்துருக்களும் நட்பாவார்கள். எ - று

இச்செய்யுளாற் பழைமைபாராட்டு என்றக்கூறியதாம்.

இதனை, ஷை, பழைமை

"பழைமை யெனப்படுவ தியாதெனின் யாதுங் - கிழமையைக் கீழ்ந்திடா நட்பு
விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற் - கேளாது நட்டார் செயின்
பேதைமை யொன்றோ பெருங்கிழமை யென்றுணர்க - நோதக்க நட்டார் செயின்.
கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை - விடாஅர் விழையு முலகு.
விழையார் விழையப் படுப பழையார்கட் - பண்பிற் றலைப்பிரியா தார்"—என்பதனாலும்,

நாலடியார்

"இன்னா செயினும் விடற்பால ரல்லாரைப்
பொன்னாய் போற்றிக் கொளல்வேண்டும்—பொன்னோடு
நல்லில் சிதைத்ததீ நாடோறு நாடித்தம்
மில்லகத் தாக்குத லான்"—என்பதனாலுமறிக (௧௨௭)

காதல ரேனும் விடுவிலே மாதர் களவிற் றமக்குறல் குறிப்போர்
பேதையர் கெடுதி யுற்றுழி யுதவார் பெரும்பொரு ணகுலித்துப் பழிப்பார்
ராதரு கருமந் தம்மினாற் காத் தாகவே நடிப்பவ ருளமு
மோதலு மொவ்வார் மனைக்கெழீஇ மன்றி னுறப்பழிப் பாரிவர் தமையே.

(இ - ள்) பொதுமகளிரையுஞ் சோரரையும்போல (பிறர் துயர் கருதாது) தம்பயனொன்றைக்குவோரும், மூடரும், ஆபத்துக்காலத்தி லுதவாதவரும், பெரும்பொருளை யெதிர்பார்க்குவோரும், செய்யத்தக்க காரியங்களைத் தம்மாற் சாதிக்கப்பட்டாவென்று நடிப்போரும், மனமுஞ் சொல்லு மொவ்வாதவரும், வீட்டி லொற்றுமையுற்று வெளியிற் பழிப்பவரும் ஆகிய இவர்கள் பக்ஷமுடையவர்களாகக் காணப்படினும் (இவர்களுடன் சிநேகிக்கவேவேண்டாம்) இவர்கள் நட்பை விடுக. எ - று.

இச்செய்யுளால் ஆகாநட்பினை யொழியெனக் கூறியதாம்

இதனை, ஷை, தீநட்பு.

"பருகுவார் போலினும் பண்பிலார் கேண்மை - பெருகலிற் குன்ற லினிது.
உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது - கொள்வாருங் கள்வரு நேர்
அமரகத் தாற்றறுக்குங் கல்லாமா வன்னார் - தமரிற் றனிமை தலை.
ஒல்லுங் கரும முடற்று பவர்கேண்மை - சொல்லாடார் சோர விடல்.
கனவினு மின்னாது மன்னோ வினைவேறு - சொல்வேறு பட்டார் தொடர்பு

எனைத்துங் குறுகுத லோம்புதன் மனைக்கெழீஇ - மன்றிற் பழிப்பார் தொடர்பு"— என்பதனானும்,

இன்னா நாற்பது.

"பகல்போலு நெஞ்சத்தார் பண்பின்மை யின்னா
நகையாய நண்பினார் நாரின்மை யின்னா
இகலி லெழுந்தவ ரோட்டின்னா வின்னா
நயமின் மனத்தவர் நட்பு"—என்பதனானுமுணர்க (கஉஅ)

நல்லன பலநூல் கற்பினுங் கூடா நட்பினர் மனநல னெய்தார், சொல்லின்முன் வணங்கும் வணக்கமுந் தொழுலுஞ் சொரிந்தகண் ணீருந் தப்பாது, கொல்லுமவன் படையா மாதலிற் பகையுட் கொண்டவாக் கவரென நீயு, மொல்லுக வதுவே நீக்குறுங் கால முற்றுழி யல்லது வேண்டா.

(இ - ள்.) (அகத்திற் பகையும் புறத்தில் நட்புமுடைய) கூடாநட்பினர் நல்லனவாகிய பல நூல்களைக் கற்றாலும் நன்மனமுடையவராகார் சொல்லுக்கு முன்னே வந்திக்கும் வந்தித்தலும், பணிதலும், கண்ணீர் சொரிதலும் (இதமாகக் காணப்படினும்) தப்பாமற்படி கொல்லுகின்ற வலிய கருவியாகவேயிருக்கும் ஆதலின் (அவ்வகைய) உட்பகையுடையவருக்கு அவர்போலவே நீயுமொத்திருக்கக்கடவாய் அவரை நீருப்பதற்குங் காலமொற்றுமையில்லாவிடின், அல்லது வேண்டுவதில்லை. எ - று

இச்செய்யுளாற் கூடாநட்பினரை விலக்கெனக்கூறியதாம்

'இதனை, ஷை, கூடாநட்பு.

'பலநல்ல கற்றக் கடைத்து மனநல்ல - ராகுதன் மாணார்க் கரிது
நட்டார்போ னல்லவை சொல்லினு மொட்டார்சொ - லொல்லை யுணரப் படும்
சொல்வணக்க மொன்னார்கட் கொள்ளற்க வில்வணக்கந் - தீங்கு குறித்தமை யான்.
தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னா - ரழுதகண் ணீரு மனைத்து.
மிகச்செய்து தம்மெள்ளு வாரை நகச்செய்து - நட்பினுட் சாப்புல்லற் பாற்று.
பகைநட்பாங் காலம் வருங்கான் முகநட் - டகநட் பொரீஇ விடல்"—என்பதனானும்,

நாலடியார்

"உள்ளத்தா னள்ளா துறுதித் தொழிலராய்க்
கள்ளத்தா னட்டார் கழிகிழமை—தெள்ளிய
புன்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட
மனந்துக்கண் மாசாய் விடும்"—என்பதனானுமறிக (கஉகூ)

பழிமுதற் றுஞ்சார் செய்வன தவிர்வர் பார்த்திடார் குடிப்பிறப் பொழுக்க, மெழில்வளர் கல்வி யாதிகள் பேணா ரெவரையு மழிக்குஞ்சொற் செயலார், கழிமகிழ் வுடையார் கெடுதிகொண் டாக்கங் கைவிடா ரச்செல்வ முறினுங், கொழிப்பய னெய்தார் பிறர்க்கலாற் றமக்குக் கொடாரிவர் பேதைய ரொழிக.

(இ - ள்) பழிமுதலியவற்றிற்கு நாணாதவரும், செய்யத்தக்கவையும் விலக்கத்தக்கவையும் இவையென்பு பாராதவரும், குடிப்பிறப்பு ஒழுக்கம் கீர்த்திபொருந்திய கல்விமுதலியவற்றைக் காவாதவரும், எத்தன்மையரிடத்தும் முகமுறிக்கும் வார்த்தை

யுஞ் செயலுமுடையவரும், மட்டற்ற களிப்பின் மூழ்கியிருப்பவரும், நட்டத்தைக் கைக்கொண்டு இலாபத்தை யிழப்பவரும், செல்வமுற்றலும் பெரும்பலனைத் தாமுமடையாதவரும், அயலாராகலல்லாமல் உறவினருக்குங் கொடாதவருமாகிய இவர்கள் பேதையர்கள். இவர்கள் நட்பினையொழிக எ - று

இச்செய்யுளாற் பேதைமையுடையோரை யகற்று எனக் கூறியதாம்.

இதனை, ஷை, பேதைமை

"பேதைமை யென்பதொன் றியாதெனி னேதங்கொண் - டூதியம் போக விடல்
நாணாமை நாடாமை நாரின்மை யாதொன்றும் - பேணாமை பேதை தொழில்
ஓதி யுணர்ந்தும் பிறர்க்குரைத்துந் தானடங்காப் - பேதையிற் பேதையா ரில்.
ஏதிலா ரார்த் தமர்பசிப்பர் பேதை - பெருஞ்செல்வ முற்றக் கடை
மைய லொருவன் களித்தற்றாற் பேதைதன் - கையொன் றுடைமை பெறின்"—
என்பதனாலும்,

பழமொழி.

"தெரியாதார் சொல்லுந் திறனின்மை தீதாப்
பரியார் பயனின்மை செய்து—பெரியார்சொற்
கொள்ளாது தாந்தம்மைக் காவா தவர்பிறரைக்
கள்ளறச் செய்குறு வார்"—என்பதனாலுமறிக (கா0)

தன்னையெப் பொருளு மறிந்தவ னாகத் தானமிக மதிக்கும்புல்லறிவின, னன்மையை யுடையா னுறுதிசொற் கேளான் வல்லதல் லாதுங் கொண்டு ரைத்துப், புன்மையைத் தெறிப்பா னவைபுரிந் தாலேகா போனடிப் பான்றனை யுணர்ந்து, நன்மதி யின்னா யறிவில ராக நாட்டுவா னிவனையு நண்ணேல்

(இ - ள்) தன்னை யெல்லாப்பொருளு முணர்ந்தவனாகத் (தன்னைத்) தானே மிகவுமதிக்கின்ற புல்லறிவினவனுமையுடையவனும், (அறிஞர் கூறும்) உறுதிப்பொருளைக் கேளாதவனும், பொருளல்லாததைப் பொருளாகப் பிதற்றி அறிவின்மையை வெளியிடுபவனும், (ஒருவருமறியாது) குற்றத்தைச்செய்து (புறத்தில்) உலகினர்போல நடிக்கின்றவனும், தன் தீயொழுக்கங்களை வெளியிடும் நல்லவிவேகிகளை யறிவிலாதவர்களாகத் தீர்மானிப்பவனும் ஆகிய இத்தன்மையுடையவனை (நீ ஒருபொழுதும்) சேர்ந்துகொள்ளாதே எ - று

இச்செய்யுளால் வெளிற்றறிவினனை விடுகவெனக் கூறியதாம்

இதனை, ஷை, புல்லறிவாண்மை

"வெண்மை யெனப்படுவ தியாதெனி னொண்மை-யுடையம்யா மென்னுஞ் செருக்கு
கல்லாத மேற்கொண் டொழுகல் கசடற - வல்லதூஉ மையந் தரும்
அற்ற மறைத்தலோ புல்லறிவு தம்வயிற் - குற்ற மறையா வழி.
ஏவவுஞ் செய்கலான் றான்றேறா னவ்வுயிர் - போஒ மளவுமோர் நோய்
காணாதாற் காட்டுவான் றான்காணான் காணாதான் - கண்டானாந் தான்கண்ட வாறு
உலகத்தா ருண்டென்ப தில்லென்பான் வையத் - தலகையா வைக்கப் படும்"—
என்பதனாலும்,

வைராயபதி

"அந்தணர்க்கற் காற்றசொலு மாமேருக்கு
முந்துசெய குற்றமுங் கொடும்பாவ முழுவது

நன்கறி விலரா னாதுவறி யாதவற்
கின்புறு விட்டி னெறிசெல லுமாறே"—என்பதனாலுமறிக (கஅக)

வேறு

இகலை மதித்தின் றைமையெழப் பற்றி னாக்கும் பரியாவேறு
பகையு முறவாம் பெருஞ்செல்வம் பலிக்குங் கெடாத புகழுண்டா
மிகலின் மிகுத்தின் னாங்கியற்றி னினிய தமரு மேதிலராயப்
பகைமை வளரும் வலிதொலையும் பாழ்க்கும் பாழா வாழ்க்கையுமே

(இ - ள்) பகைக்குணத்தைப் பொருளாகக்கொண்டு தமக்குக் குற்றஞ்செய் தோர்க்குந் தீமைசெய்யாதிருப்பாயாகிற் பகைவருமுறவாவர், செல்வப்பெருக்கமுண் டாகும், அழியாத கீர்த்தியுண்டாகும் (அவ்வாறின்றி) பகைக்குணமிகுந்து தீமை செய்தால், இனிய உறவினரும் அயலாராய்ப் பகைமை பெருகும், வலிமையழியும், அழியாச்செல்வமும் அழிந்துவிடும் எ - று

இச்செய்யுளால் மாறுபடுங்குணந்தவிர்கவெனக் கூறியதாம்

இதனை, கெ., இகல்.

"பகல்கருதிப் பற்றா செயினு மிகல்கருதி - யின்னாசெய் யாமை தலை.
இகலென்னு மெவ்வநோய் நீக்கிற் றவலில்லாத் - தாவில் விளக்கந் தரும்
இகலெதிர் சாய்ந்தொழுக வல்லாரை யாரே - மிகலூக்குந் தன்மை யவர்
இகல்காணா னாக்கம் வருங்கா லதனை - மிகல்காணுங் கேடு தரற்கு.
இகலானா மின்னாத வெல்லா நகலானா - நன்னய மென்னுஞ் செருக்கு."—என் பதனாலும்,

நான்மணிக்கடிகை.

"மலைப்பினும் வாரணந் தாங்குங் குழவி
யலைப்பினு மன்னேயென் றோடுஞ்—சிலைப்பினும்
நட்டார் நடுங்கும் வினைசெய்யா ரொட்டார்
ருடனுறையுங் காலமுமில்" —என்பதனாலுமறிக (௧-௨)

வலியார் பகைகொள் ளேல்சுற்றம் வலிகள் பொருணட் பேபடையின்
மெலியா ரச்சம் அறியாமை மேவாத் தன்மை கொடையின்மை
நலியா வெகுளி மறையின்மை நலியாக் காமங் கல்லாமை
யொலியார் பழிநோக் காமைமற் றுடையா ரிவர்மேற் பகையுறுக.

(இ - ள்) உற்ற வலிமை பொருள் நட்பு படை இவற்றின் மெலியார்களிடத் தும், அச்சம் அறியாமை பொருந்த நடவாமை உலோபம் ஒழியாக்கோபம் நிறையின் மை பெருங்காமம் கல்லாமை விளங்குகின்ற பழிநோக்காமை குற்றம் இவைநிறையுடை யவர்களிடத்தும் நீபகைகொள்க (ஆனால் உன்னிலும்) வலிமையுடையாரிடத்துமாத் திரம் பகைமைகொள்ளாதே எ - று

இச்செய்யுளால் தகுதியறிந்து பகைகொள் எனக்கூறியதாம்

இதனை, கெ. பகைமாட்சி.

'வலியார்க்கு மாறேற்ற லோம்புக வோம்பா - மெலியார்மேன் மேக பகை
அன்பில னான்ற துணையிலன் றான்றுவ்வா - னென்பரியு மேதிலான் றுப்பு
அஞ்சு மறியா னமைவில னீகலான் - றஞ்ச மெளியன் பகைக்கு.

வழிநோக்கான் வாய்ப்பன செய்யான பழிநோக்கான-பண்பிலன பற்றாக இனிது காணுச் சினத்தான கழிபெருங காமத்தான - பேணமை பேணப் படும.
குணனிலனுய்க குற்றம பலவாயின மாற்றாரக-கினனிலனு மேமாப புடைத்து"— என்பதனுனும,

பழமொழி

"ஆற்றப் பெரியாரப பகைவேண்டிக கொள்ளற்க
போற்றாது கொண்டான பொருள்கப பட்டாறு
நோற்றபெருமை யுடையாருங கூற்றம
புறங்கொமமை கொட்டினு ரில"—என்பதனுனுமறிக (கஙங)

பாரம பரிகக வேண்டி னுறு பகைநட பாகக கொண்டொழுகல
வீரந தணியா ரொடுபொரினும விதிநா லினரோ டிகலாமை
சாருந துணைநிற பினும்பலரைப பகையாக காமைத் தனிமையுறி
னொருந துணையா விருவகையு ணொகிி யொன்றை யுறவாககல

(இ - ள) இராசசியபாரம நிலைநிறகவேண்டுமாயின பொருந்திய பகைஞரை நட்பாகக கொள்ளுதலும், சுத்தவீரமுள்ளாருடன போர்செயினும கலவிவலலாரைப பகையாமையும, (உனககுச) சாரபாகிய துணையிருபபினும பலரைப பகையாக்காமையும், நீ துணையற்றவனுயின இருபகைவருள ஒருவனைவிட்டு ஒருவனைத துணைசெயயுமபடி யுறவாககிககொள்ளுதலும உசிதம. எ - று

இதுமுதலிரண்டு செயயுளகளால வனபகைககொதுங்கு எனக்கூறியதாம

இதனை, ஷை, பகைத்திறந்தெரிதல.

"வில்லே ருழவா பகைகொளினுங கொள்ளற்க - சொலலே ருழவா பகை
ஏமுற றவரினு மேழை தமியனுயப - பலலார பகைகொள பவன.
பகைநட்பாக் கொண்டொழுகும பண்புடை யாளன - றகைமைககட் டங்கிற் றுலகு.
தனறுணை யினமுற பகையிரண்டாற் றுனொருவ - னினறுணையாக கொளகவற்றி னொன்று."—என்பதனுனுணாக (கஙச)

மெலிய தெனவெள ளியபகையே மிகுந்து கெடுககு மிகுந்திடுமு னலிக வினைதாழ வுறிறநெறிந்த நலலா ரெனவுந தெளியாத
மலின ரெனவு நொதுமலனை மருவ லொழிதல புரியறக
வலிசெய் படையா திகள்பெருகக வகையாயந திருகக பகைமையற.

(இ - ள) மெலியதென்று அசட்டைசெய்த பகையே (ஒருகாலத்தில்) அதிகரிககும (அஃதவ்வாறு) மிகுந்திடுவதற்கு முன்னரே (அதனைக) களைக. நீ (துணையின்றித) தாழ்ந்திருந்தால, நூற்றெளிவுடைய நமபத்தககவரென்றும, நூற்றெளிவில்லாத நமபுதலிலலாரென்றும் அயலானைச சேருதலும் விலகுதலுஞ் செயயாதிருக்க. வலிமையை யுண்டுசெயயும படைமுதலியவற்றை விருத்தியாககிப பகைமுடித்தற்கு வகை தேடிககொண்டு பொதுப்பட விருப்பாயாக. எ - று

இதனை, ஷை, ஷை.

"தேறினுந தேறா விடினு மழிவினகட் - டேறான் பகாஅன விடல.
வகையறிந்து தற்செயது தற்காபப மாயும - பகைவாகட் பட்ட செருக்கு.
இளைதாக முணமரங கொல்க களையுநர் - கைகொல்லுங் காழ்த்த விடத்து."—என்பதனுனும,

சூளாமணி

"முட்கொண்டசக மரமுளை யாகவே
யுட்க நீக்கி னுகிரினு நீக்கலாம்
வட்க நீண்டதற பின்மழுத் தன்னினுங்
கட்கொண்டாமனை யாகளை கிறபவே"—என்பதனானுமறிக. (கஎரு)

தமரா யிருந்து புறப்பகையைச் சாரவாய்க் காலம் வருமளவு
மமரா நிறகு முடப்பகையை யஞ்சிக் காக்க வுறிறகடிக
நமரா மெனவே கண்ணோடி னல்ல வமைச்சா தியைத்தீயக்கு
நமரா மினத்தைத் தண்டபிக்கு நுனனைக் குடியோ டெளிதழிக்கும

(இ - ள்.) சுற்றத்தாராயிருந்து புறப்பகைமை யுண்டாதற்குச் சார்பாகிய காலம் வருமெல்லையும் பொருந்தி (உறவா) யிருக்கும் உட்பகையாளரை அச்சமுற்றுக் காத்துக்கொள்வாயாக (அவர்கள் விலகாது மீண்டும்) உறவுகொண்டால், தண்டஞ் செய்க. (அவ்வாறின்றி) நம்மவர்களென்று தாக்ஷிணியம் பாராட்டிலை, நல்ல அமைச்சா முதலியவர்களை யொழித்து, உம்மவர்களாகிய இனத்தாரையும் ஈனமுறச்செய்து உன்னையுங் குடியோடு இலேசாகக் கெடுப்பார்கள் எ - று.

இச்செய்யுளால் உட்பகையாளரை யொழியென்க் கூறியதாம்.

இதனை, ஷை, உட்பகை

"நிழனீரு மின்னாத வின்னா தமாநீரு - மின்னாவா மின்னா செயின்
வாளபோல பகைவரை யஞ்சற்க வஞ்சுக - கேளபோல பகைவா தொடர்பு.
உறன்முறையா னுட்பகை தோன்றி னிறன்முறையா - னேதம பலவுந் தரும்
உடம்பாடி லாதவா வாழ்க்கை குடங்கருட் - பாம்போ டுடனுறைந் தற்று." — என பதனானும்,

சீவகசிந்தாமணி.

"தொழுதகை யுள்ளும் படையொடுங்கு மொன்னார்
அழுதகண் ணீரு மனைத்து மாயந்து
பழுதுகண் ணரிந்து கொல்லும் படையுட னெடுங்கும் பற்று
தொழிகயா கண்ணுந் தேறற் தெளிகுற்றா விளிகுற் றாரே."—என்பதனானுமறிக. (கஎசு)

ஆற்றன் மிகுந்த வேந்தரையு மரிய தவத்து முனிவரையும்
போற்றி யொழுகி னெப்பொருளும் பொறற லாகு மவமதிப்பிற்
றேற்ற மிகுஞ்சார் பினரேனுஞ் சிதைவர் திகழ்முப் புராசூரன்
சாற்றிந் திரன்மா லாதியருந் தளர்ந்தா ரெனிற்சாற் றுவதென்னே.

(இ - ள்.) வெற்றிமிகுந்த அரசரையும் சிறந்த தவத்தையுடைய முனிவரையும் பூஜித்து செய்தொழுகினால், சகல பாக்கியமும் பெற்று வாழ்வார்கள் (அவ்வாறின்றி) அவமதித்தால், வலிய சார்பினை யுடையவர்களேயானாலும் அழிவார்கள். திரிபுராதியர் - சூரபன்மன் - சொல்லுகின்ற இந்திரன் - திருமால் முதலானவர்களும், (பெரியோர்க்குத் தீமைசெய்து) கெட்டிழந்தார்களென்றால் என்ன சொல்வது? எ - று.

இச்செய்யுளால் மேலோரை யவமதியாதிருவென்க் கூறியதாம்.

இதனை, ஷை, பெரியாரைப்பிழையாமை.

"ஆற்றுவா ராற்ற லிகழாமை போற்றுவார் - போற்றலு ளெல்லாந் தலை.
யாண்டுச்சென் றியாண்டு முளராகார் வெந்துப்பின் - வேந்து செறப்பட் டவர்
வந்தமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னாந்-தகைமாண்ட தக்கார் செறின்.
இறந்தமைந்த சார்புடைய ராயினு முய்யார் - சிறந்தமைந்த சீரார் செறின்."—என்பதனானும்,

நாலடியார்

"பொறுப்பரென் றெண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
ஆர்க்கு மருவி யணிமலை நன்னாட
போக்குதல் யார்க்கு மரிது"—என்பதனானுமறிக.

முப்புரர்—இவர்கள் மூவருமபெற்ற வரத்தின் மகிமையால் பொன் வெள்ளி இரும்பினாலாகிய மும்மதில்களை யுடைய நகரத்திலிருந்து அநேக அசுரர்களுடன் முப்புரகரோடுசென்று நினைத்தவிடத்திலிறங்கி அநேக நகரங்களைப் பாழ்படுத்தினார் அதுகண்டு வருந்திய தேவர்முதலியோர் வேண்டுகோளுக்கிணங்கிய சிவபெருமான் முப்புரத்தையுமழித்துப் புராரியெனக் காரணத் திருநாமமெய்தினரென்பது இப்புராணவரலாறு.

இதனை, இந்நூல் - திரிபுரதகனப்படலம்.

"மாய னாதியோர் மனத்தையு மளவையுங் கடந்த
தூய னாகிய கணேசமந் திரத்தினைச் சொல்லிக்
காயு முத்தலைச் சூலத்தை விடுத்தலுங் காணார்
மேய முப்புரம் பலியொடும் வெந்தமை கண்டார்"—என்பதனானறிக.

சூரபன்மன்—இவனும் இவன் தம்பியராகிய சிங்கமுகன் தாரகனென்போரும் சிவபெருமானைநோக்கி அநேக ஆயிரவருஷங்கள் தவஞ்செய்து கடவுள் பிரசன்னமாகாமையின் தமதுடலைச்சேதித்து ஓமஞ்செய்து பெரும்பிரயாசத்துடன் சிவபெருமானுடைய தரிசனமும், நூற்றெட்டு யுகங்காலவரையில் ஆயிரத்தெட்டண்டங்களையும் அரசுசெய்ய வரமும், மஹேந்திரஞாலமுதலியனவும் பெற்று மூன்றுநகரங்களிலிருந்து அரசுசெய்து வருகையில் இறுமாப்புற்றுத் தேவர்களையும் தேவமாதர்களையுஞ் சிறைப்படுத்தித் தேவர்களைப் பணிசெய்யக் கட்டளையிட, சிவபெருமான் மனந்தாளாது குமாரக்கடவுளால் சூரனையும் அவன் தம்பியரையுங் குலமுதலறக்களைந்தனரென்பது கந்தபுராணவரலாறு. இதனைவிரிப்பிற் பெருகும்.

இந்திரன்—இவன் எண்ணிறந்த அரம்பாஸ்திரீகளை யுடையவனாயிருந்தும், கௌதமமுனிவர் மனைவியாகிய அகலிகையைக் காமுற்று அவளை வஞ்சித்து மயக்கிப் புணர்ந்தனன் அதனையறிந்த முனிவர் அகலிகையைக் கல்லாகுக வென்றும்,இந்திரனை நீயார் குறியை விரும்பினமையின் உன் உடல் முழுதுங் குறிகளாகுக வென்றுஞ் சபித்தனர் என்பது இப்புராணவரலாறு

இதனை, இந்நூல் - இந்திரன்சாபம்பெற்ற படலம்.

"உருகிய மனமொடு மனைநலலா ளுறைசெயு முனமுனி கதமூள
விருபுந வமுனனி நுதலேற விணாபடு மெரியென விழிசேப்பக

கருவியு முடலமு மெனவென றுங கலவிய நமதுள மறியாயா
வெருவுத லறவொரு வனிலினப மேவினை சிலையுரு வாகென்ருன் "—

னின்ற வாசவன முகததினை நெடுநதவ னோகி
யினறு சாமபாசெய நிடுகுவ னிநதிர ஞெ
யொனறு வேடடுவந தாயககுடன முழுவதும யோனி
நனறு மேவுக வெனபபெருஞ சாபநாட டினனல "— எனபதனுனுணாக.

திருமால —இவா பூர்வம தேவாசுராகட்கு நிகழ்நத யுததததிற றோலவி யடைநத தேவாகட்குத துணையாகத தமது பஞசாயுதஙகளுடன செருசசெயய, அசுரா கள போாபுரியமாட்டாது புறமுதுககாட்டி யோடினா அபபொழுது திருமாலுஞ சககராயுததனை யெடுததுககொணடு அவாகளைப பினதொடாநது கொலலவேணடு மெனனுங கருததால துரததினா. அசுராகள பிருகுமுனிவா மனைவியாகிய கியாதி யெனபவளிடம அடைககலமபுக, கியாதி அவாகளைத தனதாசசிரமததிற பாதுகாத தனள் கோபததோடு பினதொடாநதுவநத மாதவனும அவவாசிரமததினுளெழுநதனன். அபபொழுது அவனைககணட மாமியாகிய கியாதி யெனபவள போறறிநிறப, விஷ்ணு வானவர் அவளுடைய சிரததைத துணடிததனர் அவள பெருஙகூசசலிட் டுககொணடு வீழ்நதிறநதனள. அதனால யோகததிலிருநத பிருகுமுனிவா யோகுநீஙகி நிகழ்நதவற்றை யுணாநது துக்கமுங கோபமு மிகவுங் கணகள செவவபபவும இதழ் துடிக்கவும நெருபபுபபொறி பறககவும விணடுவை நோககி, நீ அடாததகாரியஞ செய்த மையின தமோகுண சமபநதமான பததுபபிறவிகளடைகவெனச சபிதது விடுதது, சுக கிரனுலுயிாபெறற தன மனைவியுடன சிவததியானததிலிருநதனா திருமால சிவாாச சனைசெயது அவறறை நீககுமபடி வரமேறபச சிவபிரான எமமடியரா கூறறபபிழை யாதாயினும, எமமை நீ வழிபாடுசெயதமையின ஐநதில அநுககிரகமும ஐநதில தணை டமும புரிவோம உன பிறவிகள பததும உலகோபகாரமாமெனறருளினா எனபது சரிததசஙகிரகம.

இதனை, காஞசிபபுராணம - அரிசாபபயநதீாததபடலம.

சீற்ற மிககெழச சேநத கணணினன றிகிரி யோசசியங கெயது மாதவன
போறறி வாயதலின வைகு மாமியைப பொருசகெனசசிரந துணிதது வீழசதலு
மேறறெ ழுநதகூ கூவொ லிததிர ளிருசெ விததுளை யேறு மாமுனி
மாற்ற ருநதிறல யோகு நீஙகிமுன மனைவி படடது மறறு நோககினன

கணடு மாழ்கினன றுயரின மூழ்கினன கணகள சேநதன ளிகழ்நது டிததனன
மணடு வெஙகனற பொறிதெ றிபபவம மாத வனறனை வெகுண்டு நோககினு
ஞெண்ட ளிாககரத தரிவை தனனைமா றுனககு மாமியைத தறுக ணாளநீ
மிணடி னறகொலை செய்து வீட்டினை வெயய பாவிநீ யுயயு மாறெவன

எடுத்தி யமபிய சைவ மேயெவற றுளஞ முததம மெனனில யாஙகளுங
கடுதத துமபிய கணட னரடிக கமல மன்றிவே றறிகி லேமெனிற
வொடுதது ளைசகுமிச் சததி யததினற றயரு ழநதுநீ நரக வலவினை
மடுத்த வெமபிறப பொருப தெய்துக வழுவு பாதகக குழிசி யாயினய்.

நின்ற னககடித தொண்டு பூணடவர் நெறிய லாபபுறத தாறறு நூல்வழித்
துனறு தீக்கையுற றெனறு முப்புரஞ சுட்ட வெமபிரான றிழுவ டிபபிழைத
தொன்று மூன்றுதண் டேநதி யினரா யுலப்பி லாதவெங் கினைய மேவுக
மனற வங்கவாக கணடு னோாகளு மறலி யூரினைக குறுகி மாயகவே.

எவ்வ மேமிகுந் தமோகு ணம்பயின் றிழிந்த யோனியின் மீன மாதியாம்
வெவ்வி னைப்பவந் தோறுமின்னலே விரவு வாயென வெய்ய சாபமிட்
டவ்வி யத்தொகை யிரிய நூறமப் பிருகு வெள்ளியா லாவி பெற்றெழு
நவ்வி வாள்விழி மனைவி தன்னொடு நாரி பாகனை வழுத்தி வைகினான்."—என்பதனானுணர்க (கசஎ)

தன்னா லாளப் படுமனைவி தன்னா லாளப் படுவானே
லன்னாற் கறனும் பொருளுமுள வாகா தொல்லைப் பொருளானு
மன்னா பயன்கள் வினைமுடியா மறுமை யணுகா தெப்பிழையு
முன்னாம் பின்னாம் பெருநாணு மூவாப் பழியு மறிமைந்தா.

(இ - ள்.) அரசனே! (இல்வாழ்க்கைக்குத் துணையாய்) தனையேவல் செய்யச் சம்பாதிக்கப்பட்ட மனைவிக்குத் தானேவல் செய்யத் தலைப்படுவானாயின், அவனுக்கு அறமும் பொருளும் உளவாகா. முன்னுள்ள பொருளாலும் பயன்வாராது. செயல்கள் முற்றுறா. (இவ்வாறு இம்மைப்பயனொழிவதன்றி) மறுமைப்பயனு முளதாகாது. எக்குற்றங்களும் முற்பட்டுவரும். பெரிய நாணமுங் கெடாத பழியும் பின்னர் வரும். (ஆதலின்) மகனே! (தையல் சொல்லைக் கேளாதே) எ - று.

இச்செய்யுளால் மாதர்மொழிகொள்ளாதே யெனக் கூறியதாம்.

இதனை, ஷை, பெண்வழிச்சேறல்.

"மனைவிழைவார் மாண்பய னெய்தார் வினைவிழைவார் - வேண்டாப் பொருளு மது.
பேணாது பெண்விழைவா னாக்கம் பெரியதோர் - நாணாக நாணுத் தரும்.
மனையாளை யஞ்சு மறுமையி லாளன் - வினையாண்மை வீறெய்த லின்று.
இல்லாளை யஞ்சுவா னஞ்சுமற் றெஞ்ஞான்று - நல்லார்க்கு நல்ல செயல். [தது.
பெண்ணேவல் செய்தொழுகு மாண்மையி னாணுடைப் - பெண்ணே பெருமை யுடை
அறவினையு மான்ற பொருளும் பிறவினையும் - பெண்ணேவல் செய்வார்க ணில"—
என்பதனானுணர்க. (கசஅ)

எழிலாற் பாட லாடலினா லிச்சைப் பெருக்கி யுளமொவ்வா
மொழியாற் செயலால் வயமாக்கி முற்றும் பொருளைப் பறித்துவிடும்
பழிநா ணாத பரத்தையரைப் பற்றா ராய்ந்த பண்புடையா
ரொழியா ரவரைப் பேதைமையி லொழியா ரேம கண்டனே.

(இ - ள்) தங்கள் அழகாலும் நடனத்தாலும் கீதத்தாலும் (பார்ப்போர்க்கு) ஆசைமூட்டி, மனத்துக்கொவ்வாத (இச்சக) மொழியாலும் (வஞ்சக) நடக்கையாலும் அவரை வசப்படுத்தி, பொருள் முழுவதையும் அபகரித்துவிடும் பழிக்கஞ்சாத விலைமாதரை ஆராய்ந்த நற்குணமுடையோர் ஒழிப்பார்கள் (ஆனால்) பேதைமைக்குணத்தினின்றும் விலகாதவர்கள் அவர்களை நீங்கமாட்டார்கள். எ - று.

இச்செய்யுளாற் பரத்தையரை விரும்பாதே யெனக் கூறியதாம்.

இதனை, ஷை, வரைவின்மகளிர்.

"அன்பின் விழையார் பொருள்விழையு மாய்தொடியா - ரின்சொ லிழுக்குத் தரும்.
பயன்றூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர் - நயன்றூக்கி நள்ளா விடல்.
பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்க மிருட்டறையி - லேதில் பிணந்தழீஇ யற்று.
தந்நலம் பாரிப்பார் தோயார் தகைசெருக்கிப் - புன்னலம் பாரிப்பார் தோள்.
ஆயு மறிவின ரல்லார்க் கணங்கென்ப - மாய மகளிர் முயக்கு."—என்பதனானும்,

சாந்திபுராணம்.

"ஆசை யலகுல் பெரியானை யருளு மிடையுஞ் சிறியானைக்
கூசு மொழியும் புருவமுங் குடில மாகி யிருப்பானை
வாசக் குழலு மலர்க்கண்ணு மனமுங் கரிய மடவாரைப்
பூசல் பெருக்க வல்லானைப் பொருந்தல் வாழி மடநெஞ்சே" — என்பதனு
னுமறிக. (கஙகூ)

அறிவை யழிக்குஞ் செயலழிக்கு மழியா மானந் தனையழிக்குஞ்
செறியு மறிஞர் மதியாத செருக்கை விளைக்கு மீன்றாளு
முறியும் வெறுப்பு மிகவிளைக்கு முனிவு விளைக்கும் பகையனுசாக்
குறிகள் விளைக்கு நகைவிளைக்குங் கொள்ளேல் கள்ளுண் டலைமைந்தா.

(இ - ள்) (கள்ளானது தன்னைப்பழகினவனுடைய) பகுத்தறிவைக்கெடுக்கும், நன்னடக்கையை யொழிக்கும், கெடாதமானத்தைக்கெடுக்கும், மதிவாணர்கள் பொருளாகக்கொள்ளாத கர்வத்தையுண்டுசெய்யும், பெற்றதாயும் மனமுறிந்துமபடிவெறுப்பினை மிகுதியாக விளையச்செய்யும், பகைவர் அசட்டைசெய்யத்தக்க குறிகளையுங் கொடுக்கும், (கண்டோர்க்குச்) சிரிப்பையுண்டாக்கும், ஆதலால் கட்குடித்தலை நீ கொள்ளாதே எ - று.

இச்செய்யுளால் மதுபானஞ் செய்யற்கவெனக் கூறியதாம்.

இதனை, குறள், கள்ளுண்ணாமை.

"உட்கப் படாஅ ரொளியிழப்ப ரெஞ்ஞான்றுங் - கட்காதல் கொண்டொழுகு வார்
உண்ணற்க கள்ளை யுணிலுண்க சான்றோரா - னெண்ணப் படவேண்டா தார்.
ஈன்றாண் முகத்தேயு மின்னாதா லென்மற்றுச் - சான்றோர் முகத்துக் களி.
நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும் - பேணாப்பெருங் குற்றத் தார்க்கு.
கையறி யாமை யுடைத்தே பொருள்கொடுத்து - மெய்யறி யாமை கொளல்" — என
பதனும்,

அறநெறிச்சாரம்

"ஒளியு மொளிசான்ற செய்கையுஞ் சான்றோர்
தெளிவுடைய னென்றுரைக்குந் தேசுங் — களியென்னுங்
கட்டுரையாற் கோதப் படுமே விலைமெயல்லாம்
விட்டொழிக்கும் வேறாய் விரைந்து" — என்பதனு முணர்க (கச0)

வென்றி வரினு மதனானமுன் மேவு மொன்றற் காயிரம்பின்
மன்ற விழக்கு மதுவன்றி வைத்த பொருளும் வருவாயு
மன்றி யனைத்தும் பகைகொள்ளு மமைச்ச ராதி யுறுப்பொழியு
மொன்று மொழிகல் விகண்மறுமை யுறுதி யில்லையாஞ் சூதாடேல்.

(இ - ள்) சூதாடாதே! அதனால் முதலில் (சிறிது) வெற்றிவரினும், பின்னர் அதற்காயிரம்பங்கு தோல்வியைத்தரும் பண்டுள்ள பொருளும் இனிவரும்பொருளுமல்லாமல் எல்லாவற்றையும் பகைவர்கள் கொள்வார்கள் மந்திரிமுதலிய இராசாங்கங்கெடும் நல்வாக்கு கல்வியறிவு மறுமைப்பயன் விளைக்குஞ் செயல் இவைகளும் இல்லாமற்செய்யும். எ - று.

இச்செய்யுளாற் சூதாடாதே யெனக்கூறியதாம்.

இதனை, ஷை, சூது.

"வேண்டற்க வென்றிடினுஞ் சூதினை வென்றதூஉந் - தூண்டிற்பொன் மீன்விழுங்கி யற்று.
ஒன்றெய்தி நூறிழக்குஞ் சூதர்க்கு முண்டாங்கொ - னன்றெய்தி வாழ்வதோ ராறு.
உருளாய மோவாது கூறிற் பொருளாயம் - போஒய்ப் புறமே படும்.
கவறுங் கழகமுங் கையுந் தருக்கி - யிவறியா ரில்லாகி யார்.
பொருள்கெடுத்துப் பொய்மேற் கொளீஇ யருள்கெடுத் - தல்ல லுழப்பிக்குஞ் சூது."—
என்பதனானும்,

நாலடியார்.

"உருவழிக்கு முண்மை யுயர்வழிக்கும் வண்மைத்
திருவழிக்கு மானஞ் சிதைக்கும்—மருவு
மொருவரோ டன்பழிக்கு மொன்றல்ல சூது
பொருவரோ தக்கோர் புரிந்து"—என்பதனானுமுணர்க. (௧௯௧)

மனமெய்ம் மொழிகள் வருந்தாமல் வகுத்துத் தொழிலை மாறுபடா
வினிய வுணவை மிகப்பசித்த விடத்தி னுட்கொளப் பொருந்தவுணின்
முனிசெய் பிணிகட் கிடனின்று முறைகள் பிறழ்ந்து வந்துவிடிற்
புனித முடைய வயித்தியரால் வழியி னவற்றைப் போக்குகவே

(இ - ள்) மனமாவது தேகமாவது வார்த்தையாவது வருத்தமுறாதபடி தொழில்களைச்செய்து, (உட்கொள்ளுதற்கு) மாறுபடாத நல்ல வுணவை மிகப்பசியுற்றபொழுது சரீரத்துக்கமையப் புசித்தால், துன்புசெய்கின்ற பிணிகட்கிடமில்லையாகும். இம்முறை பிசகிப் பிணிவந்துவிட்டால் (அநுபவசாலிகளான) நல்ல வைத்தியர்களால் (வைத்தியநூல்) முறைப்படி நடந்து அவற்றைத் தீர்த்துக்கொள்க. எ - று

இச்செய்யுளால் நோய்க்கிடங்கொடேலெனக் கூறியதாம்.

இதனை, ஷை, மருந்து.

"மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர் - வளிமுதலா வெண்ணிய மூன்று.
அற்றா லளவறிந் துண்க வஃதுடம்பு - பெற்றா னெடிதுய்க்கு மாறு.
அற்ற தறிந்து கடைப்பிடித்து மாறல்ல - துய்க்க துவரப் பசித்து.
மாறுபா டில்லாத வுண்டி மறுத்துண்ணி - னூறுபா டில்லை யுயிர்க்கு.
உற்றா னளவும் பிணியளவுங் காலமுங் - கற்றான் கருதிச் செயல்.
உற்றவன் றீர்ப்பான் மருந்துழைச் செல்வானென் - றப்பானாற் கூற்றே மருந்து"—
என்பதனானுமறிக. (௧௯௨)

ஒழிபியல்

உன்னன் மொழிதல் செயன்மூன்றொத் தொழுக்கம் வாய்மை நாணிழுக்கார்
மன்னு மனையிற் பிறந்தார்கண் மலர்ந்த வீகை யிகழாமை
நன்னா மொழியு மவாக்கேயா நன்மை பயவா வினைவருமை
யின்ன விடத்தும் புரியார்க ளென்று கண்டா யினியறிமோ

(இ - ள்) எமகண்டா! குலாசாரம்பேணுவோர்க்கு மனநினைவும் வாய்ச்சொல்லும் காயச்செய்கையுமாகிய மூன்றும் ஒத்தொழுகலும் நன்னடை பிழையாமையும் சத்தியந்தவறாமையும் நாணங்கெடாமையாய்வாழ்தலும், முகமலர்ச்சி உதாரத்துவம் நன்குமதித்தல் இனியவசனம் ஆகிய இவையாவும் உளவாகும் மேலும், தாம்

வறுமையுற்றகாலத்திலும் பிறர்க்குத் தீமைவிளைக்குங் கருமங்களைச் செய்யார். அறிவாயாக. எ - று

இதுமுதல் பதினமூன்று செய்யுள்களால் ஒழிபியலும், இச்செய்யுளால் குலாசாரம்பேணுகவென்றுங் கூறியதாம்.

இதனை, ஷ, குடிமை.

"இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை யியல்பாகச் - செப்பமு நாணு மொருங்கு.
ஒழுக்கமும் வாய்மையு நாணுமிம் மூன்று - மிழுக்கார் குடிப்பிறந் தார்.
நகையீகை யின்சொ லிகழாமை நான்கும் - வகையென்ப வாய்மைக் குடிக்கு.
வீழ்நாள் படினுந் தனவிழ்ந்து பழங்குடி - பண்பிற் றலைப்பிரித லின்று
சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற - குலம்பற்றி வாழ்துமென் பார்"—
என்பதனானும்,

ஏலாதி.

"சென்ற புகழ்செல்வ மீக்கூற்றஞ் சேவகம்
நின்ற நிறைகல்வி வள்ளன்மை - யென்று
மளிவந்தார் பூங்கோதா யாறு மறைவின்
வழிவந்தார் கண்ணே வனப்பு"—என்பதனானுமறிக. (கசரு)

பெருக்கத் துயர்வாம் பணிவொழியல் பேணுப் பணிவு சுருக்கத்திற்
செருக்க லின்றி யமையாத சிறப்பிற் றேனு முயர்மான
முருக்கும் வினையைச் செய்நினையன் மொய்ம்பார் மானங் கெடவூழ்வந்
துருக்கு மெனிற்சா மரைமானை யுன்னல் வேலங் கண்டனே.

(இ - ள்) ஏமகண்டனே! செல்வம்பெருகிய காலத்து உயர்வாகிய பணிவு காட்டுதலாலும், செல்வஞ்சுருங்கிய காலத்துப் பணிவுகாட்டாமையாலும் யாதேனு மொன்று இன்றியமையாத விஷயமாயிருப்பினும், மானமழிதற் கேதுவாகிய காரியத்தை நிறைவேற்ற மனந்துணியாதே விதிவலியால் வலிதங்கிய மானங்கெடும்படி வருமாயின் (தன்னுரோமத்துள்ளொன்றை யிழப்பினும் உயிரை யிழக்குங்) கவரிமானைப் போலப் பிராணனைவிடுவதாலுங் கௌரவத்தோடு வாழலாம். எ - று.

இச்செய்யுளால் மானமழியாதேயெனக்கூறியதாம்.

இதனை, ஷ, மானம்.

"இன்றி யமையாச் சிறப்பின வாயினுங் - குன்ற வருப விடல்
பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய - சுருக்கத்து வேண்டு முயர்வு.
மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை - பீடழிய வந்த விடத்து.
மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா - ருயிர்நீப்பர் மானம் வரின்."—என்பதனானும்,

நான்மணிக்கடிகை

"பறைபட வாழா வசுணமா வுள்ளங்
குறைபட வாழா ருரவோர் - நிறைவனத்து
நெற்பட்ட கண்ணே வெதிர்சாங் தமக்கொவ்வாச்
சொற்பட்டார் சாவாதஞ் சால்பு"—என்பதனானுமுணர்க. (கசசு)

ஐது குடியிற் பிறந்தருநூ லாய்ந்து செல்வத் துயர்ந்ததனை
லெய்த லரிது பெருமையஃ தெய்துங் கொடையொப் புரவாதி

செய்தற் கரிய செய்துபிறர் செயிர்கூ றுமற் றருக்காம
லுய்தி நெறியிற் பிறழாம லொழுகு வார்கருள் ளதுமைந்தா.

(இ - ள்.) மகனே! மேற்குலத்திற்பிறந்து அரியநூல்களையாராய்ச்சிசெய்து செல்வப்பெருக்கடைந்ததின்றும் பெருமையானது அடைதற்கரியதாம் (அல்ல) அது ஈகை சமாதானநடைமுதலிய செயற்கரிய செயல்களைச்செய்து பிறர் குற்றங்களை யெடுத்துரையாது இறுமாப்படையாது உச்சீவிக்கத்தக்க வழியினின்றும் தவறாமல் நடப்பவர்கட்கேயுள்ளது. எ - று.

இச்செய்யுளாற் பெருமைதேடெனக்கூறியதாம்.

இதனை, ௵, பெருமை.

"ஒளியொருவர்க் குள்ள வெறுக்கை யிளியொருவக்-கஃதிறந்து வாழ்து மெனல்
பிறப்பொக்கு மெல்லா வுயிர்க்குஞ் சிறப்பொவ்வா - செய்தொழில் வேற்றுமை யான்.
மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங் - கீழல்லார் கீழல் லவர்.
பெருமை யுடையவ ராற்றுவா ராற்றி - னருமை யுடைய செயல்.
பெருமை பெருமித மின்மை சிறுமை - பெருமித மூர்ந்து விடல்."—என்பதனு னும்,

சீவகசிந்தாமணி

"கருங்கடற் பிறப்பி னல்லால் வலம்புரி காணுங் காலைப்
பெருங்குளத் தென்றுந் தோன்றா பிறைநுதற் பிணையி னீரே
யருங்கொடை தான மாயந்த வருந்தவந் தெரியின் மண்மேன்
மருங்குடை யவர்கட் கல்லா லறறையாக் காவ துண்டோ"—என்பதனானு
மூணாக. (௧௪௫)

அன்பொப் புரவு கண்ணோட்ட மழியா வாய்மை நாணுதி
யினபம் பெருக்கு நற்குணங்க ளெல்லா நிறைந்த சான்றோர்க
டுன்புற் றவர்க்கு மினியனவே சூழ்வார் துணையின் வினைமுடிப்பார்
வன்பிற் றளரார் நட்டார்க்கு மடங்கித் தோற்ற ஞானோரே.

(இ - ள) (உயிர்களின்பேரில்) இன்பு சமாதானம் தாட்சணியம் உண்மை மானங்காத்தல் முதலிய சீலங்களையும் பெருகச்செய்யும் நற்குணங்களெல்லாம் நிறைந்த சான்றோர்கள் (தமக்கு நன்மை செய்தவர்க்கேயன்றி அயலாருக்கும்) தீமைசெய்த வர்க்கும் நன்மையே செய்யக் கருதுவார்கள் துணைவரப்பாராததுச் செயல்முடிப்பார்கள். (தமக்கன்பரானோர்) வன்புகொண் டெதிர்த்தவரினும் தளரார்கள். குற்றத்தைப் பொறுக்கும்படி பணிதலுக்கும் நாணமடையார்கள் எ - று.

இச்செய்யுளான் மாட்சிமைப்படு எனக்கூறியதாம்

இதனை ௵ சான்றாண்மை.

"கடனென்ப நல்லவை யெல்லாங் கடனறிந்து-சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.
அன்புநா ணொப்புரவு கண்ணோட்டம் வாய்மையோ-டைந்துசால் பூன்றிய தூண்.
ஆற்றுவா ராற்றல் பணிதல் அதுசான்றோர் - மாற்றாரை மாற்றும் படை.
சால்பிற்குக் கட்டளை யாதெனிற் றோல்வி - துலையல்லார் கண்ணுங் கொளல்.
இன்னாசெய் தார்க்கு மினியவே செய்யாக்கா - லென்ன பயத்ததோ சால்பு."—
என்பதனானும்,

புறநானூறு.

"பொன்னுந் துகிரு முத்து மன்னிய
மாமலை பயந்த காமரு மணியு
மிடைபடச் சேய்வ வாயினுந் தொடைபுணர்ந்
தருவிலை நன்கல னமைக்குங் காலை
யொருவழித் தோன்றி யாங்கென் றுஞ்
சான்றோர் சான்றோர் பாலராப
சாலார் சாலார் பாலரா குபவே"—என்பதனானுமறிக (கஅகூ)

ஆன்ற குடியன பெண்பதநல லறநீ திகளின வழுவாமை
சான்ற மககட பணபாருந தனனை யுடையார நகையானு
மான்று மிகழார பகையிடிததும தியா ரவாதந றகுணமே
யேனற வுலகம பாராடடு மெலலாபபயனு மவாமாட்டாம.

(இ - ள) மேமபட்டகுலநலமும அன்பும எளிய சமயககாட்சியும் நல்லதரும முமநீதிமுறைகளிற பிசகாமையும, சிறந்த (மானுடருககுப்) பண்புடைமை யாகும இநதக் குணங்களையுடையவா நகைககுங காலததாயினும, பகைக்குங காலததாயினும, எப்பொழுதும் பிறரை யவமதிததுரையாா அவரது நறகுணஙகளையே பெரியவுலக மானது வியநதுரைக்கும. (அறமபொருளாதி) பயனகள்யாவும அவரிடததிலேயே குடிகொளளும் எ - று

இச்செயயுளால் நன்னிலைதவறாதே யெனக்கூறியதாம்

இதனை, ஷை, பணபுடைமை.

"எணபததா லெய்த லெளிதெனப யார்மாடடும-பணபுடைமை யென்னும் வழக்கு.
அனபுடைமை யானற குடிப்பிறதத லிவவிரண்டும-பணபுடைமை யெனனும வழககு.
நயனொடு நனறி புரிநத பயனுடையார்-பணபுபா ராடடு முலகு
நகையுள்ளு மின்னா திகழ்ச்சி பகையுளளும-பணபுள பாடறிவா மாட்டு.
பணபிலான பெறற பெருஞ்செலவ நனபால-கலநதீமை யாற்றிரிந தற்று."—என்பத னுனும,

புறநானூறு.

"உண்டா லம்மவிவ் வுலக மிநதிர
ரமுத மியைவ தாயினு மினிதெனத
தமிய ருணடலு மிலரே முனிவிலா
துஞசலு மிலாபிற ரஞசுவ தஞசிப்
புகழெனி னுயிருங் கொடுக்குவர் பழியெனி
னுலகுடன பெறினுங் கொளளல ரயாவி
யாநன மாட்சி யனைய ராகித
தமககென முயலா நோனருட்
பிறாககென முயலுந ருண்மை யானே."—என்பதனானுமுணர்க. ()

வைத்துப பொருளைத தாவுகரான் வழஙகா னிருநதுஞ் செததானே
செதத பின்ன ரெனசெய்வான் றியார் கொளவ ரீட்டுதலான
மெததும் வருத்த மேயன்றி வேறொன பிலலை யாதலினாற்
பொததும வெறுக்கை நனறியுறல புசிதது வழஙக லேயாகும.

(இ - ள்.) ஒருவன், பொருளை வைத்துக்கொண்டு அநுபவியாமலும், (பிறருக்கு) வழங்காமலும் இருந்தால் அவனுயிரோடிருந்தும் செத்தவனேயாவான் இறந்த பின்னர (அப்பொருளை) யாதுசெய்ய வல்லவனுவான். கள்வர் முதலானோர் கொள்வார்கள் பொருள்தேடுதலாலுண்டாய பிரயாசமேயன்றி வேறோர் பலனுமில்லை ஆன படியால், மிகுதியாகிய செல்வத்தாற் பயன்பெறுதல் (தானும்) புசித்துப் (பிறர்க்கும்) கொடுத்தலேயாம் எ - று.

இச்செய்யுளாற் செல்வப்பயனை நுகரெனக்கூறியதாம்

இதனை, ஷை, நன்றியில் செல்வம்

"வைத்தான்வாய் சான்ற பெரும்பொரு ளஃதுண்ணு-செத்தான் செயக்கிடந்த தில்.
பொருளானு மெல்லாமென் றீயா திவறு-மருளானு மாணாப் பிறப்பு.
ஈட்ட மிவறி யிசைவேண்டா வாடவர்-தோற்ற நிலக்குப் பொறை.
எச்சமென் றென்னெண்ணுங் கொல்லோ வொருவரா-னச்சப் படாஅ தவன்.
ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் றகதார்க்கொன்-றீத லியல்பிலா தான்.
அன்பொரீஇத் தற்செற் றறநோக்கா தீட்டிய-வொண்பொருள் கொள்வர் பிறர்"—என்பதனும்,

பாரதவெண்பா.

"தீயாலோ நீராலோ தேர்வேந்தா தம்மாலோ
மாயாத தெவ்வா வலியாலோ—யாதாலோ
விப்பொருள்போய் மாய்கின்ற தென்றுபொருள் வைத்தார்க
ளெப்பொழுது நீங்கா திடர்."—என்பதனுமறிக. (௧௪௮)

இழிந்த தொழிலி னுவதே யெய்தற் கரிய நாணென்ப
ரொழிந்த மனவாக் குடலொழுக்க மொளிவா னுதலார் நாணையாங்
கழிந்து விடநாண் மண்கோடல் கருதார் நலமெல் லாமவளாப்பா
ரழிந்து நாணமற் றுயிர்வாழா ராவி யழிந்து நாணுள்வார்.

(இ - ள்) இழிவான தொழில்களுக்கு நாணமடைவதே அடைதற்கரிய நாண மென்று பெரியோர் சொல்லுவர் அவ்வாறன்றி மனத்தின்மைதலினுலாவது சொல் லின் றூழ்மையினுலாவது உடலினொழுக்கத்தினுலாவது உண்டாகுய நாணம் பிரகாசிக் கின்ற ஒள்ளிய நெற்றியையுடைய மாதர்களுக்குரிய நாணமபோன்றதாம் அவர் நாண மழியும்படி பூமியைக்கொள்ளுதல் கருதார் நன்மையானவற்றையே செய்வார்கள். நாணத்தின்பொருட்டு உயிரைக்காவாது விடுவர் உயிரின்பொருட்டு நாணத்தைக் காவாது விடார். எ - று.

இச்செய்யுளால் நாணமழியாதிருவெனக் கூறியதாம்.

இதனை, ஷை, நாணுடைமை.

"கருமத்தா னுணுத னுணுத் திருநுத - லல்லவர் நாணுப் பிற.
ஊனுடை யெச்ச முயிர்க்கெல்லாம் வேறல்ல - நாணுடைமை மாந்தர் சிறப்பு.
பிறர்பழியுந் தமபழியு நாணுவார் நாணுக் - குறைபதி யென்னு முலகு.
நாணவேலி கொள்ளாது மன்னே வியன்ஞாலம் - பேணலர் மேலா யவர்.
நாணு லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா - னுண்டுறவார் நாணுள் பவர்.
குலஞ்சுடுங் கொள்கை பிழைப்பி னலஞ்சுடு - நாணின்மை நின்றக் கடை."—என் பதனும்,

நாலடியார்.

"இழித்தக்க செய்தொருவ னார வுணலிற்
பழித்தக்க செய்யான பசிதத றவரோ
விழித்திமைக்கு மாத்திரை யனரோ வொருவ
னழித்துப் பிறக்கும பிறப்பு"—எனபதனானுமுணாக. (கசக)

எடுத்த கருமமுற்றுமை யெய்தின் முடித்தே விடுவமெனத
தொடுத்த முயறசி யறிவிரணடிற ரோலா துயர்வார் குடிசெய்வா
ரடுதத பருவங் குறித்துமடி யாககி மானங கருதுவா
கெடுத்தல் புரிநதா ராதலினற கிளாக குடியூன றலினமைமநதா.

(இ - ள்) மகனே! குடிசெயல் வகைசெய்வோர் தாமெடுதத காரியங்கட் கிடையூறு நேரிட்டாலும முயற்சிவலி விவேகம் ஆகிய இரணடினாலும் இவற்றை முடிததேவிடுவேனென்று பினவாஙகாது மேமபடுவர். மானஙகருதுவோா தககாலத்தை யோசித்துச் சோமபி (காரியததைக) கெடுததல செய்தவராவா. ஆதலால நீ குடிததன்மை வளாக்கும் விஷயததில தளாச்சியுறுதே. எ - று.

இச்செய்யுளாற குடிநலமபெருக்கு எனககூறியதாம.

இதனை, ௸, குடிசெயல்வகை.

"கருமஞ் செயவொருவன் கைதூவே னெனனும - பெருமையிற் பீடுடைய தில்.
ஆளவினையு மானற றிவு மெனவிரணடி - னீளவினையா னீளுங குடி
குடிசெயவாாக கில்லைப் பருவ மடிசெயது - மானங கருதக கெடும.
இடுமபைக்கே கொள்கலங கொலலோ குடுமபததைக - குறற மறைப்பா னுடம்பு."-
எனபதனானும,

வெண்பாமாலை

'செயிாகக ணிழாது செஙகோ லுயரி
மயிாக்கண முரச முழஙக—வுயிாகெகலலா
நாவ லகலிடதது ஞாயி றனையனாயக
காவலன் சேறல கடன"—எனபதனானுமுணாக. (கரு௦)

உழுவித திருவ ரிருவருமு விதது முழுது முணலாகு
முழுதுண் பவரே தமககுரிய ருபகா ரியரென் பாரவரே
தொழுதுண் பவரே பிறாககுரியாா தொழினமுற றுமநது முழவினர்பான்
முழுது மடுபப வேண்டுதலின முதன்மைத துழுவென றறிமைநதா.

(இ - ள்) புததிரனே! உழவுதொழில் வேளாளாக்குப பெரும்பானமையும் வைசியாககுச சிறுபானமையும் உழுதும உழுவிததும உண்பதறகுரியதாகும உழவுதொழில் செய்து புசிப்பவாகளே தஙகட்குரியவராவார்கள. அவாகளே யுபகாரிக ளென்று சொலலப்படுவாாகள். ஒருவரைப் பணிசெயது சீவனஞ்செய்பவர்களே பிறருக்குரியவர்களாவாாகள். ஏருளா மற்றைத தொழிலகளில் புழுதும் பயின்றாலும் உழவுதொழிலுடைய வேளாளாகளிடததில முழுதும் வநதடுக்கச்செய்தலின் உழுதொழில் முதனமைத் தன்மையுடையதெனறறிவாயாக. எ - று.

இசசெய்யுளால் வேளாணமை பேணு எனககூறியதாம.

இதனை, ஷை, உழவு.

"சுழன்றுமேர்ப் பின்ன துலக மதனு - லுழந்து முழவே தலை.
உழுவா ருலகத்தார்க் காணியஃ தாற்ரு - தெழுவாரை யெல்லாம் பொறுத்து.
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாந் - தொழுதுண்டு பின்செல் பவர்
பலகுடை நீழலுந் தங்குடைக்கீழ்க் காண்ப - ரலகுடை நீழ லவர்.
இரவா ரிரப்பார்க்கொன் றீவா கரவாது - கைசெய்தூண் மாலை யவர்.
உழவினார் கைமமடங்கி னில்லை விழைவதூஉம் - விட்டேமென் பார்க்கு நிலை."—
என்பதனானும்,

பெரும்பொருள்.

"யானை நிரையுடைய தேரோ ரினுஞ்சிறந்தார்
ரேனை நிரையுடைய வேர்வாழ்நர்—யானைப
படையோர்க்கும் வென்றி பயக்கும் பகட்டே
ருடையோர்க் கரசரோ வொப்பு"—என்பதனானுமுணர்க. (கடுக)

வறுமை போல வின்னாது வறுமை யன்றி வேறில்லை
மறுவின் மொழிகள் சோர்வுபடும் வாய்த்த குடிநற் செயன்மொழிக
ளிறுதி படுமற் றிடர்பாதி யெல்லாத் துயரு முடனுறும்
பிறனி னோக்கு மீன்றாளும் பிள்ளை யதுவந் திடினிறத்தல்.

(இ - ள்) மகனே! (மனிதர்க்குத் துன்பந்தரு மெவற்றினும்) வறுமைபோற் கொடியது அவ்வறுமையேயன்றி வேறின்று வறுமைவரின் குற்றமில்லாத சொற்கள் சோர்வுபடும். பொருந்திய குலம் நற்செயல் மொழிகள் இவை யாவுமழியும். இடர்தல் முதலிய எல்லாத்துன்பங்களும் பின்றொடரும். பெற்ற தாயும் அன்னியனைப்போலப் பார்க்கும்படி செய்யும். (அது ஒருவேளை) வந்துவிடின் இறத்தல் நலம். எ - று.

இச்செய்யுளால் வறுமையடையாதேயெனக் கூறியதாம்.

இதனை, ஷை, நல்குரவு.

"இன்மையி னின்னாத தியாதெனி னின்மையி-னின்மையே யின்னா தது.
தொல்வரவுந் தோலுங் கெடுக்குந் தொகையாக-நல்குர வென்னு நசை.
நற்பொரு ணன்குணர்ந்து சொல்லினு நல்கூர்ந்தார்-சொற்பொருள் சோர்வு படும்.
அறஞ்சாரா நல்குர வீன்றதா யானும்-பிறன்போல நோக்கப் படும்
நெருப்பினுட் டுஞ்சலு மாகு நிரப்பினுள்-யாதொன்றுங் கண்பா டரிது" — என்பத னானும்,

வளையாபதி.

"சொல்லவை சொல்லார் சுருங்குபு சூழ்ந்துணார்
நல்லவை யாரு நனிமதிப் பாரல்லார்
கல்வியுங் கைப்பொரு ளில்லார் பயிற்றிய
புல்லென்று போதலை மெய்யென்று கொண்மினீ."—என்பதனானுமுணர்க ()

குறிப்பி னுணர்ந்து மொழியாமுன் கொடுப்பா ருன்னின் றிரந்துயிரைத்
துறப்ப தின்றிச் சிலர்வாழ்வர் தூய்மை மானங் கெடாமையினு
சிறப்ப வுயர்ந்த கொடைமையரே யெனினு மிரப்பா ரில்லாக்கால்
சிறப்பென் பெறுவ ரவராலே சிறப்பர் கரவா தவர்மைந்தா.

(இ - ள்.) மகனே! குறிப்பறிந்து இரவாமுன்னமே கொடுப்பவர் முன்னின்று பரிசுத்தமும் மானமும் அழியாமையினால் யாசித்து உயிரைப்போக்காமற் சிலர் வாழ்வார்கள் மிக்க மேன்மைவாய்ந்த ஈகையாளரேயானபோதிலும் யாசகரில்லாதவிடத்து என்ன சிறப்பினை யடைவார்கள்? (உள்ள பொருளை) ஒழியாது கொடுப்போர் சிறப்படைவா. (ஆதலின், நீ உத்தம யாசகரைக்கண்டு குறிப்புணர்ந்துதவுக) எ - று.

இச்செய்யுளால் யாசகரியற்கையை யறியெனக் கூறியதாம்.

இதனை, ஷை, இரவு.

"இரக்க விரத்தக்கார்க் காணிற் கரப்பி - னவர்பழி தம்பழி யன்று
இன்ப மொருவற் கிரத்த லிரந்தவை - துன்ப முறுஉ வரின்.
கரப்பிலா நெஞ்சிற் கடனறிவார் முன்னின் - றிரப்புமோ ரேஎ ருடைத்து
கரப்பிலார் வையகத் துண்மையாற் கண்ணின் - றிரப்பவர் மேற்கொள் வது.
இரப்பாரை யில்லாயி னீர்ங்கண்மா ஞாலம் - மரப்பாவை சென்றுவந் தற்று
ஈவார்க ணென்னுண்டாந் தோற்ற மிரந்துகோண் - மேவா ரிலாஅக் கடை."—
என்பதனாலும்,

புறநானூறு

"ஆடெரி படர்ந்த கோடிய ரடுப்பி
னாம்பி பூப்பத் தேம்புபசி யுழவா
பாஅ லின்மையிற் றோலொடு திரங்கி
யில்லி தூர்ந்த பொல்லா வறுமுலை
சுவைத்தொ றழூஉந்தன் மகத்துமுகம் நோக்கி
நீரொடு நிறைந்த வீரிதழ் மழைக்கண்ணென்
மனையோ ளெவ்வநோய் நீக்கி நிலைஇ
நிறபடர்ந் திசினே நற்போர்க் குமண
வென்னிலை யறிந்தனை யாயி னின்னிலைக்
கொடுத்துங் கொள்ளா தமையல னடுக்கிய
பண்ணமை நரம்பிற் பச்சை நல்யாழ்
மண்ணார் முழவின வயிரிய
ரின்மை தீர்க்குங் குடிப்பிறந் தோயே"—என்பதனானுமுணர்க. ()

கண்ணிற் சிறந்தார் தமபிடத்துங் காழ்த்த மானங் கெடநாவாற்
பண்ணற் குரிய வறங்குறித்தும் படாநதொன பிரவார் பெருமையினா
லெண்ணிற சிறந்தார் முயறசியினா லேலா வுப்பில் வறும்புற்கை
யுண்ணற் கமைந்த தமைத்ததெனா வுவப்ப ரேம கண்டனே.

(இ - ள்.) எமகண்டா! பெருமை குன்றிப்போகாவண்ணஞ் சிறந்த நடையுடையார் தமக்குக் கண்மணியைக் காட்டிலும் மேம்பட்டவரிடத்திலும் வலிய மானங் கெடும்படி சென்று, செய்யத்தக்க தருமத்தினிமித்தமாவது நாவினால் ஒன்றையாசியார். தம்முயற்சியினாலே உப்பில்லாத வெறுங்கூழ் கிடைப்பினும் காம புசித்தற்கமைந்தது இதுவென்று களிப்புறுவார்கள். எ - று.

இச்செய்யுளால ஏற்பதிகழ்ச்சியெனக் கூறியதாம.

இதனை, ஷை, இரவச்சம்.

"கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணு - மிரவாமை கோடி யுறும்,
இரந்து முயிர்வாழ்தல் வேண்டிற் பரந்து - கெடுக வுலகியற்றி யான்,

இடமெல்லாங் கொள்ளாத் தகைத்தே யிடமில்லாக் - காலு மிரவொல்லாச் சான்பு.
தெண்ணீ ரடுபுற்கை யாயினுந் தாடந்த - தண்ணவி ஹாங்கினிய தில்.
ஆவிற்கு நீரென் றிரப்பினு நாவிற் - கிரவி னிளிவந்த தில்.''—என்பதனானும்,

நாலடியார்.

"கரவாத திண்ணன்பிற் கண்ணனனார் கணனு
மிரவாது வாழ்வதாம் வாழ்க்கை—யிரவினை
யுள்ளுங்கா லுள்ள முருகுமா லெனகொலோ
கொள்ளுங்காற் கொள்வார் குறிப்பு"—எனபதனானுமுணாக (கடுச)

அழுக்குற் றெவர்க்கும் வடுககாணபா ரசச மாசை யாலனறி
யொழுக்கம் புரியா மறைபிறாபா லுயதது மொழிவார தம்போல
விழுதருக செதுங் கவலாழு னெறற மாகிச செமமாபபார
மழுதகு ளாரகசெ பயன்படுவார வறிதும வறியாராக கிடாா கயவா

(இ - ள்.) கீழ்மககள் எல்லோரிடததும பொறுமையினற் குற்றங் காட்டு வார்கள். அச்சத்தாலும ஆசையாலுமனறி ஒழுககஞ்செயயமாட்டார்கள். இரகசியத் தைப் பிறரிடஞ் சென்று வெளியிடுவாகள் தமமைபபோல (பிறாக்கு) அவமானநேரி டின் (அவாககாகச) சிறிதுங கவலைப்படாா. அதறகாக முறபடப் பூரிததுக் களிப்பார் கள். தமமைத் தண்டிப்பவாக்கே கொடுப்பாாகள எளியவாக்கொனறுங கொடுககமாட் டாாகள எ - று.

இதனாற் கீழ்மையகற்று எனக்கூறியதாம்.

இதனை, ஷெ, கீழ்மை

"நன்றறி வாரிற் கயவர் திருவுடையா - நெஞ்சத தவல மிலா
அகப்பட்டி யாரொளாக காணி னவரின - மிகபபட்டுச செமமாக்குங் கீழ்.
அசசமே கீழ்கள தாசார மெசச - மவாவுணடேட லுண்டாஞ் சிறிது.
அறைபறை யனனவா கயவர்தாங கேட்ட - மறைபிறாக குய்ததுரைக்க லான்.
ஈாஙகை விதிரார கயவர் கொடிறுடைககுங - கூனகைய ரல்லா தவாக்கு
உடுப்பதூஉ முண்பதூஉங் காணிற் பிறாமேல - வடுக்காண வற்றாகுங் கீழ்.
எற்றிற் குரியா கயவரொன றுற்றககால - விற்றற குரியா விரைநது.'—என்பத னானும்,

நான்மணிக்கடிகை

"மாசு படினு மணிதனசீா குனறுதாம
பூசிக கொளினு மிருமபினகண மாசொட்டும
பாசத்து ளிட்டு விளக்கினுங கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்"—என்பதனாலுமறிக கஙஙி)

அறத்தோ டரச நீதிபுரிந தகிலம புரந்து பொருளீட்டித
திறத்தால வாழும் வகையெல்லாஞ் செலவக் குமரற் கிவ்வாறங்
குறத்தா னியமபித் திறற்சோம காநத னுலக பாரமவ [ர்காள்.
னெறுழ்த்தோட் பெயாததுக் கொடுப்பான்பி னிதனைப் புரிந்தான் புலவீ

(இ - ள்.) இவ்வகையாக மனுதர்மமுறையுடன் இராசதருமத்தை நடத்தி உல கத்தைக் காத்து (தருமவழியிற்) பொருள்தேடி வலிமையோடு வாழ்கின்ற வகைமுழு

வதையும தன் செல்வப் புதல்வனுகிய ஏமகண்டனுக்குப் பொருந்தக்கூறி, வெற்றி பொருந்திய சோமகாந்தமன்னனை தனனுலகடாரத்தை அவனுடைய வலிதங்கிய தேரி ளிற் பெயர்த்துகொண்டுசெல்லும்படி இதனைச் செய்வானாயினான். புலவர்களே! எ - று.

அரசியற்கைப்படலம் முற்றிற்று.

ஆகந்திருவிருத்தம் - ருஅ௰.

பட்டாபிடேகப்படலம்.

அத்தனுஞ் சோம காந்த னகன்மனை நீங்கிப் போந்து
வைத்தவேந் தவையின வைகிப் பணிபொடுங் கணிதர்கட் கூவி
யொத்தநா ளபிடே கத்துக் குரைக்கென வவருந் தெள்ளி
யுத்தரா யணத்தி னாதி யுறுமதிப் பூச மென்றார்.

(இ - ள்) அரசனுகிய சோமகாந்தன விசாலமான மாளிகையை விட்டுப் புறம் போந்து பெரிய இராசசபையிலிருந்து நனமையோடு சோதிடர்களை யழைத்து (என் மகனுகிய சோமகாந்தன) பட்டாபிடேகத்திற்குச் சரியான தினஞ் சொலவீர்களாக வெனக்கட்டளையிட, சோதிடர்கள் ஆலோசித்து உத்தராயணத்தின் முதலமாச மாகிய தைமாசத்தில வரும பூசநக்ஷத்திரம (பட்டாபிடேகத்திற்குத தக்கநாள்) என்று சொன்னார்கள். எ - று.

வேந்து + அவை = வேத்தவை இது வலித்தலவிகாரம்

உத்தராயணம்—தைமாசமுதல் ஆறு மாசமும், தக்ஷிணாயணம்—ஆடிமாச முதல ஆறு மாசமுமாம் அதாவது சூரியன வடதிசையாகவுந் தெனதிசையாகவுஞ் செல்வதோர் காலம். உத்தரம் - வடக்கு தக்ஷிணம - தெற்கு மதி - மாசம்; இது சந்திரன் ஒருமுறை வளாந்து தேயுங்காலம். (௧)

அமைச்சரை முகத்தி னோக்கி யணிமுடி கவிப்ப வெல்லா
மிமைக்குமு னியற்று வீரென றேவினன முடங்க லல்கிக்
குமைக்குமவை வேற்கை மன்னர் கோத்து முனிவர் சேய்மைத்
தமர்க்குமற் றெவர்க்குந் தூதர் தங்களை விடுத்திட் டானே.

(இ - ள்) மந்திரிகளை முகநோக்கி (ஏமகண்டனுக்கு) அழகிய மகுடாபிடேகஞ்செய்ய (வேண்டுதலின, அதற்கு வேணடுவன) வெல்லாவற்றையும இமைப்பொழுதிற்கு முன்னரே செயவீர்களாகவென்று கட்டளைசெய்து, (சத்துருக்களைக் கொன்று) குவியலாக்குங் கூர்மைவாய்ந்த வேற்படை தாங்கிய சோமகாந்தமன்னன் குற்றமற்ற முனிவர்களுக்குந் தூரத்திலுள்ள உறவினருக்கும் மற்றெல்லாருக்குந் திருமுகமீந்து தூதர்களைச் செலுத்தினன். எ - று

அமைச்சர் - இராசகாரியங்களை யமைப்போர். முடங்கல் - ஓலை; இது முடக்கிச் செலுத்தலின் இப்பெயர்த்து (௨)

கருணையங் குரவற் கூவிக் கைதொழு திறைஞ்சி மைந்தற்
கிருநிலங் காவ லல்க வியைக்கின் னபிடே கத்துக்

கொருவில்வண் பொருள்கள் யாவை யுணாததுக வென்ன வன்னுன்
பொருளெலாந் தாலம போழிற் பொறித்தளித் திதுவுஞ் சொன்னுன்.

(இ - ள்.) கிருபை தங்கிய அழகிய ஆசிரியனை விளித்துக் கைகுவித்துப் பணிந்து, (அடிகளே!) என் மகனுக்கு இப்பெரிய பூமியின் இராசரிகங் கொடுக்கச் சம்மதித்துள்ளேன். (அவனுககு) மகுடாபிடேகஞ் செயய வேணடிய நீக்கப்படாக வண்மைதங்கிய பொருள்கள் யாவை? (அவற்றைத) தெரிவிக்கவேண்டும எனக்கேட்க, அவ்வாசிரியன் பனையோலையில் வேண்டும பொருள்களையெல்லா மெழுதிககொடுதது இதுவுஞ் சொல்லினன். எ - று.

இயைநதனென் என்பதில என் தன்மை யொருமை வினைமுற்று விகுதி. (௬)

புண்ணிய பூமி முககட புண்ணியன் சநநி தானந
தண்ணிய நதியின றீரந தநைதநதவும் யானந தனனி
லெண்ணுமிவ விடததது ளொனறு மிடமிடத் தளுமீ சான
மண்ணுறு கிழககு தீசி யாமபி டேகத் தானம.

(இ - ள) புணணியபூமியும், புண்ணியசுரூபியாகிய திரிநேத்திரஙகளையுடைய சிவபெருமான் திருக்கோயிலும, தட்பமாகிய நதிதீரமும, நெருங்கிய நந்தவனமு மென்று கணககிட்ட இடஙகளிலொனறும், அவ்விடததிலும் தென்கிழக்கு பொருந்திய கிழக்கு வடககு (ஆகிய இவற்றி லோா) திககும அபிடேகத தானமாம எ - று. (௭)

ஐமமுழ மாதி யைமபத் தைமமுழத தளவின காறு
மைமமுகி றவழ வாககு மணடபத தகறசி யாகுஞ
செமமணித தூணி ராறு சோபதி ஞறு முறும
பொய்மமுதல் கடிநது காவல் புரிதரும புலவு வேலோய்

(இ - ள்.) பொயமுதலியவறறைத தண்டிததது அரசுசெலுததும புலான்மண மமைந்த வேறபடை தரிததஅரசனே! மேகங்கள் தவழ்நதுசெலலுமபடி யியற்றும் அபிடேகமண்டபவிசாலம ஐநதுமுழமுதல் ஐமபததைநது முழததளவுவரையில உள்ள தாம். செவ்விய மாணிககததூணகள பன்னிரண்டும, பொருநதியபதினறும, முப்பத் தாறும் அமைந்ததாயிருப்பதாம எ - று.

பொய் என்றது ஈண்டுப் பொய் புகல்வோரை யுணாததியது (௮)

அரசுவீற் றிருத்தற் கொன்று மபிடேகஞ் செய்தற் கொனறும
விரசுபன் மணியாற் பொனனுல் வெளளியாற ரும்பி ரத்தாற
பரசுபத் திரபீ டநதாம பணணுவ தாமயா கததுக்
குரைசெயு மரமு மாகு முறறபான மரமு மாகும.

(இ - ள்.) அரசுவீற்றிருப்பதற்கொன்றும், பட்டாபிடேகஞ்செய்வதற்கொன் றும், (ஆகவிரண்டு) பததிர பீடஙகள, நெருஙகிய பலரததினஙகளாலாவது பொன் னலாவது வெள்ளியாலாவது தாமிரத்தாலாவது செய்யததக்கதாம். அல்லது யாகத் திற்குச சொல்லப்பட்ட மரங்களாலுமாம. அல்லது பால்பொருந்திய மரங்களாலு மாம். எ - று.

யாகத்திற்குரிய மரங்கள - ஆல அத்தி அரசுமுதலியன.

பான்மரம் - பாலுள்ள மரங்கள். (௯)

ஒருமுழ முயர்ந்து செவ்வே யொன்றரை யகன்று முன்பி
னிருபடி யிணங்கி நான்கு பதத்தொடு மிருபபச சொன்ன
பொருள்களி னொன்றுற செய்து பொருந்திய நிலத்திற றிக்கிற
குருமணி மணட பத்தைக குயிற்றுமா றியற்று கென்றான்.

(இ - ள்.) ஒருமுழமுயர்ந்து, செவ்வையாக ஒன்றரைமுழமகன்று, முன்னும் பின்னும் இருபக்கலிலும படிகளபொருந்தி, நான்கு காலகளோடு மிருக்கும்படி, மேற் கூறிய பொருளகளிலொன்றாற் (பீடங்கள்) செய்து, (மேற்சொன்ன) தகுதியான இடத்தில (மூன்றுதிக்குகளில ஓர) திக்கில நிறமமைந்த இரத்தின மண்டபத்தைச் செய்யுமபடி கட்டளையிடுகவென்றான் (ஆசிரியன) எ - று (எ)

அம்மொழி கேட்டு மன்னன் னழைத்துவந் திறைஞ்சி நின்ற
கம்மியர் தம்மை நோக்கிக கதிர்பொழி மணியும பொன்னு
மிம்மெனு முன்னா நல்கி யிரண்டுபீ டனுசெய தீங்குத
தம்மினன றியல்புங் கூறி மற்றதுஞ் சாற்று கின்றான்.

(இ - ள்) சோமகாந்தன (ஆசிரியன்கூறிய) அவ்வார்த்தையைக்கேட்டு,தான அழைத்துவந்து சேவித்துநிற்கின்ற தபதிகளைப்பார்த்து, ஒளிவிடும இரத்தினங்களும் பொன்னும் விரைவிற்கொடுத்து, இரண்டு பீடங்களமைத்து இங்குக்கொணடுவாருங்க ளென்று, அவற்றின தன்மையையும் (ஆசிரியனுரைத்தவகையே) கூறி, மேலுஞ் சொல்லுகின்றான். எ - று.

கம்மியா - சிற்பர் (அ)

பணைமுழக் கறாத வாய்தற் பகடெடுழின மதிற லத்தி
லணைதரு குணக்குத் திக்கி லைம்பத்தைம் முழத்தி னெல்லை
துணையறு தூண்கண் முப்பத் தாறொடு துலங்க விண்ணு
மிணைதரா மணட பந்தா னொன்றுற விழைக்க வென்றான்.

(இ - ள) வாத்தியங்களின் ஓசையகலாத தலைவாயிலும பெருமைதங்கிய அழகிய மதிறலத்தோடணைந்த கீழ்த்திசையில ஐம்பத்தைந்து முழவளவில ஒப்பற்ற முப்பத்தாறு தூணகளும விளங்குமபடி தேவலோகமும ஒப்பாகாத மண்டபமொன்று பொருந்துமபடி செய்வீர்களாகவென்று உத்திரவு செய்தனன். எ - று. (கூ)

நம்பனே புத்தி யென்று நலத்தகு சிற்பர் போந்து
செம்பொனை யுருக்கி வார்த்துத் திவளொளி மணிக்கால யாத்துப்
பம்பெழிற பீட மாக்கிப் படிகளும பயிலச் சேர்த்து
வெம்புறு மடங்கற றிண்கால வெள்ளியா லியற்றி யிட்டார்.

(இ - ள்) அரசனே ! புத்தியென்று கூறி, நன்மைவாய்ந்த சிற்பர்கள்புகுந்து செம்பொன்னை யுருக்கிச்சாய்த்து, பிரகாசிக்கின்ற காந்திபொருந்திய இரத்தினங் களைப்பதித்து, அழகுபொருந்திய பீடமாகச்செய்து, படிகளும் பொருந்தவமைத்து, கோபமுற்ற சிங்கத்தின் வலிய காலகளை வெள்ளியினாற் செய்துவைத்தார்கள். எ-று.

கால்யாத்து - இதில கால் உபசர்க்கம (கo)

வேறு.

இருநில மகிழ்ந்து மணலசொரிந் திடியா வெழிலகொளநீலங்கீழ்ப்படுத்து
மருவுவித் தூரும மிடைப்படுத் ததன்மேன மாகதம படுத்தவன் குறட்டிற

குருமணிப் பதும ராகஞ்செய் தூண்கோ மேதஞ்செய் போதிகை கூட்டிப்
பருமணிப் புட்ப ராகவுத் திரத்தில் வச்சிரப் பலகையும் பரப்பி.

(இ - ள்) பெரிய பூமியைத்தோண்டி மணலைப்பெய்து (தரையை) இடித்து, அழகுபெற நீலரத்தினத்தை யடியிற் பரப்பி, பொருந்திய பவளத்தை இடைப்படுத்தி, அதன்மேல் மரகதத்தைப்பரப்பிய வலிய குறட்டின்பேரில், நிறம்பொருந்திய பதுமராகரத்தினத்தாற் செய்த தூணும், கோமேதகக்கற்களாற் செய்த போதிகையுஞ் சேர்த்து, பருத்த புட்பராகரத்தினத்தாற் செய்த வுத்திரத்தின்பேரில், வச்சிரரத்தினத்தாற் செய்த பலகையைப் பரப்பி. எ - று

இதுமுதலிரண்டுபாடல்கள் குளகம். (௧௧)

கொடுங்கைகள் வயிடூ ரியத்தினும் யாளி வரிகுளிர் மதிச்சிலை யானுங்
கொடுங்கையிற் றாக்குங் கோவைநித் திலத்துங் குலாவுபித் திகைபளிக் கானு
நெடுங்களிப் பயப்ப வமைத்துநாற் புறத்து நிரைமணி வாயில்கள் விடுத்துப்
படுங்கதிர்க் கனகத் தகட்டகம் படுத்துப் பன்மணி மண்டபஞ் செய்தார்.

(இ - ள்) கொடுங்கைகள் வயிடூரியரத்தினத்தாலும், யாளிவரிசை குளிர்ந்த சந்திரகாந்தக் கல்லாலும், கொடுங்கையினின்று தொங்கவிட்டகோவைகள் முத்துக்களாலும், பிரகாசிக்கின்ற சுவர்த்தலங்கள் பளிங்குகற்களாலும் (கண்டமாத்திரத்திலேயே) பெருஞ்சந்தோஷத்தை யுண்டுசெய்யும்படி யியற்றி, நான்குபக்கங்களிலும் வரிசையாக அழகிய வாயில்களைவிட்டு, ஒளிவிடுகின்ற பொற்றகட்டையுள்ளே பரப்பிப் பல ரத்தினங்களாலாகிய மண்டபஞ்செய்து முடித்தார்கள். எ - று (௧௨)

வேறு

நீண்ட தூண்டொறு நீள்குலை வாழையு
மாண்ட பூகமும் வார்கழை வேழமு
மீண்ட யாத்து விதானத் திடையிடைத்
தூண்டு ருத்த விளக்குந் தூக்கினார்

(இ - ள்) நீண்ட தூண்கடோறும் நெடிய குலைகளையுடைய வாழைகளையும், மாட்சிமைதங்கிய கமுகுகளையும், நீண்ட கருப்பங்கழிகளையும் பொருந்தக்கட்டி, மேற்கட்டின இடையிடையில் தூங்காவிளக்குகளையுந் தங்கவைத்தார்கள் எ - று.

அரும்பு பேரொளி மாலையு மாடியுஞ்
சுரும்ப ருமலர் மாலையுந் தூக்கினார்
விரும்பு நாரந்த மென்கனி யாதிகோத்
தொருங்கு நாற்றினர் ஓவியந் தீட்டினார்.

(இ - ள்) அரும்புகின்ற மிக்க பிரகாசத்தையுடைய இரத்தினமாலைகளையும், வண்டுகளூர்ந்த மலர்மாலைகளையுங் கட்டினார்கள். இச்சிக்கத்தக்க நாரத்தம்பழமுதலியவற்றை யொருசேரக் கட்டித் தொங்கவிட்டார்கள். சித்திரமெழுதினார்கள். எ - று.

காமர் பன்மணித் தோரணங் கட்டினார்
வாம மண்டப மாடுருங் காவணஞ்
சேம மண்டிலந் துன்ன வெடுத்தனர்
சேம மென்னச் செழுங்கவின் செய்தனர்.

(இ - ள்) அழகிய பல மாணிக்கத் தோரணங்களைக் கட்டினார்கள். அழகிய மண்டபத்தருகே சந்திரமண்டலத்தை யளாவும்படி சோலைகளை வைத்தார்கள். சேம முண்டாகும்படி செழுமைதங்கிய அழகினைச் செய்தார்கள் எ - று

சாவண மெடுத்தவை - சோலை வைத்தல் சோமமண்டிலந் தன்னொடென்னும் அடைமொழி பால் நாட்டிய சோலை யெனக்கொள்க. (கரு)

ஆசன முன்ன ரடுத்திடுங் கம்பிய
ராசன் றன்னிழை யாதன முன்னரமைந்
தாவப் பூங்கழ லாரணி மண்டப
மானுக் கேற்பநன் றாக்கின மென்றனர்.

(இ - ள்) ஆசன சமூகத்தையடுத்த தபதிகள் இரத்தினத்தாற் செய்த பீடத்தை முன்னே யிருத்தி, ஒலியையுடைய அழகியவீரக்கழலணிந்த அரசனே! சிவபிரானுக்குத் தக்கபடி இரத்தினங்களாலிழைக்கப்பட்ட அழகிய மண்டபத்தை நன்றாகச் செய்துமுடித்தோமென்று சொன்னார்கள் எ - று (கசு)

அகிலங் காக்கு மரச னிரும்பொனுந்
துகிலும் பூணுஞ் சொரிந்தவர் போக்கினன்
முகிலு ரிஞ்சிய மொய்ம்மணி மண்டபஞ்
செகிலி னூலபுணர் தேசிக னண்ணினன்

(இ - ள்) உலகத்தைக்காக்கும் ஏமகண்டராசன் மிக்க பொன்னையும் வஸ்திரத்தையும் ஆபரணத்தையும் (மழைபோல மிகுதியாகச்) சொரிந்து அத்தபதிகளைச் செல்ல விடுத்தனன். இரத்தினங்கள் நெருங்கியுள்ள மேகமளாவிய மண்டபத்தைக் குற்றமில்லாத நூல்களை யாராய்ச்சிசெய்த ஆசிரியனடைந்தனன் எ - று (கஎ)

ஐம்பத் தைந்து முழத்தக லத்தில
நம்பு நூல்பதி னொன்கிட்டு நன்பதம்
பம்பு நூற்றறு பத்தொன்ப தாக்கினன்
மொய்ம்பின் வீதியன் மூன்றுபன் மூன்றுற

(இ - ள்) (அம்மண்டபங்கொண்ட) ஐம்பத்தைந்து முழத்தளவு தூரமும், விரும்பத்தக்க பதினான்கு நூல்கள் தட்டி (நீட்டிலுங் குறுக்கிலும்) பதின்மூன்று பதின்மூன்று வீதிகள் பொருந்தும்படி, நெருங்கிய நூற்றறுபத்தொன்பது இடங்களாகப் பிரித்தனன். எ - று

இரண்டு நூல்களிட்டாலன்றி ஒரெல்லை யுண்டாகாமையின், பதினான்கு நூல்களிட்டுப் பதின்மூன்று வரிசையாக்கினனென்றும், பதின்மூன்று பதின்மூன்றுகள் நூற்றறுபத்தொன்பதென்றும், அவை சதுரவடிவாகச் செய்தனனென்றுங் கண்டுகொள்க.

நாப்ப ணின்ற பதத்தொரு நான்முழத்
தாப்பின் சென்றவ ளொலிமி யாளொடு
மூப்பி லாத முலையுமை யாளுற
நீப்பி லாமணி வேதிகை யிழைத்தினன்.

(இ - ள்) (அந்த நூற்றறுபத்தொன்பதிடங்களில்) நடுவில் நின்ற பதத்தில் சிவபெருமானுடன் உமாதேவியார் வீற்றிருக்கும்படி, அருமையாகிய அழகியவேதிகை யொன்று செய்தனன் எ - று

ஆப்பின் சென்றவனுறையான - பசுவின்பின் சென்றவனாகிய திருமாலாற் காணப்படாத சிவபெருமான். திருமால் கிருஷ்ணாவதாரத்தில் ஆயர்குலத்தில் அவதரித்துப் பசுமந்தை மேய்த்தமையின், அவரை "ஆப்பின் சென்றவன்" என்பபட்டனர்

இது பதின்மூன்று வரிசைகளில் ஏழாம் வரிசையில் ஏழாம் வீடெனக்கொள்க.

மூப்பிலாத முலை - முதிராத இளந்தனங்கள்.

அத்தைச் சூழ வடுத்தவெண் கோட்டமும்
விந்தி யேசுர வேதிகை யிட்டனர்
மற்றதைச் சூழ்பத மீரெட்டுந் தாதுவின்
கொத்துக் கென்று குயிற்றினர் வேதிகை.

(இ - ள்) அதனைச் சூழும்படி யடுத்துள்ள எட்டுப்பதங்களிலும் விந்தியேசுரர் எனமருக்கும் வேதிகைகள் செய்தனர் விந்தியேசுர வேதிகைகளைச் சூழ்ந்த பதங்கள் பதினாறிலும் தாதுவின் கூட்டத்திற்கென்று வேதிகைகள் செய்தனர் எ - று

இது பதின்மூன்று வரிசைகளில் ஆறு ஏழு எட்டு ஆகிய மூன்று வரிசையும் நாற்புறத்திலும் பொருந்தக்கூடியவை, என்றால் நடுவேயுள்ள ஒன்பது பதங்களில் சிவபிரானுக்கொன்றளித்துச் சூழ்ந்து நிற்பவையாம்

அதைச்சூழ்ந்த பதினாறு பதமென்றது - பதின்மூன்று வரிசைகளில் ஐந்து ஆறு ஏழு எட்டு ஒன்பது ஆகிய ஐந்து வரிசையும் நாற்புறத்திலும் பொருந்தக்கூடியவை, என்றால், சுற்றிலும் நான்கு வரிசைகள் வெற்றிடமாக்கொண்ட ஓர் வரிசை யெனக். (௨௦)

அடுத்துச் சூழ்ந்த பதமாறு நான்கையும்
விடுத்தெல் லாரும் வழங்குறு வீதியாத்
தொடுத்து நோபத மூன்றுந் துவாரமாப்
படுத்த னர்திசை நான்கிலும் பண்புற

(இ - ள்) (தாதுவின் கொத்துவரிசையை) அடுத்துச்சூழ்ந்த இருபத்து நான்கு பதங்களையும் யாவரும் உபயோகிக்கும் வீதியாகவிடுத்து, நாற்றிசைகளிலும் மும்மூன்றுபதவிகளைத் துவாரமாக அழகுறத் தொடுத்துச்செய்தனர் எ - று

அறு நான்குபதமென்றது - மூன்று முற்பதத்துவரையிலுள்ளபதங்கள் நாற்புறத்தும் பொருந்தவந்தவை யெனக.

நோபத மூன்று என்பது ஏழாவதுவரியில் மூன்று. இதனை நாற்புறத்துங் கொள்க (௨௧)

ஒழிந்த நூற்றெண் பதத்து முருத்திரர்க்
கிழிந்தி டாமணி வேதியி யற்றினர்
மொழிந்த வீதியுண் முற்றமுற் றமைபுர
வழிந்தி டாநவ குண்டமு மாக்கினர்.

(இ - ள்) (இவ்வாறு கணக்கிட்டவைபோக) ஒழிந்த நூற்றெட்டுப் பதங்களிலும் நூற்றெட்டு ருத்திரர்கட்கு, சிறப்புற்ற அழகிய வேதிகைகள் செய்தனர். முற்கூறிய (இருபத்துநான்கு பதங்களையுடைய) வீதியில், அழியாமையுடைய நவ குண்டங்களையுஞ் செய்தனர் எ - று

இந்த வீதிக்கும நாற்றிசைத் துவாரங்கட்கு மிடையிலுள்ள இருபத்தேழு. இவ்வகையாக நான்குமூலைகளிலுஞ் சேர்க்க நூற்றெட்டாதல் காண்க. (உ௨)

ஆங்கு நீங்கி யடுத்தனன் மனைவனை
நீங்கி லாயமுன் னீட்டிய யாவையும்
மீங்க ணுய்ப்பத்தனென் னென்றனு நோக்கினான்
பாங்கு ளார்க்குப் பணிபணிக் கின்றனன்

(இ - ள.) அவ்விடத்தை நீங்கி மன்னனை யடுத்தனன் குற்ற மில்லாத ஆசிரியரே! முன்னந் தேவர் செழுதிய வெல்லாப் பொருள்களையும் இவ்விடத்தி லமைத்தேன் என்று சொல்லவும (அவற்றைப்) பார்த்தனன். அருகிலுள்ள (சீடர் முதலான) வார்களுக்குப் பணிவிடைகள் கட்டளையிடுகின்றனன். எ - று (உ௩)

வேறு.

முக்கணற் குரிய கும்ப மூன்றிழை நாலும் வெற்பின
மைக்கணுட னிரண்டு சேர்த்த நாலுமற் றேனை யோர்க்குத்
தொக்குக்கும் பங்கட் கொவ்வொன் றுகவே சூழ்க தொக்கு
மிக்கபல் சமிதை யாதி வேறுவே றுய்க்க வென்றான்.

(இ - ள) திரிநேத்திரங்களையுடைய சிவபெருமானுக்குரிய கும்பத்திற்கு மூன்றிழைகள் வாய்ந்த நூலும், பர்வதராஜ புத்திரியாராகிய கரிய கண்களையுடைய உமாதேவியாருடைய கும்பத்திற்கு இரண்டிழைகள் பொருந்திய நூலும், பிறதேவர் கட்குரிய தொகுதியாகிய கும்பங்கட்கு ஒவ்வோரிழையுடைய நூலுமாகச் சுற்றுக. தொக்கும், மேம்பட்ட பல்வகைச் சமிதை முதலியனவும் (அவரவர்கட்கேற்ப) வெவ்வேறாக ஆராய்ந்தெடுக்கவென்று சொல்லினன் எ - று.

தொக்கு - மாந்தின் பட்டைகள். சமிதை - ஓமவிறகு. ஆதியென்றதால் தளிர் பழ முதலியனவுங்கொள்க (உ௪)

தருப்பைகள் ளாய்ந்து செய்யத் தக்கன குரவன் செய்ந்நு
திருப்பவ னுங்க முன்ன ரிறையவ னேவப் பட்ட
திருப்பொலி யமைச்சர் யார்க்குஞ் செய்பணி செப்பி விட்டார்
விருப்பொடு பணிந்தெல் லோரும் வேறுவே றியற்றப் புக்கார்.

(இ - ள) தருப்பைகளை யாராய்ச்சி செய்து, செய்யத்தக்க செயல்களைச் செய்து ஆசிரியன் அங்கே யிருக்க, முன்னர் அரசனால் கட்டளையிடப்பெற்ற செல்வ மிக்க மந்திரிகள் அவரவர்கட்கு (தாந்தாம்) செய்யத்தக்க காரியங்களைச் சொல்லிவிட்டார்கள். யாவரும் ஆசையுடன் பணிந்து வெவ்வேறாகத் தத்தமக்குரியதொழில்களைச் செய்யப் புகுந்தார்கள் எ - று (உ௫)

தெளிவிய வேவ லாளர் செப்பலு மகிழ்ந்து போற்றி
வளளுவ னுண்டு பூசி வாலிய வணிந்து வீர
வெள்ளிய வேற்றுப் போர்வை விசிமுர செடுத்து வல்லே
கள்ளிவர் மாலை நெற்றிக் களிற்றினி டேற்றிச் சொல்வான்.

(இ - ள்.) தெளிவமைந்த ஏவலாட்கள் (இவ்வகையாக) கூறவும், வள்ளுவன் சந்தோஷித்துத் துதித்து அன்னம் புசித்து வெண்ணீறு பூசி வெள்ளணி யணிந்து,

வீரம்வாய்ந்த வெண்மைதங்கிய எருதினதோலாற் போர்வைசெய்து கட்டிய முரசத்தையெடுத்து, தேனைசிந்தும மாலையணிந்த சிரத்தையுடைய யானையின்மேலிட்டு விரைவாகத் தானுமேறி இதனைச் சாற்றுகின்றான். எ - று. (உசு)

வாழியெந் ஞான்று மெங்கும் வைகிய தேவ தேவன்
வாழிய வைத நீதி மனுநெறிச் செங்கோல் வாழி
வாழிய சோம காந்த மன்னவன் கிளைக ளோடு
வாழிய வுலக மெல்லாம் வாழியிந் நகர மென்றான்

(இ - ள) எவ்விடத்தும எக்காலத்தும விளங்குகின்ற தேவதேவன்வாழக்கடவன. வைதிகநெறிவாழக்கடவது மனுமுறைப்படி செலுத்துஞ் செங்கோல வாழக்கடவது சோமகாந்தராசன தன சுற்றத்தாரோடு வாழக்கடவன உலகமுழுவதும வாழக்கடவது இந்தத்தேநகரம வாழக்கடவது எ - று (உஎ)

கலைமகள் வீரச் செல்வி முன்னரே காணி கொண்ட
மலைநிகர் தோளி னுறகு மண்மக ளோடு செல்வத்
தலைமக ளிவரை நாளைத் தக்கவர் புணாத்த நின்று
ரிலைமுகப் பூணி ரெல்லா மிருந்தா புணைக வென்றான.

(இ - ள்) சரசுவதியும, விஜயலட்சுமியும் முன்னமே யிருப்பிடமாகக்கொண்ட மலைபோலப்பூரித்த தோளையுடைய எமகண்டராசனுக்கு, பூதேவியும் சிறந்த திருமகளும ஆகிய இவர்களை நாளைப்பொழுதில மணமபுணாத்தும்படி தக்கோர்கள் தீர்மானித்துளார (ஆதலின) தகட்டுவடிவாகச்செய்த முகத்தையுடைய ஆபரணமணிந்த நீங்களயாவரும பெரிய இந்நகரத்தை யலங்கரிப்பீர்களாகவென்று கூறினன் எ-று

கலவியும வெற்றியும முன்னரேயுடையனாதலின் "கலைமகளவீரசசெலவி முன்னரே காணிகொண்ட மலை நிகர் தோளினான்" என்றும, பூபாரத்தையும இராச செல்வத்தையுங் கொடுக்கப்படுதலின "மண்மகளோடு செல்வத்தலைமகள இவரைப் புணாத்த"—என்றுங்கூறினா (உஅ)

பண்டைய தினத்தின் மேலும் பாரிக்க வறம்பா ரிக்க
மண்டிய பொருளகை யில்லோா மன்னவ னிதிப்பண் டாரம
விண்டன வாயதல சென்று வேண்டுவ கொண்டு செய்க
வுண்டெனில வெறுப்புத் தெய்வத் துளத்தஃ தொழிக வென்றான.

(இ - ள) முன்னைய நாளைககாட்டிலும (எல்லாப்பராக்கிரமங்களும) வளருக தருமம் விருத்தியாகுக மிக்கபொருள கையிலில்லாதவாகள அரசனுடைய செல்வமாகிய பொக்கிஷத்தின திறந்துள்ளவாயில்களிற்சென்று வேண்டுமளவும் (கேட்டுப்) பொருள்பெற்றுச்செய்க தெய்வத்தின மனத்தில வெறுப்பிருக்குமாயின அதுவும விலகுகவெனககூறினன. எ - று (உகூ)

இனிபன நுகாந்து பூசி யெழில்கொள வணிந்து மென்றீங்
கனியென மொழிந்து வின்பங் கனிதர வளவ ளாவிப்
புனிதவிண் ணவாக்குப் பூசை போற்றுக போற்று கென்று
நனிபல பொருளுஞ் சொல்லி நவிமுரசு செருக்கி னானே.

(இ - ள) இனியனவாகிய வுணவுகளையுண்டு, (பரிமளவஸ்துக்களைப்) பூசி, (சிறந்த ஆபரணங்களை) அணிந்து, மெல்லிய சுவையமைந்த கனியைப்போல வசனி

த்து, மனத்தில் இன்பமதிகரிக்க (ஒருவரோடொருவர்) அளவளாவி, பரிசுத்தமாகிய தேவர்கட்குச்சிறப்புச்செய்க சிறப்புச்செய்கவென்று, பலபொருள்களையும் நன்றாகக் கூறிப் பெருமைபொருந்திய முரசத்தை யறைந்தனன். எ - று. (௯௦)

அறைபறை வகுத்துச் சொன்ன வரும்பொரு ளுணர்ந்தன் போடு
நிறைதரு மறங்க ளாற்றி நெடுநகர் முழுதுங் கோடித்
துறைபுநர் கரிக ளெல்லா முவந்தனர் தத்த மைந்தர்
கிறைமைவந் தடுத்தாங் குள்ள மாதிக மினிய ரானார்

(இ - ள்) ஒலிக்கின்ற பறையறைந்து (வள்ளுவன் கூறியவற்றின்) அரிய பொருள்களை யறிந்து, அன்புடன் நிறைவாகிய தருமங்களைச்செய்து, பெரிய நகரமுழுவதையும் அலங்காரஞ்செய்து, அந்நகரவாசிகள் யாவருந் தத்தம் புதல்வர்களுக்குத் தலைமைவந்தாற்போல மனமுதலியன இனியவர்களானார்கள் எ - று. (௯௧)

சேனைகட் கிறைவ னேவச் சேவடி பணிந்து போந்து
யானைகட் கரசை யாதோ ரணருண லரசன் மண்ணித்
தேனிவர் மதம றாத திருமுக மெழுதி யோடை
பூநிற நுதலின் வீக்கிப் பொற்புறப் பண்ணி னானே

(இ - ள்) சேனைகளுக்குத் தலைவன் கட்டளை செய்ய, யானைகட் கரசாயுள்ள ஓர் யானையை, யானைப்பாகருள் தலைவனாயுள்ளவன் சென்று பாதங்களைப் பணிந்து வந்து, நிலைத்து வண்டுகள் மொய்க்கும் மதப்பெருக்கொழியாத அழகிய முகத்தில் (சிந்தூரம்) எழுதி, முகபடாத்தினை அழகிய நிறமமைந்த நெற்றியிற் கட்டி அழகுபெறச் செய்தனன். எ - று.

ஆதோரணர் - யானைப்பாகர் குத்துக்கோற்காரர்

யானை கன்னமதப் பெருக்குடைமையின் "தேனிவர் மதமறாத திருமுகம்" எனப்பட்டது. (௯௨)

வல்லவ ரிறைவன் சென்று வார்கொடி யுயர்த்தித் தூசுங்
கலனுநன் கணிந்து பூட்டுங் கனைவாம் பரியும் பண்ணிக்
குலவிய கொற்ற வைவாள் கொடுமரம் பகழி யாதி
பலவுமுண் ணிறைத்து வைத்துப் பாழித்தேர் பண்ணி னானே

(இ - ள்) தேர்ப்பாகர்களுட்டலைவன் சென்று நெடிய துவசத்தைக் கட்டி வஸ்திரமும் ஆபரணங்களும் நன்றாகப்பூட்டி, கட்டத்தக்க வேகத்தையுடைய தாவிச் செல்லுங் குதிரையையும் அலங்கரித்து, நெருங்கிய வெற்றிபொருந்திய கூர்மை வாய்ந்த வாளும் வில்லும் அம்பும் முதலிய பல பொருள்களையும் உள்ளே நிறைத்து வைத்துப் பெருமைபொருந்திய இரதத்தை யலங்கரித்தனன் எ - று (௯௩)

வாதுவர்க் கிறைவன் சென்று வாசநீர் முழுது மாட்டிக்
கோதுமுற் றொழிந்து நல்ல குணத்ததாய்ப் பகைவ ருள்ளம்
பேதுசெய் கலினப் பாய்மாப் பேரொளிக் கலன்கள் பூட்டிக்
காதடி மயிர்க ளார்த்துக் கவின்மிகப் பண்ணி னானே.

(இ - ள்) குதிரைச்சேவகருட் டலைவன் சென்று, வாசமமைந்த நீரினால் முழுதுங் கழுவி, குற்றஞ் சிறிதுமின்றி நற்குணமுடையதாய்ப் பகைவர் மனத்தைக

குழம்பச்செய்யுங் கடிவாளம்பூண்ட பாய்ந்து செல்லுங் குதிரையை, மிக்க வொளி வாய்ந்த ஆபரணங்களைப் பூட்டிக் காதின் அடியிலுள்ள மயிர்களைக் கட்டி மிக்க அழகுடையதாகச் செய்தனன் எ - று.

வாதுவர் - குதிரைச்சேவகர் காதடி மயிர்களார்த்தல் - இது காதினடியில் வளர்ந்த மயிரைப் பின்னிவிடுதலாம். (௬௪)

சாரண ரடுத்து நின்று தகுதியி னளித்த வோலை
பேரண வியகை யேந்திப் பொருடெரிந் தரச ராதி
சீரண வியவெல் லாருஞ் செறிந்தவங் கத்த ராகிப்
பூரண வனப்பின் வாய்ந்த பூவைய ரோடுஞ் சார்ந்தார்

(இ - ள) மன்னர்முதலிய சிறப்புற்றயாவரும், (சோமகாந்தன்விடுத்த) தூதுவர் சமீபித்து நின்று, தகுதியோடு கொடுத்த திருமுகத்தைக் கையிலேற்று அதன் பொருளையுணர்ந்து, நெருங்கிய (நால்வகை) அங்கங்களையுமுடையவர்களாகி, நிறைந்த அழகுடன்பொருந்திய தத்தம் மனைவிமாருடன் (தேவநகரத்தை) அடைந்தார்கள். எ-று.

வாரண முழக்க மோர்பால் வாம்பரி முழக்க மோர்பாற்
றேரணி முழக்க மோர்பாற் செறிபடை முழக்க மோர்பா
லாரண முழக்க மோர்பா லாடலின் முழக்க மோர்பாற்
றோரண மாட வீதி தொறுநிறைந் திட்ட வன்றே.

(இ - ள) ஒருபக்கத்தில் யானையின்முழக்கமும், ஒருபக்கத்தில் தாவிச்செல்லுங் குதிரையின் முழக்கமும், ஒருபக்கத்தில் அழகிய தேரின் முழக்கமும், ஒருபக்கத்தில் நெருங்கிய படையின் முழக்கமும், ஒருபக்கத்தில் வேதத்தின் முழக்கமும், ஒருபக்கத்தில் நடனத்தின் முழக்கமுமாகத் தோரணங்கட்டிய மாடவீதிகளிலெல்லாம் நிறைந்திருந்தன எ - று. (௬௫)

பூம்புன லாடு வாரும் பொழில்விளை யாடு வாருந்
தேம்பிழி மாந்து வாருஞ் செறிந்துவா தாடு வாருங்
காம்புறு மாட வீதிக் கோட்டிணை நோக்கு வாரு
மாம்பல வினையின் வெவ்வே றாயின ரடுத்தோ ரெல்லாம்.

(இ - ள) அங்குவந்தவர்கள் யாவரும் அழகிய நீரில் விளையாடுபவர்களும், சோலைகளில் விளையாடுபவர்களும், மதுரமாகிய கள்ளையருந்துபவர்களும், நெருங்கிச் சூதாடுபவர்களும், சனப்பெருக்குடைய மாடவீதியின் அலங்காரங்களைப் பார்ப்பவர்களுமாகிய பலதிறப்பட்ட செயல்களில் வெவ்வேறானார்கள் எ - று.

வாதாடுவாரும், என்பதற்குத் தாமுண்ட மதுமயக்கால் வாதுசெய்வோருமெனப் பொருள் கூறினுமமையும்.

புனலாட்டு, பொழில்விளையாட்டு, கட்குடித்தல், சூதாடல் முதலியன பெருங்காப்பியத் துறுப்புகளிற் சேர்ந்தவை. (௬௭)

அனைவரு மினைய ராக வமைத்தநா ளடுத்த வோரும்
புனைகழ லரச னேவப் புரையறு விதியி னோரான்
வினைமுடி நாட்கு முன்னே மேவிய மூன்று நாளின்
வனைகலைத் தாறும ணிட்டு வணமுறை வித்தி னானே.

(இ-ள்.) (அந்தத்தேவநகரத்திலிருக்கும்) எல்லோரும் இவ்வகையாக (சந்தோஷமுற்று) இருக்க, (பட்டாபிடேகத்திற்கு) நியமித்ததினம் நெருங்கவும், அலங்கரிக்கின்ற வீரக்கழலணிந்த சோமகாந்தமன்னன் உத்திரவுசெய்ய, குற்றமற்ற ஆசாரியன் பட்டாபிடேகஞ் செய்விக்குந்தினத்திற்கு முற்பட்டுப் பொருந்திய மூன்றாந்தினத்திலே, செய்யப்பட்ட பாலிகையில் மண்ணிட்டு, வண்மைதங்கிய முளைகளை விதைத்தனன் எ - று

பாலிகையில் மண்ணிடுதல் மிருத்சங்கிரகணமென்றும், முளைவித்துதல் அங்குரார்ப்பணமென்றுஞ் சொல்லப்படும். (௩அ)

வழிவரு நாளிற் சந்த மலர்பொரி யரிசி சாந்து
பொழிதயி ரளைவா ரிப்பூ சித்துப் பலிமுன் னிட்டுக்
கழிபெரு மகிழ்வி னோடு கடவுள ராரு மொல்லா
மொழியில ராக வீண்டை யுறுகென விளித்திட் டானே

(இ - ள்) அந்தத் தினத்தில் வாசந்தங்கிய மலர்களும், பொரியும், அரிசியும், சந்தனமும், பொழிகின்ற தயிருங்கலந்து, பூசையாற்றி, முற்பட்ட பலியிட்டு, மிக மேம்பட்ட களிப்புடன் தேவர்களாயுள்ளவர்கள் யாவரும் ஒருவரு நீங்காமல் இவ்விடத்தில் வருவீர்களாகவென்று (மந்திரஞ்செயலால்) அழைத்தனன் எ - று. (௩௯)

ஏந்திலை வேலான் மைந்த னேமகண் டற்கு நல்ல
சாந்தியின் பொருட்டுப் பாகர் சமைத்தமான் களிறு பொற்றேர்
காந்தொளிப் படையு மன்றே கடன்முறை பூசை யாற்றி
யீந்தனன் மறையோர் தக்கோ ரிரவலர் தமக்கு மன்னம்.

(இ - ள்) ஏந்திய அச்சவடிவாகிய வேற்படையையுடைய சோமகாந்த மன்னன் மகனாகிய ஏமகண்டனுக்கு நல்ல சாந்திசெய்வதற்காகப் பாகர்கள் சமைத்த குதிரையும் யானையும் அழகிய தேரும் பிரகாசிக்கின்ற ஒளியையுடைய சேனையுமாகிய வற்றை அப்பொழுதே விதிமுறைப்படி பூசைசெய்து, வேதியருக்கும் தக்கபாத்திரர்களுக்கும் யாசகர்களுக்கும் அன்னமளித்தனன் எ - று (௪௦)

அற்றைநா ளிரவிற் றன்மு னொடுக்கப் புரிநாண் டாங்கிக்
கொற்றவன் மகற்கு மைந்தன் கோற்றொடி மனைக்கு நேரே
பொற்றகங் கணங்கை யாத்துப் புதிதிய லங்க மைந்தும்
பற்றின னணிந்து பூசை பண்ணுதல் வலித்தா னன்றே

(இ - ள்) அன்றைய இராத்திரியில் ஆசிரியன் முதலிற் பொற்காப்புக்கட்டிக்கொண்டு, அரசன் புத்திரனாகிய ஏமகண்டனுக்கும், அவனுடைய அழகிய வளையலணிந்த மனைவிக்கும், அழகுபெற்ற பொன்னாலாகிய கங்கணங்களைக் கையிற்கட்டி, புதிதாகச்செய்த ஐந்தங்கங்களையுங் கரத்திற்பெற்றுத் தரித்துப் பூசைசெய்வதில் வலியமனமுடையவனாயினன் எ - று

அங்கமைந்து - குண்டலம் மோதிரம் உபவீதம் வஸ்திரம் மிதியடி. இவை பலவகையாக வேறுபடக்கூறலுமுண்டு. (௪௧)

பல்லிய மியம்பா நிற்பப் பாவைய ராட னிற்ப
வல்லவ ரியானத் தோடு மந்திரங் கணியா நிற்பச்

சொலவினை மறைக ணைகுரு சோதக ரோத்ர நிறப
நலலவா பலரோா கேடட நனபொரு ணீடடா நிறப.

(இ - ள்.) பலவாத்தியஙகள் ஒலிககாநிறகவும, சித்திரபபதுமைபோனற மங கைபாகள நடனஞசெயயாநிறகவும, ஜபததில வலலவாகள தியானஞசெயயவும மந்திரஙகளை ஜபிககவும, சோதகாகள சொலலுகினற ஓசையயுடைய வேதஙகளை யையும ஓதாநிறகவும, நலலவாகள பலா (அவரவா்விருமபிக) கேட்ட நறபொருளகளைக (கையால) நீட்டாநிறகவும எ - று. (௬உ)

பித்தியிற சிறபன முன்னாப பேரெழில வாயபபச செய்த
சித்திரத் துருவின முககட செழுமதக களிறறை நாடடிப
பத்தியிற பூசை யாறறிப பலவகை யுணவு மூடடி
வித்தக விடையூ றினறி வினைமுடித திடுக வெனறான.

(இ - ள்) சுவாததலத்தில, சிறபன முதலிற பேரழகுபொருந்தச செயது வைதத சித்திரவடிவத்தில மூனறுவிழிகளையும மதபபெருககையுமுடைய யானைமுக விநாயகக்கடவுளை யாவாகனஞசெயது பத்தியுடன பூசைசெயது பலவகைபபடட (மோதகமுதலிய) உணவுகளையுணபித்து [நிவேதனஞசெயது] ஞானசுருபியே! யாதொரு தடையுமிலலாது இநதககாரியததை முடிவுபெறச செயயவேணடுமெனறு பிராாததிததனன. எ - று (௬௩)

சூரிய னாதி யாகத தூயசண டேச னீறு
சேருற நூலிற சொனன நிலநதொறுங கலசந தாவித
தாருநற பூசை யாறறி யவரவா தமமை வெவவே
றேருறு பூசைக கூறெய தாவகை காகக வெனறான.

(இ - ள்) சூரியன முதலாகப புனிதமாகிய சணடேசனிறுதியாக வரிசைப பட நூலில் வகுதத நிலஙகடோறுங கலசஙகளைத தாபனஞசெயது, பொருநதிய நலல பூசனையைசசெயது அவ்வத தேவாகளை வெவவேறாக அழகுபொருநதிய பூசைககு இடையூறு நேரிடாவணணங காப்பாற்றுகவெனறு பிராாததிததனன. எ - று. (௬௪)

பரபபினன சாலி தூணிப பதககரி யதனிற பாதி
விரிபபுறு மரியிற பாதி வெறறவெள ளதிறகாற கூறு
கரப்பிறு னியமொன் பானுங கலநததன மேலே வைததான
சுரபபுறு மனபு பொஙகத துலஙகுபொற சிவகும பததை

(இ - ள்) தூணிப்பதககு நெலலும, அதிற பாதி அரிசியும, பரப்பிய அரிசியிற பாதி சுத்தமாகிய எளளும, எளளிற காறகூறு குறறமிலலாத நவதானியஙகளுங் கலநததும, (ஆக ஒனறனமேலொனறு வரிசையாகப) பரபபி, ஊறறெடுககினற அனபானது அதிகரிககுமபடி சிவகுமபததை யதனமேரில எழுநதருளசசெயதனன. எ - று

சாலி - ஓாவகை நெல (௬௫)

மஙகல வியஙகள விமம வாாநதி முகநது செமபொற்
றுங்கவொண் குடததின யானைச சுவறறலே வரிசை யோடு
மஙகுவாந தடுதத தூநீ ராடையில வடிததுு மெலலப
பஙகமுற றறநா லெடடுப படியுறப பூரித தானே.

(இ - ள்) மங்கலவாத்தியங்கள் முழங்கவும், நெடிய நதியினின்று முகந்து செம்பொன்னாலாகிய புனிதமான பிரகாசம்பொருந்தியகுடத்தில் யானையின் மத்தகத் தின்மேரில் வரிசையாக அங்கே வந்துள்ள புனிதமாகிய நீரை வத்திரத்தால் மெல்ல வடிகட்டிச் சேறில்லாமல் அறப்போக்கி, முப்பத்திரண்டுபடி சலம்பொருந்தச் சொரிந் தனன். எ - று. (சசு)

பொன்னவ மணிகோட் டங்கற் பூரமே யகரு வாசந்
துன்னுசந் தனமே வெட்டி வேரொடு விரைகள் பலவும்
மின்னுபல் பழங்கள் பற்பல் வியன்கொடி பஞ்ச கவ்ய
மின்னவுஞ் சொரிந்து கூர்ச்ச மிலையிருங் கனிமேல் வைத்தான்.

(இ - ள்) பொன்னும் நவமணியும் கோட்டமும் கற்பூரமும் அகரும் வாசம் பொருந்திய சந்தனமும் வெட்டிவேரும் கூட்டமாகிய வாசனைத்திரவியங்களும் பல மலர்களும், ஒளிவாய்ந்த பல கனிகளும் பல பல பெரிய கொடிகளும், பஞ்சகௌவிய மும் இவைபோல்வனவுஞ் சொரிந்து, மாயிலை பெரிய நாரிகேள பலம் தருப்பைமுடி (இவற்றை) மேலே வைத்தனன் எ - று. (சஎ)

அடிப்பரப் பிருநீர் சொன்ன வளவினிற் பாதி யீச
னிடப்புறக் கரகத் துக்கு மிதற்குறு மளவிற் பாதி
கடப்பட விருத்து மெல்லாக் கலையங்க டமக்கு மாகச்
சுடாப்பசுஞ் செழும்பொ னாதி சொரிந்தனைத் திலுக்கும் வைத்தான்.

(இ - ள்) (சிவகும்பத்திற்குச்) சொல்லிய நீரின் அடிப்பரப்பிற் பாதி சிவ கும்பத்திற் கிடப்புறத்திலுள்ள உமாதேவி கும்பத்திற்கும், இதிற் சொரிந்த அளவிற் பாதி முறைமைப்படி யிருத்திய எல்லாக் கலயங்கட்குமாக (நீரை) சசொரிந்து, ஒளி விடும் பசுமைதங்கிய செழும்பொன் முதலியவற்றை (அவரவாக்கேற்ப) ப்பெய்து அவ்வக் கும்பங்கட்கும் (இலையுங் கனியும்) மேலே வைத்தனன். எ - று. (சஅ)

இருகலை வெவ்வே றெல்லாக் கும்பத்து மெய்த்தச் செய்து
கருவிறும் விதத்தி யேசா கலையமோ ரெட்டி னுள்ளும்
பெருகுபொன் வெள்ளி செம்பு பித்தளை யியங்கு காரப்பொன்
இருப்புவெண் கலமிவ் வெட்டு மொவ்வொன்றுச் சேர்த்தி னானே.

(இ - ள்) எல்லாக் கும்பத்திலும் வெவ்வேறாக இரண்டாடைகளைப் பொருந் தக்கட்டி, (தம்மைப் பணிவோருடைய) பிறவியை யொழிக்கும் அஷ்டவித்தியேசர ருடைய கலசங்களெட்டிலும் பெருகுகின்ற பொன் வெள்ளி செம்பு பித்தளை ஈயம் இரும்பு (தரா) வெண்கலம் ஆகிய இவ்வெட்டையும் ஒவ்வொன்றாக இட்டனன். எ-று.

அஷ்டவித்தியேசர்-அநந்தன - சூக்குமேசன-சிவோத்தமன-ஏகநேத்திரன - ஏகருத்திரன் - திரிமூர்த்தி - சீகண்டன் - சிகண்டீசன் எனப்படுவோர். (சகூ)

வேறு.

அருகுசூழ் கலைய மெட்டிரட் டியினு மகருகெந் தகமரி தார
மருவுமாட் சிதமே மனசிலை யிரதம வழங்கிரண் டப்பிரங் கெட்டுத்
தெருளுறுங் கவுரி காஞ்சனஞ் சாதி லிங்கமே சிந்துரந் துத்த
மருளறு மிரண்டு விமலைகள் காந்தம் வகுத்தவீ ரெட்டையு மிட்டான்.

(இ - ள்.) (விததியேசுவர கலசத்தினை) அடுத்துச் சூழ்ந்த பதினாறு கலசங் களிலும் அகில் கெந்தகம் அரிதாரம் பொருந்திய தேன் மனசிலை இரசம் சொல்லு கின்ற இருவகை அப்பிரகம தெளிவு கெட்டுண்டாகின்ற கவுரி காஞ்சனம் சாதிலிங் கம் சிந்தூரம் துத்தம மயககமறற இருவகை விமலைகள் காந்தம் எனக்கூறிய பதினாறு பொருள்களையும் இட்டனன. எ - று (௫௦)

அப்பிரகம் சுவேதாப்பிரகமென்றும், கிருஷ்ணாப்பிரகமென்று மிருவகையாம்.

சோதியின மரமே சோதியின் கொடியே சோதியின மிரணமே பயையே
மேகரும பார சிறைதவளா சீவை வினசகரி சமங்கையே விசையை
பூதிசெய் சபையே புகழ்சக தேவை பூரணை கேசையே யடடை
தீதினை யறுக்குஞ் சதாவரி சிவபத திரையுமவ வீரொட்டி னிட்டான்.

(இ - ள) சோதிமரம சோதிககொடி சோதியிலை சோதிமரப்பிசின மேன் மைதங்கிய பாரசிதை வொகின்ற சீவை வினசகரி சமங்கை விசையை பூதியைசசெய் கின்ற சபை கீரததிதங்கிய சகதேவை பூரணை கேசை அஷடை தீமையை யொழிக் குஞ் சதாவரி சிவபத்திரை ஆகிய இவறறையும் அநதப பதினாறு கலசஙகளில (முறை யே) இட்டனன. எ - று. (௫௧)

குணககுறு துவார மிருமருங கடுதத குமபமீ ராறனுட் பலாசு
துணாக்கருக காலி யாமபிரங கலலால சுததவால கூவிளம வனனி
மணககுநல வாகை பிபபல மததி மல்குநா ரததைமா தனையென [டான்.
றுணககலசெய யாத படடைபன னிரண்டு முறுமுறை யெடுதெடுதே திட்

(இ - ள) கிழககிற பொருநதிய துவாரததின இருபககலிலும அடுதத பன் னிரணடு கலசங்களிலும பலாசு - பூஙகொத்துககளையுடைய கருங்காலி புளிமா கல லால நல்லால விலவம வனனி வாசனைவீசும் நல்ல வாகை அரசு அததி நாரததை மா தனையென்று சொலலபபடும உலாததாத பட்டைகள பனனிரணடையும பொருநதிய முறைபபடி யெடுதெடுதது பெயதான. எ - று (௫௨)

அங்கியின றிசையி னொன்பது குமபத தாறறும ணானிலை புறுமண்
பஙகயில புறறு மணணிபக கோடு படடமண பாயதிரைக கடனமண்
பொஙகுநீர மடுமண் புணணிய தலததுப் புனிதமண் விலஙகனமண ணரசிற
றங்கும ணிநத வொன்பது மாயநது தனிததனி யுறுமுறை யிடடான.

(இ - ள்.) அககினிதிசையிறபொருநதிய ஒன்பது கும்பஙகளிலும் ஆற்றுமண் பசுமந்தையிடதது மண கெடுதலிலலாத புறறுமண யானைககோடுபட்ட மண பரநத அலைகளையுடைய கடல மண மிகக நீரையுடைய மடுமண் புணணியதலததிலுள்ள பரி சுததமான மண மலைமண அரசடிமண ஆகிய இநத ஒனபது மண்ணையும ஆராய்ந்து தனிததனியே பொருநதிய முறைபபடி இட்டனன். எ - று. (௫௩)

தென்றிசைத துவாரத் திருமருங கடுப்பச சோநதபன னிரண்டுகும பத்து
மன்றலங் கழுநீர நீலமே வெண்டா மரைசெநதா மரைமகி ழலரி [ண
யொன்றுபா திரியே குரவமா லதியி னொண்மலர் முனிபுட்பம வணடு
சென்றுதேன மாநது நநதியா வட்டஞ் செண்பக மிராறுமே ரிட்டான்.

(இ - ள்.) தென்றிசைத்துவாரத்தில் இருபககலிலும் நெருங்கப்பொருந்திய பன்னிரு கும்பங்களிலும் வாசனைபொருந்திய அழகிய செங்கழுநீர்மலர் நீலோற்பல

மலர் வெண்டாமரைமலா செந்தாமரைமலா மகிழமலர் அலரிமலர் பொருந்திய பாதிரி மலா குராமலர் சிறுசண்பகமலா அகத்திமலர் வண்டுகள் சென்று தேன்பருகும் நந்தி யாவர்ததமலா செண்பகமலர் இந்தப் பன்னிரு மலர்களையும் இட்டனன். எ - று (௫௪)

நிருதியின் றிசையிற் கும்பமொன பதனு ணெகிழ்ந்தசந் தனம்வெட்டி
மருமிகு புழுகு குங்குமம் வாச மலகுகத தூரிதந கோலந [வேரோ
திருகறு மகரு செழுமணச சாபத் திரியில வஙகமே யென்ன
வருவிரைப் பொருள்களொன்பதுஞ சால வரிசையி னெடுததுற விடடான்.

(இ - ள்) நிருதிதிசையிலுள்ள ஒனபது குமபஙகளில் அரைதத சந்தனம் வெட்டிவேர் வாசமிக்க புழுகு குஙகுமம் கஸதூரி வாலமிளகு குறறமறற அகரு செழித்த மணமுடைய சாதிபததிரி இலவஙகம எனறு சொலலபபடும் வாசனைத்திரவியங்கள ஒன்பதையும் வரிசையாயெடுதது மிகுதியாகப் பொருநத இட்டனன. எ - று.

மேற்றிசைத் துவார மிருமருங் கடுபப மேவிய குமபமீ ராறுட்
கூற்றுறு மூஙகி லரிசியொ டுழுநது குளநெற்கோ தூமையே யவையே
தேறறுநா வுரியி னரிசியெள் பயறு தினைசெழுங கடுகுமென் சாமை
தோறறிய வரகென றுரைத்தபன் னிரண்டுஞ சுத்திசெய தெடுததினி திட்டான்.

(இ - ள்.) மேறறிசைததுவாரத்தில் இருபக்கலிலும நெருங்கச்சோநத பன்னிரண்டு குமபங்களில் சொல்லுகினற மூஙகிலரிசி உழுந்து குளநெல் கோதுமை யவை தெளிநத நாவுரியரிசி எள் பயறு தினை செழுமைவாய்நத கடுகு மெலலிய சாமை வரகு என்று சொலலிய பனனிரண்டு தானியஙகளையுஞ சுததிசெயது எடுததுப் பெயதனன. எ - று.

யவை-கோதுமையி லோரவகை (௫௬)

வளிவளா திசையிற குமபமொன் பதனுண் மனனிலக் குமிசங்க புட்பி
யொளிவளர் விண்டு காநதியஞ் சனிதே னூற்றிய துழாயசக தேவி
துளிமது வாரு மிநதிர வல்லி சூரியா வருததமபன் மினியென
றளியின ருரைதத வருஞசிறு தூரோ ரொனபது மாதரத திடடான.

(இ - ள்) வாயுதிசையிற பொருந்திய கும்பஙக ளொனபதில, நிலைபெற்ற இலக்குமி சஙகபுட்பி ஒளிவிளங்கும விஷ்ணுகாநதி அஞ்சனி தேனசிநதந துளவு சக தேவி துளிக்கினற தேனைச்சொரியும் இநதிரவலலி சூரியாவாததம பனமினி யெனறு பெரியோா கூறிய அரிய சிறு தூறுகளொன்பதையும ஆசையுடனிட்டனன் எ - று.

வடக்குறு துவார மிருமருங் கடுபப வதிநதபன னிரண்டுகும பததுட்
டொடகலெலா மறுககும பாறயி ரிழுது தூயகோ சலமய மிளநீா
விடற்கருஞ சுவையின மாதளை நாரநதம விலவமாத தாடிமம பலாவின
றடககனி யிரதமாயபன் னிரணடுந தழைததகா தலினமிகச சொரிநதான்.

(இ - ள) வடதிசையிற் பொருநதிய துவாரத்தின இருபக்கலிலுந தங்கிய பன்னிரண்டு குமபங்களில, பாவஙகளை யெல்லாமொழிககும் பால் தயிர் நெய் புனிதமான கோமூததிரம் சாணம இளநீா நீக்குதற்கரிய சுவையையுடைய மாதளை நாரததை வில்வம்மா தாதுமாதளை பலாவெனனும பெரிய கனிகளின் இரசங்கள் ஆகிய பன்னிரண்டையும் பெரு விருப்புடன மிகுதியாகபபெயதான். எ - று. (௫௮)

வடிவிலீ சான திசையிலொன் பதிற்று மாசைக்கும் பங்களுள வேறு
படுவன வில்லை யாதலான் முன்னர்ப் பாய்த்திய கந்தநீ ரேயா [ழிந்த
மிடையிடை மும்மூன் றெண்டிசை யினுமிங் கிரும்பொருளிடப்பட்டொ
தடமணிக் கும்பந் தமக்குமுன் சொரிந்த தண்புன லாதியென் றெழிந்தான்.

(இ - ள்.) குற்றமில்லாத ஈசானதிசையிலுள்ள ஒன்பது பொற்கும்பங்களில் வேறெயிடப்படுவனவாகிய பொருள்களில்லையாதலின், முன்னர்ச்சொரிந்த வாசம்பொருந்திய நீரேயாகும். நடுநடுவே மும்மூன்றாக எட்டுத்திக்குகளிலுஞ் சிறந்தபொருள்களை யிடாதொழிந்த அழகிய பெரியகும்பங்களில் முன்பெய்த தண்ணிய நீர்முதலியனவே யென்றுவிடுத்தான். எ - று (ருகூ)

மேருமால் வரையே யிடையினை யைந்து வியன்பத மிளாவிர தந்தான்
சேரும்வான வீதி யிடையிடைப் பொருள்கள் சேர்த்துறும் பதவரி சைகளே
வாருமால் வரைக ளவற்றிடைப் பதங்கண் மன்னிய கண்டங்க ளெனக்கொண்
டாருநா வலந்தண் டீவென வியற்று மம்பொனம் மண்டபந் தியானித்தான்.

(இ - ள்.) நடுவிற்பொருந்திய ஐந்துபெரியபதங்களே பெரிய மேருமலையாகவும், பொருந்திய பெரியவீதியே இளாவிரதகண்டமாகவும், இடையிடையே பொருள்களைப்பொறுத்ததாத பதவரிசைகளே (அம்மேருவரையைச் சூழ்ந்த) நெடிய பெருமலைகளாகவும், அவற்றின் இடையிலுள்ள பதங்கள் நிலைபெற்ற கண்டங்களாகவுங்கொண்டு பொருந்திய தண்ணிய நாவலந்தீவைப்போலச்செய்யப் பெற்ற அழகிய பொன்னாலாகிய மண்டபத்தை (மனதில்) தியானஞ்செய்தனன். எ - று (சுo)

செம்பொன்மால் விலங்க லெனத்தியா னித்த செறிபதத் திடைப்பத முச்சி
யம்புயா விரண்டு வரிசெயற் சூழ்ந்த பதங்கொடு முடிகளாப் பாவித்
தெம்பிரான் றேவி வித்தியேச ராதா தெண்மாசோ நூற்றுவா தமையும்
வம்புறு மலர்க ளாதிகைக் கொண்டு வரிசையாற் பூசனை புரிந்தான்.

(இ - ள்.) செவ்வையாகிய மேருமலையென்று தியானஞ்செய்த நெருங்கிய (ஐந்து) பதங்களில், இடைப்பதம் உச்சியாகவும் நெருங்கிய இரண்டுவரிசெய்யும்படி சூழ்ந்த (நான்கு) பதங்கள் (அம்மேருமலையின்) கொடுமுடிகளாகவும் பாவனைசெய்து, எமது சிவபெருமானும் உமாதேவியும், வித்தியேசுராகளும், தாதுக்களும், நூற்றெட்டு ருத்திரர்களும், ஆகியவர்களை வாசனைநீங்காத மலர்கள் முதலியவற்றைக் கையிற்கொண்டு முறைப்படி பூசித்தனன். எ - று. (சுக)

பதினொரு மனுவான் மூலமந் திரத்தாற் பகர்மிருத் துஞ்சய மனுவா
லிதமரு ளிறைவர் தமையுந்தத் தமது மனுவினு லேனையோர் தமையும்
விதமுற வருச்சித் துணவுமிக் கூட்டி விளைப்புகை தீபமா திகளு
மதமறக் காட்டிப் பாடலோ டாடல் வரிசையின் முற்றுவித் த்தனபின்.

(இ - ள) பதினொருமந்திரங்களாலும், மூலமந்திரத்தாலும், சொல்லுகின்ற மிருத்யுஞ்சய மந்திரத்தாலும் நன்மையை யனுக்கிரகிக்கின்ற உமாமகேசுவரரையும், தங்கடங்களுக்குரிய மந்திரங்களாற் பிறதேவர்களையும் வரிசைப்பட அர்ச்சனை செய்து, மிருதியாக (அன்னமுதலிய) உணவை நிவேதித்து, வாசம்பொருந்திய தூபம் தீபமுதலியனவுங்காட்டி, கீதநிருத்தமுதலியன வரிசைக்கிரமமாகச் செய்தபிறகு. எ-று.

மதியுருக் குண்ட மடுத்திருஞ் சுத்தி வகைபுரிந் தங்கி தாபித்து [கிக்
மதுமலர்ப் பலாசஞ் சமிதையு மற்றைப் பொருள்களு மடுத்திடத் தொடங்
கதுமெனத் தனைநே ரொண்மறை விளித்துக் காதணி யாதிக ளுதவி
முதுமனு வங்கி கொடுத்திரு நான்கு குண்டமு முறுக வென்றான்.

(இ - ள்.) சந்திரரூபமான குண்டத்தை யடுத்து, பெரிய சுத்தியை வகைப்படி செய்து அக்கினிஸ்தாபனஞ்செய்து தேன் பொருந்திய மலரையுடைய பலாசஞ் சமிதையும் பிறபொருள்களும் ஓமஞ்செய்யத்தொடங்கி, தனக்குச்சமானமான எட்டுப்பெயர்களை விரைந்து விளித்து, (அவர்கட்குக்) குண்டல முதலியன கொடுத்து, பழமையாகிய மந்திரபூர்வமாக (சந்திரகுண்டத்தினின்று) அக்கினியைக்கொடுத்து, (மற்ற) எட்டுக்குண்டங்களையும் நிரப்புகவென்று கூறினன் எ - று (௬௩)

குணக்குமுன் னான்கு திக்குறுங் குண்டங் கூடினோ ரத்தியா லரசு
துணர்த்தகல் லாலு மெரிதிசை முதலாச் சூழ்ந்திடும் விதிக்குறு குண்டத்
திணக்கமுற் றவர்கள் வன்னிசெய் கதிர மியம்புமா யூரங்கூ விளமும்
பிணக்கறத் தழுவிச் சருவமுன் மனுவாற் பேணின ராகுதி புரிந்தார்.

(இ - ள்.) கிழக்கு முதலிய நான்கு திசைகளிலும் பொருந்திய குண்டங்களைச் சேர்ந்தவர்கள் அத்தி ஆல அரசு பூங்கொத்தையுடைய கல்லால இவற்றின் சமிதைகளாலும், அக்கினிதிசை முதலாகச் சூழ்ந்துள்ள குண்டங்களிற் சேர்ந்தவர்கள் வன்னி கருங்காலி ஆயூரம் வில்வம் இவற்றின் சமிதைகளாலும், சர்வவென்பதை முதலாகவுடைய மந்திரத்தாற் குற்றமற ஆகுதிசெய்தார்கள் எ - று (௬௪)

திவாகரன் மழுங்க வலஞ்சுழித் தெழுந்த தீயிடை முதன்மையா சிரியன்
றவாதமூ லத்தி னாலும்பூ சனைக்குச் சாற்றிய மனுக்களாற் பப்பத [யா
தவாவினவ்வெவ் வேறு மாசறியத் தியற்றி யனைத்தையு மெடுத்தெரி சொரி
வுவாமதி முகத்தா னோடுகூ டாமை யுறங்குமா பணித்தனன் மகனை.

(இ - ள்) சூரியன் ஒளிகுன்றும்படி வலம்புறஞ் சுழித்துக்கொண்டெழுந்த ஓமாக்கினியிலே தலைமை யாசிரியன், கெடாத மூலமந்திரத்தாலும், செய்யத்தக்க பூசைக்குச் சொல்லப்பட்ட மந்திரங்களாற் பப்பத்தாலும், வெவ்வேறாக நெய் சொரிந்து ஓமஞ்செய்து, எல்லா ஓமப்பொருள்களையுமெடுத்து அக்கினியிற்பெய்து, ஏமகண்டனைச் சந்திரன்போன்ற முகத்தையுடைய அவன் மனைவியுடன் கலவாமல் துயிலும்படி கட்டளையிட்டனன் எ - று (௬௫)

விடிந்தபின் ருனுஞ் சுசியினை மருவி மேவிய கனவினை வினவி [ப்
முடிந்தது நன்றே யாதலான் மகிழ்ந்து முடித்திடு[illegible]கையைக் குறித்து
படிந்தவா குதிக ணூறுநூ றியற்றிப் பரிவொடு பல்லியம் வான
மிடிந்தெனச் சியம்ப மந்திர மிருவ ரிருஞ்செவி யியம்பினன் முறையால்.

(இ - ள்) விடிந்தபிறகு, ஆசிரியனும் தேகசுத்தியையுற்று, (ஏமகண்டனுக்கு) உண்டாகிய கனவை விசாரித்து, நன்மையே முடிந்தது ஆனபடியால் சந்தோஷித்து, முடிகின்ற தீக்ஷையைக்குறித்து வெவ்வேறாக நூறு நூறு பூர்ணாகுதிகள் செய்து, ஆசையுடன் பல வாத்தியங்கள் ஆகாயமிடிந்ததென்று சொல்லும்படி முழங்குகையில், முறையே ஏமகண்டனும் அவன் மனைவியுமாகிய இருவர் செவியிலும் மந்திரோபதேசஞ் செய்தனன் எ - று. (௬௬)

வஞ்சியு மேம கண்டனும் பின்பு மலர்களா லஞ்சலி நிறைத்து
விஞ்செழிற் கும்பங் குண்டமென் றிவற்றின் மேவுற வருச்சனை புரிந்து
நெஞ்சுறு மன்பால் வலம்புரிந் திறைஞ்சி நிகழ்த்தியங் கதுபுரிந் ததன்பின்
செஞ்சவே யடுப்பக் கோட்டணை முனமே செய்தமண் டபத்தினைச் சார்ந்தார்.

(இ - ள்.) ஏமகண்டனும் அவன்மனைவியும் அதன்பின்னர் புஷ்பாஞ்சலி செய்து, அழகுமிக்க கும்பங்களிலும் குண்டங்களிலும் பொருந்த அர்ச்சனைசெய்து, மனதிலுள்ள அன்புடன்பிரதக்ஷிணஞ்செய்து பணிந்து அவ்வாறு (ஆசிரியனாற்) கூறிய படி செய்தபின்னர், அலங்கரித்துள்ள மண்டபத்தை நேரேபொருந்த அடைந்தார்கள். எ - று. (௬௭)

முன்னமோ ராறு முழமகன் றிரண்டு முழமுயர்ந் திருந்தவே திகையிற்
செந்நெலா திகளைப் பரப்பிவெள் ளேறு சிங்கம்வன் புலிகலை யுரித்த [தி
வன்னதோ னான்கும் விரித்துமென் மணியா லமைத்தபீ டத்துமொன் றிருத்
யின்னபீ டத்திற் காஞ்சனக் கமல மிணக்கிமேல் வத்திரம் விரித்தான்.

(இ - ள்) பூர்வமே, ஆறுமுழவகலமுற்று இரண்டுமுழவுயரமுற்றுச் செய்திருந்த பீடத்திற் செந்நெல்முதலியவற்றைப் பரப்பி, வெள்ளிய எருது சிங்கம் வலிய புலி மான் இவற்றினின்றுரித்த அழகிய நான்குதோல்களும் விரித்து, மெல்லிய இரத்தினங்களிழைத்த பீடத்திலொன்றமர்த்தி, இவ்வகைய பீடத்தின்மேற் பொற்கமலஞ் சேர்த்து, அதன்மேல் வத்திரத்தை விரித்தனன் எ - று (௬௮)

கொற்றவாள் கவிகை கொடிமுதன் மருங்கு கொளச்செய்து தண்டில முதலாச், சொற்றயா வையுமவ் வேறுற வாற்ற றருகுமிருத் தஞ்சயத் தருச்சித்த, துற்றுநே ரதிமேர் தண்டிலம வேறொன் றுறுத்ததிற் கனகமுள் ளிட்ட, பொற்றனே தனகுடமுஞ் சகலதா னியமும் பொருந்துபல் கலன்களு நிறைத்தான்.

(இ - ள) வெற்றிபொருந்தியவாள் குடை கொடி முதலியவற்றை அருகிற் கொள்ளச்செய்து, பீடமுதலாகச்சொல்லிய எல்லாவற்றையும் வெவ்வேறாக வல்லப மிக்க மிருத்யுஞ்சய மந்திரத்தாலருச்சித்து, நேரேபொருந்திய வேறோர்பீடத்தை யிருத்தி, அதிற் பொன்னரிசி யுள்ளேயிட்ட பொன்னாற்செய்ததேனகுடமும் எல்லாத தானியங்களும் பல ஆபரணங்களும் நிறையச்செய்தனன். எ - று (௬௯)

தணிவற விடையே யெழினிகால் வாங்கிச் சமைத்தவொள் ளணைவலப் புறத்
துணிகதி ரொறிகது ம[illegible]ருரு பீடந் தனையுஞ் சுத்திசெய் திட்டு [திற்
மணிமுடி யாரம் வத்திரம் பிறவு மணிப்பட லிகையினவந் தவற்றைப்
பிணியறப் பூசை புரிந்தகும் பத்துப் பிறங்குநீ ராற்புரோக் கித்தான்.

(இ - ள்) குறைவின்றி இடையே திரைச்சீலையைவிட்டு செய்துள்ள ஒள்ளியபீடத்தின் வலப்பக்கலில், நுண்ணிய கிரணத்தைச்சிந்தும் வேறொருபீடத்தையுஞ் சுத்திசெய்தமர்த்தி, இரத்தினகிரீடம் ஆரம் வஸ்திரமுதலிய பிறபொருள்களுமாகிய முதத்துப்பல்லக்கில்வந்தவற்றை, துன்பமறப்பூசித்தகும்பத்தில விளங்கிய சலத்தாற் புரோக்ஷணைசெய்தனன். எ - று.

கால்வாங்கி யென்பதிற் கால் - உபசர்க்கம். (௭௦)

அதர்வண வேத மந்திரம் பலவே றுருத்திர மாதியு மகற்றி
யிதமருண் மகாரோ கிணியொடு குபேர விருதைய மிரணிய வருணம்
பதமுறு மாபோ யிட்டங்கூ மாண்டம் பலவுமுன் கணித்துயர் மூலங்
கதமுறு மகோர மிருத்துஞ்ச மனுவா லுறுதிப்பட வாட்டுதற் கெழுந்தான்.

(இ - ள்) அதர்வணவேதமந்திரத்தையும் பலவேறு வகைப்பட்ட உருத்திர முதலிய மந்திரங்களையும் விலக்கி, நன்மையைத்தரும் மகாரோகிணியோடு குபேர விருதையம் இரணியவருணம் பதங்கள்பொருந்திய ஆபோயிஷ்டம் கூஷ்மாண்டம் முதலிய பலமந்திரங்களும் முதலிற் சபித்து, உயர்வாகிய மூலமந்திரத்தாலும், கோபம் பொருந்திய அகோரமாகிய இயமனை யொழிக்கும் மிருத்யுஞ்சய மந்திரத்தாலும் உறுதிப்பட அபிடேகஞ்செய்தற் கெழுந்தனன். எ - று. (௭௧)

அல்லிவார் கூந்த லொடுமிறை மைந்த னானனங் கிழக்குறத் தவிசின்
மெல்லவே யிருப்ப விளம்பியெண் ணிறந்த விண்ணவர் முனிவர ரவர்தம்
நல்லமா தர்களு மொருங்குறா மாட்டு நலத்தின ராகவே பாவித்
திலவியா யிரமிட் டிழைத்தபொன் வட்டி லெடுத்தன னியம்பின வியங்கள்.

(இ - ள்) பூந்தாதுகள் பொருந்திய நெடிய கூந்தலையுடைய மனைவியோடும் ஏமகண்டனுடைய முகங்கள் கிழக்குநோக்கப் பீடத்தின்மேல் மெல்லவிருக்கும்படி கூறி, கணக்கில்லாத தேவர்களும் முனிவர்களும் அவர்கள் உத்தம மனைவிமார்களும் ஒன்றுகூடி அபிடேகிக்குந் தன்மையராகப்பாவனைசெய்து ஆயிரந்துவாரங்கள் பொருந்தச்செய்த பொற்பாத்திரத்தையெடுத்தனன் வாத்தியங்கள் முழங்கின. எ - று.

ஆயிரந்துவாரங்கள் பொருந்தியது - சகத்திரதாராகலசமெனப்படும். (௭௨)

வேறு.

மாமறை முழக்க மோங்க மங்கல வாழ்த்து விம்மத்
தாமணிக் கும்ப மெல்லொரு சொன்முறை யெடுத்துத் தாங்கச்
சோமகாந் தனுமாங் கெய்தித் துணையொடு மகிழ்ச்சி பூப்ப
நாமவே லரசர் மெச்ச நன்றபி டேகஞ் செய்தான்.

(இ - ள்) சிறந்தவேதகோஷம் மதிகரிக்கவும், மங்கலப்பாடல்கள் மேம்படவும், புனிதமான அழகிய கும்பங்கள்யாவுஞ் சொல்லியமுறைப்படி யெடுத்துத்தாங்கவும், சோமகாந்தராசனும் தன்மனைவியுடன் ஆங்கடைந்து களிமீக்கூரவும், அச்சத்தைத்தரும் வேற்படையேந்திய அரசர்கள் மெச்சிக்கொள்ளவும் நன்றாக அபிடேகஞ் செய்தனன். எ - று. (௭௩)

சகத்திர தாரை யாலே தாழ்குழன் மடநல் லாட்டும்
வகுத்தவத் தனிநீ ராட்டி மகிழ்ந்தனன் குரவர் கோமா
னகத்துறு மன்பு பொங்க வனைவரு மாட்டிற் றாக
மிகத்தியா னித்துச் செய்த மேதகு பணியி னாலே.

(இ - ள்) ஆசிரியத்தலைமகன் ஆயிரந்துவாரங்கள் பொருந்திய பொற்கலசத்தினாலே, நீண்டகூந்தலையுடைய இளமைவாய்ந்த அவனமனைவிக்கும் (ஏமகண்டனுடன்) வகைப்படுத்தியஅந்த ஒப்பில்லாதசலத்தாலபிடேகித்து, மனதிலுண்டான ஆசை யதிகரிக்க, யாவரும் அபிடேகித்ததாக மிகவுந்தியானித்துச்செய்த மேன்மைதங்கிய செய்கையால். எ - று.

இதுமுதல் ஐந்துசெய்யுள்கள் ஒருதொடர். (௭௪)

வே று.

சம்புதிரு மால்வேதன பழைய சித்தா சாத்தியரே யச்சுவினி தே
வர் சாலப், பமபுமருத துவாவசுக்கள் பரிதிச செல்வா பரவுமுருத திரா
வைமா நசாகள் யாரு, நமபனுறு சுராகணமு மேனைத தேவு நகமாது
மலாமாது கலையின் மாது, செமபதுமக கரததிதி சுவாகா தேவி சினி
வாலி சித்தியிலக் குமிக ளெணமா.

(இ - ள்) சிவபெருமான் - திருமால - பிரமன - பழைமைவாய்ந்த சிததர்
கள் - சாத்தியாகள் - அசுவினிதேவர்கள - மிகநெருஙகிய மருததுவாகள - வசுககள்
செல்வமிக்க சூரியாகள் - துதிசெயயும உருததிராகள - வைமாநசாகள முதலியயா
வரும், நமபுகினற தேவகணங்களும, பிறதேவாகளும, மலைமகளும திருமகளும் கலை
மகளும், செநதாமரைபோனற கையையுடைய அதிதியும், சுவாகாதேவியும, சினிவாலி
யும், சிததியும, அஷடலக்ஷமிகளும. எ - று (௭௫)

குருநாள்கண முகூாததங்கள கலையே காட்டை குலவிலவங கணஞ
சந்தி பகலி ராககள், பகுவார மதியாணடு முதலாந தேவப பாவையருந
திதிசுரசை வினதை தேவ, வதிதேவ மாதாகள்கத துருமுன ளுக வழஙகு
மா மகளிருநதண் பொயகை வேலை, நதிநாகங கினனராகிம புருடா வை
கா னசாபிரம முனிவரெழு முனிவர் தாமும

(இ-ள்) குரு-நாளகள - முகூாததஙகள - கலைகள - காஷடைகள-பொருநதிய
லவங்கள - க்ஷணஙகள - சநதிகள - பகலகள - இராககள - (பொழுதைப்) பிரிககினற
வாரஙகள்-மாதஙகள் - வருடங்கள முதலிய தேவமாதாகளும், திதி - சுரசை - வினதை-
தேவவதி-தேவமாதாகள முதலானவாகளும, கததுருமுதலாகச சொலலபபடுமெசிறநத
முனிமஙகையாகளும, குளிாநத தடாகஙகள - சமுததிரஙகள் - நதிகள முதலியனவும,
மலைகளும, கினனரா கிமபுருடா வைகானசாகளும, எழு பிரமமுனிவாகளும, முனிவா
களும. எ - று. (௭௬)

துருவனுறு மணடிலத்துக் கண்மரீசி துருவாசன புலகன்புலத
தியன்சா பாலி, துருவினிதன காததியா யனன்மாாக கண்டன் றுவிதிய
கன் சைடவிய னனல னேக, திருகனஙகி ராதேவ ராதன றககன றீாகக
தவ னததிரிகண் ணுவனவி ருததன, கருணான்விதூ ரதனறுயைபா யனன்
கை வலயன கவுதமனகா லவனபிருகு பரதது வாசன.

(இ - ள்) துருவனபொருநதிய மண்டலததிலுள்ள மரீசி - துருவாசன் - புல
கன் - புலததியன - சாபாலி - துருவினிதன - காததியாயனன - மார்க்கணடன் - துவி
தியகன் - சைடவியன - அநலன - அநேகன் - திருகன - அஙகிரா - தேவராதன - தக்
கன - தீாக்கதவன் - அததிரி - கண்ணுவன் - விருத்தன் - கருணான - விதூரதன - துயை
பாயனன் - கைவல்லியன - கவுதமன - காலவன - பிருகு - பரததுவாசன எ - று.

சனகாசனு தனர்சனந்தர் சனற்கு மாரா சததிபரா சரனசவுனன
கபிலன் காண, னனகமுறு மிவர்முதலா முனிவர் தாமு மருந்ததிமுன்
முனிமடவாா பலரு மெல்லாம, புனிதமுறு மிறைமகனைத தாமேயாங்குப்
போநதபிடே கம்புரிநதா ராகிச சால, மனமகிழ்ந்தார் பின்னேம கண்ட
னேடு மடவரனு மெய்யீரம புலர்த்தி னுளால.

(இ - ள்) சனகர் - சனந்தனர் - சனந்தர் - சனற்குமாரர் - சததி-பராசரன் - சவுனன் - கபிலன் - காணன் முதலிய பாவமில்லாத இம்முனிவர்களும், அருந்ததிமுதலிய பலமுனிமங்கையர்களும் மற்றெல்லோரும் ஆங்காங்குப்புகுந்து புனிதமாகிய ஏமகண்டனைத்தாமே யபிடேகஞ்செய்தவர்களாகி மிகவும் மனங்களித்தார்கள். அதன்பின்னர் ஏமகண்டனுடன் அவன்மனைவியும் உடலீரத்தை யுலாத்தினள். எ - று. (எ௮)

வேறு

பருத்தி யிவ்விரண் டிடைகிழி யாதன பணிப்ப
விரித்து டுத்தினர் விரிகதிர் மணிமுடி கலன்கண்
மருத்த சந்தனக் கலவைமா லைகளணி பலவுந்
தரித்து வாளுளை மடங்கலா தனத்துவீற் றிருந்தார்.

(இ - ள்) இவ்விரண்டாடைகள் இடைகிழியாதனவாகக்கொடுக்க (அவ்விருவரும்) அவற்றைவிரித்து அணிந்து, ஒளிவிடுகின்ற இரத்தினகிரீடமும் ஆபரணங்களும் வாசம்பொருந்திய சந்தனக்கலவையும் மலர்மாலைகளும் பலவுமணிந்து, ஒளிய பிடரிமயிரையுடைய சிங்கஞ்சுமந்த ஆதனத்தில் வீற்றிருந்தார்கள் எ - று. (எகூ)

மாலை வெண்குடை நிழற்றவார் கவரிக ளிரட்ட
வால வட்டநின் றசைத்தரக் கொடியுடை யடுப்பச்
சீல மல்கிய விருதுகள் சிலரெடுத் திசைப்பக்
கோல மல்கிய வெழினியைக் கொம்மென நீத்தார்.

(இ - ள்) மலர்மாலை கட்டிய வெள்ளிய குடையானது நிழல்செய்யவும், நெடியகவரிகளிரட்டவும், ஆலவட்டங்களிருந்தசைக்கவும், துவசங்கள் பக்கலிலிருக்கவும், சிறப்புமிகுந்த விருதுகளைச்சிலரெடுத்துக்கூறவும், அழகுமிக்க திரைச்சீலையை விரைவாக விலக்கினார்கள் எ - று. (அ0)

தண்டி லத்தழு பொருளெலாந் தகவெதிர் நோக்கி
யண்ட ரேயுரு வாம்பசுக் கன்றொடு மடுப்பக்
கண்டு கண்டுவெள் ளேறுகண் டரமுன பலரோர்
கொண்டு நின்றதுங் கண்டனன் கொற்றவர் பெருமான்.

(இ - ள்) அரசர் தலைவனாகிய ஏமகண்டன் ஆசன பீடத்திற்பொருந்திய எல்லாப்பொருள்களையுந் தகுதியுடனெதிரே பார்த்து, தேவர்களையே யுருவமாகவுடைய பசுவினைக்கன்றுடன் வரக்கண்டு, பார்த்துக் கண்ணெச்சில்கழியும்படி முன்னரேபலர் கொண்டுவந்தவற்றையுங் கண்டனன் எ - று. (அக)

தமர்க ளாயினார் தமனிய வாழிபூ ணாதி
விமல மல்கிய கையுறை வியந்தனர் கொடுத்தா
ரமரின் மேம்படு மன்னர்யா ரெவருந் திறையிட்
டிமிழு மனமொடு மெதிர்பணிந் தெழுந்தனர் நின்றார்.

(இ - ள்) உறவினராயுள்ளவர்கள் பொன்மோதிரங்கள் ஆபரணங்கள் முதலியவற்றைப் புனிதமிக்க காணிக்கையாகக்களித்துக் கொடுத்தார்கள். போர்த்தொழிலின் மேம்பட்ட அரசர்களெல்லாருங் கப்பங்களைச் செலுத்திவிளங்கும் ஆசையுடன் எதிரேவணங்கியெழுந்துநின்றார்கள். எ - று. (அ௨)

பணணி நின்றமால் களிறதனைப் பாகன்முன் னுறுப்ப
நண்ணி யேறினு ளயகி சிவிகையி னடந்தா
ளெண்ணில வாகொடி கவிகைபிச சங்களீண டினவான
மணணுமு விணணுமு மதிரதர வதிரநதவார் முரசம.

(இ - ள) அலஙகரிததிருக்கினற பெரிய யானையைப் பாகனானவன் முனனே செலுத்த, ஏமகணடராசன அதனைப் பொருநதியேறினன. அவன மனைவி பலலககி லிவர்நது செனறனள். கணககில்லாத நெடிய துவசஙகளும குடைகளும மயிற்குஞ் சஙகளும் நெருஙகின. பூவுலகமுந தேவலோகமும் அதிருமபடி வாரிறகட்டிய பேரி கைகளொலிததன. எ - று. (அங)

அரசா ததமம வரிசையொ டொருபுடை யடுததாா
பரக தோபரி மாபல யானைதா னைகளும
விரசி யோாபுடை மிடைநதன விணணவ ரிறைபோற
புரசை மாலகளி றாாநதுலாப போநதுமீண் டடுததான.

(இ - ள) மனனவாகள தஙகடஙகள வரிசைகளுடன ஒருபககலில வநதார் கள துதிசெயயததகக தோகளும குதிரைகளும் யானைகளும சேனைகளும் கலநது ஒருபக்கலில நெருஙகின. (ஏமகணடன) தேவர்கட்கரசனான இந்திரனைபபோல, முக படாஙகட்டிய பெரிய யானையிலேறிப் பவனிசெனறு திருமபிவநதனன எ-று. (அச)

கோயில வாய்தலி னிழிந்தனன கோடணை புரிந்த
பாய வெலலையிற படுததபொற பலகைமே லிவாநது
மேய மாதொடு நினறனன மினனிடை மடவாா
தூய பாலடி சொரிநதுநீ ராறகழீஇத துடைததாா.

(இ - ள) அரணமனைவாயிலி லிழிநதனன அழகுசெயதுள்ள நலல விடத திற்படுதத அழகிய பலகைமேலிறஙிப பொருநதிய மனைவியுடன (ஏமகணடன) நினற னன மினனலபோலும (நுணணிய) இடையையுடைய (மாஙகலயமணிநத) மாதர்கள புனிதமாகிய பாலினைக காலிற்பெயது நீராறகழுவி (அதனைவெணபட்டால) துடைத தாாகள். எ - று. (அரு)

அஙகு ரஙகிளா பாலிகை யவிாமணி விளக்குப
பொஙகு பூரண கும்பமும பூஙகரத் தேநதித
தஙகு மாசையங கரகநீாத தாரைமிக கொழுககி
மஙக லததொடு மும்முறை வலஞ்செய்து பெயாநதாா

(இ - ள) முளைகள் விளஙகும பாலிகைகளும, பிரகாசிககினற மாணிகக தீபஙகளும, நிறைநத பூரணகுமபஙகளும அழகிய கைகளிற்றாஙகி, அழகுபொருந்திய பொறகரகநீாத தாரையாக மிகவுமொழுககி, மஙகலப்பாடல்களுடன் மும்முறை வல மாகச சுறறிச செனறாாகள். எ - று. (அசு)

மணியி ழைததபா துகையெதிா வைப்பமே லிவர்நது
பிணியி ழைகதுவைத தனையவேற பெருநதகைக் குரிசி
றணியி ழைத்திரள் சுமந்தனன றனைவியுந தானு
மணியி ழைநதவுண் மனையடுத் தாதனத திருநதான்.

(இ - ள்) இரத்தினங்களிழைத்த பாதுகையை யெதிரே வைப்ப அதனமீ தேறி [அணிந்து] துன்பத்தைச் செய்தலைத்தாற்போன்ற வேலாயுதமேந்திய பெருந்தகைமையுடைய ஏமகண்டமன்னன் தானும் மனைவியுமாக, அழகுசெய்து விளங்கிய அரண்மனைக்குட் சென்று பீடத்திலிருந்தனன் எ - று (அஎ)

தேசி கபபிரான் செலவனை யுடனகொண்டு சென்று
பூசை மணடபம புகுநதுபின கிரியையும புரிநது
நேச மலகிய விண்ணவர் தமைமெயலா நினைநது
கூசி நின்றல ரஞசலி கொணடெடுதா னாவி.

(இ-ள) செலவமிகக ஏமகண்டனை ஆசிரிய நாயகன் உடனகொண்டுசென்று பூசை மண்டபத்தை யடைநது, பிறகு (செயயவேணடிய) கிரியைகளையுஞ் செயது, அனபுநிறைநத தேவர்களை யெலலாந் தியானித்து, மயிர்க்குச்செறிநது, நின்று புஷ்பாஞ்சலி சமாப்பித்து எ - று. (அஅ)

வேநதன மைநதனை விதியுளி மனுபயன ரொட்டப
போநத யாவருந தததம திடமினி புகுநதிங
கேநத லின்னமும் வேண்டுழி யெய்துக வென்றா
சாநத மெனமொழி யாலவா தமைவிடுத திருநதனன

(இ - ள்.) சோமகாநதராசன புதல்வனாகிய ஏமகண்டனை மநதிரவிதிப்படி பட்டாபிடேகஞ் செயயவநதிருநத வெல்லோரும் இனித் தஙகடஙக ளிடஙகட்குச் சென்று, இன்னும் அரசன விரும்பியகாலத்தில வருவீர்களாகவென்று, மெல்லிய இத வார்த்தைகளால் அவர்களைச் செலவளித் தனுப்பியிருந்தனன் எ - று. (அகூ)

சோம காநதனுந் துணைப்புயச் சுமைமொழிந் தனமென
றேம மாாநதன னேமகண் டனுமினி தெழுநதங
கோம மாதிசெய் குரவனை யுவநதுபூசி ததுக
காமம யாவையுங் கைகவி தரமிகக கொடுத்தான்.

(இ - ள.) சோமகாநதராசனும் (நமது) இருதோளகளிலிருந்த சுமையை யொழிநதோமென்று சநதோஷமடைநதனன். ஏமகண்டனும களிப்புட னெழுநது அவ்விடத்தில ஓமமுதலியவற்றைச் செய்த ஆசிரியனை விருப்புறறுப் பூசைசெயது, அவன விரும்பியவற்றை யெல்லாங் கையானது கவியுமபடி மிகுதியாகக் கொடுத்தனன. எ - று. (கூ0)

பெரிய மாதவர பேணுநல் குரவினா மறையோாக
குரிய யாவையுந தானமு முளமமை தரவுய்த
தரிய ஞாதியா குரவாவேற றரைபாக ளோடும
பரிவு தீாதரப் பலவகை யடிசிலகை தொட்டான.

(இ - ள்) சிறந்த பெருந்தவமுடையவாகள - காப்பாறறததக்க வறுமையாளர்கள் - வேதியர்கள் முதலானவர்கட்குரிய வெலலாவறறையுந தானஙகளையும மனதிற்குப் பொருந்தக் கொடுத்து, அனபுபாராட்டற்கரிய தாயமாககள் - ஆசிரியர்கள் - மறுதேசதது மன்னாகள் ஆகிய இவாகளுடன் துன்பமகலப பலவகைப்பட்ட உணவுகளைப் புசித்தனன். எ - று. (கக)

துகிலும் பூண்களுந் துரகமும் வேழமுந் தேரு
மகிலங் காவல ராகிய வரையர்க ளமைச்சர்
புகலும் பாவலர் நாவலர் பொருநரா தியர்க்கு
முகிலு நாணுறப் பொழிந்துகாத் தனன்புவி முழுதும்.

(இ-ள்) வஸ்திரங்களும் ஆபரணங்களும் குதிரைகளும் யானைகளும் தேர்களும் (முதலியவற்றை) உலகினைக் காப்பவர்களாகிய அரசர்கள்-மந்திரிகள்-சொல்லுகின்ற பாவல்லபமுடையவர்கள்-நாவல்லபமுடையவர்கள்-பகைஞர்கள் முதலிய வெல்லோருக்கும் மேகமும் (ஈகையாலிவனை யொத்திலேமென)நாணமடையும்படி (ஏராளமாகச்) சொரிந்து உலகமுழுவதையும் அரசுசெய்தனன். எ-று.

பாவலர் நாவலரென்பன கல்வல்லோரையே யுணர்த்துமாயினும், பாவல்லவர் கவிகளை யியற்றலில் வல்லோரென்றும், நாவல்லவர் நூற்பொருள்களை யெடுத்துக் கூறலில் வல்லோரென்றுங் கொள்க. (கூ௨)

இன்ன வாறபி டேகமன் னவரினி தெய்தி
னன்னர் தாமற நீதிமே யாயுணன் மனைவி
துன்னு கான்முளை துவன்றிருஞ் செல்வமேன் கதியு
மென்ன காமமு மெண்ணியாங் கெய்திவாழ் குவரால்.

(இ-ள்) இந்த வகையாக அரசர்கள் இனிதாகப் பட்டாபிடேகஞ் செய்யப் பெறுவார்களாகில், நன்மையாகிய தருமம் - நீதி - தீர்க்காயுள் - உத்தமமனைவி - பொருந்திய புத்திரர்கள் - தோன்றுகின்ற பெருஞ்செல்வம் - சிறந்த முத்தி முதலியனவும் விரும்பிய வெல்லாவிருப்பங்களும் விரும்பியவகையே யடைந்து வாழ்வார்கள். எ-று.

இதுமுதலிரண்டு செய்யுள்களால் முறைப்படி பட்டாபிடேகஞ் செய்யப் பெற்ற அரசன் பெறும் போகத்தையும், அவன் நாட்டிற்குண்டாகுஞ் செழிப்பையும் முறையே கூறுகின்றார். (கூ௩)

அனைய மன்னரா லரசுசெய் திடப்படு நாடு
மினைய வனப்பிணி நல்குர விடரிவை யின்றி
மனைதொ றும்பசுப் பான்மிகுத் திடமதி தோறுங்
கனம ழைப்பெய்ய லுறப்பெரு வளத்தொடு கவினும்.

(இ-ள்) அப்படிப்பட்ட அரசர்களால் இராசரிகஞ் செய்யப்படுகின்ற நாடும் நெருங்கிய வலிய வியாதிகள் தரித்திரம் துன்பம் இவை முதலியனவில்லாமல் வீடுகளிலெல்லாம் பசுக்கள் பாலைப்பெருக்கும்படி மாதந்தோறும் ஒலிக்கின்ற மேகமானது மழை சொரிதலடையப் பெருவளங்களுடன் அழகுற்று விளங்கும். எ-று. (கூ௪)

மறுவி லந்தணீ ரேமகண் டப்பெயர் மைந்தன்
பொறுமை மணமட மாதினைப் புல்லிய துணைத்தா
முறுதி யெய்திய மதியொளிப் பெயரினு னவனை
நிறுவி வலவனம் புகுந்தவா வினிநிகழ்த் துதுமால்.

(இ-ள்) குற்றமில்லாத அந்தணர்களே! ஏமகண்டனென்னும் இராசகுமாரன் பொறுமையுடையபூமிதேவியாகியகன்னிகையைக்கலந்த [பட்டாபிடேகஞ்செய்துகொண்ட] வகையை (இதுகாறும்) உரைத்தோம். மனோதிடங்கொண்ட சோமகாந்த

ராசன் அவ்வேமகண்டனை (நகரத்தில்) நிறுத்தி, வலிய வனத்திற்குச் சென்றதனை இனிக்கூறுவாம் (என்று சூதமுனிவர் கூறலாயினார்.) எ - று.

மண் மடமாது இதில் மடமை - இளமை பூமிக்கு இளமையாவது வளமுற திருத்தல். மதியொளிப் பெயரினனென்றது—மதி - சந்திரன், சோமன். ஒளி - காந்தி. என்பதனால் சோமகாந்தனெனக. (௧௫)

பட்டாபிடேகப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௬௭௭

சோமகாந்தன்வனம்புகுபடலம்.

மதியொளிப் பெயரினான் வனத்திற் செல்லுவான்
கதிதரு மைந்தனைக் கனிவி னோக்குபு
நிதியினு முன்னையோர் நிகழ்த்து நீதியைப்
பொதிவதுன் கடன்வனம் புகுவ தென்கடன்.

(இ - ள்.) சோமகாந்தனென்னும் அரசன் வனத்திற்குச் செல்லும்படி நற்கதியையுதவும் மகனாகிய ஏமகண்டனை ஆசையோடு பார்த்து, யாவரும் முன்னோர்க்கூறிய நீதி மார்க்கத்தை உன் செல்வத்தைக்காட்டிலும் (விசேடமாய்) பாதுகாப்பது உன்கடனாகும். வனத்திற்குச்செல்வது (இனி) என்கடனாகும். எ - று.

புத்திரப்பேறில்லோர் புதவென்னும் நரகையடைவராதலின் அதனையொழிக்கும்படிபிறந்து, நல்வழியினிற்றலின் ஏமகண்டனைக் கதிதருமைந்தனென்றார். (௧)

பதியுள படையுள பாங்கிற் றேர்தரு
மதியுள வமைச்சுள மனுச்செய் நூலுள
நிதியுள பலவுள நினக்கி ருந்துணை
விதியுள தெனக்கென விரைந்தெ ழுந்தனன்.

(இ - ள்) மகனே! உனக்குநகரங்களுள்ளன. சேனைகளுள்ளன. சமீபத்தில் தேர்ச்சியுற்றமனமுடைய மந்திரிகளுளர். மனுவாற்செய்யப்பட்ட நூல்களுள பெரிய துணையாகச் செல்வங்களுள. பலவுமுள்ளன. எனக்குவிதியுள்ளது என்றுகூறித் துண்ணென்றெழுந்தனன். எ - று. (௨)

கதமுமிழ் வேலினான் கடையி னீங்குமுன்
சுதன்மையு மமைச்சரு நுவன்று சுற்றமு
மதநகர் மாக்களும் வந்த மன்னரு
மிதமுறு மைந்தரு மெவரு மீண்டினார்.

(இ - ள்) கோபத்தைச் சிந்தும் வேலையுடைய சோமகாந்தன் அவ்விடத்தை நீங்குமுன்னரே (அவன்மனைவியாகிய) சுதன்மையென்பாளும், மந்திரிகளும், நெருங்கிய உறவினரும், பெருமைபொருந்திய அந்நகரவாசிகளும், (பட்டாபிடேகத்திற்கு) வந்த அரசர்களும், நன்மைபொருந்தியசிறுவர்கள் யாவரும் (அரசன்புடையே) நெருங்கினார்கள். எ - று. (௩)

திரண்டவர் புடைவரத் திகழ்கு ரோசமீ
ரிரண்டுசென் றிளமரக் காவுஞ் சூழ்ந்திடைக்
கரண்டமுங் கம்புளுங் கலந்த பொய்கையை
முரண்டபு சிந்தையான் முன்னி வைகினன்.

(இ - ள்) மயக்கற்ற மனமுடைய சோமகாந்தன், அவர்கள் புடைசூழ்ந்துவர, விளங்குகின்ற நான்கு குரோசதூரஞ்சென்று, இளமரச்சோலையுஞ் சூழ்ந்து, இடையே நீர்க்காக்கையுஞ் சம்பங்கோழியும் (பலபறவைகளும்) வசிக்கின்ற தடாகத்தை யடைந்து தங்கினன் எ - று. (௪)

அருந்தவத் தோர்களை யந்த ணாளரைத்
திருந்துற வணங்குபு திரளை நோக்கியே
யிருந்திட வேண்டுமா லெவரு மென்றனன்
வருந்தினன் றவரெலாம் வணங்கிச் சொல்லுவார்.

(இ - ள்.) அரிய தவசிகளையும் வேதியர்களையுஞ் செவ்வையாகப் பணிந்து (உடன்வந்தவர்களாகிய) கூட்டத்தைப்பார்த்து, யாவரும் (இதுவரையில்) நிற்கவெனக் கூறினன் அவர்களெல்லாம் வருத்தத்தோடும் வணக்கத்தோடுஞ் சொல்லத்தொடங்கினார்கள் எ - று.

அருந்தவத்தோர்களும் அந்தணாளரும் வருந்தினின்றும், திரளாகிய ஏனையோர் வணங்கினின்றுஞ் சொல்லுவாரென முடித்துக்கொள்க. (௫)

அங்கியின் வெம்மையு மறலின் றண்மையுஞ்
செங்கதி ரிடையொளிச் செறிவு மாக்கையிற்
றங்கிய வாவியுந் தகைய வெங்கள்பாற்
பொங்கிய கருணையை புடையி னீங்கிலெம்.

(இ - ள்.) தீயினிடத்திற் சுடுகையும் நீரினிடத்திற் குளிர்ச்சியுஞ் செவந்த கிரணத்தையுடைய சூரியனிடத்தில் ஒளிமிகுதியும், சரீரத்திற் பொருந்திய உயிரும் போல எங்களிடத்திற் கருணைமிக்குடையவனே! உன்னருகிலிருந்து (நாங்கள் ஒருபோதும்) நீங்கமாட்டோம். எ - று. (௬)

நீங்கின மாயினு நிலவை நீத்திரு
ளோங்கிய விரவென வுனை நீத்துமுன்
றோங்கிய வனப்பெலாந் தளரு மாநகர்
யாங்களெவ் வாறுவாழ்ந் திருத்து மேந்தலே.

(இ - ள) அரசனே! (ஒருவேளை யுன்னைப்) பிரிந்தோமானாலும், சந்திரனையொழித்து இருண்மிகுந்த இரவைப்போல உன்னைப்பிரிந்து முன் பொருந்திய அழகெல்லாந்தளரும் (ஆதலின்) சிறந்தநகரத்தில் யாங்களெவ்வாறு வாழ்ந்திருப்போம். எ - று.

வேறு.

முந்தைப் புண்ணிய மெண்ணில முயன்றனை யதனு
லெந்தத் தீர்த்தமோ வெப்பெருந் தவத்தரோ வுடம்பிற்
பந்தித் தாருயிர் பருகுநோய் பாறுவா வனம்யாம்
வந்தப் போதுடன் மாநகர் வருகுது மென்றார்.

(இ - ள்.) பூர்வத்தில் எண்ணில்லாத புண்ணியகருமங்களைச் செய்ததனையாத லால், உடலிற் கலந்து அரிய வுயிரைப்பருகுங் கொடுநோயை எந்தப் புண்ணியதீர்த்த மாவது எந்தப் பெருந்தவசிகளாவது ஒழிப்பார்கள் (ஆதலால்) யாங்களும் (உன்னு டன்) வனத்திற்கு வந்து, அப்பொழுது (நமது) சிறந்த தேவநகரத்திற்கு உன்னுடன் வருகிறோமென்று சொன்னார்கள். எ - று (அ)

திங்க டங்கிய பெயரினன் செப்புவ னகரீர்
தங்கி யில்லறந் தாதடபின் றனிவனத் தேகத்
துங்க நன்மறை மொழிந்தவைத் துகளறு முடிப்ப
விங்கு வன்பிணி யெய்திய திரங்கலீர் நீயிர்

(இ - ள்) சந்திரனை முதலாகக்கொண்ட பெயரையுடையவன் [சோமகாந் தன்] சொல்லுகின்றான் நகரவாசிகளே! நகரிற் பொருந்தி இல்லறத்தை யநுஷ்டித்த பின் தனியாக வனத்திற் செல்லும்படி புனிதமாகிய நல்ல வேதங்கள் பிரதிபாதித்த தைக் குற்றமற நிறைவேற்றும்படி இப்பொழுது வலிய பிணியானது வந்து சம்பவித் தது. (அதற்காக) நீங்கள் மனமிரங்காதீர்கள். எ - று (௯)

பரந்த தொன்மரம் பாடுறும் பதத்துவீழ் போல
வரந்தை வந்துழி யருமகன் றுங்குத்தற் கானன்
புரந்து நுங்களை யெமமினும் புகழ்பெறும் போமி
னிரந்து ளேன்வரம் யான்வனம் போவதற் கென்றான்.

(இ - ள்.) பரவிய ஆலமரமானது அழிவுறுங்காலத்து (அதற்குதவி செய்யும்) விழுதுபோலத் துன்புற்றகாலத்தில் என் அரிய புத்திரன் (உலகினைத்) தாங்குவதற் காயினன் (அவன்) உங்களைக்காத்து எம்மைப்பார்க்கிலும் புகழ்பெறுவான். (திரும்பிச்) செல்வீர்கள் யான் வனத்திற்குச் செல்வதற்கு வரம் யாசித்தேன் (அதனைக்கொடுக்க வேண்டும்) என்று கூறினன் எ - று

தொன்மரம் பாடுறும் பதத்து வீழென்றதை,

நாலடியார்.

"சிதலை தினப்பட்ட வால மரத்தை
மதலையாய் மற்றதன் வீழூன்றி யாங்குக்
குதலைமை தந்தைகட் டோன்றிற்றான் பெற்ற
மதலை மறைப்பக் கெடும்"—என்பதனானுணர்க. (௧௦)

இறைவ னாணையை மறுப்பதற் கஞ்சின ரிருந்தா
ருறையு மாநகர் மாந்தர்க ளொளிவிழி யுறைப்ப
நிறையு மார்வநோ யலைத்திடு நெஞ்சொடு நின்றான்
முறையி னற்புவி தாங்கிய முழவுத்தோ ணைமந்தன்.

இ - ள். பெரிய அந்நகரவாசிகள் அரசன் கட்டளையைத் தடுப்பதற்கு அஞ்சி, ஒள்ளிய விழியினின்று நீர்த்துளி சிந்த விருந்தார்கள். முறைப்படி பூமியைத்தாங்கிய முழவினை யொத்த தோளை யுடைய மகனாகிய ஏமகண்டன் நிறைவாகிய ஆசை நோயானது துன்புறுத்து மனத்துடனின்றான் எ - று. (௧௧)

கவலை மைந்தனைக் கலைமதிப் பெயரினோ னோக்கிச்
சவலை நெஞ்சினை தசரதன மொழிதவ றாது
குவலை யம்புக ழிராமனுங் குறுகினன் கான
மவல மெய்தினுக் கதுவன மிதுவன மன்றே.

(இ - ள்.) துன்படைகின்ற மகனைச் சோமகாந்தன் பார்த்து, மெலிந்த மனமுடையவனே! தசரதசக்கிரவர்த்தியின் சொல்லைத் தவறாமல் உலகமானது புகழத்தக்க இராமபிரானும் வனத்தைக்குறுகினன். கவலையுறுதல் யாதுக்கு? (விஷயவாதனை யுற்றோருக்கு) அதுவே வனம். (விஷயவாதனை யற்றோருக்கு) இது வனமல்ல. எ - று.

சுகமடையினுந் துன்பமே விளையினுங் குரவர்
புகலி ருஞ்சொலி னிற்பதே புத்திரர் தருமம்
மகலி ருமபதி யேகென வடியிணை பணிந்து
மகனம ருங்குறு மன்னையை வல்விரைந் தடுத்தான்.

(இ - ள்.) சுகத்தையுண்டுசெய்தாலும் துக்கத்தையுண்டுசெய்தாலும் குரவர் கூறுஞ் சிறந்தசொற்படி நிற்பதே மைந்தர்களுக்குரிய தர்மமாம். (ஆதலின்) விசாலமான பெரிய நகரத்திற்குச் செல்கவெனக்கூற, புதல்வனான ஏமகண்டன் (தந்தையை) வணங்கி அருகிலுள்ள தாயை அதிகவிரைவாக அடுத்தனன். (கரு)

ஒழுகு கட்புன லுகளபா தத்துறு துகளைக்
கழுவி மேலவிழுந் தரற்றினன் கனிவுளத் தன்னை
தழுவி மைந்தனை யெடுத்தணை தயங்குகட் புனலா
னெழுது சந்தனப் புயத்தினைக் கழீஇனள் விளம்பும்.

(இ - ள்.) ஏமகண்டன் சிந்துகின்ற கண்ணீரால் (தன்தாயின்) இருபாதத்திற் பொருந்திய தூசுகளைக்கழுவி மேலேவிழுந்தழுதனன். (அவன் தாய்) மகனையெடுத்துத் தழுவிமைதீட்டிய தன கண்ணீரால் மகனது சந்தனம்பூசிய தோள்களைக் கழுவிச் சொல்லுவாள். எ - று. (கசு)

தொடுத்த வூழினைச் சுரர்களு நீக்குவா ரிலலை
யடுத்த வூழினுக் கரற்றியென் னாவது மைந்தா
விடுத்தி யின்னலை விக்கினந் தீர்த்துவேண் டுவன
கொடுத்தல் செய்வது குஞ்சரத் தனிமுகத் தெய்வம்.

(இ - ள்.) சந்தித்தவூழ்வினையை நீக்குபவர்கள் தேவர்களிலுமிலர் (ஆதலால்) வந்த ஊழ்வினைக்கு அழுது ஆகத்தக்கது யாது? (ஒன்றுமின்று) மகனே! துன்புறுதலைவிடுக. இடுக்கண்களைந்து விரும்பியவற்றைக் கொடுக்கவல்லது ஒடபில்லாத யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளேயாம். எ - று. (கஎ)

ஆத லாற்கண பதியையா ராதனை புரியா
வேத நீங்கியென் னிருமுது குரவர்கண் மீண்டு
போத வேண்டுமென் றிரந்துகொள் புகுநக ரிடையென்
றோத வோமென்று விடைகொண்டா னுலகினைப் புரப்போன்.

(இ - ள்.) ஆணைபடியால், விநாயகக் கடவுளை யாராதனைசெய்து, வயோதிகமுடைய என்தாய்தந்தையரிருவரும் துன்பமொழிந்து மீண்டும் (நகரிற்கு) வரவேண்டு

மென்று யாசித்து வரங்கொள்க (இனிக்கணமேனுந் தாழாது) நகரத்திற்குச் செல்க வெனக்கூற, உலகைக்காப்போனாகிய எமகண்டன் ஒமென்று உத்திரவு பெற்றுக் கொண்டனன். எ - று

ஓமெனப்ப‌ணும ஆமெனப்பதுமொசகும (கசு)
மீண்டெல். லோககளும புடைவர வியன்க ரெயநீ
யாண்டு மாநிலங கணபதி பூசையு மாற்றி
வேண்டி வாழநதன வர வினாவாக் கரசனே யென்ன
மாண்ட கேள்வியி னேமகண் டபெயா மன்னன.

(இ - ள) மாட்சிமைப்பட்ட நூற்கேள்வியையுடைய எமகண்டராசன தேவர்களுக்கிறைவனான இந்திரனைப்போல, எல்லோருந்தன்னைப்புடைசூழ்ந்துவரத் திரும்பி, பெரிய பூமியை யரசுசெய்து விநாயகபூசையுஞ்செய்து அவரைப் பிரார்த்தித்துவாழ்ந்திருந்தனன். எ - று (கஎ)

சோம காநதனுஞ் சுதனமையும வனமபுகத துணிநதாா
நாம வேறகரச் சுலபனு ஞானகெம மியனுந
தாமு மாஙகுடன சாாநதனா நாலவருந தழைதத
காமா மாவனங கலநதனா சிலபகல கழிததாா.

(இ - ள) சோமகாந்தமன்னனும (அவனமனைவியாகிய) சுதன்மையும வனம்புகவிரைந்தார்கள் அச்சநதரும வேலேந்திய கையையுடைய சுலபனும ஞானகெம்மியனும (ஆகியமந்திரிகள்) அவர்களோடுசென்றார்கள் ஆக நான்குபோகளும செழித்துள்ள அழகிய பெரிய வனத்தையடைந்து சிலதினங்கள கழித்தார்கள். எ-று (கஅ)

சூழ்ச்சி முற்றிய வமைச்சாக ளிருவருஞ் சுவைத்தேன்
வீழ்ச்சி முற்றிய கிழங்குகாய மென்கனி கொண்டா
வாழ்ச்சி முற்றிய மன்னனோ டனைவருங் கைதொட்
டாழ்ச்சி முற்றிய வுளந்திரி யாரதா நடந்தாா.

(இ - ள்.) ஆலோசனைமிக்க மந்திரிகளிருவரும், சுவைபொருந்தியதேன்-முதிர்ந்துபருத்தகிழங்குகள்-காய்கள்-மெலலிய பழங்கள (முதலியவற்றைக்) கொண்டுவந்து, வாழ்வுமிக்க மனமானது திரியாதவர்களாகி (அரசனையும் அவன மனைவியையுந தொடாந்து) வழிநடந்து சென்றார்கள் எ - று. (கக)

இன்ன வாறவ ரிடைவனத் தியஙகுழி வேந்தன்
முன்ன ரீட்டிய தவப்பயன முழுவது மடுப்பத்
தனனை நேரவருந தாபதப பிருகுநோற றிருக்கு
நனன ராசசிர மத்தினுக் கடுப்பகண் ணினரால.

(இ - ள்) அவர்கள் இவ்வகையாக நடுவனத்திற் சஞ்சரிக்கையில், சோமகாந்தன் பூர்வத்திற்செய்த தவப்பயன முழுவதுஞ் சேர, தனக்குச் சமானமில்லாத தவத்தையுடைய பிருகுமுனிவர் தவஞ்செய்துகொண் டிருக்கும நல்ல ஆசிரமத்திற்குச் சமீபமாக அடைந்தார்கள். ஏ - று. (உ0)

பருதி நாயக னுருப்பவிர் வெப்பினும் பரிவுங்
கருதி னுருளங் தனக்குநோய் காட்டுமெவன் பரல்கண்

மருவி யேறழிழி வாகிய வழியிய வினைபபு
மொருவ வாஙகொரு தடாகததி னீளகரை யுற்றார்.

(இ - ள) சூரியபகவான பூரணமாகப் பிரகாசிககினற வெபபததினாலாகிய துனபமும, நினைததவாகளுடைய மனதிறகுத துனபுசெயயும வலிய பருககைககற கள பொருநதி யேறியிறஙகுவனவாகிய வழிநடநத விளைபபும நீஙகும்படி அவவிடத துளள ஒரு தடாகத்தின நெடிய கரையை யடைநதாாகள எ - று (உக)

வேறு

வண்டுவரி பாடமது விணடொழுகும வாச
புணடரிக மோடுபல பூததிரள ணிநது
கணடவாக ணெஞசுகட வாததொாவ னபபுக
கொணடுகுளிா தூஙகுதடங கணடுமகிழ வூாநதாா.

(இ - ள) வணடுகள இசைப்பாடடுபாடவும, தேனைனது பெருக்கெடுததுப பாயும வாசனை தங்கிய தாமரையுடன பலமலாததொகுதிகளைப பெறறதும, (தனனைக) கண்டவாகளுடைய மனமானது அபபுறஞ் செலலவொட்டாததுமாகிய அழகுறறுக குளிாசசிபெறற ஓாதடாகததைககணடு களிபபுமிகுநதாாகள. எ - று. (உஉ)

அனபுவிர வினசொலின ருமபயனவி ளைததுத
தனபுடைய டுததவாத மைததழுவி யனறோக
கெனபுழுாி யாரிளமண மீாஙகுளிரி ளஙகா
றுனபமற வநதுதவு தோயநிறை கணடாா.

(இ - ள) அனபானது கலநத இனசொறகளால் அரிய பலனை விளையசசெய்து, தனனிடததிறகு வநதவாகளைத தழுவி, அவாகடகுத (தம தெலுமபையுங் கொடுததறகுரியவரைபபோல,) மணமமைநதமிககுளிாசசியுடைய இளஙகாறறுனது (அடுததோா) துனபமகல வநது வீசபபெறற நீா நிறைவைககணடாாகள எ-று. (உங)

தெளிநதுகுளிா கூாநதினிமை சோநதுறுப யததோ
டளநதறிவொ ணாதவரி னாககுமுப காரம
வளாநதிடுமெ னுமபனுவல வாயமையெனு மாவு
முளாநதுதிரி புளளுமற வுணடெழுவ கணடாா

(இ - ள) தெளிவுறறு (முககக) குளிாசசிமிகுநது இனிமையுறறுப பொருநதிய பயனுடன (இவா இவவளவினரேயெனறு) அளவிட்டறியபபடாதவரைபபோல [தெளிவாகி, குளிாசசிமிகுநது, சுவைபொருநதி நெருஙகிய நீருடன அளவிடபபடாதவர்போல ஆழ்நது] எலலோருககும உபகாரததைப பெருககுமெனனும நூலினுணமையைபபோல மிருகஙகளுங கிளரிககொணடு திரியும பறவைகளும நீரைப்பருகி யெழுவனவற்றைக் கணடாாகள எ - று (உச)

பழங்கனூறு வன்பசிப டுபபழுனி வோாகள்
கிழஙகுகொடு நீததகிளா தாமரைக கைககனை
வழஙகுசுட ரோனகதிரின் வாடிநிலை நீத்தோா
சழங்குவாக ளெனறுகரி சாறறுவது கண்டாா.

(இ - ள்) துன்பம்பொருந்திய வலிய பசியைத் தணிக்கும்பொருட்டு முனிவர்கள் கிழங்கை யெடுத்துக்கொண்டு விலக்கிய விளக்கமமைந்த தாமரைக்கொடிகள் கரையினிடத்திலே சூரியன் வீசுங் கிரணங்களால் வாடி, நிலையினின்று நீங்கினவர்கள் துன்பமடைவார்களென்று சாட்சி கூறுவதைப் பார்த்தார்கள் எ - று (௨௫)

திரண்டுகரை சேரவருஞ் சேல்கவர வாடுங்
குரண்டமெதி ராழ்ந்துகயல் கொண்டுமிசை வந்தூண்
கரண்டமவறி யோர்க்குதவு றாதுகளித் தூணு
மிரண்டுமறி யார்செயலி யம்புவது கண்டார்

(இ - ள்) கூட்டங்கொண்டு கரையை யடையும்படி வருகின்ற சேல்மீன்களைக் கொள்ளைகொள்ளும்படி சுழன்று திரியுங் கொக்குகளெதிரே, நீரில் மூழ்கிக் கயல்மீன்களை வாயிற்கொண்டு (கரையின்) மேலேவந்து உண்ணுகின்ற நீர்க்காக்கையானது, ஏழைகளுக்குக்கொடாமற் சந்தோஷித்துண்ணும் நன்மையையுந் தீமையையு முணராதவர்களது செய்கையைக் காட்டாநிற்ப, எதிரே கண்டார்கள் எ - று (௨௬)

அன்றிலும னன்றிலுமருந் துணையி னீங்கா
தொன்றியமு யங்குசிறை யோடிரைக டேர்ந்து
மன்றல்கமழ் கோட்டிடைவ திந்துமுதிர் காமங்
கன்றினவ ரன்பினிலை காட்டவெதிர் கண்டார்.

(இ - ள்) அன்றிலும் ஆணன்றிலும் அரிய துணையாகிய ஒன்றினின்றொன்று நீங்காமல், பொருந்திய கோத்த சிறகுகளுடன் ஆகாரத்தைத்தேடி வாசம் வீசும் மரக்கொம்புகளில் வாழ்ந்து, மிக்க காமம் பழுத்தவர்களுடைய அன்பின்றன்மையைக் காட்டாநிற்ப, எதிரே கண்டார்கள் எ - று (௨௭)

திங்களொளி யிழைந்துமலர் தேங்குமுத மாடப்
பங்கயம லர்ந்தொளிப ரப்பவொரு சீராய்த்
தங்கியவ னிச்சமெவர் தம்மினுமரு ருந்தாத்
துங்கமுனி வோர்நிலைமை தோற்றவெதிர் கண்டார்

(இ - ள்) சந்திரனை விரும்பி மலர்கின்ற தேனைப் பொருந்திய குமுதமலர்கள் வாடாநிற்பவும், தாமரைமலர்கள் விகசித்து ஒளிசெய்யவும், ஒருதன்மையாகவே பொருந்திய அனிச்சமலர்கள், எவரிடத்திலேயும் (உறவினர் பகைவரென்று கருதாமல்) வருந்தாமலுள்ள புனிதமான முனிவோர் நிலைமையைக் காட்டாநிற்ப, எதிரே கண்டார்கள் எ - று

குமுதம் - சந்திரனைக்கண்டு மலர்வது. பங்கயம் - சூரியனைக்கண்டு மலர்வது. அனிச்சம் எப்பொழுதும் மலர்ந்துள்ளது (௨௮)

மிக்கதிற லோன்மெலியர் தம்மினமி றைசெய்தங்
கொக்கவழி யுங்கயவ ரொப்பவுறு மீனக்
டக்கசிறு மீனுடற மைப்பவினி துண்டு
வெக்கரிவர் புட்கினைக ளாவதெதிர் கண்டார்.

(இ - ள்) மெலியவர்களிடத்தில், மிக்கவலிமையால் துன்பமுண்டுசெய்து அவர்களுடன் சமானமாக அழிகின்ற கீழ்மக்களைப்போல, பொருந்திய மீன்கள் தகுதி

யாகிய சிறுமீன்களை உடல்பூரிக்கும்படி இனிமையாகவுண்டு, மேலுக்குச்செல்கின்ற பறவைகளுக்கு இரைகளாவதை யெதிரேகண்டார்கள். எ - று. (உக)

அன்னமொடு நேமிகுரு காரனுகர் தாரா
மன்னுசிரல் கப்புள்வளர் நாரைமலி போதா
வென்னவும டப்பவிரை யீநதுசிவ னேரு
நன்னர்நறு நீர்க்கரையி னணுறுபொழில் கண்டார்.

(இ - ள்.) அன்னத்துடன் சக்கரவாகப்புள் கோழி ஆரல்மீன்களைத்தின்னுந் தாரா பொருந்திய மீன்குத்தி சம்பங்கோழி வளாகின்ற நாரை பெருநாரைமுதலிய வெல்லாப் பறவைகளுமடப்ப (அவற்றிற்கு) உணவைகொடுத்து (யாவரையுங்காக்குஞ) சிவபிரானையொத்துள்ள நல்லவாசநதங்கிய நீரின்கரையிற் பொருந்தியசோலையைக்கண்டார்கள் எ - று. (௩௰)

வேறு.

மயிலாலுவ குயில்கூவுவ வரிவணடிசை முரல்வ
பயில்பூவைகள கிளியோடிசை பலவாதுகள் புரிவ
வயிலவாள்விழி மடவாரென வலர்பூஙகொடி யசைவ
வெயிலாதவர் புறமேகுற விரிபூஞசினை மிடைவ.

(இ - ள்.) மயில்கள் நடிக்கின்றன குயில்கள கூவுகின்றன கீற்றுப்பொருந்தியவண்டுகள இசைப்பாட்டுபாடுவன. பழகிய நாகணவாய்ப்புட்கள கிளிகளுடன் சொலலுகின்ற பலவாதுகளைசசெய்கின்றன கூர்மைவாய்ந்த வாள்போன்ற விழியையுடைய மாதர்களைப்போல மலர்ந்தபூஙகொடிகள அசைவன வெயிலைச்சிந்துஞ் சூரியன் புறஞ்செல்லுமபடி விரிந்த பூங்கொத்துகள் நெருங்கியுள்ளன. எ - று. (௩௧)

குழைவாயமுகிழ் முகைவாயவிழ குளிர்தேனுறை சிந்த
மழையாமென வளர்சாதகம வாய்விண்டிடை பருக
வுழையாரமல ரொழுகுதேனதனுறுவாயிரு கடைவார்
விழைதேனுகர் வனவேலையின மிகுகாமுக ரனைய.

(இ - ள்) வளைவாகிய பரந்த மொட்டுகள் வாயாறசிந்திய குளிர்ந்த தேன் றுளிகள்சிந்துதலால், வளர்கின்ற சாதகப்புட்கள (அவற்றை) மழைத்துளிகளாமென்று வாயைத்திறந்து பருகவும், அருகிலிருக்கும மலரினின்றுபிரிந்த வண்டுகள் அசசாதகப்புள்ளினபொருந்திய வாயினது இருபுறத்திலுமொழுகும விருமபததக்க தேனைப்புசிப்பனவும வேசையரிடத்தில மிகக காமுகரையொத்திருந்தன. எ - று. (௩௨)

வெள்ளத்திர ளிடுவெண்டலின விரிவெண்மண லெக்கர
கொள்ளசசெழு மதுநுண்டுளி கொட்டிக்குரு மலர்மேற்
றள்ளித்ததை மகரந்தமுந் தவிருந்தக விரவி
நள்ளிறபிரி யாநந்தன வனமென்னந லெக்கும.

(இ - ள்) வெள்ளத்தின் மிகுதியானது உணடாக்குகின்ற நீர்ச்சுழியலால் விரிந்த வெண்மணல்கள மேடுகொளள, செழிய நுண்ணிய தேன்றுளியைச் சிந்தி, நிறம்பொருந்திய மலர்களை மேலேதளளி, நெருஙகிய மகரந்தப்பொடியையுந் தவிர்களையுந தகுதியாகக கலந்து, குளிர்சசியினின்று நீங்காத நந்தனவனமபோலச் சிறந்திருக்கும். எ - று (௩௩)

வேறு

இனையபொழிலை கண்டவர்க ளெய்தினரி ருந்து
புனையுமனை யெழிலுமிது போலவல தெனமுரா
நனையவிழு மெனமலர் நடந்துவரு தென்றல
கனைவெயிலு முந்ததுயர் காற்றியதை யன்றே

(இ - ள்) இத்தகைய சோலையைக்கண்டு அவர்கள் (நால்வரும் அங்கே) அடைந்திருந்து அழகுசெய்த வீட்டின அலங்காரமும இதனைப்போலவதன்று எனக் கூறினார்கள். தேனைச்சொரியும் மெலலிய மலர்களிற்படிந்துவருந தென்றற்காற்று னது, மிக்கவெயிலால வருந்திய துன்பத்தை யொழித்தது எ - று (௩௪)

வேயனைய தோளியுடை மேயினளி ருந்தாள
காயிலைய வேலரசன கணபடைகொள் கின்று
ஞயிடைய மைச்சர்கள் தன் றுணைவு நாடிப்
போயினர்க ளாங்கொருசி றுனினிது புக்கான.

(இ - ள்) மூங்கிலையொத்த தோளையுடைய சுதன்மையென்பவள் அருகிற் பொருந்தியிருந்தாள. கோபிக்கின்ற அச்சவடிவாகிய வேற்படையேந்திய சோமகாந்த மன்னன் துயில்செய்கின்றனன். அந்தச்சமயத்தில மந்திரிகள ஆகாரங்கொண்டுவரு வதை நாடிவிலகிச்சென்றார்கள். அப்பொழுது ஒருசிறுவன் இனிதாகவந்தனன் எ-று.

கண்டனள்சு தன்மையரு காமருசி றுனைக
கொண்டனண்மகிழ்ச்சிகுல வேறகுமா னெனபோன
மண்டியத வச்சிறுவன வந்திடுந லத்தால்
விண்டதுவ ருத்தமென வேண்டியிது விண்டாள

(இ - ள்) சுதன்மையென்பாள (தனக்கருகே) வருகின்ற அழகிய சிறுவனைக் கண்டு, சிறந்த வேலேந்திய தன மகனை ஏமகண்டனையே (கண்டாற்) போலக் களிப் புற்று, மிக்க தவத்தையுடைய அச்சிறுவன (அங்கு) வந்த நன்மையால வருத்தமொ ழிந்ததென்று விரும்பி, இதனைச் சொல்லலாயினள் எ - று.

கண்டனள் கொண்டனளென்னும வினைமுற்றுகள் வினையெச்சப்பொருளன.

புண்டரிக மெண்குடுமை வாரகைமத வேழங
கண்டிரவ முந்தத்தையுங கானமிதி தனக
ணண்டரின முந்தனிய பெயரி தாரு
மிண்டுதிற லாளென மேவினை நீ யாரோ

(இ - ள்.) புலி - கரடி - துளை பொருந்திய நெடிய கையையுடைய மத யானை - சிங்கம முதலிய மிருகங்களும நெருங்கிய இந்த வனத்தில, தேவசாதியாரும் ஒன்றியாக வருதற்கரிதாகும (அவ்வாறிருப்ப) மிக்க வலிமையுடையாளைப்போல வந் தனை. நீயார ? எ - று (௩௭)

நினனுடைய நாமமெது நினையினி தீன்ற
வனனையவள் யாவண்மகி ழையனவன யாவ
னினனவன மெய்தியதெ தற்கிவைய னைத்து
முன்னையுரை யென்னலுமு னிச்சிறுவ னோதும.

(இ - ள்.) உன்னுடைய பெயர் யாது? உன்னை யினிதாகப்பெற்ற தாய் யாவர்? விருமபத்தகக தந்தையாயுள்ளார் யாவர்? இவ்வனததிற்கு வநதது யாதுககு? இவற்றையெல்லாம் முதலிற் கூறுகவென வினவவும, முனி மைநதன் (அவ்வினுக்கட்கு விடை) கூறத்தொடங்கினன் எ - று. (௬௮)

இருமையும ளநதுதவ மீடடுகுலத துளளே
ஒருமைவரும யானசிவன னுறறபெய ரமமை
பொருவரிய கறபுறுபு லோமைமெயனை யீனறுன
பிருகுமுனி வன்வரவு பேணுபுனற காகும.

(இ - ள்) ஒன்றியாகவநத யான இமமை மறுமைப்பலனகளையு மளவிடடுத் தவத்தைததேடுகினற முனிவர் குலததுப் பிறந்தவன். சிவனனெனபது எனககுப் பொருநதியபெயர். சமானமிலலாத கறபையுடைய புலோமை யெனபவள் தாய். என்னைபபெற்ற தநதை பிருகுமுனிவன் வநதது விருமபத்தகக நீருககாகும எ - று

எனசரித மினனதல திலலையினி யனனு
யுனசரித மோதுவனத தூடபிணி யாளன
றனபுடையி ருககவரு தன்மையெவன பொனனைப்
பினபுடையி ருததுமெழிற பெணணரசிக கெனறுன.

(இ - ள்) என சரிதம இதுவேயனறி வேறன்று. தாயே! இனியுன் சரித்தை யுரைக்க திருமகளையும பினபுறததிலிருததததகக அழகையுடைய பெணகடலையியாகிய உனககு நோயாளி யருகிலிருகக வனததிலே வநதகாரணம யாது? என்று வினவினன. எ - று (௭0)

எனறவுட னேசுதனமை யெனபவட னுள்ளத்
தொனறுதுய ரததனையு மொனறுமொழி யாமே
நனறுமொழி செயதுநய னமடுனறு ளிபபத
துனறுமவ லபபுணரி தோயநதுருகி னளால.

(இ - ள்.) என்று வினவியவுடனே, சுதன்மை யெனபவள் தன மனதிற பொருந்திய துயரமுழுவதையுஞ் சிறிதும் மறைக்காமல நன்றாககூறி, கண்ணினினறும நீர்ததுளி சிநதபபொருந்திய துக்கசாகரததில மூழ்கி மனமுருகினள். எ - று.

வநதிடுமு னிசசிறுவனை மலலலறி வானு
மநதணாகு லததிலவரு மானறசிறப பானு
மூநதுமரு ளாலுமுள முடைநதுருகி நீஙகிக
கநதமலி தண்புனலக வாநதுகடு கிட்டான

(இ - ள்.) வநத சிவனனெனனும முனிச்சிறுவன விளககமாகிய (தன) அறிவினுலும, வேதியா குலததிற்றோனறி மேமபட்ட கீர்த்தியாலும, மூறபட்ட கருணையாலும் மனம நெகதுவிடடுக் கரைந்து (அவவிடம விட்டு) நீங்கி, மணமிகக குளிநத நீரைக் கைக்கொண்டு விரைந்து சென்றனன. எ - று. (௭௨)

வாய்நதபுகழ் கைமிசவ னததுறவிர் சோம
காநதன்வன மேயதுக மைநதனம றிநதீ

வேந்தனவ் வனற்பிருகு மெய்த்தவனை யழைப்பப்
போந்தபடி கேண்மினென வேபுகலுஞ் சூதன்.

(இ - ள்) புகழமைந்த நைமிசாரணியத்திலுள்ள (வேதியர்களாகிய) உறவினரே! சோமகாந்தராசன் வனம்புகுந்ததைக் கூறினேம், கேட்டீர்கள் அச்சோமகாந்தமன்னன் நல்ல உண்மைத்தவத்தையுடைய பிருகுமுனிவனை விளிப்பச் சென்ற வகையைக் கேளுங்களென்று சூதமுனிவன் சொல்லத்தொடங்கினன் எ - று. (௪௯)

சோமகாந்தன் வனம்புகுபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் - ௭௨௦

சோமகாந்தன்
பிருகுமுனியையடுத்தபடலம்.

காத லரும்புந் தனிமைந்தன் காலங் கழித்தாகக் கடிகியதுஞ்
சோதி வதனம் பரத்துக்கத் துக்கவுள்ளத்தால் வாடியதுங்
கோதி றவத்துப் பிருகுமுனி குறித்து நோக்கி யிவனென்னே
வேத முழந்தான் விஞய றிது மென்று சிவனன் முகம்பாரா.

(இ - ள்) (காணுந்தோறும்) ஆசையுதிக்கும் ஒப்பற்ற புத்திரன் காலந்தாழ்த்துவந்ததும், ஒளிவாய்ந்த முகமானது பிறதுக்கத்தால் துக்கமுற்ற மனத்தைக்காட்டி வாடியுள்ளதும் ஆகியவற்றைக் குற்றமில்லாத தவத்தையுடைய பிருகுமுனிவர் யோசித்துப்பார்த்து, இவன் யாதோ துன்பமடைந்துளான் (அதனைக்) கேட்டறிவோமென்று சிவனன் முகத்தைப்பார்த்து எ - று. (௧)

பாணித் தடுத்தா யதுவன்றிப் பருவா திருந்த துன்முகமு
நாணிச் சிறிதுங் கரவாம னடந்த செய்தி மொழியென்றான்
கோணைத் தவத்தான் குறிப்பறிந்து குளிர்பூங் கமலத் தாளிறைஞ்சி
மாணச் சிறந்த பணிமொழியான் மைந்தன் முழுதும் வகுத்துரைப்பான்.

(இ - ள்) நீகொண்டு வந்தனை. அதுவேயல்லாமல், உன்னுடைய முகந் துன்புற்றிருக்கின்றது. வெட்கத்தினால் கொஞ்சமும் மறைக்காமல் நடந்த வரலாற்றைக் கூறுகவென வினவினார் வலிய தவத்தையுடைய தன் பிதாவின் குறிப்பையுணர்ந்து, குளிர்ச்சிபொருந்திய அழகிய தாமரைமலர்போன்ற பாதத்தைப் பணிந்து, மாட்சிமைப்பட உயர்ந்த தாழ்வாகிய சொற்களாற் சிவனென்னுஞ் சிறுவன் பிரித்துக்கூறுகின்றான். எ - று. (௨)

நறுமென் புனலுக் கிறந்தேனை நாறும் பொழிலிற் றுணைவரொடு
முறுதல் புரிந்தங் கிருந்தொருத்தி யுறுமென் பெயரா திகளவினவ
மறுவி லவட்கு விடுத்தவடன் வரவு வினவி யறிந்தனனு
விறைவ பொழுது நீடித்த தெளியேன் றளர்வு மினிக்கேளாய்.

(இ - ள்.) வாசந்தங்கிய மெல்லிய நீருக்குச்சென்ற வென்னை, மணம்வீசுஞ் சோலையில் ஒருத்தி தன் கணவனுடனிருந்து பொருந்திய என் பெயர் முதலியவற்றைக் கேட்க, குற்றமில்லாத அவளுக்கு (யான் அவற்றை) க்கூறி, அவளுடைய வரலாற்றைக் கேட்டுணர்ந்தேன். தந்தையே! (அத்துறை) காலமிக்கது யான் வருந்தியதையும் இனிக் கேட்பாயாக. எ - று. (௬)

சவுராட் டிரத்துத் தேவநகர் தனில்வாழ் சோம காந்தனுயிர்
கவர்நோய் வருத்தப் பெருஞ்செல்வங் கழித்துச் சுதன்மை யெனுமனையு
மிவர்சூழ் சசிவ னிருவருமப் பின்வந் தடைந்தார் நாலவருந்தா
மவ்வா னுகர்ந்து நரகுழந்தா ரனைய ரதற்கே முகமபுலர்ந்தேன்.

(இ - ள்) சவுராட்டிரதேசத்திலுள்ள தேவநகரத்தில் வாழும் சோமகாந்த ராசன் உயிரைக் கவரத்தக்க நோயானது வருத்தலால், மிக்க செல்வத்தை விடுத்து (தானும்) சுதன்மையெனனும் மனைவியும், மேற்கொண்ட மந்திரித்தன்மையுடையா ரிருவரும் பின்வர, நால்வருமாக வனத்தில் வந்தார்கள் அவர்கள் வாயுவைப்பருகி நரகத்துயரை யடைந்து வருந்துகின்றார்கள் அதற்காகவே முகம் வாடினேன். எ-று.

கனிகாய் கிழங்கு கொணர்ந்தளிப்பக் காத லமைச்சர் புறம்போந்தார்
நனிபூ வணையு மாற்றுதா னலிவு மன்னன் மேற்கண் படுத்தா
னினியார் துணைநோயக் கெனச்சுதன்மை யிகந்த சுகமும் பெறுந்துயரும்
புனிதா நினைந்து நினைந்துருகிப் பொருமி யெனைக்கண் டுரைத்தழுதாள்.

(இ - ள்.) ஆசையுடைய மந்திரிகள் பழங்கள் காய்கள் கிழங்குகள் (முதலியவற்றைக்) கொண்டுவந்து கொடுக்க வெளியே சென்றார்கள் மிக்க மலர்ச்சயனமும் சகிக்காத மன்னன் துன்புசெய்யும் மணலின்மேல் துயில்கின்றனன். இனி இந்நோய்க்குத (தீர்வுசெய்யுந்) துணையாவர்? என்று கூறி, சுதன்மையென்பவள் வெறுத்த சுகத்தையும் அடைந்த துயரத்தையும் நினைந்து நினைந்து மனமுருகி என்னைக்கண்டு கூறி விம்மியழுதனள். புனிதமான தந்தையே! எ - று. (௭)

தீம்பா லடிசி றரும்பாகஞ் சிதையா தமைத்துப் பொற்கலத்தி
லாம்பான் மையினி தூட்ட வதுவு மிசைவின் றெனுங்கோமா
னேம்பா றென்ற காய்கனிநீ ருணணும் பாவம் பாவமிது
கூம்பா திடும்மைப் பனைத்துமெமைக் கொள்வ தோவென் றரற்றினள்.

(இ - ள்.) மதுரமாகிய பாற்சோற்றைத் தக்க பாகங்கெடாது சமைத்துப் பொற்பாத்திரத்தில் வைத்து இனிமையாகப்பொருந்த ஊட்டின் அதுவும் உண்ணற் கினியதன்றென்றுரைக்கும் அரசன் (உடலைப்) பாதுகாவாதென்ற காயையுங் கனியையும் நீரையும் உண்பானோ? பாவம். இது பாவம். துன்பமுழுதுங் குறையாது எம்மைக் கைக்கொள்கின்றதோவென்று அழுதனள் எ - று. (௮)

மதிபோ லொளியும் பெருவலியும் வரையா வனப்பும் விரவுடலம்
பொதிதா தவிழ்ந்த மலர்மாலை பூஞ்சந் தனமா திகளணிந்து
துதிவா னிறையும் பெறுதழுங்கச் சுகவா ரிதியின் மூழ்கினோன்
முதிர்நோய் வருத்துந் துயர்க்கடலின் மூழ்கி னனென் றழுதினைந்தாள்.

(இ - ள்.) சந்திரன்போலப் பிரகாசிக்கும் பெருவலியும் அளவிடப்படாத வல்லபமும் பொருந்திய உடலில, மிக்க மகரந்தத்தைச்சொரிந்த மலர்மாலை அழகிய சந்தன முதலியன வணிந்து, துதிசெய்கின்ற விண்ணுலகத்தரசனான இந்திரனும் மனம் பொறாது வருந்த இன்பக்கடலில் மூழ்கிக்கிடந்தவன், முதிர்ந்தநோயால வருத்துகின்ற துன்பக்கடலில் மூழ்கிக்கிடக்கின்றானென்று புலம்பி வருந்தினள். எ - று. (எ)

மைந்தர் மகளிர் பெருஞ்சுற்ற மற்று மடுத்தோ ரொடுங்கலந்து
சிந்தை களிப்ப வைம்பொறியுந் தெவிட்ட வினிய வேறுகாந்தே
மந்த நகரம் விடுத்திந்த வருங்கா னடுத்து விலங்கோடு
மெந்த நிலத்து மிருந்தினைய மானோ மென்று மெடுத்துரைத்தாள்.

(இ - ள்) புத்திரர்கள் புத்திரிகள் பெரிய உறவினர்கள் மற்றுங் கலந்தவர்கள் முதலானோரோடுங்கூடி மனங்களிக்கும்படி ஐம்பொறிகளுந் தெவிட்டும்படி இனிய பொருள்களையே புசித்தோம். அந்த தேவநகரத்தை விலகி இந்த அரிய வனத்தை யடைந்து மிருகங்களோடும் எவ்விடத்திலு மிருந்து துன்ப மடைந்தவர்களானோ மென்று எடுத்துக்கூறினள் எ - று. (அ)

வேறு.

இங்ஙன நிகழ்ந்ததென யாவையு மிசைத்திட
டெங்ஙனமிருந்தமுனி யொள்ளருள்கூ ரந்தே
யெங்ஙனமிருந்தன ரியம்புசிறு வாநீ
யங்ஙன மடைந்தவரை யிங்ஙனழை யென்றான்.

(இ - ள்.) இவ்வகையாக நடந்ததென்று (சிவனன்) கூற, எல்லாவற்றையும் போசித்து, அவ்விடத்திலிருந்த முனிவன ஒளிய கிருபைமிகுந்து, மகனே! அவர்கள் எங்கே யிருக்கின்றார்கள். சொல்லுக. நீ யவ்விடஞ்சென்று நீ யவர்களை யிங்கே யழைத்துவருகவென்றனன் எ - று. (௯)

தந்தையருள் கொண்டவர்க டங்குபொழி னண்ணி
யெந்தையருள் கூர்ந்தனரெ ழுந்துவரு வீரென
றுந்துமிழை வாறசிறுவ னேகிமுன டந்தான்
மந்திரிகண் முன்பின்வர மற்றவர்ந டந்தார்.

(இ - ள்.) (சிவனன்) தன் பிதாவின் கிருபையைப்பெற்று, அவர்கள் பொருந்திய சோலையை யடைந்து, என் பிதா (உங்கள்பேரில்) கிருபைகொண்டனர். எழுந்து வருவீர்களாக வென்றுகூறி, செலுத்துகின்ற ஆசையாற கூறி முன்னே நடந்தனன். மந்திரிகள் முன்னும் பின்னும வர அரசனும அவன் மனைவியும நடந்தார்கள். எ - று.

இற்றைவரை யேபிணியி றந்ததென வெண்ணி
யுற்றமகிழ் வானமுக முளமதொடும லர்ந்து
சற்றுநெறி யேகிவளர் தண்டலைவ ளைந்த
பொற்றவெழி லாசிரமம் புக்கனர்க ளன்றே.

(இ - ள்.) இதுவரையிலேயே பிணியொழிந்ததென்று கருதி, பொருந்திய களிப்புடன், முகமும் மனமும் மலர்ச்சியுற்று, சிறிது வழிநடந்து வளர்கின்ற சோலை சூழ்ந்த மிக்க அழகுடைய (பிருகுமுனிவருடைய) ஆச்சிரமத்திற் புகுந்தார்கள். எ - று.

வேறு

புலிமுலை புல்வாய் புண்ணப் புழைக்கையான் மதமால் வேழம்
வலிகொள்கண் டீர வத்தின் வார்சுவற் கேசர் நீவ
மெலிவுகண் டிருஞ்சூற் பாம்பு விழுங்கிரை மயில்கட் கல்க
நலிபகை வயிர மின்றி நண்ணின வுயிர்க ளெல்லாம்.

(இ - ள்) புலியின் முலையை மானானது பருகவும், வலிமைவாய்ந்த சிங்கத்தின் நீண்ட பிடரிமயிரை, துவாரம்பொருந்திய துதிக்கையினால் மதம்பொருந்திய பெரிய யானையானது தடவவும், பெரிய சூல்கொண்ட பாம்புகள் மெலிதலைப்பார்த்து மயில்கள் விழுங்கத்தக்க இரையைக்கொடுக்கவும், துன்புசெய்கின்ற பகைவயிரமில்லாமல் உயிர்கள் யாவும் பொருந்தின. எ - று. (கஉ)

பருவம்வந் தடுத்த காலும் பயோதரம் பெயன்மி காது
பருவமில் லாத காலும் பஃறுளி மழைகு றாது
பருதியோ ரியல்பி னென்றும் பயில்வெயில் பரப்புந் தென்ற
லொருவிவண் காலும் வீசா வுகுபனி மிகையும் வீறா.

(இ - ள்) பருவமுற்ற காலத்திலும் மேகமானது மழைபெய்கை மிகாது. பருவமில்லாதகாலத்திலும் பல துளிகளையுடைய மழை குறைவுறாது. சூரியன் ஒரே தன்மையுடன் எக்காலத்திலும் வெயிலைப் பரவச்செய்வான். வலியகாற்றும் தென்றலை விலகி வீசமாட்டாது. சொரிகின்ற பனியானது மிகுதியும் அதிகரியா. எ - று.

இச்செய்யுளால் எக்காலத்தும் மிதமழையும் மிதவெயிலும் இளந்தென்றலும் சிறு பனியும் அங்குண்டென்றார். (கங)

இருதுவேறு பாடுக ளின்றி யிருத்தலிற் பலவே றூன
தருவும்வார் கொடியும் புல்லுஞ் சகலமுந் தளிர்த்துப் பூத்து
மருவிராய் வளங்க ணுற்று மன்னிவான் புரையு மந்தப்
பிருகுவா சிரம நோக்கிப் பெருகுவிம் மிதத்த ரானார்.

(இ - ள்) இருது வேறுபாடுகளில்லாமல் (என்றும் ஒரேசீராய்) இருத்தலால், பலவகைப்பட்ட வெவ்வேறு மரங்களும், நெடிய படர்கொடிகளும், புற்களும், சகல செடிகளுந் தளிர்விட்டு மலர்கள்கொண்டு வாசனையுடன் கலந்து எல்லா வளப்பங்களு நிலைபெற்றுத் தேவலோகத்தை யொத்திருக்கின்ற அந்தப் பிருகுமுனிவனுடைய ஆச்சிரமத்தைப்பார்த்து மிகுந்த விம்மிதமுடையவர்களானார்கள். எ - று.

இருதுக்கள் ஆறு: கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில் என்பனவாம். இவை முறையே ஆவணிமுதல் இரண்டிரண்டு மாதங்களாம். (கச)

வனம்படு புண்ட ரீக மலர்த்தவி சகற்றி வேதன்
வனம்படு புண்ட ரீக மணித்தவி சிருந்தாற் போல
வினம்படு முனிவர் சூழ வெரிவிழி வேங்கைத் தோலிற்
றனம்பெரு தவமாகக் கொண்ட தாபத னிருப்பக் கண்டார்.

(இ - ள்) பிரமதேவன் சலத்திலுண்டான தாமரைமலர்ப்பீடத்தை யகற்றி, ஆரணியத்திலுண்டான புலித்தோலாகிய அழகிய ஆசனத்திலிருந்தாற்போல, செல்வமென்பதே பெரிய தவமென்று அதனை மேற்கொண்ட பிருகுமுனிவன் தன்னினத்

தவர்களாகிய முனிவர்கள் புடைசூழ, தீயைச் சொரியும் விழியையுடைய புலித்தோலில் வீற்றிருக்கக்கண்டார்கள். எ - று. (கரு)

தம்பிரான் முகத்து ளொன்று சண்முக னாறு போல
வம்பறுக் கமல வாழ்க்கை வானவன் முகத்து ளொன்றிங்
கும்பர்சூழ் பிருகு வாகி யுறைவதை யறியா ரெல்லா
மெம்பிரா னறுத்தா னென்ப ரென்வியந் தப்பச் சார்ந்தார்.

(இ - ள்) சிவபெருமானுடைய திருமுகங்களிலொன்று முருகப்பெருமானாக அவதரித்தாற்போல, வாசனையகலாத தாமரைமலரில் வாழும் பிரமதேவனுடைய முகங்களிலொன்று, இவ்விடத்தில் தேவர்கள் சூழ்கின்ற பிருகுமுனிவனாகி வீற்றிருப்பதை யுணராதவர்கள் யாவரும், (அம்முகத்தை) சிவபிரான் அறுத்துவிட்டனரென்பாராக என்று சந்தோஷமுற்றுச் சமீபித்தடைந்தார்கள் எ - று. (கசு)

கண்டவர் கண்ணு மீட்டுங் காணவுங் கூச நீர்சோர்
புண்டகு குட்ட யாக்கைப் புரவலன் முதனால் வோருங்
கொண்டதம் பெயர்வெவ் வேறு கூறியெட் டுறுப்பு மைந்து
மண்டனிற் படிய வீழ்ந்து மலர்க்கரங் கூப்பிநின்றார்.

(இ - ள்) பார்த்தவர்கள் தமது கண்களால் மறுபடியும் பார்ப்பதற்குங் கூசும்படி நீரைச்சொரியும் புண்ணமைந்த குட்டநோய் பொருந்திய உடலையுடைய சோமகாந்தன் முதலிய நான்குபேர்களும், தாங்கொண்ட பெயர்களை வெவ்வேறாகச்சொல்லி எட்டுறுப்புக்களும் ஐந்துறுப்புக்களும் பூமியிற் பொருந்தும்படி, பணிந்து தாமரைமலர் போலுங் கைகளைக் குவித்துநின்றார்கள். எ - று

எட்டுறுப்புக்கள் பொருந்தப்பணிவது அஷ்டாங்க நமஸ்காரமென்றும், ஐந்துறுப்புக்கள் பொருந்தப்பணிவது பஞ்சாங்க நமஸ்காரமென்றுங் கூறப்படும். இதனை,

சூதசங்கிதை

"வலஞ்செய்து தண்டத்தை மானவிதி வழிதழுவத்
தலந்தன்னிற் பணிந்தெழுக தலைகரமற் றிருகன்னந்
துலங்குமோ வாய்புயங்க ளெனுமெட்டுந் தோய்மயி
ரிலங்குசிரங் கரமுழந்தா ளெனுமைந்து மிசைந்திடவே" — என்பதனுணர்க இதிற் பஞ்சாங்க நமஸ்காரம் மாதர்க்குரியதென்ப. (கஎ)

அவரவர்க் காசி வாத மருந்தவப் பிருகு கூறக்
கவர்கயிற் கழலா னுள்ளக் கரையறு மன்பு பொங்க
வுவரியுண் டெழுந்த கார்போ லொளிவிழி யுறைப்ப மெய்யி
னிவர்மயிர் பொடிப்ப வேர்ப்ப விழுதென வுருகிச் சொல்வான்.

(இ - ள்) அரிய தவத்தையுடைய பிருகுமுனிவர் அவரவர்கட்கு ஆசீர்வசனங்கள் சொல்ல, பிளவுபட்ட கடைப்புணர்வுடைய வீரக்கழலணிந்த சோமகாந்தன் மனதில் எல்லையில்லாத அன்பு அதிகரிக்கவும், கடலைப்பருகியெழுந்த மேகத்தைப்போல ஒளிபொருந்திய கண்கள் நீர்த்துளி சிந்தவும், உடலிற்பொருந்திய மயிர்க்கூச்செறியவும், வேர்க்கவும், நெய்யைப்போல வுருகிச் சொல்லத்தொடங்கினன். எ - று. (கஅ)

வேறு.

பண்டுபுரி தீவினையின் பயனாகி யுடலிடமாக்
கொண்டெழுந்தெ னழகுமுழுதுங் குலைத்தபெரு நோய்முகத்தாற்
றொண்டுபுரி நலவினையுஞ் சூழ்ந்துபிடர் பிடித்துந்தப்
புண்டரிக மலர்ப்பாதம் போற்றலுறும் பயன்பெற்றேன்.

(இ - ள்.) முற்காலத்திற் செய்த தீவினையின் பிரயோசனமாகி, தேகத்தை யிடமாகக்கொண்டோங்கி, என் அழகு முழுவதையு மொழிக்கிய பெருவியாதியினால் தேவரீருக்குப் பணிவிடைசெய்யத்தக்க நல்வினை யூழானது, என்னைப் பிடர்பிடித்துத் தள்ள (தேவரீரது) தாமரைமலர்போன்ற திருவடியைத் துதிசெய்யும் பயனை யடைந்தேன். எ - று. (௧௯)

சென்றபல பிறவிகளுஞ் சேருமெதிர் பிறவிகளு
மொன்றியவிப் பிறவியொடு முறுவிழுப்பம் படைத்தனவா
லின்றுனது மலர்ப்பாத மிறைஞ்சலினென் றவமாதி
நன்றுபுரி வினைப்பயனு நண்ணியவென் பாலெந்தாய்.

(இ - ள்) எந்தையே! கீழ்ப்போன பல சனனங்களும், மேல்வருஞ் சனனங்களும், பொருந்திய இந்தச் சனனத்துடன் அமைந்த சிறப்பினை யடைந்தனவாயின. இப்பொழுது தேவரீருடைய தாமரைபோன்ற பாதத்தை வணங்குதலின் என் தவமுதலிய நன்மைசெய்த வினைப்பயன்களும் என்னிடத்துற்றன எ - று (௨௦)

எளியேனகல் வியுங்குலமு மீண்டறிவும் பயன்பட்ட
வளியேனை யுயிர்த்தவரு மருமபெரும் பேறுடையவரே
களியார்ந்த கற்பகத்தைக் கலந்தவர்க்குக் குறைவின்றே
யொளியார்ந்த நினதடியை யுற்றேற்குங் குறையுண்டோ.

(இ - ள்) ஏழையேனுடைய வித்தையுங் குடிப்பிறப்பும் நெருங்கிய விவேகமும் பலனடைந்தன சாமானியனான என்னைப் பெற்றவர்களும் அரிய பெரிய பேற்றினை யுடையவர்களே. தேன்பொருந்திய கற்பகத்தருவைச் சேர்ந்தவர்க்குக் குறைவில்லையே (அதுபோல) ஒளிபொருந்திய தேவரீருடைய திருவடியை யடைந்தேனுக்குங் குறையுளதோ (இல்லை) எ - று (௨௧)

இம்மையிலே பாவவினை யாதுமிழைத்தே னல்லே
னம்மையிலே பெரும்பாவ மாற்றினே னாதலினா
லும்மையிலே பெருங்கதிக்கா முறுதியுரிங் கேயழியச்
செம்மையிலாக் கொடும்பிணியென் றேகமடர்ந் தெழுந்ததுவே.

(இ - ள்) இந்தப்பிறவியில் (அடியேன்) சிறிதும் பாவத்தொழில் செய்தேனல்லேன். முற்பிறவியிற் பெரும்பாவங்களைச் செய்தேன். ஆனபடியால் மறுபிறவியிற் பெருங்கதியை யடைதற்காகிய உறுதிப்பாடும் இப்பொழுதே யழியும்படி செம்மையில்லாத தொழுநோயானது என்னுடைய தேகத்தைத் துன்புறுத்தித் தோன்றியுள்ளது எ - று. (௨௨)

அருந்தவத்தா றுனைத்தா லவுடதமந் திரங்களினால்
வருந்தியவிப் பிணிவருந்த வருந்தியுந்தா னருந்தாம

விருந்தவைவெலாமெருநீ ரெனவளர்ந்து விளைந்ததினிப்
பெருந்தவநின் னருளன்றிப் பெயர்க்குமொரு மருந்திலையே.

(இ - ள்) அரிய தவத்தினாலுந் தானத்தினாலும் அவுடதத்தினாலும் மந்திரங்களாலும் வருந்திய விப்பிணி வருந்த வருந்தியுந் தான வருந்தாமற்படியிருந்து, அவையாவும் எருவும் நீருமபோலக்கொண்டு வளர்ந்து பெருகியது. பெருந்தவமுடைய பிருகுமுனிவரே! இனித் தேவரீரது திருவருளன்றி (அதனை)யொழிக்குமொரு மருந்து (வேறே) கிடையாது. எ - று. (உங)

விலங்குபறவைகண் மற்றும் விழுத்தவநின் னாச்சிரமத்
திலங்குபகை வயிரமுறா தின்பமுறக் காண்டலின்று
றுலங்கவரும் பிணிப்பகையுந் தொழுகையே னுன்னைவருத்தா
தலங்கியினி யழியுமெனக் கையமிலை யையமிலை

(இ - ள்) சிறந்த தவமுடையவரே! மிருகங்களும் பறவைகளும் மற்றுள்ளனவுந் தேவரீருடைய ஆச்சிரமத்தில் விளங்கிய பகைத்தன்மையைப் பொருந்தாது களித்திருப்பக் காணப்படுதலால், தேவரீரைத் தொழுகின்ற கையையுடைய என்னைத் துன்புசெய்யும் பிணிப்பகையும் என்னை வருத்தாமல் இனிச் சிறுகி யழியும் (என்பதில்) எனக்குச் சந்தேகமில்லை, சந்தேகமில்லை எ - று (உச)

எனவுரைப்பப் பிருகுவெனு மிருந்தவனந் தோனருள்கூர்ந்து
தனதுள்ளத்துத் தியானித்துச் சார்ந்தபிணி முதனாடி
நினதுவிழை வினைமன்னா நின்மலனருள்கூட்டு
மனமுளைந்து தவறுற்று வருமிளைப்பா றுதியென்றான்.

(இ - ள்) என்று சோமகாந்தன் கூற, பிருகுவென்று சொல்லும் பெருந்தவமுடையவர் கருணைமிகுந்து தன் மனதில் தியானஞ்செய்து, (அவனுக்குச்) சம்பவித்த நோயின் காரணத்தை யோசித்து, அரசனே! உன் விருப்பத்தை மலரகிதனாகிய கடவுளுடைய திருவருள் கைகூடச்செய்யும். மனவருத்தமுற்றுத் தளரவேண்டாம். வழி வந்த இளைப்பாறுகவென்றனர் எ - று (உரு)

உழையிருந்தோர் பிருகுமுனி யுரைத்தகுறிப் பின்னையுணர்ந்து
விழைவிரைப்பூந் தயிலாதி மிகவாட்டி யறுசுவையுந்
தழைதருநால் வகையுணவுந் தகவூட்டி யுபசரிப்பக்
கழைசுளியுங் களியானைக் காவலனுந் தியாமகிழ்ந்தார்.

(இ - ள்) அருகிலிருந்தவர்கள் பிருகுமுனிவருரைத்த குறிப்பையறிந்து விரும்பத்தக்க வாசந்தங்கிய மலரெண்ணெய் முதலியவற்றைத் திருத்தியாகவிட்டு மூழ்குவித்து, அறுசுவைகளும் பொருந்திய நால்வகை யுணவுகளையுந் தக்கபடி யுண்பித்து, உபசரணைசெய்ய, கட்டுத்தறியைக் கோபிக்கின்ற களிப்பையுடைய யானைச்சேனை பொருந்திய அரசன் முதலானோர் அகங்களித்தார்கள் எ - று

அறுசுவை: காரப்பு - துவர்ப்பு - கைப்பு - புளிப்பு - இனிப்பு - உவர்ப்பு எனப்படும். நால்வகை யுண்டி: உண்ணல் - தின்னல் - நக்கல் - பருகல் எனப்படும். இவற்றுள் சோறு முதலியன வுண்டல் - கறி முதலியன தின்னல் - தேன் முதலியன நக்கல் - நீர் முதலியன பருகல் எனப்படும். இவற்றுடன் உறிஞ்சல் ஒன்று கூட்டி ஐந்தெனப்படுமுண்டு. (உசு)

என்றுமா தவர்கேட்ப விருந்தவத்துப பிருகுவின்பா
லன்றுவேற் கரத்தரச னடுத்ததுரைத் தவனவறருத
துனறுதீ வினைநனமை சூழ்ந்துரைத்த வவவிரணடு
மினறுகூ றுவனமுறையே யெனச்சூத முனிபியமபும.

(இ - ள) என்று (இவ்வகையாக) பெருந்தவசிகளான நைமிசாரணிய முனிவர்கள கேட்கும்படி, சிறநத தவத்தையுடைய பிருகுமுனிவனிடததில வேற்படைதாங்கிய சோமகாநதமனனன் அடுதத வகையைககூறி, அபபிருகுமுனிவன் சோமகாநதனுககுப் பொருந்திய தீவினை நலவினைகளை யாலோசிததுக்கூறிய அவ்விரணடையும இப்பொழுது முறையே சொலகினறேனெனறு சூதமுனிவன சொலலலாயினன.எ-று.

சோமகாநதன் பிருகுமுனியையடுததபடலம் முறறிறறு.

ஆகத் திருவிருத்தம் - எசஎ.

சோமகாந்தன்றீவினைப்படலம்.

கருவினை வேரொடுங் களைந்த மாதவப்
பிருகுவின் பேரருள் பெற்ற மன்னவன்
றிருவிய லத்தினஞ் சென்ற மற்றைநாட்
பருதிவந் தெழுமுனம் படுக்கை நீங்கினன்.

(இ - ள) பிறவியை வேரோடும பறிததெறிந்த பெருநதவமுடைய பிருகுமுனிவனுடைய பெருங்கருணையைபபெற்ற சோமகாநதராசன, செல்வமமைந்த அற்றையதினங்கழிநத மறுதினததில, சூரியன (உதயகிரியில) வந்து புறப்படுவதன்முன்னமே துயிலொழிநதனன எ - று

சோமகாந்தன தனறுயரகலததுகக பிருகுமுனிவா கருணையையடைந்த தினமாதலின அதனைத "திருவியலறறைநாள" எனறார். (க)

நாட்கடன முடிததன ஞறு மைமவகை
வேட்கையும விடுத்தருள விரவு மெயததவன
றாட்கம லஙகளைச சாரநது தாழ்நதவன
வாட்கடைக கணடர மருஙகு வைகினன.

(இ - ள) நிததியகருமததை முடிததனன பொருநதிய ஐவகை வேட்கையுமொழிததுக கிருபைபொருநதிய உணமைததவமுடைய பிருகுமுனிவருடைய திருவடித்தாமரைகளை யடைநது பணிநது அவருடைய ஒளிபொருநதிய கடைக்கண்பார்வை யுணடாகுமபடி அருகிலிருநதனன எ - று (உ)

வேட்டன வேட்டவா விளைக்கு மைமகரன
சேட்டொளிப பதமலா சேரநத மாதவன
வாட்டுமிப பிணியினை வாட்ட லாமெனன
வீட்டிய பறவினை யெடுத்துக கூறுவான.

(இ - ள்.) விரும்பிய பொருள்களை விரும்பியவகையே யுண்டுசெய்யும் ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக்கடவுளது பெருமையுற்றுப் பிரகாசிக்கின்ற திருவடித் தாமரைகளைச்சேர்ந்த பெருந்தவசியாகிய பிருகுமுனிவர் (சோமகாந்தனைத்) துன்புறுத்துகின்ற இந்தக் கொடுநோயை யொழிக்கலாகுமென்று, (அவன்) தேடிய பழவினையை யெடுத்துச் சொல்லலாயினர் எ - று (௩)

ஒன்னலர் மணிமுடி யுரிஞ்சுந் தாளினோய்
மன்னிய விந்தமால் வரையி னோர்புறங்
கொன்னெடு நகரங்கொல் லார மென்றுள
தந்நகர் நாயக னல்லறிவின் மிக்குளான்.

(இ - ள்) சத்துருக்களுடைய இரத்தினகிரீடங்கள் உராய்கின்ற பாதத்தை யுடைய சோமகாந்தனே! நிலைபெற்ற பெரிய விந்தகிரியின் ஓர் பக்கலில் பெரிய கொல்லாரமென்னும் நகரமொன்றுள்ளது அந்நகரத்து வர்த்தகன் (ஒருவன்) நல்ல அறிவின் மேம்பட்டவன் எ - று.

நாயகன் - வணிகன் (௪)

சித்துரு வப்பெயர் சிவணி வாழ்தரு
மத்தகு வணிகனுக் கான்ற கற்பினாண்
மெத்தெழிற் சுலோசனை மெய்த்த வத்தினாற்
புத்திர னெனவுனைப் பொற்ப வீன்றனள்

(இ - ள்) சித்துருவனென்னும் பெயரையுற்று வாழ்கின்ற அந்தத் தகுதியாகிய வணிகனுக்கு மேம்பட்ட கற்பையுடைய அழகுமிக்க சுலோசனை யென்பவள் மனைவி அவர்கள் உடலவருந்திச் செய்த தவத்தினாலே உன்னைப் புதல்வனாக அழகு பெறப் பெற்றார்கள் எ - று. (௫)

காமந்த னெனும்பெயர் கலந்து பாலனா
யேமுறு தருணமவந் தெய்து செவ்வியிற்
றேமறு குடும்பினி யென்னுந் தோகையைத்
தீமுனர் வரைந்துடன் சேர்த்தி னனரோ.

(இ - ள்) காமந்தனென்னும் பெயர்பெற்றுப் பாலவயதுடையவனாகி நல்ல வயதுவந்த காலத்தில், (உன் தந்தை) குற்றமற்ற குடும்பினியென்னும் பெயரை யுடைய மயிலின் சாயலையுடையவளை அக்கினி சாட்சியாக (உனக்கு) மணஞ்செய்து புணர்த்தினான். எ - று. (௬)

இடும்பெயர்க் கேற்புற வெழுவர் மைந்தரை
யடும்படை வாட்கணி னைவர் மாதரைக்
குடும்பினி யீன்றனள் குலவி வாழுநாள்
கடும்பழு நுந்தைவான் கதியிற் சென்றனன்.

(இ - ள்.) (குடும்பினியென்று) இடப்பட்ட பெயருக்குத் தக்கபடி எழு புத்திரர்களையும், (பகைஞரைக்) கொல்லுகின்ற வாட்படைபோன்ற கண்ணையுடைய ஐந்து புத்திரிகளையும் அக்குடும்பினியென்பவள் பெற்றனள். (இவ்வாறு) கூடி வாழுங்காலத்தில், வயோதிகனான உன் பிதா நல்லகதியிற் போயினன் [மரித்தான்.] எ - று. (௭)

வருந்தியன் னையுமனு மரணஞ் செய்தன
டிருந்திய காவலா தீரப் பட்டியாய
முருந்திள முறுவலவே சையரின் முனனிநீ
யருந்தன மனைதனைதயு மழிவு செய்தனை.

(இ - ள்) (அப்பொழுது உன்) தாயும் மனம் வருந்தி அநுமரணஞ் செய்து கொண்டனள். திருத்தமாகிய தாய்தந்தையர்களிறத்தலால திருடனுய, முருந்து போன்ற இளமைவாய்ந்த பல்வரிசையையுடைய வேசையாசுகத்தில் விருப்புற்று, நீ அரிய செல்வமுழுவதையும் அழித்தனை எ - று

அநுமரணம் - கணவனிறந்தபொழுது தானுமிறத்தல். இஃதுடன்கட்டையேறுதல் முதலியன முருந்து—மயிலிறகின் அடி (அ)

தருமமன றுனக்கென்த தாரஞ் சாற்றவும
பொருளவரு வாய்கலம புவியில் லாதியை
யிருமனப பெணடிரி னிழந்தில லாமையை
மருவிமிக விரந்துசின ஞளவ ழங்கினை

(இ - ள்) இஃதுனக்கு நீதியன்றென்று, உன் மனைவியானவள் சொல்லவும், (கேளாவனுய) பொருள்வரத்தக்கவழிகள் கப்பல்கள் நிலங்கள் வீடுகள்முதலியவற்றை, இருமனப்பெண்டிரால் போக்கடித்து, இல்லாமையாகிய தரித்திரத்தை யடைந்து மிகவும் பிச்சையெடுத்துச் சிலகாலங்கழித்தனை எ - று.

தாரம்-மனைவி. இது தன்கணவனால் மங்கலதாரமணியப்பெற்றவளென்பது.

இருமனப்பெண்டிர் - வேசையர் இவர் அகத்திலொன்றும் புறத்திலொன்றுமாக நடப்பவராதலின் இவ்வாறழைக்கப்பட்டனர் (கூ)

வேறு

பொய்ச்சூ ளுரைத்தும பொய்யுரைத்துங் குறளை யுரைத்தும பொருளீட்டி
மைச்சூழ படைக்கட பொதுமாதர் மகிழச் சிலநாள் வழங்கினைபின
கைச்சூ டகம்பா டகங்குழைபூண கலமா திகளுங் களவாண்டு
மெய்ச்சூழ் மகளிர் கற்பழித்தும் விடரிற் சிறந்தோ னுயினையால்.

(இ - ள்) பொய்ச்சத்தியஞ்செய்தும், பொய்ச்சாட்சி கூறியும், கோள் சொல்லியும் (தீயவழியிற்) பொருள்சம்பாதித்து, மையெழுதிய வேற்படைபோன்ற விழியையுடைய வேசையர்களிப்பெய்தச் சிலகாலங் கொடுத்துவந்தனை. அதன்பின்னர், கையிலணியத்தக்க சூடகம் - பாடகம் - குண்டலம் - ஆபரணங்கள் - பாத்திரங்கள் முதலியவற்றைத் திருடியும், சத்தியக்காப்புடைய கற்புடை மகளிரைக் கற்பழித்தும் விடர்களிற் சிறந்தவனுயினை எ - று

பொதுமாதர் - யாவர்க்கும் பொதுவாயுள்ளவர் முறை முதலியன கொள்ளாது பொருள்கொடுப்போனுக்குப் பெண்டாயிருந்து உடனே விலக்குவோர். விடன் = வஞ்சகன். (௧௦)

மைந்தர் மகளி ரொடும்பசியால் வருந்தி நாளுஞ் சரணின்றிச்
சிந்தை தளர்ந்து குடும்பினிபோய்ச் சேர்ந்தாள் பிறந்த மனைபின்னு
மந்த நகரி லிருந்துமது வார்ந்து களித்து முறைதிறம்பிப்
புந்தி விழைந்த படியெந்தப் பொல்லா வினையும் புரிந்தனையால்.

(இ - ள்.) (உன் செயல்களித்தன்மையவாறிருந்தமையின்) குடும்பினியென்பவள் தன்புதல்வர்களும் புதல்விகளும் தானும் நாடோறும்பசியால்வருந்தி, காப்பாரில்லாது மனம்வாடி, தான் பிறந்த (தாய்) வீட்டிற்குப் போய்ச்சேர்ந்தாள். அதன்பின்னும் நீ அந்தப்பட்டணத்திலிருந்து கட்குடித்துக் களித்து முறைதவறி மனம்விரும்பியவகையே யெல்லாத் தீவினைகளையுஞ் செய்தனை. எ - று. (கக)

வேந்த னறிந்து கடிதகற்ற வெய்ய வனத்திற் கள்வரொடு
போந்து பதிக ருயிர்கொன்று பொருளைக் கவர்ந்து விலங்காதி
யேந்து படையா லழித்துமருந் திட்டாற்றலைப்போ ரையுங்கொன்று
மாய்ந்த வர்தம் பொருண்மாதர் மற்றுங் கவர்ந்து நுகர்ந்தனையால்.

(இ - ள்) (அதனை, அந்நகரத்து) மன்னவனுணர்ந்து விரைந்து உன்னை (அந்நகரைவிட்டு) விலக்க, கொடிய காட்டில் திருடர்களுடன் சேர்ந்து, பதிகருயிரைக் கொன்று அவருடைய பொருள்களை யபகரித்து, மிருகமுதலியவற்றை (கரத்திலே)தாங்கிய ஆயுதத்தாற் கொன்று, மருந்துவைத்து, வழிப்பறிப்போரையும் மாய்த்து, இறந்த அவர்களுடைய பொருள்களையும் மனைவிமார்களையும் பிறபொருள்களையும் அபகரித்து அனுபவித்தனை எ - று

பதிகர் - வழிச்செல்வோர் (கஉ)

காதல் வேத முழுதுணர்ந்த கணவர்த் தனென்ன லொருமறையோன்
போத வாற்றி னெதிர்நோக்கிப் பொருக்கென் றடுத்துக் கரம்பிடித்தாய்
மோது கால தூதெனவே முன்னி வெருவி நெட்டுயிர்த்திட்
டாத காதிங் கெனைக்கோற லரிய பொருள்கொண் டொழிகென்றான்

(இ - ள்.) (அவ்வாறிருக்கையில்) ஆசையுடன் வேத முழுவதையுங் கற்ற கணவர்த்தனென்று சொல்லும் வேதியனொருவன் வர, (அவனை) வழியெதிரே பார்த்து விரைந்து சமீபித்து (அவன்) கையைப்பிடித்தனை அவன் மோதுகின்ற காலதூதனைப்போல நினைத்துப் பயந்து பெருமூச்சுவிட்டு, ஐயோ என்னைக்கொல்லாது தருமமன்று. என் அரும்பொருள்களைச் சூறைகொண்டு செல்லுகவென்றனன் எ - று.

முன்னே யொருத்தி தனைமணந்தேன் முடிந்தாள் பிதிரர் கடன்முடிப்பப்
பின்னே யொருத்தி தனைமணந்தேன் பிள்ளை யுயிர்ப்ப பருவத்தா
ளென்னு டனக்கோர் சரணில்லை யதனா லெளியே னுனக்கபயங்
கொன்னே கோறல் புரியாது குலவும் பொருள்கொண் டொழிகென்றான்.

(இ - ள்) முதலிலே யொரு மனைவியை விவாகஞ்செய்தேன். (அவளோ) இறந்தனள் பிதிர் கடன்களைச் செய்துமுடிப்பதற்கு, பின்னர் மற்றொரு மனைவியை வதுவைசெய்தேன் (அவளோ) பிள்ளைபெறாத (இளம்) பருவமுடையவள் அவளுக்கோர் ஆதரவுமில்லை. ஆனபடியால் ஏழையாகிய நான் உனக்குச் சரணம் வீணுக்குக் கொல்லாமற்படி (என்) பொருள்களைக்கொண்டு (என்னை விடுத்துச்) செல்லுகவென்றனன் எ - று (கங)

கள்ளே காமங் கொலைகளவு கலந்த தொன்று மினுமிழைதை
கொள்ளா துயர்ந்தோர் கொளுந்தவைக்கூறு மவைநான்கினுமென்றும
விள்ளா வொருநீப னவன்மொழி வியன்பா றையிற்கொட் டியதுபோற்
றள்ளா நினைத்த படிமுடித்தாய் பிரம சாயை சார[illegible]

(இ - ள்) கள்ளுங் காமமுங் கொலையுங் களவுமாகியவற்றுட் சேர்ந்தொன் ருனாலும், (இவ்விடயத்தில்) உயர்ந்தோர் கூறும புத்தியைக் கீழ்மகன் கொள்ளான். சொல்லிய அவை நானகினின்றும எக்காலமும பிரியாத நீ அவ்வேதியன மொழி யைச் சிறிதுங் கவனியாது, கல்லிலடித்த தடியைப்போலத் தள்ளி நீ நினைத்தபடி முடித்தாய் [கொன்ருய்] பிரமகத்தி (அதனால உன்னைத்) தொடர்ந்தது எ - று (௧௯)

பன்னாளுழந்து பயன்சிறிது பயப்ப தேனு நலவினையே
யின்னா மையைய ஞசூராபுரிவ ரீழுமைத சிறிதும பெறப்பழியைச்
சின்னாழிகையிற புரிந்தாழி சென்று நரகத் துயருழப்பா
மன்னாவினிப்புண் ணியங்கேணமோ வென்று பிருகு வகுத்துரைப்பான.

(இ - ள) தீமைக்குப பயப்படுவோர பலநாள அலைநது சிறிய பலனைக் கொடுப்பதானாலும, நற்கருமத்தையே செயவாரகள கீழ்மகன அற்ப பலனையும அடையுமபடி பழிசமபாதிக்கச சிலநாழிகையிற செய்து, ஊழிகாலம் நரகத்திறசென்று துயரமடைவான சோமகாந்தனே! இனி நீ செயத புண்ணியத்தையுங் கேட்பா யாகவென்று பிருகுமுனிவன எடுத்துக்கூறலாயினன. எ - று. (௨௰)

சோமகாந்தனறீவினைப்படலம முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - எ௪௰௩.

சோமகாந்தன் நல்வினைப்படலம்.

சொன்னவாறு நீ, துன்னுகானிடை,
மன்னிவாழுநா, ளின்னலெய்தினை

(இ - ள.) மேறசொலலியவகையாக நீ நெருங்கிய வனத்திற பொருந்தி வா ழுகையில துனபத்தையடைந்தாய எ - று (௧)

நடுக்கந்தந்திரி, யடுக்குமவன்கப,
மெடுக்குஞ்சந்தியு, மொடுக்குங்காசமும

(இ - ள) நடுக்கத்தைக்கொடுத்து அசசங்கொடுக்கும வலிய கபமும, எடுக் கின்ற வாந்தியும, செலுத்துகின்ற கோழையும எ - று (௨)

மூப்புமுற்றுறக, காப்புங்கைவிட,
நீப்பருந்துயாக, கோப்புகக்கொள்ளனும.

(இ - ள) வயோதிகம முழுதும பொருந்தவும காவலுங்கைவிடவும் நீக்குதற் கரிய துயா மிகுதியும உண்டாகவும. எ - று (௩)

வேறு

சாதற்றுயர்சார்ந்ததுபொருப்பென்
ருேதத்தகுமோணபொருளும்யானும

போதககடியாதியெனவிலலின்
மாதுகளொருதூதினைவிடுத்தாய.

(இ - ள்.) மரணதுக்கமுண்டாயிறறு விரைவாகச சொல்லததக்க வொளி வாய்ந்த பொருளுமயானுமவர (செலவளிதது) விலககாதேயெனறு உன மனையாட்டிக்கு ஒரு தூதனைச செலுததினையை. எ - று. (௪)

இல்லினமாது - மனைககிழததி, மனைவி.

இனையாதிருளெகிமொழிதூதை
மனைமாதொடுமறறையருநோககிக
கனைபூஙகழறகாவலனெனறுகரு
நினையாதகலெனறுமிகநீககினார.

(இ - ள்) வருநதாமறபடி இரவிலேயே சென்று கூறிய தூதுவனை உன் மனைவியுடன மறறுளளோருமபாராதது, ஒலிககின்ற அழகிய வீரகசழலணிநத அரசன் (அறிநதால) தணடனைசெய்வான (ஆதலின) எமமை நினையாது நீஙகுகவென்று மிகவும் விலககினாகள எ - று (௫)

இனியாதுசெயவாமெனவிருநது
தனியாமனமோடுககவெண்ணி
நனிபோனபிறபபினுறுநனமை
முனியாதுனைமுறறவிதுசெயதாய.

(இ - ள) இனியாது செய்வோமென்று ஒன்றியான மனததுடனிருந்து மிகவும் யோசிதது, மிகுதியாகசசென்ற பிறவிகளிற பொருநதிய புணணியகருமஙகள முதிருமபடி கோபியாமல இதனைச செயதனை எ - று (௬)

உலகோரறியாதுனையிரநது
கலனுடைபொனனுதிகவாநதேருக
விலகாதொருவேதியனைநோககிக
குலவேதியரைககொணாகவெனறாய்.

(இ - ள்) உலகினருககுத தெரியாமல உனனிடம யாசிதது, ஆபரணம் ஆடை பொன முதலியவற்றைக் கைககொணடு செலலும உனனைபபிரியாத பிராமணனைபபாரதது, சிறநத அநதணாகளை யழைதது வருகவென்று கூறினை. எ - று

உலகினரறிநதால தான பதிதனிடததிற பொருளேறறதறகாகக குலாசாரங் கெட்டவனெனறு விலககுவராதலின "உலகோரறியாது" எனறார. (எ)

அனனபலவாசசிரமநணணி
மனனுதரவானமுனிவாவமமி
னனனுயகனயநதினிதனிகரும
பொனனுடைபொறபூண்பெறுதறகெனறன.

(இ - ள்.) அவவேதியன பல ஆச்சிரமஙகளை யடைதது, முனிவர்களே! நல்ல வணிகனொருவன் விருமபி யினிதாககொடுக்கும பொன ஆடை அழகிய ஆபரணமுத லியவறறைப பெற்றுக்கொளவதற்குப் பொருந்திய ஆசையுடன் வாருங்கள் என்று கூறினன். எ - று. (அ)

உன்றீது ணராதவ ரடுத்தா
ரன்றாதரவா லடிவணங்கி
நின்றுயநினை நோக்கிமுனிவோர்க
ணன்றேயென நகைத்துமொழிந்தார்.

(இ - ள்) அவ்வேதியர்கள் உன்றீமையை யறியாமல் (உன்பால் தானம்பெற) வந்தார்கள் அப்பொழுது நீ ஆசையுடன் அவர்கள் பாதங்களைப் பணிந்து நின்றனை. முனிவர்கள் உன்னைப்பார்த்து ஆ! நன்றாயிருந்ததென்று கூறி நகைத்து இவ்வாறு கூறினார்கள் எ - று. (௯)

வேறு

பாவியென் றறியா தீங்குப் படர்ந்தனம் பாவி யுன்னை
மேவினர் கண்டோர் கேட்டோர் விளம்பினோ ரிரந்தோ ரெல்லாந்
தீவினைச் சிமிழ்ப்பிற் பட்டுச் செறிநர குழப்ப ரற்றாற்
றாவிலுன் பொருளை யெல்லாந் தருமநீ விழைந்தா யாயின்

(இ - ள்) ஐயோ! நீ பாவியென்றறியாமல் இவ்விடத்திற்குவந்தோம் பாவி! உன்னைச் சமீபித்தவர்களும் பார்த்தவர்களும் (உன்பெயரைக்) கேட்டவர்களுஞ் சொன்னவர்களும் (உன்னிடம்) யாசித்தவர்களும் ஆகிய எல்லோரும் பாவவினையாற் பந்திக்கப்பட்டு, நெருங்கிய நரகத்திற் றுன்புறுவார்கள் ஆதலால் எண்ணில்லாத உன் பொருள் முழுவதையும் நீ தருமஞ்செய்ய விரும்புவாயாயின் எ - று (௧௦)

நெடிபடு வனத்தி லோர்சார் நின்மலக் கணேசன் கோயி
லடிமுதன் முடியின் காறு மலர்செழுந் தருவன் மாந்தர்
குடிகொளு மகமு நன்கு குயிற்றுதி யென்று நீங்கிக்
கடியறன் மனுக்கண் மூழ்கிக் கணித்துளந் தூய ரானார்.

(இ - ள்) சிள்வண்டுகள் பொருந்திய இவ்வாரணியத்திலே ஒருபுறம், மலரகிதனாகிய விநாயகக்கடவுளுடைய திருக்கோயிலை, அஸ்திபாரமுதற் சிகரம்வரையிலும், அலர்ந்த செழுமைசங்கிய மரங்களையும், இராககாலத்தில் மானுடர் வசிக்கும் வீடுகளையும் நன்றாகச் செய்விப்பாயாகவென்று கூறி (அவனை) விலகி, வாசம்பொருந்திய நீரில் மந்திரபூர்வமாக ஸ்நானஞ்செய்து ஜபஞ்செய்து மனம் பரிசுத்தமடைந்தவர்களானார்கள் எ - று. (௧௧)

கடும்புகை விட்ட வாறுங் கரிசிலர் கரைந்த வாறு
மிடும்பைவந் தழிக்கு மாறு மெண்ணிமெய்ப் பொருளு மன்றப்
படும்பயப் பால வாகப் பண்ணுவ தைங்கைப் புத்தே
ணெடும்பெருங் கோயி லன்றி யில்லையென நினைவுட் கொண்டாய்.

(இ - ள்) உறவினர் கைவிடுத்த வகையும், குற்றமில்லாத முனிவர்கள் கூறிய வகையும், (வயோதிகத்தால்) துன்பம்வந்து வருத்தும் வகையும் யோசித்து, எல்லாப் பொருள்களையும் பலன்பெறுந்தன்மையாகச் செய்யத்தக்கது ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக்கடவுளுடைய நெடிய பெரிய திருக்கோயிலன்றி (வேறு) இல்லையென்று மனத்திற்கொண்டனை. எ - று.

கடும்பு - உறவினர் (௧௨)

ஈட்டிய பொருளி னோடு மிடம்படு கோயில் சார்ந்து
கோட்டமி லாத வன்பு குடிகொள வநாதி யான
சேட்டொளிக் கணேசர் கோலத் திருவுரு விருப்பக் கண்டு
வாட்டமுற் றொழிந்து தாழ்ந்து மகிழ்ந்துகூத் தாடிப் பாடி.

(இ - ள்.) (அந்நிலையில்) சேகரித்த பொருள்களுடன், விசாலமான விநாயகப் பெருமான் திருக்கோயிலை யடைந்து, கோணுதலில்லாத பக்தியானது (மனதில்) குடியிருக்க, அநாதியான மிக்க ஒளிவாய்ந்த கணேசப்பெருமானுடைய திருவுருவம் வீற்றிருப்பப்பார்த்து, வாட்டமுழுது மகன்று பணிந்து பிரதக்கணஞ்செய்து ஆனந்தக் கூத்தாடிப் (பலவகையாகப்) பாடி எ - று. (க௩)

கம்மிய ராதி யோரைக் கருவியோ டடுப்பக் கூவி
விம்மொளிப் பொன்னாற் கெர்ப்பக் கிரகத்தை விளங்கச் செய்து
செம்மணி யாதி செம்பொற் றகட்டிடைச் செறித்து முன்னே
கொம்மெனப் படுத்து நான்கு கோபுரந் திசைதோ றாக்கி

(இ - ள்) கம்மியர் முதலானோரை ஆயுதங்களோடு வரும்படி விளித்து பூரித்த வொளியையுடைய பொன்னாற் கெர்ப்பக்கிரகத்தை விளக்கமுறச்செய்து, பதுமராகமுதலியவற்றைச் செம்பொன்னாற் செய்த தகட்டிற் பதித்து முன்னே விரைந்து நான்கு கோபுரங்களை (நான்கு) திசைகளிலும் செய்வித்து எ - று.

கெர்ப்பக்கிரகம் - பெருமானிருக்கும் உள்ளிடம் இதன்முன்னுள்ள அறையை அந்தராளமென்றும், அதன்முன்னுள்ள இடம் அர்த்தமண்டபமென்றும், அதன்முன்னுள்ளது மகாமண்டபமென்றுஞ் சொல்லப்படும். (க௪)

மண்டப மாட மேடை மடைப்பள்ளி யாக சாலை
விண்டொடு புரிசை யாதி வெள்ளியா திகளாற் கல்லாற்
கண்டவிட் டிகையாற் காழ்த்துக் கதிர்மிகு மரதகத்தால் வெவ்வே
றண்டர்கம் மியனு நாண வழகுறச் சிறப்பித் தாக்கி

(இ - ள்) மண்டபம் மாடம் மேடை மடைப்பள்ளி யாகசாலை ஆகாயமளாவிய மதில் முதலியவற்றை வெள்ளி முதலிய லோகங்களாலும், கல்லாலும், இட்டிகையாலும், வயிரமுற்றுக் கனமிக்க மரத்தாலும் வெவ்வேறாகத் தேவகம்மியனான விசுவகன்மனு நாணும்படி சிறப்புறும்படி அழகாகச் செய்வித்து எ - று.

இட்டிகை - கருங்கல். (க௫)

வாயில்க ணான்கின் முன்னு மணிப்புனற் றடாகந் தொட்டுக்
கோயிற்றன் புறத்து முற்றச் சூழ்வுமா ராம மாக்கித்
தாயினு மினியார்க் கான தமனியப் பாத்தி ராதி
யாயின பின்ன ராதி சைவரிற் பூசை யாற்றி.

(இ - ள்.) நான்கு கோபுரவாயில்களின் முற்படவும் அழகிய நீர்நிறைந்த தடாகங்களெடுத்துத் திருக்கோயிலைச்சூழ முழுவதும் நெருங்கிய பூந்தோட்டம் வைத்து, தாயைக்காட்டிலு மினியவராகிய இறைவர்க்கு உபயோகமான பொற்பாத்திர முதலியன செய்வித்தபிறகு, ஆதிசைவர்களால் (ஆகமோக்தமாகப்) பூசைசெய்வித்து. எ-று.

நாடகக கணிகை மாதர் நலலிய மியமபு வோாகண்
மாடக யாழின வலலோா வாகனங் கவிகை யாதி
யாடக மணியிற செய்த வணிகலம பிறவு மலகச
சேடகம பொலிநதோா போறறத திருவிழாப பலவுஞ செய்தாய்.

(இ - ள்) நடனஞசெய்யுங கணிகைமாதாகளும, நலல வாததியஙகளை முழக்குவோாகளும், முறுககாணியமைநத வீணையில வலலவாகளும, வாகனம குடைமுதலியனவும், பொனனாலும இரததினததாலுஞசெயத ஆபரணஙகளும பிறவும பெருக. ஆகாயவாசிகளும போற்றிசெயயுமபடி பல திருவிழாககளையுஞ செய்தனை. எ - று.

இனனணஞ சிறப்புப பூசை யியற்றியே சிலநாட செலலத
துனனிய வாழ்நனை நாளுந துலைநதது காலன தூதா
முனனினா பிடித்து வீக்கி முறைபுரிந தீாததுச சென்று
கனனவில புயததுச செஙகோற காவலன முனனா விடடாா.

(இ - ள) இவ்வகையாகச சிறப்புப்பொருநதிய பூசையைச்செய்து சிலகாலங்கழிய, பொருநதிய (உன) ஆயுட்காலமு மொழிநதது இயமதூதாகள நெருங்கி (உனனைப்) பிடிததுககட்டி முறைப்படி செயது இழுததுப்போய, மலையையொதத தோளையுடைய இயமதருமராசனுககு முனனே விடடதாாகள. எ - று (௧௮)

சினமபொழி தருமவேநதன சித்திர குததற் கூவி
யினம்பிரிந தடுதத வினனை னிருவினை யினறு காறுந
தினநதினஞ செயத வெலலாஞ செப்புதி யெனன வன்னான
கனமபொழிந தாங்கு முறறுங கணைநதுபின னிதுவுஞ சொனனான.

(இ - ள) (பாவிகளைக கணடமாததிரததிற) கோபததைச சிநதும இயம தருமராசன சிததிரகுப்தனெனனுங கணிகனைக கூபபிட்டு, தனனினததாரை விடடு வநத இவன இனறையவரையில தினநதினஞ செயத நலவினை தீவினைகளையெலலாம (கிரமமாகச்) சொலலுகவெனககேட்க, அவன மேகமானது மழைசொரிநதாறபோல முழுவதையுஞ சொலலி, பினனா இதனையுஞ சொலலுகினறான எ - று. (௧௯)

பிறநதநாட டொடஙகி யினனான பேணிய தனைததும பாவ
மிறநதிடு நாளிற பாவத தீட்டிய பொருளக ளெலலாஞ
சிறந்தவைங் கரனுக காக்கித் திருப்பணி செயதா னெனறான
மறநதழை தருமவேநதன மதிததிது வகுகக லுறறான.

(இ - ள) பிறநததினமுதல இவன செயததவை யாவும் பாவச்செயல்களே. ஆனல் (இறக்குஙகாலததில) தான முனனாப பாவவழியிறறேடிய பொருளகள் முழுவதையுஞ சிறபபுபபொருநதிய கணேசமூாததிககு விநியோகபபடுததி (திருககோயில் முதலியனவாகத) திருபபணி செயதுளளன எனறு கூறினன. (அதனைககேட்ட) கோபமிகுந்த இயமதருமன யோசிதது இவவாறு சொலகினறான. எ - று. (௨௦)

பஞசியின மலைக ளெலலாம் படுதழற பொறியிட டெனன
விஞசிய பாவ மெலலாம விநாயகன பணியான மாய்நத
தெஞசிய துளது தானு மிருநிலத தலதில் லென்று
நெஞசுற மதிதது நினனை நெஞ்சேரலெனன முகததி னோக்கி.

(இ - ள்) பஞ்சியின் மலைகளெலலாம பொருந்திய நெருப்புப்பொறிபட்டால் (அழிவது) போல, (நீ செயத) மேமபடட பாவஙகள யாவும விநாயகக்கடவுள திருப பணியால ஒழிநதன மிகுநதுளளதும பெரிய பூமியில அனுபவிபபதலலது இஙகு (அநுபவிபபது) இலலையெனறு, மனதில யோசிதது, உனனை விரைநது முகததிற பாாதது. எ - று (உக)

அளவறு பாவஞ செயதங கறபமே நனமை செயதா
யுளவிரு பயனு முனன ருருபபனா நுகாதி கொலலோ
வளமலி நனமை முனனா மருவுதி கொலலோ வென்று
னிளகிய நெஞசி னீயங கிபபமே முனன ரென்றுய

(இ - ள்) கணககறற பாவததைசசெயது சிறிது நனமையே செயதனை. உள்ளனவாகிய அவவிருவகைபபயனிலும முதலிற பாவபலனை யனுபவிபபையோ வள மிகக நனமையின பலனை முதலிலனுபவிபபையோ (எதைவிருமபுகினறனை) என வினவினன உருகிய மனதையுடைய நீ அப்பொழுது இனபமே முதலில (அநுபவிக்கத்தககது) எனறு கூறினை. எ - று (உஉ)

அபபடி யாக வென்றே யகறறின னீயும வெநதா
யிபபடி மீது முளன ரெய்தரும போக மூழகி
யுபபடி யினன நோயபின னுழகினறு யிதுவுந தீரக
கைபபிடி கனிபோ லைஙகைக கடவுளைப போறறு கென்றன.

(இ - ள) (இயமதருமன) அபபடியேயாகுகவெனறு உனனை விலககினன். நீயும (அதனல) அரசனுய இவவுலகததில முதலிலே அடைதறகரிய போகததில மூழ்கி, அவவகையாகவே பிறகாலததில இததனமைய நோயிற றுனபுறுகினறுய இநநோயுந தீருமபடி கையிலுளள கனியைபபோல ஐநது திருககரஙகளையுடைய கணபதியைப போறறலசெயகவெனறு பிருகுமுனிவா கூறினா எ - று. (உங)

காமநத னெனுமபோக கேறபக காமத ளுகி நாளுந
தோமநத மினறி யாறறித துரிசுறு பொருளகள கொண்டாய்
சாமநதப பொழுதிற செயத தருமததா லியம னீபபிற
சேமநதன பதநத ரானகொல சோநதவா தமககே ரமபன

(இ - ள) காமநதனெனனும பெயருககுப பொருநதக காமமுடையவனுகி, முடிவிலலாது குறறஙகளையே செயது, பாவமபொருநதிய பொருளகளையே கைககொணடு இறககுநதருணததிற செயத தருமததால இயமனை விடுவொனுகிய, விநாயகககடவுள் தனனை யடைநதவாகளுககுச சேமமாகிய திருவடியைத தரமாட்டாரோ? (அவசியநதருவான) எ - று (உச)

இருவினை பிருகு வெனபோ னெடுததியமபியது சொறறு
முருவவாா சடையீா மனன னுருககிளா குடட நோயை
யருளினன் முனிவன சீறி யகறறிய தறிக வெனனத
தெருளுறு ளூத மேமேலான சிநதையின மகிழ்நது கூறும.

(இ - ள்) அழகிய நீணட சடையையுடைய முனிவாகளே! பிருகுமுனிவர் அரசனுடைய இருவினைகளை யெடுததுக்கூறியதைச் சொனனேம். பிருகுமுனிவர்

அவனுடலிற் பொருந்திய குட்டவியாதியைக் கோபித்து விலக்கிய வகையை யறியக் கட்டீரகளென்று, ஞானம்பொருந்திய மேலோனாகிய சூதமுனிவா மனதிற் களிபபுற்றுச் சொலலுகினறா எ - று. (உ௫)

சோமகாநதன நலவிணையபடல முறறிறறு.

ஆகந் திருவிருந்தம் - ௭அ௮

சோமகாந்தனுய்நீர்ந்தபடலம்.

பிருகு மாதவன பேணுங கருணையா
லருளு முணமையை யமபுலித தேசினன
றெருளு ருதயிாத தானவன றேகங்ின
றுருவ வனபுளோ ராயிரந தோனறின

(இ - ள.) பெருநதவமுடைய பிருகுமுனிவனுடைய துதிககததகக கிருபையால் அருள்செய்த சததியசசைச சோமகாநதன தெளிவுறுமற சநதேகமுறறனன. (அப்பொழுது) அவனுடைய சரீரததிலிருநது (மாமிசததை) உருவும்படி வலிய பறவைகள ஆயிரககணககாகப பிறநதன எ - று. (க)

வசசி ரததின வடித்துவைத தனனதோா
நச்சு துணடததி னண்ணிய மனனவ
னசசை யீாநதெழுந தாாநது வருததலு
மசச முற்றவ லஙகொணடு கூறுவான.

(இ - ள்) வசசிரம்போலவும வடிததுவைத்தது போலவுமுள்ள வொப்பற்ற விஷததன்மையுடைய மூககினால, பொருந்திய அரசனுடைய சரீரததைக குததிக் கிளம்பி ஆரப்பரிதது வருததவும, மனனன பயமுறறுத துனபமடைநது சொலகின்றான. எ - று. (உ)

ஓல வோல வுயாதவ வேதியா
வோல வோல வுனைசசர ணெய்திேனே
னோல வோல வுறுதுணை வேறிலை
யோல வோல வொழிககினு நீஙகுறேன்

(இ - ள்) உயாநத தவததையுடைய வேதியரே! ஓலம் ஓலம். தேவரீரைச் சரணமடைநதேன ஓலம ஓலம. பொருநதிய துணைவேறில்லை. ஓலம் ஓலம். எனனை யொழிததாலும ஒழியமாட்டேன ஓலம் ஓலம எ - று

ஓலம் - அபயம். (௩)

மாத வபபெரு மாமலை யையவோ
சீத ளககரு ணைக்கடற் செமமலோ
காத ரக்கருங் கானங் கடததிமெய்ப்
போத முய்த்தருள் புண்ணிய மூர்த்தியோ.

(இ - ள்.) சிறந்த தவத்தையுடைய பெருமைபொருந்திய பெரிய மலைபோல் பவரே! ஐயரே! குளிர்ந்த கிருபைக்கடலாகிய தலைவரே! பயம்பொருந்திய கரிய வனத்தைக் கடக்கச்செய்து மெய்ஞ்ஞானத்தை யருளும் மாணிக்கஜோதியே! எ - று
காதரம் - அச்சம். ஓகாரங்கள் - புலம்பலின்கட் பட்டனவாகும். (௪)

நின்னை யுணர்வார் நீளிடை வைகினு
மன்னார் பாலணு கானடற் காலனு
மென்னை நின்னெதி ரேயிப் புட்குழாஞ்
சின்ன பின்னஞ்செய் கின்றன காணடியால்

(இ - ள்) தேவரீரை நினைத்தவர்கள் நெடுந்தூரத்தில் வசித்தாலும் அப்படிப் பட்டோர்களிடத்தில் வலிய இயமனும் அணுகமாட்டான் (அங்ஙனமிருக்க) என்னைத் தேவரீருக்கெதிரிலேயே பெரிய பறவைக் கூட்டங்கள் சின்னபின்னமாகச் செய்கின்றன காணப்பாயாக எ - று (௫)

நின்ன தாச்சிர மத்து நிரந்தரந்
துன்ன லின்றி யிருந்தசிறைப் புட்களு
மன்னு மாவும் வாழ்வுறு நின்னடி
துன்னி னேனிடர்த் துயருற லீதோ

(இ - ள்) தேவரீருடைய ஆச்சிரமத்திலே எக்காலத்திலுந் துன்பமில்லா மல், பெரிய சிறகையுடைய பறவைகளும் பொருந்திய மிருகங்களும் வாழுற்றிருக்க, தேவரீருடைய திருவடியை (சரணமாக) அடைந்த அடியேன் (இப்பறவைகளால்) துன்ப மடைதல் தகுமோ எ - று (௬)

மேரு நண்ணும் விழுப்பமில் காகமு
மாருமப் பொன்னிற மையநின் சேவடி
சாரு மென்னுய மாற்றனி யாமெனிற்
சேரு நின்னரு ளுந்தகல் போமென்றான்

(இ - ள்) (பொன்மலையாகிய) மேருமலையை யடைந்த சிறப்பில்லாத காகமும் (அதன் சார்பினாலே) பொன்னிறத்தைப் பொருந்தும் ஐயனே! தேவரீருடைய செவ் விய திருவடியை யடைந்த என் துன்பத்தை யொழியாயாயின், அந்நிறத்தைத்தக்க தேவரீருடைய திருவருள் தருகுதியோ? (தருகியன்று) என்றான் எ - று (௭)

நாவிப் பிசைந் தருமெனத் தானையைக்
கோவிப் பார்த்திபன் றேவியைக் கைப்பிடித்
தாவிப் புணரி மெய்யம றமைச்சரு
மேவிப் போதுமொ டாளிணை வீழ்ந்தனர்

(இ - ள்) (அப்பொழுது) மாங்கலயப்பிட்சை கொடுக்கவேண்டுமென்று முன் றானையைப் பற்றிக்கொண்டு அரசன் மனைவியாகிய சுதன்மை கைகூப்பினள். அதனால் இப்பறவைகள் கொல்லுமே யென்று அமைச்சர்களும் ஓலமிட்டு (அவருடன்) அம் முனிவருடைய ஒளிய பாதங்களிற் பணிந்தார்கள் எ - று. (௮)

ஆவ லென்னவெனு னோர்ப் பெட்பாது
பாவ மிப்பழி பார்ப்பரி தாமெனக்

தாவி லாத முனிகணத் தார்களு
மோவி லாவரு ளாற்றுய ருற்றனர்.

(இ - ள்) ஆ! ஆ! என்னே! என்னே! இப்பறவைகள் துன்புசெய்வது பாவம் இப்பழிசெய்யலைப் பார்ப்பதரிதென்று, கெடுதலில்லாத முனிவர் கூட்டங்களும் நீங்காத கருணையால் துன்பமடைந்தார்கள். எ - று. (கூ)

வேறு

இன்ன தன்மையா ரியாரு மேங்குறப்
பின்னல் வார்சடைப் பிருகு மாமுனி
மன்ன வென்மொழி வாய்மை யெண்ணிலை
யன்ன தீதினில் வல்ல லுற்றனை

(இ - ள்) (அங்குள்ளார்) யாவரும் இன்னதன்மையராக ஏக்கமடைய, பின்னலாகிய நீண்ட சடையையுடைய சிறந்த பிருகுமுனிவர் (சொல்கின்றார்) அரசனே! என் சொல்லைச் சத்தியமாக நீ யெண்ணினையல்லை அவ்வகைய தீமையால் இந்தத் துன்பத்தை யடைந்தாய். எ - று (கo)

இனியென் வாய்மொழி யாது மையுறேல்
புனித னாகுதி யென்று பொள்ளெனக்
கனிவி னோடுமுப காரஞ் செய்தனன்
பனிவி சும்பிடைப் பறவை மாய்ந்தவே.

(இ - ள்.) இனியென் சொல்லைச் சிறிதுஞ் சந்தேகியாதே. பரிசுத்தனுக்கு என்று விரைவாக ஆசையோடும் உபகாரஞ்செய்தனர். (அதனால்) குளிர்ந்த ஆகாயத்தில் (இருந்து துன்புசெய்த அந்தப்) பறவைகள் இறந்தன. எ - று (கக)

மிண்டு புள்ளற வேந்த னானவன்
பண்டை வல்வினைப் பலவு முள்ளவென்
றுண்ட வண்டென வோகை பொங்கினான்
கண்டு ளாரெலாங் கவலை நீங்கினார்.

(இ - ள்) நெருங்கிய பறவைகளிறப்ப, சோமகாந்தமன்னன், பழமையாகிய தீவினைகள் பலவுமிருக்கின்றனவென்று, தேன்பெருகிய வண்டைப்போலச் சந்தோஷமிகுந்தனன் (அதனைப்) பார்த்திருந்தவர்கள் யாவருந் துன்பமகன்றார்கள் எ - று

புவனம் பொற்கரக் கத்துப் பூரியாக்
கவலை நோயெலாங் காற்று மைங்கர
னிவரு நூற்றினெட்டு மந்திரந்
தவறு தீர்ந்தமா தவனி யம்பியே

(இ - ள்.) சலத்தைப் பொற்பாத்திரத்தில் நிரப்பி, துன்பநோய்களையெல்லாம் விலக்கும் விநாயக மந்திரங்கள் நூற்றெட்டினை, குற்றமொழிந்த பெருந்தவமுடைய பிருகுமுனிவர் சபித்து எ - று (கங)

செறிந்த வப்புனல் செங்கை கொண்டுமெய்
யெறிந்து ரப்பினா னிறைவ னாசியான்

முறிந்து பாதக முற்று ருக்கொடு
பறிந்து முன்னுறப் படியி னின்றதே.

(இ - ள்.) பொருந்திய அந்த நீரைத் தமது செவந்த கையிற்கொண்டு (அர சன்) தேகத்தின்மேற் பெய்து அதட்டினூர். தலைவராகிய பிருகுமுனிவர் ஆசீர்வசனத் தால், (அவனுடைய) பாவமெல்லாம் முறிந்து உருவமெடுத்து (அவனை) விலகி முற்பட் டு பூமியில் நின்றது. எ - று (கச)

வேறு

சிவந்து திரிந்து சரணீண்டு செறிந்து பரந்த மயிர்ச்சடையு
நிவந்து வளைந்த வெள்ளெயிறு நெடிய வடியு மாழ்குழிவிழியு
மலந்த திங்கா ரிருணிறமு மாழ்ந்த வயிறும் பனையேழி
னுவந்த வுயர்வு மதற்கேற்ற வுருவும் பலவுந் தோற்றியதே.

(இ - ள்) சிவந்து திரிந்து காலகள் நெடுகி, நெருங்கிப்பரந்த மயிரையுடைய சடையும், உயர்ந்து வளைவுற்ற வெள்ளிய பற்களும், நீண்ட அடியும், ஆழமாகிய கண் களும், தீமையைக்கொடுக்கும் கரிய இருளின் மேனியும், ஆழமாகிய வயிறும், ஏழு பனைமரங்களின் விருமபத்தக்க உயர்ச்சியும், அவ்வுயர்வுக்கேற்ற (காத்திரமான) தேக மும், (வேறு) பலவிதமுமாகத் தோற்றமுற்றது (அப்பிரமகத்தி) எ - று. (கரு)

வேறு

கறிக்கும் பற்களைக் கட்புரு வங்கண்மே
னெறிக்குங் கணலி னெருப்புக் நோக்குறு
மெறிக்குந் தீப்படை யேந்தலைத் தின்னிய
குறிக்கு நக்குக் குனிக்குஞ் சுலாவுமே.

(இ - ள்) பற்களைக்கறிக்கும் கணணையும் புருவங்களையும் மேலேநெரிக்கும். கண்களில் நெருப்புப்பொறிசிந்த (உற்று) பபார்க்கும் அக்கினியாகிய ஆயுதங்களை யெறிக்கும் அரசனைத் தின்னயோசிக்கும் சிரித்துக்குனிக்கும். சூழும் எ - று

தின்னிய - செய்யியவென்னும் வாயபாட்டு வினையெச்சம். (கசு)

தோளபு டைக்கு மிடிக்குரற் றேற்றமுன
னாளப டைத்திறங் காட்டியிந் நாளுநின
வாளப டைத்தகை வன்மைமுன் காட்டெனத்
தாளபெ யர்த்துத் தருக்கிய டுத்ததே.

(இ - ள்) தோள்களைக்கொட்டும். இடிபோன்ற குரலைக்காட்டும் முன்னாளைய படைத்திறத்தைக் காட்டி இக்காலத்திலும் வாட்படையேந்திய உன் வல்லமையை யென்முன்னே (இப்பொழுது) காட்டுகவென்று காலகளைப் பெயர்த்து இறுமாந்து நெருங்கியது. எ - று. (கஎ)

பூத மின்னண்ம் பூபதி யைத்தொடாந்
தேத மெண்ணவுங் காரமெ ழுப்பிமெய்ய
மாத வன்கை மறித்துநீ யாரகொலா
மோது நன்றெனப் பூதமு னாக்குமால்.

(இ - ள்) பூதமானது இவ்வகையாகச் சோமகாந்தனைத் தொடர்ந்து தீமை (செய்ய) நினைக்க, உண்மைத்தவமுடைய பிருகுமுனிவர் உபகாரஞ்செய்து கையால் தடுத்து, நீயாரோ? நன்றாகக் கூறுகவென்ப பூதஞ் சொல்லுகின்றது. எ - று. (க௮)

வெந்தன மெய்யில் விரவிய சாயையா
னேந்த னின்கை யெறிந்த தணீரி றைவ
போந்து ளேனவெளி புலவிய வெம்பசி
காந்து கின்றது கண்ணரு ளுண்டெனில்

(இ - ள்) யான் இவ்வரசனுடலிற் கலந்த பிரமசாயை தலைவனே! உன்னுடைய கையாலெறிந்த தண்ணீரிலே (இவ்வடிவாக) வெளியில் வந்தேன் என்னைத் தொடர்ந்த கொடிய பசியானது கொளுத்துகின்றது உம்மிடத்திற் கருணையிருக்குமாயின. எ - று (க௯)

கோனை மாதினைக் கூறு மமைச்சரைப்
பூனை யுண்டொழி வென்னப் பிரத்துமம்
யானை மாமுகத் தேவுதல் செந்தாமலர்த்
தேனை யுண்டுசெம் மாந்தவன் கூறுவான்.

(இ - ள்) இவ்வரசனையும் இவன்மனைவியையும், சொல்லுகின்ற மந்திரிகளையும் மாமிசம் புசித்து நீங்குவேனென்று யாசிக்கவும், சிறந்த யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளுடைய செவ்வந்த பாததாமரைகளிலுண்டான தேனைப்பருகி யிறுமாந்திருக்கும் பிருகுமுனிவர் கூறுகின்றார் எ - று. (உ௦)

மைந்து மிக்கவண் பூதமஞ் சற்கினைச்
சிந்தை யினையுறுஞ் செய்தியே செய்துமாற்
பொந்தி னுட்புகு வென்றெதிர் நின்றமாப்
பொந்து காட்டினன் புக்கது பூதமே

(இ - ள்) வலிமிக்க வண்மைவாய்ந்த பூதமே! பயப்படவேண்டாம். உன் மனங்களிக்கத்தக்க தொழிலே செய்வோம் இப்பொந்தினுட் புகுகவென்று கூறி, எதிரிலிருந்த மாமரப்பொந்தைக் காட்ட, அப்பூதமானது (அதிற்) புகுந்தது எ - று.

புக்க பூதமும் பொந்துறு மாதரு
மொக்க வெந்தன பூதத்தி னுள்ளுயிர்
மிக்க பேரெழில் விண்ணவ னாகியே
தக்க மாதவன் றாள்பணிந் தோதுமால்

(இ - ள்.) (அவ்வாறு) சென்ற பூதமும், அப்பொந்தையுடைய மாமரமும் ஒன்றாக வெந்தன, பூதத்தினுள்ளே பொருந்திய உயிரானது மிக்க பெருமைவாய்ந்த அழகையுடைய தேவவுருவாகி, தகுதியாகிய சிறந்த தவத்தைச்செய்த பிருகுமுனிவர் பாதத்தை வணங்கிக் கூறுகின்றது எ - று (உஉ)

வேறு

பாவி யென்னவெண் பழுவத் தென்னைமுன்
றேவி மாய்த்தன னைய நினையையா

லோவில் வெந்துய ருற்று ளேற்குநின்
சேவை யானலஞ் சேர்ந்த தென்றனன்

(இ - ள்.) பாவியாகிய இவ்வரசன் என்னை முன்னாளில் காட்டிலே உயிரொழித்தனன் ஐயனே! தீமையால் ஒழிதலில்லாத கொடிய துன்பத்தை யடைந்துள்ளேனுக்குத் தேவரீருடைய தரிசனத்தால் நன்மையுண்டாயதென்று கூறினன் எ - று.

வேறு

ஆய காலையி லைங்கர னேவலாற்
றூய மானந் துனைந்துமுன் போந்தது
மேயி னன்றில் விமான மேறுத் தேகினான்
சாய னீர்மை தணந்துயர் தேவனே.

(இ - ள்) அந்தச்சமயத்தில், விநாயகக்கடவுளுடைய கட்டளையினால்; புனிதமாகிய விமானமொன்று விரைந்து முன்னேவந்தது பிரமசாரியின் தன்மையை விலகி, உயர்ந்த தேவனானவன் அவ்விமானத்திலேறி ஆகாயத்தைக் கிழித்துக்கொண்டு சென்றனன் எ - று. (உச)

கண்ட யாவருங் கண்களி கூர்ந்துளங்
கொண்ட வோகையர் கூத்து நவிற்றினார்
மண்டு தீவினை மாற்றிய மாதவன்
புண்ட ரீகப்பொற் றாண்மலர் போற்றினார்

(இ - ள்) (அதனைப்) பார்த்த எல்லோரும் கண்கள் களிப்புமிகுந்து மனதிற் கொண்ட ஆச்சரியமுடையவர்களாகி (ஆனந்தக்) கூத்தாடினார்கள் நெருங்கிய பிரமகத்தியை யொழித்த பிருகுமுனிவருடைய தாமரைமலர்போன்ற பாதங்களை (அரசன் முதலிய நாலவரும்) துதித்தார்கள் எ - று (உரு)

வானி லாவிய மாதவ னோதுவா
னரச னேயுனை யண்மிய டுத்திடும்
பிரம சாயை பெயர்ந்தது கண்டனை
யுரவு நோயு மொழிதிறங் கேண்மதி

(இ - ள்) சிரேஷ்டம்பொருந்திய பிருகுமுனிவர் கூறுவார் மன்னா! உன்னை நெருங்கிப்பொருந்திய பிரமஹத்தி யொழிந்தது பார்த்தனையா? வலிய தொழுநோயும் (இனி) ஒழியும் வகையை (என் சொல்லை இனியேனும்) மதித்துக் கேட்பாயாக எ-று.

வேறு

முக்கண் வேழமு கப்பிரா னென்னை முற்று மாளுமடிப் பிரான்
பொக்க முற்றும கற்ற வல்லபு ராண மன்னவ கேட்டுளே
னக்க ணேசபு ராண மேன்மையி னுற்ற தன்றது வல்வினைத்
தொக்க நோய்க்கும ருந்து நீயது சூழ்ந்து கேட்பின லாதிலே.

(இ - ள்) திரிநேத்திரங்களையும் யானைமுகத்தையுமுடைய பெருமானும், என்னைமுழுதுங் காக்கின்ற திருவடியையுடையவனுமாகிய விநாயகக்கடவுளுடைய, தீமைமுழுவதையுமொழிக்கவல்லதாகிய புராணத்தை யான் கேட்டிருக்கின்றேன். அரசனே! அந்தக்கணேசப்பெருமானுடைய புராணமேப்பாட்டினால் உன்னுடைய

கொடியவினையும் ஒழிந்தது நெருங்கிய நோய்களும் நீ அதனைச் சிந்தித்துக்கேட்டாலல்லாமல் வேறேமருந்து இல்லை எ - று. (உஎ)

கோத னுங்கிய வேத னங்கியு டங்கை யேந்திய தம்பிரான்
பாத கஞ்சம்வ ணங்கி யன்றுப ரித்த மேன்மைய தாமது
மாத வங்கள்பு ரிந்து வேதம்வ ரம்பு கண்டவி யாதனும்
போத மாந்தவ னுந்தெ ரிந்துப கன்ற தாகுமெ னக்குமுன்.

(இ - ள்.) திருமால் பிரமன் அக்கினியை யங்கையிலேந்திய சிவபெருமான் (ஆகியஇவர்கள்) திருவடித்தாமரையைப் பணிந்து முற்காலத்திற்பெற்ற மேன்மையுடையதாகும் அப்புராணமானது பெருந்தவங்களைச்செய்து வேதத்தின் கரையைக் கண்ட வியாதமுனிவரும், தாமரைமலரிலுள்ள பிரமதேவன் (தனக்குச்) சொல்லத் தெரிந்து முன் எனக்குச்சொன்னதாகும் எ - று (உஅ)

முந்து செய்திடு வேள்வி வீரனமு டிப்ப மாழ்கிய தக்கனுஞ்
சிந்தை யைந்தும டக்கி நின்றதி ருந்தி ருந்தவ முக்கல
வந்த னன்புக லப்ப ணிந்தளி யார்ந்து கேட்டதி தீதுதீர்ந்
திந்து சேகர னின்ன ருட்கும லக்க மாய்மகிழ் கூர்ந்தனன்.

(இ - ள்) முதலிற்செய்த யாகத்தை வீரபத்திரர்அழிக்க மனஞ்சோம்பிய தக்கனும், மனத்தையும் ஐம்பொறிகளையும் அடக்கி, விளங்கியதிருத்தமாகிய பெரியதவத்தை முக்கலமுனிவர்கூற, வணங்கி, அன்புபொருந்திக்கேட்டுத் தன்னை நெருங்கிய துன்பமொழிந்து, சந்திரனையணிந்த சிவபெருமானுடைய திருவருளுக்கிலக்காகிக் களிகூர்ந்தனன். எ - று. (உ௯)

பவங்க ளேழினு மீட்டு பாவம றிப்ப தும்பயில் யாக்கையி
னவங்க ளேமுத லான தீமைய றுத்து வேட்டத ளிப்பது
நவங்க ளாகவி ருங்க திச்சுக நாளு நாளுமு றுப்பதுந்
தவங்க ளாதிவ ளர்த்து முத்தித ரிப்ப தும்மதன் கேள்வியே.

(இ - ள்) எழுபிறவிகளிலுந் தேடிய பாவத்தையொழிப்பதும், எடுத்ததேகத்தின் கெடுதிகள் நோய்கள் முதலிய தீமைகளையொழித்து விரும்பியதைக் கொடுப்பதும், நூதனநூதனமாக மிக்கபெருகிய சுகங்களைத் தினந்தோறும் பொருந்தச்செய்வதும், தவங்கள் முதலியவற்றைப் பெருகச்செய்து முத்தியளிப்பதும் அப்புராணகேள்வியேயாம் எ - று

தவங்களாதியென்றதில் ஆதியென்பதால் தானமுதலியனவுங்கொள்க. (௩0)

வருண மாச்சிர மதொ ழுக்கினவ் ழாத மாண்புடை யார்களே
யருள்வி நாயகர் பத்தி யோடவர் காதை கேள்வியி லாவரு
மருவு வார்களொ ழுக்கி லாமரு வார்கள் சாதிபி றப்பினு
மொருவு சாங்கரர் நன்மை செய்யினு முற்ற தீமைய ரென்பவே.

(இ - ள்) வருணாச்சிரம தர்மங்களிற் றவறாத மாட்சிமையுடையவர்களே கிருபைவாய்ந்த விநாயகரிடத்திற் பக்தியுடன் அவர்சரித்திரத்தைக்கேட்பதில் ஆசையும் பொருந்துவார்கள் நல்லொழுக்கமில்லாதவர்கள் அதனையடையார்கள். சாதிபிறப்புகளாலும் நீங்கிய சாங்கரர் நன்மையைச் செய்தாலும் பொருந்திய தீமைசெய்தவர்களேயெனப்படுவார்கள். எ - று. (௩க)

ஆத லாலுயர் மாத வம்பல வாற்றி யாச்சிர மத்தொடு
கோதி லாவரு ணத்தி னின்றுகு ழைந்த வன்பின் விநாயகர்
பாத தாமரை போற்று பண்பினர் பாங்கி னல்லது மாண்மிய
மோது நீர்மைய தன்று பண்புளா யாத லானுனக் கோதுதும்.

(இ-ள்.) ஆனபடியால் உயர்ந்த பலபெருந்தவங்களைச்செய்து குற்றமில்லாதவருணாச்சிரம தருமங்களினின்றுகுழைவாகிய அன்புடன், விநாயகக்கடவுளுடைய பாததாமரைகளைத்துதிக்குந்தன்மையுடையவர்கள் சமீபத்திலல்லது, அவ்விநாயகபுராணம் சொல்லுந்தன்மையதன்று நற்குணமுடையையாதால் உனக்குச் சொல்லுவோம்.

அருளெ னக்குளிர் தூங்கு நீர்த்தட மாடி வம்மென மன்னவன்
பிருகு தீர்த்தம ணைந்து தாழ்ந்துபி றங்கி ரும்புன றோய்ந்தெழுந்
துருவின் மல்கிய வீர மொற்றியு டுத்து லாந்தது பூசிமெய்
மருவு கின்றசங் கற்ப மோதிவ குத்த னன்பிணி மாய்ந்ததே.

(இ-ள்) கிருபைபோலக் குளிர்ச்சிவாய்ந்த நீரையுடைய தடாகத்திலமுழ்கி வருகவென்று பிருகுமுனிவர்கூற, சோமகாந்தராசன் பிருகுதீர்த்தத்தை யடைந்து (அதில்) இறங்கி, விளங்குகின்ற மிக்கநீரில் ஸ்நானஞ்செய்து எழுந்து, உடலின்மிக்க ஈரத்தைத் துடைத்து உலர்ந்த (வேறு) வஸ்திரமுடுத்து, திருநீறணிந்து உண்மை பொருந்திய சங்கற்பஞ்செய்துகொண்டு புராணசிரவணஞ்செய்ய ஆரம்பித்தனன். அவனுடையநோய் (அப்பொழுதே) ஒழிந்தது எ-று. (௩௩)

நோயி னீங்கிய யாக்கை பன்முறை நோக்கி நோக்கியி ராவெலாந்
தீய சொற்பன மார்ந்து கண்கடி றந்து ளானென வுண்மகிழ்ந்
தாயு நூலரு மாத வன்புடை யண்மி யன்பொடு தாழ்ந்தெழுந்
தேயு நின்னரு ளெய்தி னேன்மிக வெய்த ருமப்ப யனெய்தினேன்.

(இ-ள்.) நோயினின்றொழிந்த தேகத்தைப் பலமுறை பார்த்துப் பார்த்து, இராமுழுதுந் தீயசொப்பனங்கண்டு கண்களை விழித்துள்ளவனைப்போல மனங்களித்து, நூல்களை யாராய்ந்த அருந்தவமுடைய பிருகுமுனிவர் அருகிற்சென்று, அன்புடன் பணிந்து எழுந்து (கூறுவான்) பொருந்திய தேவரீருடைய திருவருளை யடைந்தேன். அடைதற்கரிய பெரும்பலனைப் பெற்றேன் எ-று. (௩௪)

காத லாரும் புராண கேள்வியிற் கற்ப மாத்திர மேசெய
வேத மானபெ ரும்பி ணித்தொடர் யாவு நீங்கின வென்சொல்கே
னாத னேயுனை நண்ணி னார்க்குநன் னாத மேக்கு நன்பொருண்
மாத ராதல நாகர் பாதல மாக வைப்பினு மில்லையே.

(இ-ள்) ஆசைபொருந்திய புராண கேள்வியிற் சிறிதே செய்ய, குற்றமாகிய பெரிய பிணிச்சம்பந்தமுழுவது மொழிந்தன (இவ்வற்புதத்தை) என்னவென்று சொல்லுவேன். தலைவரோ! தேவரீரை யடுத்தவர்களுக்குக் கிடைக்கரிய நல்லபொருள் சிறந்த தராதலத்திலும் நாகலோகத்திலும் பாதலலோகத்திலும், தேவருலகத்திலும் (ஒன்றும்) இல்லை. எ-று. (௩௫)

ஆரு மற்றுறை யூரு மற்றெழி லாக்க மற்றரும் போகமற்
றேரு மற்றியல் பாக வுங்கிருந் தேனை வம்மென் வேயழைத்

ஒரு மாநில முய்ந்து ளாய்க்கருத் துப்படும் பொருளாயினன்
சாரு மாவிய லாதி லையினிச் சாற்றல் வேண்டும் புராணமே.

(இ - ள்) யாவரும், வாசஞ்செய்யும் ஊரும், அழகும், செல்வமும், அரிய போகங்களுமின்றித் தனியாக அங்கிருந்தவனை ஒருக்கணை விளித்துப் பொருந்திய சிறந்த நன்மைசெய்த தேவரீருக்குக் கொடுக்கப்படும் (காணிக்கைப்) பொருளொன்றாயினேனுடைய பொருந்திய உயிரல்லாமற் பிறிதில்லை இனி (விநாயக) புராணத்தைக் கூறவேண்டும் எ - று (௬௬)

என்ன மன்னனி யப்பிறப்பி னீங்கி யோகைமொ டொருங்கழைத்
தன்னை யன்னை யென்ன மன்னனை யங்கை யங்கையிற் றைவராத்
துன்ன தாதன பொன்று நல்கினன் சார்ந்து கைந்து முனிவனொளி
தன்ன முமபுனை யாத பேரொளி தாங்கி னன்மற்றை யாவுடன்

(இ - ள்) என்று கூறிச் சோமகாந்தன் (எதிரில்) நிற்க, தாய்போன்ற (கருணைவாய்ந்த) பிருகுமுனிவர் சந்தோஷமிகுந்து (அருகில்) அழைத்து, அவனுடலை அழகிய கையினாற்றடவி, தன்னுடைய ஆதனமொன்று கொடுத்து, அங்கே பொருந்தவும், முன் பிரகாசித்த பூமியையாண்ட மன்னனாகிய சோமகாந்தன் தன் தேகத்தையுமொவ்வாத பேரொளியைப் பெற்றனன் எ - று (௬௭)

கண்ட யாருமவி யந்து ளாகவ லைப்பெருங்கடன் மூழ்கிய
தொண்டை வாயவள் தன்மை யும்பொருள் சூழு மைச்சரும் வானமிழ்
துண்டு ளாரினு மெந்து காதையொ ருங்கு கேட்பவி ருமபினா
மிண்டு நோயமுனி வேந்த னிறப்பிறி வித்த வண்ணமி தாகுமே

(இ - ள்) (அதனைப்) பார்த்த எல்லோருஞ் சந்தோஷித்தார்கள். பெரிய துன்பசாகரத்தில் மூழ்கிய கோவைக்கனிபோன்ற வாயையுடைய சுதன்மை (யென்னும் அவன் மனைவி)யும், உண்மைப்பொருளை யாலோசிக்கும் மந்திரிகளும், தேவாமிர்தத்தைப் புசித்தவர்களைப்போல ஒன்றாகக் களித்து விநாயகக்கடவுள் சரிதையைக் கேட்க அவாவினார்கள் (சோமகாந்தனை) நெருங்கிய நோயினை முனிசிரேஷ்டரான பிருகுமுனிவர் பிரியச்செய்தவகை இதுவேயாகும் எ - று. (௬௮)

என்று சாலமொ டுந்த சூதனவி யாத னென்னுயி ருந்தவற்
கன்று வேதனு ரைத்த வாற்றின் வாமெ னப்பிருகுப்பெய
ரொன்று மாமுனி சோம காந்தனுக் கப்ப வோதிய வண்ணமே
நன்று நாமவ ராற்றி னேதுத லுடி னன்று நீடினை

(இ - ள்.) என்று மிகுதியாகக்கூறிய சூதமுனிவர், பெருந்தவமுடைய வியாத முனிவருக்குப் பூர்வம் பிரமதேவர் கூறியவகையே அறியக்கடவாயென்று, பிருகு முனிவர் சோமகாந்தராசன் சந்தோஷிக்கக்கூறியவிதமாக நன்மைபொருந்திய ஒரு முறையாக விநாயக மான்மியத்தைச் சொல்லுவேனென்று திருவருள்மிக்கவராய் ஆரம்பித்தனர். எ - று (௬௯)

சோமகாந்தனுய்ந்தபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௮௨௯

வியாசர்பிரமதேவனையடுத்தபடலம்.

பண்ணிய பெருந்தவன் பராசரப்பெயர்
நண்ணிய முனிவர னயற்கு மைந்தனாய்த்
திண்ணிய விண்டுவே சிறப்பத் தோன்றினான்
விண்ணவர் வியத்தகு வியாத னென்னவே

(இ - ள்) பெருந்தவஞ்செய்தவனும் பராசரனென்னும் பெயர்பெற்றவனுமாகிய முனிவரனுக்குப் புதல்வனாக, வலிமைவாய்ந்த திருமாலே தேவர்கள் விரும்பத்தக்க வியாதமுனிவனென்னும் பெயருடன் சிறப்புறப் பிறந்தனன். எ - று.

பூர்வம் மச்சகெந்தியென்பவள் கங்கையில் ஓடஞ்செலுத்திக்கொண்டிருக்கையில் அவ்வோடத்திலேறிச்சென்ற பராசரமுனிவர் அவளைக்காமுற்று அவளுக்குக் காப்பவாசத்தாலுண்டாயிருந்த துன்மணத்தைவிலக்கி பரிமளகெந்தியென்ப பெயர் வழங்கும்படி நறுமணமருளி அவ்வோடத்திற் புணர்ந்தனர் அதனால் வியாதமுனிவர் தோன்றினரென்பது சரிதமாதலாலும், துவாபரயுகங்கடோறுந் திருமாலே வியாதனாகத்தோன்றி வேதங்களைப்பாகுபடுத்துவனென்பது நூலொழுக்காதலாலும் "பராசரப் பெயர் முனிவன் மைந்தனாய் விண்டுவே வியாதனெனத் தோன்றினன்" —என்றார்.

சுருதியை வரம்புறத் தொகுத்துச் செய்தபின்
சுருதியின் பொருள்களை மிருதி போலவே
பொருள்பட விளக்கிய புராண முந்தொகுத்
தருளொடு மொழிவதற் காரம் பித்தனன்

(இ - ள்) வேதத்தை யளவுபடச் சுருக்கிச்செய்தபிறகு, வேதத்தின் பொருள்களை மிருதிபோலவே பொருள்படும்படி விளங்கச்செய்த புராணங்களையுந் தொகைப்படுத்திக் கிருபையுடனே சொல்லுவதற்கு ஆரம்பஞ்செய்தனன் எ - று. (௨)

மருங்கமழ் கொன்றையார் மணிப்பொற் றேர்முரிந்
திருக்கவும் யாருமுன் னிறைஞ்சி யேத்தவும்
முருகவிள ரைங்கரத் தொருவன் சேவடி
தருக்கிய சிந்தையாற் றொழுந்து போற்றிலன்

(இ - ள்) மணம்வீசுங் கொன்றைமலர் மாலைபணிந்த சிவபெருமானுடைய நவமணிமயமான அழகியதேரை (தன்னைப் பணியாமையால்) முரியச்செய்திருந்தும், எல்லோரும் முற்பட வணங்கித் துதிசெய்துவந்தும், அழகுவிளங்கும் ஐந்துதிருக்கரங்களையுடைய விநாயகப்பெருமானது செவ்விய திருவடிகளை, இறுமாந்த மனத்தாற் பணிந்து போற்றினானல்லன் எ - று. (௩)

வழிபடு கடவுளு மதித்தெ டுத்திடுஞ்
செழிப்பொருட் கேற்புடைத் தாய தெய்வமு
மழிவினுக் கழிவுசெய் தருளு மாமதம்
பொழிமுகத் தவனென்ப புந்தி தோற்றிலன்.

(இ - ள்.) வழிபடத்தக்கதேவனும், மதித்தெடுத்துக்கொண்ட சிறந்த பொருளுக்கு ஏற்புடைக்கடவுளும், தன்னைப்பணியாமைக்குத் தீமைசெய்தருளும் மும்மதஞ்

களைச் சொரியும் யானைமுகத்தையுடைய விநாயகக் கடவுளென்று (அவ்வியாதமுனிவன் தன்) மனத்திற் றெளிந்தானில்லன். எ - று (௪)

ஆகையா னொருமருப் பைங்கை வாரசெவி
யேகநா யகனரு ளெய்து மாறிலன்
னோகையா லெடுத்தவொண் பொருளிற் சிந்தனை
மூகையாய்த் தளர்ந்தனன் முடிவு தேர்ந்திலன்.

(இ - ள்) ஆனபடியால், ஒற்றைக்கொம்பையும் ஐந்து திருக்கரங்களையும் நெடியதிருச்செவியையுமுடைய ஏகநாயகனாகிய விநாயகப்பெருமானது திருவருளையடையும்வகை பெறாதவனாய, (தான்) ஆசையோடெடுத்த சிறந்த பொருளிலே, ஊமைபோல முடிவையறியாது மனத்தளர்ச்சியுற்றனன். எ - று (௫)

வேறு

சேர்ந்தார் நின்ற செம்மணி நாகரு ரென்றேற
நீந்தா நின்று மந்திரம் வல்லோ னிலைசெய்தாங்
கேந்தா நின்ற வோருல வைகக் கோணினியாமே
காந்தா நின்ற காரண முள்ளங் கடிசெய்ய

(இ - ள்) (யாவரும்) விரும்புகின்ற மாணிக்கத்தை (உச்சியில்) உடைய சர்ப்பவேகமானது நீந்திக்கொண்டு எழும்படி (மந்திரம் வல்லானொருவன்) மந்திரத்தை வினைவாக நிலைநிறுத்தியதுபோல, ஏந்துகின்ற ஒற்றைக்கொம்பினையுடைய விநாயகக்கடவுள் கோபிக்கின்ற காரணமானது வியாதமுனிவருடைய மனத்திற்குத் துன்பு செய்ய. எ - று (௬)

மடியோ பித்தோ தா வனென்னா துள்ள மயல்செய்ந்
படியா தென்றே றையமுழுந்தான் பருவந்தான்
பிடியா தொன்றுங் கண்புலன் வல்லே பெயர்வுற்றுக்
கடியார் கஞ்சப் பூவணை யான்பொற் கழல்சார்ந்தான்

(இ - ள்) மடியோ பித்தமோ அப்பொழுது என்மனத்தை மயக்கியவகை ஏதுவென்று சந்தேகித்தான், துன்பமடைந்தான், (எதனிடத்திலும்) சிறிது நம்பிக்கையுங்காணாகி விரைந்து அவ்விடம் விட்டு நீங்கி வாசனைபொருந்திய தாமரைமலர்ப்பீடத்தையுடைய பிரமதேவனது அழகிய பாதங்களையடைந்தனன். எ - று

அன்பு துளும்பத் தண்டென வீழ்ந்தா ரணமோதித்
துன்ப நிறைந்த வுள்ளமு கத்திற் சுடர்கிற்ப
முன்புற விட்ட வாதன மைகி முனிவேந்த
னென்பெற வந்தாய் சொல்லென வேதற் கிதுசொன்னான்.

(இ - ள்) அன்பானது துளும்பும்படி தண்டாகாரமாக வீழ்ந்து வேதமொழிகளாற் றுதித்து வருத்தமிகுந்துடைய மனமானது முகத்திலே நன்குவிளங்க, தனக்கு முன்னர் இடப்பட்ட பீடத்திலிருந்து, யாதுபெறக்கருதிவந்தனை? அதனைச் சொல்கவென (ப்பிரமன்கேட்க) முனிவர் தலைவனான வியாதமுனிவன் பிரமதேவனுக்கு இதனைக் கூறினன். எ - று (௮)

நாத்திக ரேயாய் நான்மறை நிந்தை நவில்வாரா
யாத்தனு ரைத்த தத்தமொ ழுக்கா சாரங்க
ணீத்தவ ரேயாய் நீடுல கத்தோர் நிறையின்றிப்
போத்துநி றைந்தா ரன்னது தீர்க்கும் பொருணாடி

(இ-ள்) பெரிய நிலவுலகத்திலுள்ளவர்கள் நாத்திகர்களாய், நான்குவேதங்களையும் நிந்திப்பவர்களாய், கடவுளருளிய தங்கடங்களுக்குரிய ஒழுக்காசாரங்களை யொழித்தவர்களாய்க் குற்றமிகுந்தார்கள். அதனைத் தீர்க்கும் பொருளைத்தேடி எ-று.

இது முதலிரண்டு பாடல்கள் குளகம்

நிறை - ஆண்மைக்குணம் நான்கனுளொன்று அவை அறிவு நிறை ஓர்ப்பு கடைப்பிடி யெனப்படும் (௯)

செய்வன செய்யா தொழிவன வென்றோ தெரிவெய்தி
யுய்வன நாடி யோங்கு கதிக்க ணுறுமாறே
பொய்வகை தீர்ந்த புராண மனைத்து நம் புரையில்லோய்
கைவளர் நெல்லி போலெளி தாக்குங் கடன்பூண்டேன்.

(இ-ள்) குற்றமில்லாத பிரமதேவரே! செய்யத்தகுவனவும் செய்யத்தகாது விலக்குவனவும் (இவையென) அவர்கள் தெரிந்துகொண்டு உச்சீவிக்கும் வழிகளைத் தேடி உயர்பதவியை யடையும்வகையே, பொய்யமாக்கமொழிந்த புராணங்களையெல்லாம், கையில் உயர்ந்த நெல்லிக்கனிபோல எளிதாக (விளங்கச்) செய்யுங் கடமையை மேற்கொண்டேன் எ-று.

செய்வனவென்றது விதித்தனவெனவும், செய்யாதொழிவனவென்றது விலக்கியனவெனவுங்கொள்க (௧0)

நித்திய மேனை மித்திய மாக நிகழ்மன்ற
வித்தக கன்மம் யாவுநி றைந்த வெழில்வேதக்
கொத்தினு ணேமன்மேற் கைவளர் புந்தி குழைவுற்றுப்
பித்தின னேனெ னினிசெய் கேனெ பிழைகாணேன்

(இ-ள்) நித்தியம் - நைமித்திகம் - யாகம் - செய்யத்தக்க திருமணம் இந்தத் தகுதியாகிய கருமவிதிகளெல்லாம் நிறைந்துள்ள அழகிய வேதத்தின் கூட்டத்தில் மேன்மேலும் மனங்குழைந்து வெறிபிடித்தவனானேன் இனி யாது செய்குவேன்? தவறினைக் காணகிலேன். எ-று

நித்தியம் - தினமுஞ் செய்யக் கடமைப்பட்டுள்ள கருமங்கள். நைமித்தியம்- ஒவ்வொரு நிமித்தம் பற்றிச் செய்யுங் கருமங்கள் (௧௧)

பூரண மான வென்னறி யாமை பொடிசெய்யுங்
காரண மோது வேறெவர் வல்லார் கருதென்று
நாரண னான வியாத னுரைப்ப நனியுள்ளி
யாரண னானோன் புன்னகை கொண்டுற் றறைகின்றான்

(இ-ள்) நிறைவாகிய என்னுடைய அறியாமையை நீறுசெய்யும் வகையைப் போதுக. வேறே (அவ்வாறோத) வல்லவர் யாவர்? (உள்ளத்திற்) கருதுகவென்று, விஷ்ணுவின் அபராவதாரமாகிய வியாதமுனிவன் கூற, பிரமதேவனானவன் நன்றாக யோசித்துப் புன்சிரிப்புடன் பகர்கின்றனன். எ-று (௧௨)

வேறு

அநாதியே யாபால பாகி யழிவிலாக் கழிவு செய்யும்
விநாயக னருளி னல்லால் மெல்லிய கரும மேனுந்
தனாது கைக் கூட லின்றிக் கராக்குவன் புகுந்தி கூர்மை
மனாதியின் வலிமிக் குள்ள வரம்பெறு தலைவ னேனும்

(இ-ள்) அநாதியாகவே நின்மலராகி, தம்மைப் பூசியாதவர்கட்கு இடுக்கண் விளைக்கும் விநாயகக்கடவுளுடைய திருவருளில்லையாயின், புத்தி நுட்பமும் மனவாக்குக்காயங்களின் வலிமையும் மிக்குள்ள மேன்மைபெற்ற ஒருவனாயினும் சாமானிய காரியமாயினுந் தனக்குக் கைகூடுதலில்லாது மனஞ்சாம்புவான் எ-று.

மனாதியென்றது வாக்கையுங் காயத்தையும் உடனெண்ணப்பட்டன (கங)

பறவைசட் கரசன் மேன்னாட் பணிவிசும் பழுந்தக் கொண்மார்
செறுநமிரு வலியா லைங்கைச் செம்மலை வணங்கா தேகி
நறவுமிழ் துளபத் தண்டார் நாயகன் மொழியால் வெல்ல
வறவினை நூர்தி யாகு மரிநிறை தருக்குக் கொண்டு

(இ-ள்) பறவைகளுக்கெல்லாம் அரசனாகிய கருடன் முற்காலத்தில் குளிர்ச்சி பொருந்திய ஆகாயத்தினின்று தேவாமிர்தத்தைக் கொண்டுவரும்படி, பகைஞரை வெல்லும் பேராற்றலால், ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகக்கடவுளைப் பணியாது சென்று, தேன்சொரியுந் தண்ணிய துளவமாலையையணிந்த விஷ்ணுமூர்த்தி தன் மொழியால் வெல்ல, கருமத்தைக்கருதி (அவருக்கு) வாகனமாயினன் எ-று

பறவைகட்கரசன் துளபத்தண்டார் நாயகன்வாகனமானானென்றது—பூர்வம் காசிபமுனிவர் மனைவியர் பதின்மூவரில் கத்துரு விநதையென்னும் இருவரும் தமதழகாற்றருக்கி அழகில்லாள் நீயென்று நிருப்பதெப்படி? மானித்துக்கொண்டு காசிபரை வினவ, காசிபர் கத்துருவே சிறந்தவளென்றுணாப்ப விநதை சிறைப்பட்டு, தன்னைச் சிறைதவிர்க்கும்படி கத்துருவைவேண்ட, அவள் விண்ணுலகிலுள்ள அமிர்தத்தை வருவித்துக்கொடுப்பின் நீ சிறைநீங்குவையென, விநதை காசிபரருளாற் கருடனைமகனாகப்பெற்று அவனுக்குமுறையிட, கருடன் விண்ணிடையடைந்து ஆங்கிருந்த காவலரைவென்று அமுதங்கொண்டு திரும்புகையில், திருமால் அவனையெதிர்த்து இருபத்தொருதினங்கள் போர்புரிந்தும் அவன் தோல்வியடையாமையினவனுச்சனையால்வெல்ல வேண்டுமென்றுட்கொண்டு, புள்ளரச! உன்வலிக்குவியந்தேன், நீவேண்டும் வரத்தைக் கேட்டுக்கொள் என, கருடன் விண்டுவே! உன்வலிமைக்கு மனங்களித்தேன் நீ விரும்பியவரத்தைப் பெறுகவென்றனன் திருமால் இதுவேசமயமென்றுட்கொண்டு, நீ காசிபன்மதலையாய்ச் சொற்பிசகாதவனாயின் நீ யெனக்கு வாகனமாகுகவென், கருடனுமக்காலம் யோசித்து, வார்த்தைபிசகாமல் அங்ஙனமேயாகுகவென்று விடைகொண்டு விநதையையடைந்து அமுதையளித்து அவள்சிறையை யகற்றி விண்டுவுக்கு வாகனமாயினனென்பதாம் [விநதைக்குச் சுபருணையென்றும் பெயர்] இதனை

காஞ்சிபுராணம்

கைபுள் வேந்தன் வீர மகிழ்ந்தன
னென்பு னட்டவரங் கொள்ளென வீங்கிவ
னுன்பெருந்திறற் குணமகிழ்ந் தேனமற் றென
றனபுடைவ ங் கொளனெனச் சாற்றினே

மாய னம்மொழி கேட்டு மகிழ்ச்சியிற
றூயை யோதிய சொற்றவ ருமெனி
னீயெ னக்கு நெடுந்தகை யூதியா
யேயு மிவ்வர மியானகொள நல்கென்றான்

ஆர்த்தி கூர்தர வம்மொழி கேட்டொரு
மூர்த்த மெண்ணி யுயிர்த்து மொழிந்தமெய்
வார்த்தை யிற்பிறழ் வஞ்சியற் றுகெனச
சீர்த்தி யாளன விடைபெறறுச சென்றனன — என்பதனுணறிக (௧௪)

உருத்திரக் குரிசில பாங்க ருற்றவீ ரியத்திற றோன்றிக
கருத்தினுங் கடத்தன முற்றுக் கருங்கடல கடக்கு மாற்றல
செருத்தகு மனுமான மனமேற சிலையிரா கவனைத் தாங்கிப்
பெருத்தவுட் டருக்கி னூமேல பிணிநோய பலகா லுற்றான

(இ - ள்) உருத்திரபகவானிடத்துப் பொருந்திய வீரியத்தினுற்றோன்றி, மனத்தினாலுந் தாண்டுதல முடியாத கரிய கடலினைக கடக்கும வல்லபமும போர்வலிமையு முடைய அநுமான விசேடித்த மனகாவத்தால (ஐங்கரக்குரிசிலை யடிபரவாது) பூமியினமேல், கோதண்டமேந்திய இராமமூர்த்தியைச சுமந்து பலமுறை துன்பநோயை யடைந்தான. எ - று (௧௫)

திருமறு மார்பனுனை திரண்டவா சிலையி ராமன
பொருவலி வாலி முன்னர்ப போர்த்திறத தெளிய னனை
யிருநிலத் தனைக ரினனு மிலங்கிய வொற்றைக கோட்டுத
தருவினை யடுத்த லின்றித தருக்கினுற றெருமந் தாரே.

(இ - ள்) திருமறுமார்பனுனை சிரட்சிவாய்ந்த கோதண்டமேந்திய இராமமூர்த்தி (விநாயகபூசை செய்யாது) போர்புரியும வல்லபமுடைய வாலி (என்னும் வானரவீரன) முன்னே போர்வல்லபத்திற றோல்வியடைந்தனன பெரிய பூமியில் இன்னும எண்ணிறந்தவர்கள ஒற்றைக்கொம்பினையுடைய கற்பகத்தருவை யொத்த கணபதியை யாசிரயிக்காமல் இறுமாப்பால துன்புற்றார்கள. எ - று (௧௬)

திருமறுமார்பன் - திருமகளையும் சீவற்சமெனனும மறுவையுமுடைய மார்பையுடையவன

பிரணவ முன்னர் வைகும பெருமறை தொகுத்த காலை
பிரணவ முன்னே தாமற பேசுத லின்மை யாலே
பிரணவ மொழியாற றனனைப பேசினை யெனவுட் கொண்டு
பிரணவப் பொருளா யுள்ளான பேரிடர் காத்தா னன்றே

(இ - ள்) பிரணவமானது முன்னேவிளங்கும் பெரியவேதங்களைத் தொகை செய்தகாலத்தில், பிரணவத்தை முதலிற்சொல்லாமல் வேதமோதுதலில்லாமையால், பிரணவசபத்தால தன்னைத்துதிசெய்தனையென்று திருவுளஞ்செய்து, அப்பிரணவத்தின பொருளாகிய கணேசப்பெருமான பெரிய துன்பங்களை (வரவொட்டாமற்) காத்தனன. எ - று. (௧௭)

கருதிக ளூலக்குக் கோதத் துணிந்தநாண் மயேசன் றானுங்
கருத்தன முற்று விக்குங் காரணங் குறித்தன றேகொற்

சுருதியின முன்ன ரநதத தொனமனு வைததான போது
முருவமு மிடாதீப பானுக கோமெனு மொழியே யாமால.

(இ - ள்) வேதஙகளை உலகததாருககுக் கூறத்தொடங்கிய காலத்தில், சிவ பெருமானுந் தானகருதியதை முடிவுபெறசசெயயுங காரணத்தைக்குறிததுததாஞே வேதாரமபததில அநதபபழமையான பிரணவததை அமாததிஞனபோலும விக்கினங் களை விலக்கும விநாயகபபெருமானுக்குத திருவுருவமும் ஓமெனறு சொலலயபடும அபபிரணவமேயாகும. எ - று (கஅ)

எததகு தொழிறகு முனனா யாவரு மிறைஞச நிறகு
மத்தகு தேவ தேவாக காலைய மாகை யாலே
யுத்தம வோஙகா ரததை யுரைககுமந திரஙக டோறும
வைததனா முனனாத தொன ஞான மரபறிந தோாக ளெலலாம.

(இ - ள) எவவகைய தகுதியுடைய கருமஙகளுஞ செயவதற்கு முறபட, எல லோரும பணிசெயய விளஙகும அநதத தகுதிபபாடடினையுடைய தேவதேவஞகிய விநாயகபபெருமானுககு வாசஸதானமாயுளளபடியால, பழமையாகிய ஞானமரபினை யுணர்ந்த பெரியோாகளயாவரும உததமமாகிய ஓஙகாரததை, சொலலுகினற மநதிரங களிலெல்லாம் முதலிற பொருததிஞாகள. எ - று (க௯)

அவனவ ளதுவாய் நினறே யனைததையு முடிககின் ருனு
மவரவா தியானித தேதத வவரவாக கருளசெய வானு
மவரவா மனுதிக கெட்டா வருமபொரு ளாயி ஞனு
மவிாமறை யினனு மன்மை மொழியிஞ லளககின ருனும

(இ - ள) அவன அவள அது (எனனும மூ) வடிவாக விளஙகியே எலலாச் செயல்களையும முடிக்கின்றவனும, அவரவாகள தியானஞசெயது துதிததலால அவ ரவாகளுககுத திருவருளசெயபவனும, அவரவாகளுடைய மனமுதலியவறறிறகதீத மான அரியபொருளாகவுளளவனும, விளஙகுகினற வேதங்கள் இன்னும அனமைச சொலலிஞல அளவிடபபடுபவனும எ - று

இதுமுதல மூனறுசெயயுளகள் குளகம

அவன அவள அது எனபவறறில முதலிரகூறியவிரணடால ஆணபெண் ணெனறும உயாதிணையெனறும,பினனாககூறியதஞல அஃறிணையெனறுஞசுட்டிஞா

அனமைமொழியிஞ லளககினருனெனறதை, "திருவிளையாடறபுராணததில "அன்லை யலலையீ தெனமறை களுமனமைச சொலலி ஞறறுதித திளைக்குமிச சுந தரன"—எனவருவதஞனுமுணாக (உ0)

இநதிர னனன ஞாதி யிலககுமி மாாபன கீறறுச
சநதிரன் முடியில வேயநத தழலுமிழ சூலத திணைக
யநதண னேனைத தேவ ரனைவரு மாணை நீவாா
சுநதர மலாததாள் போறறித தொழுமுத லாயி ஞனும

(இ - ள) இநதிரனும, அனனவாகனஞகிய பிரமனும, திருமகளைத திரு மார்பிலுடைய திருமாலும,சநதிரதுண்டததைத திருமுடியிலணிநத தீயைச்சொரியுஞ சூலப்படையேநதிய வலியகையையுடைய சிவபெருமானும், பிறதேவாகளும் எல்லோ

ருங் கட்டளைகடவாது அழகிய தாமரைமலர்போன்ற திருவடியைத் துதித்துவணங்கும் முதற்கடவுளானவனும். எ - று.

அந்தணன் - பிராமணன் - ஈண்டுப்பிராமணனென்றது தேவர்கட்கெல்லாம் அந்தணனாகிய சிவபெருமானை இதனை,

காஞ்சிப்புராணம்.

"பிராமண னீயே கடவுளா தம்முட் பிறருகா வேனையோா தம்முட்
பிராமணன யானே பிராமணன றனக்குப் பிராமணன கதியுனை யிகழ்வோன்
பிராமண னல்லன றனக்குல தெய்வம் விண்டுபின ஞென்றனைத் தொழும்ப
பிராமணற கிரண்டுமே பயப்படா நிரயம் புகுவனென றியாமறை பேசும்."—என பதனுனறிக (உ௧)

ஒன்றனைச் செய்கின் ருனு மொன்றனை யொழிக்கின் ருனு
மொன்றனை விடுத்து வேறே யொன்றனை முடிக்கின் ருனு
மன்றினாக கிடாச்செய வானு மைந்தொழிற கரனார் போலத்
துன்றினாக கிடாக வாப்பத் தோன்றிய கணேச னென்ப.

(இ - ள்) (செய்யக்கருதிய) ஒரு கருமத்தைச் செய்கின்றவனும், ஒரு கருமத்தை நீக்குகின்றவனும், ஒன்றை விலக்கி மற்றொன்றை முடிக்கின்றவனும், தன்னைப் பணியாக்கு இடா விளைப்பவனும், (சிருஷ்டி முதலிய) பஞ்சகிருத்தியங்களுக்குச் சிவபெருமானைப்போல, தம்மை யடைந்தவர்கட்குத் துன்பங்களை யொழிக்கத் திருவவதாரஞ்செய்த கணேசமூர்த்தியென்று (அறிஞர்கள்) சொல்வார்கள். எ - று (உ௨)

அன்னவன் பாதப் போதை யாக்கையே மொழியே நெஞ்சே
யின்னவற் றொன்றி னுனு மிதமுறப் பணிந்தா யல்லை
தனனிக ரில்லா வித்தைத் தருக்கினுற சுயம்பா வித்த
வுன்னவ மதிப்பி னுலே யுறுதுய ருழந்தா யங்கே

(இ - ள்) அவ்வகைய கணேசப்பெருமானுடைய திருவடித்தாமரையைக் காயமும் மனமும் மொழியுமாகிய இவற்றுளொன்றினுலேனும் இதமுண்டாகும்படி பணிந்தாயல்லை தனக்குத்தானே யொப்பாகிய வித்தியாகர்வத்தாற சுயம்பாவித்த உன்னுடைய அவமதிப்பினுலே பொருந்திய துயரத்தை யடைந்தாய. எ - று. (உ௩)

ஆயிரங் கோடி கற்ப மாரவமோ டேகி னுனும்
பாயிரந் தானு முற்றப் பண்ணுதல் கூடா தாகு
மாயிரும் புவனம் போற்றும் வாரண முகபபி ரானைப்
போயிரந் தருளும் வண்ணம் பூசனை புரிந்தி டாயேல.

(இ - ள்.) பெரிய விசாலமான உலகினா துதிசெய்யும் யானைமுக விநாயகப் பெருமானையடைந்து யாசித்துத் திருவருள்புரியும் வகையாகப் பூசைசெய்யாயாகில (விநாயகர் திருவருளின்றி) ஆயிரங்கோடி கற்பகாலங்கள் ஆசையோடு முயன்ருலும் பாயிரமும் முற்றச்செய்தல் (உன்னுல்) கூடாததாகும். எ - று (உ௪)

வேறு

சுமுகரே யேக தந்தரே கபிலர் சூழ்கெச கன்னரே நாக
மிமிழ்தரு மிலம்போ தரரெழில் விகட ரிலகிய விக்கின ராச

ரமைவர்சூழ்ந் தேத்துங் கணேசர்தூம கேதுநன் றருள்கணாத் தியக்ஷ
ருமிழொளிய பால சந்திரர் தான மூற்றிருந் தொழுகுகசா னனரே.

(இ-ள்) சமுகர் - ஏகதந்தர் - கபிலர் - (அடியவர்கள்) சூழ்கின்ற கேசகன் னர் - நாகமானது விளங்குகின்ற இலம்போதரர் - அழகிய விகடர் - விளங்கிய விக்கின ராசர் - ஞானிகள் சூழ்ந்து துதிசெய்யுங் கணேசர் - தூமகேது - நன்குகத் திருவருள் செய்யுங் கணாத்தியக்ஷர் ஒளிசிந்தும் பாலசந்திரர் - மதப்பெருக்கானது ஊற்றெடுத் தொழுகுங் கசானனர் எ-று

இதுமுதலிரண்டு பாடல்கள் ஒருதொடர் (உ௫)

வக்கிர துண்ட ரயங்கிய சூர்ப்ப கன்னரே ரம்பரான வரங்க
டொகக்கருள் கந்த பூர்வச ரென்வே சொல்லிய வெய்யபதி னாறு
மிகுநாமத் திடினுங் கேட்பினும் வித்தை விவாகம்வேட் டெழுமிர வேச
நிக்கம மடுபோர் யாகமா திகளு நினைக்குமுன் முற்றுறும் பிள்ளாய்

(இ-ள்) வக்கிரதுண்டர்-விளங்கிய சூர்ப்பகன்னர் - ஏரம்பர் - சிறந்த வரங்களைத் தொகுதியாகவருளுங் கந்தபூர்வசர் என்று சொல்லப்பட்ட பதினாறு திருநாமங்களையும் விசேடமாகச் சொன்னாலும் (பிறர் சொல்லக்) கேட்டாலும், வித்தை விவாகம் விரும்பியுண்டாகின்ற முயற்சி வியாபாரம் மோதுகின்ற போர் யாகம் முதலியனவும் எண்ணுவதன் முன்னரே (கைகூடி) முடிவுபெறும், பிள்ளாய்! எ-று

நிகமமென்றது நிக்கமமென விரிந்தது (உ௬)

ஆதலா லவனைப் பூசனை யாற்றி யறிவினை யழித்திடு மைய
லேதநீத் தெண்ணி னிதுற முடியா விருப்பக மெய்துக வென்று
வேதனீ தோதவுள்ளமீ தென்று வியாதமா தவனுள மகிழ்ந்து
போதமே வடிவாங் கணேசனைப் பூசை புரிவதெவ் வாறென விரந்தான்.

(இ-ள்) ஆனபடியால், அவ்விநாயகப்பெருமானைப் பூசைசெய்து மதிமயக்கங் கெடுக்கும் அறிவின்மையாகிய துன்பத்தைவிலக்கி, உன்கருத்தை இனிமையாக முடித்துப்பெரிய கீர்த்தியைப் படையென்று (பிரமதேவன்) கூறினன். பிரமதேவன் இந்தனைச்சொல்ல, பெருந்தவமுடைய வியாதமுனிவன் உண்மைதானென்று மனமகிழ்ந்து, ஞானமே சுரூபமாகிய விநாயகக்கடவுளை யெவ்வகையாகப் பூசைபுரிவதென்று யாசித்தனன் எ-று

முடியா - முடித்து இது செய்யாவென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம் (உ௭)

இதுமலர்த் தவிசின் வீற்றிருந் தருளு மிறைவனை வியாதமா முனிமுன்
கதுமென வடுத்த வாற்றினிச் சோம காந்தனே யயன்முனி தனக்கு
விதுவணி சடிலத் தைங்கரப் பெருமான் வியத்தகு மந்திரஞ் செவியின்
வதிதரப் புகன்ற மரபீதென்று வழங்குவன் பிருகுமா தவனே.

(இ-ள்) தாமரைமலர்ப்பீடத்தின்மேல் எழுந்தருளியிருக்கும்பிரமதேவனை, பெருமைதங்கிய வியாதமுனிவன் முற்காலத்தில் விரைந்து அடுத்தவகை யிதுவாகும். சோமகாந்தராசனே! பிரமதேவன் வியாதமுனிவனுக்கு, சந்திரனையணிந்த சடையையுடைய ஐந்துகரங்களமைந்த விநாயகப்பெருமானுடைய துதிக்கத்தக்க மந்திரத்தைச்

செவியினிடத்திற் பொருந்த உபதேசித்தருளுகையை இனிக் கேட்பாயாகவென்று பெருந்தவசியாகிய பிருகுமுனிவன் கூறலாயினன் எ - று (உஅ)

வியாசர் பிரமதேவனையடுத்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் - அ௫௫

வியாசருபதேசம்பெற்றபடலம்.

புயாசலந் தரவ மாலை பூண்டபுண் ணியனபோ ரேற்ற
கயாசுர னுரிவை யுண்ட கண்ணுதற் பெருமா னீன்ற
தயாநிதி கணேச னென்னுஞ் சாமியா கமத்திற் றாய
வியாதனே சத்த கோடி வியன்மனு விளம்பப் பட்ட.

(இ - ள்) புனிதமாகிய வியாசமுனிவனே! புயமாகிய மலையின்மேற் சர்ப்ப மாலையணிந்த புண்ணியசொரூபியும், யுத்தஞ்செய்யவந்த கயாசுரனுயிரையுண்ட நெற்றிக்கண்ணையுடையவருமாகிய சிவபெருமான் தந்தருளிய தயைமிகுந்த கணேசமூர்த்தியென்னுங் கடவுளது ஆகமத்தில், எழுகோடி மகாமந்திரங்கள் சொல்லப்பட்டுள்ளன எ - று

சிவபிரான் அரவமாலைபூண்டது

கருடனுடைய தொந்தரவைச் சகியாத சர்ப்பங்கள் சிவபெருமானைப் பூசை செய்து அவர் திருவருள் பெற்று அவருக்கு ஆபரணங்களைப்போல அவ்வெம்பெருமானுடைய கட்டளையால் அவருடைய திருமேனியில் வசிக்கலாயின பின்னொருகாலத்தில் விஷ்ணுவோடிங்கடைந்த கருடனைக்கண்டு சுகமாவென அச்சர்ப்பங்கள் வினவினவென்பதாம் இதனை,

காஞ்சிப்புராணம்

விதிமுறைச்சிவபூசனையாற்றிமாலவிடைக்கொடிப்பெருமானினை
புதியபூங்கழலருச்சனைபெற்றிறைபுள்ளிறைமிடலெய்தி
யதிரவுறுத்தெமையலைத்திடவெரீஇயினமடைக்கலம்புகுந்தேயயாங்
கதியெமக்குவேறிலையெனறிரந்தனங்கண்ணுதலருள்கூர்ந்து

பன்னகங்களைப்பணியெனத்தாங்கினனப்பணைகாபரணனாற
னின்னருட்பெறுமதனையானமற்றவையெந்தைபாலிரோங்கு
துன்னுவெம்பணைகாழலுழைகலுழனேசுகங்கொலென்றனசாமே
பன்னுமேன்மையினவிறுயினவிமமொழிபாலெலாமெடுத்தோதும் —எனப்பாணுற்றிச.

அன்றியும், சிவபெருமான் பிக்ஷாடனராகவும் திருமால் மோகினியாகவும் தாருகாவனமுற்று அம்முனிபத்தினியர் கற்பையும் அம்முனிவர் தவத்தையு மழித்தமையின், அவர்கள் சினந்து அபிசாரவேள்வி செய்து அதிற்றோன்றிய புலி மான் முதலியவற்றை விடுத்து, அவைகள் எம்பெருமானைத் துன்புறுத்தாமையினால் அதினின்று தோன்றிய எண்ணிறந்த சர்ப்பங்களை இறைவர்மேல் விடப், இறைவர் அவற்றைப் பற்றிக் கருடனுக்கஞ்சி நம்பாலிருக்குங் கட்செவிகளோடிருக்கவென்று அணிந்துகொண்டதும் ஓர் காரணமாம் இதனை,

கந்தபுராணம்.

"ஏந்திய பினாக வேள்வி யெரியதற் கிடையே யெண்ணில்
பாந்தளங் கொழுந்தீ யோரா பணியினாற் சிறந்த கொண்டு
போந்தன வற்றை மாயோன் புள்ளிறுக் கருந்தித் தன்பால்
சேர்ந்ததோர் பணிக ளோடுஞ் செவ்விதிற் புனைந்தா னெங்கோன்"—என்
பதனானுமுணர்க

கயாசுரனுரிபுனைந்தது

யானைவடிவுடைய கயாசுரனென்னும் அசுரனொருவன் சங்கரனை வழி படுவலிமிக்கோனாய்த் தேவர் முனிவர்களைத் துன்புறுத்த அவர்கள் சிவபெருமானை யடைக்கலம்புகுந்து நிற்ப, கயாசுரன் அவர்களிருந்த மணிகர்ணிகையென்னு மிடத்தை யடைந்து ஆர்ப்பரித்து அவர்களை விளிக்க, இறைவர் உக்கிரப்பெருவடிவெடுத்து அவ்யானையைத்தள்ளி அதன் தோலையுரித்து ஆடையாக வணிந்தனரென்பது சரித்திரம். இதனை,

கந்தபுராணம்

"மதித்த வேழமாந் தானவன் வருதலும் வடவை
யுதித்த வனைனியு மச்சுற வெரிவிழித் தொருதன்
கதித்த தாள்கொடு தள்ளவே கயாசுரன் கவிழ்ந்து
பதைத்து வீழ்தலு மிதித்தனன் சிரத்தையோர் பதத்தால்.

ஒருப தத்தினைக் கவானுறு திருக்கரத் துகிரால்
வெரிநி டைப்பிளந் தீரிரு தாள்புடை மேவக்
குருதி கக்கியே யோலிட வவுணர்தங் குலத்துக்
கரியு ரித்தனன் கண்டனர் யாவையுங் கலங்க

ஆரு நாயக னஃதறிந் தயிர்த்தொகை யனைத்தும்
வாளி லாதுகண் ணியாவது மாற்றுதன் மதித்து
நீளி ருங்கரி யுரித்திடு மதளினை நிமலன்
றோளின் மேற்கொடு போர்த்தன னருள்புரி தொடர்பால்"—என்பதனு
ணர்க (க)

அவற்றுளுஞ் சிறந்த தாகு மாறெழுத் ததனுண் மேலாந்
தவறினை யறுக்கு மேகாக் கரமிது தன்னை நினைக்க
கவற்றிய மம்மர் நீங்கக் கரைகுதும் வாசத் தேனோ
டுவட்டுபூந் தடத்தா டித்தூண் டிவண்வரு தியென்றான்.

(இ-ள்) அவ்வெழுகோடி மகாமந்திரங்களிலும் (ஆறெழுத்துக்களாகிய) ஷடக்ஷரமந்திரஞ் சிறந்ததாகும் அவ்வாறெழுத்துக்களிலுங் குற்றத்தினையொழிக்கும் ஏகாக்ஷரமந்திரம் மேம்பட்டதாம். இதனை உன்னைமூடிய மயக்கமொழியச்சொல்லுவோம் வாசம்பொருந்திய மதுரமாகிய தேனைச்சிந்தும் மலர்கள் பொருந்தியதடாகத்தில் மூழ்கி ஈண்டு விரைந்து வருகவென்ப பிரமதேவனை கூறினன் எ-று. (உ)

விதிப்படி நறுநீ ராடி மேவிய வியாதன் காதிற்
றுதிப்பவர்க் கின்ப நல்குந் தோடவிழ் மலரான் கங்கை
நதிப்புனல் வேணி வைத்த நான்முகன் றாய்க் களிற்றின் பாதம்
பதிப்புறு முன்னத்தார் நீக்கை பண்ணிமந் திரத்தைச் சொன்னான்.

(இ - ள்) வேதவிதிப்படி நல்லநீரில் மூழ்கிவந்த வியாதமுனிவன் செவியில், தியானிப்பவர்களுக்குச் சுகத்தைக்கொடுக்கும் இதழ்கள் விரிந்த தாமரைமலரிலுள்ள பிரமதேவனை, கங்காநதியின் சலத்தைத் தடையிலமாத்திய தொங்கிய வாயையுடைய யானைமுக விநாயகமூர்த்தியின் திருவடியிற் பத்தியுடனே தீக்ஷைசெய்து (அவ் ரது) மந்திரத்தை யுபதேசித்தனன் எ - று. (௫)

சத்திய வதிக்கு மைந்த சாற்றுமந் திரத்தை யெண்ணு
மத்தகு முறையுங் கேண்மோ வட்டிடை யியாது மெய்த்தா
வுத்தம தலத்தை நண்ணி யுறுமனுப் புனலைப் ரோக்கித்
தொத்திடும் பூத சுத்தி யாதிக ளுஞற்றிச் செய்து.

(இ - ள்) சத்தியவதிக்கு மகனே! சொல்லிய மந்திரத்தைச் சபிக்கும் அந்தத் தகுதியாகிய முறைமையையுங் கேட்பாயாக; நெருங்கிய தடையொன்று முண்டாகாமல், உத்தமமான இடத்தை யடைந்து, பொருந்திய மந்திரதீர்த்தத்தைப் புரோக்ஷித்துக்கொண்டு பூதசுத்தி முதலியவற்றைத் தொன்மை முறைப்படி செய்து எ-று.

புந்திசெய் யுளத்தின் கண்ணும் புறத்தினு நியாசம் பண்ணி
மைந்துறு பிராண யாமம் வகுத்துமந் திரத்தை யெண்ணி
மந்திர சித்தி யெய்த வள்ளலா ருருவ முற்றுஞ்
சிந்தையிற் றியானஞ் செய்து செய்கவந் தரியா கத்தை.

(இ - ள்) அறிவைச்செய்யும் மனத்திலும் புறத்திலும் நியாசஞ்செய்து, வலிமைதங்கிய பிராணாயாமத்தைச் செய்து மந்திரஞ் சபிக்கவேண்டும். அந்த மந்திரசித்தியுண்டாகும்படி விநாயகக்கடவுளுடைய திருவுருவமுழுவதையும் மனத்திற்றியானித்து அந்தரியாகத்தைச் செய்யக்கடவாய் எ - று

அந்தரியாகம் - உட்பூசை. பிராணாயாமம் - இது எண்வகையோகங்களி லொன்று. இது, இரேசக பூரகங்களாற் பிராணவாயுவைப் புறஞ்செல்லாதடக்கி நிற்பது. உரு ஜபிக்குமெல்லையும் நிறுத்தலென்பர. (௬)

நித்தமிவ் வாறு நின்னு டைச்சத் திக்கேற்ப
வுத்தம மனுவை யெண்ணி லொருமருப் பிருமதங்கொள்
வித்தக னெதிரே கோடி வெய்யவ ருதய மென்னப்
பொத்திய வொளியிற் றோன்றும் புணர்விழி யொளிமை யாப்ப.

(இ - ள்) இவ்விதமாகத் தினந்தோறும் உன் சக்திக்குத்தக்கபடி இவ்வுத்தமமான மந்திரத்தைச் சபித்தால், ஒற்றைக்கொம்பையும் (பரஞானம் அபரஞான மெனனும்) இருமதங்களையுங்கொண்ட ஞானசொரூபியாகிய கணேசமூர்த்தியானவர் கோடிசூரியர்கள் உதயமானாற்போல இருவிழிகளுங் கூசும்படி பேரொளிப்பிழம்பாக எதிரே பிரசன்னமாவர். எ - று. (௭)

வந்தனன் சாமி யென்றே மகிழ்ந்துளத் துறுதி யோடு
வந்தனை புரிந்து நாயேன் மதியிடை வதிக வென்னின்
மந்திரா னந்தி யென்றா மகவினுக் கிரங்கு மாபோல்
வந்துவந் துலவுங் காதின் வள்ளலில் வாழு நல்கும்.

(இ-ள்) கடவுள் வந்தனனென்று மதித்து, மனவுறுதிப்பாட்டுடன் தண்டஞ் செய்து, அடியேன் அறிவினிடத்தில் எழுந்தருளியிருக்க வேண்டுமென்று யாசித்தால், மலடியாயிருந்தவள் தான் வருந்திப்பெற்ற குழந்தைக்காக மனமிரங்குவதுபோல, அசையாநின்ற செவியையுடைய யானைமுகக்கடவுள் அடிக்கடி பிரசன்னராய் எல்லா வரங்களையும் (நீ விரும்பியவண்ணமே) கொடுப்பர் எ-று.

வதிக என்னும் வினைமுற்று ஏவல்சணுத்த வியங்கோள். (எ)

இவ்வகை மடங்க லூர்ந்த வெம்பிரான் பூசை யாற்றிற்
செவ்விய சித்தி யெட்டுஞ் செங்கையி னெல்லி யாகுங்
கவ்வைசே ரல்லல் நீங்குங் கருதிய கருமம் முற்று
மவ்விய மகன்று சிந்தை யறங்கொளு மதுவே யன்றி

(இ-ள்) இவ்வண்ணமாகச் சிங்கவாகனமேறிச் செலுத்தும் எம்பெருமானாகிய கணேசப்பெருமானது பூசையைச்செய்தால், செவ்விய அட்டமாசித்திகளுஞ் சிவந்த கையிலுள்ள நெல்லிக்கனிபோலக் கைகூடும்; துன்பநோய்களெல்லாமொழியும், எண்ணியகாரியங்கள் முடிவுபெறும், மனத்திற் பொறாமை விலகி தருமங் குடிகொள்ளும், அவ்வளவோடல்லாமல் எ-று.

சித்தியெட்டு - அணிமா - மகிமா - கரிமா - இலகிமா - பிராப்தி - பிராகாமியம் - ஈசத்துவம் - வசித்துவம் அவற்றில் அணுமாப்போலாதல் அணிமா, மகத்துவமாதல் மகிமா, தன்னுடற்கனதியின்றியக் கனதியுள்ளவற்றை யுருவவல்லுதல் கரிமா, இலகுத்துவமாதல் இலகிமா, வேண்டுவனவடைதல் பிராப்தி, நிறையுள்ளுதல் பிராகாமியம், ஆட்சியுள்ளுதல் ஈசத்துவம், எல்லாந்தன்வசமாக்க வல்லுதல் வசித்துவமென்பன. (அ)

தங்கிய மலங்கள் சிந்தத் தக்கபே ரருளி னன்றே
முங்கியே முத்தி சீவன் முத்தராம் பெருமைப் பேறெய்திப்
புங்கவர் வணங்க மேன்மையிற் பொலிவர்கள் பூசை செய்யாக்
கெங்குள விடருஞ் சூழ்வுற் றின்னலே புரியா நிற்கும்

(இ-ள்) தானடைந்த மலங்களையொழித்து, பொருந்திய பெருமைவாய்ந்த திருவருளில் அப்பொழுதே மூழ்கியமர்ந்து, சீவன் முத்தராகிய பெரிய பேற்றினை யடைந்து, தேவர்கள் பணியும்படி மேன்மையுற்று விளங்குவார்கள் (விநாயகக்கடவுளை) பூசைசெய்யாதவர்களுக்கு எவ்விடத்திலுமுள்ள துன்பங்களுஞ் சூழ்ந்துகொண்டு தீமையே சம்பவிக்கும் எ-று.

காலச்சத்து என்பதில், கால உபசாரசம். (௯)

கணபதி பூசை யாற்றுங் காதல ரதனைக் கண்டோர்
குணமெடுத் துரைப்போர் பண்பிற் கூடுவோர் குவப்போ ரெல்லா
மணவுறு முப்பயன் பேறு மடைகுவ ரதுசெய் யாத
பிணமெனுங் கண்டோர் தாமும் பெறுகுவர் தீமை யெல்லாம்.

(இ-ள்.) கணேசப்பெருமானுடைய பூசைசெய்யுங் காதலர்களைத் தரிசித்தவர்களும், (அவர்களது) நற்குணங்களை யெடுத்துச்சொல்பவர்களும், (அவர்களுடன்) ஆசையாகக் கூடுபவர்களும், (அவர்களைக்கண்டுங் கேட்டும்) களிப்பவர்களும் ஆகிய நால்வரும் பொருந்திய மூன்று பயன்களையும் பெறுவார்கள் அவ்விநாயகபூசை செய்ய

டாத (நடைப) பிணங்களை யெதிரிற்கண்டவர்களும் எல்லாத்துன்பங்களையும் அடைவார்கள் எ - று.

மும்மை - இம்மை மறுமை வீடு என்பன.

பிணம் நடவாமையாலும், அது நடக்கையில் எதிர்காணுதலில்லாமையாலும் நடைப்பிணமென்றும், (௧௦)

நாத்திக ரொழுக்கம் விட்டோர் நவைபிறர்க் குரைப்போர் சோரர்
தூர்த்தரு நெஞ்ச மில்லாத் துட்டர்க ளாதி யோர்க
ளேத்தினர் சரணஞ் சார்ந்த விடத்துமிம் மனுவோர் தாமை
நீத்திடல் வேண்டுஞ் சொல்லி னெடுநர கனைத்துந் தோய்வார்.

(இ - ள்) நாத்திகர்கள் - ஆசாரங்களைவிட்டவர்கள் - பிறர்க்குக் குற்றங்கூறுவோர் - திருடர்கள் - புனிதமான மனமில்லாத துன்மார்க்கர்கள் முதலானவர்கள், துதித்தவர்களாகி (தம்மைச்) சரணமடைந்த விடத்திலேயும், (அவர்களுக்கு) இவ்விநாயக மந்திரத்தை யுபதேசியாமல் நீக்கிவிடல்வேண்டும் (அவ்வாறன்றி) உபதேசித்தால் மிக்க நரகங்களிலெல்லாம் மூழ்குவார்கள் எ - று.

நாத்திகர் - தெய்வமும், இம்மைமறுமையும், சுவர்க்க நரகங்களுமில்லை யென்போர். இவர் ஆஸ்திகரல்லாதவர் (௧௧)

வணக்கமன் புருள்சா ரமறைநெறி யொழுக்க நல்லோ
ரிணக்கமந் திரத்தி னாவ லிவைமுத லுடையோர்க் காயிற்
பிணக்கறு தீக்கை யாற்றிப் பேசுக விருவர் தாமுங்
கணக்கில்பே ரின்ப வீடு கைக்கொள்வர் காணி யாக.

(இ - ள்) கீழ்ப்படிதல் - அன்பு - கிருபை - ஆசாரம் - வைதிகநெறியினடத்தல் - நல்லோர் சகவாசம் - மந்திரத்தில் இச்சை, இவை முதலிய குணங்களையுடையவர்களுக்காயின், குற்றமற்ற தீக்ஷைசெய்து உபதேசிக்கக்கடவை (அவ்வாறாயின், உபதேசிப்போனும் அதனைப்பெறுவோனுமாகிய குருசீடர்) இருவரும் எல்லையில்லாத பேரின்பவீடாகிய மோக்ஷத்தைத் தமது வாசஸ்தானமாகக் கைக்கொள்வார்கள். எ-று.

சந்திரன் முடியில் வேய்ந்த தம்பிரான் கருணை கூர்ந்து
முந்தெனக் கருளிச் செய்த முறையுனக் குரைத்தே னென்ன
வெந்துயர் முழுது நீங்கி வியாதனுந் தனுடித் தோனை
யெந்தையீங் கொழியா வண்ண மியம்புக வென்று தாழ்ந்தான்.

(இ - ள்) சந்திரனை முடியிலணிந்த எம்பெருமான் கிருபைமிகுந்து முற்காலத்தில், எனக்குத் திருவாய்மலர்ந்தருளிய முறைப்படியுனக்குக் கூறினேனென்று பிரமதேவன் கூற, வியாதமுனிவர் (தனக்குற்றகொடிய துன்பமுழுதும் ஒழிந்து, எந்தையாகிய பிரமதேவரே! இவ்விரதத்தை யநுட்டித்தவர்களை இப்பொழுது (சிறிதும்) நீங்காவகையாகக் கூறவேண்டுமென்று பணிந்தனன். எ - று.

தம்பிரான் - தனக்குமேற் றலைவனில்லாதவன் என்றும் தனக்குத்தானே பிரானென்றும் பொருள்படும். (௧௨)

கொற்றவெண் குடையி னீழற் குவலய முழுதுங் காத்த
வெற்றிவேன் மன்னன் சேதன் வியாதனுக் குபதே சித்த

திற்றென லாகு மூவ ரினிதுபா சித்த வாறு
தெற்றெனத் தெளிக வென்று செப்புவன் பிருகு மேலோன்.

(இ - ள்) வெண்கொற்றக்குடை நீழலில் உலகமுழுவதையுங் காத்த வெற்றி பொருந்திய வேற்படையேந்திய சோமகாந்த ராசனே! பிரமதேவன் வியாதமுனிவனுக்கு உபதேசித்தது இதுவேயாகும். மும்மூர்த்திகள் இனிதாக உபாசித்தவகையையும் நன்றாகத் தெளியக்கடவாயென்று, மேலோனாகிய பிருகு முனிவன் சொல்லத்தொடங்கினான். எ - று (௧௪)

வியாசருபதேசம்பெற்றபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௮௬௬.

மூவருமுபாசித்தபடலம்.

விருப்பித் தாழ்ந்த வியாதனை நோக்கியே
யரும்பு விண்டல ரம்புயச் சேக்கையான்
கரும்புந் தேனுங் கலந்தெனக் கல்லொடு
மிரும்பு முண்ணெக் கிளக்க வுரைப்பனால்

(இ - ள்) அரும்புகள் வாயவிண்டலர்ந்த தாமரைமலராய பீடத்தையுடைய பிரமதேவன் தன்னை விருப்புற்றுப் பணிந்த வியாதமுனிவனை நோக்கி, கருப்பிரசத்தையுந் தேனையும் (ஒன்றுசேரக்) கலந்தாற்போல, கல்லும் இரும்பும் உள்ளம்நெக்கு விட்டுளகும்படி சொல்லுகின்றான். எ - று

கரும்புந்தேனுமென்றதாற் சுவைபடவெனக் கொள்க. கல்லும் இரும்பும் போன்றவனெஞ்சரும் உள்ளமுருக வென்பார் "கல்லொடு மிரும்பு முண்ணெக் கிளக்க" என்றார். (௧)

தேவர் தானவர் சித்தர் முனிவர்
சாவி லாத வுரக ரியக்கர்கள்
மேவு சாரணர் விஞ்சையர் கின்னரர்
பாவு மானிடர் பலவகை யோர்களும்

(இ - ள்) தேவர்கள் - தானவர்கள் - சித்தர்கள் - முனிவரர்கள் - கெடுதலில்லாத நாகர்கள் - இயக்கர்கள் - பொருந்திய சாரணர்கள் - வித்தியாதரர்கள் - கின்னரர்கள் - பரவியமனிதர்கள் - (இன்னும்) பலவகைப்பட்டவர்களும் (ஆகியவர்களின் தொகுதியில்) எ - று.

உரகம்—பாம்பு. உரம் - மார்பு - கம் - நடத்தல். இது மார்பானடப்ப தென்னுந் தாதுப் பொருளுடையதோர் சொல். (௨)

வேறு

ஐங்கரன் பூசனை யனைத்தி னுற்றுயர்
பங்கயன் கதிகளிற் படர்ந்து ளார்பல

ரங்கவர் தம்மில்யா னறிந்த வாறினி
லிங்குறச் சிலர்தமை யியம்பக் கேட்டியால்.

(இ-ள்) ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகப்பெருமானது பூசையை அன்புடன்செய்து, கெடுதலில்லாத உயர்கதிகளிற் சென்றிருப்போர் எண்ணிறந்தோர்; அவ்வகைய சிறப்படைந்தவர்களில், யான் தெரிந்தவகையாக இப்பொழுது சிலருடைய சரிதங்களைச் சொல்லக் கேட்பாயாக எ-று. (௩)

பண்டொரு பிரளயம் பட்டாந்த செவ்வியி
னண்டரு மறிவரு மமல நாயகன்
கொண்டதத் துவங்களைக் குறித்தொ டுக்கினன்
மண்டிய வுயிர்களைப் பாறும் வண்ணமே.

(இ-ள்) தேவர்களும் அறிதற்கரிய நிமலனாகிய கணேசப்பெருமான் முன்னொரு பிரளயங்கழிந்த (பிற) காலத்தில், நெருங்கிய வுயிர்கள் இளைப்பாறும் வகையாகத் தத்துவங்களை யெல்லாந்தன்னிடத் தொடுக்கிக்கொண்டனன் எ-று.

உயிர்களைப்பாறுதல் - பலவுடல்களிற் புகுந்தும் பிரிந்தும் வருந்திய துயரொழிதலாம் அதாவது முத்தியடைதல். (௪)

நீடிய பிரளய நீங்க முன்புபோற்
கூடிய முத்தொழில் குயிற்ற வெண்ணுபு
நாடிய வடிவுரு நயந்தெ டுத்துநின்
றீடியன் முக்குணத் தெம்மை நல்கினன்

(இ-ள்) மிக்கபிரளய மொழிய, பண்டுள்ளதுபோலவே யியல் முத்தொழில்களை நடத்தக்கருதி, (அன்பர்கள்) நாடியறியத்தக்க திருவுருவத்தை விரும்பி யெடுத்துத் தோன்றி, சமானமான இயல்பினையுடைய முக்குணவிசிஷ்டர்களான எங்களைப் படைத்தனர். எ-று.

எங்களை யென்றது பிரம விண்டு உருத்திரர்களை. முக்குணங்கள்—இரசோகுணம் - தமோகுணம் - சத்துவகுணமெனப்படும். (௫)

இகலறு மறைகளு மிருளி னீங்கிய
தகவுறு பெரியவர் தாமு மெங்களைத்
தொகவுறத் தோற்றிய தூய மூர்த்தியைத்
துகளறு வக்கிர துண்ட னென்பரே

(இ-ள்) பகைமையற்ற வேதங்களும், (அஞ்ஞானமாகிய) அந்தகாரத்தினின் றொழிந்த தகுதியுடைய பெரியோர்களும், எங்கள் மூவரையுந் தொகுதியாகப் படைத்த புனிதராகிய விநாயகப்பெருமானைக் குற்றமற்ற வக்கிரதுண்டமூர்த்தியென்று சொல்வார்கள் எ-று. (௬)

ஆரணி யயனென வானை யாங்களும்
பிரமமி னணுவெனப் பேணிக் காணிய
விரவிய வெறுவெளி விரிவு முற்றுறப்
பரவினந் தேடினம் பயன்பெற் றேமலம்.

(இ - ள்) உருத்திரன் விண்டு பிரமன் என்றாகிய நாங்களும் பரப்பிரமப் பொருள் இன்னதென்று விரும்பிக் காணும்படி, பொருந்திய வெறுவெளியின் பரப்பு முழுவதும் பரவினேம் தேடினேம் (ஆயினும் இவற்றாலெல்லாம்) சிறிதும் பயனடைந்திலோம் எ - று

காணிய செய்யியவெனும் வாய்பாட்டு எதிர்காலவினையெச்சம் (எ)

அருந்தவந் தேவர்க ளாண்டி னாயிரம்
புரிந்தனம் புரிதலும் பொற்பத் தோன்றினன்
திருந்திய வடியவர் சென்று தோய்தொறும்
விருந்துறப் பெருஞ்சுகம் விளைக்கு மெம்பிரான்

(இ - ள்) (நாங்களைவரும்) ஆயிரந் தேவவருடங்கள் வரையில், அரிய தவத்தைச்செய்தோம் (அவ்வாறு தவஞ்) செய்யவும், திருத்தமாகிய அடியார்கள் சென்று பணியுந்தோறும் விருந்தாகக்கொள்ளும்படி பெரிய சுகத்தைக்கொடுக்கும் எமது கணேசப்பெருமான் அழகுறப் பிரசன்னமாயினன் எ - று (அ)

வேறு

கோடி சூரிய வுதயமுங் குருட்டிரு ளென்ன
நீடு பேரொளி வெளியெலா நிரந்தரித் தொளிரச்
சூடு மாமணி முடியுங்குண் டலமுந்தோள் வளையும்
பீடு சேர்தரு பேரணி கலமுநூ புரமும்

(இ - ள்) கோடி சூரியோதயமுங் குருட்டுத்தன்மை பொருந்தியுள்ள இருளென்று சொல்லும்படி, மிக்க பேரொளியானது வெளிமுழுவதும் நிறைந்து பிரகாசிக்க, அணிந்த சிறந்த இரத்தின கிரீடமுங் குண்டலமும் வாகுவலயமும் பெருமைதங்கிய பெரிய ஆபரணங்களும் பாதசரமும் எ - று

இது முதல்மூன்று பாடல்கள் ஒருதொடர். (௯)

பெருத்து வார்புழைக் கரமுமேந் தியபிறை மருப்பும்
விருத்த மாமுரண் மதம்பொழி வேழத்தின் முகமுஞ்
செருக்கு ழாவுவாள் கேடக மயில்சிலை செறிந்த
கருத்து ழாவிய கரங்களுந் தாண்மலர்த் துணையும்.

(இ - ள்) பூரித்துநீண்ட துளைபொருந்திய கரமும், கரத்தில் தாங்கிய பிறைச்சந்திரன்போன்ற கொம்பும், (அடியவருள்ளத்திற்கு) விருந்தாகத்தோன்றும் பெருமைபொருந்திய வலிமைவாய்ந்த மதஞ்சொரியும் யானையின் முகமும், போரில் துழாவுகின்ற வாள் பலகை வேல் வில் இவை பொருந்திய கற்பகத்தருவையொத்த கரங்களும் உபய திருவடித்தாமரையும் எ - று

கேடகம் - வட்டவடிவானதோர் ஆயுதம். இது வாளால் வெட்டுங்கால் தடைசெய்ய வுபயோகமாவது. விருத்து - விருந்தென்பதின் வலித்தல். விருந்தென்பதை முகத்திற்கு விசேடமாகக்கொள்க. (௧௦)

கீற்று வானமதிக் கண்ணியுங் கேழ்கிள ரகலத்
தூற்று தேமலர்க் கொன்றையு முலகெலா நொடியி

ணீற்றுத் திவிழிப் பாலமு நிறைந்தபே ரழகுந்
தோற்றி நேரெதிர் நின்றவச் சுரூபனைக் கண்டாம்.

(இ - ள்) கீற்றாகிய வெள்ளிய சந்திரனாகிய சிரோமாலையும், நிறம்விளங்கும் மார்பில் ஒழுகுகின்ற தேன்பொருந்திய மலராகிய கொன்றைமாலையும், உலகமுழுவதும் இமைப்பொழுதில் நீறுபடுத்தும் அக்கினிக்கண்பொருந்திய நெற்றியும், நிறைந்துள்ள சிறந்த அழகுந்தோன்றச் செய்து, நேரே பிரசன்னமாகநின்ற அந்த (பிரணவ) சுரூபனைத் தரிசித்தோம் எ - று. (௧௧)

அச்ச மோடெழு மன்பினு லகந்தடு மாற
வுச்சி மேலிரு கரங்குவித் தொய்யென வெழுந்திட்
டிச்சை யாற்றினிற் பன்முறை யிறைஞ்சினஞ் சூழ்ந்து
நச்சி யாடினம் பாடினம் நயத்தகு துதிகள்.

(இ - ள்) அச்சத்துடன் தோன்றிய அன்பினால் மனந்தடுமாற, இருகைகளையுஞ் சிரசின்மேலே கூப்பி, விரைவாகவெழுந்து, விருப்பின்படி அநேகமுறை பணிந்தோம், பிரதக்கணஞ்செய்து விரும்பி ஆனந்தக்கூத்தாடினேம், விரும்பத்தக்க (பலவிதமாகத்) துதிகளைப்பாடினேம் எ - று. (௧௨)

நிருவி கற்பமாய் நிறைந்தவா னந்தபூ ரணமாய்
நிருவி காரமாய் நிர்க்குண மாயதத் துவமாய்
நிருவி சேடமாய் நிரஞ்சன மாகியொன் றாலும்
நிருமி தப்படாக் கணேசநின் னிணைகழற் றொழுதாம்

(இ - ள்) நிர்விகற்பமாகியும், நிறைந்த இன்பபூரணமாகியும், விகாரஹீனமாகியும், நிர்க்குண தத்துவமாகியும், நிர்விசேடமாகியும், நிரஞ்சனமாகியும் விளங்கி, ஒன்றாலும் அளவிடப்படாத கணேசமூர்த்தியே! தேவரீருடைய திருவடிகளைப் பணிந்தோம் எ - று

இதுமுதற் பன்னிரு செய்யுள்களால் மூவரும் கணேசரைத் துதிசெய்தமை கூறுகின்றார்

விகற்பம் - சாஞ்சல்யம் விகாரம்-அவஸ்தை நிர்க்குணம்-தூர்க்குணரகிதம். சேடம் - மிகுதி நிருவிசேடமென்றது தன்னையன்றியோர் பொருளில்லாதது. (௧௩)

பிரம மாயொளி யாய்நிரா காரமாய்ப் பெரிதாய்த்
தரணி யாதிதத் துவமெலாங் கடந்ததத் துவமாய்
வரமெ லாந்தரும் வள்ளலா யேகமாய் வதியும்
பரம னாகிய கணேசநின் பதமலர் தொழுதாம்.

(இ - ள்) பிரமமாகியும், ஒளியாகியும், உருவிலியாகியும், பெரிதாகியும், பிருதிவி முதலிய தத்துவங்களையெல்லாங் கடந்த தத்துவமாகியும், (அவரவர்கள் வேண்டிய) வரங்களை யெல்லா மருள்செய்யும் வள்ளலாகியும், ஒன்றியாகியும் விளங்கும் சிறந்தவராகிய கணேசப்பெருமானே! தேவரீருடைய திருவடித்தாமரையை (யாங்கள்) பணிந்தோம் எ - று.

ஆகாரம் - உருவம். வள்ளல் - வரையாது கொடுப்போன். (௧௪)

என்று நீங்குறாத் திருவுரு வுடையதா யெங்கு
மொன்றி நின்றுணர் திடமுறி வானந்த வுருவாய்த்
துன்றும் யோகினர் தியானிக்கப் படுஞ்சுக மாகிச்
சென்று சேர்தராக் கணேசனின் றிருவடி தொழுதாம்.

(இ - ள்) எக்காலத்து மகலாத திருவுருவத்தையுடையதாகி, எல்லாவிடத்துங் கலந்துநின்று அறியத்தக்க சிதானந்த ரூபியாகி, நெருங்கிய யோகவான்கள் தியானிக்கப்படுகின்ற சுகமாகி, (சாமானியர்) சென்று அடையக்கூடாத கணேசப்பெருமானே! தேவரீருடைய திருவடியைப் பணிந்தோம் எ - று. (கரு)

உலக காரண காரண மாயுயிர்க் குயிரா
யிலகு ஞானியர் தமையிழந் தெய்துறு பேறாய்ப்
பலவு மாய்ப்பரப் பிரமமாய்ப் பரேசமாய்ப் பரமாய்த்
திலக மாகிய கணேசனின் றிருவடி தொழுதாம்.

(இ - ள்) உலக காரணத்திற்குக் காரணமாகி, உயிர்களுக்கெல்லாம் உயிராகி விளங்குகின்ற ஞானிகள் தம்மை யொழிந்து அடைகின்ற நல்லபேறாகி, பலபொருள்களுமாகி, பரப்பிரமமாகி, சிறந்த ஈசத்தன்மையாகி, பரமாகி, திலகமாக விளங்கிய கணேசப்பெருமானே! தேவரீருடைய திருவடியைப் பணிந்தோம் எ - று.

தமையிழந்து என்பதற்குத் தற்போதமொழிந்து என்பது பொருள். பரம் - தனக்குமேல் நாயகமில்லாதது. (கசு)

சகல லோகமும் படைத்தளித் தழிக்குந் தற் பரமா
யகில லோகத்தும் புகலிடந் தனக்கிலா வமைவாய்ப்
புகலு லோகங்க ளனைத்துக்கும் புகலிடந் தானும்
பகவ னாகிய கணேசனின் பதமலர் தொழுதாம்.

(இ - ள்) எல்லாவுலகங்களையுஞ் சிருட்டிசெய்து காத்துத் துடைக்கின்ற தனக்குத்தானே பரமாகி, உலகமுழுவதிலும் பொருந்திய புகலிடந்தனக்கில்லாது சொல்லுகின்ற உலகங்களெல்லாவற்றுக்கும் புகலிடந்தானாகி, பகவானாகி விளங்கிய கணேசப்பெருமானே! தேவரீருடைய திருவடித்தாமரையைப் பணிந்தோம் எ - று.

பகவன் - அறுகுணச்செல்வன். அவை சர்வஞ்ஞத்துவம் சர்வேசுவரத்துவம் சர்வநியந்திருத்துவம் சர்வாந்தர்யாமித்துவம் சர்வகற்பிதத்துவம் சர்வசத்தித்துவமென்ப புமே அன்றியும், தன்வயத்தனாதல் முதலிலனாதல் உடம்பிலனாதல் எல்லாநலனுமுள்ளனாதல் எங்குமவியாபகனாதல் எவற்றிற்குங்காரணனாதல் என்பது முண்டு. (கஎ)

உகத்துக் காதியாய்த் தேவருக் காதியா யுலோர்
சகத்துக் காதியாய்ச் சுரர்களுக் கீசராய்ச் சுடரு
மகத்துக் கீசராய்க் கணங்களுக் கீசராய் மதிப்போ
ரகத்துக் கூடிய கணேசனின் னடியிணை தொழுதாம்.

(இ - ள்) உகத்துக்கு முதலாகி, தேவர்களுக்கு முதலாகி, உலகத்துக்கு முதற்பொருளாகி, தேவர்கட்குக் கடவுளாகி, பிரகாசிக்கின்ற யாகத்திற்குக் கடவுளாகி, கணங்கட்கெல்லாம் பிரபுவாகி, பெரியோருடைய மனத்திற் பொருந்திய கணேசப்பெருமானே! தேவரீருடைய உபயபாதங்களைப் பணிந்தோம். எ - று. (கஅ)

இராசதத் தொழி லாகிய சிருட்டியை யியற்ற
விராவி ராசதத் துருக்கொடு பிரமனாய் மேலாய்ப்
பராவு வித்தைக ளனைத்திற்கும் பயில்பிறப் பிடமாய்
யொராது நின்றருள் கணேசநின் னொளிபதந் தொழுதாம்.

(இ - ள்) இராசதகாரியமாகிய படைத்தலைச்செய்ய, இராசதங்கலந்த உருவத்தைக்கொண்டு பிரமனாகி, மேம்பட்டுத் துதிசெய்யும் வித்தைகளெல்லாவற்றுக்கும் சொல்லுகின்ற பிறப்பிடமாகி, நீங்காது(எங்கும்) வியாபித்திருக்குங் கணேசப்பெருமானே! தேவரீருடைய பிரகாசிக்கின்ற திருவடியைப் பணிந்தோம் எ - று (ககூ)

சோர்வி லாதசாத் துவிதத்தற் றொழிலெனுந் திதிக்குச்
சார்வ தானதா மதந்தனி லுருவுகொண் டரியாய்த்
தீர்வி லாப்பகை யசுரரைச் செகுத்திருந் தேவர்க்
கார்வ மேயருள் கணேசநின் னருட்பதந் தொழுதாம்.

(இ - ள்) குறைதலில்லாத நல்ல சாத்துவிதகாரிய மென்று சொல்லப்படும் இரட்சித்தலைச்செய்தற்கு, பொருந்தியதாகிய தாமதகுணத்தினிலுருவுகொண்டு விஷ்ணுவாகி, நீங்குதலில்லாத பகைமையுடைய அசுரர்களைக் கொன்று, பெருமைவாய்ந்த தேவர்களுக்கு ஆசையையே யருள்செய்கின்ற கணேசப் பெருமானே! தேவரீருடைய அருள்வடிவாகிய திருவடியைப் பணிந்தோம் எ - று (உ0)

தாமதத் தொழி லானசங் காரமாற் றுதற்குத்
தோமகற் றுசாத் துவிதத்திற் றோன்றுருத் திரனா
யேம முற்றிமை யோர்முனி வோரெலா மிறைஞ்சுஞ்
சேம வைப்பதாங் கணேசநின் சேவடி தொழுதாம்.

(இ - ள்) தாமதத்தொழிலாகிய சங்காரகிருத்தியத்தைச் செய்வதற்கு, குற்றத்தை விலக்குஞ் சத்துவகுணத்துடன் றோன்றிய உருத்திரனாகி, இன்பமடைந்து தேவர்களும் முனிவர்களும் யாவர்களும் பணியச் சேமநிதியாகிய கணேசப்பெருமானே! தேவரீருடைய செவ்வியதிருவடியைப் பணிந்தோம் எ - று (உக)

கிரண பந்தியாற் பயிரையுங் கிளர்சுதைப் பெருக்காற்
பரவு தேவர்க டமையு மகிழ்வித்துப் பார்ப்பார்க்
கரச னாயுல கத்துவெப் பறுத்திடுந் திங்கட்
சொருவ மாகிய கணேசநின் றுணையடி தொழுதாம்.

(இ - ள்) கிரணவரிசையினாற் பயிர்களையும், விளங்குகின்ற அமுதப்பெருக்கினாற் றுதிசெய்கின்ற தேவர்களையும் விருப்புறச்செய்து, வேதியர்களுக்கு மன்னவனாகி, உலகத்திலுள்ள வெப்பத்தை யொழித்திடுஞ் சந்திரசொரூபியாகிய கணேசப் பெருமானே! தேவரீருடைய உபயதிருவடியைப் பணிந்தோம் எ - று (உஉ)

ஒளிபயி ழும்பதாய மேகவா யுவினுரு வாகி
விளிப்பில காலங்க டெரிப்பதாய்த் தொழிலெலாம் விளைத்துக்
களிப்ப தாய்ப்பல சத்தி தானசெங் கதிராய்த்
தெளிப்ப நின்றருள் கணேசநின் சேவடி தொழுதாம்.

(இ - ள்) பேரொளிப்பிழம்பாகி, மேகம் வாயு இவற்றினுருவாகி, அழிவில்லாத காலங்களைக் (கணக்கிட்டுக்) கட்டளைப்பதாகி, (சிருஷ்டியாகி) கிருத்தியங்களையெல்லாஞ்செய்து சந்தோஷிப்பதாகி, பலசத்திகளாகிய சூரியனாகி, உண்மையாக விளங்கியருளுங் கணேசப்பெருமானே! தேவரீருடைய சிவந்ததிருவடியை யாங்கள் பணிந்தோம் எ - று. (உ௩)

நிரப்பி றன்மமாய்த் துறக்கமாய் நிரந்தரத் தூமமாய்த்
தரைச்சொ ரூபமாய்ச் சமுத்திர மாய்த்திசைச் சுரராய்க்
கரப்பி லாவுல கனைத்துமாய்க் கலந்துநின் றருளும்
பரப்பி ரமமாங் கணேசநின் பாதங்க டொழுதாம்.

(இ - ள்) குறைவில்லாத தருமமாய், மோக்ஷமாய், நிறைந்த தத்துவங்களாய், பிருதிவியின் சொரூபமாய், சமுத்திரமாய், திக்குப்பாலகர்களாய், கெடுதலில்லாத வுலகத்தில் எல்லாம (தானாக அவற்றுட) கலந்து விளங்கியருளும் பரப்பிரமமாகிய கணேசப்பெருமானே! தேவரீருடைய திருவடிகளைப்பணிந்தோம். எ - று (உ௪)

சாமி நின்னிரு தாணமலர் சார்ந்தவ ரெல்லா
நாம வெம்பிணி நலிவொரீஇ நற்சுக மடைவ
ராமி தைத்தெரிந் தியாங்களு முனைச்சர ணடைந்தே
மேம மலகுறக் காத்தியென் றேத்தின மிரந்தேம்.

(இ - ள்) கடவுளே! தேவரீருடைய உபயபாததாமரைகளை யடைந்தவர்கள் யாவரும், அச்சந்தருங் கொடிய பிணித்துன்பம் நீங்கி நல்லசுகத்தையடைவார்கள், ஆகிய இதனை யுணர்ந்து அடியேங்களுந் தேவரீரைச் சரணமடைந்தோம் நன்மை யதிகரிக்கும்படி (அடியேங்களையுந் தேவரீர்) காப்பாற்றுக வென்று துதித்தோம் யாசித்தோம் எ - று (உ௫)

என்று மூவரு முபாசித்த வியல்பிது வாமென
றன்று நான்முகன் வியாதனுக் கருளிய தாக
நன்று தேர்ந்தனை யினியவர் பெற்றநல் வரமு
நின்று கேளென நிகழ்த்துவன் பிருகுமா தவனே.

(இ - ள்) என்றிவ்வகையாக மூவரும் உபாசனைசெய்த தன்மை யிதுவாகுமென்று, அக்காலத்திற் பிரமதேவன் வியாதமுனிவனுக்கு அருளிச்செய்ததாகநன்றாக வுணர்ந்தனையா? இனி அம்மூவர்கள் பெற்ற நல்லவரங்களும் (ஒரேவழியில் மனதை நிறுத்தி) நின்று கேட்பாயாகவென்று, பெருந்தவசியாகிய பிருகுமுனிவன் (சோமகாந்தமன்னனுக்குச்) சொல்லத்தொடங்கினன் எ - று. (உ௬)

மூவருமுபாசித்தபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௮௬௫

மூவரும் வரம்பெறுபடலம்.

மூவரும் வழிபடு முறைமை யோதுறு
மேவிய காதலின் வியாத மாமுனி
தேவருங் களுக்கிறை செய்த நன்றியை
யோவற மொழிகென வுரைக்கும் வேதனே

(இ - ள்) திரிமூர்த்திகளும் விநாயகோபாசனைசெய்த முறைமையைக் கூறவும், வியாதமுனிவன் பிரமதேவரே! உங்களுக்குத்தலைவராகிய கணேசப்பெருமான்செய்த நன்மையைக் குறைவின்றிச் சொல்லவேண்டுமென்ப பொருந்திய விருப்புடனே கேட்க, பிரமதேவன் சொல்லலாயினன் எ - று.

செய்தநன்றியென்றது ஈண்டு அருளியவரத்தை. (க)

துதித்திரந் தெதிருற்றுத் தொழுது நிற்றலுங்
கதித்தவைங் கரப்பிரான் கருணை கூர்ந்துநுந்
துதிக்கிரங் கினமிது துதிக்கின் றோருக்கு
மதித்தன வழங்குறும் வரமுங் கொள்கென்றான்.

(இ - ள்) (நாங்கள்) தோத்திரஞ்செய்து யாசித்து எதிராகப் பணிந்து நிற்கவும், சிறந்த ஐந்து திருக்கரங்களையுடைய கணேசப்பெருமான் கிருபைமிகுந்து, உங்கள் தோத்திரங்கட்கு மனமுருகினேம். இத்தோத்திரத்தால் துதிசெய்கின்றவர்களுக்கு (அவர்கள்) மதித்தபொருள்களைக் கொடுப்போம், வேண்டிவரத்தையும் நீங்கள் பெறுவீர்களாகவென்றான் எ - று. (உ)

இரங்குபொன் னூபுரப் பதத்தி னெம்பிரா
னுரங்கொளும் பத்திமை யுதவிக் காப்பதே
வரங்கடைக் கணித்தொரு பணிவ ழங்கினுஞ்
சிரங்கொடு செய்குது மென்று செப்பினேம்

(இ - ள்) ஒலிக்கின்ற பொன்னூலாகிய பாதசரத்தை யணிந்த திருவடியையுடைய எமதுபெருமானே! (தேவரீரிடத்தில்) உறுதியாகிய பத்திமையை யநுக்கிரகித்துக் காப்பதே (விரும்பிய) வரமாகும். திருக்கடைக்கணோக்கஞ்செய்து ஓர் தொழிலைக் கட்டளையிட்டாலும் (அதனைத்) தலையாற்செய்வோமென்று கூறினேம் எ - று.

சிரங்கொடுசெய்தல் - தலைமையாகக்கொண்டு செய்தலென்பதாம். (ங)

முக்குணத் துதித்துளீர் முடிவில் பத்தியும்
விக்கின மின்மையு மிதப்ப நல்கினந்
தக்கநம் பணிகளுந் தருதுங் கேண்மினென்
றக்கண முக்கணெம் மடிகள் சாற்றுமே.

(இ - ள்) மூன்றுவிழிகளையுடைய எமது விநாயகக்கடவுள் முக்குணவசத்தராகப்பிறந்தவர்களே! அழிவில்லாத பத்தியும் இடையூறில்லாமையும் மிகுதியாக அநுக்கிரகித்தோம். தகுதியாகிய நம்முடைய தொழில்களையும் (உங்களுக்குக்) கொடுப்போம் கேட்பீர்களாகவென்று, அப்பொழுது மேலுஞ்சொல்லுகின்றார் எ - று. ()

வேறு

இராச தத்துரு வாயயன் யாவையும் படைக்க
வொராது காக்கச்சாத் துவிதமா யொளிமணி வண்ணன்
மராது டைக்கதா மதத்துரு வாயுருத் திரனெனு
நராவ ணைத்தபூங் குழையிரு னைறந்திவை யளித்தான்.

(இ - ள்) பிரமன் இராசதத்துருவமாய எல்லாவற்றையுஞ் சிருட்டிப்பானாக. பிரகாசிக்கின்ற மணிவண்ணனாகிய திருமால் சாத்துவிகரூபியாய் (அவற்றையெல்லாம்)நீங்காமற் காக்கக்கடவன் உருத்திரன் தாமதத்துருவாய் அழிக்கக்கடவன் என்று, சர்ப்பங்களாலாகிய அழகிய குண்டலமணிந்த விநாயகக் கடவுள் வரமளித்து (பின் வரும்) இவற்றை (எங்களுக்குக்) கொடுத்தனர் எ - று (௫)

வேத சாத்திர புராணங்கண் மிக்ககலை சிருட்டிக்
கேத நீங்கிய வலியொடு மெனக்கினி தளித்துக்
காதல் யோகத்தின் வேண்டுருக் கைக்கொளுஞ் சத்தி
யோது காவல்செய் வலியொடு மாயனுக் குதவி.

(இ - ள்) வேதங்கள் சாத்திரங்கள் புராணங்கள் மிக்ககலைஞானங்கள்(ஆகிய இவற்றை) படைப்புக்கு வேண்டிய குற்றமொழிந்த வலிமையுடன் எனக்கு நன்றாகக்கொடுத்து, விரும்பத்தக்க யோகவல்லமையால் வேண்டியவடிவங்களைக் கைக்கொள்ளத்தக்க சத்தியும், சொல்லுகின்ற காப்புத்தொழில்செய்யும் வல்லமையும் விண்டுமூர்த்திக்குக் கொடுத்து. எ - று

மாயன் - மாயைசெய்வோன் (௬)

ஏக மாகிய வக்கர சடக்கர மனுவு
மேக னாயுல கனைத்தையு மிறுத்திடும் வலியு
மேக நாயக னுருத்திரற் கருளினெ னனனு
வேக மாகிய பூவினன் வியாதனுக் கிறுத்தான்.

(இ - ள்) ஏகாட்சரமந்திரமும், சடட்சரமந்திரமும், ஏகனாகி உலகங்களையெல்லாம் அழிக்கும்வல்லபமும், ஏகநாயகனாகிய கணேசப்பெருமான் உருத்திரமூர்த்திக்குக்கொடுத் தருளினரென்று, ஒப்பில்லாததாகிய தாமரைமலரிலெழுந்தருளியுள்ள பிரமதேவன் வியாதமுனிவனுக்குக் கூறினன். எ - று (௭)

இன்ன வாவர மூவரும் பெற்றதென் றறிவேன்
மன்னர் மன்னவன் மகிழ்கொள வுரைத்தருள் வரதன்
றன்னு ளேயுல கனைத்தையுங் காட்டுதன் மையையு
முன்னி யோதுத றொடங்கினன் முதிர்புகழ்ப் பிருகு

(இ - ள்) மிக்ககீர்த்தியுடைய பிருகுமுனிவன் மூவரும் வரம்பெற்றது இன்னவகையென்று, எறிகின்ற வேற்படைதாங்கிய இராசராசனாகிய சோமகாந்தன் களிப்பெய்தக்கூறி, அவ்விநாயகக் கடவுள் தனக்குள்ளே உலகங்களையெல்லாங் காட்டிய வகையையுஞ் சிந்தித்துச் சொல்லத்தொடங்கினன் எ - று.

வரதன் - சிரேஷ்டமானவன், வரங்களைத் தருவோன். (௮)

மூவரும் வரம்பெறுபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௩௦௩.

விசுவரூபங்காட்டியபடலம்.

கறங்கு வெணடிரைப பாறகடற கணபடை கொளளு
மறங்கொள சக்கர வாளவ னாகிய வியாத
வுறங்க லினறிநன றுணாட்தி யெனமது வொழுகு
நிறங்கொ ளமபுயச சேககையா னிதுநிகழ்த தினனால.

(இ - ள) சததிககினற வெளளிய அலையையுடைய திருப்பாற கடலிலே துயிலபுரியும, கொலைததொழிலைக கொணட சககராயுததைதை யேநதிய திருமாலின அவதாரமாகிய வியாதமுனிவனே! சோாவிலலாமல நனருககமிததுக கேடபாயாக வெனறு, தேனசிநதுஞ செநநிறமபொருநதிய தாமரைமலாப பீடததையுடைய பிரம தேவன இதனைக கூறுவாருயினன எ - று

திருமாலின சககரம சுதரிசனமெனபபடும (க)

தேவ தேவரு மறிவருந தேவதே வனைபபின
மேவு மாாவமோ டடுததிடு வியாத நானிறைஞசி
மூவு ருதவ வுலகினைப படையென மொழிநது
யாவ தாககுமா றிதனையு மியமபென விரநதேன

(இ - ள) தேவாகளுககுத தேவாகளாயுளளவாகளும அறிதறகரிய பெருந தேவனாகிய கணேசமூாததியை அடையும ஆசையுடனே யாசிரயிதத வியாதமுனிவனே! நான (கணேசபபிரானைப) பணிநது, அழிவிலலாதவரே! தேவரீா உலகஙகளைப படைககவெனக கடடளையிடடீா செயயததககது யாது? இதனையுங கூறுகவெனறு யாசிததேன. எ - று.

மூவுருதவவுலகினை யெனறும பாடம. (உ)

கருணை நாயகன கடைககணிதத தெனையெதிா நோக்கிப
பொருவி லாதவென வயிறறினுட புகுநதுலக கனைதது
மொருவு றுவகை நோககவென றுயிரென வெனனை
யுருவ வாாகரப புழைவழி யுளளுற விடுததான்.

(இ - ள) கிருபாநாயகராகிய விநாயககடவுள கடைககணணைககுச செயது என்னையெதிரேபாாதது, சமானமிலலாத எனவயிறறினுளளே பிரவேசிதது உலகங களையெல்லாம (ஒனறும) நீஙகாவகையாகக காணுகவெனறு, உயிரைப்போல எனனை அழகுபொருநதிய நெடிய துதிககையின துளைவழியே உடசெலலவிடுததனா எ - று.

நடஙகை யுளளுற யானபுகும பொழுதுதாள வணஙகிக
கடஙக விழுககுமா னனபபிரான கணணருள வாஙகி
யுடஙகு நினறமற றிருவரு முளளுறப புகுநதா
ரடஙக நோககினெ னவனவயிற றகிலலோ கமுமே

(இ - ள) விசாலமான துதிககையுளளே யான பிரவேசிககும பொழுது, சமீபததிலிருநத (விஷ்ணுருததிராகளாகிய) ஏனையவிருவரும, மதசலததை யொழுககும (யானை)முகததையுடைய விநாயகக கடவுளுடைய திருவடியைப்பணிநது அவரு

டைய திருவிழியருளையடைந்து, (துதிக்கையின்) உள்ளேயடையப் புகுந்தார்கள். (நாங்கள் மூவரும்) அவர் வயிற்றிலிருந்த லோகங்களை யெல்லாம் முழுவதும் பார்த்தோம். எ - று. (௪)

வேறு

அகட்டிடையே யளவிறந்த வண்டங்க ளுறங்கிடந்த
பகட்டெழிலசே ரவற்றொன்ற னுட்புகுந்து பார்ப்பளவிற்
றகட்டுவரா லுகள்கடல்சூழ் தரைநடுவு மதன்கீழ்மேன்
முகட்டளவும் பலவுலகு முறைவளத்தி னிருந்தனவால்

(இ - ள்) (அவ்விநாயகக் கடவுளுடைய) வயிற்றிலே எண்ணிறந்த அண்டங்கள் பொருந்தவிருந்தன. பெருமைபெற்ற அழகமைந்த அவ்வண்டங்களுளொன்றிற் பிரவேசித்துப்பார்க்கையில், அச்சவடிவாகிய வராலமீன்கள் புரளுகின்ற கடல்சூழ்ந்த தரைநடுவிலும் அதன்கீழும் மேலேயுச்சியளவும் அநேக உலகங்களும் வளமிகுந்து வரிசையாயிருந்தன. எ - று. (௫)

நாதங்க ளோரிரண்டாய் நலமருளுஞ் சதாசிவமாய்ப்
பாதங்க ளொருநான்கும் பதநான்கும் பயில்வித்த
வேதங்க ளறியாத விநாயகர்தந் திருவருளாற்
பூதங்க ளோரைந்தும் புரையின்றி யெதிர்கண்டாம்.

(இ - ள்) நாதங்களோரிரண்டாகி, நன்மை செய்கின்ற சதாசிவமாகி, நான்கு பாதங்களும் நான்கு பதங்களும் பயில்வித்தனவாகிய வேதங்களும் அளவிட்டறியாத கணேசப்பெருமானுடைய திருவருளினால் ஐம்பூதங்களையுங் குற்றமின்றி யெதிரே பார்த்தோம். எ - று.

நாதங்கள் - இருவகை யிந்திரியங்களெனினுமாகும். (௬)

பண்டையூ ழிகடோறும் படைத்தவரும் பரித்தவரு
மண்டுபே ருலகனைத்தும் வருத்தமறத் துடைத்தவருங்
கொண்டபே ரதிகாரங் கொள்ளாது விடுத்தருளே
கண்டுபே ரானந்தக் கடன்மூழ்க வெதிர்கண்டாம்.

(இ - ள்) முன்னேகழிந்த ஊழிகளிலெல்லாஞ் சிருட்டிசெய்தவர்களும் காத்தவர்களும் நெருங்கிய பெரிய உலகங்களையெல்லாம் வருத்தமின்றிச் சங்கரித்தவர்களும் (தாம் அக்காலத்தில்) கொண்ட பெரிய அதிகாரங்களைக் கொள்ளாமல் விடுத்து, திருவருளையே தரிசித்து, பேரானந்தக் கடலின் மூழ்கியிருக்க (அவர்களையும்) எதிரிற் பார்த்தோம் எ - று (௭)

அதிகாரம் புரிகின்ற மலரவனு மாயவனு
நதிபாயுஞ் சடைமவுலி நாயகனு மெண்டிசையின்
வதிவோரு மருக்கருருத் திராவசுக்கண மருத்துவருங்
கதிசேரு நவகோளுங் காதலிப்ப வெதிர்கண்டாம்.

(இ - ள்) அதிகாரத்தைச் செய்கின்ற பிரமதேவனும் திருமாலும் கங்காநதி பாய்கின்ற சடைமுடியையுடைய உருத்திரனும், எட்டுத்திசைகளில் வசிக்கும் திக்குப

பாலர்களும் சூரியர்களும், உருத்திரர்களும், வசுக்களும், மருத்துக்களும், உயர்கதி யையடைந்த நவக்கிரகங்களும், ஆசையுற எதிர்கண்டோம் எ - று.

எண்டிசையின் பதியோர் - இந்திரன் அக்கினி இயமன் நிருதி வருணன் வாயு குபேரன் ஈசானன். அருக்கர் பன்னிருவர் - தாத்துரு சக்கிரன் ஆரியமன் மித்திரன் வருணன் அஞ்சுமான் இரணியன் பகவான் திவச்சுவான் பூடன் சவித்துரு துவட்டன். உருத்திரர் பதினொருவர் - மாதேவன் அரன் உருத்திரன் சங்கரன் நீலலோகிதன் ஈசானன் விசயன் வீமதேவன் பவோற்பவன் கபாலி சௌமியன். வசுக்கள் எண்மர் - அனலன் அனிலன் ஆபசைவன் சோமன் தரன் துருவன் பிரத்தியூசன் பிரபாசன். மருத்துக்கள் எழு - கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு கீழ் மேல் பல யோனியுயிர். நவகோள் - சூரியன் சந்திரன் அங்காரகன் புதன் குரு சுக்கிரன் சனி இராகு கேது (அ)

கின்னரர்கந் தருவர்கரு டர்களியக்கர் கிம்புருடர்
தந்நிகர்விஞ் சையர்சித்தர் சாத்தியர்பன் னகருரகர்
துன்னியமற் றமரரையுந் தொகுமசுர ரரக்கரையு
மன்னியவன் னவர்க்குரிய மாதரையு மெதிர்கண்டாம்

(இ - ள்) கின்னரர்கள் கந்தர்வர்கள் கருடர்கள் இயக்கர்கள் கிம்புருடர்கள் தமக்குத்தாமே நிகராகிய வித்தியாதரர்கள் சித்தர்கள் சாத்தியர்கள் பன்னகர்கள் உரகர்கள் நெருங்கிய மற்றைத் தேவசாதியரையும், தொகுதியாகிய அசுரரையும், அரக்கரையும், பொருந்திய அவரவர்க்குரிய மனைவியரையும் எதிர்கண்டோம் எ - று.

ஓவிலருட் சனகாதி யோகியர்நா ரதாதி
தேவர்முனி வரர்சிட்டர் முதலோர்கள் செப்பரும்
பாவுபுகழ்ப் பிரமமுனி வரர்மனிதர் மிடைந்தமையுங்
காவினமலை கடலாறு தடமினையு மெதிர்கண்டாம்

(இ - ள்) குறைவில்லாத அருள்வாய்ந்த சனகாதியோகிகளும் நாரதர் முதலியவர்களும், தேவர்களும், முனிசிரேஷ்டர்களும், சிஷ்டர் முதலாகச்சொல்லத்தக்க திவ்வியபுகழையுடைய பிரமரிஷிகளும், மனிதர்களும் ஆகியவர்களையும், கெடுதலில்லாத மலை கடல் ஆறு தடாகம் (முதலிய) இவற்றையும் எதிர்கண்டோம் எ - று.

சிங்கமுதன் மிருகங்க டிகழ்கலுழன் முதற்பறவை
தங்கியகற் பகமாதி தருக்காம வல்லிமுதல்
கொங்கிணர்ப்பூம் பசுங்கொடியும் பதுமாதி பன்மலரும்
பங்கமறு சராசரமாம் பரப்பனைத்து மெதிர்கண்டாம்.

(இ - ள்) சிங்கமுதலிய மிருகங்கள், விளங்குகின்ற கருடன் முதலியபறவைகள், பொருந்திய கற்பகமுதலிய தருக்கள், காமவல்லி முதலியமகரந்தமமைந்த மலர்க்கொத்தினையுடைய அழகிய பசுங்கொடிகள், தாமரை முதலியபலபுட்பங்கள், குற்றமற்ற சரம் அசரமாகிய உலகமுழுவதையும் எதிர்கண்டோம் எ - று. (௧௧)

வேறு

நாற்பிறப்பி னெழுவகைத்தோற் றத்தெண் பத்து நான்குநூறா
யிரமாம் யோனிபேதம், மேற்புடைய பல்பொருளு மண்டந் தோறு மின்
வகையே யெதிர்நோக்கி யெண்ணில் கால, நோற்பவரு மெய்தரிய பரம

ணந்த கொண்டருந்திப புறத்தேக நோககி னேமங், காற்றலில மாதலினு லெனன செயகே மவனடியே பரசினமா லளவில வேதம.

(இ - ள்.) நாலவகைப்பிறபபினுலேயான எழுவகைத் தோற்றததையுடைய எண்பததுநானகிலட்சம யோனிபேதம பொருநதிய பல பொருளகளுமம, அண்டஙகளி லெல்லாம இவ்வகையாக நேரேபார்ததது, எண்ணிலலாத காலமவரையில, நோறபவா களும அடைதறகரிய பேரானநததததை மொணடுபெருகிப்புறததேசெலலயபாரததோம. அபபொழுது வலலபமடைநதிலேமானபடியால, யாதுசெய்வோம அளவிலலாத வேத மொழிகளால் அவவிநாயகருடைய திருவடியைத துதிததோம. எ - று. (கஉ)

நாறபிறப்பு - அணடசம. சுவேதசம, உறபீசம, சராயுசம, அவறறுள முட் டையினின்று தோனறுவன அணடசம, வியாவினின்று தோனறுவன சுவேதசம, கருபபையினின்று தோன்றுவன உறபீசம, பூமியினின்று தோனறுவன சராயுசமெ னப்படும.

எழுவகைததோறறம, தேவா, மனிதா, விலஙகு, புள நீரவாழ்வன, ஊாவன தாவரம எனபனவாம

எணபததுநானகு நூறுயிரம யோனிபேத மெனபதை,

“ஊாவபதினொனறு மொனபது மானுடம
நீரபபறவை நாற்காலோா பபபதது—சீரிய
பநதமாந தேவா பதினைன கயனபடைதத
அநதமில சீததா வரநா லநது.”—எனபதனுனறிக (கங)

கறஙகுதிரைப பெருஙகடலசூழ நெடிய வேலைக கதுவுமணா லளவி டினு மளவு காணுத, திறஙகுலவு மணடமெலா மநடிற றேறறுந தே வாகடந தேவேச கணேச நினபொற, பிறஙகுபத மடுததோாகண முத்தி யெய்திற் பெணுமடி யேஙகளுககுப பேறு காத, வறஙகுலவு பொருளா காம முளவோ வென்னு மருநதுதிகேட டருளகூாநதஙக கமல நாதன

(இ - ள) சுழலகினற அலையையுடைய பெரியகடலைச் சூழ்நத நீணடகடற கரையைக கலஙகச்செயகினற மணலகளையளவுகணடாலும, அளவுகாணமுடியாத வலி மிகுந்த அணடங்களை யெலலாம் வயிறறிலே வைததுததோனறச செயயுந தேவாக ளுககெலலாந தேவேசனே! கணேசபபெருமானே! தேவரீருடைய அழகிய திருவடி யை யடுததவாகள் மோடசததை யடைவாாகளாயின விருமபுகினற அடியேஙகளுக குப பெறுதறகரிய அறமும பொருளும இனபமும உளவோ’ எனறு, யாஙகள கூறிய அரிய தோததிரததைககேடடு, அமலராகிய கணேசபபெருமான (எஙகளபேரில) திரு வருள மிகுநதது. எ - று (கச)

புகுநதவழி யேயெனனைப புறததுப போககிப பொலஙகுழைசே ரிருகாதின வழியே யைநதேன, நெகிழநதொழுகு மலாததுளவ வீதழி மாலைத தேவரையும புறமவிடுநதா னெனறுவேத, னெகிழ்நதவுள வியா தனுககுப புகனறு னெனறு நெடியதவப பிருகுமுனி சோம காநத, னக நதழைய வுரைததயனு ருலக மீள வருநதவனுசெய தாக்கியது மறையப புகககடவ.

(இ - ள்) உள்ளேபிரவேசித்த வழியாகவே யென்னைப் புறத்தேசெல்லவிடுத்து அழகிய குண்டலமணிந்த இருசெவிகளின் வழியாக, பசியதேனுடைய துளிதொழுகு கின்ற மலர்கள் பொருந்திய துளவத்தையும் கொன்றையையும் (முறையே) மாலையாக வணிந்த விஷ்ணு உருத்திரனென்னுந் தேவர்களைப் புறத்தே செல்லவிடுத்தனனென்று, பிரமதேவன் உருகிய மனத்தையுடைய வியாதமுனிவனுக்குக் கூறினனென்று, பெருந் தவத்தைச்செய்த பிருகுமுனிவர் சோமகாந்தனுடைய மனங்களிப்பவுரைத்து, மீண் டும் பிரமதேவன் அரியதவத்தைச்செய்து உலகத்தைப் படைத்தவண்ணமையுங் கூறத் தொடங்கினன். எ - று (௧௫)

விசுவரூபங்காட்டிய படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௲௩௱

பிரமசிருட்டிப்படலம்.

மதமிகு கொழுங் கவுண் மாமுகவ
னுதரத் தினின்றுநீங் கியபினீ புரியு
மதனைப் புகலுவா யெனவங் கைகுவித்
திதமிகு வியா தனிரந் தனனே

(இ - ள்) மதமானது மிகுந்தொழுகுகின்ற கன்னத்தையுடைய யானைமுகக் கடவுள் திருவயிற்றினின்று நீங்கிய பின்னர், நீ செய்த அவற்றைச் சொல்லுவாயாகவென அழகிய கையைக் கூப்பி நன்மை மிகுந்த வியாத முனிவன் (பிரமதேவனை) யாசித் தனன். எ - று. (௧)

முருகா ருமலர்ப் பிரமன் முரல்வண்
டருகா ருமதக் கவுளா னைமுக
னிருகா ளுமிறைஞ் சியிரும் பிறவி
யொருகா லுமுறாக் கதையோ துவனால்.

(இ - ள்) வாசம்பொருந்திய தாமரை மலரிலுள்ள பிரமதேவன், ஒலிக்கின்ற வண்டுகள் அருகே யாடாநின்ற மதப்பெருக்கமைந்த கவுளையுடைய யானைமுக விநாய கக்கடவுளது உபய திருவடியைப் பணிந்து பெரிய பிறவியை ஒருகாலத்திலும் அடை யாத சரித்தத்தை உரைக்கத் தொடங்கினன். எ - று.

கடவுள்-யானைமதஞ் சொரியுமிடம் இரும்பிறவியென்றது நீங்காமைபற்றி.

இருக்கா தியினு லறியா விறைவ
னுருக்கா தலினு னினையா துளமார்
தருக்கா லுலகந் தரவேர் முயல
வெருக்கா ணவெழுந் ததுவிக் கினமே.

(இ - ள்.) இருக்கு முதலிய வேதங்களால் அறியப்படாத தலைவராகிய கணே சப்பெருமானது திருவுருவத்தைக் ஆசையோடு தியானஞ்செய்யாது மனதிற் பொரு

நதியா இறுமாப்பினால் உலகத்தைப் படைக்கும்படி எத்தனிக்க, இடையூறுண்டு அச்சமுண்டாகும்படி தோன்றியது. எ - று (௩)

முடியொன் றிருநீண் முகமூன் றுவிழி
கடியொன் றியநாற் சிகைகா துகளைந்
தடியா றுகையே ழொடுமச் சமுற
நெடிதாக வையினின் றனபற் பலவே

(இ - ள்.) ஒரு சிரமும், இரண்டு நீண்ட முகங்களும், மூன்று கண்களும், மணம்பொருந்திய நான்கு சடைகளும், ஐந்து செவிகளும், ஆறு கால்களும், ஏழு கைகளுங்கொண்டு அச்சமுண்டாகப் பெருவடிவத்துடன் பற்பல உருவங்கள் தோன்றின எ - று (௪)

இவ்வா றெழிலின் றியுறுப் பெவையு
மொவ்வா தனவா யெதிருற் றனைத்
துவ்வா னமிழ்தந் தொடாதே வரினென்
னைவா யறிவுங் கெடவார்த் தனவே.

(இ - ள்) இவ்வகையாக அழகில்லாது அவயவங்கள் யாவும் (ஒன்றற்கொன்று) ஒத்திராதனவாகி, அவை யெதிர்ப்பட்டு, உண்ணத்தக்க சிறந்த அமிர்தத்தைப் பின்றொடர்ந்த சேவரைப்போல என்னுடைய ஐவகைத்தான அறிவுங் கெடும்படி ஆர்ப்பரித்தன எ - று

துவ்வான் என்பதில் - து - புனிதமென்னுமொழிக்கும் (௫)

எள்ளுஞ் சிலவெற் றவெழுஞ் சிலவாய்
விள்ளுஞ் சிலவெய் துறுபாவை விளிக்
கொள்ளுஞ் சிலகூ டியலைத் தவிழத்
தள்ளுஞ் சிலதாக் கினசிற் சிலவே

(இ - ள்) (அவ்விகார ரூபங்களிற்) சில இழித்துப்பேசும் சில அடிக்க வெழும், சில வாய்திறந்துபேசும், சில கொடுமை பொருந்திய கடப்பாவையைச் செய்யும்; சில ஒன்றுகூடியலைத்தவிழும்படி தள்ளும் சிற்சில மோதின (இவ்விதமாக வெண்ணிறந்த துன்புகள் செய்தன) எ - று. (௬)

இவ்விக் கினமென் கொலெழுந் தநமைக்
கவ்விக் கடுகின் றதெனக் கவலுஞ்
செவ்விக் கணெழுந் ததொர்சிந் தையெனக்
கவ்விக் கினராச னருட் டிறனால்

(இ - ள்) இவ்விடையூறு யாதோ? (இவ்வாறு) எழுந்து நம்மைக் கவ்விக்கொண்டு துன்புறுத்துகின்றதென்று, மனம் வருந்துஞ் சமயத்திலே, அந்த விக்கினராசப் பெருமானாகிய விநாயகக்கடவுளுடைய திருவருட்டிறத்தினாலே எனக்கோர் எண்ணமுதித்தது எ - று (௭)

முந்தக் கனியா னைமுகன் கழலைச்
சிந்தைக் கணிவைப் [illegible]

மிக்குப் படைப்புக் குவிழைந் தமையாற்
றொக்குத் துயர்செய் தனசூழ்ந் திடவே

(இ - ள்) மூன்று கண்களையும் மதக்களிப்பையு முடைய யானைமுக விநாயகப் பெருமானது திருவடியைக் கையிலுள்ள கனியைப்போலத் தியானஞ்செய்யாது, அயேச்சை மிகுந்து படைத்தற்றொழில் செய்வதற்கு விரும்பினமையால், இடுக்கண் சூழ்ந்து நெருங்கித் துன்புறுத்தது எ - று (அ)

இனிமென் புனலா டியெழுந் துபின்பு
புனிதங் கொடுபூம்புழைக் கைமுகன் மனுவை
நனியெண் ணினலாற் றுனைமந் தொடரும்
துனிதீர் வரிதென் றுதுணிந் திடுநான்

(இ - ள்) (இது கீரவேண்டலின்) இனி மெல்லிய புனலின் மூழ்கியெழுந்து மிகவும் பரிசுத்தனாகி, துவாரம்பொருந்திய கையையுடைய யானைமுக விநாயகப் பெருமானது மந்திரத்தை மிகவுங் கணித்தாலன்றி நம்மைத் தொடர்ந்துள்ள துன்பம் ஒழிதலருமையென்று துணிவுற்றயான் எ - று (௯)

வேறு

விதியுளிமென் புனலாடி வெண்ணீறு மெய்ப்பணிந்து
கதியருளு மேலான காமர்திரு வுருவனைத்து
மதியிலுறத் தியானித்து வளர்யோகத் தினிதிருந்தேன்
பொதிந்தருமவ் வியோகத்துப் போந்ததெனக் கொருகாட்சி

(இ - ள்) விதிப்படி மெல்லிய நீரின் மூழ்கி, உடலில் திருவெண்ணீற்றினை யணிந்து, உயர் பதவியை யநுக்கிரகிக்கும் ஏரம்ப மூர்த்தியின் அழகிய திருவுருவ முழுவதையும் புத்தியிற் பொருந்தத் தியானஞ் செய்து, உயர்கின்ற யோகமாகத்தில் இனிதாகப்பொருந்தியிருந்தேன் பொதிந்துள்ள அந்த யோகத்திலே எனக்கொரு தோற்றம் உண்டாயிற்று எ - று (௧௦)

எழுகடலும் வரம்புகடந் தெங்குமிமிர் புனலிடையோர்
பழுமரத்தி னிலையொன்றிற் பாலனொரு வனதுயிலக்
கழுமலர்வ டுத்தவனைக் கைபெயர்ந்து துயிலெடுத்தே
தொழுகுமத முகத்தொடுதன் னுருவுதெரித் தருளினனே

(இ - ள்) சத்த சாகரங்களும் எல்லைதாண்டி யெங்கும் அதிகரித்துள்ள நீரிலே, ஓர் ஆலமரத்தின் இலையொன்றிலே பாலனுருக்கொண்டொருவன் (யோக நித்திரை செய்ய, (யான்) துன்பமகல அவனைச் சமீபித்துக் கையாற்றட்டி நித்திரை விழிக்கச் செய்தேன் (அவன்) மதமொழுகும் யானை முகத்துடன் (விநாயகக்) கடவுளுடைய திருவுருவத்தைத் தரிசித்தருளினன் எ - று

பழுமரம் – ஆலமரம்

யோகத்திற் காட்சியென்றது ஓர் சொப்பனமெனக் (௧௧)

ஆங்கவனை யடிவணங்கி யடியேற்குச் சிருட்டிமுனந்
தாங்குகவென் றருள்புரிந்தாய் தமியேனு மதுகொண்டு

பாங்குபெற முயலவுற்றேன் பலவிடரு மலைப்பவது
நீங்கினே னினிப்படைக்கு நிலையருளென் றேனெனலும்.

(இ - ள்) அப்பொழுது அவ்விநாயகக் கடவுளைத் திருவடியிற் பணிந்து கடவுளே! அடியேனுக்குச் சிருட்டித் தொழிலைச் செய்கவென்று முன்னமே திருவருள் செய்தீர், எளியேனும் அக்கட்டளையை மேற்கொண்டு தகுதியாக முயற்சி செய்தேன். பல துன்பங்களு முண்டாகி வருத்த அதனையொழிந்தேன் இனிச் சிருட்டி செய்யும் நிலைமையைத் திருவருள் புரிகவென்று கூறினேன் (அப்படியான) சொல்லவும் எ-று.

என்னருளா லாவதென வெண்ணாது நினைவலியா
லுன்னியிட ருழந்தனைமற் றாதினற் முடிவெய்தப்
பன்னுதிமோ ரக்கரத்தைப் பதிலக்கங் கணிமுடிவின்
முன்னுதுமென் றம்மனுவை மொழிந்தருளி னிறைவன்.

(இ - ள்.) என்னுடைய திருவருளால் நிகழ்வதே என்றுகருதாமல், உனது வல்லமையா லாவதென்று கருதித் துன்பமடைந்தனை. இனி, இடையூறில்லாமல் நிறைவேற ஏகாட்சர மந்திரத்தை யுபதேசிப்போம். (நீயதனைப்) பதிலட்சந்தரம் சபிக்கக் கடவாய். இறுதியில் யாம் பிரசன்ன மாவோமென்று திருவாய் மலர்ந்தருளி, இறைவராகிய விநாயகக்கடவுள் அம்மந்திரத்தை யுபதேசித்தருளினர் எ - று. (௧௩)

யோகத்தி னருள்செய்த வுறுதிபிடித் தேவனை
வேகத்தி னும்மனுவை யீராறுவரு டந்தெல்லைத்
தாகத்திற் கமலத்தோ ராளூன்றி நின்றெண்ண
நாகத்தை வயிற்றசைத்த நம்பெருமா னெதிர்நின்றான்.

(இ - ள்) யோகிருக்கையில், திருவருள் புரிந்த வுறுதிமொழியைப் பற்றிக் கொண்டு, ஏகாட்சரத்தாலான அம்மந்திரத்தைப் பன்னிரு வருட காலம் வரையில் நீரிலுள்ள தாமரை மலரில் ஓர் காலையூன்றி நின்று சபிக்க, சர்ப்பத்தை (க்கச்சாக) வயிற்றிற் கட்டிய நமது கணேசப்பெருமான் பிரசன்ன மாயினார் எ - று. (௧௪)

ஒருகரத்தின் மழுப்படையு மொருகரத்திற் கமண்டலமு
மிருகரத்தி னபயவர தமுந்தாங்கி யெதிர்நின்ற
பொருவிலியை வேதங்கட் கெட்டாத பூரணனைக்
கருவிலியைக் கதியிலியைக் கைதொழுது வணங்கினேன்.

(இ - ள்) ஓர் திருக்கரத்தில் மழுவாயுதமும், ஓர் திருக்கரத்திற் கமண்டலமும், இரண்டு திருக்கரங்களில் (முறையே) அபயவரதமுங் கொண்டு எதிரே தோன்றிய ஒப்பில்லாத கணேசப் பெருமானும், வேதங்கட்கு அதீதனாகிய பரிபூரணனும், பிறவியில்லாதவனும், (தனக்கு மேலோர்) கதியில்லாதவனுமாகிய தலைவனைக் கைகூப்பி நமஸ்கரித்தேன். எ - று. (௧௫)

தோற்றுமே யுலகனைத்துந் தோற்றியளி யாதளித்துப்
பாற்றுமே பாற்றியிடும் பண்ணவநின் பதம்போற்றி
தேற்றுமே யுயிரனைத்துந் தேற்றிமல மாயைகன்ம
நீற்றுமே நீற்றியரு ளின்மலநின் பதம்போற்றி.

(இ - ள்) உலகங்களை யெல்லாம் படையாமலே படைத்து, காவாமலே காத்து, அழியாமலே யழித்துவிடுகின்ற தேவனே! உன்னுடைய திருவடிகள் காக்க. தேரா மலே உயிர்களைத் தேற்றி, மலமாயா கன்மங்களை நீக்கியருள்கின்ற மலரகிதனே! உன்னுடைய திருவடிகள் (அடியேனைக்) காக்க. எ - று

இச்செய்யுளால் சிருஷ்டியாதி காரியங்கள் இறைவனுடைய இச்சை மாத்தி ரையாய் நிகழுமெனக் கூறினதாயிற்று. (௧௫)

உரையானு முணர்வானு முடலானு மறிவரியாய்
வரைமார்பும் திணிதோளு மதிமுடியு மலர்ப்பதமும்
விரையார்குங் குமக்கலவை மெய்யணிந்த கோலமுமாய்க்
கரையாநெஞ் சமுங்கரையக் கண்ணெதிர்நின் றனைபோற்றி.

(இ - ள்) வாக்கினாலும் மனத்தினாலும் தேகத்தினாலும் அறிதற்கரியவனே! மலையையொத்த மார்பும் வலிதங்கிய புயமும் சந்திரனையணிந்த திருமுடியும் தாமரை மலர்போன்ற திருவடியும் வாசமபொருந்திய குங்குமச்சாந்தையணிந்த தேகப்பொலிவு மாக, உருகாத மனமுருகும்படி என் கண்ணெதிரே தோன்றியவனே! போற்றி. எ-று.

இன்னவா றேத்தெடுத்தேத்த கோரம்ப னருள்கூர்ந்தே
யுன்னிநீ கொள்வரங்க ளுரையென்ன வெதிர்வணங்கி
நின்னதாள் மறவாத நிலையருளி விக்கினங்க
ளென்னுறு வகையுலகந் தோற்றுவர மருளென்றேன்.

(இ - ள்.) இவ்வகையாகத் துதிசெய்த வெனக்கு எரம்பமூர்த்தி திருவருள் மிகுந்து, நீ விரும்பிக் கொள்ளும்படி (கருதிய) வரங்களைக் கூறுகவென்று வினவ, (யான அப்பெருமானை) எதிரே பணிந்து, தேவரீருடைய திருவடியை (எப்பொழு தும) மறவாததன்மை யருள்செய்து, இடையூறுகள் சம்பவியாதவிதமாக உலகத்தைப் படைக்க வரமருள்கவென்று யாசித்தேன். எ - று (௧௭)

வரமருளி யேரம்பன மகிழ்கூர்ந்து நந்தமக்குப்
பரவுறுஞ் சத்திகளும் பலவவற்று ணானமென
விரவுறுங் கிரியையென மிக்குள்ளத் திகடமைக்
கரவிலுளங் கொண்டுலகங் காணகவென மறைந்தனனால்.

(இ - ள்) விநாயகக்கடவுள் (அவ்வாறே) வரமநுக்கிரகித்து, களிப்புமிகுந்து நமக்குத் துதிக்கத்தக்க எண்ணிறந்த சத்திகளுமுள. அச்சத்திகளில் ஞானமென்றும், பொருந்திய கிரியையென்றும் மேம்பட்ட இரண்டு சத்திகளை வஞ்சமில்லாத (உன்) மனசிற்கொண்டு, உலகங்களைப் படைப்பாயாகவென்று திருவாய்மலர்ந்தருளி அந்தர்த் தானமாயினார். எ - று (௧௮)

கொடுத்தவர ஞ்சிரமீது கொண்டுள்ளத்திற தியானித்தேன
மடுத்தவிரு சத்திகளு மறவுருவா நிகரினறித
தொடுத்தபெரு வனப்பினராயத் தொலலுலகை மந்திரமா
வெடுத்துரைக்கும் மெய்யாசித்தி புத்தியென வெதிர்போந்தார்.

(இ - ள்) (விநாயகக்கடவுள்) பிரசாதித்த வரத்தை உச்சிமேற்கொண்டு மன தில தியானஞ்செய்தேன். நிறைவாகிய (அருளையுடைய) அவ்விரு சத்திகளும், பிற

ரொருவர் (தமக்கு) ஒப்பில்லாமல் நெருங்கிய பேரழகுடையவர்களாய், பழமையாகிய உலகினர்க்கு மந்திரமாய் எடுத்துச்சொல்லுகின்ற சித்திபுத்திகளென்ப் பெயர்கொண்டு எதிரே தோன்றினார்கள் எ - று (உ0)

எதிர்போந்த மாதரைநா னினிதிறைஞ்சித் தவமெனா
துதிராமை யெனைக்காப்ப வுற்றருளு மன்னைமீர்
முதிர்காத லொடுமெனக்கு மூவாத மகளிர்களாய்ப்
பிதிராத வரமருளிப் பேணுகவென் றிரந்திட்டேன்

(இ - ள்) எதிரே வந்த இருமாதர்களையும் நான் இனிமையாக வணங்கி, என் தவமானது வீணே கெடாமல் அடியேனைக் காப்பாற்றும்படி எழுந்தருளிய தாய்மார்களே! மிக்க ஆசையுடன் எனக்கு நற்புத்திரிகளாய் நீங்காத வரத்தையுதவிக் காப்பீர்களாகவென்று (அவர்களை) யாசித்தேன். எ - று

மூவாத - கெடாத. (உ௧)

சத்தியிரு வருமத்தற் கிசைந்து வரங்கொடுப்ப
முத்தியெளி தடுத்தாரின் முகமலர்ந்து விநாயகனைச்
சித்தியொடும் புத்தியொடுஞ் சேர்ந்திருக்குங் காட்சித்தகப்
பத்திமிகத் தியானித்துப் படைத்திடமா றொடங்கினேன்.

(இ - ள்) இரண்டு சத்திகளும் அவ்வேண்டுகோளுக்கு இணங்கி (அவ்வாறே யாகுகவென்று) வரமுதவ, இலேசாக மோட்சத்தை யடைந்தவர்களைப்போல முகமலர்ச்சிகொண்டு, விநாயகக்கடவுளைச் சித்திபுத்தியென்னுஞ் சத்திகளுடன் சேர்ந்து விளங்கும் பாவனையாக மிக்க பத்தியுடன் தியானஞ்செய்து, (உலக) சிருட்டியைச் செய்யும்படி ஆரம்பித்தேன் எ - று (உஉ)

வேறு

வழுவின் றியெனது மனத் தொழிலா
லெழுமைந் தரைமுந் துறவின் றலைமைப்
பழுதின் றுபடைத் திடவீ ரெனலுந்
தொழுதங் கவரே கினர்சூழ் துறவில்

(இ - ள்) குற்றமில்லாமல் என் மனத்தின் சிருட்டியால் முற்பட ஏழு புதல்வர்களைப் படைத்து (புத்திரர்களே! அங்கலக்ஷணக்) குறைவின்றிச் சிருட்டியைச் செய்யுங்களென்று அவரைநோக்கிக் கூறவும், அவர்கள் பணிந்து கடுந்துறவிகளாய்ச் சென்றார்கள் எ - று (உ௩)

இசையார் தவரே கியிருந் தவமுற்
றசையா வருளா லருள்வீ டுறலும்
நசையாற் பினுநா னெழுமைந் தர்தமை
வசைதீ ரவுயிர்த் துவகுத் தனனே

(இ - ள்) அவர்கள் (என் மொழிக்கு) இணங்காமற் பெருந்தவத்தைச்செய்து நீங்காத திருவருளால் இன்பவீட்டை யடையவும், நான் (மீண்டும் சிருட்டித்தொழில் பெருகும்படி) பெருவிருப்பினோடு பின்னும் ஏழு புத்திரர்களைக் குற்றமறப்பெற்று (அவ்வாறே) கூறினேன் எ - று. (உ௪)

ஆனவ ருமுன்னோ ரினம்போ யிடலும்
பின்னொன் சனகா தியரோ டருள்சேர்
நன்னா ரதமுனி யையுநன் குதவி
யென்னுடை யாக்கையி னெவையுமீன் றனனே

(இ - ள்) அவர்களும் தம் முன்னோரைப்போலவே (துறவிகளாய்) சென்று விடவும், நான் அதன்பின்னர் சநகாதியரையும், மிக்க அருள்பொருந்திய நாரதாதியரையும் நன்குகப்படைத்து, என் சரீரத்தினின்றும் (மற்றுள்ள) எல்லாவற்றையும் படைத்தனன். எ - று.

சநகாதியர்—சநகன் - சநந்தனன் - சநாதனன்-சநத்குமாரனெனப்படுவோர்.

நாரதாதியர்—சத்தவிருடிகள் - கர்த்தமர் - நாரதர் - தக்ஷர் எனப்படுவோர்.

வேறு.

அந்தணர் குலமு மங்கியு முகத்தி லரசரைப் புயத்தில்வா ரூடையிற்
சுந்தர வணிகர் குலத்தினைப் பதத்திற் சூத்திரர் தமையுமுன் படைத்துச்
சந்திரன் மனத்திற் றழற்கதிர் விழியிற் சாற்றிய முகத்தினிந் திரனை
மந்தண மாகுஞ் செவியினிற் பிராண மருத்துக ளுந்தியில் வானம்,

(இ - ள்) வேதியர் குலத்தையும் அக்கினியையும் முகத்தினின்றும், அரசர்களைத் தோளினின்றும், அழகிய வைசியகுலத்தை நெடிய துடையினின்றும், சூத்திரர்களைப் பாதத்தினின்றும் முற்படச் சிருட்டிசெய்து, சந்திரனை மனத்தினின்றும், சூரியனை விழியினின்றும், சொல்லுகின்ற இந்திரனை முகத்தினின்றும், பிராணாதி வாயுக்களை மறைவிடமாகிய செவியினின்றும், ஆகாயத்தை உந்தியினின்றும். எ - று

இதுமுதலிரண்டு பாடல்கள் ஒருதொடர். (உ௬)

முடியினிற் றுறக்க மாதியா மும்பர் மொய்த்துவாழ் பதங்களை முன்சொ
லடியினிற் பூமி யெண்டிசை காதி லாசைமே யாரெட்டையு மாக்கி [ழிந்த
நெடியகுன் றாதி சராசர மனைத்து நிலைபெற வளித்தன னென்னப்
படியறத் தவத்து வியாதற்குக் குரைத்தான் பங்கய நாண்மலர்ப் பிரமன்.

(இ - ள்) மோட்ச முதலியனவாகிய தேவர்கள் நெருங்கிவாழும் பதவிகளை முடியினின்றும், பூமியை மேற்கூறிய பாதத்தினின்றும், திசைகளெட்டையும் (முன்) சொல்லிய காதினின்றும் படைத்து, நெடிய மலைமுதலிய சராசரப்பொருள்களையும் நிலைபெறும்படி சிருட்டிசெய்தனன் என்று, அன்றலர்ந்த தாமரைமலரி லெழுந்தருளியுள்ள பிரமதேவன் ஒப்பற்ற தவத்தைச்செய்த வியாசமுனிவனுக்குக் கூறினன் எ-று

நாண்மலர் என்பதற்கு நாளத்தையுடைய மலரென்று பொருளுமாகும்.

நாள் - அம் —நாளம் அம் - சாரியை (உஎ)

உருத்திரர் மாய னயன்களாஞ் சீர்மணை ஞானமுற்றோர் காசிசைப்
பாலர், திருத்துறு மனுக்கள் முனிகளோர் வசுக்கள் செயிர்த்திடு மியர்ந்
காதர் கணங்கள், கருத்துறு திசைகள் நிதிகடம் புருடர்கள் களுலிய பறவை
கள் பசுக்கள், பொருத்துயிர் வருக்க மெனவிரு பத்தோ ரருக்கமா
யொலிக்கில் வழக்கம்

(இ - ள்) உருத்திரன் - திருமால் - பிரமன் - அக்கினி - சலம் - பூமி - பொருந்திய ஆகாயம் - காற்று - திக்குப்பாலகர்கள் - திருத்தம் பொருந்திய மநுக்கள் - முனிவர்கள் - அட்டவசுக்கள் - நெருங்கிய இயக்கர்கள் - (பதினெண்) கணங்கள் - எண்ணத்தக்க திசைகள் - நதிகள் - கடல்கள் - விருட்சங்கள் - நிறைந்த பறவைகள் - பசுக்கள் [நாற்கால்கள்] பொருந்திய உயிர்களாகவென்று சொல்லப்படும் இருபத்தொரு பிரிவாக உலகமானது விளங்கியது எ - று. (உ௮)

எறிந்துகார் தருந்தி ணைபெருஞ் சுமலக் திருந்தவன் வையகம் படைத்த, தறிந்தவா றன்று மனையிறா நடுங்க வழிலுயிர் வேறகாக் கரச, செறிந்தபூங் கரந்தற சித்திபுத் திகடந் திருமணஞ் செப்புதும் வினைகள், பறிந்துபா ழாகக் கேணபதி யென்றற் பனுவனை பிருகுமா தவனே

(இ - ள்) பகைவர்கள் அஞ்சும்படி நெருப்பைக் கக்கும் வேலாயுத மேந்திய கையையுடைய சோமகாந்த மன்னவனே! வண்டுகள் அடித்து மகரந்தப் பொடியையுண்டு மொய்க்கின்ற தாமரை மலரில் வாழும் பிரமதேவன் உலகத்தைச் சிருட்டிசெய்த வகையைத் தெரிந்தவாறு சொன்னோம் நெருங்கிய மலர்மாலையணிந்த அளகபாரத்தையுடைய சித்திபுத்திகளது திருமணத்தை (இனி)ச் சொல்லுவோம் வினைகள் கெட்டொழிய மதித்துக் கேட்பாயாகவென்று பெருந்தவசியாகிய பிருகு முனிவன் சொல்லலாயினன் எ - று (உ௯)

பிரமசிருட்டிப் படலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் - ௩௪௯.

திருமணப்படலம்.

தொழுகுல மாகி முன்னர்த் தோன்றிய மகளிர் பின்னர்
யழுகுறு தேவ யாங்குப் படர்ந்தனர் தெரிக்க வென்ன
விழுமிய வியாதன் கேட்ப வேதனு மகிழ்ந்தன் னோர்தஞ்
செழுமிய திருக்கலி யாணத் திறத்தினைச் செப்ப லுற்றான்

(இ - ள்) வணங்கத்தக்க சிரேட்டமாகிப் பூர்வத்திலே தோன்றிய (சித்திபுத்திகளென்னும்) மாதர்கள் அதன் பின்னர் எங்குச் சென்றார்கள்? பிரமதேவனே! அதனைக் கூறுகவென்னச் சிறப்புடைய வியாத முனிவன் கேட்க, பிரமதேவன் மனங்களித்து, அம்மாதர்களுடைய சிறப்பமைந்த திருமணஞ் செய்ததைச் சொல்லத் தொடங்கினன் எ - று. (௧)

உலகெலாம் படைத்த பின்றை யுயிர்த்தொகை பலவு மோங்கி
நிலவிடாழ் கின்ற நாளி னின்மலக் கணேசன் பாத
நலமெலா நிறைந்து நின்ற நாரத முனிவன் போற்றக்
குலவுமா தரவிற் சென்றான் கோதறு கயிலா யத்தில்

(இ - ள்) உலக முழுவதையும் சிருட்டித்தபிறகு, பலவகைப் பிராணகோடிகளும் விருத்தியடைந்து விளங்கி வாழுங்காலத்தில், மலரகிதராகிய கணேசப்பெருமானை நன்மை முழுவதும் நிறைந்து விளங்கும் நாரதமுனிவர் துதிசெய்யும்படி விளங்கிய ஆசையுடன் குற்றமற்ற திருக்கயிலாயகிரிக்குச் சென்றனர். எ - று. (௨)

அரியணை மீது வைகு மைங்கரன் பாதம் போற்றிப்
புரிநரம் புளார்ந்த வீணைப் புத்தமு தினிது கொண்டு
விரிபுகழ் பாடிச் சால மெய்யருள் பெற்றுப் பின்னர்
தெரிவதொன் றுண்டு நாயேன் செப்புகேன் கேட்க வென்றான்.

(இ - ள்) சிங்காதனத்தின் பேரில் எழுந்தருளியிருக்கும் ஐந்து திருக்கரங்களையுடைய விநாயக மூர்த்தியின் திருவடியைத் துதித்து, புரியினையுடைய நரம்புகளார்ந்ததைவகத்து, வீணையினிடத்துண்டாகிய புதியஅமுதத்தைப் பெருக்கி, (அவருடைய) பரந்தகீர்த்தியைத் துதிசெய்து, மிகுதியாக அவரது உண்மை யருளையடைந்து, பிறகு நாயினையொத்த அடியேன் யோசிப்பதொன்றுண்டு, சொல்கின்றேன், கேட்பீர்களாகவென்று கூறலாயினன் எ - று (௧)

முள்ளரைக் கமலச் சேக்கை முன்னவன் றியானித் திட்ட
வுள்ளகத் திருந்து போந்தா ரோரிரு மாதர் தந்த
வவ்வெழின் மாதர் மன்ற லாற்றினின் பாலராகத்
தெள்ளிய மனத்தி லெண்ணஞ் செய்தன னினைய செல்வன்

(இ - ள்) முட்கள் பொருந்திய அரையையுடைய தாமரை மலரில் வசிக்கும் முன்தோன்றிய பிரமதேவன் தியானஞ்செய்த மனதிலிருந்து ஒப்பற்ற இரண்டு கன்னியர்கள் தோன்றினார்கள் அள்ளிக்கொள்ளத்தக்க அழகையுடைய அம்மங்கையர்கள் மணவினையாற்றால் தேவரீரை யடையத்தக்கவர்களென்று அந்தப் பிரமதேவன் தெளிந்த தன் மனதில் யோசித்திருக்கின்றனன் எ - று (௪)

இலக்கண மான்ற மைந்தர்க் கினிதுற வமைக்குங் காலை
மலக்குறும் பகற்றுந் நின்மெய் வடிவினை யெண்ணும் வேதன்
விலக்கற மடவார்க் காயின் விளம்புமம் மடவார் தங்கள்
கலக்கமில் வடிவ முற்றுங் கருதுவன் வேறென் சொல்கேன்.

(இ - ள்) பிரமதேவன் சிறந்த ஆண்மக்கட்கு (உத்தம) இலக்கணங்களை இனிதாக வமைக்குங் காலத்தில், மலக்குறும்பை யகற்றுந் தேவரீருடைய திருவுருவத்தின் சொரூபத்தைத் தியானிப்பான் நீங்குதலற மாதர்கட்கு (இலக்கணங்களையமைப்பது) ஆனால், (முன்சொல்லிய அம்மங்கையர்களது) கலக்கமில்லாத உருவமுழுவதையுந் தியானஞ் செய்வான் (அவர்கள் சிறப்பைப்பற்றி) வேறே யாது சொல்லுகேன்? எ-று (௩)

பெருத்திடல் சுருங்க லின்றிப் பொய்த்தமெல் லணிச்சம் பூவி
னிருத்தினுங் குழைந்து மென்மை யெய்துவார் கொடியின் னேயு
முருத்தக்கு கவிகை சங்க முற்றுமொள் பல்வரு தாங்கித்
திருத்தகு கமலம் வென்று சிவந்தவு ளடிகண் மாதோ.

(இ - ள்.) உருவமைந்த குடை சங்கம் இவைபோன்ற பலரேகைகள் பொருந்தி, சிறப்புப் பொருந்திய தாமரைமலரைச் சயித்து சிவப்புற்ற (அவர்கள்) உள்ளங்கால்கள் பூரித்தல் மெலிதல் (முதலிய தோடங்கள்) இல்லாமல், இரைத்த மெல்லிய அனிச்ச மலரின்பேரிற் பொருத்தினாலும் வாடிக்கன்றிப்போகும் நேயமுடைய கொடி மின்னலை யொத்திருக்கும் எ - று (௯)

நடுவிர லளவு நேரே நடந்தொரு வரம்பே சேணைக்கு
மிடுவிர லொன்றொன் றின்மே லேறுறா வறவு நீங்கா
தொடுத்த லகறலி யின்றிப் பெருவிர றிரண்டு நிற்கு
மடுவிர னீளா நீற்று விரனிலத் தமர்ந்து வைகும்.

(இ - ள்) நடுவிரலி னெல்லையும் நேராக வரிரேகை தோன்றி மேனோக்கி நிற்கும். பொருந்திய விரல்கள் ஒன்றின்மே லொன்று ஏறாமலும், மிகவும் விலகாமலும், நீளுதலும் பரவுதலு மில்லாமலும், பெருவிரல் உருட்சி பெற்றுமிருக்கும். நெடுவிரல்கள் நீட்சி பெற்று கடைவிரல் பூமியிற் பொருந்தியிருக்கும் எ - று (௭)

உறுகடை விரல்கள் பாங்க ருற்றபல விரல்க ணீளா
குறுகிடா நேர்ந்து நிலைா கூறிய விரல்க ளைந்தும்
பெறுமிலக் கணத்த வாகிப் பிறங்கொளிப் பவளத் தண்டுஞ்
சிறுமையுற் றழியத் தேசு திகழ்ந்தன தேவ தேவே

(இ - ள்) தேவ தேவராகிய கணேசப்பெருமானே! பொருந்திய கடைவிரல்களின் பக்கலிலுள்ள விரல்கள் நீளாமலுங் குறுகாமலும் மெலிந்திலலாமலும், சொல்லிய ஐந்து விரல்களும் (உத்தம) இலக்கணம் பொருந்தியனவாகி விளங்குகின்ற ஒளியையுடைய பவளத்தண்டுந் தோல்வியுற்று நாணமடைய ஒளிவிளங்கின எ - று

பொங்கொளி யுமிழ்ந்து வட்ட மாயப்புறை யின்றிச் சற்றே
தங்கிய சிவப்பிற் றிகழ்ந் தயங்குநா னகத்தின் கூட்டஞ்
செங்கழு நீரை முத்தைத் திங்களைச் சினந்து வென்று
பங்கமுற் றிடைய றாத்த பயமுகப் பணிக்கு மன்றே

(இ - ள்) அதிகரிக்கின்ற ஒளியைச் சிந்தி வட்டவடிவாகிச் சமானமில்லாது சிறிது செந்நிறம் வாய்ந்ததாய் விளங்குங் கால்நகங்களின் கூட்டமானது செங்கழுநீரையும் முத்தையுஞ் சந்திரனையுஞ் சோபித்து வென்று, நாணமடைந்து இடம்விட்டொழியாமல் அபயமடையச் சட்டளையிடும் எ - று (௯)

அளவினிற் பருத்து மெல்லென் றணிநரம் புரோமங் கோலிப்போல்
வளர்தன்மிகக் குயர்தல் கோட்ட லொழிவறப் புறந்தா ணோக்கிக்
களிவளர் கமடங் கண்ணைக் கரந்திடுங் கலைஞ் சானேற்
றொளிவளர் புத்த கங்க ளுற்றுதவர் சேமந் தன்னில்.

(இ - ள்) அளவினைக் காட்டிலும் பருத்து அல்லது மெலிந்து அழகிய நரம்பும் உரோமமுங் கொண்டு கோலைப்போல வளர்தலும் மிகவுயர்தலும் கோடுதலு மாகிய குற்றமில்லாத புறந்தாளைப்பார்த்து, சந்தோஷித்து வளர்கின்ற ஆமையானது (நீரில் மூழ்கி) தன்னுருவை ஒளிக்கும். நூற்கலவியின் மேம்பட்டவர்கள் கீர்த்திபெருகும் புத்தகங்களைச் சேமத்தில் வைப்பார்கள் எ - று. (௧௦)

மிகப்பருத் திடுதன் மிகக் குயர்ச்சியென் றிவைற்றி னீங்கித்
தகப்பருத் தெழுந்து மென்மை தங்கிய குதியின் வண்ணம்
மிகப்பருந் தலைகீழ் ராற்று தாரகத்து மெய்த் வாடி
யகப்பட்டுத் திடமா யாந்தா மழுகளைப் பந்து மாகும்.

(இ - ள்) மிகப் பூரித்திருத்தல் மிக்க உயர்வுற்றிருத்தலென்று சொல்லுங் குற்றங்களினீங்கி, தகுதியாகிய அளவுடன் பருத்துத் தோன்றி மென்மைத் தன்மை பொருந்திய குதிக்காலின் அழகு அளவில்லாத தவத்தையுடையவர்கள் ஆருதாரத்திலும் அடைய வாடி அகப்படுத்துகின்ற அழகிய பந்தினைப்போலும் எம்பெருமானாகிய தேவரீருடைய கையிலுள்ள பந்தினையும்போலும் விளங்கும் எ - று (கக)

நரம்பெழு வுயர்த லின்றி நலத்தகத் தசைந்து செம்பொன்
வரம்புசெய் சிறுத ராசின் வட்டமாம் பரட்டின் வண்ண
நரம்பொடு மயிர்தோற் றாக நறுந்துடை கணைக்கா னோ
யரம்பையும் வருந்தச் செய்க வாவுநா ழிகையும் போலும்

(இ - ள்) பரட்டின் அழகானது நரம்பெழுச்சலும் உயர்தலுமில்லாது நன்மை பெற்றுத் தசைப்பிடியுற்று, செம்பொன்னை யளவிடுகின்ற சிறு தராசின் வட்டவடிவாம். நரம்பும் மயிருந் தோன்றாத நல்ல துடை கணைக்கால்கள் நோக்க அரம்பையும் வருந்தச்செய்து அவாவுகின்ற நாழிகை வட்டிலையும் போலும் எ - று (கஉ)

ஏற்றுத லின்றித் தாள வட்டமாய்த் தசைந்து ஞெண்டை
முற்றவுங் கடியா நிற்கு மொய்ம்பெழின் முழந்தாண் முன்னர்ச்
சொற்றமென் குறங்கு சேர்ந்து துணைசெய்ந் திடுநா லாறென்
றுற்றிடும் விரலி னெல்லை யுற்றது நிதம்ப மன்றே

(இ - ள்) ஏற்றதலில்லாமல் தாளவட்ட முற்றத் தசைகொண்டு நண்டை முழுதும் வெல்லும் அழகு மிக்க முழங்காலானது முற்கூறிய மெல்லிய துடையுடன் சேர்ந்து துணைகொண்டு நிற்கும் நான்கும் ஆறுமென்று பொருந்திய விரற்கடையினளவு பொருந்தியது நிதம்பமாகும் எ - று (கங)

பெருகிய மதமா யானைப் பிடரொடு கமடம் வென்று
மருவிய நிதம்பத் தல்குன் மயிருறா சதுர மாகா
வுருவமிக் குயரா நீளா தாழ்தா வுயர்ந்த போதித்
தருவள ரிலைசிற் றால வட்டமுந் தாழ்த்தி வைக்கும்

(இ - ள்) பெருகிய மதமயக்கத்தையுடைய யானைப் பிடரையும் ஆமையையும் வென்று பொருந்திய நிதம்பத் தலகுலானது மயிருறாதும், சதுரமாகாதும் உருவம் பெற்று, உயராதும், நீளாதும், ஆழாதும், உயர்ந்த அரசமரத்தில் வளர்கின்ற இலையையும், சிறிய ஆலவட்டத்தையும் அவமானப்படுத்திவைக்கும் எ - று (கச)

வாரிச மராவின் மானின் குளம்படி மருட்டித் தேசாய்ச்
சிறெலி மயிர்போலச் செறிந்துமென் மயிரு ளோங்கி
பாரெழின் மணிகொண் டாகா மடிப்புமிக் ககற்சி வாமத்
தேருறு பள்ள மான சுழியிவை யிலது செவ்வாய்

(இ - ள்) (நிதம்பத்தின்) செவ்வியவாய தாமரை இதழையும், பாம்பின் படத்தையும், மான்குளம்படியையும் மயங்கச்செய்து ஒளிமிகுந்து, சிறந்த எலியின்மயிர் போல மெல்லிய மயிர்கள் நெருங்கி, உளையுயர்ந்து, அழகுபொருந்திய மணியைக் கொண்டு, விலக்கத்தக்க மடிப்பும் மிக்கவிரிவும் இடப்புறத்துப் பள்ளமும் பொருந்திய சுழியும் (ஆகிய) இக்குற்றங்களில்லாததாகும் எ - று (கரு)

பருத்துயர்ந் துறவு மென்மை பயின்றன சகனங் கொங்கை
வருந்திட வறுமை யெய்தி யிருந்தது மருங்கு லுந்தி
பொருந்தக வகன்று தாழ்ந்து வலஞ்சுழித் துயரு ரோமஞ்
செருத்தரு நரம்பு நீங்கித் திகழ்ந்தொளி பயிலா நிற்கும்

(இ-ள்) சகனங்கள் பூரித்துயர்ந்து மிகவும்மென்மைத்தன்மை பெற்றன. கொங்கைகள் வருந்தும்படி வறுமையடைந்து இடையானது தளர்ந்தது. கொப்பூழ் அழகுபெற விசாலமாகிய ஆழமுற்று வலச்சுழிபெற்று, உயர்ந்த உரோமங்களும் போர்செய்யும் நரம்புகளுமொழிந்து பிரகாசித்து ஒளிவிளங்காநிற்கும் எ-று.

சகனம் - துடையின் உட்பிரதேசம்.

செருத்தரு நரம்பென்றது பிணிக்கொண்டிருத்தலின். (௧௬)

பல்வகைச் சுழியு ரோமம் பருத்தநீண் மடிப்பு மின்றி
நல்வரை மூன்று தாங்கி நறியவா லிலைபோல் வாய்ந்து
சொல்வரை கடந்த தேசிற் றுலங்கிய வயிற்று நாப்ப
ணல்வரைத் தொழுகிற் றென்ன வணிந்ததா லுரோம வல்லி

(இ-ள்.) பலவிதமான சுழிகளும் உரோமங்களும் பருத்து நீண்டமடிப்புகளுமில்லாமல், நல்ல மூன்று வரைகள்பொருந்தி, நல்ல ஆலிலைபோலமைந்து, சொல்லத்தக்க எல்லையில்லாத அழகுடன் விளங்கிய வயிற்றின்மத்தியில், இருளானது அளவுகொண்டொழுகிற்றுபோல உரோமவல்லியை யணிந்துள்ளது எ-று.

உரோமவல்லி என்றது உரோமாரிசை. வல்லி - கொடி. (௧௭)

என்பொடு நரம்பு ரோம மிவைகடோற் றுதுமெல்லென
றின்புறத் தசைந்து சீர்கொண் டிருந்தன விலாப்பு றங்க
ளன்புறு மிசைய மாழாத் தங்குல மறுமூன் றாகி
மின்படைத் தசைந்து ரோம மிரவுறா திருந்த தன்றே.

(இ-ள்) விலாப்புறங்கள் என்பும் நரம்புமாகிய இவைகள் தோன்றாமல், மென்மையாய், இன்பமுறத் தசைபொருந்திய சிறப்புற்றிருந்தன. ஆசைபொருந்திய இசயமானது ஆழாமற் பதினெட்டங்குலவளவாகி ஒளியுற்றுத் தசைப்பிடிகொண்டு உரோமங்களின்றி யிருந்தது எ-று. (௧௮)

புடைபரந் தெழுந்து நீலம் புணர்ந்திய தெனக்கண் வாய்ந்து
மிடையற மிடைந்து மார்பின் வியனிட முற்று மாய்ந்து
தடையறப் பணைத்து விம்மித் தம்முளே யிரண்டு மொத்திட்
டிடையினை வருத்தி யண்ணாந் திருந்தன முலைக ளம்மா

(இ-ள்) குசங்கள் பக்கத்திற் பரவித்தோன்றி நீல ரத்தினத்தைப் பதித்தாற்போலச் சூசுகம்பெற்று, நெருக்கமற நெருங்கி, மார்பின் விசாலமான இடமுழுவது மாராய்ந்து தடையின்றிப் பூரித்து இறுமாந்து தமக்குள்ளே தாமிரண்டும் சமானமாகி, இடையைத் (தாங்கவொட்டாது) துன்புறுத்தி அண்ணாந்திருந்தன எ-று.

முலைக்கண்களைச் சூசுகமென்றும் சிலிமுகமென்றுஞ் சொல்வர். அண்ணாந்தல் - மேனோக்கி யிருத்தல். (௧௯)

கணணிணை பருக்க னீடல கவினறி யாழகல கொஙகை
திணணிய திரிகை யெயபோற றிகழநதடி கனதது மேலே
நணணுரு நோக கினஙக லலமற லொவவா வாத
லெணணிய கடின நணண லிவையடுத தோரககு மெயதா

(இ - ள) மூலைககணக ளிரணடும சனததல நீளுதல அழகிய முனையாழந திருததல, கொஙகையானது வலிய திரிகையைப போலிருநது அடியிற கனதது மேலே பொருநதிய உருவமிளைததல விலகியிருததல அழகிலலாதிருததல (ஒனறறொனறு) ஒததிராதிருததல நினைககததகக காடினயததை யடைதல (எனறு சொலலப படும) இககுற்றஙகள அவாகளை யடுததவாகளுககும வரமாடடா எ - று

திரிகை - இடககைமேளம் இயநதிரம - குலால சககிரம (௨௦)

கழுததடி யெழுந தாழ்தல கவினற வெனபு தோறறல
முழுததவிக குறற மினறி யொயயழ கெறிககுந தோளகள
பழுததபத திரணடு வெயபோற பணைததல பெருதத லெனபு
குழுததக நரமபு ரோமங கூடினோா தொடககு மெயதா.

(இ - ள) கழுததானது அடி கனததல தாழநதிருததல அழகு கெடுமபடி யெனபுகள தோனறுதல (ஆகிய) நிறைதத இக குறறஙகளிலலாமல நெருஙகிய அழகைவீசும தோளகளானவை குறறமறறத திரடசியுறறு மூஙகிலபோலக கிளைததிருநதன பெருததலும எலுமபுகளும கூடடமாகிய நரமபுகளும அவாகளை யடைநதவாகளுடைய தோளகளுககு முணடாகா. எ - று (௨௧)

சநதுக டசைநது தோனறா வாயின தடவு முனகை
மைநதுறு மகரம போனறு வாாநரம புரோமந தோறறா
செநதளி ரஙகை கானிற செறிமுயல வயிறறின மெலலென
றுநகெழிற கவிகை யாமை யூாவலை வளையின வாயநத

(இ - ள) சநதுகள தசையுறறுத தோனறாதனவாயின தடவுகினற முனகையானது வலிபொருநதிய மகரததைபபோல நெடிய நரமபுகளும உரோமஙகளும தோனறாவாயின. செவவிய தளிாபோனற உளளஙகையானது வனததில நெருஙகிய முயலின வயிறறைபபோல மெனமையாய அழகமைநத குடை ஆமை நகாகினற சஙகு இவறறைபபோனற இரேகைகள பொருநதின எ - று

தடவுதல - வீணைவாசிததற றொழிலினறை (௨௨)

செஙகயல கமலஞ் சோசொத திகமவலம புரிது லாககோ
றஙகிய நுகமே வாயநத சககாழ வளைகைக காஙகித
துஙககால வருணத துளளுந துவைவிலசெல வதத ராளு
ரஙகளா தமைமுன பூசை யாறறிய தவததோா போலும.

(இ - ள) செவவையாகிய கயலும, பதுமமும, பொருநதிய சொததிகமும, வலம்புரியும, துலாககோலும, பொருநதிய நுகமும, அழகு அமைநத சககரமும போனற இரேகைகளைக கையிறபெறறு, புனிதமான நாறகுலததிலும அழிவிலலாத செலவததை யுடையவாகளா யிருபபோா அமமாதாகளைப பூாவததிற பூசைசெயதலலுதவ முடையவாகள போலும எ - று

சயல - மசசரேகை கமலம - பதுமரேகை சோதிகம - ஓரடையாளம
வலமபுரி - சஙகரேகை சகடு - சககிரரேகை மறறவைவெளி (௨௩)

விடைகரி பரிமா தோட்டி வீசுசா மரையே நேமி
வடுவிலவச சிரமபோற றிறறு மருவிமன னவர்பா லாரே
றடுகதை சூலம வேலவா ளவைபொரு வரைக டாஙகிக
கொடைநனி வழஙகு வோரகை கோதையர் கரஙகும பிடடோர.

(இ - ள) இடபம - யானை - குதிரை - அஙகுசம - வீசுகின்ற சாமரை - சக்கிரம்-குற்றமில்லாத வசசிரம் இவறறைபபோல இரேகைகள பொருந்தி அரசாகளைக கூடி வாழ்வோரகளும, போர செயயததகக சூலம வேல வாள முதலிய அவவாயுதங களைத தாஙகியகைகளையுடையவாகளாயப பெருஙகொடை கொடுபபவாகளும அமமா தாகளுடைய கைகளைப பணிநதவாகளாவாாகள. எ - று. (௨௪)

நிரநதுபல வரைக டமமு ணெருஙகுத லறவுநீஙகல
பரநதெழு நரமபு வீஙகல பதுமரே ரஙகை மாட்டு
மரநதைசெய நரமபு ரோம மாருதல புறஙகை மாட்டும
வரநதரு மனனோா செஙகை வணஙகினோா தமககு மெய்தா.

(இ - ள) (தமமைபபணிவோரகருவேணடிய) வரஙகளைக கொடுக்கும அவர்களுடைய சிவநத கையைபபணிநதவாகளுககும, வரிசையுறறுப பலரேகைகள தமமில நெருஙகியிருததல - இரேகையினறி யிருததல - பரவியெழுநத நரமபுகளதோனறல முதலியன தாமரைமலாபோனற உளளஙகையிலும, துனபுசெயகினற நரமபுகளும உரோமமும பொருநதல புறஙகையிலும, உணடாகமாட்டா. எ - று, (௨௫)

ஒடடகந தவளை செந்நா யுரகஙகேள் கழுகு பூனை
கடடிய கழுதை யோரி கடுத்திடும வரைகை யுறறு
முட்டுற வருநது வோரு மொயவரை யீட்டி போலங
குட்டமுற றவரு மநதக கோதையர் கரநதா ழாதோா.

(இ - ள) ஒடடகம தவளை செந்நாய பாமபு தேள கழுகு பூனை கழுதை நரி இவறறைபபோனற இரேகைகளைக கையிறபெறறு (செயதொழில்களில) இடையூறு பொருநத வருநதுகினறவாகளும, நெருஙகிய மூஙகில நட்டி இலைபோல அஙகுட்டமுடையவாகளும அநதககனனியாகளது கரஙகளைப பணியாதவாகளாவாாகள. எ - று.

கயிரவ மனைய செவவாயக கனனிய ரஙகை நெறறிய
பயிலபெரு விரலகள வெனற பஙகய முகையை நீலச
செயிரறு முகையை வெனறு சிவநதுநல லரைகள வாயநத
வுயிரினு ளுயிராய நினறோ யொழிநதபல விரலு மாதோ.

(இ - ள) உயிாகளுககுளளே யுயிராக நினறவிநாயகக கடவுளே! செவ்வாம்பன மலாபோலச் சிவநத வாயையுடைய அககனனியாகளது அழகிய கையிலுளள பெருவிரலகள தாமரைமொட்டினைவெனறனவாம (பெருவிரல) நீஙகிய பலவிரலகளும நீலோறபலமொட்டினை வெனறு செநநிறமுற்று நலலரேகைகள பொருந்தியுள்ளனவாம எ - று (௨௭)

விளைந்தழ கெழுந்த மங்கை விரலினஞ் சிவத்த லின்றி
வளைந்திட லிடையி னீங்கன் மயிர்நரம் பணித்த லோட்ட
லிளைந்திடு மென்மை யின்றி யறவுமெல் லென்ற லந்த
தளைந்ததேம் வனப்பி னாரைச் சார்ந்தவர் தாமுங் காணார்.

(இ - ள்) அழகுமிகுந்து விளங்கும் கைவிரல்கள் சிவத்தலில்லாமல், வளைவுறல் நடுவே விலகியிருத்தல் மயிரும் நரம்பும் பெற்றிருத்தல் இளைத்திருத்தல் கலந்த மென்மைத் தன்மையின்றி மிகவுங் கடினமாயிருத்தல் முதலிய குற்றங்கள், அந்தத் தேக வழகுமிக்குள்ள மங்கையர்களைச் சார்ந்தவர்களுங் காணமாட்டார்கள் எ - று (௨அ)

வள்ளுகிர் கிளியின் வாய்போல் வார்ந்துசெந் தொளிர்ந்து சொன்ன
வொள்ளிழை மகளிர்க் கன்றே யொள்ளுகிர் கண்டி லார்க்கும்
பள்ளமாய் விடல்வெள் ளென்றல் பண்பறச் சரச ரத்தல்
புள்ளியாய் வெண்மை தோற்றல் பொற்கெனல் புணர்த ராவே.

(இ - ள்) மேற்கூறிய ஒள்ளிய ஆபரணமணிந்த மாதர்களுக்கு, கூர்மையான நகங்கள் கிளியின்வாயைப்போல வளைந்து செந்நிறமுற்றுப் பிரகாசித்தன. அவர்களுடைய ஒளிவாய்ந்த நகங்களைப் பார்த்தவர்களுக்கும் (நகங்கள்) பள்ளமாய் விடுதல் வெண்மையாயிருத்தல் அழுக்கு நிறஞ்சரசரத்தல் புள்ளியுடையதாய் வெண்ணிறங் காண்டல் பொற்கெனல் முதலியகுற்றங்கள் உண்டாகமாட்டா. எ - று. (௨௯)

வெரிந்தலைக் கிடந்த வென்பு மென்றசை மூடப் பட்டு
வரிந்திடற் கரிய நல்ல வனப்புள மடநல் லார்க்குத்
தெரிந்திட னரம்பு ரோமஞ் சேர்ந்துதாழ்ந் துயர்ந்து கூனி
யிருந்திட லவரைத் தாழ்ந்த விட்டிடை யவர்க்கு நன்றே

(இ - ள்) நல்ல அழகமைந்த அவ்விளமாதர்களுக்கு முதுகிலிருந்த வென்பு மெல்லியதசையான் மறைக்கப்பட்டுச் சித்திரிக்கற்கரியன (என்பு) தெரிதல் நரம்பும் உரோமமுஞ் சேர்ந்து தாழ்ந்தாவது உயர்ந்தாவது கூனலுடைத்தாயிருத்தல் முதலிய குற்றங்கள் அம்மங்கையர்களைப் பணிந்த அழகிய இடையையுடைய பெண்களுக்குமுண்டாகமாட்டா. எ - று. (௩௦)

கோணுத னரம்பு தோற்றல் குருமயி ரிளைத்த னீளல்
மாணற வுற்ற லின்றி வண்சவல் வனப்பு வாய்ந்த
பேணுமங் குலங்க ளன்கிற் பிறங்குபு திரண்டு பூக
நாணுற வரைகண் மூன்று நண்ணிய கெழில்சேர் கண்டம்.

(இ - ள்) கோணுதலும் நரம்புகாணப் படுதலும் நிறமமைந்த மயிர்கள் இளைத்தலும் நீளுதலும் மாட்சிமையொழிய வாடுதலுமில்லாத வண்மைபொருந்திய முதுகுகள் அழகுற்றன அழகுவாய்ந்த சமுசதானத்து விருப்பூட்டத்தக்க நான்கங்குலங்களில் விளங்கித் திரட்சியாகிக் கமுகமரமும் நாணமடையும்படி மூன்றுரேகைகள் பொருந்தின. எ - று

பிறங்குபு - செய்புஎன்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம் (௩௧)

குறுகிய மிடறு நெட்டைக் கொழுங்களம பெருததத கண்ட
முறுமயிரக கழுததுநோநத வொணகள மடிபபுக கணடம
பெறுமட வாரக ளெலலாம பிரமனா மகளி ரான
சிறுநுதன மாதா கணடந தியானஞ் செய யாத தீயோா.

(இ - ள) குறுகியகழுதது - மசாதத நெட்டைக்கழுதது - கனதத கழுதது - மயிாபொருநதிய கழுதது - இளைதத வொளளிய கழுதது - மடிபபுடைய கழுதது ஆகிய இவறறைப பெறறமாதாகள யாவரும, பிரமதேவனபெறற புததிரிகளான சிறிய நெறறியையுடைய சிததிபுததிகளது கழுததுகளைததியானஞசெயயாத தீயவாக ளாவாாகள. எ - று (௩௨)

இருபகுப பாதல பளள மியைநதிட னரமபு ரோம
மருவுதல குறுங ளிளல வளைதலவற றுதலு மினறி
யிருவிர லளவின வடட மாயததசைந தெழிலகொண டினபந
தருவன பிரம னீனற தையலாா சுபுக மாதோ.

(இ - ள) பிரமதேவனபெற்ற அமமஙகையாகளது மோவாயகள் இருபிள வாதல - பளளமபொருநதல - நரமபும மயிரும பொருநதல - நீணடிருததல - வளைந திருததல - இளைததிருததலாகிய குறறஙகளிலலாமல, இருவிரலகளி னளவுடையன வாய வடடவடிவினவாயததசையுறறு அழகுபெறறுஇனபநதருவனவாயிருநதன எ-று.

செநதுகிரக கடிகை போலத திரணடிரு புடையுங கூமபிச
சுநதர வளைபொன றெயதிக கீழிதழ துலஙகா நிறப
வநதினமே லதரஞ சறறே யுயாநதழ கெறிககு மெனப
பைநதொடி முனகைச செவவாயப பணிமொழிப பாவை மார்கட்கே.

(இ - ள) பசிய வளையலையணிநத முனகையையும செவவிய வாயையும பணிமொழியையுமுடைய அபபொறபதுமைபோனற மஙகையாகளுககு, செவவிய பவளததுணடுபோலத திரடசியுறறு இருபுறஙகளுஞ சிறுசது அழகிய ஓரிரேகை யுறறுக கீழுதடுவிளஙக, மேலுதடுசிறிதுயாநது அழகுகவிசாநதகுமெனறு (மேலோர்) சொலலுவா எ - று (௩௪)

இதழிரண டெனன நாபப ணிரேகையாழந திருததல வீஙகன
மதாறக கருகல வெணமை மருவலு லுதலகீழ வாயநத
வதரமே லிதழு ரோம மணிநதகன றிடலு மெயதா
பதமரு ளனைய மாதா பவளவாய தெரிசித தோாககே.

(இ - ள) இதழகள இரணடெனறு (கணடோா) சொலலுமபடிநடுவே இரே கையதிநதிருததல - பருததல - மதாப்பொழியக கறுததல் - வெணணிறமெயதல - தொஙகுதல - கீழ்பொருநதிய அதரம மேலிதழ் (இவை) மயிாகள விரவபபெறறு அகலமாதலும, நறபதவியைக கொடுககும அமமஙகையாகளது பவளமபோனற இதழ் களைத தரிசிததவாகளுககு உணடாகமாடடா எ - று (௩௫)

முருநதுவெண முந்த முலலை முகையினெண ணுன்கு வெணபற்
றிருநதிரள டொழுஙகு மொதத சேயரிக கண்ணி னாககுப

பரந்துயாக தகனறு நீணடு பசுமையாய்ப பொன்மை யாகிக
கரிநதுதுன புறுதது மூரல கணடவா தமககு மெயதா

(இ - ள) செவ்விய அரிபரந்த கணகளையுடைய அமமஙகையர்களுக்கு மயிலிறகின அடியும் வெள்ளியமுத்தும முல்லையருமபுமபோல வெணமைநிறம வாயநத முப்பததிரணடு பறகளும,திருததமாகிய இரணடுவரிசைகளு மொததிருநதன விசால மாகி உயாநது விலகி நெடுகிட பசுநிறமாகிப பொனனிறமாகிக கரிநது (இவவகைய குற்றஙகளால்) துன்புசெயயும பறகள (அமமங்கையா பற்களை) தரிசித்தோாககும உணடாகமாட்டா. எ - று (௩௬)

திண்ணிய கறபுச சான்ற சிததிபுத் திகடகுச செயய
வணணமாய மெனமை யாகி வயஙகின மணிநா வனமை
வெணணிறங கருமை நீணடு வீஙகுத கைல லாதி
நணணுநா வனனோ செநநா நாடினோா தமககு மெய்தா.

(இ - ள) வலியமைநத கறபினறனமை மிகக அநதச சிததி புததிகளுககுச செந்நிறமாகியும மெனமைத் தன்மையாகியும அழகியநாககள விளஙகின கடினத் தனமை - வெணணிறம - கருநிறம் - நீண்டுபெருததல - அகன்றிருததல முதலிய குற றஙகளைப பொருநதிய நாககள அமமஙகையர்களது செநநிறமமைநத நாககளை நினைத தவர்களுககும உண்டாகமாட்டா. எ - று. (௩௭)

இழுதென மெனமை யெய்தி யிங்குலி கத்திற சோநத
செழுவிய வுணணு வநதத தேவியாக கமைநத வெணமை
யொழுகுதல கருமை வனமை யோஙகுத லுறற லாதி
வழுவுறு முண்ணு வனனோா மருஙகுளாா தமககு மெயதா.

(இ - ள) இழுதுபோல மெனமைததனமையுறறு இஙகுலிகததைபபோலப பொருநதிய செழுமைதஙகிய உணணுககள அமமஙகையாகளுககுப பொருநதின வெளளைனறிருததல கருமைவனமைகள பெறுதல உயாதலபொருநதல முதலிய குறறம பொருநதிய உணணுககள அமமஙகையாகளது சமீபததில் இருபபவாகளுககும உணடாகமாடடா எ - று

இழுது = நெயம (௩௮)

கண்ணிணை யிடுகல் செலலா கவுடடிணை கரிததல் செலலா
வண்ணவெண் பறக டோறறு வழிதனறி நகைபி னாது
புண்ணிய நிலததி னைககு பொருளகளு மெழுநது பூபப
நண்ணிய கொடியே போலு நஙகைமாா நகைககுங காலை.

(இ - ள்) அமமாதாகள் சிரிககுங்காலையில் இருவிழிகளுஞ சிறுகாமலும, இருகனனஙகளுஞ சுருஙகாமலும அழகிய வெள்ளியபற்கள் வெளியே தெரியாமலும் புன்சிரிபபுணடாவதனறிப பெருநகையுணடாகாது புணணியகரமாகிய நாலவகை நிலஙகளினினறும எலலாப்பொருளகளும் தோன்றி விளஙகப பொருந்திய கொடி மினனலையொககும. எ - று (௩௯)

துளைசிறுக் திரண்டு பாலுந தொருபுடைச் சறறே யோஙகி
வளைகொடி நாசி யெளளின் மலாபொரு மாத ராககு

வளைதலே கருமை செம்மை நுனியினமற் றிடையிற் பள்
ளவினிற் குறுக லாதி யடுத்துளோர் மூக்கு மெய்தார்.

(இ - ள்) அம்மங்கையர்களுக்கு, துவாரங்கள் சிறுகி இருபுறங்களிலும் நெருங்கிய இடங்கள் சிறிதுயர்ந்து வளர்கின்ற கொடிபோன்ற நாசியானது எள்ளின் மலரை யொத்திருக்கும் வளைதலும், கருமை செம்மை யெய்தலும், முனையிலும் நடுவிலும் பள்ளமுறுதலும், (இயற்கை) அளவிற்குச் சிறுத்தலும், முதலிய குற்றங்களை (அவர்கள்) சமீபித்தோர் மூக்குகளும் பெறமாட்டா எ - று (௪௦)

மெல்லென விருகால் மூக்கால் வியப்புறத் தும்ம லன்றிக்
கல்லெனப் பலகாற் றும்மல் கண்டிலேன் கவுளின் வண்ணம்
வல்லெனல் பள்ள மாதல் மயிருற லின்றி யாடி
யல்லது நிகரா வட்ட மாயத்தகைசந் தமைந்த மாதோ.

(இ - ள்) மென்மைத்தன்மையாக இருமுறையும் மும்முறையுங் கனிப்பெய்த்துத் தும்மலன்றி, கலலென்று [உரத்தொலிப] பலமுறை (அவர்கள்) தும்மல் கண்டிலன். கன்னத்தின் அழகானது உறுதியாயிருத்தல் பள்ளமுற்றிருத்தல் மயிருற்றிருத்தல் (முதலிய தோடங்கள்) இல்லாது, கண்ணாடியையன்றி (ப்பிறிதொன்றையும்) நிகராகாது வட்டவடிவமாய்த் தகையுற்றுப் பொருந்தின எ - று (௪௧)

தெளிமணி நீலம் போலச் சிறந்திடைக் கறுத்து வெள்ளென்
றொளிகொடு கடையிற் சேந்து வேட்டிந் தடங்கண் ணென்ப
வெளியிடை புறுத்த லன்றி மென்மயிர் கறுப்ப வாய்ந்து
வளிமியலா முருக்கொண் டன்ன வணங்கனார்க் கிமைகண் மாதோ.

(இ - ள்) (அம்மங்கையருடைய) நெடிய அரிபரந்தவிசாலமான விழிகளின் தெளிவாகிய கருமணிகள் நீலரத்தினம்போலச் சிறப்புற்றும், நடுவே கறுத்தும், வெள்ளென்று ஒளிகொண்டும், முனையிற் செந்நிறமுற்றும் விளங்கினவென்று சொல்வார்கள். திருவைமுழுவதும் வடிவெடுத்து வந்தாற்போன்ற அம்மாதர்கட்கு இமைகள் நடுவேசந்துகள்பொருந்துதலில்லாது மெல்லிய உரோமங்கள் கருமையுறப் பொருந்தியுள்ளன எ - று (௪௨

முதிர்சுவைத் தேனின் வண்ணம் மொய்த்தகன் றொளிக் கொத்து
மதித்தருங் கணக் குற்ற வாம்பிலாச் சித்திபெற் றோரும்
பொதிதரு காயச் செல்வம் புந்திய ராகினோரும்
விதிதரு கன்னி மார்தம் விழியருள் வழங்கப் பெற்றோர்.

(இ - ள்) முதிர்ந்த உருசியையுடைய தேனிறமுற்ற கண்ணும், பசுவின் கண்ணும்போன்று பொருந்திய கண்களைப்பெற்று எல்லையில்லாத செல்வத்தையடைந்தவர்களும், மிகுதியாகிய விரும்பத்தக்க அழகிய அறிவுடையவர்களும் ஆகிய இவர்களும், பிரமன்பெற்ற அக்கன்னிகைகளுடைய கண்ணருள் கொடுக்கப்பெற்றவர்களாவார்கள் எ - று (௪௩)

கறையடி மேட மேதிக் கண்பொரு கண்கள் வட்டம்
பெறுவிழி யுயர்ந்த நாட்டம் பிறழ்ந்திடு நோக்கு நோக்கு

மறுவுற வலஞ்செல் பார்வை மாறுகண் புருவின் வண்ண
முறுநய னங்க ளன்றே ரூரினுற் றவர்க்கு மில்லை,

(இ - ள்) யானை ஆடு எருமை இவற்றின் கண்போன்ற கண்களும், வட்டமாகிய கண்களும் உயர்ந்துள்ள கண்களும் (கடபார்வை) பிறழும்படிகாணுங் கண்களும் குற்றம்பொருந்த வலப்புறஞ் செல்லும் பார்வையுடைய கண்களும் விகாரமாகிய கண்களும் புருவின்வண்ணம் பொருந்திய கண்களும் ஆகிய இவை அம்மங்கையர் வசிக்கும் நகரத்திலுள்ளவர்க்கு மில்லையாகும் எ - று

கறை - உரல் கறையடி - உரல்போன்ற அடியையுடைய யானை. (௪௪)

வாரிமை யிரண்டு மார்ந்த மயிரிடை நீங்கி நிற்றல்
சீரிய பொன்மை மெய்த் திணிந்திற பருத்தல் சால
நேரிய தாத லின்ன நிகழ்தரா பிரம னீன்ற
வேரியங் கூந்தன் மாதர் விழியிமை நோக்க நோர்க்கே

(இ - ள்) பிரமதேவன்பெற்ற வாசம் பொருந்திய அழகியகூந்தலையுடைய அவ்விருமங்கையர் கண்ணிமை நோக்க கண்டார்களுக்கு, நெடிய இமைகளிரண்டும் பொருந்திய மயிர்கள் நடுவே விலகிநிற்றலும் சிறந்த பொன்னிறமாதலும் வலியுற்றுத் தடித்தலும் மிகவுமிளைத்திருத்தலும் இவ்வகையகுற்றமுடையனவாகமாட்டா எ-று.

ஒண்மணிப் புருவ மொன்றோ டொன்றுறு தடுவிற் போன்று
தண்மயிர்ப் பருத்த னீட றமனிய நிறத்த தாதல்
வண்மையின் வனப்பு நீங்க விடையிடை யகறபி னன்று
பெண்மையிற் சிறந்த வந்தப் பெதுமையாம் பருவத் தார்க்கே.

(இ - ள்) பெண்டன்மையின் மேம்பட்ட அந்தப் பெதுமைப்பருவமாகிய மாதர்களுக்கு, ஒளிவாய்ந்த அழகிய புருவங்கள் ஒன்றோடொன்று பொருந்தாமல், போர்புரியும் வில்லையொத்து, குளிர்ச்சிபொருந்திய மயிர்கள் பருத்தலும் நீளுதலும் பொன்னிறமாதலும் வண்மையாகிய அழகொழிய இடையிடையே விலகிநிற்றலும் பொருந்தமாட்டா எ - று

பெதுமை - பெண்கட்குரியதோர் பருவம் அது எழுவகை பேதை பெதுமை மங்கை மடந்தை அரிவை தெரிவை பேரிளம்பெண்ணெனப்படும். அவற்றுள் எட்டுவயதுமுதல் பதினொருவயதுவரையிற் பெதுமை (௪௬)

வளையின் வார்ந்து தாழ்ந்து மடற்கழி நலத்து முன்னாத்
தளிய முழுத் மன்று தடனுசெவி முரிபயி னீங்கி
யெளிய நரம்பு தோம மெழுந்துமேல் வளைந்து யாந்து
நளிய காதி னேர்ந் நங்கையர் பணியா தோரே

(இ - ள்) தேவாமிர்தம்போன்ற அம்மங்கையர்களது விசாலமான செவிகள் வள்ளைக்கொடிபோல நெடுகித்தாழ்ந்து மடலுற்று நன்மைபெற்று முன்னாத் தளியன முரிதலில்லாது இழிந்துக் கூற்றதக்க நரம்பும் மயிருந்தோன்றி மேலே வளைவுற்று உயர்ச்சிகொண்டு நட்புக்கொள்ளத்தக்க காதுகளையுடையவர்கள் அம்மங்கையர்களை வணங்காதவர்கள் எ - று (௪௭)

பூவிரி கைம வாய்ந்து முழுமதி யிடைப்போழ்ந் தொப்ப
மேவிய வ்வு மாகி மிளிர்நரம் புரோம நீத்த

தூவியன் னத்தை யொத்தோர் சுடர்நுதல் சுவத்தி கம்போற்
பாவிய விரேகை நெற்றிப் பாவைய ரவரைத் தாழ்ந்தோர்.

(இ-ள்) தூவியையுடைய அன்னத்தைப்போன்ற அவர்களது பிரகாசிக்கின்ற நெற்றிகள், மூன்று விரற்கடை யகலமுற்றுப் பூரணசந்திரனை நடுவிற் பிளந்தாற்போற் பொருந்திய உருவமுடையதாகி, பிரகாசிக்கின்ற நரம்பும் உரோமமுமொழிந்தன. சுவத்திகத்தைப்போல இரேகைபொருந்திய நெற்றியையுடைய மாதர்கள் அம்மங்கையர்களைப் பணிந்தவர்கள் எ-று.

தூவி - மயிர். இது அன்னத்தூவி மயிற்றூவி யென்பன வழக்கு. அன்னத்தையொத்தோரென வுவமித்தது அவர் நடையைக்குறித்த உவமமெனக். (௪௮)

மதியென வொளிர்ந்து சீத மருவிவான் கங்கை பூத்த
பொதியவிழ் புதிய கஞ்சம் போன்மென மலர்ந்த மாதர்
கதிருமிழ் முகஞ்சீ மந்த விரேகைகள் கவின்று வார்ந்து
துதிசெய வொளிர்ந்த வென்பத் தொழுதவர் தாமு முய்ய.

(இ-ள்) அம்மங்கையர்களது கிரணங்களைச்சிந்தும் முகங்கள் பூரணசந்திரன் போலப் பிரகாசித்து, குளிர்ச்சிபெற்று, சிறந்த கங்காசலத்திற் புட்பித்த முறுக்கவிழ்ந்த புதிய செந்தாமரைபோலுமென்று சொல்லும்படி மலர்ந்தன. வணங்கினவர்கள் கடைத்தேறும்படி சீமந்தரேகைகள் அழகுற்று நெடுகித் துதிசெய்யும்படி பிரகாசித்தனவென்று சொல்லுவார்கள் எ-று. (௪௯)

கட்டழ கெறிக்கும் வேதன் கன்னியர் தமைச்சார்ந் தோர்க்கு
மொட்டுசீ மந்த ரேகை யொருத்தன்மத் தகமோ சென்னி
முட்டற வுயர்ந்து வட்ட மாயெழின் மொய்க்குந் தேசு
விட்டற வீங்க லீளல் விரிதலன் னவையெய தாவே.

(இ-ள்) பிரமதேவன் பெற்ற பேரழகு விளங்கும் அக்கன்னியர்களை யணுகினவர்களுக்கும் சீமந்தரேகையுற்று, யானையின் மத்தகத்தை யனைய சிரமும் தடையற வுயர்ந்து வட்டவடிவமாகி அழகுமிகும் பிரகாசமின்றி மிகப்பூரித்தல் உயர்தல் பரத்தல் ஆகிய இக்குற்றங்களுடையர் எ-று. (௫௦)

வண்டினந் தொடர்ந்தா லென்ன மைகொடு நூற்றா லென்னக்
கொண்டல்கண் படுத்தா லென்னக் கூந்தலங் கமுகார்ந் தென்னக்
கண்டவர் வியப்ப வார்ந்து கமழ்ந்துநெய்த் திருண்டு தாழ்வுற்
றுண்டொரு கறுப்பு மிக்கென் றுரைகொடா விணர்மென் கூந்தல்.

(இ-ள்) பூங்கொத்தை யணிந்த (அவர்களுடைய) மெல்லிய கூந்தல்கள் வண்டுகூட்டங்கள் நெருங்கினாற்போலவும், மையினாலெழுதினாற்போலவும், மேகமானது துயில்செய்தாற்போலவும், அழகிய கூந்தற் கமுகு பொருந்தினாற்போலவும், பார்த்தவர்கள் ஆச்சரியமுறப் பொருந்தி நீண்டு மணமுற்று நெய்ப்பசைகொண்டு கருமையுற்றுத் தொங்கி, தமக்கு மேம்பட்டதாகிய கறுப்பொன்றுண்டென்று சொல்லப்படாதன (ஆயிருந்தன) எ-று. (௫௧)

இடையிடை வெளிகண் டோற்ற விறப்பவுங் குறுக னீளல்
கடைபிளந் திருத்தல் செம்மை காருசன் னிறத்த வாத

லிடைவற் றுலறல் வன்மை யணுகுதல் குழைத லின்மை
சடைபட லினைய கூந்தல் சார்ந்தவர் தமக்குஞ் சாரா

(இ - ள்) இடையிடையே சந்துகள் காணுதல் - மிகுதியுங் குறுகல் - (அதிகமாக) நீளுதல் - முனை பிளவுபட்டிருத்தல் - செம்மை பொன்மையாகிய நிறங்களை யடைதல் - பொருந்தாதுலறல் - வலிமையாயிருத்தல் - மென்மையற்றிருத்தல் - சிக்குப்படுதல் இவ்வகைய குற்றமுடைய கூந்தல்கள் (அம்மங்கையர்களை) அடைந்தவர்கட்கும் உண்டாகமாட்டா எ - று (௫௨)

சுடர்நுதற் புருவ நாப்பண் ணெட்கத்தி னுதியிற் சேர்ந்த
விடலறு மீறுப்பெற் றோரும் விழுத்தக விடப்பாற் புள்ளி
வடிவின தாகிச் சேர்ந்த மறுவினர் தாமுஞ் செம்பொற்
குடங்கிகர் வலப்பாற் கொங்கை யம்மறுக் கூடி னோரும்.

(இ - ள்) பிரகாசிக்கின்ற நெற்றியும், புருவமத்தியும், மூக்கு முனையுமாகிய இடத்திற் பொருந்திய நீக்குதலற்ற மறுப்பெற்றவர்களும், இடப்புறத்தில் மேன்மை பொருந்தப் புள்ளிவடிவாகிச் சிவந்த மறுவினையுடையவர்களும், செம்பொன்னாலாகிய குடம்போன்ற வலப்புறக்கொங்கையில் அழகிய மறுப்பெற்றவர்களும் எ - று

இதுமுதல் நான்கு பாடல்கள் ஒருதொடர் (௫௩)

கடிப்புறத் தலர்மென் கையிற் கழுத்திலுஞ் செவியிற் காமர்
கொடிற்றினின் மறுப்பெற் றோருங் குவவுவா ணுதலி னோது
வடித்தமுத் தலைய சூல வரையுறப் பெற்றோர் தாமுந்
தடக்கைமார் புந்தி தன்னிற் சார்வலஞ் சுழியி னோரும்

(இ - ள்) கடிதடத்தின் புறத்திலும், மலர்போன்ற மெல்லிய கையிலும், கழுத்திலும், அழகிய செவியிலும் விரும்பத்தக்க கன்னத்திலும் மறுவையுடையவர்களும், பெருமைபொருந்திய ஒள்ளிய முகத்தில் அழகுற வடித்த முத்தலைகளையுடைய சூலம்போன்ற இரேகையை யடையப்பெற்றவர்களும், விசாலமான கையிலும் மார்பிலும் உந்தியிலும் வலஞ்சுழி பொருந்தப்பெற்றவர்களும் எ - று (௫௪)

வலஞ்சுழி முதுகி னொன்று வலம்படக் கிடக்கி னோரும்
வலஞ்சுழி யிரண்டு சொன்ன வெரிந்தலை வதிக்கி னோரும்
வலஞ்சுழி யகன்ற வல்கு லடிப்புற மருவி னோரு
நலஞ்செறி பாண்டில் போலு நன்சுழி யாங்குற் றோரும்

(இ - ள்) முதுகில் ஓர் வலஞ்சுழியினை வெற்றியுண்டாகும்படி பெற்றவர்களும், மேற்கூறிய முதுகில் இரண்டு வலஞ்சுழிகள் இருக்கப்பெற்றவர்களும், பரந்த அல்குலினடியில் வலஞ்சுழி யொன்று பெற்றவர்களும், அவ்வல்குலின்மேல் நன்மைமிக்க சக்கரம்போலும் நல்ல சுழியை யுடையவர்களும் எ - று. (௫௫)

ஒருசுழி மூக்கிற் பெற்ற வொண்டொடி யொருமேனைக்
கருதுநன் மறுவி ரேகை காமரு சுழியுற் றோரு
மருமலர்ப் பொகுட்டு வாழ்க்கை வானவன் வளர்க்க லுற்ற
விருவர்க்கும் பாதப் போது மிறைஞ்சிமுன் னருள்பெற் றோரே.

(இ - ள்.) நாசியில் ஓர் சுழியைப்பெற்ற மங்கையர்களும் ஏனைய நீளக்கத் தக்க நன்மைபொருந்திய மறுக்களும் அழகிய சுழிகளும் அடையப்பெற்றவர்களும், வாசம்பொருந்திய தாமரைமலராகிய கொட்டையில் வாழ்க்கையையுடைய பிரமதேவனை வளர்த்த அவ்விருமங்கையர்களது திருவடித்தாமரைகளையும் பணிந்து பூர்வத்தில் (அவர்களது) திருவருளைப் பெற்றவர்களானார்கள் எ - று (௫௬)

கருநிற மறுவோர் மூக்கி னுதிப்புறக் கலந்து ளோருங்
கருத்தமெட் கொசுகே போலும் வடிவுபுறங் காலிற் பற்றிப்
பெருகிய வலகு லந்தம் பிறங்குறத் திகழ்கின் றோரு
மொருசுழி கடிதொட் டலகு லளவுமுற் றொளிர்கின் றோரும்.

(இ - ள்) கருநிறம்பொருந்திய மறுவை நீண்ட மூக்கின் முனையிற் பொருந்தப்பெற்றவர்களும், கருத்தத்தக்க எள்ளைப்போலுங் கொசுகைப்போலும் வடிவானது புறங்காலின்முதற் பரந்த அலகுல்வரையிற் பிரகாசிக்கப்பெற்றவர்களும், ஒரு சுழியானது கடிமுதல் அலகுல்வரையிற் பொருந்தி விளங்கப்பெற்றவர்களும் எ - று

இதுமுதல் நான்கு செய்யுள்கள் ஒருதொடர்
கொசுகு - மசகம் (௫௭)

கடிமுதல் வயிற்றின் காறு மொருசுழி கதுவி னோருங்
கடிமுதல் வயிற்றின் காறு மிருசுழி கதுவி னோரும்
வடிபொரு குவளைக் கண்ணின் மருவிய சுழியி னோருங்
நெடியவொண் ணுதன்மேற் சால நிகழ்வலஞ் சுழியி னோரும்.

(இ - ள்) கடிமுதல் வயிற்றினெல்லையும் ஒரு சுழி யிருக்கப்பெற்றவர்களும், கடிமுதல் வயிற்றினெல்லையும் இருசுழிகளிருக்கப்பெற்றவர்களும், கூர்மைவாய்ந்து போர்புரியுங் குவளைமலர்போன்ற கண்களிற் பொருந்திய சுழியினையுடையவர்களும், நீண்ட ஒள்ளிய நெற்றியின்பேரில் மிகுதியாய் விளங்கும் வலஞ்சுழிகளையுடையவர்களும் எ - று (௫௮)

சுழிவல மிடமாய்க் கூந்த றுவளப்பிடர்க் கதுவி னோரு
மழகிய வரையி னுப்பப் பொலெழிற் செவிகண் மீதிற்
குழல்வளர் சசியி னுச்சிக் கட்கூடிய சுழியி னோரும்
விழிதுயி லுற்ற காலை விளங்குபற் கறிக்கின் றோரும்.

(இ - ள்) அளகமானது துவளுகின்ற பிடரின்பேரில் வலமிடமாகச் சுழிகள் பெற்றவர்களும், அழகுவாய்ந்த அரைநெகிழ்விலேயும் அள்ளிக்கொள்ளத்தக்க அழகையுடைய செவிகளின்பேரிலேயும், கூந்தல் வளர்க்கையையுடைய உச்சியினிடத்திலும் பொருந்திய சுழியையுடையவர்களும், நித்திரைசெய்கையிலே, பிரகாசிக்கின்ற பற்களைக் கறிக்கின்றவர்களும் எ - று (௫௯)

இலக்கண நெறியி னீங்கு மின்னன பிறவும் பெற்றுங்
கலந்தநற் குறுத லாதிக் கரிசினைப் பெற்றோ ரெல்லா
நலக்குறா மலரின் மேலோ னுற்றவப் பேறுயத் தோனறி
யலக்கணா மையகத்தி னீக்கு மந்தலார் வழிவு காணார்.

(இ - ள்) (உத்தம) இலக்கணமாகத்தினின்று விலகிய இத்தன்மையவான பிறவற்றையும் பெற்று வருந்தத்தக்க துன்பமடைதல் முதலிய குற்றங்களை யடைந்

தவர்கள் யாவரும் நன்மைபுரியும் அன்றலர்ந்த தாமரைமலரின்மேற் பொருந்திய பிரம தேவனுடைய நல்ல தவப்பலனாகத்தோன்றி, உலகிற்குத் துன்பத்தை விலக்கும் அவ் விருமங்கையர்களது வடிவத்தைக் காணுதவர்களாயினார்கள். எ - ள. (௯0)

மனமொழி வடிவுக் கெட்டா வரம்பிலின் பத்தைக் கற்றோர்
மனமொழி வடிவுங் கெட்டொருங் கவையொடு மாட்சி சொற்றாங்
கனகனே நிகரின் மாதரா ரெழி லியற்பிற் றென்றே
நினதுமுன் னுரைத்தே னுள்ள வாறெவர் நிகழ்த்த வல்லார்

(இ - ள்) மனவாக்குக் காயங்கட்கதீதப்பட்ட எல்லையில்லாத சுகத்தைக்கற்றவர்கள் மனவாக்குக்காயங்கட் கெட்டொருங்கையுடன் மாட்சியுறச் சொன்னாற்போல, ஒப்பில்லாத அம்மங்கையரழகு இத்தன்மைத்தென்று தேவரீர்முன்னே (ஒருவாறு) கூறினேன் கடவுளே! (அதனை) உள்ளபடி யெவர்தாம் எடுத்துச்சொல்லவல்லவர்? (ஒருவருமிலர்) எ - று (௯௧)

வேறு

என்று வீணைகை யேந்திய நாரதன்
மன்ற லோதியர் வண்மையு ரைத்தது
நன்று கேட்டு மகிழ்ந்தரு ளல்கினன்
கொன்றை வேணிக் குழகன் குமாரனே.

(இ - ள்.) என்று (இவ்வகையாக) வீணையைக்கையிலேந்திய நாரதமுனிவன் வாசம்பொருந்திய கூந்தலையுடைய சித்திபுத்திகளது அழகை (வாணித்து)ச் சொல்லவும், கொன்றைமலர் மாலையணிந்த சடையையுடைய சிவபெருமானாரது புத்திரராகிய விநாயகக்கடவுள் நன்றாகக் கேட்டுக்களித்துத் திருவருள்செய்தனர் எ - று

நாரதர்வீணையை மகதி யெனப்படுமே (௯௨)

ஐயன் மெய்ப்பருள் கொண்டடி தாழ்ந்துபோய்
கையில் வீணை கதுவிய மாதவ
னையு நுண்ணிடை நங்கைய ரின்புற
வைய முய்ய மதித்திவை யோதினான்

(இ - ள்) கையிலே மகதிவீணையைத்தாங்கிய பெருந்தவமுடைய நாரதமுனிவன் விநாயகப்பெருமானுடைய அழியாத திருவருளைப்பெற்று, அவருடைய திருவடியைப்பணிந்து சென்று, இளைக்கின்ற நுட்பமாகிய இடையையுடைய சித்திபுத்தி தேவிகள்களிப்பெய்தவும், உலகங்கள் கடைத்தேறவும் யோசித்து (அவர்களிடத்தில்) இதனைக்கூறினன் எ - று (௯௩)

பொன்ற யங்கிய பூணிளங் கொங்கையீர்
நின்ற யங்கு விநாயகன் மெய்ப்பத
மொன்று மன்பி னுவந்து பணிந்தவ
னின்று நுங்கள் வனப்பு நிகழ்த்தினான்.

(இ - ள்) பொன்னாற்செய்து பிரகாசிக்கின்ற ஆபரணமணிந்த முதிராத தனங்களையுடைய மங்கையர்களே! விநாயகக்கடவுளுடைய பிரகாசம் பொருந்திய

மெல்லிய திருவடியைப்பொருந்திய அன்புடன் களித்து வணங்கி (அவர்முன்) நின்று உங்கள் சவுந்தரியத்தை யுரைத்தேன் எ - று (௬௪)

விருவை ணிந்த விநாயக னெம்பிரான்
பதும நேர்முகப் பாவையிர் நுங்களை
மதுவை யாற்ற மதித்திருக் கின்றனன்
னிதுநி கழ்ந்த படியென வியம்பினன்

(இ - ள்) செந்தாமரை மலர்போன்ற முகத்தையுடையவர்களே! சந்திரனை (சிரோமாலையாக) அணிந்த எம்பெருமானாகிய விநாயகக்கடவுள் உங்களைத் திருமணஞ் செய்யும்படி திருவுளங்கொண்டிருக்கின்றனர் இது நடந்தசத்தியமென்று (அவர்களுடன்) கூறினன் எ - று

பாவை - பதுமை இது உவமவாகுபெயர் (௬௫)

வேறு

இன்னண முனித்தலைவ னேயப்பு றவியப்பக்
கன்னியரு மன்றல்புரி காதலினி ருந்தார்
நன்னலவ ரைவால்வரை நாயகன் மருங்கு
மன்னுவது செய்திடம திதனென முந்தேன்

(இ - ள்) முனிவர்தலைவனான நாரதமுனிவன் இவ்வாறு பொருந்தக்கூற, (சித்திபுத்திகளாகிய) கன்னிகைகளும் (விநாயகக்கடவுளை) திருமணஞ்செய்யும் விருப்போடிருந்தார்கள் (வியாசமுனிவனே!) யான் அவர்களை நல்ல மணவினையால் ஐங்கரக்கடவுள்பாற் பொருந்துதல்செய்ய யோசித்தெழுந்தேன் எ - று (௬௬)

முக்கணமுக மைந்துடைய முன்னவனை மூவாத்
தக்கன்மக மீறுபுரி சங்கரனை விண்ணோர்
தொக்கனர்தொழு முங்கயிலை துன்னினனை வைக்கட்
புக்கடிவ ணங்குபு புகழ்ந்தினிது நின்றேன்

(இ - ள்) திரிநேத்திரங்கள்பொருந்திய ஐந்து திருமுகங்களையுடைய முதற்கடவுளும், அழியாத தக்கன்செய்த யாகத்தை யழிவுபடுத்தியவருமாகிய சிவபெருமானை, தேவர்கள்கூடிப் பணிகின்ற திருக்கைலையையடைந்து சபையினுட்சென்று (அவருடைய) திருவடியைப் பணிந்து தோத்திரஞ்செய்து இனிதாகநின்றேன் எ-று

தொக்கனர் துன்னினன் என்ற வினைமுற்றுக்கள் வினையெச்சப்பொருளில் நின்றன. வணங்குபு - செய்பு என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம் (௬௭)

வந்தவர வென்கொலென மங்கையுமை பங்கா
எந்தைநின திண்ணருளி னெங்களையு யிர்த்தேற்றா
இந்திரையு நாணுமெழின் மங்கையரை யீந்த
அந்தணனின் சிந்தையறி தற்கென விசைத்தேன்.

(இ - ள்) நீ வந்தவருகை யாதென்றுவினவிய உமாதேவி பாகராகிய சிவபெருமானுக்கு, எந்தையே! அந்தணனே! தேவரீருடைய திருவருளால், எங்களைத் தந்தருளிய கணேசப்பெருமானுக்கு இந்திரையும் நாணமடையத்தக்க அழகமைந்த சித்தி

புத்திதேவிகளை மணஞ்செய்விக்கத் தேவரீருடைய திருவுள்ளத்தைப் புணர்த்தருகென்று கூறினேன் எ - று

இந்திரை - சீதேவி (௬௮)

திங்கண்முடி வேய்ந்தசிவ ஞானகருணை கூர்ந்து
நங்கைமுக நோக்கவுமை நங்கையெனை நோக்கி
யைங்கரன் மகற்குமருண் மன்றலினை யோர்க்கு
மங்கலம தாமதுவி யற்றுகடி தென்றாள்

(இ - ள) சந்திரனை முடிமேலணிந்த சிவபெருமானார் பொருந்திய கிருபை மிகுந்து உமாதேவியின் திருமுகத்தைப் பார்க்க, உமாதேவியார் என்னைப் பார்த்து, ஐந்து கரங்களையுடைய கணேசருக்கு விருப்புண்டாகும் திருமணம் எல்லோருக்கு மங்கலத்தை யுண்டுசெய்வதாம் (ஆதலின் அதனை) விரைவிற்செய்க வென்றனர் எ-று

குரவரிசை யக்கருணை கொட்டுமுக வேழ
வரத்தனைப் பெற்றெதிர் வணங்கிப்படி சேனைமுன்
பரவிரு சத்திகளை யளித்தனையன் றேயவ்
விரவுமல ரோதியரை வேட்டருள்க வென்றேன்.

(இ - ள) குரவர்கள் சம்மதித்தலால், கிருபையைச் சொரியும் யானைமுக விநாயகக்கடவுளைச் சமீபித்து எதிர்பணிந்து, சுவாமிகளே! முன்னேயான் தந்தசெய்ய இருசத்திகளை யுதவினீரன்றோ? அமலர்கள் பொருந்திய கூந்தலையுடைய சித்தி புத்திகளைத் திருமணம்புரிந்தருள்வீராகவெனக் கூறினேன் எ - று

குரவர் - தாய்தந்தையர் வரத்தன் - வரங்களைக் கொடுப்போன் அல்லது சிறந்தவன். (௭௦)

நின்னுருவி லியாது நிகழ்கின்றததை யன்றி
மன்னுலகில் வேறுநிக ழாமரபி னாலக்
கன்னியரை நீவதுவை காணினல தின்பந்
துன்னுதலு றாதுலக மென்றிதுவுஞ் சொன்னேன்

(இ - ள) தேவரீருடைய திருவுருவில் எது நிகழ்கின்றதோ அதுவேயல்லது பிறிதொன்று நிலைபெற்ற வுலகத்தில் நிகழாத மரபுவழியால், அச்சித்திபுத்திகளைத் தேவரீர் திருமணம் புரிந்தாலன்றி உலகத்தில் இன்பமென்பது பொருந்த மாட்டா தென்று இதனையு முரைத்தேன் எ - று (௭௧)

தொல்லுலக மாண்களொடு பெண்களினை யொத்துக்
கூடினது வன்றெழினமை கொத்தறவ ளர்த்துப்
பீடுதர லாலவர்வு பேணுதல்பு ரிந்து
நாடுமெனை யாண்டருள்க வென்றுநனி நுவற்றேன்.

(இ - ள) தொன்மையாகிய வுலகத்தில் ஆண்மக்களோடு பெண்மக்கள் மனமிசைந்து சேர்ந்தால், அச்செயல் என்ன படைப்புத்தொழிலைக் குற்றமறப் பெருக்கி நன்மையைத் தருவதால், திருமணஞ்செய்வித்தல் கருதிவந்த அடியேனை யாண்டருள வேண்டுமென்றும் விண்ணப்பஞ்செய்தேன். எ - று. (௭௨)

வேறு

அட்ட மூர்த்தி யத்தற்கிறை யுற்றநீ
பெட்ட மன்றல் பிறக்கு முயற்சிசெ
யிட்ட மாகிய யாவர்க ளோடுநாஞ்
சட்ட வெய்துதுந் தாழ்க்கலை யென்றனர்

(இ-ள்) எண்வகைமூர்த்தங்களாகவிளங்கும் விநாயகக்கடவுள் ஆகவேண்டு கோளுக்கு இணங்கினவராகி, நீ விரும்பத்தக்க திருமணத்தை முடிக்கும் முயற்சியைச் செய்வாயாக நாம் இஷ்டமாகிய எல்லாரோடும் திருத்தமாக வருவோம் காலந் தாழ்க்காது செல்கவென்றனர் எ-று.

அட்டமூர்த்தி யென்றதை, திருவாசகம் "நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்து நின்றான், உலகே ழெனத்திசை பத்தெனத்தா னொருவனுமே, பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ" என்பதனாலறிக. (௭௧)

கருணை நாயகன் கண்ணருள் கொண்டுபோய்த்
திருவி னாயகன் சேவடி தாழ்ந்துநான்
மருவி னார்குழ லார்மண மோதிப்பின்
பொருவில் சத்திய லோகம் புகுந்தனன்

(இ-ள்) ஞான கிருபாமூர்த்தியாகிய கணேசப்பெருமான் கடாட்சம் பெற்றுச் சென்று, இலக்குநாயகனாகிய திருமாலின் செவ்விய திருவடியைப்பணிந்து, வாசம் பொருந்திய நீண்ட நல்ல கூந்தலையுடைய சித்திபுத்திகளின் திருமணத்தைக் கூறிப் பிறகு ஒப்பில்லாத (என்னுடைய) சத்தியலோகத்தை யடைந்தேன் எ-று. (௭௪)

வேறு

முனிவர ரெழுவரை முடிகொள் வேந்தரைப்
புனிதவிண் ணவர்களைப் புலவர் மன்னனைக்
கனிமொழி யவரொடுங் கடுக வம்மினென்
றினியமங் கலம்பொறித் தெய்த வுய்த்தனன்

(இ-ள்) சப்த விருடியரையும், கிரீடமணிந்த மன்னர்களையும், புனிதமான தேவர்களையும், தேவராசனாகிய இந்திரனையும், தத்தம் மனைவிமார்களோடும் விரைந்து வாருங்களென்று இனிமைபொருந்திய திருமணத்திருமுகம் வரைந்து (அவர்கள்பால்) அடைய (தூதுவரைச்) செலுத்தினேன் எ-று.

முனிவரரெழுவர்—அத்திரி ஆங்கிரசன் கௌதமன் சமதக்கினி பரத்துவாசன் வசிட்டன் விசுவாமித்திரன் என்பவர் அன்றியும், அகத்தியன் ஆங்கிரசன் கௌதமன் காசிபன் புலத்தியன் மார்க்கண்டன் வசிட்டனென்பதும் வழக்கு. (௭௫)

மாதவ வசிட்டன்முன் மாத வத்தருந்
இந்திரன் முதலிய தேவர் கூட்டமும்
பாதலத் தவரும்பார்த் திவரும் யாவருங்
காதலி மாரொடுங் களித்து நண்ணினார்.

(இ - ள்) (பிரமன் செலுத்திய சித்திபுத்திகளின் திருமணத் திருமுகங் கண்டு) பெருந்தவமுடைய வசிட்டன் முதலாகிய சிறந்த தவசிகளும், திருமால் முதலாகிய தேவர்கூட்டத்தவர்களும், பாதலவாசிகளும், அரசர்களும், மற்றெல்லோரும் (தத்தம்) மனைவிமார்களோடும் விருப்புற்று வந்தார்கள் எ - று.

சீதரன் - ஸ்ரீதேவியை மார்பிலணிந்தவன், திருமால் (௭௬)

நிதிமணித் தருக்களு நீடு தேனுவுங்
கதிர்மணி யிழைகளுங் கருத்தின் வேட்டவு
முதிர்சுவை யுண்டியுந் துன்னி னரொடு
பதியினர் கைக்கொளப் பணிப்பச் செய்தனன்

(இ - ள்) நிதிகளும் மணிகளும் தருக்களும் பெருமை மிக்க காமதேனுவும் (ஆகியவை) பிரகாசமுடைய மணிகளிழைத்தபணிகளும், மனத்தில் விரும்பியனவும், சுவை முதிர்ந்த உணவும், (ஆகியவிவற்றை) நெருங்கினவர்களுடன் அந்நகரவாசிகள் கைக்கொள்ளும்படி கொடுக்கச்செய்தான் எ - று.

நிதி—சங்கநிதி பதுமநிதியென இரண்டு இவை முறையே சங்கரூபமும் பதுமரூபமு முடையனவாய்த் தம்மிடத்துள்ள பொருளை யெடுக்குந்தோறுங் குறையாது கொடுக்கு மியல்பின.

மணி—சிந்தாமணி - சூடாமணி - சியமந்தகமணி முதலியன.

தருக்கள்—கற்பகம் - அரிசந்தனம் - சந்தானம் - பாரிசாதம் - மந்தாரமென்பன இவை விரும்பியவற்றைக் குறைவின்றிக் கொடுக்கும்.

தேனு—பசு. (௭௭)

நச்சிய மயன்றிரு நகரங் கோட்டினை
யிச்சையி னியற்றின னியற்று மன்றலுக்
கச்செழு மண்டப மகத்தி ருக்கினான்
விச்சுவ கன்மனென் றுணர்த்து மேதையான்

(இ - ள்) (யாவரும்) விரும்பிய மயனென்பவன் திருநகரத்துக்கேற்றத் தன் விருப்பின்படி அழகுசெய்தனன் செய்யப்பத்தக்க திருமணத்திற்காகிய அழகிய செழிய மண்டபத்தை விசுவகன்மனென்று சொல்லப்படும் அறிவினையுடையவன் மனதால் நிருமித்தனன் எ - று.

மயன் - அசுரகம்மியனென்றும், விசுவகன்மன் - தேவகம்மியனென்றுஞ்சொல்லப்படுவோர் இவர்களே சிற்பநூல் வல்லவர்களாம் (௭௮)

வனப்பினை முழுவதும் வடித்து நான்முகன்
மனப்பெரு முயற்சியின் வகுத்த மாநகர்க்
கனப்பெரு மயன்கடி மணத்துக் காக்கிய
வினப்படு மெழிலெவ ரியம்ப வல்லவர்

(இ - ள்) நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவன் அழகு முழுவதையும் வடித்தெடுத்து மனத்தின் பெருமுயற்சியினால் சிருட்டிசெய்த சிறந்த அந்நகரத்திற்கு, அப்படிப்பட்ட பெருமைவாய்ந்த மயனென்பவன் திருமணத்திற்காகச் செய்த மிகுதியாகிய அழகை எவர் தாமெடுத்துச்சொல்ல வல்லவராவார் ? எ - று. (௭௯)

வேறு

முத்தினந் தோரணப் பந்தியு முதிர்குலை வாழைக்
கொத்துமப் பூகமுங் குளிர்மணிப் பந்தருங் கொடியும்
பித்தி யோவியப் பிறக்கமும் பிறங்குவே திகையின்
வைத்த பூரண கும்பமும் வயின்வயின் விளங்கும்.

(இ - ள்.) முத்தாலாகிய தோரணவரிசையும், முதிர்ந்த குலையையுடைய வாழைமரக்கூட்டங்களும், கமுகமரங்களும், குளிர்ச்சிவாய்ந்த முத்துப்பந்தர்களும், துவசங்களும், சுவர்த்தலத்தெழுதிய சித்திரப்பிரகாசமும், விளங்குகின்ற திண்ணையின்மேலிலமைத்திய பூரணகும்பங்களும் இடங்கடோறும் விளங்கின எ - று.

பூரணகும்பம் - நிறைகுடம் (௮௰)

வடாது மால்வரை மருட்டிய மாற்றுயர் பொன்னாற்
றடாத பேரொளி மணிகளாற் சமைத்தவந் நகரின்
விடாத பேரெழி னோக்கிவண் காவல னளவிற்
படாத வாள்விழி படைத்திலே னெனப்பரி வுழந்தான்.

(இ - ள்) பெரிய வடமலையாகிய மேருமலையை மயங்கச்செய்த மாற்றுயர்ந்த பொன்னாலும், தடைசெய்யப்படாத பேரொளிவாய்ந்த இரத்தினங்களாலுஞ் செய்யப்பட்ட அச்சிறந்த நகரத்தின் நீங்காத பேரழகைப் பார்க்கும்படி எண்ணிக்கையிலடங்காத (அநேக கோடி) ஒளிபொருந்திய விழிகளை யடைந்திலேனென்று, தேவர்க்கிறைவனான இந்திரன் துன்பமிகுந்தான் எ - று.

இந்திரன் தன் ஆயிரங்கண்களாலுங் கண்டுமுடியாமையின் "அளவிற் படாத வாள்விழி படைத்திலே னெனப்பரி வுழந்தான்" என்றார்

வடாதுவரை - மேரு வடதிசையிற் பல மலைகளிருப்பினும் அது பொன்மலையாதலாலும் சிவபிரானுக்கு வில்லானதாலும் பூமத்தியிலிருந்து அதனைச் சுமத்தலானுஞ் சிறப்புநோக்கி அதனையே கூறுதல் வழக்கு. (௮௧)

இந்தி ராதியர் வேறொரு துறக்கமெய் தினர்போ
லந்தி லேர்நகரி லழுந்தினர் நகரவரு
மெந்தை யாகடவுள் கியற்றுபுத் தெழில்வளர் களிப்பான்
முந்து நோக்குறு வுயர்ந்த முறையி னடைந்தனர்.

(இ - ள்) இந்திரன் முதலிய இமையவர்கள் வேறொரு சுவர்க்கலோகமடைந்தவர்களைப்போல, அவ்விடத்திற் சந்தோட (சாகர) த்தில் மூழ்கினார்கள் அந்நகரவாசிகளும் எந்தையாகிய கணேசப்பெருமானுடைய திருமணத்திற்குச் செய்த புதிய அலங்காரத்தினாற் பெருகிய களிப்பால், முற்பட்டுக்கொண்ட உயர்ந்த பதவியை யடைந்தவர்களை யொத்தார்கள் எ - று

அந்தில் - அவ்விடம், அசை. "அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளாகும்"- என்பது சூத்திரம்

புத்தெழில் - புதுமை - எழில் (௮௨)

ஆயி ரமடிய கோடியென் றாழமம் புவியுங்
கூறு நீக்கிரண் முழுவதுங் கூடவந் நகரம்

வீறு பெற்றவர் நாளினும் விளங்குகா லத்தால்
வேறு பட்டில தவையெலா மொருங்கிய விளைவால்

(இ - ள்) பன்னிருகோடி சூரியர்களும், சந்திரர்களும் சொல்லுகின்ற நக்ஷத்திரத்தொகுதி முழுவதும் ஒன்று சேர்ந்து பெருமைபெற்ற அக்காலத்திலும், அந்நகரமானது விளங்குகின்ற காலத்திலுண்டாகும் வேறுபாடடைந்ததில்லை (ஏனெனில்) அவையாவுந் தம்மிடத்தொருங்குள்ள தன்மையால் எ - று (௮௩)

காம தேனுவி னுணவுயுங் கற்பகத் திழையும்
வாம மேகலை மகளிரு மைந்தரும் பெறலாற்
றாமெ லாமுரு வொத்தலிற் றம்முளே யில்லை
நாம மாத்திரம் வேறுபா டெனவிற் றுவண

(இ - ள்) காமதேனுவினால் கொடுக்கப்படும் உணவுகளும், கற்பகத்தருவினால் கொடுக்கப்படும் ஆபரணங்களுமாகிய இவற்றை, அழகிய மேகலாபரணமணிந்த மாதர்களும் ஆடவர்களும் பெறுவதால், தாங்கள் யாவரும் வடிவமொத்திருத்தலால் தங்கட்குள்ளே வேறுபாடில்லாமல், பெயர்கள்மாத்திரமே வேறுபாடுகளைச் சொல்லாநின்றன எ - று (௮௪)

பாரி சாதமந் தாரங்கற் பகம்பசுந் தேவ
தார மேவுசந் தானமென் றிவையொடு தழைந்த
வேரி தாழ்பொழில் விம்மிதம் பற்பல விளைப்ப
ஆரு நோக்கின ரவ்வயி னவ்வயி லகலார்

(இ - ள்) பாரிசாதம் - மந்தாரம் - கற்பகம் - பசிய தேவதாரம் - பொருந்திய சந்தானமென்று சொல்லப்படும் இப்பஞ்சதருக்களும் நெருங்கிய தேன்பாயுஞ் சோலைகள் எண்ணிறந்த விம்மிதங்களை யுண்டுசெய்ய, (ஆங்கடைந்துள்ள) எல்லோரும் அவ்விடங்களை விட்டு நீங்காதவர்களாகிப் பார்த்துக்கொண்டிருந்தார்கள் எ - று (௮௫)

வேட்ட வேட்டவை கற்பக மாதிகள் வீச
வேட்டை தீர்தர வேற்றிள மகளிரு மிலகுஞ்
சேட்டு மாமுடி மைந்தருந் திகழ்விளை யாட்டுக்
கோட்டி மேயினர் குளிர்மலர்ப் பொதும்பரு நகரும்

(இ - ள்) விரும்பிய பொருள்களை விரும்பியவகையே கற்பகத்தரு முதலியன வீசுதலால் (தமது) ஆசையகலும்படி (அவற்றைப்) பெற்று, இளமைவாய்ந்த பெண்களும் பிரகாசிக்கின்ற சிறந்த பெருமைபொருந்திய முடியையணிந்த புருடர்களும், நிறமமைந்த மலர்களையுடைய சோலைகளிலும் நகரத்திலும், விளங்குகின்ற விளையாடல்களைச் செய்யுங் கூட்டங்களாயினார்கள். எ - று

ஏட்டை - ஆசை ஆறு - கடைக்குறைந்து ஆவென நின்றது. (௮௬)

வாச மென்புன லாடியு மலர்ந்தபூம் பொழிலி
னூச லம்மனை கந்துக மாடியு முவந்து
நேச மல்கிய வண்பரி னூடியு நெடுங்கட்
காச லம்பிய முலையினா ரிலருளங் களித்தார்

(இ - ள்) மணமெய்திய மெல்லிய நீர்விளையாடல் செய்ததும், விகசித்த மலர்ச்சோலையில், ஊசல் அம்மனை கந்துகம் இவ்வாடல்கள் செய்ததும், சந்தோஷித்ததும்,

அன்புமிகுந்த கணவரிடத்திலமனநாடியும், நெடியகண்களையுங் காசானது அசைகின்ற மூலைகளையுமுடைய மாதாகளிற சிலா மனங்களித்தாாகள் எ - று.

ஊசல் - ஊஞ்சல அம்மானை இஃதிககாலத்து எழுங்காயெனப்படும் கந்து கம - பந்து காசு - நவமணிகள அலலது ஓாவகை மாதரணிவடம். (௮௭)

கிள்ளை மென்சொலாற் பூவையின் கிளவியைக் கீழ்ந்துங்
கிள்ளை மென்சொலைப் பூவையின் கிளவியாற் கீழ்ந்து
நள்ளு மென்பிடி யாடலை யன்னத்தா னலிந்துங்
கள்ளுணா கோதையா தம்முளே சிலருளங் களித்தா

(இ - ள) கிளிகளின மெலலிய சொற்களால நாகணவாயப்பறவைகளின சொற்களைக் கீழ்ப்படச்செய்தும், கிளிகளின மெலலிய சொறகளை நாகணவாயப்பற வைகளின சொறகளாற கீழ்ப்படச்செய்தும, விருமபத்தக்க மெலலிய பெண்யானை யின நடையை அன்னப்பறவையால துனபுறுத்தியும், தேனபொருந்திய அளகத்தை யுடைய மங்கையாகளிலே சிலர் மனமுவந்தாாகள எ - று (௮௮)

களிசெய லொழுக்கின் வெறியுங் கவனவாம் பரியின்
விளிவில வெறியு மெழுகரு சிவலகவு தாரி
பொளிறு ரூடலை வாரணம பொரிடை யுறுத்து
வெளிறில வெறியும வெந்தருட சிலாகொடு வியந்தா.

(இ - ள) மதசகளிப்பைச செயயும யானையினுலாகிய வெறறியும, நடை யுடன தாவிசசெலலும குதிரையினுலாகிய அழியாதவெற்றியும, ஆடு - சிவல - கவு தாரி-பிரகாசிக்கின்ற உசசிககொணடையையுடைய சேவற்கோழி ஆகிய விவற்றின சணடையால உணடாகும வெளிறறதனமையற்ற வெற்றியுங்கொண்டு மனனவருட் சிலா மனங்களித்தாாகள எ - று

கவனம - குதிரைநடை

சிவலெனினுங் கவுதாரியெனினுமொக்கும் எனில் அவ்விரண்டனையுங் கூறியிருத்தலின அவற்றின உடபேதங்களெனக்கொள்க (௮௯)

சுருதி யாதிய டெனற வுணாந்துசூழ் வினையை
யொருவு மாதவ வசிட்டா தியருந்து வாாக
டருமவாதமு மருத்தவா தமுந்தகு காமப்
பொருளின் வாதமு முத்திவா தமுமியங்க னிருந்தா

(இ - ள) வேதமுதலியவற்றை (ஐயந்திரிபு அறியாமையென்னும்) குற்றங்க ளொழியக்கற்று, தம்மைச்சூழ்ந்த வினைத்தொடக்கை யொழித்த பெருந்தவமுடைய வசிட்டாமுதலிய ஆங்கிருந்த பெரியோர்கள் தருமவாதமும் அருத்தவாதமும் தகுதி யாகிய காமப்பொருளினையுடைய வாதமும் மோட்சப் பிரதிபாதகமான வாதமுஞ் செய்துகொண்டிருந்தார்கள். எ - று

இச்செய்யுளால் ஆங்கிருந்த வசிட்டராதியோர் சதுர்வித புருஷார்த்தங்க ளைப்பற்றி ஒருவரோடொருவர் வாதித்துக்கொண் டிருந்தாரென்றார். (௯௦)

சனக ராதியாம் யோகியர் தத்துவன் மொழிந்த
வனக மாகிய வாகமந் தனைவியா வருளாற்

புனித மாகிய பூரணப பொருளிய லுயிாசசீா
நனிவி ராவுபா சததிய னவினறன ரிருநதாா.

(இ - ள.) சநகாமுதலாகிய யோகிகள தததுவசொருபியாகிய இறைவன் கூறிய அழியாமைத தனமையையுடைய சிவாகமவிதிபபடி திருவருள வசததிறை பரிசுததமாகிய பரிபூரணபபொருளினியலபும, உயிாகளின சீாததியும, மிகுதியாகக கலநத பாசததினியலபும (இததனமையனவெனக) கூறிககொணடிருநதாாகள எ - று.

புனிதமாகிய பூரணபபொருள - பதி உயிா - பசு பாசததினியல - பாச வியறகை, எனவேதிரிபதாாததஙகளின விடயமாகச சமபாஷணைசெயதுகொணடிருந தாாகளெனபதாம. (௬௧)

சிததி யெடடையுங காடடுபு சிததாக டமமு
ளொததி டாாகளை வணககின ருவநதன ாிருநதாா
சுதத வானவ ரினததவா தமமொடு தொககுத
தகக மாறறலைத தோறறுபு தருககின ரிருநதாா

(இ - ள) சிததாகள எணவகைசசிததிகளையுங காடடிககொணடு, தஙகளுள இணஙகாதவாகளை வணஙகசசெயது களிததிருநதாாகள. புனிதமாகிய தேவாகள தமமினததாருடனகூடித தஙகடஙகள பராககிரமஙகளை (ஒருவாககொருவா) காடடிக கொணடிறுமாநதிருநதாாகள. எ - று

தம்முளொததிடாரெனறது தஙகள பககததவராகாத மாறுபடடவாகளை.

வணககினா - உவநதனர் எனபன முறறெசசஙகள. தருககினா எனபதும முறறெசசம "வினைமுற றேவினை யெசச மாகலுங - குறிபபுமுற றீரெசச மாகலு முளவே" எனறது சூததிரம (௬௨)

பதும மாநிதி தொஙகலும பணிலமா நிதியிற
புதுவ தாமணித தொடலையும பொறபமா கறப
மதுவ றுமலாத தொடையலு மாடையு மறறுங
கதுவு மாமண மணடபக கவினுரைக கடஙகா.

(இ - ள) சிறநதபதுமநிதியாலாகியதொஙகலகளும, பெருமைவாயநதபணில நிதியாலாகிய புதியமாலைகளும, அழகினையுடைய சிறநதகறபகததருவினதேன்சொரித லொழியாத மலாமாலைகளும, ஆடைகளும பிறபொருளகளும நெருஙகிய சிறநத திருமணமணடபததினுடைய அழகுகள சொலவதறகு அடஙகமாடடா எ - று

பதுமநிதி - இருவகைநிதிகளுளொனறு அல்லது பதுமம - ரயம. நிதி - குப்பல், எனவே பதுமநிதியென்பது இரச குணடுகளெனறு மொசகுமெனபா ரொருசாரார. பணிலம - சஙகு ; ரணடுமுததுகள. தொடலை - மாலை பொறப எனற தில் அகரம் ஆறனுருபிடைசசொல கறபகமெனபது கறபமெனநினறது உரைக கடங்காவென்றதை, உரைககு அடஙகாவெனறும, உரைகக அடங்காவெனறும பதப பிரிவு கொள்ளககிடநதது ஆடையெனறது விதானமுதலியனவெனக. (௬௩)

மணிப்பொற் றாணொடா றுநாடடிய மரகத வாளைழ
தணிப்பு ருதபூ சுதநதகு கனனனூர தளைழயா

வணிப்பொற் பூண்டுகி லமுதுசிற் றுண்டிக ளனைத்துங்
கணிப்பி லாதன வழங்குவ கண்டவர் வியப்ப.

(இ-ள்) நவமணிகளிழைத்த பொன்னாலாகிய தூண்களிலெல்லாம் நிறுத்தியவாழைமரங்களும், எண்ணில்லாத கமுகமரங்களும், தகுதியாகிய கருப்பங்கழிகளுந் தழைத்து, (தம்மைப்) பார்த்தவர்கள் ஆச்சரியமடையும்படி அழகிய பொன்னாற்செய்த ஆபரணங்களையும் ஆடைகளையும் உணவுகளையும் பலகாரவகைகள் முதலிய வெல்லாவற்றையும் எண்ணிறந்தனவாகக் கொடாநின்றன எ-று.

கற்பகத்தருக்களுடன் கலந்து வாழ்ந்த தன்மையாலும், கணேசப்பெருமானுடைய திருமணத்திற் குபயோகப்படலின் அவர் கிருபா நோக்கமுற்றமையாலும், அவற்றிற் கவ்வகைய ஆற்றல்வந்ததென்க. (௩௫)

விண்ணின் வேறுவே றாகிய வுலகினவிம் பிதமு
மண்ணின் வேறுவே றாகிய தீவினவான் பொருளுந்
திண்ண மாகிய பித்தியிற் சித்திர மாய்ப்
நண்ணு வார்க்கெலாந் தொழிலொடு நற்பயன் விளைக்கும்

(இ-ள்) ஆகாயத்திலுள்ள வெவ்வேறாகிய உலகங்களின் அற்புதங்களும், பூலோகத்திலுள்ள வெவ்வேறாகிய தீவுகளின் சிறந்த பொருள்களுமாக, உறுதியாகிய சுவர்த்தலங்களிலெழுதிய சித்திரங்கள், தம்மை யடுத்தவர்களுக்கெல்லாம், தங்கடங்கள் மரபுக்கேற்பத் தொழில்செய்வனவாகிச் சிறந்த பலனைக் கொடாநின்றன எ-று.

காம தேனுவா திகளெனக் கடிசெய் காவணத்துச்
சேம மாமுரு வுகள்பல செறிப்பதே யன்றிக்
காம தேனுவா திகளையும் பன்முறை கான்றங்
கேம மாகிய விம்பித மெண்ணில புரிவ

(இ-ள்) காமதேனு முதலியனவாக, அழகுசெய்கின்ற பந்தர்களிலுள்ள சேமமாகிய வடிவங்கள் பலபொருள்களைத் தருவதேயல்லாமல், காமதேனு முதலியவற்றையும் அநேகமுறைகள் அவமானப்படுத்தி, அவ்விடத்து இன்பமாகிய எண்ணிறந்த அற்புதங்களைச் செய்யாநின்றன எ-று. (௩௬)

அழல்செய் பல்கதிர்ச் சூரிய ரவிரொளி மழுங்க
நிழல்செய் பல்கதிர் நிதிமணி யிழைத்தமண் டபத்தி
னுழல்செய் தேவர்க ணிழல்செயா தொளிர்தம துருவங்
கழல்செ யாநிழல் காட்டவி தென்னெனக் கடுத்தார்.

(இ-ள்) தீயைச்சொரியும் பல கிரணங்களையுடைய சூரியர்களது பிரகாசிக்கின்ற ஒளியானது குன்றும்படி நிழலைச்செய்கின்ற பல கிரணங்களையுடைய நவமணிகளிழைத்த (பொன்னாலாகிய) மண்டபத்திலே சஞ்சரிக்கின்ற தேவர்கள், நிழலைச்செய்யாது பிரகாசிக்கும் (இயற்கையுடைய) தமதுருவங்கள் (தம்மை) விட்டுப் பிரியாத நிழலைச்செய்ய (கண்டு) இஃதென்னென்று மயக்குற்றார்கள் எ-று. (௩௭)

வளைவு வேட்கையின் மண்டப மாதிமுற் றியபின்
விளைய நாரதன் வெள்ளியால் வரைபுகுந் திறைவ

வரையர் தேவர்க ளனைவரு மடுத்தன ரெழுகென்
றுரைசெய் தானது கேட்டுமை பாகனு ருவந்து

(இ - ள்) திருமணமகிழ்ச்சியால், மண்டபமுதலியன (அலங்கரித்து) முடிந்தபின்னர், நாரதமுனிவனை விரைந்து, பெரிய வெள்ளிமலையாகிய திருக்கயிலாயகிரியை யடைந்து (விநாயகக்கடவுளை நாசநிதானமுற்று) எமது தலைவரே! அரசர்களும் தேவர்களும் மற்றுமுள்ளவர்களும் (திருமணம் நடைத் தரிசிக்க) வந்துள்ளார்கள் எழுந்தருளகவென்று கூறினன் உமாதேவியாரை யோர்பாகமாகவுடைய சிவபெருமான் அதனைக்கேட்டுக் களித்து எ - று (௯௮)

அத்தி வத்திரந் தமலனை யழைத்தயன் வளர்த்த
சித்தி புத்தியைத் திருமணஞ் செயத்திடல் வேண்டு
மொத்த கோலநீ கொள்கென வுரைத்தனர் கேட்ட
சுத்த தத்துவன் றாயநீர் தோய்ந்தணி யணிவான்

(இ - ள்) யானைமுகத்தையுடைய மலரகிரராகிய விநாயகக்கடவுளை விளித்து, நீ பிரமதேவன் வளர்த்த சித்திபுத்திகளைத் திருமணம் புரியவேண்டுமாதலின், அதற்கேற்ற திருக்கோலங்கொள்கவென்க் கூறினார் அதனைக்கேட்ட சுத்ததத்துவ சொரூபியாகிய விநாயகக்கடவுள் புனிதமான நீரின் மூழ்கி, ஆபரணங்களை யணிவாராயினர் எ - று (௯௯)

வேறு

உம்பர்க ளிமையா நாட்ட மோவற விமைப்பச் செய்யு
மம்பிய வனப்பின் மேனிப் பட்டொளி தணித்தா லென்னச்
செம்பொனம் பரங்கை வாங்கித் திருவரை யிசையச் சாத்தி
வம்பவிழ் கலவைச் சேரச் சை மருமந்தோள் பூசி னானே

(இ - ள்) தேவர்களுடைய இமைகொட்டாத விழிகளையும் ஓயாது இமைகொட்டும்படி செய்கின்ற நெருங்கிய அழகையுடைய திருமேனியின் பரவிய வொளியைக் குறைத்தாற்போல, செவ்விய பொன்னுடையைத் திருக்கரத்தாலெடுத்து, திருவரையிற் பொருந்தவணிந்து வாசனைவீசுங் கலவைச்செச்சையைத் திருமார்பிலுந் திருத்தோள்களிலும் பூசிக்கொண்டனர் எ - று

இமையாநாட்டம் தேவர்கட்குரியது இதுபற்றியே யவர்கள் இமையவரென்னப்பட்டனர் செச்சை - செஞ்சந்தனக்குழம்பு (௧00)

திங்களை முடியில் வேய்ந்த செய்தியை யறிந்து தாமு
மங்கினி தேற வெண்ணி யருந்தவ மாற்ற வானிற்
றங்கிய கோளு நாளு மொருங்குறத் தரித்த தேய்ப்பப்
பொங்கொளி மணிகால் யாத்த பொன்முடி சூடினானே

(இ - ள்) சந்திரனைச் சடைமுடியிலணிந்த செய்தியையுணர்ந்து, தாங்களும் அவ்விடத்தி லேறக்கருதி அருந்தவஞ் செய்தலால், ஆகாயத்திற் பொருந்திய (பிற) கிரகங்களையும் நக்ஷத்திரங்களையும் ஒன்று சேர்ந்திருக்கும்படி (விநாயகக்கடவுள் தமது சடையில்) அணிந்ததைப்போல, மிக்க ஒளியைக்கக்கும் இரத்தினங்கள் பதித்த பொன்னாற்செய்த கிரீடத்தை யணிந்தனர் எ - று

சூரியன் முதலிய கிரகங்களும், அசுவினிமுதலிய நக்ஷத்திரங்களும் ஒருங்கு சேர்ந்தனபோல விளங்கு மிரத்தினங்களைப் பதித்த பொன் கிரீடமணிந்தனன் என்பது கருத்து. (௧0௪)

அருந்தவத் தூரிய தென்றே யவிர்சடை மறைத்து நின்ற
திருந்துபொன் முடியின் மீது திருமணக் காட்சி யின்மேல்
வருந்துமென் றெண்ணி னன்போல் வளர்சடை மதிவெண் டிங்கள்
பொருந்துற வணிந்து கொன்றை மாலிகை பொற்பச் சூழ்ந்தான்.

(இ - ள்) வளர்கின்ற சடாடவியிற் பொருந்திய இளம்பிறைச்சந்திரன், திருமணத்தைக் காண்பதில் விருப்புற்று வருத்தமடையுமென்று திருவுள்ளஞ் செய்தார்போல, அரிய தவத்தொழிலுக்கே யுரியதென்று கருதி, விளங்குகின்ற சடையைமூடி நின்ற திருத்தமாகிய பொன்னாலாகிய கிரீடத்தின்மேற் பொருந்தவணிந்து, கொன்றைமாலையையும் அழகுற வணிந்தனன் எ - று.

"வளர்சடை மதிவெண்டிங்கள் திருமணக்காட்சியின்மேல் (விரும்பி) வருந்துமென் றெண்ணினன்போல, அருந்தவத்தூரியதென்றே யவிர்சடைமறைத்து நின்ற திருந்துபொன் முடியின்மீது, பொருந்துற வணிந்து" என்றந்வயங்கொள்க.

திங்களை முடிமீதணிந்து கொன்றைமாலை புனைந்தானென்பது கருத்து.

அண்டகோ டிகளை யெல்லா மரைக்கணத் தழற்றி நீற்று
மண்டுபே ரழற்கண் மன்றன் மத்தியில் வரம்பு நீங்கி
மிண்டலுங் கூடு மென்று வெய்துமுன் காத்தா லென்னக்
கண்டவர் வியப்ப நெற்றிக் கதிர்மணி யோடை சேர்த்தான்.

(இ - ள்) (பலவாயிர) கோடியண்டங்களையும் அரைவினாடியில் எரித்துச் சாம்பராக்கும் மிகுதியுடைய தீக்கண்ணானது திருமண நிகழ்ச்சியினிடையில், தன் எல்லைகடந்து (மத்தத்தால்) அடாத்தலுங் கூடுமென்றுகருதி, தீமையைமுற்படுத் தடைசெய்தாற்போல, தரிசித்தவர்கள் களிப்பெய்தும்படி திருநெற்றியில் பிரகாசிக்கின்ற நவமணிகள் பதித்த ஓடையணிந்தனன் எ - று.

ஓடை - நெற்றிப்பட்டம். இறைவருடைய சூரிய சோமாக்கினிகளாகிய விழிகளில், தீக்கண் இயற்கையாகச் சாவத்தையு மழிப்பதாதலின், திருமணத்திலும் ஒருவேளை அங்ஙனம் நிகழாவண்ணம் அதனை மறைத்து நெற்றிப்பட்டமணிந்தனனென் றுகற்பித்தனர். (௧0௫)

ஏற்றிய மணிப்பொன் மோலி யிடத்தினி தணியப் பட்ட
கீற்றிளந் திங்கள் கான்ற கேழ்கிளர் நிலவோ வென்ன
நீற்றொளி பழுத்த நெற்றி நிகரரு வாசஞ் சால்த்
இற்றிய நறுஞ்சிந் தூரத் திலகமும் பொறித்து வைத்தான்.

(இ - ள்) (திருமுடியில்) அணிந்த மணிகளிழைத்த பொற்கிரீடத்தில் இனிதாகத் தரிக்கப்பட்ட இளம்பிறைச்சந்திரன் சிந்திய நிறம்விளங்கும் நிலவோவென்று (கண்டோர்) சொல்லும்படி, திருவெண்ணீற்றின் பிரகாசமானது மிக்கு விளங்குந் திருநெற்றியில், ஒப்புக்கூறுத லருமையாகிய மிக்கவாசங்கலந்த நல்ல சிந்தூரமாகிய திலகத்தையு மெழுதினார். எ - று.

கிரீடத்திலணிந்த சந்திரனவீசிய நிலவென்று சொல்லும்படி வெண்ணீற்றொளிவிளங்கும் நெற்றியிற் சிந்தூரத்திலத மிட்டனனென்பது கருத்து (௧௦௪)

காமவே ளசிப வன்றனை கைத்தலக் கொடியின் மீனும்
சேமவான் கொடியின் மீனுந் திருமுகக் கருணை வெள்ளத்
தேமமார்ந் திருபப் றெண்ணி மருங்குற வெய்தி யாங்கு
வாமமா மணியிற் செய்த மகரகுண் டலங்கா திட்டான்.

(இ - ள்) மன்மதன் வருந்தும்படி அவனுடைய கைத்தலத்திற்பிடித்த துவசத்திலுள்ள மகரமும், சிறந்த சேமக்கொடியிலுள்ள மகரமும், (விநாயகப்பெருமானுடைய) திருமுகமானது பொழிகின்ற கிருபாவெள்ளத்தில் இன்பமுற்றிருக்கக் கருதி, இருபுறங்களிலும் வந்திருந்தாற்போல, அழகுபொருந்திய இரத்தினங்களாலாகிய மகரகுண்டலங்களைத் திருச்செவியி லணிந்தனர் எ - று

வேளென்பது மன்மதனுக்கும் முருகனுக்கும் பொதுவாக வழங்கலின் காமவேளென்றார் காமனாகியவேளென விரியும் இது இருபெயரொட்டுப் பண்புத்தொகை. மன்மதன்கொடிமகரம் அம்மகரமும் அவன்சேமக்கொடியிலுள்ளமகரமும் வெள்ளத்தில் களித்துவாழ்ந் தமது மரபுவழக்கால், கணேசப்பெருமானுடைய கருணைவெள்ளத்தில் துன்பின்றி யிருக்கவந்தனபோலு மென்றார் வான்கொடியின்மீன் என்றதற்கு ஆகாயத்திலுள்ள நெடிய மீனராசியென்றாவது, கொடிபோலும் விளங்கும் அருந்ததிமீன் [மீன் - நக்ஷத்திரம்] என்றாவது பொருள்கூறினும் பொருந்தும்

இச்செய்யுளின்கருத்து மகரகுண்டலமணிந்தன னென்பதாம் (௧௦௫)

முகநிதிக் கமலங் கண்ட மெனுநிதி மூரிச் சங்கந்
தகவுமிழ் மணிக ளென்னத் தரளமா லிகைபொற் பூண்க
ளுருத்திரக் கடக மாழி யுதரபந் தனங்கே யூர
நகைமணிச் சிலம்பு மற்று நலத்தக வணிந்தா னன்றே

(இ - ள்) முகமாகிய கமலநிதியும், கண்டமென்று சொல்லத்தக்க வலிய சங்கநிதியும் தகுதியுறச்சிந்திய மணிகளென்று சொல்லும்படி முத்துமாலைகளும், பொற்பணிகளும், சிந்துகின்ற கிரணங்களையுடைய கடகங்களும், மோதிரங்களும், உதரபந்தனமும், கேயூரங்களும், பிரகாசிக்கின்ற இரத்தினச்சிலம்புகளும், பிற ஆபரணங்களும் நன்மைபொருந்த அணிந்தனர் எ - று

கமலம் முகத்திற்கும், சங்கம் கண்டத்திற்கும் உவமானப்பொருள்களாதலின் "முகநிதிக்கமலங் கண்டமெனுநிதி மூரிச்சங்கம்" என்றார் நிதிக்கமலம் என்பது நிதியாகிய கமலமென விரியும் உடுத்திர - வினைத்தொகை இதனைக் கதிர் உடு என மாற்றுதலுமொக்கும் உதரபந்தனம் - அரைப்பட்டிகை கேயூரம் - தோளணி

திருமணக் கோலங் கொள்ளச் சிவபிரா னினிது நோக்கி
வருமயி ராவ ணத்தை வழங்குபு தானு மாதும்
பொருவிடை யிவர்ந்தான் காற்போற் பொழிமதக் களிநல் யானை
யிருவருக் கரிய வைங்கை யெம்பிரா னேறி னானே.

(இ - ள்) (கணேசப்பெருமான் இவ்வகையாகத்) திருமணத் திருக்கோலங் கொள்ளவும், சிவபெருமான் (அதனை) இனிமையாகக்கண்டு, வருகின்ற அயிராவணத்தை (அவருக்கு வாகனமாக)க் கொடுத்து, போர்செய்யும் இடபவாகனத்தில் தாமும்

உமாதேவியாருமாக ஆரோகணித்தனர் பிரமவிஷ்ணுக்களுக்கு அறிதற்கரிய ஐந்து திருக்கரங்களையுடைய எமது கணேசப்பெருமானை, மேகம்போலப் பொழிகின்ற மதத்தையுங் களிப்பையுமுடைய நல்ல அயிராவணத்தில் ஆரோகணித்தனர் எ - று.

அயிராவணம் என்பது திருக்கயிலையிற் சிவபெருமானுக்கு வாகனமாகவுள்ள தோர் வெள்ளானை. இது ஆயிரங் கொம்புகளுடையதென்றும் நாலாயிரங் கொம்புகளுடையதென்றும், இதுவே அயிராவதமென்றும் இந்திரனவாகனமாகிய கீழ்த்திசை யானையென்றும் பலதிறப்படக்கூறுகின்றனர். அஃதெங்ஙனமாயினும் இந்நூலாசிரியர் கருத்து இரண்டாயிரங்கொம்புகளையுடைய யானையென்பதேயாம். இதனை இவ ரியற்றிய,

பேரூர்ப்புராணம்.

"கங்கைநதி சடைக்கரந்த கண்ணுதல் ருருக்கலந்த தனக்கே யல்லால்
ஞங்கமணிக் கோடிரண்டா யிரம்படைந்த கரியொருகால் தாண்டனமுற்று
தங்கணேமை புவனத்தென ற்றைந்தனள்போற் பாசமொடங் குசங்கை யேந்து
மங்கலமிக் கருள்பேறு மரகதவல் லியினிருதாள் வணசம போற்றி"-என்பதனுணர்க

அலைவளர் புணரி சூழ்ந்த வவனியைத் தரிக்குஞ் சேட
னலைவுற மூகிற கொர்க்கி யொய்யென்த் தாக்கு மஞ்ஞை
கலைவளர் மலயச் செல்வன் கரிசறத் துபதே சித்த
விலைவள ரயில்வேற் செங்கை யெம்பிரா னேறிச் சார்ந்தான்

(இ - ள்) அலைகள்வளர்கின்ற கடல்சூழ்ந்த பூமியைச் சுமக்கும் ஆதிசேடன் துன்பமுறும்படி மூக்கினாற்கொத்தி விரைவில் (அநாயாசமாக) எடுக்கத்தக்க மயில் வாகனத்தில், கலைகள் வளருகின்ற பொதியாசலத்திலுள்ள அகத்தியமுனிவனுடைய மனமாசையகற்றி யுபதேசஞ்செய்த அச்சவடிவாகிய கூர்மைவாய்ந்த வேற்படைதாங்கிய செங்கையையுடைய எமது முருகக்கடவுள் ஆரோகணித்தனர் எ - று.

அகத்தியமுனிவர் தமிழ்க்கலையை வளர்த்தவராதலாலும், அவர் பொதியாசலத்திருப்பவராதலாலும் "கலைவளர்மலயச்செல்வன்" என்றும், முருகக்கடவுள் அவர்க்குபதேசித்தமையின் "கரிசறத் துபதேசித்த" என்றுங் கூறினர். (௧௦௮)

எசுர தத்து வத்து மிருந்தரு ளனந்த ராதி
யேசறும் வித்தி யேச ரெணமரு மெவரு முன்னாப்
பேசுறு முதன்மைத் தான பிரணவ மனுவுந் தந்தந்
தேசுறு முறுப்பி னோடு நிரைவொடு மருங்கு சூழ்ந்தார்

(இ - ள்) ஈசுவரதத்துவத்திலிருந்தருளும் அநந்தர்முதலிய குற்றமற்ற அட்டவித்தியேசுரர்களும், எல்லோரும் முதலிற்கூறுகின்ற சிறந்ததாகிய பிரணவமந்திரமும், தங்கடங்கள் ஒளிபொருந்திய அவயவ [பரிசனங்] களோடும் (கணேசப்பெருமான்) பக்கலிற் சூழ்ந்துகொண்டார்கள் எ - று.

அநந்தராதியெண்மர் அநந்தன் - சூக்குமேசன் - சிவோத்தமன் - ஏகநேத்திரன் - ஏகருத்திரன் - திரிமூர்த்தி - சீகண்டன் - சிகண்டீசன் எனப்படுவோர். (௧௦௯)

வேறு

சுத்தவித் தையிலொழ நந்திமுன் னொ தொல்கண நாதரெண் மாகளு
முத்தம ரான விநதிர னதி யுலகபா லருமவா கரத்தில்

வைத்தவச் சிரமுன் னானவெண் படையு மந்திரஞ் சத்தகோ டிகளும்
பத்திரட் டியினெட் டடுத்தவா கமமும் பாங்குற முறைமுறை சூழ்ந்தார்.

(இ - ள்) சுத்தவித்தியாதத்துவத்தில் வாழ்கின்ற நந்திமுதலிய பழமையாகிய எட்டுக்கணநாயகர்களும், உத்தமர்களாகிய இந்திரன் முதலிய உலகபாலகர்கள் எண்மர்களும், அவ்விந்திராதியர் கரங்களிலமர்ந்திய வச்சிரமுதலிய எட்டு ஆயுதங்களும், எழுகோடிமகாமந்திரங்களும், இருபத்தெட்டுச் சிவாகமங்களும், (தத்தம் தேவ வடிவுடன்) அழகுபொருந்த வரிசைவரிசையாகச் சூழ்ந்தார்கள். எ - று (௧௧௦)

வீழ்ந்திடுங் கலைமத் தகத்திலவ ரெண்மர் மிகுபிர கிருதித் துவத்தில்
வாழ்ந்திடு மெண்மர் பஞ்சபௌ திகமாய் வதிபிர மாண்டங்க ளனைத்துந்
தாழ்ந்திடா தளிக்கு நூற்றுவர் குணத்தத் துவத்தில்வாழ் சீகண்ட ரவரோ
டேய்ந்துவாழ் வீர பத்திர னெனு முருத்திர ரெனைவருஞ் சூழ்ந்தார்.

(இ - ள்) கலைமத்தகத்தில் வாழ்கின்ற எண்மர்களும், மிக்கபிரகிருதி தத்துவத்தில் வாழ்கின்ற எண்மர்களும், பஞ்சபூதசமடந்தமாகி விளங்கும் பிரமாண்டங்கள் எல்லாவற்றையுங் குறைவின்றிக் காக்கும் நூற்றுவருருத்திரர்களும், குணதத்துவத்தில் வாழ்கின்ற சீகண்டர் (ஆதியரும்) அவருடன் பொருந்திவாழ்கின்ற வீரபத்திரரெனுமுருத்திரர்களும் மற்றியாவருஞ் சூழ்ந்துவந்தார்கள் எ - று

பிரிதிவித்தத்துவத்தில் ஆயிரகோடி அண்டங்களுண்டு இவைகடந்த அப்புத்தத்துவம் பதின்மடங்கு விரிவுமுயர்ச்சியு மேற்றுங்கொண்டிருக்கும் அப்புத்தத்துவத்தைப்பற்ற, தேயுமுதற் பிரகிருதியீறாக அண்டங்கள் பதின்மடங்கு விரிவு முயர்ச்சியு மிகுந்திருக்கும் முன்னைய பிரகிருதியைப்பற்ற, இராகம் நூறுபாகம் விரிவுமுயர்ச்சியு மேற்றுங்கொண்டிருக்கும் அவ்விராகத்தைப்பற்ற, வித்தியாதத்துவம் நூறுமடங்கு விரிவு முயர்ச்சியுங்கொண்டிருக்கும் அவ்வித்தையைப் பற்ற நியதித்தத்துவம் நூறுமடங்கு விரிவுமுயர்ச்சியுங் கொண்டிருக்கும் அந்நியதியைப்பற்ற, காலதத்துவம் நூறுமடங்கு விரிவுமுயர்ச்சியுங்கொண்டிருக்கும் முன்கூறிய காலத்தைப்பற்றக் கலாதத்துவம் நூற்றொரு பதினாயிரம் விரிவுமுயர்ச்சியுங் கூடும் அதன்மேல் மாயை - சுத்தவித்தை - ஈசுரம் - சாதாக்கியம் முதலிய தத்துவங்கள் ஒன்றற்கொன்று முறையே கோடி - கோடியே பதினாயிரம் - இலக்ஷம் - பூரணலக்ஷம் - மூன்றிலக்ஷமுதலிய பாகங்கள் அதிகப்பட்டு நிற்கும்

இங்ஙனமிருக்கும் அண்டவிரிவில், பிரிதிவித்தத்துவமாகிய நிவிர்த்திகலையின் ஒரு தட்டில், தேங்காய் விளங்காய் பரப்பினதுபோல் ஆயிரகோடியண்டமுண்டு அவை பொன்மயமாய் அருக்கர் பதினாயிரர் உதயமானதுபோல, குக்குடாண்டம் போலிருக்கிற அண்டகடாகப்புறம்பே இந்திரதிக்குமுதலிய பத்துத்திக்கினுமுள்ள நூறுபுவனத்தினும் நூறுஉருத்திரரும், அவர்கள் புவனத்திற்கும்மேல், காலாக்கினியுருத்திரர்முதலியோர் புவனமாறும், அவற்றின்மே லிரண்டுமாக, அக்கலையில் நூற்றெட்டுப் புவனங்களுண்டு குணதத்துவத்திலுள்ள எண்மர். சீகண்டர் ஔமர் கௌமாரர் வைணவர் பிரமர் பைரவர் இருதர் சுக்கிருதரெனப்படுவர்

இந்திரதிக்கில் கபாலீசன், அசன், புத்தன், வச்சிரதேகன், பிரமத்தனன், விபூதி, அவ்வியன், சாத்தா, பினாகி, திரிசோதியன் என்ற உருத்திரர்கள் ௧௦ அக்கினிதிக்கில் உருத்திரன், உதாசனன், பிங்கலன், காதகன், அயன், சுவலன், தகனன், வெப்புரு,

பிரமாந்தகன், க்ஷயாந்தகன், என்ற உருத்திரர்கள் ௰. எமதிக்கில் யாமியன், மிருத்தியு அரன், தாதா, விதாதா, கர்த்திரு, காலன், தன்மன், சங்யோத்தா, வியோககிருத்தன் என்ற வுருத்திரர்கள் ௰. நிருதிதிக்கில் நிருதி, மாரணன், அரந்தா, குரூரதிருட்டி, பயாந்தகன், ஊர்த்துவகாயன், விரூபாக்ஷன், தூமிரு, லோகிதன், தெங்கிருட்டிருணன் என்ற வுருத்திரர்கள் ௰. வருணதிக்கில் பலன், அதிபலன், பாசத்தன், மகாபலன், சுவேதா, செயபத்திரன், தீர்க்கவாகு, செலாந்தகன், வடவாமுகன், தீமான் என்ற வுருத்திரர்கள் ௰. வாயுதிக்கில் சீக்கிரன், லகு, வாயுவேகன், தீக்ஷ்ணன், சூக்குமன், க்ஷயாந்தகன், பஞ்சாந்தகன், பஞ்சசிகன், கபர்த்தி, மேகவாகனன், என்ற வுருத்திரர்கள் ௰. குபேரதிக்கில் நிதீசன், ரூபவான், தன்னியன், சௌமியன், சௌமியதேகன், பிரமத்தன், சுபபிரகடன், பிரகாசன், இலக்குமிவரன், சோமேசன், என்ற வுருத்திரர்கள் ௰. ஈசானதிக்கில் வியாத்தியாதிபன், ஞானபுகன், சருவன், வேதபாரகன், மாத்திருவிருத்தன், பிங்கலாக்ஷன், பெலீபபிரீயன், சரு, சருவவித்தியாதிபன், தாதா என்ற வுருத்திரர்கள் ௰ அண்டகடாக வோட்டுக்குக்கீழே விட்டுணுதிக்கில் அனந்தன், பாலகன், வீரன், பாதாளாதிபதி, விபு, இடபத்துவசன், உக்கிரன், சுபபிரன், உலோகிதன், சருவன் என்றவுருத்திரர்கள் ௰. அண்டகடாகத்தின் மேலே பிரமதிக்கில் சம்பு, விபு, கணாத்தியக்ஷன், திரியக்ஷன், திரிதேசகவாதகன், சனவாகன், விவாகன், நபன், லீபசு, விலக்ஷணன் என்ற வுருத்திரர்கள் ௰ ஆகிய விந்த நூற்றுவரும் இந்திராதியரான வுலோக பாலர், பலத்தையுமடக்கி யவர்களவர்களாற் பூசிக்கப்பட்டுக்கொண்டிருப்பார்கள். இவர்கள் புவனம் ௱ காலாக்கினி, கூமாண்டர், ஆடகேசுரர், பிரமன், விட்டுணு, உருத்திரன் இவர்கள் புவனம் ௬. அண்டகடாகத்துக்கு மேலே சூக்குமப் பிருதிவியில் பத்திரகாளி, வீரபத்திரர் இவர்கள் புவனம் ௨ ஆகப் பிருதிவி தத்துவத்திற் புவனம் நூற்றெட்டென்க (௧௧௧)

வேறு

பூதரு மேனைப் பூதத் தலைவரும் புறத்திற் சூழ
மாதவர் மறைக ளோத மாகதர் விருது கூறச்
சீதவெண் கவிகை மொய்ப்பச் சேண்வெளி கொடிக ளோப்ப
மேதகு கவரி துள்ள வியன்முர சியம்பச் சென்றார்

(இ - ள்) பூதர்களும், பிறபூதநாதர்களும் (ஆகியயாவரும்) புடைசூழ்ந்துவரவும், வேதியர்கள் வேதபாராயணஞ்செய்யவும், மாகதர்கள் விருதுகூறவும், குளிர்ந்த வெண்கொற்றக்குடைகள் நெருங்கவும், பெரிய ஆகாயத்தைத் துவசங்கள்மறைக்கவும், மேம்பாடுடைய சாமரைகள் துள்ளவும், பெரியபேரிகைகளொலிப்பவும் (விண்வழியாகச்) சென்றார்கள். எ - று

மாகதர் - அரசர்க்கும் வைசியனுக்கும் பிறந்து ஒருவர் வீரமுதலியவற்றைப் புகழ்வோர் (௧௧௨)

விண்ணெறி நீந்தி யைங்கை விநாயக னோடு மெண்டோ
ளண்ணல ரப்ப நோக்கி யகத்தெழு முவகை பொங்கக்
கண்ணனும் யானுந் தேவ கணங்களு மெதிரே போந்து
வண்ணமென் மலர்க டூவி மலரடி வணங்கி யேத்தி.

(இ - ள்) ஐந்துதிருக்கரங்களையுடைய கணேசப்பெருமானுடன், எட்டுத் திருக்கரங்களையுடைய சிவபெருமான் ஆகாயவழியாகக் கடந்து, தேவகணங்களுடன் எழுந்தருள, திருமாலும் யானுங்கண்டு மனத்திலுண்டாகிய களிப்பானது மீக்கூர

எதிர்கொண்டு சென்று அழகிய மெல்லியமலர்களானருச்சித்து, தாமரைமலர்போன்ற (அவ்விருவர்) திருவடியையும் பணிந்து துதித்தது எ - று (௧௧௩)

மணிநக ராச வீதி வலமுறக் கொண்டு போகி
யணிவளர் மண்ட பத்தை யடுத்தன மடுத்த லோடும்
பிணிமலர்க் கூந்தல் வாணி பிறங்குபொற் கலசம் வார்ப்பப்
பணிவொடு கணேசர் பாத பங்கயம் விளக்கி னேனால்

(இ - ள்) அழகிய நகரத்தின் இராசவீதியைப் பிரதக்கணமாகக் கொண்டு சென்று, அழகுகள்மிக்கு விளங்குந் திருமணமண்டபத்தை யடைந்தோம் (அவ்வாறு) அடையவும், கட்டப்பட்ட மலர்மாலையையணிந்த அளகத்தையுடைய சரசுவதியானவள் பிரகாசிக்கின்ற பொன்னாற் செய்த பாத்திரத்தினின்று நீரைச்சொரிய, (யான்) வணக்கத்தோடும் விநாயகக்கடவுளுடைய திருவடியை (கையாற்) சுத்தி செய்தேன் எ - று (௧௧௪)

அண்டர்கள் பெருமான் மாதோ டாதனத் திருந்த பின்றை
மண்டப நாப்பண் இட்ட மணித்தவி சிருந்து மஞ்ஞை
கொண்டவ னாதி யோர்கள் குறுமணித் தவிசின் வைகக்
கண்டருள் கணேசன் பாட லாடலின் விழைந்து நின்றான்

(இ - ள்) தேவதேவராகிய சிவபெருமானார் உமாதேவியாருடன் ஓர்பீடத்தி லிருந்தபிறகு, அன்பர்களுள்ளும் மூத்தபிள்ளையார் திருமணமண்டபத்தின் நடுவிலிட்ட இரத்தினபீடத்தி லெழுந்தருளியிருந்து, மயிலை வாகனமாகக்கொண்ட இளையபிள்ளையார் முதலானவர்களுக்கு நிறமமைந்த அழகிய பீடங்களிலிருப்ப (அவரவர்க்கேற்பக்) கூறி, பாடல் ஆடல் முதலியவற்றில் விருப்புற்று நின்றனர் எ - று (௧௧௫)

கள்ளிவர் கொன்றை மாலைக் கணேசனவ் விருந்த பின்பால்
வெள்ளிலைப் பாகு வாழை விழுக்கனி நாளி கேரந்
தெள்ளொளி நகைப்பூ மாலை சித்திரப் பட்டு மற்றுங்
கொள்ளுற வமைத்த செம்பொற் படலிகை குடங்கை யேந்தி.

(இ - ள்) தேன் சொரியுங் கொன்றைமாலையணிந்த கணேசப்பெருமான் (இவ்வகையாக) எழுந்தருளியிருந்தபின்னர், தாம்பூலம் சிறந்த கதலிக்கனிகள் தேங்காய்கள் தெளிந்த ஒளியையுடைய ஆபரணங்கள் மலர்மாலைகள் சித்திரமான பட்டாடைகள் முதலிய பிறவுங் கொள்ளும்படி பொருந்திய செம்பொன்னாலாகிய படலிகையை உள்ளங்கையிலேந்தி எ - று

வெள்ளிலை பாகு - வெற்றிலைப்பாக்கு படலிகை - பூந்தட்டு (௧௧௬)

பல்லிய மியம்பச் சோதி வாசகம் படர்ந்து விம்ம
மெல்லியன் மகளிர் பல்லோர் வீதிசூழ் போந்து நண்ணி
மல்லலஞ் சோதி யட்ட மங்கலந் தேந்தி முன்னர்
சொல்லிய பொருளை யெல்லாந் தொகுப்புற வைத்த பின்னர்.

(இ - ள்) பல்வாத்தியங்கள் ஒலிப்பவும், சோதிவாசகம் அதிகரித்து முழங்கவும், மென்மைத்தன்மையுடைய பலமாதர்கள் திருவீதியைப் பிரதக்கணஞ்செய்து

வந்து, (விநாயகக்கடவுள்) முன்னர் அமைத்த மேடையின்பேரில் வளம்பொருந்திய அழகிய அட்டமங்கலங்களுடன் (மேற்) சொல்லியபொருள்களை யெல்லாம் கும்பலாக வைத்தபிறகு எ - று.

அட்டமங்கலங்கள் சாமரை - பூரணகும்பம் - கண்ணாடி - தோட்டி - முரசு - விளக்கு - கொடி - இணைக்கயல் எனப்படும். (௧௧௭)

செம்பொற் றன்முன் னிட்டுச் சித்திபுத் திகளை யேற்றி
யும்பரார் வியப்ப வெனைகை யுறுபலம் வழங்கி யென்பா
னம்புசீ ரிசைவு பெற்று நல்லிழை மடவார் மூவர்
பம்பொளிக் கலனு மாசும் பாவையர்க் கணிதல் செய்தார்

(இ - ள்) செம்பொன்னாலாகிய ஆதனத்தைத் திருமுன்னேயிட்டு, சித்தி புத்தி தேவிகளை யதிலிருத்தி, தேவர்கள் களிப்பெய்தும்படி எனைகையிற் பொருந்திய பலங்களைக்கொடுத்து, என்னிடத்தில் அங்கீகாரம்பெற்று, நல்ல ஆபரணங்களையணிந்த (மும்) மூன்றுமாதர்கள் ஒளிமிகுந்த ஆபரணங்களும் ஆடைகளும் அக்கன்னிகைகளுக்கு அணிந்தார்கள் எ - று. (௧௧௮)

முன்னுற விருந்த தூசு முதிரொளிக் கலனு மற்றுங்
கன்னியர்க் கினிது வீசிக் கனியும்பாக் கடையு மாங்குத்
துன்னின ரெவர்க்கும் வேறு தொடிக்கர மிதப்ப நல்கி
யன்னமென் னடையி னாரை யரும்புன லாட்டப் புக்கார்

(இ - ள்) முன்னதாக அமர்த்திய ஆடைகளையும் ஒளிமிக்க ஆபரணங்களையும் பிறவற்றையும் கன்னிப்பெண்களுக்கு இனிதாகக்கொடுத்து, பழங்களும் தாம்பூலமும் அங்குவந்தவர்களெல்லோருக்கும் வளையலணிந்த கைநிரம்பக்கொடுத்து, அன்னம்போலும் மெல்லியநடையையுடைய சித்திபுத்திகளை அரியநீரினால் மங்கலாபிடேகஞ்செய்யப் புகுந்தார்கள் எ - று. (௧௧௯)

வேறு

புழுகுசட்டங் கோட்டமா ரியக்கோட்ட நாகப் பூமுத்தக் காசுசயி லேகம்விலா மிச்சம், பழுதிலிரு வேரிமலை யிருவேரி மாஞ்சில் பச்சிலைக்கச் சோலமதி மதுரந்தக் கோலம், வழுமலர்நன் னறிகிம் பூவெண்ணெய் கண்டில் வகுள்பூத் தாவரிசி யேலஞ்சா திக்காய், தழைசரள மிலவங்க நாகணமஞ் சட்டி சண்பகமொட் டரத்தைநறும் பிசின்றகரங் குக்குல.

(இ - ள்) புழுகுசட்டம் - கோட்டம் - ஆரியக்கோட்டம் - நாகப்பூ - முத்தக்காசு - சயிலேகம் - விலாமிச்சம் - குற்றமில்லாத இருவேரி - மலையிருவேரி - மாஞ்சில் - பச்சிலை - கச்சோலம் - அதிமதுரம் - தக்கோலம் - சுரபுன்னைமலர் - வாசம்பொருந்திய நன்னாரிமலர் - வெண்ணெய் - இருபத்தெட்டு துலாங்கொண்ட மகிழமலர் - தாவரிசி - ஏலம் - சாதிக்காய் - தழை சரளம் - இலவங்கம் - நாகணம் - மஞ்சட்டி - சண்பகமொக்கு - அரத்தை - சாம்பிராணி - தகரம் - குங்குலியம் எ - று. (௧௨௦)

கூழியவோ மாலிகையெண் ணான்கொடுத்த தூரி குங்குமங்கற் பூர மகில் சந்தனமை விரையும், வீழியபான் மரநான்கு திரிபலைமா நாவன் மிக்கக்கருங் காலியெனுந் துவாபத்து நல்லோர், தேறுவெள்ளி லோத்தி

ரப்பூம பொருககளைதக சாநதுஞ சோததுநறு நெய்பூசித் திமிாநதருவி போல, ஆழியமா மதககளிறறுப பிடரினவரு கஙகை யுவநதாட்டித் திருமேனி யொறறுடை புரிநதார.

(இ - ள) வெட்டிவேராகிய ஓமாலிகை முப்பததிரண்டுடனே கததூரி-குங்குமப்பூ-பசசைககறபூரம-அகிறகட்டை - சநதனததூள எனனும ஐவகை வாசனைகளும, மேமபாடுறற நானகு பானமரஙகளும, (கடுககாய தானறிககாய நெலலிககாயாகிய) திரிபலைகளும, மா நாவல சிறநத கருஙகாலியும எனறு சொலலும பததுததுவாகளும, நலலவாகள தெளிநத வெளளிபோலததிரமும அழகிய அரைதத சந்தனவணடலுஙகூட்டி (நலகிட்டு) பரிமளமபொருநதிய எணணெயை (கூநதலில) இட்டு, அருவியாறுபோல ஆறறெடுககும மதப்பெருககையுடைய யானையின மததகததினபேரிலவநத கஙகாசலத தாற களிபபுடன திருமஞசனஞசெயது இருவா திருமேனிகளிலும ஒறறுடையால ஈரம புலர்ததினாகள, எ - று.

முபபததிருவகை யோமாலிகையை வெறுகவுங கூறுவா. அதனை,

கலிவெண்பா

"இலவஙகம பசசிலைக கசசோல மேலங்
குலவிய நாகணங கோட்டம - நிலவிய
நாக மதாவரிசி தககோல நனறுரி
வேகமில வெண்கோட்ட மேவுசீர் - போகாத
கததூரி வேரி விலாமிசசை கணடிலவெணணெ
யொதத கடுநெலலி யுயாதானறி - கொததலரும
வணணககச சோம ரேணுக மாஞசியுட
னெணணுஞ சயரோக மினபுழுகு - கனனியிளம
புனனை நறுநதாது புலியுகிா பூஞசரளம
பினனு தமாலம பெருவகுளம - பனனும
பதுமமுக நுணணேலம பைஙகோடு வேரி
கதிாஙகையா யோமாலி கை."—எனபதனானும்,

ஐவகை விரையெனறதை,

"கொட்டந துருககந ரகா மகிலா
மொட்டிய வைநதும விரை"—எனபதனாலும,

பததுததுவரெனறதை,

"* பூவந திரிபலை புணாவை கருங்காலி
நாவலொடு நானமரமாம"—எனபதனாலுமுணாக (௧௨௧)

வேறு

பெண்ணெனப பிறககும போதே பேசசுடை யாள மாகி
நணணுறப பினுககு முனனா நயததகு பிறபபுச செயதாங
கொணணிறப பட்டுச சாததி யுடனசெயத தககதெனறு
திண்ணிய முலைககுஞ சாநதஞ செஙகையாற கொட்டினாரே.

* பூவம - மா திரிபலை - கடுக்காய தான்றிக்காய நெலலிககாய் நானமாம்- ஆல் அரசு அத்தி இத்தி.

(இ - ள்) பிறக்கையிலேயே பெண்ணென்று சொல்லத்தக்க அடையாளமா யிப்பொருந்திய அவயவத்திற்கு முதலிலே விரும்பத்தக்க சிறப்பினைச் செய்தாற்போல, ஒள்ளிய நிறந்தங்கிய பட்டாடையை யுடுத்தி, (அதற்கிரண்டாவதாக) உடனே (சிறப்பு) செய்யத்தக்கதென்று கருதி, வலியமைந்த தனங்களுக்குச் சந்தனக்குழம்பைத் தமது சிவந்த கரங்களால் அப்பினார்கள் எ - று (கஉஉ)

இயற்கையாற் றண்மை வெம்மை யெய்திய முலைக்குத் தாமுஞ்
செயற்கையாற் றண்மை வெம்மை சேர்த்தனர் போலச் சாந்துங் கொட்டிப்
பயிற்புகைச் செய்த மாதர் பல்விரைப் புகைப்ப வந்த
சயப்படு தூமம் மேருத் தவழ்முகி லெனப்போர்த்த தன்றே

(இ - ள்) இயற்கையாகவே குளிர்ச்சியுஞ் சூட்டையும் பொருந்திய தனங்களுக்கு, செயற்கையாக அக்குளிர்ச்சி சூட்டைகளைச் சேர்ப்பிப்பவர்கள்போல, சந்தனக் குழம்பப்பிய பழக்கஞ்செய்த மாதர்கள் (அகிலை யுலர்த்தும்படி) பல வாசனைத்திரவியங்களைப் புகையிட அந்தக் கூட்டமாகிய புகையானது, மேருபர்வதத்தில் தவழ்கின்ற மேகத்தைப்போல மூடிக்கொண்டது எ - று

அம்மாதர்கள் பூசிய சந்தனக்குழம்பின் ஈரத்தைப் புலர்த்தும்படி யூட்டிய அகில் முதலியவற்றின் புகை அவர்கள் தனங்களை மறைத்தென்றார் இதில் அவர்கள் தனங்கள் மேருகிரிக்கும், அப்புகை மேகத்திற்கும் உவமிக்கப்பட்டன (கஉ௩)

நெருங்கலர் பூத்த கான நிகர்ப்பவு நீண்ட வானி
னொருங்குடுப் பூத்த கங்கு லொப்பவுஞ் சேர்பின் வாரிக்
கருங்குழற் பரப்பிற் பூந்தார் சதிர்மணித் தார்பொற் றாரு
மிருங்கவி னெழிப்பச் சேர்த்தேற் றிமிலெனக் கொண்டை செய்தார்

(இ - ள்) நெருங்கிய மலர்கள் பூத்த கானகம்போலவும், நெடிய ஆகாயமுழுவதும் நட்சத்திரங்கள் நிரம்பியிருக்கின்ற இருளைப்போலவும், சீப்பினால் வாரிக் கரிய கூந்தற்பரப்பினிடத்தில், மலர்மாலைகளும் கிரணங்களைச் சிந்தும் இரத்தினமாலைகளும் பொன்மாலைகளும் மிக்க அழகு வீசும்படி யணிந்து எருத்தின் முசுப்பைப்போலக் கொண்டையிட்டார்கள் எ - று

கொண்டை — பக்கலின் முடித்தல் இஃதைம்பாலினொன்று அவை முடி கொண்டை சுருள் குழல் பனிச்சையெனவும், அவற்றுள் மயிரை யுச்சியின் முடித்தல் முடியென்றும், பக்கத்தின் முடித்தல் கொண்டையென்றும், பின்னே செருகல் சுருளென்றும், சுருட்டி முடித்தல் குழலென்றும், பின்னிவிடுதல் பனிச்சையென்றுஞ் சொல்லப்படும் உச்சிக்கொண்டையையுங் கொண்டையென்பர் (கஉ௪)

மதம்பொழி களிநல் யானை மருப்புறைச் சூழ்ந்தா லென்ன
மதம்பொழி முச்சி முல்லைப் பாலிகை வளையச் சூழ்ந்திட்
டிதம்பொழி கொண்ட லாலி யினொடு சொரிந் தாங்கு கார்மேற்
கதம்பொழி முச்சிப் புரசிக் கதிர்முத்தந் தூக்கி னாரே

(இ - ள்) மதத்தைச்சொரியுங் களிப்பினையுடைய நல்ல யானையானது தன் மருப்பிற் றுதிக்கையைச் சுற்றிக்கொண்டதுபோல, கத்தூரி மணக்கின்ற உச்சியினிடத்தில் முல்லைமாலையை வளையமாகச் சுற்றி, நன்மைபுரியும் மேகமானது மழைத

தாளிகளைச் சிந்தினாற்போல உச்சியினிடத்தில முத்துமாலையைத் தொங்கவிட்டார்கள. எ - று (கஉரு)

அநதராக கரசன றனகை படுரிலை வைப்ப வூாதிக
கநதரந தனிநின றனன வருநகுபுன மருங்கு சூழநத
சுநதர நுதனமே லநதந தொடுரிலை தொடுதத தாமபோ
லிநதிரை முதலோா நாண விடைபாகரு சூட்டினாரே.

(இ - ள) தேவாகளுககரசனாகிய இநதிரன தன கையிலுள்ள போாசெய்தற்குரிய விறபடையைவைகக, (அது) அவன வாகனமாகிய மேகததிறகுமேலே தனியாக நினறாறபோல, ஆரியகூநதலானது பககததிற சூழபபெறற அழகிய நெறறியினமேரில அநதச தொடுககபபட்ட (புருவமாகிய) விலலிறகுறுடுகத கிணகிணிமாலைபோல, திருமகள முதலிய மாதாகள வெட்கமடையுமபடி நுதலணிமாலை யணிநதாாகள எ - று.

இநதிரனூாதி - மேகம மேகம குழலுககும, சிலை புருவததுக்கும தாா - இலமபகததுககும உவமிககபபட்டன

தாா - கிணகிணிமாலை இலமபகம - நுதலணிமாலை (கஉசா)

ஊறறிருந தொழுகுந தானத தொஙகிமுகதத திறைவன சென்னி
யேறறிய பிறையுங கையி னெநதுவாா கொடியின மஞ்ஞைத
தோறறமு மனைவி மாருஞ சுபபபது முறையா மெனறே
றறிளந திஙகள மஞ்ஞைக கிளாமணி முடியின வேயநதாா.

(இ - ள) ஊறறெடுத்துப பாயும மதததுடன விளஙகும யானைமுகத்தை யுடைய விநாயகககடவுள சிரமிசையணிநத இளஞசநதிரனையும, திருககரததி லேநதிய நெடிய துவசததிலுள்ள மயிலின தோறறததையும, அவா மனைவிமார்களு மணிவது முறையாகுமெனறு கருதியே, இளமபிறைச சநதிரனையும மயிலணியையும பிரகாசிககினற அழகிய முடியினமே லணிநதாாகள எ - று (கஉஎ)

கருமுகிற படலை யனறு காமாரை வலமே கூநத
றிருமுகந திஙக ளனறு தேமலாய பதுமமே யென
றுருவளா நாகந நீர வொணமணி மகர பேழவாய
குருமலி நுதலிற றாழநது கோமளங கொழிப்பச சோததாா

(இ - ள) இககூநதல கரிய மேகபடலமனறு, அழகிய சைவலமேயாகும. அழகியமுகம சநதிரனனறு, வாசநதஙகிய தாமரைமலரேயாமெனறு கருதி, உருவளாகினற இராகுவானது விலகுமபடி மகரததின பெருவாயையொதத நிறமிகக ஒள்ளிய மணியாலாகிய பணியைத தொஙகிககொணடு அழகு மிகுமபடி நெறறியிலணிநதார்கள எ - று

இராகு - சநதிரனை விழுஙகுமோாகோள இவவாறே சூரியனை விழுஙகுங கோள கேதுவெனபபடுமெ நெறறியில விளஙகும அணியில மகரவாயைககணடு, கூநதலைச சைவலமெனறும, முகததைக கமலமெனறும மயஙகலாயிறறெனறுா இவை யாவும நீாவாழ பொருளகளாதலின சைவலம - கொடிபபாசி (கஉஅ)

அநதிரம படைகண மாயை யனைததினும வலலோா ராலு
மெததிறத தானுந் தாழககப் படாதவே ரமபன றனனை

வைத்தவம பொருநா ணினறி வணககுவா ணுதலவிற பாங்காப்
பொத்திய பிரதா பமபோற பொறித்தனா திலகஞ் சேபப.

(இ - ள) அத்திர சத்திரஙகள் மாயைமுதலிய வெவ்வேறிலும வல்லவர்களா லும எவவகையினுலும வெலலபபடாத ஏரமயமூாததியை, பூட்டிய அமபும நாணு மிலலாமல வணஙகசசெய்யும ஒளிபொருந்திய புருவமாகிய விலலின பக்கலிற பொததி வைதத கீாததியைப்போலச் செநநிறமாகத் திலகமிட்டாாகள எ - று. (௩௨௯)

செவவரி பவள மாயன றிகழ்மணி மதாக்கண டைமபாற
பல்வமந தரமென கொஙகை பணிபபதி யலகு லெனறே
யிவவணா மமுதுண போராக ளேககுற தினிது காப்ப
வவ்வடை யாள மாக வஞ்சனந் தீட்டி ஞரோ.

(இ - ள) அமுதபானஞ்செய்யுந தேவர்கள, (அம்மாதர்களுடைய) செவ்வரி யைப பவளமென்றும, பிரகாசிக்கின்ற கருமணியைத திருமாலென்றும, மதர்தத கண் களை மதுரமாகிய பாறகடலென்றும, மெலலிய கொஙகையை மநதரகிரியென்றும, அல் குலைச சாபபராசனாகிய ஆதிசேடனென்றும, இவ்வகையாகப பேராசை யகலாது காதது மயஙகுதற்கு அடையாளமாக (கணகளில) மைதீட்டினாாகள. எ - று. (௩௩0)

சுரநதவா லாலந் தோடு சுதையுமி ழுருக்க ணனறு
பரநதபாற கடலே யாஙகுப பரவுமஞ் சனமுங காரென
றரநதைதீர் சானறு கூற வககடற பணில மீனற
வரநதவா முததம வாாநத நாசியின வயககி ஞரோ.

(இ - ள) இவை கணகளல்ல ஊறறெடுத்த ஆலாலவிடத்துடன் தேவாமிா ததஞ்சுரக்கின்ற பரநதுளள திருபபாறகடலேயாம். ஆஙகெழுதிய அஞ்சனமும (அஞ் சனமன்று அதில நீா பருகவந்த) மேகமேயென்று, குறறமறற சாட்சி சொலலுமபடி, அத்திருபபாறகடலிலுளள வலமபுரிசசஙகமானது பெற்ற பெருமைகுன்றாத முததத தை நீண்ட நாசி (மூக்கு) யில அணிநதாாகள எ - று.

முததம - முததாலாகிய தொஙகலையுடைய மூக்கணி. இதனைப புலாககென இக்காலதது வழஙகுவா. (௩௩௧)

திஙகளென றமுத முண்ணச சோநதொளிா சகோர மொபபப்
பஙகய முகததது வைகும படைககணி லோறப லத்துத
தஙகிய வனபபை வவவச சாாநதிடம பிடிதத தெனனப
பொஙகொளிச செவியி னீலப புத்தல ரேறறி ஞரோ

(இ - ள) சநதிரனென்று கருதி அமுதததைப பருகுமபடி சோ்ந்து பிரகாசிக் கினற சகோரபபட்சிகளைபபோல, செநதாமரைமலாபோனற முகததில் விளஙகும வாட் படைபோனற கணகளாகிய நீலோறபலமலரிற பொருநதிய அழகைக கிரகிககபபொ ருநதி இடஙகொணடாறபோல, பிரகாசமிகக காதுகளில அனறலாநத நீலமலாகளை யணிநதாாகள எ - று

கணகளாகிய சகோரஙகள் முகமாகிய சந்திரனிடத அமுதுண்ண விருநதன வென்றும, கணகளாகிய நீலோறபலததினழகைக கிரகிகக நீலோறபலமலாகள செவி யிற் குடிகொணடிருநதனவென்றுங கூறினா. (௩௩௨)

தந்தைதாய் வளர்த்த வென்னச் சார்ந்துவாழ் தூவி யன்ன
மந்தணங் காதிற் கூற மருங்கடுத் திருப்ப தேபோற்
கொந்தொளி மணிகால் யாத்துக் குயிற்றிய வன்னக் கொப்புக்
கந்தமென் குழலி னார்மேற் காதுறத் தூக்கி னாரே.

(இ - ள்) தந்தைதாயர்போலவும், (அம்மங்கையர்) வளர்த்த நெருங்கிவாழும் தூவியையுடைய அன்னப்பறவைகள் செவியினிடத்தில் இரகசியம்பேச இருபுறமுஞ் சமீபித்திருந்தனபோலவும், நெருங்கிய ஒளியைச்சிந்தும் இரத்தினங்களாற் கட்டப்பட்டுள்ள வன்னக்கொப்புகளை மணமமைந்த மெல்லிய கூந்தலையுடைய அம்மங்கையர் காதிற்பொருந்த அணிந்தார்கள் எ - று.

மந்தணம் - இரகசியம். காலயாத்து - இதில் கால் உபசாககம். (௧௬௩)

ஒளிவளர் முகத்தை நோக்கி யொள்ளிய திங்க ளென்று
களியொடு முரோணி யோர்பாற் காதலி னடுத்த தேபோற்
குளிர்மணி முத்திற் செய்த கோலமார் மணியை யந்த
வளர்செவி நாப்பண் வைக்கும் வயினுறத் திருத்தி னாரே.

(இ - ள்) ஒளிவளர்கின்ற (அம்மங்கையர்) முகத்தைக்கண்டு பிரகாசம்பொருந்திய (பூரண) சந்திரனென்று கருதிக் களிப்புடன் உரோகணி நக்ஷத்திரமானது ஒருபக்கலில் ஆசையோடு வந்திருந்தாற்போல, குளிர்ச்சிபொருந்த முத்துமணியாற் செய்த அழகமைந்த கன்னப்பூவை அந்த வளர்கின்ற காதுகளின் மத்தியில் அமர்த்து மிடத்திற் பொருந்த அணிந்தார்கள் எ - று.

இச்செய்யுளில் கன்னப்பூவை உரோகணியாக உவமித்தார். **கன்னப்பூ** - கர்ணப்பூவென்றும் வழங்கும். (௧௬௪)

மதுவுமிழ் கமல மென்ன மலர்ந்தமிர் தொழுகுஞ் சீத
விதுவெனக் குளிர்ந்து நம்போல் வெயிலொளி பரப்பா நின்ற
திதுமுக மென்று வெய்யோ னிறைஞ்சவந் தடுத்த தேபோற்
பதுமரா கத்திற் செய்த பைங்குழைத் தோடு சேர்த்தார்.

(இ - ள்) இம்மங்கையர் முகங்கள் தேனைச்சொரியுந் தாமரைமலர்போல மலர்ந்து, அமுதகிரணங்களைச் சிந்துஞ் சந்திரன்போலக் குளிர்ச்சியுற்று, நம்மைப் போல வெயிலொளியை வீசாநின்றது என்று (மதித்து) வெப்பமாகிய கிரணங்களையுடைய சூரியன் வணங்கும்படி வந்திருந்தாற்போல, பதுமராகத்தாலியற்றிய பசிய தோடுகளை யணிந்தார்கள் எ - று.

குழை - தோடு - ஒரு பொருட்கிளவிகள். (௧௬௫)

பூவிரி யாத பாளை பொதிந்தபைங் கமுகின் வண்மை
மேவிய கண்டங் காண்போர் விழிகளா லூறெய் தாமைப்
பாவிய காப்பே யென்னப் பலகதிர் மணியிற் செய்த
மாவியல் வனப்பின் கட்டு வடத்தினை வனைதல் செய்தார்.

(இ - ள்) மலர்கள் விரியாத பாளைகள் பொதிந்த பசிய கமுகமரத்தின் வண்மையைப்பொருந்திய கழுத்து, தன்னைப் பார்ப்பவர்கள் கண்களால் துன்படையாமைக்

காகசசெய்த காப்பினைப்போல, பல கிரணங்களையுடைய இரத்தினத்தாற் செய்த சிறந்த அழகினை யியல்பாகவுடைய கட்டுவடத்தை (அகக்ழுத்தில்) அணிந்தார்கள் எ - று

பூவிரியாத பாளைபொதிந்த பைங்கமுகு - கன்னிகக்முகு விழியூறு - கண்ணெச்சில், திருட்டிதோடம் காப்பு - காவல் (௧௩௫)

மனறலின மகிழ்வார கொங்கை வாராந்த தோள் வீங்கின வையத்
தொன்றிட மின்று மென்றே யுறுதடை யியற்று வாரபோற
றுனனொளி மூலைக்கச் சார்த்துந் தோளிலங் கதங்கண முனைகக
கனறுவார விரலி ளுழி கவினசெயவ பலவுஞ் சேர்த்தார.

(இ - ள) திருமணங்களிப்பால, கொங்கைகளும நீண்டதோளகளும் பூரிக்குமாயின பூமியிற்பொருந்திய இடமில்லையாமெனறே பொருந்திய தடையைச்செய்பவர்களைபபோல, ஒளிபொருந்திய மூலைகளிற கச்சினையிறுக்கி, தோளகளில வாகு வலயங்களையும, முனைகயிற்பொருந்திய நீணடவிரலகளில் மோதிரங்களையும், அழகு செயவனவாகிய பலவற்றையு மணிந்தாாகள் எ - று (௧௩௭)

பெருங்களி தருங்கொங் கைக்குப் பெருஞ்சிறப் பளிப்பார போல
மருங்கெலாங் கிரணம் வீச மாணிக்கம் பவளம் முத்துந்
தருங்கதிா வயிரங் கோமே தகமுதற் கோத்த கோவை
யொருங்குபே ரணிபூ மாலை யொடுமழ கெறிப்பப் பூண்டார.

(இ - ள) பெருங்களிப்பைக் கொடுக்குந் தனங்களுக்குப் பெருஞ்சிறப்பைச் செய்பவர்களபோல, பக்கங்களிலெல்லாம் ஒளியைச்சிந்தும மாணிக்கம பவளம் முத்து கிரணங்களையுடைய வச்சிரம் கோமேதகமுதலிய இரத்தினங்களைக் கோத்துள்ள கோவையாகிய பெரிய ஆபரணத்தையும மலாமாலையையும அழகுமிகுமபடி அணிந்தாாகள் எ - று. (௧௩௮)

நதமபெரு நதியிற் கொங்கை நகைமணி வடங்க டாழ்
நிதமபமா கடற்குக் காக நிருமிப்பார் போலப் பற்பல
விதம்பட்த் தெரிந்து கோத்த விரிசிகை கலாப மாதி
யிதமபட முறையிற் சூழ்ந்தா ரிளவணடிற புலமப மாதே.

(இ - ள) கொங்கையாகிய குவடுகளினின்றும் நதம்போலவும் நதிபோலவும் பிரகாசிக்கின்ற நவரத்தினமாலைகள வீழ்கின்ற நிதமபமாகிய பெரியகடலுக்கு நாணயம நிருமிப்பவர்களைப்போல, பலபலவகைப்பட ஆராய்ந்து கோவைசெய்த விரிசிகை கலாபமுதலியவற்றை நன்மையுண்டாகக் கூட்டமாகிய வணடுகளபோலொலிக்கவணிந்தாாகள் எ - று

விரிசிகை - முப்பத்திரண்டு கோவையணி கலாபம பதினறு கோவையணி கொங்கை - மலைகளும், மாலைகள நதிநதங்களும, கடிதடம கடலுமாக வுவமிக்கப்பட்டன நதம் - புருஷநதியெனப்படும் இது மேற்கிலும வடக்கிலும சங்கம முடையது (௧௩௯)

வடக்க தாங்கா வேத மெடுத்தற கரிய பாதம
பீடகஞ் சிறப்பத் தாங்கள பிடித்திட்ட வடையா ளமபோற

பாடகஞ் சதங்கை தண்டை பரிபுரம் பாதத் தால
மாடகத் திழைத்த வாழி யலத்தகம் பலவுஞ் சேர்த்தார்

(இ - ள்) எழுதாக்கிளவியாகிய வேதமானது எட்டுதற்கரிதாகிய பாதங்களை மனத்திற் கவிபடானது அதிகரிக்கத் தங்கள் எட்டிவிட்டதற்கு அறிகுறியாக, பாடகமுஞ் சதங்கைமாலையும் தண்டையும் கிண்கிணியும் காலணியும் பொன்னாற் செய்த மோதிரமும் செம்பஞ்சுக்குழம்பும் பிறவும் அணிந்தார்கள் எ - று

ஏட்டுந் தாங்கா வேதம் ஏட்டில் எழுதியிராத வேதமென்பது இது பரம்பரையாக வுபதேசக் கிரமமாக ஓதுவிக்க வழங்கலினென்க இதுபற்றியே எழுதாக் கிளவி யெனப்படும் (௧௬௦)

மெல்லிழை யாடை யொன்று விரித்தனை தொடுத்துத் தோண்மேற்
புல்லுற விசைத்தா ராடை புலவியும் பொலங்க லங்க
ளெல்லொளி விரித்த வெம்மை யேற்றரு ளிவரோ வென்றிச்
சொல்லுருக் கொளினுந் தாழார் தொல்லிய லென்ப போன்றே.

(இ - ள்) ஆடையணிந்தும் அழகிய ஆபரணங்கள் சூரியகாந்தியை விரிக்கும்படி, எம்மையணிந்த இவர்கள் பிறரைப்போலச் சொல்லத்தக்க உருவங்கொண்டிருந்தாலும், பழைமையாகிய இயற்கையழகிற்குனே குறையமாட்டார்களென்று சொல்லுவோர்போல, மெல்லிய இழைகளாலாகிய ஆடையொன்றனை இடையிலிருந்து தோளின்மேற் பொருந்தக் கட்டினார்கள் எ - று

மெல்லிழையாடை என்றது மெல்லிய இழைகளால் நெசவுசெய்த நுண்ணிய வஸ்திரம் (௧௬௧)

திருமக ளதிதி போகந் திகழயி ராணி மூவர்
பொருவிலசித் திக்கும் விண்ணோர் புகழன சூயை கற்பிற்
பெருமித சாலி கீர்த்தி பிறங்கிய விரதி மூவர்
மருவுபுத் திக்கு மிங்ஙன் மன்றலங் கவின்செய் தாரால்.

(இ - ள்) இவ்வகையாக, இலக்குமி அதிதி போகங்களை நுகரும் இந்திராணி யென்னு மங்கையர் மூவர்களுஞ் சமானமில்லாத சித்தியம்மையாருக்கும், தேவர்கள் புகழும் அநசூயை கற்பின் பெருமிதமுடைய சாலி கீர்த்திவிளங்கிய இரதி என்னும் மாதர்கள் மூவரும் பொருந்திய புத்தியம்மையாருக்கும் அழகிய திருமணக்கோலஞ் செய்தார்கள் எ - று

சாலி - அருந்ததி திருமகள் - இலக்குமி அதிதி - காசிபர் மனைவியரு ளொருத்தி இந்திராணி - இந்திரன் மனைவி அநசூயை - அத்திரிமுனிவர் பாரியை சாலி - வசிஷ்ட பத்தினி இரதி - மன்மதன் தேவி (௧௬௨)

தண்ணருட் கடைக்க ணோக்கிச் சதாசிவப் பெருமா னோடு
நண்ணிய மனோன்ம ணிப்பேர் நங்கைதன் னேவப் பட்டே
பண்ணுறுப் பவர்த்தா ருங்கள் பணிவிடை புரிந்தாம் யாமென்
றெண்ணரிய கமலை யாதி யறுவரு மிறைஞ்சி னாரே.

(இ - ள்) குளிர்ந்த கிருபைதங்கிய திருக்கடைக்கணோக்கஞ்செய்து சதாசிவபெருமானுடன் பொருந்திய மனோன்மணியென்னும் பெயரையுடைய உமாதேவி

யாரால் நன்றாகக் கட்டளைசெய்யப்பட்டு, யாங்கள் செய்த சன்மாந்தரதவத்தினால் உங்களுடைய ஊழியத்தைச் செய்தோமென்று, எண்ணத்தக்க திருமகள் முதலிய ஆறு மாதர்களும் (அச்சித்திபுத்திகளை) பணிந்தார்கள் எ - று.

மனோன்மணியை மனோன்மணியென்பதும் வழக்கு இஃது உன்மனியென்னுஞ் சத்தியாம். கமலை - கமலத்தில் வசிப்பவள். (௧௪௩)

ஆங்கவ ரோடு விண்ணி னணங்கினர் பலருநீங்காப்
பாங்கியர் பலரு மேனைப் பல்பரி சனமுஞ் சூழ
வோங்குவெண் கவிகை பிச்ச மொண்கொடி யியமி யம்பத்
தீங்கறு நங்கை மார்க டிருமணக் கோலஞ் சென்றார்.

(இ - ள்) அப்பொழுது அம்மங்கையருடன் ஆகாயத்தில் வசிக்கும் தேவமாதர்கள் அநேகரும், பிரியாத பாங்கிப்பெண்கள் அநேகரும், பலவகைப்பட்ட பிற பரிசனங்களும் புடைசூழ்ந்து வரும்படி, வெண்கொற்றக்குடைகளும், மயிர்ப்புஞ்சங்களும், ஒளிபொருந்திய கொடிகளும் உயரவும், (பலவகை) வாத்தியங்கள் முழங்கவும், குற்றமற்ற சித்திபுத்தி தேவிகள் திருமணக்கோலஞ்சென்றார்கள் எ - று. (௧௪௪)

புனிதமென் மடவார் வீதிப் போதலு மார்வ மாகி
முனிவிலங் குரமுன் னான முறையெலாந் தொடுத்துச் செய்த
சனகனை மண் டபத்துட் புகுந்து தருப்பைவெண் பொரியு மற்றை
யினியபல் பொருளு மீட்டி யெல்லைபார்த் திருந்தா னன்றே.

(இ - ள்.) பரிசுத்தமாகிய மெல்லிய சித்திபுத்திகள் (திருமணக்கோலமாக) திருவீதியில் எழுந்தருளவும், பூளை முதலிய பொருள்களையெல்லாம் முறைப்படி சேகரித்துவைத்த ஆசிரியனாகிய சனகமுனிவன் திருமணமண்டபத்திற் பிரவேசித்து, தருப்பையும், வெள்ளிய பொரியும், இனிமையாகிய மற்றைப் பலபொருள்களுஞ் சேர்த்து, திருமுகூர்த்தகாலத்தைப் பார்த்துக்கொண்டிருந்தனன் எ - று.

புக்கு - இறந்தகால வினையெச்சம் புகு - பகுதி பகுதி யொற்றிரட்டி இறந்தகாலங்காட்டிய து புகுந்து என்பது பொருள் எல்லை - சமயம் (௧௪௫)

ஒருவரை யொருவ ரொப்பத் தனற்பினே வொருவ ரொவ்வா
விருவரும் வீதி சூழ்போந் தெய்திமண் டபத்து நாப்பட்
குருமணித் தவிசின் வைகு கோமகக் கணேசர் பாங்கிற்
றருவிரு புடைசேர் காம வல்லியிற் றங்கி னாரே.

(இ - ள்) (தம்முள்) ஒருவரையொருவர் ஒத்திருந்தலன்றி வேறொருவர் ஒப்பாகாத அவ்விரு கன்னியரும் திருவீதியைப் பிரதக்கணஞ்செய்து திருமணமண்டபத்தில் வந்து, அதனிடையே நிறைமைந்த இரத்தினபீடத்தில் எழுந்தருளியிருக்கும் அழகிய கணேசமூர்த்தியினருகில், கற்பகத்தருவின் இருபுறத்திலுஞ் சேர்ந்துள்ள காமவல்லியைப்போலப் பொருந்தினார்கள் எ - று.

காமவல்லி - இஃதோர் படர்கொடி கற்பகத்தருவின்மேற்படர்வது (௧௪௬)

மண்ணிடை வழுத்தி வீழ்ந்த வானவர் மீட்டுந் தாமரைப்
விண்ணிடை புகுந்தா லென்ன வியோசத்தான மெலிந்த நீலக

கண்ணியர் கணேசர் பாங்கிற் கலந்ததனும் விளர்த்த பண்டை
வண்ணமும் வேறதாகி வடிவெலா மலிந்தா ரன்றே

(இ - ள்) பூமியின் மேலே நழுவிவிழுந்த தேவர்கள் தாம் வாழ்கின்ற தேவலோகத்திலே மீளவுஞ் சென்றுற்றபோல, பிரிதலால் மெலிவுற்ற நீலோற்பலமலர்போன்ற திருவிழிகளையுடைய சித்திபுத்திகள் விநாயகக்கடவுள் பக்கலிற் (பண்டுபோற்) கலக்கவும், வெளுத்த பழய வடிவமும் வேறுபட்டு உருவமுழுவதுஞ் சிறந்துவிளங்கினார்கள். எ - று (௧௪௭)

துங்கவர் கமத்தி னூற்றா றாத்தவச் சனக னென்போன்
சங்கற்பம் புரிந்து புண்ணி யாகமுந் தழையச் செய்திட்
டங்குறு பொருள்க டூய்மை யாக்கியா ரணமு ழங்க
மங்கல வுருவி னற்கு மதுபருக் கத்தை நல்கி.

(இ - ள்) பரிசுத்தமான ஆகமவழியாற் புனிதமான தவத்தையுடைய சனக்முனிவனென்போன் சங்கற்பஞ்செய்து, புண்ணியாஹவாசனமும் விசேடமாகச் செய்து, அவ்விடத்துள்ள பண்டங்களைப் புனிதமாக்கி, வேதமுழக்கத்துடன் மங்கல சொரூபியாகிய விநாயகப்பெருமானுக்கு மதுபாக்கத்தைக் கொடுத்து எ - று

மதுபர்க்கமாவது - பழங்களைத் தேன் முதலியவற்றுடன் கலந்துகொடுப்பது.

பாத்திய மாதி மூன்றும் பன்னுமந் திரத்தோ டீந்து
பூகதொங்கு குழலி னார்க்குப் பூந்துகில் கலன்க ணல்கிச்
சாத்தின ரணியச் செய்து தக்கவெனே நோக்கி நின்று
னேத்தினார் முனிவ ரெல்லா மியங்களு மியம்பா நின்ற.

(இ - ள்) சொல்லுகின்ற மந்திரபூர்வமாக, பாத்திய முதலிய மூன்றனையுந் தந்து, மலர்கள் மிக்கு விளங்குங் கூந்தலையுடைய சித்திபுத்திகளுக்கு அழகிய (கூறையும்) ஆபரணங்களுமளித்து (அவற்றை) அணிந்துகொள்ளும்படி கூறி அணிவித்து, தகுதியாக என்னை நோக்கி நின்றனன் எல்லா முனிவர்களுந் துதித்தார்கள். வாத்தியங்களு முழங்கா நின்றன எ - று.

பாத்திய முதலிய மூன்று—ஆசமனியம் - பாத்தியம் - ஆசமனீயம் (௧௪௯)

அநாதியே யடிமை யான வாவியு முடைமை யான
மனாதியும் பொருளும் பின்னா வரதனபால் வழங்கு மாபோ
லநாதியே நீங்கா சத்தி யாகிய கன்னி மாரைப்
பிநாதியா லிரிற் றெளமை பேசுப் கொடுத்திட் டேனால்.

(இ - ள்) அநாதியாகவே அடிமையாயுள்ள உயிரும், உடைமையாகிய மன முதலியனவும் [உடலும்] பொருளும், பிற்காலத்தில், சிரேட்டனாகிய விநாயகப்பெருமானிடங் கொடுக்கு முறைமைபோல, அநாதியாகவே பிரியாத சத்திகளாகிய சித்திபுத்தி தேவிகளை மீண்டும் இறைவராகிய விநாயகக்கடவுளுக்கு நீரினால், பழமையைப் பேசிக்கொண்டு கொடுத்திட்டேன் எ - று (௧௫௦)

மடுப்பரும் பொருள்க ளெல்லாம் வயக்குநல் வினைகட் கேற்பக்
கொடுப்பவன் றானு வேற்குங் கோளின வுயிர்க ளாக

வடிப்பதிற் பிறழ்ந்து பெண்க ளளிப்பவ ருக்கி யென்னைத்
தொடர்புறு விழைவி னேற்குந் தொழின்மை யமைத்தா னுற் றானால்.

(இ - ள்) அநுபவித்தற்கரிய பொருள்களையெல்லாம், செய்கின்ற நல்வினை கட்கேற்றபடி கொடுப்பவர்தாமேயாகிய விநாயகக்கடவுள், தம்பாலேற்கும் சீவர்களாக வடைவதிற் பிறழ்வுற்று, அடியேனைப் பெண்கள் கொடுப்பவனாகச்செய்து பொருந்திய ஆசையுடன் பெறுகின்ற தொழிற்றன்மையை யடைந்தனர் எ - று. (௧௫௧)

பாகடை சிறார்கள் கையிற் பரிப்பித்து வாயின் வைகி
யோகைசெய் குரவர் போல வொண்டொடி மாரை யென்பா
லீகவென் றேற்றுச் சால விரங்கியன் றென்னை யுமாண்ட
வேகன் றருளை யாரே யிறப்பெனக் கிளக்கு நீரார்

(இ - ள்) தாம்பூலத்தைச் சிறார்கள் கையிற் கொள்ளச்செய்து வாயினுற் றிரித்துச் சந்தோஷிக்கும் பெற்றோரைப்போல, ஒள்ளிய வளையலையணிந்த சித்தி புத்தி தேவிகளை யென்னிடமிருந்து கொடுக்கவென்று யாசித்து, மிகுதியும் மன மிரங்கி அக்காலத்தில் என்னையு மடிமைகொண்ட ஏகநாயகனாகிய கணேசமூர்த்தியி னுடைய திருவருளை யெவர் தாம் இத்தன்மைத்தெனக் கூறவல்லவர்கள்? எ - று

உலகவர் பொருள்க ளாதி யுதவலு மவற்றைப் பேற்றுப்
பலமிறை வழங்கு மாறும் பாரகினவ் வாறே யாகு
மலர்புகழ் வியாத நாத னருளையா ணவத்தி னீங்கு
நலவர்க ளறிவி னல்லா னவையின ரறிவா ரொல்லோ.

(இ - ள்) உலகினர் (தமது) பொருண் முதலியவற்றை (இறைவனுக்கு) விநி யோகித்தலும், இறைவன் அவற்றைப் பெற்றுக்கொண்டு (அவர்கட்கு அவற்றின்) பலங் களைக் கொடுக்கும் வகையும் பாரகுமிடத்தில் அவ்வகையேயாகும் பரந்த கீர்த்தி யையுடைய வியாசமுனிவனே! கணேசப்பெருமானுடைய திருவருளை ஆணவமலத்தி னின்றகன்ற நல்லவர்கள் அறிந்தாலல்லாமல் (மலசம்பந்தமாகிய) குற்றமுடையவர்கள் அறிவார்களோ? (அறியமாட்டார்கள்) எ - று (௧௫௩)

நீரொடுங் கன்னி மாரை நிருமல னேற்ற பின்னை
நாரொடு நெகிழ்ந்த சிந்தை நற்றவச் சனக னென்போன்
சீரொடு குணட மாதி சிறப்புறச் சுத்தி செய்தங்
கேரொடுந் தெய்வச் செந்தீ யெழுதர வோமஞ் செய்தான்.

(இ - ள்) (தாரையாயொழுகிய) நீருடன் சித்திபுத்திகளாகிய கன்னிகை களை மலரகிதராகிய விநாயகக்கடவுள் பெற்றுக்கொண்டபிறகு, அன்புடன் கசிந்த மனத்தையுடைய நல்ல தவஞ்செய்த சனகமுனிவன், சிறப்புடன் ஓமகுண்ட முதலிய வற்றை விளங்கத்தக்க சுத்திசெய்து, அழகுடனே தெய்வத்தன்மையுடைய செவ்விய அக்கினியானது அதிகரித்தெழும்படி ஓமஞ்செய்தனன் எ - று (௧௫௪)

விம்மொளிக் கனகக் ளாரப்ப விநாயக னெழுந்து மாதர்
தம்மடி தூக்கித் தூக்கித் தலத்தினிட் டேகு யீற்றி
னம்மியி னிருத்தி யிணைடங் காருதி யளாத்து வாச் சென்று
முமமுறைப் பொரிகள் வீணை முனியிட் டவிழ்த்தான்.

(இ - ள்) பேரொளியையுடைய ஆபரணங்களொலிக்க, விநாயகக்கடவுள் எழுந்திருந்து, சித்திபுத்திகளாகிய மனைவிமார்களுடைய திருவடியை யெடுத்தெடுத்துப் பூமியில் வைத்துச் சென்று, இறுதியில் அம்மியின்மேல் வைத்து, பின்னர் ஓமஞ் செய்து சென்று, வீணைமுனிவனாகிய நாரதமுனிவன் மூன்றுதரம் பொரிகளையிட, தீயிற் சொரிந்தனர். எ - று. (க௫௫)

எரிவலஞ் சூழ்ந்து பீடத் திருந்துபின் னுஞ்செய் தற்
குரியன பலவு முற்ற வொய்யென வெழுந்து தாதை
விரிமலர்ப் பதத்திற் றாழ்ந்து விமலையை வணங்கி நின்றான்
கரியவாட் டடங்கட் செவ்வாய்க் காதலி மாரோ டும்மே

(இ - ள்) அக்கினியைப் பிரதக்கணஞ்செய்து பீடத்திலெழுந்தருளியிருந்து, பின்னர் அச்சமயத்திற் செய்தற்குரியனவாகிய பல சடங்குகளையுஞ் செய்துமுடிக்க, விரைந்தெழுந்து (விநாயகக்கடவுள்) கருமைவாய்ந்த வாள்போன்ற பரந்த கண்களையும் சிவந்த வாயையுமுடைய மனைவிமார்களோடும், தந்தையாகிய சிவபெருமானுடைய மலர்ந்த தாமரைமலர்போன்ற திருவடியிற் பணிந்து, (தாயாகிய) பார்வதிதேவியாரையும் பணிந்து நின்றனர் எ - று

விமலை - மலசம்பந்தமில்லாதவள் (க௫௬)

இருமுது குரவர் பூரித் தெழுபெருங் கருணை நல்கிக்
குருமணித் தவிசின் வைக்கக் குறிகா ரணனை நோக்கத்
திருமறு மார்பன் றாழ்ந்து தேவர்கோ னெடுத்து நீட்டப்
பொருவிரும் பூல மாதி முறையினாற் பொற்ப வீந்தான்.

(இ - ள்) தாய் தந்தையர்களாகிய பார்வதி பரமேசர்கள் மனம்பூரித்துத் தோன்றிய பேரருளைத்தந்து, நிறமமைந்த இரத்தினபீடத்திலிருக்கச்செய்து, திருமாலைக் கண்களாற் பார்த்துக் கட்டளையிட, விஷ்ணுமூர்த்தியானவர் (அவர் கருணைக்கு வியந்து) பணிந்து, தேவராசனாகிய இந்திரன் எடுத்துக் கைகளால் நீட்ட, ஒப்பில்லாத தாம்பூல முதலியவற்றை முறைப்படி அழகாகக்கொடுத்தனர் எ - று

திருமறுமார்பன் - திருமகளையும் ஸ்ரீவற்சமென்னும் மறுவையும் பொருந்திய மார்பையுடையவன், திருமால் (க௫௭)

வத்திரங் கலன்கண் மற்று மலகிய வனந்த ராதி
யுத்தமத் தலைவ ரான வுருத்திர கணமீ றாகப்
பத்தியின் விண்டு நல்கப் பரமனா ரருளாற் றேவர்க்
கொத்துறு முனிவர் யார்க்குங் கொடுத்தனர் கற்ப காதி

(இ - ள்.) ஆடையாபரணங்களையும் பிறவற்றையும், மிகுந்த அநந்தர்முதல் உத்தமத்தலைவர்களாகிய உருத்திரகணமீறாக வரிசையாய் விஷ்ணுமூர்த்தியானவர் கொடுக்க, சிவபெருமானார் தமது திருவருளாற் கற்பகமுதலிய (அரிய) பொருள்களைத் தேவர்களுக்கும் கூட்டமாகிய முனிவர்களுக்கும் மற்றெல்லோருக்குங் கொடுத்தருளினார். எ - று.

அநந்தராதி என்றது அட்டவித்தியேசுரர்களை. (க௫௮)

குறைவறப் பொருள்க ளன்றிக் குறித்தபல வரமும் யார்க்கு
நிறைதர வருளிச் செய்து நேரிழை யோடு மெண்டோ
ளிறைவனங் ககன்று வேறோ ரிடத்தினி திருந்தா னைக்
கறைகழற் பெருமான் வீதி யடுத்திடும் விழாமேற் கொண்டான்.

(இ - ள்) குறைவின்றிப் பொருள்களேயல்லாமல் விரும்பிய பல வரங்களையும் எல்லோருக்கும் (மனமானது) நிறையும்படி யநுக்கிரகித்து, உமாதேவியாருடன் எட்டுத் திருக்கரங்களையுடைய சிவபெருமானார் அவ்விடத்தினின்று நீங்கி வேறோரிடத்தில் எழுந்தருளியிருக்கவும், ஒலிக்கின்ற வீரக்கழலணிந்த விநாயகக்கடவுள் திருவீதியிற் செல்லும் திருப்பவனி விழவை மேற்கொண்டனர். எ - று. (௧௫௯)

வேறு

அருப்பு மாமுலைத் தேவிய ரணிமணிச் சிவிகை
விருப்பி னேறினர் விநாயகப் பணணவ னெழுந்து
மருப்பி ராயிர மேந்தயி ராவண மெனனும்
பொருப்பி னேறினன் பொழிந்தன ரமரர் பூமாரி.

(இ - ள்) கோங்கரும்புபோன்ற பெருமைவாய்ந்த முலைகளையுடைய சித்திபுத்தி தேவிகள் அழகிய இரத்தினச்சிவிகையில் அன்புடன் ஆரோகணித்தார்கள். விநாயகக்கடவுள் எழுந்து இரண்டாயிரங் கொம்புகளையுடைய அயிராவணமென்னும் வெள்ளானையில் ஆரோகணித்தனர் தேவர்கள் மலர்மழை சொரிந்தார்கள் எ - று.

அரும்பு - அருப்பு ; இது வலித்தல் விகாரம். பொருப்பு - மலை, ஈண்டு மலைபோன்ற பேருருவுடையதென்னுங் குறிப்பால் யானையையுணர்த்தியது. (௧௬௦)

அடைநெ டுங்கட லுடைந்தெனு வார்த்தபல் லியமு
மடைய டைத்தென மங்கல வாழ்த்துட னெழுந்த
குடைக வித்தன மிடைந்தன கொடிநிரை கவரி
புடையி ரட்டின வசைந்தன பொருவில்சாந் தாற்றி.

(இ - ள்) அடைந்துள்ள நெடிய கடலானது மடைதிறந்தாற்போலப் பல வாத்தியங்களு முழங்கின (அக்கடலினை) மடையடைத்தாற்போல மங்கலவாழ்த்தொலிகள் உடனே யெழுந்தன குடைகள் கவித்தன துவசங்களின் வரிசைகள் நெருங்கின. சாமரைகள் இருபுறங்களிலும் இரட்டின. ஒப்பில்லாத சாந்தாற்றிகள் அசைந்தன. எ - று

கவரி - கவரிமான் மயிரினாற் செய்தது சாந்தாற்றி - சாந்துபூசியதை ஈரமுலரச்செய்வது, இதனை விசிறியென்றும், சிவிறியென்றுஞ் சொல்லுவர். (௧௬௧)

கின்ன ரத்திசை யெழுப்பினர் கின்னர ரெதிரே
யன்ன மென்னடை யரம்பைய ராடினர் பிரம்பிற்
றுன்னி ருஞ்சனம் விலக்கினர் றுகளறு நந்தி
யென்னை யாளுடை நாயக னெழுந்தனன் வீதி.

(இ - ள்) கின்னரர்கள் கின்னரப்பட்சியின் ஓசையை யெழுப்பி (ப்பாடி) னர்கள். (விநாயகக்கடவுளுக்கு) எதிரிலே, அன்னம்போலும் மெல்லிய நடையையுடைய தேவமாதர்கள் நடித்தார்கள். குற்றமற்ற திருநந்திதேவர் (பொற்) பிரம்பினால் நெருங்

கிய பெரிய சனத்தொகுதியை விலக்கினார் (இவ்வகைய சிறப்புக்களோடும்) என்னை யாளாகவுடைய விநாயகக்கடவுள் திருவீதியில் திருவுலா வெழுந்தருளினார். எ - று.

கின்னரம் - ஓர்வகைப்பறவை இது ஆணும் பெண்ணும் பிரிவின்றி வாழு மியற்கைபற்றிக் கின்னர மிதுனமெனச் சிறப்பித்துச் சொல்லப்படும் இனிமையுடன் பாடும் இயற்கையது. (௧௬௨)

புரக்கு நாயக னாதியோர் போற்றிட மதநீர்
பரக்கு மானனத் தெம்பிரான் பைப்பயக் கடவுங்
கரக்குன் றேறிய வீதியிற் கன்னியர் பலருங்
மரக்கு நீர்கொடு முந்துறச் சுற்றினர் மகன்றார்

(இ - ள்) திதிக்கடவுளாகிய திருமால் முதலாயினோர் துதிசெய்ய, மதநீர் பரவச்செய்யும் (யானை) முகத்தையுடைய எமது பெருமானாகிய விநாயகக்கடவுள் மெல்ல மெல்லச் செலுத்தும், கைம்மலையாகிய அயிராவணமானது சென்ற திருவீதியி லுள்ள பல கன்னியர்களும் ஆலநீரைக்கொண்டு முற்படச் சுற்றிச்சென்றார்கள் எ-று

ஆனனம் - முகம் கரக்குன்று - இது இரண்டாம்வேற்றுமை யுருபும் பயனு முடன் றொக்கதொகை, கையையுடைய மலையென விரியும், யானையென்பது பொருள் (௧௬௩)

கன்ன லின்செழுங் கடிகையுங் கதலிமுன் னானை
வன்ன மென்கனித் திரள்களு மலர்களும் பொரியு
மின்னொ ளிப்பல மணிகளு மெல்லியன் மடவார்
முன்னர் வீசினர் வணங்கினர் மோகமுற் றனரால்

(இ - ள்) மென்மைத்தன்மையையுடைய மாதர்கள் (விநாயகக்கடவுளுக்கு) முன்னதாக, செழிய கருப்புத்துண்டுகளையும் வாழை முதலியனவாகிய அழகிய மெல்லிய பழக்குவியல்களையும், மலர்களையும், பொரியையும், மின்னல்போலும் ஒளியை யுடைய பல இரத்தினங்களையும் வீசிப்பணிந்து மோகங்கொண்டார்கள் எ - று

வீசினர் - வணங்கினர் என்பன முற்றெச்சங்கள் (௧௬௪)

இந்தக் காளையை யொப்பவ ரில்லையென் றொருத்தி
மந்தக் காலினா லசையிள வல்லியிற் றுவண்டாள்
முந்தக் கேட்டொரு மாதுநான் முயங்குமா நினைந்த
வந்தக் காளைக்கு மூக்கநோக் கினைகொலென் றழன்றாள்

(இ - ள்) இந்தக்காளையை யொப்பானவர்களில்லையென்று கூறி, ஒரு பெண் இளந்தென்றலாலசையும் இளங்கொடிபோலத் துவண்டனள் அதை முற்படக்கேட்ட (வேறு) ஒரு பெண் நான் கூடும்படி கருதிய அந்தக்காளைக்கு ஊறுகப்பாத்தனையோ? என்று கூறி, (அவள்மீது) கோபங்கொண்டனள் எ - று

மந்தம் கால் - இளமையாகிய காற்று. வல்லி - கொடி காளை - இளம்பருவ முடையவன் ஊறு - இடையூறு (௧௬௫)

ஐந்து நாயக னணிதலா லணிகளைப் பேரழகு
செய்த வாரென வொருத்திமற் றொருத்திநோக் கீறி

புயத்தல வேண்டுமே லொருத்தனை நினைப்பொழி முன்னே
வெய்து தூதுபோய் நின்றதென் மனமென விதித்தாள்

(இ - ள்) அழகிய இந்நாயகன் அணிதலால் ஆபரணங்கள் மிக்க அழகினைச் செய்தனவென்று ஒருபெண் மற்றொருபெண்ணை நோக்கி, நீ பிழைக்கவேண்டுமாயின் இவனொப்பற்றவனை யெண்ணுதலை யொழிக (ஏனெனில்) என்மனமானது முன்னரே விரைந்து (அவனிடத்திற்குத்) தூது சென்றிருக்கின்றது என்று கட்டளையிட்டனள் எ - று (௧௬௬)

சித்தி புத்திதந் திருமுக நோக்கிய முலைக
ளத்த னங்கையா லணைக்குமா றருந்தவம் புரிந்தார்
முத்த மென்முலை காள்வா முலையினென் முகம்பார்த்
தொத்து மென்பயன் றவமிலே மென்றன ளொருத்தி.

(இ - ள்) சித்திபுத்திதேவிகள் தம்முடைய திருமுகத்தைப் பார்த்துள்ள முலைகளை இப்புனிதமானவன் தன்னுடைய அழகிய திருக்கரங்களாற் புல்லுமவகையாக அரிய தவத்தைச்செய்தார்கள் முத்துமாலையணிந்த மெல்லியமுலைகளே! அவ்விருவர் முலைகளைப்போல என் முகத்தைப்பார்த்தும் (அவற்றை) ஒத்திருந்தும் யாது பயன்? நாம் தவமுடையேமல்லேமென்று வேறொருத்தி கூறினள் எ - று

திருமுக நோக்கிய முலைகள் - அணைந்துள்ள அல்லது மேனோக்கிய கொங்கைகள் முத்தமென்முலைகாள் என்றதை முத்தமணிந்த என் முலைகளேயென்றாவது முத்தமணிந்த மெல்லிய முலைகளேயென்றாவது பதப்பிரிவுசெய்க முலையின் என்றதில் இன் ஐந்தனுருபு ஒப்புப்பொருளது தவமிலேமென்றது முலையையுந் தன்னையும் உளப்படுத்திக்கூறிய தன்மைப்பன்மை வினைமுற்று (௧௬௭)

அருவி பாய்மதா விழிகளா லமர்ந்து நோக்கிடந்தோ
றுருவந் தோற்றலி னுயர்மதக் களிற்றினமேல் வருவா
ரொருவ ரோபல ரோவென வொழிதரா வைய
மருவி னுளக்லை சோர்வது மதித்திலா ளொருத்தி.

(இ - ள்) அருவியாறு பெருகுகின்ற களிப்பெய்திய கண்களாற் பொருந்திப் பார்க்குமிடங்கடோறும், திருவுருவமானது காணப்படுதலின், உயர்ந்த மதப்பெருக்கையுடைய யானையின்பேரிற் பவனிவருபவர் ஒருவர்தாமோ? பலர்தாமோ? என்று மற்றொருத்தி நீங்காத சந்தேகத்தைப் பொருந்தித் தன் ஆடையானது சோர்தலை மதித்தாளில்லை. எ - று

காமமயக்குற்றவள் தான் கருதியநாயகனுடைய தோற்றத்தை யெங்கெங்கும் காண்டலின் "அருவிபாய்மதா * * * * ஒருவரோ பலரோ வென வொழிதராவைய மருவினுள்" என்றார் (௧௬௮)

தொழுதுநின்றவர் கைக்களே தொடியொடுஞ் சிறந்த
கொழுகொம் பின்றியே குழையிளங் கொடியென விறைஞ்சி
யெழுத வில்லவர் நிதம்பமே கலையொடு மிருந்த
விழும மையல்கொண் டடுத்திடு மெல்லியர் குழாத்துள்.

(இ - ள்.) மிக்க காமமயக்குற்று (எம்பெருமானை) நெருங்கிய மாதர் கூட்டத்திலே (எம்மிறைவனைப்) பணிந்து நின்றவர்களுடைய கரங்களே வளைகளோடுஞ்

சிறந்து விளங்கின். கொழுகொம்பில்லாமல் தளர்கின்ற இளங்கொடியைப்போல நமஸ்கரித்து எழாதவர்களுடைய நிதம்பங்களே ஆடைகளோடிருந்தன. எ-று. (௧௬௯)

அண்ணன் மார்பக மணிக்கூடத் தகைத்தணையி
னண்ணி லேமென நகைவளை நழுவின சிலர்க்கு
வண்ண வார்குழன் மனநெகிழ்ந் தமைதெரிப் பதுபோற்
றிண்ணென் யாப்பினிற் நீங்கற நெகிழ்ந்தன சிலர்க்கு.

(இ - ள்) விநாயகக்கடவுளுடைய திருமார்பினைத் தழுவமாட்டாதகைகளிற் பொருந்தியிரோமென்று சிலர்க்குப் பிரகாசிக்கின்ற கைவளைகள் நழுவின சிலர்க்கு அழகிய நெடிய கூந்தல்கள், அவர்கள் மனமுருகினமையை விளக்குவதுபோல வலிய கட்டுதலினின்றும் விலகி மிகவுஞ் சோர்ந்தன. எ - று (௧௭௦)

ஆடி னார்சில ரினையத் தாலங்கடெரித்துப்
பாடி னார்சிலர் பரிவொடு குறிஞ்சிப்பண் ணமைத்து
நீடி னார்சிலர் நிமலனைக் கூடுபா வனையி
னூடி னார்சில ருன்னிய பாவனைக் கலப்பின.

(இ - ள்.) சிலமாதர்கள் (காமவெறியால் தம்மைமறந்து) ஆடினார்கள். அவிநயமுறையுடன் தம்முடைய மனக்கருத்தை வெளியிட்டுச் சில பெண்கள் பாடினார்கள். அன்புடன் குறிஞ்சிப்பண்பொருந்திச் சிலநங்கையர்கள் நீலத்தார்கள். எண்ணத்தக்க பாவனைப்புணர்ச்சியால் சில பெண்கள் (இறைவனைப்) புணர்கின்றபாவனையாக ஊடல்கொண்டார்கள். எ - று.

காமமேலீட்டினால அவர்கள் செயலைத்தெரியாது ஆடல்பாடல் முதலியவற்றைச் செய்தார்களென்பது கருத்து (௧௭௧)

இனைய வாறுபன் மாதருந் மேந்திளா மயங்க
வினையெ லாந்துவித் திடுபவன் வினைமதத் தலத்தா
னனையு மாமுகத் தொருத்தலை நடத்தினன் வந்திப்
புனையும் வீதிகள் வலம்வந்து கோயிலுட் புகுந்தான்.

(இ - ள்.) இவ்வகையாகப் பலமங்கையர்களுந் துதிசெய்து (காம) மயக்குறும்படி, வினைசசம்பந்த முழுவதையுமழிக்கும் ஞானசொரூபியாகிய கணேசப்பெருமான் மணமமைந்த மதப்பெருக்கினாலே நனைகின்ற பெரிய முகத்தையுடைய அயிராவணமென்னும் வெள்ளானையை நடைபெறச் செலுத்தி, அலங்கரித்திருக்குந் திருவீதிகளை வலமாக (ப்பவனி)வந்து திருக்கோயிலினுள்ளே பிரவேசித்தனர் எ-று. (௧௭௨)

தருவுந் தேனுவுஞ் சங்கமுந் தாமரை நிதியுந்
திருவி னீடுசிந் தாமணித் திரள்களும் வெவ்வே
றுருவு தாங்கினின் றவ்வவ ருவகைகுமா விருந்து
பருவ மாமழை போன்மெனப் பணைபொடும் பகர்ந்த.

(இ - ள்.) கற்பகத்தருவும், காமதேனுவும், சங்கநிதியும், பதுமநிதியும், செல்வமிகுந்த சிந்தாமணியுமாகிய (இவற்றின்) திரள்களும் பலபலவடிவங்களெடுத்துநின்று காலத்திற் சொரியும் பெருமழைபோலுமென்று சொல்ல, அவரவர்கள் களிப்பெய்தும்படி சிறந்த விருந்தினைத் தகுதியுடன்செய்தன. எ - று (௧௭௩)

வரைந்த நாடொறு மன்றன்மங் கலவினை யாலப்
புரிந்துசா றுமுற் றியல்வழி நாட்பொலந் தவிசிற்
றெரிந்த பூணிழை மாதொடுஞ் சிவபிரா னிருப்ப
வரந்தை தீர்தர வனைவரு மடுத்திறைஞ் சினரால்.

(இ - ள்) அளவிட்ட தினங்கடோறும் திருமணத்தின் மங்கலச்சடங்குகளை மிகுதியாகச்செய்து மகோற்சவமுடிந்த மற்றையதினத்தில், அழகிய பீடத்திற் சிறந்த ஆபரணங்களை யணிந்த உமாதேவியாருடன் சிவபெருமானார் எழுந்தருளியிருக்க, துன்பமகலும்படி எல்லோரும் ஒருங்குசேர்ந்து வணங்கினார்கள் எ - று.

சாறு - திருவிழா. ஈண்டுத்திருமணம். (௧௭௪)

மாயன் மாதிரத் தலைவர்கள் பதினொரு மூவர்
மேய சாரணர் கின்னரர் மேதகு சித்தர்
தூய மாதவர் தொல்புவி யரசர்க ளெவரு
மேயு மாறருள் கொண்டுதம் முலகமெய் தினரால்.

(இ - ள்) திருமால் - அட்டதிக்குப்பாலர்கள் - முப்பத்துமூன்று தேவகையினர் - பொருந்திய சாரணர்கள் - கின்னரர்கள் - மேம்பாடுடைய சித்தர்கள் - புனிதமாகிய பெருந்தவசிகள் - பழமையாகிய பூலோக மன்னர்கள் - முதலிய எல்லோரும் (சிவபெருமானுடைய) திருவருளைப் பொருந்துமாறு கொண்டு தங்கடங்களுலகங்களை யடைந்தார்கள் எ - று.

பதினொருமூவரென்றது முப்பத்துமூவர். அவர்கள் ஆதித்தர் பன்னிருவர்; அச்சுவினிகள் இருவர், உருத்திரர் பதினொருவர், வசுக்கள் எண்மரெனக். (௧௭௫)

கந்த ராதிமுன் னுடன்வருங் காரண ரெவரு
மைந்த ராகிய கணேசரு மணமக ளிர்களுங்
கொந்து லாமலர்க் குழலுமை யென்னு மணியொடுஞ் சூழ
வெந்தை யாரெழுந் தருளினர் திருக்கயிலாயம்.

(இ - ள்) (இளைய பிள்ளையாராகிய) முருகக்கடவுள் முதலாக முன்னே உடன்வந்த முக்கியமானவர்கள் யாவரும், (மூத்த) பிள்ளையாராகிய கணேசப்பெருமானும், (சித்தி புத்திகளாகிய) திருமணப்பெண்களும், மலர்க்கொத்தமைந்த கூந்தலையுடைய உமாதேவியாரும் உடன்சூழ்ந்துவர, எமது தந்தையாராகிய சிவபெருமானார் திருக்கயிலாயகிரிக் கெழுந்தருளினார் எ - று. (௧௭௬)

அங்கு வீற்றிருந் தைம்முகத் தைந்தொழில் புரிய
வெங்க ணாயக னாகிய வேரம்ப னிருபாற்
றங்கு மாதரா ரோடுதன் னுலகினை யடுத்துப்
பொங்கு காதலி னளவளாய்ப் போகமுற் றிருந்தான்.

(இ - ள்.) ஐந்து திருமுகங்களையுடைய சிவபெருமானார் அக்கைலாயகிரியி லெழுந்தருளியிருந்து பஞ்சகிருத்தியங்களைச்செய்ய, எங்கள் தலைவராகிய விநாயகக் கடவுள் இருபுறங்களிலும் பொருந்திய சித்தி புத்தி தேவியருடன் தமதுலகினைச்சார்ந்து, அதிகரிக்கின்ற ஆசையுடன் அளவளாவி இன்புற்றிருந்தனர். எ - று.

ஐம்முகன்—ஈசானம் தற்புருடம் அகோரம் வாமதேவம் சத்தியோசாதமென்னும் ஐந்து திருமுகங்களையுடையவன். ஐந்தொழில்—சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அநுக்கிரகமென்பன. (௧௭௭)

அன்று மன்றலி னுடனிருந் துய்ந்தன னதனை
யின்று சொல்லியு முய்ந்தன னென்னவியா தனுக்கு
மன்றன் மென்மலர் வாழ்க்கையான் வகுத்தன னென்னு
நன்று ரைத்தனன் பிருகுமா தவனரா திபற்கு.

(இ - ள்) அக்காலத்தில், திருமணத்திலுடனிருந்து உச்சீவித்தேன் அதனை யிப்பொழுது (உனக்குச்) சொல்லியும் உச்சீவித்தேனென்று, வியாசமுனிவனுக்கு மணம்பொருந்திய மெல்லிய தாமரைமலரில் வாழ்க்கையுடைய பிரமதேவன் கூறினனென்று, சிறந்த பிருகுமுனிவர் சோமகாந்தமன்னவனுக்கு நன்றாக(எடுத்து)க் கூறியருளினார் எ - று. (௧௭௮)

சித்தி புத்திக டிருமணஞ் செப்பினம் வியாத
பைத்த பன்னகப் பள்ளியான் கணேசனைப் பரவி
மெத்து வண்டிறன் மதுகயி டவருயிர் வீத்த
வத்தி றத்தினைக் கேளென வறைகுவன் மலரோன்.

(இ - ள்) வியாதமுனிவனே! சித்தி புத்தி தேவிகளது திருமணவிபவத்தை யெடுத்துச் சொன்னோம். (இனி) படத்தையுடைய ஆதிசேடனைச் சயனமாகவுடைய திருமால் விநாயகக்கடவுளைத் துதிசெய்து, மிக்க வண்மைதங்கிய வலியமைந்த மதுகயிடவர்களென்னு மசுரர்களை யுயிர்போக்கிய அத்திறத்தையுங் கேட்பாயாகவென்று பிரமதேவன் கூறலாயினன். எ - று. (௧௭௯)

திருமணப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௧௨௫

விண்டு சடக்கரமனுட்டித்தபடலம்.

பண்டொரு காலந் தனிப்பாற்கட லரவப் பள்ளி
விண்டுகண் டுயிலும் போதவ் விண்டுவின் காதி னின்று
மண்டிய மதுகை சான்ற மதுகயி டவரென் னண்டர்
வண்டாக ளிடுக்க ணூட்ட வசுரர்கள் டோன்றி னாரே

(இ - ள்.) முன்னொருகாலத்திலே, திருப்பாற்கடலிற் சேஷசயனத்திலே திருமால் (யோக) நித்திரை புரிகையில், அத்திருமாலின் காதுக்குறும்பியிலிருந்து பொருந்திய வலிமை மிக்க மதுகயிடவர்களென்று, தேவர்களிடுக்கணடையும்படி இராக்கதர்கள் பிறந்தார்கள். எ - று.

இடுக்கணுறுதல் துர்ச்சகுனமாதலின் மதுகயிடவர்கள் தோன்றியபோது அமரர்க்கு அஃதாயிற்றென்பார் "அண்டர்களிடுக்கணூட" என்றார். (௧)

வேறு

வெருக்கு விழியு மிடிக்குரலும் வெருக்கொ ளருவும் பிறையெயிறுந்
திருக்கி விடுத்த முகமயிருங் செங்குஞ் சியுநன் றுடையவராய்த்
தருக்கி யுறங்கு நெடுமாயன் றனையு நிந்தித் தருந்தவத்தி
லிருக்கு முனிவர் பெரியவர்க ளெல்லா ரமையு மவமதித்தார்.

(இ - ள்) பூனையின் கண்போன்ற கண்களும், இடியொலிபோன்ற குரலும், (கண்டோர்) அச்சங்கொள்ளத்தக்க தேகமும், பிறைச்சந்திரன்போன்ற (வளைவாகிய) தந்தங்களும், முறுக்கிவிட்ட முகமயிரும், சிவந்த தலைமயிரும், (ஆகியவிவற்றை) நன்றாக அமைந்தவர்களாய், (அவ்வசுரர்கள்) இறுமாந்து துயிலபுரியும் நெடிய திருமாலையு நிந்தித்து, அரிய தவஞ்செய்கிற பொருந்தியிருக்கும் முனிவர்கள் பெரியோர்கள் முதலிய யாவரையும் அவமதித்தார்கள் எ - று.

வெருகு - பூனை. பிறையெயிறு - வக்கிரதந்தம். குஞ்சி - ஆண்மகன் தலைமயிர். நெடுமாயன் - திரிவிக்கிரமாவதாரங்கொண்டு நெடுகிய விண்டு. (௨)

வடிக்கு மறையி னெறியொழுக்க மாறியப் புவியி னுயிர்லைந்து
முடிக்கு முடிவைத் தும்பருலகினை முடியா தமரு மிமையபரை
யடிக்க நினைந்தவ் விருவரொரு மலர்மீ திருக்கு மென்னைமுன்னர்ப்
பிடிக்க வடுத்தா ரவர்க்கஞ்சிப் பேதுற் றருவங் கரந்தேனல.

(இ - ள்) தெளிய வைதிகமார்க்கத்தில் நடத்தலை மாறுபடுத்தி, உலகிலுள்ள பிராணிகளைத் துன்புசெய்து சிரத்துக்கு முடிவுசெய்து, யாவராகிய (தேவ) லோகத்தில் இறவாதிருக்குந் தேவர்களைத் துன்புசெய்யக்கருதி, அந்த (மதுகயிடவர்கள்) இருவரும் முதலிலே தாமரைமலரின்பேரில் வசிக்கும் என்னைப் பிடிக்கும்படி நெருங்கினார்கள் (யான்) அவர்களுக்குப்பயந்து மதிமயக்கமடைந்து என் வடிவை மறைத்தேன் எ - று.

பேதுறல் - புத்தி மயங்கல். (௩)

உருமுக் குரல்வேங் கையினகம்போ லுருக்கொள் பகன்றை மலர்த்தொ
மருமக் குரிசின் மதக்களிற்று வானப் பெருமா னருளாற் [டையன்
கருமைக் கடல்போ னிறத்தவரைக் கமலத் தடங்கட் புயல்வண்ண
னிருமைப் பயனுங் கெடவழிக்கு மென்று திருப்பாற் கடலடுத்தேன்.

(இ - ள்) இடிபோன்ற குரலொலியையுடைய புலியினகம்போலுருக்கொண்டுள்ள கொன்றைமலர்மாலையையணிந்த திருமார்பையுடைய தலைவராகிய மதம்பொழியும் யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளது திருவருளால், கருங்கடல்போலும் நிறமமைந்த மதுகயிடர்களை, பரந்த தாமரைமலர்போலுங் கண்களையுடைய மேகவண்ணனாகிய திருமால் (அவர்களது) இருமைப்பயனுங் கெடும்படி யழிப்பாரென்று திருப்பாற்கடலையடைந்தேன் எ - று.

உருமுக்குரல் வேங்கையினகம்போ லுருக்கொள்பகன்றையென்றது புலிநகக்கொன்றை இது புலிக்கொன்றையென்றும், கிலுகிலுப்பையென்றும் வழங்கும். உருமுக்குரலென்றது வேங்கைக்கு விசேடணம். (௪)

உறங்கு மலரை யிடையெழுப்ப வுயர்மா மறையோ தாமையினுன
மறங்கொ ளரிக்கு மரவணையின் மலர்க்கண் படுக்கு நெடுமாயன

றிறங்கொப் பளிக்கு நித்திரையாந் தேவி யவனை விட்டொழிய
வறங்கொண் மனத்து வியாதனென் றுமக்கு ளவழுத்தினேன்.

(இ - ள்.) தருமநெறி பொருந்திய மனமுடைய வியாதமுனிவனே! நித்திரை செய்யும் அத்திருமாலைத் துயிலுணர்த்த உயர்வாகிய சிறப்பமைந்த வேதமோதாமை யினாலே, வனமைமிகுந்த சேடசயனத்தில் தாமரைபோன்ற கண்கள் துயிலுந் திருமாலின் திறமிக்க நித்திரையாகிய தேவியானவள் அவரைவிட்டு விலகும்படி (அவளைநான்) துதிசெய்தேன் எ - று (௫)

சாவித் திரியாய்ச் சந்தியாய்த் தக்க சுவாகா சுவதாவாய்ப்
பாவித் திடுமுத் தொழிலாகிப் பண்ணு வோராய்ப் பாரப்பதியாய்
மேவுற் றிடுநற் கலையாதி வெவ்வே றுணர் காலமாய்
யாவித் தயருமப் பசிதாக மாகிப் பரையா மாமாயி

(இ - ள்) சாவித்திரியாகியும், சந்தியாகியும், தக்க சுவாகாவாகியும், சுவதாவாகியும், வழங்குகின்ற முத்தொழில்களாகியும், (அவற்றைச்) செய்பவர்களாகியும், பாரப்பதியாகியும், பொருந்திய நல்ல கலைமுதலிய வெவ்வேறு வகைப்பட்ட காலமாகியும், கொட்டாவிவிட்டு இளைப்படையச்செய்யும் பசிதாகமாகியும், பரையாகியுமுள்ள மகாமாயியே! எ - று.

சாவித்திரி முதலியன சத்திவிசேடங்கள் சுவாகா சுவதாவென்பன மந்திர விசேடங்கள் கலையாதி வெவ்வேறான காலமென்றது பரமாணு இரண்டுகொண்டது அணு அது மூன்றுகொண்டது திரிசரேணு அது மூன்றுகொண்டது ஏடி அது மூன்று கொண்டது வேதை. அது மூன்றுகொண்டது லவம் அது மூன்றுகொண்டது நிமிஷம். அது மூன்றுகொண்டது கலை அது ஐந்துகொண்டது காட்டை அது பதினைந்து கொண்டது லகு. அது பதினைந்துகொண்டது கன்னல் அல்லது கடிகை அது இரண்டு கொண்டது முகூர்த்தம் அது பதினைந்துகொண்டது பொழுது அது இரண்டுகொண் டது நாள் அது பதினைந்துகொண்டது பட்சம் அது இரண்டுகொண்டது திங்கள் அது இரண்டுகொண்டது இருது. அது மூன்றுகொண்டது அயநம் அது இரண்டு கொண்டது ஆண்டு என்றுசொல்லப்படும். ஆண்டு அல்லது வருடம் நூறுகொண்டது மானுடர் ஆயுள்காலம் மேற்கூறிய மானுடநாள் முப்பதுகொண்டது தென்புலத் தோர்க்கு ஒருநாள் அவ்வகைத் திங்கள் பன்னிரண்டுகொண்டது தேவர்களுக்கு ஒரு நாள். அவ்வகைய நாள்கள்கூடிய ஆண்டு பன்னீராயிரங் கழிந்தால், தேவர்களுக்கோர் ஊழியாம். நாலைச்சையூழி யாயிரஞ்சென்றால், பிரமனுக் கொருபகல். இவைமுதலி யன காலவிசேடங்கள். (௬)

இருளு மிருளு மிரவாதி யிருக்கா திகளா மறையாதி
மருவுமலகி லுயிர்கடொறும் வளரா சத்திகளும் பலவாதி
பருகு மமுத மயமாதி பாவாய் நின்சீர் பகர்வாரியார்
பொருவி லாதாய்க் கினித்தடியேன் புகலப் படுவ தொன்றுளதால்.

(இ - ள்.) இருளுமிருளத்தக்க இரவாயிருக்கின்றனை இருக்கு முதலாகிய வேதங்களாயிருக்கின்றனை பொருந்திய எண்ணில்லாத உயிர்களிடத்திலெல்லாம் வளர் கின்ற பல சத்திகளாயிருக்கின்றனை பருகத்தக்க அமுதமயமாயிருக்கின்றனை. பொற் பதுமைபோல்பவளே! உன்னுடைய சிறப்பை யெடுத்துச்சொல்பவர்கள் யாவருளர்?

சமானமில்லாத உனக்கு இனிதாக அடியேன் சொல்லத்தக்கதொன்றுண்டு (அஃதென்னெனில்.) எ - று. (௭)

அரக்க ரவுணர் முதலான வரட்டர் முடிசெங் களத்துருட்டிப்
புரக்கும் பெருமா னுலகளந்த புலவர் பெருமா ளனபாகலி
துரக்கும் பெருமா னுன்வயத்தாய்த் துயில்கின் றனன்மற் றவன்விழிப்ப
விரக்கம் புரிந்து புறத்தேகா யெற்றுக் கெனினீங் குரைப்பக்கேள்.

(இ - ள்.) அரக்கர் அவுணர் முதலாகிய அரட்டர்களுடைய முடிகளைச் செவ்விய போர்க்களத்தில் உருளச்செய்து (அடியவர்களைக்) காக்குந் தலைவனும், (திரிவிக்கிரமாவதாரங்கொண்டு மாவலிபால் மூவடிமண் யாசித்து) மூவுலகங்களையும் திருவடியாலளந்த தேவராசனும், பத்தர்களுடைய துன்பங்களை யொழிக்குங் கடவுளுமாகிய திருமால் உன் வயமாகித் துயில்புரிகின்றனராதலின், அவ்விறைவன் கண்விழிக்கும்படி தயைபுரிந்து புறத்தே செல்வாயாக அஃதியாதுக்கெனின் இப்பொழுது சொல்லக்கேட்பாயாக. எ - று

அரக்கர் - இராட்சதர். அவுணர் - அசுரர் அரட்டர் - குறுநிலமன்னர்கள்; ஈண்டுக் கொடியோரையுணர்த்தியது (௮)

தொக்க தவத்தான் முற்பிறப்பிற் றோலா வரமென் பாற்பெற்றார்
மிக்க மதுகை யுடையவராய் விண்டு செவியி லிப்பிறப்பின்
மக்க ணடுங்கச் சுரர்நடுங்க வந்தார் மாயன் கரத்தன்றித்
தக்க வுயிர்சாம் பாரென்னைத் தாக்க முயன்றா ரீங்கடுத்தேன்.

(இ - ள்) மிகுந்த தவத்தினால், சென்ற சனனத்தில் தோல்வியடையாத வரத்தை யென்னிடத்திற் பெற்றவர்களாகிய மேம்பட்ட வெற்றியை யுடையவர்களாய், இந்தச்சனனத்தில், திருமாலின் காதுகளில் மானுடர் நடுங்கவும் தேவர்கள் நடுங்கவும் பிறந்தார்கள். (அவர்கள்) விண்டுமூர்த்தியின் திருக்கரங்களாலன்றித் தகுதியாகிய உயிர் கழியமாட்டார்கள் [இறவார்கள்] என்னை யெதிர்க்க முயற்சிசெய்தார்கள் (அவர்கட்கஞ்சி) ஈண்டுப் போந்தேன் எ - று (௯)

அதனாற் றிருமால் கண்படைத்த தவுண ராவி தமைச்செகுப்பக்
கதமாத் திகிரிப் படையானைக் கழன்று நீங்க வேண்டுமென
விதமா மொழியாற் றுதித்திட்ட வெனக்கன் றிரங்கி நித்திரையற்
புதமா தரவே விலகியது புருடோத் தமனு மெழுந்திருந்தான்.

(இ - ள்.) அக்காரணத்தினால் விண்டு பகவான் துயிலொழிந்து அவ்வவுணர்களுயிரைக் கொல்லும்படி, கோபம் பொருந்திய சுதரிசனமென்னுஞ் சக்கராயுதமேந்திய திருமாலைப்பிரிந்து நீ செல்லவேண்டுமென்று இத்தவார்த்தைகளால் துதிசெய்த வெனக்கு அப்பொழுது (மனம்) இரங்கி நித்திரையானது அற்புதமாக விலகிற்று புருடோத்தமனாகிய திருமாலும் (துயிலொழிந்து) எழுந்திருந்தனர் எ - று.

புருஷ உத்தமன் = புருஷோத்தமன். புருஷர்களிற் சிறந்தவனென்பது பொருள். (௧௦)

ஆய பதத்தி னவுணர்களா லலைப்புண் டமரு மந்தாருந்
தூய திருப்பாற் கடலடுத்துத் தொழுது முறையிட் டாரெடியோன்
மேய வெனைப்பாரத் திங்குப்புப் வினைந்த கருமம் யாதெனைப்
பாய பரவைத் திருப்பாயற் பகவ கேளென் றிதுசொன்னேன்.

(இ - ள) ஆகிய அந்தச்சமயத்தில் (மேற்கூறிய) அசுரர்களால் துன்பமடைந்துள்ள தேவர்களும் புனிதமாகிய திருப்பாற்கடலையடைந்து (திருமாலைப்) பணிந்து (தங்கள் குறைகளைச்சொல்லி) முறையிட்டார்கள் திருமால் (ஆங்குப்) பொருந்திய என்னைப்பார்த்து நீ யிங்குவருதற்குண்டாய காரியம் யாது? எனவினவ, பரவிய பாற்கடலிற் சிறந்த சேடசயனத்துள்ளபகவானே! கேட்பாயாகவென்றிதனை (அவருக்குச்) சொன்னேன். எ - று

பாயல் - படுக்கை. பகவன் - அறுகுணச்செல்வனே (௧௧)

வேறு

மாயை மிக்கவர் மதுகயி டவரென விருவர்
தூயை நின்செவி யழுக்கினிற் றோன்றின ரவர்க்குந்
தாயை தந்தையை யெனநினைப் பிறர்களச்சாற் றுது
சேயை யெனுமவ் ரவர்களைச் செகுத்திடா யென்றேன்.

(இ - ள) பரிசுத்தனே! மாயாசத்தி மிக்கவர்களாகிய மது கயிடவரென இரண்டசுரர்கள் தேவரீருடைய காதுக்குறும்பியிற் பிறந்தார்கள் அவர்களுக்குத் தாயுந் தந்தையுமென்று தேவரீரைப் பிறர்கூறவொட்டாமல், அன்னியனென்று சொல்லும்வகையாக அவர்களைச் சங்கரிப்பீராகவென்று (திருமாலைநோக்கிக்) கூறினேன். எ - று.

தாயை - தந்தையை—என்பவற்றில் ஐகாரங்கள் சாரியைகள் "வண்டமர் கொன்றை யான்முன் வந்துநீ யாரையென்றான்" என்றாற்போல சேயை - தூரத்திலுள்ளவன். (௧௨)

நஞ்சு மன்னதா னவர்திற முழுவது நாடி
யஞ்ச லீரென வமரருக் குரைத்தம ராகத்
தெஞ்சு துண்ணெனு நெடும்படை பலவுங்கொண் டெழுந்து
கஞ்சம் வென்றகை வலம்புரி சோதத்தினன் கனிவாய்.

(இ - ள) விடம்போன்ற அவ்வசுரர் வல்லபமுழுவது மறிந்து, பயப்படாதீர்களென்று தேவர்களுக்குக்கூறி, பகைவர்கள் மனந்துண்ணென்னத்தக்க பெரியபல்படைகளையுங்கொண்டு எழுந்திருந்து, தாமரைமலரைவென்ற திருக்கரத்திலேந்திய வலம்புரிச்சங்கத்தை (கொவ்வை) க்கனிக்குச் சமானமான திருவாயில்வைத்து எ - று,

இச்செய்யுளில் வலம்புரியென்றது பாஞ்சசன்னியம் (௧௩)

ஊழி நாளையி லாழிபோ லார்ப்பிய சங்கம்
வாழி வார்செவி நுழைதலு மதுகயி டவர்க
டாழி லாதவிவ் வலையொலி யெழுப்பிய தகையான்
பாழி யானவ னெடுபொரல் பாழியென் றெதிர்த்தார்.

(இ - ள்) ஊழிக்காலத்திலெழுகின்ற சமுத்திரம்போலக் கோஷித்த சங்கொலியானது சிறந்த நெடிய செவித்துளையில் நுழையவும், மதுகயிடவர்கள் குறைதலில்லாத விசயசங்கொலி யெழுப்பியவன் சக்கிரியானை மேம்பாடுடையவனே அவனுடன் போர்செய்தலே மேம்பாடென்று (திருமாலுடன் போர்புரிய) எதிர்த்தார்கள். எ - று.

ஒற்றை மாமலை வரவெதி ரோங்கிரு மலைபோ
யுற்ற தாமென வுவணவா கொடியனை யடுத்துக்
கொற்ற மேவிய தானவர் குவவுத்தோட் டினவு
முற்றி னேமது தீருமா முன்னினை யென்றார்.

(இ - ள்) ஒன்றியாகிய பெருமலைவருகையில், அதற்கெதிரென்று உயர்ந்த இரண்டுமலைகள் எதிர்த்தாற்போல, நெடிய கருடக்கொடியையுடைய திருமாலை நெருங்கி, வெற்றியைப்பொருந்திய மதுகயிடவர்கள் (எங்கள்) குவிவாகிய தோள்களின் தினவு தீர்ந்தோம் அஃதகலுமாறு கருதினையென்று சொன்னார்கள், எ-று.

கொடிய ரின்னணங் கூறலுங் குவலய முண்டோ
னொடிவ தாணமையே நுங்கடோட் டினவொரு காலு
மடைவ தன்றியே யடக்குது மஞ்சலி ரென்றுன்
படைவ ழங்கினா பாவமே யுருக்கொண்ட பத்கா.

(இ - ள்,) தீயோராகிய மதுகயிடவர்கள் இவ்விதமாகச்சொல்லவும், உலகமுண்ட (திருவாயையுடைய) விஷ்ணுமூர்த்தியானவர், உங்களுடைய தோட்டினவு அழிவதுண்மையே அது (மீண்டு) ஒருகாலத்திலும் வருவதல்லாம லடக்குவோம். அஞ்சாதீர்களென்றனர் பாவமேவடிவாகக்கொண்ட கீழ்மக்கள் ஆயுதங்களையுபயோகித்தார்கள். எ - று (௧௬)

கூளி வான்படைக் கொற்றவை யெழுந்துகூத் தாட
வாளி தூர்ப்பர்கண் மாற்றுவர் வச்சிர மெறிவா
ராளி யேறென வார்ப்பர்க ளயிலெறிந் திடுபவா
தூளி போர்த்தெழச் சுற்றுவர் வாளமர் தொடங்கி

(இ - ள்) கூளிகளாகிய பெரிய சேனையையுடைய துர்க்காதேவி (களித்து) எழுந்து நடிக்கும்படி அத்திரங்களைச் சொரிவார்கள், (பாணங்களை) விலக்குவார்கள், வச்சிரத்தை வீசுவார்கள். ஆண்யாளியைப்போல ஆரவாரிப்பார்கள், வேற்படைகளை யெதிர்ச் செலுத்துவார்கள், வாட்போர்செய்யத் தொடங்கித் தூளிபோர்த்தெழும்படி (வலசாரியிடசாரியாகச்) சுற்றுவார்கள் எ - று.

கூளி - கழுகு, பூதம் (௧௭)

அண்டம் வாய்விட் வடுக்கல்க ளகநெகிழ்ந் துடையத்
தொண்ட லீருக்க குணாகடல் வரம்பினைக் கடப்பத்
தண்ட மேந்தின ரெதிரெதிர் தாக்குபு பாசங்
கண்டு நேருற வீசுவா கடிவாகைப் படையால்.

(இ - ள்) அண்டமானது வெடிபடவும், மலைகள் உள்ளுருகியுடைபடவும், மேகங்கள் (சூல்கொண்ட) நீரைச்சிந்தவும், ஒலிக்கின்ற கடலானது தன் எல்லையைக்

கடக்கவும், தண்டாயுதமேந்தினவர்களாய எதிரெதிரே யடித்துக்கொண்டு பாசத்தைக் கொண்டு நேர்நேராகக் கட்டுவார்கள் கையிலுள்ள ஆயுதங்களால் அறுப்பார்கள் எ-று.

முடியை யன்னதான் மொய்ம்மபமா தோளினை யதனுங்
கடிகொள் மார்பினை யன்னதாற் கவானை மற் றதனு
லடியை யன்னதா லங்கையை யங்கையாற் றாக்கிப்
படியி லாதமற் போரையும் பன்முறை புரிந்தார்.

(இ - ள்.) முடியை முடியாலும், வலியமைந்த தோளைத் தோளாலும், மணமமைந்த (மலர்மாலையணிந்த) மார்பை மார்பாலும், தொடையைத் தொடையாலும், அடியை யடியாலும், உள்ளங்கையை யுள்ளங்கையாலுமடித்து, எல்லையில்லாத மற்போரை யும் பலமுறை செய்தார்கள் எ - று.

கடிகொள் மார்பு - அழகிய மார்பெனினுமாம். அங்கை = அகம்கை இது "அகமுனர்ச்செவிகை வரினிடையன கெடும்" என்றுஞ்சூத்திரத்தால்முடிந்தது. (௧௯)

இன்ன வாறமா பன்னெடுங் காலமேற் றியற்றிப்
பொன்னை மார்பகத் திருத்திய பொன்னனுடைய பெருமா
னன்ன தானவர்க் காற்றில னுடைந்துகந் தருவ
னென்ன வேகரந் தெய்தினு னிருங்கயி லாயம்.

(இ - ள்) இவ்வகையாக அநேககாலமாயி லெதிர்த்துப் போர்செய்து, திருமகளை மார்பிற் பொருத்திய பொன்னுடையணிந்த திருமால், அம்மசுரர்களுக்கு ஆற்றாதவராகி யுடைந்தோடி கந்தருவனென்று சொல்லும்படி மறைந்து, பெரிய கயிலாயகிரிக்குச் சென்றனர். எ - று.

பொன் உடை - பீதாம்பரம். கந்தருவர் மாயாவித்தையில் வல்லவராதலின் அவரைப்போலப் மறைந்தனரென வுவமித்தார். (௨௦)

வெள்ளி யங்கிரிச் சாரலின் விரிமலர்ப் பொதும்பர்
ருள்ளி ருந்திடந் தழுவியா ழுறுநரம் புளர்ந்தான்
றெள்ளு மின்னிசைத் திவவியாழ்த் தலைவருக் கிடமாய்
நள்ளி ருஞ்செவி யேறலு நாதனு ரறிந்து

(இ - ள்) அழகிய வெள்ளிமலைச்சாரலில் விகசித்த மலர்கள் பொருந்திய சோலையிலிருந்து, வீணையிற்பொருந்திய நரம்புகளை யிடம் வகை முதலியன வுணர்ந்து தைவந்தனர். தெளிந்த இனிய இசையையுடைய நடவத்தக்க யாழ்வல்லோருக்கு இடமாகிக்குளிர்ந்த பெரிய (குண்டலமணிந்த) செவிகளில் நுழையவும் சிவபெருமானுர் அதனை யுணர்ந்து எ - று.

இதுமுதலிரண்டு பாடல்கள் குளகம். (௨௧)

பிருட்டி தந்தனை நிகும்பனை யழைத்திரும் பிரச
மருட்டு மெல்லிசை யாழெழூஉம் வானவ னுளியா
விருட்ட னுக்குச்செங் கவுத்துவ மார்பின னென்னுத்
தெருட்டி மற்றவற் கொணர்கெனச் செப்பினா ரிடத்தார்.

(இ - ள்) பிருட்டிதந்தனையும் நிகும்பனையும் விளித்து, பெரிய தேனமணத்தை மயக்கிய மெல்லிய இசையையுடைய வீணை வாசிக்குந் தேவன், பிரகாசத்திறுவ்

இருளை யொழிக்குஞ் செவ்விய கவுத்துவாபரணமணிந்த மார்பையுடைய திருமாலை யன்றுணர்த்தி, அத்திருமாலை யழைத்துவருகவென்று கூறியனுப்பினர். எ - று.

பிரசமருட்டும் மெல்லிசையென்றது வீணைவாசிக்குமிடத்தில் எழுந்தமயும் எழிசையுமாகிய ச ரி க ம ப த நி யென்பவை இவையே குரலுழைதத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரமென்பபடும் இவற்றுள் மிடற்றாற் குரல் நாவினாற் றுத்தம் அண்ணத்தாற் கைக்கிளை சிரத்தாலுழை நெற்றியா லிளி நெஞ்சால் விளரி மூக்கானாரமெனப் பிறக்கும் இவற்றிற்கோசை யுவமை முறையே மயில் இடபம் ஆடு கொக்கு குயில் குதிரை யானையென்றும், சுவை யுவமை பால் தேன் கிழங்கு நெய் ஏலம் வாழை மாதுளங்கனியென்றும், வாசனை யுவமை முல்லை முல்லை நடம்பு குருந்து நெய்தல் பொன்னாவிரை புன்னையென்றுங் கூறுவதுமுதலிய பிறவிசை நூலுட்கண்டுகொள்க

கிருத்தி மத்தகலை யோரது கேட்டுட னேகி
மருத்தகு துழாய மார்பமுப் புரமொரு நொடி வளைவி
னுருத்த வெம்பிரான் விளித்தன னென்றனர் நேர்ந்து
கருத்தினு முந்தின னெடியவன் காமரு கோயில்

(இ - ள்) பூதகணத்தலைவர்கள் அதனைக்கேட்டு உடனே சென்று, மணங்கொண்ட பசிய துளவமாலையணிந்த திருமார்பையுடைய விஷ்ணுமூர்த்தியே! திரிபுரங்களை ஒரு நொடிப்பொழுதில் சினந்தெரித்த எமது சிவபெருமான் (உன்னை வரும்படி) அழைத்தனரென்றார்கள் (அதைக்கேட்ட) திருமால் களிப்புற்று மனத்திலும் முற்பட்டு அழகிய திருக்கோயிலையடைந்தனன் எ - று. (உஅ)

காவ னந்தியைக் கைதொழு திறைஞ்சியுட் புகுந்து
தேவ நாயகன் றிருமுனம் பொருந்து வணங்கி
போவி லாவருள் பெற்றன னொருமருங் கிருந்து
தாவி லாச்சுருதி யிருந்தயாழ் தன்னைத் தொடங் கினனே

(இ - ள்) காவலாகவுள்ள திருநந்திதேவரைக் கைகூப்பிப் பணிந்து (திருக்கோயிலின்) உள்ளேபுகுந்து, தேவர்கள் வணங்கிய சிவபெருமான் திருச்சந்நிதியிற்சென்று திருவடிகளைப் பணிந்து, கெடுதலில்லாத கிருபாகடாக்ஷம் (அருளைப்) பெற்று, ஒருபக்கலிலிருந்து, குற்றமில்லாத சுருதியில் (ஏற்றி) இருந்த வீணையை (மீண்டும்) வாசிக்கத்தொடங்கினர் எ - று. (உகூ)

வேறு.

பிள்ளை மதியணிந்த பெம்மான் றிருவடியை
யுள்ளு மவர்கட் குறுதபொரு ளுண்டோ
மெள்ள நறுநெய் விழைந்து விளக்குந்துங்
கள்ள வெலியுங் கடலுலகங் காத்ததே

(இ - ள்) இளஞ்சந்திரனை யணிந்த தலைவர் (ஆகிய தேவரீருடைய) திருவடியைக் கருதுபவர்களுக்குக் கிடையாத பொருளுள்ளதோ? நல்ல நெய்யை (பருக) விரும்பி மெல்ல விளக்கைத் தூண்டிய களங்கமுடைய எலியும் (மாபலிச்சக்கரவர்த்தியாகி) கடல்சூழ்ந்த உலகத்தை யிரட்சித்ததே. எ - று.

கள்ளவெலியுங் கடலுலகங் காத்ததாவது—திருமயோகரப்பள்ளியெனுஞ் க்ஷேத்திரத்திலே சிவசந்நிதியி லெரிந்துகொண்டிருந்த நெய்விளக்கு இருண்டிருந்தசமயத்

தில் அத்தக்ஷியிலிருந்த நெய்யையக்குடிக்கும்படி ஒரு எலி சென்றவாயை யதிலவைக்க அத்திரி தூண்டப்பெற்று ஒளிர்விக்கச்செய்த அக்குறை சிவபெருமான் களித்து அதனை யரசனுமாறருள், அது மாபலிச்சக்கரவர்த்தி யாயதென்பதாம் (உரு)

ஆத்தி யணிந்த வமலன் றிருவடியை
யேத்துபவர்க் கிடையாப் பொருளுண்டே
சாத்திய வில்லைக் கணக்குத் தளர்முசுவு
மூத்த வழியின் முசுகுந்த னுயமே.

(இ - ள்.) ஆத்திமலர் மாலையணிந்த மலரகிதர் (ஆகியதேவரீருடைய) திருவடியைத் துதிசெய்பவர்களுக்குக் கூடாத பொருளும் உள்ளதோ? (அறியாமற) சாத்திய வில்வக்கிளைகளுக்காகத் தளர்நடையுடைய ஓர் முசுவும் மேம்பட்ட மதிநுட்பமுடைய முசுகுந்தனென்னும் சக்கரவர்த்தியாயதே எ - று.

முசு - ஓர்வகைக்குரங்கு

வில்வந்தனக்கு முசுவு முசுகுந்தனாயது என்றது—ஓர் காலத்தில் கைலாயகிரியில் ஓர் சோலையில் சிவபெருமான் பார்வதிதேவியோடு மெழுந்தருளி யிருக்கையில் ஒரு ஆண்முசுவானது பரமசிவன் மேலும் பார்வதிதேவியார் மேலும் வில்வபத்திரத்தைப் பறித்துப்போட, சிவபெருமான் அது தன்னைப் பூசித்ததற்காகக் களித்து ஓர் சக்கரவர்த்தியாகும்படி வரமளிக்க, சோழவம்சத்தில் முசுமுகத்துடன் கருவூரை இராசதானியாகக்கொண்டு முசுகுந்த சக்கரவர்த்தியாகியது என்பதாம் (உசு)

பேயினத்தோ டாடும் பெருமான் றிருவடியைக்
காயமுறத் தாழ்வோர்கள் காணாப் பொருளுண்டே
வாயிலையார் கோயில் வகுத்த சிலம்பியுமோர்
தூயகுலச் சோழனாய்த் தொல்லுலகங் காத்ததே

(இ - ள்) பேய்க்கூட்டங்களுடனே நடிக்கும் இறைவர் (ஆகியதேவரீருடைய) திருவடியை உடல் (பூமியிற்) பொருந்தப் பணிபவர்கள் பாராத பொருளுமிருக்கின்றதோ? (இல்லையாம்) பொருந்திய இலையினாலே கோயில் கட்டிய சிலம்பிப்பூச்சியும் ஓர் புனிதமான குலத்திற் றோன்றிய சோழராசனாய்ப் பழமையாகிய பூமியை யிரட்சித்ததே எ - று

இலையினாற் கோயில்கட்டிய சிலம்பி சோழனாயது என்றது - திருவானைக்காவிற் சிவலிங்கப்பெருமானெழுந்தருளியிருந்த விடத்தில், ஓர் சிலம்பிப்பூச்சி தன் நூலாற் கோயிலிழைத்திருந்ததாகக்கண்டு சிவபெருமான் திருவருள்புரிய அது கோச்செங்கட்சோழனாய் அரசுபுரிந்ததென்பதாம் (உஎ)

வேறு

என்றேத் துறும்பெருமா
னின்றாள் வாழ்த்தியென
வனமா லியமங் குளிரத்
தனதுள் ளுறைதா முரவோன்

(இ - ள்.) என்று (திருமால் வீணையொலியால்) துதிசெய்யவும், எமது தலைவராகிய சிவபெருமான், (விண்டுவே!) உன் விருப்பம் (இன்னதென) உரைக்கவென வினவ, வனமாலியாகிய திருமால் மனமகிழ்ந்து, தன் கருத்தைக் கூறுவாராயினர் எ - று

வனமாலி - துளவமாலை யணிந்தோன்
குளிரா - செய்யாவென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். (௨௯)

ஒருவர் னொருவென செவியி
லிருதா னவரெய் திமிகப்
பொருதா ரவர்போ ரிடைநான்
வெருவா மையைவிட் டனனே

(இ - ள்.) (மூவுலகங்களிலும்) ஒப்பற்ற தலைவனே! ஒப்பற்ற வென் காதுக் குறும்பியில் (மதுகயிடவரென்னும் பெயரையுடைய) இரண்டசுரர்கள் (யாதுகாரணத்தாலோ) தோன்றி, (பலரையும் வதைத்து இறுதியில் என்பால் வந்து) மிகுதியும் போர்செய்தார்கள் அவர்களோடு செய்யும் யுத்தத்தில், அடியேன் (பிறரிடம் போர் செய்கைபோல நில்லாது) அஞ்சாமையை விட்டுவிட்டேன் [பயந்தேன்] எ - று

முத்தா முனையார் செருவி
லத்தா னவரா வியுணா
வைத்தேன் மனமாண் டவலி
யைத்தா வெனவேத் தினனே

(இ - ள்) முத்தனே! (சயம் அபசயமென்னு மிரண்டுக்கும்) துணிவு பொருந்திய போர்செய்கையிலே, (மதுகயிடவரென்னும்) அவ்விரண்டசுரர்களுடைய உயிரைப் பருகும்படி (என்னுள்ளத்தில்) கருத்துக்கொண்டேன் (அஃதங்ஙனமே நிறைவேறுவதாக) மனத்தால் அளவிடப்படாத வல்லபத்தைத்தருக என்று (திருமால்) துதி செய்தனர். எ - று (௩௦)

வேறு

கொன்றையின் மலரேய்ந்த கொற்றவ ரருள்செய்வார்
மன்றலந் துளவோய்நீ வன்சமர்க் குறுங்காலை
வென்றியங் குசமேந்தும் விநாயகன் வழிபாட்டி
னொன்றினை யிலையதனா லொன்னலர்க் குடைந்தனையால்.

(இ - ள்.) கொன்றைமலரை யணிந்த வெற்றிபொருந்திய சிவபெருமான் அருளிச்செய்கின்றார்: மணம்பொருந்திய அழகிய துளவமாலையணிந்த திருமாலே! நீ வன்மைதங்கிய போருக்குச்செல்லுங்கையில், வெற்றிபொருந்திய அங்குசத்தைத் (திருக்கரத்துத்) தாங்கிய விநாயகக்கடவுளை வழிபாடுசெய்யாதவனாயினை அக்குற்றத்தினால் சத்துருக்களுக்குத் தோல்வியடைந்தனை எ - று (௩௧)

பாசமங் குசமேந்தும் பண்ணவன் வழிபாட்டி
னேசமுற் றினியந்த நேரலார்த் தமையென்று
மாசறு மொளியோடு வாழ்குதி மணிவண்ணா
தேசவிர் வழிபாடுஞ் செப்புது முறக்கேளாய்.

(இ - ள்.) பாசாங்குசங்களை (திருக்கரத்தில்) ஏந்திய விநாயகக்கடவுளை வழிபடுதலில் விருப்புவைத்து, இனி அந்த (மதுகயிடவரென்னும்) பகைஞரைச் சயித்து, குற்றமற்ற கீர்த்தியோடு வாழக்கடவாய் மணிவண்ணனாகிய விண்டுவே! ஒளிவிளங்கும் (அவ்விநாயகக்கடவுளுடைய) வழிபடுதலையும் (முறைப்படி) சொல்லுவோம். பொருந்தக் கேட்பாயாக எ - று. (௩௨)

சிந்தூர மொளிர்மேனிச் சிந்தூர முகர்செம்மன்
மந்திரம் பலவுள்ளு மாயவ நினக்கொத்த
மந்திர மெழுத்தாறு வருமனு வாமதனைச்
சிந்தையின் மகிழ்கொள்ளச் செப்புது நின்செவியில்.

(இ - ள்) மாயனே! சிந்தூரம்போற் (சிவந்து) பிரகாசிக்குந் திருமேனியையுடைய யானைமுக விநாயகக்கடவுளது பல மந்திரங்களிலும் உனக்குத் தகுதியான மந்திரம் ஆறெழுத்துக்களாய் வரும் மந்திரமாகும் அதனை நீ மனத்திற் களிகொள்ளும்படி உன் செவியி லுபதேசிப்போம் எ - று.

எழுத்தாறுவரு மனு - சடக்கரமந்திரம் (௩௩)

வேறு

கங்கையிற் படிந்து மாயன் கடுகவ மென்றுகூறி
யங்கவ னேய்ந்து நண்ணு வாகம முறையாற் றிக்கை
மங்கலந் தழையச் செய்து வக்கிர துண்டற் கோதை
தங்குமா றெழுத்தை யோதி யனுட்டிப்புஞ் சாற்றி னானே.

(இ - ள்) மாயைகளையுடைய விண்டுவே! சிவகங்கையில் மூழ்கி விரைவில் வருகவென்று திருவாய் மலர்ந்தருளி, திருமால் அவ்வகையே ஸ்நானஞ்செய்துவர, ஆகமவிதிப்படியே மங்கலமிகும்படி தீக்கையியற்றி, வக்கிரதுண்டராகிய கணேசப் பெருமானுக்கு அன்புபொருந்திய சடக்கரமனுவை யுபதேசித்து அதனை யநுட்டிக்கும் வகையையுந் திருவாய்மலர்ந்தருளினார் எ - று.

மாயன் - அண்மைவிளியாதலி னியல்பாயிற்று (௩௪)

அண்ணலா ரருளிச்செய்த வருட்கலை கொண்டு தாழ்ந்து
மண்ணெலாம் வாரி யுண்ட மாதவன் விடைபெற் றேகித்
திண்ணமா ரன்பி னோடு சித்திசேத் திரத்தை வல்லே
நண்ணியாங் கிருந்து நாளு நன்மனுக் கணித்தல் செய்தான்.

(இ - ள்) உலகமுழுவதையும் வாரிப்புசித்த திருமால் சிவபெருமானார் திருவாய்மலர்ந்தருளிய திருவருட்டிறத்தைச் சிரமிசைக்கொண்டு பணிந்து, (இறைவர்பால) விடைபெற்றுச்சென்று, உறுதியாகிய அன்புடன் சித்திசேத்திரமென்னு மிடத்தை விரைவாக வடைந்து அவ்விடத்திற்பொருந்தி, நல்ல சடக்கரமந்திரத்தைக் கணிப்பாராயினார் எ - று. (௩௫)

பூம்புனல் படிந்து பூதி திருவுருப் பொலியப் பூசி
யோமமுமந் திரத்தைச் சொல்லி யுறையிடஞ் சுத்தி யாகச்
சேமமுன் லங்கை தன்னாற் புரோக்கணஞ் சிறப்பச் செய்து
சாப்பிய வேங்கைத் தோன்மேற் றவளவத் திரமு மிட்டு.

(இ - ள்) பொலிவாகிய நீரில் மூழ்கி, திருமேனியானது அழகுறும்படி திருவெண்ணீற்றை யுத்தூளனஞ்செய்து, காகத்தக்க மந்திரத்தைச் சபித்து, வசிக்கு மிடஞ் சுத்தியாகும்படி மதுரமாகிய நீரை அழகியகையினாற் சிறப்பாகப் புரோக்கணஞ் செய்து, குவிந்த புலித்தோலின்மேலில் வெண்மையாகிய ஆடையை விரித்து எ - று.

புரோக்கணம் - தெளித்தல் (௩௬)

வடகிழக் கென்னுந் திக்கு வத்திர னாகவைகிக்
கடகரிப் பாகன் போலக் கதழ்பொறி யைந்து மோம்பி
யிடவிய புறமு முள்ளு மிருபத்து மூப்பத் தொன்று
மடைவுற நிசித்துப் பூத மாதியுஞ் சுத்தி செய்து.

(இ-ள்) வடகிழக்காகிய ஈசானதிக்கிலே முகமமைத்தவராக இருந்து, மதத்தையுடைய யானைப்பாகன் (அதையடக்குவது) போல வேகமாகிய ஐம்பொறிகளையும் (புறஞ்செல்லாது) காத்து அகன்ற புறம்பும் உள்ளும் ஐம்பத்தோரெழுத்துக்களை நியாசஞ்செய்து, பூதமுதலியவற்றைச் சுத்திசெய்து எ-று (௩௭)

மூலமா மனுவை யுன்னி முற்றுறப் பிராணா யாமஞ்
சாலவே யியற்றி யுள்ளந் தழைதரத் தியானித் தின்பச்
சீலமார் கணேசன் றன்னைத் தேவர்கட் கிறையை யன்பாற்
கோலிய வாக னாதி பத்தினுங் கொளப்பூசித்து.

(இ-ள்) சிறந்த மூலமந்திரத்தைத் தியானித்து, முடிவாகப் பிராணயாமத்தை மிகுதியாகச்செய்து மனமானது தழைக்கும்படி தியானஞ்செய்து, (தம்மைப் பணிவோரிடத்து) இன்பமுறுஞ் சீலமும்பொருந்திய கணேசப்பெருமானாகிய தேவர்களுக்குத் தலைவனை அழகியவாகனமுதலிய பத்தினுங் கொள்ளும்படி பூசித்து எ-று

மந்திர மான வாறு வன்னமும் வருட நூறு
பிந்துறக் கணித்த லோடும் பிறைமருப் பொழுகு தானச்
சிந்துர முகவன் றோன்றித் தெரிசனங் கொடுத்தா னாகச்
சுந்தர நெடுமா லுழந்து சூழ்ந்துகைத் தொழுது நின்றான்.

(இ-ள்) மந்திரமான சடக்கரங்களையும் விந்துவுடன் பொருந்த நூறுவருடகாலங் கணித்தவுடனே பிறைச்சந்திரனைப்போன்ற தந்தத்தையும் ஒழுகுகின்ற மதத்தையுமுடைய யானைமுகக்கடவுள் ஆங்கெழுந்தருளித் தரிசனங்கொடுத்தனராக, அழகிய விண்டுபகவான் (அவரைக் கண்டவுடனே) பணிந்து பிரதக்கணஞ்செய்து கைகூப்பி நின்றனர் எ-று. (௩௯)

நின்றவன் முகத்தை நோக்கி நிமல னருளு முன்பே
யொன்றநம் பூசை யாற்றி னொன்னல ரெதிர்ந்த போரின்
வன்றிற லுடைவ தின்றே மற்றது கிடக்க மாய
வின்றுனக் கெய்த வேண்டிற் றியம்புதி தருது மென்றான்.

(இ-ள்) (அவ்வாறு) நின்ற திருமாலின் முகத்தைப்பார்த்து அமலராகிய கணேசப்பெருமான் அநுக்கிரகஞ்செய்கின்றார்: பொருந்த நம்முடைய பூசையை முன்னரே செய்திருந்தால் நீ சத்துருக்களை யெதிர்த்த யுத்தத்தில் வலியவல்லபங் கழிவதில்லையே? அஃதிருக்க விண்டுவே! இப்பொழுது உனக்கு அடையவேண்டியதைக் கூறுக (அதனைக்) கொடுப்போமென்று கூறினார் எ-று (௪௦)

சிறுமதி யொளிர்ந்த வேணிச் சிந்துரக் கடவுள் கூற
மறுவறும் வணங்கிக் கண்ணன் மலர்க்கைவாய் புதைத்துச் சொல்வா
னறுவினைக் கற்பகத்தை நண்ணினோர்க் குரவு முண்டோ
விறைவனை யெதிரே கண்ட வெனக்கொரு குறையு முண்டோ.

(இ - ள்) இளஞ்சந்திரன் பிரகாசிக்குஞ் சடையையுடைய யானைமுக விநாயகக்கடவுள் (இவ்வாறு) அருளிச்செய்ய, விண்டுமூர்த்தி மீண்டும் ஆராப்பணிந்து தாமரைமலர்போன்ற கையால் வாயைப்பொத்திச் சொல்லுகின்றார்: நல்லமணம்பொருந்திய கற்பகத்தருவை (ஒருவர்) அடைந்தால் அவர்க்குத் தரித்திரமுமுளதோ? (இல்லை; அதுபோல்) எமது கடவுளை நேரே தரிசித்த அடியேனுக்கு ஒருகுறைபாடிருக்கின்றதோ? (இல்லை) எ - று (௬௧)

ஆயினு மடியேன் றுஞ்சு மளவிலென் செவியின் வந்த
மாயிரும் புவன மஞ்சு மதுகயி டவரைக் கொல்லப்
பீடுயர் மதுகை வேண்டும் விளம்பிய விவரே யன்றித்
தீயமற் றெவரே யேனு மென்கையா லிறக்க வேண்டும்

(இ - ள்) ஆயினும், அடியேன் துஞ்சும்பொழுது என்செவியினின்று பிறந்த, சிறந்தபெரிய உலகமுழுவதும் அஞ்சத்தக்க மதுகயிடவர்களைக் கொல்ல மிகச் சிறந்த வல்லபம்வேண்டும் (எண்டு) கூறிய இவர்களையல்லாமல் கொடியோர் எவர்களானாலும் (என்னையெதிர்த்தால்) என்கையால் இறக்கவேண்டும் எ - று (௬௨)

கடையனேற் குன்பா லென்றுங் கையகன் றிடாத பத்தி
யடைவதும் வேண்டுங் குற்ற மாற்றினும் பொறுத்தல் வேண்டு
முடையவ வென்றுன் கேட்ட வும்பன்மா முகத்து வள்ள
றொடைசெய்பல் வரமு நல்கிச் சூழ்ந்துமே லிதுவுஞ் சொன்னான்.

(இ - ள்) (என்னையடிமையாக) உடையவரே! கீழ்மைப்பட்ட வெனக்குத் தேவரீரிடத்தில் எப்பொழுதும் நீங்காத பத்தியுண்டாயிருத்தலும் வேண்டும் (அறியாமையால்) குற்றஞ்செய்தாலும் (தேவரீர் திருவுள்ளம்) பொறுத்துக்கொள்வதும் வேண்டுமென்று கேட்டனர் (அதனைத்) திருச்செவியேற்ற சிறந்த யானைமுக வள்ளலாகிய கணேசப்பெருமான் தொடர்ச்சியாகவுள்ள பலவரங்களையுமருளி மேலே யோசித்து இதனையுஞ் சொல்லினர் எ - று (௬௩)

வலிபுகழ் தேசு நெஞ்சின் மதித்தவர் முடித்தன் மற்று
நலிவற நினக்குத் தந்தா நாமவே லவுணர் பின்போ
தொலிகெழு மாயை தன்னு ளுருக்கரந் திருக்கின் றாரங்
கலிகெழு மந்திரத்தைக் கருதிச்செல் லவரைக் காண்பை

(இ - ள்) வலிமையும் புகழும் தேசும் மனத்திற் கருதியவர்களைக் கோறலும், பிறவுமாகிய வரங்களைக் கெடுதலற உனக்குக் கொடுத்தோம் அச்சத்தைத் தரும் வேற்படையேந்திய அசுரர்கள் இப்பொழுது ஒலியமைந்த மாயையினுள், தமதுருவ மறைந்திருக்கின்றார்கள் நம்முடைய ஒலிமிக்க மந்திரத்தைத் தியானித்துக்கொண்டு செல்க (அதனால்) அவரைக் காணுவை எ - று

ஒலிகெழுமாயையென்றது மூலமாயையை விசேடித்தசாம (௬௪)

என்றிவை யனைத்துங் கூறி யெம்பிரான் மறைய மாயன்
வென்றனம் பகையை யென்று விநாயகன் கழலைப் போற்றி
நன்றொளிர் பளிக்கா னான்கு வாயில்க ளுடைய கோயி
லொன்றுசெய் ததிலே ரம்ப வுருவங்க டகியி னாக்கி.

(இ - ள்.) என்றிவையாவு மருளிச்செய்து, எமது கணேசப்பெருமான் அந்தர்த்தானமாக, திருமால் (இனிப்) பகைவரை வென்றோமென்று விநாயகக்கடவுள் திருவடியைத் துதித்து நன்றாகப் பிரகாசிக்கின்ற பளிங்குகற்களால் நான்கு (திருக்கோபுர) வாயில்களையுடைய திருக்கோயிலொன்று அமைத்து, அதில் விநாயகக்கடவுளுருவைக் கண்டகியிற் செய்து (பிரதிட்டைசெய்து) எ - று

கண்டகி - ஓர் நதி. எண்டு அதிலுள்ள செந்நிறக்கற்கள். (௪௫)

திவ்விய பொருளைக் கொண்டு சிறப்புறப் பூசை யாற்றி
யெவ்வம் விட் டகலச் சித்தி யீந்தலா னம்மு ராந்திக்கு
வெவ்வினை தீர்க்குஞ் சித்தி விநாயக னெனப்பே ரிட்டா
னவ்விதி யானுஞ் சித்தி கேத்திர மாமந் தானம்.

(இ - ள்) சிறந்த உபகரணங்களைக் கையிற்கொண்டு சிறப்பாகப் பூசைசெய்து, துன்பமானது விட்டொழிய (இஷ்ட) சித்தியைக் கொடுத்தலால் அப்பெருமானுக்குக் கொடிய வினையை யொழிக்குஞ் சித்திவிநாயகரென்று திருநாமஞ்சூட்டினார். அவ்விதியினாலும் அவ்விடமானது சித்திகேத்திரமென்பதாம். எ - று (௪௬)

நாயக னெனத்தான் கொண்ட நாரணன் றனக்கு மேலா
நாயக னாகி வேட்ட நல்வரங் கொடுத்த மாண்பான
மேயவங் குசத்தி னாற்கு விநாயக னென்னு நாமந்
தூயவி ணவர்க ளெல்லாந் தொடுத்தெதிர் துதித்துத் தாழ்ந்தார்.

(இ - ள்) தானே (திதி)நாயகனென்பபெயர்கொண்ட திருமாலுக்கு மேலாகிய நாயகனாகி, அவர் விரும்பிய நல்ல வரங்களை யநுக்கிரகித்த மேம்பாட்டினால், பொருந்திய அங்குசத்தையுடைய கணேசப்பெருமானுக்கு விநாயகனென்னுந் திருநாமத்தைப் புனிதமான தேவர்கள் யாவருஞ் சேர்த்து எதிரே தோத்திரஞ்செய்து பணிந்தார்கள் எ - று

நாயகன் - தலைவன். விநாயகன் - தனக்குமேல் தலைவனில்லாதவன் இதில், வி - எதிர்மறைப்பொருட்டருவதோர் வடமொழி யுபசர்க்கம். (௪௭)

கடங்கவிழ் முகத்தி னானைக் கருத்தினு ளிருத்திக் கொண்டு
விடங்கலுழ் திகிரிச் செம்மல் வெளிக்கொடு சென்றா னாக
வடங்கலா ரான வந்த வவுணர்கள் டப்போர் வேண்டி
யுடங்குவந் தெதிரே நின்று நகைத்திது தொகுக்க லுற்றார்

(இ - ள்) மதம்பொழியும்(யானை)முகத்தையுடைய விநாயகக்கடவுளை மனதிலெழுந்தருளியிருக்கச் செய்துகொண்டு, விடத்தைச்சொரியுஞ் சக்கராயுதமேந்திய திருமால் வெளிப்பட்டுச் சென்றனராக, சத்துருக்களான அந்த மதுகயிடவர்களென்னும் அசுரர்கள் பார்த்து, மோதத்தக்க போரினை விரும்பி, ஒன்றாகவந்து நேரேநின்று சிரித்து இதனைச் சொல்வதாயினார்கள் எ - று. (௪௮)

சோர்ந்துமுன் பொருது போது சிறுமுத்தி கொடுப்பக் கொண்டு
தீர்ந்தனை நாணி லாமற் றிரும்பிவந் தனைவந் தாய்க்கே
கோர்ந்திடும் பெரிய முத்தி யுதவுதுங் கொள்க வென்றார்
பேர்ந்தெதி ரக்ரென் றெண்ணீர் பேதையீ ரென்றான் மாயன்.

(இ - ள) முன்னாககூடிய போர், நிந்தகாலத்தில, சிறமுத்தியைக்கொடுக்கக் கொணடோடியே! மீணடும் எணமின்றி(எதிரசுவாகத்னையே' அவரறு)வந்தவுனக்கு இப்பொழுது அறியததகக பெரிய முத்தியைக்கொடுப்போம! அதனையுங கொளளக கடவை! என்று கூறினர்கள ஓடியெதிரக்கின்ற ஆட்டுக்கடாவெனக கருதாதீர்கள அறிவிலிகளே! என்று திருமால கூறினா எ - று

முத்தி - திசை எணடு ஓடுதலைககுறிததது. (௩௯)

அவ்வுரை கேட்ட லொடு மழுலென வெகுண்டு மாயோய
செவவிய நானகு தோளிற சிறந்தனை யிருவே முககு
மிவவிரு தோளே யறறு மிருவா மற றொருவ னோடு
செவவின ரெனனல வேணடா செருசசெயக வென்று நோநதார்.

(இ - ள) அவ்வாரத்தைகளைக கேட்டவுடனே அககினிபோலக் கொதித்து, மாயவனே! செவவையாகிய நானகுதோளகளொடு விளங்குகின்றனை எஙகளிருவருககும இவவிருதோளகளேயானபடியால இருவா ஒருவனுடன பகையினா (போர்செய்தாரகள) என்று சொலலலவேணடுவதிலலை போரபுரிகவென றிசைநதாரகள. (மது கயிடவாகள) எ - று

இவ்விருதோள = இரணடு இரணடு தோள "ஔப தொழிததவெண்ணுன் பது மிரட்டின - முன்னதின முனனல வோட வுயிரவரின-வவவு மெயவரின வநதது மிகனெறி"எனபது சூததிரம, (௩0)

எறறுவா கதையால வேலா லெறிவரோச சுவாளை வாளாற
பறறுவா பாசம விடடுப பாறறுவ ரதனை யெஃகாற
புறறா வனைய வாளி புதைபடத தொடுபபா வீழுபபா
முறறுவா மலலுப போரின முழஙகுவா வீர வாரததை.

(இ - ள) (அவவிருவரும) கதையாலடிபபார்கள, வேலாலெறிவார்கள்,கூரிய வாளால வெட்டுவாாகள, பாசததை வீசிககட்டுவாாகள, அதனை எஃகாயுதததாலறுப்பார்கள; புறறினின்று புறபபடட சாபபஙகளைபபோனற பாணஙகளை (உடல) மறைபடும்படி பிரயோகிப்பாரகள, வீழ்ததுவாாகள, மறபோரபோல முடிபபாரகள், வீரச் சொறகளைப பேசுவாாகள. எ - று (௩௧)

இன்னண நெடும்போ ராறறு மேலவையிலெழுந்த செஙகேழ்க
கனனலைத துணித்தா லெனனக் கதமெழுசி நேமி தூணடி
யனனதா னவாக ளாவி யராவணைப பெருமா னுணடான
மினனவிா விசும்பிற றேவா விரைமலா மாரி தூாததார.

(இ - ள) இவ்வகையாகப பெரும்போா செய்கையில், எழுந்த செந்நிறமமைநத கருமபைத் துணடித்தாறபோல, சேடசயனமுடைய பெருமானாகிய திருமால் கோபததோடெரிகின்ற சுதரிசனத்தைச செலுத்தி அவவசுராகளுடைய உயிர்களைப பருகினா. மினனலை வீசுகின்ற ஆகாயததினின்று தேவாகள வாசநதஙகிய மலர்மாரி பொழிந்தாரகள. எ - று. (௩௨)

பங்கயத் தவிசின் வாழுககைப பணணவ னெனப்பட் டேனு
மஙகவ னடியிற றாழ்ந்தே னவனெனைக குணாகக லுற்றான

றுங்கவல லவுண ரோடு தொககபோா செடுநா ளாறறிய
பஙகமுற றகனறு வெளளிப பறமபிணைச சாாநது தாழநது.

(இ - ள) தாமரைமலாபபீடததில வீறறிருககும பிரமதேவனெனறு சொல்லப்பட்ட யானும அபபொழுது அவவிடததுு மூாததியின பாதஙகளிற பணிநதேன். அததிருமால எனககுக கூறததொடஙகினா நலவலியமைநத மதுகயிடவாகளுடன நெடுநாள பெருமபோா செயது (ஆதியில) அவமானமடைநது (அவ்விடமவிடடு) நீஙகி வெளளிமலை (யாகிய திருககயிலை) யை யடைநது பணிநது எ - று (௫௩)

மாடகத திவவு நலயாழ வாாநரம பமிழ்தந தேககிப
பாடகத் தளிாமென பாதப பாவையை முதலா னோாக
ளாடகத தலைவ னோடு நயநதுள மகிழநத பினனை
யேடகக கொனறை யானசொா லெரமபன மனுவுட கொணடு.

(இ - ள) முறுககாணிகளையுடைய தடவநதகக நலல வீணையினுடைய நெடிய நரமபுகளாலாகிய அமிழததகை மிகவுணடு, பாடகமணிநத மாநதளிாபோன்ற மெலலிய பாததகையுடைய உமாதேவியாா முதலானவாகள சிவபெருமானுடன விருமபி மனமகிழநதபிறகு, அகவிதழகடா பொருநதிய கொனறைமாலை யணிநத சிவபெருமான உபதேசிததருளிய விநாயகமநதிரததை மனதிறகொணடு எ - று. (௫௪)

சித்திசேகத திரததி னணணிந நீதது மனுவை யெணணி
யததிமா முகவன றோனறி யருளிய வரததா னீணடு
வைததவா ளவுண ராவி மாயததன னிநதவ லநத
வுததமன றனைப பூசை யுஞறறுதி நீயு மெனறான.

(இ - ள) சிததி கேததிரததிற சென்று, குறறமறற அமமநதிரததைத தியானஞ்செயது, சிறநத யானைமுகததைதயுடைய விநாயககடவுள பிரசனனராகி யநுககிரகிதத வரததினால, திருமபிக கூாமையாயநத வாளாயுதமேநதிய மதுகயிடவாகளெனனும அசுராகளுயிரை யழிததேன ஆனபடியால அநத உததமராகிய கணேசபபெருமானை நீயும் பூசைசெயகவெனறு கூறினா எ - று (௫௫)

செஙகணமால கூற யானுஞ சிததிகேக திரதகை யெயதி
வெஙகணவா ளரவங கொணடு வீககிய வுதரத தானைப
பொஙகுகா தலினறு பூசை புரிநதனெ னமரா தாமு
மஙகணா கணேசா மாய னமபிகை யெனையுந தாழநதாா.

(இ - ள) செவவிய (தாமரைமலாபோலும) கணகளையுடைய திருமாலுரைததலின், (பிரமனாகிய) யானும சிததிகேசதிரமடைநது, கொடுஙகணகளையுடைய வொளளிய நாகததாறசடடிய (அரைபபட்டிகை பொருநதிய) திருவயிறறையுடைய கணேசப்பெருமானை மிகக ஆசையுடன பூசனைசெயதேன. தேவாகளும சிவபெருமானும கணததலைவாகளும திருமாலும உமாதேவியாரும மறறெலலோரும (அவவிநாயகக்கடவுளைப) பணிந்தாாகள. எ - று (௫௬)

இக்கதை கேடடோாக செநத விடாகளு மகனு நனமை
தொககுறும வியாத வெனறு தோடவிழ் மலரோன சொனனு
னுககிர வேலோய காணென் றுணாததினன் பிருகு வென்போன
கைக்கொடை சிறநத சோம காநதனென் றரசற கம்மா.

(இ - ள்) வியாதமுனிவனே! இச்சரித்திரத்தைக் கேட்டவர்களுக்கு எவ்வகைய துன்பங்களும் விலகும் நன்மைகள் கைகூடும் என்று, இதழ்கள் விரிந்த தாமரைமலரில் வசிக்கும் பிரமதேவர் கூறினார் உக்கிரமான வேற்படையேந்திய சோமகாந்த மன்னனே! அறியென்று பிருகுமுனிவர் கையினால் கொடுத்தலில் மேம்பட்ட சோமகாந்தனென்னும் அரசனுக்குச் சொல்லினர். எ - று.

அம்மா - அசை (௫௭)

ஆறெழுத் தாழி யேந்தி யனுட்டித்த வாறு மீதோங்
கீறில் காதை யின்னு மியம்பென வியாதன் கேட்ட
வீறுயர் விசுவ வாமித் திரனைவெல் வீமன் சார்ந்து
பேறுபெற் றதனை முற்றப் பேசுவன் வாசக் கஞ்சன்.

(இ - ள்) சக்ராயுதமேந்திய திருமால் சடக்கர மனுவை யநுஷ்டித்த வகையையுணர்ந்தேன் நித்தியனான அவ்விநாயகப்பெருமானது சரிதங்களை யின்னுங் கூறுகவென்று வியாதமுனிவன் கேட்க, மேன்மைமிக்க விசுவாமித்திரமுனிவனை வென்றவனாகிய வீமராசன் சார்ந்து (புத்திரப்) பேற்றினை யடைந்தவரலாற்றைப் பிரமதேவர் முழுவதுங் கூறலாயினர் எ - று. (௫௮)

விநாயக சடக்கரமனுட்டித்தபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௩௩௮௬

விசுவாமித்திரனை வீமனடுத்தபடலம்.

கஞ்சப் பொகுட்டி னிரிதேறிக் கமஞ்சூல் வளையின் முத்து
மஞ்ச முயிர்த்த தனசினையு மயிர்த் திரண்டும் விரிசிறையுட்
டுஞ்சப் பொதிந்திட் டடைகிடக்குந் துறைசூழ் நறும்பூந் தடமருதம்
விஞ்ச வளர்ந்த துயர்நாடு விதர்ப்ப நாடென் றுளதாமால்.

(இ - ள்) அன்னங்கள் தாமரைமலர்க்கொட்டையில் அருமையாகவேறி, சூல் நிறைந்த சங்குகள் ஈன்று பிரகாசிக்கின்ற முத்துக்களையும், தாம் பெற்ற முட்டைகளையும் (வேறுபாடு) தெரியாமல், இரண்டையும் விரிந்த சிறகுகளுட் பொருந்தப் பொதிந்துகொண்டு அடைகாக்கும் நீர்த்துறை சூழ்ந்த நல்ல மலர்த்தடாகங்களையுடைய மருதநிலமானது அதிகரிக்க வளங்கொடுத்துயர்வுற்ற நாடு விதர்ப்பநாடென்று (ஒன்று) உண்டு எ - று. (௧)

வள்ளைச் செவியின் மடமாதர் வளைக்கு உறங்கு மலர்ப்பொழிற்பைங்
கிள்ளைப் பறழை யெழுவாளைக் கெண்டைக் குலங்கள் துயிலெடுப்ப
வள்ளிச் சொரியு மணித்தரங்க வகழி புடைசூழ் நகர்புரிசைக்
கள்ளப் பொறியாற் பகைகடக்குங் கவுண்டின னியமென் றோங்கியதால்.

(இ - ள்) வள்ளைக்கொடிபோலுஞ் செவியினையுடைய இளமாதர்கள் வளைக்கு உறங்குகின்ற மலர்ச்சோலையிலுள்ள பசிய கிளிக்குஞ்சுகளை, எழுகின்றவாளைமீன்களுங் கெண்டைமீன்களுமாகிய கூட்டங்கள் துயிலெழுப்பும்படி (அவற்றை)

வாரிச்சொரிகின்ற அழகிய அலைகள்பொருந்திய அகழியாற் புடைசூழப்பட்ட நகரம், மதிலானது (தன்னிடத்தமைந்த) வஞ்சகமாகிய பொறிகளாற் சத்துருக்களை வெல்லத்தக்க கவுண்டினனிய மென்று விளங்கியது. எ - று.

பொறி - மதிற்பொறி, சூத்திரங்கள், எந்திரங்கள் (௨)

அந்த நகரத் திருந்துலக மாளு மரசன் றவசீலன்
சந்த மறையின் முறைபிறழான் றனஞ் சொரியு மலர்க்கரத்தான்
மைந்து மிகுந்த திணிதோளான் மாறாத் தரும சிந்தையான்
வெந்த மதவே ளெழுந்தனைய விளங்கு வனப்பி னுருவத்தான்.

(இ - ள்) அந்தக்கவுண்டினனிய நகரத்திலிருந்து உலகைக்காக்கும் மன்னவன் தவசீலனும், ஒலியையுடைய வேதமுறை பிறழாதவனும், தானத்தைச்சொரியுங் கமலமலர்போன்ற கையையுடையவனும், வலிமிகுந்த திண்ணிய தோளையுடையவனும், நீங்காத தருமசிந்தையையுடையவனும், (சிவபெருமானால்) வெந்தொழிந்த மன்மதன் உயிர்பெற்றெழுந்தாற்போலப் பிரகாசிக்கின்ற அழகமைந்த உருவினையுடையவனும் எ - று.

இதுமுதலிரண்டுசெய்யுள்கள் ஒருதொடர். (௩)

ஓரா யிரமா மறையவரு மொருபான் கோடிச் சேனைகளுந்
தீரா துடன்சூழ் தரவெங்குஞ் செல்லுஞ் சூரன் ஞாதியரும்
பாரா ள்வேற்று மன்னவரும் பணியும் பதத்தான் பணியாரை
வேரோ டறுக்குஞ் சிறத்தத்தான் வீம னென்னு மியற்பெயரான்.

(இ - ள்) சிறந்த ஓராயிரம் பிராமணர்களும் ஒருபதுகோடிச் சேனைகளும் நீங்காமல் (தன்னை) புடைசூழ்ந்துவர எவ்விடத்துஞ் செல்லுஞ் சூரனும், ஞாதிகளும் புவியையாளுக்கும் பிறமன்னர்களும் வணங்கும் பாதங்களையுடையவனும், தன்னை வணங்காதவர்களை முதலறக்களையுங் கோபத்தையுடையவனுமாகிய வீமராசனென்னும் இயற்பெயருடையவன் எ - று.

ஞாதியர் - தாயபாகமுடையார் (௪)

வேறு

வீரவேன் மன்னவன் விழையுங் கற்பினாள்
மூரலேற் றவகை முறுவல் செய்தலாற்
சாருகா சினியெனச் சாற்று நாமத்தா
ளோருமா நலமெலாந் திரண்ட வுள்ளத்தாள்.

(இ - ள்) வீரம்பொருந்திய வேலேந்திய வீமராசன் விரும்பத்தக்க கற்பினையுடையவள், தந்தபந்திகள் தெரியாதவகையாகப் புன்னகைசெய்யுங் காரணத்தால் சாருகாசினியென்று சொல்லும்பெயரையுடையவள், அறியத்தக்க சிறந்த நன்மைமுழுவதும் ஒன்றுசேர்ந்த வுள்ளத்தையுடையவள். எ - று.

சாருகாசினி - சாருஹாசினியென்பதன் திரிபு; சுந்தரமான சிரிப்பையுடையவளென்பதுபொருள். (௫)

மூதுக்குறை வாளாகண் மொழிதப் பாதுகோன்
பொருக்கயிர திருநிலம் புயத்தி னேந்துபு

விதுக்குறை வாணுதல் விளங்கு வெண்ணகை
மதுக்குழன் மனைவியின் வாழு நாளையில்.

(இ - ள்) வீமராசன் பேரறிவுடையவர்கள் சொற்றவாறு பொதுத்தன்மையகற்றிய பெரியபூமியைத் தோளிற்றாங்கி, சந்திரனுடம்போன்ற வெள்ளிய நெற்றியையும் பிரகாசிக்கின்ற வெள்ளிய பல்வரிசையையுந் தேனிருந்த கூந்தலையுமுடைய மனைவியாகிய சாருகாசினியுடன் வாழ்ந்திருக்குங் காலத்தில் எ - று

முதுக்குறைவாளரென்றது மந்திரி புரோகிதர் முதலானோரை. பொதுக்கடிதலாவது தனக்கேயுரிமையாக்கல் (௬)

புத்திர னின்மையாற் புலர்ந்த நெஞ்சினன்
பத்தியிற் றேவர்கள் பணிக ளாற்றினன்
மெத்திய தானங்கள் விதியிற் செய்தனன்
னெத்திறத் தருமமு மினிதி யற்றினன்

(இ - ள்) புத்திரப்பேறில்லாமையால் வருந்திய மனமுடையனாகிப் பத்தியுடன் தேவர்களுக்கு (செய்யத்தக்க) பணிவிடைகளைச் செய்தனன் மிகுந்த தானங்களை விதிப்படி (சற்பாத்திரர்களுக்கு) கொடுத்தனன் எவ்வகைப்பட்ட தருமங்களையும் இனிதாகச் செய்தனன் எ - று (௭)

செவ்விய வேள்விகள் சிறப்பச் செய்தன
னிவ்வகை நல்வினை யெவையு மீட்டியு
மெவ்வமில் புத்திர னெய்தப் பெற்றிலன்
கொவ்வைவாய் மனைவியை யழைத்துக் கூறுவான்

(இ - ள்) செம்மையாகிய யாகங்களைச் சிறப்புடன் செய்தனன் இவ்விதமாக எல்லா நற்காரியங்களையுஞ் செய்தும், துன்பமில்லாத புத்திரனை யடையப்பெற்றானில்லன் (ஆதலின் மனம்வெறுத்து) கொவ்வைக்கனிபோன்ற வாயையுடைய மனைவியாகிய சாருகாசினியை விளித்து (இவ்வகையாகச்) சொல்லுகின்றனன் எ - று

புத்திரன் - மகன் தந்தைதாயரைப் புத்தென்னு நரகினின்று விடுவிப்பவனென்பது தாற்பொருள் புத்தென்றது பிள்ளைப்பேறில்லார் புகுநரகின் பெயர்

கொம்மைவெம் முலையினாய் கோதில் புத்திரர்
தம்மையெய் தாதவர் தரணி யாளினு
மிம்மையு மறுமையு மெய்தி டாரெனி
னம்முடை வாழ்க்கையு நன்றிப் பாலதோ.

(இ - ள்) குவிந்த வலியமுலையையுடையாளே! குற்றமில்லாத புத்திரர்களையடையப்பெறாதவர்கள் உலகமுழுதும் அரசாண்டாலும், இம்மைப்பலனையும் மறுமைப்பலனையும் அடையமாட்டாரென்று (சாத்திரங்) கூறிற்று, நம்முடைய உயிர்வாழ்தலும் நன்றியையுடைய தாகுமோ? (ஆகாது) எ - று, (௮)

வேறு

அமராபதித் தேவரில வ்வியகவ் வியமேலோர்
கமலமுகத் தாயமனு கட்டமுதும் பெருந்திருவும்

விமலமுறுங் குடிப்பிறப்பும் வியனில்வாழ் க்கையுமவலியுந்
தமமறுநூற் பயிற்சிகளுஞ் சகலமுமவீ ணாயினவே

(இ-ள்.) தாமரைபோலும் முகமுடையவளே! தேவர்களும் பிதிர்த்தேவர்களுமாகிய இவர்கள் அவ்வியகவ்வியங்களின்மேல் விருப்புறாதிருப்பவர்கள் நமதுபேரழகும், பெருஞ்செல்வமும், பரிசுத்தமாகிய (உயர்) குடிப்பிறப்பும், சிறந்த இல்வாழ்க்கையும், வல்லபமும், தாமதகுணமற்ற நூலாராய்ச்சிகளும் யாவும் வீணாயின எ-று.

தேவர்களுக்குக்கொடுப்பதை அவ்வியமென்றும், பிதிரர்களுக்குக் கொடுப்பதைக் கவ்வியமென்றுங் கூறுதல்வழக்கு. (௧0)

நெடும்படுகா னகத்தேகி னேரிழையா யொருவாற்றுங்
குடிவளர்கான் முளைவந்து கூடலுமா மதனின்றேற்
படியறுவான் கதிசேரும் பயப்பாட்டி லையமிலை
முடிவிதுவே யாகுமென மொழிந்தமைச்சர்க் கிதுசொன்னான்.

(இ-ள்) சிள்வண்டுகள் பொருந்திய வனத்திற்குச் சென்றால், ஒருவகையாக மரபுவளர்த்தற்குப் புத்திரப்பேறுவந்து கைகூடலுமாகும் அஃதுமின்றாயின், குற்றமற்ற சிறந்த கதியிற்சேரும் அச்சத்திற் சந்தேகமில்லை. இதுவே தீர்மானமாமென்று கூறி, மந்திரிகளுக்கு இதனைக் கூறினன். எ-று (௧௧)

சூழ்ச்சிமிகு மந்திரிகா டொல்பவத்தி லியான்செய்த
வூழ்ச்செய்ப்ப யனோமனைவி யுஞற்றியதீ வினைப்பயனோ
வாழ்ச்சிதனைக் கிதம்புரியு மக்கட்பே றெமக்கின்மை
தாழ்ச்சியித னான்மனைவி தன்னொடுகான் புகுகின்றேன்.

(இ-ள்) ஆலோசனைமிகுந்த மந்திரிகளே! இல்வாழ்க்கைக்கு நன்மையையுண்டுசெய்யும் மக்கட்பேறு எனக்கில்லாமை பழைய சனனங்களில் யானியற்றிய ஊழ்வினைசெய்யும் பயனோ? (அல்லது) என்மனைவிசெய்த தீவினையின்பயனோ? (அறிகிலேன்) தாழ்வாகிய இதனால் யான் சாருகாசினியுடன் வனத்திற் செல்கின்றேன் எ-று

ஈண்டுபொருணி லமனைத்து மிருவிரும் பகுத்தாளக்
மீண்டுவரி னென்பாலே விடுத்திடுக மீளேனேற்
காண்டருநும் வழிவழியுங் கைக்கொள்க வெனச்செப்பிப்
பூண்டபெருங் காதலினன் மொய்குழலா ளொடுமெழுந்தான்.

(இ-ள்) மிக்க பொருளும் நிலமுமாகிய எல்லாவற்றையும் நீங்களிருவரும் பாகித்துக்கொண்டு ஆளக்கடவீர்கள் (கடவுளருளால் மகப்பேறுற்றுடன்) திரும்பி வந்தேனாகில் என்னிடத்திலேயே கொடுத்துவிடுக திரும்பிவாரேனாயின், வரத்தக்க உம்முடைய பரம்பரையின் வழியே கைக்கொள்ளக்கடவீர்களென்று சொல்லி, வீமராசன் மிக்க பெருவிருப்புடன் நெருங்கிய கூந்தலையுடைய மனைவியோடெழுந்திருந்தான் எ-று (௧௨)

சுமந்துவெனு மந்திரியுஞ் சூழ்ச்சிமனோ ரதசித்தனு
மமைந்தவுளத் திருவோரு மமையாத துயர்விழிநீ
ருமிழ்ந்தனராய் மிகவாடி யுயிரனையா னணையின்றி
விம்மிழந்திட்டப் பாடிருந்தனரா கவிறைவன்வனத் தேகினன்.

(இ - ள்) சுமந்துவென்று சொல்லப்படும் மந்திரியும் ஆலோசனையில் வல்ல மனோரஞ்சிதனென்பவனுமாகிய ஒன்றுபட்டமனமுடைய இருவர்களும் அடங்காத துயரத்துடன் கண்ணீர்சொரிந்தவர்களாய் மிகவும் வாட்டமடைந்து உயிர்போன்ற அரசனுடைய ஆக்கினையால் கட்டப்பட்டு ஊரிலிருந்தார்கள். வீமராசன் (மனைவியுடன்) வனத்துக்குச்சென்றான் எ - று (௧௪)

தொக்கவனத் தலமருங்காற் றுலைவினை தொலைக்கூட்ட
மிக்கதவ விசுவா மித்திரனவர் றாசிரமம்
புக்கனனமா றைக்கருக்கும் பொருவின்மறைப் பொருள்விரிக்குந்
தக்கமுனி வரன்பதத்தைச் சார்ந்துமனை யொடுந்தாழ்ந்தான்.

(இ - ள்) நெருங்கிய வனத்திலே துன்புற்றுழலுகையில், நல்லூழானது கைகூட்ட மிக்க தவத்தையுடைய விசுவாமித்திரமுனிவர் வாழ்கின்ற ஆசிரமத்திற் புகுந்து, சீடர்களுக்கு ஒப்பில்லாத வேதத்தின் பொருளை விளக்குகின்ற தகுதியாகிய அம்முனி சிரேட்டருடைய பாதங்களையடைந்து மனைவியுடன் (வீமராசன்) பணிந்தனன். எ - று

தொக்கவென்றது மிருகங்கணெருங்கிய அல்லது மரங்கணெருங்கியவெனக் கொள்க. (௧௫)

வணங்குமணி வேற்கரத்து மன்னனுக்கு மாமுனிவ
னிணங்குறவா சீர்வதிப்பா னெச்சமுனக் காகவெனப்
பிணங்குதலில் லாவுளத்திற் பேசியெழுந் திருவென்ன
வணங்கினொடு மனங்குளிரப் பவரசனெழுந் தெதிர்நின்றான்.

(இ - ள்) (அவ்வாறு) பணியும் அழகிய வேற்படைதாங்கிய கையையுடைய வீமராசனுக்கு, சிறந்தவிசுவாமித்திரமுனிவன் இணக்கமாக ஆசீர்வதிப்பவராகி, சந்ததி பெருகுவதாகவென்று குற்றமில்லாதமனத்துடன்கூறி யெழுந்திருக்கவென, வீமராசன் மனைவியுடன் மனங்குளிர்ச்சியுற்று எழுந்து அவர் எதிரே நின்றனன் எ - று.

ஆசீர்வதிப்பான் - ஆசீர்வதிப்பானாகி யெனப்பொருள். (௧௬)

வேந்தர்களே றேநீயார் விளங்கியவெம் மாசிரமம்
போந்தவருட் பயனின்றிப் போனவர்க டாமில்லை
யாய்ந்தநின் துள்ளத்தாவ லறைதியேற் றருதுமென
வாய்ந்ததவ விசுவா மித்திரனார் மகிழ்ந்துரைத்தார்.

(இ - ள்) அரசர்கள் (ஆகிய யானைகட்குச்) சிங்கம்போல்பவனே! நீயாவன்? விளக்கமுற்ற வெம்முடைய ஆசிரமத்திற்கு வந்தவர்களிற் பயனில்லாமல் (வறிதே) சென்றவர்களிலர். எண்ணிய உன் மனவிருப்பத்தைக் கூறுவையாயின், (அதனைக்) கொடுப்போமென்று, பொருந்திய தவத்தைச்செய்த விசுவாமித்திர முனிவர் களித்துக் கூறினார். எ - று

அறைகுதி என்பதில் கு சாரியை (௧௭)

விசுவா மித்திரனார் விளம்பியசொல் லமுதருந்தி
யெச்சமின் றவன்போல விதயமொடு முகமலர்ந்து
நச்சுமா தரவோடு நராதிபனசொல் வானடியேன்
மெச்சியசீர்க் கவுணடினிய வியன்காவாழ் தருமவீமன்.

(இ - ள்.) விசுவாமித்திர முனிவர் கூறிய சொல்லமுதத்தை (செவியால்) அருந்தி, புத்திரனைப் பெற்றவன் (களிப்படைவது) போல மனமும் முகமும் மலர்ச்சியுற்று, விருப்பத்தக்க ஆசையுடன் வீமராசன் சொல்கின்றான் (அடியேன்) மெச்சத்தக்க சிறப்புடைய பெரிய கவுண்டின்னிய நகரத்தில் வாழ்கின்ற வீமராசன் எ - று.

இவள்சாரு காசினியென் பாளெனக்கு மனைமாது
தவமாதி பலபுரிந்துந் தனையனுறு மையினைவருந்தி
யவமான வாழ்க்கையினை யறத்துறந்தா ரணியத்துக்
கவலைபெறுந் தமையாதோ தைக்கூட லினைக்கண்டேன்.

(இ - ள்) இவள் அடியேனுக்கு மனைவி - சாருகாசினியென்னும் பெயருடையாள் தவமுதலியபலவற்றைச் செய்தும் புத்திரனுண்டாகாமையினால் வருத்தமுற்றுப் பலனற்ற வாழ்க்கையை யறவேயொழித்து வனத்தில் (வந்து) கவலைப்படும் எனக்கு யாது நற்றவமோ கைகூடுதலால் தேவரீரைத் தரிசித்தேன் எ - று

தவமாதி - என்றது தானயாகமுதலியன (௧௯)

கனகவரை யடுத்தோர்க்குங் கற்பகத்தை யடுத்தோர்க்கு
மனவிழைவு முற்றுக மாபுளதோ வையகத்தி
லனகநினை யடுந்தேனு மருமகவுண் டெனத்துணிந்தேன்
புனிதநின் திருவருளாற் புத்திரனின் றேபயந்தேன்.

(இ - ள்) புனிதமானவரே! இப்பூமியிலே, பொன்மலையாகிய மேருவை யடுத்தவர்களுக்குங் கற்பகவிருட்சத்தை யடுத்தவர்களுக்கும் மனவிருப்பமுடிவுபெறாத வழக்கமுண்டோ? தேவரீரை யடைந்தவனும் அரிய புத்திரனையடைவேனென்று மனத்துணிவுற்றேன் பரிசுத்தமானவரே! தேவரீருடைய திருவருளாற் புத்திரனை யிப்பொழுதே பெற்றேன் எ - று (௨௦)

தக்கதவத் தால்வேத சாத்திரவி சாரணையான்
மிக்கதய வாற்பொறுமை விரதத்தால் வேள்வியினாற்
பொக்கமறும் வித்தையினாற் புகழ்த்தான தருமத்தா
லொக்கநரி லாயுரைத்த வுயர்மொழிவீ ணாகாதே.

(இ - ள்) தகுதியாகிய தவத்தினாலும், வேதசாத்திரங்களின் விசாரணையினாலும், மிகுந்த கிருபையினாலும், சாந்தத்தினாலும், விரதத்தினாலும், யாகத்தினாலும், உண்மையாகிய வித்தையினாலும், கீர்த்தியினாலும், தானதருமங்களாலும், சமானமானவர் ஒருவருமில்லாத முனிவரே! தேவரீர் கூறிய உயர்வாகிய வார்த்தை (ஒருகாலத்தும்) வீணாகமாட்டாது. எ - று (௨௧)

எனவழுத்தி யடியேன்மு னியற்றியதீ வினைதெரிந்து
பனவவுரைத் தருகீர்த்துப் பரிசுத்த னாமவகை
யினியவுபா யமுமியம்ப வேண்டுமென விரத்தலொடு
முனிவன்மகிழ்ந் துளத்தெண்ணி முடிவேந்தற் குரைசெய்வான்.

(இ - ள்) என்று துதித்து, முனிவரே! அடியேன் சன்மாந்தரத்திற் செய்த தீவினையை யறிந்து கூறி, அதனை விலக்கிப் பரிசுத்தனாகத் தக்க நல்ல வுபாயத்தையுஞ் சொல்லவேண்டுமென்று யாசிக்கவும், விசுவாமித்திரமுனிவர் களித்து மனதில் யோசித்து முடியணிந்த வீமராசனுக்குக் கூறுகின்றார். எ - று. (௨௨)

நின்குலத்தோர் விநாயகனை நித்தலும்பூ சனைபுரிந்து
நன்குமிகப் பெற்றார்க ளானநீ [illegible]
மின்கொடிபோ லிடைமனைவி விழைவினொடு விடுத்தமையா
லின்குதலை மழலைமொழி யெச்சமிழந் தாயம்மா

(இ - ள்) அரசனே! உன்குலத்துப் பெரியோர்கள் விநாயகக்கடவுளைத் தினந்தோறும் பூசைசெய்து நன்மைகளை மிகுதியாக அடைந்தார்கள் நீயோ இந்த மின்னற்கொடிபோலும் இடையையுடைய மனைவியினுடைய விருப்பத்தினால் அதனை விட்டபடியால், இனியகுதலையாகிய இளஞ்சொல்லையுடைய குழந்தையை(ப்பெற்று) இழந்திருக்கின்றனை எ - று (௨௩)

விந்தாபமென்னு நாடாளும் வீமவினி விநாயகனை
மதர்ப்பிணைவிழி யாளோடு மகிழ்விக்க வொருமணியைக்
கதிர்ப்பவுயிர்ப் பாய்நுமக்குக் கணேசர்குலத் தெய்வதமா
யதிர்ப்புளத்திற் றுயரகற்றி யாண்டதுங்கே ளெனமொழிவான்.

(இ - ள்) விந்தாபமென்று சொல்லும் நாட்டை யரசுசெய்யும் வீமராசனே! நீ இனி மதர்த்த கண்களையுடைய உன்மனைவியுடன் விநாயகக்கடவுளை (பூசித்து) மகிழ்ச்சி செய்வாயாக புத்திரரத்தினத்தை விரைவிற்பெறுவாய் உங்கட்குக் கணேசப்பெருமானே பயமடைந்த மனத்துயரை யொழித்துக் குலதெய்வமாக, ஆட்கொண்ட சரிதையையுங் கேட்பாயாகவென்று விசுவாமித்திரமுனிவர் கூறலாயினர் எ - று

விசுவாமித்திரனை வீமனடுத்தபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௨௦௭.

தக்கன் பிணிநீங்குபடலம்.

கொழிபுகழ் வீமநுங் குலத்து ளோர்களைமுன்
வழிவழி யரசுசெய் மறுவி லாததேம்
பொழிமழை மதிதொறும் பூக்கு மாட்சியாற்
களிமகிழ் தருங்கரு நாட தேயமே

(இ - ள்) தெள்ளிய கீர்த்தியையுடைய வீமராசனே! உம்முடைய குலத்தோர்கள் பூர்வத்தில் வழிவழியாக அரசுசெய்துவந்த குற்றமில்லாத இடமானது மாதந்தோறும் பொழிகின்ற மழையானது அதிகரிக்கும் மாட்சிமையால் மிக்க களிப்பைத்தருங் கருநாடதேசமாகும் எ - று

வழிவழியாக - பரம்பரையாக (௧)

கடவுளர் புகழ்கரு நாட தேயத்தி
லிடையறா திறையிட வரசர்கள் வாழ்பதி
படர்புகழ்ப் பொருட்டுரும் பானு மாநக
ரிடர்கெட வரசெய் திருந்த காலத்தில்.

(இ - ள்) தேவர்களும் புகழத்தக்க கருநாடதேசத்திலே, சத்துருக்களைக் கப்பங்கொடுக்க அவர்கள் வாழ்ந்த நகரமாகிய படர்ந்த புகழையுஞ் செல்வத்தையுங் கொடுக்கத்தக்க பானுபுரநகரத்தில, தண்பமொழிய இராசரிகளு செய்துவந்த காலத்திலே எ - று

இறை - அரசனுக்குக் கொடுக்குமவரி இதனை இறையென்றுஞ் சொல்வது வழக்கு. கடவுளென்றுஞ் சொல்லிறுதியில உயர்வு சிறப்பும்மை தொக்கது (உ)

வழுவிலா வலவனென் றுமன்னன் வானிறைக்
கெழுதலை முறையினிற் றிறையமைச் செய்யுநாட்
கழுமிய கற்பினாள் கமலை யெனபவள்
பழுதுறு மொருமகப் பயந்து தேங்கினாள்.

(இ - ள்.) குற்றமில்லாத வல்லவனென்னும் அரசன் உனக்கு எழுதாததில முறையினுண்கொண்டு அரசுசெலுத்துங்காலத்தில (அவனமனைவியாகிய) மிக்க கற்பினையுடைய கமலையென்று சொல்லப்படுபவள் குற்றம பொருந்திய ஒரு பிள்ளையைப் பெற்று (அதனைப்)ப பார்த்தனள் எ - று

கழுமுதல் = நிறைந்திருத்தல (௩)

விழியிலன் செவியிலன் விளம்பும் வாக்கிலன்
கழியமெய் விரவிய கறைசெய் புண்ணுளன்
பழிதரு குறளனென் பாலன் பாலெனா
றழிதுய ருழந்தனள் லவலை நீங்கிலாள்

(இ - ள்) கண்ணில்லாதவனும, காதில்லாதவனும, பேசுமவாயில்லாதவனும, தேகத்திற்கலந்த கறைசெய்யத்தக்க மிக்க புண்ணுள்ளவனும், பழிக்கத்தக்க குள்ளமானவனுமாயினன என்புத்திரன் புத்திரனென்று, பெருந்துயரடைந்தனள் கிஞ்சிற்றும் நீங்கிலள். எ - று (ச)

மறுபுல மன்னவர் வசைகள் கூறுபு
முறுவலிற் செய்திடவரு முடைகொண் மைந்தனைப்
பெறுதலி னிலைமையே பெரிதினம் பாமெனா
வுறுவிழி நெடும்புன லுகுத்து மாழ்கினாள்

(இ - ள்) மறுதேயத்தரசர்கள் நிந்தைச்சொற்களைச் சொல்லி நகைசெய்திடும்படி தோன்றிய முடைநாற்றத்தையுடைய புத்திரனைப் பெறுதலைக்காட்டிலும், பெறாதிருத்தலே மிகநல்லதாமென்று, பொருந்திய கண்களினின்றும் மிக்க நீரைச் சிந்தித் துன்புற்றாள் எ - று

கூறுபு - செய்பு என்னும் வாய்பாட்டு இறந்தகால வினையெச்சம (௫)

பாவமிப் பிள்ளையின் பரிவு பார்த்திடப்
பூவினெந் நிலைபெறப் பொறித்த தென்கொலோ
மேவிய பிணியினன் மெலிவு மைந்தனுஞ்
சாவது வாழ்தலிற் றக்க தென்றனள்.

(இ - ள்) (ஐயோ!) இப்பிள்ளையின் பரிதாபத்தைக் காணும்படி தாமரைமலரில்வாழும்பிரமதேவன் எனக்கு எழுதிய தென்பாவமோ? பொருந்திய நோயினால்

வருந்துகின்ற பிள்ளையும் உயிர் பிழைத்திருத்தலினும் இறத்தலே தகுதியாயுள்ளது என்று கூறினள் எ - று. (௬)

வில்லெதிர் நுதலினாள் வெதும்பி நைதலும்
வல்லவ னடுத்துறு மகளை நோக்கினான்
நல்லது நல்லதென் றற்ப யப்பயன்
சொல்லுவ தன்றெனத் தானுஞ் சோர்ந்தனன்

(இ - ள்) வில்லைப்போன்ற புருவத்தையுடைய கமலையென்பவள் வருந்தித் துக்கிக்கவும், வல்லவனென்னும் அரசன் அவளைச் சமீபித்து, பெற்ற பிள்ளையைப் பார்த்து, தான் என் உத்தமமாகிய தவத்தின் பலன் நன்றாகவிருந்தது நன்றாகவிருந்தது, அது சொல்லத்தக்கதன்று என்று தானுஞ் சோர்வடைந்தனன் எ - று. (௭)

ஊழினால் வந்தநோய்க் குளைந்தெதன் றனைக்கென
றூழிமா லனையவ னகத்தின் றேற்றினான்
வீழியாயக் கமலைநீ வெதும்ப லென்றுதன்
வாழிமா மனையையும் வருட்டித் தேற்றினான்

(இ - ள்) ஊழ்வினையால் நேரிட்டதற்குத் துன்பமடைந்து ஆவதற்கு யாது? என்று, சக்கராயுதமேந்திய திருமாலையொத்த வல்லவராசன் மனதிற்றணிவுகொண்டான், வீழிக்கனிபோலும் இதழையுடைய கமலையே! நீ துன்புறாதே யென்று, தன் சிறப்புள்ள மனைவியையும் வருட்டித் தேற்றும்படி எ - று.

வருட்டி - வற்புறுத்தி (௮)

துன்பொரு காலத்துத் துளைந்தா ளாகவே
யின்பொரு காலத்தி னெளிதி னெய்துவார்
நன்பொறி யிழந்தவிந் நகைகொள் பிள்ளையே
யன்புறு நன்மக வொரு மாதராய்

(இ - ள்) ஒருகாலத்திலே துன்பத்தினால் வருந்தினவர்களே (பின்) ஒருகாலத்தில் இன்பத்தை யெளிதாக அடைவார்கள் (அதுபோல) பெண்ணே! நல்லபொறிகளையிழந்த இக்குற்றம்பொருந்திய குழந்தையே (ஒருகாலத்தில்) அன்புபொருந்திய நல்ல குழந்தையாகவாகும். எ - று (௯)

மணிமந்திர மருந்தி னாற்றின் மாற்றுவோந்
தணிவில் தாயிபு தலங்க டாங்கள்
அணிவிர தங்களா திகளி னீக்குவோம்
பிணிமலாக் குழலியே யென்று கென்றனன்.

(இ - ள்) மணி மந்திர அவுடதங்களாகிய இவற்றினால் (இக்குற்றங்களை) ஒழிப்போம், தீர்த்தங்கள் தலங்கள் தானங்கள் அழகிய விரதங்கள் முதலியவற்றினால் நீக்குவோம், கட்டப்பட்ட மலர்மாலையணிந்த கூந்தலையுடையவளே (வருந்தாது இக்குழந்தையைக்) காப்பாற்றுகவென்று கூறினன். எ - று (௧௦)

அவலமென் கடலிடை யழுந்து மாதராள்
கவலையிற் றிறிதுகை யகன்று கண்ணெனும்

குவலய நீரொடு குளிர்ந்த நீரினுற
றவலுரு மைந்தனைச் சால வாட்டினாள்.

(இ - ள்.) துன்பமென்னுங் கடலிலழுந்த கமலையென்பவள் கவலையினின்றுஞ் சிறிது விலகி, கண்ணென்று சொல்லுங் குவளையினின்று வருகின்ற நீருடன் குளிர்ந்த நீரினாலுங் கெடுதலற்ற புத்திரனை மிகுதியாக முழுக்கினாள். எ - று.

குவலயம் - குவளைமலர் இது கண்ணுக்குவமிக்கப்பட்டது கண்ணீராலுந் தண்ணீராலும் முழுக்காட்டினாளென்பது கருத்து. (௧௧)

போதக மனையவன் பொருவி னூல்வழிச்
சாதக மாதிக டமையச் செய்தபின்
மேதகு கணிதரை வினவித் தக்கனென்
றோதக வழைத்தன னொருமகன்றனை.

(இ - ள்.) யானைக்கன்றையொத்த வல்லவராசன் ஒப்பில்லாத நூல்களிற் கூறியவகையே சாதகருமமுதலியவற்றை நன்குறச்செய்து, பிறகு மேம்பட்ட கணிதநூற்புலவரைக்கேட்டுத் தக்கனென்று சொல்லும்படி ஒப்பற்ற புத்திரனைக் கூப்பிட்டனன். எ - று.

கணிதர் - சோதிடர்.

சாதகன்மமாவது அத்திரமந்திரத்தால் நூறு ஓமஞ்செய்து வாமமந்திரத்தாற் புத்திரன் முகத்தை யெதிர்நோக்கிப் பஞ்சப்பிரம மந்திரங்களை யுச்சரித்து உச்சியைமோந்து புருடமந்திரத்தை வலக்காதிற் செலுத்தல் ஆதிகளென்றது உத்தாபன முதலியன உத்தாபனமாவது அசுத்தமாகிய அறையினின்றும் சுத்தமாகிய உயர்ந்த விடத்திற் குழந்தையைச் சேர்ப்பிக்குங்கிரியை உத்தாபனத்தின்பின் செய்யவேண்டியது நாமகரணமாதலின், தக்கனென்றழைத்தனனென்றார் அது பெயரிடுதலிற் செய்யுங்கிரியை அதன்பின்னர் நானகாமாதத்திற் சந்திமிதித்தலும், ஆறுமாதத்தில் அன்னப்பிராசனமும், பதின்மூன்றுமாதத்திற் சவுளமும், ஐந்தாம்வருடத்தில் உபநயனமுமுதலியனவாம் பிரவாசம் - குழந்தையைக்கொண்டு கோயிலுக்குச் செல்லல் உபநயனம் - பரசிவத்தைத் தரிசிப்பித்தற்குச் சமீபமாகிய நயனத்தையுண்டாக்குங் கிரியை. (௧௨)

வெள்ளணி யணிந்தநாட் டொடங்கி வேந்தர்கோன்
பிள்ளையைக் குறித்தற மாதி பேணியும்
விள்ளுதல் கண்டிலன் விழும மெய்ப்பிணி
தெள்ளிய வாண்டுப னிரண்டு சென்றவே.

(இ - ள்.) வெள்ளணியணிந்த தினமுதற்கொண்டு ராசராசனாகிய வல்லவன் தன் புத்திரனைக் குறித்துத் தருமமுதலியவற்றைச் செய்தும், துன்பத்தைச்செய்யுங் கொடியநோய்கள் நீங்குதலைப் பார்த்திலன் (இவ்வகையாகத்) தெளிந்த பன்னிரண்டு வருடங்கள் சென்றன. எ - று.

வெள்ளணியணிதல் - மனைவி மகவுயிர்த்த காலத்து வெள்ளணியணிவது. இது முன்விளக்கப்பட்டது. (௧௩)

வல்லவன் மனைவியை யழைத்துக் கூறுவான்
செவ்வலையில் பொருளெலா மிழந்து மெய்யுட

லைலொடு பகலருந் தவத்தின் வாடியுந்
செல்லல்செய் மகன்பிணி தீரக் கண்டிலேன்.

(இ - ள்) வல்லராசன் தன் மனைவியை விளித்துச்சொல்கின்றான்: கணக்கில்லாத பொருண்முழுவதையும் (தானதருமங்களால்) போக்கடித்தும், இரவும்பகலும் அரிய தவங்களால் என்னுடைய தேகமிளைத்தும், துன்புசெய்கின்ற மகனுடைய பிணிகள் போக்கக்காணகிலேன் (இனியாதுசெய்வது?) எ - று (௧௪)

மற்றுள பொருள்களு மாயு முன்மக
னுற்றிருந் தனனெனி லொழியக் கொண்டுபோ
சற்றினித் தாழ்க்கலை யென்னத் தையலாள்
பெற்றவத் தினத்தினும் பெருந்துன் பெய்தினாள்.

(இ - ள்) மிகுதியாகவுள்ள பொருள்களும் ஒழியுமுன்னர், மகன் (உன்பால் அன்பு) உற்றிருந்தானாயின் (அவனை யிங்கிருந்து) அகலக்கொண்டுபோவாயாக. சிறிதும் இனிக்காலந்தாழ்க்கவேண்டாமென்று வல்லராசன் கூற, கமலையென்பவள் (அப்புதல்வனை) ஈன்ற அக்காலத்தைக்காட்டிலும் மிக்க வருத்தமடைந்தாள் எ-று (௧௫)

வேறு

அன்னோ வன்னோ மன்னவ னெஞ்சத் தழலாகி
யென்னோ வானே லென்னினிச் செய்வே னென்னநொந்து
கொன்னோய் கொண்ட மைந்தனை வல்லே கொண்டாவா
மின்னே யன்ன நுண்ணிடை வாட வெளிக்கொண்டாள்.

(இ - ள்) ஐயோ! ஐயோ! அரசன் மனத்திற் கோபாக்கினிகொண்டு என்னை நோவானாகில் இனி யாது செய்வேன்? என்று வருந்தி அச்சம்பொருந்திய நோயைக்கொண்ட புத்திரனை யுடனே கொண்டு, ஒசிகின்றதாகிய மின்னலையே நிகர்த்த நுண்ணிய இடையானது ஒசியும்படி (கமலையென்பவள் அந்தப்புரத்தினின்று) வெளிக்கொண்டு சென்றாள். எ - று

ஆவுதல் - வளைதல், ஒசிதலென்றும் (௧௬)

பற்றா யாரே பண்டுசெய் நல்லூழ் படாகாலை
யுற்றா யாரே யோங்கிய தீயூ ழுறுகாலை
யெற்றே யென்னை யிரங்கலி னென்னா மிடபாகப்
பெற்றே னல்லாற் காப்பிலை யென்றே பெயர்குற்றாள்

(இ - ள்.) பூர்வத்திற்செய்த நல்லூழின்பயன் வளருங்காலத்திற் சுற்றத்தார்களாயுள்ளோர் யாவர்? மிகுதியாகிய தீயூழின்பயன் வருங்காலத்தில் நட்பாயுள்ளோர் யாவர்? எற்றேயென்று கவலுவதினால் என்னவரும்? வாமபாகத்தில் உமாதேவியாரையுடைய சிவபெருமானையல்லாமல் ஆதரவின்றென்று கருதிச் சென்றனள். எ - று.

வெள்ளிடை நீந்திக் கல்லத ரத்த மிகுபேயத்தோ
துள்ளுறு மானின் கன்றென வோடிச் சுரநீந்தக்
கள்வர்கள் சூழ்ந்து நில்லென வார்த்துக் கலன்கொள்ளை
கொள்ளவுள் வாடி மென்மெல வோரூர் குறுகுற்றாள்.

(இ - ள்) வெளியைக்கடந்து கலவழியுங் கானலுமமிகுந்த அருநெறியில் துள்ளிச்செலலும் மான்கன்றுபோல ஓடிப்பாலை நிலத்தைநீந்த, திருடர்கள் சுற்றிக் கொண்டு நில்லென்றுபறித்து, ஆபரணங்களைக் கொள்ளைகொள்ள, மனம்வருந்திப் பையப்பைய ஒரூரையடைந்தனள். எ - று. (௧அ)

பொருளினை யேற்ற பொருளென வேட்டுப் புவிகாப்போ
னருளினை யில்லா ளையமனை மைந்த னவாத்தம்மை
யொருவின னென்னி னுண்கலமே லவா தொழிலாரோ
கருவினை மாக்க ளென்றழு துக்கோர் களைகாணாள்.

(இ - ள்) செல்வத்தையே உத்தமப்பொருளென்று விரும்பி உலகினை யரசு செய்யும் அரசன (சிறிதும்) கிருபையையுடைத்தாயில்லாதவளுடைய மனைவியும் புத்திரனு மாகிய இவர்களை நீக்கினனென்று சொன்னால், தீச்செயல்புரிபவர்கள் [கள்ளர்கள்] பிரகாசிக்கின்ற ஆபரணங்களைக் கள்ளாடா தொழிவார்களோ? என்று (தன்னுட்டுர்மானித்துத்) துன்பத்திற்கோர் எல்லைகாணாதவளாகி எ - று (௧௯)

களை - தீர்வு, பரிகாரம்

வன்பசி தாக மலகி வருத்த மகமேனி
முன்பசி தாகங் கண்டறி யாதாள் முகமவாடித்
தன்பழ வாழ்வும் வந்தவெ றும்புந் தகநாடி
யென்புரி வாநா மென்புரி வாமென றிதுதோந்தாள்.

(இ - ள்) முன்னேபசியையுந் தாகத்தையும் பார்த்தறியாத கமலையென்பவள் வலியபசியுந் தாகமும் மிகுந்துவருத்தத் தன்புதல்வனுடன் முகம்வாட்டமுற்று, தன்னுடைய பழைமையாகிய வாழ்க்கையும் (இப்பொழுது) வந்தவெறுக்கத்தக்க நிலைமையும் தகுதியாகயோசித்து, நாம்யாதுசெய்வோம்? நாம யாதுசெய்வோம்? என்று, இதனைத் துணிந்தாள் எ - று (௨0)

மைந்தனை நாடி வாழ்க்கையை விட்டே னமவந்தாம்
வந்துழி யாவி மாய்ந்தன மாயின் மகனுய்த
லெந்தவு பாயந் தன்னினு மில்லை யிரந்தேனு
மைந்துயிர் போகா தோம்புது மென்று ளவையில்லாள்.

(இ - ள்) குற்றமில்லாத கமலையென்பவள் புதல்வனைவிரும்பி (இராச)சுகத்தைக் கைவிட்டு வனத்திற்குநேர்ந்தோம் (அவ்வாறு) வந்தவிடத்தில் உயிர்விடுவோமானால் (நமமுடைய) புதல்வன் பிழைப்பது எவ்வுபாயத்தாலுமில்லை (பிறரிடம்) வருந்தி யாசித்தாலும் உயிர்போகாமல் (அவனைக்) காப்போமென்று சொன்னாள் எ - று.

குறுகிய சிற்றூ ரதனிடை போயாப்பாற் குளிர்கங்கை
நிறுவிய வேணி நின்மலா கோயி னிலையெய்திச்
சிறுவனை வைத்துச் சேரணி மைமக்கட் டிகழ்கின்ற
வுறுநக ரெய்திப் பலிகொடு மீண்டூட் டினளுண்டாள்

(இ - ள்.) தாமடைந்த சிறிய ஊரினொருபக்கலில், குளிர்ந்த கங்காசலத்தை நிறுத்திய சடையையுடைய அமலராகிய சிவபெருமானது திருக்கோயிலில் நிலைத்துச் சிறுவனையிருக்கச்செய்து, பொருந்திய சமீபமாகவுள்ள நகரத்தையடைந்து பிச்சை கொண்டு திரும்பி (அவனை) உண்பித்து (தானும்) உண்டனள். எ - று. (௨௨)

வேறு

அண்டர்கள் பெருமான் கோயி லமர்ந்தவாச் சிரமத் தைகுங்
குண்டின புரத்தை நாளுங் குறுகியை யப்பலி கொண் டூட்டி
யுண்டனள் வசிக்கு நாளி லொருதினம் மகனோ டவ்வூர்ப்
பண்டைநல் வினைவந் தெய்தப் படர்ந்தனள் பலிக்கு நேர்ந்து

(இ - ள்.) தேவநாயகராகிய சிவபெருமானுடைய திருக்கோயில்பொருந்திய அசிரமருக்கு அடுத்துள்ள குண்டினபுரத்தை நாடோறுமடைந்து ஐயம்பொருந்திய பிச்சையெடுத்துவந்து (அவனை) உண்பித்து, (தானும்) உண்டுவாழுங்காலத்திலே, ஒருநாள் தன் மகனோடும் அவ்வூரிற் பிச்சையெடுக்கச்சென்றனள் (அப்பொழுது) அவனது பூர்வசன்ம புண்ணியம் வந்தெய்தலால் எ - று.

"பண்டைநல் வினைவந்தெய்த" என்றது மேல்வருஞ் செய்யுளில் "முற்கல னெதிரே போந்தான்" என்பதைக்கொண்டு முடிகின்றது (௨௩)

வீதியிற் செல்லும் போது வியன்நகர்க் கடுத்த கானிற்
சாதியின் வயிர மின்றித் தழைந்துபல் லுயிரும் வாழும்
போதியல் சோலை சூழ்ந்த பொருவிலாச் சிரமம் வைகு
மூதியல் சிவமே நாடு முற்கல னெதிரே போந்தான்

(இ - ள்.) வீதியிற் செல்லுங்காலத்தில், பெரிய அந்நகரத்திற்கடுத்த வனத்திலே சாதிப்பகைமையில்லாமற் பல பிராணிகளும் நெருங்கி வாழும் மலர்கள் பொருந்திய சோலைசூழ்ந்த ஒப்பில்லாத ஆசிரமத்திலே வசிக்கும் பழமைதனையுடைய சிவத்தையே விரும்பும் முற்கலமுனிவர் (அவர்களுக்கு) எதிரே வந்தனர். எ - று.

சாதியின் வயிரமின்மையென்றது பாம்பும் கருடனும், எலியும் பாம்பும், எருதும் பசுவுமாகிய இவைபோல்வன பயமில்லாமலும் பகைமையில்லாமலும் ஒன்றுகூடி வாழ்தல் முதலியன. இது அங்குள்ள தலவிசேடம் மூர்த்திவிசேடம் பெரியோர் மகிமையென்னும் இவற்றுளொன்றென்பது பெறும். (௨௪)

முனிவர்கள் கணேச பத்தி முற்கல முனிமெய்க் காற்று
னனியுடம் பெங்குந் தோய நலிபிணி தீர்ந்து தக்க
னினியன மொழிந்தான் கேட்டான் யாவையுங் கண்டா னீண்டான்
புனிதனாய் நடந்தா னந்தப் பூசுர னியல்பென் சொல்வேன்

(இ - ள்.) கணேசப்பெருமானுடைய பத்தியுடையவரும் கோபமொழிந்தவருமாகிய முற்கலமுனிவருடைய தேகத்திற்படிந்த காற்றானது நன்றாக அவனுடம்புமுழுவதும்படிய, துன்புசெய்கின்ற நோய்விலகி, தக்கனானவன் இனிய வார்த்தைகளை (வாயால்) உரைத்தான், (பிறர் சொல்வதைச் செவியால்) கேட்டான், எல்லாவற்றையும் (கண்ணால்) கண்டான், (உடல்) நீண்டான், (ஒருகுறைபாடுமின்றி) பரிசுத்தனாகநடந்தான் அந்த முனிவரனுடைய இயற்கையை யென்னென்று சொல்லுவேன்? எ - று.

பூசுரன் - பூலோகதேவன்; வேதியன்; முற்கலன் (௨௫)

முருகனோ காம வேளோ முகுந்தனோ வென்னத் தக்கன்
பெருகொளி யழக னாகி யுருப்பெலாம் பிறங்கப் பெற்று
யிருவிழி களிப்ப நோக்கி யெடுத்தணைத் துச்சி மோந்து
ளுருகிய வார்வக் கண்ணீ ரொழுக்கமெய் பூரித் தாளே.

(இ-ள்) (கண்டோர் இவன் அழகினோ) செவ்வேளோ! மதவேளோ! திருமாலோ! என்று சொல்லுதற்குத் தக்கதனையன் மிக்கவொப்பற்றவனாக அழகுடையவனாகி அவயவங்களெல்லாம் விளக்கமுற, நல்ல தாயாகிய கமலையெனபவள் இருகண்களும் ஆனந்திக்கும்படி (அவனைப் பன்முறை) பார்த்து (இருகரங்களாலுமவனை) எடுத்து (மார்புடன் அணைத்துக்கொண்டு சிரமோந்து, மனமுருகிய ஆசையாலாகிய இன்பக் கண்ணீரொழுகும்படி உடல்பூரித்தனள் என்று.

காமனெனினும் வேளெனினும் ஒருபொருட்கிளவி. [illegible] பண்புத்தொகை. முருகன் - சேய், மாரன், செவ்வேளெனப்படுவோன்; காமன் - மாலின் மகன், கருவேளெனப்படுவோன். (உக)

நாயகன் முனிவா [illegible] னென்றே நாரிக்குப் போதப் பெற்று
தூயவ [illegible] [illegible] மொழி [illegible] மைந்தன்
தீய [illegible] [illegible] [illegible] னென்று [illegible]
மேய [illegible] [illegible] [illegible] வெறுப்ப [illegible] [illegible] ளே

(இ-ள்) என் கணவருடைய கோபத்தாலல்லவா நாமிங்கடையப்பெற்று புத்திரமானவனென்னுடைய [illegible] என்று [illegible], மனந்தளர்ந்து கொடிய வலிய பிணியினின்று விலகிச் சிறப்புற்றனள் என்று சமலையெனபவள் பொருந்திய கணவனிடத்திலிருந்த வெறுப்பையொழிந்து நகைத்தனள் என்று. (உ௭)

[illegible]
[illegible]
[illegible]
பொ [illegible] [illegible] [illegible] [illegible]

(இ-ள்) அக்காரியங்களைக் [illegible] நீராடிப் [illegible] திவ்வியமாகிய அன்னமும் ஆடையுங்கொடுக்க (அவ்வறை) பெற்று (உண்டுடுத்தி) வாழ்த்திருக்கின்றவர்களாய், [illegible] நெறிநின்றவர்களாகிய பெருமாளைக்குப் பூசைசெய்யும் [illegible] (ஆதிசைவ) வேதியருடைய பாகங்களை இருவரும் வணங்கினார்கள் என்று.

கண்ணுதல் - அன்மொழித்தொகைக் காரணப்பெயர் சிவபிரானையுணர்த்தியது. சிவபெருமானைப் பூசிக்கும் [illegible] வேதியரென்னும் (உ௮)

[illegible]
[illegible]
[illegible]
[illegible]

(இ-ள்) குருசிட்டனை இருவர் மிகுந்து குற்றமற்ற சிறப்பு சீர்கைசெய்து, மாதச்சதாகிய கணேசப்பெருமானுடைய உண்மையை கூறும் எட்டெழுத்தாலாகிய மந்திரத்தை யுபதேசித்து, (அதன்படி) பொருந்தமாறு கணிக்கும்வகையையுங் கூறினார் (சம) [illegible] அம்மாதிரத்தைக் கணித்துப் பெருந்தவம் [illegible] செய்தனன் என்று. (உ௯)

[illegible]
[illegible]

திருந்திய வரங்க ளல்கிச் சிந்தையிற் றிறம்பாப் பத்தி
பொருந்திய தக்கன் முன்னாப் பொற்புறத் தோன்றி நின்றார்.

(இ - ள்.) வருந்துகின்ற உண்மைத்தவமுடைய அவர்கட்குக் கணேசப்பெருமான் வரமருளும்படி திருவுள்ளங்கொண்டு, முருந்தையொத்த பல்வரிசையையுடைய கமலையென்பவளுக்கு முன்னே பொருந்தும்படி முதலிலே தரிசனமளித்துத் திருத்தமாகிய வரங்களைக்கொடுத்து, மனதில் அகலாத பத்தியைப் பொருந்திய தக்கனுக்கு முன்னே அழகுபெறப் (பின்னர்ப்) பிரசன்னமாயினார். எ - று.

முருந்து - மயிலிறகினடி. (௯0)

ஒருமுழந் தாளிற் செங்கே ழுருப்பத்ம வைத்த கோலத்
தொருமருப் பிரண்டு காது முக்கணு நான்கு தோளும்
பொருவில்பொன் னுடையு மேனைப் பொலங்கலம் பலவுந் தோன்ற
விருவருக் கரியா னிற்ப விணைவிழி மலரக் கண்டான்.

(இ - ள்) ஒரு முழங்காலிலே, செந்நிறம்பொருந்திய ஒருபாதத்தைப்பொருந்திய திருக்கோலமாகிய ஒற்றைக்கொம்பும் இரண்டுசெவிகளும் மூன்று விழிகளும் நான்குதோள்களும் ஒப்பில்லாத பொன்னுடையும் பிற அழகிய ஆபரணங்கள் பலவுந் தோன்றும்படி, (பிரமன் திருமாலென்னும்) இருவருக்கும் அறியப்படாத கணேசப்பெருமான் நிற்க, (தக்கன்) இருவிழிகளும் மலரும்படி தரிசித்தனன் எ - று.

பொன்னுடை - பீதாம்பரம். (௯௧)

அச்சமு மன்புந் தோன்ற வடியிணை பணிந்து சூழ்போந்
துச்சியிற் கரங்க ளேற வொளிவிழி யருவி தாழ
விச்சுவ ரூப னான விநாயகப் பெருமான் றன்னை
முச்சக முழுதும் போற்று முதல்வனைத் துதிக்க லுற்றான்.

(இ - ள்) அச்சமும் அன்புந் தோன்றும்படி (விநாயகக்கடவுளுடைய) திருவடிகளை வணங்கிப் பிரதக்கணஞ்செய்து, கரங்கள் சிரமிசை யேறவும், பிரகாசிக்கின்ற கண்களிலிருந்து (ஆநந்த) அருவி யொழுகவும், விச்சுவரூபராகிய விநாயகப்பெருமானென்னும் மூவுலகத்திலுள்ள வெல்லோரும் துதிசெய்யும் முதற்கடவுளை (பின் வருமாறு) துதிசெய்யலாயினன் எ - று.

விச்சுவரூபன் - உலகரூபி. முச்சகம் - சுவர்க்கமத்திய பாதலமென்னும் மூன்றுலகங்கள். முதல்வன் - ஒவ்வொரு கருமத்திற்கும் முதலிற் பணியத்தக்கவன்

வேறு.

வேதகா ரணனுநீ வேதமோர் நான்குநீ
பாதமோர் நான்குநீ பதங்களோர் நான்குநீ
போதலை மலையமர் புவனகா ரணனுநீ
நாதநின் பெருமையை நவிலவல் லாரெவர்.

(இ - ள்.) வேதகாரணரும் தேவரீரே! ஒப்பற்ற நான்கு வேதங்களும் தேவரீரே! நான்குபாதங்களும் தேவரீரே! நான்கு பதங்களும் தேவரீரே! காலம் கடல் மலை பொருந்திய பூமியாகிய விவற்றிற்குக் காரணரும் தேவரீரே! நாதனே! தேவரீருடைய பெருமையைச் சொல்லவல்லவர் யாவர் எ - று.

பாதநான்கு - சரியை கிரியை யோகம் ஞானம் மற்றவை வெளி. (௯௨)

புராதனப் பொருளுநீ புறம்பினு முள்ளினும்
விராவுமெய்க் கரியுநீ மிகுமுப நிடதநீ
சராசர வுருவுநீ தத்துவ முழுதுநீ
பராபர நினதியல் பகரவல் லாரெவர்.

(இ-ள்.) பழமையாகியபொருளுந்தேவரீரே, புறத்திலும் அகத்திலுங்கலந்த உண்மையாகிய சாட்சியுந்தேவரீரே! மேம்பட்ட உபநிடதங்களுந்தேவரீரே! சராசரங்களினுருவமுந்தேவரீரே! தத்துவங்கள் யாவுந்தேவரீரே! பராபரனே! தேவரீருடைய இயற்கையைச் சொல்லவல்லவர் யாவர்? எ-று.

உபநிடதம் அநேக ஆயிரமெனக் கூறப்படும் அவற்றுள் ஈசாவாசியமுதல் முத்திகோபநிடதமிறுதியாக நூற்றெட்டுச் சிரந்தனவென முற்காலத்துத் தொகுக்கப்பட்டுள்ளன அவற்றையும் மதக்கோட்பாடுடையார் தத்தமக்கேற்றவாறு கையாண்டு வருகின்றார்கள் (௯௨)

மூவர்கா ரணனுநீ மூன்றுகா ரணமுநீ
மூவகை யுலகுநீ மொழியுமுச் சுடருநீ
மூவகை யுயிருநீ மூவகை யுருவுநீ
தேவனின் னருடெளி யவல்ல லாரெவர்

(இ-ள்.) மூவர்க்குக் காரணருந்தேவரீரே! மூன்றுகாரணங்களுந் தேவரீரே! மூவகை யுலகங்களுந்தேவரீரே! சொல்லுகின்ற முச்சுடர்களுந்தேவரீரே! மூவகை யுயிர்களுந்தேவரீரே! மூவகை யுருவமுந்தேவரீரே! தேவனே! தேவரீருடைய திருவருளைத் தெளியவல்லவர் யாவர்? எ-று

மூவர் - பிரமன் விண்டு உருத்திரன் மூன்று காரணங்கள் - முதற்காரணம் துணைக்காரணம் நிமித்தகாரணம் மூன்றுலகு - சுவர்க்கம் மத்தியம் பாதலம். முச்சுடர் சூரியன் சோமன் அக்கினி. மூவகையுயிர் - விஞ்ஞானகலர் பிரளயாகலர் சகலர். இவருள், ஆணவமல மொன்றையுடையவர் விஞ்ஞானகலரும், ஆணவகன்மமலங்க ளிரண்டையுடையவர் பிரளயாகலரும், ஆணவகன்மமாயை யென்னு மும்மலங்களையுடையவர் சகலருமாவர். மூவகையுரு - தூலவுரு சூக்குமவுரு காரணவுரு.

இந்திரி யங்களி னிசைபதி தெய்வநீ
யிந்திரன் முதலிய வெண்டிசைத் தேவர்நீ
யந்திநண் பகலுநீ யறுவகைப் பருவநீ
யெந்தைநின் னுருவினை யியம்பவல் லாரெவர்.

(இ-ள்.) இந்திரியங்களின் சொல்லத்தக்க அதிதெய்வங்களுந் தேவரீரே! இந்திரன் முதலிய எட்டுத் திக்குப்பாலர்களுந் தேவரீரே! அந்தியும் நடுப்பகலுந் தேவரீரே! அறுவகைப்பருவங்களுந் தேவரீரே! எந்தையே! தேவரீருடைய செயல்களைச் சொல்லவல்லவர் யாவர்? எ-று.

அறுவகைப்பருவம் - கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனிலென்பன (௯௩)

ஏகனீ யனேகனீ யிருளுநீ யொளியுநீ
போகிநீ யோகிநீ புலவரெல் லாருநீ

சாகர மேழுநீ தடவரைக் குலமுநீ
மாகநின் னடிமலர் மருவவல் லார்எவர்.

(இ - ள்.) ஏகமானவருந் தேவரீரே! அநேகமானவருந் தேவரீரே! இருளுந் தேவரீரே! வெளிச்சமுந் தேவரீரே! போகியுந் தேவரீரே! யோகியுந் தேவரீரே! தேவர்கள் யாவருந் தேவரீரே! சமுத்திரங்களேழுந் தேவரீரே! விசாலமான மலைத் தொகுதிகளுந் தேவரீரே! ஆகாயரூபியே! தேவரீருடைய திருவடித்தாமரையைப் பொருந்த வல்லவர் யாவர்? எ - று.

ஏகன் - ஒன்றியானவன். சாகரமேழு இவை உவர்நீர் நன்னீர் பால் தயிர் நெய் கருப்பஞ்சாறு தேன் என்பவற்றை யுடையவை. (௬௭)

அறைபிர மேயநீ யப்பிர மேயநீ
பறையுமப் பாவனை யுநீ பாவனா தீதநீ
நிறைபரப் பிரமநீ நிலமுதல் ஐந்துநீ
யிறைவநின் னருளினை யெய்தவல் லார்எவர்.

(இ - ள்.) சொல்லத்தக்க பிரமேயமுந் தேவரீரே! அப்பிரமேயமுந் தேவரீரே! சொல்லத்தக்க பாவனையுந் தேவரீரே! பாவனாதீதமுந் தேவரீரே! நிறைந்த பரப்பிரமமுந் தேவரீரே! நிலமுதலிய ஐம்பூதங்களுந் தேவரீரே! இறைவரே! தேவரீருடைய திருவருளையடைய வல்லவர் யாவர்? எ - று.

நிலமுதலைந்து மண் நீர் தீ காற்று ஆகாயம். பிரமேயம் - அளவிடக்கூடியது.

மிருதிநீ புராணநீ வேறுபல கலையுநீ
வருணமோர் நான்குநீ வனமுப வனமுநீ
தருவொடு கொடியுநீ சகலசெந் துக்கள்நீ
யொருவநின் றன்னியல் புணரவல் லார்எவர்.

(இ - ள்.) மிருதிகளுந் தேவரீரே! புராணங்களுந் தேவரீரே! வேறுவகைப்பட்ட பலகலைகளுந் தேவரீரே! வருணங்கள் நான்குந் தேவரீரே! வனங்களும் உபவனங்களுந் தேவரீரே! மரங்களுங் கொடிகளுந் தேவரீரே! சகலசெந்துக்களுந் தேவரீரே! ஒப்பற்றவரே! தேவரீருடைய இயற்கையை அறியவல்லவர் யாவர்? எ - று.

மிருதி - தருமநூல் பதினெட்டு அவையாகஞ்ஞோ பெயரானவிளங்கும். அவை மநு அத்திரி ஔரிதம் விட்டுணு யாஞ்ஞவற்கிய முதலியன. புராணங்கள் - மகாபுராணங்கள் பதினெட்டு; உபபுராணங்கள் பதினெட்டு. கலை - அறுபத்துநான்கு வகைத்து. வருணம் நான்கு - பிராமணன் அரசன் வைசியன் சூத்திரன். (௬௮)

காமமா திகளுநீ கடும்பசி தாகநீ
நாமநித் திரையுநீ நகுவினோ தங்கள்நீ
யேமமார் பொறையுநீ யின்பநீ துன்பநீ
வாமனே நின்கழல் மதிக்கவல் லார்எவர்.

(இ - ள்.) காமமுதலியனவுந் தேவரீரே! கொடுமையாகிய பசியுந்தாகமுந் தேவரீரே! அச்சந்தரும் நித்திரையுந் தேவரீரே! சிரிக்கத்தக்க அற்புதங்களுந் தேவரீரே! இன்பம்பொருந்திய சாந்தமுந் தேவரீரே! இன்பமுந் தேவரீரே! துன்பமுந் தேவரீரே! வாமனே! தேவரீருடைய திருவடியைத் தியானிக்கவல்லவர் யாவர்? எ - று

காமமாதிகள் - காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம். வாமன் அழகுடையவனென்றும் குறுகிய வடிவுடையவனென்றும் பொருள்படும். (௬௦)

அருளுநீ மறமுநீ யன்புநீ வன்புநீ
தெருளுநீ மருளுநீ செல்வநீ வறுமைநீ
வெருளுநீ தேற்றநீ வேறுநீ யொன்றுநீ
குருவநின் குணங்களைக் குறிக்கவல் லாரெவர்.

(இ - ள்) அநுக்கிரகமுந் தேவரீரே! கோபமுந் தேவரீரே! அன்புந் தேவரீரே! பகைமையுந் தேவரீரே! ஞானமுந் தேவரீரே! அஞ்ஞானமுந் தேவரீரே! செல்வமுந் தேவரீரே! தரித்திரமுந் தேவரீரே! மயக்கமுந் தேவரீரே! தெளிவுந் தேவரீரே! வேறுமையுந் தேவரீரே! ஒவ்வொன்றுந் தேவரீரே! குருவானவரே! தேவரீருடைய குணங்களைக் குறிக்கத்தக்கவர் யாவர்? எ - று. (௬௧)

புண்ணிய தலங்கணீ பொருவிறீர்த் தங்கணீ
வண்ணமூர்த் திகளுநீ வரந்தரும வள்ளனீ
பண்ணியம பலவுநீ பரமசுப பொருளுநீ
யண்ணலே நினசெய லறியவல லாரெவர்.

(இ - ள்) புண்ணியஸ்தலங்கள் தேவரீரே! ஒப்பில்லாத தீர்த்தங்கள் தேவரீரே! அழகிய மூர்த்திகளுந் தேவரீரே! வரங்களை யுதவும் வள்ளல் தேவரீரே! பல பண்ணியங்களுந் தேவரீரே! சிறந்த மதத்தின் பொருளுந் தேவரீரே! தலைவரே! தேவரீருடைய செயல்களை யறிய வல்லவர் யாவர்? எ - று. (௬௨)

செயவினை முதலுநீ செயபபடு பொருளுநீ
செய்வினைத் தொழிலுநீ செய்கரு மப்பய
னுய்வகை யவரவாக குதவவல் லவனுநீ
மெய்வலாய் நினதியல விளக்கவல லாரெவர்.

(இ - ள்) செய்கின்ற வினைமுதலுந் தேவரீரே! செய்யப்படுகின்ற பொருளுந் தேவரீரே! செய்கின்ற வினைத்தொழிலுந் தேவரீரே! (அவரவர்) செய்கின்ற கருமப்பயனை அவரவர்க்கு உய்வகையாகக் கொடுக்கவல்லவருந் தேவரீரே! மெய்மையில் வல்லவரே! தேவரீருடைய உண்மையியல்பை விளக்கவல்லவர் யாவர்? எ - று.

வினைமுதல் செயபபடுபொருள் வினைத்தொழிலென இலக்கண முறையாக [கருத்தா] எழுவாய், செயப்படுபொருள், [வினைமுற்று] பயனிலையெனச் சொல்லணி செய்யப்பட்டது. (௬௩)

குணமொடு குறிபல கொள்கைகொள் ளாயெனி
னணிமலர் மணமென வாகமுயி றுயிரெனப்
பணியுயி ரறிவெனப பயிலுமத் துவிதமாங்
கணபதி நினதியல காணவல லாரெவர்.

(இ - ள்.) அழகிய மலரும் மணமும்போலவும், உடலுமுயிரும்போலவும், பணிக்கின்ற உயிருமுணர்வும் போலவும் விளங்குகின்ற அத்துவிதமாகிய கணநாதப் பெருமானே! தேவரீர் குணமுங் குறியும் பலவகைக் கொள்கையுங் கொள்ளீராயின் தேவரீருடைய இயல்பைக்காண வல்லவர் யாவர்? எ - று.

அத்துவிதம் - இரண்டன்மை (௬௪)

என்றுதோத் திரம்பல வியம்பிய தக்கன்மு
னன்றுதன் னுருவமே நான்மறை யாளனா
மென்றுநேர் காட்டுபு மதமழைபூக கயமுக
னொன்றுநின் றுதிகளுக் குவந்தன மென்றனன்.

(இ - ள்) என்று பலதோத்திரங்களைக்கூறிய தக்கனென்பவனுக்குமுன்னே, மதநீரைச்சொரியுங் குளிர்ந்த யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள் நன்மைபொருந்திய தமதுருவமே நான்குவேதங்களிலும் வல்ல முற்கல முனிவராகப் பொருந்தக் காட்டி, நீயுரைத்த உன்னுடைய தோத்திரங்களுக்கு மகிழ்ந்தோமென்றனர் எ - று.

காட்டுபு - செய்பு என்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம். காட்டியெனப்பொருள். (௬௫)

தம்பிரா னருளலுந் தக்கன் மீட்டுமெய் பணிந்
தெம்பிரா னடியனே னில்லினெண் டிருவுமுற்
றும்பரார் புகழ்தர வோங்கிநான் வாழுமா
நம்பிரா னருகென நாதனை ரோதுவார்.

(இ - ள்.) (இவ்வகையாக) விநாயகக்கடவுள் அருள்புரியவுந் தக்கன் மறுபடியும் வணங்கி, எமதுபெருமானே! அடியேன் கிரகத்தில் அட்டலட்சுமிகளும் பொருந்தித் தேவர்களும் புகழும்படி மேம்பட்டு யான் வாழும் வகையாக வரந்தருக நம்பிரானே! எனவேண்ட விநாயகக்கடவுள் திருவாய்மலர்ந்தருளுகின்றார் எ - று.

வேறு.

முற்கல னெனும்பெயர் முன்னெம் மாற்பெற்ற
தக்கவ னவனுருச் சார்ந்த நம்முடை
மிக்கவிவ் வுருவுகாண் விளம்பு மன்னவன்
பொக்கமற் றெமதடி போற்றும் பத்தியான்.

(இ - ள்) முற்கலனென்னும் பெயரைப் பூர்வத்தில் எம்மாற்பெற்ற தக்கவனாகிய அவனுடைய உருவத்தைச்சார்ந்த நம்முடைய மேம்பட்ட இவ்வடிவினைக் காண்பாயாக. சொல்லிய அம்முற்கலமுனிவன் பொய்ம்மையின்றி எம்முடைய திருவடியைத் துதிசெய்யும் பத்தியுடையவன். எ - று. (௬௭)

பொக்கம் - பொய்ம்மை.

அவனுயிர் நமக்குரு வான பெற்றியா
லவனுரு நமதுரு வதனைத் தேற்றுவா
னவனுரு வாகியு மளித்துங் காட்சியை
யவனுருக் காற்றினி னரிட்டந் தீர்த்தனென்.

(இ - ள்.) அம்முற்கலனுடைய உயிரானது நமக்கு வடிவமானதன்மையால், அவனுருவமே நமதுருவமென்பதனைத் தெளிவிக்கும்படி அவன்வடிவமாகியுங் காட்சியைக்கொடுத்தோம். அவன் தேகத்தினின்று தோன்றிய காற்றினால் உன்னுடைய துயரத்தை விலக்கினோம் எ - று. (௬௮)

அன்னவன் றனைச்சர ணடைந்த தக்கனே
நின்னுள விழைவெலா நிரப்பு வானுயர்

பொன்னக ரரசெனப் பொலிவை போகென
முன்னவன் மறைந்தனன் முடிகொள் வீமனே.

(இ - ள்.) தக்கனே! அமமுறகலமுனிவனைச் சரணமடையக்கடவை. (அவனே) உன்னுடைய மனதிலுள்ள விருப்பங்களையெல்லாம் நிறையச்செய்வான். (அதனால்) உயர்வாகிய பொன்னகரத்திற் கரசனாகிய இந்திரனைப்போல விளங்குவை. செல்கவென்று திருவாய்மலர்ந்தருளி முற்பட்டவராகிய விநாயகக்கடவுள் அந்தர்த்தானமாயினார் கிரீடமணிந்த வீமராசனே! (என்று விசுவாமித்திர முனிவர் அவனுடன் கூறினார்) எ - று. (௪௧)

தக்கன்பிணிநீங்குபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௨௫௯

முக்கலர் தக்கனுக் குபதேசித்தபடலம்.

கற்றைச் சடிலத் தேரம்பன் காட்சி கொடுத்து மறைதலோடும்
பெற்றம் பிரிந்த கன்றெனவும் பெறுந்தாய் பிரிந்த மகவெனவும்
பற்றும் பொருளைக் பெற்றிழந்த படர்கூர் வறுமை யானெனவுஞ்
சற்றுந் தரியா துளங்களையத் தக்க னிலமேல் வீழ்ந்தெழுந்தான்.

(இ - ள்) கற்றையாகிய சடையையுடைய விநாயகக்கடவுள் காட்சியளித்து மறைந்தவுடனே, தக்கன் பசுவைப்பிரிந்த கன்றுபோலவும், பெற்றதாயைப் பிரிந்த பிள்ளைபோலவும், தேடத்தக்க பொருளைக் கையிற்பெற்றுப் போக்கடித்த துன்ப மிக்க வறுமையாளன்போலவும், சிறிதுபொழுதுந் தாளாமல் மனங்கலங்கப் பூமியின் மேல்விழுந்து (புரண்டழுது) எழுந்தான் எ - று (௧)

சென்ற திசையை யெதிர்நோக்குந் திசைக டோறுந் துரீஇச் செல்லு
நின்று பெருமா னருள்புரிந்த நிலத்திற் கிடந்து புரண்டலறு
மன்றல் கமழ்ந்த முடிமிலைந்த மாலை யெனவே மலர்ந்ததுணர்க்
கொன்றை மரத்தை யெதிர்வணங்குங் குறுகித் தழுவி நனிமோக்கும்.

(இ - ள்) (விநாயகக்கடவுள்) சென்றதிசையை யெதிரேபார்ப்பான், திசைகளிலெல்லாந் தேடிச்செல்லுவான்; கணேசப்பெருமான் நின்று அநுக்கிரகஞ்செய்த விடத்தில் விழுந்து புரண்டு அலறுவான் வாசனைவீசுந் திருமுடியிற்கட்டிய திருமாலையைப்போல் மலர்ந்த மலர்க்கொத்துக்களையுடைய கொன்றைமரத்தை யெதிரே பணிவான், நெருங்கி (அதனை)த் தழுவி மிகவும் மோப்பான். எ - று.

காளைச் சுரும்பு நறைபருகுங் கமலத் தடமே புள்ளினமே
வாளைக் கயமே யகன்றில்களே மாட நிரையே கபோதகமே
பாளைக் கமுகே மடற்பனையே பயிலு மன்றிற் குருகினமே
தாளைக் கருதார்க் கருளாத சாமி வரவுங் கண்டீரே.

(இ - ள்) இளம்பருவமுடைய வண்டுகள் தேனைப்பருகுந் தாமரைத்தடாகமே! பறவைச்சாதிகளே! வாளைமீன்கள் பொருந்திய கயங்களே! பொருந்திய

ஆணன்றில்களே! வரிசையாகிய மாடங்களே! கபோதகங்களே! பாளைகளையுடைய கமுகமரங்களே! மடலையுடையபனைமரங்களே! சஞ்சரிக்கும் அன்றிற் பறவையினங்களே! (தம்முடைய) திருவடியைத் தியானஞ்செய்யாதவர்களுக்கு அருள்புரியாத சாமியாகிய கணேசப்பெருமான் எழுந்தருளவுந் தரிசித்தீர்களா? எ - று.

கபோதகம் - கரும்புறா. அகன்றில் - ஆணன்றில்.

'வாளைக்கயமே மகன்றில்களே'' எனப்பாடங்கொண்டு, ''வாளைமீன்கள் பொருந்திய கயத்தின்மேவும் அகன்றில்களே'' எனப் பொருளுரைப்பாரு முளர். (௩)

ஐயன் மலர்ந்த கருணைமுக மனைய முகம்பெற் றீரென்று
வெய்ய களிற்றி னடிதாழும் விளங்கு முருவி னிறத்ததெனச்
செய்ய தளிரைக் கரங்கூப்புந் தேவ னடிபோன் மலர்ந்ததெனப்
பெய்யு மதுப்பங் கயமலரைப் பெரிது மிறைஞ்சிப் பழிச்சுமால்.

(இ - ள்) எம்பெருமானுடைய மலர்ந்த திருமுகத்தையொத்த முகத்தைப் பெற்றிருக்கின்றீர்களென்று, கொடியயானைகளின் கால்களைப் பணிவான, பிரகாசிக்கின்ற (இறைவர்) திருவுருவைப்போல நிறமுற்றிருந்ததென்று சிவந்த தளிர்களைக் கைகூப்புவான்; கணேசருடைய திருவடிபோல மலர்ந்துளதென்று தேன் சொரிகின்றதாமரைமலரை மிகவும் வணங்கித் துதிபுரிவான் எ - று (௪)

மெழுகா ரழலுற் றெனவிளகி மெய்வே றாகி யிவ்வாறே
யெழுபே ரரவ மந்திரத்தா லிலகு மருளா ழியைக்கலக்கி
முழுதா னந்தச் சுவையமுத மொண்டு பருகி மாணாக்கர்
குழுவா தரிக்கு முற்கலனார் கோதி லிருக்கை சென்றடைந்தான்.

(இ - ள்) மெழுகானது பொருந்திய தீயிற்பட்டாற்போல (மனம்) இளகி, உடல் வேறுபட்டு இவ்வகையாகவே, எழுகின்ற பேரொலியையுடைய மந்திரத்தினால், பிரகாசிக்கின்ற திருவைக்கடலை [கடைந்து] கலக்கி மிக்க ஆனந்தமென்னுஞ் சுவையையுடைய அமுதத்தைமொண்டு பானஞ்செய்து, மாணாக்கர் கூட்டத்தைக் காக்கும் முற்கலமுனிவருடைய குற்றமில்லாத ஆச்சிரமத்திற்போய்ச் சேர்ந்தனன். (தக்கனென்பவன்) எ - று (௫)

தாவில் வேத முதலான சகல பொருளு மிகத்தெளிந்து
தேவ தேவன் றிருவடியைச் சிறப்ப வுணர்ந்த வருந்தவத்தான்
மேவி யோகப் பெருவலியால் வேண்டு முருவங் கொளத்தக்கான்
பூவில் வேறு கதிரவன்போற் பொலிமுற் கலனை யெதிர்கண்டான்.

(இ - ள்.) கெடுதலில்லாத வேதமுதலிய எல்லாப்பொருள்களையு மிகுதியாகத்தெளிந்து தேவதேவனுடைய திருவடிகளை மேம்படத்தெரிந்த, அருந்தவத்தினாலும், பொருந்திய யோகத்தின் மிக்கவலிமையாலும் விரும்பிய வுருவங்களைக் கொள்ளத்தக்கவராகிய பூமியிலுள்ள வேறுசூரியனைப்போல விளங்கும் முற்கலமுனிவனை யெதிரேகண்டனன். (தக்கன்) எ - று (௬)

மன்னுங் கருணை விழிமூன்று மலர்க்கை நான்கு மொழுகு
துன்னு மேனி யவயவமுந் துலங்கச் சிறப்பத் தாழாமே
பொன்னின் மணியி னுருக்கொண்டு பூசை புரியுங் கணபதியி
னன்னர் மலர்ச்சே வடித்துணையு நயப்ப நோக்கி யெதிர்பணிந்தான்.

(இ - ள்.) நிலைபெறுங் கிருபையையுடைய திருவிழிகள்மூன்றும், தாமரை மலர்போன்ற திருக்கரங்கள் நான்கும், மிக்க அழகும், நெருங்கிய பிற அவயவங்களும் விளங்க, சிற்பவிதிமுறைபிறழாது பொன்னாலும் நவமணியாலும் உருவஞ்செய்து பூசைபுரியுங் கணேசபெருமானுடைய நல்ல மலர்போன்ற சிவந்த உபயபாதங்களும் விரும்பத் தரிசித்து எதிரே வணங்கினன் எ - று (எ)

தண்ட மெனவே விழுந்தபடி தரையி னெடிது கிடந்தெழுந்து [யத்
கொண்டன் மழையின் விழிபொழியக் கோடை யெனநெட் டுயிர்ப்பெறி
தொண்டு புரிந்து பரவசனாய்த் தொழுது நிற்ப வவனையெதிர்
கண்டு பெருகன் பினைவியந்து கருணை கூர்ந்து முனிச்செல்வன்.

(இ - ள்.) தண்டத்தைப்போல விழுந்தபடியே பூமியின்மேலே நெடுநேர மிருந்து (பின்னர்) எழுந்து, மேகமழையைச்சொரிவதுபோல, கண்கள் (நீரைச்) சொரியவும், கோடைபோலப் பெருமூச்செறியவும் பணிவிடைசெய்து, பரவசனாகிப் பணிந்து (தக்கன்) நிற்க, முனிச்செல்வராகிய முற்கலமுனிவர் அவனை யெதிரேபார்த்து மிக்க அன்பினைவியந்து கிருபைமிகுந்து. எ - று. (அ)

வேறு.

பெயரினைக் கியாது பிள்ளாய் பேணிவாழ் நகரம் யாது
நயமுற மனத்தின் வேட்ட நன்பொரு ளெதுசொல் லென்றான்
றயவுறு முனிவன் செஞ்சொற் றண்ணமிழ் துண்டு தக்க
னயாவுதீரத் தங்கை கூப்பி யனைத்தையுஞ் செப்ப லுற்றான்.

(இ - ள்) பிள்ளாய்! உனக்குப்பெயர்யாது? விரும்பிவசிக்கு நகரம்யாது? நன்மைபெற மனதிற்கருதிய நற்பொருள் யாது? அவற்றைச் சொல்லகவென்றனர். கிருபைபொருந்திய முற்கலமுனிவரது செவ்விய சொற்களாகிய குளிர்ந்த அமிர்தத்தைப்பருகி, தக்கன் சோர்வகன்று அழகியகைகளைக்குவித்து (அவர்வினாவியவற்றிற்கு விடையாக) எல்லாவற்றையுஞ் சொல்லத்தொடங்கினன். எ - று. (கூ)

வேறு.

தேனொழுகு சோலைவளர் தேயங்கரு நாடம்
பானுபுரம வாழ்பதிய திக்கணர சாளும்
வானுயர்சி றப்புடைய வல்லவனென் றந்தை
கானொழுகு கூந்தலுடை யாள்கமலை நற்றாய்.

(இ - ள்) தேனொழுகுஞ் சோலைகள் வளரப்பெற்ற கருநடதேயம் - அதில் யான் வாழுநகரம் பானுபுரம் - அப்பானுபுரத்தில் அரசுபுரியும் மிக்க உயர்ந்த சிறப்புக்களையுடைய வல்லவராசன் என்பிதா - தேன்சொரியும் அளகத்தையுடைய கமலையென்பவள் என்னுடைய நற்றாய். எ - று.

நற்றாய் - ஈன்றதாய். (௰)

காட்சியொடு கண்ணுமுனை கேள்வியொடு காது
மாட்சிபுரி வாக்குமற வன்குறளை யாகி
மூட்சிசெய்பெ ரும்பிணியின் மூழ்கிமுடை நாற
நாட்செய்பவ மாக்பொழுதே நாயடியே னுற்றேன்.

(இ - ள்) பாரமையுடனே கூடிய விழியும், செவ்வைகெட்ட உடனே கூடிய செவியும், மாட்சிமைசெய்கின்ற போதமுடையராயும் மெய் கொடிய குளங்களில், மூளச்செய்கின்ற பெரிய விபரீதியில் அழியும் படிக்காக நின்ற, பூர்வத்தில், செய்த பாவங்களை அழிப்பேன் பிரகாசமே என்னும் எ - று.

குருமெஞ்செவிமெய்யந்தத்தையுந் தானடையும் பரிசுத்தமாக உடைய வனையிருக்கின்ற என்பது கருத்து (௪௧)

பணிநீதி மாயமொடு பல்லைக் கிழித்து
பின்னை மொழி விரோதமெனக் குறுகியறு மா
பிணைமாமுனி வழியுடைய பெருமையைக் கொண்டு
கொண்டக்கின் வணங்கின கொண்டு பெருமானே.

(இ - ள்) பணிதீரப் பதுமையில், பல்ல மாமங்கையர் (எனப்புள்ளி) துயரத்தை மொழியச்செய்வெனென்று, என தந்தையாகிய வல்லமையால் முயற்சி செய்து, (அவை பயன்றாமையின்) பின்னாக் கொடுத்தவளையும், என்னுடைய தாயா னவள் என்னைக் கொண்டு இரங்கத்தில் வணங்கிய பிரானை வாழ்த்து (என க்காத்து) வருமமொருதினத்தில் எ - று.

பலவகைத்திறமென்றது பணி பகிர நீடாக்கல் (௪௨)

வீதியிடை நீயிராவர மெய்பிரான் முகந்து
வேதமுடி நமபரிய விமலருக்கு மேன்மை
போதகமெ நந்தனருள் போகங்கொடு வெள்ளை
சோதியுதித் தேகப்பெருந்தாடகினை யுமேற்றலை.

(இ - ள்.) வீதிவழியே தேவர் வருகையில், (சேவிற்றவைடய) தேகத்திலே புகுந்த காற்றினால் (அடியேன்) மனமுழுக்கும் அழிய, இவ்வுலகைப் படைத்தோன். குருகக்கொருவருடைய திருவாசனத்தைத் தகர்ந்தக் கண்டேன், சொந்தமானது பியாகிய கணேசபெருமானை பிரானைரங்கனைக் கண்டாலும் சேவிக்கையடைந்தேனே எ - று.

மறுவன்றது அஞ்சாக்கு மகிமை (௪௩)

மழுக்கமல மாலைமணி மேன்மை
வழுக்கஞ் குருவில் வைகுந்தம் பெற
முழுக்கனும் திவ்யருவின் பூஜையிலே
இழுக்குடையர் [illegible]

(இ - ள்) மயூரமுடையதாம் நாம பரியும் பேறு [illegible]. குற்றமற்ற கனைருவுடன் வழுக்குரிய கவிநாராயண் [illegible], தேவர் குடைய இவ்வுருவை முழுக்க முறைப்படி [illegible] (அக்கல்) வல்லோ முக்குடைய தேவரீருடைய இறைவராகிய விநாயகப்பெருமாள் திருவுருவ மொன்றாயாம் எ - று.

தனு இல்லா [illegible] இராமையும் - பனை மைக் கவ்வு முருபாம்'' என்பது முகிரம (௪௪)

அத்தனை [illegible]
மெத்தவினை வழிபாட்டில் [illegible]

பத்தியுமளித் தருளுக வென்று பணிந்தானப்
புத்திரனை நோக்கியுயர் பூசுரன் விளம்பும்

(இ - ள்.) அத்தன்மையாகிய (சிறப்பினையுடைய) தேவரீருடைய திருவருளால் உலக வாழ்க்கையையடைய விரும்பினேன் திருவிழிகளாற் கிருபைசெய்து பத்தியையுங் கொடுத்தருளவேண்டுமென்று (தக்கன்) வணங்கினான். அச்சிறுவனாகிய தக்கனைச்சிறந்த முக்கலமுனிவர் பார்த்துக் கூறுகின்றார் எ - று.

விழிக்கருணை - கிருபாநோக்கம். பூசுரன் - பூலோகதேவன், அந்தணன். ()

வேறு

நீயே பெரும்பாக்கியமுடையை நீயே யுடம்பின் பயன்பெற்றோய்
நீயே வேண்டுங் காரியத்தை முடித்துக் கொண்ட நிறைதவத்தோ
னீயே முக்கண் விநாயகன்பா னிகரி லாத வன்புடையை
நீயே முற்றத் துறந்தோனு நீயே சீவன் முத்தனுமே.

(இ - ள்.) நீயேமிக்க செல்வத்தைப்பெற்றவன். நீயே (மானுட) தேகத்தாலாய பிரயோசனத்தை யடைந்தவன், நீயே செய்யவேண்டிய காரியத்தைச்செய்து முடித்துக்கொண்ட நிறைந்த தவத்தையுடையவன்; நீயே திரிநேத்திரங்களையுடைய விநாயகக் கடவுளிடத்தில் ஒப்பில்லாத அன்புடையவன் நீயே முற்றத்துறந்தவனும் நீயே சீவன் முத்தனுமாயினை எ - று. (கசு)

தேவ வருட மாயிரம்பின் செல்ல வரிய தவமுடித்தும்
பாவ மகலத் தியானித்தும் பலவே றான பணிபுரிந்து
மேவ வெனக்குத் தெரிசனந்தா னீந்தா னில்லை யிபமுகப்
பூவ ரிதழித் தொடைவேய்ந்த பொலம்பூஞ் சடிலத் தேரம்பன்.

(இ - ள்) ஆயிரந் தேவவருடங்கள் கழிபத்தக்க அருந்தவஞ்செய்து முடித்தும், பாவமொழியும்படி தியானஞ்செய்தும், பலவேறு வகைப்பட்ட பணிவிடைகளைச் செய்தும், சிங்காரஞ்செய்யும் வண்டுகள்பொருந்திய அழகிய கொன்றைமலர்மாலையணிந்த அழகிய பொன்னிறம்பொருந்திய சடையையுடைய விநாயகக்கடவுள் எனக்குப் பொருந்தத் தரிசனங்கொடுத்தாரில்லை எ - று.

மானுடவருடம் ஒன்றுகொண்டது பிதுராகட்கோர் தினமென்றும் அவ்வகைய தினங்களாலாய வருடமொன்று கழிவது தேவர்கட்கோர் தினமென்றுஞ் சொல்லப்படும். அவ்வகைய தினங்களாலாய வருடத்தைத் தேவவருடமென்பர். (கஎ)

வேறு

மூவர்க ளுலகத் தார்க்கு முத்தொழில் புரியு மாபோல்
மூவர்கட் கருத்தத் தானே முத்தொழில் புரியா நின்ற
மூவாக் கணமுதல்வனான முதலிலா முதல்வன் பாத
மூவகைக் கரணத் தானு முயங்கினோ னினையா ரொப்பார்.

(இ - ள்) (பிரமனாதி) மூர்த்திகள் மூவரும் உலகத்தார்க்கு (சிருட்டிமுதலிய) முத்தொழில்களைச்செய்யும் வகைபோல, (அப்பிரமனாதி) திரிமூர்த்திகளுக்கே (சிருட்டியாதி) முத்தொழில்களைச் செய்கின்ற திரிமூர்த்திகளுமாயுள்ள ஆதியில்லாத முதற் கடவுளாகிய கணேசப்பெருமானுடைய திருவடியை (மன வாக்கு காயமென்னும்) திரி

கரணங்களாலும் (முறையே) சிந்தித்துத் துதித்துப் பணிந்தனே. உனக்குச் சமான மாவார் யாவர்? (ஒருவருமிலர்) எ - று.

மூவர்கள் - பிரமன் விஷ்ணு உருத்திரன். முத்தொழில்-ஆக்கல் காத்தல் அழித்தல். மூவகைக்கரணம் - மனம் வாக்கு காயம். (௧௮)

அந்தணர்க் கழலின் வண்ண மாகியே யோகர்க் கெல்லா
மந்திர வண்ண மான வள்ளலென் கண்ணுற் றாங்கு
முந்துறத் தோற்றிற் றெல்லா மொழிந்தனை யுதவுங் கைம்மா
றெந்தெனத் தழுவிக் கொண்டங் கிலகுடல் தைவந் திட்டான்

(இ - ள்) வேதியர்களுக்கு யாகாக்கினியின் வடிவமாகி, யோகஞ்செய்வார் யாவர்க்கும் மந்திரவடிவமாகிய கணநாதப்பிரானை என் கண்ணெதிரே பொருந்தினது போல, உன்முன்னே பிரசன்னமானதை முழுவதுங்கூறினை. (உனக்குயான்) செய்யத்தக்க பிரதியுபகாரம் யாது? என்று, (முக்கலமுனிவர்தக்கனுடைய) விளங்குகின்ற உடலைத்தடவினார் எ - று.

வள்ளல் - வரையாது கொடுப்போன். எந்து - எது என்றதன் விகாரமென்றுவது, தெலுங்குபாஷையிலிருந்துவந்த திசைச்சொல்லென்றுவது கொள்க. (௧௯)

அளவளா யிருந்த பின்னை யக்கர மொன்றே யாகி
வளமெலா மருளே ரம்பன் மந்திரந் தக்கன் காதிற்
கொள்ளவுப தேசித் தெண்ணுங் கொள்கையு மருளிச் செய்தா
னிளவலைக் காணா தேடி யெய்தினள் கமலை தானும்.

(இ - ள்) (இவ்வாறு) அளவளாவியிருந்த பிறகு, (முக்கலமுனிவர்) எழுத்தொன்றேயாகி எல்லா நலத்தையுந் தொகுக்கத்தக்க விநாயகப்பெருமானுடைய மந்திரத்தை, தக்கன்செவியிற்கொள்ளும்படி உபதேசித்து, அதனைக்கணிக்கும் முறைமையையும் அருளிச்செய்தனர். கமலையென்பவள் தன் புத்திரனைக் காணாதவளாகித் தேடிக்கொண்டு (அங்கு) வந்தனள் எ - று.

அளவளாவல் - கலந்துபேசல் முதலியன. "மந்திரம்" என்றதை "அக்கர மொன்றேயாகி" என்றதால் ஏகாக்ஷரமந்திரமெனக. (௨௦)

வணங்கினள் முனிவன் பாதம் வழுத்தினள் விருப்பு நோக்கி
யணங்கனை யிவனு நீயு மருமறை யளந்து மெட்டாக்
குணங்குறி கடந்த நாதன் கொழுமருட் கிலக்க மானீர்
பிணங்குபல் வினையும் வென்றீர் பெறுவதென் னினிமே லென்றான்.

(இ - ள்) முக்கலமுனிவருடைய திருவடியைப்பணிந்து துதிசெய்தனள். முக்கலமுனிவர் (கமலையைப்) பார்த்து, பெண்ணே! இச்சிறுவனும் நீயும் (ஆகிய இருவரும்) அரிய வேதங்கள் தேடியுங் கண்டறியாத குணங்குறிகள் கடந்த விநாயகக்கடவுளுடைய மிக்க திருவருளுக்கு இலக்கானீர்கள், துன்புசெய்யும் பலவினைகளையு மொழித்தீர்கள்; இனிப்பெறவேண்டியது யாதுளது? என்று கூறினார். எ - று.

வணங்கினளென்பது முற்றெச்சம். (௨௧)

மந்திர மான வேக வனன்னின் மகற்குச் சொன்னோ
னிந்தையிற் கணித்து முற்றிற் றிகிரியொன் றருட்டி மன்னே

லிந்திரன் முதலோ ரெண்ண விருந்தர சாளும் வாழ்க்கை
தந்திடு மிறைவ னென்று சாற்றின னிதுவு மேலோன்.

(இ - ள்) (மகா) மந்திரமாகிய ஏகாட்சர மந்திரத்தை உன்புதல்வனுக்குபதேசித்தோம் அவன் மனத்தாற்கணித்து முடிப்பானாயின், பூமியின் மேலே ஒரே சக்கரத்தைச்செலுத்தி, இந்திரன்முதலிய தேவர்களும் (அவன் போகத்தை) எண்ணும்படி வீற்றிருந்தரசாள்வான் தலைவனாகிய கணநாதப்பெருமான் நல்வாழ்வுதருவான் என்று, மேலோனாகிய முக்கலமுனிவன் இதனையுங்கூறினன் எ - று (௨௨)

என்றுரை யாடும் வேலை யிலங்குவேல் வீமன் சூழ்ந்து
கன்றுநோய் முனிவன் மெய்யிற் காற்றினை முழுதுந் தீர
வன்றுவல் விரைந்தே ரம்ப வலனெனத் தோன்ற லன்னான்
றொன்றுசெய் தவம்யா தென்னச் சொல்லுவான் காதி மைந்தன்.

(இ - ள்) என்றிவ்வாறு சொல்லுங்காலத்தில், பிரகாசிக்கின்ற வேற்படைதாங்கிய வீமராசன்பணிந்து, துன்புசெய்கின்ற நோயானது முக்கலமுனிவனுடைய உடற்காற்றிலை முழுதுமொழியவும், அக்காலத்தில் விநாயகக்குரிசில் அவனுக்கெதிரே மிகவும் விரைந்து பிரசன்னமாகவும் அந்தத் தக்கனென்பவன் பூர்வத்திற்செய்த புண்ணியம் யாது? என (விசுவாமித்திரமுனிவனா) க்கேட்க, காதிராசன் புதல்வராகிய விசுவாமித்திரமுனிவர் கூறுகின்றார். எ - று. (௨௩)

முக்கலர்த்தக்கனுக்குபதேசித்தபடலம் முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் - ௧௨௭௧

வல்லாளன்வேதனைநீங்குபடலம்.

மந்தி யுகள மலர்ச்செழுந் தேன் மழையிற் பொழியும் பொழிலுடுத்த
சிந்து தேயந் தனில்வளத்தாற் சிறந்த பல்லி யெனும்புரத்தில்
வந்த வசியன் கலியாண னென்னும் பெயரான் மனைகற்பி
னிந்து மதியோ டறம்பலவு மியற்றி யினிது வாழ்நாளில்.

(இ - ள்) மந்திகள் பாய்தலாற் பூக்களிலுள்ள செழியதேனானது மழையைப்போலச் சொரிகின்ற சோலைசூழ்ந்த சிந்துதேசத்தில், பலவளங்களாற் சிறப்புற்ற பல்லிபுரத்திலே பிறந்த கலியாணனென்னும் பெயரையுடைய வைசியன் தன்மனைவியாகிய கற்பினையுடைய இந்துமதியென்பாளுடன் பலதருமங்களையுஞ்செய்து இனிதாகவாழுங்காலத்தில் எ - று. (௧)

இந்து மதியென் பாள்வயிற்றி னீட்டுந் தொல்லைத் தவக்குறையான்
மைந்த னொருவன் வந்துதித்தா னணிகன் சால வினைபலவுஞ்
சிந்தை மகிழ வினிதாற்றிச் செம்பொன் முதலாம் பலபொருளு
மந்த ணாளர்க் குளந்தழைப்ப வளித்து நாளும் வினைபுரிந்தான்.

(இ - ள்.) இந்துமதியென்பவள் வயிற்றில், தான் தேடிய பழையதவக்குறைவினையுடைய புதல்வனொருவன் வந்துதோன்றினன். (அதனால்) கலியாணவசியன்

மிக்க பலசெயலகளையும மனஙகளிககுமபடி இனிதாகச்செயது, செமபொன்முதலாகிய பலபொருளகளையும வேதியாகளுககு மனமடஙகுமபடி தானஞ்செய்து தினந்தோறும நறகருமஙகளைச செயதனன. எ - று (உ)

நன்று மனையி னலஙகரிதது நாணமூன
றுன நறறின ததி
லொன றுங கணிதா வலலவனென றுரைபபக கேடடு வலலாள
னென்று பெயரிட டானவசிய னிருநது தவழநது நடநதறிவு
துனற வெழில்சோ வலலாளன சுடாவெண மதிபோல வளாநாளில்.

(இ - ள) அவ்வைசியன் மிகுதியும வீட்டில் அலங்காரததைசசெயது மூன்றுநதினமாகிய நாளில, பொருநதிய சோதிடாகள வலலவனென்று சொலலககேடடு (அககுழநதைககு) வலலாளனென்று பெயரிடடான (முறையே) உடகாாநது தவழநது நடநது அறிவுடைய அழகு மிகக வலலாளன பிரகாசிககினற தாவளயமான சநதிரனபோல வளருஙகாலததில எ - று (௩)

வே று.

புறவின மலகிய பொனனணி மாடஞ
சிறுருட ஞடடயா செவவியி னீஙகிச
சுறுமலி பூநதடந துனன வெழூநத
விறனமலி சோலையி லெய்தின ஞோருநாள.

(இ - ள) புறவின தொகுதிமிகக பொனனாறசெயத அழகிய மாளிகையினின்றுஞ சிறுயாகளுடன நீங்கி ஒருநாள விளையாடலசெயயுஙகாலததில் மகரமீனகள மிகக மலாததடாகஙகள பொருநத வளாநத தேனகூடுகள மலிநத சோலையில் அடைநதனன. எ - று

செவவி - காலம சுறு - ஓாமீன இறால - தேனகூடு (௪)

நலங்கிளா முனவினை நண்ணலு மாஙகோ
ருலங்கொடு வைததொரு கொமபின னென்றே
யலஙகிய தீமபுன லாடடி நறுஙதே
னிலங்கலா தூய்பபணிந தேததி யகனறுன்.

(இ - ள) நனமை விளஙகும பூர்வ புண்ணியமடையவும், அவவிடததிருநத ஓா உருணடகல்லைக கொண்டுவநது வைத்து ஏகதநதனாகிய விநாயககடவுளேயென்று, (அதனை) அசைகினற மதுரமாகிய நீராலபிடேகிதது, நலலதேனுடன பிரகாசிககும மலர்களாலருச்சிதது வணஙகித துதிதது நீஙகினன எ - று

ஒருகொம்பினனென்றது விநாயககடவுள கயமுகனொடு போர்புரிகையில் அவன எவவகையாயுதததாலு மிறவாது வரமபெறறிருபபது கருதித தமதுவலக்கொமபைமுரிததெறிந்தனரெனபது சரிதமாதலின. (௫)

மற்றைய நாளுந மகாருட னேகிப
பறறின் மலாபபசுமை பநதரு மிடடு
முறறின மெனன முடித்தன னணைற
கறறமி லாவிளை யாடடரும பூசை.

(இ - ள) (அதனபின்னிட்ட) மறறைததினத்துஞ சிறுவர்களுடன் சென்று மனபபறறுடன பசியமலாகளாற் பநதருமிடடு முனனுள்ளிறசெய்ததுபோலவே விளையாட்டாலாகிய அரியபூசையை விநாயககடவுளுககுக குறறமிலலாது செய்துமுடிததனன. எ - று. (௬)

வேறு.

இன்ன வாறுவல லாளன் பூசையி யறறு நாளினி லோாதினந
தனனை நேருமகாரின வாழவுத யஙகிருமபதி நின்றுபோ
யன்ன மாடும லாதத டஙகள ணிநது சீதள மாாநதுகாா
மினன ளாவிய சோலை யெயதிமி குஞசி றாாகளை யேவினன.

(இ - ள) இநதவகையாக வலலாளன பூசைசெயது வருநாளில ஒருநாள தனககொபபான புதலிராகளுடன வாநதஙகிய பெரியநகரததினினறும புறநசென்று அனனஙகள மூழகும பூநதடாகஙகள அழகுறறுக குளிாசசிபெறறு மேகமும மினன லுஙகலநத சோலையையடைநது, மிககசிறுவாகளை (தொழிலசெயய) ஏவினன எ - று.

பலாகள் காவண நாட்டி னாாபலா பலவி யஙகளி யமபினா
சிலாசெ ழுஙகனி யீட்டி னாாசிலா தேம லாததொடை யாககினா
ரலாசெ ழுமபுன லகி னாாசில ராணி ணைநதுமுயத தாாசில
ரிலகு சாநதமு ரிஞசி னாாசில ரினன ராயினா யாவருமு

(இ - ள) பலாபநதலிட்டனா, பலாபலவகை வாததியஙகளை முழககினர். சிலா செழுமைதஙகிய பழஙகளைச சேகரிததனா, சிலா தேன சொரியும மலாமாலைகள தொடுததனா; சிலா மலாகளும செழிய நீருஙகொணடுவநது கொடுததனா சிலா பஞச கவவியஙகளைச் சேகரிததனா, சிலா விளஙகுகினற சநதனமரைததனா; எலலாரும இவவகையாக (வலலாளனுடைய கணேசபூஜைககு உபகரணஙகளைச சிததஞ) செயயலாரானாாகள எ - று (௮)

நிறைக யபபுன லாடி மெயயிலவெண ணீறு பூசிவல லாளனு
நறைம லாதகழை யால யததினை நணணி நாதனை யன்பினுன
முறையின மெனபுன லாட்டி வணடுமு ழஙகு மாலைய ணிநதுபின
குறைவி லுணடிக ளலகி யஙகைகு விததி றைஞசியி ருநதனன.

(இ - ள) வலலாளன நிறைநத ஆழமாகிய நீரினமூழ்கி, உடமபிறறிருவெண ணீறறினை (உததூளனமாக)பபூசி, தேனொழுகும மலாகளால மிககுவிளஙகுந திருவாலயததை யடைநது விநாயககடவுளை அனபுடனமுறைபபடி மெலலிய நீராலபிடேகிதது வணடுகளொலிககு மலாமாலையைச சாததிபபினனா மிகுதியாகிய நிவேதனஞசெயது அழகிய கரஙகளைககூபபி வணஙகியிருநதனன். எ - று.

வலலாளன ஸநானஞசெயது திருவெணணீறு சண்ணிததுத் திருவாலய மடைநது அபிடேகிதது மலாமாலைசூட்டி நிவேதிதது நமஸகரிததிருநதனனென்பது கருதது (௯)

காலை யுண்டி யொடுசெசி யுணடிக டிநது வெஙகதிா சாயநதிடும
வேலை யுஙகிர கததின மைநதாகள் மேவு றனமயி லீனறவ
ரால மெனனவ ழனறு போயககவி யாண லுககறை வாாகணின
சீல மைநதனைம மைநத ாகநகொடு சென்று மீணடில னினனமும்.

(இ-ள்) காலையுணவுடன் உச்சிக்காலவுணவுமொழிந்து, வெவ்விய கிரணங்களையுடைய சூரியன் (மேற்கடலிற்) சாய்கின்ற (மாலைக்) காலத்திலும் பிள்ளைகள் வீட்டில்வாராமையால், பெற்றோர்கள் விஷத்தைப்போலக் கோபித்துச்சென்று கலியாணனுடன் சொல்லுவார்கள்: உன்னுடைய நல்லபுத்திரன் எங்களுடைய பிள்ளைகளையழைத்துக்கொண்டுபோய் இதுவரையில் வந்தானில்லன். எ-று (௧0)

உனக்கு மைந்தனை நீயொ றுத்தி டாயெனில் யாங்களே
நினக்கு மின்னலு றப்பிடித் துவெ ரேலனத் தெறுவாமல
தன்றுகொ ழும்படை மன்னவற் கறிவித்து நின்னைக் கனைபதி
தனக்க யற்புலத் தோட்டு வாமிது சரத மென்றுக ரையத்தனர்.

(இ-ள்) உன் மகனாகிய வல்லாளனை நீ கண்டிப்பாயாக (அவ்வாறு நீ) கண்டிக்காவிடின் நாங்களே உனக்குத் துன்பமுண்டாகும்படி (அவனைப்) பிடித்து விரைந்து தெறுவோம்; அல்லது தீயைச்சிந்தும் வெவ்வியபடையையுடையதாகிய அரசனுக்குணர்த்தி, உன்னை இவ்விசாலமான நகரத்திற்குப் புறத்திலேயோட்டிவிடுவோம். இது நிச்சயமென்று வருத்தினார்கள். எ-று (௧௧)

நகரு ளாரனை வோரு மின்னண நைய வோதலு மொய்யென
வெகனி லாவிய கோப மூளவ் புன்று கண்கள் சிவப்பொழ
மிகவு நீளொரு தண்ட மேந்துபு வேக மோடுந டந்துபோய்ப்
புகரி லாணிறை பூசை யாற்றுபு லத்தை முட்டினன் எட்டியே.

(இ-ள்) நகரவாசிகளெல்லோரும் இவ்வகையாக வருந்தும்படி சொல்லவும் விரைவில் மனதிலுண்டான கோபமானது பற்றியெரியக் கண்கள் செப்புண்டாக, மிகவும் நீண்டதோர் கோலைத்தாங்கி விரைவாக நடந்துசென்று, குற்றமில்லாத வல்லாளன் செய்கின்ற (பத்திநிறைந்த விநாயக) பூசைசெய்யுமிடத்தையடைந்து சேர்ந்தனன் எ-று (௧௨)

விண்டு தேனவிழ் மென்ம லர்த்தழை வேய்ந்த பந்தரை வீட்டி
னண்ட ராலறி யாவி நாயக வள்ள லாரபா மூர்த்தியை
மிண்டி னோடுமெ டுத்தெ றிந்துவெ ருக்கொள் மைந்தனை யன்பறத்
தண்டி னாற்குறை சோர மொத்தினன் சண்ட னொருவரு காட்சியான்.

(இ-ள்) இயமனையொத்த சீற்றத்தையுடைய கலியாணனென்போன் வாய்விண்டுதேன் சொரியும் மெல்லியமலர்களாலுந் தழைகளாலும் வேயப்பெற்ற பந்தலை வீழ்த்தினன், தேவர்களாலறியப்படாத விநாயகப்பெருமான் பொருந்தியுள்ள மூர்த்தியை மத்தத்தாலெடுத்தெறிந்து, பயங்கொண்ட மகனாகிய வல்லாளனை ஆசையகலத் தண்டத்தினால் உதிரமொழுகும்படி புடைத்தான் எ-று (௧௩)

அடித்தும் வெப்பமொ ழிமை யாற்கலி யாண னொருமவல் லாளனைப்
பிடித்தி றுக்கிம ரத்தி னோடுபி ணித்த னன்பிழை தீர்மகன்
விடுத்தி டென்றைய னப்ப ணிந்தனன் வெய்ய பாவியி ரங்கிலன்
மடித்து வாயிதழ்த் தின்று நின்று மலங்க வன்சொ னிகழ்த்தினன்.

(இ-ள்) கலியாணன் (அவ்வாறு) அடித்தும் கோபமொழியாமையால், பயப்படுகின்ற வல்லாளனைப்பிடித்து இறுக்கி மரத்துடன்கட்டினன்; குற்றமில்லாத வல்லாளன் என் பிதாவே! என்னைவிட்டு விடுவாயாகவென்று வணங்கினன். கொடிய

பாவியாகிய கலியாணன் மனமிரங்காமல் வாயைமடித்து உதட்டைக்கடித்து எதிர்நின்று வருந்தும்படி கொடுஞ்சொற்களைக்கூறினன். எ - று. (கரு)

முட்டி லாமல்வி நாய கன்பணி முற்றி னுய்க்கவ னேயினிக்
கட்ட விழ்த்திடுஞ் சோறு நீருங் கரத்தின் வேட்டவு நல்கிடு
மொட்டி யுன்னுயிர் காக்கு மில்லினு ளுற்றொ ழிந்திடி னுய்ந்தனை
யெட்டின மாண்டனை யென்று கூறின னேதி லாளினன் கன்றனன்.

(இ - ள்.) இடையூறில்லாமல் விநாயகபூசையை முடித்த உனக்கு அவ்விநாயகனே இனிக்கட்டவிழ்ப்பான், சோறும் நீரும் விரும்பியனவுங் கையிற்கொடுப்பான்; தொடர்ந்து உன்னுயிரைக்காப்பான் வீட்டிற்கு வராதொழிந்தாற் பிழைத்தாய், (அவ்வாறின்றி) வந்தால் இறந்தாய் என்று கூறி அயலானைப்போல நீங்கிச்சென்றனன் எ-று.

முக்கண் யானைமு கத்த வாநினை முற்று நம்பிய நாயினே
னுக்க மார்ந்திடின் விக்கி னங்கடு ரக்கு நாதனெ னும்பெயர்
தக்க தோசுடர் கால மாறினு ஞ்சார்ந்த வன்பர்த மக்கெலாந்
தொக்க பேரருண் மாறி லாயெனச் சொல்லி மைந்தனி தோதுவான்.

(இ - ள்) மூன்று திருவிழிகளையுடைய யானைமுகமவாய்ந்த விநாயகக்கடவுளே! தேவரீரை முழுவதும் நம்பிய அடியேன் துக்கமனுபவித்தால் (தேவரீருக்கு) விக்கினங்களை யொழிக்கும் விக்கினராசப்பெருமானென்னும் பெயர் தகுதியுடையதோ? சுடர்காலமாறினும் (தேவரீரைச்) சார்ந்த அடியவர்களுக்கெல்லாம் பேரருள் புரிதலில் மாறுபடுதலில்லாதவரே! என்று கூறி, வல்லாளன் (மேலும்) இதனைச் சொல்கின்றான். எ - று

"சுடர்கால மாறினும்" என்றதற்கு, இருசுடர்கள் காலமாறித்தோன்றி மறையினும் என்றாவது, சுடர்களுங் காலமும் நிலைமாறினும் என்றாவது பொருள்கொள்ளலாம் (கசு)

வேறு.

யாவ னொருவ னாலயத்தை யிறுத்தான் கணேசர் திருவுருவை
யாவ னொருவ னெடுத்தெறிந்தா னெளியே னுடலையத் தோல்பெருக
யாவ னொருவன் பிணித்திட்டா னிறைவன் றனக்கு நிந்தனைகள்
யாவ னொருவ னெண்ணாம லிசைத்தா னந்தக் கொடும்பாவி

(இ - ள்) எவனொருவன் (யான் கணேசப்பெருமானுக்கியற்றிய) ஆலயத்தை யழித்தனனோ, எவனொருவன் கணநாதப்பெருமானுடைய திருவுருவை யெடுத்தெறிந்தனனோ, எவனொருவன் அடியேனுடலில் உதிரம்பெருகும்படி கட்டிவிட்டனனோ, எவனொருவன் யோசியாமற்படி எம்பெருமானுக்கு நிந்தனைசொல்லினனோ அந்தக் கொடிய பாவியானவன் எ - று

இதுமுதலிரண்டு பாடல்கள் குளகம்.

இச்செய்யுளிலுள்ள கொடும்பாவியென்னு மெழுவாயவருஞ் செய்யுளிலுள்ள பீழையுறுகவென்பதைப் பயனிலையாகக்கொண்டது. (கஎ)

குருடாய் மூகை யாய்ச்செவிடாய்க் குறளா யுருவிற் கறைசீயும்
பெருகா நிற்கும் புண்ணுமாய்ப் பீழை யுறுக பெருகுமத்த

தொருத்தே வனுக்கு நானடிமை பூண்மை யாமே லெனச்சபித்திட்
டுருகா நின்ற தன்னுளத்தி னுலைவை வேழத்தை யுறப்பிணித்தான்.

(இ - ள்.) மதம்பெருகும் விநாயகப்பெருமானுக்கு நானடிமைப்பட்ட தன்மையாகில், அவன் குருடனும் மூங்கையாயும் செவிடாயும் குள்ளனுயும் தேகத்தில் உதிரமுஞ்சீயும் பெருகவொழுகும் புண்ணுடையவனுமாகிக் கடவன் என்று சாபமிட்டு, உருகுகின்ற தன் மனதில் உலைவை [கிலுகிலுப்பை] மாலையணிந்த விநாயகப்பெருமானைப் பொருந்தப்பதித்தனன் எ - று. (௧அ)

உலைவை - புலிநகக்கொன்றை அல்லது விலங்கின் கொம்பெனினுமாம்.

உடலே கயிற்றாற் கட்டுண்ட துள்ளத்தைக் கருவின் றேபத்தற
படாதீ ரமரர் பெருமானைப் பற்றிப் பிணிப்பா யென்னவினை
யிடலாற் பிணித்துத் தன்னுயிரை விளிப்பப் புயன்ற சிறுவனெதிர்
கடமா முகவ னறியாதே காமர் மறையோ னெனப்போந்தான்.

(இ - ள்) தேகமே கயிற்றினுற் கட்டப்பட்டது மனதுக்கு அசத்தையில்லையே ஆகையால், குற்றமற்ற தேவர் தலைவரான கணேசப்பெருமானைப்பிடித்து (மனதிற)கட்டுவாயென்று, அன்பின் வலிமையாற் பிணித்துத் தன் பிராணனைவிட முயற்சி செய்த சிறுவனுகிய வல்லாளனுக்கெதிரே, மதஞ்சொரியும் யானைமுக விநாயகக்கடவுள் மனந்தளராது அழகிய ஓர் வேதியராக எழுந்தருளினர் எ - று. (௧௯)

பருதி யெழலும் வல்லிருளும் பனியு முடைந்தா லெனமுந்நூன்
மருமம் புரள வருமறையோன் வடிவு நோக்கி வல்லாள
னிருகைப் பிணிப்பு முற்றபுண்ணு மிமைக்கு மளவின் விட்டகலப்
பொருவி லிறையே யிவனென்று பொருக்கென் றிறைஞ்சி யிதுசொன்னான்.

(இ - ள்) சூரியன் உதயஞ்செய்யவும் மிக்க இருளும் பனியுமொழிந்தாற்போல, உபவீதமான நூல் மார்பிற்புரளச் சிறந்த வேதியனுடைய உருவத்தைப் பார்த்து, வல்லாளன் தன் இருகரங்களைக் கட்டியகட்டும் தேகத்திலுள்ள புண்ணும் விநாடிப்பொழுதில் விட்டொழிய, இவர்தமக்கே சமானமில்லாத விநாயகக்கடவுளென்று விரைந்துபணிந்து இதனைச் சொல்லினன் எ - று.

வல் - வலிமை. ஈண்டுமிகுதியையுணர்த்தியது. (௨0)

வேறு.

தந்தை தாய் சுற்ற முற்றுங் கடியேனுக் குளரோ
பிந்தவை யகத்தில் வேறே யிலையெம் பெம்மானே
முந்துல கனைத்துந் தோற்றி முடித்தருள் முதல்வ மூவா
அந்தண வென்று நைந்த னந்தணன் றழுவிச் சொல்வான்.

(இ - ள்) அடியேனுக்கு இவ்வுலகத்திலே பிதாமாதா உறவினர் முதலிய யாவுந் தேவரீரேயல்லாமல் வேறே யொருவருமிலர் என்பதை யிப்பொழுதுணர்ந்தேன். முற்பட்ட உலகங்களை யெல்லாம் படைத்தழித்தருளும் முதல்வனே! அழியாத அந்தணனே! என்று வல்லாளன் கூறினன். அந்தணர் (வடிவாக வந்த கணேசப்பெருமான்) தழுவிச் சொல்லுகின்றார் எ - று.

தோற்றி முடித்தருள் என்றதை "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்பதனால் "காத்து" எனவும் வருவிக்கப்பட்டது. (௨௧)

நமக்கப ராதஞ் செய்த நவையினா நமக்குப பத்தா
தமக்கப ராதஞ் செய்த தறுகண ரிவாக ளெல்லாங
குமைக்குமவெந் நிரயத் துன்பங் கூடவா கண் மறுமை யிம்மை
யிமைக்குமுன முடிவு காணு விடுமையி னோயுழப்ப ராற்றல.

(இ - ள்.) நமக்கு அபராதஞ் செய்த குற்றமுடையவர்களும், நமக்கு அன்பராயுள்ளவர்களுக்கு அபராதஞ்செய்த அஞ்சாமைக் குணமுடையவர்களுமாகிய இவர்கள் யாவரும் குமைக்கின்ற கொடிய நரகவாதனையை யடைவார்கள், மறுமையிலும் இம்மையிலும் விரைவில் ஒழிதலில்லாத துன்ப நோயால் வருந்துவார்கள் எ - று

இருவர்க ளிடத்துங் குற்ற மிழைத்தனை யாணொற் றினனே
வெருவர விட்ட சாப மெய்ப்பயன் விளைத்த தைம்மதா
பொருமுத லொழிந்து நீயும் போகமுறு வரங்கள் கேளாய
தருகுது மென்றுன் கேட்டுத் தளர்ந்துவல் லாளன் சொல்வான.

(இ - ள்) (யானும் என் அன்பனுமாகிய) இருவர்களிடத்துங் குற்றஞ்செய்த (உன் தந்தையாகிய) வல்லாளனுக்கு இப்பொழுதே அச்சமுண்டாகும்படி (நீ) கொடுத்த சாபத்தின் உண்மைப்பயனை உண்டாக்கினேய மகனே! நீயும் துன்பமடைதலொழிந்து அழியாத வரங்களைக் கேட்பாயாக (அவற்றைத்) தருவோமென்று (விநாயகக்கடவுள்) கூறினர். வல்லாளன் (அவ்வார்த்தையைக்) கேட்டு மனங்களித்துச் சொல்கின்றான் எ - று (உ௩)

தாமரை பழித்த நின்பொற் றுணைமலர் நீங்கா வன்பே
யேமுறு மடியே றிக்க வெய்யினா னெங்க ணாளுந்
தோமற வியங்கே வைக தொழுபவர்க் கெல்லாம் வேண்டுங்
காமமு மளிக்க வென்றுன் கருணையின் மாறீ யானை சொல்வான

(இ - ள்) செந்தாமரை மலரைவென்ற சேவடிகளுடைய அழகிய உபயபாதங்களிற் பிரியாத அன்பினையே யடியேனுக்கருளுக எம்பெருமானே! எந்தக்காலத்தும் குற்றமற இவ்விடத்திலிருந்து நின்னைச் (சேவித்து) வணங்குபவர்கட்கெல்லாம் வேண்டிய இஷ்டசித்திகளைக் கொடுத்தருளுகவென்று (வல்லாளன்) கூறினன். வேதியருக்கு வந்த விநாயகருமிகில் சிறுமையுடன் சொல்லினர் எ - று. (உ௪)

உனக்குநம் பாதப் போதி லொழிதரா வன்பு தந்தா
மெனக்கு நின் பெயர்முன் னுகப் பெயரிட்டிவ் வுலகம் போற்றித்
தனக்குறு வரங்கள் கொள்ளத் தங்கியிங் கிருந்துங் கண்டாய
மனக்களிப் பொடுமெ னின்னும் வந்திம்மைப் பூசை செய்க.

(இ - ள்) உனக்கு நம்முடைய திருவடித்தாமரையில் (ஒருபொழுதும்) நீங்காத அன்பினை யளித்தோம் எமக்கு உன்னுடைய பெயரை முதலாக (வல்லாள கணேசனென்று) பெயரிட்டு இவ்வுலகமானது துதித்துத் தனக்குவேண்டிய வரங்களைப்பெற இங்குத் தங்கியிருப்போம் மனக்களிப்புடன் பூலோகமுந் தேவலோகமும் எம்மை வந்து பூசைசெய்க எ - று (உ௫)

இங்குறு நமது மூர்த்தி யாவரே தெரிசித் தாலு
மங்கவர் தமக்கு வேட்ட வருபொரு ளெளிதுண் டாகு

திங்களில் விழாவே யாட்டை விழாத்தின விழாவு மீங்கே
மங்கல மாக வுண்டா மைந்தனே யறியென் றேத்தி

(இ - ள்) இங்கே பொருந்திய நமது மூர்த்தியை எவர்தாந் தரிசித்தபோதிலும், அவர்களுக்கு விருப்புற்ற அரிய பொருள்கள் சுலபமாக உண்டாகுக. நல்ல மாசோற்சவமும் வருடோற்சவமும் நித்தியோற்சவமும் இவ்விடத்தில் மங்கலகரமாக உண்டாகும் மகனே! அறிகவென (விநாயகக்கடவுள்) உரைத்தருளி எ-று. (௨௬)

வேதிய ருருவப் போந்த விநாயகர் மூர்த்தி யாகி
மூதுலக் கனைத்து மேற்ற முகிழ்பெருங் கருணை யோடு
மேதக விருந்தா ரங்கு விளம்பிய காதை கேட்டோர்
கோதறப் படித்தோ ரெல்லாங் குறைவில்செல் வத்த ராவார்

(இ - ள்) பிராமணவடிவாக வந்தருளிய விநாயகக்குரிசில் மூர்த்தியாகி, பழமையாகிய உலகமுழுதுந் துதிசெய்ய அரும்புகின்ற பெருங்கிருபையுடன் அங்கு மேம்பட வெழுந்தருளி யிருந்தனர். கூறிய இச்சரித்திரத்தைக் கேட்டவர்களும், குற்றமறப் படித்தவர்களுமாகிய யாவருங் குறைவில்லாத செல்வத்தையுடையவர்களாவார்கள் எ-று. (௨௭)

வெற்றிவேல் வீம தக்கன் மேவுமுற் பிறவி சொற்றேம்
முற்றவப் பிறப்பின் மைந்த னிளையவல் லாள னென்போன்
முற்றிய கணேசர் தம்மான் முத்திசேர்ந் ததுவுங் கேளென்
றற்றமில் விசுவா மித்தி ரனவற் கறைய லுற்றான்.

(இ - ள்) வென்றி பொருந்திய வேற்படையேந்திய வீமராசனே! தக்கனுடைய பொருந்திய பூர்வசனனத்தைச் சொன்னேம்; பொருந்திய அப்பிறவியில் இளையோனாகிய வல்லாளனென்பவன் (அன்பு) முதிர்ந்த கணேசமூர்த்தியால் முத்தியடைந்ததையுங் கேட்கவென்று, சோர்விலாத (தந்தையுடைய) விசுவாமித்திர முனிவர் வீமராசனுக்குச் சொல்லலாயினர் எ-று. (௨௮)

வல்லாளன் வேதனைநீங்குபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௩௲[illegible]

வல்லாளன் முத்தியடைந்தபடலம்.

சொல்லா தியினாற் றொடரொ ணாத்தா
னெல்லே யொருமூர்த் தியெழுந் திருப்ப
வல்லா ளன்மகிழ்ந் தன்புமுன் மேபோ
லல்லா தரவாற் பணிசெய் தனனால்.

(இ - ள்) வாக்கு முதலியவற்றினாற் பற்றமுடியாத கணேசப்பெருமான் அந்நிரவிலேயே ஒருமூர்த்தியாக வெழுந்தருளி யிருப்ப, வல்லாளன் மனக்களிப்புற்றுப் பண்டுபோலவே நல்லாசையுடன் பூசைசெய்தலை விரும்பினன் எ-று.

சொல்லாதி என்றது வாக்கு மனம் காயமென்னுந் திரிகரணங்களை. (௧)

பூம்பந் தர்புதுக் கியநன் மூழ்கித்
தேமமைய புனறீங் கனிந றுங்கா
யாம்பன மலரா திபல விட்டி
யாம்பன முகனர்ச் சனைசெய் தான்.

(இ - ள்) அழகிய பந்தரைப் புதிதாக்கி நீரில் மூழ்கி, வாசந்தங்கிய நல்ல சலமும், மதுரமான பழமும், நறிய காய்களும், அல்லிமலரும் முதலிய பலவுபகரணங்களைச் சேகரித்து, யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள் பூசையைச் செய்தனன். எ - று

முன்செய்த பந்தரை அவன் தந்தையாகிய கலியாணன் அழித்தமையின் அதனை மீண்டும் சரியாக்கினனென்பார் "பூம்பந்தர் புதுக்கி" என்றார் (உ)

இவ்வா றவன்பூ சைசெய் திருப்ப
வவ்வா றிடர்செய் தகலு நாயகன்
றுவ்வா தகலா தசுடு சாபத்
தெவ்வா னுறுநோய் கொடுதி கைத்தான்.

(இ - ள்) இவ்வகையாக அவன் (கணேசமூர்த்தியைப்) பூசைசெய்துகொண்டிருக்க, அவ்வகையாக (வல்லாளனை முன்பு) துன்புசெய்தகன்ற கலியாண வைசியன், அநுபவியா தொழியாத சுடுசாபப்பகையாற் பொருந்திய நோயினைக்கொண்டு (செயவதுணராது) திகைப்புற்றனன் எ - று.

சுடுசாபம் - சுடுகின்ற சாபம், அதாவது கொடிய சாபமென்பது பொருள்.

வேறு

மைந்தனுட னாடியமு கார்சிறிய ராறு
மிந்துமதி கேளனிக னையதியலை செய்து
பந்தமுற விக்கிமக னைப்பரிவி லானாய்
வந்தனனெ னச்சொலவு மாழ்குமனை யாண்முன்

(இ - ள்) சிறுவனாகிய, வல்லாளனுடன் விளையாடிய பிள்ளைகள் ஓடி, மனம் வருந்தும் இந்துமதியின் முன்சென்று, இந்துமதியே ! கேட்பாயாக (நின்கணவனாகிய) கலியாணன் உன்மகனை யடைந்து துன்புறுத்திப் பந்தப்படும்படி கட்டி மனமிரங்காதவனாய் வந்தனனென்று சொல்ல எ - று (ச)

கண்ணறிவு வாக்கறிவு காதறிவு நீங்கிப்
புண்ணுறுநல் வாகிவரு புந்தியும்பு ணர்ந்தே
நண்ணினன வைக்கடல்ய ழுந்துவிழு நாயகனைப்
பண்ணின்மொழி யிந்துமதி பார்த்துமிக வாடி

(இ - ள்) துன்பமாகிய கடலில் விரும்பி வீழ்ந்த கலியாணனென்னும் வைசியன் கட்புலனாகிய அறிவும் வாக்கினாலறியும் அறிவும் காதாலாகிய அறிவுமொழிந்து, புண்ணுடைய வடிவினனாகி, வருகின்ற மனமும் புண்படப் பொருந்தினன். பண்ணொத்த பாலுஞ் சொல்லையுடைய இந்துமதி யென்பாள் (அதனைப்) பார்த்து மிகவும் வாட்டமடைந்து எ - று.

"கண்ணறிவு வாக்கறிவு காதறிவு நீங்கி" என்றது, குருடும் ஊமையுஞ் செவிடுமாகி யென்பதாம். (ரு)

எனையிது வந்தபடி யெனனிறைவ னுக்கென
றுன்னியுள நைந்துருகி யுண்கணறல் சோர
வன்னிமிசை வன்னிவளை யப்படுநர் வெந்நோய
துன்னுமிசை வேறுபிணி துன்னுநரு மொத்தாள்.

(இ - ள்) என் கணவனுக்கு இத்துன்பம் நேர்ந்த வகையாது காரணம்? என்று கருதி, மனம் வருந்தியுருகி, மையூட்டிய கண்களினின்றும் நீர் சொரிய, நெருப்பின்மேலே நெருப்பு வளையப்பட்டவர்களையும், கொடிய நோயின்மேற் பொருந்திய வேறு நோய் சேர்ந்தவர்களையு மொத்தனள் எ - று.

வன்னியாவது நோயாகுது பெற்றோர் அதனால் துன்படைவராகலின் அவர்கட்கு அதன்மேல் வேறோர் வன்னியும், பிணியும் நேரின் அவர்கள் துயர்சகிப்பதருமையாதல்போல, மைந்தன் அடியுண்டு கட்டுப்பட்டனனென்னக் கேள்வியுற்ற துயரத்துடன் கணவன் குன்று செவிடு ஊமை தொழுநோய் முதலிய துன்பங்களையடைந்தது கண்டதுயரத்தால் அவ்விந்துமதியை "வன்னிமிசைவன்னி வளையப்படுநர், வெந்நோய் துன்னுமிசை வேறு பிணிதுன்னு நருமொத்தாள்" என்றார். (௬)

செல்வமொடு நல்லிளமை சேர்ந்தபொழு தானு
மில்வரையிறந்தகலு தியாதவிய லானைப்
பல்வகைய நன்கலைபுரி வோடுபுரி வானைப்
புல்வினையி லானிவனைப் புல்லுவது மீதோ

(இ - ள்) செல்வமும் நல்ல யவ்வனமும் கூடியகாலத்திலும் இல்லங்கடந்து புறஞ்செல்வதறியாத இயல்புடையவனும், பலவகைப்பட்ட தருமங்களை அன்புடன் செய்பவனும், சேர்த்தக்க தீவினைகள் (சிறிதும்) இல்லாதவனுமாகிய இவனை, இவ்வகைத் துன்பமோ அடைவது? எ - று. (௭)

பண்டுபுரி தீவினைப யந்ததிது வென்கோ
மிண்டினமகனைப்பட மிழ்த்ததிது வென்கோ
தண்டமகனைப்புரிதறக்கதிது வேயென்
றெண்டொடிபு லம்பிமக னுற்றுழிந டப்பாள்

(இ - ள்) முற்பிறப்பிற் செய்த தீவினையால் வந்தது இதுவெனச் சொல்லவோ. கொடுமையால் மைந்தனைத் துன்பத்தில் வீழ்த்திய பலன் இதுவெனச் சொல்லவோ. புத்திரனைத் (தவறி நடக்கையில்) தண்டனைசெய்தல் தக்ககாரியமே யென்று, ஒள்ளியவளையலை யணிந்த இந்துமதி யென்பாள் புலம்பிக்கொண்டு புத்திரனிருந்த விடத்திற்கு நடந்தாள் எ - று. (௮)

வேறு

இடவிய வயன்மனை யேனழை மாதரொ
டுடன்வர நகர்ப்புறத் தொய்யென வேகியாங்
கடலிப முகப்பிரா னடிகள் பூசனை
நடவுதன் மைந்தனை நயப்ப நோக்கினாள்

(இ - ள்) இடங்கொண்ட அயல்வீடுகளிலுள்ள சிலமாதர்கள் கூடவர நகரின் புறத்திலே விரைந்துசென்று, அங்கே வலிய யானைமுகத்தையுடைய விநாயகப

பெருமானுடைய திருவடிகளிற் பூசைநடத்துந் தன் மகனாகிய வல்லாளனை அன்புறப் பார்த்தனள். எ - று (௯)

கட்டப்பட் டிருகையுங் காத்தப் பட்டுடல்
சொட்டப்புண் ணீர்மகன் றுயருற் றானென
விட்டப்பாட் டுளஞ்சிறா ரியம்பிற் றுண்மையி
னொட்டப்பட் டிலதென வுழையர்க் கோதினள்.

(இ - ள்) இருகரங்களுங் கட்டப்பட்டு, அடிக்கப்பட்டு, உடலினின்று உதிரஞ் சொட்டப்பட்டு மகன் துன்பப்படைந்தனனென்று, இளம்பிள்ளைகள் இஷ்டத்துடன் சொல்லியது உண்மையிற் சேர்ந்ததின்றென்று அருகிலிருந்த மங்கையர்களுக்கு (இந்துமதி) கூறினள் எ - று (௧௦)

உழையவரு மாதரு முவப்ப நோக்கியிம்
மழைமதக் களிற்றினை வணக்கஞ் செய்திவன்
விழைவொடு பூசனை விளைக்கும் பேற்றினாற்
குழைவில னுடலமென் றேதுக் கூறினார்

(இ - ள்) பக்கலில் வந்த மங்கையர்களும் களிப்புண்டாகக் கண்டு, இவன் இக்குளிர்ந்த மதநீரைச் சொரியும் யானைமுகமுடைய கணநாதனைப் பணிதல்செய்து ஆசையுடன் பூசைசெய்யும் பேற்றினால், உடல்மெலிந்தானில்லன் என்று (அதற்குக்) காரணஞ் சொன்னார்கள் எ - று. (௧௧)

கையணி முகவனைக் கருணை யாளனைச்
செய்யதண் சாந்தணி திகழுந் தேசுடை
மெய்யனை வழிபடு மிக்க பத்தியி
னையனுக் கிலையிலை யகிலத் தென்றனர்

(இ - ள்) கையையுடைய அழகிய (யானை) முகம்வாய்ந்தவனும், கிருபாமூர்த்தியும், குளிர்ந்த செஞ்சாந்தணிந்த ஒளிவாய்ந்த திருமேனியுடையவனுமாகிய விநாயகக்கடவுளை வழிபாடுசெய்யும் சிறந்த பத்தியில், அழகிய இவ்வல்லாளனுக்கு இவ்வுலகத்தில் நிகரானவரில்லரென்றுசொன்னார்கள். எ - று (௧௨)

வேறு

சந்திரன்பெய ரிரண்டுடன் றரித்துவாழ் நற்றாய்
மைந்த னைங்கரன் பூசனை வகுப்பது நோக்கிச்
சிந்தை நின்றெழு மன்பொடு திகழ்மென் முலையின்
வந்த தண்பயம் பாய்தரத் தழீஇக்கொடு வகுப்பாள்

(இ - ள்) சந்திரனுடைய பெயர்களிரண்டையொன்றுகக்கொண்டு வாழும் நல்ல தாயாகிய இந்துமதி, தன் புதல்வன் (வல்லாளன்) ஐந்து திருக்கரங்களையுடைய கணேசப்பெருமானுடைய பூசையைச் செய்தலைப்பார்த்து, மனத்தினின்றுண்டான அன்புடன், பசலைபூத்த மெல்லிய முலையினின்றுண்டான தண்ணிய பாலானது பாயும்படி (மகனைத்) தழுவிக்கொண்டு சொல்கின்றாள் எ - று

இந்துவென்பதும், மதியென்பதும் தனித்தனியே சந்திரன் பெயர்களாதலின் இந்துமதியைச் "சந்திரன் பெயரிரண்டுடன் றரித்துவாழ்நற்றாய்" என்றார். (௧௩)

பிள்ளை மைப்பரு வத்துநீ பெருமதக் களிற்று
வள்ளலைப்பணி வாய்மைமைக் கொட்டின மைந்தா
துள்ளலைப்பெருங் கடலுடை யுடுத்ததொல் லுலகி
னுள்ளு டற்பயன் பெற்றன நானுநந் தையுமே

(இ-ள்) மகனே! மிக்க மதத்தையொழுகும் யானைமுகக் கடவுளை வணங்கும் விரதத்தை நீ குழந்தைப்பருவத்திலே கைக்கொண்டபடியால், அலைகளையுடைய கடல்புடைசூழ்ந்துள்ள பழமையாகிய உலகத்தில் நன்மைதரும் உடலாலாகிய பயனை நானும் உன் தந்தையுமே யடைந்தோம் எ-று.

"மகன்றந்தைக் காற்றுமுதவி யிவன்றந்தை - யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்" என்றது திருக்குறளாதலின், சற்புத்திரனை யீன்றபெற்றோர் நாங்கள் உடலின் பயனை யடைந்தோமென்பது கருத்து. (கச)

கால மொன்றினிற் கணபதிக் கருச்சனை யாற்றி
ஞால மொப்புற வில்லிடை நண்ணலா காதோ
கோல வில்லிடைப் பூசனை புரிதலா காதோ
சால விட்டெமைப் புறத்தகஞ் சேர்தலுந் தகுமோ

(இ-ள்) (குறித்த) ஒருகாலத்தில், கணேசப்பெருமானுக்குப் பூசைசெய்து, உலகினர் ஒப்ப வீட்டிற்கு வரக்கூடாதோ? (அல்லது) அழகிய வீட்டிலேயே (அப்பெருமானுக்குப்) பூசைசெய்யக்கூடாதோ? எம்மை மிகவும் பிரிந்து ஊருக்குப் புறம்பே பொருந்துதல் தகுமோ? எ-று. (கரு)

காரணங்களுங் கண்டிலேம் களித்தகு நுந்தை
யூறு செருநற் றனையனா யூமையாய்க் குருடாய்க்
கூறு வார்த்தைகே ளாச்செவி டாயுங் குழைந்தான்
வீறு காணருந் துயரினே னிப்பால் வந்தடைந்தேன்

(இ-ள்) களிக்கத்தக்க உன் பிதா ஊனப்படாத தொழிலோனாயும் ஊமையாயும் குருடனாயும் சொல்லுகின்ற சொல்லைக் கேளாத செவிடனாயும் மனம் வருந்துகின்றான் (இதற்குக்) காரணங்களுங் காணகிலோம் முடிவு காண்டற்கரிய துன்ப முடையவளாய் (அவற்றை உனக்குச்) சொல்ல (இங்கு) வந்து சேர்ந்தேன் எ-று.

காரணம் எதுகைநோக்கிக் காறணமென்றது. (கசா)

வேத சாத்திரம் யாவையு மீன்றவர் வெருண்டு
மோதி நீதியின் மைந்தரை நிறுவுத லொழியு
மாத லானுனை நுந்தைதண் டித்தது மறமே
யேது தாதைசெய் யினுமகன் காப்பது மியல்பே

(இ-ள்) வேதசாஸ்திரங்கள் யாவும், பெற்றோர் புத்திரர்களை (அவர்கள் தவறிப்போனதில்) கோபித்து அடித்து நீதிவழியிலே (அவர்களை) நடத்துதல் (முறை யென்று) கூறுகிறதாகலின், உன்னை உன்பிதா தண்டித்ததும் (பிதா) தருமமேயாம். தந்தை யெதனைச்செய்தாலும் மகன் (அவனை) இரட்சிப்பதும் (புத்திரதருமம்) இயற்கையே எ-று. (கஎ)

மைந்த புத்திர தருமநீ மதித்துவெப் பகன்று
நுந்தை வெம்பிணி தீருமா நுவலுமந் திரங்கள்
சந்த மாமணி மருந்திவை தம்முளியா தியைவ
தந்த நல்லுபா யத்தினை யாற்றுதல் வேண்டுமே

(இ-ள்) மகனே! நீ புத்திர தருமத்தை யெண்ணிக் கோபமொழிந்து, உன் பிதாவின் தீப்பிணியகலும் வகையாகச், சொல்லத்தக்க மந்திரம் - அழகுடைத்தாகிய மணி - மருந்து ஆகிய விவற்றில் எது பொருந்துவதோ அந்த நல்ல உபாயத்தை நீ செய்தல்வேண்டும் எ-று. (௧௮)

கேண்மை மைந்தர்கள் தந்தைதாய் வார்த்தைகீ ழாக்கா
வாண்மை யேயற மென்பரா ரணமுத லுணர்ந்தோர்
காண்மை யாத்தவென் முகந்தனை யென்கட்டுரை கேளென்
றேண்மை யார்ந்தவ ளியம்பவல் லாளன்பார்த் திசைக்கும்.

(இ-ள்) ஆசைப்புதல்வர்கள் தந்தை தாய் இவர்கள் கூறும் வார்த்தையைத் தாழ்வுபடுத்தாத ஆட்சியே உத்தம தருமமென்று வேதமுதலியவற்றை யுணர்ந்தவர் கூறுவர்; மைதீட்டிய வென் முகத்தைப் பார், என் உறுதிமொழியைக் கேள் என்று, மெலிவையுடைய இந்துமதி யென்பாள் கூற, வல்லாளன் (தன் தாயைப்) பார்த்துச் சொல்லுகின்றான் எ-று. (௧௯)

வேறு.

கருவாய் வளர்தரு காலு மகட்டிற் கழன்றுபுறத்
துருவாய் வளர்தரு காலு முயிர்க்குயி ராயெவையுந்
தருவா னுமாய தந்தைதா யருமா மொருதந்தனலா
லிருமா நிலத்தினை வாரோ வெனக்கப்ப னன்னையுமே.

(இ-ள்) (தாய்வயிற்றிற்) கருவாகி வளருங்காலத்திலும், வயிற்றினின்றும் நீங்கிப் புறத்தே உருவாகி வளருங்காலத்திலும், உயிர்க்குயிராகி யெல்லாவற்றையுந் தருபவனுமாய், தந்தை தாயாருமாகிய ஏகதந்த விநாயகக்கடவுளல்லாமல், பெரிய பெருமைதங்கியவுலகத்தில் வருந்துபவர்களோ எனக்குந் தந்தையுந் தாயுமாவார்? எ-று

இருமாநிலத்தினைவாரோ வென்பதை இருமாநிலத்து இனைவாரோவென்றுவது, இருமாநிலத்தில் நைவாரோவென்றுவது பிரிக்க. இனைதல் நைதல் இவ்விரண்டும் வருந்துதலென்னும் பொருளுடையன (௨௦)

ஆமே யொருவ ரொருவர்க் கிடரை யகற்றுவது
மாமே யொருவ ரொருவர்க் கிடைநன்மை யாக்குவதுந்
தாமேது செய்தன ரன்னது தாமே புசிப்பதன்றிப்
போமே தலையிற் பொறித்தான் பிறழ்ந்து நினைப்பினுமே.

(இ-ள்) ஒருவருக்குற்ற துன்பத்தை விலக்குவது ஒருவருக்கு (சாத்தியம்) ஆமோ? ஒருவருக்கு நன்மையுண்டு செய்வதும் ஒருவருக்கு (சாத்தியம்) ஆமோ? தாம் எதைச் செய்தனரோ, அதைத் தாமே புசிப்பதல்லது, தலையில் எழுதிய பிரமதேவனே மீண்டு கருதினுதும் (அது அவரை) விட்டுப்போமோ? எ-று. (௨௧)

கொற்றவர் காரியந் தம்மிசை வின்றிக் குமரர் செய்தங்
குற்றன ரேனு மொறுக்கவல் லாரகொ லுயிர்த்தவர்கண்
மற்றவர் தம்மை யொறுத்துயிர் வாழினு மன்னர்பணிக்
கற்றமெ லாம்புரிந் தாலுயிர் கூடுங்கொ லாரணங்கே

(இ - ள்.) அரசனுடைய காரியத்தைத் தம்முடைய அநுமதியில்லாமல், புதல்வர் செய்திருந்தாராலும், பெற்றோர்கள் தண்டிக்க வல்லவர்களோ? அவர்களைத் தண்டித்து உயிர் வாழ்ந்தாலும் அரசனுடைய பணிவிடைக்குப் பலவித இடையூறுகள் செய்தால் உயிருடன் வாழமுடியுமோ? மாதே! எ - று. (உஉ)

வெந்தவெண் ணீறணி வானும் விழிக்கடை நோக்கிநிற்கு
மந்த விநாயக ராலயந் தள்ளி யதுக்கியென்னை
யெந்தை பிரானுரு வத்தையுங் கையா லெடுத்தெறிந்தான்
வந்தது காணுத னுலைவுறு வாதநோ வன்பிணியே.

(இ - ள்.) நீறாகிய வெள்ளிய விபூதியை யணிந்த சிவபெருமானும், கட்கடையினால் தரிசித்துக்கொண்டிருக்கும் அந்த விநாயகப்பெருமானுடைய திருவாலயத்தைத் தள்ளி, என்னையடித்து, என்னுடைய தந்தையுந் தலைவனுமாகிய கணேசப்பெருமானுடைய திருவுருவத்தையுங் கையினாலெடுத்தெறிந்தனன் அதனால், கெடாததோர் வலிய நோயானது (அவனுக்கு) வந்து சம்பவித்தது. எ - று. (உ௩)

இம்மையின் மாத்திர மேயன்றி யிந்நோ யுழப்பன்கண்டாய்
செம்மைசெய் கோலுடை வல்லவன் கற்பிற் றிருந்திழையா
யும்மையி னீயுங் கமலையென் னுருவை யுன்வயிற்றி
னம்மகல் யாணனென் பான்றக்க னென்னவந் தல்லலுற்றே

(இ - ள்) அவன் இப்பிறப்பின் மட்டுமன்றி, (மறுமையிலும்) இந்நோயாற் றுன்புறுவான் செம்மையாகச் செலுத்துங் கோலினையுடைய வல்லவராசன் கற்பிற் குரியமனைவியாய நீயுங் கமலையென்னும் பெயருற்று வருவை உன் வயிற்றில் இக்கலியாணன் தக்கனென்னும் பெயருடன் பிறந்து (இந்நோயால்) துன்பமடைந்து. எ-று.

பன்னிரண் டாண்டி னளவும் பலபரி காரஞ்செய்துந்
துன்னிய நோய்தொலை யாமையி னாற்றுனி கூர்ந்துயிர்த்த
மன்னவ னின்னொடு நீக்கிட முக்கல மாதவனாற்
பின்னல மெய்துவிர் செல்லினி யென்று பெயர்த்தனனே.

(இ - ள்) பன்னிருபிராயம் வரையிலும் பலவகைப்பட்ட பரிகாரங்களைச் செய்தும், பொருந்திய நோயொழியாமையினால், பெற்ற தந்தையாகிய வல்லவராசன் துன்பமிகுந்து உன்னுடன் (அவனை) விலக்க, சிறந்த தவசியாகிய முக்கலமுனிவரால், பின்னே நன்மையடைவீர்கள். இனிச்செல்லுகவென்று (சாபவிமோசன மொழியுரைத்து) நீக்கினன் எ - று. (உ௪)

நற்றா யகல வுரைத்தவன் மீட்டுநற் பூசையிடை
வற்றுத வன்பி னிருப்ப வுறுதி மதித்தருள்கூர்ந்
தற்றாகட் கற்ற வமல விநாயக னுங்கருள்
வுற்றார் கணத்தர் விமானங்கைக் கொண்டவ னூற்றுழியே.

(இ - ள்) பெற்ற தாயானவளைச் செல்லும்படி கூறி, அவ்வல்லாளன் மீளவும் நல்ல கணேசபூசையிற் குறையாத அன்புடனிருக்க, அவனுடைய உறுதியை யோசித்துக் கிருபைமிகுந்து, அற்றூர்களுக்கற்ற நிமலராகிய விநாயகக்கடவுள் அப்பொழுது திருவருள்புரிய, கணநாதர்கள் விமானத்தைக் கையிற்கொண்டு அவ்வல்லாளனிருந்த விடத்தை யடைந்தார்கள். எ - று. (௨௬)

வேறு

விண்ணிழி கின்ற விமான மடுத்துக்
கண்ணெதிர் நின்று கதிர்த்தலு நோக்கி
யண்ணல ருட்கடி யேனொரு பொருளோவென்
றெண்ணி யிறைஞ்சி யெழுந்துகும் பிட்டான்

(இ - ள்) ஆகாயத்தினின்று மிறங்குகின்ற விமானத்தை நெருங்கி அது கண்ணுக்கெதிரே நின்று பிரகாசித்தலுங்கண்டு, விநாயகக்கடவுளுடைய திருவருளுக்கு அடியேன் ஒரு பொருளோவென்று கருதி நமஸ்கரித்து எழுந்திருந்து (இருகரங்களாலுங்) கும்பிட்டனன். எ - று (௨௭)

இந்து மிலைந்தவ ரேவிவி மானந்
தந்தன மன்பத மீதியிவர் கென்று
வந்தவர் கூறவல் லாளனி வர்ந்தா
னந்தர துந்துபி யார்த்தன வன்றே

(இ - ள்.) சந்திரனை (சடைமிசை) யணிந்த கணேசப்பெருமான் கட்டளை யிட்டருள விமானத்தைக் கொண்டுவந்தோம் அன்பனே! அதனைத் தழுவி யேறுக வென்று, (விமானத்துடன்) வந்தவர்கள் சொல்ல, வல்லாளன் (அத்தெய்வ விமானத்தில்) ஏறினன். (அப்பொழுது) தேவ துந்துபிகள் முழங்கின எ - று. (௨௮)

திங்களி ருங்குடை சென்னிநி ழற்ற
மங்கையர் சாமரை வாங்கியி ரட்டப்
பொங்கொளி யாலவட் டம்புடை நண்ண
வெங்கணும் வெள்வளை யெழுந்துத யங்க.

(இ - ள்) பெரிய சந்திரவட்டக்குடையானது சிரமிசை நிழல் செய்யவும், தெய்வமாதர்கள் சாமரைகளை வளைத்துவீசவும், மிக்கவொளியையுடைய ஆலவட்டங்கள் பக்கலிலவரவும், எவ்விடத்திலும் வெண்ணிறமவாய்ந்த வெற்றிச்சங்கங்கள் ஒங்கி யொலிக்கவும் எ - று. (௨௯)

வானவர் பூமழை வாரியி றைப்பத்
தேனலர் கோதையர் சேர்ந்தெதி ராட
வேனவிர் வீரர்வி ராயப்புடை நிற்பக்
கானமெ ழுப்பினர் கந்திரு வத்தோர்.

(இ - ள்) தேவர்கள் மலர் மழையைவாரிச் சொரியவும், தேன்சொரியும் (பூக்கள்பொருந்திய) கூந்தலையுடைய மாதர்கள் கூட்டமாகி எதிரே நிருத்தஞ்செய்யவும், வேலையும் வாளையுமேந்திய வீரர்கள் தம்மிற்கலந்து பக்கலில் நிற்கவும், கந்திருவர்கள் கானவோசையை யெழுப்பினார்கள். எ - று. (௩௰)

வரிசைக ளின்னண மைவந்தனை செய்யப்
பரிசனர் சூழ்ந்திரு பாலுநெ ருங்க
விரசிய மென்மைமி விமானமொ டேகிப்
புரிசெய்க ணேசபு ரத்தினி லுற்றான்.

(இ - ள்) வந்தனைகள் இவ்வகையாக முறைமைசெய்யவும், பரிசனங்கள் புடைசூழ்ந்து இருபக்கலினும் நெருங்கவும், மென்மைமிக்க விமானத்துடன் சென்று, ஆசையைச் செய்கின்ற கணேசபெருமானுடைய நகரத்திற் பொருந்தினன் [வல்லாளன்] எ - று. (௬௧)

இந்திரன் மண்ணவ ரின்பமவெ றுத்தாங்
கிந்திர வின்பமெ லாநனு மவெறுக்கு
மந்தமில் போகம ருந்திவ ருந்தா
தெந்தைதி ருங்கழ லெய்தியொன் றுற்றான்.

(இ - ள்) இந்திரனானவன் உலகினருடைய சுகத்தை வெறுத்தாற்போல இந்திரபோக முழுவதையும் (அற்பமென்று) வெறுக்கத்தக்க எல்லையில்லாத போகத்தை நுகர்ந்து, துன்பமடையாமல், எந்தையாகிய கணேசபெருமானுடைய திருவடியில் ஒன்று சேர்ந்தனன் எ - று.

போகமருந்தி வருந்துதலாவது சுக முற்றவர்க்குச் செருக்கு முதலியவற்றால் துன்பு விளையுமாகலின். (௬௨)

வேறு

அதிசயம் பலவு நோக்கி யந்நக ரத்தோ ரியாரும்
மதிவணி சடிலத் தெந்தை விநாயகர் தமக்குக் கோயின்
முதிரழ கெழிப்ப வாக்கி முறையுளி பூசை யாற்றிக்
கதிவளர் விழாவு மற்றுங் கடைப்பிடித் தியற்றி னாரே.

(இ - ள்) அந்நகரவாசிகளெல்லாரும் பல அதிசயங்களையும் பார்த்து, சந்திரனையணிந்த சடையையுடைய எந்தையாகிய விநாயகக்குரிசிலுக்குத் திருக்கோயிலை மிக்க அழகு விளங்கச்செய்து (ஆகம) முறைப்படி பூசையைச்செய்து, ஆசை வளருந் திருவிழாவு மற்றுள்ளனவும் உறுதியாகக்கொண்டு செய்தார்கள் எ - று (௬௩)

மேதகு வரங்கள் சான்ற விநாயக சதுர்த்தி நோற்று
மூதுல கனைத்து மெய்தி முறைமுறை பூசை யாற்றிக்
காதலிற் பணியுஞ் செய்து கருதிய வரங்கண் முற்றிப்
போதவங் கருளா நின்றுன் புகர்முகக் களிற்றுப் பெம்மான்.

(இ - ள்) மேன்மைதங்கிய வரங்கள்மிக்க விநாயக சதுர்த்திகளிலெல்லாம், பழமையாகிய உலகினர் யாவரும் (அங்கு) அடைந்து முறைமுறையாகப் பூசைசெய்து ஆசையுடன் பணிவிடைகளையுஞ்செய்து, புள்ளிகள் வாய்ந்த யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள் விரும்பியவரங்களை முடியப் பெற்றுவர, அவ்விடத்திலே திருவருள் புரிகின்றனர் எ - று. (௬௪)

வேதனை முழுது நீக்கி விழைந்தவல் லாளற் கன்றே
கோதறு முத்தி யீந்த குஞ்சர முகவ னுக்கு

மாதவா முதலோா போறறி வலலாள கணேச னென்ன
வோதினா நாமந தனனை யுரைததவாக கிடுமபை யினறே.

(இ - ள்) (தன்னை) ஆச்சிரயிதத வல்லாளனுக்கு (உற்ற) வேதனை முழுவதையு மொழிதது அபபொழுதே குற்றமற்ற முததியைககொடுதத யானைமுக விநாயககடவுளுககு, பெருந்தவசிகள முதலானவர்கள துதிசெயது வல்லாள கணேசரெனறு பெயரிட்டாாகள அததிருநாமததைக் கூறினவர்களுக்குத துன்ப மெனபது (சிறிதும்) இல்லை எ - று (௯௫)

பெருமபிணி கொணட நாய்கன் பேரிட ருழநதேயநத
வருமபவ மறவல லாள னனறுரைத திடட வாறே
விரும்பிய மனைதா யாக வெறுததகு மகனு மாக
வருமபவத துறறுத தககனெனுமபெயா வழங்கப் பட்டான்

(இ - ள) பெருநோயைக கொணட வணிகனுகிய கலியாணன் பெருந் துனப மனுபவிததே அநத அரிய பிறவியொழிய, அககாலததில வலலாளன சாப மிட்ட வகையே விருமபிய மனைவி தாயாகவும, தான வெறுககததகக மகனுகவும, வரும பிறவியிற் பொருநதத தககனெனனும பெயா வழஙகபபட்டனன எ - று (௯௬)

அருநதவந தான மாதி யபபவத தியறற லானுந
திருநதுமெயஞ் ஞானம பிளளை கணேசனுற சோத லானும
வருநதுநோய மறையோன காறறுன மாயநதது வளாமே ரனபு
பொருநதலிற் கணேசா காடசி பொருககெனக கொடுததிடடாரே.

(இ - ள.) அரிய தவநதான முதலியவறறை அபபிறவியிற செயதலானும், திருததமாகிய உணமை ஞானததையும புததிரபபேறறையுங கணநாதபபெருமானுல அடைதலானும, வருநதிய பிணியானா முககலமுனிவா (தேக) காறறினுலொழிந தது. வளாகினற மிகக அனபானது பொருநதுதலினுற கணேசபபெருமான விரைவாகத தரிசனந தாருளினா. எ - று (௯௭)

அவாபெருங கருணைப பேறறு லததகு தககனெனபாள
றவநிறை முனிவன பாதஞ சாாநதுபல பவமுந தீாககுஞ
சிவமலி மனுவும பெறறுன றெவவடு வேலோ யனறு
னவனிகா வலனுய வாழநத வடைவுமீங் குரைததுங் கேண்மோ

(இ - ள) அக கணேசபபெருமானுடைய சிறநத கிருபாபலனுல, அநதத தகுதியுடைய தககனெனபவன, நிறைநத தவததையுடைய (முககல) முனிவா திருவடியையடைநது பலபிறவியையு மொழிககும மஙகலமிக்க (ஏகாடசர) மநதிரததையும பெறறனன பகைஞாக கொலலும வேறபடை யேநதிய வீமராசனே! அததக்கனெனபவன் பூமியைக காககும அரசனுய வாநதவகையையும இபபொழுது சொல்லுகினறேன கேட்பாயாக (என்று விசுவாமிததிரமுனிவா கூறுகினறா) எ - று (௯௮)

வலலாளனமுததியடைநதபடலமமுறறிறறு.

ஆகத் திருவிருத்தம் - ௧௩௬௫

தக்கனாசாட்சிபெற்றபடலம்.

மிக்கருள் வழங்கு மந்திரங் கொடுத்த மேதகு முக்கல முனியைப்
பொக்கமி லன்பாற் பூசனை புரிந்து புறவிடை கொண்டுதா யோடு
தக்கனங் ககன்று தக்கவர் வாழ்த்தத் தருக்கவுண் டினணிய நகர்பாற்
றெருக்கவப் புறவத் தெவ்வகை வளனுந் துவன்றுமோ ரூழலை யடுத்தான்.

(இ - ள) பேரருள் தருந் திருமந்திரத்தை யுபதேசித்த மேன்மைபொருந்திய முக்கலமுனிவரைப் பொய்யமையில்லாத அன்புடன் பூசைசெய்து புறத்தேவிடைகொண்டு, தன் தாயாகிய கமலையுடன் தக்கனவன் அவ்விடம்விட்டுச் சென்று, தகுந்தவர்கள் வாழ்த்தக் கவுண்டிய நகரத்தின் பக்கலிற்சேர்ந்த அப்புறவத்தில் எவ்வகைப்பட்ட வளங்களு நெருங்கிய ஓரிடத்தை யடுத்தனன். எ - று.

புறவம - முல்லைக்குறிஞ்சி நிலம

தக்கன் தன் மனத்தால் முக்கலமுனிவரைப் பிரியாதவனென்பார் "புறவிடைகொண்டு" என்றார். (க)

அளிந்ததீங் கனியின் றேறலவாரந் தொழுகி யசும்புமச் சூழலி னிடையே, தெளிந்தநீர்த் தடத்துச் செழுமணிக் கரையிற் றிப்பியமாய்ப்புராதனமாய்க், குளிர்ந்தவான் றிங்கண் மிலைந்தருள் கணேசர் கோயிலொன் றிருப்பநேர் கண்டு, மூளிந்தநீ வினையான் மகிழ்வொடு மதனைமுற்றி யாங் கிருந்தனன் கணிதத்தால்

(இ - ள) கனிந்தமதுரமான பழங்களின் தேனைது வழிந்தொழுகி (ககாலை) வழுக்குகின்ற அவ்விடத்தின் மத்தியில், தெளிந்த நீரையுடைய தடாகத்தின் செழுமை தங்கிய அழகிய கரையிலே, திவ்வியமாகவும் பழமையாகவும் குளிர்ச்சிபொருந்திய சிறந்த சந்திரனைச் (சிரமிசை) யணிந்தருளிய கணேசப்பெருமானுடைய திருக்கோயி லொன்றிருக்க நேரேகண்டு, விலக்கிய தீவினையையுடைய தக்கன் ஆசையுடன் அத்திருக்கோயிலைச் சரிவர முடித்து அவ்விடத்திருந்து (அம்மந்திர) ஸமரித்தனன். எ-று.

திப்பியம - தெய்வீகம (உ)

பன்னிரண் டாண்டு திருந்தனுட் டானம் பண்ணியே காக்கர மனுவைத்
தன்னிக ரில்லான் றுனினை நினைந்து தவ்வுறக் கணித்தனன் பின்பு
மன்னியங் கிருந்த விநாயகர் தம்மை மகிழ்ந்திரு பத்தொரு திவசந்
துன்னுபல் பொருளுஞ் சோர்வறக் கொண்டு தூயபூசனை புரிந் திருந்தான்.

(இ - ள) பன்னிரண்டு வருடங்கள் திருத்தமாகிய அநுட்டானத்தை முடித்து (முக்கலமுனிவருபதேசித்த) ஏகாக்ஷர மந்திரத்தைத் தனக்கொப்பற்ற விநாயகக்கடவுளைத் தியானித்துத் தகுதியுடன் ஜபித்தனன் அதன்பின்னர் அங்குநிலைபெற்றிருந்த விநாயகக்கடவுளை ஆசையுடன் இருபத்தொரு தினங்கள்வரையில், நெருங்கிய பல பொருள்களையு மிகுதியாகக் கொண்டுவந்து புனிதமான பூசை செய்துகொண்டிருந்தனன். எ - று.

சோர்வற - குறைவற ; இதனை மிகுதியாக வென்றும. (ங)

இருபதின் மேலா மொருதினத் தியாம மிறந்திடு வைகறைப் பொழுதில், ஒருகரத் திருகோட் டொழுகும் மதத்தி னொளிர்ந்தசிந் தூர மத் தகத்தின், வருமொரு வேழ மரதன மாலை வயங்குதன் கழுத்திலிட் டெடுத்துப், பொருவரு பிடர்மேற் கொண்டொரு நகரிற் போதரக் கனவு கண்டனனே.

(இ - ள்.) இருபத்தோராந் தினத்தின் யாமங்கழிந்த விடியற்காலத்தில், ஒரு கரத்தையும், இருகொம்பினையும், ஒழுகுகின்ற மும்மதத்தினையும், பிரகாசிக்கின்ற சிந்தூரமெழுதிய மத்தகத்தினையுங் கொண்டுவரும் ஓர் யானையானது இரத்தினமாலையைப் பிரகாசிக்கின்ற தன் கழுத்தி லணிந்து தன்னையெடுத்து ஒப்பற்ற பிடரியின் மேற்கொண்டு ஓர் நகரத்திற்குச் செல்லச் சொப்பனங்கண்டனன் எ - று.

யாமம் வைகறையென்பன சிறுபொழுதாறனுள்ளவவொன்று அவை மாலை யாமம் வைகறை விடியல் நண்பகல் எற்பாடு எனப்படும் (௪)

விடிந்தபின் னெழுந்து நாட்கடன் முடித்து விருப்பினாற் கமலையை வணங்கி, முடிந்தவென் கனவைக் கேளென மொழிந்தான் முகமலர்ந் தன்னையுங் கேளாக், கடிந்தன நந்தங் கலியையின் னேமண் காவல னாகுவை யென்று, நொடிந்தன ளிவ்வா றளவளா யிவாக மேற்றனர் முன்பு போ லிருப்ப.

(இ - ள்) பொழுதுபுலர்ந்த பின்னர், நித்திரைநீங்கி நித்திய கருமமுடித்து அன்புடன் கமலையாகிய தாயைப்பணிந்து, நிகழ்ந்த என் சொப்பனத்தைக் கேட்பாயாகவென்று (தக்கன்) கூறினன். கமலையும் முகமலர்ச்சியுற்றுக் கேட்டு நம்முடைய தரித்திரத்தை யொழித்தோம் இப்பொழுதே அரசனாவாயென்று நொடிந்தனள். இவ்வகையாக (மகனுந் தாயுமாகிய) தக்கனுங் கமலையும் அளவளாவி முன்போலக் கணேசமூர்த்தி திருமந்திரத்தைத் தியானித்துக்கொண்டிருக்க எ - று.

நொடிந்தனள் - கைந்நொடி கொட்டினளென்றேனும், கொங்கையிற் பால் சுரந்தனளென்றேனும் பொருள்கொள்க.

கேளா-செய்யாவென்னும் வாய்பாட் டிறந்தகால வினையெச்சம். ஆகுவை இதில் கு - சாரியை (௫)

வேறு

கற்றார்புனை புகழ்மல்கிய கவுண்டினனிய நகரிற்
செற்றார்திறை யிடுசந்திர சேனன்றனு நீங்கி
யுற்றானகதி யுற்றாரொடு முரிமைத்திரு வனையாள்
பொற்றாரினள் சுலபைப்பெயர் பூண்டா ளவலித்தாள்.

(இ - ள்) கல்விவல்லவர்களால் அலங்கரிக்கப்பட்ட புகழ்மிகுந்த கவுண்டினனிய நகரத்திலே, சத்துருக்களுங் கப்பஞ்செலுத்துஞ் சந்திரசேனராசன் உடல் விட்டு நற்கதியடைந்தனன் அவன் சுற்றத்தாருடன் உரிமையுடைய சிறந்த மனைவியும் பொன்மாலை யணிந்தவளுமாகிய சுலபையென்னும் பெயருடையவள் (பின்வருமாறு) துன்புற்றனள் எ - று.

செற்றார் திறையிடுமென்றது அவன்றாற்றல் விளக்கியதாம். (௬)

என்னுயி ரனையாயொளி ரிருகண்மணி யனையாய்
மன்னுபுவி தாங்கும்பொறை மாற்றிச்சுர ருலகம்
பொன்னாதிணி தோளவெஃகிய புக்காயெனை நீத்தா
யன்னாயிது தகுமோவிது தகுமோவமிழ் தனையாய்

(இ - ள்.) என் அரிய உயிர்போன்றவனே! பிரகாசிக்கின்ற இருகண்களி லுள்ள கருமணிபோன்றவனே! அரசனே! உலகினைச் சுமக்குஞ் சுமையை யகற்றித் தேவலோகத்தை அழகுபொருந்திய தோளிற்சுமக்கக்கருதி (அங்கே) சென்றனையோ? என்னைப் பிரிந்தாய்! என் தாய்போன்றவனே! தேவாமிர்தம் போன்றவனே! இது தகுமோ? இது தகுமோ? எ - று.

வெஃகியவென்பது செய்யியவென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சமாகலின் விரும்பியெனப் பொருள்படும். (எ)

கொழுகொம்பறு கொடிபோன்மிகு குளிர்நீரறு கயல்போ
லிழுதங்கறு சுடர்போலொளி யெல்லோயறு நாள்போன்
முழுதுந்துயர் பெருகுங்கடன் முழுகும்படி யெனைநீத்
தொழுகுங்குழ லரமாதரை யுற்றாயிது தகுமோ

(இ - ள்) கொழுகொம்பற்ற கொடிபோலவும், மிக்க குளிர்ச்சிவாய்ந்த தண்ணீரற்ற சேற்கெண்டை போலவும், நெய்யற்ற தீபம்போலவும், பிரகாசிக்கின்ற சூரியனற்ற பகற்பொழுதுபோலவும், முழுவதுந் துன்பம்பெருகுங் கடலில் அமிழும்படி யென்னைவிலக்கித் தேனொழுகுங் கூந்தலையுடைய தேவமாதர்களை யடைந்தனை. இது தகுமோ? எ - று.

கொழுகொம்பு-கொடிகள் படருதற்கு ஆதரவாக நடப்பட்டதோர் கொம்பு.

வேழ்வித்தழ லெதிரேமணம்படை மெய்யேயிது காறும்
வாழ்வித்தனை யிப்போதுநல் வழிபாடடியேனுள் யாது
தாழ்வித்தனெ னடியேனது தகவுண்டெனி லுரையாய
சூழ்வித்தக வெனபாலிடர் சூழ்வித்தனை தகுமோ.

(இ - ள்) ஓமாக்கினியின் முன்னே என்னை மணஞ்செய்தது முதல் உண்மையாகவே யென்னை யிதுவரையில் (குறைவின்றிக்காத்து) வாழச்செய்தனை. இப்பொழுது அடியேன்செய்யும் பணிவிடைகளில் யாது குறைபாடுசெய்தேன்? அப்படி யுள்ளதாயின் (வாய்விண்டு) கூறுவாய். நிறைந்தஞான சொரூபியே! எனக்குப் பல துன்பங்கள் சூழவிடுத்தனையே! இது உனக்குத் தகுமோ? எ - று.

தாழ்வித்தனென் இதில் என் விகுதி தன்மையொருமையை யுணர்த்தியது.

அந்நாளுறு மன்போடலர் மனதோவகல் வுற்ற
இந்நாளது போலேயய லேகுற்றிலை நின்று
யென்னென்துயர் வேனென்னுடலின்பார தரவருடா
யொன்றாரிடை யுறுபாவனை யுற்றுயுருகாமே.

(இ - ள்) அத்திருமணஞ்செய்த காலத்திற் பொருந்திய அன்போடு கூடிய மனதோ விலகியது. இதுவரையில் அதுபோலவே பிறவிடத்திலே சென்று மில்லையாக நின்றனை. என்னென்று துன்புறுவேன்? என் தேகமானது இன்பமடையும்படி

(எனைக் கரத்தால்) பரிசியாய (என விடயத்தில மன) முருகாமல், பகைஞரிடம் பொருந்திய பாவனையை யுற்றாய எ - று

வருடாய் என்றதில் வருடல தடவல். அருள்தாவெனப் பிரிக்கின ஒன்று ரென உயிர்முதலாகக கொண்டு வகரவுடம்படுமெய்கூட்டி, வொன்றுரெனப்படிகக.

ஆவாவினி யெனசெயகுது மந்தோவென விவ்வா
றோவாதுளை மொழிவாள்விழி யுறைசிந்திட வுருகித்
தீவாய்விழு தளிர்போலொளி தீரததனு வேறுயக்
காவாதுள மானம்படு கணவனமிசை விழுவாள.

(இ - ள.) ஆ! ஆ! இனியாது செய்வோம? ஐயோ! எனறிவ்வகையாக விடாமலழுது, கண்களினின்றும் நீரததுளிசிந்த மனமுருகி, தீயில்விழுந்த தளிர்போலப் பிரகாசமொழிய உடல வேறுபட்டுக காககமுடியாமல் மனதில் மானமுணடாகிக் கணவன (இறந்தவுடல) மேலவிழுவாள எ - று.

உறை-நீரததுளி. (௧௧)

முகமெற்றுவ டலையெற்றுவண முருகாரகர மலரால
றகவெற்றுவள கனிவாயிரு தனமுங்குழை வெய்த
மிகவெற்றுவள் வயிறெற்றுவண் மின்னைப்பொதி முகிலி
னுருமைகருழல பொதியததளி ருருவந்துவ ளுற்றாள.

(இ - ள) முகத்தினை மோதிக்கொளவாள; தலையிலடித்துக்கொளவாள, வாசம் பொருந்திய கைகளாகிய மலர்களால் தகுதியாக அறைந்துகொள்வாள், (கொவ்வைக) கனிபோன்றவாயும, இருதனங்களும குழமபுமபடி மிகுதியும அடித்துககொள்வாள், வயிற்றைப் பிசைந்துகொளவாள. மின்னலைக்கொண்ட மேகத்தினைப் போலவிளங் கரிய கூந்தலானது பொதியுந் தளிர்போன்ற உருவை துவண்டனள எ - று. (௧௨)

இவ்வாறவன் மனையாளொடு மினைவோர்களு மினைய
வொவ்வாதவ ரலலாலவ யொப்பாருல கிலலா
வவ்வாண்மையி னரசனபடி யகலுற்றன னெனனாத்
தெவ்வேலமைச சாகளுநதுயா தேக்கிததெரு மந்தார.

(இ - ள) இவ்வகையாக அவன மனைவியுடன (உறவினர் முதலிய) துன்ப மடைபவர்களுந துன்பமடைய, சமானமலலாதவர்களல்லாமல் வெற்றியிற சமான மானவர்கள உலகத்திலில்லாத அவவகைய ஆண்டன்மையுடைய சந்திரசேனராசன் உலகினை நீங்கினானென்று, பகைஞர்களைக் கொலலும வேற்படையேந்திய மந்திரிக ளுந் துன்பமிக்கு வருந்தினார்கள எ - று.

அவ்வரசனுக்கு ஒதத பலமுடையார் ஒருவருமிலலை யாதலாலும, யாவரும் அவனுக்குக குறைந்த பலமுடையராதலாலும், "ஒவ்வாதவ ரலலாலவ யொப்பாருல கிலலா அவவாணமையி னரசன" என்றார. (௧௩)

வேறு.

கலங்கவிழ்த்த நாயகன்போற் கையற்று மிகத்தளர்ந்து
புலம்புநரை யெதிர்நோக்கிப் புரோகிதனமற் றிதுசொன்னான
புலம்புவதெல லாநுமக்குப் புணர்சுசுததைக் குயிததனறே
புலந்தவனுக குறுசுகத்தை யுணணலீர் புலமபொழிமின.

(இ - ள்.) கப்பலைக்கவிழ்த்த வைசியனைப்போலச் செயலற்று மிகவுந் தளர்ச்சியுற்றுப் புலம்புகின்றவர்களைப் புரோகிதன் நேரே பார்த்து இதனைச் சொல்லுகின்றான் (நீங்கள்) புலம்புவதெல்லாம் உங்களுக்குள்ளதான சுகத்தைக்குறித்ததல்லவா? (அஃதிருக்கட்டும்) இறந்தவனுக்குப் பொருந்திய சுகத்தை (உண்டுசெய்ய) நினைத்தீர்களல்லீர். (இனிப்) புலம்புதலை விடுவீர்களாக எ - று.

புலம்புநா - இதில் நகரம் நிகழ்கால முணர்த்தியது

புலம்பு - முதனிலைத் தொழிற்பெயர் (௪௪)

காவலனுக் கினிச்செய்யுங் காரியத்தைப் புரிமின்கள்
பூவுலகிற் பிறந்தவருட் பொன்றாதா ருளரேயோ
வாவிபிறந் தவருடனே யாவிபிறந் தவர்யாரே
மேவியவா ணாளொழியின் விண்ணவரும் வீடுநரே.

(இ - ள்) அரசனுக்கு இனிச்செய்யவேண்டிய (ஈமக்) கடனைச்செய்யுங்கள் பூலோகத்திலே பிறந்தவர்களில் இறவாதவர்களிருக்கிறார்களோ? உயிரொழிந்தவருடனே உயிரொழிந்தவர்கள் யாவரோ? பொருந்திய ஆயுள்கால மொழியின் தேவர்களும் இறப்பவர்களேயாவர்! எ - று. (௪௫)

செய்த்தக்க காரியத்தைச் செய்துதனு விறந்தவரை
யுய்த்தக்க நற்கதியி லுறுத்துநரே யவர்க்காத்தர்
பொய்த்தக்க பொருட்கிரங்கிப் புலம்புநர்க ளொருஞான்று
மெய்த்தக்க பொருளறியார் வீணரென விளம்புதலும்.

(இ - ள்) செய்யத்தக்க கருமங்களைச் செய்து, உடலொழிந்தவரை யுச்சீவிக்கச் செய்யத்தக்க நல்லபதவியிற் செலுத்துபவர்களே (இறந்தவர்களுக்கு) ஆப்தர்கள். பொய்மையாகிய (உடலென்னும்) பொருளுக்கிரங்கி அழுதுகொண்டிருப்பவர்கள் எந்தக்காலத்திலும் உண்மையாகிய பொருளை யறியாதவர்கள்; அவர்கள் வீணர்களென்று சொல்லவும் எ - று (௪௬)

சூழுமனோ ரஞ்சிதனே சுமந்துவென வனறவன்பால்
வாழுமமைச் சிருவருள மன்னவனோர் சுமந்துவெனும்
பாழியமைச் சனிறைக்குப் பாலனில னாகையினா
லூழினுறு காரியங்க ளுஞற்றினா னுலகேத்த.

(இ - ள்) ஆலோசிக்கும் மனோரஞ்சிதனும் சுமந்துவுமென்று அப்பொழுதவனிடத்திருந்து வாழ்ந்த இருவர் மந்திரிகளுள்ளும், அரசனையொத்த சுமந்துவென்னும் பெருமைதங்கிய மந்திரியே, அரசனுக்குப் புத்திரனில்லை யாகலின் பழைமைப்படி செய்கருமங்களை உலகினர் துதிக்கும்படி செய்துமுடித்தனன் எ - று

மன்னவனோர் சுமந்துவென்றதால் அச்சுமந்து வெனபான் அரசகுலத்தவனென்றும், கீர்த்தியில் மன்னனை நிகர்த்தவனென்றுங் கொள்க (௪௭)

சுனைபொலி படிந்தாடித் துணர்மேவு மபினிலைதின்று
குலவுமனை யுட்புகுந்தார் கோதிறருப் பணமாற்றிப்
பலருமவ ரிடம்புகுந்தார் பதின்மூன்று நாளளவு
மிலத்திகிரி யைகள்பலவு மியற்றிமுடிந் தனபின்பு.

(இ - ள்) (அரசன் மனைவியாகிய) சுலபையென்பவள் நீரின்மூழ்கி ஸ்நானஞ்செய்து, பூங்கொத்தினையுடைய வேப்பிலையைத் தின்று (வள்) நெருங்கிய மனைக்குள்ளே சென்றனள்; குற்றமில்லாத தருப்பணஞ்செய்து பலரும் அவரவருடைய இடங்களை யடைந்தார்கள். பதின்மூன்று தினங்களவரையில் விளங்குகின்ற பலகிரியைகளுஞ் செய்துமுடிந்தன எ - று.

வேம்பினிலை தின்றல்-சுகத்தைவெறுத்த கைம்பெண்ணின் துக்கக்குறிகளு ளொன்று. (௧௮)

அமைச்சர்புரோ கிதர்கணித்த ரந்தணர்க ணகரிகர்
தமைச்செறிவித் தாயசுலபை சாற்றுவா ளினிநீவிர்
சுமைசயிலப் புவிதாங்குந் தோளானைத் தேர்ந்திடுமினெனக்
கணமைசெறுநர் நலியாத வாறென்று நவிற்றினளால்

(இ - ள்) மந்திரிகள் புரோகிதர்கள் சோதிடர்கள் வேதியர்கள் நாகரீகர்கள் முதலியவர்களைக் கூட்டி, உயர்வாகிய நடையையுடைய சுலபை யென்பவள் சொல்லுவாள்: இனி நம்மைச் சத்துருக்கள் துன்புசெய்யா வகையாக, சுமையாகிய மலையையுடைய பூமியைச் சுமக்குந் தோளையுடைய அரசனைத் தேர்ந்தெடுங்கள் எனக் கூறினள் எ - று. (௧௯)

தொக்கவர்க ளனைவோருஞ் சூழ்ந்திருக்கு மமையத்தின்
முக்கலர்வந் தனைசெய்வார் முழங்குமத மால்களிற்றை
யிக்கணமே யலங்கரித்திட் டிலகுமரத் தனத்திழைத்த
செக்கமல மலர்மாலை திண்கரத்திற் கொளக்கொடுத்து.

(இ - ள்) அவர்கள் யாவரும் நெருங்கிச் சூழ்ந்திருக்குஞ் சமயத்திலே, முக்கால முனிவர் அங்கே வந்தருளிச் சொல்லுகின்றனர்: முழங்குகின்ற மதத்தையுடைய பெரிய (பட்டத்து) யானையை இந்த விநாடியிலேயே அழகுசெய்து, பிரகாசிக்கின்ற இரத்தினத்தாலிழைத்த செவ்விய தாமரை மலர்மாலையை வலிய கரத்திற்கொள்ளும்படி கொடுத்து எ - று. (௨௦)

தளைவிடுத்து விடுமின்கள் சார்ந்தெவனை யதுவெடுத்துத்
திளைமகிழ்வின் வருமந்தச் செம்மலையே மாபெருவு
வளைகடன்மண் ணுலகிற்கு மன்னவனாக் குகவென்று
களைகண்மொழிந் தனர்போந்தா ரெல்லோருங் களித்தனரால்.

(இ - ள்) தளையவிழ்த்து விட்டுவிடுங்கள்; அது எவனை யெடுத்தெடுத்து மிக்க மகிழ்வுடன் வருமோ அந்தப் பெருமையுடையவனையே, வளைந்த கடல் சூழ்ந்த பூலோகத்தைக் காக்கும் அரசனாக முறைப்படி கொள்கவென்று ஆதரவாகக் கூறினார். அங்கு வந்தவர்கள் யாவரும் (அதனைக்கேட்டு) மகிழ்ந்தார்கள் எ - று.

தளை - கட்டுதல். (௨௧)

கக்கனென்னும் பெயருடைய களிற்றரசை யலங்கரிப்பித்
திகலையிலிறை றனைக்கணவ னினிதமரு மத்தணிந்த
புகரிலர சினுக்குரிய பொன்மலர்த்தா மந்தொடையன்
மகிழ்வுதனக் கைகொடுத்தார் மன்னனைக்கொள் கெனாதலை.

(இ - ள்) சுலபையெனனும பட்டமகிஷி, சுனமெனனும பெயரையுடைய அரச யானையை அலங்காரஞ்செய்வித்து அரசனைக்கொண்டு வருகவென்று, கூர்மை வாய்ந்த வேலாயுதமேந்திய தன கணவனை சந்திரசேனராசன இனிதாக மார்பகத்துப பூண்ட குற்றமில்லாத அரசாட்சிக்குரிய பொன்னாலாகிய தாமரைமலா மாலையைக களிப்புறும்படி அதன கையிற்கொடுத்தனள் எ - று

அரசயானையென்றது னிலக்கணந்தை,

"காலோர நானகுந கனிகையுந கோசமும
வாலுமபபோ டேழு மாநிலந தோயப
பாலுஞ சஙகுந சாலமபோ லுகிரது
காலினு ஞானற வொருதனிக கையினும
வாலினும வாயினு மருபபினுங கோறல
வலலது மதினமூனறு முழசசுற றுடைத்தாய
எழு முழமுயாந தொன்பதுமுழ நீணடது
தீயுமிழ சிறுகண ணுஞ்செபபுகரு முடைத்தாய
முனபுபாந்து பினபணிநத தாயின
அவவியல யானையை யரசுவா வென்ப"—என்பதனானறிக (உஉ)

இந்தநக ரினிதாளு மியல்புடைய வொமாறுஞ
சிந்தைதனக் கிசைந்தவொரு செமமலைக்கொண் டுறுகவெனத்
தந்தமொழி யுட்கொணடு தறுகணமத மாலவேழஞ்
சுந்தரவெற பொனறெழுந்து துனைவதுபோ னடந்ததறே.

(இ - ள்) இந்த நகரத்தை யினிதாக அரசுபுரியும இயல்புடையவனும், மன திற்கிசைந்தவனுமாகிய ஒரு அரசனைக் கொண்டுவருவாயாகவென்று கூறிய சொல்லை மனதிற்கொண்டு, அஞ்சாமையையுடைய மதமபொருந்திய பெரிய யானையானது, அழகிய மலையொன்று எழுந்து விரைந்து நடக்காறபோல நடந்தது. எ - று

துனைதல - விரைதல நடந்தது அன்று - நடந்தன்று. இது "தொட்டனைத்து, கற்றனைத்து" எனபனபோலத் தொகுத்தல. (உ௩)

அன்றுமல ரோனவிடுதத வாழியினபின முனிவராக
வொன்றுதவம புரிந்தன முறிமைகொளச் சென்றதுபோ
னனறமைசசா முதலானோர் நடக்குமதத வேழமபின
றுனறினரெசன றனாதமக்குத் தோனறலைக்கொள வானவிறைநதே

(இ - ள்) அக்காலத்திற் பிரமதேவன் செலுத்திய (தருப்பைச) சக்கரத்தின் பினனே முனிசிரேஷ்டர்கள் பொருந்திய தவஞ்செய்யத்தக்க இடத்தை உரிமையாகக்கொள்ளும்படி சென்றதைப்போல, நல்ல மந்திரிகள் முதலாயினோர் நடந்து செல்லும மதயானையினபினனே தமக்கு அரசனைக்கொள்ளும்படி விருப்புற்றுச் சென்றார்கள் எ - று

"அன்று மலரோன விடுத்த * * * சென்றது" என்றது—பூர்வம முனிவா பலரும் ஒன்றுசேர்ந்து பிரமதேவனை யடுத்து, சுவாமீ! அடியேங்கள் தவம்புரிதற்குத் தகுதியான இடமெதுவென வினவ, கமலயோனி கருணைகூர்ந்து ஒர் தருப்பையைச் சக்கராகாரமாக வளைத்து அதனை யுருட்டி நீங்கள் இதன்பின் சென்று இது

பொருந்துமிடமே உத்தமமானவிடமென் றுணர்கவெனக் கூறியனுப்ப அவர்களும் அவ்வாறே யதனைப் பின்றொடர்ந்து அது தங்கியவிடத்தில் தவஞ்செய்து பலன்களை யடைந்தார்கள். இதில் நேமி விழுந்தவிடம் நைமிசவனமென்றாயது என்பது சரிதம்.

இச்செய்யுளில் மலரோன் விடுத்த வாழி ககனமென்னுங் களிறென்றும், அதனைத்தொடர்ந்த முனிவர்கள் யானைபின் சென்ற மந்திரி முதலானோரென்றும், தவம் புரி தானம் பெறுங்கருத்து அரசனைப் பெறுங்கருத்தென்றும் உவமிக்கப்பட்டன

கொள்வான—வான் எதிர்காலவினையெச்ச விகுதி (உ௪)

கற்புடைய மடமாதர் கணவனையே யல்லாது
பொற்புடையா ரிரந்திடினும் புல்லாத வாறேபோற்
பற்பலருந் தொழினீங்கிப் பரிவினொடு மெதிர்போதச்
சற்பமெனச் சீறியவர் தமைவிலக்கித் துயர்வேழம்

(இ - ள்) கற்பினையுடைய இளம்பெண்கள் தம்முடைய நாயகரையல்லாமல் அழகுடையவர்கள் யாசித்து வேண்டினாலும் அவர்களைத் தழுவாதவகைபோல, பலபேருந் தத்தங்காரியங்களை விடுத்து ஆசையோடு (காம மன்னவனுக்குக்கருதி) எதிர் செல்லவும், உயர்வாகிய குணமுடைய ககனமென்னும் யானையானது பாம்புபோலச் சீறி அவர்களை விலக்கிற்று. எ - று

மடமாதர் - அறியாமைக்குணமுடைய பெண்களெனினுமமையும் மடமை - மகளிர்குண நான்கனுளொன்று அவை அச்சம் மடம் நாணம் பயிர்ப்பு எனப்படும். சர்ப்பம் - எதுகைநோக்கிச் சற்பமென நின்றது

"கற்புடைய * * * புல்லாதவாறு' என்றதை, தாயுமானசுவாமிகள்.

"கற்புறு சிந்தை மாதர் கணவனையன்றி வேறோ
இற்புறத் தவரை நாடார் * * *" என்பதனானுணர்க (உ௫)

வேறு.

வரைசெய் மணித்தோண் மன்னவனை வலமே லிருவிப் புணர்த்தியிப்
புரைசெய் வயவெங் களிறென்று பொங்கு மகிழ்ச்சி தலைசிறப்பத்
திரைசெய் கடல்போற் றிரண்டெவருந் தேமொய் புனலாற் றுகளவித்து
விரைசெய் மலர்த்தோ ரணமாதி வீதி தோறு மலங்கரித்தார்.

(இ - ள்) மேன்மையைச் செய்யும் இக்ககனமென்னும் யானையானது மலை போன்ற அழகிய தோளையுடைய அரசனை விரைவில் தேடிப் பிடிக்குமென்று பெருமகிழ்ச்சி யதிகரிக்க, அலையொலிசெய்யுங் கடல்போல யாவருந்திரண்டு, மதுரமாகிய நீர் பெய்தலாற் புழுதியை யடக்கி, வாசஞ்செய்யும் மலர்த்தோரண முதலியவற்றால் தெருக்களிலெல்லாம் அலங்காரஞ் செய்தார்கள். எ - று

தோரணமாதி என்றதில், ஆதியென்றதால் பூப்பந்தர் முதலியனவுங் கொள்க

உருவிற் சிறந்த பொலங்கோயி லோங்கு மணிவாய் தவினீங்கித்
தெருவி னடந்து நகர்கடந்து சென்ற வேழம் வனம்புகுந்து
பொருவி றவத்து முக்கலனார் பொருந்தாச் சிரமத் தணித்தாக
மருவி யிருந்த தக்கனுக்கு மணிமா லிகையைத் தரித்ததே.

(இ - ள) அழகின மேமபாடுற்ற பொறகோயிலின [அரசமாளிகையின்] உயர்நத அழகிய வாயிலினினறும புறப்பட்டு வீதிவழியே நடநது செனற அரச யானை யானது காட்டிற பிரவேசிதது, ஒபபிலலாத தவததையுடைய முககலமுனிவா எழுந் தருளிய ஆசசிரமததிறகுச் சமீபமாக அமாநதிருநத தககனெனபவனுககுப பொற் றாமரைமாலையைச சூட்டியது. எ - று

கோயில் - இராசககிருகம ஆசசிரமககு - மாடககுளைற்றபோல அததுச சாரியையினறி யுருபேறறது இது ஆசசிரமததிறகு எனபது (உஎ)

மூவா பெருமா னென்னையாணட முககட பெருமா னரியாதி
தேவா பெருமா னொருகோடடுச செலவப பெருமா னடியாாகட
கியாவை யரிய விருநதாஙகே யிருநது தககனரசுரிமை
மேவு மெனினவேல கரததேநதும வீம மேலும விளமபுதுஙகேள.

(இ - ள) தககனெனபவன இருநதவிடததிலேயே யிருநது அரசுரிமையை யடைநதானெனறால, திரிமூாததிநாயகனும, எனனை யாளாககசொணட திரிநேத திரஙகளையுடைய தலைவனும, திருமாலமுதலிய தேவாகளுககிறைவனும, ஒறறைக கொமபினையுடைய செலவ நாயகனுமாகிய விநாயககடவுளுடைய அடியவாகளுககு எவை கிடைததறகரியவை? (ஒனறுமிலலை!) வேலாயுததைதக கையிற்றாஙகிய வீம ராசனே! இனனுஞ்சொலலுவேன கேடபாயாக. எ - று (உஅ)

வே று.

பஞச துநதுபி முழங்கின பணைவா பசுநதேன
விஞசு பொனமலா பொழிநதனா வேழமபின னடுதேதோர்
நெஞசின மலகிய பரிவெலா நீஙகியோா கையராய
மஞச னுககணி யாதிகள வழஙகினா மரபால

(இ - ள) பஞசதுநதுபிகள முழஙகின. தேவாகள் பசிய தேனசிநதும பொனமலாமாரி சொரிநதாாகள (ககனெனனும அரச) யானையின பினனே செனற வாகள மனதில்நிறைநத துககமெலலாமொழிநது சநதோஷ சித்தமுடையவாகளாய, (சிறுவனுகிய) தககராசனுககு ஆபரண முதலியவறறை (அரசுரிமைககேறற) முறைப படி கொடுததாாகள எ - று

துநதுபி - ஒாவகை வாததியம. இது தும் என்றும துப் எனறும ஒலிபப தாதலினிப்பெயாததெனபா (உகூ)

வாச மெனமலா வத்திர மணியணிந தனபி
ஞசி யநதண ரறைநதன ரொருபுடை யமாநதாா
கூச மைசசாக ளாதியோா குரைகழல வணஙகித
தேசின மனனவ னேவலாற றிருததக விருநதாா.

(இ - ள) வாசனைபொருந்திய மிருதுவாகிய மலாமாலைகளும, ஆடைகளும, ஆபரணங்களுமணிநது, வேதியாகள் ஆசையோடு ஆசிவசனஙகளகூறி ஒருபககலிற் பொருநதினாாகள மனம பயப்படும மநதிரிகள முதலானவாகள ஒலிககினற வீரக கழலணிந்த அவன பாததலைதபபணிநது குற்றமிலலாத அரசன கட்டளைப்படி திருதத மாக விருநதாாகள. எ று. (கூ0)

தக்க னக்கணந் தந்திமா முகனடி தாழ்ந்து
தொக்க வந்தணர்க் காடக மாதிக ளீவி
மிக்க வன்னையை வியத்தகு சிவிகையி லேற்றிக்
கைக்க ளிற்றின்மே லிவர்ந்தனன் காலைவெங் கதிர்போல்.

(இ - ள்) தக்கன் அந்தக்கணத்திலேயே சிறந்த யானைமுகமுடைய விநாயகக்கடவுளுடைய திருவடியைப்பணிந்து, கூட்டமாகிய வேதியருக்குப் பொன்முதலியவற்றை (பூரியாக) க்கொடுத்து, (அன்பு) மிகுந்த தாயாகிய கமலையைச் சிறந்த பல்லக்கிலேற்றச்செய்து, காலைப்பொழுதிலுதிக்கும் பாலசூரியன்போலத் துதிக்கையையுடைய அவ்யானையின்மேலேறினன் எ - று

ஆடகம் - நால்வகைப்பொன்னிலொன்று அவை — ஆடகம் கிளிச்சிறை சாதரூபம் சாம்பூநத மெனப்படும். (௩௧)

கவன வாம்பரி யமைச்சர்க ளிவர்ந்தனர் கடவக்
குவளை வாள்விழி மாதர்கள் குழுவெதிர் நடிப்ப
வுவவு வாரிதி முழக்கென வொலிமுரச் சார்ப்ப
வவனி காவல ஞனவ னடுகளி றுகைத்தான்.

(இ - ள்) மந்திரிகள் தாவிச்செல்லும் நடையையுடைய குதிரைகளிலேறிச் செலுத்தவும், நீலோற்பலமலர்போலும் ஒளிவாய்ந்த விழிகளையுடைய நடனமாதர்கள் கூட்டமானது எதிரே நடனஞ்செய்யவும், உவாக்கால சமுத்திரகோஷம்போலச் சத்திக்கின்ற பேரிகைகளொலிக்கவும், பூலோகராசனாகிய தக்கனென்பவன் (பகைஞரைக்) கொல்லும் யானையிலிவர்ந்தனன் எ - று.

உவாவென்னுஞ்சொல் "குறியதன் கீழாக் குறுகலு மதனோ - டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்" என்னுஞ் சூத்திரத்தால் உவவு என்றாயது உவா பூரணை அமாவாசியை யென்னு மிரண்டுமாமாயினும் கடன் முழக்கு பூரணையிலேயே மிகுதி யென்பது வழக்கு (௩௨)

மலையின் மேலெழு மதியென வார்மத யானைத்
தலையின் மேலெழு வெண்குடை நீழலிற் றங்கு
முலைவி லாவரத் தொருவ னூர்புகுந் துலாப்போந்து
கலைவ லாரொடுங் கதிர்மணிக் கோயிலுட் புகுந்தான்

(இ - ள்) மலையின்மேலுதித்த பூரணசந்திரன்போல, ஒழுகுகின்ற மதத்தையுடைய யானையின் சிரமிசை யெழுந்த வெண்கொற்றக் குடைநீழலிற் பொருந்திய கெடுதலில்லாத வரத்தையுடைய ஒப்பற்றவனாகிய தக்கனென்பவன் (கவுண்டினனிய) நகரினுட் பிரவேசித்து, (திருவீதி) உலாவந்து நூல்வல்ல பண்டிதர்களுடன் அழகிய மாளிகையினுட் பிரவேசித்தனன் எ - று

உலாவென்றனிலக்கணத்தை,

இலக்கணவிளக்கப்பாட்டியல்

குழமக னைக்கலி வெண்பாக் கொண்டு
விழைதொல் குடிமுதல் விளக்க வுரைத்தாங்
கிழைபுனை நல்லா ருவாமணி மறுகின்
மற்றவன் பவனி வரவெழ் பருவ

முற்றமா ஞானமொழப் போந்த துலாவாம்
ஐந்து முதலே ழாண்டும் பேதை
எட்டு முதனான் காண்டும் பெதும்பை
ஆறிரண் டொன்றே யாகு மங்கை
பதினான் காதிபத் தொன்பான் காறு
மெதிர்தரு மடந்தைமே லாறு மரிவை
ஆறுதலை யிட்ட விருபதின் மேலோ
ராறுந் தெரிவையெண் ணைந்துபே ரிளம்பெண்ணென
றுருமட ருவத் தோராக்குணாத் தனரே (௩௩)

பேரத் தாணியிற் பிறழெயிற் றரியணை பொலிய
வாரத் தாழ்வட மகனுரந் துயல்வர வமர்ந்து
வாரத் தானுறு மந்திரத் தலைவரை நோக்கி
யீரத் தீஞ்சொலி னிசைத்தன னிரும்புகழ்த் தக்கன்.

(இ - ள்) பெரும் புகழையுடைய தக்கன் பெரிய அத்தாணிமண்டபத்தில், விளங்கும் தந்தங்களையுடைய சிங்காசனமானது விளங்க, முத்தாலாகிய தாழ்வடமானது இடம்பரந்த மார்பிலசையவீற்றிருந்து, உரிமையால் வந்த மந்திரத்தலைவர்களைப்பார்த்து, குளிர்ச்சிவாய்ந்த மதுரமாகிய சொல்லின்முறை சொல்லலாயினன் எ - று.

அத்தாணி - கொலுவிருக்கை மண்டபம்

வாரத்தாழ்வடமென்றதை வார் அத் தாழ்வடமென்றுவைத்து, வ் - உடம்படுமெய்யென நீக்கி, ஆரம் தாழ்வடமென்றுவைத்துச் சொல்வகைசெய்க. ஆரம்+தாழ்வடம்-தழாத்தொடராகிய மூன்றும்வேற்றுமைப்புணர்ச்சி (௩௪)

என்னை யாளுடை முக்கல முனிவனங் கிருந்தா
னன்ன மாதவன் றனைப்பல வரிசையி னழைத்தென்
முன்ன ரேவிடு கென்னன் றுரைத்தன்ன முடிசாய்த்
துன்னு சூழ்ச்சிய ரன்னதே புரிந்தனர் கடிதின்.

(இ - ள்) என்னை யாளாகவுடைய முக்கலமுனிவர் அங்கேயிருக்கின்றனர், அந்தப் பெருந்தவமுடையவரைப் பலவகை மரியாதைகளுடனழைத்துவந்து என்முன்னே விடுங்களென்று தக்கன் கூறினன் சிரமசைத்து யோசிக்குந் தன்மையுடைய மந்திரிகள் அவ்வண்ணமே விரைந்து செய்தார்கள் எ - று (௩௫)

மண்ணி ருந்தவம் வடிவெடுத் தனையமா தவனும்
விண்ணு ரிஞ்சிய கூவிரத் தேரிசை மேவிப்
பண்ண மைத்தெழு பாடலோ டாடல்கள் பயில
நண்ணி னன்பெருங் கோயிலி னகர்களி சிறப்ப.

(இ - ள்) உலகினர்செய்த பெருந்தவமே உருவமெடுத்ததனை யொத்த பெருந்தவசியாகிய முக்கலமுனிவரும், ஆகாயமளாவிய பொற்குட்டிலையுடைய இரதமிசையாரோகணித்து, பண்ணிசைபொருந்த வெழுகின்ற கீதமும் நிருத்தமும் நிகழும்படி அரசனுடைய மாளிகையில், அந்நகரவாசிகள் களிப்பெய்தும்படி யடைந்தனர். எ-று.

கூவிரம் - தேர்க்கொடிஞ்சி. இஃதோருறுப்பு

மண் - நகர்—இடவாகுபெயர்கள் (௩௬)

விலகி விலனுமிழ் பூணினான் விரைந்தெழுந் தெதிர்போந்
தலகி னன்பொடு மறவனை யாதனத் திருத்திப்
பலவி ருமபொருள் கொண்டுபூ சனையுறப் பயிற்றி
யிலகு பூணடுகில கனியெதி ரிட்டடி பணிந்தான்.

(இ - ள்) விட்டுவிட்டுப் பிரகாசிக்கின்ற ஆபரணமணிந்த தக்கராசன் துணை வென்று (சிங்காசனத்திலிருந்து) எழுந்து எதிர்சென்று, குற்றமில்லாத அன்புடனே அமமுக்கலமுனிவனை ஆதனத்திலிருக்கச்செய்து, பலபெரிய பொருள்களைக்கொண்டு பொருந்தப் பூசைசெய்து, பிரகாசிக்கின்ற ஆபரணங்களும் ஆடைகளும் பழவர்க்கங் களும் எதிரே வைத்துத் திருவடியிற் பணிந்தனன் எ - று.

அறவன் - தருமசொரூபி (கூஎ)

முடிகொள் மன்னவர் புடையெலா மொய்ப்பமுன் வைகி
யடிக ளேநின் தருளினா லரசினைப் பெற்றேன்
கடவு ளாதொழுங் கணபதி யெனக்குநீ யல்லாற்
படியின் வேறிலை பாணியென் சிரத்துவை யென்றான்.

(இ - ள்) கிரீடமணிந்த அரசர்கள் பக்கங்களிலெல்லா நெருங்க, அவர்கட்கு முன்னிருந்து, சுவாமிகளே! தேவரீருடைய திருவருளால் இராசசிய பாரத்தை யடைந்தேன். தேவர்களும் பணியுங் கணேசப்பெருமான் அடியேனுக்குத் தேவரீரே யல்லாமல் உலகத்தில் வேறில்லை (ஆதலின்) தேவரீருடைய கரத்தை யென் சிர மிசை யமர்த்துகவென்றனன் எ - று.

பாணியைச் சிரமிசை வைத்தல் ஆசீர்வாதவகையி லொன்று. (கூஅ)

கனிவி னின்னணங் கூறிய காவலன் சிரத்தின்
முனிவ னங்கையை வைத்தருண் முகிழ்த்துமே தறிவோய
துனிவு றும்பகை யுனக்கிலை பொருளெலாந் துவன்று
மினிதின் வாழ்தியென் றிசைத்தறத் தியல்பையு மிசைத்தான்.

(இ - ள்) மனக்கனிவுடன் இவ்வகையாகக் கூறிய அரசனாகிய தக்கன் சிர மேல், முக்கலமுனிவர் தம துள்ளங்கையை வைத்து கிருபையருமபி, பேரறிவா ளனே! துன்புசெய்யும் பகைவர் உனக்கிலர் எல்லாப் பாக்கியமுமுண்டாகும் இன்ப மாக உயிர்வாழ்கடவையென்று தருமநீதியையு மெடுத்துக் கூறினார் எ - று

அங்கை - உள்ளங்கை அகம் கையெனனும் இருசொற்களுங்கூடிய வழி "அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடுமே" என்னுஞ் சூத்திரவழி புணர்ந்தது.

கன்ன லஞ்செழுங் காடுறுத் தண்ணடை யாதி
முன்னர் முக்கல முனிவனுக் களித்துமே தறிவின்
மன்னு மந்தணர் பெரியவர் மற்றையர் தமக்குந்
துன்னி ருமபொரு ணிலமிவை சொரிந்தனன் மழைபோல்.

(இ - ள்) அழகிய கருப்பங்காடு அகலாத மருதநிலத்தூர் முதலியவற்றை முதலிலே முக்கலமுனிவருக்குக் கொடுத்து, பேரறிவுடன் நிரம்பிய வேதியர் பெரி யோர் வேறுளளோர் முதலானவர்களுக்கும் நெருங்கிய பெரும்பொருள் நிலம் இவை போல்வனவற்றை மேகம்போல (தானமாய்)ச் சொரிந்தனை. எ - று.

பொருள் நிலமிவை சொரிந்தானென்றது சொர்ணதான பூதானங்கள் செய்தனனென்பதாம். தண்ணடை - மருதநிலத்தூர். (௪௦)

வேதனிந்திரன் விண்டுவே முதலிய விண்ணோர்
மாதர் மென்கள மங்கிலி யத்தொடு வயங்கச்
சாதனஞ்செய் தயங்கிய கண்டனார் கோயி
லாதி சைவர்க்கு மளித்தனன் பூசையா திகளே

(இ - ள்) பிரமன் இந்திரன் திருமால்முதலிய தேவமாதர்களுடைய மெல்லிய கழுத்துகள் திருமங்கிலியங்களுடன் விளங்க, கொல்லத்தக்க விஷத்துடன் விளங்கிய ஸ்ரீகண்டத்தையுடைய சிவபெருமானாரது திருக்கோயிலிலர்ச்சிக்கும் ஆதிசைவ வேதியருக்கும் பூசை முதலியவற்றைச் செய்தனன் எ - று.

திருமால்முதலியோர் ஒருங்குகூடிப் பாற்கடலை மதித்தகாலத்தில் அதிற் றோன்றிய கொடுவிடம் யாவரையுங் கொல்ல யத்தனித்தபொழுது, தேவர் வேண்டுகோளின்படி சிவபெருமான் அதனைப் பானஞ்செய்து அவர்கள் மீண்டும் இறுமாப்படையாவண்ணம் தமது கண்டத்தில் அறிகுறியாக என்றென்றும் பொருந்த அமர்த்தினரென்பது சரிதம்.

“வேதனிந்திரன் விண்டுவேமுதலிய விண்ணோர் மாதர்மென்கள மங்கிலியத்தொடு வயங்கச் சாதனஞ்செய்தயங்கிய கண்டனார்”—என்றதை, **கந்தபுராணம்** “செற்றுல முயிரனைத்து முண்டிடவே நிமிர்ந்தெழுஞ் சினத்தை மேற்கொள் - பற்றுலங் கதுநுகர்ந்து நான்முகனை முதலோர்தம் பாவை மார்கள் - பொற்றாலி தனையளித்தோன்’—எனவருவதனா னுணர்க. (௪௧)

சேனை காவலர் திருந்திய வமைச்சர்க ளிவர்க்கு
யானை வாம்பரி யிருநில மாதிக ளிசைத்துத்
தேனை மாரியி னிதழியான் றிருப்பணி பலவு
மூனை யேந்திய வேலினா னுஞற்றிடப் பணித்தான்.

(இ - ள்) சேனைத்தலைவர்கள் திருத்தமுற்ற மந்திரிகள் முதலிய இவர்களுக்கு யானைகள் தாவிச்செல்லுங் குதிரைகள் பெரிய பூமிகள் முதலியவற்றைக் கொடுத்து, தேனை மழைபோலச் சொரியுங் கொன்றைமாலையணிந்த சிவபெருமானுடைய பலவகைத் திருப்பணிகளையும், ஊனைத்தாங்கிய வேலையுடைய தக்கராசன் செய்யும்படி கட்டளையிட்டனன் எ - று.

ஊனையேந்திய வேல் என்றது சத்துருக்களை யெக்காலமுஞ் சங்கரிப்பவனென்னுங் குறிப்புணர்வாற் கூறியது. (௪௨)

பொளிந்து திண்சிலை பொருப்புறு கோயிலொன் றுயக்கி
யளிந்த வன்பினிற் கணேசனை யாங்குற விருத்தித்
தெளிந்த முக்கலன் செப்பிய விதிப்படி தினமு
விளிந்து வெந்திட நித்தலும் பூசனை விளைத்தான்

(இ - ள்) கருங்கற்களைப் பொளிந்து அழகிய கோயிலொன்று கட்டுவித்து, **மிக்க** ஆசையாற் கணேசப்பெருமானை அதில் எழுந்தருளப் பிரதிட்டைசெய்து, **தெளிவமைந்த** முக்கலமுனிவர் உ[illegible] விதிமுறையே (தின) பாவங்கள் குறைந்து நீங்க நாடோறும் பூசைசெய்து வந்தான் எ - று. (௪௩)

பெற்றுப் பெற்றதா யாகிய சுலைபைதன் பதமு
மற்ற காதலெய்ய கமலைதன் பதமும்வைக லுந்தாழ்ந்து
செற்றி லாவகை யொருகுடை நீழலி னுலகை
மற்ற நீதியி னளித்தன னமரர்கா வலனைப்போல.

(இ - ள்) பெறுமற்றபெற்ற தாயாகிய சுலபை யென்பாளுடைய பாதங்களையும், நீங்காத ஆசையைச் செய்யும் (பெற்ற தாயாகிய) கமலையென்பாளுடைய பாதங்களையும் நாடோறும் நமஸ்கரித்து, சத்துருக்களில்லாத வகையாக ஒரு குடையின் நிழலிலே உலகமானது நீங்காத நீதியுடன் தேவராசனாகிய இந்திரனைப்போல (உலகினை) அரசு செய்து வந்தனன் எ - று.

சுலபையென்பாள் காலஞ்சென்ற அரசன் மனைவி. (௪௪)

தோய நீடிய வாவிகள் சூழ்கரு நாட
தேய மாண்டொழு வல்லவன் சிறுவனோய் தீர்ந்து
மேய சீர்த்தியின் விநாயக நாடாள்வது வினவிப்
பாய சீர்ப்பரி சனத்தொடும் படர்ந்துவந் தடுத்தான்.

(இ - ள்) நீரானது மிகவுள்ள தடாகங்கள் புடைசூழ்ந்த கருநட தேசத்தை யரசுசெய்து வாழ்கின்ற வல்லவராசன் தன் மகனாகிய தக்கன் நோயொழிந்து பொருந்திய சிறப்புடன் விநாயகநாட்டை யரசாள்வதைக் கேள்வியுற்று, பரந்த சிறப்பையுடைய பரிசனங்களோடும் விரைந்துவந்து சேர்ந்தனன் எ - று. (௪௫)

வார மாயவர் யாவரு மளவளாய் வாழ்நாள்
வீர சேனனென் றியற்பெயர் மேவுமன் னவற்குப்
பேர வாவிய புகர்முகக் களிற்றனும் பெருமான்
கார ளாவிய விரவுறு கனவினி லுரைக்கும்.

(இ - ள்) நீதியோடு அவர்கள் யாவரும் ஒன்றுகூடி வாழுநாளில், வீரசேனனென்று இயற்பெயர் பொருந்திய அரசனுக்குப் பெருமையை விரும்பிய புள்ளிவாய்ந்த யானைமுகமுடைய விநாயகக்குரிசில், கருமைபொருந்திய இரவிலுண்டான சொப்பனத்தில் இதனைச் சொல்லுவார் எ - று. (௪௬)

பெண்மை முற்றிய நின்மகள் பெருகிய தவத்தால்
வண்மை முற்றிய தக்கனை மணந்திடப் படுவ
டிண்மை முற்றிய மன்னவ தெளிகெனச் செப்ப
வுண்மை முற்றிய வவனுமவ் வாறுதந் தினனால்.

(இ - ள்) பெண்ணலங்கனிந்த உன் புத்திரியானவள் தான் செய்த பெருந்தவத்தினால் வளமிகுந்த தக்கனென்னு மரசனால் மணஞ்செய்யப்படுவாள் வலிமை முதிர்ந்த வீரசேனராசனே! தெளிவாயாகவென்று திருவாய்மலர்ந்தருள, சத்தியமிகுந்த அவ்வரசனும் அவ்வகையே (தன் குமாரத்தியைத் தக்கனுக்கு) மணஞ்செய்து கொடுத்தனன். எ - று. (௪௭)

வேறு

பேம வடிவேற் றக்க னுக்குப் பிறந்த பானு வனைறனைக்குத்
தோமில் கடக னைறந்த சுபால னையுமக் கெதாகரனை

யாமவ விறைநாங்கு வைபுத்திரத் தலைமகனாஞ் சித்திரசேனனை
வீம வவற்கு நீபிறந்தாய் விளங்குங் கணேசர் திருவருளால்.

(இ - ள்) விளங்குகின்ற கணேசருடைய திருவருளினால், அச்சமுடைய வேற்படையேந்திய தக்கனுக்குப் (புதல்வன்) பிரகற்பானுவென்பவன்; அப் பிரகற்பானுவுக்குக் குற்றமில்லாத கட்டாரதன்; அக்கட்டாரதனுக்குச் சுடாலன்; அச்சுடாலனுக்குக் கேதாரகன்; அக்கேதாரகராசனுக்கு வைபுத்திரன்; அவ்வைபுத்திரனுக்குப் புத்திரன் சித்திரசேனனென்பவன். வீமராசனே! அச்சித்திரசேனனுக்கு நீ (மகனாகப்) பிறந்தாய். எ - று (௪௮)

வடிவேற் றக்கன் முதலாக மன்னு நுந்தை யீறாகக்
கடியார் தனயி வனைவோருங் கணேசர் மலர்த்தாள் பூசித்தார்
கொடியார் விழைவி னினிநீயு முருத்தாறு பூசை புனைகருத்து
முடியா திறகு மெனவிளம்பி முனிவ னிதுவும் புரிந்திட்டான்

(இ - ள்) அரசனே! வடித்த வேற்படையேந்திய தக்கன் முதலாக உன் தந்தையாகிய சித்திரசேனனீறாக யாவரும் நீங்காத அன்புடன் கணேசப்பெருமானுடைய திருவடித்தாமரையைப் பூசித்தார்கள். இனி நீயும் நீங்காத அன்புடன் (கணேச மூர்த்தியைப்) பூசைசெய்க. உன் கருத்து நிறைவேறுமென்று விசுவாமித்திர முனிவர் கூறி இதனையுஞ் செய்யலாயினார் எ - று (௪௯)

தக்கனரசாட்சிப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௩௯௪

வீமனுபதேசம்பெற்றபடலம்.

விச்சுவா மித்திரன் வீமனை நோக்கியின்
னிச்சையா னுரைசெய்வ னிந்நில வேந்தகே ளாய்
பச்சமா லொடு மலரயன் காணிலா
வச்சனை மலரடிக் கன்புசெய் மரபினை

(இ - ள்) விசுவாமித்திர முனிவர் வீமராசனைப் பார்த்து மொழிந்த விருப்பத்துடன் சொல்லுகின்றார்: காந்தியிடப் பிரகாசிக்கும் வேலேந்தியவனே, மச்சாவதாரஞ்செய்த திருமாலுடன் தாமரைமலரில் வசிக்கும் பிரமதேவனுங் காணமுடியாத தந்தையாகிய கணேசப்பெருமானுடைய மலர்போன்ற திருவடிக்குப் பத்திசெய்யு முறைமையைக் கேட்பாயாக எ - று

அச்சன் - தந்தை. இது திசைச்சொல் என்னை? "செந்தமிழ் நிலஞ்சேர் பன்னிரு நிலத்தினு - மொன்பதிற் றிரண்டினிற் றமிழ்மொழி நிலத்தினும் - தங்கருத் தினவே திசைச்சொல் லென்ப" என்றது சூத்திரம் (௧)

எம்பிரான் கருணைகூ ரேகவக் கரமுடைப்
பம்புபா வங்களைப் பாற்றுவ தெய்வமாம்
இமையவர் நலக்குவை நீத்து மெய்ந்நிறை
வைப்புநீ ராடிப் வருகவிங் கென்றனன்

(இ - ள்) எமது கணேசப்பெருமானது கிருபைமிகும் ஏகாட்சர மந்திரமானது மிக்க பாவங்களை யோட்டவல்லது, நினைத்த பலனை இவ்வுலகிலேயே கொடுக்க வல்லது அதனை யுனக்குக் கொடுப்போம் எறிகின்ற அலையையுடைய வாசந்தங்கிய நீரின்மூழ்கி இப்பொழுது வருகவென்று கூறினார் எ - று

ஆடு - ஆடி இதுசெய்பு என்னும் வாய்பாட்டிறந்த காலவினை யெச்சம்

நாமவேன் மன்னவ ஞனஞ்செய் தணமினன
காமவே ளரியெழக் கண்டவன் சேவடிக்
கேமமா ரன்புசெய் யிருடியே காக்கர
மோமமா திகளபுரிந் தொண்செவி யோதினன

(இ - ள்) அச்சந்தரும் வேலேந்திய வீமராசன் (அவ்வாறே) நீரின்மூழ்கி வந்தனன் மன்மதனைச் சாம்பராக விழித்த சிவபெருமானுடைய செவ்விய திருவடிகளுக்குமிக்க அன்பினைச்செய்யும் விசுவாமித்திரமுனிவர் ஓமமுதலியவற்றைச்செய்து ஏகாக்ஷர மந்திரத்தை (வீமராசனுடைய) ஒள்ளிய செவியிலுபதேசித்தனர் எ - று

நானம் - ஸ்நானமென்னும் ஆரியத்திரிபு. காமவேள் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை. வேளென்றது முருகனுக்கும் மதனனுக்குமுரிய பொதுப்பெயராதலின் காமனாகிய வேளென முன்னையது சிறப்பும் பின்னையது பொதுவுமாக வந்தது.

எண்ணிடு முறைமையு மியம்பிநும் பதிபுகுந்
தண்ணலந் தக்கனமுன் னாக்கிய வாலய
நண்ணியவ் குபுகின நனமனுக் கணியென
வுண்ணெகிழ் கருணையி னோதினன முனிவனே

(இ - ள்) (அதனைக்) கணிக்குமுறைமையையுங் கூறி, உம்முடைய நகரத்தையடைந்து, பெருமைவாய்ந்த அழகிய தக்கராசன் முற்காலத்திற் செய்த கோயிலையடைந்து வசித்து, நாடோறும் (இந்த) நல்லமந்திரத்தைக் கணிக்கக்கடவாயென்று மனமுருகிய கிருபையுடன் விசுவாமித்திரமுனிவர் கூறினார் எ - று

வைகுபு - வைகி—செய்பு என்னும் வாய்பாட்டிறந்த காலவினை யெச்சம் (சா)

வீமனும் விசுவா மித்திரன் விடைகொடு
காமரு பூணமுலைக் காதலி யுடனவன
வாமறி மானபயில் வனங்கடந் தெய்தினன
ரமணை யோடைசூழ் தனபதி யெல்லையினே.

(இ - ள்.) வீமராசனும் விசுவாமித்திரமுனிவர்பால் விடை பெற்றுக்கொண்டு, அழகிய ஆபரணமணிந்த மனைவியோடு, தாவிச்செல்லும் மறி மான முதலியவை சஞ்சரிக்கும் வனத்தைத் தாண்டிக்கொண்டு, தாமரைத் தடாகங்கள் புடைசூழ்ந்த தன் நகரத்தி னெல்லையி லடைந்தான் எ - று.

காமரு - காமம் மருவென்பதன்றிரிபு மறையென்றது மானில் ஓர்வகை.

மந்திரத் தலைவர்கள் வரவுகேட் டெதிர்கொடு
தந்திமால் வேழமுந் தமனியச் சிவிகையு
முந்துற வுய்த்தனர் முடிபடி நிட்டினர
தந்தைதாய் காளைந் தனையர்பா லாயினர.

(இ - ள்) மந்திரத்தலைவர்கள் (அரசனும் மனைவியும்) வருகையைக் கேட்டு (களித்து) எதிர்சென்று பெரிய யானையையும் பொன்னாலாகிய சிவிகையையும் முற்படச் செலுத்தி (தம்முடைய) முடியை அவர்களடியிற் சூட்டிப்பணிந்தார்கள். தந்தை தாயரைக்கண்ட இளஞ்சிறுவர்களைப்போலக் களிகொண்டவர்களானார்கள். எ-று (௬)

இருவரு மூர்தியூர்ந் தியமுதல் வரிசையோ
டொருகெழு நகரினு ளோங்குந்தங் கோயிலை
மருவிவண் பொருள்பல மறையவர்க் குதவினு
ரருளினுற பலரொடு மளவளாய் வைகினார்.

(இ - ள்) (வீமராசனுமவன் மனைவியுமாகிய) இருவரும் யானையும் பல்லக்குமிவர்ந்து, வாத்தியமுதலிய சிறப்புக்களுடனே அழகுமிக்க நகரத்திலே உயர்ந்த தமது மாளிகையை யடைந்து வளமமைந்த பலபொருள்களை வேதியருக்குக் கொடுத்து, அன்புடன் பலரோடும் அளவளாவி வாழ்ந்திருந்தார்கள் எ - று (௭)

பண்டுபோ லமைச்சரைப் பாரபுரி யப்பணித்
தொண்டிறற் றக்கன்மு னுஞற்றிய வாலயம்
விண்டவர்க் கேற்றனை மேவிய காக்கரந்
துண்டவெண் கோட்டனைச் சூழ்ந்துளத் தெண்ணினன்.

(இ - ள்) முன்போலவே மந்திரிகளை இராசியபாரஞ்செய்யக் கட்டளையிட்டு, ஒள்ளிய வலிவாய்ந்த தக்கன் முற்காலத்திற்செய்த திருக்கோயிலில், சிறந்த தவசிகளுக்கு ஆண்சிங்கம்போன்ற வீமராசன் பொருந்தி, ஏகாட்சர மந்திரத்தைத் துண்டமாகிய வெள்ளிய கொம்பினையுடைய விநாயகக்கடவுளைத் தியானித்து மனத்திற் கணித்தனன். எ - று. (௮)

வேறு

விநாயகர் தமையும் பூசை விதியுளி யியற்றி யெல்லாம்
விநாயக ருருவ மென்றே மெய்யுறக் கண்டோ வாமல்
விநாயகர் மனுவை யெண்ணி வீமனேற் றிருக்கு நாளில்
விநாயகர் கருணை கூர்ந்து விழியெதிர் தோன்றி நின்றார்.

(இ - ள்) விநாயகக்கடவுளையும் விதிப்படி பூசைசெய்து, யாவும் விநாயகர் வடிவமேயென்று உண்மைபொருந்தக்கண்டு, விநாயகப்பெருமான் திருமந்திரத்தை நீங்காமற் கணித்து வீமன் போற்றிக்கொண்டிருக்குங் காலத்தில், விநாயகக்குரிசில் கிருபைமிக்கு அவன் கண்ணுக்கெதிரே பிரசன்னமாயினார் எ - று (௯)

வணங்கலார்க் கணங்கு செய்யும் வெய்யபடை வீமன் றாழ்ந்து
கணங்களுக் கதிப னான கணேசனின் பாதத் தார்வ
மிணங்குதல் வேண்டு நல்ல வெச்சமொன் றெய்தல் வேண்டு
முணங்குத லில்லா முத்தி யுதவுதல் வேண்டு மென்றான்

(இ - ள்.) சத்துருக்களுக்குத் தீமையைச்செய்யும் வெற்றிதங்கிய ஆயுதமேந்திய வீமராசன் (விநாயகக்கடவுளைப்) பணிந்து, கணங்களுக்கரசனான கணேசப்பெருமானே ! தேவரீருடைய பாதத்தில் ஆசைபொருந்தல்வேண்டும் நல்ல புத்திரப்பேறு ஒன்று உண்டாதல்வேண்டும் கெடுதலில்லாத முத்தியை யநுக்கிரகித்தல் வேண்டுமென்று விண்ணப்பித்தான் எ - று

கணம் + ஈசன் - கணேசன். இது வடமொழிக் குணசந்தி. (௧௦)

பூரண னவனை நோக்கிப் பொருவிலம் பாதத் தன்பு
மேரணி கனக மேனி யெச்சமு நினக்குத் தந்தாஞ்
சீரணி முத்தி பின்னாச் சோத்துது மிலகிற் செல்கென
றூரண முரைத்த வாயா லறைந்தனர் மறைந்து போந்தார்.

(இ - ள்) பரிபூரணராகிய விநாயகக்கடவுள் அவ்வீமராசனைப் பார்த்து, ஒப்பில்லாத நமமுடைய திருவடியில் அன்பும், அழகுமிக்க பொனமேனியுடைய புத்திர பாக்கியமும் உனக்குத் திருவருள் செய்தோம் (உனனைச) சிறப்புடைய முத்தியிற் சோபபோம. வீட்டிற்குச் செல்கவென்று வேதங்களை யருளிச்செய்த திருவாயால் பின்னே உரைத்தருளி அந்தர்த்தானமாயினர். எ - று

அறைந்தனர் - முறசொசம. (கக)

விறறமுய பிலங்கு மங்கை வீமனில் லகத்திற் சென்று
செற்றலா புரமுன் றட்ட தேவனைக் கணேச ரோடு
மற்றமில் பூசை யாற்றி யந்தணர்க் காடை யாதி
முற்றுறக் கொடுத்து வந்தான் முகிற்கு மாம விளர்ப்ப நாணி

(இ - ள்) விற்றமுமபானது விளங்குகின்ற வீமராசன் தன் மாளிகையிற் போய், பகைஞர்களது திரிபுரங்களை யெரித்த சிவபெருமானைக் கணேசப்பெருமானுடன் குற்றமில்லாத பூசைசெய்து, வேதியருக்கு ஆடைமுதலியவற்றை மேகசாலமும் நாணமுற்று (உடல்) விளர்க்கும்படி ஆசையடங்கக் கொடுத்து வந்தனன். எ - று

விளர்த்தல் - வெண்ணிறமாதல் பசையறுத லென்றபடி (கஉ)

வேறு.

யாரு நேரரி யானரு ளெய்தலாற்
சாரு காசினி நல்வயி னேமமே
யோரு மோருருக் கொண்டுதித் தாலெனப்
பாரு மேத்தவோர் பாலன்வந் தானரோ.

(இ - ள்) (தனக்கு) யாவருஞ் சமானங்கூற அரியவரகிய வீமராசன் (விநாயகக்கடவுளுடைய) திருவருளை யடைதலால், சாருகாசினியென்னும் அவன் மனைவியிடத்தில், பொருந்திய பொன்னே யோருருவுகொண் டுதித்தாற்போல உலக முழுதுந் துதிசெய்யும்படி ஓர் பாலகன் பிறந்தனன் எ - று. (கங)

திருக்கி லாதவன் செயவன செய்துபின்
றருக்கி லாரணர் தமமைவி ஞயபபெய
ருருக்கு மாங்கத தெரளிர்தரு மைந்தனுக்
குருக்கு மாங்கதன் னென்றுரைத் தானரோ.

(இ - ள்) வஞ்சகமில்லாத வீமராசன் செய்யத்தக்க கருமங்களைச்செய்து, பின்னாகக் குற்றமில்லாத வேதியர்களைவினவி, பொன்போலும் பிரகாசிக்கின்ற தேகத்தையுடைய மகனுக்கு உருக்குமாங்கதனென்று பெயரிட்டனன். எ - று.

உருக்குமம் - பொன். உருக்குமம்+அங்கதன்=உருக்குமாங்கதன். (கச)

பிள்ளைமைப் பருவமெய்யா காலையிற்
கள்ள வைம்பொறி யாற்றுங் கபிலயாற்
றெள்ளு மைந்தனைச் சேர விடுத்தனன்
எள்ளி லைப்படை யங்கையின் வீமனே

(இ - ள்) கூர்மைவாய்ந்த சகடவடிவான வேற்படையை அழகிய கையிற் றாங்கிய வீமராசன் கள்ளத்தன்மையுடைய ஐம்பொறிகளையுங் கோபிக்குங் கபில முனிவரிடத்தில், தன்தெளிந்த (அறிவையுடைய உருக்குமாங்கதனென்னும்) மக னைப் பிள்ளைமைப்பருவ மகலுங்காலத்திலே சேரும்படி விடுத்தனன் எ - று. (௧௫)

புகலு மாதவன் பொன்னடிப் பத்தியாற்
சகல வித்தையுந் தாங்கியப் புத்திர
னுகவி லாத வுவப்பரு டந்தைபா
லகலி ரும்புவிப் பாரமுந் தாங்கினன்.

(இ - ள்) மேற்சொல்லிய பெருந்தவமுடைய அக்கபிலமுனிவனது பொற் பாதத்தில் வைத்த பத்தியினாலே, எல்லா வித்தைகளையு முணர்ந்து, அப்புதல்வன் கெடுதலில்லாத களிப்பைத்தருந் தந்தையினிடத்திருந்து பரந்தபெரிய உலக பாரத் தையும் பரித்தனன் எ - று (௧௬)

வீமன் பின்பு விநாயகன் மந்திர
மேம லக்க வியம்பினன் னொண்ணறுப்
காமன் னன்னவக் காளைபி தாவினுஞ்
சேம வன்பு செலுத்தினன் றேவன்பால்.

(இ - ள்) வீமராசன் பிறகு விநாயக மந்திரத்தை (தன் புதல்வனாகிய உருக்கு மாங்கதனுக்கு) நன்மை மிகும்படி உபதேசித்தனன் மன்மதனையொத்த இளம் பருவமுடைய அவ்வுருக்குமாங்கதன் தன் றந்தையைக் காட்டிலும் விநாயகக்கடவு ளிடத்திற் சேமந்தரும் அன்பை (மிகுதியாகச்) செலுத்தினன் எ - று. (௧௭)

இன்ன வாறிவ னேரம்ப னன்புசெய்
தொன்ன லாரை யுருட்டித் திசைதொறுந்
தன்ன தாணைச் சகட முருட்டினன்
பொன்னு மாணியும் பூவுங் களிக்கவே.

(இ - ள்) இவ்வுருக்குமாங்கதன் இந்தவகையாக விநாயகக்கடவுள் பக்தி யைச்செய்து, சத்துருக்களைத் துவம்சஞ்செய்து, திருமகளும் கலைமகளும் பூமிதேவி யுங் களிப்பெய்தும்படி திசைகளிலெல்லாம் [எங்கும்] தன் ஆக்கினை சக்கரத்தைச் செலுத்தினன் எ - று (௧௮)

வீமனுபதேசம்பெற்றபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௪௩௨

உருக்குமாங்கதன்சாபம்பெற்றபடலம்.

அருக்கன வேறுமண ணிருநதென வஙிரொளி யாதனத திணிமேலறி
யுருககு மாங்தத னுலகுயிாக குள,ததிரு ளுருவகை முறைசெய,தங
கிருககு நாளையின மிருகஙகள வனததிடை யீணடிவண பயிரா,தி
முருகத கினறன வெனசசில ரடுதெதிா முடிபணிந துாைசெய,தாா.

(இ - ள்.) (ஆகாயத்திலிருககுஞ சூரியனனறி) வேறே சூரியன் பூமியி லிருந்தாறபோல, உருககுமாஙகத ராசன ஒளிவிளஙகுஞ சிஙகாசனததிலேறி உலகி லுள்ள உயிாகளுககு மனதில அஞஞான விருளுணடாகாவகையாக அரசுசெலுததி வாழுஙகாலததில, மிருகஙகள வனததில நெருஙகி வளமமைநத பயிா முதலியவறறை யழிககினறனவெனறு, சிலா வநது அரசனுககெதிரே சிரமவணங்கிச செபபினா எ-று.

ஏடடை தீாமனை துருககுமாங கதனவ ரியமபிய மொழிகேளா
வேடடை யாடுது மெனவெழுந திருநதனன வெயயபோாப படைநதானை
கேட்டு மேவின வலைஞாக ளீணடினா கிளாபரி சனதமதாடுங
காடடை மேயினன கரியரி குயவரி கரடியா திகளகொனறுன.

(இ - ள) தளர்வொழிந்த மனதையுடைய உருக்குமாஙகத ராசன அவர்கள் சொல்லியு வாாததையைககேடடு, (அபபடியாயின) வேட்டையாடுவோ மெனறெழுந் திருநதான கொடுமபோா புரியும ஆயுதமேநதிய சேனைகள (அதனைக)கேட்டு வந தன. வலைஞாகள நெருஙகினாகள். விளஙகுகினற பரிசனஙகளுடன (அரசன) காட் டையடைநதான யானை சிஙகம புலி கரடி முதலியவறறைக கொனறனன. எ - று.

ஆடுதும - உளப்பாட்டுத தனமைப பனமை வினைமுற்று (௨)

கைவ ளாநதிடும வேடடையிற கதிதகெழுங் கருதிதாடுங கலைசெநநா
யெயவ ளாநதிடு மிடமபல துரீஇததுரீஇ யெதிாபடு மானகொனறு
மொயவ ளாநதிடு முழையருந தணபபுற முனனுவான றளாவெயதி
மெய்வ ளாநதிடு கவியெனு மாதவன மேவுகா னகஞசோநதான.

(இ - ள) அதிகரிககினற வேட்டையாடுதலில உணடாகிய எணணததுடன கலைமானகளையுஞ செநநாயகளையும அவை பொருநதிவாழும பலவிடஙகளில தேடித தேடி எதிரே வரும மானகளைக கொனறு, வலிமைமிகக அருகுளளோரும சோாவ டைய உருககுமாஙகதனகளைபபுறறு, உணமைமிகக கவியெனறும பெருநதவமுடைய முனிவன வாசஞசெயயும வனததை யடைநதனன. எ - று. (௩)

விழியெ திாபபடு மாசசிர மநதனை மிகுநதெழு நீாவேடகை
யழிவு செயதலி னடுததருந தவனபுன லாடலான செலவாஙகே
கழிம கிழசசியிற றனியிருந திடடவக கவிமுனி மனையாளைப
பழியை யஞசுவா னன்னைநீா தருகெனப பணிவொடு மிரநதானல.

(இ - ள.) மிகுதியாகததோனறிய தாகவிடாய துனபுசெய்தலின, (உருக்கு மாஙகதன தன) கணணெதிாதோனறிய ஆசசிரமததைச சமீபிதது, அருநதவமுடைய அம்முனிவன் நீராடச செலலுதலால, அவவிடததிற் பெருஙகளிபபுடன் ஒனறியாக

விருந்த அந்தக் கவிமுனி மனைவியை, பழிக்குப் பயந்த உருக்குமாங்கத ராசன், தாயே! நீர் தருகவென்று அடக்கத்துடன் யாசித்தான். எ - று (௪)

புகுந்த மன்னவன் றிருவுரு வெழிலினைப் பொள்ளென வெதிர்நோக்கி
முகுந்தை யென்பவண் முரிசிலைக் காமவேள் மொய்கணை நிறைபோழ
மிகுந்த நீரசை யான்மிக வாடிய மெலிவையு முணராதே
நெகுந்த வுள்ளமுங் காதலுந் தோன்றமு னின்றிது மொழிகுற்றாள்.

(இ - ள்.) (அவ்வாறு நீர் வேட்கையால்) வந்த உருக்குமாங்கத ராசனுடைய சிறந்த தேக வழகை முகுந்தை யென்பவள் உடனே நேரிற்கண்டு, வளைந்த (கருப்பு) வில்லையுடைய மதனனுடைய நெருங்கிய பாணங்கள் (தன்) கற்பினையுடைக்க, அதிகரித்த தாகவிடாயால் வருந்திய களையையும் அறியாமல், இளகிய தன் மனமும் ஆசையும் வெளிப்பட (அவ்வுருக்குமாங்கதனுக்கு) முன்னேநின்று இவ்வார்த்தைகளை சொல்லுகின்றாள் எ - று. (௫)

வேறு

காவல நின்னைப் போலுங் காமரு வடிவி னானைத்
தேவர்கள் குழாத்தி னுள்ளுஞ் சிறியனேன் கண்ட தில்லை
மேவின விலக்க ணங்கண் முழுதுநின் மெய்யி லென்றாற்
பாவையர் யாவ ரேநின் படிவங்கண் டுளஞ்சோ ரார்.

(இ - ள்) அரசனே! உன்னைப்போலும் அழகுவாய்ந்த தேகமுடையவனைத் தேவர் தொகுதியிலேயும் அடியாள் கண்டது கிடையாது. பொருந்திய (சாமுத்திரிக) விலக்கணங்கள் யாவும் உன் தேகத்தில் (உள்ளன) என்றால், உன் வடிவத்தைப் பார்த்து எந்த மாதர்கள்தாம் மனமயங்காதவர்கள்? (யாவரு மயங்குவர்) எ - று (௬)

பேரிகை முழக்க றாத பெருங்கடை வாய்த்த மன்னா
சாரிகை மொழியி னல்லார் தங்களுக் கிளமை மைந்தர்
காரிகை கண்டா லன்றோ கலவியிற் பிணைப்பி னல்லால்
வேரிகை செய்தா லன்ன மிகுமயக் கொழிவ தின்றே.

(இ - ள்) முரசவாத்தியத்தின் ஓசை யகலாத பெரிய தலைவாயிலையுடைய அரசனே! நாகணவாய்ப் புள்ளின்மொழியைப்போன்ற மொழியையுடைய மாதர்களுக்கு, இளம் புருடர்களுடைய அழகைப் பார்த்தால் அவர்களுடன் புணர்ச்சியிற் கூடினாலன்றி, கட்குடித்தாற்போன்ற மிக்க மயக்கமானது ஒழியமாட்டாது. எ - று.

சாரிகை - நாகணவாய்ப்புள். (௭)

வதையவல் விடமுன் கான்ற வாருதி மீட்டு முய்யச்
சுதையமிழ் துமிழ்ந்த தேபோற் றோன்றநின் வனப்பிற் றோன்றித்
துதைதரு காமத் தீயுன் றோளிலென் முலைகள் பாய்ந்து
புதைதரு கலப்பி னல்லாற் போக்கிலை யென்று கூறி.

(இ - ள்) இறக்கும்படி கொடிய ஆலத்தை முதலிற்கொடுத்த சமுத்திரமானது மறுபடியும் (அவர்களை) உச்சீவிக்க, வெள்ளிய அமிர்தத்தைச் சிந்தியதுபோல், அரசனே! உன்னுடைய அழகினின்று தோன்றி யென்னை நெருக்கிய காமத்தீயானது உன் புயத்தில் என் முலைகள் பாய்ந்து புதையும்படி (நாமிருவருங்) கலந்தாலல்லாமல் போவதில்லையென்று சொல்லி. எ - று. (௮)

கலைநல னெகிழ்ந்து சோரக் கருங்குழ லுலைந்து சாய
முலைவளர் முத்த நீற முன்கையிற் றொடிமண் வீழ
வலைவிழி பருகு மாபோ லவனிரு வனப்பினை மூழ்க
விலையினி யுய்தி யென்னு மியல்பொடு முகுந்தை நின்றாள்.

(இ - ள்.) ஆடையானது தன்னலத்தினின்று அவிழ்ந்துசோரவும், கரிய அளக பாரமானது சீர்குலைந்து சாயவும், முலைகளிலணிந்த ஒளிவளரும் முத்துகள் பொடிபடவும், முன்கையிலணிந்த வளையல்கள் பூமிமேல் விழவும், வலைபோன்ற கண் உண்ணுவது போல அவனுடைய தேகப்பொலிவில் மூழ்கவும், இனி பிழைக்கும் வழியில்லை யென்னும் இயல்புடன் முகுந்தையென்பவள் நின்றனள் எ - று.

ஆடைசோர்தலும், கூந்தலவிழ்தலும், வளைகழறலு முதலியன காமக்குறி. முலைவளர் முத்தநீறவென்றது காமாக்கினியிற் சுடப்பட்டுச் சாம்பராயினவெனக் (௯)

திருமகள் பெண்மை நோக்கித் தெருமர வனப்பிற் சான்ற
வுருவினள் காமச் செவ்வி யூறெழு வலிந்து தானே
மருவுதன் முயன்ற போது மன்னவன் கலங்கா னாகி
முருகுகொப் பளிக்குங் கோதை முகுந்தையை நோக்கிச் சொல்வான்.

(இ - ள்) திருமகளே (அவளது) பெண்டன்மையைக்கண்டு மயங்கும்படி அழகின்மேம்பட்ட முகுந்தையென்பவள் காமவிருப்பமேலிட்டெழுதலால், தானே (உருக்குமாங்கதனைக்) கலக்கயத்தனித்தபொழுது, அவன் (சிறிதும் மனங்) கலக்க முறாதவனாகி, தேனொழுகும் மலர் மாலையணிந்த முகுந்தை யென்பவளைப் பார்த்துச் சொல்லலாயினன் எ - று. (௧௦)

அந்தணர் குலத்து ணோற்கு மருந்தவன் பாவை நீயும்
வெந்திறல் வேந்த னியானே மேதினி முறையிற் காப்பேன்
சுந்தரி யதுவே யன்றிச் சுமுகனா ளிறைஞ்சு மன்பன்
சிந்தைவே றணங்க ணாபாற் றெருமந்துஞ் செல்லா தன்றே.

(இ - ள்) நீ வேதியர்குலத்திலே, (யாவரும்) நோற்றற்கரிய தவத்தையுடைய முனிவன் வசத்துள்ளவள் யானோவெவ்விய வலிமைவாய்ந்த அரசன் யானை நிலைபெற்ற பூமியை முறைப்படி காப்பவன் சுந்தரமுடையவளே! அம்மட்டே யல்லாது, அழகியமுகத்தையுடைய கணேசப்பெருமானாரது திருவடியை வணங்கும் அன்புடையவன், (ஆகையால்) என் மனமானது பிறமங்கையரிடத்தில் மயக்குற்றுச் செல்லமாட்டாது எ - று.

நீ வேதியர்குலத்திலுதித்தவளாதலாலும், யான் அரசகுலத்திலுதித்தவனாதலாலும், உனக்கும் எனக்குமுள்ள உயர்வுதாழ்வுகளிது வெனக்காட்டி, அரசரிலும் யான்முறைப்படி அரசுசெலுத்துவோனாதலாலும் விநாயகக்கடவுளுக்கன்பனாதலாலும் என் மனமானது பிறமாதரை விரும்பாதென்றார். (௧௧)

அரைக்கணத் தளவை யின்பா மவரவா துணையிற் கூடின
விரைக்குழன் முகுந்தாய் வேறு துணையொடு மேவப் பெற்றாற்
றரைக்கணுற் றதுவு மின்று மசசமே சாரு நீரா
லுரைக்கடங் காத வள்ள லூறுதுய ரொழிவின் றாமே.

(இ - ள்) மணம்வாய்ந்த கூந்தலையுடைய முகுந்தை யென்பாளே! அவரவர் தமது துணைவருடன் கலந்தால் (இக்காமசுகமானது) அளவிறந்த காலம்விளங்கும் (அற்ப)சுகமாகும். வேறு துணைவருடன் பொருந்தப்புணரின் இப்பூமியில் அவ் (அரசர்க்கண்) வின்பமுமில்லையாய் (அதனால்) அச்சமேயுளதாகுமாதலால், சொல்லுக் கடங்காத தலைவன் பெற்றதுபைமொழிவில்லாததாகும் எ - று.

வேறு துணையொடு மேவப்பெற்றா லச்சமே சாருமென்றதை,

திருக்குறள்

"பகைபாவ மச்சம் பழியென நான்கு
மிகவாவா மில்லிறப்பான் கண்"—என்றும்,

நாலடியார்.

"அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்
றச்சத்தோ டிந்நாற் பொருள்"—என்றும் வருவனவற்று ளுணர்க (௧௨)

வேறு.

அன்று காணுது நரகெனி லன்னைகேள் பிழைத்த
வின்று தீமொழி யெங்கணு மிருமே திலாமு
னன்று சேர்பெரு மிதமுமுன் ணுயகன் றனக்கும்
பொன்று மாதலிற் போற்றுநின் மனத்தினி லென்றான்.

(இ - ள்) தாயே! கேட்பாயாக நரகத்தை அக்காலத்திற் காணபோமென்று சொன்னேல, நாம பிழைபடுதலாகிய தீமொழி இப்பொழுதே யெல்லாவிடத்திலும் படரும் பகைஞாமுன்னே நன்மைபொருந்திய பெருமிதமும் உன் கணவருக்கும் அழியும் ஆனபடியால் உன்மனத்தைப் போற்றக்கடவாயென்று (உருக்குமாங்கதன்) கூறினன் எ - று (௧௩)

கற்புனை திண்டோண் மன்னன் கலங்குதல் சிறிது மின்றிக்
கற்புரை யுளத்த ளாகிக் கடிந்துரைத் திடுதே லோடுங்
கற்பினை நீங்கி நின்ற கவிமனை யிதுகே ளென்று
கற்பக மனையான் முன்கைக் கதுமெனப் பற்றிச் சொல்வாள்.

(இ - ள்) மலைபோலும் அழகியவலியதோளையுடைய உருக்குமாங்கதராசன் சிறிதும் மனங்கலங்குதலில்லாதவனாய, (முகுந்தையென்பவளுக்கு) கற்பின்றன்மையை யெடுத்துக்கூறுஞ் சிந்தையுடையவனாய், (அவள் கருத்தைத்) தடுத்துச்சொல்லவும், கற்புத்தன்மை யொழிந்துநின்ற கவிமுனிவன் மனைவியாகிய முகுந்தை கற்பகத் தருவையொத்த உருக்குமாங்கதனுடைய முன்கையை விரைவாகப் பிடித்துக்கொண்டு இதனைக் கேட்கவென்று சொல்வாளாயினள் எ - று (௧௪)

முள்ளரைக் கமலத் தண்ணன் முதலுக மிரண்டன் மாட்டுந்
துள்ளுறு மின் விழியி னூக்குச் சுதந்திரம் வைத்தா னற்றல்
வள்ளலே பிறனிற் பட்ட மாதரை யானுந் தாமே
நள்ளுற நினைந்து கூடி னவையுமின் றழிவு மின்றே.

(இ - ள்) முட்பொருந்திய அடியையுடைய தாமரைமலரில் வசிக்கும் பிரம தேவன் முதல் யுகங்களிரண்டிலும், குதிக்கின்ற சேற்கெண்டைபோலும் விழிகளை யுடைய மங்கையர்களுக்குச் சுதந்திரத்தை யுண்டுசெய்தனனாதலின், வள்ளற்றன்மை யுடைய அரசனே! யானும் பிறன்றிறப்பட்டமாதாகும் தாம் சிநேகமுண்டாகக் கருதி என்னைக்கலந்தாற் குற்றமுமில்லை கெடுதியுமில்லை எ - று.

தன்கொள்கையை யன்பாற்பெற விரும்பினவளாதலின் வள்ளலென விளித்தனளென்க என்னை? "வரையாது கொடுப்போன் வள்ளலென்ப" என்றது சூத்திரமாதலின். (௧௫)

மைந்தர்கள் வலிதிற் பற்றின் மறுமையு மின்று மாறு
வெந்துயர் நரகு முண்டு வேந்தயான் விழைந்த னற்றுற
சிந்தையிற் கவலை வேண்டா சேர்ந்திடிற் றவங்கள் கல்வி
யுந்திரும் புகழுக் காதி யொழியுமென் றெண்ணிற் கேளாய்

(இ - ள்) ஆடவர்கள் வலிமையாகப் பிடித்துக்கொண்டால் மறுமைப்பயனு முண்டாகாது ஒழியாத வெவ்விய துயர்விளையும், நரகமுமுண்டாகும் அரசனே! யான்விரும்பினேனாதலால் மனத்திற் கவலைகொள்ள வேண்டாம் (என்னைக்) கலந்தால், தவங்களுங் கல்வியும் பெரிய கீர்த்தியும் முதலியன வொழியுமென்று நினைப்பாயாயின், இன்னுங்கேட்பாயாக எ - று. (௧௬)

சேர்தரா தொழிந்த போதுந் தெவ்வடு மன்னு நின்னைப்
பார்தனி னீறு செய்வே னன்றெனிற் படிவம் வேறா
யார்தரு தேய நீங்கி யரியகா னடுத்துக் கொட்பா
லூர்தருஞ் சாபஞ் செய்வே னுணர்மதி யென்று பின்னர்

(இ - ள்) பகைஞரைக்கொல்லும் பார்த்திபனே! (என்னைக்)கலவாதொழிந்த காலத்திலும் உன்னைப் பூமியிலே சாம்பராக்குவேன் அல்லாவிடின் உருவம் வேறு இப்பொருந்திய தேயத்தையொழிந்து அரியவனத்திலலையும்படி துன்பந்தருஞ் சாபங் கொடுப்பேன் அறிவாயாகவென்று பின்னும் எ - று.

ஊர்தரு - திரியத்தக்க. மதி - அசை. (௧௭)

வெள்ளமு மணையி னிற்கும் வெங்கழ லரவ மாதி
பொள்ளெனத் தடையி னிற்கும் புலனிலார்க் கெழுந்த காமம்
பள்ளமென் மடையில் வெள்ளம் பாய்வதே போலு மந்தக்
கள்ளியக் காளை யார்வங் கதுமெனத் தழுவி னாளே.

(இ - ள்) (பெருக்கெடுத்து வந்த) வெள்ளமும் அணைக்கு அடங்கிநிற்கும் வெவ்விய அக்கினியும் பாம்புமுதலியன தடையால் விரைந்து (கட்டுப்பட்டு) நிற்கும் (ஆனால்) அறிவில்லாதவர்களுக்கு உண்டான காமமானது பள்ளமென்று சொல்லும் மடையிலே வெள்ளமானது பாய்ந்துசெல்வதே போலும் (ஆதலின்) அந்த வஞ்சகி யாகிய முகுந்தையென்பவள் அக் காளைப்பருவமுடைய உருக்குமாங்கதமன்னனை யார்வைவிரைந்து ஆலிங்கனஞ்செய்தனள் எ - று. (௧௮)

கொல்லிய லொருபேய் வந்து கொய்யெனத் தழுவ லோடு
மெல்லியா ரிருஞ்சேர் சேரல் வேந்தனங் கார மெய்தி

நல்லிழை மாது செய்தி நன்றுநன் றென்ன நக்குற்
றொல்லெனத் திணிந்த தோளா லுதைத்துமண் ணிலத்தில் வீழ்த்தான்.

(இ-ள்) ஒரு பேயானது கொல்லும்படி நெருங்கி விரைந்து தழுவவும், (அச்சப்படும்) மங்கையர் மனம்போல உருக்குமாங்கதன் (மனதில்) அச்சமடைந்து, நல்ல பணிகளை யணிந்த இம்மங்கையின் செயல் நன்றாயிருந்தது நன்றாயிருந்ததென்று நகைசெய்து, விரைவாகத் தனது வலிய தோளாலுதைத்து மண்ணின்மேல், (அவளை) விழச்செய்தனன் எ-று.

கொல்லிய - செய்யியவென்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். (௧௯)

கால்பொரு கொழுங்கொம் பற்றுக் காமரு கொடிபோல் வீழ்ந்த
வேல்பொரு விழியி னுட்கு வெற்றிவேற் குமரன் கூறும்
சால்பொரு வியன்நின் செய்தி சற்றுமுன் னறிந்தே னாயிற்
பால்பொரு மொழியா யிங்குப் பட்டாதேன் படாதேனே.

(இ-ள்) காலைக்கொத்த கொழுகொம்பற்ற அழகிய பூங்கொடிபோல விழுந்த வேற்படைபோலுங் கண்களையுடைய முகுந்தைக்கு வெற்றிபொருந்திய வேலேந்திய உருக்குமாங்கதன் சொல்கின்றனன் மெய்ப்பாட்டற்ற உன் செய்கை சிறிதும் முன்னரே தெரிந்திருப்பேனாகில், பால்போலும் மதுரமான சொல்லையுடையாளே! இங்கு வரமாட்டேன், வரமாட்டேன் எ-று. (௨௦)

மாதவ முனிவ னில்லின் மாதரா ளென்று நின்பாற்
சீதள நறுநீர் வேண்டிச் சேர்ந்திடு மெனக்கி ஞான்று
பாதக நிறைந்த தாழ்மப் பரிசினை விளைத்தாய் வாளான்
மோதுவ லஞ்சி னேன்னன் முனிவனை யென்று மீண்டான்.

(இ-ள்) பெருந்தவமுடைய முனிவனாச்சிரமத்திலிருக்கும் முனிபத்தினி யென்று உன்னிடத்திலே குளிர்ந்த நல்ல சலத்தை விரும்பி (தாகவிடாயால்) இங்குற்ற வெனக்கு, இப்பொழுது பாவமிக்க தாழ்வான தன்மையைத்தந்தனை. (உன்னை யென்) வாளால் வெட்டுவேன் ஆயினும், முனிவனுக்குப் பயந்தேனென்று (அவ்விடம் விட்டு) திரும்பினன் எ-று. (௨௧)

மீண்டவன் றன்னை நோக்கி வெய்தென முகுந்தை சீறித்
தீண்டுதற் கரிய தாமென் றிருத்தகு கற்புஞ் சிந்த
வீண்டுபே ரழகிற் போந்தா யின்பமுங் கொடுத்தா யில்லை
மாண்டநின் னுடலிற் குட்ட மருவுக வல்லை யென்றாள்.

(இ-ள்) முகுந்தை, (அவ்வாறு) சென்ற உருக்குமாங்கதனை விரைவாகக் கோபித்து, தொடுதற்கரியதாகிய என் சிறந்த கற்புநிலையுங் கெடும்படி நெருங்கிய பேரழகுடன் வந்தனை எனக்குச் சுகமுங் கொடுத்தாயில்லை. (ஆதலின்) மாட்சிமைப்பட்ட உன்னுடலிற் குட்டநோய் விரைவிலுண்டாகுகவென்று சபித்தனள் எ-று.

வேட்டது பெறாது சால வெதும்பினள் ளாத லாலே
கோட்டமின் றுகித நீவு கூறுதல் செய்யா னன்றி
யோட்டைநெஞ் சுடைய மாதி னொண்முகம் பாரே னென்று
நீட்டிய [illegible] வாளா [illegible] திரும்பிப் பாரான்.

(இ - ள்.) இச்சித்ததை யடையாமல் மிகத் துன்புற்றனள் ஆனபடியால், தளர்ச்சியில்லாமல், சாபத்தீர்வு சொல்லமாட்டாள். அல்லாமலும் மனவுறுதியில்லாத அம்முகுந்தையின் பிரகாசிக்கின்ற முகத்தைப் பார்க்கமாட்டேனென்று, மிக்க புகழையுடைய உருக்குமாங்கதன் திரும்பிப்பாராமல் வாளா சென்றனன் எ - று

வாளா - சும்மா. (௨௩)

பெண்ணிருங் கொலையே போலப் பெண்ணிடு சாபந்தானு
மண்ணிடைக் கொடிது போலு மாதவ னிடுசா பந்தால்
வெண்ணிறக் குட்ட மெய்யில் விரவிய தரச னோக்கிக்
கண்ணிய கருத்தின் மாழ்கிக் கணேசனை நினைந்துச் சொல்வான்.

(இ - ள்) பூமியிலே பெரிய பெண் கொலையையேபோலப் பெண்பாலார் கொடுத்த சாபமுங் கொடிதுபோலும் பெருந்தவமுடைய அம்முகுந்தை யிட்ட சாபத்தாலே அவன் தேகத்தில் வெண்குட்டவியாதி பொருந்தியது அதனை உருக்குமாங்கதன் கண்டு எண்ணங்கொண்டு மனதில் வருந்திக் கணேசப்பெருமானைத் தியானித்துச் சொல்கின்றான். எ - று (௨௪)

அறிந்துநின் றொழும்பிற் சற்று மடியனேன் பிழைத்த தில்லை
சிறந்தவன் புடையார் மாட்டுன் றிருவரு ளோவ தில்லை
சிறந்தநின் னருளுண் டாயிற் றீதெனை யடாவ தில்லை
யறிந்திடாப் பிழையுண் டாயி னதுபொறுத் தருளல் வேண்டும்.

(இ - ள்) தேவரீருடைய பணிவிடையில் அடியேன் சிறிதும் அறிந்து தவறினதில்லை மேம்பட்ட அன்புடைய பத்தர்களிடத்திலே தேவரீருடைய திருவருள் நீங்குவதில்லை. சிறப்பமைந்த தேவரீருடைய திருவருள் விலாசம் உண்டாயிருக்குமாயின் தீமையென்பது அடியேனைத் துன்புசெய்வதில்லை அறியாமற்செய்த குற்றமுண்டாயிருப்பின் அதனை மனம்பொறுத்தருளல்வேண்டும், எ - று. (௨௫)

சிட்டரைக் காப்பா யென்றுந் துட்டரைத் தெறுப்பா யென்று
முட்டறு வேத மெல்லா மொழிவது மெய்யே யாயின்
மட்டவிழ் முகுந்தை மாழ்கப் பிரிந்ததுந் தரும மாக
விட்டவள் சாபத் தாலே யெனக்குநோ யடுப்ப தாமே.

(இ - ள்) சிஷ்டரைக் காப்பவனென்றும், துஷ்டரை யழிப்பவனென்றும், இடையூறில்லாத வேதங்களெல்லா முறையிடுவது உண்மையேயாயின், அம்முகுந்தையென்பவள் துன்புறும்படி (யான்) பிரிந்து சென்றதுந் தருமமாயிருக்க, (அவள்) கொடுத்த சாபத்தினால் எனக்கு நோயுண்டாவது தருமமா? எ - று (௨௬)

தூயவிஞ் ஞையரு நாணுஞ் சுடரொளி வனப்பு நீங்கித்
தாயரு மிகழுக் குட்டஞ் சார்ந்தவெ னுடலை யிந்தக்
காயமுற் கடத்தின் மாய்ப்ப தல்லது கைக்கொண் டேற்றப்
போயர சாட்சி செய்யே னென்று புனிதனே யென்று நைந்தான்.

(இ - ள்) பரிசுத்தமான விநாயகக்கடவுளே! புனிதமான வித்தியாதரர்களும் நாணத்தக்க சூரியகாந்திபோன்ற (என்) அழகொழிந்து, (பெற்ற) தாயாரும் இகழும்படி குட்டநோய் பொருந்திய என் தேகத்தை இந்தக் கொடுக்கின்ற தீமையான

னத்திலேயே யொழிப்பதல்லது, உடன்கொண்டு ஊரிற்சென்று ஆக்கசெய்யமாட்டேன் என்று வருந்தினன் எ - று (உஎ)

காவல னிவ்வா றெண்ணிக் காட்டிடைச் செல்லா னேகா
பாவிய வாலங் கண்டப் படாந்தத னிழலைச் சூழ்ந்தான்
மேவிய வேட்டைக் கானின் வேந்தனைத் தேடிக் காணா
தோவிய சிந்தை யோடு முடன்வந்தார் நகர்க்குச் சென்றார்

(இ - ள்) உருக்குமாங்கதராசன் இவ்வகையாகக் கருதி, வனத்தின்வழியே செல்பவனாகி, அங்கே யோர்படர்ந்த ஆலமரத்தைக்கண்டு பரவியுள்ள அதன் நிழலிலே தங்கினன். பொருந்திய வேட்டைக்கானிலே உடன்வந்த (மந்திரி முதலான) வர்கள் அரசனாகிய உருக்குமாங்கதனைத் தேடிக்காணாமல், வருந்திய மனத்துடன் தம்நகரத்திற்குச் சென்றார்கள் எ - று

படாந்த+அதன்=படாந்ததன். அகரம் தொகுத்தல் (உஅ)

உருக்குமாங்கதன் சாபம்பெற்றது முற்றிற்று

ஆகத் திருவிருத்தம் - கசசு

நாரதர் உருக்குமாங்கதனுக்குச் சாபத்தீர்வுகூறியபடலம்.

குட்ட வேந்தனை நோக்கிய கோதினால்
வட்ட வானில் வழுக்கி விழுந்தென
வடு பேரொளி யாதவ ன்டுமேல்
பட்ட தன்று பணிக்குட வேலையின்.

(இ - ள்) குட்டநோய்பொருந்திய உருக்குமாங்கத ராசனைக்கண்ட குற்றத்தினால், (எல்லாவற்றையுஞ்) சுடுகின்ற பேரொளியுடைய சூரியன் தேரானது, வட்டமாகிய ஆகாயத்தினின்று வழுக்கிவிழுந்தாற்போல, குளிர்ந்த மேற்கடலிலே விழுந்தது [சூரியன் அத்தமாயினன்] எ - று (க)

நாட்டி னுள்ளவர் நாற்றுயர் முற்றுளான்
ஓட்டு வேற்படை மன்னவ னென்றொரு
கோட்டு மாமுகன் கூட்டிய மாயையி
னீட்ட மென்ன விருள்பரந் திட்டதே

(இ - ள்) நாட்டிலுள்ளவர்கள் (அவன் தேகப்பொலிவிழந்து குட்டநோயுற்றதைக்) கண்டால், (சத்துருக்களை) அழிக்கும் வேலாயுதமேந்திய உருக்குமாங்கதன் நாணமடைவானென்று, ஒற்றைக்கொம்பையுடைய விநாயகக்கடவுள் உண்டுசெய்த மாயையின் நெருக்கம்போல இருள்பரவியது. எ - று. (உ)

இரவ லாள ரிடத்தி லிராவகைக்
கரவு செய்யுமிக் காளையை யின்றுநாம்

விரவு வாமென விழ்பசி தாகமும்
பரவு சோகமும் பற்றவி ருந்தனன்.

(இ - ள்) யாசகர்களிடத்தில் (தம்மை) இராதவிதமாக வஞ்சிக்கும் இக்காளைப்பருவமுடைய உருக்குமாங்கதனை இப்பொழுது நாம் சேருவோமென்று, மிக்க பசியுந் தாகமுஞ் சோகமும் பற்ற (வருந்தி) இருந்தனன் எ - று.

இரவலர்க்கு விசேடமாகத் தானங்கொடுத்தவனாதலின் அவ்வுருக்குமாங்கதனைப் பகைத்துள்ள பசி தாக சோகங்கள் இதுவே சமயமென்று பற்றினவென்றார்

உண்டி யின்றி யுறங்குத லின்றிமுன்
கொண்டி டாத்துயர் கொண்டிடு மன்னவன்
மண்டு மின்னலை மாற்றவந் தானெனத்
தெண்டி ரைக்கடற் செங்கதிர் பூத்ததே.

(இ - ள்) ஆகாரமில்லாமல் நித்திரையற்று, முன் (ஒருகாலத்தும்) பெறாத துன்பத்தைக் கொண்டிருக்கும் உருக்குமாங்கதனுடைய நெருங்கிய துன்பத்தையொழிக்க வந்தவனென்று சொல்லும்படி, தெளிந்த அலையையுடைய கடலிலே, செவ்விய கிரணங்களையுடைய சூரியனுதித்தனன் எ - று

கதிர் என்றதற்கேற்பப் பூத்ததென அஃறிணை யொருமைமுடிபு கொடுத்துக் கூறினரெனக். (௪)

காலை முற்றுங் கடன்முடித் துள்ளமென்
னாலயத்தி னருட்கண நாதனை
மாலை யன்பின் மகிழ்ந்து வழிபடும்
வேலை விண்ணிடை நாரதன் மேயினான்

(இ - ள்) (உருக்குமாங்கதமன்னன்) காலைப்பொழுதிற் செய்யும் நித்திய கடனை முடித்து, மனமாகிய திருக்கோயிலில், கிருபாமூர்த்தியாகிய கணேசப்பெருமானை அன்பாகிய மாலையாற் பிணித்து வழிபாடு செய்யுங்காலத்தில், ஆகாயவீதியில் நாரதமுனிவர் பொருந்தினர் எ - று (௫)

அருக்கன் வேற்றன் வானியங் குற்றெனப்
பொருக்கெனச் செலுந் தேவர் முனிவனை
யுருக்கு மாங்கத னெய்யென நோக்கினா
னுருக்க மோடுமங் கோலிடு வானரோ.

(இ - ள்) வேறோர் சூரியன் பரந்த ஆகாயத்திற் சஞ்சரிப்பதுபோல விரைந்து செல்கின்ற தெய்வீகமுடைய நாரதமுனிவரை உருக்குமாங்கதராசன் விரைந்து தரிசித்து மனவுருக்கத்துடன் ஓலமிடுவானாயினன் எ - று

நோக்கினா - முற்றெச்சம். (௬)

வேறு

அடிகளே யோல மோல மமரர்கண் முனிவ ரோலம்
வடிவிசை யமுத நேக்கு மகதியாழ்த் தலைவ வோலம்
நெடியவன் முதலோர் துன்ப நீக்குவா யோல மோலம்
படியிசை யடியேன் றுன்பும் பாற்றுவா யோலமோலம்.

(இ-ள்.) சுவாமிகளே! ஓலம் ஓலம் தேவாகருமுனிவரே! ஓலம். வடித்த இசையாகிய அமுதத்தைத் தேக்கெடுக்கும் மகதிவீணையை யேந்திய தலைவரே! ஓலம். திருமால் முதலியோருடைய துன்பங்களை யொழிப்பவரே! ஓலம். ஓலம். பூமியிலே அடியேனுடைய துன்பத்தையும் ஒழிப்பாய் ஓலம் ஓலம். எ-று.

நாரதமுனிவர் கரத்திலுள்ள வீணையை மகதிவீணையென்பது வழக்கு (எ)

அருட்பெருங் கடலே யுன்ற னடைக்கல நாயேன் கண்டாய்
மருட்கடல் கடந்தோய் வீமன் மகனடி யேனென் னாமம்
உருக்குமாங் கதனீங் கெய்தி யுன்னருள் வழங்கு கென்று
வெருக்கொளு மயமா நீங்கி விளித்தெதிர் தொழுது நின்றான்.

(இ-ள்) பெரிய கருணைக்கடலே! அடியேன் தேவரீருடைய அடைக்கலம்; மயக்கமாகிய கடலைக்கடந்தவரே! அடியேன் வீமராசன் மகன்; என் பெயர் உருக்குமாங்கதன்; தேவரீரிங்கடைந்து உமது திருவருள் புரியவேண்டுமென்று, பயங் கொள்ளும் மயக்கமொழிந்து கூப்பிட்டு எதிரேபணிந்து நின்றனன் எ-று. (அ)

கன்றகன் றன்னை நோக்கிக் கனைந்துசெல் புனிற்றாப் போல
வனைத்தையு முணர்ந்த மேலோ னவனிவை கேளா முன்னம்
நினைத்துறு வினையி னீங்கி நேரென வெதிரே போந்தான்
றனைச்சரண் வணங்கிப் போற்றித் தராபதி சாற்ற லுற்றான்.

(இ-ள்) கன்றைத் தன்னுடைய கன்றைநோக்கி மனங்கனைந்து செல்கின்ற தலையீற்றுப் பசுவைப்போல, எல்லாவற்றையுமறிந்த மேலோனாகிய நாரதபகவான் அவனை கூப்பிடுவதைக் கேட்குமுன்னமே, தாம் நினைத்துக்கொண்டிருந்த செயலினின்றும் விலகி விரைந்து எதிரேசென்றனர்; உருக்குமாங்கத ராசன் அவர் திருவடியைப் பணிந்து துதிசெய்து உரைக்கலுற்றனன் எ-று. (கூ)

வேறு

வேட்டையின் வந்தநான் மிகுந்த தாகநோய்
வாட்டலின் வனத்திடை வனத்தை நாடியே
கோட்டமில் சிந்தையிற் கொட்புற் றெய்தினேன்
முட்டிய வினையினான் முதுநகை வாழிடம்.

(இ-ள்.) வேட்டையின் விருப்பால் (வனத்திற்கு) வந்த அடியேன் மிக்க தாகநோய் துன்புசெய்தலின் வனத்தில் வனத்தைத்தேடி, கோணுதலில்லாத மனத்துடன் வருந்தி, முன்செய்த தீவினைப்பயனால் முதுகன்னையெனபாள் வாழும் (கவிமுனி, வன்) ஆசிரமத்தை யடைந்தேன் எ-று.

வனமிரண்டினுள் முன்னையது காடும், பின்னையது நீருமாம் (க௦)

உடலெரி தாகநோய்க் குக்கம் வேலையு மென்னை
கடலெறி யுயிரழி காம தாகநோய்
படாத வென்னிடைப் பறழி லாமைக்கண்
டடருபிந் நோயசபித் தடைவித் தாவீரா

(இ-ள்) தேகத்தை யெரித்துந் தாகநோய்க்கா நீரைக்கேட்டேன் கடல் போலும் விரிவையுடைய ஆரமுகுந்தை உயிரையெரித்துந் காயத்தகய கிட ? ட

னது தனனைத தனபுசெயய, (என்னை வேணடினள) எனனிடததில (அவவகைய) பறறிலலாமையைப பாாதது, கொலலததக்க இந்நோயை (அடைகவென)ச சபிதது அடையச்செயதனள. எ - று (கக)

பயிலபதி யினிசசெலப பறறு வைத்திலே
னுயிரினை விடுபபதே யுளநது ணிநதுளேன
செயிரறு தவமபல காலஞ செய்தெனை
யயாவறத் தநதவாக காகத தாஙகினேன.

(இ - ள) யான்வசிக்கும் பதிககு இனிப்போகப பறறுவைத்தேனலலேன உயிரை விடுவதாகவே மனந்துணிநதிருககினறேன. (ஆனால்) குறறமறற தவததை அநேககாலஞ்செயது வெறுப்பற என்னைப்பெறற தாய்தநதையாசளுககாக (இனனும உடலைத) தாஙகி யிருககினறேன. எ - று (கஉ)

வழிமது வெனவிசை வடிககும வீணையோய
செழிமலா சேவடி சோததி நாளுநான
வழிபடு கணபதி யருளின வண்மையால
விழியெதிர் காணுமா விசுமபிற றோறறினை

(இ - ள) வழிகினற தேனைபபோல இசையைவடிககும மகதிவீணையை யேநதிய நாரதமுனிவரே! செழிததமலாகளைச செவவியதிருவடியிற சோததித தினந தோறும நான்வழிபடுகினற கணேசபபெருமானுடைய திருவருள வளததினால என கணணெதிரே காணுமபடி ஆகாயததிலே தேவரீா காணப்பட்டீா எ - று (கங)

நாரத முனிவநின னளினச சேவடி
சாரநான பெறுதலிற றளருங குடடநோய
தீரவே பெறறுளேன செமமல வீமனிவ
வாரமே மலடடினை மாறறும வாரமே.

(இ - ள) நாரதமுனிவரே! தேவரீருடைய தாமரைமலாபோன்ற செவ்விய பாதஙகளை அடியேன் சாரப்பெறுதலால, துனபுசெய்யுங குடடநோயைத தீரவே பெறறேன செமமலே! (எனபிதாவாகிய) வீமராசன தன மலடடுததனமையை மாறறிய வாரமும இவவாரமேயாம. எ - று (கச)

இனையன பலவுமங கியமபி யெமபிரான
வினையிது தீருமா விளமபு கெனறனன
முனைவளா வேளனுன முருகதநத நோக்குபு
தனைநிகா நாரதன சாறறன மேயினன

(இ - ள) இவ்வகைய வாாததைகளை பலவறறையும் அபபொழுது கூறி, எமபெருமானே! குட்டநோயாகிய இவ்வினை தீரும வழியைக்கூறியருளகவென்றனன தனனை ததானே நிகராகிய நாரதமுனிவா போனாவளாகினற முருகககடவுளைபோலும அழகுவாயநத உருககுமாஙகததினை நோககிச சொலலததொடஙகினா. எ - று

திருமா இதில ஆ எனபது ஆறு எனபதன தொகுததல.

வேளென நதை முனைவளாரெனறும அனடமொழியால முருகனெனறும.

வேறு

குதம்பையான் றெருத்திற் றுயல்வருங் காதிற்கொற்றவ நின்குடைநிழலி
னிதம்பெறு வித்தப் தேயமென் றோங்கு மிந்நாட்டினு றுநான் வருங்காற்
கதம்பமா நகரி னதிசய மொன்று கண்டன னஃதியா தெனனின்
மதம்பொழி களிநல யானைமா முகவன் மந்திர முள்ளதந் நகரின்.

(இ - ள்) காதிலணிந்த குதம்பையானது தொங்கிய பிடரியின்மேலே அசைகின்ற உருக்குமாங்கதனே ! உன்குடை நிழலிலே நன்மைபெற்றுவிளங்கும் வித்தப தேயமென்று உயர்ந்த இந்தநாட்டிலே இன்று நான் வரும்பொழுது, சிறந்த கதம்ப நகரத்திலே ஓரதிசயத்தைப் பார்த்தேன். அஃதியாதெனின், பொழிகின்ற நல்லமதச் செருக்கையுடைய சிறந்தயானைமுக விநாயகக்கடவுள் திருக்கோயில்ஒன்று அந்நகரத்திலுள்ளது. எ - று. (௧௬)

மந்திர மதனு ளமர்ந்தருள் சிந்தா மணியெனும் பெயர்விநா யகனை
முந்துற வணங்கி யவரவர் வேட்ட முனிவிலா வரம்பெறு கின்றார் [தத்
கொந்தொளிக் கோயின் முன்புறக் கணேச குண்டமென் றொருபெருந் தீர்
மந்தரத் தவரும் வியத்தகு பெருமை யணிந்திருக் கின்றதாங் கதனில்.

(இ - ள்) அக்கதம்பநகரத்திலே, திருக்கோயிலினுள்ளே யெழுந்தருளியுள்ள சிந்தாமணியெனும் பெயரையுடைய விநாயகக்கடவுளை முற்படப்பணிந்து, அவரவர்விரும்பிய அழிவில்லாத வரங்களைப் பெறுகின்றார்கள் தொகுதியாகிய ஒளியையுடைய அத்திருக்கோயிலின் முன்னே பொருந்தக் கணேசகுண்டமென்னும் பெயர்கொண்டு ஒருபெரிய தீர்த்தமானது தேவர்களும் அதிசயிக்கத்தக்க மேம்பாடுற்றிருக்கின்றது. எ - று

கொத்து - கொந்து, இதுமெலித்தல் (௧௭)

அடங்கருங் குட்ட நோயினன் முதிய னல்லலோர் சூத்திர னொருவ
னிடங்கர்க ளுலவு நீம்புனற் றீர்த்த யாத்திரைக் கேகுவா னடுத்து
மடங்கரு மகிழ்வி னாடின னெழுந்தான் வல்வினை யொடும்பிணி தீர
விடங்கமெய் யினனாய் விநாயக னுருவு மேவினன் விண்ணுமே கறவே.

(இ - ள்) அடக்குதற்கரிய [அதிகரித்த] குட்டநோயுடையவனும், விருத்தனும், துன்பமைந்த சூத்திரனுமாகிய வொருவன், முதலைகளுலவுகின்ற மதுரமாகிய நீரையுடைய தீர்த்த யாத்திரைக்குச் செல்லச்சென்று, எல்லையில்லாத களிப்புடன் (அக்கணேசகுண்டத்தில்) மூழ்கியெழுந்தனன். கொடியவினையோடுங் குட்டநோயொழிய விடங்கதேகமுடையவனாய், தேவர்களும் அங்கலாய்க்கும்படி விநாயகர் திருவுருவை யடைந்தனன். எ - று

இடங்கர் - முதலை எகுவான் - வினையெச்சம்; இதில் வான் வினையெச்ச விகுதி. விடங்கம் - உளியிடப்படாதது எனவே திவ்வியமெனக. (௧௮)

உமாபதி யுயிர்த்த முன்னவ னருளா லொலிபுகழ்க் கணங்கண் முன் னுற்று
விமானமேற் கொண்டு விநாயக ருலகை மேவினன் னனையவ னதனு
லிமாசல மனைய தோளினாய் நீயு மெய்த்திரு நீராடியே யமர்
தமாதனை சைகளுந் தருமமா திகளுஞ் சமைமதி தனக்குமிப் பெருநோய்.

(இ - ள்.) உமாதேவி நாயகராகிய சிவபெருமானது மூத்தபிள்ளையாராகிய விநாயகக்கடவுள் திருவருளால், ஒலிக்கின்ற கீர்த்தியையுடைய சிவகணங்களை முன்னே செலுத்திய விமானத்திலேறாநின்று விநாயகக்கடவுளுலகை யடைந்தான் அச்சுகந்திரனாதலின், இமாசலத்தை யொத்த தோளையுடைய உருக்குமாங்கதராசனே! நீயும் அங்கடைந்து அதில் மூழ்கி ஏரம்பமூர்த்தியின் பூஜையுந் தருமமுதலியனவுஞ் செய்க இப்பெருவியாதி (அக்கடவுளருளால்) விலகும்.

மதி - முன்னிலையசைச்சொல். (௧௯)

முரிதிரை சுருட்டும் விரிகடற் பரப்பின் மொய்த்துறு மருந்தெலா ஞ்செயினுங்
கரிபரி யிரத மாதிக டானங் காதலித் தியல்புறச் செயினுந் [ல
தரியலர்க் கிடியே யனையவேற் கரத்தாய் தாங்குநின் சாபநோய் கம்பப்
புரிவளர் சிந்தா மணிவிநா யகரா லல்லது போனறா தென்றான்.

(இ - ள்) பகைஞர்க்கு இடியேறுபோன்ற வேலாயுதத்தைக் கையிலேந்திய உருக்குமாங்கதராசனே! முரிகின்ற அலைகள் சுருட்டும் பரந்த கடல்சூழ்ந்த பூமியில் நெருங்கியுள்ள அவிழ்தங்களையெல்லாம் புசித்தாலும், யானை குதிரை தேர்முதலிய தானங்களை ஆசையோடு விதிப்படிசெய்தாலும், ஏற்றுள்ள உன் சாபநோயானது கம்பநகரத்திலெழுந்தருளியுள்ள சிந்தாமணி விநாயகராலல்லாமல் ஒழியாது என்று (நாரதமுனிவர்) கூறினர். (௨௦)

நாரதர் உருக்குமாங்கதனுக்குச் சாபத்தீர்வுகூறியபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௪௬௩

இந்திரன்சாபம்பெற்றபடலம்.

மாடகமு றுக்கியிசை பாடுமுனி நீடுபிணி மாற்று முறைமை
நாடியுரை செய்தலும கிழ்ந்துகழன் மன்னவன யந்து பணியாக்
கூடியநல் லன்பினொடு கூறுவன ருந்தவக தம்ப நகரிற்
பீடுறவி ருந்தபெரு மானையெவர் பூசனைசெய் பேணி னார்களே.

(இ - ள்) தந்திரிகளை முறுக்கி இசைபாடும் நாரதமுனிவன், குட்டவியாதியை யொழிக்கத்தக்க முறைமையை யோசித்துக் கூறவும், வீரக்கழலணிந்த உருக்குமாங்கத மன்னன் களிப்புற்று அன்புடன் பணிந்து, ஆசையோடினிதாகச் சொல்கின்றனன் அருந்தவமுடைய முனிவரே! கம்பநகரத்திலே பெருமை பொருந்த எழுந்தருளியிருக்கும் விநாயகக்கடவுளை (இதன் முன்னே) எவர்தாம் பூசனைசெய்தனர்? எ - று.

மாடகம் - தந்திரி. முறுக்காணி (௪)

வீறுமழை பெய்யசுடர் வீசவளி யென்றிவைகள் மக்கு தவுவோம்
மாறுமுள தோவெனம னத்துயர்க ளுய்யவரு மாதவ நினைக்
கேடிடுகைம் மாறுமடி யேனபுரிவ தென்னுளதி ரங்கி யருள்க
சீறியந தோவெனவி ரந்திடம கிழ்ந்துமுனி செப்ப லுறுவான்.

(இ - ள்) பெய்கின்ற (மிக்க) மழையும், காய்கின்ற சுடரும், வீசுகின்ற காற்றுமென்றுசொல்லப்படும் இவைகட்குச் செய்யுங்கைம்மாறு உண்டோ?

(இல்லை, அதுபோல) உலகிலுள்ள நிலைபெற்ற வுயிர்கள் உச்சீவிக்கும்படி வந்த நாரத முனிவரே! தேவரீருக்கு எதிராக அடியேன் செய்யத்தக்க பிரதியுபகாரம் யாதிருக்கின்றது? மனமிரங்கி யருள்வேண்டுமே கோபஞ்செய்யச்சருள்வேண்டாமென்று யாசிக்க, நாரதமுனிவர் மகிழ்ந்துசொல்லலாயினர் எ - று. (உ)

முந்தையொரு காலமுடி வானவரி றைஞ்சமுகி லூர்தி சுதன்மைம
ணந்தமணி யாதனமி ருந்தரசு செய்தொளிர் மகிழ்க்கு மளவி
னந்திலுறு மென்னையெதிர் வந்தடிப ணிந்துதொழு தாத னமளித்
தெந்தவுல குந்திரியு மெந்தையுள தேலிசைய யாவுகவெனா

(இ - ள்) முன்னொருகாலத்தில், மேகவாகனனாகிய இந்திரன் சுதன்மை மண்டபத்திலே, அழகிய இரத்தின சிங்காதனத்திலிருந்து தேவர்கள் வணங்க அரசு செய்து கீர்த்தி நிறைந்திருக்கையில், அவ்விடத்திலுற்ற என்னை எதிர்ந்து அடியிற் பணிந்து நமஸ்கரித்து ஆதனமொன்று கொடுத்து (அதிலிருக்கச்செய்து) எல்லாவுலகங்களிலுஞ் சஞ்சரிக்கும் எந்தையே! அதிசயமுள்ளதாயிற் கூறக்கடவையென்னை எ - று.

சுதன்மை - இந்திரன் கொலுவிருக்கை மண்டபத்தின் பெயர். (௩)

இந்திரனை நோக்கியிது கூறுதலி சைந்தனனி லங்குகுலி ச
வெந்திறலி னுயவளரு மேதினிய டைந்தனனம் மேதினியி டை
யந்தணர்க ளாற்றரிய மாதவமி யற்றியருள் சேர்கவுதம
மந்திரவ ழற்கடவுண் முன்வதுவை செய்தமட மாதகலிகை

(இ - ள்.) இந்திரனைநோக்கி இதனைச்சொல்ல விசைந்தேன். பிரகாசிக்கின்ற வச்சிராயுதத்தாலாகிய வெவ்விய வலியுடையவனே! வளர்கின்ற பூலோகத்தையடைந்தேன். அப்பூலோகத்திலே வேதியர்கள் செய்தற்கரிய பெருந்தவஞ்செய்து திருவருளடைந்த கவுதமமுனிவன் மந்திராக்கினி முன்னதாகத் திருமணஞ்செய்த இளமங்கையாகிய அகலிகையென்பவள் (ஒருத்தியுள்ளாள்) எ - று. (௪)

அன்னவட னக்கழகி னொப்பவர்கள் யாவருமிலை
பொன்னுடையி னன்மருமன் மார்பகலை மாதுசசி பொற்பினிரதி
நன்னரநு சூயைதிதி நாடியதி லோத்தமைந லங்கொளதிதி
யின்னவரும் வெந்நிடுத லன்றியவண் முன்னெதிர்வா ராக விலரே

(இ - ள்) அவளுக்கு அழகிற சமானமானவர்கள் உலகத்திலேயொருவருமிலர். பீதாம்பரமணிந்த திருமாலின் மார்பகத்துள்ள திருமகள் - சரசுவதி - இந்திராணி - அழகிற்சிறந்த இரதி - நல்ல (அத்திரிபாரியையாகிய) அநசூயை - திதி - திலோத்தமை - நலமைகொண்ட அதிதி இப்படிப்பட்டவர்களும் முதுகுகாட்டுதலன்றி (அழகில்) அவளுக்குமுன்னே எதிர்ப்போரில்லை எ - று.

திதி - காசிபன் மனைவியர் பதின்மூவரிலொருத்தி இவள் மக்களே தைத்தியர். திலோத்தமை - தேவதாசிகளிலொருத்தி அதிதி - காசிபன் மனைவியரில் தேவரைப்பெற்றவள்

பொன்னுடை - பொன் வஸ்திரம் இதுபீதாம்பரமென்ப வெந் - முதுகு

இரும்பிரசந் தங்கநக மென்னுமதின் மூன்றுமொரி மூளமுறுவ
லரும்பியயி ராசைரசை மல்லதும திர்தலறி யாவென மனமும

விரும்பியது கண்டவுட னென்னிலை டன்னைவிர வாத நகரம
பெரும்புலவ ராறபுகழவ தனறெனமொ ழிந்துபெயா குறறொ ருவினென.

(இ - ள்) இருமபு வெள்ளி பொனனென்னு மூமமதில்களும் பறறியெரியுமபடி புன்னகைசெய்த சிவபிரானுடைய திருவடியையனறி, (பொருளாக) மதிபபதறியாத என்னுடைய மனமும (அவ்வகலிகையைக்) கண்டவுடனே இச்சித்ததெனறால, அவளையுடைததாயிராத நகரமானது பெரிய புலவாகளாற புகழசதககதனறு எனககூறி, அவவிடம விட்டுச சென்றேன எ - று.

இருமபிரசதங்கனகம என்பதை இரும்பு இரஜதம கநகமெனறு பதமபிரிததுக்கொளக (௬)

வேறு

சுநதர வகலிகை தொகுமிசை நுவல
விநதிர னிணாவிடு மெரிபடு மெழுகின
சிநதையு ளுருகினன செறிதுய ரகலக
கநதென மருவினன கவுதம னுருவம.

(இ - ள) அழகினையுடைய அகலிகையின் மிகுநத சிறப்பைசசொலல, இநதிரனனவன தொழுநதுவிடடெரியுமஅககினியிறபடடமெழுகுபோலததனமனமுருகி, மிககதுனபமானது விலகுமபடி விரைநது கவுதமமுனிவா வடிவேறறனன. எ - று.

கநது - வேகம (௭)

பொயயகழி கவுதமா பூமபுன லாட
வையகமற நீஙகினா மறறது போழ்தின
மெயயகழி மனமொடு மேவிய மகவா
னையகனி கூநதன மு னினறிது மொழிவான

(இ - ள) பொய்மமொழியகனற [சததிய சீலராகிய] கவுதமமுனிவா அழகிய நீரிலமூழக, விடியறகாலதது (ஆசிரமததினினறு) சென்றனா அந்தக்காலததில மெயமமையொழிநத மனதுடனபொருநதிய இந்திரன நெயப்பசைமிகக அளகததையுடைய அகலிகைமுனனே நினறு இதனைச சொலவான எ - று

மகவான - இநதிரன இது நூறு அசுவமேதஞ் செய்தவனெனனும் பொருளில வநதது மகம=யாகம (௮)

சுடாவிடு மிளநகைத துவரிதழ்க கனிவாயக
குடநிகா வனமுலைக கொடிபுரை யிடையின
மடவரல கலவியின மருவுதற் கமளி
யிடுகடி தெனவவ ளெதிரிது மொழிவாள.

(இ - ள.) ஒளிவீசும சிறிய தநத பநதியும, பவளம்போனற உதடும, ஆதொணடைககனிபோனறவாயும, குடமபோனற (பூரிதத) அழகியமுலையும், (பூங) கொடிபோன்ற இடையுமுடைய பெணணே ' உடனபொருநதுதறகு விரைவிற படுக்கையிடுக வெனக்கூற, (அகலிகை தன கணவரான கவுதமரென்று கருதி) அதறகுப் பதிலாக இதனைச் சொலகின்றனள. எ - று.

மடவரல - மடமைககுணம் வருதலையுடையாள. (௯)

வேறு

ஒருநாளு மொழுகாத வொழுக்கமருந் தவவென்னே யொழுகப் புக்காய்
முருகாரு மலர்ப்பொய்கைப் புனலாடிச் சந்திசெப முறையி னாற்றிப்
பெருகார்வத் தொடுங்கடவுட் பூசைபுரி காலத்துப் பிழைபய்ய சாலத்
தருகாமப் பொருள்விழைதற் கேதுநுமக் கென்னென்னச் சாற்றி னாளால்.

(இ - ள்) அரியதவத்தையுடைய முனிவரே! ஒருகாலத்தும் நடவாத நடக்கையை நடக்கப்புகுந்தீர். அது யாது காரணம்? வாசம்பொருந்திய மலரையுடைய தடாகத்திலே நீராடிச் சந்தியாவந்தன முதலியவற்றை வழக்கப்படி செய்து, மிக்க ஆசையோடுஞ் சிவபூசையைச் செய்யுங்காலத்திலே மிக்ககுற்றத்தையே கொடுக்கத்தக்க காமப்பொருளை விரும்புதற்கு உமக்குக் காரணம் யாது? என்று கூறினாள் எ - று. ()

படிமையிற் கவுதமனார் வடிவெடுத்துப் படர்ந்தபெரும் பாவி செய்கை
கட்டழகி யறியாது தன்கணவ னெனவிதனைக் கரைந்த வெல்லைச்
சட்டமக வானமொழிவா னறையலாய் நீராடச் சார்ந்தே னாங்கு
வட்டமுலை யொருமாது துகிலின்றி நீராடும் வனப்புக் கண்டேன்.

(இ - ள்) வஞ்சகமாகக் கவுதமமுனிவர் வடிவேற்றுவந்த மகாபாவியாகிய இந்திரன் செய்கையைப் பேரழகுடைய அகலிகை யறியாதவளாகித் தன் கணவரென்று இவ்வாறு சொல்லியகாலத்தில், விரைந்து இந்திரன் சொல்லுவான்: பெண்ணே! நீராடச்சென்ற நான் அங்கே வட்டமாகிய முலைகளையுடைய ஓர் மங்கை சேலையின்றி நீரினமூழ்கும் அழகைக்கண்டேன். எ - று. (௧௧)

உள்ளமழிந் தெழுந்தபெருங் காமத்தா லுஞற்றலுறுங் கருமந் தன்னி
லெள்ளளவு மனஞ்செல்ல விலலையினி யுயிர்வாழ்வு மெய்தா தாகுங்
கள்ளொழுகு மலர்க்கோதாய் கலவிதரல் வேண்டுமது கடிந்தா யாகிற்
பொள்ளெனநின் னுயிர்மாழ்கச் சபிப்பனென் றுன்கேட்ட பூவை யன்னாள்.

(இ - ள்) மனமழிந்து தோன்றிய பெருங்காமத்தினால், செய்தக்க கருமத்தில், சிறிதும் மனஞ்செல்லவில்லை. இனி உயிர்பிழைத்தலும் அடையாததாகும். தேன்சிந்தும் மலர்களையணிந்த கூந்தலையுடையாளே! புணர்ச்சிகொடுக்க வேண்டும். அதனை விலக்குவாயாகில் விரைவாக உன்னுயிர்போகச் சபிப்பேனென்றான் அதனைக் கேட்ட திருமகள்போன்ற அகலிகை எ - று. (௧௨)

கைப்பிடித்துக் கனலவலம் வந்த காதன்மிகுங் கணவர்மனங் களிக்குமாறக்
மெய்ப்படியோ வப்படியே யிசைந்திடுத லேழையர்க்கா மியல்பையெண்ணி
யப்படியே யாகவென விசைந்தமளி தனையடுத்தா ளமரர் கோமான் [னா.
மைப்படிநீள் விழிக்கமடை யாலுய்ந்தேனென் றுடனுவந்து மருங்கு சார்ந்தா

(இ - ள்) கையைப்பற்றி அக்கினிவலஞ்செய்த ஆசைமிக்க காதலருடைய மனமானது களிப்படையும் வகை மெய்ப்படியோ அப்படியே யிணங்கியிருத்தல் மாதர்களுக்கு இயல்பாதலைக்கருதி, அவ்வாறே யாகுகவென்று இணங்கி, சயனத்தைச் சமீபித்தனள். தேவராசனாகிய இந்திரன் மைபடிந்துள்ள உன் கடைக்கண்ணாலே உயிர்பிழைத்தேனென்று சந்தோஷித்து உடனே அவளக்கலிற் சேர்ந்தனன் எ - று.

வேறு

செம்பொன் மணிக்கட் டிலினிருந்து சிறுபுன் முறுவல் முகத்தரும்பப்
பம்பு மணிமே கலைகதிப்பப் பவளக் கனிவா யிதழ்துடிப்ப
வம்பு கிழியத் திதலைமுலை வளர்ந்து விம்ம விடைநுடங்கக்
கொம்பின் மருங்கு நின்றாளைக் குடங்கை பற்றி யிருத்தினனே.

(இ - ள்.) செம்பொன்னாலாகிய கட்டிலில் (இந்திரன்) இனிதாகவிருந்து, சிறிய புன்னகையானது முகத்திலரும்ப, பூரித்த இரத்தினங்களாலாகிய மேகலாபரணமானது ஒலிக்கவும், செம்பவளம்போன்ற வாயிதழ்கள் துடிக்கவும், கச்சுக்கிழிபடவும், தேமல்படர்ந்த முலைகள் பூரித்து இறுமாப்படையவும், இடைதுவளவும், பூங்கொம்புபோலப் பக்கலினின்ற அகலிகையை உள்ளங்கையைப்பற்றி (சயனத்தில்) இருக்கச்செய்தனன். எ - று.

மேகலை - இஃதோரணி, முன்விளக்கப்பட்டது. வம்பு - முலைக்கச்சு. இஃது இக்காலத்து இரவிக்கையென வழங்கும். திதலை - தேமல். பவளக்கனிவாயிதழென்றதை பவளவாயென்றுங் கனியிதழென்றுங்கூட்டிப் பொருள்கொளினுமையும்; கனிவாய பவளவிதழெனினும், பவளக்கனிபோன்ற வாயினிதழெனினுமொக்கும். (௧௪)

அங்கைத் தலத்தான் முலைவருடி யாடை நெகிழ்த்துப் புறம்போக்கிப்
பொங்கு நிதம்பத் தடம்வருடிப் புகலுங் கரலீ லையும்புரிந்து
தொங்க லொடுமே வார்குழல்சோரச் சுடர்வா ணுதலு நனிநீவித்
திங்கண் முகத்தின் முத்தாடித் திகழ்தா டனமும் பலசெய்தான்.

(இ - ள்) அழகிய கைத்தலத்தினாலே முலையைப்பிடித்து, அவள் கலையை யவிழ்த்துப் புறத்தேவீழ்த்தி, பொங்கிய கடிதடத்தைவருடி, (காமநூலிற்) கூறிய கரிகர லீலையுஞ்செய்து, மலர்மாலையுடன் நெடிய அளகபாரஞ் சோரும்படி, ஒளிவிளங்கும் ஒள்ளிய நெற்றியையும் நன்றாகத்தடவி, (பூரண) சந்திரன்போன்ற முகத்தில் முத்தமிட்டு விளங்குகின்ற பலதாடனங்களையுஞ் செய்தனன். எ - று.

நிதம்பம் - பெண்குறி. கரலீலை - கையாற்செய்வதோர் லீலை. இது கரிகர மெனப்படும்; யானைத்துதிக்கைபோலும் விரலை மடக்கிச்செய்தலின். தாடனம்பல என்றதால், சங்கோசம் - பக்கத்தம் - பிரசுரிதகம் - மூஷ்டி - கீலம் - கத்திரிகை - சந்தங்கிசம் - வித்தையென்னு மெட்டையுங்கொள்க. (௧௫)

கோலத் துடையாற் றுடைநெருக்கிக் கூன்கை பொருந்த முறச்சாய்த்துச்
சாலக் கனிவா யிதழ்பருகித் தந்தக் குறியு மாங்குறுத்தி
நீலத் தடங்கண் முதலமுத நிலவுமிடங்கள் பலசுவைத்துச்
சீலக் குறிமூ டிகமாதி பலவுந் திகழச் செறித்திட்டான்.

(இ - ள்) அழகிய துடையினாலே துடையை நெருக்கி, வளைந்த கையைப் பிடரியிற் பொருந்தச்சாய்த்து, கொவ்வைக்கனிபோன்ற வாயிதழை மிகுதியாகச் சுவைத்து, அதின்மேல் தந்தக்குறியையும் அமர்த்தி, நீலநிறம்பொருந்திய விசாலமான கண்முதலிய அமுதம் நிறைந்த தானங்கள் பலவற்றையுஞ் சுவைத்து, நலமூடிக முதலிய பலகுறிகளையும் நிறைத்துவிட்டனன். எ - று.

தந்தக்குறி - பல்லாற்செய்வதோர்குறி. மூஷிகமாதி யென்றதால் மூஷிகம் - அதுசசூகம் - பிரவாளமணி - பிந்து - மணிபிந்துமாலை - கோலசாயித்தமென்னு மா

உ.வே. சா... ...ந் நிலையம்

றுங்கொள்க. அவை முறையே உதட்டிற் சிவப்புறப்பதித்தல் - கபோலத்தும் அத ரத்தும் வடுவின்றிப்பதித்தல் - கபோலத்திற் பல்லு மிதழும் படாது பதித்தல் - அத ரத்திற் பல்லைத்தகப் பதித்தல் - கைம்மூலம் நெற்றி மார்பு துடைகளி லழுந்தப்பதித் தல் - தனங்களி லொழுங்காகப்பதித்தல் என்பர் காமநூலுடையார். அழுத்தீலவு மிட ங்கள் - பெருவிரல் புறந்தாள் பரடு முழந்தாள் குய்யம் நாபி முதலியனவாம். அவ்வவ் விடங்கட்குரிய அகத்தொழில் புறத்தொழில் முதலியவற்றை இன்பநூலுட் கண்டு தெளிக. (௧௬)

கொங்கை ஞெமுங்க விருகரத்தாற் குவவு மணித்தோ ளுறவிறுக்கிச்
சங்க நெரியச் சிலம்பொலிப்பத் தடங்க ணிவப்ப விதழ்விளர்ப்பத்
திங்க ளுதலின் வியர்வரும்பத் திகழ்புட் குரல்கண் மிடற்றெழுவிப்ப
மங்கை யவளுங் கற்பகஞ்சூழ் வல்லிக் கொடிபோன் முயங்கினாள்.

(இ - ள்) முலைகளழுந்தும்படி இருகரங்களாற் குவிவாகிய அழகிய தோள் களை பொருந்தவிறுக்கிக்கொண்டு, வளையல்கள் நெரியவும், பாதசிலம்புகளொலிக்க வும், பரந்தவிழிகள் சிவக்கவும், அதரம் வெளுக்கவும், சந்திரனைப்போன்ற நெற்றியில (குறு)வியர் வரும்பவும், விளங்குகின்ற (எண்வகைப்) புட்குரல்கள் கண்டத்திலொலி செய்யவும், அவ்வகலிகையுங் கற்பகத்தருவைச்சூழ்ந்த காமவல்லிக் கொடிபோலக் கலந்தனள் எ - று.

தடங்கண் சிவப்பவிதழ் விளர்ப்பவென்றது, ஐயங்கொண்டான் பாணி "வா யிற் சிவப்பை விழிவாங்க மலர்க்கண் வெளுப்பை வாய்வாங்கத் - தோயுங் குடுமி விடியளவுந் தொங்குங் கபாடந் திறமினோ" என்றபடி, மங்கையாக்குக் காமவின்பம் விளையுங்கால் கண்சிவத்தலும் வாயவெளுத்தலுங்குறியாமெனக.

புட்குரல் எண்வகை—அவை மயில் - புறா - அன்னம் - காடை - வண்டு - குயில் - கோழி - செம்போத்து எனபன இவ்வொலி புணர்ச்சியில் இன்பம் விளைவுழி அம்மங்கையின் கண்டத்து நிகழுமென்பர்.

கற்பகஞ்சூழ் வல்லிக்கொடியென்றது, கற்பகவிருக்ஷத்திற் படர்வது ஓர்கொடி காமவல்லியென்றிருத்தலின், அகலிகை கொடியாகவும் இந்திரன் கற்பகமாகவும் உவ மித்தனர் இதனை, "கற்பக மருங்கிற் பூத்த காமருவல்லி" யென்னும் பரஞ்சோதி முனிவர் வாக்கானுணர்க. (௧௭)

கந்து நிலையே பன்னகமே காத லரும்புங் குக்குடமே
பிந்து மொருமே யிவையாதி பிறங்கு கரண முறவியற்றிச்
சிந்தை கனாய வுடலகனாயச் செறியு முயிர்கள் கலந்தொன்றாய
முந்தை யறியாப் பெருமபோக முழுகிக் கருத்து முற்றினான்.

(இ - ள்) (ஐவகைக் கரணங்களுடன்) கந்துகநிலையும், சர்ப்பமும், ஆசை மிகுங் கோழியும், பிறபடுகின்ற பூனையும் இவைமுதலியவற்றின் விளங்குகின்ற கர ணங்களும் பொருந்தச்செய்து, மனமுருகவும் உடலுருகவும் நெருங்கிய இரண்டுயிர் களு மொன்றாய்க்கலந்து முன்னே கண்டறியாத பெருஞ்சுகத்திலே யமிழ்ந்து மனக் கருத்தை முடித்தனன் (இந்திரன்) எ - று.

சரணங்கள் ஐவகையின - அவை உத்தானிதம் திரியக்கு ஸ்திதம் ஆசிதகம் ஆனமிதம் எனப்படும் அவற்றுள், உத்தானிதம் - மலலாத்தல், திரியக்கு - குறுக்கு அல்லது ஒருக்கணித்தல், ஸ்திதம் - உட்கார்த்தல், ஆசிதகம்-நிற்றல், ஆனமிதம்-குனித்

லென்பா. அன்றியும், குதிரை பாம்பு கோழி பூனை முதலியவற்றின் பலபேதப்பட்ட கரணங்களைப் பசுகரணமென்பர்.

பின்னும் வெருகென்றது புணர்ச்சிகாலத்திற் பின்னேநிற்கும் ஆண் பூனையென்றுவது, பெண்பூனையின் குறியிலோர் மறுவிருந்து அதனைப் புணர்ச்சிகாலத்து வருந்தச்செய்தலின் புணர்ச்சிக்கு அத்துயராற்றாது தாமதிக்கும் பூனையென்றுவது கொள்க. மேற்போந்த ஐந்து செய்யுட்களின் கருத்தை விளக்க அசங்கிதமாதலின் குறிப்பானுணர்த்தினம். இவற்றின் விரிவெல்லாம் காமநூற்கடலுட் காண்க (௧௮)

கடலிற் பிறவாச சுவையமிழ்தே கரும்பிற் பிறவாக கொழும்பாகே
மடன்மென் மலரிற் பிறவாத வாசங் கமழுஞ் செழுந்தேனே
யுடல மிரண்டே யலதெனக்கு முனக்கு முயிரொன் றேயன்றே [தான்.
யடாமெய்த் தவத்தா லுனைப்பெற்றேற் காவ தினியென் னெனப்புகழ்ந

(இ - ள்) பாற்கடலிற் பிறவாத சுவையையுடைய அமிர்தமே! கருப்பிர சத்திற் பிறவாத செழியகற்கண்டே! இதழ்களையுடைய மெல்லியமலரிற் பிறவாத மணம்வீசுஞ் செழியதேனே! எனக்கும் உனக்கும் உடலிரண்டேயல்லாமல் உயிரொன்றேயல்லவா? நெருங்கிய உண்மைத்தவத்தினாலே உன்னையடைந்த வெனக்கு இனியாகவேண்டுவது யாதிருக்கின்றது? (ஒன்றுமின்று) என்று புகழ்ந்தனன் (இந்திரன்.) எ - று (௧௯)

நன்னர் முறுவல் வறிதரும்பப் நயனஞ் சிறிதே முகிழ்ப்ப
மன்னு மமளி மிசையின்ப வசமாய்க் கிடந்த மடமாது
மின்னி னுடங்கி யிடைதளர மெல்ல வெழுந்து துகிலுடுத்திட
டன்ன மலர்நீத் தெனக்கட்டி லகன்றங் கிதனைத் துணிந்துரைத்தாள்.

(இ - ள்) நல்ல புன்னகையானது மிகக்கரும்பவும், விழிகள் சிறிது கூம்பவும், பொருந்திய பஞ்சணையின்மேலே இன்பமயமாகிக்கிடந்த இளம்பருவமுடைய அகலிகை, மின்னல்போலும் இடையானது ஒசிந்துதளர மிருதுவாகவெழுந்து சேலையையணிந்துகொண்டு அன்னமானது தாமரைத்தவிசினின்று நீங்கியதுபோலக்கட்டிலி னின்று மிறங்கி இதனைத் தீரத்தோடு சொல்லினள் எ - று

புன்னகையரும்பலும், கண்கள் சிறுத்தலும், தன்னைமறத்தலும் புணர்ச்சி நிகழ்வழியுள குறிகளாமாதலின் "நன்னர்முறுவல் வறிதரும்ப நயனஞ்சிறிதே முகிழ்ப்ப, மன்னுமமளி மிசையின்ப வசமாய்க்கிடந்தமடமாது" என்றார் (௨௰)

வடிவே முனிவன் போன்றதிலன் வடிவிற் கமழு மியன்மணமுங்
கடியா வின்பக் கலைத்தொழிலுங் கருதின் வேறே யிவன்கள்வ
முடிவா சவனே யெனத்துணிந்து முனிபோ லடுத்தோய் நீயாரே
கொடிவாய் திறவா விடிற்சபிப்பே னென்றாள் புருவ நுதமேற.

(இ - ள்) உருவமோ கவுதம முனிவனைப்போன்றுள்ளது. இவன்தேகத் தில் வீசும் இயற்கைமணமும், நீக்கப்படாத காமநூற்றொழில்களும் எண்ணுகையில் இவன் வேறேயாவன். (ஆதலின்) வஞ்சகமுடைய முடியணிந்த இந்திரனேயென்று தீர்மானித்து, (எனக்கணவராகிய) கவுதமமுனிவரைப்போல வந்தவனே! நீ யாவனோ? ஒருவிநாடியில் வாய்திறந்து (உண்மை) உரையாவிட்டாற் சபிப்பேனென்று, புருவங் கள் நெற்றியிலேறும்படி (கொண்டு)கூறினள் எ - று.

இன்பக்கலைத் தொழிலென்றது புறத்தொழில் பற்குறி நகக்குறி சும்பளம் தாடனமுதலியனவற்றை. (௨௧)

மாது வினவிக் கேட்டலினுன் மற்றும் பெறலா மின்பமெனத்
தீது விளைவ தறியாதே திகழ்தன் னுருவ மெதிர்தோற்றிப்
போது செருந்து நறுங்கூந்தற் புணர்பூண் முலையா யானற்றக்க
மீது பொலம்பூந் தவிசிருக்கும் வேந்த னென்வின் னதும்புகல்வான்.

(இ - ள) அகலிகையானவள் (இவ்வாறு) வினவிக்கேட்டபடியால், இன்னும் (இவளிடத்திற்) காமசுகத்தையடையலாமென்று கருதி, (தனக்கு)த் துன்பம் வருதலை யுணராமல் விளங்குந் தன் வடிவத்தை யெதிரேகாட்டி, மலர்களையணிந்த நல்ல கூந்தலையும், ஆபரணமணிந்த முலையையுமுடைய அகலிகையே! நான் தேவலோகத்திலே அழகிய (கற்பக) மலர்ப்பீடத்திலிருக்கும் இந்திரனென்று (இன்னும்) இவற்றையுஞ் சொல்கின்றான் எ - று (௨௨)

அன்னப் பெடையே நின்னெழில்கேட் டயிரா ணியையும் பொன்னுலகுந்
துன்னுங் கலைமா தினைச்செல்வச் சுடர்ப்பூண் மாதை யிருமலரு
மன்னும் வெறுத்து நினைத்தாங்க மதியா நின்ற மறுவியானு
நன்னர் மனத்தா மரையிருத்தி நயந்தாட் செய்ய நினையடுத்தேன்.

(இ - ள) அன்னப்பேடுபோல்பவளே! (நானும் பிரம விஷ்ணுக்களும்) உன்னழகைக் கேள்விப்பட்டு இந்திராணியையும், நல்ல பொன்னுலகத்தையும், அழகு மிக்க கலைமகளையும் ஒளிதங்கிய ஆபரணமணிந்த திருமகளையும், (அவர்கள் பொருந்திய) இருமலர்களையும் மிகவும்வெறுத்து, உன்னைப் பெறக் கருதியிருந்தோம். யானும் நல்ல இதயதாமரையி லிருக்கச்செய்து விரும்பி யாட்செய்யும்படி உன்னை யடுத்தேன். எ - று. (௨௩)

இன்று பொருத மதவீர னின்னும் பகழி விடுந்தோறும்
பொன்றுஞ் சியத்தண் களபமுலைப் பூவாய் நினது விழிக்கருணை
மன்ற வழங்கி யெனைத்தாங்கு மனமு முயிரு மொன்றான
பின்னை வேறு நினைவெலாம் பிழையே யன்றோ வெனவிரந்தான்.

(இ - ள) இப்பொழுது போர்செய்த வீரனாகிய மன்மதன் இன்னுந் தன (மலர்ப்)பாணங்களைச் செலுத்துந்தோறும், பொன்னாலாகிய ஆபரணமணிந்த களபச்சாந்து பூசிய அகலிகையே! உன்னுடைய கிருபாநோக்கத்தை மிகுதியாகக் கொடுத்து என்னைக்காக்கு மனமும் உயிரும் ஒன்றானபிறகு வேறுவகையாகக் கருதுவனவெல்லாங் குற்றமேயல்லவோவென்று யாசித்தான் எ - று. (௨௪)

பதியி னடுத்த கொடும்பாவி பகரக் கேட்ட மாதழன்று
மதியிற் களங்க மெனவென்று மாறாக் களங்க மெனக்குலத்துப்
பொதிவித் தெனது கற்பினையும் பொதிரத்தாய முனிவன் றிருவுள்ளங்
கொதிவித் தெனையுங் கெடுத்தாய்நீ கோவே யென்னு மமையத்தில்.

(இ - ள) தன் கணவனைப்போலவந்த கொடும்பாவியாகிய இந்திரன் (இவ்வாறு) சொல்லக்கேட்ட அகலிகை கோபித்து, சந்திரனிடத்திலுள்ள களங்கத்தைப் போல எக்காலத்தும் மகலாக் களங்கத்தை என்குலத்திற்குச் சேரச்செய்து, என்சிறப்பு

நிலையையுங் கெடுத்தாய்! முனிவருடைய திருவுள்ளத்தைக் கோபமூட்டி என்னையுங் கெடுத்தாய். நீ தேவராசனோ? என்றுகூறுஞ் சமயத்திலே எ - று.

நீகோவே என்றதில் ஏகாரம் வினாப்பொருள். இவ்விழுக்கிளையுடையோன் அரசுக்குத்தக்கவனல்லனென்னுங் குறிப்பாலுண்டாய வினா. (உ௫)

வேறு.

புலரியின் மனையகல் கவுதமனும் பொழிமது மலர்நறும் புனலாடிக்
குலவிய செபமுத லியவாற்றிக் கோதறு விடியலின் மீண்டெய்தி
நிலவிய வாய்தலி னிடைநின்று நேரிழை யவள்புனல் கொணர்கென்றா
னிலவித ழகலிகை புனலேந்தி யீந்தனள் பண்டுறு மியல்பின்றி.

(இ - ள்) வைகறைப்பொழுதில் ஆச்சிரமத்தினின்றகன்ற கவுதமமுனிவரும், தேன்சொரியும் மலர்கள்பொருந்திய நல்லதீர்த்தத்தில் மூழ்கி, மிக்கஜபமுதலியவற்றைச்செய்து, குற்றமற்ற விடியற்காலத்தில் மீண்டுமவந்து, விளங்குகின்ற கடைவாயிலில் நின்று, பெண்ணே! (கால்கழுவ) நீர்கொண்டுவருக வென்றனர். இலவங்கனிபோன்ற அதரத்தையுடைய அகலிகை, பழமையாகவுள்ள இயற்கையின்றி நீரைக்கொண்டுவந்து கொடுத்தனள் எ - று.

புலரியென்றது விடியற்காலத்திற்கோர் பரியாயநாமம். பண்டுறுமியல்பாவன நீராடி ஆச்சிரமத்தைச் சுத்திசெய்து முனிவர் வருகையை யெதிர்நோக்கிப் பீடமிடுதல் முதலியன. (உ௬)

கண்டது முனிவர னடமானே கலைநிறை முழுமதி முகமவேறு
கொண்டதெ னதனை யிடவில்லை கொம்மென வறலகொடு வரவில்லை
மண்டிசை வசனமுந் தரவில்லை மறுவினி னுடலமுஞ் சுசியில்லை
பண்டைய னிலையுள துரையென்றான் பனிமொழி மடவர லிதுசெய்தாள்

(இ - ள்) முனிவர் தலைவராகிய கவுதமமுனிவர் அதனைப்பார்த்தும், இளமான் சாயலையுடையாளே! பதினாறு கலைகளுடன் நிறைந்தபூரண சந்திரனைபோன்ற முகம் வேறுபட்டது யாதுகாரணம்? பீடமபோடவில்லை விரைந்து (கால்கழுவுதற்கு) சலங்கொண்டு வரவில்லை. மிக்க இசையையுடைய வாய்மொழியுங் கொடுக்கவில்லை. அன்றியும் உன்தேகமுஞ் சுசியாகவில்லை நீமுன் (இருந்தவகை) இருந்தவளல்லை. உள்ளதைச் சொல்லுகவென்றனர் குளிர்ந்த சொல்லையுடைய அகலிகை இதனைச் செய்தனள். எ - று.

கால்கழுவு நீரைப் பாதப்பிரக்ஷாளன ஜலமென்பர். (உ௭)

உள்ளமொ டுடலமு நடுநடுங்க வுயிர்த்துணை நாயகன் கழல்தாழ்ந்து
வெள்ளுற நாணினள் முகங்கோட்டி மென்மொழி குழறிட நிலங்கிளையா
வள்ளனின் வடிவுகொண் டிமையவர்கோன் வந்தெனை நணிநல மருவுண்டா
னென்னினும் வடியன்முனை னிகலமேலெனவுறு செயன்முழுதுரைசெய்தாள்.

(இ - ள்) மனமுந் தேகமும் நடுநடுங்கவும், உயிர்த்துணைவராகிய கவுதமமுனிவர் பாதங்களைப்பணிந்து, வெள்குறு நாணமுடையவளாய் முகத்தைவளைத்துக்கொண்டு மெல்லியசொற்கள் குளறும்படி பூமியைக்கிளைத்துக்கொண்டு, வள்ளலே! தேவராசனாகிய இந்திரன் (தேவரீருடைய) உருவத்துடன் வந்து என் அழகிய சுகத்

தைபபொருநதிஞன் (இதனை) அடியேன என்னளவும் அறியேனென்று பொருந்திய செய்கைகளையெல்லாம (மறையாது) கூறினா எ - று

வெளளுறு நாணம—இழிவாலடைநத நாணம் நிலங்கிளைத்தல் - மாதா நாணுற்றவழி தமது காற்பெருவிரலாற பூமியைத தோணடுதல கிளையா - செய்யா வெனனும வாயபாட்டிறநதகாலப் பெயரெசசம (உஅ)

உருகிய மனமொடு மனைநலலா ளுரைசெயு முனமுனி கதமூள
விருபுரு வமுநனி நுதமேலற விணாபடு மெரியென விழிசெப்பக
கருவியு முடலமு மெனவெனறுங கலவிய நமதுள மறியாயா
லெருவுத லறவொரு வனிலினப மேவினை சிலையுரு வாகெனறான.

(இ - ள) மனைவியாகிய அகலிகை கரைந்தமனத்துடன (இவ்வாறு) சொலவதறகு முனனரே, கவுதமமுனிவர் கோபமதிகரிகக, இருபுருவஙகளும நெறறியின மேலேறவும, கொழுநதுவிடும் அக்கினிபோலக கண்கள செவககவும், கரணஙகளுந தேகமுமபோலக கலந்த எமமுளளத்தை நீ யெப்பொழுதும் அறிந்திலலையா ? அசசபபடுதலினறி யொருவனிடததில இனபமநுபவிததனை. (ஆதலின்) கலலுருவாகுக வெனறு சபிததனா. எ - று

கதம - கோபம. புருவம நெறறியிலேறுதலும, கணகள சிவததலுங கோபக் குறி. கருவி - அநதககரண புறககரணஙகள (உக)

வணமவளா தழலென வசைசாபம வருதலு மகலிகை விழிமலகு [றே
புனலொடு கணவனை யெதிரேநோககிப புணாபிழை யொருவுதல செயவனை
பினமொரு வருமுறை செயுமுனனம பெருமநின செவியுற வறிவித[ன்.
னுனதருள் கொடுபிழை யொடுசாபமொழிவகையுரையெனமுனிசொலவா

(இ - ள) காடடில வளாகினற அககினியைபபோல, முனிவரிட்ட சாபமானது வருதலும, அகலிகையானவள கணகளில்மிகக நீருடன தன கணவராகிய அமமுனிவரை நேரே பாாதது, எமபெருமானே ! செயத குற்றத்தை மன்னிததற் பொருட்டனறோ வேறொருவரும (இதைச) சொலவதன் முனனரே தேவரீா செவியிற்பொருநத வுணர்த்தேன ? தேவரீா திருவருளால எனகுறறமுஞ் சாபமுமொழியும வகையுஞ் சொலலியருளவேணடுமெனறிரபப, கவுதமமுனிவா சொலகினறா எ-று.

வே று

இக்கு வாகுவின குலததிடை யிராமனென றணஙகே
யகக ராசலங காததவ னவதரித திடுமத
தகக காவலன் றாளபடும பொழுதுவெஞ சாபத
துகக நீஙகிமுன் போலெனைத் தோயவையென் றொழிததான

(இ - ள) பெணணே ! இக்ஷ்வாகு வமிசததில இராமனெனனும பெயருறறு, அவவிஷ்ணுமூாததி யவதரிபபான அநதத தகுதியுடைய அரசன பாதம படுகையில, வெவவிய சாபததுனபமொழிநது முனபோல வெனனைககலபபை யெனறு கூறிவிடுததனா கவுதமமுனிவா எ - று

கராசலம=கரம+அசலம - கையையுடைய மலை , யானை.

கராசலங்காததது—பூாவங திரிகூடபாவதசசாரலில ஒா யானைவேநது அநேகம பிடியானைகளுடன ஒா மலாபபொயகையில் ஜலவிளையாடல செயகையில ஒா

முதலையதன்காலைப்பற்றியீர்க்க, யானை தன்னாற்கூடியவளவு முயற்சிசெய்தும் தப்பித்துக்கொள்ள முடியாமல், இறுதியில் விஷ்ணுவை * ஆதிமூலமே எனத்தியானிக்க, அவர் கருடவாகன மிவர்ந்துசென்று சக்கரத்தால் முதலையைச் சங்கரித்து யானையை உயிர்காத்தனரென்பது சரிதம். [இவ்யானையு முதலையுஞ் சாபவுருவங்கள்] இதனை,

பாகவதபுராணம் - கஜேந்திர அத்தியாயம்.

"வேதநூ லொருங்கு ணர்ந்து விரியுமெய் யறிஞ ருள்ளப்
போதுசேர் சோதி பொன்னிற் பொலியொளிபோல வெங்குந்
தீதறு தருளின் யார்க்குந் தெரிவுறா துறைந்து நின்ற
ஆதிகா ரணன்வந் தின்னே யளிக்கவென் றழைத்தனனே.

கூப்பிடு குரல்கேட் டோடிக் கொழுமணிச் சுடிகை நெற்றிப்
பாப்பணை யகற்றி வெய்ய படாசிறைக் கலுழ னூர்ந்து
தீப்பொழிந் திலங்கு கூர்வாய்த் திகிரிகைத் தாங்கி யாவுங்
காப்பவன் பிறைவெண் கோட்டுக் களிற்றுமுன் னெய்துற் றானே"-எனவும்,

"எறிசுடர் விரிக்குநேமி யெறிந்தன னெறிதலோடும்
பிறைபுரை யெயிற்றுப் பேழ்வாய் பிளந்துவெவ் விடங்கா துஞ்சி
அறைதரு சாபந் தன்னா லடைந்தவவ் வுருவு நீத்து
விறலுடை யூகூ வென்னும் விஞ்சைய னாயிற் றன்றே"—எனவும்,

"விழுமிய விசைநூ றோர்ந்த விஞ்சைய னாய வன்னோன்
பழமறை முதலி பாதம் பழிச்சினன் பதியிற் போயான்
அழிவறு தவத்தின் மிக்க வகத்தியன் சாபந் தீர்ந்து
மழைமதக் களிறு மாயன் வரம்பிலவீ டுற்ற தம்மா"—எனவும் வருவனவற்றானுணர்க (௧௧)

அங்கு வன்சிலை யாயின ளகலிகை யந்த
நங்கை தன்செயல் கேட்டன னிருந்துநா னிலத்தி
லங்கி முன்கரம் பற்றுமா டவர்தமைப் பிழைக்கு
மங்கை யர்க்குநன் றுரைத்துமென் னுகுமவ் வண பயனே

---

* சிலர் ஆதிமூலமே யென்ற யானையை அநுக்கிரகித்தவன் சிவனோ? விஷ்ணுவா? விஷ்ணுவேயாதலின் அவனே ஆதிமூலப் பொருளென்று ஆசங்கைசெய்து வைணவத்திற் கிதிலேற்றங் கற்பிக்கின்றனர் உள்ளபடியே இக்கஜேந்திரன் விஷ்ணு பக்தன் இவன் பூர்வ ஜன்மத்தில் இந்திரத்துய்மனென்னும் பாண்டியன். இவன் பொதியமலைச் சாரலில் ஓர்கால் விஷ்ணுவைத் தியானஞ்செய்து கொண்டிருக்கையில் அகஸ்தியபகவான் ஆங்கெழுந்தருள, இந்திரத்துய்மன் அம்முனிபுங்கவரைக் கண்டெழுந்து மரியாதை செய்யாமையின், அகத்தியமுனிவர் சினந்துசபிக்க யானைவடிவேற்று அவ்யானையா யிருக்கையிலே ஆதிமூலமென்று விளித்தானாகலின் அவன் வழிபடு கடவுளான மாயோனாற் காக்கப்பட்டனனென்பது சமாதானமென்றுணர்க. இதனையும் ௸ புராணம் - ௸ அத்தியாயம்.

"இமிழிருள் சுவற்றும் வேலா னெழுந்தில னிருந்தா னென்னாத்
தமிழ்விளை தண்ணஞ் சாரற் றடவரை முனிசபிப்பக்
கமழ்கடாக் கலுழி தூங்குங் கருங்கவுள் வேழ மாகி
உமிழ்கனற் றிகிரி மாய னுலைவிலவீ டுற்றா னன்றே."—என்பதனானுணர்க.

(இ - ள்) அப்பொழுது அகலிகை வலிய சிலைவடிவாயினள். அந்த அக லிகையின் விருத்தாந்தத்தைக் கேட்டிருந்தும், பூமியிலுள்ளோர் அக்கினி சாட்சியாகக் கையைப்பிடித்த கணவர்களைப் பிழைசெய்யும் மாதர்களுக்கு நன்மைகளை யெடுத்துக் கூறியும் வணங்கிய அதன்பயன் யாதாகும்? எ - று.

நால் நிலம—குறிஞ்சி - முல்லை - மருதம் - நெய்தலென்பன (கூஉ)

அடம்பு வேய்ந்தவாக் கனப்ஞ மருந்தவன் மனையை
யிடும்பை மூழ்குமா சபித்தமை யிலவிருந் தறிந்த
கடம்பெய வாரணன் செய்வினை கருத்தினை யாப்பக்
குடமைப் யாப்புறு முலண்டென்ப புகலிடங் காணுன.

(இ - ள்) அடப்பமலரை யணிந்த சிவபெருமானுக்கு அன்பராகிய அருந் தவஞ்செய்த கவுதமமுனிவர் தம் மனைவியாகிய அகலிகையை (இவ்விதமாக)த் துன் பத்தில் மூழ்கும்படி சபித்ததை வீட்டினுள்ளேயிருந்து தெரிந்த மதநீரைச் சொரியும் (ஐராவதமென்னும் வெள்ளை) யானையையுடைய இந்திரன் தான்செய்தகுற்றம் மன தைப்பந்திக்க, கூட்டைக்கட்டும் உலண்டுபோலப் புகலிடம் (எங்கும்) காணுதவ னய் எ - று

உலண்டு - கோற்புழு அல்லது சிலந்தியெனக (கூகூ)

கடலின் மூழ்கினுங் குன்றிடை யொளிப்பினுங் காம
முடலவி ராயுயிர் சுடுவதே போலுமவன் சினமு
மடலை யாக்குமே யெனவழி கினறவ னுங்கு
முடலை யாக்கையின் பூனையாய் வெளிக்கொள முயன்றுன.

(இ - ள்) சமுத்திரத்திலே முழுகினலும், மலையிலொளித்துக்கொண்டாலும் காமமானது உடலிற்கலந்து உயிரைச் சுடுவதையேபோல, (கவுதமமுனிவருடைய) வலிய சாபமானது சாம்பர் செய்யுமேயென்று நெஞ்சழிகின்றவனுகி, அப்பொழுது முருட்டுத் தேகத்தையுடைய பூனையாகி வெளியேசெல்ல யத்தனித்தான் எ - று

பூஞை - பூனை.

கடலின் மூழ்கினுங் குன்றிடை யொளியினுங் காமஞ்சுடுமென்றதை,

நாலடியார் - பிறர்மனை நயவாமை

'ஊருள் ளெழுந்த வுருகெழு செந்தீக்கு
நீருட் குளித்து முயலாகு—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமே குன் றேறி
யொளிப்பினுங் காமஞ் சுடும்''—என்பதனுனுணர்க. (கூச)

ஆற்றன் மாதவ னலமரும் விலாளத்தைப் பார்த்தித்
தோற்ற மானவ னிந்திர னெனத்துணிந் தியார்நீ
சாற்று போகலை யென்றலுந் தனனுருக் காட்டி
யேற்ற மாகிய வுரமெலா மிழந்துநின் றனனால்.

(இ - ள்.) வலிதங்கிய பெருந்தவமுடைய கவுதமமுனிவர் வருந்துகின்ற பூனை யைப்பார்த்து, இவ்வடிவாக வருபவன் இந்திரனென்று தீர்மானித்து, நீ யாவன்? சொல்! போகாதே! எனக்கூறவும், (இந்திரன்) தன் வடிவத்தைக் காண்பித்து, உயர்வாகிய வலிமைமுற்றும் போக்கி [எளியனாய் அடங்கி] நின்றான் எ - று (கூரு)

நின்ற வாசவன் முகத்தினை நெடுந்தவ னோக்கி
யின்று சாம்பர்செய் திடுகுவ னிந்திர னென்
றொன்று வேட்டுவந் தாய்க்குடன் முழுவது மியோனி
நன்று மேவுக வென்றுபெருஞ் சாபநாட் டினனால்.

(இ - ள்) பெருந்தவசியாகிய கவுதமமுனிவர், (அவ்வாறு) நின்ற இந்திரன் முகத்தைப்பார்த்து, இப்பொழுதே யுன்னைச் சாம்பராக்குவேன் இந்திரனாயிருக்கின்றாய் (தேவலோகம்பாழாகுமேயென்று விடுத்தேன்) பெண்குறியொன்றை விரும்பி வந்த உனக்குத் தேகமுழுவதும் (பெண்குறிகள்) நன்றாகப்பொருந்துகவென்று பெருஞ்சாபமிட்டனர். எ - று (௬௧)

அளிந்த தீங்கனி வளிபொர வவனிவீழ்ந் தாங்குத்
தெளிந்த மாதவன் செப்பிய சாபமே வுதலும்
விளிந்த வாவியன் விளைவினை நினைதொறு நெஞ்ச
நெளிந்து தாங்கருந் துயரொடு நீங்கிய வலாரி

(இ - ள்) பழுத்தமதுரமான பழமானது காற்றுவீசுதலால் நிலமிசை வீழ்ந்தாற்போல, தெளிவமைந்த கவுதமமுனிவர் கூறிய சாபமொழிவந்து பொருந்தவும், உயிரொழிந்தவன்போன்று நிகழ்ந்ததை நினைக்குந்தோறும் மனநடுங்கித் தாங்கமுடியாத துன்பத்துடன் அவ்விடம்விட்டுப் பிரிந்த இந்திரன் எ - று

இதுமுதலிரண்டு செய்யுள்களொரு தொடர்.

இந்திரனை வலாரி யென்றது,

பூர்வம் வலனென்னுமசுரன் பெருந்தவஞ்செய்து ஒருவராலு மிறவாமையும் ஒருவேளை யுடலொழியநேரின், தன்தேகம் நவரத்தினங்களாதலையும் வேண்டி வரம்பெற்றுத் தேவர்களைத் துன்புறுத்தி வருகையில், இந்திரன் அவனுடன் போர்புரிந்து வெல்லும் ஆற்றலில்லாது, இவனை வஞ்சகமாய்ச் செயிக்கவேண்டுமென்று கருதி, வலாசுரனே! உன் வல்லமையை மெச்சினேன் நீ வேண்டியவரத்தைக் கேள். கொடுப்பேனென்ன, வலன் இந்திரா! ஈசனளித்த வரமெனக்கிருக்கின்றது. உன்னிடத்திலொன்றும் வரம்பெறவேண்டிலேன் நீ கொடுக்கும் வரமும் நீ பெற்ற வெற்றிபோலவே யிருக்கும். வேண்டாம் நீ யென்னிடம் பெறத்தக்க வரங்களிருப்பின் கேட்க தடையின்றிக் கொடுப்பேன் கொடேனாயின், யுத்தபூமியிற் றோற்றோடிய பழியை யடைவேனென்ன, இந்திரன் இதுவே நல்லசமயமென்றுட்கொண்டு, நீ சத்தவீரனாய்ச் சொல்லிய சொல்லைத் தவறாதவனாயின், யான் கைலையங்கிரிச்சாரலில் யாகஞ்செய்யப் போகின்றேன் அப்பொழுது நீ யாகப்பசுவாகவருகவென, வலன் தான் புகழுடம்புடன் நவரத்தின உடம்பும் பெறுதல்கருதி, அவ்வாறே பசுவாகி வர, இந்திரன் கொன்றனனென்பது சரிதமாகலின், இதனை,

திருவிளையாடற்புராணம் - மாணிக்கம்விற்றபடலம்.

"ஈறிலா னளித்த நல்ல வரமெனக் கிருக்க நின்பால்
வேறியான் பெறுவ துண்டோ வேண்டுவ நினக்கியா தென்பாற்
கூறுதி விழைவி னின்னே கொடுக்கல னாகி னின்போற்
பாறுவீழ் களத்திற் பட்ட பழிப்புகழ் பெறுவ னென்றான்"—எனவும்,

"மாதண்ட வவுணன் மாற்ற மகபதி கேட்டு வந்து
கோதண்ட மேருக் கோட்டிக் கொடும்புரம் பொடித்தா னெள்ளி

வேதனை மெய்தி யாங்கோர் வெள்ளியான புரிவ னீயப
போதனை டாக கூட்ட வாவாயப போதுவா யென்ன நோக்கான''—எனவும்,

'யாத்தனா தருபவைத் தாமரை யூரனையால் யாத்த கிகைப
போதநெனன் னொருன வாயைப புதைத்துயிரப் பட்டிக ஓடி
மாயத்தனா மாயகத வள்ளல லெனுமக தாம மாரி
தூாத்திட விமானம் யேறித தொலலைித புலகுறு சா நதால ''—எனவும்,

''அத்தகைய யாவிலா சோரி மாணிக்க மாமயன முதலிய
பித்தமைவை மீய மென்பு செகிமம பித்தம பசலைச
செயத்தவெனை னினைகோ மேதகு தகைசூழ்கா நெடுங்க ணில
மெய்த்தனை புருடராக மிமைநவ யணியின மேறறம ''—எனவும் வருவன
வற்றுறுணாக (௧௭)

கற்ற கலவிப் மனையர்கள் கருத்தில் யாருடைய
பெற்ற செலவமும விலாசா சாட்சியம் பிரவு
முற்ற காமத்தி னொருநெருப்பு பொறியி னானினுந்தாய
சுற்ற மேவாமென வழிந்தனை கலைந்தனை யழுகான.

(இ - ள்) யானகற்ற கலவிகளும, அசுரர்களுடைய வலிய சிரங்களை (க்கொய்து) உருட்டியடைந்த பாக்கியமும, தேயமேலாக ராசரிகமும, பிறசெல்வங்களும (அறியாமல) பொருந்திய காமத்தினுமேல, ஒரு நெருப்புப்பொறியால வரழிந்தாற போல நீங்கினவோவென்று இடிந்து (மனங்)கலைந்து புலம்பினன் எ - று.

அழிந்தனனை கலைந்தனன - முறசெறசங்கள
தழறபொறியைப் புலிங்கமெனபா (௧௮)

ஒன்றை யோனிய ருடிக்குமவைம ருடலா ருணைமய
நின்ற னுணுவ ரதுபல வாகிநீக கற்பவை
முற்று மாக்கையை முழுவதுங் காபபத முறையென
றுற்று மாமதி தாமரை நாளத்தி லொளித்தான

(இ - ள்) ஒரே யோனியையுடைய மாதர்கள் (உடலிற் சேலை) உடுத்திருப பினும, வேற்றுப்புருடர்களிடையே நிறபதற்கும வெட்கமடைவார்கள் அவ்வகை யோனி யெண்ணிறந்தனவாகி நீக்கமின்றி, நிரம்பியுள்ள தேகத்தை, முழுவதும் காப்பதே கிரமமென்று (மனதிற்)கொண்டு, (மகமேருவிலுள்ள) மகாமடுவிலே ஓர் தாமரை நாளத்திலொளித்துக் கொண்டிருந்தான் எ - று (௧௯)

அளவில் பாதகத் தாலொரு பெண்ணுரு வாமே
லளவில பெண்ணுரு வாவதற காகுமா தகமே
யளவில காதலிற பிறனமனை யணிநல நுகரா
லளவில் யோனிமெய் யமராகோ னடுத்ததி னைமமா

(இ - ள்) எல்லையில்லாத பாதங்களால ஒருபெண்ணுருவுளதாகும. எண்ணில்லாத யோனிகளையுடைய தேகத்தைத் தேவராசனாகிய இந்திரன் பெறுதலின், ஐயோ! அளவில்லாத ஆசையோடு அன்னியமாதின அழகிய நலத்தை நுகர்தலெல்லையில்லாத பெண்ணுருவங்களாவதற்கு (ஏதுவாகச) செய்த பாதகமேயாம் எ - று.

இதுமுதல மூன்று செய்யுள்கள் கவிக்கூற்று (௨௰)

பொற்ற நலமெலாம் புலோமசை யாதியோர் பெற்றிருப்பக்
கற்றை மென்குழ லொருத்தியாற் காவலன் கரந்தான்
பெற்ற தைச்சிறி தாக்கியே பெறாததி லிச்சை
முற்று விக்குமா ணவவலி யாவரே மொழிவார்

(இ - ள்.) நல்ல அழகைத் தாங்கிய இந்திராணி முதலிய மங்கையர் (எண்ணிறந்தோர் புணர்ச்சியின்பத்தர) இருக்கவும், கற்றையாகிய மெல்லிய கூந்தலையுடைய ஒரு பெண்ணால் இந்திரன் (சாபமேற்று உடல் நாணி) ஒளித்தனன் பெற்ற பொருளைச் சிறிதாகமதித்துப் பெறாத பொருளில் விருப்பமுறுவிக்கும் ஆணவவல்லமையை எவர்தாம் நீக்கவல்லவர்? எ - று.

புலோமசையாதியோர் என்றவிடத்து ஆதியோர் என்றது அரம்பை முதலிய எண்ணிறந்த தேவதாசிகளை.

பெற்றதைச் சிறிதாக்கியே பெறாததி லிச்சை முற்றுவித்த தெல்லையென்றது,

நீதிநெறி விளக்கம்

"பெற்ற சிறுகப் பெறாத பெரிதுள்ளுஞ்
சிற்றுயிர்க் காக்க மரிதம்மா"—என்பதனானுணர்க. (௪௧)

இன்ப மாதரார் போகமென் றியம்புவ ரறியார்
துன்ப மாகுமே லின்பமுஞ் சுரர்பிரா னொருமா
தன்பி னாலழி யாததுய ருழந்தனன் கணேச
னன்ப தாம்புய மலதுமே லின்பெனத் தகுமோ.

(இ - ள்.) சுகமென்பது மாதர் சம்போகமென்று (உண்மை) தெரியாதவர்கள் சொல்லுவார்கள் (அப்படியாயின்) இன்பமுந் துன்பத்தை யுண்டுசெய்யுமோ? (செய்யப்படாதாகலின் அஃதின்பமன்று அதற்குச் சாட்சியாக) தேவர்கட்கிறைவனான இந்திரன் ஒரு பெண் விருப்பத்தால் அழியாத துன்பத்தை யடைந்தான் (ஆனால் உண்மையாக) கணேசப்பெருமானுடைய திருவடித்தாமரையல்லாமல் வேறெவையேனும் இன்பமென்று சொல்லத்தகுமோ? (சொல்லத்தகாது) எ - று. (௪௨)

இந்திரன் சாபம்பெற்ற படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் ௧௫௦௨

கடவுளர் குருவுக்குக்

கவுதமருபதேசித்தபடலம்.

இந்திர னெய்திய செயலிது
வந்தர ரனடி வழிபட
முந்தையி னரசனை முறையிட
கந்தனை கரியனைக் கண்டிலர்.

(இ - ள்.) இந்திரன் (கவுதம சாபத்தாற் பெண்குறிகள்) அடைந்த செயல் இதுவாகும். (அதனையுணராத) தேவர்கள் இந்திரனுடைய பாதங்களைப் பணியும்படி

முனைப்பில் அரசவையை யடைந்தார்கள் கடந்த தறிவையுடைய ஞானத்தை யாசனமாகக்கொண்ட இந்திரனைக் கண்டாரில்லை என்று

அந்தரம் - ஆகாயம் அந்தரர் - ஆகாயவாசிகள் (௧)

தவளநின்மல நகைமுகிழ் சசியொடு
முவள முறைநடாவுறமெனத்
திவளவைகெடத் தமதேவர்கள்
யவளனி னில்லையென் றெஞ்சினார்

(இ - ள்) காவளையமான வெள்ளிய புன்னகை யரும்பும் இந்திராணியுடனே அந்தப்புரத்தில் இருக்கின்றானென்று, நெருங்கிய சபையிற் பொருந்திய தேவர்கள் யெல்லாம், அவ்விந்திராணி அவ்விடத்திலுமில்லையென்று கூறிப் பயந்தார்கள் என்று

உவளகம் - அந்தப்புரம் (௨)

படியில் முழுவதும் பாரிடத்து
நடவைகள் திசைகளும் நாகரும்
கொடியமாலொடு மெழுந்தவும்
கடவுளர் நிறுவந்து தேடினார்

(இ - ள்) உலகமுழுவதும், சமுத்திரமும், விசாலமான மலைவரிசைகளும், பிரமன் விஷ்ணு இவர்களுடைய லோகங்களும் (ஆகிய) இடங்களில், தேவராசனாகிய இந்திரனைத் தேடிக் கண்டாரில்லை என்று

நேடுதல் - முறைசெய்தல் (௩)

இன்னண மமரர் வினைவுழிப்
பொன்னுலகெங்கும் திரிந்து புக்கனம்
பொன்னின்மேனி நமதடி போற்றியே
மன்னவன் மறைபுகுந்தனரே

(இ - ள்) இவ்வண்ணமாகத் தேவர்கள் துன்பமடைந்திருக்கும் காலத்தில் (நாம்) சுவர்க்கலோகத்தை யொருநாளடைந்தோம் தேவர்கள் (தமது குருவாகிய) பிரகஸ்பதி பகவானுடன் நம்முடைய பாதங்களைப் பணிந்து தமதாசன மாறாமல் கேட்டார்கள் என்று

நாரதர் திரிலோகசஞ்சாரியாகலின் இந்திரனைப் பற்றிய வரலாறு இவ்வாறு கூறினாரென்ற கருத்து தாம் சென்றபொழுது விளைவின்னென்றார் (௪)

வேறு.

வினவிய மராக டரினும் வெடிபடு குரலிடி யுரிய
சினமுமிழ் குலிசியின் ஆறுதுயர் செப்பினம் மேலொரு யோரத்தன
ரினிமொழி யசுரர்கள் முதுகுக்கண் டெழினமித சசியுயிர் ரேயபுவா
ரனைவரும் வழிபடி மிந்திரற் கதுக்கு மேவென மாழ்கினர்.

(இ - ள்) (நம்மை யவ்வாறு) கேட்ட தேவர்கள் தெரிந்துகொள்ளும்படி, (அண்டமுகடும்) வெடிபடத்தக்க குரலையுடைய இடியை (கொடியாக) உயர்த்திய, கோபாக்கினியைச் சிந்தும் வச்சிராயுதமேந்திய இந்திரனுக்கு நேர்ந்த துன்பத்தைச் சொன்னோம். (அவர்கள்) யாவரும் உணர்ந்தார்கள் இனியாவர் அசுரர்களின் (என்று)

முனருக்கண்டு, அழுதுமிருந்த இந்திராணியின் உயிரைக்காப்பவர் ? எல்லோரும் பழி பாடுசெய்யும் இந்திரனுக்கு அச்செயல் தகுந்ததோ ? என்று மயங்கினார்கள். எ - று

குலிசி - இந்திரன். குலிசம் - வச்சிரம். (௫)

இந்திர னெய்திய சாபநோ யெவ்வகை யெவரெவர் முயலினுந்
தந்தவர் கருணையி னல்லது தாழ்த்திட லரிதுதம் மனையையுங்
கந்தாறு கல்லென வாக்கினா காற்றுத விசைகல ராயினும்
வந்தனை முனசெய் திரத்துநாம் வமமென வெனையும் மழைத்தனர்

(இ - ள்) இந்திரனடைந்த சாபநோயை எவ்வகையிலாவது எவரெவர் (நீக்க) முயற்சிசெய்தாலும், அதனைக்கொடுத்த கவுதமமுனிவருடைய கிருபையாலல்லாமற் குறைத்தலரிதாகும். தம்மனைவியாகிய அகலிகையையும் வலியகல்லாகச் சபித்தனர். அவர் இதனை யொழித்தற்கு இணங்காராகிலும், நாம் யாவரும் வந்தனைசெய்து வேண்டிக் கொள்வோம் வாருமென்று எம்மையு மழைத்தார்கள் எ - று (௬)

நானுமங் கவரொடு நண்ணினே னவையறு மதிமிகு குரவனுந்
தேனிவர் கற்பக மாலிகைத் தேவர்க ளனைவருங் கவுதமர்
கானிவர் மலரடி முறைமுறை கடிமலர் தூவிவ ணங்கினர்
ஊனொடு மனமு நெகிழ்ந்துக வொலிகெழு துதிபல வுரைசெய்வார்

(இ - ள்) அப்பொழுது, நானும் அவர்களுடன் சென்றேன். குற்றமற்ற அறிவுமிகுந்த பிருகஸ்பதி முனிவனும், வண்டுகள் பொருந்திய கற்பகமலர் மாலையணிந்த தேவர்கள் யாவரும் கவுதமமுனிவருடைய மணந்தங்கிய மலர்போன்ற பாதங்களை முறைமுறையாக வாசம்பொருந்திய மலர்களாலர்ச்சித்துப் பணிந்து (எதிர்) நின்று, உடம்பும் மனமும் நெகிழ்ந்துருகும்படி ஓசைமிக்க பல தோத்திரங்களைப் (பின் வருமாறு) சொல்வார்கள் எ - று (௭)

வேறு

செம்பொன் மால்வரை யிமயமென் சிலம்புடைக் குலமு
மம்பு ராசியி னடைகரை மணலுமொண் ணுடுவும்
பம்பு வானமழைத் தாரையும் பார்த்தள விடினும்
வம்பி லாயநும் பெருமையா ரளவிட வல்லார்

(இ - ள்) பெரிய செம்பொன் மலை (ஆகிய மேருமலை) யும், இமயமலையும், அஷ்டகுலபர்வதங்களும் (ஆகிய) இவற்றின் கனத்தையும், சமுத்திரத்தின் அடைகரையி லுள்ள மணலையும், ஆகாயத்திலுள்ள நக்ஷத்திரங்களையும், நெருங்கிய பெரிய மழைத் தாரைகளையும் (ஒருவர்) பார்த்து அளவிட்டாலும், அசப்பியமில்லாத தேவரீருடைய நற்குணத்தின் பெருமையை அளவிடவல்லவர் யாவருளர் ? (ஒருவருமிலர்) எ - று

எங்கும வறகட மெய்திய பொழுதினங் காலைத்
தங்க வித்திய துசிமுனர் விளைத்தெவர் தமக்கும்
பொங்கி ருஞ்சுவை யடிசிலக் கணித்தரும் பொழிந்த
செங்கை யாய்நின பெருமையார் தெரிக்கவல் லுநரே.

(இ - ள்) எவ்விடத்திலும் க்ஷாமமெய்திய நாட்களில், சிறுகாலைப்பொழுதிற் பொருந்த விதைத்ததை உச்சிக்காலத்திற்குமுன்னே விளைவித்து (ஆங்குற்ற) முனிவர

ளெல்லாருக்கும் அதிகரித்த பெருஞ்சுவையுடைய உணவுகளை நாடோறும் (மேகம் போலச்) சொரிந்த செவ்விய கைகளையுடைய கவுதமமுனிவரே! தேவரீருடைய பெருமையை யாவர்தாஞ் சொல்லவல்லவர்கள்? எ - று. (௯)

வேலை யுண்டனன் குறுமுனி யுலகமும் வேறே
சால விச்சுவா மித்திர னமைத்தன னினைய
கோல விந்திர னேசிய கொலைப் பழுக்க தொழுக்கு
சீல வச்சிரத் தோடுகைத் தம்பனஞ் செய்தார்

(இ - ள்) அகத்தியமுனிவர் சமுத்திரத்தை ஆசமனஞ்செய்தனர்; விசுவாமித்திரமுனிவர் வேறே யுலகத்தையும் மிகுதியாகப்படைத்தனர்; சியவனமுனிவர் அழகிய இந்திரன் தன்மேலேசிய கொலைத்தொழிலை மிக்க வீரமுஞ் சிறந்த வச்சிராயுதத்துடன் கையையுந் தம்பனஞ்செய்தனர் எ - று.

இந்திரனுக்குத் தோற்ற விருத்திராசுரன் கடலில் ஒளிக்க, அவனைக் கொல்ல வேண்டிய இந்திரன் வேண்டுகோளுக்கிரங்கிய அகத்தியமுனிவர் கடலைப்பருகி அவனை வெளியே காட்டினாராகலின் "வேலை யுண்டனன் குறுமுனி" என்றார் இதனை,

ஸ்ரீ த[illegible]புராணம்

'கைதவன் கரந்து வைகுங் கடலைமற் றடக்கு கையிற்
பெய்துழுந் தலைத் தாக்கிப் பருகினன் பிறைசேர் வேணி
ஐயன்ற னருளாற் பெற்றாக் கதிசய மீதன்றோ மூன்று
வையமுந் தொழிலுஞ் செய்ய வல்லவ ரிவரே யன்றோ''—என்பதனுலுணர்க.

"உலகமும் வேறே சால விசுவா மித்திரன் அமைத்தனன்'' என்றது—வசிட்டரிடம் மாறுபட்ட காதிபுத்திரரான விசுவாமித்திரமுனிவர் தம்மைச் சரணடைந்த திரிசங்கு என்னும் மன்னனுக்குத் தமது தவவலியால் நூதன சுவர்க்கம் படைத்தபொழுது, அதைச்சூழ மற்றும் பல உலகங்களையும் படைத்தனரென்பது இது பல நூல்களிலும் பிரசித்தம்.

சையாதி யரசன் மகள் மலர்கொய்து விளையாடி வனத்திற்சென்று உலாவுகையில், ஆங்குப் புற்றினுள் மறைந்து தவமியற்றி நின்ற சியவனமுனிவரை யறியாது துன்புவிளைக்க, அதனை யறிந்த சையாதி அம்முனிவரைப் பிரார்த்தித்துத் தன் மகள் செய்த குற்றத்தை மன்னிக்கச்செய்து, தன் குமாரத்தியை அம்முனிவர்க்கு மணம் புணர்த்தினன். சியவனமுனிவர் அம்மங்கையுடன் வாழ்கையில், அவளைக் காமுற்று வந்த அசுவினி தேவர்களால் இளமைப்பருவமுற்று, தன் மனைவியின் கற்பு விசேடத்தையுமறிந்து, அதற்குப் பிரதியுதவியாக அவ்வசுவினிதேவர்க்கு யாகத்தில் அவிப்பாகமளிக்க, அதனைப்பொறாத இந்திரன் போர்க்கோலங்கொண்டேவிய வச்சிராயுதத்தைத் தம்பிக்கச்செய்தனர் என்பது சரிதமாதலின் "கோல விந்திர னேசிய கொலைப் பழுத்தொழுக்கு - சீல வச்சிரத் தோடிகைத் தம்பனஞ் செய்தார்'' என்றார். இதனை இந்நூலாசிரியரியற்றிய

பூவாளூர்ப்புராணம்

"பாழி நற்றவ வல்ல வன்பகா பாக மன்றநீ றுத்தலு
மூழி யங்கியெ னக்கி ளர்ந்துரு மேறு யர்த்தவன் வேள்வியைப்
பூழி செய்திவ ணவி யுண்டபின் போவ தன்றிவி டேனெனச்
சூழி வெண்களி றுந்தி வச்சிரஞ் சுற்றி யோச்சின னாதரோ

கண்டு போற்றவர் தழுவி யாசிக ளார்ந்த வாசியா லறைகலன்
மண்டு பேரொளி யின்முனைவ ரிருந்திடு மாற்றலாற் குருமேற்றுணன்
பிண்டி மேலவிழும் வசிட்டத்தினை வெய்து நோக்கினன் பயப்படை
அண்டர் நின்றது கற்பி ஞானவிழிக்க கருக காழுக்கா லெருஞ்சென ''— என்வருஞ்
செய்யுட்களாலுணர்க (௧௦)

வாலகில்லியர் வளரியை வேறுற வருத்தார்
லோலு முத்தம வாகையர் விருந்தவ மிகுத்தக
சீல மல்குநந் தெரிசனம் பரிசனம் வசன
ஞால மைப்பிடை பாவங்க ளழிவன வன்றோ

(இ - ள்) பொருந்திய உத்தமரே! வாலகில்லிய முனிவர்கள் இந்திரனை வேறாகச் சிருட்டிசெய்தார்கள் ஆகையால், பெருந்தவங்களை மிகுதியாகவுடைய நல்லொழுக்கமிக்க தேவரீருடைய தெரிசனமும் பரிசனமும் வசனமும் முதலியவற்றால் உலகத்திலே பாவங்கள் அழிவனவல்லவா? எ - று.

வாலகில்லியர்கள் ஒருகாலத்தில் இந்திரனை வேறாகச் செய்தாரென்பது புராண சரித்திரம். தரிசனம் பரிசனம் வசனமென்பவற்றுள் தரிசனம் - பார்த்தல், பரிசனம் - தொடுதல், வசனம் - சொல்லல் ''ஆமை மீன் பறவைபோல'' என்றார் பிறரும் மீன் முட்டையைப் பார்த்தும், பறவை முட்டையை அடைகாத்தும், ஆமை வசனித்தும் காக்குமென்பது இவற்றைப்போல ஞானி கண்ணுற்ற பார்த்தும் கையாற் பரிசித்தும் வாயால் ஆசீர்வதித்தும் தன்னை யடைந்தவனைக் கிருதார்த்தனாக்குவ னென்பது (௧௧)

பார்த்த மக்குப காரமே செய்வது பயின்றீர்
சரண டைந்தவர் தமைமிகத் தாங்குவீ ரென்று
புரவ லன்பொருட் டுமைச்சர ணடைந்தனம் புகவே
பொருவி லென்னவும் பழிமொழி சொல்லி னிந்தார்

(இ - ள்) நல்லவாக்குதவிசெய்வதையே பழகினவரே! அடைக்கலம் புக்கவர்களை மிகவும் ஆதரிப்பவரே! எம்மரசனாகிய இந்திரனுக்காகத் தேவரீரைச் சரணமடைந்தோம் அடைக்கலம் புகுதற்கு வேறொருவருமிலரென்று, (கவுதமமுனிவர்) களிப்புறத்தக்க இனிய சொற்களால் யாசித்தார்கள் எ - று. (௧௨)

இரந்த வானவர் முகத்தினை நோக்கினர் இருடி
பரந்த ஞானநேத் திரங்களாற் பார்த்திடப் படுவீர்
சுரந்த வாட்டமோ டெதிருறப் போந்தனிர் சுரர்காள்
கரந்தி டாதுமக் காவன கரைமினக் கென்றான்

(இ - ள்) கவுதமமுனிவர் (அவ்வாறு) யாசித்த தேவர்கள் முகத்தைப் பார்த்துக்கொண்டு, விசாலித்த ஞானவிழிகளாற் பார்க்கப்படுவீர்கள்! தேவர்களே! மிக்க மனவருத்தத்துடன் என்னெதிரிற் பொருந்த வந்தீர்கள் ஒளிக்காமல் உங்களுக்கு (என்னால்) ஆகவேண்டுவனவற்றைச் சொல்லுங்களென்றார் எ - று. (௧௩)

உறுவ ரன்றிரு வார்த்தைகேட் டமரர்பல் ரும்
முறுகு வெந்துயர் முழுவதும் முருக்கினு மென்று

பற்றில் சிந்தைக்கண் மதியெனக் கடலென மகிழ்ந்து
சிறுமை யுண்டுகொல் சேர்ந்தவர்க் கென்றுசெப் புவரால்

(இ - ள்) சிரேட்டம் பொருந்திய கவுதமமுனிவர் கூறிய திருவார்த்தையைக்கேட்டு, தேவர்களெல்லோரும் தீமைசெய்யுந் துன்பமுழுவதையு மொழிந்தோமென்று, குற்றமில்லாத தமது சிந்தைகள் (பூரண) சந்திரனைக்கண்ட கடலைப்போலப் (பொங்கி) மகிழ்ந்து, தேவரீரை யடைந்தவர்களுக்குத் தாழ்விருக்குமோ? (இல்லை) என்று சொல்லுவார்கள் எ - று (௧௪)

நீற்று மேனியா னானை நீற்றினாற் போல
வாற்றன் மாதவ வரும்பிழை புரிந்தவா சவனைக்
கூற்றம் வாய்ப்படுத் துணக்கொழுஞ் சாபமாக் காது
போற்றி வைத்தது மெம்பொருட் டன்றோ புண்ணிய வென்றார்.

(இ - ள்) வலிதங்கிய சிறந்த தவமுடையவரே! திருநீற்றையணிந்த திருமேனியையுடைய சிவபெருமான் மன்மதனைச் சாம்பர் செய்ததைப்போல, செய்தற்கரிய குற்றத்தைச்செய்த இந்திரனை, யமனை வாய்ப்படுத்துண்ணும்படி மிக்க சாபமாகச் செய்யாமல் உயிர்காத்துவைத்ததும் எங்கள் நிமித்தமல்லவோ? புண்ணிய சொரூபியாகிய கவுதமமுனிவரே! எ - று (௧௫)

அடிகள் சிந்தையி னினைத்தவா றேயெமக் காக
முடிகொள் வாசவன் முதிரெழிற் பொன்னகர் இருந்து
வடிகொள் வாளவு ணக்குழாம் பறித்தர சியற்றப்
படியி லாதசா பத்தினைப் பாற்றுக வென்றார்

(இ - ள்) தேவரீர் திருவுள்ளத்திற் கருதியவகையே யெங்களுக்காக, கிரீடமணிந்த இந்திரன் மிக்க அழகுவாய்ந்த (அமராவதியென்னும்) பொன்னகரத்திலிருந்து, கூர்மைபொருந்திய வாளேந்திய அவுணர்களாகிய கூட்டங்களை யகற்றி அரசு நடத்தும்படி, (தேவரீருடைய) எல்லையில்லாத சாபத்தை விலக்கியருள்புரியவேண்டு மென்றார்கள் எ - று (௧௬)

அறிவி லாதவன் வஞ்சகன் றுட்டனோ ராக்
குறியி லாதவன் கொண்டதன் னுயிர்பிற வுயிர்க்குஞ்
செறியு மாசர விரக்கமில் லாதவன் செப்புந்
தறுக ணானைச் சாற்றலு நினைத்தலு மாகா.

(இ - ள்) புத்தியில்லாதவனும், வஞ்சகனும், துஷ்டனும், நல்லொழுக்கத்தின் அடையாளமில்லாதவனும், கொண்ட தன்னுடைய உயிருக்கும் பிறருடைய உயிருக்கும் மிகுந்த ஆசையும் இரக்கமுமில்லாதவனும், சொல்லுகின்ற அஞ்சாமைக்குணமுடையவனுமாகிய அவனை (வாயால்) சொல்லுதலும் (மனதால்) நினைத்தலுங் கூடாது எ - று (௧௭)

தீய னாயினு மென்றுநுவன் றேற்ற பல்லோருஞ் செலுத்திற்
றாய னுற்றவ னீவிர்கள் தொக்கருள் செய்யன்று
பாய பாதகக் குலிசியும் பற்றிலா னுனித
மாய தாலவற் கருளுது மெனாமுனி யறையும்

(இ - ள்) கொடியவனான ஒருவன்பேரிற் பலர் இருப்பை வைப்பார்களாயின் அவன் புனிதனுவான். (அதுபோல) நீங்கள் கூடிக் கருணைசெய்வதால், பரவிய பாதகத்தையுடைய வச்சிராயுதமேந்திய இந்திரனும் புனிதமாயினன். ஆனபடியால் அவனுக்கருள் செய்வோமென்று கவுதமமுனிவர் கூறினார் எ - று. (௧௮)

தமனிய மயவெயாக குரவனைத் தனித்துற வழைப்பா
அமல முதற்றொழி னடைபெற மூவரா யமாந்த
விமல மல்கிய விநாயகன் சடக்கர நினக்குச்
சமல வல்வினை விடைகொளச் சாற்றுதுந் தனித்து

(இ - ள்) பொன்னென்னும் பெயரையுடைய (தேவ) குருவைத் தனித்து வரவழைத்து, புனிதமான (சிருட்டி முதலிய) முதற்றொழில்கள் நடைபெறும்படி (பிரமன் முதலிய) திரிமூர்த்திகளாகப் பொருந்திய புனிதத்தன்மை மிக்க விநாயகக்கடவுளுடைய சடக்கர மந்திரத்தை, உனக்கு மலசமூகமாகிய வலிய வினையானது விடைபெற்றுக்கொள்ளும்படி தனித்துச் சொல்லுவோம் எ - று. (௧௯)

அடுத்த கிருமைய மூராதிபா னனகிருந் தீக்கை
முடித்து மாந்திரிய முதிரமஉ முற்றிய சாப
மிடித்தி யோனியெ லாமவிழி யெனச்செயும் பவமும்
பொடித்திடும் பதந் தருமென வருளொடும் புகன்று.

(இ - ள்) மின்னலையுடைய பெரிய மேகத்தை வாகனமாகக்கொண்ட இந்திரனுக்குப் பெரிய தீக்கை முடித்து, இப்பழமையாகிய மந்திரத்தை உபதேசஞ்செய்க அது மிக்க சாபத்தை யொழித்து (அவனுடலிற் பொருந்திய) பெண்குறிகளையெல்லாம் விழிகளாக மாறச்செய்யும் பிறவியையு மொழிக்கும். திருவடியைக் கொடுக்குமென்று, கிருபையுடன் (அதனை) உபதேசித்து எ - று. (௨௦)

சிவமெ லாந்தருஞ் சடக்கரந் தீக்கையோ டுதவி
யவமெ லாந்தெறு மனுவடிக்கு முறைமையு மறைந்தான்
பவமெ லாந்தெறக் கேட்டவன் பண்ணவ ரோடுந்
தவமெ லாநிறை முனிவனைத் தாழ்ந்தனன் போந்தான்

(இ - ள்) மங்கலங்களை யெல்லாங் கொடுக்குஞ் சடக்கர மந்திரத்தைத் தீக்கை விதியுடன் உபதேசித்து, துன்பங்களெல்லாவற்றையு மொழிக்கத்தக்க அநுட்டான முறையையுங் கூறினார் பாவங்களெல்லாமொழிய (அதனைக்) கேட்டபிரகற்பதி முனிவன் தேவர்களோடும், எல்லாத்தவங்களு நிறைந்த கவுதமமுனிவரைத்தாழ்ந்து (விடைகொண்டு) சென்றனன் எ - று. (௨௧)

வேட்டு ளார்க்கெலாம் வரமருள் விண்ணவர் கோமா
னீட்டு தீவினை யிமையவ ரெனைவரு முயன்று
வாட்டு வாரெனின் மணமிசை வைகலும் பாவ
மீட்டு வார்க்கு நீங்குமோ வெழுமையு நிருபா.

(இ - ள்,) உருக்குமாங்கதராசனே! விரும்பியவர்களுக்கெல்லாம் (அவர்கள் விரும்பிய) வரங்களைக்கொடுக்குந் தேவேந்திரன் தேடிக்கொண்ட பாவத்தை, தேவர்

னெல்லோரும் முயற்சிசெய்து அழிப்பார்களென்றே, பூமியிலசாதோரும் பாவஞ் சம்பாதிப்பவர்களுக்கு எழுபிறவிகளிலும் அப்பாவமகலுமா? (அகலாது) எ - று.

கடவுளர் குருவுக்குக் கீவுக்கமருப்பேதித்தபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௫௨௪

இந்திரனுபதேசம்பெற்றபடலம்.

கவுதம னருள்பெறுங் கடவுளர்களுந்
தவலயின் மதிமிகுத் தமனிய பெய
ரவனுமென் மொழிப்படி யடுத்து மேருவைத்
தவழ்திரை மாமடுச் சார்ந்து கூவுவார்

(இ - ள்) கவுதமமுனிவர் கிருபையை யடைந்த தேவர்களும், மயக்கமில்லாத அறிவுமிக்க பொன்னின் பெயர்வாய்ந்த பிரகற்பதிமுனிவனும் என்சொற்படி மேருமலையை யடுத்து, தவழ்கின்ற அலைகளையுடைய மகாமடுவைச்சார்ந்து (பின்வருமாறு) கூப்பிடுவார்கள் எ - று. (௧)

ஓசதக் கிருதுவே யமரர் வேந்தனே
யோவயி ராணியி னுயிர்க்குத் தோழனே
யோஓ தயித்தியர் குலமொறுக்கும் வீரனே
யோஓ மகவான வெளியுறுதல் வேண்டுமே

(இ - ள்) ஓ சதக்கிருதுவே! தேவர்களுக்கரசனே! ஓ இந்திராணியின் இனிய உயிர்த்தோழனே! ஓ தயித்தியர்குலத்தைச் சங்கரிக்கும் வீரத்தன்மையுடையவனே! ஓ மகவானே! (நீ) வெளியேவருதல் (எங்களுக்கு) வேண்டியது எ - று.

சதக்கிருது - நூறு அசுவமேதஞ்செய்தவன், சதம் - நூறு, கிருது - யாகம். மகவான் என்பதில் மகம் - யாகம். (௨)

செச்சென்ச் சபித்துனை விடுத்த மாதவன்
பொச்சமில் கழன்மலர் போற்றி நின்னுளத்
தச்சம தறுமவ னருளொ டெய்தினோ
நச்சிய நாரதர் தாமு நண்ணினார்

(இ - ள்) கோபித்து உன்னைச்சாபமிட்டனுப்பிய பெருந்தவசியாகிய கவுதமமுனிவருடைய பொய்மையில்லாத திருவடித்தாமரையைத் துதித்து, உன்மனத்திலுள்ள பயமொழியும்படி அவரருள்பெற்றடைந்தோம். (யாவரும்) விரும்பிய நாரதமுனிவரும் வந்திருக்கின்றனர் எ - று. (௩)

அவரவர் புரிபிழை யகத்தி ராவகைத்
தவவெளி யுரைத்திடிற் றங்க மேதையோர்
கவலையு முடனறக் கழுவு வாரெனத்
துவவுவ துரைத்திடா தொளிப்பின் மன்னனே.

(இ - ள்) அவர்களிசைய்த குற்றங்களை மனத்திலிராவணையாக அறியும்படி வெளியிட்டுச்சொன்னேன், தகுதியாகிய ஞானமுடையவர்கள் (குற்றத்தைத்தீயனைறி அதனாலான) துன்பத்தையும் உடனே விலகும்படி யொழிப்பார்கள் அரசனே! அத னைச் சொல்லாது மறைத்துவைத்தால் அதிகமாகும் எ - று (௪)

பரிகரம் புரிந்திடை பொழியும் வினையினை
விரிபுகழ் நாரத முனிவர் கிளைஞரும்
பெரியவர் நீவிர் முன்னம் பேசி நினைவிழை
பிரிவது செய்யினிப் பேணுக தங்கத்து

(இ - ள்) முறைக்கமைந்த நரம்புகளோடு கூடிய இசை (மழை)யைப்பெய்யும் வீணை (யாகிய மேகத்தினை) உடைய பரந்தகீர்த்தியினையுடைய நாரதமுனிவர் முதலானோரும் பெரியவர் (ஆதலின்) நீவிர்முன்னே உன்றுடைய குற்றத்தைச்சொல்லி அதனை யொழித்தல்செய்வது இனிச்செய்யத்தக்கது எ - று (௫)

உருத்திரன் மனமறிந் துணர்ந்தன கோடு
பருத்தது பெருகிய பாவது நானமுத
னுருகவெழு பாவமு நாணு மோமமதிறு
னுருத்திரன் றிருவரு ளுதவப் பட்டரோ

(இ - ள்) சிவபிரானுடைய திருமணமகோற்சவத்தில், உமாதேவியின் சீர் பொருந்திய திருவடியிலுள்ள அழகுவாய்ந்த பெருவிரலை நான்கு முகங்களையுடைய பிரமதேவனவிரும்பிச்சிவகடாட்சமருளப்பெற்று,சின்னதெழுந்த பாவத்தையும் நாணத் தையுங் காத்தனன். எ - று (௬)

ஆதலா னீயுமின் றகத்தி னீங்கிடப்
போதுவா யிங்கெனப் புலவர் கூறலும்
சீதநீர் தாமரைச் செறிமுட் டாளினின்
றேதமோ டிந்திர னிமென் றெய்தினான்

(இ - ள்) ஆனபடியால், நீயும் இப்பொழுது பாவத்தினின்றும் விலகும்படி இங்கேவருவாயாகவென்று தேவர்கள் சொல்லவும், குளிர்ச்சிபொருந்திய நீரிலுள்ள தாமரையின் முட்களநெருங்கிய தாளினின்று தன் குற்றத்துடனே இந்திரன் விரை ந்துவந்தனன் எ - று (௭)

விண்குடி வாழ்நகையர் வேந்தன் முந்துறப்
பெண்குறி நோக்குதல் பிழையென் றெணிலர்
கண்களைப் புதைத்தனர் கவிழ்த்திட் டார்சில
ரொண்கர நாசியி னுறுவித் தார்சிலர்.

(இ - ள்) விண்ணுலகிற் குடியிருக்குந் தேவர்கள் தமதரசனாகிய இந்திரன் (தமக்கு) நேரில்வர (க்கண்டு, அவனுடலிலுள்ள) பெண்குறிகளைக்காண்பது குற்ற மென்று சிலர் கண்களைமூடிக்கொண்டனர் சிலர் தலைகுனிந்துகொண்டனர் சிலர் ஒளியுள்ள கையை மூக்கின்மேலே வைத்துக்கொண்டனர் எ - று

இந்திரன் தனனுடலிற் பெண்குறிகளடைந்துள்ளமை கண்ட தேவர்கள் செயலை இச்செய்யுளாற் கூறினார். (௮)

வாரியுற் றெய்பிழை வசத்து மந்திரக்
குலவுமெம் கமலின் வானந்த மந்திர
கலாநிதி கண்டோர் கவிர மெய்பொருக்
குலாவிய விதிபுரி கொண்டு வாழ்ந்தனன்

(இ - ள்) இந்திரனுங் காலசெய்த குற்றத்தை (வினைகளாக) கூறி, மந்திரத்தாலுலாவுகின்ற எல்லோரும் போற்ற அறிஞரான பிரகஸ்பதி முனிவன் சொல்லிய மந்திரத்தை, சந்திரனைக் கண்டோர் ஆய்பவனைப்போல (கவனித்து)ச் சொல்லிய விதிமுறையாகப் பெற்றுக் களித்தனன் எ - று.

கலாநிதி - கலைகளுக்கிருப்பிடம், சந்திரன். (கூ)

திருத்தகத் தமந்திரஞ் செவியிற் சேர்தலும்
வருத்திய சாபமும் மருவி னொடொடு
பொருத்திய பயன்தரப் புரையில் தொலைந்திட
ஆருத்தக் கம் வேயாணிக வொளிர்கண் ணாயினான்.

(இ - ள்) திருத்தமாகிய சடக்கரமந்திரமானது தன் செவியிற் புகுதலும் தனக்குத் துன்புசெய்த சாபமானது முன்னே (கவுதமர் கூறிய உடனே) நீங்கினாற்போல, கூடிய பிரயோசனமுடையதாகி விரைவில் குற்றத்தினின்று விலகி, உருவமைந்த பெண்குறிகளெல்லாம் பிரகாசிக்கின்ற கண்களாக மாறப்பெற்றனன் எ - று.

கவுதமரிட்ட சாபம் உடனே தொடர்ந்தாற்போல, பிரகஸ்பதியினிடம் சடக்கரோபதேசம் பெற்றவுடனே அக்குறிகளெல்லாம் கண்களாயினவென்பது கருத்து.

அந்தவ னெண்ணில் மயிலவிகொள் வேலனை
இந்திர வாசிகள் செப்பி விண்ணவர்
சொரிந்தனர் மலர்களு துந்துமி முழங்கின
வரமையர் நிரைநிரை யாகி யாடினர்.

(இ - ள்) கூர்மைபொருந்திய வேற்படைதாங்கிய முருகக்குமாங்கதராசனே! என்னுடன் அரியதவஞ்செய்த முனிவர்கள் (பலர்) திருத்தமாகிய ஆசிமொழிகள் கூற, தேவர்கள் மலர்மாரி பெய்தனர் தேவதுந்துமி முழங்கின தேவதாசிகள் வரிசை வரிசையாகி நடனஞ்செய்தார்கள் எ - று. (கக)

கின்னரர் பாடினர் கீர்த்த மாகத
ரின்னிசை புகழ்ந்தன ரிறைஞ்சி யேனையோர்
நின்னையில் லாதயா நிலவில் லாவிரா
வன்னையில் லாமக வாயி னோமென்றார்

(இ - ள்) கின்னரர்கள் பாடினார்கள் சொல்லிய மாகதர்கள் இனிய கீர்த்தியைப் புகழ்ந்தார்கள் பிறர் இந்திரனைப்பணிந்து, ஐயனே! உன்னையில்லாமல், சந்திர வொளியில்லாத இரவும், தாயில்லாத குழந்தையுமானோமென்று சொன்னார்கள் எ-று.

மாகதர் - அரசனுக்கு வைசியமாதுக்கும் பிறந்து பிரபு வீரத்தைப்பாடுவோர்.

அவ்விய மகன்றனெஞ் சறிவா தங்களை
யொவ்வொரு முனிவரை யுபசரித் தப்பரா
ரெவ்வகைப் பெருமையு மியைந்து வீறெனத்
தெய்வம் வச்சிரன் செப்பித் தாழ்ந்தனன்.

(இ - ள்.) பொறுமையொழிந்த மனத்தையுடைய முனிவர்களை நோக்கி, ஒவ்வொருமுனிவரும், கெடுதலில்லாத தேவர்களுடைய எவ்வகைய புகழையும் பொருந்தியுள்ளீர்களென்று, பகைவரைக்கொல்லும் வச்சிராயுதமேந்திய இந்திரன் (உபசாரவார்த்தை) கூறிப்பணிந்தனன். எ - று (கங)

தேவரை நோக்கியே செப்ப லுற்றனன்
றேவறு கவுதமன் சாபந் தீர்வகை
யாவது புரிந்தனீ ரதனை யறிந்திலேன்
மேவுகைம் மாறுமக் கில்லை விண்ணினும்

(இ - ள்.) தேவர்களை நோக்கிச்சொல்லுகின்றான் கெடுதலற்ற கவுதமமுனிவனிட்ட சாபமொழியுமவகையாக யாது செய்தீர்கள்? அதனை யறிகிலேன் உங்களுக்கு (இவ்விடத்திலேயன்றி) தேவருலகத்திலும் பொருந்திய பிரதியுதவி (செய்வதற்கொன்று) கிடையாது எ - று (கச)

பண்டைய முகவிழி பாயி ருட்பட
முண்டக நாளத்தின் முழுகி னேற்கொளி
மண்டிய வாயிர மலர்க்க ணல்கினீர்
கொண்டன னலமெலாங் குளிர்ந்த வானுளீர்.

(இ - ள்) முகத்திலிருந்த பழமையாகிய விழிகள் மிகவும் இருள்பட, தாமரைத்தண்டிலே ஒளித்துக்கொண்ட எனக்குப் பிரகாசம்பொருந்திய (தாமரை) மலர் போன்ற ஆயிரங்கண்களைக் கொடுத்தீர்கள் குளிர்ச்சிபொருந்திய வானுலகிலுள்ளவர்களே! (உங்களால்) நன்மை முழுவதையுங்கைக்கொண்டேன் எ - று (கரு)

இன்னுமே ரம்பனின் னருள்பெற் றின்புற
நன்னர்மா தவங்கணற் றலத்தி னாற்றிய
பின்னர்வா னுலகினைப் பேணு வேனலான்
முன்னர்நான் பேணுதன் முன்னி லேனரோ

(இ - ள்) இன்னும், விநாயகக்கடவுளுடைய இனிய திருவருளைப்பெற்று இன்பமடையும்படி நல்ல சிறந்த தவங்களைப் புண்ணிய தலத்திலே செய்தபிறகு, தேவலோகத்தை யரசுசெய்வேனல்லாமல், (அதற்கு) முன்னே நான் அரசுசெய்வதைக் கருதினேனல்லேன் எ - று (கசு)

நீவிர்க ளனைவரு நெடிய வானிடை
மேயினர் வதிமினோ விளைத்த கற்பக
மாயிரும் பொருள்சிலர் வந்து நல்குமென்
றாயிர விழியினா னவரைப் போக்கினான்

(இ - ள்) நீங்களெல்லோரும் பெரிய தேவலோகத்திற் பொருந்தி வாசஞ்செய்யுங்கள் (உங்களிற்) சிலர் மணமமைந்த கற்பகத்தருகொடுத்த சிறந்த பெருமைவாய்ந்த பொருள்களைக் கொண்டுவந்து கொடுங்களென்று, ஆயிரங்கண்களையுடைய இந்திரன் கூறி, அவர்களைச் செல்லவிடுத்தனன். எ - று. (கஎ)

இந்திரனுபதேசம்பெற்றபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - கருசக.

இந்திரன்பூசித்தபடலம்.

இதமா புரியுந் தேவர்களு மிருடியரு நீங்கியபின்
கதம்பவனத் திடையேகிக் காவல்புரி விண்ணவர்கோ
னதம்பலவுந் தீர்பலவு மொன்றுற்ற போன்றவையின
சிதம்புதெறு மொருதீர்த்தந் திகழ்தரக்கண் டதையடுத்தான்.

(இ - ள்) (அமரருலகைக்)காவல்புரியுந் தேவராசனாகிய இந்திரன், நன்மை யைச்செய்யுந் தேவர்களும் இருடியர்களும்(தன்னைவிட்டு)நீங்கிச்சென்றபிறகு, கதம்ப வனத்திற் சென்று, நதிகள்பலவுந் தீர்த்தங்கள் பலவும் ஒன்றுசேர்ந்தாற்போல, குற்றத் தினொருக்குதியை யொழிக்கும் ஒருதீர்த்தம் விளங்குவதைப் பார்த்து, அதனைச்சமீபித் தனன் எ - று.

சிதம்புதல் - குணமின்மை (க)

அத்தடத்தி லமரர்தரு மாகாயக் கங்கையுஞ்சேர்த்
துத்தமனத் தடக்கரையி லொளிர்பளிக்கா லயநிருமித்
தத்தனையைங் கைக்களிற்றை யாகமத்தின் வழிநிறுவி
யெத்தகைய பொருள்களினு மினிதுறப்பூசைகளாற்றி

(இ - ள்) புனிதனான இந்திரன் அந்தத் தடாகத்திலே, தேவர்கள் கொண்டு வந்த ஆகாயகங்கையையுங்கூட்டி, அத்தீர்த்தக் கரையிலே பிரகாசிக்கின்ற பளிங்குக் கல்லால் திருவாலயநிருமித்து, (யாவர்க்கும்) தந்தையும் ஐந்துகரங்களையுடைய யானை முகக்கடவுளுமாகிய விநாயகப்பெருமானை ஆகமமுறையாகப் பிரதிட்டைசெய் , எவ் வகைப்பட்ட பொருள்களாலும் இனிதாகப் பூசைகள்செய்து. எ - று.

இதுமுதல் இரண்டு பாடல்கள் குளகம் (உ)

வாயிலினிந் தியமவழுங்கா வகையடக்கி நாசிநுனி
காலொளிக்கட் கடைதிறவிக் கவின்றருமா தனமவைகி
யாயிரமாண் டாறெழுத்தை யனுட்டிப்பி னெடுங்கணித்தான்
மாயிருமா மறையறியா மதக்கைமுக னடிநினைந்தே

(இ - ள்) சிறந்தபெரிய மகாவேதங்களறியாத மதஞ்சொரியும் யானைமுக முடைய விநாயகக்கடவுள் திருவடியைச் சிந்தித்து, வாயிலின் வழியே இந்திரியங்களைப் புறஞ்செல்லாது அடக்கி, நாசிமுனையிலே பிரகாசிக்கின்ற ஒளியையுடைய கட்கடையைத் திறந்து, அழகுசெய்யும் ஆசனத்திற் பொருந்தி ஆயிரவருடகாலஞ் சடக்ஷரமந்திரத் தை அநுட்டிப்புக் கிரமமாகக் கணித்தனன் எ - று. (ங)

நித்தலும்பூ சனையியற்றி நிராகாரத் தொடுவைகிப்
பத்தியினற் றியானித்துப் பயன்றருமந் திரங்கணித்துச்
சுத்தவுளத் தினனாகிச் சுரராசன் றவமாபுரிய
வத்திமுகன் பேரருள்கூர்ந் தவனெதிரே தோன்றினன்மாதோ.

(இ - ள்) தேவராசனாகிய இந்திரன் நாடோறும் (இவ்வகையாகப்) பூசை செய்து, ஆகாரமில்லாமலிருந்து பத்தியுடன் தியானஞ்செய்து, பயன்தரத்தக்க மந்தி

ரத்தைத்தரிசித்து, புனிதமான மனமுடையவனாகித் தவஞ்செய்ய, யானைமுகத்தை யுடைய விநாயகக்கடவுள் பேரருள் மிகுந்து அவவிந்திரனுக் கெதிரே தரிசனந் தந்தருளினர் எ - று. (ச)

தவளமதி புரைநிறமுந் தசதிசைபோர்த் தொளிர்தேசுங்
கவளமதக் கரிமுகமுங் கதிர்மணிமா லிகைவளைத்துத்
துவளுமொரு புழைக்கரமுந் தோணான்கு மணித்தண்டைத்
திவள்சதங்கை நூபுரப்பொற் சேவடியு மனைத்தானும்.

(இ - ள்) வெள்ளியசந்திரனையொத்த நிறமும், பத்துத்திசைகளைய மூடிப் பிரகாசிக்கும் ஒளியும், கவளங்கொள்ளும் மதயானையின் முகமும், பிரகாசிக்கின்ற முத்துமாலையை வளைத்துத் துவள்கின்ற ஒப்பற்றதுதிக்கையும, நான்குதோள்களும், இரத்தினத்தண்டையும் பிரகாசிக்கின்ற சதங்கைமாலையும பாதசரமுமணிந்த அழகிய திருவடியும, (போல) அனைத்தானும எ - று

கவளம - யானைகொள்ளுமுணவு அல்லது வாய்கொண்டவுணவு

இதுமுத லிரண்டு பாடல்கள் ஒருதொடர் (ரு)

அங்கதமும் வரைமார்பி னணிதருமுப் புரிநூலும
பொங்கொளிநித் திலவடமும் பொலிந்தவிர கனத்தொடையுஞ்
செங்கதிரி னிருளகற்றுங் குண்டலமுந் திகழ்முடியுந்
தங்குருவி னெதிர்நின்ற தலைவனைவா சவன்கண்டான்

(இ - ள்) அங்கதமும், மலைபோன்ற மார்பிலணிந்த உபவீதமும, ஒளிமிக்க முத்துமாலையும, அழகிய இரத்தினமாலையும செவ்விய கிரணங்களையுடையசூரியனைப போல இருளையகற்றுங் குண்டலங்களும, பிரகாசிக்கின்ற கிரீடமும (கொண்டு)தமது குருவாகிய பிரசற்பதிமுனிவனைப போல எதிரேநின்ற விநாயகக்கடவுளை இந்திரன் தரிசித்தனன். எ - று

அங்கதம - தோளணி (சா)

மிக்கபெருங் கருத்தனுடம வெருவுதலு முடனேறனறக
கொக்கிருகை சிரமேறக் குனிவெனவா தனத்தெழுந்து
தக்கமுறை யால்வணங்கித் தண்டமிட டெதிரடித்துப
பொக்கமற வலம்வந்து புகழெடுத்துப் பாடினன

(இ - ள்.) மேம்பட்ட பெருங்கருத்தும ஆசையும் அச்சமும உடனே உண் டாக, இருகரங்களுஞ் சேர்ந்து, சிரமிசையேறத்துணுக்குற்று ஆசனத்தினினறெழுந்து, தக்கமுறைப்படி பணிந்து (சாஷ்டாங்க) தண்டனசெய்து, எதிரே (ஆனந்தமேலீட் டால) நடனஞ்செய்து, குற்றமகலப பிரதக்கிணஞ்செய்து (அவ்விநாயகருடைய) கீர்த் தியை யெடுத்துப் (பினவருமாறு) பாடினன எ - று. (எ)

வேறு

அறிவாய் விளங்கு மொளியாகி யெங்கு மசைவற்று நின்ற நிறைவாயக
குறியாதி யின்ப முதலீறி லாத குறைவற்ற வின்ப மயமாய்ச
செறிவான நீரி னிழல்போல நின்ற திறலோரை யானும வளைவேன
வெறுஞான மான திருமேனி கொண்டென விழிகாண முன்னா வரலால்.

(இ - ள்) அறிவாகி விளங்கும் தேஜோரூபியாய், எவ்விடத்திலும் சலன மின்றிநின்ற பூரணமாய், குறி முதலிய இன்பமுதல் முடிவில்லாத குறைவற்ற இன்ப மயமாகி, நெருங்கிய கிரணமாலைபோன்ற ஒளியையுடைய சோதியான, சுத்தஞான மான திருமேனியோடு என்கண்கள் காணும்படி முன்பு மெய்யுருத்தருளியதனால், அடியேனும் பிரத்தக்கணஞ் செய்தேன் எ - று (௮)

இருண்மூழ்கு கண்ணின் மலமேவ லகற்றி னிதமின்றி நின்ற வுயிர்கட்
குருவாதி மூன்று முன்முயக்க வுற்றி னுளதாம் விகார வகையா
லிருவேறு கன்ம மிசைவித் தருத்து மிறையோனை யாறு மெம்பிரானவ்
வெருண்மாயை நீக்க திருமேனி கொண்டென் விழிகாண முன்னமானால்

(இ - ள்) (அஞ்ஞானமாகிய) இருளின்மூழ்கிய கண்களின் மலமேவலகற்றி னிதமில்லாமல் நின்ற உயிர்களுக்கு உருவமுதலிய மூன்றையுமுன்னளித்து அவ்வாறு ளதாகிய விகாரவகையால், வேறாகிய இருவகைக் கன்மங்களையுமிசைவித்துப் புசிக்கச் செய்கின்ற தலைவராகிய கணேசப்பெருமானே மயக்கம் பொருந்திய மாயையை யொழித்த திருமேனியோடு என் கண்கள் காணும்படி முன்னே மெய்யுருத்தருளியதனால், அடியேனும் (இவ்வகையினரென்று அவனைக்) கூறுவேன் எ - று (௯)

வாதங் கடந்து பலமாயை கன்ம வகையுங் கடந்து வைசெய்யு
மேதங் கடந்து பொருளொன்று மின்றி யெழுகின்ற மயக்க முயிரின்
போதங் கடந்து துரியங் கடந்த பொருளாயை யானு முணர்வேனா
வேதங் கடந்த திருமேனி கொண்டென் விழிகாண முன்னமானால்

(இ - ள்) வாதஞ்செய்தலைக் கடந்து, பலவகைப்பட்ட மாயாகன்மவகைகளை யுங்கடந்து, அவைசெய்கின்ற துன்பங்களையுங் கடந்து, ஒருபொருளுமில்லாமல் தோன் றுகின்ற மயக்கம்பொருந்திய உயிரின் சற்போதமுங்கடந்து, துரியதத்துவமுங் கடந்த பொருளாயுள்ள தேவரீரை, வேதங்கடந்து சிறப்பட்ட திருமேனியைக்கொண்டு என்கண்கள் காணும்படி என்முன்னே யெழுந்தருளியதனால், அடியேனும் (இவ் வகையினரென்று) அறிவேன் எ - று (௧௦)

வெங்கட் களிற்றின் மகவானு துதிக்க விழிநீ ருகுத்து ருகச்
சிங்கஞ் செலுத்தி யெதிர்வந்து நின்ற திகழ்முக்கண் வேழ முகவ
னிங்குற்று நீசெய் செபமாதி யான மிகவுங் களித்த னமினீ
பொங்குற்ற காதல் வரம்வேண்டு மென்று புகலென்ன வோது மவனே.

(இ - ள்) கோபக்கண்களையுடைய (ஐராவதமென்னும்) யானையை வாகன மாகக்கொண்ட இந்திரன் (இவ்வாறு) தோத்திரஞ்செய்து, கண்ணீர்சிந்தி மனமுருக, சிங்கவாகனமூர்ந்து அவனெதிரேயெழுந்தருளியிருந்த விளக்கம் பொருந்திய திரி நேத்திரங்களையுடைய விநாயகக்கடவுள் நீ யிங்கேவந்து செய்த செபத்திறத்துக்கு சிறந்த தியானத்திறத்துக்கும் மனங்களித்தோம் இனி அதிகரித்த காதலையுடைய நீ விரும்பிய வரத்தை யிப்பொழுது கூறுகவென, அவ்விந்திரன் கூறுவான் எ - று (௧௧)

யோகத்தி னானு முணரப் படாமை யுயர்ஞான யோக நிலையோ
ராகத்தி னொன்று படுகின்ற பாத பதுமங் கெடாது புரியும்
யாகத்தி னான பயனுந் துறக்க மெளியேற களித்தி யதுவும்
போகத்தின் மக்க விடரின்றி நின்று புகழோடு மாளும் வகையில்.

(இ - ள்) யோகத்தினாலும் அறியப்படாமல் உயர்ந்தஞானயோக நிலையிலுள்ளவர்கள் பாகத்திலே ஒன்றுபடுகின்ற பாததாமரை, நீங்காதுசெய்யும் யாகத்தினாலான பயனாகிய சுவர்க்கலோகத்தை அடியேனுக்குக்கொடுக்கவேண்டும். அதுவுமல்லாமல் போகத்தின மிகும்படி துன்பமில்லாமலிருந்து, கீர்த்தியுடன் அரசுசெய்யும் வகையோடு (அநுக்கிரகிக்கவேண்டும்.) எ - று. (கஉ)

முன்னை யெனக்கு மறையோனு மிந்த மொழியா றெழுத்து மனுவைத்
தன்னு தரத்தி னுரைசெய்து நீயித் தனிமந் திரத்தை யொழியின்
மன்னு விண்ணி னரசாட்சி யென்று வழிவற புறுத்து மதனைப்
பின்னை மறந்து பிழையிற் படர்ந்து பெரிதான துன்ப மணிவேனன்.

(இ - ள்.) சொல்லுகின்ற இந்தச் சடக்கரமந்திரத்தைப் பிரமதேவனும் முன்னேயெனக்குத் தன்னுசையாலுபதேசித்தது, நீ இந்த ஒப்பற்ற மந்திரத்தை விடுத்தால் தேவலோக வரசாட்சி உனக்குப்பொருந்தாதென்று வற்புறுத்திக் கூறியதைப் பிற்காலத்திலே மறந்து, குற்றத்திற்சென்று பெரிதான துன்பமடைந்தேன் எ - று.

பொன்னே னுரைப்ப விடாமுற றகன்று புகழாயி ரங்க ளுடையே
னின்னு றெழுத்தை யுரைசெய்து பூசை நெடிதாற்றி வந்த பரிசா
லின்னு தாகி யுரையாத தாகி யுறலிற படாத பொருணீ
யென்னுகி நின்ற வருளா லெனக்கு முடியாமை யாவ துளதோ.

(இ - ள்.) (எனகுருவாகிய) வியாழபகவான உபதேசிக்க, துன்பமுழுவதுமகன்று, புகழத்தக்க ஆயிரங்கண்களையடைந்த அடியேன தேவரீருடைய சடக்கரமந்திரத்தைக கணித்துப் பூசையை மிகுதியாகசசெயதுவந்த தனமையால், நினைக்கப்படாததாகியும் சொல்லப்படாததாகியும பரிசிக்கப்படாததாகியுமுள்ள பொருளாகிய தேவரீர் என்முன்னுகி யெழுந்தருளிய திருவருளால், எனக்கு முடியாதது யாதொன்றிருக்கின்றது எ - று (க௪)

கேடா மெவைக்கு முறுகா ரணங்க ளிழவோய பதத்தி னிறையன
பாடாமை யாகு மதனு லெனக்கு னடிவாரி சத்தி னழுவல
விடாமை வேண்டு மதுவன்றி யுள்ள விழைவு பகக்கு மிஙகுன வடிவுக
கோடாத சிந்தா மணியென்னு நாம முறலவேண்டு மூர்க்கு முறுக.

(இ - ள.) தனபமாகிய வெல்லாவற்றிறகும் பொருந்திய காரணங்கள், யாவுமுடைய தேவரீரது திருவடியில் நிறைந்த அனபைச செலுத்தாமையாகும் ஆனதால் அடியேனுக்குத் தேவரீருடைய திருவடித்தாமரையிற பகதி அழியாமல (கொடுத்தருள) வேணடும அதுவல்லாமல, மனதில் விரும்பியவற்றைக் கொடுக்கும் இவ்விடத்திலுள்ள தேவரீர் திருவுருவததிறகுச சிந்தாமணிவிநாயகரென்னுந் திருநாமமுணடாக வேண்டும். அப்பெயரே [சிந்தாமணிநகரமென்று] இந்நகரததிற்கு முணடாகுக. எ-று.

தீர்த்த தனக்கு மிப்பேர் சிறக்க திகழ்க் கதனறி யெவரு
மோர்க்கும் கதம்ப நகரென்ற பேரு முறுகிறக வூரில் வதிவோ
ராக்குந் தடத்தி னுலாடு வோருன னடியிங் கிறைஞ்ச வுறுவோர்
பார்க்கட் சிறந்த பயனுன்கு மாக பகவானே னப்ப காதனும.

(இ - ள்.) இத்தீர்த்தத்திற்கும் (சிந்தாமணி தீர்த்தமென்று) இட்டபெயர் விளங்குக. அதுவல்லாமல் நகரத்திற்கு எவரும் விரும்பத்தக்க கதம்ப -

மென்றுமெய்யரும் பொருந்தச்செய்க. இவ்வூரில் வசிப்போரும், ஒலிக்கின்ற இத்தீர்த்தத்தின் நீரில் மூழ்குவோரும், இங்கே தேவரீர் பாதங்களைப் பணிவோரும் (ஆகியவிவர்கள்) உலகிற்சிறந்த புருஷார்த்தங்களனைத்தையும் பொருந்துக. பகவானே! என இந்திரன்கூறவும் எ - று. (க௬)

இறைவன் புகன்ற வரமுந் துறக்க மிடரின்றி யாளும் வரமு
நிறையக் கொடுத்து மறையக் கதிர்க்கு நெடுவச்சிரச் சைக மகவான்
குறையற்று மீட்டு முயர்பூசை யாதி குலவிப் புரிந்து விடைபெற்
றுறையுந் துறக்க நகரெய்தி யன்பொ டரசாட்சி செய்த ருளினான்.

(இ - ள்) கணேசப்பெருமான் (இந்திரன்) கேட்ட வரங்களையும், சுவர்க்கலோகத்தை யிடையூறின்றி அரசுசெய்யும் வரத்தையும் பூரணமாகக் கொடுத்து அந்தர்த்தானமாக, ஒளிவிடும் நெடியவச்சிராயுதத்தைக் கையிலேந்திய இந்திரன் (யாதொரு) குறையுமின்றி மீண்டும் சிறந்த பூசைமுதலியவற்றை அன்புற்றுச்செய்து விடைகொண்டு, (புகழ்ந்து) சொல்லுஞ் சுவர்க்க நகரத்தையடைந்து ஆசையோடு அரசாட்சி செய்திருந்தனன் எ - று. (கஎ)

அவ்வாறு பூசை பெயரோடு கொண்ட வமலன் பதங்கள் சாரு
மெவ்வாறு மெய்தி வழிபாடு செய்யி னிடரான தீர வாமுஞ்
செவ்வாய்மை யோடு பெறுகிற்றி ரென்று திரையுற்ற வீணை முனிவ
னெவ்வாடு வேற்படை யரசற்கு நன்கு தெரிவித்த கன்றனன்றே.

(இ - ள்) அவ்வண்ணமாகப் பூசையைத் திருநாமத்துடன்கொண்ட மலரகித்தாகிய சிந்தாமணி விநாயகர் திருவடியைச் சாருந் எவ்வகையுஞ்சென்று வழிபாடு செய்தால் துன்பகலாதாமும், செவ்விய சத்தியத்துடன் பெறுமவையென்று, தடவுகின்ற வீணையையேந்திய நாரதமுனிவர், பகைநரகங்கட்கு வேறுபடைத்தாங்கியகையினையுடைய உருக்குமாங்கத மன்னனுக்கு நன்குரைத்து (அவ்விடத்தினின்று) நீங்கிச்சென்றனர். எ - று

பெறுகிற்றி என்றதில், இல - ஆற்றலுணர்த்துமவிகுதி. (கஅ)

இந்திரன் பூசித்தபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௫௫௪

உருக்குமாங்கதன் முத்தியடைந்தபடலம்

திருக்கி லாமுனி செலவுமுன்
றருக்கி வாழ்கம ராயினார்
துருக்க மாதிது ரீஇத்துரீஇ
யுருக்கு மாங்கனை யுற்றனார்

(இ - ள்.) வஞ்சகமில்லாத நாரதமுனிவர் ஏகுமுன்னரே, களித்துவாழுமியற்கையுடைய (உருக்குமாங்கதனுடைய) உறவினராயுள்ளார் துருக்கமுதலியவிடங்களிலெங்கும் மிகத்தேடி, உருக்குமாங்கதன்பால்வந்து சேர்ந்தனர். எ - று.

துரீஇ - துருவி, தே[illegible]இத் துரீஇ - மிகுதிபற்றிவந்த அடுக்கு. (க)

கவட்டுக சாணிற கதழ்ந்தமான்
சுவட்டுத் தாரிது ரீஇயது
சவட்டி னுயக்கிது சாற்றென
குவட்டுத் தோளவ கூறென்றார்

(இ - ள்) கொம்புகளையுடைய வனத்தில் விரைந்தோடிய மானின் சுவட்டு வழியே (தொடர்ந்து) தேடி, அதனை வேட்டையாடிய வுனக்கு இத்தீமைவிளைந்தது யாதுகாரணம்? மலையையொத்த தோளையுடைய உருக்குமாங்கத ராசனே! கூறுக வென்றார்கள் எ - று

கவடு - மரக்கொம்பு, சுவடு - காலடி, குவடு - மலை (௨)

வெற்றி வீமன் விறன்மக
னுற்ற துற்றவர்க் கோதினன்
னற்ற மில்பொரு ளாங்குறப்
பற்றி யேகினன் பான்மையால்

(இ - ள்) வெற்றிவாய்ந்த வீமராசனுடைய வலிதங்கியமகனாகிய உருக்குமாங்கதராசன் நடந்த விருத்தாந்தத்தைத் தன்னிடம் வந்தவர்களுக்குக்கூறினன் குற்றமில்லாத உண்மைப்பொருள் ஆங்கடைதலால், அதனைத் தகுதியோடு கடைப்பிடித்துச் சென்றனன் எ - று (௩)

பொதும்பு சூழ்ந்து புகைந்தெரி
வெதும்பு வெங்கடம் விண்டுதேன்
றதும்பு பூம்பொழில் சார்ந்தவக்
கதம்ப மாநகர் கண்டனன்.

(இ - ள்.) பொதும்புசூழ்ந்து புகைந்து தீயானது சுடுகின்ற கொடிய காட்டைக்கடந்து தேன்றுளிக்கும் மலர்ச்சோலை சேர்ந்த அந்தச் சிறந்த கதம்பநகரத்தைத் தரிசித்தனன் (உருக்குமாங்கதன்) எ - று

பொதும்பு - மரப்பொந்து (௪)

சீர்க்கர் போற்றுஞ்சிந் தாமணித்
தேர்க்க ணைக்தெரி சித்துநோய்
தீர்க்கல் செய்யுஞ்சிந் தாமணி
தீர்த்த நீர்படிந் தாடினன்

(இ - ள்) புனிதமானவர்கள் துதிசெய்யுஞ் சிந்தாமணிவிநாயகரைத் தரிசித்து, (எல்லா) நோயையுமொழித்தருள்செய்யுஞ் சிந்தாமணி தீர்த்தநீரிலே மூழ்கி ஸ்நானஞ்செய்தனன் (உருக்குமாங்கதராசன்) எ - று (௫)

கருக்கி வெண்ணிறங் காட்டிமெய்
முருக்கு நோய்கெட முன்பெய
ரிருக்க நலமெழி லெய்தினு
னுருக்கு மாங்கத வத்[illegible]ன.

(இ - ள்) கருக்கச்செய்த வெண்ணிறத்தைக் காட்டி உடலைத் துன்பு செய்யுந் தொழுநோய் கெடவும், [உருக்குமாங்கதனென்னும்] பழையபெயர் (நிலைபெற்று) இருக்கவும், உருக்குமாங்கதனாகிய உத்தமன் நல்ல அழகை யடைந்தனன் எ - று. (௬)

செயிர றுக்குஞ்சிந் தாமணிப்
பெயர்வி நாயகர் பெய்கழல்
கயர்வி லாதமெய் யன்பனாய்
மயரில் பூசைசெ யக்கினை.

(இ - ள்) குற்றத்தை யொழிக்குஞ் சிந்தாமணியென்னும் பெயரையுடைய விநாயகக்கடவுளுடைய வீரக்கழலணிந்த பாதங்களில், மயக்கமில்லாத பூசையைச் செய்தனை சோர்வில்லாத உண்மையன்பினையுடைய வீமராசனே! எ - று (௭)

அந்த ணாளர்க் கருமபொருள்
சிந்தி னானது ரவ்வியின்
வந்து ளார்கள்வி மானமோ
டுந்தெ ழிற்கணத் தோர்சிலர்

(இ - ள்) வேதியர்களுக்கு அருமபொருளை (தானமாரியாக)ச் சொரிந்தனன் அந்தக்காலத்தில் மிக்க அழகினையுடைய கணநாதர்கள் சிலர் விமானத்துடன் (அவ்விடம்) வந்தார்கள் எ - று (௮)

வேறு

அந்தலை நின்ற வேந்தற் கருங்கணத் தலைவர் சொல்வா
ரித்தலைக் கணேசக் குண்டத் திருமஞ்ச னேய்ந்து முக்கண்
வித்தகக் களிற்றின் பூசை விளக்கினை யாத லாலே
வுத்தம வுனது மேன்மை யொருவர்க்கு முரைக்கொ ணாதே.

(இ - ள்) அரிய கணநாதர்கள் அவ்விடத்திலிருந்த உருக்குமாங்கதராசனுக்குச் சொல்கின்றார்கள் உத்தமனே! இவ்விடத்தில், கணேசதீர்த்தத்திலே மிக்க நீரின்மூழ்கி, கிரிநேத்திரங்களையுடைய ஞானசொரூபியாகிய சிந்தாமணிவிநாயகக் கடவுளுடைய பூசையைச்செய்தனையாதலின், உன்னுடைய சிறப்பை எடுத்துச் சொல்ல ஒருவருக்கு முடியாது எ - று (௯)

கொங்கவிர் மாலைத் தெய்வக் கோலமார் விமானமேறி
யைங்கர னுலக மெம்மோ டடைமதி யென்றார் கேட்டுச்
சிங்கவல் லேற்றி னன்னார் செருக்களம் முழக்குந் திண்டோட்
பைங்கழ லரற்று தோன்றல் பாதத்தின் பணிந்து சொல்வான்.

(இ - ள்) மகரந்தத்தோடு விகசித்த (கற்பக) மாலையணிந்த அழகுபொருந்திய விமானத்தி லாரோகணஞ்செய்து எங்களுடனே ஐந்து திருக்கரங்களையுடைய கணேசப்பெருமானுலகத்தை யடைகவென்றனர். வலிய ஆண்சிங்கத்தைப் போலப் பகைஞர்களது போர்க்களத்தைக் கலக்குகின்ற வலியதோளையும் பசியவீரக்கழலொலிக்கும் பெருமைதங்கிய தாளையுமுடைய உருக்குமாங்கதமன்னன் அரனைக்கேட்டு (அக்கணநாதர்களைப்) பணிந்து சொல்கின்றான். எ - று.

மதி - அசைச்சொல் "மியாயிகமோமதி யத்தையித்தை - வாழியமாளவீ யாழுமுன்னிலையசை" என்றது சூத்திரம். (௧௦)

வேறு.

சின்மயசிற் குணவகண்டா காரசச்சி தானந்தன் சேர்ந்தோர் தம்மைத்
தன்மயமாக் கிடுமுதல்வன் காரணாதீதனவன் றலைமை சான்ற
நன்மைதரு மருளெங்கே நானெங்கே நான்புரிந்த தவங்க ளெங்கே
யென்மனமெங் கேயென்றன் பிறப்பெங்கே யென்னுடைய பத்தி யெங்கே.

(இ-ள்) சின்மயனும், நிர்குணனும், அகண்டாகாரனும், உண்மையறிவானந்தருபியும், தன்னையடைந்தவர்களைத் தன்மயமாகச் செய்யும் முதற்கடவுளும், காரணாதீதனுமாகிய அக்கணேசப்பெருமானுடைய முதன்மை மிக்க நன்மைபொருந்திய திருவருளெங்கே அடியேனெங்கே அடியேன்செய்த தவங்களெங்கே அடியேன் மனமெங்கே அடியேன் பிறவியெங்கே அடியேன் பக்தியெங்கே எ-று.

சின்மயம் நிர்க்குணமென்பவற்றில், சித்=ஞானம். அகண்டம்=கண்டமில்லாதது. ஆகாரம் - தேகம். சச்சிதானந்தம் - சத்து + சித்து + ஆனந்தம். கணேசப்பெருமானுடைய உயர்வைக்குறிக்க "அவன் றலைமைசான்ற நன்மைதருமருளெங்கே" என்றும், தானும் தன்றவம் மனம் பிறப்பு பக்திமுதலியவற்றின் தாழ்வுகுறிக்க 'நானெங்கே * * என்னுடைய பத்தியெங்கே" என்றுங்கூறினார். (௧௧)

பண்டுபுரி தவத்தாலு மித்தடத்தி னீராடும் பலத்தி னாலு
மண்டர்தொழும் பெருங்கணத்தி ராயகநேரி னமடியேங்காயிற் றென்னே
மண்டுபெருந் தவமாற்றிச் சாருகா சினியோடு மருவி வீம [னென்றான்.
றெண்டனையி னுயிர்த்தன்னை விலையவரை யொழித்தெவ்வா றுறுவே

(இ-ள்) பூர்வத்திற்செய்த தவத்தினாலும், இக்கணேச தீர்த்தத்தில் மூழ்கிய பலத்தினாலும் உங்களுடைய தரிசனமெனக்குக் கிடைத்தது. தேவர்களும் வணங்கத்தக்க பெருந்தவமுடையவர்களே! (என்தாயாகிய) சாருகாசினியுடன் வீமராசன் பொருந்தி நெருங்கிய பெருந்தவஞ்செய்து என்னைப்பூமியில் (மகனாகப்) பெற்றனர். (அவர்கட்குத்துணை) வேறொருவருமிலர் அவர்களை யெவ்வாறு விலக்கிவிட்டுவருவேனென்று (உருக்குமாங்கதன்) கூறினன். எ-று. (௧௨)

அறங்கிளரும் பெருங்கணத்தோ ரதுகேட்டுத் திருவுள்ளத் தலர்ச்சிகாட்டிக்
கறங்குதிரைப் பெருங்கடல்சூழ் கண்ணகன்ஞாலம் புரக்குங்காவலோய்கே
ணிறங்கிளர்பன் மலரணிந்த வித்தீர்த்தத் தவர்தம்மை நினைந்து தோய்ந்து
பிறங்குதருப் பணம்புரியி னவருமுடன் வருவரெனப் பேசி னாரால்.

(இ-ள்) தருமம் விளங்கும் பெருமைவாய்ந்த கணத்தலைவர்கள் அதனைச் செவியேற்றுத் தமது நன்மனத்துள்ள மகிழ்வினை வெளிப்படுத்தி, மறிகின்ற அலைகளையுடைய பெரியகடல்சூழ்ந்த இடமகன்ற உலகத்தைக்காக்கும் உருக்குமாங்கத மன்னனே! கேட்பாயாக. நிறம் விளங்கும் பலமலர்களையுடைய இந்தத்தீர்த்தத்திலே அவர்களைக்கருதிஸ்நானஞ்செய்து, விளங்குகின்ற தருப்பணஞ்செய்தால் அவர்களும் உன்னுடனே வருவார்களென்று சொன்னார்கள். எ-று.

கறங்குதல் - சுழலல். (௧௩)

கணங்களுரைத் தமைகேட்டுக் காவலனு முடிந்தபசுந் தருப்பை வைத்திட்
டிணங்குதருப் பையுமாகிய தருப்பைமக னாயுமிருக் கின்றாய் வேதன்
னணங்குறப்பப் படைத்திட்டப் பட்டாயாரைக் குறித்துன்னை யாட்டினாலும்
பிணங்கறுநன் பயனவர்க்குக் கொடுக்கின்றா யெனப்பேசிப் பெருநீ ராட்டி.

(இ - ள்) கணத்தலைவர்கள் கூறியதைக்கேட்டு, உருக்குமாங்கதனும், முடியிட்ட பசியதருப்பையை வைத்து, பொருந்திய தருப்பையுமாயினை, தருப்பைமகனுயுமிருக்கின்றனை, பிரமதேவனால் துன்பமொழியப்படைத்திடப்பட்டனை எவனோ நின்னைத் தந்து உன்னை நீராட்டினாலும் அவர்கட்குக் குற்றமற நல்லபலனைக் கொடுக்கின்றனை யென்றுகூறி, மிக்க நீரால்பிடேகித்து எ - று.

"தருப்பையு மாகிய தருப்பை மகனுமிருக்கின்றாய்"—என்றது நீயே மூர்த்தியும் மூர்த்திமானுமாயுள்ளனை யென்றபோலும். (கச)

தந்தைதாய் முதலோரைக் குறித்துநறும் புனற்றீர்த்தந் தானு மாடிச்
சிந்தையுறு மகிழ்வோடுங் கரையேறி யருள்செய்த திவ்வி நல்யா
ழுந்துமு னியந்த தீர்த்தத்தை மிகப்போற்றி யமல முற்றுன்
வந்துளார் தாமுமதி லுடனாடித் தெய்வவுரு மருவி னாரால்.

(இ - ள்) உருக்குமாங்கதனும் தந்தைதாய் முதலானவர்களைக் கருதி நல்ல கணேசதீர்த்தத்திலே மூழ்கி மனத்தினின்றொழியாத களிப்புடன் கரையிலேறி, தனக்கு அநுக்கிரகித்த கடவுளின் நல்ல மகதியாழினையேந்திய நாரதமுனிவரைத் தியானித்து, கணேசதீர்த்தத்தைத் துதிசெய்து புனிதமாயினன் உடன்வந்துள்ள சேனைகாவலர் முதலியவர்களும் அத்தீர்த்தத்தில் (அவ்வுருக்குமாங்கதனோடு) உடன்மூழ்கித் தெய்வவடிவத்தை யடைந்தார்கள் எ - று. (கரு)

மறுவலும்பங் கினிதிருந்த கணேசர்திருவடிப்பூசை யியற்றித் தேசு
முறுதுவிமா னத்தடுத்த சேனையொடு மொருங்கேறி முழுதெண் பன்ன
னுறுதியொடு கவுண்டினிய நகர்சார்ந்து தானபல னுயிர்க்கீந் தான்.
பெறுமுறையிற் கொள்கக்கொடுத்தான் சேனைகளு மவரவர்க்குப் பேணியீந்

(இ - ள்) கிரீடமணிந்த உருக்குமாங்கத மன்னன் மீண்டும் அவ்விடத்தில் இனிதாக விருந்த சித்திவிநாயகப்பெருமானுடைய திருவடியிற் பூசையைச்செய்து, தன்னையடுத்த சேனையுடனே, ஒளிவீசும் தெய்வவிமானத்தில் ஒன்றுகவேறி, உறுதியோடு கவுண்டினிய நகரத்தையடைந்து, பிராமணர் முதலானவர்களுக்குத் தானபலனைப் பெறுமுறையோடு பெறும்படி கொடுத்தனன் சேனைகாவலர்களும் (தங்கடங்கட்குரிய) அவரவர்களுக்கு விரும்பிக்கொடுத்தார்கள் எ - று. (கசு)

எம்பெருமான் றிருவருளால் வெவ்வேறு விமானங்க ளெய்த வந்தப்
பம்புநக ராசரும்வீ மனமுதலோ ரொருவரும் பணிந்தங் கெய்தி
யும்பர்தொழ வுருக்குமாங் கதனோடுங் கணேசர்திரு வுலகஞ் சேர்ந்தார்
நம்பியசீர் வியாதமுனி யறிவாயென் றலரிருந்தோ னவிற்றினானால்.

(இ - ள்) எமது பெருமானாகிய விநாயகக்கடவுளுடைய திருவருளால் வெவ்வேறாகிய விமானங்கள் வந்தடைய, அந்த வளநெருங்கிய கவுண்டினியநகரத்தை யரசுசெய்யும் வீமராசன் முதலானவர்களெல்லோரும் வணங்கி அங்கடைந்து, தேவா

கள் பணியும்படி உருக்குமாங்கதனுடன் கணேசப்பெருமானுடைய சிறந்த உலகத்தை யடைந்தார்கள். மிக்க கீர்த்தியையுடைய வியாசமுனிவனே! அறிவாயாகவென்று, தாமரை மலரிலிருந்த பிரமதேவன் உரைத்தருளினன். எ - று. (௧௭)

அருந்தவத்து விசுவா மித்திரனை வீமனுற லாதி யாகத்
திருந்துமக னுடன்முத்தி சேர்ந்திடத்த லீறாகத் திகழா நின்ற
பொருந்துபல சரிதமுங்கேட் டனைசோம காந்தவினிப் புகலக் கேளாய் [ன்.
பெருந்தவத்துக் கிருச்சமதனுபாசனையென் றுரைசெயவான் பிருகுமேலோ

(இ - ள்) அரியதவத்தையுடைய விசுவாமித்திர முனிவனை வீமராசன் அடுத்தது முதலாகத் திருந்திய தன் மகனாகிய உருக்குமாங்கதராசனுடன் (அவன்) முத்தியடைந்ததீறாக விளங்குகின்ற பொருந்திய பல சரிதங்களையுங் கேட்டனை, சோமகாந்தராசனே! இனிப் பெருந்தவத்தையுடைய கிருச்சமதனுபாசித்த வகையையுஞ் சொல்லக் கேட்பாயாக வென்று, மேலோனாகிய பிருகுமுனிவன் சொல்லலாயினன் எ - று.

சோமகாந்தன் பிருகுமுனியை யடுத்த படலமுதல் யாவும் பிருகுமுனிவராலேயே சொல்லப்பட்டனவென்றும், பிறசரிதங்கள் இடையிடையே அவ்வவராலே சொல்லப்பட்டனவென்றுங்கொள்க. (௧௮)

உருக்குமாங்கதன் முத்தியடைந்த படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௩௫௭௭

கிருச்சமதருபதேசம்பெற்றபடலம்.

மருக்கொண் மாமலரி னானைமுக நோக்கி மடமை
முருக்கி மேதகுவி யாதமுனி முன்ன வன்முன்
உருக்கு மாங்கதனெ ழுந்தபின்மு குந்தை யுறுநோய்ப்
பெருக்க மெங்ஙனமொ ழிந்தருது பேசு கவென.

(இ - ள்) வாசம்பொருந்திய தாமரைமலரிலெழுந்தருளிய பிரமதேவனுடைய திருமுகத்தைப்பார்த்து, அறியாமையை யொழித்த மேம்பட்ட வியாதமுனிவனாகிய பெரியோன், முன்னே உருக்குமாங்கதன் (இணங்காது) சென்ற பிறகு, முகுந்தையென்பவள் பொருந்திய காமநோயப்பெருக்க மெவ்வாறகன்றது? சொல்வாயாகவெனக் கேட்க எ - று.

முகுந்தையுறுநோய்ப் பெருக்கமென்றது உருக்குமாங்கதன் சாபம்பெற்ற படலத்திற் கூறப்பட்டுளது. ஆங்குக் கண்டுகொள்க. (௧)

முள்ள ளைக்கமல நாண்மலரி னானமொ ழிகுவான்
றள்ளு மெல்லிடைமு குந்தையவள் சாப மரசன்
கொள்ள வுய்த்தபினு மம்மாகுடி கொண்டெ ழுமெழு
கொள்ளெ ரிக்கதுவி யாங்குளமெ கிழ்ந்து ருகினாள்.

(இ - ள்.) முட்பொருந்திய அடியையுடைய புதிய தாமரை மலரிலெழுந்தருளிய பிரமதேவன் கூறுகின்றான்: தள்ளாடிய மெல்லிய இடையையுடைய முகுந்தை

யானவன் உருக்குமாங்கதமன்னவன் சாபத்தைக்கொள்ளும்படி கொடுத்தபின்னரும், மயக்கமானது குடிகொண்டு விளங்க, மெழுகானது ஒளிபொருந்திய அக்கினியிற் பட்டாற்போல மனங்கசிந்து வருந்தினள். எ - று.

அணை - அடி. நாண்மலர் - அன்றலர்ந்த மலர், புதியமலரெனக். தன்று மெல்லிடை யென்றது—"உபயதனமசையிலொடியுமிடை" என்றும், "ரககாற்றுக் காற்றுவிடை" என்றும், 'மருங்கோரிலக்கணம [நன்னூல்]' என்றும் கூறியுள்ளன போலச் சுமையிறக்காது துவளுமிடையென்பதாம். (௨)

வண்டி ரைக்குமலர் நந்தனவ னத்து லவுவார்
டண்டி ரைக்குளிர்த டாகமுறு வாள்பி ணைபுறங்
கொண்டி ரைக்குவிரை மானைகலைகள் கண்டு குழைவாள்
பண்டி ரைக்குமலி வேய்ங்குழல்ப ரப்ப வழிவாள்.

(இ - ள்) வண்டுகளொலிக்கும் மலர்கள் பொருந்திய நந்தனவனத்திலுலாவு வாள்; தடம்பமாகிய அலைகளையுடைய குளிர்ந்த தடாகத்தை யடைவாள். தமது பிணை யையுடன்கொண்டு இணைக்காக விரைந்துசெல்லும் மானகலைகளைக் கண்டு உருகுவாள். பண்ணொலி யெழுப்பும் அழகிய வேய்ங்குழலொலிபெருப்ப மனமழிவாள். எ - று.

வேய் - மூங்கில். வேய்க்குழல் - புல்லாங்குழல். (௩)

மந்த மாருதம ருங்கசைய வன்னி விரவி
வந்த தென்கொலவனி யேயெனம ருண்டு முனிவா
ளந்தி லான்மணித ழங்கவடு கால னொலியோ
சிந்து கின்றதுயி ரென்றுதெரு மந்து கவல்வாள்.

(இ - ள்) இளந்தென்றற்காற்றானது பக்கத்திலுலாவ, காற்றே! அக்கினி யோடு கலந்துவந்த தென்னசாரணமென்று மயங்கிக்கோபிப்பாள்; அவ்விடத்தில், பசு வின் (கழுத்திலுள்ள) மணியொலிக்க, கொல்லுகின்ற இயமனுடையோ உயிரழி கின்றதென்று சுழன்று துன்புறுவாள். எ - று.

அந்தில் என்றதை "அந்திலாங்கசைநிலை இடப்பொருளாகும்" என்றதால் அசைநிலையெனக் கொள்ளினுமாம். அவ்விடத்திலென்றும். (௪)

சிறுமை யாளர்கள் பிறர்க்குவினை தீங்கு பெருமை
யுறுநர் செய்கலரொ லிக்கடனம ணிக்கு ழலென
முறுகு வெந்துயர மூடுவது னக்கு முறையோ
குறுமு னிக்குரிசில் குன்றுளனெ னக்கு றுவாள்.

(இ - ள்) கீழ்மக்கள் பிறர்க்குண்டாக்குந் தீமையைப் பெருமையாளர்கள் செய்யமாட்டார்கள்; ஒலிக்கின்ற கடலும் அழகிய குழலும்போலக் கொடுமையாகிய வெவ்விய துன்பத்தை யெழுப்புவது உனக்கு நியாயமோ? குறுமுனிவராகிய அகத்தியப்பெருமான் பொதியமலையிலிருக்கின்றனரென்று வாய்குழறிக் கூறுவாள். எ - று. (௫)

வட்டி கைப்பலகை மீதிலவன் மாணு ருவெலா
மொட்டி யொட்டினளவ ரிந்துருக ரத்தி னணையு
மொட்டி ளங்கிளமு லைத்துணைமு யங்கும் வதனந்
தொட்டு முத்தமிடு மாலையென வேது வளுறும்.

(இ - ள்.) சித்திரப்பலகையின்மேலே அவ்வுருக்குமாங்கதனுடைய மாட்சிமைப்பட்ட வடிவமுழுவதையும் மிகவுமொட்டி யெழுதி, பொருந்திய கையினால் தழுவுவாள். கோங்கரும்புபோன்ற ஒளிவீசும் இரண்டு இளமுலைகளாலு முயங்குவாள். முகத்தைத்தொட்டுமுத்தமிடுவாள். மலர்மாலையைப்போலத் துவளுவாள். எ - று. (௬)

நெட்டுயிர்ப்பெறியு நோதளிர்து வண்டு கருகப்
பட்ட பட்டவிட மெங்குமுயர் கொப்புள் பரவக்
கட்டு ணீர்ப்புனல்க விழ்க்குமுரு வெம்மை வெருவி
விட்ட கன்றதென மேகலையொ துங்க விழுமால்.

(இ - ள்.) பெருமூச்சுவிடுவாள் தளிர்கள் துவண்டு கருகும்படி அவைபட்டவிடங்களிலெல்லாம் பெரிய கொப்புளங்கள் பரவவும், இருகண்களினின்றும் நீரைச் சொரிவாள். உருவத்தின் வெப்பத்திற்குப் பயந்து விடுத்துச் சென்றதுபோல மேகலாபரணமானது ஒதுங்கும்படி விழுவாள் எ - று. [illegible]

கோதளிரெனப்பதற்கு அழகிய தளிரென்றுவது, அவர் மேனியையொத்த தளிரென்றுவது பொருள்கூறுக (௭)

உற்று ழந்தவவ டன்னினுமு னாகக் வரிந்தய
முற்றும் வெந்துயரின் மூழ்கினிலை மீது முடிசாய்த்த
தற்ற முற்றவச மாயினள் ளைந்து மறியாப்
பொற்ற விந்திரனயி னைழந்துமயல் பூண்டு வருவான்.

(இ - ள்) (ஆடவனுடன்) பொருந்திவருந்தியவளைக்காட்டிலும் சொல்லமுடியாத துயராய முழுதும் பெருந்துன்பத்தில் மூழ்கி, பூமியின்மேல் சிரசைச் சாய்த்துப் பரவசமானவள் அவற்றையெல்லா முணர்ந்து மனமழிந்த சிறுமலைபோன்ற இந்திரன் (அவளை) விரும்பிக் காமமயக்கமுற்று (உருவமாறி) வருவானாயினன் எ - று (௮)

வேறு

கழல்படுத்த திறங்கிய கமல பாதமுங்
கழலொலி செயுங்கணைக் காலு நெஞ்செலாங்
கழல்வேள் சரங்களிற் கதுவி மாதரார்
கழலிளங் காயபொரக் கவின்செய் கச்சமே.

(இ - ள்) வீரக்கழலைத்துக்கட்டிய தாமரைபோன்றபாதமும், வீரசண்டாமணியானது ஓசையிடுகின்ற கணைக்காலும், மனமுழுதும் கழலும்படி மன்மதபாணங்களாற் சுடப்பட்டுள்ள முருந்தையின் காலிலணிந்த இளங்காய்போல அழகுசெய்யுங் கச்சும். எ - று

இதுமுதல் மூன்றுசெய்யுள்களால் இந்திரன் முருந்தைபால் வந்தவகையை வருணிக்கின்றனர். (௯)

விரற்றலைப் புட்டிலும் விளங்கு செங்கையி
னரற்றெறும் நாணுடு சிலையு மார்பத்
மிரைத்துமென் மலர்த்தொடை யிசைந்த மார்புமு
கிரைத்தடங் கணைப்புதை நிலவு தோள்களும்.

(இ - ள்.) விரலினுனியில் புட்டிலும், விளங்குகின்ற சிவந்தகையிலே ஒலிக்கின்ற வலிமையுடைய நாணைப்பூட்டிய வில்லும், வணங்கவொளித்து மெல்லிய மலர்மாலை பொருந்திய மார்பும், வரிசையாகிய பரந்த அம்புகள் புதைந்து விளங்கும் தோள்களும் எ - று. (௧௦)

பொற்புரி யாற்புறஞ் சூழ்ந்த குஞ்சியும்
பொற்பமை யுருக்குமாங் கதன்மெய்ப் புல்லிய
பொற்பெலாந் தழீஇக்கொடு புலம்பிச் சோர்ந்தவப்
பொற்பினன் மருங்குறப் பொருக்கென றெய்தினான்.

(இ - ள்.) பொற்புரியினாலே புறத்திலே கட்டிய குடுமியும் அழகு செய்யும்படி உருக்குமாங்கதராசன் தேகத்திலே பொருந்திய அழகு முழுவதையுந் தழுவிக்கொண்டு புலம்பிச் சோர்ந்துள்ள அவ்வழகியாகிய முருந்தையின் சமீபத்திலே பொருந்தவிரைந்து சேர்ந்தனன் எ - று.

குஞ்சி - ஆண்மக்கள் தலைமயிர் பெண் தலைமயிரைக் குழலென்றும் அளகமென்றுஞ் சொல்லுவர். (௧௧)

மருக்குழன் மாதரா மருந்தைப் போந்தவ
னுருக்குமாங் கதனெனப் பிறழ்ந்தா னெனப்
பொருக்கென வெழுந்தனள் புக்க வஞ்சனுந்
தருக்குற நயமொழி தழீஇக் கூறினான்.

(இ - ள்.) மணந்தங்கிய கூந்தலையுடைய முருந்தையென்பவள் (தன் கருத்தைத்) தடுத்துச்சென்ற அவ்வுருக்குமாங்கத மன்னனும் திரும்பி (தன்பால்விருப்புக்கொண்டு) வந்தடைந்தனனென்று, விரைந்து எழுந்தனள் (உருக்குமாங்கதனைப்போல வேடங்கொண்டு)வந்த வஞ்சகனாகிய இந்திரனும் அகங்காரமுற்று நயவார்த்தைகளோடு தழுவிச்சொல்லுகின்றான். எ - று. (௧௨)

ஏந்திள வனமுலை யிரண்டும் பாய்ந்துதண்
சாந்தகங் கிழிதரத் தழுவிக் கைகளான்
மோந்தனன் புட்குரன் முழக்கங் கேட்டனன்
மாந்தினன் இதழ்நறா மருவிப் புல்லினான்.

(இ - ள்.) அணைந்த இளமைவாய்ந்த அழகிய முலைகளிரண்டும் பாய்ந்து குளிர்ந்த சாந்தப்பூச்சானது கிழிபடும்படி தழுவிக்கொண்டு கைகளாலே மோந்தனன், (எண்வகைப்) புட்குரல்களின் (ஒலியைக்கண்டத்திலே) முழங்கக்கேட்டனன் இதழூறலாகிய தேனைப்பருகினன், அவளைத் தழுவிக்கூடினன் எ - று.

புட்குரலெட்டுமுன் விளக்கப்பட்டன. (௧௩)

வாட்டடங் கண்ணியு மகிழ்ந்தன் றூறுங்
கோட்டிளங் குவிமுலை கோட்டு மண்கொள
மூட்டிய காதலின் முயங்கிச் செய்யவா
யூட்டமும் பருகினா ளொப்புற் றுளரோ.

(இ - ள்.) வாட்படைபோலும் பரந்த கண்களையுடைய முருந்தையும் மீண்டும் அவன்மார்பிலே வட்டமாகிய இளமைதங்கிய குவிந்தமுலையானது கோட்டுமண்

கொள்ளும்படி அதிகரிக்கச்செய்த ஆசையுடன் மூயக்குற்று, சிவந்தவாயிதனையும் பருகினள். சந்தோஷமுற்றனள். எ - று.

யானையானது மதமுற்றகாலத்தில் நிலத்தைக் கொம்பாற்குத்தி மணலைக் கொள்வதுபோல, முலையாகிய யானையும் அவன் மார்பிற் குத்திக் கோட்டுமண் கொள வென்றோர் (௪௪)

துடக்கின னிந்திர னென்று சூர்த்தவேனா
முடக்கிய தடக்கையின் முனைகொ ளம்பெலா
மடக்கின னிமிர்த்தகை வரிவிற் றாழ்த்தின
னடக்கினன முகுந்தையோ டமர்ந்த போரினே.

(இ - ள்) இந்திரன் முயங்கினானென்று, அரசங்கொடுத்த மன்மதன் முடக்கிய பரந்த கையிலுள்ள கூர்மைவாய்ந்த அம்புகளையெல்லா மடக்கினன். தூக்கிய கையிற்றாங்கிய வரிகட்டமைந்த வில்லைத் தாழ்த்தினன் முகுந்தையோடு செய்த காமப்போரை யடக்கினன் எ - று

இச்செயயுளால் முகுந்தை காமமயக்கொழிந்தாளென்றபடி. (௪௫)

தருந்தனிக கலவியா றழைத்த நெருநெசாடு
முகுந்தைதன் முனிபபணி முடிபபச் சென்றனள்
புருந்தகை தவவுருப போககிப போந்தன
னருந்தழல வயிரவே னுதன விண்ணமே.

(இ - ள்.) தகுதியாகிய ஒப்பற்ற புணர்ச்சியெய்கத்தால நிரம்பிய மனத்துடன் முகுந்தையானவள் தன கணவன பணிவிடையைச் செய்யச்சென்றனள். பிரகாசிக்கின்ற தீயைச்சொரியும வச்சிரவேலேந்தாநிய ஆறுகுற்ற தேவராசனாகிய இந்திரன் தான்வந்த வஞ்சகவடிவதை யொழித்துத் தேவலோகத்தை யடைந்தனன். எ-று (௪௬)

மற்றிழை முகுந்தைதன் மோட்டி னிந்திரற
கற்றைநாட கருக்கரித்தை யிரண்டினச
சொற்றகு மதியிடைத் தோன்ற லீன்றனள
பற்றிய கருங்கடல பரிதி கானறென.

(இ - ள்) முற்றிய ஆபரணமணிந்த முகுந்தையென்பவள் தனவயிற்றில இந்திரனுக்கு அந்தினத்திலே கருப்பமடைந்து, பத்தாவது ஒன்று சொல்லத்தக்க மாதத்தில், கருமைபொருந்திய சமுத்திரமானது சூரியனைப்பெற்றாற்போல ஓர் புதல்வனைப் பெற்றனள் எ - று

ஐயிரண்டெனச்சொற்றகுமதி - பத்தாமாதம் (௪௭)

அண்டமு நடுக்குற வார்த்து வந்துவீழ்ந்
தொண்டரா கிடந்தொளிர் கின்ற மைந்தனைக
கொண்டனா ரநதவ னுககுங் குறித்த தோகலா
மண்டிய பெருந்தவன் மகிழ்ந்தெ டுத்தனன.

(இ ள்.) அண்டமும் நடுங்கும்படி ஆர்ப்பரித்து வந்து வீழ்ந்து ஒள்ளிய பூமியிற் கிடந்து பிரகாசிக்கின்ற புத்திரனை, மேகவாகனனாகிய இந்திரனுக்கு உதித்ததை யுணராத மிகக பெருந்தவமுடைய கவிமுனிவன் களிப்புற்றெடுத்தனன். எ - று.

கவியெனப் பட்டவக் கருணை மாதவன்
சவிமணி மைந்தற்குச் சாத காதிக
ளவிசொரிந் தமரருக் கன்பு செய்திரும்
புவியவர் புகழ்தரப் போற்றிச் செய்தனன்.

(இ - ள்) கவிமுனிவனென்று சொல்லப்பட்ட அக்கிருபைவாய்ந்த பெருந் தவமுடையவன் நிறமமைந்த மாணிக்கம் போன்ற புதல்வனுக்கு, தேவர்களுக்கு அவி சொரிந்து அன்புசெய்து, பெரிய பூலோகத்தார் புகழும்படி சாதகாதி கருமங்கள் மேம்படச்செய்தனன் எ - று.

அவி - தேவருணவு (௧௯)

வேறு.

குருச்சந் திரனை வென்றமுகக் கோல முகுந்தை தனிமைந்த
னுருச்சந் தவரி சனவிழுதும் பிறவுந் திமிர்ந்தொண் புனலாட்டித்
தருச்சந் தொடுகா ரகிற்புகைத்துத் தனப்பா லூட்டப் பனிருநாள்
திருச்ச மதனென் றொருநாமங் கிளந்தான் மகற்குக் கிளர்தவத்தோன்.

(இ - ள்) நிரம்பிய (பூரண) சந்திரனை வென்றுகொண்ட முகத்தையுடைய அழகிய முகுந்தையென்பவர் ஒப்பற்ற புத்திரனுடைய சந்தனமும் அரிசனமும் விழுதுகளும் பொடித்துக் கலந்த ஒளிய நீரால் முழுக்காட்டி, தேவதாரு சந்தனக் கட்டை காரகிற்கட்டை முதலியவற்றின் பொடியாற்புகையிட்டு, முலைப்பாலூட்டி வளர்க்க, விளங்குகின்ற தவத்தையுடைய கவிமுனிவன் பன்னிரண்டாந் தினத்தில் திருச்சமதனென்னும் ஒருபெயராகக் கூறி நாமகரணஞ்செய்தனன். எ - று. (௨௦)

கருப்ப நிலைக்கா றுமாண்டிற் கரிசின் முறையா லுபநயனம்
விருப்பி னியற்றி மறையாதி விளங்கத் தெரித்தான் கவியென்பான்
திருச்ச மதனு மொருமுறையிற் கேட்டு முழுதுந் தெரிந்துணர்ந்து
வெருச்செய் பவத்தின் வேரறுக்கும் வெற்றிப் படைபோ லாயினான்.

(இ - ள்) கவிமுனிவன் திருச்சமதன் ஜனித்ததற்கு ஆறாம் வருடத்தில், குற்றமற்ற முறைப்படி உபநயனத்தை ஆசையோடுசெய்து, வேதமுதலியவற்றை விளங்கும்படி யுணர்த்தினன் திருச்சமதனும் ஒரேதரங்கேட்டு (ஐயந் திரிபு அறியாமையொழிய) முற்றும் ஆராய்ந்தறிந்து அச்சத்தைச் செய்யும் பிறவியின் வேரையறுக்கும் ஜயப் படைபோலாயினன். எ - று. (௨௧)

ஒழுக்க முதலா கியநெறியி னிறழா தொழுகக் கவிமகிழ்ந்து
வழுக்கி லாத கஜானந்து வாவென மனுவை யுபதேசித்
தழுக்கி லாதா யிம்மனுவை யனுட்டிப் போதுங் கணிவிழைவு
முழுக்க வருள்வர் கணேசரென மொழிந்தா னவனு மதுபெற்றான்.

(இ - ள்) ஒழுக்கமுதலாகிய வழியிற் பிறழாது நடக்க, கவிமுனிவன் களிப்புற்று, குற்றமில்லாத "கஜானந்தவா" என்னும் மந்திரத்தை யுபதேசித்து, களங்கமில்லாதவனே! இம்மந்திரத்தை அனுட்டிப்புக் கிரமத்துடன் கணிக்கக்கடவை. (அதனால்) கணேசப்பெருமான் உன்விருப்பம் முற்றுப்பெற அநுக்கிரகிப்பாரென்று கூறினன். திருச்சமதனும் அம்மந்திரத்தைப்பெற்றனன் எ - று. (௨௨)

நாளு நியதிக் கடன்முடித்து நாம வினைக டொந்தென்னை
யாளு மைங்கைக் கணேசர்திரு வடித்தா மரைக ளுளத்திருத்தி
மூளு மன்பி லவர்மனுவை முறையி னனுட்டிப் பொடுங்கணித்துக்
கேளும் பிறக்கென் றிடவுலகங் கேண்மை கொள்ள விளங்குநாள்.

(இ - ள்.) நாடோறும் நித்தியகருமத்தை முடித்து, அசத்தைத்தரும வினைகளையொழித்து என்னை யனுக்கிரகிக்கும் ஐந்து திருக்கரங்களையுடைய கணேசப்பெருமான் திருவடித்தாமரைகளை மனதிலிருக்கச்செய்து அதிகரித்த ஆசையுடன் அவருடைய திருமந்திரத்தை முறைப்படி அநுட்டிப்புடன் கணித்து, உறவினரும் பின்னென்று சொல்ல உலகமுழுவதும் நட்புக்கொள்ளும்படி விளங்குங் காலத்தில். எ - று.

துள்ளிக் கயல்வா னிடைத்தாவத் துடுமென விறங்கி யிளநாகு
வள்ளை குதட்டுந் தடம்புடைத்த மகத நாட்டிற் கோனெவர்க்குந்
தள்ளை யனையான் பெருங்கொடையான் றானசூர னெனும்பெயரான்
றுன்னை யகன்ற வுள்ளத்துத் தொடுத்த தருமசிந்தனையான்.

(இ - ள்) சேறகெண்டைகள் துள்ளி ஆகாயத்திலே தாவவும், இளங்கன்றுகள் விரைந்திறங்கி வள்ளைக்கொடியைக் குதட்டுகின்ற தடஞ்சூழ்ந்த மகதநாட்டரசன் எல்லோருக்குந் தாயைப்போன்றவன், மிக்க ஈகைத்தன்மையுடையவன், தானசூரனென்னும் பெயருடையவன், துன்பமகன்ற மனத்திலே பொருந்திய தருமசிந்தனையையுடையவன். எ - று. (௨௪)

அன்ன மருட்டு நடைக்கற்பி னுன்ற மனைவி யம்பிகையும்
பொன்னை வெள்ளி தன்னைமருட்டும் புந்தியமைந்த வமைச்சர்களுந்
தன்ன துடனு முயிருமெனத் தக்க பரபால் வழியொழுக
வின்ன லறச்செங் கோலோச்சி யிருந்து மகிழுங் காலத்தில்.

(இ - ள்) அன்னத்தை மயங்கச்செய்யும் நடையையும் கற்பின் மேம்பாட்டையுமுடைய மனைவியாகிய அம்பிகையென்பவளும், பொன்னையும் வெள்ளியையும் மயக்கிய புத்தியமைந்த மந்திரிகளும், தன்னுடைய உடலும் உயிருமென்று சொல்லத்தக்க முறைப்படி நீதிவழியேயொழுகவும் துன்பமகலவும் செங்கோல் செலுத்திக்கொண்டு களிப்புற்றிருக்குங்காலத்தில். எ - று. (௨௫)

பெற்ற குரவன் றனைக்குறித்த பிதிராக் கூட்டு நாளெய்த
முற்ற வுணர்ந்த வசிட்டனையு முழுதுந் தவவத் திரிதனையு
மற்று முயர்ந்த முனிவரையும் வருவித் தானம் றவரோடுங்
கற்று மிகுந்த கிருச்சமதன் கலந்து கலைப்போ ராற்றினன்.

(இ - ள்) பெற்றதந்தை நிமித்தமாகப் பிதிராச்சுக்குகந்தினம் [சிராத்தநாள்] வரவும், முழுவதுமுணர்ந்த வசிட்டமுனிவனையும் முழுமையாகிய தவத்தையுடைய அத்திரிமுனிவனையும், அவரல்லாத உயர்ந்த பிறமுனிவர்களையும் வருவித்தனன். அவர்களுடன் (ஞாலமகளோக) கற்றுமேம்பாடுற்ற கிருச்சமதமுனிவன் அளவளாவிச் சாத்திரப்போர் செய்தனன் எ - று. (௨௬)

வாதி னேற்ற வத்திரிபவ வாதினை வெல்ல மாட்டாது
சாத லனைய கொடுங்கோபத் தழல்கொப் புளிக்க வெதிர்நோக்கிப்

பேதை நினது பிறப்பினையும் பெருமை யனைத்துஞ் சுடுசுடுநீ
யோது முனிவன் மகனல்லை யுருக்கு மாங்கதன் மகனென்றான்.

(இ-ள்) சாஸ்திரவாதத்தாலெதிர்த்த அத்திரிமுனிவர் அவைகளிலெல்லாம் வல்லபமில்லாமல், இறப்பினீங்காத கொடிய கோபாக்கினியானது கொப்புளிக்க எதிரேபார்த்து, அறிவில்லாதவனே! உன் பிறவியையும் உன் பிரதாபங்களையுஞ் சுடுசுடு, நீ சொல்லிய கவிமுனிவர் புதல்வனல்லை. உருக்குமாங்கதனென்னும் மன்னவன் மகனென்றுகூறினார் எ-று. (௨௭)

இந்தச் சபையி னுடங்கிருத்த லில்லா தெங்க ளோடொப்பச்
சிந்தைக் கினிய பூசனையுஞ் செய்யக் கூடா தெழுந்தோல்லை
யந்தப் புடையே குதியெனவே யழன்றத் திரிகை மறித்துரைப்பச்
சந்தப் பொடியிற் றுளிர்மேனித் தவஞ்சால் கிருச்ச மதன்வெகுண்டு.

(இ-ள்) நீ இந்தச் சபையினிடவிலிருத்தல் கூடாது, எங்களோடு சமானமாக மனத்திற்கினிய பூசையையுஞ் செய்யக்கூடாது விரைவில் அந்தப்பக்கத்திற் செல்லக்கடவையென்று கோபித்து, அத்திரிமுனிவன் கையை மறித்துச்சொல்ல, சந்தனப்பொடியாற் பிரகாசிக்கின்ற திருமேனியையுடைய தவமிருந்த கிருச்சமதமுனிவன் கோபித்து எ-று. (௨௮)

விழிகள் சிவப்ப விதழ்துடிப்ப விளங்கு புருவ நுதலேற
வழிவு மருவிற் றெனச்சிலர்க ளஞ்சி யகல முன்றுருமம்
பொழிகட் டழலா லவிப்பானைப் போற் பொங்கி யெழுந்து சபைதன்னிற்
குழிய வசிட்டன் முதலான குழுவி னோர்மு னிதுசொன்னான்.

(இ-ள்) கண்கள் சிவக்கவும், உதடு (படபடென்று) துடிக்கவும், பிரகாசிக்கின்ற புருவமானது நெற்றியிலேறவும், அழிவுகாலஞ் சம்பவித்ததென்று அங்குள்ள சிலர் பயந்தோடவும், திரிலோகங்களையும் சிந்துகின்ற கண்ணினெருப்பால் அழிக்கின்ற உருத்திரமூர்த்திபோலக் கோபித்தெழுந்து சபையிற்கூடியுள்ள வசிட்டர் முதலிய முனிவர்கூட்டத்தினை முன்னின்று இதனைச் சொல்கின்றான் எ-று. (௨௯)

அரசன் மகன்யா னல்லீர்நீ ரவமா னத்தா லவமதித்தீர்
பாவுந் தவத்துக் கவியென்பான் பால னானேன் யானக்கால்
விரவி யிருந்த நும்மையெலாம் விழித்துப் பார்க்கு முன்பவித்துச்
சுரர்கள் வியப்பப் புகழ்நடுவே னென்று துணுக்கென் றேகினான்.

(இ-ள்) யான் (உருக்குமாங்கத) அரசன் புத்திரனல்லேன், நீங்கள் அவமானத்தால் (என்னை) அவமதித்தீர்கள் துதிக்கத்தக்க தவத்தையுடைய கவி முனிவனென்பவனுக்குப் புத்திரனாய்ப் பிறந்தேன் யான் பிறகாலத்தில், கூடியிருந்த உங்களையெல்லாங் கண்திறந்து பார்க்குமுன்னரே அழித்துத் தேவர்கள் களிக்க கீர்த்தியை நிலைநிறுத்துவேனென்று விரைந்து சென்றனன் எ-று. (௩0)

மிகுந்த கோபந் தணியாமை வேகத் தொடும்போ யீன்றாளை
முகுந்தாய் மிகுந்த தூரத்தாயென் முன்னே வாவென் பிதாயாரே
நிகழ்ந்த துள்ள படியிங்கே நிகழ்த்து வாயென் றன்முகுந்தை
நெகிழ்ந்து நெஞ்ச நடுநடுங்கி நிகழ்ந்த படியே யுரைசெய்தாள்.

(இ-ள்.) அதிகரித்த கோபமடங்காமல் விரைவோடுசென்று, தன்னைப்பெற்ற தாயை (நோக்கி) முகுந்தாய்! மிக்ககாமமுடையவளே! என்முன்னே வருக எனக்குத் தந்தையாவன்? நடந்ததை உள்ளபடியே கூறுவாயாகவென்றனன். முகுந்தை (அதனைக்கேட்டு) மனந்தளர்ந்து நடுநடுங்கி நடந்த விருத்தாந்தத்தையே (உண்மையாகச்) சொல்லினள். எ-று.

தூர்த்தை - காமமேலீட்டாற் பலரையும் புணர்பவள். (௩௧)

வேறு.

மிருக வேட்டையின் மேவிய வுருக்குமாங் கதனீர்
பருக வந்தனன் பழியிலா வழகுகண் டவனுக்
குருகி யுன்றனை யுயிர்த்தனே னுணர்கநீ காமம்
பெருகி னிரதையா ரெழுதுநூல் பேசிய முறையால்.

(இ-ள்) மிருகவேட்டைக்காகவந்த உருக்குமாங்கதராசன் (இவ்வாசிரமத்திற்கு) நீர் பருகும்படி வந்தனன் (அவனுடைய) ஒப்பில்லாத தேகப்பொலிவைப்பார்த்து மனமுருகி, மையூட்டிய கண்ணையுடைய மாதர்களுக்கு ஆசையதிகரித்தால் மனஞ்சென்றவழி நடக்க நீதிநூற்களிற் சொல்லியமுறைப்படி, (அவனைக்கூடி) உன்னைப் பெற்றேன் எ-று. (௩௨)

விருப்பின் மைந்தனை யுள்ளவா றிதுவென விளம்ப
நெருப்பின் மேலொரு நெருப்பினை நெடிதுபெய் தாங்குப்
பொருப்பு நேர்தவன் புகைந்துபுள் ளொன்றுநு ழாத
வருப்ப யாவனத் திலந்தையா குகவெனச் சபித்தான்.

(இ-ள்) ஆசையையுடைய மகனே! உள்ளவகை யிதுவென்று (முகுந்தை) கூறவும், நெருப்பின்மேலே வேறொரு நெருப்பை மிகுதியாகப் பெய்தாற்போல, மலைபோன்ற (பெருந்) தவத்தையுடைய கிருத்சமதமுனிவன் கோபித்து, பறவைக் கூட்டங்களுநுழையாத துன்பமமைந்த வனத்தில் இலந்தையாகுகவென்று சாபமிட்டனன். எ-று. (௩௩)

ஒடுங்கி நின்றதா யொருமக னுரைத்தமை கேட்டு
நெடுங்கு ணத்தவ தாயென நினைந்திலை யென்னை
நடுங்கச் செய்தனை யாதலி னீயுமுன் னொடுங்கக்
கொடுங்கு ணச்சிறுமை கூடுக நினக்கெனச் சபித்தாள்.

(இ-ள்) அடங்கிநின்ற முகுந்தையென்னுந் தாயானவள் ஒப்பற்ற தன் மைந்தன்கூறிய சாபமொழியைக்கேட்டு, மிக்க நற்குணமுடையவனே! என்னைத் தாயென்று கருதினையில்லை நடுக்கமடையச் செய்தனை யானபடியால், நீயும் உள்ள நடுங்கும்படி, உனக்குக் கொடுமையாகிய குணத்தையுடைய சிறுமைத்தன்மை வருக வென்று பிரதிசாபந் தந்தனள் எ-று. (௩௪)

கலந்தை வன்றொளி முலையவள் கடுஞ்சா பத்தா
லிலந்தை வந்தெழு வனத்திடை யிலந்தையா யிருந்தாள்
வலந்தை வந்ததோ ஷ மன்னவன் மகன்மையைக் குறித்து
நலந்தை வந்தமா தவனுள நாணியங் கிருந்தான்.

(இ - ள்.) ஆபரணமணியப்பெறறுப் பிரகாசிக்கின்ற குசங்களையுடைய முருக்கதை யெனபவள் தன்னையணுகிய சாபததால, இலநதைகள மூளைத்தவனத்திலே இலந்தைமரமாயிருந்தனள வெறறிபொருநதிய சேனைகள் பொருந்திய உருககுமாங்கதனுடைய புதல்வனுண்மையைக கருதி, நனமைபொருநதிய பெருந்தவததைச்செய்த கிருசசமதமுனிவன மனதில வெட்கங்கொணடு அவவிட ததிலிருநதனன. எ - று (௯௫)

அழிநத மானததின வாழ்தலி னுகதைநயை யொறுத்துக
கழிநது போதலே நன்றெனக் கருதிடு மளவில
வழிநத மாமத முநததவ னருளினவா னவாகருப்
பொழிநத தேனெனப புரநதரன மகனெனக கேட்டான்.

(இ - ள) அழிநத மானத்துடன வாழ்வதைககாட்டிலும் உடலைவெறுத்து இறந்துபோவதே உததமமென நினைககுஙகாலையில, மதமொழுகும யானைமுகததை யுடைய விநாயகக்கடவுளுடைய திருவருளால, தேவாகளுககுச சொரிநத தேனமாரி போல, இநதிரன மகனெனறு சொலலககேடடனன எ - று. (௯௬)

சிறிது சிநதையைத தேறறின னைமதி செய்து
வுறுவ ராதியோ ரனைவரு முறறடி வணங்க
மறுவி னலலாம பொருநது பெனமதித தநதக
குறுவ னததினை விடுதடுதொரு கொடுவனமடுததான

(இ - ள) மனததைச சிறிதுதேறசசெயது அமைதிதத முனிவர் முதலான வாகளெலலாரும பொருநதிய பாதஙகளைப பணியுமபடி, குறறமிலலாத நலலவரததை யடைவோமெனறு யோசிதது, அநதச சிறுவனததைவிடடு வேறொரு பெரிய வனததை யடைநதனன (கிருச்சமதமுனிவன) எ - று

கொடுவனமெனறதால புலி சிஙக முதலிய துஷடமிருகஙகள சஞசரிக்கும் பெருவனமெனககொளக.

தேறறினன - முறறெசசம (௯௭)

இதுமு குநதையின சரிதமென் றிதழ்முறுக் கவிழ்நத
பதும மெனமலாச சேககையான பகாநதனன செயய
மதும லாததிரு மாபினின றுநறவிமனை போநது
முதுத வமபுரி வியாதனு முனிவான் மகிழ

(இ - ள்) இதுவே முகுநதையெனபாளுடைய சரிததிரமென்று, செவ்விய தேனொழுகுந தாமரைமலரில செிக்குந திருமகளை மாாபினினறு விலககிய பூமியில வநது முதிாநத தவததைசசெயத வியாதனெனனும பெயரையுடைய முனிசிரேட்டர் மகிழுமபடி, இதழ்கள கட்டவிழ்நத மெலலிய தாமரைமலாச சேககையையுடைய பிரமதேவன கூறினன எ - று. (௯௮)

எந்தை யைங்கரற கினியமற திரவுப தேசந்
தநதை தநதிட முருநதைதன மகனபெற்ற துறைக்தா
மந்த மெய்ததவன் வரம்பெற வறிகெனப பிருகு
சுநத ரமபெறு சோமகாந தனுககுரை தொகுப்பான.

(இ - ள்.) எந்தையாகிய ஐந்து திருக்கரங்களையுடைய கணேசப்பெருமானுக்கு இனிதாகிய மந்திரோபதேசத்தைச் செய்து கொண்டவனாகிய கிருச்சமதமுனிவனைத் தந்தையாகிய கவிமுனிவனாற் செய்யப்பெற்ற வகையைக் கூறினோம். அந்த உண்மைத்தவத்தையுடைய கிருச்சமதமுனிவன் வரம்பெற்றதையும் அறிவாயாகவென்று பிருகுமுனிவர் அழகுபெற்று விளங்குஞ் சோமகாந்தராசனுக்கு உரைசெய்வார். எ - று.

கிருச்சமதருபதேசம்பெற்றபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௪௬௩௩

கிருச்சமதர் வரம்பெறுபடலம்.

உலகங்க ளனைத்துந் தொடுத்துமுன் முறைபடைத்த எம்பெருமா னிறைநூல், பலவுந் தெளிகின்ற கிருச்சமதன் பட்டுற்ற தவனுற்ற வரத்தினையு, மிலகும்படி சொல்லுகவென் றாதவ னெழிலார் குமவியா தனவினுனெழுமம், மலர்மேல வணையான் மகிழ்கூர்ந் தவன்முன் வரம்பெற்றதுமோர் தவவித் தனமே.

(இ - ள்.) உலகங்களெல்லாவற்றையும் தொடுத்துமுன்னாற் படைத்த எம்பெருமானுலருளிய தலைமையன பலநூல்களையுந் தெளிகின்ற கிருச்சமதமுனிவன் (தவனானு)சென்று, அவன்பெற்ற வரத்தையும் விளங்கும்படி சொல்லவேண்டுமென்று, தவத்தின் அழகுவிளங்கும் வியாசமுனிவர் வினவ, அம்மெல்லிய தாமரைமலரணையையுடைய சதுர்முகன் களிமிகுந்து, அவன் வரம்பெற்றதையுஞ் சொல்லத்தொடங்கினன். எ - று. (௧)

பழிமல கியகா னமொழிந் தபின்பு கானமடுத்த கிருச்சமதன், வழிதண் மதுமல் லிகைமுல் லையினம் பயிலக் கொடியார் தளிபந் தரிடம், பொழிலும் புதுமா மலரோ டைகளும் பொங்கும் புனலார் வியுமவேள் விமறை, மொழியும் படிசெய் யுமுனிக் கணமும் முடிவா னவர்வாழ்க்கையுமே நோக்கினனே.

(இ - ள்) பழிமிகுந்த வனத்தை விடுத்து, சமீபத்திலே பொருந்திய (பெரு) வனத்தை யடுத்த கிருச்சமதமுனிவன், குளிர்ந்த தேன்சொரியும் மல்லிகையும் முல்லையும் இணைமைதங்கிய இருவாட்சிக்கொடியும், குருக்கத்திப் பந்தரிட்ட பொழிலும், அன்றலர்ந்த பெரிய மலரோடைகளும், பொங்குகின்ற நீரையுடைய தடாகங்களும், யாகங்களை வேதங்கூறிய வகையாகச்செய்யும் முனிவர்கூட்டங்களும், கிரீடமணிந்த தேவர்களுடைய இருக்கையுங் கண்டனன். எ - று. (௨)

அங்குற் றமர்மா தவர்தம் மையடுத் தவர்தா டொழுவாங் கவர்நல் வாழ்வைப், பெறுகுற திருவென் னமகிழ்ந் துதினை மெழிலார் புவியின் வலமார் பைதந், தங்கும் பெருமெல் விரலூன் றியொருத் தகப் பெருமா னுருவங் கருதி, முன்றும் பொறியைத் துமடக் கிமனு மொழிகின் றனன்முற் றுத வத்திறனுடம்.

(இ - ள்) அவ்விடத்திற் பொருந்தியமர்ந்த பெருந்தவசிகளை யடுத்து அவர்கள் பாதங்களிற் பணிய, அப்பொழுது அவர்கள் நல்வரவாகக்கொண்டு இவ்விடத்திற் பொருந்தியிருக்கவென்று கூறகளித்து, நாடோறும் வலப்பாதத்திற்பொருந்தியமெல்லிய பெருவிரலைப்பூமியிலூன்றி, ஏகதந்தராகிய கணேசப்பெருமானுடைய திருவுருவத்தை மனதில் தியானித்து, துன்புசெய்யும் ஐம்பொறிகளையுமடக்கி முதிர்ந்த தவத்துடன் மந்திரத்தைக் கணிக்கின்றனன் எ - று. (௩)

ஓராயிரந்தே வாகளாண் டிதமக் கொருகால் விழிவிட் டவணிங் ஙணைமை, யீராயிரமோ டுமையா யிரமாண் டெங்குந் தவமங் கியெழுந் தகடத், தாரா முலைவா னரமங் கையருந் தனிவா னவருந் தருவோ ரெவரும், நீரார் குளிர்கங் கையொடும் பொழிலு நிலவத் தவமாற் றியிருந் தனவில.

(இ - ள்) ஆயிரந்தேவவருடங்களுக் கொருமுறை கண்ணிமைத்து, அத்திருச்சமதமுனிவன் இவ்வகையாகப் பதினாயிர வருடங்கள் அவ்விடத்திலிருந் தவாக்கினியானது எழுந்து, மாலைபொருந்திய குசங்களையுடைய தேவலோகத்துள்ள அரம்பாஸ்திரீகளும் ஒப்பற்ற தேவர்களும் அசுரர்களும் யாவரும் நீர்பொருந்திய குளிர்ச்சிவாய்ந்த கங்கையும், பெரிய (கற்பகச)சோலையும் விளங்கிச் சுடும்படி, தவஞ்செய்து கொண்டிருக்கையில். எ - று

விழிவிடுதலென்பது கண்ணைவிட்டு இமை விலகல் (௪)

மனவாக் குறுகா யமுமெட் டரிய வளர்பே ரொளியாய்ப் பரிபூரணமாய், யினமா மலர்தூ வியிறைஞ் சியென தியானென் னுமகந் தையறிந் தெனதாந், தனதே யெனுமெய் யடியார் வரே தாமா கியிருந் தவிநாயகனார், நனவே யவனுக் குவரம் புரிய நகுபே ரருளா லெதிர்நண் ணினரே.

(இ - ள்) மனமும் வாக்கும் பொருந்திய காயமும் மெட்டுதற்கரிய வளர்கின்ற பேரொளிப் பிழம்பாய், எங்கும் நிறைவாய், கூட்டமாகிய சிறந்த மலர்களா னருச்சித்துப் பணிந்து, எனது யானென்னும் அகந்தையையொழித்து, (பரிபூரணவியாபகத்தால்) எனதுடையதும் தனதுடையதே யென்னும் உண்மையடியவர்களே தாமாகி விளங்கும் விநாயகப்பெருமான், அத்திருச்சமதமுனிவனுக்கு நனவிலேயே வரமளித்தருள, களிக்கத்தக்க பேரருளோடு எதிரே பொருந்தினர் எ - று (௫)

காலைக் கதிர்கோ டியுதித் தனைய கதிர்செய் திருமே னியுமவா ரிசமென், மாலைக் குவனப் பாமா புமவிண் மலிகுங் குமமா திமட்டித், துயிரு, சீலப் பனிநீ ரினளாத் தநறுந் தேயவப் பியநோ ளொருபத், துமிரு, பாலுற் றொளிர்சித் தியும்புத் தியும்வெண் பாலொத் திடுசிங் கநல்வா கனமும்.

(இ - ள்.) காலையிலுதயஞ்செய்யுஞ் சூரியர்கள் ஒருகோடியருதயமானாற் போல ஒளிவீசுந் திருமேனியும், தாமரையாகிய மெல்லிய மலர்மாலைக்கு அழகுபொருந்திய திருமார்பும், வாசமிக்க குங்குமப்பூமுதலியன சோத்துமிக்கபுனிதமாகிய பனிநீரிலரைத்த வாசந்தங்கிய தேய்வைபூசிய ஒருபத்து திருத்தோள்களும், இருபக்கங்களிலும் பொருந்திய பிரகாசிக்கின்ற சித்திதேவியாரும் புத்திதேவியாரும், வெள்ளியமாலினை நிகர்த்த நல்ல சிங்கவாகனமும் எ - று. (௬)

அலைகா துமதம் பொழியா னனமு மணியா ரொருகோ டெய்விளங் கியிட
நிலமா திரமெங் குநிமிர்ந் தொளிர நிகழுந் திருமே னியொளிக் கனுடு
மலையா மதியின் றெளிசூ ரியனின மாயந்தா லெனவைகு கிருத்சமத
னுலையா தனல்லொளிமா யவெதி ருற்றானை விழித் துறநோக் கினனே.

(இ - ள்) அசைகின்ற திருச்செவியும், (பரஞான அபரஞானமென்னும்) இருமதத்தைச்சொரியுந் திருமுகமும், அழகுபொருந்திய திருவேகதந்தமும் விளங்கும்படி பூமியுந் திசையுமெங்கும் நிமிர்ந்து பிரகாசித்து விளங்குந் திருமேனியின் காந்தியில், நட்சத்திரமும் சந்திரன் முதலியன பிரகாசமாய்ச் சூரியனொளியால் நசித்தாற்போல, விளங்குங் கிருத்சமதமுனிவனை அழியாத தனதுடைய நல்ல காந்தியானது நசிக்கும்படி, எதிரே யெழுந்தருளிய கணேசப்பெருமானைக் கண்கள் விழித்துப் பொருந்தப்பார்த்தனன். எ - று. (௭)

ஒளியா லிறைவன் றிருமே னியெழில் யாதுந் தெரியா விழிகூ
சவுளந், தெளியா திதுவென் னெனமய மாகொடு நியானித் தவுளத் துவி
நாயகனை, யளியோ டெதிரேநோக் கியொளிக் கினமிங் கனுருற் றதுநீ
த் தனுசெய் தவமு, மெளியேன் வயினுற் றனிருங் கருணை யிசைவித்
தருளும் பெருமா னெனனும்.

(இ - ள்.) பிரகாசத்தினால், இறைவராகிய கணேசப்பெருமானுடைய திருமேனியின் அழகு முழுதுந் தெரியாமல் கண்கள் கூசவும், மனந்தெளியாமல், இஃதென்னென்று மனமயக்கங்கொண்டு, தியானஞ்செய்த உள்ளத்திலே விநாயகக்கடவுளை அன்புடனெதிரே தரிசித்து, நீயிங்கு இப்பொழுது சம்பவித்தது அதனை யொழித்து, அடியேன்செய்த தவமுமன்றி எளிமையுடன் வந்துற்று பயன்பெற பெருங்கருணையைக் கிருபைசெய்தருளிய பெருமானே! என்று கிருத்சமதன் யாசிக்கவும் எ - று.

வெளிநகலா விளைதீந் தவெழுந் தபரானந் திருமேய ருள்கூர்ந் துமெ
ய்ஞ்ஞா னவிழி, யளிக்கத் தளாவுற் றரிருடா மகனை மீபா டுமெழுந் துப
ணிந் துமறைய, கொளிகருந் திருமே னியெனக் கனை தெதிரே யொளிவித்
தனனென் றுளநெக் குருகித், துளிகரும் விழிநீர் களபரந் துநிலத் துகண
மாற நிடநின் றிடுமே லவனே.

(இ - ள்) பழிமுதலியவற்றிலே தீவினை சம்பந்தமகலவெழுந்தருளிய கணேசப்பெருமான் மிகப்பெருங்கருணை மிகுந்து, உண்மையாகிய ஞானநேத்திரங்கொடுத்தருள, மனந்தளர்ச்சியடைந்த கிருத்சமதமுனிவன் ஆசையுடனே யெழுந்து வணங்கி, தேவர்களுக்குங் காணமுடியாத திருமேனியை எனக்கு முன்னெதிரே விளங்கச்செய்தனரென்று, மனநெகிழ்ந்துருகி, பெருகின்ற கண்ணீர்த்துளிகள் பரவி பூமியிலுள்ள தூளினை யகற்ற, (எதிரே) நின்று இங்ஙனந் துதிசெய்கின்றனன். எ - று.

ஊனக்கண்ணால், பார்க்க முடியாது ஒளிர்ந்திய கிருத்சமதன் கணேசப்பெருமானாற் கொடுக்கப்பட்ட ஞானக்கண்ணால் அவர் திருமேனியைத் தரிசித்து வணங்கி நின்று துதிப்பானாயினனென்பது கருத்து. (௮)

வேறு

நித்தியமாய் நின்மலமாய் நிர்க்குணமாய் நீடொளியாய்த்
தத்துவமாய்த் தத்துவாதீ தப்பாலா யப்பாலு

மந்துவித மான வரும்பொருளே நீயடியேன்
சிந்த முவப்பத் திருக்காட்சி தந்தனையே.

(இ-ள்.) நித்தியமாகியும், நின்மலமாகியும், நிர்க்குணமாகியும், மிக்கவொளியாகியும், தத்துவமாகியும், தத்துவத்துக்கப்பாலாகியும், அதற்கப்பாலும் அத்துவிதமாகியபொருளே! தேவரீர் அடியேனுடைய மனங்களிக்கும்படி திருக்காட்சி கொடுத்தருளினீரே! எ-று.

நித்தியம் - எக்காலமுமுண்மை. நின்மலம் - மலரகிதம் நிர்க்குணம் - குணரகிதம். (௧௦)

குளிர்மா மதியந் தங்குஞ் சடாதாரீ
உண்ணா ரமுதே புலராக் கற்பகமே
விண்ணோ ரறியாத வித்தகா வடியேனைக்
கண்ணாரக் காணுமா காட்சி கொடுத்தனையே.

(இ-ள்.) குளிர்ச்சிபொருந்திய சந்திரனைப் பொருந்திய சடையைத் தரித்தவனே! உண்ணத்தக்க அருமையாகிய அமுதமே! வற்றாத [நித்திய] கற்பகமே! ஞானிகளுங் கண்டறியாத ஞானசொரூபியே! தேவரீர் அடியேனை தரிசிக்கும் வகையாகக் காட்சிகொடுத்தீரே! எ-று.

ஜடாதாரி யென்ற வடமொழி பிரயோகம்
காணுமாறு என்பது காணுமா வெனத் தொக்கது. (௧௧)

ஆக்காமே யாக்கி யளியா தளித்தெவையும்
போக்காமே போக்கிமலம் பொன்றுவித்துப் பொன்றாது
தாக்காது நின்ற தனிமுதலே நீயடியேன்
வாக்காரக் கூறுமா வந்தெதிரே நின்றனையே.

(இ-ள்.) படையாமலே படைத்து, காவாமலேகாத்து, எவற்றையும் அழியாமலே யழித்து, மலசம்பந்தத்தையும் போக்கடித்தும், ஒன்றாலும் தொடப்படாமல் [அதீதப்பட்டு] நின்ற ஒப்பற்றமுதல்வனே! தேவரீர் அடியேன் வாயாரக்கூறும்வகையாக எழுந்தருளி எதிரே நின்றருளினீரே எ-று.

“ஆக்காமேயாக்கி யளியாதளித்தெவையும் போக்காமே போக்கி” என்றது, சிந்தனைமாத்திரையானே சிருஷ்டி திதி சங்காரங்களைச் செய்யவல்லனென்பதை கூறியதாம்.()

என்று திருச்சமதன் றுதித்தெடுப்பத் தேனொழுகுங்
கொன்றை யலங்கற் குழகன் முடிதுளக்கி
யொன்று தவத்துக் குவந்தோ மினிவரங்க
ளொன்று கிளத்தி நனிதருது மென்றனனால்.

(இ-ள்.) என்றிவ்வகையாகத் திருச்சமதமுனிவன் தோத்திரஞ்செய்ய, தேன் சொரியுங் கொன்றைமலர் மாலையணிந்த விநாயகக்கடவுள் சிரமசைத்து, பொருந்திய உன் தவத்திற்கு மனங்களித்தோம் இனி (வேண்டிய) வரங்களைச் சொல்லுக. மிகுதியாகக் கொடுப்போமென்றனர். எ-று. (௧௨)

இங்க முதுகிற சிறந்த மகளிரொடு
மங்க லொழிந்த வமல னருள் கேளாப்

பொங்கு முழுவற புணரிப் புணையானை
செங்கை குவித்துத் திருநதவிது கூறுவான.

(இ - ள்) சிங்கத்தினை முதுகிலே மேம்பட்ட (சித்திபுத்திகளென்னுந்) தேவிமாருடன் அவ்விடத்திலெழுந்தருளிய மகரகிதராகிய விநாயகக்கடவுளுடையதிருவருளின் திறத்தைக்கேட்டு, அதிகரிக்கின்ற விடாதுதொடாநத அனபுககடலுக்குத தெயபமான கிருதசமதன் செவவியகைகயைககூபபித திருததமாக இததனைச சொலலானாய்ினன். எ - று.

உழுவல் - விடாதுதொடாதல உழுவலனபு எனபன வாதியிற்காண்க.
சேளா - செயயாவெனனும வாயபாடடிறநதகால வினையெசசம் (௧௪)

காண்டல் கருத ஞானையிவற்றுற காணுமையக
காணடல் கருத ஞானயானுங் கண்டேறகு
வேணடும பொருளின்று முண்டே விமலா நீ
வேணடுகே னுமமருளைத தளளாது வேணடுகேன.

(இ - ள) தரிசித்தல சிந்தித்தல கூறுதலெனறு மிவற்றாற் றரிசிககமுடியாத தேவரீரைத் தரிசித்தலாலும சிந்தித்தலாலும துதித்தலாலுந தரிசிதத அடியேனுககு விருமபும பொருள பினனுமொனறுளதோ ' நிமலசொரூபியே ! தேவரீரைவேணடுகேன தேவரீர திருவருளைத் தளளாமல வேணடுகேன எ - று

வேணடுகேன் இதில கு சாரியை வேண்டுவேனெனபது பொருள (௧௫)

எண்பத்து நான்கு நூறாயிரமா மியலபிறபபிற
பணபுறற மானிடமாம பவமரிது மானிடத்து
மெண்பெற்ற நாலவருணத் தினைநிடுலை தரிதவற்று
ணணபுறற வநதணராய நணணுவது மரிதாமால

(இ - ள்) எணபத்துநானகு லடசமாக விடலகின்ற பிறவியில அழகுபொருந்திய மானுடமாகிய பிறவி (கிடைப்பது) அரிது மானுடபபிறவியிலும, எணணுதல பெறற (பிராமணாதி உததம) நாறகுலத்திற பொருந்துத லரிது. அவற்றுளளும யாவரும நணபுகொணட வேதியராயப பிறபபதும அரிதாகும எ - று

எணபததுநானகு நூறாயிரம பிறபபு எனறமைந்த,

"ஊாவ பதிெனன்று மொனபது மானுடம
நீரபபறவை நாறகாலோர பபபதது—சீரிய
பநதமாந தேவா பதினனை கயனபடைதத
அநதமிலசீரத தாவரநா லைநது"—எனபதனானறிக.

என்பெறற நாலவருணமென்றது,அநுலோம பிரதிலோம அநதராள விராத்தியரெனறு மிதத்திறதசோரை விலககி உயாகுடியாகிய பிராமண க்ஷத்திரிய வைசிய சூத்திர வருணஙகளை யுணாததியெனக. (௧௬)

அநதணருள் ளறிவுடைய ராதலரி தறிவருளுஞ
சிநதைமகி ழுனுடடானஞ செயகுநரா குவதரிது
சிந்தைமகி ழுனுட்டானஞ செயபவருட டிரிவிதமாம
பநதமறச சிவஞானப் பறறுடையா ரரியாகரோ.

(இ - ள்) வேதியர்களிலும் அறிவுடையவராதல் அருமை. அறிவுடையவர்களிலும் மனமகிழத்தக்க அநுட்டானஞ்செய்பவராதலருமை. மனமகிழ்த்தக்க அநுட்டானஞ்செய்பவருள்ளும் மூவகைத்தாகிய பந்தங்களறப்படி சிவஞானம் பற்றுடையவர்கள் அரியவர்கள் எ - று. (௧௮)

அந்தணரிற் சிவஞான மடைதலரு மடியிறைஞ்சும்
பத்தியினு லனைத்தயலவிப் பயில்வினைவு தலைக்கூடா
மெத்திறத்து முயற்சியினு மெய்தலெளி தில்லாமையினால்
வித்தகநின் மலரப்பதத்தில் விடாத வன்பருள்க.

(இ - ள்) அவ்வகைப்பட்ட சிவஞானத்தைத் தேவரீர் திருவடியிற் பொருந்தும் பத்தியினு லன்றி யடைதலரிதாம், செட்கினும் யாகம் - தவம் - தானம் எவ்வகைமுயற்சி முதலியவற்றானும் அடைதலரிதாகலால், ஞானசொரூபியே! தேவரீருடைய தாமரைமலர்போன்ற திருவடியில் அழியாத அன்பினை அடியேனுக்கு அருள்புரியவேண்டும். எ - று.

திருவடிப்பத்தியினாலேயே சிவஞானம் வருமன்றி யாகமுதலிய பலமுயற்சியானும் அஃதெய்தாதென்பார் "சிவஞானம் * * * மெத்திறத்து முயற்சியினு மெய்தலெளிதில்லாமையினால்" என்றார். (௧௯)

எம்பெருமா னித்தலத்தி லெழுந்தருளி யெந்நாளும்
மும்மாமுத லின்மேவார்க்கு முப்பவரம் வழங்கிடுக
நம்பியபுட் பகவனமும் புட்பகமா நகருமெனு
விம்பரினிவ் வனத்தனக்கு மிந்நகர்க்கும் பெயருறுக.

(இ - ள்) எம்பெருமானே! தேவரீர் எக்காலமும் இவ்விடத்தில் எழுந்தருளியிருந்து தேவர்முதலிய எல்லோருக்கும் ஒளிபெய்த (வேண்டிய) வரங்களை (வேண்டியவகையே) கொடுத்தருள் புரிக. மேன்மையாகிய புட்பகவனமும் சிறந்த புட்பக நகருமென்று இவ்வுலகத்தில் இவ்வனத்திற்கும் இந்நகரத்திற்கும் (இதுமுதல்) பெயருண்டாகுக எ - று. (௨௧)

தேவர்முனி வரரசுரர் சித்தர்கள் சாத்தியர்முதலா
யாவர்களு மெவ்வழியி னென்றாணை கடவாமை
மேவுவதும் வேண்டுமென விழைந்திரப்பப் பொன்ஞாழற்
பூவலங்கன் மணிமார்பிற் புண்ணியனம் மிறைபுகலும்.

(இ - ள்) தேவர்கள் முனிவர்கள் அசுரர்கள் சித்தர்கள் சாத்தியர்கள்முதலிய எவர்களும், என்வழியில் என்கட்டளையைக் கடவாமற்பொருந்துவதும் வேண்டுமென்று விரும்பி யாசிக்க, பொற்கொன்றைமலர்மாலையாக அணிந்த அழகிய மார்பையுடைய புண்ணிய சொரூபியாகிய கணேசப்பெருமான் இவ்விதஞ்சொல்கின்றனர் எ-று.

ஞாழல் - குங்குமமலர்க்கும் கொன்றை மலர்க்கும் பெயராயிருப்பினும் பொன்ஞாழலென்றதனால், பொற்கொன்றையென்னும் இது சரக்கொன்றை (௨௦)

இக்கிரே தாயுகத்தி னிந்நகரம் புட்பகமா
மிக்கதிரே தாயுகத்தில் விளங்குமணி பூரகமாந்
தொக்கதுவா பரயுகத்திற் றுரிசகற்றும் பானகமாம்
பக்கவெழிற் கலியுகத்திற் பத்திரக மாகுமால்.

(இ - ள்.) இந்தக் கிரேதாயுகத்தில் இந்நகரமானது புட்பகநகரமாம். மேம்பட்ட திரேதாயுகத்தில் விளங்குகின்ற மணிபூரகநகரமாம். நெருங்கிய துவாபரயுகத்தில் குற்றமொழிக்கும் பாணகநகரமாம். குறைந்த அழகுடைய கலியுகத்தில் பத்திரகநகரமாம். எ - று. (உக)

நற்றவநீ விழைந்தவெலா நல்கினமுன் பாற்சிறுவ
னற்றமிலா மிகுவலியோ டரனொருவா ளியினன்றி
மற்றையரா லழியாத வரத்தினனு நமதடியின்
பற்றவனு மொருவனுறு மோங்குநம தின்னருளால்.

(இ - ள்) நல்லதவத்தையுடைய கிருச்சமதமுனிவனே! நீ விரும்பியவற்றை யெல்லாங் கொடுத்தோம். உனக்கிடத்திலே ஒருசிறுவன் அற்றமில்லாதபெருவலியுடன், சிவபெருமானுடைய ஒருபாணத்தாலல்லாமற் பிறரால் இறவாத வரமுடையவனும், நம்முடைய திருவடிப் பத்தியுடையவனும், நமது மிக்க இனிய திருவருளால் ஒப்பற்றவனும் பிறப்பான். எ - று.

அற்றம் - துன்பம் - அற்றமிலாவலி யென்பதற்கு மிக்க வலியென்க. (உஉ)

வேறு

பெருந்திறன் மகனு மந்தப் பெலியினு முனக்குக் கீர்த்தி
திருந்துமு வுலகத் துண்டாந் திருத்தகு முனிவ நம்மைப்
பொருந்துகா ரியங்க டம்மின் முந்துற நினைந்து பூசி
வருந்துத லின்றி வேட்ட வரமெலாம் பெறுவை மாதோ.

(இ - ள்) மிக்க வலியமைந்த அந்தப்பெலியென்னும் உன்மகனைக் காட்டிலும் உனக்குக் கீர்த்தியானது திருத்தமுற்ற திரிலோகங்களிலு முண்டாகும். சிறப்பமைந்த கிருச்சமதமுனிவனே! பொருந்திய காரியங்களிலெல்லாம் நம்மை முதலிலே தியானித்துப் பூசைபுரிக. வருந்துதலில்லாமல் விரும்பியவரங்களையெல்லாம் பெறுவாய். எ-று.

காரியாரம்பத்திலேயே கணபதி பூசைசெய்வோர் நிர்விக்கினமாக அதனை முடித்துப் பலனுறுவாராதலின் "நம்மைப் பொருந்து காரியங்கடம்மின் முந்துற நினைந்துபூசி - வருந்துதலின்றி வேட்டவரமெலாம் பெறுவை" என்றார். (உ௩)

நினைத்தெமைப் பூசை யாவர் நிகழ்த்தினு மவர்க்குப் பொல்லா
வினைத்தொடர் பனைத்து நீங்கி விழுத்தகு நினைந்த நன்மை
யனைத்தையு மெளிதின் வல்லை யடைகுவ ரெமைத்தொழாரே
லெனைத்துள விடரும் பொல்லா வினைகளு மெய்து வாரே.

(இ - ள்) சிறந்த தவத்தையுடையவனே! எம்மை எவர்கள் கருதிப் பூசை செய்தாலும், அவர்கள் தங்கட்கு வரும் பொல்லாவினைத் தொடர்ச்சிமுழுவதையு மொழிந்து நினைந்த நன்மைமுழுவதையும் இலேசாகவே விரைவிலடைவார்கள். எம்மைப் பணியாராகில், உள்ளனவாகிய வெல்லாத் துன்பங்களையும் பொல்லாத வினைகளையும் அடைவார்கள். எ - று.

வல்லை - விரைவுகுறிக்கும் இடைச்சொல். (உ௪)

அருமறை யானந்துங் காணு வமலனா வரங்க ணல்கி
யிருவினை மலங்கண் மூன்று மிரித்தவ ருளாக்க கோயின்

மருவுவா ன்மறைந்து போந்தார் வரம்பெறு முனிவ னுங்கோ
குருமணிக் கோயி லொன்று குயிற்றியக் கோயி லுள்ளார்.

(இ - ள்) அரியவேதங்களா லளவிட்டுங் காணமுடியாத நின்மலராகிய கணேசப்பெருமான (இவ்வகையாக) வரங்களைக்கொடுத்து, இருவினையையு மும்மலங்களையு மொழித்த பரமபத்தர்களுடைய இதயாலயத்தை யடையும்படி அந்தர்த்தானமாயினர். வரங்களைப்பெற்ற திருச்சமதமுனிவன் அங்கே ஒப்பற்ற சிறப்பமைந்த மணிகளாற் செய்த திருக்கோயிலொன்று செய்வித்து, அத்திருக்கோயிலினுள்ளோர் எ - று (௨௫)

வேறு

சரதப்லி பந்தியினுற சாந்தவருள் ளகவிரங்கிப்
பரதமிகப் புரிவானைப் பரானந்த பூரணனை
வரதகண பதியென்று வைத்தெந்நாளுந் தமுந்தொட்டு
விரதமொடு புனலாட்டிப் பெருந்தப்பூ சித்திருந்தான்.

(இ - ள்) உண்மைமிக்க பத்தியுடன் பொருந்தியவர்களுடைய மனமாகிய சபையிலே, நடனத்தை மிகுதியாகச் செய்பவனும் பரானந்த பூரணனுமாகிய கணேசப் பெருமானை வரதகணபதியென்று திருநாமமிட்டுப் பிரதிட்டைசெய்து, (அங்கே) ஒரு சிரத்தைமிகுந்த விரதத்துடனே நீரா லபிடேகித்து பெருமையான பூசைசெய்திருந்தனன் எ - று (௨௬)

வேறு

கணேசர் மேனியி லாட்டுமக் காமரு தீர்த்தம்
கணேச தீர்த்தமென் றொருபெயர் கலந்ததந் நகரும்
கணேசர் பேரரு ளாற்கலந் திருந்தகா ரணத்தாற்
கணேச மாநக ரெனும்பெயர் கதுவிய தம்மா.

(இ - ள்) கணேசப்பெருமானுடைய திருமேனியிலாட்டிய அந்த அழகிய தீர்த்தமானது கணேச தீர்த்தமென்று ஒருபெயரைப்பெற்றது; அந்த நகரமும் கணேசப்பெருமானுடைய பேரருளோடு கூடியிருந்த காரணத்தினாலே, சிறந்த கணேசநகரமென்னும் பெயரை யடைந்தது எ - று

அம்மா - வியப்பிடைச்சொல். (௨௭)

சித்தி யாவையும் யாவர்க்குஞ் செறித்திடுந் திறத்தாற்
சித்தி மாநக ரெனவுஞ் சிறந்ததந் நகரஞ்
சித்தர் மாதவர் தேவர்கண் முதலியோர் தமக்குட்
சித்தி மேவின ரளவிலர் சிறந்தவந் நகரில்.

(இ - ள்) எல்லாச் சித்திகளையும் எல்லோருக்கும் மிகுதியாகக் கொடுக்கும் ஆற்றலால், அந்நகரமானது சிறந்த சித்திநகரமென்றுஞ் சிறப்புற்றது. சித்தர்கள் பெருந்தவசிகள் தேவர்கள் முதலானவர்களில் அந்நகரத்திலே (தமது இஷ்ட) சித்திகளை யடைந்தவர்கள் எண்ணிறந்தவர்கள் எ - று (௨௮)

கவியு மீர்த்தருள் காமரு திருச்சம தன்முன்
புவியி னித்தகப் புகர்முகக் களிற்றிறை யருளா

லவிர்வ ரம்பெற விதுபட் டாணவ வலியிற்
றவிர்வி யாதவென் றுரைத்தனன் சதுமுகப் பிரமன்.

(இ - ள்.) கவிமுனிவர் பெற்றருளிய அழகிய கிருச்சமதமுனிவனை முன்னே உலகமானது களிப்பெய்தத்தக்க, புள்ளிகளை வாய்ந்த யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள் திருவருளால், பிரகாசிக்கின்ற வரம்பெற்ற வகையிதுவாகும் படர்ந்த ஆணவமலவலிமையினின்று நீங்கிய வியாதமுனிவனே! என்று நான்குமுகங்களையுடைய பிரமதேவன் கூறினன். எ - று. (௪௯)

சோம காந்தனைத் தந்த கவிமகன் பெற்ற
சேம வானவர மஃதனை யினியவன் சிறுவன்
வாம மாரொரு மருப்பினன் மந்திரங் கணித்துத்
தேம மாத்தர வறிதியென் றியம்புவன் பிருகு.

(இ - ள்) சோமகாந்த ராசனே! தக்க புனிதமான கவிமுனிவர் மகனான கிருச்சமதமுனிவன் பெற்ற சேமமாகிய சிறந்த வரத்தை யுணர்ந்தனை இனி அவன் மகனாகிய வலி அழகுபொருந்திய ஏகதந்தராகிய கணேசப்பெருமானுடைய திருமந்திரத்தைக் கணித்தவகையை அழகுபொருந்த உணரக்கடவையென்று பிருகு முனிவர் சொல்லத்தொடங்கினர். எ - று. (௫௦)

கிருச்சமதர் வரம்பெறுபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௧௫௪௮

திரிபுரன் வரம்பெறுபடலம்.

கருவி முகிலக ணிரைநிரையாயக் கவிழ்த்த நெடிய தடஞ்சிலம்பி
னருவி யெனமும் மதம்பொழியு மானை முகவ னருள்வரத்தாற்
பொருவி லமரர் முனிவரெலாம் போந்து வணங்கிப் பணிபுரிய
மருவு மவிசேர் வேள்விக்கிறையாய் வதிந்தா னனைய கிருச்சமதன்.

(இ - ள்) (உலகுக்குக்) காரணபூதமான மேகங்கள் வரிசைவரிசையாக (நீரை)க் கவிழ்த்த நீண்ட விசாலமான மலையில், அருவியாறுபோல மும்மதங்களைச் சிந்தும் யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுள் அருள்புரிந்த வரத்தினால், அத்தகைய கிருச்சமதமுனிவனை ஒப்பில்லாத தேவர்களும்முனிவர்களும் யாவரும் வந்து பணிந்து ஏவல் செய்ய, அவிபொருந்திய யாகத்திற்குத் தலைவனாய் வசித்தனன். எ - று. (௧)

மடங்க லுகைக்குங் களிற்றுமுக வரதன் பாத மலர்த்துணையின
முடங்கு மறுகாற் சுரும்பினங்கண் முரலும் பனிமென் மலராதி
குடங்கை கொடுபூ சித்தவனமெய்க் கோல மனுவுங் கணித்துள்ள
மடங்கத் தவஞ்செய் பவனொருநா ளமாந்தா னரிய யோகத்தில்

(இ - ள்.) சிங்கத்தை வாகனமாகச்செலுத்துகிற யானைமுகத்தையுடையசிரேட்டமான விநாயகக்கடவுளுடைய உபயபாததாமரைகளில், முடங்கிய ஆறுகாலையுடைய வண்டு கூட்டங்கள் ஒலிக்குங் குளிர்ந்த மெல்லிய மலர்கள் முதலியவற்றைக் குடம்

போன்ற கயிற்றைக்கொண்டு பூசைசெய்து, அவ்வப்பெருமானுடைய உண்மையாகிய அழியே மந்திரத்தைப் புகக் கணித்து, மனமடங்கத் தவஞ்செய்கின்ற கிருச்சமதமுனிவன், ஒருநாள் அரிய யோகத்திலமர்ந்தனன் எ - று (௨)

நெடிது யோக முழந்தனன் னிகரி றவத்தக் கிருச்சமதன்
கொடுமை விழித்துப் பார்த்தானக் கொடிய பார்வை தனினின்றும்
படியும் விசும்பும் பாதலமும் பறம்பு நடுங்கக் கடைநாளி
னிடியும் வணங்க மிகவார்த்திட் டெழுந்தான் வலியி னொருமைந்தன்

(இ - ள்) ஒப்பில்லாத தவத்தையுடைய கிருச்சமதமுனிவன் நெடிதுயோக மிருந்து, கொடுமையோடு கண்விழித்துப் பார்த்தனன் அந்தக்கொடிய பார்வையினின்றும், பூமியும் ஆகாயமும் பாதலமும் மலையும் நடுக்கமெய்தவும், ஊழிக்காலத்தின் இடியும் கீழ்ப்படவும், மிகவும் ஆர்ப்பரித்து வலிமையோடு ஒரு புத்திரனெழுந் தனன் எ - று

யோகமுழத்தல் - யோகிருத்தல் (௩)

செய்ய நிறமும் பொழுதுந் திவளு முடியுங் குண்டலமும்
பெய்யுந் திரடோ ளங்கதமும் பிறங்கு மரைஞாண் முதற்பலவும்
வெய்ய கதிரி னொளிமழுங்க விளங்கு மொளியு முடையானைப்
பொய்யி றவத்துக் கிருச்சமதன் பொற்ப நோக்கி நடுங்கினான்.

(இ - ள்) செவ்விய நிறமும், மிக்க அழகும், துவளுகின்ற முடியும், குண்டலமும், வலிய தோள்களிற் பூட்டிய அங்கதமும், விளங்குகின்ற அரைஞாண் முதலிய பலவும், சூரியனொளியு மழுங்கும்படி விளங்கும் பேரொளியுமுடைய அவனை உண்மையாகிய தவத்தையுடைய கிருச்சமதன் அழகுறப்பார்த்து அச்சமெய்தினன் எ-று.

அங்கதம் - தோளணி; வெய்யகதிர் - சுடுகின்ற கிரணங்களையுடையவன்; சூரியன்; பொய்யில் - பொய்மையில்லாத, உண்மையாகிய வென்றும் (௪)

யாவ னிவனென் றலமந்த யிறைவ னருளா லருண்மைந்த
னாவ னெனப்பின் றெளிந்துமுனி யார்நீ யென்னப் பணிந்துசொல்வான்
மேவு தவத்தோ யறியாமை வியப்பிற் றிறனின் விழிப்பார்த்த
வோவில் பார்வை யிடையுதித்தே னுனக்கு மகனா னென்னப்பா.

(இ - ள்) கிருச்சமதமுனிவன் இவன் யாவனென்று துன்பமடைந்து, பின்னர், இறைவராகிய விநாயகப்பெருமானது திருவருளால் அவர் தந்தருளுகின்ற புதல்வனுவானென்று தெளிவுற்று, நீ யாவன்! என வினவ, பணிந்து சொல்லினன். பொருந்திய தவத்தை யுடைய எந்தையே! என்னையறியாமை ஆச்சரியமுடையதே. உன்கண்ணுறப்பார்த்த கெடுதலில்லாத பார்வையினிடத்திற் பிறந்தேன் உனக்கு மகனானேன் எ - று (௫)

அன்னை நீயே பிதாநீயே யனைத்து நீயே யென்னைச்சிலநாண்
மன்ன வளாப்பின் யான்மும்மை வைய மொருங்கு தாட்படுப்பேனப்
பின்ன ரத்தி யெனவலியை யென்று பேசப் பெருமுனிவன்
றன்னு ணடுங்கி யதுமறைத்துத் தனையற் கிதனைச் சாற்றுவான்.

(இ - ள்) தாய் நீயே, தந்தையுநீயே, யாவுநீயே, என்னைச் சிலதினங்கள் பொருந்தவளாத்தால் யான் மூவகை யுலகத்தையும் ஒருசேர எனகாற்கீழ் படுக்குவேன்.

என்வலிமையைப் பின்னறியக்கடவாய் என்கூற, பெரிய கிருச்சமதமுனிவன் தன் மனம் நடுங்கியதை மறைத்து மகனாகிய பலிக்கு இதனைச் சொல்லுவான். எ - று.

உள் - மனம் இஃது இடவாகுபெயர் (௬)

ஆதி யந்த நடுவின்றி யகண்டா கார மாயொன்றுஞ்
சோதி யான விநாயகர்தந் தொன்மை மனுநா னெஞ்ஞான்று
நீதி யாகக் கணித்துவரு நிகரி லதனை யுரைசெய்கேன்
றீதி லாது கணியுனக்குச் சித்தி யனைத்தும் வருமென்று.

(இ - ள்) முதலும் இடையுங் கடையுமில்லாமல், அகண்டாகாரமாய் ஒன்றாகிய சோதிசொரூபரான விநாயகப்பெருமானுடைய பழைமையான மந்திரம் நான் எக்காலமும் நீதியோடு கணித்துவருகின்ற ஒப்பில்லாதது அதனை உனக்குங் கூறுவேன் குற்றமில்லாமற் கணிப்பாயாக உனக்கு எல்லாச்சித்திகளும் வருமென்று எ - று.

தந்தை தானே மகனாகிச் சாரு மென்னு முறையானு
மெந்தை பெருமா னருள்செய்த வியல்பி னானுங் கிருச்சமதன்
மைந்தன் றனக்குக் கணநாதா வென்னு மனுவை யுபதேசித்
தந்தண் மறைநூல் விதியானே யனுட்டிப் பனைத்தும் புகன்றொழிந்தான்.

(இ - ள்) தந்தையே மைந்தனாகி வருவானென்னும் முறைமையாலும், எந்தையாகிய கணேசப்பெருமான் அநுக்கிரகித்த வியல்பினாலும், கிருச்சமத முனிவன் தன் மகனாகிய பலியென்பவனுக்கு "கணநாதா" என்னுமந்திரத்தை யுபதேசஞ்செய்து அழகிய வேதநூல் விதிப்படி (அதனுடைய) அனுட்டிப்புமுதலிய வெவற்றையுங்கூறி விடுத்தனன் எ - று.

கணநாதா வென்னுமந்திரம் ஆங்கிரச கவிமுனிவரால் தனக்கு உபதேசிக்கப்பட்டிருந்தும் அதனையே கிருச்சமதமுனிவன் மைந்தனுக்குணர்த்தனன் (அ)

நீற்று மேனிக் கிருச்சமத னெடிய மலர்த்தாள் பணிந்தேத்தி
யாற்றல் சான்ற பலியென்பா னங்கோர் பாங்கர் தந்தையைப்போற்
போற்றி யொருதா ணிலத்தூன்றிப் பொறிக ளடக்கி யுணவாதி
பாற்றித் தவஞ்செய் தனன்வருடம் பதினா யிரத்தோ டிறப்பாதி

(இ - ள்) வலிமைமிகுந்த பலியென்பவன், அவ்விடத்தோர் பக்கலில், திருவெண்ணீறணிந்த உடலையுடைய கிருச்சமதமுனிவனுடைய நெடியமலர்போன்ற திருவடியைப்பணிந்து துதிசெய்து தனபிதாவைப்போல, துதித்து ஒருபாதத்தை நிலத்திலூன்றி ஐம்பொறிகளையடக்கி ஆகாரமுதலியவற்றை விலக்கிப் பதினையாயிர வருடகாலந் தவஞ்செய்தனன் எ - று.

நீற்றுமேனி யென்பதற்குத் திருநீறணிந்த திருமேனியெனினுமாம். ()

கொடிய தவத்தி னெழுந்தகனற் கொழுந்து பரந்து மிகச்சுடலு
நெடிய விசும்பி னமரரெலா நெடிது நடுங்கி முறையிட்டார்
படியில் கருணை விநாயகனும் பரிந்து பலனுக் கருள்கொடுப்ப
விடியற் கதிரா யிரகோடி விரவி யெனமுன் றோன்றினார்.

(இ - ள்) தீக்கொழுந்தானது (அவன்செய்யுங்) கொடிய தவத்தினின்றெழுந்து (எங்கும்) பரவி மிகவுஞ் சுடுதலும், பெரிய ஆகாயத்திலுள்ள தேவர்கள் யாவரும

மிகவும் மனநடுங்கி முறையிட்டார்கள். எல்லையில்லாத கிருபாமூர்த்தியாகிய விநாயகக் கடவுள் மனமிரங்கித் தயைப்பெருக்கருள்புரியும்படி, விடியற்காலைத் தோன்றும் ஆயிரங்கோடி சூரியரொன்றுகூடி வந்தாற்போல (பலியின்முன்னே) காட்சிதந்தருளினர். எ - று (௧௦)

அழல்கொப் புளிக்குங் கதிர்ப்பரிதி யமரன் விழிப்பொளி மழுங்கக்
கழல்கொப் புளிக்கும் பேரரவக் காமர் மலர்த்தாள் விநாயகனார்
நிழல்கொப் புளிக்குந் திருமேனி நிகழ்ந்து பரந்த வொளிக்கஞ்சான்
றழல்கொப் புளிக்குங் கொடுந்தவத்துத் தகைசால் பலிக்கண் மலர்த்தினான்.

(இ - ள்) தீயைச்சொரியுங் கிரணங்களையுடைய சூரியபகவான் கண்களும் ஒளிமழுங்கும்படி, வீரக்கழலானது சிந்துகின்ற பேரொலியையுடைய அழகிய தாமரை மலர்போன்ற பாதங்களையுடைய விநாயகக்கடவுளின், நிழலைவீசுந் திருமேனியினின்று விளங்கிப்பரவிய ஒளிப்பிழம்புக்கு அஞ்சாமல், தீயைச் சிந்துங்கொடுந் தவத்தைச் செய்த தகுதிசான்ற திருச்சமதமுள்ளவன் கண்மலர்த் திறந்துபார்த்தனன் எ - று

பரிதியமரன் - இருபெயரொட்டுப் பண்புத்தொகை
அஞ்சான் - எதிர்மறைக் குறிப்புவினை யெச்சம் (௧௧)

திணிச்சித் திரத்தோ ளொருநான்குஞ் செந்தா மரையுங் கழுமுளுங்
கணிச்சிப் படையு மோதகமுங் கணேச வுருவ முழுவதுமார்ந்து
தணிச்சித் திரமே போனின்ற பலி யற்ற மரம்போ லெதிர்வீழ்ந்து
பணிச்சித் திரநாகத் தொடையுற்ற பரமா வருளென் றுரைசெய்வான்.

(இ - ள்) வலிமைவாய்ந்த அழகிய ஒப்பற்ற நான்கு திருத்தோள்களும், செந்தாமரைமலரும், கழுமுளும், மழுப்படையும், மோதகமும், கணேசப்பெருமானுடைய திருவுருவமுழுவதுந் தரிசித்து, அழகிய சித்திரப்படமைபோல (அசைவற்று) நின்ற பலியென்பவன், அடியற்ற மரம்போலத் திருமுன்னே பணிந்து மாலாபரணமாக அழகிய நாகத்தை யணிந்த பரமனே! அருள்புரிகவென்று எ - று

கழுமுள் - சூலாயுதம் மோதகம் = உருண்டை பரமன் = சிரேட்டன் (௧௨)

இமைக்கு மளவிற் பேரண்ட மனைத்தும் புருவச் சிறுநெறிப்பாற்
குமைக்கும் பெருமா னடியேன்பாற் கோப மின்றிப் பெருங்கருணை
யமைக்க வேண்டு மதுவன்றி யடியேன் பிழைத்தே னாயினுநீ
கமைக்க வேண்டு மெனவிரந்தான் கண்ணார் கருணை கூர்ந்தருள்வார்.

(இ - ள்) கண்ணிமைக்குமுன்னே பெரிய அண்டங்களையெல்லாம் புருவத்தின் சிறிய நெறிப்பினால் அழிக்கின்ற ஐங்கரக்குரிசிலே! அடியேனிடத்திற் கோபமில்லாமல் மிக்க கிருபைசெய்தருளல்வேண்டும் அதுவல்லாமல், அடியேன் தவறுற்றேனாலுந் தேவரீர் பொறுத்தருளல் வேண்டுமென்று யாசித்தான் கணேசப்பெருமான் கிருபைமிகுந்து திருவாய்மலர்ந்தருளுவார் எ - று

கமைத்தல் - க்ஷமித்தலென்னும் வடமொழிச்சிதைவு (௧௩)

தண்டா மரைக்க ணமரிருவர் தம்மாற் றழற்க ணுருத்திரனாற்
பண்டா ரணத்தா லளந்தறியப் படாத வொருநா மேபோன்பு

கொண்டேர்த் திடநீ புரிந்த தவக் கோணைக் கயிற்றா லிறுகுறக்கட்
டுண்டெங் கடித்தாம வரங்கேளென் றுரைப்பப் பலியும் வரங்கொள்வான்.

(இ - ள்) தண்ணிய தாமரைமலர்போன்ற கண்களும், தண்ணியதாமரை மலரிருக்கையும் பொருந்திய (திருமால் பிரமனென்னும்) இருவராலும், தீ விழியை யுடைய உருத்திரனாலும், பழமையாகிய வேதத்தினாலும் அளவிட்டுணரப்படாத வொப்பற்ற நாம், பெரிய அன்பைக்கொண்டாகக, நீ செய்த தவமாகிய வலியகயிற்றால் இறுகுறக்கட்டுண்டு ஈங்குவந்தனம் வரங்கேட்கவென்றுகூற, பலியும் வரங்கொள்வானாயினன் எ - று.

தண்டாமரைக்கண்ணரிருவரென்றதை, "தண் தாமரையாகிய கண் அமர் விண்டு" என்றும், "தண் தாமரைக்கண் அமரும் பிரமன்" என்றும் சொல்வகை செய்க. இரண்டாவதில், கண் - ஏழனுருபு. (௧௪)

மருள்கால் வினைகள் கால்சீத்து வளர்மெய்ஞ் ஞானப் பேரொளியே
யருள்கா ணினது திருமேனி யலங்கு மொளியி னிரேணுவினா
லிருள்கால் சீத்து வையகத்தி லிலகாநின்றார் மழையாதிப்
பொருள்கால் பரிதி மதியங்கி யெனப்பேர் பூண்ட புலவர்களே.

(இ - ள்) மயக்கத்தைச் செய்யும் வினைகளை யடியோடுகளைந்து வளர்கின்ற உண்மைஞான மயமாகிய பேரொளியே! தேவரீருடைய திருமேனி அருள்வடிவேயாம். விளங்குகின்ற அவ்வொளியின் அணுவொன்றால், மழைமுதலிய பொருள்களும் வாயுவும் சூரியனும் சந்திரனும் அக்கினியுமெனப் பேர்கொண்ட தேவர்கள் இருளையடியோடொழித்துப் பூமியில் விளங்குகின்றார்கள் எ - று.

மழையாதிப் பொருள்கால் என்றதற்கு மழைமுதலிய பொருள்களைத் தருமெனப் பொருளுரைப்பினுமமையும். (௧௫)

வரையாப் பெருமைப் புகழோயிவ் வையமுழுது மற்றனைத்து
முரையாற் கலியா நடக்கின்ற தன்றே வேத சாத்திரமு
முரையா நின்ற வுலகனைத்து முன்றன் சொரூப மெனவந்த
வரையா நின்று தெரிசனமே யனைத்து வரமு மடியேற்கே.

(இ - ள்) அளவிடப்படாத பெருமையுங் கீர்த்தியுமுடைய கடவுளே! இவ்வுலகமுழுவதுந் தேவரீரது கட்டளையால் நடக்கின்றதல்லவா? வேதசாஸ்திரங்களும் சொல்லுகின்ற எல்லாவுலகங்களும் தேவரீரது சொரூபமென வந்த எல்லையாம். தேவரீருடைய தெரிசனமே அடியேனுக்கு எல்லாவரங்களுமாம் எ - று. (௧௬)

மூவா முதல்வன் றிருக்காட்சி முகிழ்த்த கருணை யாலயானே
தாவாப் பெருமப் பேறுடையே னென்றந்தை யவனும் பேறுடையான்
மேவாத் தவமும் பயன்பட்ட தொன்று மறியாச் சிறியேனிங்
காவா நின்சீர் யாதறிந்திட் டறைகே னறைய மாட்டேனே.

(இ - ள்) அழியாத முதல்வராகிய தேவரீருடைய திருக்காட்சியாகிய அருமபிய கிருபையால் அடியேனே கெடாத பெரும்பாக்கியமுடையவனாயினேன். என் பிதாவாகிய கிருச்சமதமுனிவனும் பாக்கியமுடையவனாயினன், (என்னுடைய) கெடாத தவமும் பிரயோசனப்பட்டது. யாதுமுணராத சிறியேன் இப்பொழுது

தேவரீருடைய சிறப்பை யாதுணர்ந்து கூறுவேன். ஆ! ஆ! (ஒன்றுங்) கூறமாட்டேன். எ - று.

ஒன்று என்பது சிறுமையைக் குறிக்கவந்தது. (கஎ)

மெய்யா வெனக்கு வரந்தருதன் மெய்யே யானான் மூன்றுலகும்
பொய்யா தெனக்கு வசமாகப் புரந்த வலாரி முதற்றேவர்
கையாற் புடைய மரபினராய்க் கடைகாத் தடியே னிடுமேவல்
ஐயா தாற்றி யென்செவிகளுக்கு நவைதீர் கொற்ற மெனையுறுக.

(இ - ள்) உண்மையானவனே! அடியேனுக்கு வரத்தைத் தருதலுண்மையே யாயின் மூவுலகங்களும் உண்மையாக எனக்கு வசமாகப் பொருந்துக; வலாரியாகிய இந்திரன்முதலிய தேவர்கள் கையைக்கட்டிக் கொள்ளுதலுடைய மரபினையுடையவர் வருபவர்களாய், கடைவாயிலிற் காத்திருந்து, அடியேன் கொடுக்குங்கட்டளையைக் கேடாமற் செய்து, காதுக்குக் குற்றமொழிந்த வெற்றி என்னையடைக எ - று. (கஅ)

எந்தப் பொருளை யெந்தெந்த வேல்லை யெளியேன் விழைந்தாலு
மந்தப் பொருளை யந்தந்த வமயத் தளியேற் கெளிதுறுக
சந்தப் பதும மலர்புரைநின் றாளி லன்பு மிகவுறுக
பந்தப் பவமிட் டகத்திருப் பரநா னுறுக வென்றிரந்தான்.

(இ - ள்) எந்தப்பொருளை யெவ்வெக்காலங்களில் அடியேன் விரும்பினாலும், அந்தப்பொருளே அவ்வச்சமயங்களில் அடியேனுக்கு நிச்சயமாய்ப் பொருந்துக; அழகிய தாமரைமலரையொத்த தேவரீருடைய திருவடியில் மிகுதியும் அன்புண்டாகுக; இறுதியில், பந்தமாகிய பிறவியையொழித்து அடியேன் பரத்தினையடைக வென்று யாசித்தனன் எ - று. (சக)

ஆரா வமுதா யடிநினையு மடியா ருள்ளத் தலைந்தூறும்
பேரா னந்தப் பெருக்கான பெரிய பெருமா னருள்செய்வார்
வாராய் சிறுவா நீவிழைந்த வரங்கள் கொடுத்தா நின்னேவல்
தீரா தியற்றி மூவுலகுஞ் சேவை புரியு மெஞ்ஞான்றும்.

(இ - ள்) ஆராவமுதமாய், திருவடியைத் தியானஞ்செய்யும் அடியவர் மனத்தில் ஊற்றெடுக்கின்ற பேரானந்த வெள்ளமும் பெரிய பெருமானுமாகிய கணேசப்பெருமான் அருள்புரிவார்: சிறுவா! வருவாயாக; நீ விரும்பிய வரங்களைக் கொடுத்தோம்; மூவுலகினரும் உன் கட்டளையை நீங்காமற்செய்து எக்காலமும் உன்னைச் சேவை செய்வர் எ - று.

ஆராவமுது - தெவிட்டாவமுதம்.

மூவுலகும் என்றதற்கேற்பச் சேவைபுரியுமென அஃறிணை முடிபு தந்தனர்.

இரும்பு வெள்ளி யிரணியத்தா லியன்ற மூன்று புரமுனக்கு
விரும்பிக் கொடுத்தா மவற்றினுக்கு விளம்பு நாமந் திரிபுரமே
யரும்பு புகழாய்க் குலக்கணத்து மறையு நாமந் திரிபுரனே
கரும்ப னெரிய விழித்தவனோ கணையா லன்றி யழியாவே.

(இ - ள்) இரும்பினாலும் வெள்ளியினாலும் பொன்னினாலும் அமைந்த மூன்றுபுரங்களை உனக்கு விருப்புற்றுக் கொடுத்தோம். அப்புரங்கட்குச் சொல்லுகின்ற

பெயருந் திரிபுரமென்பதேயாம் அரும்பிய கீர்த்தியையுடைய உனக்கு உலகமுழுவதுஞ் சொல்லும் பெயருந் திரிபுரனென்பதேயாம் மன்மதனை யெரியும்படி விழித்தருளிய சிவபெருமானுடைய ஒப்பற்ற கணையாலல்லாமல் அவை (வேறொருவராலும் எவ்வகையிலும்) அழியமாட்டா எ - று

திரிபுரன் - மூன்று நகரங்களையுடையவன்.

கரும்பன் - கருப்புவில்லை யேந்தியவன், மன்மதன். (உக)

நினைத்த விடத்திற் றிரிபுரமு நினைக்கு முன்னஞ் செலும்வண்டு
கனைத்து மதுவுண் டெதிரொடுக்குங் கடுக்கைச் சடையா னருட்கணையா
லனைத்து மழிக்கு மஞ்ஞான்றே யழியா முத்தி யுறுவையென
வெனைத்து மருளி யேரம்ப னிமமென றுங்கு மறைந்தனனால்

(இ - ள்) கருதுமுன்னமே நீ கருதியவிடத்திற்குத் திரிபுரங்களுஞ் செல்லும். வண்டுகளொலித்துத் தேனைப்பருகிக்குமட்டுகின்ற கொன்றைமாலையணிந்த சிவபெருமான் ஒப்ரகணையால் அவையெல்லாவற்றையுமழிக்கும் அப்பொழுதே அழியாத மோட்சத்தை யடைவையென்று எல்லாவற்றையும் அருளிச்செய்து விநாயகக்கடவுள் விரைந்து அந்தர்த்தானமாயினர். எ - று

தேவர்களணிந்த மலர்மாலைகள் வாடாமையும், அவற்றில் வண்டுகள் மொய்யாமையுமாகிய இயற்கையுடையனவாகவும், "வண்டுகனைத்து மதுவுண்டெதிரொடுக்குங்கடுக்கை" என்றது உலகிலுள்ள கொன்றைமலர்கட்குரிய இயற்கையையுணர்த்திய விசேஷணமெனக (உஉ)

பமர மொய்க்குங் கடமதப் பணைக்கைம் முகவ னருள்வரங்கேட்
டமரர் நடுங்கிப் பெருங்கவலை யாழி படிந்தார் திரிபுரனும்
விமல தவத்துக் கிருச்சமதன் விரைத்தா ளிறைஞ்சிப் பேறுரைத்துச்
சமரிற் கிளருங் கருத்தினொடு தங்கி னுன்புட் பகவனத்தில்.

(இ - ள்.) வண்டுகள் மொய்க்குங் கன்னமதத்தையும் பனையைப்போன்ற துதிக்கையையுமுடைய யானைமுகக்கடவுள் அருள்புரிந்த வரத்தைத் தேவர்கள் கேட்டுப் பயந்து பெரிய துன்பக்கடலில் மூழ்கினர்கள். திரிபுரனும் புனிதமான தவத்தையுடைய கிருச்சமதமுனிவனுடைய வாசந்தங்கிய (தாமரைபோன்ற) திருவடியைப் பணிந்து (தான்பெற்ற) பேற்றைக்கூறி, போரில் விளங்கும் எண்ணத்துடன் புட்பகவனத்திலே பொருந்தினன். எ - று

ஆழி - ஆழமுடையது, வட்டமாயுள்ளது, கடல் (உங)

புள்ளுறு றயியா விதழ்பரந்து பொருட்டு வாய்ந்த தெய்வமணக்
கள்ளூ றியதா மரைக்கடவுள் கணேசர் கமலத் தாண்மலர்த்தே
னள்ளூ றுளத்து வியாதனெனு மறவோய் பலிபோ திரிபுரனுந்
தெள்ளூ றியமெய் வரம்பெற்ற செய்தி யிதுவா மெனப்புகன்றான்.

(இ - ள்) பறவைகளின் துன்பமறியாத இதழ்களபரந்து, பொகுட்டமைந்த தெய்வமணம்பொருந்திய தேன்சிந்திய தாமரைமலரிலெழுந்தருளிய பிரமதேவன், கணேசப்பெருமானுடைய பாததாமரையின் தேனைத்து ஊற்றெடுக்கும் உள்ளத்தையுடைய வியாதமுனிவனே! பலியெனபவனே திரிபுரனுக்குத் தெளிவமைந்த உண்மையாகிய வரத்தைப்பெற்ற செய்தி இஃதாகுமெனக்கூறினன் எ - று. (உச)

அன்று பலிமா தவமாற்றி யமல னருள்சேர் புட்பகத்தை
யின்று புவியோர் வங்காள மென்ப ரவன்கொள் வரமுறைப்ப
நன்று தெரிந்தா யினிச்சோம காந்த வவன்கோ னடத்தியது
மன்ற வறிவா யெனக்கிளப்பான் மறுவில் பிருகு மாதவனே.

(இ - ள்) சோமகாந்தராசனே! அக்காலத்திலே, பலியென்பவன் பெருந்தவஞ்செய்து கணேசப்பெருமானுடைய திருவருளையடைந்த புட்பகநகரத்தையே, இக்காலத்தில் உலகினர் வங்காளமெனக் கூறுகிறார்கள். அவன்பெற்ற வரத்தை (யான்) சொல்ல நன்குணர்ந்தனை. இனி அத்திரிபுரன் அரசுபுரிந்ததையும் பொருந்த வுணர்வாயென்று பெருந்தவசியாகிய பிருகுமுனிவர் சொல்லுவாராயினர் எ - று (உரு)

திரிபுரன் வரம்பெறுபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - கஞாக

திரிபுரனரசாட்சிப்படலம்.

அரியுகைத் தருளு நால்வா யையங்கையா றனைய தானக்
கரிமுகன் கருணை பெற்றுக் களித்தபி னுற்றல் சான்ற
திரிபுரன் யாது செய்தா னெப்பென வியாதன் கேட்பப்
பெரியகுண் டிகைசே ரங்கைப் பிரமனே துரைக்கப் புக்கான்.

(இ - ள்) வல்லமைமிக்க திரிபுரன், சிங்கவாகனத்தைச் செலுத்தியருளும் தொங்கிய வாயையும் ஐந்துகரங்களையும் ஆறுபோன்ற மதப்பெருக்கையுமுடைய யானைமுக விநாயகக்கடவுள் கிருபையைப்பெற்று மகிழ்ந்தபிறகு யாதுபுரிந்தனன்? சொல்லவேண்டுமென வியாதமுனிவன் வினவ, பெரிய கமண்டலம்பொருந்திய அழகிய கையையுடைய பிரமதேவன் சொல்லத்தொடங்கினன் எ - று (க)

கண்டவர் வியக்கு மந்தக் கணேசமா புரத்தி லன்னோன்
கண்டகச் சிலையாற் கோயில் கண்டலங் கரித்துக் கண்ணுற்
கண்டதெய் வண்ண மந்த வண்ணமே கணேச னாகக்
கண்டகச் சிலையாற் செய்து காதலாற் பதிட்டை செய்தான்.

(இ - ள்.) கண்டவர்கள் களிக்கத்தக்க அந்தச் சிறந்த கணேசபுரத்திலே, அந்தப் பலியென்பவன், வயிரக்கற்களால் திருக்கோயிலமைத்து அழகுசெய்து, தான் கண்ணுற்றறிசித்த தெய்வவண்ணமோ அவ்வண்ணமே கணேசப்பெருமானை வயிரக்கல்லாற்செய்து ஆசையோடு அவ்வாலயத்திற் பிரதிட்டைசெய்தனன் எ - று
கண்டகம் - வயிரம். (உ)

நித்தலும் பூசை யாற்றிச் சிலபக னீங்கிப் பின்னாட்
பைத்தவா ருதிசூழ் மண்ணிற் பார்த்திபர் தம்மோ டேற்றுப்
பத்தியி னிறைஞ்சி னோர்க்குப் பணிகொடுத் திறைஞ்சார் தாரைச்
செற்றுவேற் றுருவி னோடும் விண்கொளச் செலுத்தி னோனே.

(இ - ள்.) நாடோறும் பூசைசெய்து சிலதினங்கள் கழிந்தபிறகு, பசியகடல் சூழ்ந்த பூமியில் அரசர்களோ டெதிர்த்துப் பக்தியோடு பணிந்தவர்களுக்குப் பணி கொடுத்து, பணியாதவர்களைக்கொன்று வேற்றுவடிவுடன் ஆகாயத்தை (இடமாகக்) கொள்ளும்படி அனுப்பினான் எ - று. (௩)

இடங்கொள்பா தலத்தி னேகி யெரிமணி சூட்டுப் பேழ்வாய்
விடங்கொள்வா லெயிற்றி னோர்கள் விடங்களி லவர்க ளாகி
மடங்கவன் போரில் வென்று மணிமுத லான செல்வ
மடங்கலுங் கவர்ந்து கைக்கொண் டவனியின் மீண்டு போந்தான்.

(இ - ள்) இடங்கொண்ட பாதலத்திற்சென்று, பிரகாசிக்கின்ற மாணிக்கம் பொருந்திய உச்சிக்கொண்டையையும், பிளவுபட்ட வாயையும், விஷத்தையும், வெள்ளிய பல்லையுமுடையவர்கள், விஷமில்லாதவர்களாகி மடங்கும்படி வலிய போரிலேவென்று, இரத்தினமுதலிய செல்வங்கண் முழுவதையுங் கிரகித்து உடன் கொண்டு பூமியில் திரும்பவும் வந்தனன் எ - று. (௪)

திக்கினும் பாத லத்துஞ் சிறந்தவா னிலத்துஞ் சாலத்
தொக்கதா னவர்க ளெல்லாந் துன்னினர் வணங்கிப் போற்ற
மிக்கருட் பார்வை நல்கி வேண்டிய சிறப்புச் செய்து
தக்கதன் பதாதி யாக்கிக் கொண்டனன் றறுகண் வீரன்.

(இ - ள்) திசைகளிலும், பாதலத்திலும், சிறந்த ஆகாயத்திலும் மிகுதியாகக் கூடிய அசுரர்கள் யாவரும் ஒன்றுகூடி வணங்கித் துதிசெய்ய, மிக்க கிருபாநோக்கஞ் செய்து, வேண்டிய சிறப்புகளைத்தந்து, தகுதியாகிய தன் சேனையாகச்செய்து கொண்டனன் அஞ்சாமைத் தன்மையுடைய அதிதிரிபுரன் எ - று.

பதாதி - காலாட்சேனை. தறுகண் - அஞ்சாமை. (௫)

விசிமுர சியம்ப வேலும் விசிகமு மழுவுந் தண்டு
மசியுமற் றெவையு மேந்தி யவுணர்பக் கந்திங் களில்லா
நிசியெனப் பருங்கு மொய்ப்ப ஞெமரவெல்லைப் புவிநின் றேகிப்
பசியபொன் னகரிற் கற்பப் பனிமலர்ச் சோலை புக்கான்.

(இ - ள்) இழுத்துக்கட்டிய பேரிகை யொலிசெய்யவும், வேலாயுதமும், அம்பும், மழுவும், தண்டமும், வாளும், மற்றெல்லா ஆயுதங்களுந் தாங்கி, அசுரர்கள் அப்பக்கத் திரவுபோலப் பக்கலில் நெருங்கிவரவும், விசாலமாகிய பூமியினின்று சென்று, பசிய பொன்னகரத்திலே குளிர்ந்த கற்பகமலர்ச்சோலையிற் புகுந்தனன். எ - று

திங்களில்லா நிசி - சந்திரன் இல்லாத இரவு இஃதிருளை விசேடிக்கக் கூறியது. அமாவாசியையெனக் ஞெமரல் - விசாலவுக்குறிப்புத்தோ ரிடைச்சொல். பொன்னகர் - தேவநகரம் (௬)

மைந்துறு வீர ராங்கு வைகிய சிலத்த ரோடு
நந்தன வனத்தைச் சாட னவையறு தேவ ருந்த
ரிந்திரற் கோடிச் சொன்ன ரெய்திய வவுணர் கோனு
முந்தினன் றாதா தம்மை யவருமப் போயுரைக்க லுற்றார்.

(இ - ள்) வலிமைபொருந்திய வீரர்கள் அங்கேயிருந்த சிலதரோடு நந்தனவனத்தை யலைப்ப, குற்றமற்ற தேவதூதர்கள் இந்திரனுக்கு விரைந்துசென்று (விடயத்தை) கூறினார்கள். ஆங்கடைந்த அவுணர் தலைவனான திரிபுரனும் தூதுவர்களைச் செலுத்தினன். அத்தூதுவருஞ்சென்று (இந்திரனுக்குச்) சொல்லலானார்கள். எ - று.

மைந்து - வலிமை சிலதர் - ஏவலாளர். (௭)

எரியுமிழ் குலிச வேற்கை யிந்திர வெங்கள் கோமான்
திரிபுர னீங்குப் போந்தான் றெரிசனஞ் செய்ய வம்மோ
புரிவொடும் வாரா யாகிற் பொன்னுலக காட்சி நீக்கிப்
பரிவுறத் தரும லோகம் புகுத்துவான் படர்ந்து நின்றான்.

(இ - ள்) தீயைச் சொரியும் வச்சிரவேலையேந்திய இந்திரனே! எங்கள் தலைவனான திரிபுரன் இங்கேவந்துள்ளான். அவனைத் தெரிசனஞ்செய்ய வருவாயாக. ஆசையோடு (அங்ஙனம்) வாராதிருப்பையாயின், (உன்னுடைய) பொன்னுலக ராச்சியத்தை யொழித்து, துன்பமடையும்படி இயமதருமலோகத்திற் புகுத்தும்படி வந்திருக்கின்றான். எ - று (௮)

அல்லதூஉ மடுபோ ராற்று மாற்றலுண் டாயின் வல்லை
வல்லபல் படையி னோடும் வருகவென் றுரைத்தா னியாது
சொல்லுவ தென்றார் கேட்டுத் தொடிக்கரந் தூணிற் றாக்கி
நல்லதென் றிலங்க நக்கு நாகர்வேற் குலிச வேந்தன்.

(இ - ள்) அன்றியும், (எம்மிறைவனோடு) கொல்லுகின்ற போர்புரியும் வல்லமையுண்டாயிருக்குமாயின், விரைவில் வலியமைந்த பலபடைகளோடும் (போர்க்கோலமாய்) வருகவென்று கூறினான் (ஆதலின்) நீ சொல்லுவதியாதெனக் கேட்டனர். அச்சத்தைச்செய்யுங் குலிசவேலேந்திய இந்திரன்கேட்டு, தொடியணிந்த கையைத் தூணிலடித்து நல்லது! என்றுவிளங்கச் சிரித்து எ - று. (௯)

கடிமலர்க் கமலம் பூத்த காடெனக் கண்கள் சேப்ப
முடிவது தேரா னாகி முற்றுபோர்க் கடுத்தே னென்னா
விடியிடித் தென்வன் சொல்லா லியம்பிமற் றவரைப் போக்கிக்
கொடிநகர் முரசிற் சாற்றிக் கொழும்படை யெழுக வென்றான்.

(இ - ள்) வாசந்தங்கிய தாமரைமலர்விகசித்தகாடுபோலக் கண்கள் சிவக்க, முடிவது (இன்னதென்று) உணராதவனாகி, முடிவாகிய போருக்குவந்தேனென்று, இடியிடித்தாற்போலக் கொடுஞ்சொல்லாற்கூறி, அத்தூதுவரை யனுப்பிவிட்டு, துவசங்கட்டிய நகரத்தில் முரசறைவித்து, செழியபடையெழுக வெனக்கூறினன் எ-று.

போர்க்கடுப்பேனெனக் கூறவேண்டியிருப்ப, அடுத்தேனென்றது துணிவுபற்றிவந்த காலவழுவமைதி (௧௦)

விடுத்திடுந் தூதர் மீண்டு விண்ணவர் கோமான் போர்க்கிங்
கடுத்ததேல் கருதி நின்றா னையவென் றிறைஞ்சிச் சொன்னார்
தொடுத்தபூங் கழற்கால் வீரன் றுணர்படு மெரியி னெய்யை
மடுத்தென வெகுளி பொங்க வரவினை நோக்கி நின்றான்.

(இ - ள்.) விடுத்த தூதுவர்கள் திரும்பிவந்து, தேவர்கள் தலைவனுன இந்திரன் இப்பொழுது போருக்குவருதலை நினைத்திருக்கின்றானென்று பணிந்துசொன்னார்கள். அழகிய வீரக்கழலணிந்த காலையுடைய வீரனுகிய திரிபுரன் கிளைக்கின்ற நெருப்பில் நெய்யைப் பெய்தாற்போலக் கோபமதிகரிக்க. (இந்திரனைபோருக்கு) வருகையை எதிர்பார்த்திருந்தனன். எ - று

துணர்-பூங்கொத்து, துணாபடுமெரி யென்றதற்குக் கிளைத்த நெருப்பெனக.

படையொடு படைகளனைத்தும் பாங்குற மணிப்பொற் கோயிற்
கடைகழன் றமரர் கோமான் களிற்றர சிவர்ந்து கொற்றக்
குடைகொடி மிடைய வார்ந்த குருமயிற் கவரி துள்ள
வுடைகட லோதை யென்ன வொலிமுர சியம்பச் சென்றான்.

(இ - ள்.) நால்வகைச் சேனையும் ஆயுதங்களோடும் பக்கத்திற்பொருந்த, அழகிய பொன்னுலாகிய அரண்மனைவாயிலின் கடையைவிட்டு, யானைவேந்தாகிய ஐராவதத்திலாரோகணித்து, வெற்றிக்குடைகள் கொடிகள் நெருங்கவும், பொருந்திய நிறமமைந்த மயிற்பீலியுஞ் சாமரையுந்துள்ளவும், உடைபட்ட கடலொலிபோல ஒலிக்கின்ற பேரிகைமுழங்கவும், தேவராசனுகிய இந்திரன் (போர்க்கோலமாகிச்) சென்றனன். எ - று (கஉ)

கரணங்க ளுயிர்க்கு வாய்ந்த காட்சியிற் றனக்கு வாய்ந்த
வாரணங்கள் விசித்த வாக்கை யமரர்கள் மருங்கு சூழ
விரணங்கொள் வயிர வொள்வே லிந்திர னெய்த லோடுந்
திரணங்கள் டனைய னுகித் திரிபுர னமரி னேற்றான்.

(இ - ள்) உயிர்க்குக் கரணங்கள் துணையாகப் பொருந்தியகாட்சிபோல, தனக்குப்பொருந்திய காவல்களைக்கட்டிய உடலையுடைய தேவர்கள் பக்கலிற்சூழ, இரணத்தைக்கொள்கின்ற ஒள்ளியவயிரவேலேந்திய இந்திரன்(போருக்கு) வரவும், திரிபுரன் திரணத்தைக் கண்டாற்போன்றவனுகிப் போர்செய்யுங் கருத்திலெதிர்த்தனன் எ - று

"கரணங்க * * * இந்திரன் எய்தலோடும்" என்றது உயிர்க்கு அந்தக்கரண புறக்கரணங்கள் துணையானவாறு, இந்திரன் தன் பரிவாரங்களாகிய தேவர்கள் புடைசூழ்ந்து துணைவரவுமென்பதாம் (கங)

புண்ணிய மோடு பாவம் பொருதென வவுணர் சேனை
விண்ணவ ரொடுபோ ராற்றி மிடலசிறி தொழிய நோக்கிப்
புண்ணிடை வேலிட் டனைய பொருமெழு மனத்த னுகித்
திண்ணிய வாமா வூர்ந்து திரிபுர னூழில் செய்தான்.

(இ - ள்) புண்ணியத்துடன் பாவமானது போர்செய்தாற்போல அவுணர் சேனையானது தேவர்களோடு (எதிர்த்துப்) போர்செய்து, சிறிது வலிமை யொழியத் திரிபுரன் பார்த்து, புண்ணில் வேற்படையைச் செருகினுற்போல, பொருமெழுந்த மனமுடையவனுகி, வலியதாகிய குதிரையை வாகனமாகக்கொண்டு (தேவர்சேனையை) கொல்வானாயினன். எ - று

ஊழில் என்பதற்கு ஊழிலாட்டெனக்கொண்டு, தனமெய்புதைந்த படையைப்பறித்து மாற்றார் யிரிந்ததெனக் கூறினுமாம். (கச)

அற்றன படையோ டங்கை யறுந்தன தாரோ டாக
மிற்றன கழலோ டொண்டா ளிறந்தன முடியோ டுச்சி
செற்றின குடரோ டீரல் சிந்தின வலியோ டேக
முற்றிய வமரர் சேனை முரிந்தன வவுண ரூக்க.

(இ - ள்) அவுணனாகிய திரிபுரன் தாக்குதலால், ஆயுதங்களோடு அழகிய கைகளற்றன. மாலையோடு மார்புகள் அறுந்தன. வீரகண்டாமணியோடு ஒள்ளிய கால்கள் இறுபட்டன. கிரீடத்துடன் சிரங்கள் அழிந்தன. குடலுடன் ஈரல்கள் விழுந்தன. வலிமையுடன் விடாமுயற்சிகள் சிந்தின. தேவசேனைகள் (இவ்வகையாக) முடிவுற்றன. (தப்பினவை) முரிந்தோடின எ - று. (௧௫)

மந்தரங் கலக்கப் பட்ட வாருதி யனைய சேனை
யிந்திர னோக்கி நோனா தெரியெழ விழித்துச் சீறிக்
கந்தடு களிநல் யானை காலெனக் கடுக வுந்தி
வெந்திற லவுண னோடும் வெய்யபோர் விளைத்தா னன்றே.

(இ - ள்) மந்தரகிரியால் கலக்கப்பட்ட பாற்கடலைப்போன்ற (தேவர்) சேனையை இந்திரன்கண்டு மனம்பொறாதவனாகி, (கண்களில்) தீசொரியக் கோபித்து, கட்டுத்தறியைக் கோபிக்கின்ற நல்லமதச் செருக்குடைய ஐராவதமென்னும் பட்டத்து யானையைக் காற்றுப்போல விரைந்துசெலுத்தி, வெவ்விய வலியுடைய திரிபுரனுடன் கொடும்போர் புரிந்தனன் எ - று. (௧௬)

தொடுத்தபல் வாளி விட்ட தோமரங் குந்த நேமி
விடுத்திடும் பாச மோச்சும் வெய்யவாண் முசலந் தண்டந்
தடுத்துறு மத்தி ரங்க டமையுநேர் விடுத்துக் களரி
புடைத்திரள் சிந்த வார்த்திட் டுந்தினன் பரியைத் தீயோன்.

(இ - ள்) பலபாணங்களைத் தொடுத்தனன். இருப்புலக்கை ஈட்டி சக்கரம் இவற்றைவிட்டனன். பாசத்தை வீசினன். கொடியவாள் முசலம் தண்டம் இவற்றைச் செலுத்துவான் கொடியோனாகிய திரிபுரன் நட்சத்திரத்தொகுதி சிந்தும்படி ஆர்ப்பரித்து, இந்திரனேவிய அஸ்திரங்களைத் தடுத்து அஸ்திரங்களையு நேரேவிடுத்துச் சாய்த்து, குதிரையைத் தூண்டினன் எ - று (௧௭)

பாய்பரி தனது முன்கால் பனைக்கைமால் யானை நெற்றித்
தோய்தர நாட்ட லோடுந் துணையென வவுணர் கோமான்
காய்கதிர் வாளா லோச்சிக் கடவுளர் கோமான் செங்கை
வாய்தரு வயிர வேலு மானமு நிலத்தில் வீழ்த்தான்.

(இ - ள்) பாய்ந்துசெல்லுங் குதிரையானது தன்னுடைய முன்காலை, பனைபோன்ற துதிக்கையுடைய பெரிய ஐராவதத்தின் நெற்றியிற்படும்படி வைத்தவுடனே, அவுணர்தலைவனான திரிபுரன் காய்கின்ற கிரணத்தையுடைய வாட்படையால் வெட்டி, தேவராசனாகிய இந்திரனுடைய செங்கையிலுள்ள வச்சிரவேலையும் மானத்தையும் நிலத்தில் வீழ்த்தினன். எ - று (௧௮)

கந்துகங் கடுக மீட்டக் கந்துக னெளிந்து தாழ
வுந்திரீ ணிலத்தில் வீழ்ந்த வுருப்பவிர் குலிசங் கைக்கொண்

டந்தின்மேல் வந்த வேழ மத்தகந் தடிந்து வீரஞ்
சிந்தினன் றீயோன் வல்லே தேவர்கோ னிலத்திற் பாய்ந்தான்.

(இ - ள்.) கொடியோனாகிய திரிபுரன் குதிரையை விரைந்து திருப்பி அக்குதிரையை நெரித்துத் தாழ்ச்செலுத்தி, நெடியபூமியில் விழுந்த அழகுற்று விளங்குகின்ற வச்சிரத்தைக் கையிற்கொண்டு, அவ்விடத்தில் மேலுற்றுவந்த ஐராவதமென்னும் யானையின் மத்தகத்தை வெட்டி வீரத்தை யழித்தனன். உடனே தேவர்கள் தலைவனான இந்திரன் பூமியிற் குதித்தனன் எ - று.

குலிசம் - வச்சிராயுதம் (௧௯)

உழுந்துகண் ணடியின் மேலா லுருளுமு னெழுந்து தாவிக்
கொழுந்துகொள் வீரத் தோடுங் குதிரைமே லிருந்தான் றன்னைச்
செழுந்தனிக் கடகக் கையாற் சென்னியிற் புடைத்தான் றேவர்
விழுந்துவந் தனைசெய் நோன்றாள் வேந்தன்மூர்ச் சித்தான் றீயோன்.

(இ - ள்) தேவர்கள்பணிந்து வணக்கஞ்செய்யுஞ் சிறந்த பாதங்களையுடைய தேவேந்திரன், உழுந்தானது கண்ணடியின்மேலே உருளுதற்குமுன்பே எழுந்து பாய்ந்துசென்று, மிகுந்தவெற்றியோடும் புரவியின்மேலிருந்த திரிபுரனை, செழியவொப்பற்ற கடகமணிந்த கையினாலே தலையிலடித்தனன். கொடியோனாகிய திரிபுரன் மூர்ச்சித்தனன் எ - று

புடைத்தல் - மோதுதல்.

உழுந்துகண்ணடியின் மேலாலுருளுமுன் னென்றது நிகழ்ச்சியின் விரைவினை விளக்கக்கூறியதாம். (௨௦)

மூர்ச்சைவிட் டொழிந்த பின்னர் முடிகெழு மமரர் வேந்தன்
றார்ச்சிறை மார்பத் தோடித் தாக்கின னவனு மூர்ச்சித்
தோர்ச்சியுற் றுணிவென் றேடு மொண்படை யொழித்து மல்லுப்
போர்செயல் விளைக வென்றான் பொருக்கென வவுணன் சொல்வான்.

(இ - ள்.) (திரிபுரன்) மூர்ச்சைதெளிந்தெழுந்தபிறகு, விளங்குகின்ற கிரீடமணிந்த தேவேந்திரனுடைய மாலையணிந்த மார்பிற்பாய்ந்து மோதினன். அவ்விந்திரனும் மூர்ச்சையடைந்து அதுதெளிந்து யோசித்து நீயென்னோடும் ஆயுதப்போரையொழித்து மற்போர்புரிக வென்றனன். அவுணனாகிய திரிபுரன் (அதற்குவிடையாக) விரைந்து கூறுகின்றான். எ - று. (௨௧)

பதங்கமோ வடவைத் தீயைப் படாசிறைக் காலிற் சிந்துங்
கதங்கடாஅ மெனக்கு நீமன் கருத்தினு ளழிந்தா யஞ்சே
விதங்கெடா திருக்க வேண்டி னிருநிலத் திருக்கை யீந்தேன்
மதங்கொளா தாங்குச் சென்று வாழ்கநின் கிளையோ டென்றான்.

(இ - ள்) வடவாமுகாக்கினியை ஒருபதங்கமோ தன்னுடைய வீசுகின்ற சிறகின் காற்றினாலழிக்கும். கோபத்தைச் சிந்தும் எனக்கு நீ மிகவும் மனதில் வருந்தினும் அஞ்சவேண்டாம். நன்மையழியாதிருக்க வேண்டுமாயின், பெரியபூமியில் (உனக்கு) வாழ்க்கையைக் கொடுத்தேன். கெர்வப்படாமல் அங்கேபோய் உன் உறவினரோடு வாழக்கடவையென்று கூறினன். எ - று.

பதங்கம் - விட்டில் ; விளக்கவிக்கும் ஓர் சிறுபூச்சி

வடவைத்தீ - பெண்குதிரை முகம்போல வடிவுள்ள பெருநெருப்பு. இது கடலானது எல்லைகடவாதிருக்க இறைவனால் அங்கு நியமிக்கப்பட்டது. (௨௨)

கூற்றா னவனை வானிற் கொற்றவ னேநோக்கி புன்னை
வேறுபோ ரகழைத்தல் பற்றி மெலிந்துமீள் ஒருக்கொண் டிவ்
வாறுநீ புரைத்தாய் புன்றன் வடிவெலா மீர்ந்து சுற்றும்
பாறுணா வளிப்பே னென்று பகர்ந்துதோள் புடைத்தார்த் திட்டான்.

(இ - ள்) அவ்வாறு சொல்லிய திரிபுரனைத் தேவேந்திரன் பார்த்து, உன்னை வேறாகப்பட்டபோருக்கு அழைத்ததுபற்றி (என்னை)க் கொன்றதற்கு மனங்கொண்டு இவ்வண்ணமாகச் சொல்லினை. உன்தேக முழுவதையும் அரிந்து, சுற்றிலும் பருந்துக ளுண்ணும்படி (இரையாகக்) கொடுப்பேனென்று கூறி, புயத்தைத் தட்டி ஆரவாரித்தனன் எ - று. (௨௩)

செருவினிற் கிளருந் திண்டோட் டிரிபுரன் மலைந்து நேர்ந்து
குருதிகொப் புளிப்பத் தாக்குங் கோவமா கோனைத் தாங்கி
பொருந்துழித் தாளைப் பற்றிப் பொருக்கெனக் கரத்தாற் றாங்கி
யிருவிசும் பிடைவட் டித்து விட்டன னிமைக்கு முன்னர்.

(இ-ள்) போரிற் பொங்கும் வலியதோளையுடைய திரிபுரன் மற்போர் செய்ய விணங்கித் தானும் உதிரங்கொப்புளிக்கும்படி தேவேந்திரனையடித்துப் போர்செய்கையில், அவன்காலைப்பிடித்து இமைப்பொழுதின் முன்னரே விரைந்துகையினா லெடுத்து, பெரிய ஆகாயத்திற் சுழற்றிவிடுத்தனன் எ - று

கோவமாகோவென்றது தேவலோகத் தலைவன், இந்திரன்
செருவினிற்கிளருந் திண்டோள் - போரென்னுறு பூரிக்குந்தோள். (௨௪)

அந்தர நிவந்த சோலை யலர்பசுங் கோட்டிற் றாலகம்
மந்திக ளுகளுந் தோறுங் கிழிந்துவார் மதுநீர் பாய்ந்து
செந்தினை விளைக்குஞ் சாரற் சிலம்புசூ ழிமைய பாங்க
ரிந்திரன் வீழ்ந்து மூர்ச்சித் திருந்தவன் போற்கி டந்தான்.

(இ - ள்) ஆகாயமளாவிய சோலையிலே பரந்த பசிய கொம்புகளிலுள்ள தேன்கூடுகள் குரங்குகள் புகுந்தோறுங் கிழிபட்டு, ஒழுகுகின்ற தேனொழுக்கானது பாய்ந்து செவ்விய தினைப்பயிரை விளைக்கும் சாரலையுடைய மலைகள்சூழ்ந்த இமயமலையின் பக்கலில், இந்திரன்விழுந்து மூர்ச்சையுற்றுச் செத்தவன்போலக் கிடந்தனன் எ - று

இறால் - தேன்கூடு (௨௫)

தெம்முனை சாய்க்குந் தன்கோன் றிரிபுரற் குடைதல் கேட்டுப்
பொம்மனென் குழல்கள் சோரப் புலோமசை நிலத்தில் வீழா
வம்மவோ வம்ம வோவென் றழுதுயர் ழாந்து தேவர்
தம்மொடு மிரியல் போனா டமணிய வுலக நீத்து.

(இ - ள்) பகைவரைப் போரில் வெல்லுந் தன்கணவனாகிய இந்திரன் திரிபுரனுக்குத் தோல்வியுற்றதைக் கேள்விப்பட்டு, பூரித்தமெல்லிய கூந்தலினின்று தேன்

சொரிய இந்திராணி பூமியின்மேல்விழுந்து, அம்மவோ! அம்மவோ! என்று புலம்பித் துன்புற்று, தேவர்களோடும் பொன்னுலகத்தை விடுத்து (அவன்வீழ்ந்த விடத்துக்கு) ஓடிப்போயினள். எ - று (உசு)

நிலைப்பொழி யமர ரெல்லா நேரிழைச சசிதன் னோடு
மிலைப்புடன் களத்துப் போகி யிந்திரன் கிடப்பக் கண்டு
தலைப்படு மெழுத்தோ வென்று தளர்வுதீர்த் தவனோ டந்த
மலைப்புழை முழைக டோறும் வைகினா கரந்து மாதோ.

(இ - ள்.) இருக்கையைவிடுத்த தேவர்கள் யாவரும், இந்திராணி தேவியோடுஞ்சென்று, இந்திரன் இளைப்புடன் களத்தற்கிடக்கக் கண்டு, தலையிலெழுதிய வெழுத்தோவென்று, அவன மனத்தளர்ச்சியை யொழித்து, அவனிந்திரனுடன் அந்த இமயமலையின் புழைகளாகிய குகைகளிலெல்லாம ஒளிந்து வாழ்ந்தார்கள். எ - று. ()

செங்கள நீங்கி யாந்த் திரிபுரா னான்கு கோட்டு
வெங்கயத் திவர்ந்து வெற்றி முரசொடு * வளைகள் விம்மப்
பொங்கெழின் மாட மேடைப பொன்னகர் புகுந்து வேந்தன்
றங்கிய கோயில் சார்ந்து தவிசினவிற் றிருந்தா னன்றே.

(இ - ள்) அந்தத் திரிபுரன் போர்க்களத்தையொழிந்து, வெவ்விய நான்கு கொம்புகளையுடைய ஐராவதத்தின்மேலேறிக்கொண்டு வெற்றிமுரசும (வெற்றிச) சங்கமும் ஒலிக்க, மிக அழகையுடைய மாடங்களும் மேடைகளும் பொருந்திய பொன்னகரத்திற் பிரவேசித்து, இந்திரனவசிக்குங் கோயிலையடைந்து, சிங்காசனத்தில் வீற்றிருந்தனன். எ - று. (உஅ)

திரம்பிய களிய னாகி நீடுவான் குடிக ளெல்லாம்
பரம்புதன் னாணை கூள் மேள பயிலுமா முரசிற சாற்றி
யரம்பையா நடனஞ் செய்ய வமைந்துநங்கின ராகள் வீணை
நரம்புளர்ந் திசைக டேக்க நலத்தக வரசு செய்தான்.

(இ - ள்) திரமபிய களிப்புடையவனாகி, தொன்மைவாய்ந்த சிறந்தகுடிகள் யாவரும் பரவிய தனகட்டளைக்குட்பட்டு வாழும்படி பேரிகையறைந்து, அரம்பா ஸ்திரீகள் நடனஞ்செய்யவும், கின்னரர்கள் வீணையின நரம்புகளைத் தடவி இசைப் பாட்டுகளை யெழுப்பவுங் கட்டளையிட்டு, நன்மையாக அரசுபுரிந்தனன். எ - று.

களியன் - களிப்புடையவன். (உகூ)

சிலபகல் கழிந்த பின்னாத் திசைமுக னுலகஞ் சார்ந்தா
னலரவன் வருவ தெண்ணி யாழியா னுலகம புககான
மலரவன் றனைக் கொண்டு மாலுமவை குறுந நீங்கிப
புலவர்கள் கரந்து வைகும் பொன்னிம யத்தைச் சார்ந்தான்.

(இ - ள.) சிலதினங்கள் சென்றபிறகு, (திரிபுரன்) பிரமனுடைய சத்திய லோகத்தை யடைந்தனன். பிரமதேவன (அவன்) வருவதை யோசித்து, சக்கராயுத

* முரசொடுவளைகள விம்மவென்றும் பாடம் வளைகள் - மலைகள் தம்மைச் சிரகரித்த இந்திரனின்மையின் தாம சுகப்பட்டனவென மலைகள் பூரித்தனவென் பதாம்.

மேந்திய விண்டூர்த்தியின் வைகுந்தலோகத்திற் சென்றனன். அந்தத் திருமாலும் பிரமதேவனை யுடன்கொண்டு வைகுந்தத்தைவிட்டு, தேவர்கள் மறைந்துவசிக்கும் பொன்மயமான இமயமலையை யடைந்தனன். எ - று. (கo)

சார்ந்தவன் பிரம னிலலாச சதநிய வுலகை நோக்கி
யார்நததன் றுணை யங்கு மமைத்துவை குந்தத் தெய்தி
யூர்ந்திடு மணையி னுறு மொழிந்தமை யணாநதிட் டாங்குற
கூர்ந்ததன் றுணை வைததுக குவலயத திறங்கினானே.

(இ - ள்) (அவ்வாறு) சேர்ந்த திரிபுரன் பிரமதேவனில்லாத சத்தியலோகத்தைப் பார்த்து, பொருந்திய தன் ஆககினையை அங்கே (நடக்கும்படி) நிறுத்தி, வைகுந்த நகரமடைந்து, திருமாலுஞ் சென்றமையை யறிந்துகொண்டு, அவ்விடத்தும் கூர்மையான தன் ஆககினையை நிலைநிறுத்திவிட்டுப் பூமிக்குவந்தனன். எ - று.

ஊர்ந்திடுமணையினான் - நாகத்துசெலலும் பாமபைச சயனமாகவுடையவன்; திருமால் (ருக)

வரமபல கொடுதத வைங்கை வள்ளலைப் பூசை யாற்றிப்
பரமபர வரமுன் றநத பாழியம புரிசை மூன்று
முரமபெற வினறு நாமேயற குதவுக வெனறு நினறான
புரமபல வளததி னோடும பூகதன விசுமபி னமமா

(இ - ள்.) பலவரங்களை யருளிய ஐந்து திருக்கரங்களையுடைய விநாயகப் பெருமானைப் பூசைசெய்து, பரதது‌க்குமபரமானவனே ! முனனே (எனககு) வரமாககொடுதத பெரிய அழகிய மும்மதிலகளையும் வலிமையோடு இப்பொழுது அடியேனுக்கு அருளபுரிகவென்று நின்றனன (திரிபுரன) அப்பொழுது ஆகாயத்திற் பலவளஙகளோடும் முப்புரங்கள் தோனறின எ - று. (ருஉ)

வேறு

கறபகப பொதுமபருங காம தேனுவும்
பொறபமா நிதிகளும பொருவி லாதபல
வறபுதப பொருளகளு மளவில செலவமு
முறபவித தனவுறு புரஙகண மூனறுமே.

(இ - ள்) கற்பகச்சோலையும், காமதேனுவும, அழகுபொருந்திய (சங்கநிதி) பதுமநிதிமுதலிய) நிதிகளும், ஒப்பில்லாத பல அறபுதபபொருளகளும, எல்லையில்லாத செல்வமும, பொருநதிய முப்புரஙகளிலும உற்பவிததன. எ - று.

நிதி - எடுக்குந்தோறும குறைபடாதது (ருங)

இநதிர னுலகமு மெனைத்து மாககிய
வந்தண னுலகமு மாழி யேநதிய
சுந்தர னுலகமுந துணையு றாவெனின்
பிநதொரு புரங்கா பேசற் பாலதோ.

(இ - ள்) இந்திரலோகத்தையும்பிறலோகங்களையும் படைத்தபிரமனுடைய சத்தியலோகமும், சக்கராயுதமேநதிய அழகுவாய்நத திருமாலினுடைய வைகுந்த

லோகமும் (முப்புரங்கட்குச்) சமானமாகாவெனின் வேறொரு நகரமானது ஒப்பாகச் சொல்லுந் தன்மையையுடையதோ? எ - று.

அந்தணன் - பிரமன். அழகிய தன்மையையுடையோன். (௯௪)

தடையற வெங்கணுஞ் சார வல்லவா
யுடையவன் முத்தியை யுறும்ப போகலா
லிடையழி வின்மையி னெயில்க ளூன்றுமுன்
னடைதரு சூக்கும வாக்கை போன்றவே.

(இ - ள்) எல்லாவிடங்களிலுந் தடையின்றிச் செல்லவல்லமையுடையவனாகிய திரிபுரன் முத்தியையடையும் அக்காலத்திலல்லாமல், இடையிலே அழிவில்லாமையால், மும்மதில்களும் முன்னேயடைந்த சூக்குமதேகத்தை யொத்தன எ - று.

வாய் - வழி. வல்லவாயென்றதால் வல்லமையென்றும். (௯௫)

கரும்பொனின் வெண்பொனிற் காமர் செம்பொனிற்
றரும்பெரு முப்புர முயிர்த மக்கெலாம்
விரும்பிய போகங்கள் விளைத்து நல்கித
மரும்புதல் செய்யுமூன் றுக்கை யும்பொரூஉம்

(இ - ள்) கரும்பொன்னினாலும், வெண்பொன்னினாலும், அழகிய செம்பொன்னினாலுஞ் செய்துள்ள பெரிய திரிபுரங்களும், உயிர்கட்கெல்லாம் இச்சித்த போகங்களை யுண்டுசெய்[து], நல்ல இதத்தையும் உண்டாக்குகின்ற மூவகைத் தேகத்தையும் ஒத்திருக்கும் எ - று

கரும்பொன் வெண்பொன் செம்பொன் என்பன முறையே இரும்பு வெள்ளி பொன் என்பனவாம். மூன்றுடக்கைகள் - தூலதேகம் சூக்குமதேகம் காரணதேகமென்பன. (௯௬)

திண்டிற லுடையனத் திரிபுரப்பெயர்
கொண்டவன் றிரிபுரங் குலவி நின்றமை
கண்டனன் கரையறு களிப்பி னீடினன்
னண்டர்கள் பிரான்றிரு வருள்வ ழுத்தினன்

(இ - ள்) மிக்க வல்லமையுடையவனாகிய திரிபுரனென்னும் பெயருடையவன் திரிபுரங்கள் சமைந்து நின்றமையைக் கண்டனன், எல்லையற்ற ஆசையசிகரித்தனன். தேவர்களுக்குத் தலைவராகிய கணேசப்பெருமானுடைய திருவருளைப் பணிந்தனன். எ - று (௯௭)

தனையாகன் மூவரைத் தன்மனத்தினு
னினையுமுன் றோற்றின னவர்க்கு நீடிய
வனையமுப் புரமூன் றுக வைகிய
வனைபுக ழுலகமும் வழங்கி னனரோ.

(இ - ள்) மூன்று புத்திரர்களைத் தன் மனத்தினாலே நினைக்குமுன்னே படைத்தனன். அவர்களுக்குப் பெரிய ஆநதத திரிபுரங்களையும் மூன்றுகவிருந்த புகழ்பொருந்திய உலகத்தையுங் கொடுத்தனன். எ - று

மூன்றுக வைகிய வுலகமென்றது சுவர்க்க மத்திய பாதலமென்னுந் திரிலோகங்களை. (௯௮)

வச்சிர கமிட்டிரன் மருவ லார்தமை
வெருவெனத் தாக்கிடும் வீம காயனே
கரசமில் பெருவலிக் காள கூடனென்
றரசிளு மைந்தருக் கறைவர் நாமமே

(இ - ள்) வச்சிரகமிட்டிரன் - சத்துருக்களைப் பொருதலையாரே போதும் வீம காயன் - எல்லையில்லாத மிக்க வல்லமையுடைய காளகூடன் என, அந்தச் சிறுவர்களாகிய புதல்வர்களுக்குப் (பெரியோர்) பெயர்கள் கூறுவார். எ - று. (௩௯)

மானமிக் குடைய தன் மைந்தர் மூவர்க்கும்
வானவர் முதலிய மற்றை யாவர்க்குந்
தானொரு முதல்வனாய்த் தந்தி மாமுகற்
கானபூ சனைபுரிந் தமர்ந்து வாழ்ந்தனன்

(இ - ள்) மிக்க மானமுடைய தன் புத்திரர் மூவருக்கும் தேவர்கள் முதலிய மற்றெல்லோருக்கும், திரிபுரனானவனே யொருதலைவனாகி, சிறந்த யானைமுகமுடைய கணேசப்பெருமானுக்கு (ஆகமோக்தமாக) உரித்தான பூசையைச் செய்துகொண்டு பொருந்தி வாழ்ந்தனன் எ - று. (௪0)

சுகிலமே சபிலமே சவிர்தத்தி யேயெனப்
பகர்வர்கண் முறையினப் பாழி நோசிமையர்
சுகிலமண் சபிலமந் தரஞ்சு வர்கதிசி
மிகுத்துறக் கத்தினு மேவி வைகின

(இ - ள்) சுகிலமும் சுபிலமும் சவிர்சகியுமென்று அப்பெரிய மதில்களை முறையே சொல்வார்கள் (அம்மதில்கள் மூன்றுள்) சுகிலம் பூமியிலும், சபிலம் அந்தரத்திலும், சவிர்தத்தி சோதிமிகுந்த சுவர்க்கத்திலுமாகப் பொருந்தியிருந்தன எ - று. (௪௧)

வேறு

காடமரு வாக்கருள் வச்சிரதமிட்டி ரன் வீம காயன் காள
கூடனிவர் முறைபானே சகிலமுதன் முப்புரத்து மாடி வாழ்ந்து
நீடரசாட் சிபுரிந்திருந் தனர்கடிரிபுரன்சொன் னெறியா லென்றும்
பாடியன் முப்புரமொருங்கா யிரமாண்டி னொருசேரும் பண்பிற் கூடும்

(இ - ள்) சத்துருக்களுக்கு இடுக்கட்டைக் கொடுக்கும் வச்சிரதமிட்டிரன் வீமகாயன் காளகூடனாகிய இவர்கள் முறைப்படி சுகிலமுதலாகிய முப்புரங்களிலுங் கூடிவாழ்ந்து, நெடிய அரசுரிமையைச் செய்துகொண்டிருந்தார்கள் திரிபுரன் சொல்லியவழியால் எப்பொழுதும் பெருமையோடிருப்பன திரிபுரங்கள் ஆயிரவருடங்கட்கொருமுறை ஓரிடத்தில் அழகு பொருந்தச் சேரும் எ - று. (௪௨)

முப்புரமுந் தனித்தனியே நூறியோ சனையுயர மொழிவிசால
மப்படியே யமைந்ததன்பா லமர்ந்தரசு புரிவோர்க ளசுரன் வேண்டு
மெய்ப்பொருளும் வழங்கியவ ரேகினோர் தாழியே யிருந்து மாருக
துப்பினர்கள் குலத்தோடு மழியவழித் திருந்தனவா னசுரர்க ளெனுச.

(இ - ள்) புரங்கண்மூன்றும் தனித்தனியே நூறுயோசனை உயரமுஞ்சொல்லுகின்ற நூறுயோசனை விசாலமுமமைந்து, தன்னிடத்திற் பொருந்தியிருந்து அரசு

செய்பவர்கள் மனத்தில் விரும்பிய எல்லாப்பொருள்களையும் (விரும்பியவகையே) கொடுத்து, அவர்கள் செல்லவிரும்பிய விடத்திற்குச் சென்று (இவ்வகையாக) இருந்து, நீங்காத பகைஞர்களைக் குலத்தோடும் அழியும்படி யழித்து, ஆகாயத்திலிருக்குந் தேவர்களஞ்சும்படி யிருந்தன. எ - று (௪௩)

நீடுமிரு வரைச்சண்டன் பிரசண்டனென மைந்தினை யேவறுவா டாக்கிக்
கோட்டமிலச் சண்டனைப்பிரம வுலகத்து மாதவனை வைகுந்தத் தன்னில்
வீட்டுபுகழ்ப் பிரசண்டன் றனையுமவர் போலிருப்ப வேவிப் பின்னர்
மோட்டிளமென் முலைமனைமா துடன்கூடி யொருமகனை முகிழ்த்தா னன்றே.

(இ - ள்) சண்டன் பிரசண்டனென்று நீடும் வேறிருவரை மைந்தராகப்படைத்து, கோணுதலில்லாத (வலியுடைய) சண்டனைப் பிரமலோகத்திலும், தேடிய பிரதாபத்தையுடைய பிரசண்டனை விஷ்ணுமூர்த்தி வசிக்கும் வைகுந்தலோகத்திலும், அவர்களைப்போன்றிருக்கக் கட்டளையிட்டு, பிறகு, பூரித்த இளமைதங்கிய மெல்லிய முலையையுடைய மனைவியுடன் சேர்ந்து ஓர்புதல்வனைப் பெற்றனன். எ - று.

பிரசண்டனறனையு மென்பதிலுள்ள உம்மையைப்பிரித்து வைகுந்தத்தன்னி லென்பதனோடு கூட்டிக்கொள்க. (௪௪)

திரிபுரனிவ் வாறுலக முழுவதுந் தாட் படுத்தமிகு செல்வ மல்கி
வரிமதர்க்கண் மடமாதர் பெருமபோகக் கடலமுந்தி யறங்கள் பேணி
விரிபுகழெண் டிசைபோற்ப விநாயகர் பூசனையோடு விமலை பாக
னுரிமைகொளுஞ் சிவலிங்க பூசனையும் புரிந்துபல காலம்வாழ்ந்தான்.

(இ - ள்) திரிபுரன் இவ்வகையாக உலகமுழுவதையுந் தன்னடிப்படுத்தி, மிக்க செல்வமதிகரிக்க, அரிபரந்து மதர்த்த கண்களையுடைய இளமை வாய்ந்த மங்கையர்களது மிக்க போகசாகரத்தின் மூழ்கி, தருமங்கள் (எல்லாவற்றையும்) காத்து, பரந்த கீர்த்தியானது எட்டுத்திசைகளையு மறைக்கும்படிவிநாயகக்கடவுள்பூசையுடன், விமலையாகிய உமாதேவியாரைப் பாகமாகவுடைய சிவபெருமானுக்கு உரிமையாகக்கொள்ளத்தக்க சிவலிங்கபூசையையுஞ் செய்துகொண்டு,எல்லையில்லாத (நெடுங்)காலம் வாழ்ந்திருந்தனன் எ - று. (௪௫)

தேக்குபுகழ்த் திரிபுரன்முன் னரசாட்சி புரிந்ததிது தெளிக நீயென் [ம
றாக்கமிகு வியாதமுனிக் குரைத்தனனான் முகனதனை யுனக்குச் சொன்னே
னீக்கியபூங் கழற்சோம காந்தவினி விண்ணோர்கள் விமலற் போற்றிப்
பாக்கியஞ்சேர் வரம்பெற்ற தறிகவெனப் பிருகுமுனி பகர லுற்றான்.

(இ - ள்) தேக்கிய கீர்த்தியையுடைய திரிபுரன் முற்காலத்தில் அரசாட்சி செய்தவகை இதுவாகும் நீ யறிகவென்று மனஞ்சோர்வாமை மிகுந்த வியாதமுனிவருக்கு, நான்கு திருமுகங்களையுடைய பிரமதேவன் கூறினன் அதனை யுனக்குக் கூறினேம் (காலிற்) கட்டிய அழகிய வீரகழலையுடைய சோமகாந்தராசனே! இனி, தேவர்கள் கணேசப்பெருமானைத் துதிசெய்து பாக்கியம்பொருந்திய வரத்தையடைந்த வகையையும் அறிவாயாகவென்று பிருகுமுனிவர் சொல்லத்தொடங்கினர் எ - று

திரிபுரனரசாட்சிப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௩௭௩௩

தேவர்கள் வரம்பெறுபடலம்.

இமய மால்வரைக் கந்தரத் தெய்திய
அமரர் யாதுசெய் தாரரு ளாலென்று
திமில மாமறை செய்தவி யாதனுக்
கிமிழு மாரவந் தியம்புவ னுன்முனர்.

(இ - ள்) பெரிய இமயமலைக் குகையி லடைந்த தேவர்கள் யாது செய்தனர்? அருள்வாயாகவென்று வினவ, திமிலமாகிய வேதத்தை யருளிச்செய்த வியாசமுனி வருக்கு, பிரமதேவன் அருப்பிய ஆசையோடு சொல்வானாயினன். எ - று.

திமிலம் - பேரொலி. (க)

புகலி டம்பிறி தின்றிப் பொருப்பினு
ளகனு டைந்தழி வெய்து மமரர்முன்
மகதி யாழ்முரன் மாதவ னண்ணினன்
முகம லர்ந்தவர் தாழ்ந்து மொழிகுவார்.

(இ - ள்) புகலிடம் வேறில்லாமல், இமயமலையில் மனங்கசிந்து துன்புறும் வானவர்களுக்கு முன்னே, மகதிவீணையை வாசிக்கும் பெருந்தவசியாகிய நாரதமுனி வர் வந்தனர். (அவரைக்கண்ட) அத்தேவர்கள் முகமலர்ச்சிகொண்டு பணிந்து சொல்பவர்களானார்கள். எ - று.

புகல் - அடைக்கலம் அகன் - அகம் என்பதன் போலி (உ)

வெய்ய முப்புரன் வெற்றியி னிருந்தனன்
வைய மூன்றுந் தனதாணை யுய்க்கினா
னைய னேயவ னாலலைப் புண்டியா
மைய நெஞ்சொடு நாளுமி னைந்துளேம்.

(இ - ள்) ஐயனே! கொடிய திரிபுரன் வெற்றியில் இருந்திருக்கின்றனன், மூவுலகங்களிலும் தன்னாணையைச் செலுத்தினன் யாங்கள் அத்திரிபுரனால் அலை யுண்டு வருந்திய மனத்துடன் நாடோறுந் துன்புறுகின்றோம் எ - று. (ங)

யாவ னால்வர மெய்தின னன்னவன்
யாவ னாலிறும் யாங்களி னிச்செயல்
யாவ தோதுக வென்றனர் நாரதன்
யாவ துந்தெரிந் தேயினி தோதுவான்.

(இ - ள்) அந்தத்திரிபுரன் யாரால் (அத்தகைய) வரமடைந்தனன்? (அவன்) யாரால் அழிவுறுவான்? யாங்கள் இனிச்செய்யத்தக்கது யாது? (அவற்றையெல்லாம் தெளிவாக வெங்கட்குக்) கூறுகவென்று கேட்டனர். நாரதமுனிவர் எல்லாவற்றையும் (ஞானநோக்கால்) அறிந்து இனிதாகச் சொல்கின்றனர் எ - று. (ச)

மோக்குங் கையுடை முன்னவன் பூசையா
லாக்கங் கொண்டன னூற்றலொ டியாவையு

மூங்க மிக்கவன ஞானையோ ரமபிறை
றூக்க வல்லவன சங்கர னேயரோ.

(இ - ள்) (தேவர்களே! அத்திரிபுரன) தொங்குகின்ற கையையுடைய மூன்னோனாகிய விநாயகக்கடவுளுடைய ஆசசனைபபலனால வலலமையுடன் எலலாவற்றையுந் தேடிககொண்டனன. செய்தொழிலில மனச்சோர்வின்மையை மிகுதியாகவுடைய அததிரிபுரனை ஒரேகணையால அழிக்கவல்லவா சஙகரபகவானேயாவா எ - று.

மோக்கும் - முகந்துகொள்ளும், இந்நினைத்தொங்குமென்றும (௫)

அந்த வீர னவனொடு முப்புரஞ்
சிந்து தற்குத் திருக்கர மைந்துடை
மைந்தன் பூசையும் வேண்டும தங்களிற்
றெந்தை யைச்சர ணெய்துக நீயிரே.

(இ - ள்) அந்தச சிவபெருமான திரிபுரனுடன முப்புரஙகளை யழித்தற்கும ஐந்து திருக்கரஙகளையுடைய மூத்தபிள்ளையாருடைய பூசையும வேணடும (ஆன படியால) நீஙகளும மதநீர்பொழியும யானைமுகக்கடவுளை (அதுகருதி)ச் சரணமடையுங்கள் எ - று. (௬)

சேட்டைத் தேவர்தந் தேவபி ரான்கழ
லோட்டை நெஞ்சினை யோமுறல் யாதெனா
வேட்டை யெய்தியி ரங்கலிர் மந்திரங்
கேட்டு நன்குகி ளந்துனு டிக்கவே

(இ - ள்) சேட்டை தங்கிய தேவர்கட்கெல்லாந் தேவநாயகனாகிய கணேசப் பெருமானுடைய திருவடியை ஓட்டையாகிய மனத்தையுடைய நாமடைதல யாஙஙன மென்று தளர்ச்சியுற்று வருந்தாதீர்கள் (கணேசபெருமானை மகிழ்விக்கும) மந்திரத்தைக் கேட்டுணர்ந்து நன்றாக உச்சரித்து அநுட்டிக்கக்கடவீர்கள எ - று

சேட்டை - குணக்கேடு. ஓட்டை நெஞ்சு - நிலையிலலாதமனம. வேட்டை - தளர்ச்சி (௭)

வாச நீர்படிந் தாடி வருகெனப்
பேசி னன்பெருந் தேவர்கள் யாவரும்
வீசு தெண்டிரை மென்புன லாடினர்
பூசி வெண்பொடி போந்துவ ணங்கினர்.

(இ - ள்) மணமமைந்த நீரில மூழ்கிவருகக்கடவீர்களென்று கூறினர். (அதனைக்கேட்ட) பெருமைபொருந்திய தேவர்களெல்லோரும, எறிகின்ற தெளிந்த அலையையுடைய மெல்லிய நீரில மூழ்கினவர்களாய, வெள்ளிய திருநீற்றைப் பூசிக்கொண்டு (நாரதமுனிவர்பால) வந்து பணிந்தார்கள எ - று. (௮)

வணங்கு தேவர்க்கு மாதவ னாரத
னிணங்க வோரெழுத் தாலியை மந்திர
மணங்கு தீர்தர வன்செவி யோதினன்
குணங்கொண் டன்னவர் கூறவிட் டேகினனே.

(இ - ள்.) (அவ்வாறு) பணிந்த தேவர்களுக்குப்பொருந்த, பெருந்தவசியாகிய நாரதமுனிவன் ஏகாட்சரத்தாலாகிய மந்திரத்தை, துன்பமொழிய அவர்கள்செவியிற் பொருந்தக்கூறினன் (அதன் அநுட்டிப்புக்) கிரமத்துடன் அவர்கள் அதைச் சபிக்கச் செய்து (இச்சையின்படி) சென்றனன். எ - று. (௯)

ஒற்றைத் தாளினி னாற்றும் பாக ளன்பினால்
வெற்றி யானை முகத்து விநாயகன்
பொற்ற சேவடி புந்தி வைத்த் துத்தவ
முற்று மாமனு வோதினார் பல்பகல.

(இ - ள்) தேவர்கள் ஆசையோடு ஒற்றைத்தாளிலே நின்று, வெற்றிபொருந்திய யானைமுகத்தையுடைய விநாயகக்கடவுளுடைய அழகிய சிவந்த திருவடியில் மனத்தைச்செலுத்திப் பலகாலந்தவஞ்செய்து சிறந்த மந்திரத்தைக் கணித்தார்கள். எ - று.

ஒன்று + தாள = ஒற்றைத்தாள. (௧௦)

அன்பி னாருக்கவர் தம்மினு மன்பினன்
னென்ப ணிக்கு மிரங்கும் பராபரன்
வன்பு நெஞ்சுடை யார்க்கொரு வைகலு
முன்பு றாதவன் முன்புநின் றானரோ.

(இ - ள்) அன்புடையவர்களுக்குத் தம்மைக்காட்டிலும் அன்புடையவரும், என்னுடைய பணிவிடைக்கும் (திருவுள்ளம்) இரங்கும் பராபரனும், கடின சித்த முடையவர்களுக்கு ஒருநாளும் காட்சியளிக்காதவருமாகிய கணேசப்பெருமான் (அத் தேவர்களுக்குக்) காட்சிதந்தருளினார் எ - று.

என்பணிக்குமென்றது பத்திமுதிர்ச்சியில்லாத என்னுடையவென்று குறித் ததுடன், பணிக்கும் என்றதிலுள்ள உம்மை இழிவு சிறப்புகுறிப்பதாம் (௧௧)

வேறு

பொன்முடியு மதனருகே பொழிகிரண விளமதியும
பன்மணிசெய் குண்டலமும் பணைத்தோளி னங்கதமு
மின்மலியுந் திருமேனி விளங்கொளியு மனைநாளும
வன்மருப்பி னிடைசுற்றும வார்ந்துதிரள் புழைக்கரமும்.

(இ - ள்) பொன்னாலாகிய கிரீடமும், அக்கிரீடத்தருகே கிரணங்களைச் சிந்தும் பாலசந்திரனும, பலரத்தினங்களால் விளைத்த குண்டலமும, பூரித்ததோள்களில் வாகுவலயமும, மின்னலைத் தோற்கச்செய்யுந் திருமேனியின் விளங்குகின்ற பிரகாசமும, அரைநாணும, வலிய தந்தத்தினிடையே சுற்றிலும் வடிந்து திரண்ட துதிக்கையும. எ - று.

துதிக்கை இருதந்தங்கட்கிடையிலுள்ள உறுப்பாகலானும், அஃது திரண்டிருப்பதொன்றாகலானும, 'வன்மருப்பினிடை * * * திரள்புழைக் கரமும" என்றார்.

பாசத்தை மிகப்பயிக்கும் பாசமுந்து ணியுமழுவும
வாசத்தி னறுங்கமல மலருமணி நாறகரமுந்
தேசத்தி னில்லாத திருவழகுந் திகழ்வெய்த
நேசத்தி னெதிர்நின்ற நிமலனையா வருங்கண்டார்.

(இ - ள்.) பாசபந்தத்தை அடியோடு பறிக்கும் பாசக்கயிறும், தூணியும், மழுப்படையும், வாசத்துடன் கூடிய நல்ல தாமரைமலரும், அழகிய திருக்கரங்களும், உலகத்திலில்லாத சிறந்த பொலிவும் விளங்கும்படி அனபோடு எதிரேவந்த புனிதராகிய கணேசப்பெருமானை எல்லோருந் தரிசித்தார்கள் எ - று. (கங)

பருதியெதிர் வரமலர்ந்த பங்கயம்போன் முகமலர்ந்து
வெருவுதலோ டன்புளத்தில் விரவமரர் கள்வலனே
திருவடியி னெதிர் வீழ்ந்து சென்னியிரு கரமேற
வருவிவிழிக் ககணகாட்ட வள்ளுறப் பழிச்சுவார்.

(இ - ள்) சூரியன் எதிரே தோன்றலால் விகசித்த தாமரைமலர்போல முகமலர்ச்சிகொண்டு, அச்சத்துடனே ஆசையும் மனத்திலுண்டாகத் தேவர்கள் விநாயகரு, (கணேசபெருமானுடைய) திருவடியிலே நேராகப் பணிந்து, சிரமிசை யிருகரங்களும் ஏறவும், இருகண்களில் (ஆனந்த) அருவிதோன்றவும், பக்தியதிகரிக்கவும் (பின்வருமாறு) துதிக்கலானார்கள் எ - று. (கச)

வேறு.

தத்துவா தீத போற்றி தத்துவப் பொருளே போற்றி
தத்துவ முதலே போற்றி தத்துவ சொரூப போற்றி
தத்துவத் தியன்ற தத்து விதங்களு மானாய் போற்றி
தத்துவ வறிவுக் கெட்டாத் தயங்குபே ரறிவே போற்றி

(இ - ள்) தத்துவாதீதனே! போற்றி தத்துவப்பொருளாயுள்ளவனே! போற்றி தத்துவங்கட்கு ஆதியே! போற்றி தத்துவங்களின் சொரூபியே! போற்றி. தத்துவத்தியன்ற அத்துவிதங்களும் ஆனவனே! போற்றி தத்துவவுணர்ச்சிக்கு எட்டாது விளங்கும் பேரறிவானவனே! போற்றி எ - று

திருமூலர் திருமந்திரம்.

"அறிவு சிவமிரண் டென்ப ரறிவிலார்
அறிவு சிவமாவ தாரு மறிகிலார்
அறிவு சிவமாவ தாரு மறிந்தபின்
அறிவே சிவமா யமர்ந்திருப் பாரே"—என்றபடி, இறைவன் அறிவுமயமாயிருத்தல் கருதி "பேரறிவே" என விளிக்கலாயிற்றெனக. (கரு)

உடலினுக் குயிரே போல வுயிர்க்குயி ரானாய் போற்றி
யுடலுயிர்க் கறிவு நல்கி யுடலினைக் கழிப்பாய் போற்றி
யுடலுயி ரெனப்பி ரிங்கா வொற்றுமைப் பொருளே போற்றி
யுடலுறை யுயிர்க்கு மெட்டா வொளிபெருஞ் சோதி போற்றி.

(இ - ள்) தேகத்திற்குச் சீவனையேபோல உயிர்களுக்குயிரானவனே! போற்றி. உடலிலுள்ள உயிர்கட்கு அறிவைக்கொடுத்து சரீர வாஞ்சையைக் கழிப்பவனே! போற்றி. உடலும் உயிரும்போலப் பின்னாநீங்காத ஒற்றுமைப்பொருளா யுள்ளவனே! போற்றி உடலுறைகின்ற உயிர்கட்கும் அதீதப்பட்ட பிரகாசிக்கின்ற பெருஞ்சோதி சொரூபனே! போற்றி. எ - று. (கசு)

விரவுதத் துவங்க ணீங்கி மேலென நின்ற வாழி
வரமுற வுருவு கொண்டு வந்தருள் குரவ போற்றி
பரவுமைந் தொழிலை நீக்கி யுயிர்களைப் பரிப்பாய் போற்றி
துரியத்தி னுயிரை வாங்குஞ் சுடர்ப்பெருங் கடலே போற்றி

(இ - ள்) கலந்த தத்துவங்களினின்றும் மேம்பட்டு நீத்து நின்று, விருப்புற்று வரங்களைப் பெறும்படி திருவுருவங்கொண்டு வந்தருளிய ஆசாரியனே! போற்றி. துதிசெய்யத்தக்க (சிருட்டி முதலிய) ஐந்தொழில்களையு மகற்றி உயிர்களைக் கட்டளையிடுபவனே! போற்றி. துரியத்தினுயிரை வாங்குஞ் சுடராயமான பெருங்கடலே! போற்றி. எ - று. (௧௭)

பத்தர்கள் வழங்கா நின்ற பலவுங்கைக் கொள்வாய் போற்றி
புத்திகள் போகத் தார்க்குப் புணர்த்தருள் போகி போற்றி
முத்தியை யோகத் தார்க்கு முடித்தருள் யோகி போற்றி
யெத்தொழி லவர்க்கு மந்தப் பயனரு ளிறைவ போற்றி

(இ - ள்) அடியவர்கள் கொடுக்கும் பலபொருள்களையுங் கைக்கொள்பவனே! போற்றி. போகத்தை விரும்பினவர்களுக்குப் புத்திகளைக் கூட்டியருளும் போகியே! போற்றி. யோகிகளுக்கு முத்தியைக்கொடுத்தருளும் யோகசுருபியே! போற்றி. எத்தொழிலுடையவர்களுக்கும் (அத்தொழிற்குரிய) அப்பயனை யளித்தருளுந் தலைவனே! போற்றி. எ - று. (௧௮)

வேண்டிய வடியார்க் கெல்லாம் விக்கினங் கெடுப்பாய் போற்றி
வேண்டிவந் தனைசெய் யார்க்கு விக்கினங் கொடுப்பாய் போற்றி
வேண்டுவார் வேண்டி யவெல்லாம் விளைத்தருள் விமல போற்றி
மாண்டறுட் டார்களைக் கொல்லு மறமிகு மள்ள போற்றி.

(இ - ள்) (திருவடியைப்) பணியும் அடியவர்களுக்கெல்லாம் இடையூறுகளைத் தவிர்ப்பவனே! போற்றி. விரும்பி வந்தனைசெய்யாதவர்களுக்கு இடையூறுகளைக் கொடுப்பவனே! போற்றி. அடியவர்கள் வேண்டிய பொருள்களையெல்லாம் உண்டு செய்தருளும் மலரகிதனே! போற்றி. மாட்சிமைபட்ட கொடியோர்களைக் கொல்லும் பாவத்தொழில் மிக்க மள்ளனே! போற்றி. எ - று. (௧௯)

வழுத்திய துதிகள் கேட்டு வள்ளலார் சுரரை நோக்கி
விழுத்தகு வரங்கள் யாவை விளம்புக தருது மென்றான்
பழுத்தவன் புடையா ராய பண்ணவர் பணிந்து சொல்வார்
தொழுதகை யேந்து யரமெல்லாந் தோன்றலா யறிந்த தன்றோ.

(இ - ள்) (அவ்வாறு) தோத்திரஞ்செய்த துதிகளை வள்ளலாராகிய கணேசப் பெருமானார் கேட்டுத் தேவர்களை நோக்கி, (நீங்கள் விரும்பிய) மேன்மையாகிய வரங்கள் யாவை? சொல்லக்கடவீர்கள் (அவற்றைக்) கொடுப்போமெனக் கூறினர். பழுத்த அன்புடையவர்களாகிய தேவர்கள் (விநாயகப்பெருமானை) வணங்கிச் சொல்கின்றார்கள்: அடியேங்கள் துன்பமுழுவதுந் தேவரீரறியாததல்லவே? எ - று. (௨௦)

செம்மலின் வரத்தான் மாறாத் தீங்கெமக் கிழைத்து வைய
மும்மையுந் தன்னதாகக் கொண்டு முடிவிலா வாற்றல் சான்ற

கொம்மைமுப் புரத்தி னானைக் கொடியனெனக் கொன்று பின்னர்
விம்மலே யெமக்குத் தீர்க்க வேண்டுமென் றிரந்து நின்றார்.

(இ - ள்) சுவாமி! தேவரீரருளிய வரத்தினால் ஒழியாத துன்பத்தை யெங்கட்கு விளைத்து, மூவுலகங்களையுந் தன் சுவாதீனஞ்செய்து கொண்டு, எல்லையில்லாத வல்லபமிகுந்த வலிய திரிபுரனை விரைவிற்கொன்று, (அதன்) பிறகு அடியேங்கட்குற்ற துன்பநோயைப்போக்கியருள வேண்டுமென்று (தேவர்கள்) பிரார்த்தித்து நின்றார்கள் எ - று. (உ௧)

அஞ்சிய தேவர் நுங்க ளல்லலோ டழிவி லாற்றல்
விஞ்சுமுப் புரத்தி னானை வீட்டிடுஞ் சூழ்ச்சி செய்து
மஞ்சணி மிடற்றி னானை வணங்கினர் தடையி னென்று
செஞ்சொலி னியம்பி யைங்கைச் செம்மலா ரிதுவுஞ் சொல்வார்.

(இ - ள்) அச்சமடைந்த தேவர்களே! உங்கள் துன்பத்துடன், அழிவில்லாத வல்லபமிக்க திரிபுரனையும் அழிவுசெய்யும் ஆலோசனையைச் செய்து, அழகிய நீலகண்டத்தையுடைய சிவபெருமானை அணுகவிஸ்லாவிந் சேருங்களென்று, ஐந்து திருக்கரங்களையுடைய கணேசப்பெருமான் செவ்விய சொற்களாற்கூறி (மேலே) இதனையுஞ் சொல்லினார் எ - று. (உ௨)

அந்தரத் தமரர் நீயி ரறைந்ததோத் திரத்தை மும்மைச்
சந்தியி னியம்பு வார்க்குச் சகலவித் தினமுந் நீருஞ்
சிந்தையின் விழைந்த வெல்லாஞ் சேருமென் றருளி வல்லே
வெந்திற லவுணர் கோமான் மேவுபொங் காளஞ் சார்வார்.

(இ - ள்) ஆகாயத்தில் வசிக்குந் தேவர்களாகிய நீங்கள் கூறிய தோத்திரத்தை மூன்று சந்தியாகாலங்களிலுஞ் சொல்லுவோர்களுக்கெல்லா இடையூறுகளுமகலும். மனதில் விரும்பிய யாவுங்கைகூடுமென்றருள்செய்து வெவ்விய வலியமைந்த அவுணர் தலைவனாகிய திரிபுரன் வாசஞ்செய்யும் வங்காளநகரத்தை விரைவாகச் சார்ந்தனர் எ - று. (உ௩)

இருபிறப் பாளர் தம்மு ளிலகொரு திலக மென்னத்
திருவுரு வுடைய ராகித் தேவியு மருங்கு நண்ண
வருமறை முனிவர் சூழ வடுத்துவங் காள மென்னுந்
திருநகர் வீதி யூடு சென்றவன் கோயில் புக்கார்.

(இ - ள்) வேதியர்களுக்குள்ளே விளங்குகின்ற ஒரு திலகம்போல, சிறந்த திருமேனியுடையவராகி, தேவியாரும் பக்கலில் வரவும், அரியவேதமுணர்ந்த முனிவர்கள் புடைசூழவும் வந்து, வங்காளமென்று சொல்லுஞ் சிறந்த நகரத்தினூடே சென்று, அத்திரிபுரன் மாளிகையை யடுத்தனர் எ - று. (உ௪)

அரியணை பொலிய வைகி யரசுவீற் றிருக்கு மாண்மைத்
திரிபுர னோக்கி யன்பு திளைத்தெழ வெதிரே சென்று
தரியலர் பலரைத் தேய்த்துத் தழும்பிய தாளி னானை
யுரிமையின் வணங்கிப் போதந் தொளிர்தவி சிருத்திச் சொல்வான்.

(இ - ள்) சிங்காசனத்தில் அழகுறவிருந்து கோலுக்கொண்டுள்ள ஆண் தன்மையுடைய திரிபுரன்கண்டு, அன்பானது அதிகரித்தெழுதலால் எதிர்கொண்டுசென்

று, சத்துருக்கள் எண்ணிறந்தவர்களைத் தேய்த்துத் தழும்பேறிய திருவடியையுடைய (விநாயகக்கடவுளாகிய) அந்தணனை உரிமையோடு பணிந்து வந்து பிரகாசிக்கின்ற படத்திலெழுந்தருளியிருக்கச் செய்து சொல்லுகின்றனர். எ - று (உரு)

ஐயரே நீவிர் யாவ ரடுத்தவெக் கருமம் வேண்டிச்
செய்யவாய் மலர்த்தல் வேண்டும் திரிபுரன் றனக்கெய் தாத
வெய்யதாம் பொருளொன் றில்லை விழைந்தது தருவன் முற்றும்
வையமு மெனது செங்கோல் மருவிய வகுப்பெல் லாமே

(இ - ள்) ஐயரே! நீவிர் யாவர்? எத்தகைய காரியத்தை விரும்பி யடைந்தீர்? செம்மையாகிய திருவாய்மலர்ந்து கூறவேண்டும்; திரிபுரனுக்கு இல்லாத வெவ்விதாகிய பொருளொன்று மில்லை; திரிலோகங்களிலும் எனது செங்கோல் பொருந்தியது; அதனால் விரும்பியதைக் கொடுப்பேனென்று கூறினன் எ - று ()

திரிபுர னுரைப்பக் கேட்டுத் தெளிவுறு மறையோர் சொல்வார்
கரிசறு மெய்ம்மை யாருங் கலாதர ரென்று சொல்வார்
யரிவள ருலக மாதி யனைத்துமே கண்டு நோக்கி
வரிசையிற் றிரியு நீடு தவமுனி வோரி யாமே.

(இ - ள்) திரிபுரன் (அவ்வாறு) சொல்லக்கேட்டு, தெளிவினையுடைய வேதியர் (வடிவாகவந்த கணேசப்பெருமான்) சொல்லுவார்: குற்றமற்ற மெய்யுணர்ந்தோரெல்லோரும் எம்மைக் கலாதரரென்று சொல்லுவர்கள்; நாங்கள் … வைகுந்தலோகமுதலிய எல்லாவுலகங்களின் அழகையுங் கண்டு … வரிசையாகச் சஞ்சரிக்கும் பெருந்தவமுடைய முனிவர்கள் எ - று (உஎ)

கொடையினாற் புகழாற் சீராற் கோமள வனப்பால் வீரப்
படையினால் வலியாற் சீரார் பலவகைப் பொருளா லைங்கை
யுடையவன் பாதப் பூசை புரிதரு பத்தி யானும்
மடையலர் பணிக்குந் தன்மை யானுமே வந்தா மீங்கு.

(இ - ள்) கொடைத்தன்மையாலும், கீர்த்தியாலும், சிறப்பாலும், மென்மைவாய்ந்த அழகாலும், வெற்றிவாய்ந்த ஆயுதங்களாலும், வல்லமையாலும், தீரத்தாலும், பலவகைப் பொருள்களாலும், ஐந்து திருக்கரங்களையுடைய கணேசப்பெருமானுடைய திருவடியிற் பூசையைச்செய்யும் பத்தியினாலும், பகைவரை வெல்கொள்ளுதலும் உன்னைக்காணும்படி இங்கே வந்தோம் எ - று (உஅ)

மூவகை யுலகம் வேண்டேன் முறைசெயு மரசும் வேண்டேன்
காவல விரந்த நீயுங் கடப்பாடு நினக்குண் டாமேல்
பூவையை மருங்கு வைத்த புண்ணியன் கயிலை யைங்கைத்
தேவன துருவஞ் சிந்தா மணியெனத் திகழ்ந் திருக்கும்.

(இ - ள்) அரசனே! திரிமூர்த்திகளின் உலகங்களையும் விரும்பிலேன்; முறைப்படி செய்யும் உன் அரசுரிமையையும் வேண்டிலேன்; யாசித்ததைக்கொடுக்குங் கடமைப்பாடு உனக்குண்டாயிருக்குமாயின், உமாதேவியாரைப் பாகமாக வைத்த புண்ணியசொரூபியாகிய சிவபெருமானுடைய திருக்கைலாயகிரியில், ஐந்து திருக்கரங்களையுடைய கணேசப்பெருமானுடைய திருவுருவம் சிந்தாமணியென்னும் பெயரால் பிரகாசித்து விளங்கும் எ - று (உகூ)

முத்தலைச் சூலத் தண்ணன் முறையுளி வழிபா டாற்ற
நித்தலும் பூசை கொண்டு நிமலக்க கணேசர் வைகு
மத்தரு மூர்த்தி தன்னை யளித்திடல் வேண்டு மென்றங்
குத்தம மறையோன் சொல்ல வுவந்தவ னுரைக்க லுற்றான்.

(இ - ள்) முத்தலைவாய்ந்த சூலப்படை தாங்கிய சிவபெருமான் முறைப்படி வழிபாடுசெய்ய நாடோறும் பூசையைக்கொண்டு நிமலராகிய கணேசப்பெருமானை எழுந்தருளியுள்ள அந்தத் தருவாகிய மூர்த்தியைக் கொடுக்கவேண்டும் என்று உத்தமவேதியர் கூற, அத்திரிபுரன் களித்துச் சொல்லினான். எ - று. (௯௦)

அங்கநான் மறைக டேர்ந்த வந்தணவந்த மூர்த்தி
சங்கரன் பால தென்று தளர்லை யதனை யந்தச்
சங்கரன் விண்டு வாதி சகலவிண் ணவர்க ளோடு
மிங்குநின் முன்ன ருய்ப்பே னென்வலி யறிக வென்றான்.

(இ - ள்) ஆறு அங்கங்களும், நான்குவேதங்களுந் தேர்ந்தவேதியரே! (நீர் சொல்லும் சிந்தாமணியென்னும்) அந்தமூர்த்தி சிவபெருமானிடத் துள்ளதென்று மனந்தளராதே. அம்மூர்த்தியை அந்தச் சிவபிரானை திருமால்முதலிய எல்லாத்தேவர்களோடும் இவ்விடத்தில் உன்முன்னே வருவிப்பேன் என் வல்லமையை யறியக்கட வாயென்று எ - று

வேதாங்கம்—மந்திரம் - வியாகரணம் - நிகண்டு - சந்தோபிசிதம் - நிருத்தம் - சோதிடமென்பன. (௯௧)

தண்ணடை பந்நூ றாடை நமனியக் குவையு மென்று
மண்ணுதல் புரியாத் தேசு வளர்மணி பலவு நல்கி
யண்ணலே சிலநாட் டுள்ளே யழைப்பித்துத் தருது மிங்கே
நண்ணிவாழ்ந் திருக்க வென்று நயந்துகை குவித்து நின்றான்.

(இ - ள்) பந்நூறு தண்ணடைகளும், ஆடையும், பொற்குவியலும், எக்காலத் துங் கெடாத ஒளிவளரும் பலரத்தினங்களுங்கொடுத்து, பெருமையுடையவரே! (அத் தனைச்) சிலதினங்களில் வருவித்துக்கொடுப்போம். இவ்விடத்திற் பொருந்தி வசித் திருக்கவேண்டுமென்று கூறிக் கைகூப்பினான் எ - று.

தண்ணடை - வயல் (௯௨)

முப்புரன் மொழியக் கேட்டு முகமலர்ந் தந்த ணாள
னிப்புரந் தன்கட் பாங்க ரிலகிய வனத்து வாழ்ந்து
மொப்பிலா மூர்த்தி தன்னை யொய்யெனத் தருக வென்று
செப்பிநன் றாசி வாழ்த்துச் சேயத்த னெழுந்து போந்தான்.

(இ - ள்) திரிபுரன் (அங்ஙனஞ்) சொல்லக்கேட்டு, வேதியர் முகமலர்ச்சி யுற்று, இந்நகரத்தின் பக்கத்திற் பிரகாசிக்கின்ற வனத்திலிருக்கின்றோம். சமானமில் லாத அந்த சிந்தாமணிமூர்த்தியை விரைவிற்கொடுப்பாயாக வென்றுசொல்லி, ஆசீர் வாதஞ்செய்து நடந்துபோயினார் எ - று (௯௩)

சிறந்திகழ் சூதகா தகமைந்த திரிபுர னமைந்து பின்
னறந்திகழ்கயிலா யத்தை யடைந்தரன் பாதந் தாழ்ந்து
சிறந்திருக்கின்ற சிந்தா மணியெனுந் திகழ்வை யெங்கள்
மறந்திகழ் மன்ன னும்பர் வாங்கினான் றிடென் றொன்றான்.

(இ - ள்) வலிமைவிளங்கும் அசுரர்களை திரிபுரத்தை அழித்து, நீவிர் தரு மம் விளங்கும் திருக்கைலாயகிரியை யடைந்து, சிவபெருமானுடைய திருவடிகளிற் பணிந்து, சிறப்புற்றுவிளங்குஞ் சிந்தாமணியென்னும் பெயரையுடைய மூர்த்தியை எங்கள் வலிமிக்க அரசனுகிய திரிபுரனை கொள்ளிடத்திலிருந்து வாங்கிவருகவென்று கூறினான் எ - று. (௧௪)

பலியெனும் பெயரா னன்ற பணிபொடு முகவை யாயின
வலியினிற் கொள்வன் பின்னர் மலிதரு முழுந்தி யென்று
நலிவுற வுரைத்து வாங்கி நன்னுறுதி வலவை யென்றுன
மெலிவுறு தூதரன்று மேவலின் மேவினாரே.

(இ - ள்) பலியென்னும் பெயருடையவனெவனோ அவனையாக (வஞ்சனை)த் தராதுவிடுவாயாயின, பலாத்காரஞ்செய்து கொண்டுபோவான் (அதன்மேல்) பிறகு பெருந்துயரமடைவையென்று கொடுமையாகக்கூறி, விரைவில் (அதனை) வாங்கிவருவீர்களாகவென்று கூறினன் வலிதங்கிய அசுரர்களும் அவனேவலினை மேற்கொண்டு சென்றார்கள். எ - று. (௧௫)

கடவுளர் கணேசர் பாதங் கருத்துற விருத்திப் போற்றி
யிடர்தபு வரங்கள் பெற்ற திறமென வியாதன் கேட்பக்
கடலினை யமிழ்தமென்னக் கடைந்தெடுத் திட்டான் றெய்வ
மடலவிழ் கமலச் செந்தேன் மருவிய வென்னக் கூறினானே.

(இ - ள்) தேவர்கள் கணேசப்பெருமானுடைய திருவடியைமனதிலிருத்தித் துதிசெய்து துன்பமற்ற வரங்களைப்பெற்ற திறமெவ்வாறுமென்று, வியாதமுனிவர் கேட்கும்படி, தெய்வத்தன்மை வாய்ந்த இதழ்கள் மலர்ந்த தாமரைத் தவிசிற்பொருந்திய எட்டுக்கண்களையுடைய பிரமதேவன், பாற்கடலிற் றோன்றிய அமிர்தம்போல உறுதியாகக் கூறினன். எ - று. (௧௬)

கருங்கரு முகில் புரைந்த கோடு காதத்தினை வரங்கள் விண்ணோ
ரொருங்குற்று கணேசராய பாதங் குறுந்தமை யுணர்ந்தா யன்றோ
மருங்குருசொன விரப்பச் சூலன் வள்ளலும் வரங்கள் பெற்ற
பெருங்கதை யினிக்கேளென்று பேசினன் பிருகு வென்பான்.

(இ - ள்) வலிய வீரக்கழலணிந்த சோமகாந்தமன்னனே! தேவர்கள் யாவரும் விநாயகக்கடவுள் பக்கலில் வரங்கள் பெற்றமையை யறிந்தனை. அவர்கள் சமீபித்துச் சென்று யாசிக்க, சூலப்படையேந்திய சிவபெருமானும் (விநாயகக் கடவுளிடத்தில்) வரங்களைப்பெற்ற பெருஞ் சரித்திரத்தை இனிக்கேட்பாயாகவென்று பிருகுமுனிவர் சொல்லத்தொடங்கினர் எ - று. (௧௭)

தேவர்கள் வரம்பெறுபடலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - ௩௨௫

விமலன்விநாயகரருள்பெறுபடலம்.

வரங்கள் பெற்றபின் வானவ ரென்செய்தா
ரிரங்கு தென்றுவி யாத னிரந்தனுங்
கரங்க ளிற்கதிர் கண்டிகை பாசந்
தரங்க மேந்திய வாரண னோதுவான்.

(இ - ள்) (முனிவரை) வரங்களைப் பெற்றபிறகு தேவர்கள் யாதுசெய்தார்கள்? சொல்லுகவென்று வியாசமுனிவன் கேட்டவும், கரங்களில் ஒளிவீசுங் கமண்டலமும் பாசமுந் தமையகவும்படி தாங்கிய பிரமதேவன் கூறுவான் எ - று.

ஆரணன் - வேதங்களைச் சொன்னவன், ஆரணம் - வேதம் (க)

வாழ்ந்த நெருநலை யும்பர்க ளியாவரும்
போழ்ந்த வெண்மதிப் பொற்சடை யாரருள்
வீழ்ந்தி ரங்கிட வேறுசெய் யாமென
சூழ்ந்து யாந்தாந் துணிந்திது செய்தனர்.

(இ - ள்) ...யால் துன்பமடைந்த மனமுடைய தேவர்களெல்லாரும், பிளவுபட்ட வெள்ளிய சந்திரனை யணிந்த அழகிய சடையையுடைய சிவபெருமானரு திருவருள் செய்திரங்கும்படி யாது செய்வோமென்று ஆலோசித்து மனதிற்றுணிவுற்று, இதனைச் செய்தார்கள் எ - று. (உ)

பருதி வெண்மதி பல் துருவாகவு
மிருந்த வும்பரி னிடங்கதி ராகவு
மருவு கின்ற மந்திய ஞானாகவு
மருளு மாமெனு மாமை யுருட்டாகவும்.

(இ - ள்.) சூரியனும் வெள்ளியசந்திரனும் பாரைக்கரங்களாகவும், இருசுகள் அச்சக்கரங்களின் கிரணங்களாகவும், பொருந்திய மந்திரங்கள் ஊடபாகமாகவும், மயங்குகின்ற மகத்துவமென்று சொல்லும்மாயை கூட்டாகவும் எ - று.

* இதுமுதல் எட்டுச்செய்யுட்களால் திரிபுரசங்காரத்திற்காகச் சேகரித்த தேரின் வண்ணனை கூறுகின்றார். இருதுக்கள் - கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் முதுவேனில் என்பன. (௩)

காட்டை முகூர்த்தமுன் காலமச் சாகவும்
வாட்ட மில்புவி வைத்தட் டாகவும்
கோட்ட மிற்குளிர் வானுறுப் பீடமாகவு
மீட்டு பலகலை யேர்முனை யாகவும்.

(இ - ள்) காட்டை முகூர்த்தமுதலிய காலங்கள் மச்சாகவும் கெடுதலில்லாத பூமியே வசிக்கின்ற தோத்தட்டாகவும், கோடுதலில்லாத குளிர்ந்த ஆகாயமானது பீடமாகவும், தேடத்தக்க பலகலைகளும் அழகிய முனைகளாகவும். எ-று. (௪)

மந்த ரப்பிசை வட்டம தாகவு
மந்த ரந்தொடு மான்மணைப் பிடிகி

கொங்கொளிபப் பொற் கொடிஞசிக ளாகவு
மோங்குகூடம் புந்த யாசல மாகவும.

(இ - ள) மந்தரகிரிமேல கூடமாகவும், ஆகாயமளாவிய ஆணமையுடைய இமயகிரி மிகக ஒளிபொருந்திய அழகிய கொடிஞசிகளாகவும, உதயகிரி செலுத்துகினற கூமபாகவும. எ - று.

கொடிஞசி - தேர்மொட்டு (ரு)

வழுவி லேழிய மாலவரை யானவுந
கழுவு தூணினை யாகவுந தத்துவங
குழிசி யாகவும் தொடைறு குறாமெலாம
கெழுமு கினற இருசுக ளாகவும

(இ - ள) தவறுதலில்லாத மறறையபெரிய மலைகளெல்லாம பொருந்திய தூண்வரிசையாகவும, தததுவங்கள குடமாகவும, பேரடடங்களெல்லாம விளங்குகினற இருசுகளாகவும. எ - று.

இருசு - சுறறுமரம (சா)

காம மாதியுங கனமேநதியங்ளாறு
சேம மாரகதரு சேநதிய பொனனுமுந
சேம வாயவாரநதிர ளாகவும
வாம வணடஙகள மாலைக ளாகவும

(இ - ள) காமமுதலியனவும கனமேநதியங்களும மேனமைதஙகிய ராமேந்திரியங்களென்று சொலலபபடுவனவும சேமமாகிய ஆபரணத்திரளாகவும, அழகிய அணடஙகள மாலைகளாகவும. எ - று. (எ)

புராண மஙகம புணாமணி யாகவும
விராவு தககவ விதானஙக ளாகவு
முராவு மேழுநட லொணகுடை யாகவும
பராம ருததுவா நாமபடி யாகவும

(இ - ள.) (பதினெண) புராணஙகளும், (ஆறு) அஙகஙகளும கட்டிய மணிகளாகவும, கலநதுள்ள நட்சத்திரஙகள விதானஙகளாகவும, மோதுகினற சததசமுததிரஙகள் ஒளிரிய திரைசசீலைகளாகவும, ஆகாயததுக் (கடட)மருததுகசள படிககடடுகளாகவும. எ - று. (அ)

கஙகை யாதிக கடவு ணதிகளாம
பொஙகு சாமரை வீசிடும பூவையா
ரஙக ளாகவு மறறைய வாறெலாம
பஙக மிலலாப பதாகைக ளாகவும.

(இ - ள.) கங்கைமுதலிய தேவநதிகள யாவும அவ்விடததில உயாகினற சாமரையைப் பணிமாறும பெணகளாகவும, பிறநதிகள யாவும கெடுதலிலலாத கொடிகளாகவும. எ - று. (கூ)

திதியும வாரமுஞ சோநதயன ளுளஙகளுங
கதுவு வேகக் குதிரைக ளாகவு

மதிமுடிச் சடைவள்ள லுக்கேற் புற
வெதிரி லாத விரதமோ னருக்கினார்.

(இ-ள்.) (பதினைந்து) திதிகளும், (எழு) வாரங்களுஞ் சேர்ந்துள்ள பல நாள்களும் செலுத்துகின்ற வேகத்தையுடைய கடிப்புகளாகவுமாக, சந்திரனையணிந்த முடிசூடிய சடையையுடைய சிவபெருமானுக்குத் தகுதியாக, சமானமில்லாத ரதத்தை நிருமித்தார்கள் எ-று. (௧௦)

படரும் வேதம பரியெனப் பண்ணியே
சுடரொ ளிக்கயி றாகத் தொடுத்தனர்
மடமி லாரண மாக்க மிரண்டுமே
தடவு வாறுக மாகத் தரித்தனர்.

(இ-ள்) வேதங்கள் நான்கும் படர்ந்துசெல்லும் நான்கு குதிரைகளாகவுஞ் செய்தார்கள். பிரகாசிக்கின்ற சுவைக்கயிறுகளாகத் தொடுத்தார்கள். அறியாமையில்லாத வைதிகமாக்கமிரண்டையுமே ஒளியநெடிய நுகமாகக் கட்டினார்கள் எ-று.

ஆரணமாக்க மிரண்டென்பன பிரவருத்தி நிவருத்திகளாம். (௧௧)

விடலி லாத விழுப்பரி கட்டுப
நிடதந் தாரினை யாகநி றைத்தனர்
குடிலை மந்திரை யாமவை கொண்டுநான்
கடவு பாகனெ னகக்கலித் தேனரோ.

(இ-ள்) விடுதலில்லாத சிறந்த தேர்ப்பரிசனுக்கு (நாற்கோட்டு) உபநிஷதங்களான மாலைவரிசையாக நிரைப்படுத்தினார்கள் பிரணவ மந்திரத்தையாகக்கொண்டு நானே அவ்விரதத்தைச் செலுத்தும் தேர்ப்பாகனாக ஆயினேன் எ-று.

மந்திரம்-புரவிநாணவென்கோல, சாட்டை நான்-சொல்வோனாகிய பிரமன்

மேரு வில்லிற்ல வாசுகி நாணுக்கோ
சாருட விணொடு வலக்கு சமனிற
கூரு மொனவலி யோங்கும வடவையே
பாரு மாயின கொற்றனு சிறப்பினே.

(இ-ள்) மேருமலை வில்லும் வெற்றிபொருந்திய வாசுகிநாணும், பொருந்தியதிருமால் பாணமும், இயமன் அலகும், ஊர்ந்துசெல்லுங்காற்று இறகும், உயர்ந்த வடவாக்கினி அதன்கூருமாக வெற்றிமிகும்படியாயின எ-று.

வாசு - திசைபரவும்பரியென்று (௧௨)

வேறு

செய்த தேரொடும் படையொடுந் தேவர்கள் பலரும
வெய்து வானெறுடுங் கயிலைமால் வரைதனை மேவிக்
கொய்த மாமலர் குடங்கையிற் கொண்டுதூ யிறைஞ்சி
வைது போற்றினா ரமலனுக் கன்பொடு மொழிவார்.

(இ-ள்) (இவ்வகையாகச்) செய்ததேரோடும் படையோடு தேவர்கள் யாவரும் விரைந்துசென்று ஆகாயமளாவிய பெரியகைலாயகிரியையடைந்து, கொய்த

சிறந்தமலர்களை அங்கையிலேகொண்டு அருச்சித்துப்பணிந்து அழகுறத் துதித்து நின்று மகிழ்ந்தோராகிய சிவபெருமானுக்கு அன்புடனே (பின்வருமாறு) சொல்கின்றார்கள் எ - று. (கச)

ஊரு மூர்த்தியு மூர்த்தமே யாகிய வொருத்தற்
காரு மாழ்கினே மடிகளா ரவுறுயி ரடாப்பர
சேரும் வையமே வையமாத் திரிபிலே பிழையார்
சாரு மாறுசெய் தாமவை தழுவுக வென்றார்.

(இ - ள்) எதிர்நடத்தும் வாகனங்களும் ஊர்களையாகவுள்ள ஒப்பற்ற திரிபுரர்க்கு எல்லோரும் துன்பமடைந்தோம் சுவாமிகள் அன்னபிரானைக் கொல்லும்படி ஏறத்தக்க இரதம் பூமியாகவும், வலியவில் (மேரு) மலையாகவும் பொருந்தும் வகையாகச் செய்தோம் அவைகளைக் கொண்டருள்வீராக வென்றனர் எ - று (கரு)

உரைத்த தேவர்க ளோதிய வாசகங் கேட்டு
விரைத்த பூங்குழன் மாதொடும் விடையினின் றெழுந்து
நிரைத்த மாமணி நீடுகோ புரத்தலை நீங்கிக்
குரைத்த நாமணித் தேர்விழி குளிர்ப்பக்கண் டனரால்.

(இ - ள்) (அவ்வாறு) சொல்லிய தேவர்களது ஒளியவாசகத்தைக் கேட்டு, மணந்தங்கிய மலர்மாலையணிந்த கூந்தலையுடைய உமாதேவியாருடன் சிவபிரான் எழுந்து, வரிசைபடத்தொடுத்த பெரியமணிகளையுடைய உயர்ந்த கோபுரத்தலைவாயிலை நீங்கி, ஒலிக்கின்ற புனிதமான மணிகளையுடைய தேரைக் கண்குளிரும்படி கண்டனர், எ - று. (கசா)

உவகை பூத்தன ருமபரா முகந்தினை நோக்கிக்
கவலை நீங்கினிக் களிப்பொடி ருமினென் றுங்கட்
கவல மாக்குறும் புரத்தையு மரைக்கணத் தவித்துச்
சிவமெ லாந்தரு வாமெனக் கோயிலுட் சென்றார்.

(இ - ள்) திருவுள்ளங்களித்துத் தேவர்கள் முகத்தைப் பார்த்து, இனி மனக் கவலையொழிந்து களிப்புடனிருப்பீர்களாக உங்கட்குத் துன்பமிழைக்கும் திரிபுரங்களையும் அரைவிநாடியில் அழித்து, எல்லா மங்கலங்களையும் கொடுப்போமென்று, திருக்கோயிலுட்சென்றனர் எ - று (கஎ)

ஆய காலையிற் றிரிபுரன் விடுத்தவத் தூதர்
ஏயி னாரவன் விளம்பிய வுரையெலாம் விரிப்பச்
சேயி ராதவ னமர்க்குறச் செப்புகென் றவரை
ஏயி னார்புர மெரிப்பதற் குபாயமென் னினைந்தார்.

(இ - ள்) ஆகிய (அந்தச்) சமயத்தில், திரிபுரன் (சிந்தாமணிமூர்த்திக்காக) அனுப்பிய அத்தூதுவர்கள் (கைலைக்கு) வந்தார்கள் (சிவபெருமானைத் தரிசித்து) அத்திரிபுரன்கூறிய சொற்களையெல்லாஞ் சொல்ல, செவ்விதிலலாத அத்திரிபுரனைப் போருக்கு வரச்சொல்லுகவென்று அவரைவிடுத்து, முப்புரங்களை யழிப்பதற்கு உபாயஞ்செய்வாராயினர். எ - று. (கஅ)

தனித்திருந்தலா விழிகளுஞ் சரங்கணமுன் றொடுத்துக்
குனித்த வில்லியைக் குழைத்தகண் பொரத்தியா னித்து
மனித்தர் தேவர்கா ணுமனு வானவ ரெழுத்தை
யினித்த காதலா னெண்ணிமா தவஞ்செய்தீ ரிறைவா.

(இ - ள்) ஏகமாயிருந்த, பரந்த இருவிழிகளும், (மாரப்)பாணங்களை முன்னே பிரயோகித்துவிடுத்த கருமபுவில்லையுடைய மன்மதனைப் பொடிபடுத்திய தீவிழியாம் முகிழும்படி தியானஞ்செய்து மனிதர்களும் தேவர்களும் காணுதலாகிய கணேசப்பெருமானுடைய ஏகாட்சர மந்திரத்தைமிக்க ஆசையோடு தியானித்துப் பெருந்தவஞ்செய்து இந்நிலை சொல்கின்றார் எ - று (க௯)

பயமே னோரேனை சகலமு மறியுந்தத் துவனே
மயாவி லாப்பமுடைப் பளிப்பழிப் பருளுங்கா ரணனே
மயரி லாத்தவா னவரொன் வாகரு மிறைவ
வுயரு நாதநீ யாதலா லுனையா னிரக்கேனே.

(இ - ள்) சாங்கனே ! ஐய ! எல்லாவற்றையுமுணர்ந்த தத்துவ சுரூபியே ! சோர்விலலாத சிருட்டி திதி சங்காரங்களை யாக்கிக்குங் காரணமானவனே ! மயக்க மில்லாதவனே ! தேவர்பெல்லோருக்குந் தலைவனே ! உயர்வாகிய தலைவன் நீயே யாதலின் உன்னை யான் யாசிக்கின்றேன் எ - று (உ0)

எமபிரா னுன திருவுறைகையா கியமொழி லுருவை
நமபின் னெதிரெ காட்டிக நாரணன் முதலா
வமப ராதிரி புரனுங் குணடைந் நம்பியய நரகு
மெமபொன் மேருவிழ் மெழுமந்தா ருறைநின் காறும்.

(இ - ள்) எம்பெருமானே ! தேவரீருடைய திருவுறைகையாகிய அழகிய திருவுருவத்தை, நம்பினவெனக்கு எதிரே காட்டியருள்க திருமால்முதலாகிய தேவர்கள் திரிபுரனுக்குத் தோற்றுச்சென்று, செம்பொன்மலையாகிய மேருபர்வதத்தில் ஒளிந்துகொண்டு ஒன்றுமறியாமல் வருந்துகின்றார்கள் எ - று. (உக)

தெளிந்தக் தக்கவர்க் கருள்செயுந் தேவநின் னருளா
லளிக்கத் தக்கவ ரவரிட ரகன்றுபோயத் தத்தம்
களிக்கத் தக்கவர் பதவிகள் கைக்கொளப் புரத்தை
விளிக்கத் தக்கநற் புதல்வனைக் கருளுதல் வேண்டும்.

(இ - ள்.) அங்ஙனம் பணியத்தக்கவர்களுக்குத் திருவருள்புரியுந் தேவனே ! தேவரீருடைய திருவருளால் அருள்புரியத்தக்கவர்கள் துன்பமகன்றுசென்று தங்கடங்கள் களிப்புறத்தக்க வாழ்விடமாகிய பதவிகளைக் கைக்கொள்ளும்படி திரிபுரங்களை யழிக்கத்தக்க குமாரனையும் எனக்கு அநுக்கிரகஞ் செய்யவேண்டும். எ - று ()

இந்து பூத்தமு மழுகளா லையினரை நின்ற
விந்தை வையக மிலகுகின் றதுமின் றிடத்திற

சிந்தை யார்திரு [illegible] கிர முரு [illegible] கிகள
[illegible] மெய்ஞ்ஞான [illegible] யாக்கை [illegible].

(இ - ள்) பஞ்சபூதங்களுக்கு மேலாகிய கட்டளையைத் தரும் பெருமிதத்தை இவ்வுலகமுழுதுந் தெரிவிக்கின்ற விநாயகர் [illegible] மனமுகவலிய [illegible] செய்ய விரும்புவாரை மேற்கொண்டு [illegible] ஆகிய [illegible] (பஞ்சம்) விநாயகருக்கேற்றார் எ - று. (உக)

மாயை யாகிய படலத்தை [illegible]
[illegible] தாருகா [illegible]
மெய்யி [illegible] திருத்தவுட [illegible]
ஆய ஞானத் திருமேனித் தொடக்கமாகக் கொண்டார்.

(இ - ள்) மாயையாகிய படலத்திருவில மறைப்புமாறு, கொடிய ஆணவமல சம்சாரமென்னும் நெருங்கிய [illegible] பொருந்திய [illegible], தனக்குக் கீழாகும் [illegible] ஞானத்திருவுருவம் [illegible] கொண்டருளினார் எ - று. (உஉ)

[illegible] தாங்கு [illegible] ஞானத்தின்
[illegible] ஒளியிருளை விலக்கி
[illegible] ஞானியாக மெய்ப்பொருள் [illegible] பொலிவுற
[illegible] மெய்யருள் [illegible] தந்தார்.

(இ - ள்) [illegible] பெருந்தகை [illegible] மாயைக்கு மனத்தினால் [illegible] சிறந்த [illegible] என்னும் புறமுமாகிய [illegible] ஆனவர்க்கு [illegible] நெருங்கிய பேரொளிப்பிழம்பே! அருமையாகிய சிறந்த பொருளே! என்று துதிசெய்து மன [illegible] எ - று. (உங)

இந்த [illegible] முகத்தினில் [illegible]
[illegible] காமுறு
[illegible] முகத்தை [illegible]
மரகதத் [illegible] நின்றார்.

(இ - ள்) (இவ்வகையாக) யாவரும் [illegible] பெருமானை முகத்தினிடத்தும் [illegible] கணேசப்பெருமானை அவதரித்த, பழைய [illegible], [illegible] திருமுகங்களும், திருப்பாதங்களும், [illegible] ஒளியையுடைய [illegible], பிரகாசிக்கின்ற ஆபரணமும், [illegible] திருவுருவமொடு அவ்விடத்தில் எதிரே தோன்றினார் எ - று. (உச)

அங்கு [illegible] மலை [illegible]
பெருகு [illegible] அருளின் [illegible]
[illegible] பெயரென [illegible]
பொங்கு [illegible] கருணையின் விநாயகர் புகலுவார்.

(இ - ள்) அவ்விடத்தெழுந்தருளியுள்ள கணேசப் பெருமானைச் சிவபெருமான் கண்டு, தலைவரே! தேவரீர் அவ்விடத்திலிருந்து எழுந்தருளினீர்? [illegible]

பொருந்துகின்ற திருநாமம் யாது ? கூறியருள்கவென்றனா அதிசயிக்கின்ற குளிர்ச்சி யாகிய திருவையுடைய விநாயகக்கடவுள் கூறுகின்றார் எ - று (உ௭)

எம்மை நாடி நீ யிருந்தவம் பலபக லிழைத்த
செம்மை யாலுன தானந்த திருமலர் நின்று
மும்மை வையகத் துயிரெலாங் காப்பமுன் வாதா
மம்ம நம்பெயர் கணேசனென் றறிக் குற்றாயினேறுய.

(இ - ள்) விடபாரூடெய்த சிவபிரானே ! எம்மை விரும்பி நீ பலகால பெருந்தவஞ்செய்த தன்மையால் உனதுடைய முகமாகிய சிறந்த தாமரைமலரினின்று, திரிலோகங்களிலுமுள்ள ஆன்மாக்களையெல்லாங் காக்கும்படி (உனக்கு) முன்னே தோன்றினம். நம்முடைய திருநாமங் கணேசனென்றறிவாயாக எ - று (உஅ)

முக்கு ணத்தினா பகன்முழு வதுயவிளை யாடு
மக்கு ணத்தினை மருந்தவத் தாலடைந் தமையான்
மிக்கு ளத்துறு விழைவெலா மினைந்துவே விடுக்க
விக்க ணத்தருள் வாமென விசைத்து ரைப்பார்.

(இ - ள்) முக்குணங்களால் இரவும் பகலும் எப்பொழுதுந் திருவிளையாடல்புரியும் அக்குணமுடையேம (உம்முடைய) அரிய தவத்தால் பிரசன்னமாயினமை யின, மனத்திற்பொருந்திய மிக்க விருப்பங்களையெல்லாம் விரைவிற்கேட்டுக்கொள்க இந்தக்கணத்திலேயே யருள்புரிவோமென்றுகூற, சிவபெருமான் கூறுகின்றார் எ-று.

அல்ல லுற்றிடு மமரர்கள் மகிழ்முப் புரங்க
கொல்லு தற்கு சத்தியைக் கொடுக்கநான் மறைக்குமுன் னுக
வொல்லும் பீசத்தி னோடொன்ற குணமெய் பாலா
சொல்லு மும்பெய மந்திர மெனக்கருள் புரிக.

(இ - ள்) துன்புற்ற தேவர்கள் களிப்பெய்தத் திரிபுரங்களைக் கொல்லுகின்ற வல்லமையைக் கொடுத்தருள்க. நான்கு வேதங்கட்கும் முற்பட்டதாகப் பொருந்திய பீஜாட்சரத்துடன் நும் பெயராகச் சொல்லுகின்ற மந்திரத்தை யெனக்கு உபதேசித் தருள்க. எ - று (௩0)

அந்த மந்திர வலியினா லாற்றலை முப்புரமும்
வெந்தி டப்புரி யென்றனன் விநாயக ராவா
நந்தம் பீசத்தா லத்தினு லமையிலா நாம
மைந்து தொண்டனினுனக்குள தாவது மதியாய

(இ - ள்) அந்த மந்திரத்தின் வல்லமையால் வலியமைந்த முப்புரத்தையும் வெந்தழியும்படி செய்கவென்றனர் (சிவபெருமான்) கூற, விநாயகக்கடவுள் கூறுகின்றார் நம்முடைய பீஜாட்சரத்தினோடு குற்றமில்லாத ஐந்துகொண்ட திருநாமம் உனக்குண்டாகுக எ - று

உள்தாவது - துவ்வீறுற வியங்கோள் (௩௧)

அதனி லேனுமோர் பீசத்தைக் கூட்டியம் மனுவை
மிதமொ டேக்கொ டொன்றுபின் னிருத்தியுஞ் சொல்வார்

கதிசெய பிரணக டபகருமுன கதுவிய பீச
மதுமி குந்தமுழய வாசகீத வணிவழுங் குவதே.

(இ-ள்) அதனுடனே வேறோர் சொல்லாகச்சொலத்த அமந்திரத்தை இதனுடன் கொள்வாயாகவென்று, மேலே இதனைப்புரு சொல்கின்றார் நந்தியை யுணர்செய்யும் பீசங்களுக்கு முன்னே சொல்லப்படும் பிரமாணம், தேனிருந்த துளவமாலையணிந்த திருமாலே கூறுகிறகும் எ-று. (கஉ)

நீதி வாய்மை கணக்திகம பரமுமவ வாரிற
கோதிலாணை கொளுந்தென் றென்றனைக் கணேச
நாதி பீசத்தைக் கணராயக் திரக்கொடு மறுவி
யோது நாமழு மோமெனற முனைபபவா ராறுா.

(இ-ள்) குற்றமில்லாததி பிராமணா! அறியாதபடியெனக்கூற, சிகமயருக்கிய சிவபிரானும் அவ்வகையே குற்றமில்லாத மெய்யாகக் கொள்வேனென்று கூறினா கணேசப்பெருமானே ஆதிபீசத்தைத் தாராமாயத்துடனே சேர்த்து (சிவபிரானுக்கு) அருளிச்செய்தது, சொல்லுகின்ற பெயரும் [கணேசனென்று] சிவபெருமானுக்குச் சொல்லுவார் எ-று (கங)

பேர மாமனு பெறுபாய் பெருவலி யினையாய்த
தேசு வாய்ந்த தேவர்கள் செயிக்கணங் களுக்கு
மீச னாநீ கணேசனென் றிருமெய்யா நினக்கு
மாசி லாயமிக வழங்கிடப் பட்டது மாதோ.

(இ-ள்) சொல்லுகின்ற மகாமந்திரத்தைப் பெற்றலால், பெரிய வலிமையுடையவராய், கீர்த்திபாயிய தேவர்களுக்கும் நெருங்கியகணங்களுக்கும் இறைவராகையால் உமக்குக் கணேசனென்று பெயர் திருநாமம் வழங்கிடப்பட்டது குற்றமில்லாதவரே! எ-று (கச)

பந்து மானிடக் கணப்புங் கங்கண முதலோர்
சகல மாகணங் களுக்குஞ் சந்தனு முறைபு
மிருக்க லாலுயர் பெயராவங் கியதென வரிப்ப
வகில மீசரை வாகசெத்திர வரமவழங் குவரால்.

(இ-ள்) சொல்லுகின்ற மனுஷகணம் சாபகணம் முதலாகச் சிறந்த சகல கணங்களுக்குமாசத்துவ முனக்குமிகவிருத்தலாலும் (கணேசனென்றும்) அப்பெயர் விளங்கியதென்று கூற, (சிவபெருமான்) சாமேசுரரருகிய கணேசப்பெருமானுக்கு வரங்கொடுக்கின்றனர் எ-று (கரு)

வேத மூவாறு புராணங்களை மிருதிபா டங்க
ளோது போதுமுன யாவரு முன்னைப் பசிக்கத்
தீதி லாதவை நிகந்திகழ் மைரவெனப் பிறவுள
யாறு யாதுசெய் யினுமங்கு மிறைஞ்சிடப் படுக.

(இ-ள்) (நான்கு) வேதங்கள்-பதினெண்புராணங்கள்-(பதினெண்) மிருதிகள்-(இருபத்தெட்டு) ஆகமங்கள் (முதலியவற்றை) ஓதுகையிலும், எல்லோரும் உம்மை வழிபடுகை நெடுதலில்லாமை சிகமொன்றமை சையமாகுமென்று சொல்லப்படுமிவற்றில் ஏதேனுஞ்செய்வதற்கு முன்பும் துதிக்கப்படும் எ-று. (கசு)

வசிய மாதியா வுலககா ரியங்களைமற் றிறமையு
நசிவி லாமையை யியற்றியூழ நாளை முதலாக
கசியு மன்பொடு மந்திரமாக கவிழ்த்த தெவரு
நெகிழ்வி லாதபூ சனையியற்றி மிக்க வான முறையால

(இ - ள்.) வசிய முதலாகிய மற்றெல்லா உலககாரியங்களுக்கும் கெடுதலில்லாத வண்ணம் செய்தாயும், திருமால்முதலாக மனிதரிறுதியாகத் தோன்றினவர்களெல்லோரும், (நாம்) நாள் முறைப்படி அழிவில்லாத (பெருமைக்கு) பூசையைச் செய்யக்கடவர். எ - று. (௩௮)

யானை யுரியி னிறைவ னைந்தா நதியணி கருமய
யானை முகத்தி யாப்பாதி யாற்றியா மாணை
மேவா வினை வியாதி யை புறப்பா தாமும்
பாவ காரிக ளாக நினையாமி பாதிரல

(இ - ள்) எவராயினும் உமையைப் பணியாது செய்கின்ற காரியம் யாதாயினும் பலவிதமாயினும் சிறப்புமில்லாத மண்ணை (ஆகிய) பெயர்களாற் பொருந்தினவர்களும் உபகாரமின்றி பாவகாரிகளாகக்கடவர்கள் எ - று.

வரங்க ளெண்ணில மளித்தா னுமாபதி மகிழ்ந்து
கரங்க ணான்குடைக் கணேசனைப் பாடிய ராகம்
புரங்கள் தொலைந்தமந் திரங்களைக் கணபதிக் காக
வரங்கள் கொள்ளுமந் திரத்திடத் தாக்கமந் திரிக்க.

(இ - ள்) சிவபெருமான் இவ்வாசயாக வரங்களைக் கொடுக்கவும், நான்கு திருக்கரங்களையுடைய கணேசப்பெருமானை மகிழ்வுற்று உபதேசமாக மொழிந்தனர். கொடியவரங்களையுடைய திரிபுரங்களையழிக்க நாம் கூறிய மந்திரத்தைக் கணபதியினிடத்திலும் வரங்களையுங் கொடுத்திடத்திலும் அபிமந்திரிக்கக்கடவை. எ - று ( )

விடுத்துக் காலையிற் றமுறை யினமைத்த பின்
படித்துச் சாலையி னாயிர முறை மந்திரத் திதனை
தொடுத்து மின்னருள் வாவியமை புகழ்ச் சரணே
தொடுத்து மனமிகு மொன்றெனச் சரதமைக் கவி.

(இ - ள்) செலுத்துங் காலையில் நூறுமுறை ஜெபிக்கும் தினமும் பெருமையில் அமருமுறையே [நூறுரு] மந்திரிக்கவென்று, மிக்க இனியகிருபையுடன் கூறவும், சிவபெருமான் அதிகரிக்கின்ற அன்புடன் நல்லதென்று தேவர்களை விளித்து எ - று. (௪0)

பாவனை கடந்திட்ட பரிபூரண மெய்த்
பாவனைக் கெளி தாயினன் விநாயகர் திருந்தினர்
பூவ லர்க்கொண்டு பாசியாற் பூசனை புரிந்து
மேவு மந்திர மாயிரம் விரித்தல் ரிடுமின.

(இ - ள்) பாவனை செய்தற்கு எட்டாத பரிபூரணராகிய விநாயகக்கடவுள் எம்முடைய பாவனைக்கு எளிதாக இதோ விளங்கியிருக்கின்றனர். மலர்கள் விகசித்த மாலை முதலியவற்றால் பூசைசெய்து பொருந்திய மந்திரத்தை ஆயிரமுறை ஜபித்து அர்ச்சிக்கக்கடவீர்கள் எ - று. (௪௧)

நமது பிழை நின்றுக்கு நாளுமென் றருள
கமல மேந்திய அந்தியர் கனன்றுக வருள்பெறு
தமல னாகிய கணேசனை யாகம விதியால்
நமமெலா மறப் பூசித்தார் திறலாக்கத் திறம்.

(இ - ள்) உம்முடைய துன்பங்களை நொடிப்பொழுதினில் நீக்குவே மென்று (சிவபெருமான்) அருளிச்செய்ய, செந்தாமரைக் கண்ணனாகிய திருமால் முதலிய தேவர்கள் நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமான் திருவருளைப்பெற்று மலர்ந்த ராகிய கணேசப்பெருமானை ஆகமமுறைப்படி (அப்ப) தாமசுருண முறைப்படி யறியும்படி பூசித்தார், ஆயிரத்தெட்டு ஐயமுறு செய்தனர் எ - று (௪௨)

முக்க ணையகர் முன்னரே யானநடு வேய பாதுகையாய்
தக்க பரிசின் மைந்தர பொற்பதி சேர்ந்தனன்
புக்க மெய்த்தவ வியாதன் முன் சேட்டிய பாதருன
ஒக்க மகிழ்வு காமனை நோக்கிப் பாதத் தகர்த்தான்.

(இ - ள்) மூன்று விழியினையுடைய சிவபெருமானும் விநாயகக்கடவுள் அவர்களுக்கு மிக்க திருவருள்புரிந்து அங்கு வெள்ளிமலையைச் சேர்ந்த வகை யிதுவாகும், உண்மைத்தவமுடைய வியாசமுனிவன் தன் முன்னின்று கேட்கும்படி, பெருமையுடைய சூதமுனிவன் பழமையாகிய ஆசனமாகக்கொண்ட பிரமதேவன் கூறினன் எ - று (௪௩)

படைப்ப வாயபவரி பராகரன் பதருமாக கரனார
படைகொள் வானகத்தைக் கேட்டனை பார்த்திப இனிமேல்
உடைய வானர மெய்வா னழித்த நுதல் கேளென
இடைய நூதனைப் பாவையின் மாதவப் பிருகு

(இ - ள்) அசுரர்களையெல்லாம் (எம்மை) வணங்கும்படி செய்கிற திருவருள் புரியும் சிவபெருமானும், விநாயகக்கடவுளிடத்தில் ஆயுதம்பெற்ற சரித்திரத்தைக் கேட்டனை சோமகாந்த மன்னனே! இனி அச்சிவபெருமான் பகைவராகிய முப்புரங்களை யழித்ததையுங் கேட்பாயாகவென்று அழகிய பெருந்தவமுடைய பிருகுமுனிவர் விடாது சொல்லத் தொடங்கினர் எ - று (௪௪)

விமலர் விநாயகருற்பத்திப்படலம் முற்றிற்று.

ஆகத் திருவிருத்தம் - [illegible]

திரிபுரதகனப்படலம்.

அன்பர்க ணுள்ளமே யாலயங் கொளும்
அன்பரி புரிந்தார் பாறென பெய்தனர்
முன்பக ராயெய முனிவி யாக்கைக
இன்புறு நாளுற வியம்பலை யயிறும்.

(இ - ள்) அடியவராக ஞாலத்தையே திருக்கோயிலாகக் கொண்டருளும் வலிய சாபபாணராகிய அவ்வெம்பெருமானைப் பின்னர் யாதுசெய்தனர்? முற்பட்டுக் கூறுகவென வினவிய வியாதமுனிவனுக்குப் பிரமதேவன் இன்பமுறக் கூறத்தொடங்கினன் எ - று (௧)

எம்பிரானை மறுப்பமீண் டேகுந் தூர்த்தர்க
டம்பிரானுகிய தானவ னுய்ப்பணிந்
தும்பரார்க்கு முரக்கதிண் டையுந் தவிர்ந்தானை
நிம்புளைபோல வொருணடனைத் திரும்பினேனென்றார்.

(இ - ள்) எம்பெருமானாகிய சிவபெருமான் தடுப்ப, திரும்பிச் செல்லுந் தூர்த்தர், தமது தலைவனாகிய திரிபுரனை வணங்கி, சிவபிரானை தேவர்கள் தியானிக்கும் (சிந்தாமணி) மூர்த்தியைக் கொடுத்திலர் சரப்பட்டுபோலக் கோபித்தனர் நாங்கள் திரும்பி வந்துவிட்டோமென்றனர் எ - று (௨)

கேட்டனன் வெள்ளொளி கிளர நக்கனன்
னீட்டிய தவப்பய னிறுதி யன்மலிற
மூட்டலின் றிகழ்ப் புலத் தலைவன் பால்
கோட்டமுற் றமரிடைக் குறித்திட் டானரோ.

(இ - ள்) திரிபுரன் (அதனைக்) கேட்டு, வெள்ளிய ஒளி விளங்குமபடி சிரித்து, தேடிய தவத்தின்பயனை முடிவுசோதலால், உச்சிக்கொண்டையுற்று விளங்கிய சூலப்படையேந்திய சிவபெருமானிடத்தில் கோபங்கொண்டு போர்புரிய ஆலோசித்தனன் எ - று (௩)

பெருவலிச் சண்டனைப் பிரசண் டனைமுதல்
வெருவரு தானவ வீரர் யாவரும்
பொருவரு வரத்திறம் புரமூ விவ்வயின்
மருவுக வென்னவவ் வந்து தொக்கனர்

(இ - ள்.) மிக்க வலிமையுடைய சண்டனும் பிரசண்டனுமுதலிய அஞ்சச் செய்யுந் தானவவீரர்களெல்லோரும் சமானமற்ற வரத்தினையுடைய முப்புரங்களும், இவ்விடத்தில் வந்து சேருகவென, அவர்களும் வந்து சேர்ந்தார்கள் எ - று (௪)

போருளர் தாயது புயங்கள் டுதிவைத்
தீருமி னினியெனச் செப்பி வீரர்க்குச்
சீருறு பல்வகைச் சிறப்புஞ் செய்தனன்
காருடைத் தொடைப்பெருங் கரத்துத் தானவன்.

(இ - ள்) போருண்டாயிற்று இனித் தோட்டினை வைத்து நீருங்களென்று கூறி, போர்வீரர்களுக்குச் சிறந்தங்கிய பலவகைச் சிறப்புகளுஞ் செய்தனன். மேகமும் பின்னிடத்தக்க கொடையிற் பெருமை வாய்ந்த கையையுடைய திரிபுரன். எ - று (௫)

ஊருறு நாளினு முவகை யெய்தமடங்
காருறப் பூங்கபு ...த்த வீரர்கள்

போருறு காளையைப் புகழ்ந்து நின்றனர்
நேருறு திரிபுர னெழுந் தார்க்கின்றனன்.

(இ - ள்) நகரங்கள் பொருந்திய காலத்தைக் காட்டிலும் எண்மடங்கு களிப்புப்பொருந்த வீரக்கழலைக்கட்டிய போர்வீரர்கள் போர் செய்யுந்தன்மையைப் புகழ்ந்துகொண்டிருந்தார்கள் அழகு பொருந்திய திரிபுரன் படை யெழுச்சிக்கு முன்னாயினான் எ - று. (௬)

திரிபுரன் படையெழுங் கொ செயதி யுணர்விய
வரியய னரியொரு வுமலர் நாயக
னுரியநந் திகையழைத் துலப்பி லாத்தம
மெரிசினப் படையெலா மெழுக வென்றனன்.

(இ - ள்) திரிபுரன் (போர்புரியக்கருதி) படையெழுகின்ற செய்தியையுணர்ந்து, பிரமனுந் திருமாலும் அறியாத மலரடிகளையுடைய சிவபெருமான் பொருந்திய திருநந்தி தேவரை விளித்து, கெடுதலில்லாத நமமுடைய மூர்க்கமான கோபத்தையுடைய சேனைமுழுதும் போருக்கெழுக வென்றனர். எ - று. (௭)

காற்றுயிர் குடித்தநஞ் சுழுங்கு போர்வை
யேற்றன னுதலா லீண்டு நாமுடை
யாற்றலசால் பெரும்படை யனைத்துஞ் சேர்கெனச்
சாற்றினன் முரசினிற் றதுங்க நந்தியே.

(இ - ள்) இயமனுயிரைப்பருகிய நமது சிவபெருமானை போர்செய்ய வேற்றுக்கொண்டனரானபடியால், இப்பொழுது நமமுடைய வலிமிக்க பெரிய சேனைமுழுதுஞ் சேருகவென்று திருநந்திதேவர் பேரிகையால் முழக்குவித்தனர் எ - று. (௮)

முரசொலி கேட்டலு மொய்ம்பின் வீரர்கள்
பரசணி கரத்தினர் பைம்பொற் கோயின்முன்
விரசினர் தேவர்கள் வியூகந் தன்னொடு
மரசனு மவ்வழி யடுத்து நின்றனன்

(இ - ள்) போர்ப்பேரிகையினொலியைக்கேட்ட வுடனே, வலியமைந்த வீரர்கள், மழுப்படையேந்திய கையையுடைய சிவபெருமானது பெரிய பொன்மலையாகிய திருக்கோயிலின்முன்னே தேவர்கள் வியூகங்கொண்டு நெருங்கினார்கள் அரசனாகிய திரிபுரனும் அப்பொழுது போருக்கு நெருங்கினான் எ - று (௯)

வேறு

நந்தி நாயக னணிவகுப் படையினை நோக்கி
யந்தி வண்ணனாந் திருமுன்ன ரடைந்தடி வணங்கி
யெந்தை தானையந் தலைவரு மெழுபடை பலவும்
வந்துவா னெழுங் கோயில்வாய்த் தலினமருவினரால்.

(இ - ள்) திருநந்திதேவர் ஆங்கடைந்த சேனையைக் கண்ணுற்று, அந்திவண்ணராகிய சிவபெருமானது திருமுன்னேயடைந்து, திருவடியைப் பணிந்து, எந்தையே!

அழகிய சேனைத்தலைவரும், மிக்கவலிமையையுடைய பலசேனைகளும் வந்து ஆகாயமளாவிய திருக்கோயிலின் வாயிலிற் பொருந்தினார்கள் எ - று (௧௦)

பூண்ட வாம்பரித் தேரினைப் பூவலங் கிழவன்
றூண்டி யுய்த்தன னென்றலுஞ் சுரரிடர் தூமியப
ரண்ட காதலின் முன்னவன் முருந்தின் முறுவ
னீண்ட வார்குழ லுமையொடு மெழுந்தன னெழுந்தான்.

(இ - ள்) தாவிச்செல்லுங் குதிரைகள் பூண்ட தேரை, தாமரைமலர்ப்பீடத்திலுள்ள பிரமதேவன் செலுத்தினனென்று சொல்லவும், முதற்கடவுளாகிய சிவபெருமான், மயிலிறகின் அடியையொத்த வெண்மைவாய்ந்த தந்தபந்தியையும் மிகநீண்ட கூந்தலையுமுடைய உமாதேவியாரோடும் தேவர்களுடைய துன்பத்தைக்கெடுக்க அதிகரித்த ஆசையுடன் விரைவாக வெழுந்தனர். எ - று (௧௧)

அணிபெறு பாதுகை யடிமல ரிரண்டினுந் தொடக்கிப்
பணிபெறு பூணாரந் துயல்வரப் பலகை கடந்து
மணிபெறு கோபுர வாயிலின் முன்வந்து வானளக்கு
மணிபொற் றேரினை யிவர்ந்தனன் முரன்றன சங்கம்.

(இ - ள்) அழகிய பொன்னாலாகிய பாதுகைகளைப் பாததாமரைகளிரண்டிலுந் தொடுத்து, சர்ப்பமாகிய அழகிய ஆபரணமானது திருமார்பிலசையப் பலகைமேல் நடந்து, நவமணிகளிழைத்த பொன்னாலாகிய திருக்கோபுரவாயிலின் முன்னேவந்து, ஆகாயமளாவிய அழகியபொற்றேரை யாரோகணித்தனர் சங்கங்கள் முழங்கின எ-று

வெற்றி வானவர் முழுவது மிலங்குதேர்க் குருவா
யுற்ற மாட்சிமைக் கொப்புற வொளிர்கலை முழுது
முற்று நாண்மதி முடித்ததே போன்மென முடிமேற்
கற்றை யீர்ங்கதிர் கான்றது கவித்தவெண் கவிகை.

(இ - ள்) வெற்றிபொருந்திய தேவர்கள்யாவரும் பிரகாசிக்கின்ற தேரினவடிவமாகப் பொருந்திய மாட்சிமைக்கு ஒப்புமையாம்படி, ஒளிசெய்கின்ற கலைகள் முழுவதும் [பதினாறும்] முதிர்ந்துள்ள உவாத்திங்களை முடித்ததுபோலுமென்று சொல்லும்படி, முடியின்மேலே வெள்ளியகுடையானது கவித்துக்கொண்டு குளிர்ந்த கற்றையாகிய கிரணங்களைக் கக்கியது எ - று

கலைமுழுதும் முற்றும் நாண்மதி - எல்லாக்கலைகளோடும் நிறைந்துள்ள பூரணசந்திரன் (௧௩)

மான மானின்பின் னேகிடந் தலைந்தன மின்று
வான வாவினி மருவுதல் பெற்றன மேமென
முன வேட்கையா லெழுந்தெழுந் தாடுவ போன்ற
கான வார்குழன் மாதரா ரிரட்டுவெண் கவரி.

(இ - ள்) வாசந்தங்கிய நெடிய கூந்தலையுடைய மாதர்கள் இரட்டுகின்ற வெள்ளிய சாமரைகள் மானத்தையுடைய மானின் பின்னேயிருந்து அலைந்தனம் இப்போது ஆகாயத்தை நோக்கி எதிரேபொருந்துதல் பெறுவோமென்று உண்டாகிய களிப்பினால் எழுந்தெழுந்து கூத்தாடுவபோன்றன. எ - று. (௧௪)

அழுந்து பட்டவே மூழியி னகன்றதன கருணை
கொழுந்து பட்டிக லவுணன்பாற கூடனு மாமென
றெழுந்து பட்டபுன சினவெரி யிடுவார போலச
செழுந்து பட்டசாந தாறழிகள் சிலரெடுத தசைததார.

(இ - ள.) ஆழநதஙகிய சததசமுததிரஙகளைக காட்டிலும் அதிகரித்த தமது கிருபையானது மிகுநது, வலிசஙகிய திரிபுரனிடததிற கூடுதலுமுணடாருமெனறு, சிறிது சிறிதாக எழததகக கொடிய கோபமாகிய அக்கினியை யெழுபபுபவாகளை போல, செழுமைபொருநதிய விசிறிகளைச சிலரெடுதது அசைததாாகள எ - று

முளைததெழுநததே போன்றொளிா மொய்மணித தேரின
வளைதத வாாதிரை யாகிய வாருதி நின்றுந
திளைதசெழுநதிடு திரைகளே யாமெனச சிலரால
விளைத்த வெளளொளி வெள்ளைகள வீசிடப் படுவ.

(இ - ள்) முளைததுத தோனறியதையே யொததுப பிரகாசிக்கின்ற, நெருங்கிய நவமணிமயமான தேரிறகட்டிய நெடிய திரைசசீலையாகிய கடலினின றும மேறபட்டெழுநத அலைகளேயா மெனறு சொலலுமபடி, வெளளொளிதஙகிய வெணபாவாடைகள சிலகணஙகளால வீசிடப்பட்டன எ - று.

வெணபடாம் வீசுதல ஓா உபசாரமாம். (கசு)

மிண்டு முப்புர நீறபட விமலனமே வுதலாற்
பண்டை நமபத நாமினிப படாகுது மெனவுட்
கொணட வோகைபின வாளராக் குலாகளா டுவேபா
லண்டா போறறினா றவசைவன வாலவட டஙகள்.

(இ - ள) மததாற பிழைபட்ட முபபுரஙகளை நீறுபடுததச சிவபெருமான எழுந்தருளுவதால, பழைமையாகிய நமமுடைய பதவியை [நாகலோகததை] யடை வோமெனறு மனதிறகொணட ஆசையுடனே, ஒளியநாககூட்டஙகள கூததாடுவன போல, தேவாகள துதிசெயயுமபடி ஆலவட்டஙகள அசைநதன எ - று

மிணடு - மததாற பிழைபடுதல (சஎ)

உடைய நாயக னொருகணை யாலழித திடுமு
னடைய லாரெயி லகததெழி லோககுது மெனனுந
தொடைவி ராநதணிக கொடியிசைச சூழகொடி போறற
விடைவி ராவிநின றசைநதது விணணிடை விளஙக.

(இ - ள) (நமமை அடிமையாக) உடைய சிவபெருமான ஒரே கணையினால அழிததுவிடுமுனனமே, பகைவாது முமமதிலகளுளளுளள அழகினைக காணபோ மென்று, மலாமாலைகட்டிய ஒபபறற கொடிகளின மேலே, தேவாகளுடைய துவ சங்கள் போற்றும்படி இடபமானது நின்று ஆகாயததில விளஙக அசைநதது. எ - று.

படக மாகுளி சல்லரி பணைகிணை கலல
வடமு ழாக்குடப் பறைகர டிகைமணி முரசந

துடிதடாரிதண் ணுமைகுளிர் துந்துமி தக்கை
கடிசெய் மொந்தைதொண் டகமிடக் கைதகு ணிச்சம்.

(இ - ள்.) படகம் - ஆகுளி - சல்லரி - பணை - கிணை - கல்லவடம் - முழவு - குடப்பறை - கரடிகை - அழகிய முரசம் - துடி - தடாரி - தண்ணுமை - குளிர்ந்த ஓசையையுடைய துந்துமி - தக்கை - காவலைச்செய்யும் மொந்தை - தொண்டகம் - இடைக்கை - தகுணிச்சம். எ - று. (௧௯)

பம்பை தூரியம் பாண்டில்கைப் படலிகை பணிலந்
தும்பு திர்நரம் புடையயாழ் துளைபடு கருவி
கம்பி யாதெழு வங்கியங் காகளம் பீலி
யிம்ப ராரபல் லியங்களு மியம்பின கணங்கள்.

(இ - ள்) பம்பை - தூரியம் - பாண்டில் - சிறு படலிகை - பணிலம் - முடியற்ற நரம்புடைய வீணை - துளைக்கருவிகள் - அடங்காதெழும் ஒலியையுடைய வங்கியம் - காகளம் - பீலி - இன்னும் இவ்வுலகிற் பொருந்தியபலவாத்தியங்களையுஞ் சிவகணங்கள் முழக்கின. எ - று (௨௦)

கழுக்கடைப் பட்டை முசுண்டிசக் கரம்பிண்டி பால
மெழுக்கு யங்கதை முசலங்கப் பணம்பிலை ஞாங்கர்
மழுக்கள் வச்சிரங் கேடகம் வாள்சிலை யம்பு
கொழுக்க லப்பைவே தினங்கவண் குளிரிநீள் சலாகை.

(இ - ள்) கழுக்கடை - முசுண்டி - சக்கரம் - பிண்டி - பாலம்-எழுக்குயம் - கதை - முசலம் - கப்பணம் - அசரவடிவான வேல் - மழுக்கள் - வச்சிரம் - கேடகம் - வாள் - வில் - அம்பு - கொழு - கலப்பை - வேதினம் - கவண்-குளிரி - நெடிய சலாகை. எ - று. (௨௧)

பாச மங்குச முசலஞ்சூ லம்பல குந்தம்
பூசன மலகிய சுரிகையா யுதம்புள்ள மீட்டி
வீச தண்டமென் றுரைத்திடு வெய்யபல் படையும்
பேசருந் திறற்பூதர்கள் பிடித்தன ரார்த்தார்.

(இ - ள்) பாசம் - அங்குசம் - முசலம் - சூலம்-பலமுடைய குந்தம்-போர்த்தொழின்மிக்க சுரிகை யாயுதம் - புள்ளம் - மீட்டி - வீசத்தக்க தண்டாயுதம் என்று சொல்லப்பட்ட கொடிய பலஆயுதங்களையும் சொல்லுதற்கரிய வல்லமையுடைய பூதகணத் தலைவர்கள் பிடித்து ஆரவாரித்தார்கள் எ - று

பிடித்தனர் - முற்றெச்சம். (௨௨)

வேறு.

இலங்கிய வெழுபத் தெண்ணா யிரமென்னுங் கோடி வெள்ள
வலிகெழு பூதர் சூழ வாள்சிலை யிலக்க னென்னு
மொலிகெழு வீர னைங்கை யொருவனு ளருள்பெற் றுங்குப்
பலபடை தமக்கு முன்னே படாந்தனை கொடிஞ்சித் தேர்மேல்.

(இ - ள்) விளங்கிய எழுபத்தெண்ணாயிரங்கோடி வெள்ளமென்னுந் தொகையையுடைய வலிமைமிக்க பூதகணங்கள் புடைசூழ்ந்துவர, நெடியவில்லேந்திய இலக்கனென்னுங் கீர்த்திமிகுந்த வீரனொருவன், ஐந்து திருக்கரங்களையுடைய ஒப்பற்ற

கணேசப்பெருமானால் அருள்புரியப்பட்டு, பலசேனைகளுக்கும் முற்பட்டு, கொடிஞ்சியுடைய தேரின்மேலேறிக்கொண்டு சென்றனன் எ - று.

கொடிஞ்சி - தேருறுப்புகளிலொன்று.

இலக்கன் - கணபதியின் மூத்தமகன். இளையவன் இலாபனெனப்படுவன். ()

ஏதமி லாத வெண்ணூ றயிரமெனுங் கோடி வெள்ளப்
பூதர்கண் மருங்கு சூழப் பொறித்தழ லுமிழ்மா லிறகுங்
கோதைவண் சிலைக்கை வீர பத்திரன் கோபமூள
மாதிர நடுங்க வாமான் மணிப்பொலன் றேரிற் சென்றான்.

(இ - ள்) குற்றமில்லாத எண்ணூறாயிரங்கோடி வெள்ளத்தொகையாகிய பூதர்கள் பக்கலிற் சூழும்படி அக்கினிப் பொறிகளைக் கக்கும் மாலைசூடிய வளமைமைந்த வில்லேந்திய கையையுடைய வீரபத்திரக்கடவுள், கோபமிகக்கவும், திசைகள் நடுங்கவும், காட்டுப்பசுவைப் பூட்டிய அழகிய மணிகள்பதித்த (வேரோ) தேரின் மேலேறிச் சென்றனர் எ - று (உச)

கூரயி லேந்தி நாலா யிரமெனுங் கோடி வெள்ளச்
சாரதர் மருங்கு சூழச் சண்முகப் பெருமா னீலப்
பாரச லத்தின் மீது பருதிபோ லெழுந்தா லென்னப்
போரணி சிறகர்ப் பீலிப் பொறிமயி லூர்ந்து சென்றான்.

(இ - ள்) கூர்மைபொருந்திய வேலாயுதமேந்தி, நாலாயிரங்கோடி வெள்ளத்தொகையாகிய பூதர்கள் புடைசூழ, சுப்பிரமணியக் கடவுள், நீலமாகிய பரப்பையுடைய மலையின் மேலே சூரியன் வந்து தோன்றினாற்போல, போர்த்தொழிலையுடைய அழகிய சிறகையும், பீலியையும், புள்ளிகளையுமுடைய மயில் வாகனமூர்ந்து சென்றனர் எ - று

சண்முகன் - ஆறுமுகக்கடவுள், முருகன். (உரு)

வேறு

சிறந்த தேசின் முப்பத்து முக் கோடி தேவர்களும்
விறந்த சேனைவா னவர்களி ருசையா முந்தப் பலரும்
புறந்தொ டர்ந்தெழப் பூரண னருள்கொடிந் திரனும்
மறந்த ழைத்தநாற் கோட்டுவா ரணங்கடாய் நடந்தான்.

(இ - ள்) மேம்பட்ட கீர்த்தியையுடைய முப்பத்துமூன்றுகோடி தேவர்களும். வலியமைந்த பிறதேவர்கள் வித்தியாதரர் முதலானோர் பலரும் பக்கலிற்றொடர்ந்து வரும்படி, விநாயகப்பெருமானுடைய திருவருள்பெற்ற இந்திரனுங் கொலைத்தொழில்மிக்க நாற்கொம்பினையுடைய (ஐராவதமென்னும் வெள்ளை) யானையின் மேலேறிச் சென்றனன். எ - று (உசா)

கண்டனந் திமா காளன்குண் டோதரன் கொற்றங்
கொண்ட முண்டிகோ கன்னனே சகன்னனன் முதலா
மண்டு வீரர்கண் மலிபெரும் பூதர்க ளோடு
மண்டர் நாயக னணிமணித் தேர்ப்புறஞ் சூழ்ந்தார்.

(இ - ள்.) கண்டன் - நந்தி - மகாகாளன் - குண்டோதரன்-வெற்றிபொருந்திய முண்டி-கோகன்னன் - சகன்னன் முதலாகிய நெருங்கிய (பூத)வீரர்கள்) (வலி)

மிக்க பெரிய பூதசைநியத்துடன், தேவநாயகனுகிய சிவபெருமானுடைய அழகிய நவ ரத்தினமயமான இரததினபக்கலில (கூட்டமாக) மொய்த்தார்கள். எ - று. (உஎ)

உமைம ணாளரொன் னருளினு லுற றுநான கடவ
விமைய வோங்கல்பல வணாெயாடு மெழுந் துசெல வதுபோற
சமைவி ராவுபஞ் சேறிடைந் துனைந்துசென் றனறு
வமையு மாமறைப் புரவிபூட டியவவிர மணித்தேர்

(இ - ள்) உமாதேவி தலைவராகிய சிவபெருமானுடைய கிருபையால், நான செலுத்த, இமயமலையானது பலமலைகளோடும எழுந்துசெலவதுபோல சிறநத வேதப் புரவிகட்டிய பிரகாசிக்கின்ற அழகிய தேரானது சுமைபொருந்திய பலதேர்களின நடுவே விரைந்துசென்றது எ - று.

நான என்றது கூறும்பிரமன தனனை. (உஅ)

புண்ணி யன்பொலந் தேர்மணிக காலொடு புனித
நண்ணி ருங்குறட பூதாக ணலந்தரு காலு
மண்ணு புண்ணியத தாலனு வடிவமா யவனி
விண்ண மேறுவ தொததது விரைந்தெழு பூழி.

(இ - ள்.) விரைந்தெழுகின்ற புழுதியானது, புண்ணியசொரூபியாகிய சிவ பெருமானுடைய பொற்றேரின அழகிய காலும, புனிதமபொருந்திய பெரிய பூதகண ந தலைவர்களது நலந்தங்கிய காலுமபொருந்திய புண்ணியவசததால,பூமியானது அணு வடிவமாகி ஆகாயத்திற்கு ஏறிச்செலவதையொத்திருந்தது. எ - று. (உகூ)

தேவா யாவருந திரணடொரு தேரென நமபான
மேவி னாவ ரிடங்களு மேவலு மாமென
றேவி லாவிழை வாலவிரைந தெழுந்தது மொதகும
பாவு பாருரு வாகிய பரந்தெழு தூளி.

(இ - ள) தேவர்களெல்லாருஞ் சேர்ந்து ஒரு தேர்வடிவாக நமமிடத்திற்கு வந்தார்கள். (ஆதலின) அவர்கள வசிக்கும இடங்களை நாம அடைதலுமாகுமென்று, பரந்தபூமியானது செற்றலில்லாத விருப்பத்துடன பரவியெழுந்த புழுதிமயமாகி விரைந்து மேலே கிளமபியதையு மொத்திருக்கும எ - று (௩௰)

குடையும பிச்சமும பெணமபா சடையெனக் குலவ
மிடையும வாள்கதிர் வேலினவை மீனங்களாக
வடையுங் கேடக மாமைக ளாகவார்த் தியவாரப்
புடைப சேனைக ளொலிகட லேழுமொத் தனவே.

(இ - ள்) குடைகளும மயிற்பீலிகளும், நுரையையும் பாசடையையும்போ னறு விளங்க, நெருங்கியவாளும ஒளிரிய கிரணத்தையுடைய வேலுமாகிய இவை மீனகளாகவும, பொருந்திய கேடகங்கள ஆமைகளாகவுங்கொணடு, ஆர்ச்சியமுழக்க முடைய சேனைகள ஒலிக்கின்ற கடல்களேழையு மொத்திருந்தன. எ - று. (௩௧)

சேனை யம்பெருங கடலிடைத் திரைத்தெழு திரைபோன்
மான மலகிய பதாகைகள் வயினவயி னசைந்த

மேனி வந்தெழு தூளிநீ ருகத்தெழு மேக
மான விண்ணவர் சொரிமல ரவைமழை போன்ற.

(இ - ள்.) சேனையாகிய அழகிய பெரிய கடலினடுவே மறிந்தெழுகின்ற அலைகள்போல, மாட்சிமைமிக்க துவசங்கள் இடங்கடோறு மசைந்தன. மேலே யுயர்ந்தெழுகின்ற தூளியாகிய நீரைமொண்டுகொண்டெழுகின்ற மேகத்தைப்போல, தேவர்கள் சொரிகின்ற மலர்கள் மழைபோன்றன. எ - று. (௬௨)

மேகத்து யர்ந்திய விழுக்கொடி கூம்பதன் மீது
தாகத்து வல்லிடை சார்ந்தமீ காமனுப் புறத்தி
னூக்க மிக்கெழு தேர்களுந் தொள்ளமா திரளா
மாக்க லப்பொர வள்ளறே ரோடிய தம்மா.

(இ - ள்) மேலேயுயர்ந்த பெரிய கொடிக்கூம்பின்மேலே தங்கிய வலி யமைந்த இடமானது பொருந்திய மாலுமியாகவும், பக்கங்களில், மனவூக்கத்தோடு மேம்பட்டெழுகின்ற தேர்கள் நகர்கின்ற தெப்ப முதலியவைகளாகவும் விளங்க, சிவபெருமான் ஆரோகணித்த தேரானது பெரிய மரக்கலத்தைப்போல (சேனையாகிய கடலினிடையே) ஓடியது. எ - று. (௬௩)

மனமும் பின்னிட வயப்பரி வீரர்கண் மணித்தேர்த்
தினமும் பின்னிட வெம்பிரா னிரதஞ்சென் றடுப்பக்
கனமும் பின்னிடுங் கனைகுரற் றிரிபுர னறிந்து
சனமும் பின்னிடத் தனிநெடுந் தேர்மிசை யிவர்ந்தான்.

(இ - ள்.) மனவேகமும் பிற்படும்படி, வெற்றிபொருந்திய குதிரைச்சேவகர்களுடைய அழகிய தேர்த்தொகுதிகளும் பின்னிடும்படி, எமது சிவபெருமானுடைய தேரானது (விரைந்து)சென்றுசேர, மேகமும் பின்னிடத்தக்க வெடிபடு குரலையுடைய திரிபுரன் தெரிந்துகொண்டு, தன் சைனியமும் பின்னிடும்படி ஒன்றியாகப் பெரிய தேரின்மேலேறினன் எ - று (௬௪)

வேறு வேறுசென் றமரினை விளைமின்க ளென்று
வீறு சேர்தரு மைந்தர்க்கும் விளங்குமுப் புரர்க்கும்
கூறி யேறுதன் கொடிஞ்சியந் தேரினைக் குழக
னேறு தேரினுக் கெதிருற விடுத்தன னிமைப்பில்.

(இ - ள்) வலிதங்கிய புதல்வர்க்கும் விளங்குகின்ற திரிபுரவாசிகளுக்கும் வெவ்வேறுசென்று போர்புரியுங்களென்று கூறிவிடுத்து, (திரிபுரன்) தன்னுடைய கொடிஞ்சியுடைய தேரை (இமைப்பொழுதில்) சிவபெருமான் ஏறிய தேருக்கெதிரே பொருந்தச் செலுத்தினன். எ - று. (௬௫)

அண்டம் யாவையு மரைக்கணத் தவித்திடு மாண்மை
கொண்ட தானவக் குழாம்படை குடங்கைகொண் டார்ப்பக்
கண்டை யாதிகண் முழங்கவெண் கவிகையா திகளு
மண்ட மண்டினன் வரவினை வள்ளலார் பார்த்தார்

(இ - ள்) அண்டங்களையெல்லாம் அரைவினாடியில் அழிக்கும் ஆண்மை யமைந்த அசுரர்கூட்டமானது ஆயுதங்களைக் குடம்போன்ற கையிற்கொண்டு ஆரவ

பரிக்க, வீரக்கழல் முதலியன வொலிசெய்யவும், குடைமுதலியன நெருங்கவும் (திரிபுரன்) வருவதைச் சிவபெருமான் கண்டனர். எ - று. (௬௬)

நிணந்தின மூழ்குவே லேந்துதம் வீரர்க ணெடுந்தோள்
மணந்தல செய்தகண் டேதியை மாற்றுதற் பொருட்டோர்
கணத்தி னீற்றுறும் படைகரந் திருந்துங்கண் ணுதலார்
குணத்தின் மேம்படு திரிபுர னொடும்போர் குறித்தார்.

(இ - ள்) (எதிர்த்த பகைவர்களுடைய) நிணத்திலே குளிக்கும் வேற்படையேந்திய தமது வீரர்களுடைய நெடிய தோளிற்பொருந்திய தினவைமாற்றுதல் காரணமாக, ஓர் விநாடியில் சாம்பராக்கத்தக்க ஆயுதம் தமது திருக்கரத்திலிருந்தும், நெற்றிக்கண்ணையுடைய சிவபெருமானை, போர்புரியும் குணத்தினைமேம்பட்ட திரிபுரனுடன் போர்செய்யக் கருதினர் எ - று. (௬௭)

வாரமாகிய கணேசனை மதித்தநம் மேசர்
பார மேருவில் பங்கயச் செங்கையிற் பிடித்தார்
வீரனும் புரனுமத் தேவனைத் தொழுது
கோர மாகிய கொடுமரங் குடங்கையி லெடுத்தான்.

(இ - ள்) தேவதேவராகிய சிவபிரானார் தமக்குரிமையாகிய கணேசப்பெருமானைத் தியானஞ்செய்து, பாரமுள்ள மேருமலையாகிய வில்லைத் தாமரைமலர் போலுஞ் சிவந்த திருக்கரத்திற்றாங்கினர் வீரவானான திரிபுரனும் அக்கணேசப்பெருமானைப் பணிந்து, பயங்கரமாகிய தன்வில்லை அங்கையிலெடுத்தனன். எ - று

விரைத்து தைந்தவெண் டொடைபுசூ டினரிரு வோருங்
குரைத்து வைத்தவார் சிலைப்படு நாணொலி கொளுத்த
வரைந்து ளங்கின வுலகமின் வாருதி யெழுந்
தரைவி ழிந்தன திரிசாய்ந் தனவண்ட முகடு.

(இ - ள்) வாசநெருங்கிய வெள்ளிய தும்பைமாலையை இருவருஞ் சூடிக்கொண்டு, ஒலிபொருந்திய நெடிய வில்லினிடத்திற் பொருந்த நாணொலியெழுப்ப [குணத்தொனிசெய்ய] உலகங்குலுங்கின கடல்களெழுந்து கலங்கின பூமியிளவுற்றது அண்டத்துச்சி பொடிபட்டுச் சாய்ந்தன எ - று (௬௮)

தருக்கள் வீழ்ந்தன வீழ்ந்தன தடஞ்சிறைப் பறவை
கருக்க ரைந்தன வுதிர்ந்தன ககனவா னுடுக்க
ளிருக்கு மெண்டிசை யிருவகை நாகமு மின்னந்த
முருக்கு வண்சிலை மூட்டுநாண் முழங்கிய வொலியால்.

(இ - ள்) வண்மைதங்கிய வில்லுகளை வளையும்படி பூட்டிய நாணினது முழங்கிய ஓசையால், மரங்கள் விழுந்தன. பரந்த சிறகையுடைய பறவைகள் விழுந்தன கர்ப்பங்கள் கரைப்பட்டன ஆகாயத்திலுள்ள பெரிய நட்சத்திரங்கள் (அதிர்ந்து) நிலமிசை உதிர்ந்தன. எட்டுத் திசைகளிலிருக்கும் இருவகை நாகங்களுந் துன்புற்றன எ - று.

இருவகைநாகம்—பாம்பு - யானை. அஷ்டகஜங்கள் - ஐராவதம் - புண்டரீகம் - வாமனம் - குமுதம் - அஞ்சனம் - புட்பதந்தம்-சார்வபூமம்-சுப்பிரதீபம் என்

பன. இவை கிழக்குமுதல் வடகிழக்கீறாக முறையே நிற்கும் அஷ்டநாகங்கள் - வாசுகி - அநந்தன் - தக்கன் - சங்கபாலன் - குளிகன் - பதுமன் - மகாபதுமன் - கார்க்கோடகன் என்பன. இவையும் முறையே கிழக்குமுதலாக எண்டிசைகளிற் பூமியைத் தாங்கா நிற்குமென்பர். (௪௰)

பின்கொடுத்தவர் தூணியிற் பெய்தகாற் கணையு
முன்கொடுத்திட முடங்கிய தொருகைமற் றொருகை
முன்கொடுத்தவில் பின்கொடுத் திடமுன்னே நிமிர்ந்த
வென்கொடுத்துமாற் றரியபோ ரிருவரு மியற்றார்.

(இ-ள்) பின்பக்கலிலுள்ள நெடிய அம்பறாத்தூணியிற் பெய்திருந்த பல அத்திரங்களையும் முன்னே கொடுக்கும்படி முடங்கியதாகிய ஒருகையும், முன்பக்கலிலுள்ள வில்லைப் பின்னே கொடுக்கும்படி முன்னே நிமிர்ந்ததாகிய மற்றொருகையுமாக, எதனாலும் நீக்க அரியபோரை இருவரும் செய்தார்கள் எ-று (௪௧)

முருக னோடுவந் தெதிர்த்தனன் முதிர்பிர சண்டன்
பொருவி னந்தியோ டமர்த்தனன் பொருதிறற் சண்டன்
செருவ லாரியோ டேற்றனன் றிரிபுர னமைச்சன்
வருசயந் தனோ டெதிர்த்தனன் மதனெனு மைந்தன்.

(இ-ள்) வலிமிக்க பிரசண்டன் முருகக்கடவுளுடன் வந்தெதிர்த்தனன் போர்செய்யத்தக்க வல்லமையுடைய சண்டன் ஒப்பில்லாத நந்தியோடு போர்செய்தனன் திரிபுரனுடைய மந்திரி போர்செய்யத்தக்க வலாரியாகிய இந்திரனோடெதிர்த்தனன் மதனென்னும் பெயரையுடைய (அத்திரிபுரன்) மகன் சயந்தனோடெதிர்த்தனன் எ-று

சயந்தன் - இந்திரன் மகன்

மதன் - திரிபுரன் மகன் (௪௨)

ஆலமேயென வெழுந்துபொ னிஞ்சியை யூர்ந்து
காலகூடன்புட் பதந்தனைக் கலந்தமர் புரிந்தான்
சீலவீரபத் திரனொடு மிருப்பெயிற் செலுத்திக்
கோலவச்சிர தமிட்டிரன் குயிற்றினன் பெரும்போர்.

(இ-ள்) காலகூடனென்பவன் ஆலாலம்போலவே கொதித்துப் பொன்மதிலைச் செலுத்தி, புட்பதந்தனையெதிர்த்துப் போர்செய்தனன் அழகிய வச்சிரதமிட்டிரனென்பவன் இருப்புமதிலைச்செலுத்தி, சிறந்தோங்கிய வீரபத்திரரோடு பெரும்போர் செய்தனன். எ-று

புஷ்பதந்தர் - இவர் விநோதமாகச் சிலமுனிவருடன் நாத்திகம்பேசின பாவத்தைப் பரிகரிக்கும்படி தமது பற்களைக் களைந்து மலராகப் பாவித்துச் சிவார்ச்சனைசெய்ய, அவர் பத்திக்கிரங்கிய பரமபதி அவர்க்குக் காட்சிதந்து புஷ்பதந்தரென நாமமும், இழந்த பற்களை மீண்டும் பெறுகையும் அநுக்கிரகித்தனரென்பது புராண சரிதம். (௪௩)

மள்ளர் போற்றிட வீமகாயப்பெயர் மன்னன்
வெள்ளி மாமதி லூர்ந்துபோய் விநாயகர் மைந்தன

றன்னு ருசிற விலக்கணைச் சார்ந்தன னவன்பா
லுள்ள வீரருட் புருசண்டி யுருத்துமே லடர்ந்தான்.

(இ-ள்.) போர்வீரர்கள் துதிசெய்யும்படி வீமகாயனாகிய பெயரையுடையவன் பெரிய வெள்ளிமதிலைச் செலுத்திக்கொண்டு சென்று விநாயகக்கடவுள் குமாரனாகிய நீக்கப்படாத வல்லபமுடைய இலக்கணை யடைந்தனன். அவனிடத்துள்ள வீரர்களிலே புருசண்டி யென்பவன் கோபித்துப் போருக்கு மேற்கொண்டான். எ-று.

கண்ட னாதியாங் கணாதலர் படைத்தலைவர்
மிண்டு தானவன் விறற்படைத் தலைவரோ டெதிர்த்தார்
மண்டு பூதர்கண் மற்றவன் வயவர்க ளோடு
தண்ட மாதிகொத் தண்டமா திகளொடு சமர்த்தார்.

(இ-ள்.) கண்டன்முதலாகிய சிவபெருமானுடைய சேனைத்தலைவர்கள், மதத்தாற் பிறழுகின்ற திரிபுரனுடைய வலிய சேனைத்தலைவரோ டெதிர்த்தார்கள். நெருங்கிய பூதவீரர்கள் அவனுடைய போர்வீரர்களோடு தண்டமுதலியவற்றைத் தாங்கினவர்களுக்கு தண்டமுதலியவற்றைத் தாங்கினவர்களாக [சமானஸ்தர்களாக]ப் போர் செய்தார்கள். எ-று. (௪௫)

வேறு.

வாளோச்சுவர் கணையுந்துவர் வடிவேல்பல வெறிவ
ராளோடற வேழத்திர ளடுவார்பரி தெறுவார்
தாளோடற விரதத்தொகை தடிவா ரெதிர்தானை
கேளோடற வெறிவா ரினைய கிளர் பூதர்க டலைவர்

(இ-ள்.) வலிமை விளங்கும் பூதத்தலைவர்கள் வாளால் வெட்டுவார்கள். அத்திரங்களைச் செலுத்துவார்கள். கூர்மையாகிய பல்வேலாயுதங்களைச் செலுத்துவார்கள். யானைத்தொகுதிகளை ஆளுடன் அறும்படி கொல்வார்கள். குதிரைகளைக் கால்களறும்படி யழிப்பார்கள். இரதக்கூட்டங்களை வெட்டுவார்கள். சத்துருசேனை கூட்டத்தோடழிய வீசுவார்கள். எ-று. (௪௬)

பார்ப்பார்விழி வெகுளித்தழல் படுவாரிமை தீயத்
தீர்ப்பார்பல் லுயிரைப்பல தேர்ப்பாகரை யடுவா
ரார்ப்பார்கொடி முடிவார்சிலை யறவாளிக டுணித்துத்
தூர்ப்பார்நெடு மொழிவெஞ்சினஞ் சொல்வார்தயித்தியரே.

(இ-ள்.) அசுரர்கள் (தேவகணங்கள் செய்யும்போரைப்) பார்ப்பார்கள்; கண்ணிமை தீயும்படி கோபாக்கினியைக் கக்கிப் பலருயிரை யழிப்பார்கள்; பலதேர்ப்பாகரைக் கொல்வார்கள், ஆரவாரிப்பார்கள், கொடியும் கிரீடமும் நெடியவில்லு மறும்படி அம்புகளைச் செலுத்தி எங்கும் நிறைப்பார்கள், வெஞ்சினமாகிய நெடிய மொழிகளைச் சொல்வார்கள். எ-று.

வெஞ்சினம் - கோபாவேசத்தாற் கூறுதல் (௪௭)

தாளற்றன ரரையற்றனர் சடரங்குடர் சொரிய
நாளற்றனர் சிரமற்றனர் நகையற்றனர் மதுகைத்

கோளற்றனர் முடியற்றனர் சொலற்றனர் வீரந்
தோளற்றனர் படையிற்படு கொலைவெங்களி றனையார்.

(இ - ள்) ஆயுதங்களால் வீழ்த்துங் கொலைத்தொழிலையுடைய வெவ்விய யானை போன்ற வீரர்கள் காலற்றவர்கள் (சிலர்) இடையொடிந்தவர்கள் வயிற்றிலுள்ள குடர்கள் சிந்தப்பெற்றவர்கள், மார்பிளவுற்றவர்கள், பல்லற்றவர்கள், வலிதாகிய தோள்பட்டவர்கள், முடியற்றவர்கள், சொல்லற்றவர்கள், வீரங்கொள்கை யொழிந்தவர்கள் எ - று (௪௮)

நிணமுக்கண தசையுக்கண சிந்தூரமொ டுக்க
வணிமெய்ப்புன லயிர்க்கண மயிருமயி ருக்க
வணுவுக்கண செவியுக்கண விழுமுட்பிரி யுக்க
பிணமுக்கண கழுகுக்கண பெரிதுண்டு முடக்க.

(இ - ள்) (இவ்வாறு இறந்த போர்வீரர்களது) கொழுப்புகள் சிந்தின; தசைகள் சிந்தின, விளங்கும் முளையொழுக்குகள் சிந்தின, வலியாகிய பொலிவிய சமுத்திரம் ஒழிந்தன, தலைமயிர் சிந்தின, மிக்க விரல்கள் சிந்தின, கீழ்வாய்கள் சிந்தின, காதுகள் அறுந்தன, ஈளைச்சொரியுங் கண்கள் வீழ்ந்தன, பிணங்கள் சிந்தின, உதிரமொழுகின, மிகுதியாகிய நாலங்களுஞ் சிந்தின எ - று (௪௯)

அதிர்ந்தன யூபம்பல வதிர்ந்தன பேய்கள்
குதித்தன சேனைக்கொடு குதித்தன நரிகள்
மோதிற்றன குருதிப்புனல் மிக்கிக்குகள் வினையை
மிதித்தனன வதிர்ந்தன பணிமேற்றிடமன னதனே

(இ - ள்) பல கவந்தங்களாடின பேய்கள் கூத்தாடின, பருந்துகளுங் காக்கைகளுங் கூட்டங்கொண்டன நரிகளும் நாய்களுங் கூடின உதிரவெள்ளமுந் திசைகடோறு மோடின பொலியலட்சுமி பெருமையுற்றனள். பூமிதேவி பிணங்களைச் சுமந்து வருந்தினர் எ - று

யூபம் - கவந்தம், தலையற்றவுடல் (௫௦)

இவ்வாறமர் புரிநாளையி லெதிர்சூரர்கள் படையாற்
றெவ்வாகிய வவுணப்படை முழுதுஞ்சிதை வுற்ற
வவ்வாயிரு கைகளையுடைய முகத்தொ டமரின
செவ்வாயமையு மிறைவன் புரி செருவுற்றது மினிக்கேள்.

(இ - ள்) இவ்விதமாகப் போர்செய்கையில், எதிர்த்த பூதசேனையால் பகை வளர்ந்த திரிபுரனுடைய சேனைமுழுவதுஞ் சிதைந்தன அவ்வகையாகப் பன்னிரண்டு திருக்கரங்களையுடைய சுப்பிரமணியக்கடவுள் முதலானவர்கள் செய்கின்ற யுத்தத்தின் திறத்தையும், சிவபெருமான் திரிபுரத்தை யழித்தவகையையும் இனிக் கேட்பாயாக எ - று. (௫௧)

வேறு

தாரகாசுரன் சிங்கமா முகனெனுஞ் சூரன்
வீரமுற்றுமெய் யேறுமோர் வழிவுகொண் டனையான்
கோரமாகிய பிரமனடன் குபரனொள் பாசகா
வாரமாகிய படையெலா முலைந்து மலைந்தான

(இ - ள்) தாரகாசுரன் - சிறந்த சிங்கமுகன் - ஒப்பற்ற சூரபன்மனுகிய வீரர்கள் மூவரும் மற்றுமோர் வடிவங்கொண்டாற்போன்றவனுகிய பயங்கரமான தோற்றமுடைய பிரசண்டனென்பவன் குமாரக்கடவுள் பக்கலில், உரிமையாகிய படைமுழுவது மழியும்படி போர்செய்தான் எ - று. (ருஉ)

கண்டு கந்தவேள் கதுமெனக் கலாபப் பரியை
மண்டலங்கொளக் கடவினர் சிலைக்கணை கடைநாட்
கொண்டல் போற்சொரிந் தனைத்தனை களைமீறு கொடியோன்
மண்டு சேனையை யழித்தவ னெதிரே நடந்தார்

(இ - ள்) முருகப்பெருமான் கண்டு தோகையையுடைய பெரிய மயில்வாகனத்தை மண்டலவடிவாக வளைத்துச்செலுத்தி நெடியவில்லில் அம்புகளை ஊழிக்கால மேகம்போலப் பெய்து அனைவிராடிகாலச்திற கொடியோனுகிய பிரசண்டனுடைய சேனையை யழித்து அவனுக்கு நேரேசென்றனர் எ - று. (ருங)

நேர்ந்த வெம்பிர சண்டனவ் விசிகங்களைத் தாக்கி
யார்ந்த வில்லினைத் தேரினை யெழுங்குபல் படையை
யீர்ந்து வானவப் படைகளும் பிறுத்தவன் செய்யுங்
கூர்ந்த மாயையோ டவனையுங் கணையினாற் கொன்றான்.

(இ - ள்) போர்புரியும் பிரசண்டனுடைய அம்புகளை நிலமிசை விழச்செய்து, பொருந்திய வில்லையும், தேரையும், செலுத்திய பல ஆயுதங்களையும் வெட்டி, சேனைத்திரங்களையு மழித்து, அவன் புரிகின்ற மிக்க மாயையுடன் அவனையும் அம்பினுலே கொன்றனர் எ - று. (ருச)

சண்ட மாருத மெனப்பொருஞ் சண்டனசே னைகளைக்
கண்ட துண்டங்க ளாக்கியே கழைகையி னந்தி
கொண்ட கொண்டபல் போரையுங் குமைத்துமுக் கணையா
லண்ட ரார்த்திடச் சண்டனா ருயிரையு மழித்தான்.

(இ - ள்) பெருங்காற்றுப்போலப் போர்செய்யுஞ் சண்டனுடையசேனைகளை, நந்தியானவர் ஓர் விநாடியிலே, கண்ட துண்டங்களாகச்செய்து, அவன்செய்த பலவகைப் போர்களையு மழித்து, மூன்று பாணங்களால் அமரர்கள் ஆர்ப்பரிக்கச் சண்டனுடைய அரிய உயிரையு மழித்தனர் எ - று.

சண்டம்=வேகம். (ருரு)

புட்ப தந்தனப் பறக்கும்பொன் மதிலிவர் தும்பைக்
கட்ட சுந்தரத் தார்க்கால கூடனப் படைவிலக்கி
விட்பு லந்தடந் தேர்திரி தரவிடுத் தமர்த்துப்
புட்ப தந்தனைங் கணையினா லவனுடல் பொடித்தான்.

(இ - ள்) பறவை பறந்தாற்போலப் பறந்துசெல்லும் பொன்மதிலேறிய அழகிய தும்பையாகிய தேன்சொரியும் பசிய மலர்மாலையையணிந்த காலகூடனுடைய சேனைகளையகற்றி, ஆகாயத்திலே தன்னுடைய விசாலமான தேரைத் திரியச்செலுத்திப் போர்செய்து அவனுடலைப் புட்பதந்தன் ஐந்து அத்திரங்களாற் பொடிசெய்து கொன்றனன் எ - று. (ருசு)

வெள்ளி யிஞ்சியோ டெரித்திடும் வீமகா யனைநேர்ந்
தெள்ளி லாப்பல போர்களா மியற்றிமெய் யிரத்தந்
துள்ளி வீழ்ந்துவார் தரப்புருச் சுண்டிநாற் கணையா
லள்ளி யுண்டன னத்தக்கி மவுணனா ருயிரை

(இ - ள்) வெள்ளிமதிலோடெரித்த வீமகாயனை யடைந்து, இகழ்வில்லாத பலவகைப் போரைச்செய்து, உடலினின்று இரத்தமானது குதித்தோடி யொழுகும்படி, புருசுண்டியென்பவன் நான்கு கணைகளால் அந்தத் தக்கியாகிய அசுரனுடைய அரிய வுயிரையள்ளிப் பருகினன் எ - று (௫௭)

இருப்பு நொச்சியோ டெரித்தவச் சிரதமிட் டிரனைப்
பொருப்பு நேர்பொலந் தேரொடு பொருந்துநாற் கணையாற்
செருப்பி னென்றென வவுணர்க டெருமரச் செகுத்தான்
விருப்பின் வேள்வியி னமரரா ருயிருண்ட வீரன்.

(இ - ள்) (தக்கனுடைய) யாகத்தில் ஆசையோடு தேவர்களுயிரைக்கொன்ற வீரபத்திரக்கடவுள், இருப்புமதிலோ டெரித்த வச்சிரதமிட்டிரனைப் பொன்மலை யையொத்த தேருடன் போர்செய்து, நான்கு பாணங்களாற் பின்னே போரேதென்று சொல்லும்படி, அவுணர் அச்சமடையக் கொன்றனன். எ - று (௫௮)

வச்சி ரத்தினி லிந்திர னவுணன்மந் திரியைக்
கைச்சி ரத்தையோ டளவில்போர் கண்டுபுள் ளெருவை
நச்சி ரத்தநீ ரொழுகிட நகைமணி முடிசே
ரச்சி ரத்தினை யரிந்தன னணிந்தனன் வாகை.

(இ - ள்) இந்திரனென்பவன் திரிபுரனுடைய மந்திரியை வச்சிராயுதத்தைக்கொண்டு, கைச்சிரத்தையுடன் அளவில்லாத போர்செய்து, பறவைகளுங் கழுகுகளும் விரும்பத்தக்க உதிரநீரொழுகும்படி, பிரகாசிக்கின்ற மணிகள் பதித்த கிரீடமணிந்த அவனுடைய சிரசையரிந்தனன், வெற்றிமாலையணிந்தனன். எ - று (௫௯)

சயந்தன் முப்புரன் றனயனோ டெதிர்ந்தவன் சமர்த்து
வயந்து பங்கிடக் கைப்படை போக்கிமெய் வடிவேல்
புயந்து மேல்வரும் பொருநர்கள் சிரங்களும் புரட்டி
வியந்து விண்ணவர் போற்றிட வவனுயிர் விளித்தான்.

(இ - ள்) சயந்தன் திரிபுரன்மகனோ டெதிர்த்து அவனது போர்வல்லபம் விளங்கும்படி கையிலுள்ள ஆயுதங்களைச்செலுத்தி, அவர்களுடலையும், கூர்மையாகிய வேலையும், கோபித்து மேலேவருகின்ற போர்த்தொழிலாளர்கள் சிரங்களையும் புரட்டி, தேவர்கள் களித்துத் துதிசெய்யும்படி அவனுயிரை யழித்தனன். எ - று (௬௦)

சிலைவ ளைத்தமர் புரிதருந் திரிபுர னோடு
மலைவ ளைத்தவர் வன்சம ராடிமற் றவன்கைக்
கொலைவ ளைத்தவன் கொடுமரந் துமித்துடன் குழுமு
மலைவ ளைத்தவா ருதிபொரூஉஞ் சேனையு மழித்தார்.

(இ - ள்) வில்லைவளைத்துப் போர்செய்யுந் திரிபுரனுடன், மேருமலையை வில்லாக வளைத்த சிவபிரானார் வன்மைதங்கிய போர்செய்து, அவன் கையிலுள்ள

கொலைத்தொழிலைப் பெருக்கிய வலியவில்லைத் துண்டித்து, அவனுடன் கூடியிருக்கும் அலைகளைப்பொருந்திய சமுத்திரத்தையொத்த சேனையையு மழித்தனர் எ - று.

வாருதி - நீர் உதித்தற்கிடம். (௯௪)

வேறு கார்முகம் வாங்கினன் வெடிபட வார்த்து
நூறு வாளிக ளூறுநூ றாயிரங் கோடிபபி
னேறு மேறுமா லாக்கிய விறைவனார் கடவுங்
கூறு தேரிசைத் தூண்டினன் கொடியபா தகனே.

(இ - ள்) கொடியபாதகனாகிய திரிபுரன் வேறு வில்லையெடுத்து வெடி படும்படி யாரவாரித்து, பொடிபடுத்தத்தக்க நூறுநூறாயிரங் கணைகளை விநாடியிலே, ஏறத்தக்க இடபமுந் திருமாலேயாகக்கொண்ட சிவபெருமானார் செலுத்தும் (மேற்) சொல்லிய (பூமியாகிய) தேரின்மேலே செலுத்தினன் எ - று. (௯௫)

விடுத்த பத்திர மிமைக்குமுன் விலக்கிவெங் கணைத்
தொடுத்து நன்முடி கவசந்தூ ணிகடொடா மானேற்
றடுத்த சேமத்தே ரனைத்தையு மறுத்தன னமலன்
படுத்த வேனிலி னொதியென நின்றனன் பதகன்.

(இ - ள்.) திரிபுரன் செலுத்திய அஸ்திரங்களை, புனிதராகிய சிவபெருமானார் இமைகொட்டுமுன்னமே விலக்கி, கொடிய பாணங்களைப் பிரயோகித்து, நல்ல கிரீடம் - கவசம் - அம்பறாத்தூணிகள் - தொடாநது செல்லுங் குதிரைபூட்டிய தேர்கள் - அடுத்துநின்ற சேமத்தேர்கள் முதலிய வெல்லாவற்றையுந் துணித்தனர் (அதனாலே அவன்) மிக்கவேனிற்காலத்து ஒதியமரம்போல நின்றனன். எ - று.

சேமத்தேர் - உதவித்தேர்.

வேனிலினொதியென்றது வேனிற்காலத்து ஒதியமரம் இலைமுதலியன உதிர்ந்து மரமாக நிற்றலின் (௯௬)

முன்னர் நாணிய முப்புரன் முகத்தினை நோக்கி
யென்னை யாளுடை யானினு மெச்சமர் வல்லை
யன்ன தாற்றுதி யகன்றுவா வென்றருள் புரியு
முன்னர் மைந்தர்க ளனைவரு முடிந்தவா கேட்டான்.

(இ - ள்) என்னை யடிமையாகவுடைய சிவபெருமான், தமமுன்னே நாண முற்றுநின்ற திரிபுரன் முகத்தைப்பார்த்து, இன்னுஞ்செய்யத்தக்க எவ்வகைப்போரில நீ வல்லவன்? அதனை அப்பாற்சென்று யோசித்து விரைவில்வந்து செய்யக்கடவை யென்று திருவாயமலர்ந்தருளுமுன்னர், தன் புதல்வர்கள் யாவரும் இறந்தமையைக் கேள்வியுற்றனன் (திரிபுரன்) எ - று. (௯௭)

வார்த்த காலெழு மனத்தனைப் பாற்றினன் மாறா
வீரத் தாலெழு முளத்தினால் விழுமதின் மூன்றுஞ்
சாரத் தானினைந் தானவர் சார்ந்தன வறிறப்
கோரத் தாரொரு மூவராய்க் குறுகினன் றெறிந்தான்.

(இ - ள்) (புதல்வரிடத்துண்டாகிய) அன்பினாலெழுந்த துன்பத்தை யொழித்தனன். நீங்காத வீரத்தன்மையோடெழுகின்ற மனத்தினால், சிறந்த மும்மதில்களை

யும் வரங்கொடுத்தனன். அவை (அங்ஙனமே) வந்தன அம்மதில்களிற் பயங்கரமாகிய வடிவோடு தானே மூவராகி நின்று எதிரிட்டனன் எ - று (௬௫)

திண்ணி தாகிய செருப்புரிந் தெயில்களைச் செலுத்தி
விண்ணிற் பாய்குவன வேலையிற் பாய்குவன திசையின்
மண்ணிற் பாய்குவன பாதலம் பாய்குவன மாற்றார்
கண்ணிற் பாய்குவன கருத்தினுட் பாய்ந்த திறலோன்

(இ - ள்) எல்லோர் மனங்களிலும்பாய்ந்த கொடிய வல்லமையுள்ள திரிபுரன் வலிதாகிய போரைச்செய்து மும்மதில்களைச் செலுத்தி ஆகாயத்திற் பாய்வான; கடலிற்பாய்வான, திசைகளிலும் பூமியிலும் பாய்வான, பாதலத்திற் பாய்வான, சத்துருக்களைப்பேரிற் பாய்வான எ - று (௬௬)

உலக நான்கினைத் தலைப்பெயும் பத்துமுள் ளுடைந்த
வலகி லண்டமு நடுங்கின நடுங்கின ரமரர்
வலன விருந்தன மாதிரத் திரண்டுநா கமுமவ்வான
குலவு மிஞ்சியோ டவுணனைப் போர்த்துமிக் களவில்.

(இ - ள்) நெருங்கிய மும்மதில்களுடன் திரிபுரன் வலியபோரைத் தொடங்கியபொழுது, பதினான்குலகங்களும் உள்ளுடைந்தன கணக்கில்லாத அண்டங்களும் நடுங்கின. தேவர்கள் நடுங்கினார் திசைகளிலுள்ள (அஷ்டகஜங்கள் அஷ்டநாகங்களென்னும்) இருவகை நாகங்களும் வருந்தின எ - று

நான்கினைத் தலைப்பெயும் பத்துஎன்றது பதினான்கெனக் கொள்க (௬௭)

எம்பி ரானுமவ் வண்டேர் வலமிடமுற வியக்கி
யும்பர் மாதிர முதலவை யுற்றுழி யுற்றுக்
கம்ப மாகவன் றன்புரி மாயையுங் கடந்து
பம்பு போரின்று பன்னெடுங் காலம்பா ணித்தான்.

(இ - ள்) எமது சிவபெருமானும் வண்மைதங்கிய தேரை வலசாரி இடசாரியாகச் செலுத்தி, ஆகாயந் திசைமுதலிய அனைத்தும் சென்ற விடங்களிற்சென்று, கம்பமாகும்படி அத்திரிபுரன்செய்த மாயையையுங் கடந்து, பல நெடுங்காலம் மிக்க போர்செய்தனர் எ - று

பாணித்தல் - பொழுதுநீட்டித்தல் போரின்றுகாலம் பாணித்தான் என்றது போர்த்தொழிலாற் காலம்போக்கினன் என்பதாம். (௬௮)

இரந்து தாழ்ந்தவர்க் கிமைக்குமுன் றம்மையு மீயுங்
கரந்தை சூடிய கடவுளார் கழல்பணிந் தவுணன்
வரந்த ராயென வாங்குதலுஞ் செய்யுமென் றஞ்சி
யரந்தை வானவ ரமலர்தாள் பணிந்தெழுந் தறைவார்.

(இ - ள்) யாசித்துப் பணிந்தவர்கட்கு இமைப்பொழுதின் முன்னரே, தம்மையுங் கொடுக்கத்தக்க கரந்தைமாலை சூடிய சிவபெருமானது திருவடிகளைப் பணிந்து திரிபுரன் வரத்தை (எனக்குக்) கொடுப்பாயென்று வாங்குதலுமாகுமென்று, துன்புற்ற தேவர்கள் பயந்து, மலரகிதராகிய பரமேசுரரது மலர்போன்ற பாதங்களைப் பணிந்து நின்று சொல்வார்கள் எ - று. (௬௯)

நொடிக்கு முன்னுல கனைத்தையு நுண்பொடி யாக
முடிக்கு நீயிரும் புரத்தொடு மூண்டுபல் காலம்
வடிக்கும் வான்படை யாற்சமர் புரிமன வெழுச்சி
பிடிக்கு மோர்விளை யாட்டலாற் பேசின்வே றின்றே.

(இ-ள்) நொடிப்பொழுதிற்கு முன்னே எல்லாவுலகங்களையும் நுண்ணிய பொடியாகச் செய்யுந் தேவரீர் திரிபுரனுடன் எதிர்த்து, கூர்மையாகிய சிறந்த ஆயுதங்களாற் பலகாலம் போர்புரிகின்ற திருவுள்ளமானது, கருதத்தக்கதோர் திருவிளையாட்டல்லாமல், சொல்லுமிடத்தில் வேறில்லை எ-று (௭0)

எம்பி ரான்விளை யாட்டினை யாவரே யறிவார்
வெம்பி லாக்கொடு ரவுணனே மாதவ முடையா
னும்பர் தாதையின் சிரமத னமனிவ ருலைய
வெம்பு நின்னொ டெதிர்நின் றுபல போர்விளைத் தலினால்.

(இ-ள்) எம்பெருமானுடைய திருவிளையாட்டை எவர்தாமறியவல்லவர்? தேவர்கட்குப் பிதாவான பிரமனது சிரமும் மன்மதனும் இயமனும் அழியும்படி கோபித்த தேவரீருக்கெதிரே நின்று பலவிதமாகப் போர்புரிந்த தன்மையால் அன்பில்லாத போர் செய்யுந்திரிபுரனே பெருந்தவமுடையவனாயினன். எ-று (௭௧)

யாங்க ணீபுரி போரினை நோக்கலு மாற்றேந்
தேங்கொள் கொன்றையாய் சிறுவரை யவுணனைச் செகுத்து
வீங்கு வாகையை மிலைத்தரு ளாயென விரந்தார்
பாங்கு நின்றவ டானுமப் படிசெயக் கென்றாள்.

(இ-ள்) தேவரீர் செய்யும்போரை அடியேங்கள் பார்க்கவுஞ் சகியோம். தேனொழுகுங் கொன்றைமாலையணிந்தவரே! திரிபுரனையும் அவன் படைத்தலைவரையுங் கொன்று பூரித்த வெற்றிமாலையை யணிந்தருள்வேண்டுமென்று (தேவர்கள்) யாசித்தார்கள். பக்கலில் நின்ற உமாதேவியாரும் அங்ஙனமே செய்கவெனக் கூறினார் எ-று.

வாதி னொன்றொரு காளிபோற் போரினால் வலிய
கோதை வார்சிலை முப்புரன் கொற்றநீ காணப்
போத வாரமர் புரிந்தன மினிப்புரம் பொடிப்பா
மாது காணடியென் றுரைத்துவா ருதிவிட் டயின்றோன்.

(இ-ள்) பார்க்கடலிற் றோன்றிய விடமருந்திய சிவபிரான் (நிருத்த) வாதிலே ஒப்பற்ற காளியைப்போல, போரினாலே வல்லவனாகிய மாலைகட்டிய நெடிய வில்லேந்திய திரிபுரன் வல்லமையை, நீ காணும்படி பொருந்திய பெரும்போரைச் செய்தோம் இனித் திரிபுரத்தைச் சாம்பர் செய்வோம். பெண்ணே! பார்ப்பாயாகவென்று (உமாதேவியாரைப் பார்த்துக்)கூறி எ-று. (௭௩)

மாய னாதியோர் மனத்தையு மளவையுங் கடந்த
தூய னாகிய கணேசமந் திரத்தினைச் சொல்லிக்
காயு முத்தலைச் சூலத்தை விடுத்தமை காணா
மேய முப்புரம் பலியொடும் வெந்தமை கண்டார்.

(இ-ள்) திருமால் முதலானவர்கள் மனத்தையும் அளவையுங் கடந்த புனிதராகிய கணேசப்பெருமானுடைய மந்திரத்தைச் சபித்து, எரிகின்ற முத்தலை

வேலாகிய சூலாயுதத்தைச் செலுத்தினமையைக் காணுதலாகளாகி, பொருந்திய திரிபுரமானது பலியுடன் வெந்தமையைக் கண்டார்கள். எ - று.

பலியென்றது திரிபுரனுக்குரிய முதற்பெயர். (௭௪)

ஆற்றல் சான்றவ ராயினுந் தம்மின்மே லான
மாற்ற லாளரோ டெதிர்ந்துய்ப் பார்கொலோ வமரர்
தோற்ற வாண்மையன் புரத்தொடு சூலியன் சினத்தா
னீற்றப் பட்டன னென்றிடி னிலவுவை யகத்தே.

(இ - ள்) தேவர்கள் தோல்வியடைந்த ஆண்மைதனையுடையவனாகிய திரிபுரன் தன் முப்புரங்களோடுஞ் சிவபிரானுடைய கோபத்தால் நீறுசெய்யப்பட்டானென்றால், விளங்குகின்ற இவ்வுலகத்தில், வல்லபமிக்கவர்களாயினும், தம்மைக் காட்டிலும் மேலான வல்லபமுடையவர்களோடு பகைத்தும் பிழைப்பார்களோ? (பிழையார்கள்) எ - று (௭௫)

கணங்க ளார்த்தன கலித்தது விடைக்கொடி தேர்மேன்
மணங்கொள் கற்பக மலர்மழை சொரிந்தனர் வானோர்
துணங்கை யாடின பேயினந் தொகுகளம் பாடி
யணங்கு தீர்ந்தன ரரிமுத லானவ ரெவரும்.

(இ - ள்) கணங்கள் ஆரவாரித்தன. இடபக்கொடி கலித்தது தேவர்கள் (சிவபெருமா னேறிய) தேரின்மேல் மணம்பொருந்திய கற்பகமலர்மழையைச் சொரிந்தார்கள். பேய்த்தொகுதிகள் துணங்கையாடின திருமால் முதலியவர்கள் யாவரும் நெருங்கிய போர்க்களத்தைப் பாடித் துன்பொழிந்தார்கள் எ - று

துணங்கை - இருகையு முடக்கிப் பழுப்புடை யொற்றியாடும் ஓர் கூத்து இதனை, "பழுப்புடை யிருகை முடக்கி யடிக்கத் - துடங்கிய நடையது துணங்கை யாகும்"—என்னுஞ் சூத்திரத்தாலறிக

களம்பாடுதல் பரணியெனப்படும். (௭௬)

எரித்த சூலமீண் டெய்துமுன் முப்புரா னிறைவன்
வரித்த பூங்கழற் பத்திடை வந்தொடுங் கினனால்
விரித்த திக்குடை விமலனுக் கன்றுதொட் டெவருந்
தரித்து ளார்திரி புராரியென் றுயர்தவத் தனிப்பேர்.

(இ - ள்) (திரிபுரனுடன் முப்புரத்தைச்) சுட்டெரித்த சூலமானது திரும்பிச் (சிவபிரானிடம்) சேருமுன்னே, இறைவருடைய அழகிய வீரக்கழல் கட்டிய திருவடியிலே திரிபுரன் வந்தொடுக்கமாயினன். விரிந்த திக்காடையுடைய சிவபெருமானுக்கு அன்றுமுதல் எல்லாருந் திரிபுராரியென்று உயர்வாகிய சிறந்த ஒப்பற்ற திருநாமத்தைத் தரித்தார்கள் எ - று (௭௭)

யோகி யாயிருந் தியோகமுத் திரையினி றுதவிப்
போகி யாயப்பல் போகமும் புரிந்தருள் புனிதன்
வேகன் போர்புரிந் தயிலியா னென்னிலெவர் போரின்
யூக மாதிக ளறிந்துபோ ருஞற்றுவார் முறையின்.

(இ - ள்.) யோகியாயிருந்து யோகமுத்தியை இனிதாகக் கொடுத்து, போகியாயிருந்து பலபோகங்களையுங் கொடுத்தருள்கின்ற புனிதராகிய சிவபிரான் போர்செய்து அறிவியாமற்போனால், போரிலே யூகமுதலியவற்றை எவர்தாமறிந்து முறைப்படி போர்புரிவார்கள்? எ - று (எஅ)

விழுந்து சோர்ந்தவன் பூதர்மேல் விழிக்கடை வழங்கி
யெழுந்து வந்தவர் வணங்கிட வெம்பிரா னீண்டு
கொழுந்து விட்டெழு வெண்கதிர்க் கயிலையைக் குறுகித்
தொழுந்தொ றுங்கட வுளர்க்கருள் சுரந்துவீற் றிருந்தார்.

(இ - ள்) (போரில்) விழுந்து சோர்வுற்ற வலிய பூதவீரர்கண்மேலே கடைக்கண்ணோக்கஞ்செய்து, அவர்கள் யாவரும் எழுந்துவந்து வணங்க, எமது சிவபெருமான் திரும்பி, கொழுந்துவிட்டெழுகின்ற வெள்ளிய கிரணங்களையுடைய கயிலையங்கிரியை யடைந்து, தம்மைப் பணியுந்தோறுந் தேவர்களுக்கு அநுக்கிரகஞ்செய்து கொண்டெழுந்தருளி யிருந்தனர் எ - று (எகூ)

எரியி டத்தினி னடமிடு மெம்பிரான் றனக்குத்
திரிபு ரத்தவ னழிந்தவந் நாட்டிரு விழாவும்
பரிவு றப்புரிந் தரிமுதற் பண்ணவர் பலரு
முரிய தத்தம திருக்கதி யுற்றுவாழ்ந் தனரால்

(இ - ள்) தீயினிடத்து நின்று ஆனந்தத் திருநடனஞ் செய்தருளும் எம்பெருமானுக்கு, திரிபுரமழிந்த அத்தினத்தில் திருவிழாவும் அன்புடன்செய்து, விண்டு முதலிய தேவர்கள் பலரும் பொருந்திய தங்கடங்கள் பெரியபதவிகளையடைந்து வாழ்ந்திருந்தார்கள் எ - று (அ௦)

கன்னி மாமதிப் பூரணைக் காமர்முப் புரத்தோன்
மன்னு மாருயிர் மாய்ந்தவா னவர்மிகு பயனேந்
துன்ன லாலதைப் பாகுளி யென்று சொல்கின்றா
ரன்ன நாளையில் விழாச்செய்வா ரரும்பயன் பெறுவார்:

(இ - ள்) புரட்டாசிமாசத்துப் பூரணைதினம் அழகிய திரிபுரனுடைய அரிய வுயிரொழிந்து தேவர்கள் பெரும்பயனை யடைதலால், அத்தினத்தைப் பாகுளி யென்று சொல்கின்றார்கள் அந்தத்தினத்தில் (சிவபிரானுக்குத்) திருவிழா செய்பவர்கள் அரிய பயனையடைவார்கள். எ - று (அக)

அந்த நாளையிற் றத்தம தாற்றலுக் கேற்ப
வெந்தை யார்தமக் கருச்சனை யாதிக ளியற்றிக்
கந்த மார்ந்தநெய் தயிலமொன் றேற்கதிர் விளக்கிட்
டுந்து மன்பினிற் போற்றுவார்க் குறாதுதீ வினையே.

(இ - ள்) அந்தநாளில் தங்கடங்கள் சக்திக்கேற்ப, சிவபெருமானுக்கு அருச்சனை முதலியவற்றைச்செய்து, வாசம்பொருந்திய நெய் தயிலமிவற்றில் ஒன்றினால், பிரகாசிக்கின்ற தீபம்வைத்து, தம்மைச்செலுத்தும் அன்பினால் துதிசெய்பவர்களுக்குத் தீவினையானது சம்பந்தப்படாது எ - று. (அஉ)

அனைய கன்னிமா மதிவரு பூரணை யதனிற்
கனையும் வார்கடற் கருவிட மயின்றவன் பூசை